முன்னுரை

உபாகமம் புஸ்தகம் எழுதப்பட்ட காலம் சுமார் கி.மு. 1645 ஆவது வருஷமாகும். எரிகோவிற்கு அருகிலுள்ள யோர்தான் நதிக்கரையில் அமைந்திருக்கும் மோவாபின் சமவெளிகளில் எண்ணாகமம் புஸ்தகம் எழுதப்பட்டது (எண் 36:13). இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பதாக இந்தப் புஸ்தகம் எழுதப்பட்டிருக்கிறது. (உபா 1:5; உபா 34:1-12)

உபாகமம் புஸ்தகத்தின் ஆசிரியர். மோசே. இவர் இஸ்ரவேலருக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தவர். இவர் எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேல் தேசத்தாரை விடுவித்து, வனாந்தரத்தில் வழிநடத்திச் சென்றவர்.

எபிரெய மொழியில் உபாகமம் புஸ்தகத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பெயர் "மிஸ்நெஹ்" என்பதாகும். இதன் பொருள் "இரண்டாம் பிரமாணம்" என்பதாகும். ஏனெனில் பத்துக் கற்பனைகளை இந்தப் புஸ்தகம் மறுபடியும் கூறுகிறது. (உபா 5)

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள். மோசே அப்போது அவர்களுக்குக் கூறியுள்ள ஆலோசனைகள் இந்தப் புஸ்தகத்தில் இடம் பெற்றுள்ளன. இது தவிர, இந்தப் புஸ்தகத்தில் காணப்படும் செய்திகள்.

1. வனாந்தரத்தில் அலைந்து திரிந்த சம்பவங்களின் சுருக்கவுரை.
2. நாற்பது வருஷங்களுக்கு முன்பு கொடுக்கப்பட்ட பிரமாணங்களோடு சேர்க்கப்பட்டிருக்கும் புதிய பிரமாணங்கள்.
3. பாவம் செய்வதற்கு பல வாய்ப்புக்கள் இருப்பதினால் பாவத்தைக்குறித்து பல எச்சரிப்புக்கள்.
4. இஸ்ரவேலின் வருங்காலத்தைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள்.
5. பாலஸ்தீன உடன்படிக்கை (உபா 11:13-32; உபா 27:1-30:20)

உபாகமம் புஸ்தகத்தில், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம் ஆகிய புஸ்தகங்களில் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிற சரித்திர சம்பவங்களும், நியாயப்பிரமாணங்களும் மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் புஸ்தகத்தில் புதிய சரித்திர சம்பவம் எதுவும் சொல்லப்படவில்லை.

கர்த்தர் ஏற்கெனவே சொல்லியிருக்கிற பிரமாணங்கள், இந்தப் புஸ்தகத்தில் மறுபடியுமாய் எழுதப்பட்டிருக்கிறது. ஒரு சில பிரமாணங்கள் விரிவுபடுத்தப்பட்டு விளக்கமாக சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு சில பிரமாணங்களில், சில கருத்துக்கள் கூடுதலாக சேர்க்கப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படிய வேண்டியதன் அவசியம் வலியுறுதப்பட்டிருக்கிறது.

கிரேக்க மொழி பேசும் வேதபண்டிதர்கள், இந்தப் புஸ்தகத்திற்கு "டியூட்டிரானமி" என்று பெயர் சொல்லி அழைக்கிறார்கள். இந்தப் பெயருக்கு "இரண்டாவது பிரமாணம்" அல்லது "பிரமாணத்தின் இரண்டாவது பதிப்பு" என்று பொருள்.

கர்த்தருடைய பிரமாணத்தில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. கர்த்தருடைய வார்த்தையை மாற்ற வேண்டிய அவசியம் ஒருபோதும் ஏற்படாது. ஆனாலும் கர்த்தருடைய பிரமாணத்தை விளக்குவதற்கு கூடுதலான செய்திகள் சொல்லப்படும். இஸ்ரவேல் புத்திரர் சந்திக்கும் புதிய சூழ்நிலைகளில், அவர்களுக்கு புதிய பிரமாணங்களும், பழைய பிரமாணங்களுக்கு புதிய விளக்கங்களும் கொடுக்கப்படும்.

தேவனுடைய பிரமாணம் மறுபடியுமாய்ச் சொல்லப்படுவது நமக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். கர்த்தருடைய பிரமாணங்கள் இந்தப் புஸ்தகத்தில் மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருப்பதற்கு விசேஷித்த காரணங்கள் உண்டு. கர்த்தர் தம்முடைய பிரமாணத்தை ஏற்கெனவே சொன்னபோது, அந்தப் பிரமாண வார்த்தைகளை தங்கள் காதுகளால் கேட்ட இஸ்ரவேல் புத்திரர் இப்போது உயிரோடில்லை. அவர்கள் எல்லோரும் மரித்துப்போனார்கள். இப்போது இருக்கிறவர்கள் இஸ்ரவேலின் புதிய சந்ததியார்.

கர்த்தர் தம்முடைய தாசனாகிய மோசேயின் மூலமாக, இஸ்ரவேலின் புதிய சந்ததியாருக்கு, தம்முடைய பிரமாணங்களை மறுபடியுமாய்ச் சொல்லுகிறார். கர்த்தருடைய பிரமாணங்கள் இஸ்ரவேல் புத்திரருடைய மனதிலும் இருதயங்களிலும் பதிந்திருக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தை சுதந்தரிக்கப்போவதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, தங்கள் மனதில் கர்த்தர் சொன்ன வார்த்தைகளையும் சுமந்து செல்லவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். மோசே அந்த உடன்படிக்கையின் வார்த்தைகளை இஸ்ரவேல் ஜனத்தாருக்கு முன்பாக வாசிக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தருடைய உடன்படிக்கையின் வார்த்தைகளையும், அந்த உடன்படிக்கையில் சொல்லப்பட்டிருக்கிற நிபந்தனைகளையும் அறிந்துகொள்ளவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தை சுதந்தரிக்கும்போது, அந்த தேசத்தில் அவர்கள் நிலைத்திருக்கவேண்டுமென்றால், அவர்கள் அந்த தேசத்தின் நன்மைகளை அனுபவிக்கவேண்டுமென்றால், அவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைக்கும், அவர் சொல்லியிருக்கிற நிபந்தனைகளுக்கும் பரிபூரணமாக கீழ்ப்படியவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் இப்போது உடனே அறிந்துகொள்ளவேண்டிய பிரமாணங்கள், அவர்களுக்கு இப்போதே பிரயோஜனமாயிருக்கிற கர்த்தருடைய வார்த்தைகள் ஆகியவையெல்லாம் அவர்களுக்கு அறிவிக்கப்படவேண்டும்.

ஆசாரியர், லேவியர் ஆகியோரைப்பற்றியும், அவர்களுடைய ஊழியங்களைப்பற்றியும் கர்த்தர் சொன்ன பிரமாணங்கள் இந்தப் புஸ்தகத்தில் மறுபடியுமாய்ச் சொல்லப்படவில்லை. இஸ்ரவேல் புத்திரர் அறிந்துகொள்ளவேண்டிய அடிப்படை சத்தியங்கள் அவர்களுக்கு மறுபடியுமாய்ச் சொல்லப்படுகிறது.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஜனங்களுக்கு மறுபடியும் மறுபடியுமாய் அறிவிக்கவேண்டும்.

"மேலும், என் சகோதரரே, கர்த்தருக்குள் சந்தோஷப்படுங்கள். எழுதினவைகளையே எழுதுவது எனக்கு வருத்தமல்ல, அது உங்களுக்கு நலமாயிருக்கும்" (பிலி 3:1) என்று அப்போஸ்தலர் பவுல் சொல்லுகிறார்.

கர்த்தர் ஒரு தரம் சொன்னதை, நாம் இரண்டு தரம் கேட்பதற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளை அநேகந்தரம் கேட்பதற்கு நாம் விரும்பவேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளை திரும்ப திரும்ப கேட்பது நமக்கு கிடைத்திருக்கிற சிலாக்கியம்.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம், உபாகமம் புஸ்தகத்தைப்போல, நமக்கு இரண்டாவது பிரமாணமாயிருக்கிறது. சுவிசேஷமானது ஆவிக்குரிய பிரமாணம். இது விசுவாசத்தின் பிரமாணம்.

இஸ்ரவேல் புத்திரர் சீனாய் மலையிலிருந்து புறப்பட்ட பிரயாணத்தைப்பற்றி, உபாகமம் புஸ்தகத்தின் ஆரம்பத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நான்காவது அதிகாரத்தில் கீழ்ப்படிதலின் அவசியத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. பன்னிரண்டாவது அதிகாரம் முதல், இருபத்தேழாவது அதிகாரம் வரையிலும், ஒரு சில பிரமாணங்கள் திரும்ப திரும்ப சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் இந்தப் பிரமாணங்களை உறுதிபண்ணுகிறார் (உபா 27,28 ஆகிய அதிகாரங்கள்).

கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தங்களையும், நிபந்தனைகளையும், தம்முடைய வார்த்தைக்கு கீழ்ப்படியும்போது வரும் ஆசீர்வாதங்களையும், கீழ்ப்படியாவிட்டால் வரும் சாபங்களையும் இந்தப் புஸ்தகத்தில் சொல்லியிருக்கிறார் (உபா 29,30 ஆகிய அதிகாரங்கள்).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பிரமாணங்களை ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும் (உபா 31-ஆவது அதிகாரம்). கர்த்தருடைய வார்த்தைகள் ஒரு பாடலின் மூலமாக நினைவுகூரப்படுகிறது (உபா 32-ஆவது அதிகாரம்). மோசேயின் ஆசீர்வாதத்தோடு இந்தப் புஸ்தகம் முடிவு பெறுகிறது (உபா 33-ஆவது அதிகாரம்).

தன்னுடைய ஜீவியத்தின் கடைசி மாதத்தில், மோசே இந்தப் புஸ்தகத்திலுள்ள வார்த்தைகளையெல்லாம் எழுதி இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுக்கிறார். மோசேயின் மரணத்தைப்பற்றியும், அவர் அடக்கம்பண்ணப்படுவது பற்றியும் இந்தப் புஸ்தகத்தின் முடிவில் சொல்லப்பட்டிருக்கிறது (உபா 34-ஆவது அதிகாரம்).

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு, ஆவியானவராலே வனாந்தரத்திற்கு கொண்டு போகப்பட்டார். பிசாசானவன் தம்மிடத்தில் கேட்ட கேள்விகளுக்கு கிறிஸ்துவானவர் பிரதியுத்தரம் சொன்னபோது, "எழுதியிருக்கிறதே" என்று மூன்று இடங்களில் சொல்லியிருக்கிறார் (மத் 4:4,7,10). கிறிஸ்துவானவர் மேற்கோளாகச் சொன்ன வசனங்களையெல்லாம் உபாகமம் புஸ்தகத்திலிருந்து எடுத்து மேற்கோளாகப் பயன்படுத்தியிருக்கிறார்.

உபாகமம் என்னும் பெயருக்கு இரண்டாம் பிரமாணம் என்பது பொருள். இந்தப் புஸ்தகத்திற்கு, "நியாயப்பிரமாணத்தின் பிரதி" (உபா 17:20) என்றும் பொருள் கூறலாம். பிரதி என்பதற்கான எபிரெய வார்த்தை "மிஸ்நெஹ்" என்பதாகும். இதற்குத் "திரும்பக்கூறுதல், இரட்டிப்பு" என்பது பொருளாகும்.

1 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கப்போகிறார்கள். மோசே அதற்கு முன்பாக மரிக்கப்போகிறார். தான் மரிப்பதற்கு முன்பாக மோசே சொன்ன கடைசி செய்தி இந்த அதிகாரத்தில் ஆரம்பமாகிறது. நான்காம் அதிகாரம் வரையிலும் மோசேயின் கடைசி செய்தியே சொல்லப்பட்டிருக்கிறது.

மோசேயின் கடைசி பிரசங்க செய்தி எங்கே, எப்பொழுது சொல்லப்பட்டது என்பதற்கான விவரம் இந்த அதிகாரத்தின் முதல் ஐந்து வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது (உபா 1:1-5).

மோசே தன்னுடைய கடைசி செய்தியில் இஸ்ரவேல் சபையாருக்கு பல சம்பவங்களை ஞாபகப்படுத்தி சொல்லுகிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தை வாக்குப்பண்ணியிருக்கிறார் (உபா 1:6-8).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு அதிபதிகளை நியமித்திருக்கிறார் (உபா 1:9-18). வேவுகாரர்கள் கானான் தேசத்தை சுற்றிப்பார்த்துவிட்டு திரும்பி வந்து, இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே துர்ச்செய்தி பரப்புகிறார்கள். இதனால் இஸ்ரவேல் சபையார் தங்கள் அவிசுவாசத்தினால் முறுமுறுக்கிறார்கள் (உபா 1:19-33).

இஸ்ரவேல் சபையாருடைய அவிசுவாசமான வார்த்தைகளைக் கேட்டு கர்த்தர் அவர்கள்மீது கோபப்படுகிறார். கர்த்தர் அவர்கள்மீது தம்முடைய நியாயத்தீர்ப்பைச் சொல்லுகிறார். ஆனாலும் இஸ்ரவேலின் பின்சந்ததியாருக்கு கானான் தேசம் சுதந்தரமாக பங்கிட்டு கொடுக்கப்படும் என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார் (உபா 1:34-46).

தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள் உபா 1:1-8

உபா 1:1. சேயீர் மலைவழியாய் ஓரேபுக்குப் பதினொருநாள் பிரயாண தூரத்திலுள்ள காதேஸ்பர்னேயாவிலிருந்து,

உபா 1:2. சூப்புக்கு எதிராகவும், பாரானுக்கும் தோப்பேலுக்கும் லாபானுக்கும் ஆஸரோத்துக்கும் திசாகாபுக்கும் நடுவாகவும் இருக்கிற யோர்தானுக்கு இக்கரையான வனாந்தரத்தின் சமனான வெளியிலே வந்தபோது, மோசே இஸ்ரவேலர் எல்லாரையும் நோக்கிச் சொன்ன வசனங்களாவன:

உபா 1:3. எஸ்போனில் குடியிருந்த எமோரியரின் ராஜாவாகிய சீகோனையும், எத்ரேயின் அருகே அஸ்தரோத்தில் குடியிருந்த பாசானின் ராஜாவாகிய ஓக் என்பவனையும், மோசே முறிய அடித்தபின்பு,

உபா 1:4. நாற்பதாம் வருஷம் பதினோராம் மாதம் முதல் தேதியிலே, மோசே இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லும்படி தனக்குக் கர்த்தர் விதித்த யாவையும் அவர்களுக்குச் சொன்னான்.

உபா 1:5. யோர்தானுக்கு இப்புறத்திலிருக்கிற மோவாபின் தேசத்தில் மோசே இந்த நியாயப்பிரமாணத்தை விவரித்துக் காண்பிக்கத் தொடங்கி,

உபா 1:6. ஓரேபிலே நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மோடே சொன்னது என்னவென்றால்: நீங்கள் இந்த மலையருகே தங்கியிருந்தது போதும்.

உபா 1:7. நீங்கள் திரும்பிப் பிரயாணம் புறப்பட்டு, எமோரியரின் மலைநாட்டிற்கும், அதற்கு அடுத்த எல்லா சமனான வெளிகளிலும் குன்றுகளிலும் பள்ளத்தாக்குகளிலும், தென்திசையிலும் கடலோரத்திலும் இருக்கிற கானானியரின் தேசத்துக்கும், லீபனோனுக்கும், ஐப்பிராத்து நதி என்னும் பெரிய நதிவரைக்கும் போங்கள்.

உபா 1:8. இதோ, இந்த தேசத்தை உங்களுக்கு முன்பாக வைத்தேன்; நீங்கள் போய், கர்த்தர் உங்கள் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் அவர்களுக்குப் பின்வரும் அவர்கள் சந்ததிக்கும் ஆணையிட்டுக் கொடுத்த அந்த தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள் என்றார்.

மோசே இஸ்ரவேல் சபையாருக்கு தன்னுடைய கடைசி செய்தியை பிரசங்கம்பண்ணுகிறார். இந்தப் பிரசங்க செய்தி சொல்லப்பட்ட காலமும், இடமும், இந்தவசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் சபையார் யோர்தானுக்கு இக்கரையான வனாந்தரத்தின் சமனான வெளியிலே வந்திருக்கிறார்கள். இது மோவாபின் சமவெளிகளாகும் (உபா 1:1,5).

இஸ்ரவேல் புத்திரர் மோவாபின் சமவெளிகளிலிருந்து கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க ஆயத்தமாயிருக்கிறார்கள். அந்த தேசத்திலே அவர்கள் கானானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணவேண்டும். ஆனால் மோசேயோ இஸ்ரவேல் சபையாருக்கு, யுத்தம்பண்ணுவது சம்பந்தமான செய்தியை சொல்லாமல், ஆவிக்குரிய செய்திகளை சொல்லுகிறார். அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கும், கட்டளைகளுக்கும், நியமங்களுக்கும் எவ்வாறு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டுமென்று மோசே அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார்.

இஸ்ரவேல் சபையார் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு நாற்பது வருஷங்கள் முடிவு பெறும் சமயமாயிருக்கிறது. வசந்தகாலம் போல புதிய காலம் இஸ்ரவேல் சபையாரை வரவேற்பதற்கு ஆயத்தமாயிருக்கிறது. அவர்கள் கர்த்தருடைய நன்மையான ஈவுகளை அனுபவிக்கப்போகிறார்கள். இந்த சூழ்நிலையில், கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஏற்கெனவே சொன்ன கட்டளைகளையும், பிரமாணங்களையும், நியமங்களையும், மோசே அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறார்.

"சேயீர் மலைவழியாய் ஓரேபுக்குப் பதினொருநாள் பிரயாண தூரத்திலுள்ள காதேஸ்பர்னேயாவிலிருந்து, சூப்புக்கு எதிராகவும், பாரானுக்கும் தோப்பேலுக்கும் லாபானுக்கும் ஆஸரோத்துக்கும் திசாகாபுக்கும் நடுவாகவும் இருக்கிற யோர்தானுக்கு இக்கரையான வனாந்தரத்தின் சமனான வெளியிலே வந்தபோது, மோசே இஸ்ரவேலர் எல்லாரையும் நோக்கிச் சொன்ன வசனங்களாவன" (உபா 1:1,2) என்று இந்த அதிகாரத்தின் ஆரம்பத்தில் முன்னுரையாக சொல்லப்பட்டிருக்கிறது.

ஓரேபிற்கும், காதேசிற்கும் இடையில் பதினொருநாள் பிரயாண தூரம் உள்ளது. இதில் ஏழு நாட்கள் அவர்கள் சமவெளியில் இருந்தார்கள். இவ்விரண்டிற்கும் இடையிலுள்ள தூரம் சுமார் 160 மைல்களாகும்.

மோசே இந்த வார்த்தைகளைக் கூறிய இடம், செங்கடலுக்கு அருகிலும், சீனாய் வனாந்தரத்திற்குப் போகும் பாதையிலும் சொன்னதுபோன்றுள்ளது. ஆனால் உபா 1:4-5 ஆகிய வசனங்களில் யோர்தானுக்கு இப்புறத்திலிருக்கிற மோவாபின் தேசத்தில் மோசே இந்த நியாயப்பிரமாணத்தை விவரித்துக் காண்பித்தார் என்று எழுதப்பட்டிருக்கிறது. சீகோனையும், ஓகையும் ஜெயித்தபின்பு, மோசே இந்த வாக்கியங்களைக் கூறியிருக்கிறார். இந்தச் செய்தி, உபா 1:1,2 ஆகிய வசனங்களுடன் முரண்படவில்லை.

முதல் ஐந்து வசனங்களும் உபாகமம் புஸ்தகத்திற்கு முன்னுரையாக அமைந்திருக்கிறது. மோசே மரணமடைவதற்கு முன்பாகவும், இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பாகவும் இவை மோசே பேசின வார்த்தைகளாகும். (உபா 1:1-5).

சமனானவெளி என்பதற்கான எபிரெய வார்த்தை "அரபா" என்பதாகும். யோர்தானின் சமனானவெளி தெற்கு திசையில் செங்கடல் வரையிலும் விரிந்திருக்கிறது. செங்கடலின் அகபா வளைகுடாவிலிருந்து, இந்தச் சமவெளி ஆரம்பித்து, சவக்கடல் வரையிலும் செல்லுகிறது. வடதிசையில் கலிலேயாக்கடல் வரையிலும் இந்தச் சமவெளி பரவியிருக்கிறது. மேற்கில் பாரானிலிருந்து, கிழக்கில் ஏதோமின் பட்டணமான தோப்பேல் வரையிலும் இந்தச் சமவெளி விரிந்து பரவியிருக்கிறது. இந்தச் சமனான வெளியிலிருந்துதான், மோசே இந்தப் புஸ்தகத்திலுள்ள நியாயப்பிரமாணத்தை விவரித்துக் கூறி அதை எழுதியிருக்கிறார். (உபா 1:1-5).

யோர்தானுக்கு இப்புறத்திலிருக்கிற மோவாபின் தேசத்தில் மோசே இந்த நியாயப்பிரமாணத்தை விவரித்துக் காண்பிக்கத் தொடங்குகிறார் (உபா 1:5). மோசேயின் வார்த்தைகள் அவருடைய சொந்த வார்த்தைகளல்ல. கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளை, மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு விவரித்து சொல்லுகிறார்.

மோசே எஸ்போனில் குடியிருந்த எமோரியரின் ராஜாவாகிய சீகோனையும், எத்ரேயின் அருகே அஸ்தரோத்தில் குடியிருந்த பாசானின் ராஜாவாகிய ஓக் என்பவனையும், முறிய அடிக்கிறார் (உபா 1:3). அதன் பின்பு நாற்பதாம் வருஷம் பதினோராம் மாதம் முதல் தேதியிலே, மோசே இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லும்படி தனக்குக் கர்த்தர் விதித்த யாவையும் அவர்களுக்குச் சொல்லுகிறார் (உபா 1:4)

"நாற்பதாம் வருஷம் பதினோராம் மாதம் முதல் தேதியிலே" என்று இந்தப் புஸ்தகம் எழுதப்பட்ட நாள் சொல்லப்பட்டிருக்கிறது. மோசே இந்தப் புஸ்தகத்திலுள்ள காரியங்களைப் பேசிய காலமும், எழுதிய காலமும் தெளிவாக இங்கு கூறப்பட்டிருக்கிறது. (எண் 33:3) உபாகமம் புஸ்தகம் முழுவதும் ஒரேநாளில் கூறப்பட்டு, அதே நாளில் எழுதப்பட்டிருக்க வேண்டும் (உபா 1:10).

மோசே இஸ்ரவேல் புத்திரருடைய பிரயாண விவரங்களைப்பற்றிச் சொல்லும்போது, அவர்கள் சீனாய் மலையிலிருந்து பிரயாணம்பண்ணிய சம்பவத்திலிருந்து ஆரம்பிக்கிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "ஓரேபிலே நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மோடே சொன்னது என்னவென்றால்: நீங்கள் இந்த மலையருகே தங்கியிருந்தது போதும். நீங்கள் திரும்பிப் பிரயாணம் புறப்பட்டீர்கள்" (உபா 1:6,7) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் சீனாய் மலையில் பாளயமிறங்கியிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் கூடாரங்களை எடுத்துக்கொண்டு, எமோரியரின் மலைநாட்டிற்கும், அதற்கு அடுத்த எல்லா சமனான வெளிகளிலும் குன்றுகளிலும் பள்ளத்தாக்குகளிலும், தென்திசையிலும் கடலோரத்திலும் இருக்கிற கானானியரின் தேசத்துக்கும், லீபனோனுக்கும், ஐப்பிராத்து நதி என்னும் பெரிய நதிவரைக்கும் புறப்பட்டுப்போகவேண்டும் (உபா 1:7) என்பது கர்த்தருடைய கட்டளையாகும்.

இஸ்ரவேல் சபையார் சீனாய் மலையருகே அநேக நாட்களாக தங்கியிருக்கிறார்கள். ஆகையினால் "நீங்கள் இந்த மலையருகே தங்கியிருந்ததுபோதும்" என்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேல் சபையாரை தாழ்த்துவதற்காகவும், வாக்குத்தத்த தேசத்தை சுதந்தரிப்பதற்கு அவர்களை ஆயத்தம்பண்ணுவதற்காகவும், அவர்கள் மத்தியிலே தம்முடைய பிரமாணத்தை சொல்லுவதற்காகவும் கர்த்தர் அவர்களை இந்த மலையருகே அழைத்து வந்திருக்கிறார்.

கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக தம்முடைய ஜனங்களை வழிநடத்துகிறார். அவருடைய சித்தத்தின் பிரகாரமாகவே இஸ்ரவேல் சபையாருக்கு ஒவ்வொரு சம்பவமும் நடைபெறுகிறது. கர்த்தர் சில சமயங்களில் அவர்களுக்கு ஆவிக்குரிய பிரச்சனைகளை அனுமதிக்கிறார். அவர்களுடைய சரீரத்தையும் மனதையும் துன்பப்படுத்துகிறார். இஸ்ரவேல் புத்திரர் பல சமயங்களில் வேதனைகளையும், மனகஷ்டங்களையும் அனுபவிக்கிறார்கள்.

ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர் நிரந்தரமாக கஷ்டப்படவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமல்ல. கர்த்தர் அனுமதிக்கும் காலம் வரையிலும் அவர்களுக்கு கஷ்டம் வரும். கர்த்தருக்கு ஏற்ற வேளை வரும்போது, அவர்களுடைய கஷ்டம் அவர்களை விட்டு நீங்கிப்போகும். கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தை நிறைவேற்றுவதற்காகவும், வேறு சில விசேஷித்த நோக்கங்களுக்காகவும், இஸ்ரவேல் சபையாருக்கு கஷ்டங்களை அனுமதிக்கிறார். கர்த்தருடைய திட்டத்தின் பிரகாரமாக இஸ்ரவேல் சபையார் இதுவரையிலும் சீனாய் மலையருகே தங்கியிருக்கிறார்கள்.

தாம் நியமித்த காலம் வரையிலும் இஸ்ரவேல் புத்திரர் சீனாய் மலையருகே தங்கியிருக்கிறார்கள் என்பதை கர்த்தர் அறிந்திருக்கிறார். ஆகையினால் கர்த்தர் அவர்களைப் பார்த்து, "நீங்கள் இந்த மலையருகே தங்கியிருந்ததுபோதும்" என்று சொல்லுகிறார். கர்த்தர் அவர்களுடைய கஷ்டங்களிலிருந்தும், மனவேதனைகளிலிருந்தும் விடுதலையை கட்டளையிடுகிறார். அவர்கள் ஆவிக்குரிய அடிமைத்தனத்திலிருந்து, ஆவிக்குரிய சுவீகார ஸ்தானத்திற்கு புறப்பட்டுப்போகிறார்கள். அவர்களுக்கு ஆவிக்குரிய பயங்கரத்திலிருந்து விடுதலை கிடைத்திருக்கிறது. அவர்கள் இனிமேல் ஆவிக்குரிய ஆறுதல்களையும், ஆவிக்குரிய சந்தோஷங்களையும் பெற்றுக்கொள்ளப்போகிறார்கள்.

"மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்" (ரோம 8:14,15).

இஸ்ரவேல் சபையார் ஆவிக்குரிய அடிமைகளல்ல. அவர்கள் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறவர்கள். ஆகையினால் அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய புத்திரருக்கு கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுக்கிறார். இஸ்ரவேல் சபையார் சீக்கிரத்தில் கானான் தேசத்தை சுதந்தரித்து, அதிலே வாசம்பண்ணப்போகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் சபையாரை நோக்கி, "இதோ, இந்த தேசத்தை உங்களுக்கு முன்பாக வைத்தேன்; நீங்கள் போய், கர்த்தர் உங்கள் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் அவர்களுக்குப் பின்வரும் அவர்கள் சந்ததிக்கும் ஆணையிட்டுக் கொடுத்த அந்த தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்" (உபா 1:8) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்திலிருந்து பிரயாணப்படும் போது, கர்த்தர் அவர்களுக்கு சொன்ன மூன்று கட்டளைகளைப்பற்றிய விவரம் வருமாறு :

1. நீங்கள் இந்த மலையருகே தங்கியிருந்தது போதும். நீங்கள் திரும்பிப் பிரயாணம் புறப்பட்டு போங்கள் (உபா 1:6-7)

2. எமோரியரின் மலைநாட்டிற்கும், அதற்கு அடுத்த எல்லா சமனான வெளிகளிலும் குன்றுகளிலும் பள்ளத்தாக்குகளிலும், தென்திசையிலும் கடலோரத்திலும் இருக்கிற கானானியரின் தேசத்துக்கும், லீபனோனுக்கும், ஐப்பிராத்து நதி என்னும் பெரிய நதிவரைக்கும் போங்கள் (உபா 1:7)

3. நீங்கள் போய், கர்த்தர் உங்கள் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் அவர்களுக்குப் பின்வரும் அவர்கள் சந்ததிக்கும் ஆணையிட்டுக் கொடுத்த அந்த தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள் (உபா 1:8)

கர்த்தர் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் கானான் தேசத்தை வாக்குப்பண்ணியிருக்கிறார். கர்த்தர் இந்த தேசத்தை ஆபிரகாமிற்கும், (ஆதி 12:1-7; ஆதி 13:14-17;ஆதி 15:18-21; ஆதி 17:7-8), ஈசாக்கிற்கும், (ஆதி 26:3-4), யாக்கோபிற்கும் (ஆதி 28:3-4,13-15) வாக்குப்பண்ணியிருக்கிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் பரம கானானை நோக்கி பிரயாணம்பண்ணுகிறோம். இந்தப் பூமியிலே நமக்கு நிலையான நகரம் இல்லை. பரலோகமே நம்முடைய நித்திய வாசஸ்தலம். பரமகானானை நோக்கி முன்னேறிப்போகுமாறு கர்த்தர் விசுவாசிகளுக்கு கட்டளை கொடுக்கிறார். நம்முடைய ஆவிக்குரிய பிரயாணத்தில், பரமகானனை நோக்கிப் பார்த்து, உற்சாகம் பெறவேண்டும். பரமகானனை பற்றிய நினைவுகளும் தியானங்களும் நம்முடைய ஆவிக்குரிய சோர்வுகளையும், அவிசுவாசங்களையும் நம்மை விட்டு அகற்றிப்போடவேண்டும்.

இஸ்ரவேலின் அதிபதிகள்
உபா 1:9-18

உபா 1:9. அக்காலத்திலே நான் உங்களை நோக்கி: நான் ஒருவனாக உங்கள் பாரத்தைத் தாங்கக்கூடாது.

உபா 1:10. உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைப் பெருகப்பண்ணினார்; இதோ, இந்நாளில் நீங்கள் வானத்து நட்சத்திரங்களைப்போலத் திரளாயிருக்கிறீர்கள்.

உபா 1:11. நீங்கள் இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும் ஆயிரமடங்கு அதிகமாகும்படி, உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொல்லியபடியே உங்களை ஆசீர்வதிப்பாராக.

உபா 1:12. உங்கள் வருத்தத்தையும் பிரயாசத்தையும் வழக்குகளையும் நான் ஒருவனாய்த் தாங்குவது எப்படி?

உபா 1:13. நான் உங்களுக்கு அதிபதிகளை ஏற்படுத்தும்பொருட்டு, உங்கள் கோத்திரங்களில் ஞானமும் விவேகமும் அறிவும் உள்ளவர்கள் என்று பேர்பெற்ற மனிதரைத் தெரிந்துகொள்ளுங்கள் என்று சொன்னேன்.

உபா 1:14. நீங்கள் எனக்குப் பிரதியுத்தரமாக: நீர் செய்யச்சொன்ன காரியம் நல்லது என்கிறீர்கள்.

உபா 1:15. ஆகையால் நான் ஞானமும் அறிவுமுள்ள மனிதராகிய உங்கள் கோத்திரங்களின் வம்சபதிகளைத் தெரிந்துகொண்டு, அவர்கள் உங்களுக்குத் தலைவராயிருக்கும்படி, ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும், நூறுபேருக்கு அதிபதிகளாகவும், ஐம்பதுபேருக்கு அதிபதிகளாகவும், பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் உங்கள் கோத்திரங்களில் அதிகாரிகளாகவும் ஏற்படுத்திவைத்தேன்.

உபா 1:16. அக்காலத்திலே உங்களுடைய நியாயாதிபதிகளை நான் நோக்கி: நீங்கள் உங்கள் சகோதரரின் வியாச்சியங்களைக் கேட்டு, இருபட்சத்தாராகிய உங்கள் சகோதரருக்கும், அவர்களிடத்தில் தங்கும் அந்நியனுக்கும், நீதியின்படி தீர்ப்புச்செய்யுங்கள்.

உபா 1:17. நியாயத்திலே முகதாட்சிணியம் பாராமல் பெரியவனுக்குச் செவிகொடுப்பது போலச் சிறியவனுக்கும் செவிகொடுக்கக்கடவீர்கள்; மனிதன் முகத்திற்குப் பயப்படாதிருங்கள்; நியாயத்தீர்ப்பு தேவனுடையது; உங்களுக்குக் கடினமாயிருக்கும் காரியத்தை என்னிடத்தில் கொண்டுவாருங்கள்; நான் அதைக் கேட்பேன் என்று சொல்லி,

உபா 1:18. நீங்கள் செய்யவேண்டிய காரியங்கள் யாவையும் அக்காலத்திலே கட்டளையிட்டேன்.

இஸ்ரவேல் சபையார் திரளான எண்ணிக்கையிலிருக்கிறார்கள். மோசே அவர்களுக்கு தலைவராயிருக்கிறார். அவர் ஒருவரால் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரையும் ஆளுகை செய்ய முடியாது. இஸ்ரவேல் சபையார் எல்லோரையும் கர்த்தருக்குள் வழிநடத்துவதற்கும், அவர்களுடைய வழக்குகளை நீதியாய் நியாயம் விசாரிப்பதற்கும், அவர்களை கர்த்தருக்கு பயந்து ஆளுகை செய்வதற்கும், மோசே இஸ்ரவேலின் அதிபதிகளை நியமனம்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் சபையார் எல்லோரையும் தான் மாத்திரமே ஆளுகை செய்யவேண்டும் என்னும் சுயநலம் மோசேயினிடத்தில் காணப்படவில்லை. இஸ்ரவேல் தேசத்தில் கர்த்தருடைய ஆளுகை நடைபெறவேண்டும் என்பதே மோசேயின் விருப்பம்.

மோசே அக்காலத்தில் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நான் ஒருவனாக உங்கள் பாரத்தை தாங்கக்கூடாது" (உபா 1:9) என்று சொன்னார்.

இஸ்ரவேல் சபையார் எண்ணிக்கையிலே திரளாய்ப் பெருகியிருப்பதைப் பார்த்து மோசே மிகவும் சந்தோஷப்படுகிறார். கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்ன வாக்குத்தத்தத்தை நிறைவேற்றியிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் இன்னும் திரளாய்ப் பெருகவேண்டும் என்பதே மோசேயின் விருப்பம்.

மோசே இஸ்ரவேல் சபையாரை நோக்கி, " உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைப் பெருகப்பண்ணினார்; இதோ, இந்நாளில் நீங்கள் வானத்து நட்சத்திரங்களைப்போலத் திரளாயிருக்கிறீர்கள். நீங்கள் இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும் ஆயிரமடங்கு அதிகமாகும்படி உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொல்லியபடியே உங்களை ஆசீர்வதிப்பாராக" (உபா 1:10,11) என்று சொல்லுகிறார்.

மோசே இந்த சம்பவத்தை சொல்லும்போது, "இதோ, இந்நாளில்" என்று சொல்லுகிறார்.

இந்நாள் என்னும் வாக்கியத்தை மோசே உபா 1:10 ஆவது வசனத்திலிருந்து உபா 32:46 ஆவது வசனம் வரையிலும் 70 தடவைகள் பயன் படுத்தியிருக்கிறார். ஆகையினால், இந்தப் புஸ்தகம் ஒரே நாளில் கூறப்பட்டு, அதே நாளில் எழுதப்பட்டிருக்க வேண்டும். பதினொறாம் மாதம் முதல் தேதியில் இந்தப் புஸ்தகம் எழுதப்பட்டிருக்கிறது. (உபா 1:4)

இன்று நான் நூற்றிருபது வயதுள்ளவன் (உபா 31:2). அன்றைக்கே மோசே அந்தப் பாட்டை எழுதி, அதை இஸ்ரவேல் புத்திரருக்குப் படிப்பித்தார். (உபா 31:22). மோசே இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகள் முழுவதையும் ஒரு புஸ்தகத்தில் எழுதி முடித்தபின்பு (உபா 31:24), இன்று நான் இன்னும் உங்களுடன் உயிரோடிருக்கையில் (உபா 31:27). அந்த நாளிலேதானே கர்த்தர் மோசேயை நோக்கி: (உபா 32:48-50) என்று மோசே பல சந்தர்ப்பங்களில், "இந்நாள்" என்னும் வார்த்தையை பயன்படுத்துகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் இந்நாளில் வானத்து நட்சத்திரங்களைப்போலத் திரளாயிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரின் ஜனத்தொகை வானத்து நட்சத்திரங்களைப் போலத் திரளாயிருக்கும் என்னும் தீர்க்கதரிசனத்தை மோசே விசுவாசித்துக் கூறுகிறார்.

கர்த்தருடைய வாக்குத்தத்தம் பெரிதாயிருப்பதுபோல, நம்முடைய விசுவாசமும் பெரிதாயிருக்கவேண்டும். நம்முடைய அவிசுவாசத்தினாலும், அற்ப விசுவாசத்தினாலும் கர்த்தருடைய வாக்குத்தத்தங்களையும், அவருடைய ஆசீர்வாதங்களையும், நன்மைகளையும் நாம் மட்டுப்படுத்தக்கூடாது. கர்த்தர் நம்மை அதிகமாய் ஆசீர்வதிக்க விரும்பும்போது, நம்முடைய அவிசுவாசத்தினிமித்தமாக, கர்த்தருடைய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளாமல் போய்விடக்கூடாது.

கர்த்தர் நம்மை பெலப்படுத்த விரும்பும்போது, நம்முடைய அவிசுவாசத்தினால் நாம் கோழைகளாயிருக்கக்கூடாது. கர்த்தர் நமக்கு நன்மையான ஈவுகளை கொடுக்க விரும்பும்போது, நம்முடைய விசுவாசத்தினால் கர்த்தருடைய நன்மைகளைப் பெற்றுக்கொள்ளாமல், நம்முடைய அவிசுவாசத்தினால் உண்டாகும் தீமைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடாது. கர்த்தர் நமக்கு சொல்லியிருக்கிற வாக்குத்தத்தங்களை பெற்றுக்கொள்வதற்கு, நாம் ஆயத்தமாய் காத்திருக்கவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டபோது எவ்வளவு பேர் இருந்தார்களோ அதைப்போல இனிமேல் ஆயிரம் மடங்கு அதிகமாயிருப்பார்கள். இது கர்த்தருடைய வாக்குத்தத்தம் "நீங்கள் இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும் ஆயிரமடங்கு அதிகமாகும்படி உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொல்லியிருக்கிறார்" (உபா 1:11).

"நீங்கள் இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும் ஆயிரமடங்கு அதிகமாகும்படி" கர்த்தர் இஸ்ரவேல் சபையாரை ஆசீர்வதிக்கவேண்டுமென்று மோசே சொல்லுகிறார். எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேல் புத்திரரின் தொகை 4,067,200 பேர். மேலும் அவர்களோடு கலந்திருந்தவர்கள் 2,033,600 பேர். ஆக மொத்தம் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டவர்களின் எண்ணிக்கை 6,100,800 பேராகும். இது ஆயிரம் மடங்கு அதிகமானால் இவர்களுடைய எண்ணிக்கை 600கோடியாக இருக்கும்.

இஸ்ரவேல் சபையாரின் எண்ணிக்கை திரளாய்ப் பெருகும்போது, அவர்கள் எல்லோரையும் தான் மாத்திரமே ஆளுகை செய்யவேண்டும் என்னும் பேராசை மோசேயின் மனதில் இல்லை. இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே தனக்கு மாத்திரம் கனமும் மகிமையும், மேன்மையும் உண்டாகவேண்டும் என்று மோசே ஆசைப்படவில்லை. இஸ்ரவேல் சபையாரை ஆளுகை செய்கிற முழுஅதிகாரமும் தன்னுடைய கையில் மாத்திரமே இருக்கவேண்டும் என்றும் மோசே நினைக்கவில்லை.

"நான் ஒருவனாக உங்கள் பாரத்தைத் தாங்கக்கூடாது" என்று மோசே இஸ்ரவேல் சபையாரை நோக்கி சொல்லுகிறார். இஸ்ரவேல் சபையாரை ஆளுகை செய்கிற அதிகாரம் மோசேக்கு கொடுக்கப்பட்டாலும், அந்த அதிகாரத்தை தான் ஒருவர் மாத்திரமே பயன்படுத்தக்கூடாது என்று மோசே நினைக்கிறார்.

"உங்கள் வருத்தத்தையும் பிரயாசத்தையும் வழக்குகளையும் நான் ஒருவனாய்த் தாங்குவது எப்படி?" (உபா 1:12) என்று மோசே இஸ்ரவேல் சபையாரிடத்தில் கேட்கிறார்.

இஸ்ரவேல் புத்திரரை ஆளுகை செய்வதற்கு அவர்களுக்கு அதிபதிகளை ஏற்படுத்தவேண்டும் என்பது மோசேயின் விருப்பம். ஆனால் மோசே தன்னுடைய சுயவிருப்பத்தை நிறைவேற்ற விரும்பவில்லை. அவர் தன்னுடைய சுயபுத்தியையும், சுயஞானத்தையும் சார்ந்துகொள்ளவில்லை. இஸ்ரவேல் புத்திரருக்கு அதிபதிகளை தேர்ந்தெடுக்கும் பொறுப்பை மோசே தன்னிடத்தில் வைத்துக்கொள்ளவும் விரும்பவில்லை.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நான் உங்களுக்கு அதிபதிகளை ஏற்படுத்தும்பொருட்டு, உங்கள் கோத்திரங்களில் ஞானமும் விவேகமும் அறிவும் உள்ளவர்கள் என்று பேர்பெற்ற மனிதரைத் தெரிந்துகொள்ளுங்கள்" (உபா 1:13) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் அதிபதிகளிடத்தில் காணப்படவேண்டிய தகுதிகளைப்பற்றி பரிசுத்தவேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. ஞானமும் விவேகமும் அறிவும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். (உபா 1:13)

2. பேர்பெற்ற மனிதராக இருக்க வேண்டும். (உபா 1:13)

3. நீதியையும், நியாயத்தையும் நேசிக்க வேண்டும். (உபா 1:16; உபா 16:18-19; உபா 27:19; சக 7:9-10)

4. முகதாட்சணியம் பார்க்கக்கூடாது. (உபா 1:17; உபா 16:19; உபா 25:1; ஏசா 5:23)

5. பயப்படக்கூடாது. (உபா 1:17)

6. வியாச்சியங்களைக் கேட்க வேண்டும். (உபா 1:17)

7. பலன்கொண்டு திடமனதாயிருக்க வேண்டும். (யோசு 1:7)

8. நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் (யோசு 1:7-8)

9. தேவனுக்குப் பயந்தவர்களாக இருக்க வேண்டும். (யாத் 18:21; 2சாமு 23:3; எஸ்றா 7:25)

10. உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும். (யாத் 18:21; உபா 16:19)

11. பேராசையை வெறுக்கிறவர்களாக இருக்க வேண்டும். (யாத் 18:21)

12. பரிதானம் வாங்க மறுக்கிறவர்களாக இருக்கவேண்டும். (யாத் 23:8)

இஸ்ரவேல் புத்திரரும் மோசேயின் ஆலோசனையை அங்கீகரிக்கிறார்கள். அவர்கள் மோசேக்கு பிரதியுத்தரமாக, "நீர் செய்யச்சொன்ன காரியம் நல்லது" (உபா 1:14) என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேலின் அதிபதிகள், இஸ்ரவேல் சபையாரை ஆளுகை செய்யப்போகிறார்கள். அவர்களை இஸ்ரவேல் சபையாரே தெரிந்துகொள்கிறார்கள். மோசே இஸ்ரவேலின் அதிபதியாக யாரையும் தெரிந்தெடுக்கவில்லை. ஜனங்களே தங்கள் அதிபதிகளை தெரிந்துகொள்வதினால், அவர்கள் தங்கள் அதிபதிகளுக்கு கீழ்ப்படிந்து நடப்பார்கள். அதிபதிகளின் ஆளுகைகளை அங்கீகரிப்பார்கள்.

இஸ்ரவேல் சபையார் தங்களுக்கு அதிபதிகளை தேர்ந்தெடுக்கும்போது, அவர்கள் தங்கள் கோத்திரங்களில் ஞானமும், விவேகமும், அறிவும் உள்ளவர்களாய் இருக்கவேண்டும் என்று மோசே சொல்லுகிறார். அவர்கள் தங்கள் கோத்திரத்தார் மத்தியிலே நற்குணங்களில் பேர்பெற்றவர்களாயிருக்கவேண்டும். அப்படிப் பட்டவர்களே இஸ்ரவேலை ஆளுகை செய்வதற்கு தகுதியுள்ளவர்கள்.

மோசேயின் ஆலோசனையை இஸ்ரவேல் சபையார் ஏற்றுக்கொள்கிறார்கள். "ஆகையால் நான் ஞானமும் அறிவுமுள்ள மனிதராகிய உங்கள் கோத்திரங்களின் வம்சபதிகளைத் தெரிந்துகொண்டு, அவர்கள் உங்களுக்குத் தலைவராயிருக்கும்படி, ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும், நூறுபேருக்கு அதிபதிகளாகவும், ஐம்பதுபேருக்கு அதிபதிகளாகவும், பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் உங்கள் கோத்திரங்களில் அதிகாரிகளாகவும் ஏற்படுத்திவைத்தேன்" (உபா 1:15) என்று மோசே சொல்லுகிறார்.

இஸ்ரவேல் சபையாரால் தெரிந்துகொள்ளப்பட்ட அதிபதிகளே, இப்போது அவர்களை ஆளுகை செய்கிறார்கள். இனிமேல் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைவர்களுக்கு விரோதமாக கலகம்பண்ணும்போது, அவர்கள் மோசேக்கு விரோதமாக கலகம்பண்ணாமல், தாங்கள் ஏற்படுத்தின அதிபதிகளுக்கு விரோதமாக கலகம்பண்ணுவார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் அதிபதிகளை தெரிந்துகொள்ளும்போது, இஸ்ரவேலின் அதிபதிகளுக்கு என்னென் தகுதிகள் இருக்கவேண்டுமென்று மோசே அவர்களுக்கு போதிக்கிறார். அவர்கள் ஞானமும் அறிவுமுள்ள மனிதராயிருக்கவேண்டும். அவர்கள் நம்பிக்கைக்குரியவர்களாயிருக்கவேண்டும். தங்களுக்கு கொடுக்கப்படும் பொறுப்புக்களை அவர்கள் நேர்த்தியாய் செய்து முடிக்கும் திறமையுள்ளவர்களாயிருக்கவேண்டும். அவர்களிடத்தில் உண்மையிருக்கவேண்டும். இஸ்ரவேலின் அதிபதிகள் தங்கள் சுயநலத்தை நாடாமல், இஸ்ரவேல் சபையாரின் பொதுவான நலத்தை நாடவேண்டும்.

இஸ்ரவேல் சபையாருக்கு அதிபதிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேலின் நியாயாதிபதிகள் எனவும் அழைக்கப்படுகிறார்கள். மோசே இஸ்ரவேலின் நியாயாதிபதிகளுக்கு கட்டளை கொடுக்கிறார்.

மோசே இஸ்ரவேலின் நியாயாதிபதிகளை நோக்கி, "நீங்கள் உங்கள் சகோதரரின் வியாச்சியங்களைக் கேட்டு, இருபட்சத்தாராகிய உங்கள் சகோதரருக்கும், அவர்களிடத்தில் தங்கும் அந்நியனுக்கும், நீதியின்படி தீர்ப்புச்செய்யுங்கள்" (உபா 1:16) என்றும்,

"நியாயத்திலே முகதாட்சிணியம் பாராமல் பெரியவனுக்குச் செவிகொடுப்பதுபோலச் சிறியவனுக்கும் செவிகொடுக்கக்கடவீர்கள்; மனிதன் முகத்திற்குப் பயப்படீர்களாக; நியாயத்தீர்ப்பு தேவனுடையது; உங்களுக்குக் கடினமாயிருக்கும் காரியத்தை என்னிடத்தில் கொண்டுவாருங்கள்; நான் அதைக் கேட்பேன்" (உபா 1:17) என்றும் சொல்லுகிறார்.

எண் 11:13-27 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் எழுபது மூப்பர்கள் இஸ்ரவேலின் பிரதான நியாயாதிபதிகளாக இருக்கிறார்கள். பத்து, ஐம்பது, நூறு, ஆயிரவருக்குத் தலைவர்கள் சிறுசிறு வியாச்சியங்களை விசாரித்து, தீர்ப்பு வழங்குவார்கள். பெரிய வழக்குகள் எழுபது மூப்பர்களிடத்திலும், மோசேயினிடத்திலும் வரும். (உபா 1:16-17).

மோசே நியாயாதிபதிகளுக்குக் கூறியிருக்கும் கட்டளைகளின் விவரம் வருமாறு :

1. உங்கள் சகோதரரின் வியாச்சியங்களைக் கேளுங்கள் (உபா 1:16)

2. இருபட்சத்தாராகிய உங்கள் சகோதரருக்கும், அவர்களிடத்தில் தங்கும் அந்நியனுக்கும், நீதியின்படி தீர்ப்புச் செய்யுங்கள் (உபா 1:16).

3. நியாயத்திலே முகதாட்சிணியம் பார்க்காதீர்கள் (உபா 1:17).

4. பெரியவனுக்குச் செவிகொடுப்பதுபோலச் சிறியவனுக்கும் செவிகொடுக்கவேண்டும்.

5. மனிதன் முகத்திற்குப் பயப்படக்கூடாது. நியாயத்தீர்ப்பு தேவனுடையது.

6. உங்களுக்குக் கடினமாயிருக்கும் காரியத்தை என்னிடத்தில் கொண்டு வாருங்கள்; நான் அதைக் கேட்பேன்.

நியாயாதிபதிகள் ஞானமும், அறிவும், விவேகமும், நீடிய பொறுமையுமுள்ளவர்களாயிருக்கவேண்டும். அவர்கள் இருபக்கத்து வழக்குகளின் விவரங்களையும் கவனமாயும் பொறுமையாயும், முழுமையாயும் கேட்கவேண்டும். கர்த்தர் தமது கிருபையினால் நமக்கு இரண்டு செவிகளை கொடுத்திருக்கிறார். நாம் கவனமாய்க் கேட்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம்.

கல்வியறிவு உள்ள ஞானிகள் தங்களுடைய நாவினால் நமக்கு உபதேசம்பண்ணும்போது, கற்றுக்கொள்கிறவர்களாகிய நாம், நம்முடைய செவிகளால் உபதேசங்களை கவனமாய்க் கேட்கவேண்டும்.

"இளைப்படைந்தவனுக்கு சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல நான் அறியும்படிக்கு, கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் கல்விமானின் நாவைத்தந்தருளினார்; காலைதோறும் என்னை எழுப்புகிறார்; கற்றுக்கொள்ளுகிறவர்களைப்போல, நான் கேட்கும்படி என் செவியைக் கவனிக்கச்செய்கிறார்" (ஏசா 50:4).

நியாயாதிபதிகள் நீதியின்படி தீர்ப்பு செய்யவேண்டும். அவர்கள் நியாயத்திலே முகத்தாட்சணியம் பார்க்கக்கூடாது. நியாயத்தீர்ப்பு தேவனுடையது. ஆகையினால் நியாயாதிபதிகள் மனிதனுடைய முகத்திற்கு பயப்படாமல், தேவனுடைய நீதிக்கு பயப்படவேண்டும்.

நியாயாதிபதிகள் கர்த்தருடைய பிரதிநிதிகளாயிருந்து, வழக்குகளை விசாரிக்கிறார்கள். அவர்கள் அநீதியான தீர்ப்பு சொல்லும்போது, கர்த்தருடைய நாமத்தைத் தூஷிக்கிறார்கள். நியாயத்தீர்ப்பு தேவனுடையதாயிருக்கும்போது, நியாயாதிபதிகள் நீதியின்படி தீர்ப்பு செய்யவேண்டியது அவசியமாயிருக்கிறது.

இஸ்ரவேலின் நியாயாபதிகளால் எல்லா வழக்குகளையும் விசாரிக்க முடியாது. ஒரு சில வழக்குகள் விசாரிப்பதற்கும், நியாயத்தீர்ப்பு சொல்லுவதற்கும் மிகவும் கடினமானதாயிருக்கும். அப்படிப்பட்ட கடினமான வழக்குகளை தானே நியாயம் விசாரிப்பதாக மோசே சொல்லுகிறார்.

மோசே நியாயாதிபதிகளை நோக்கி, "உங்களுக்குக் கடினமாயிருக்கும் காரியத்தை என்னிடத்தில் கொண்டுவாருங்கள்; நான் அதைக் கேட்பேன்" (உபா 1:17) என்று சொல்லுகிறார். மோசே இஸ்ரவேலின் நியாயாதிபதிகளை ஏற்படுத்தினாலும், அவரும் நியாயாதிபதிகளோடு கூடயிருந்து, வழக்குகளை விசாரித்து, அவர்களுக்கு தீர்ப்பு சொல்லுகிறார். இதனால் வழக்குகளை விசாரிக்கும் வேலை நியாயாதிபதிகளுக்கு எளிதாயிருக்கிறது. அதே வேளையில் நியாயாதிபதிகளுக்கு கீழ்ப்படிவதும் இஸ்ரவேல் சபையாருக்கு எளிதாயிருக்கிறது.

மோசே மேல்முறையீட்டு நீதிமன்றம்போலவும், மற்றவர்கள் கீழ்நிலை நீதிமன்றங்கள்போலவும் செயல்படுகிறார்கள். (யாத் 18:13-27; எண் 11:13-27).

இஸ்ரவேலின் நியாயாதிபதிகள் செய்யவேண்டிய காரியங்கள் யாவையும் மோசே அக்காலத்திலே அவர்களுக்கு கட்டளையிட்டிருப்பதாக சொல்லுகிறார் (உபா 1:18).

இஸ்ரவேல் ராஜ்யத்தின் ஆளுகையை, எட்டு வெவ்வேறு ஆட்சிக்காலமாக பிரிக்கலாம். அவையாவன: 1. முற்பிதாக்களின் ஆட்சிக்காலம். 2. கோத்திரங்களின் ஆட்சிக்காலம் 3. இஸ்ரவேலருடைய மூப்பர்களின் ஆட்சிக்காலம் 4. மோசேயின் ஆட்சிக்காலம் 5. நியாயாதிபதிகளின் ஆட்சிக்காலம் 6. ராஜாக்களின் ஆட்சிக்காலம் 7. உள்ளூர் சபைகளின் ஆட்சிக்காலம் 8. கர்த்தருடைய ஆட்சிக்காலம். இந்த ஆட்சிக்காலங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. முற்பிதாக்களின் ஆட்சிக்காலம் - ஆபிரகாம் (ஆதி 12-25), ஈசாக்கு (ஆதி 26-27), யாக்கோபு (ஆதி 28-50) ஆகிய முற்பிதாக்கள் இஸ்ரவேலை ஆட்சிபுரிந்த காலத்தைக் குறிப்பிடுகிறது. ஒருவரே ஆட்சி புரிகிறார். ஆட்சி பொறுப்பு பரம்பரையாக வருகிறது.

2. கோத்திரங்களின் ஆட்சிகாலம் - யாக்கோபு மரித்த பின்பு, இஸ்ரவேல் புத்திரரின் ஜனத்தொகை அதிகரித்த போது, இந்த ஆட்சிக்காலம் ஆரம்பமாகிறது. குடும்பங்களின் தலைவர்கள், கோத்திரங்களின் தலைவர்கள், இஸ்ரவேல் புத்திரரை ஆட்சி புரிந்தார்கள். (யாத் 6:14).

3. இஸ்ரவேலருடைய மூப்பர்களின் ஆட்சிக்காலம் - இஸ்ரவேல் புத்திரரின் ஜனத்தொகை மிகவும் அதிகரிக்கிறது. கோத்திரங்களின் தலைவர்கள் இப்பொழுது மூப்பர்களாகி விடுகிறார்கள். அதிபதிகள், பிரதானிகள், பிரபுக்கள் ஆகியோர் ஒவ்வொரு கோத்திரத்திலும் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து இஸ்ரவேலின் மூப்பர்கள் என அழைக்கப் படுகிறார்கள். (யாத் 3:16,18; யாத் 4:29; யாத் 12:21; யாத் 17:5-6; யாத் 18:12; யாத் 19:7).

4. மோசேயின் ஆட்சிக்காலம் - மோசேயின் காலத்திலும், மூப்பர்கள் இருக்கிறார்கள். மோசேயே பிரதான அதிகாரி. மற்றவர்கள் மோசேக்கு உதவி புரிகிறார்கள். இது தனிநபருடைய ஆட்சியாகும். மோசே தேவனுக்கு மட்டுமே பதில்கூற வேண்டியவர். மோசேயின் கீழிருந்த மூப்பர்கள் கோத்திரங்களின் தலைவர்களும், (உபா 5:23), இஸ்ரவேலின் பிரபுக்களும் (யாத் 24:1-11), நியாயாதிபதிகளும், குடும்பத் தலைவர்களும் (உபா 1:15; எண் 36:1) ஆவார்கள்.

இவர்களில் எழுபதுபேர் நியாயாதிபதிகளாக தெரிந்தெடுக்கப் பட்டார்கள். (உபா 1:16; யாத் 24:1-11; எண் 11:13-27). மோசேயின் ஆட்சிக் காலத்தில் இவர்களுடைய நீதிமன்றமே பிரதானமாக இருந்தது. ஆரோன் மோசேக்கு அடுத்த நிலையில் தலைவராக இருக்கிறார்.

இதன் பின்பு, இஸ்ரவேலில் ஒரு புதிய பிரிவினர் ஆட்சிக்கு வருகிறார்கள். லேவி கோத்திரத்தார் ஆசாரிய ஊழியம் செய்வதற்காகத் தெரிந்தெடுக்கப் படுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரரின் அன்றாட நடவடிக்கைகளில் லேவி கோத்திரத்தாருக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்படுகிறது. இவர்கள் தேவனுக்கும், மனுஷருக்கும் நடுவில் மத்தியஸ்தராக இருக்கிறார்கள்.

யோசுவாவின் காலத்தில் மோசேயிடத்தில் இருந்த அதிகாரம் இரண்டாகப் பிரிக்கப் பட்டு, ஒருபகுதி கோத்திரத்தின் மூப்பர்களுக்கும், மற்றொரு பகுதி சபை தலைவர்களுக்கும் கொடுக்கப் படுகிறது.

5. நியாயாதிபதிகளின் ஆட்சிக்காலம் - மோசேயின் ஆட்சி முறை, யோசுவாவின் காலத்திலும் தொடருகிறது. இஸ்ரவேலின் மூப்பர்கள் மரிக்கும் வரையிலும் மோசேயின் ஆட்சி முறையே நடைமுறை வழக்கத்தில் தொடர்கிறது. அதன் பின்பு, மோசேயின் ஆட்சி முறையில் பலவித மாற்றங்கள் வந்து விடுகின்றன. ஒவ்வொருவனும் தன்தன் பார்வைக்குச் சரியானதைச் செய்ய ஆரம்பித்து விடுகிறான். (யோசு 24:31; நியா 2:7-15; நியா 17:6; நியா 18:1; நியா 19:1; நியா 21:25) சுமார் 450 வருஷமாக இதுபோன்ற நிலைமையே தொடர்கிறது.

சாமுவேலின் காலம் வரையிலும் தேவன் நியாயாதிபதிகளை எழுப்பி, இஸ்ரவேலின் சத்துருக்களிடமிருந்து தமது ஜனத்தை மீட்கிறார். இஸ்ரவேலின் ஒரு பகுதியினரை நியாயாதிபதிகள் மூலமாகக் கர்த்தர் ஆட்சி புரிகிறார். (நியா 2:16-23; நியா 3:1-4; அப் 13:20).

6. ராஜாக்களின் ஆட்சிக்காலம் - சாமுவேலின் காலம் வரையிலும் நியாயாதிபதிகளின் ஆட்சிக்காலம் தொடர்கிறது. மற்ற தேசங்களைப்போல தங்களுக்கு ராஜா வேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரர்கள் விரும்புகிறார்கள். (1சாமு 8-10). கி.மு. 606 ஆவது வருஷத்தில் இஸ்ரவேல் ஜனத்தார் பாபிலோனிய சிறையிருப்பிற்குப் போகும் வரையிலும் இஸ்ரவேலில் ராஜாக்களின் ஆட்சிக்காலம் 513 வருஷங்களாக நடைபெற்று வருகிறது.

70 வருஷ சிறையிருப்பிற்குப் பின்பு, இஸ்ரவேல் புத்திரரை ஆளுகை செய்வதற்கு ராஜாக்கள் யாரும் இல்லை. ஆலோசனைச் சங்கம் அல்லது மூப்பர்களின் பிரதிநிதிகள் ராஜாக்கள் இல்லாத காலத்தில் இஸ்ரவேல் புத்திரரை ஆளுகை செய்கிறார்கள். ஆலோசனைச் சங்கத்திற்கு பிரதான ஆசாரியர் அல்லது இஸ்ரவேல் புத்திரர்கள் தெரிந்தெடுக்கும் ஒரு தலைவர் தலைமைப் பொறுப்பு வகிக்கிறார்.

கி.பி. 70 ஆம் வருஷம் வரையிலும், ஆலோசனைச் சங்கத்தாரின் ஆட்சி நடைபெறுகிறது. இஸ்ரவேல் ஜனத்தார் மேசியாவை ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்ததினால், அவர்கள் அழிக்கப்படுகிறார்கள். தேசங்களில் சிதறடிக்கப்படுகிறார்கள். (மத் 23:37-39; லூக்கா 21:20-24).

இஸ்ரவேலின் இந்த வரலாற்றுக் காலங்களில் அவர்களுடைய மூப்பர்களே பிரதானமானவர்களாக இருந்து, ஆட்சி செய்திருக்கிறார்கள். ராஜா வேண்டுமென்று கேட்டிருக்கி றார்கள். (1சாமு 8:2-22), ராஜாக்களைத் தெரிந்தெடுத்திருக்கி றார்கள் (2சாமு 3:17-21; 2சாமு 5:3), அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறி, ஆட்சி புரிய உதவி புரிந்திருக்கிறார்கள். (2சாமு 12:17; 1நாளா 15:25; 1நாளா 21:16; 1இராஜா 8:1-3; 1இராஜா 12:6-13; 1இராஜா 20:7-8; எஸ்றா 9:1; எஸ்றா 10:8-14; மத் 15:2-9; மத் 21:23; மத் 26:2-68; மத் 27:1-2; மாற்கு 7:1-13; அப் 4:1-21; அப் 6:9-15; அப் 7:1-59; அப் 9:1).

7. உள்ளூர் சபைகளின் ஆட்சிக்காலம் - (உபா 19:12; உபா 21:2-21; உபா 22:13-21; உபா 25:7-9; யோசு 20:4; நியா 8:14-16; நியா 11:5-11; ரூத் 4:2-11; 1சாமு 11:3; எஸ்றா 10:8,14; நெகே 3:9-19).

8. கர்த்தருடைய ஆட்சிக்காலம் - இதில் கர்த்தரே ராஜாவாக ஆட்சி புரிகிறார். இஸ்ரவேலரின் வரலாற்றுப் பின்னணியில் கர்த்தரே ஆதாரமாக இருந்து, ஆட்சி செய்திருக்கிறார். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு, மோசே, யோசுவா, நியாயாதிபதிகள், ராஜாக்கள் ஆகியோரை அழைத்தவர் கர்த்தரே. முற்பிதாக்களுடைய ஜீவியங்களில் கர்த்தர் மிகவும் பிரதானமானவராக இருந்திருக்கிறார். கர்த்தர் நியாயப் பிரமாணங்களைக் கொடுத்து, மோசேயின் மரணம் வரையிலும் இஸ்ரவேலரின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும், வழிநடத்தி வந்திருக்கிறார்.

நியாயாதிபதிகளின் காலத்தில் ஜனங்கள் தம்மிடத்தில் திரும்பி வரும்போது, கர்த்தர் அவர்களுக்கு உதவி புரிந்திருக்கிறார். ராஜாக்களின் காலத்திலும், சிறையிருப்பின் காலத்திலும் இதே நிலைமையே தொடர்ந்து வந்திருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் தேவனிடத்தில் ஆலோசனை கேட்டு, அவரை சார்ந்திருக்கும்போது, கர்த்தர் அவர்களுடைய தலைவராக இருந்திருக்கிறார். அவர்கள் தவறு செய்யும்போது, அவர்களைத் திருத்துவதற்காகவும், அவர்களை இரட்சிப்பதற்காகவும் தேவன் பல தீர்க்கதரிசிகளையும், அப்போஸ்தலர் களையும் அனுப்பி, இஸ்ரவேல் புத்திரரை எச்சரித்திருக்கிறார்.

தம்முடைய ஜனத்தை எப்படியாவது மீட்டுக் கொள்ள வேண்டுமென்பது தேவனுடைய விருப்பம். முடிவில் இஸ்ரவேல் புத்திரர்கள் மேசியாவை ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்து விடுகிறார்கள். அதனால் கர்த்தரும், தமது ஜனத்தைப் புறக்கணித்து விடுகிறார். இஸ்ரவேல் ஜனங்கள் உலகமெங்கும் சிதறிப்போய்விடுகிறார்கள்.

அவிசுவாசமும் முறுமுறுப்பும்
உபா 1:19-33

உபா 1:19. நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டபடியே, நாம் ஓரேபைவிட்டுப் பிரயாணம்பண்ணி, எமோரியரின் மலைநாட்டிற்கு நேராக நீங்கள் கண்ட அந்தப் பயங்கரமான பெரிய வனாந்தரவழி முழுவதும் நடந்து வந்து, காதேஸ்பர்னேயாவிலே சேர்ந்தோம்.

உபா 1:20. அப்பொழுது நான் உங்களை நோக்கி: நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்குக் கொடுக்கும் எமோரியரின் மலைநாடுமட்டும் வந்து சேர்ந்தீர்கள்.

உபா 1:21. இதோ, உன் தேவனாகிய கர்த்தர் அந்த தேசத்தை உனக்கு முன்பாக வைத்திருக்கிறார்; உன் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடியே, நீ போய் அதைச் சுதந்தரித்துக்கொள்; பயப்படாமலும் கலங்காமலும் இரு என்றேன்.

உபா 1:22. அப்பொழுது நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வந்து: நமக்காக அந்த தேசத்தைச் சோதித்துப்பார்க்கவும், நாம் இன்னவழியாக அதில் சென்று, இன்ன பட்டணங்களுக்குப் போகலாம் என்று நமக்கு மறுசெய்தி கொண்டுவரவும், நமக்கு முன்னாக மனிதரை அனுப்புவோம் என்றீர்கள்.

உபா 1:23. அது எனக்கு நன்றாய்க் கண்டது; கோத்திரத்திற்கு ஒருவனாகப் பன்னிரண்டு மனிதரைத் தெரிந்தெடுத்து அனுப்பினேன்.

உபா 1:24. அவர்கள் புறப்பட்டு, மலைகளில் ஏறி, எஸ்கோல் பள்ளத்தாக்குமட்டும் போய், அதை வேவுபார்த்து,

உபா 1:25. அத்தேசத்துக் கனிகளில் சில்வற்றைத் தங்கள் கையில் எடுத்துக்கொண்டு நம்மிடத்தில் வந்து, நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்குக் கொடுக்கும் தேசம் நல்ல தேசம் என்று நம்மிடத்தில் சொன்னார்கள்.

உபா 1:26. அப்படியிருந்தும், நீங்கள் போகமாட்டோம் என்று உங்கள் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைக்கு விரோதமாகஎதிர்த்து,

உபா 1:27. உங்கள் கூடாரங்களில் முறுமுறுத்து: கர்த்தர் நம்மை வெறுத்து, நம்மை அழிக்கும்பொருட்டாக நம்மை எமோரியரின் கையில் ஒப்புக்கொடுக்கும்படி. நம்மை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினார்.

உபா 1:28. நாம் எங்கே போகலாம்; அந்த ஜனங்கள் நம்மைப்பார்க்கிலும் பலவான்களும், நெடியவர்களும், அவர்கள் பட்டணங்கள் பெரியவைகளும், வானத்தையளாவும் மதிலுள்ளவைகளுமாய் இருக்கிறதென்றும், ஏனாக்கியரின் புத்திரரையும் அங்கே கண்டோம் என்றும் நம்முடைய சகோதரர் சொல்லி, நம்முடைய இருதயத்தைக் கலங்கப்பண்ணினார்கள் என்று சொன்னீர்கள்.

உபா 1:29. அப்பொழுது நான் உங்களை நோக்கி: நீங்கள் கலங்காமலும் அவர்களுக்குப் பயப்படாமலும் இருங்கள்.

உபா 1:30. உங்களுக்கு முன் செல்லும் உங்கள் தேவனாகிய கர்த்தர் தாமே எகிப்தில் உங்கள்ோடிருந்து, உங்கள் கண்களுக்கு முன்பாகச் செய்ததெல்லாவற்றைப்போலவும், வனாந்தரத்தில் செய்துவந்தது போலவும், உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்.

உபா 1:31. ஒரு மனிதன் தன் பிள்ளையைச் சுமந்துகொண்டு போவதுபோல, நீங்கள் இவ்விடத்திற்கு வருகிறவரைக்கும், நடந்துவந்த வழிகள் எல்லாவற்றிலும், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சுமந்துகொண்டு வந்ததைக் கண்டீர்களே.

உபா 1:32. உங்கள் தேவனாகிய கர்த்தர் நீங்கள் பாளயமிறங்கத்தக்க இடத்தைப் பார்க்கவும், நீங்கள் போகவேண்டிய வழியை உங்களுக்குக் காட்டவும்,

உபா 1:33. இரவில் அக்கினியிலும் பகலில் மேகத்திலும் உங்களுக்குமுன் சென்றாரே. இப்படியிருந்தும், இந்தக் காரியத்தில் நீங்கள் அவரை விசுவாசியாமற்போனீர்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தை சுதந்தர தேசமாக வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆனால் அவர்களோ கானான் தேசத்தை சுதந்தரிக்கப்போகாமல், அவிசுவாசமான வார்த்தைகளைப் பேசுகிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகவும் மோசேக்கு விரோதமாகவும் முறுமுறுக்கிறார்கள். இந்த சம்பவம் எண்ணாகமம் 13,14 ஆகிய அதிகாரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு அதிகாரங்களிலும் சொல்லப்படாத புதிய சம்பவங்களும், புதிய சூழ்நிலைகளும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தைச் சுதந்தரிக்கப்போகாமல், அவிசுவாசமான வார்த்தைகளைப்பேசி, கர்த்தருக்கு விரோதமாகவும், மோசேக்கு விரோதமாகவும் முறுமுறுத்த சம்பவம் எண்ணாகமம் 13,14-ஆகிய அதிகாரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே, கானான் தேசத்தின் எல்லை வரைக்கும் போய்ச்சேருகிறார்கள். கானான் தேசத்தில் பிரவேசிக்க அவர்கள் ஆயத்தமாயிருக்கிறார்கள். ஆனாலும் அவர்களுடைய அவிசுவாசத்தின் நிமித்தமாகவும், முறுமுறுப்புக்களின் நிமித்தமாகவும், கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார். அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசியாமல் வனாந்தரத்திலே திரும்பி வந்து அலைந்து திரிகிறார்கள்.

இந்த சம்பவம் சங்கீதப்புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

"இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்தில் கோபம் மூட்டினபோதும் சோதனை நாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள். அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சை பார்த்து, என் கிரியையையும் கண்டார்கள். நாற்பது வருஷமாய் நான் அந்தச் சந்ததியை அரோசித்து, அவர்கள் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி, என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று, என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன்" (சங் 95:8-11).

எபிரெயருக்கு நிருபம் எழுதின ஆசிரியரும் இந்த சம்பவத்தை விசுவாசிகளாகிய நமக்கு எச்சரிப்பாக எழுதியிருக்கிறார்.

"ஆகையால், பரிசுத்தஆவியானவர் சொல்லுகிறபடியே: இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்திலே கோபமூட்டின போதும், சோதனைநாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள். அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சைபார்த்து, நாற்பது வருஷகாலம் என் கிரியைகளைக் கண்டார்கள். ஆதலால், நான் அந்தச் சந்ததியை அரோசித்து, அவர்கள் எப்பொழுதும் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி; என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் என்றார்" (எபி 3:7-11).

கானான் தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி ஒவ்வொரு பிதாக்களின் கோத்திரத்திலும் ஒவ்வொரு பிரபு வீதமாக பன்னிரண்டு புருஷர்கள் அனுப்பப்படுகிறார்கள் (எண் 13:1-16).

மோசே அந்தப் பன்னிரண்டு வேவுகாரருக்கும் கட்டளைகளைக் கொடுக்கிறார் (எண் 13:17-20). மோசே தங்களுக்கு சொன்ன பிரகாரம் கானான் தேசத்தைச் சுற்றிப்பார்த்து, திரும்பி வருகிறார்கள் (எண் 13:21-25). பன்னிரண்டு வேவுகாரரும் தாங்கள் கொண்டு வந்த செய்தியை இஸ்ரவேலின் பாளயத்திலிருக்கிறவர்களுக்கு சொல்லுகிறார்கள் (எண் 13:26-33).

கர்த்தர் மோசேயை நோக்கி, "நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கும் கானான் தேசத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு நீ மனிதரை அனுப்பு; ஒவ்வொரு பிதாக்களின் கோத்திரத்திலும் ஒவ்வொரு பிரபுவாகிய புருஷனை அனுப்பவேண்டும்" (எண் 13:1,2) என்று சொல்லுகிறார்.

இந்தச் சம்பவம் இஸ்ரவேல் புத்திரர் பாரான் வனாந்தரத்தில் தங்கியிருந்தபோது நிகழ்ந்ததாகும். (எண் 13:2-3)

அந்த மனிதர் யாவரும் இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்கள் எண் 13:4-15 ஆகிய வசனங்களில் இவர்களுடைய பெயர்கள் கூறப்பட்டிருக்கிறது. இந்த அட்டவணையும், எண் 1:5-15 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் அட்டவணையும் ஒன்றல்ல. இவர்கள் பிதாக்களின் வம்சத்து தலைவர்கள். (எண் 1:4) இவர்கள் இஸ்ரவேலில் ஆயிரவர்களுக்குத் தலைவர்கள் (எண் 1:16), சேனைத்தலைவர்கள் (எண் 2:3-32), இஸ்ரவேலின் தலைவர்கள் (எண் 13:3).

கானான் தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி பன்னிரண்டு வேவுகாரர் அனுப்பப்படுகிறார்கள். இவர்களை அனுப்புமாறு கர்த்தரே மோசேயினிடத்தில் சொன்னதுபோல இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால் உபாகமம் புஸ்தகத்தில் இந்த சம்பவம் வேறு விதமாக சொல்லப்பட்டிருக்கிறது. ஜனங்கள் மோசேயினிடத்தில் வந்து, கானான் தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி மனுஷரை அனுப்பவேண்டுமென்று சொன்னதாக உபாகமம் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது

"அப்பொழுது நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வந்து: நமக்காக அந்த தேசத்தைச் சோதித்துப்பார்க்கவும், நாம் இன்னவழியாக அதில் சென்று, இன்ன பட்டணங்களுக்குப் போகலாம் என்று நமக்கு மறுசெய்தி கொண்டுவரவும், நமக்கு முன்னாக மனிதரை அனுப்புவோம் என்றீர்கள்" (உபா 1:22).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தைக் கொடுப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற நலமான தேசம். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ கர்த்தருடைய வார்த்தையை நம்பவில்லை. அவர்கள் கானான் தேசத்தை சோதித்துப் பார்க்க விரும்புகிறார்கள். கர்த்தர் சொன்னது மெய்யான வார்த்தைதானா என்பதை அவர்கள் சோதித்தறிய ஆசைப்படுகிறார்கள்.

கர்த்தர் ஏற்கெனவே கானான் தேசத்தை சோதித்துப் பார்த்து, அது பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம் என்பதை உறுதி செய்து, அதன் பின்பே அந்த தேசத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தர் சோதித்துப் பார்த்ததையும் நம்பவில்லை, கானான் தேசத்தைப்பற்றி கர்த்தர் தங்களுக்கு சொன்ன வார்த்தையையும் நம்பவில்லை. அவர்கள் அந்த தேசத்தை சோதித்துப் பார்க்க தங்களுக்கு முன்னாக வேவுகாரரை அனுப்புகிறார்கள்.

கர்த்தருடைய ஜனம் அவருடைய வார்த்தையை நம்பவேண்டும். கர்த்தருடைய வாக்குத்தத்தங்களெல்லாம் ஆம் என்றும், ஆமென் என்றும் இருக்கிறது. கர்த்தர் நமக்கு நன்மையான ஈவுகளை மாத்திரமே கொடுப்பார் என்னும் நிச்சயம் நம்முடைய மனதில் இருக்கவேண்டும். நாம் கர்த்தருடைய கிருபையையும், இரக்கத்தையும், அவருடைய தெய்வீக வழிநடத்துதலையும் நம்பாமல், நம்முடைய சுயபுத்தியையும், சுயவல்லமையையும் நம்பினால், நாம் சீக்கிரத்தில் அழிந்துபோவோம்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், தேவனுடைய தெய்வீக வெளிப்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். கர்த்தருடைய வெளிப்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், நம்முடைய சுயபுத்திக்கு முக்கியத்துவம் கொடுத்தால், நமக்கு சமாதானம் கிடைக்காது. நம்முடைய காரியங்கள் எல்லமே குழப்பமாகிவிடும். விசுவாசிகளாகிய நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கவேண்டியவர்கள்.

கானான் தேசத்தை சோதித்து அறியும்படி தங்களுக்கு முன்னாக ஜனங்களை அனுப்பவேண்டும் என்று இஸ்ரவேல் புத்திரர் மோசேயிடம் சொல்லுகிறார்கள். மோசேயும் அவர்களுக்கு மறுப்பு சொல்லவில்லை. அவர்களுடைய விருப்பத்தை மோசே கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார். கர்த்தரும் ஜனங்களுடைய மனவிருப்பத்தின்படியே அவர்களை விட்டுவிடுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய தெய்வீக ஆலோசனையின் பிரகாரம் முன்செல்லாமல், தங்களுடைய சுயஆலோசனையின் பிரகாரமாக முன்செல்கிறார்கள். கர்த்தருடைய ஆலோசனை அவர்களை வழிநடத்தாமல், அவர்களுடைய மாம்சத்தின் விருப்பங்களும், ஆசைகளும், ஆலோசனைகளும் அவர்களை வழிநடத்துகிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் தம்முடைய வார்த்தையை நம்பாமல், கானான் தேசத்தை சோதித்தறிய, தங்களுக்கு முன்பாக ஆட்களை அனுப்பவேண்டும் என்று சொன்னபோது, கர்த்தரும் அவர்களுடைய விருப்பத்திற்கு அவர்களை ஒப்புக்கொடுத்துவிடுகிறார். "நான் இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுக்கும் கானான் தேசத்தைச் சுற்றிப்பார்ப்பதற்கு நீ மனிதரை அனுப்பு" (எண் 13:2) என்று கர்த்தர் மோசேயினிடத்தில் சொல்லுகிறார்.

மோசே கர்த்தருடைய வாக்கின்படியே அவர்களைப் பாரான் வனாந்தரத்திலிருந்து அனுப்புகிறார்; அந்த மனிதர் யாவரும் இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்கள் (எண் 13:3).

இந்த வசனப்பகுதியில் அவர்களுடைய பெயர்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு பிதாக்களின் கோத்திரத்திற்கு பிரபுவாகயிருக்கிறார்கள். கோத்திரத்திற்கு ஒருவர் வீதமாக, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாருக்கும் பன்னிரண்டு பிரபுக்கள் அனுப்பப்படுகிறார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கோத்திரத்திற்கு பிரதிநிதியாகயிருக்கிறார்கள்.

கானான் தேசத்தை சுற்றிப்பார்க்கும்படி அனுப்பப்பட்ட கோத்திரப்பிரபுக்களின் பெயர்கள் வருமாறு :

ரூபன் கோத்திரத்தில் சக்கூரின் குமாரன் சம்முவா. சிமியோன் கோத்திரத்தில் ஓரியின் குமாரன் சாப்பாத். யூதா கோத்திரத்தில் எப்புன்னேயின் குமாரன் காலேப் (எண் 13:4-6).

காலேப் யூதா கோத்திரத்தையும், யோசுவா எப்பிராயீம் கோத்திரத்தையும் சேர்ந்தவர்கள். (எண் 13:8,16) இவர்கள் இருவரும் தேசத்தைச் சுற்றிப்பார்த்து, நற்செய்தியைக் கொண்டு வந்தார்கள். (எண் 13:30; எண் 14:24,30,38). மோசேக்குப் பின்பு யோசுவா இஸ்ரவேலின் தலைவனானார் (உபா 34:9-12; ஒசி 1:1-18; ஒசி 3:7-8).

இசக்கார் கோத்திரத்தில் யோசேப்பின் குமாரன் ஈகால். எப்பிராயீம் கோத்திரத்தில் நூனின் குமாரன் ஓசேயா. பென்யமீன் கோத்திரத்தில் ரப்பூவின் குமாரன் பல்த்தி. செபுலோன் கோத்திரத்தில் சோதியின் குமாரன் காதியேல் (எண் 13:7-10).

மனாசேக்குப் பதிலாக யோசேப்பின் பெயரும், லேவிக்குப் பதிலாக எப்பிராயீமின் பெயரும் இங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. (எண் 13:8).

யோசேப்பின் கோத்திரத்தைச் சேர்ந்த மனாசே கோத்திரத்தில் சூசின் குமாரன் காதி. தாண் கோத்திரத்தில் கெமல்லியின் குமாரன் அம்மியேல். ஆசேர் கோத்திரத்தில் மிகாவேலின் குமாரன் சேத்தூர். நப்தலி கோத்திரத்தில் ஒப்பேசியின் குமாரன் நாகபி. காத் கோத்திரத்தில் மாகியின் குமாரன் கூவேல் (எண் 13:11-15).

சேத்தூர் என்னும் எபிரெய பெயருக்கு, "தேவனால் உறுதிபண்ணப்பட்டவர்" என்று பொருள். எபிரெய மொழியில் எழுத்துக்களே எண்களாகவும் பயன்படுகிறது. சேத்தூர் என்னும் எபிரெய பெயரின் கூட்டு எண்ணிக்கை 666 ஆகும். இந்த எண்ணிக்கை அந்திக் கிறிஸ்துவின் அடையாளம் என்று ஒருசிலர் வியாக்கியானம் பண்ணுகிறார்கள் (வெளி 13).

இந்த அட்டவணை பிறப்பின் பிரகாரமாகவோ, (ஆதி 29:32-35; ஆதி 35:16-18) அல்லது ஆசரிப்புக் கூடாரத்தைச் சுற்றிலும் பாளயமிறங்கியிருக்கும் வரிசைப் பிரகாரமாகவோ கூறப்படவில்லை. (எண் 2:3-32).

ஜனங்களைத் திருப்திப்படுத்துவதற்காக மோசே வேவுகாரரை அனுப்புகிறார். (உபா 1:19-22). வாக்குத்தத்த கானான் தேசத்தைப் பற்றி தேவன் அவர்களுக்கு ஏற்கெனவே அறிவித்திருக்கிறார். (உபா 8:7-9). இஸ்ரவேல் புத்திரர் அதை நம்பியிருந்தால், கானான் தேசத்திற்குள் விசுவாசத்தோடு சென்று அதைச் சுதந்தரித்திருப்பார்கள். வனாந்தரத்தில் அவர்கள் நாற்பது வருஷங்கள் அலைந்து திரிந்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

ஓசேயாவுக்கு யோசுவா என்று மோசே பேரிட்டிருக்கிறார். ஓசேயா என்னும் பெயருக்கு இரட்சகர் அல்லது இரட்சிப்பு என்று பொருள். மோசே ஓசேயா என்னும் பெயரை யோசுவா என்று மாற்றுகிறார் (யாத் 17:9) யோசுவா என்னும் பெயருக்கு இரட்சிப்பார் அல்லது தேவனுடைய இரட்சிப்பு என்று பொருள். தேவனுடைய பெயரிலுள்ள ஒரு எழுத்து யோசுவாவின் பெயரில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி மோசே அனுப்பின மனிதரின் நாமங்கள் இவைகளே; நூனின் குமாரனாகிய ஓசேயாவுக்கு யோசுவா என்று மோசே பேரிட்டிருக்கிறார் (எண் 13:16).

ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஒவ்வொரு பிரபு வீதமாக பன்னிரண்டு பிரபுக்கள் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். இது மிகவும் நல்ல திட்டம். எந்தக் கோத்திரமும் ஒதுக்கி வைக்கப்படவில்லை. கானான் தேசத்தைச் சுற்றிப்பார்ப்பதற்கு எல்லா கோத்திரத்தாருக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. இந்த திட்டம் நல்லதாகயிருந்தாலும், இதன் மூலமாக நல்ல விளைவு ஏற்படவில்லை.

கானான் தேசத்தைச் சுற்றிப்பாப்பதற்காக அனுப்பப்பட்ட கோத்திரப்பிதாக்களின் குணாதிசயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஒவ்வொரு பிரபு அனுப்பப்படுகிறார். ஆனால் அனுப்பப்படுகிற அந்த பிரபுக்கு எப்படிப்பட்ட நற்குணம் இருக்கவேண்டும் என்பதில் யாரும் கவனம் செலுத்தவில்லை.

கோத்திரப்பிதாக்கள் கானான் தேசத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு, தாங்கள் புறப்பட்ட இடத்திற்கு திரும்பி வருகிறார்கள். அவர்கள் இஸ்ரவேலின் பாளயத்திலுள்ளவர்களுக்கு சொல்லும் செய்திகள் அவர்களுடைய மனம் போலவே இருக்கிறது. தீயசுபாவமுள்ளவர்கள் தீயசெய்திகளை சொல்லுகிறார்கள். நல்ல சுபாவமுள்ளவர்கள் நல்ல செய்திகளைச் சொல்லுகிறார்கள்.

கானான் தேசத்திற்கு அனுப்பப்பட்டவர்களில் பத்துபேர் கர்த்தருடைய வார்த்தைக்கும், அவருடைய வல்லமைக்கும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அவர்கள் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை நம்பவில்லை. அவர்கள் கர்த்தருடைய பலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தங்களுடைய சொந்த பலத்துக்கும், கானான் தேசத்திலிருக்கிற கானானியரின் பலத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அவர்கள் கானானியரை தங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள்.

கானான் தேசத்தை சுற்றிப் பார்க்க போனவர்களில் இருவர் மாத்திரம் கர்த்தரையும், அவருடைய வார்த்தையையும் நம்புகிறார்கள். அவர்கள் கானானியரின் பலத்தை கர்த்தருடைய பலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சர்வவல்லமையுள்ள தேவன்.

யோசுவாவின் பழைய பெயர் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய பழைய பெயர் ஒசேயா என்பதாகும். மோசே ஒசேயா என்னும் பெயரை, யோசுவா என்று மாற்றியிருக்கிறார். ஒசேயா என்னும் பெயருக்கு, இரட்சிப்புக்காக ஜெபம்பண்ணுவது என்று பொருள். ஒசேயா என்னும் பெயருக்கு "நீர் இரட்சிப்பீர்" என்று பொருள் சொல்லலாம்.

யோசுவா என்னும் பெயர் இரட்சிப்பின் வாக்குத்தத்தத்தைக் குறிப்பிடுகிறது. யோசுவா என்னும் பெயருக்கு "அவர் இரட்சிப்பார்" என்று பொருள் சொல்லலாம்.

ஒசேயா என்னும் பெயரும், யோசுவா என்னும் பெயரும் இரண்டு வெவ்வேறு பெயர்களாகயிருந்தாலும், இவ்விரண்டிற்கும் நெருங்கிய தொடர்புள்ளது. ஒரு பெயர் ஜெபத்திற்கு அடையாளம். மற்றொரு பெயர் வாக்குத்தத்தத்திற்கு அடையாளம். ஜெபத்தின் மூலமாக வாக்குத்தத்தம் நிறைவேறுகிறது. வாக்குத்தத்தம் நிறைவேறவேண்டும் என்பதற்காக நாம் ஜெபம்பண்ணுகிறோம்.

இயேசு என்னும் பெயரும், யோசுவா என்னும் பெயரும் ஒரே பொருளை உடையது. நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்துவுக்கு இயேசு என்பதே பெயர். மோசேக்கு பின்பு யோசுவா இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்தினார். அவரே இஸ்ரவேலின் தளபதியாகவும், கானான் தேசத்தைச் சுதந்தரிக்கிறவராகவும் இருக்கிறார்.

யோசுவா கர்த்தருடைய ஜனங்களை, கானான் தேசத்தின் வல்லமைகளிலிருந்து விடுவித்து இரட்சித்தார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ தம்முடைய ஜனங்களை பாதாளத்தின் வல்லமைகளிலிருந்து மீட்டு இரட்சிக்கிறார்.

மோசே இஸ்ரவேலின் பன்னிரண்டு பிரபுக்களையும் கானான் தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி அனுப்புகிறார். அவர்கள் கானான் தேசத்தில் எங்கெல்லாம் போகவேண்டும் என்றும், அவர்கள் எதையெல்லாம் பார்க்கவேண்டும் என்றும், அவர்கள் தன்னிடத்தில் மறுபடியும் திரும்பி வரும்போது, அவர்கள் எதைப்பற்றிய செய்திகளை கொண்டுவரவேண்டும் என்றும் மோசே அவர்களுக்கு கட்டளை கொடுக்கிறார்.

மோசே அவர்களுக்கு சொன்ன கட்டளையில் இரண்டு பகுதிகள் உள்ளது. அவையாவன : 1. அவர்கள் கானான் தேசத்தைப்பற்றி அறிந்து வரவேண்டும். 2. அவர்கள் கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களைப்பற்றி அறிந்து வரவேண்டும்.

மோசே அவர்களை நோக்கி, "நீங்கள் இப்படித் தெற்கே போய், மலையில் ஏறி, தேசம் எப்படிப்பட்டதென்றும், அங்கே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்களோ பலவீனர்களோ, கொஞ்சம்பேரோ அநேகம் பேரோ என்றும் (எண் 13:17,18) பாருங்கள் என்று சொல்லுகிறார்.

தெற்கு பகுதியில் நேகேப் மலை இருக்கிறது. இது கானானின் தென்பகுதியாகும். கானானின் தென்பகுதியும், மையப்பகுதியும் மலைகள் சூழ்ந்துள்ள இடம்.

அவர்கள் குடியிருக்கிற தேசம் எப்படிப்பட்டது, அது நல்லதோ கெட்டதோ என்றும், அவர்கள் பட்டணங்கள் எப்படிப்பட்டதென்றும், அவர்கள் கூடாரங்களில் குடியிருக்கிறவர்களோ கோட்டைகளில் குடியிருக்கிறவர்களோ என்றும், நிலம் எப்படிப்பட்டது, அது வளப்பமானதோ இளப்பமானதோ என்றும்; அதில் விருட்சங்கள் உண்டோ இல்லையோ என்றும் பாருங்கள் (எண் 13:19,20) என்று மோசே வேவுகாரரிடம் சொல்லுகிறார்.

வேவுகாரர்கள் பார்த்து வரவேண்டிய காரியங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. தேசம் எப்படிப்பட்டது என்று
2. அங்கே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்களோ பலவீனர்களோ என்று
3. கொஞ்சம்பேரோ அநேகம் பேரோ என்று
4. அவர்கள் குடியிருக்கிற தேசம் எப்படிப்பட்டது என்று
5. அந்த தேசம் நல்லதோ கெட்டதோ என்று
6. அவர்கள் பட்டணங்கள் எப்படிப்பட்டதென்று
7. அவர்கள் கூடாரங்களில் குடியிருக்கிறவர்களோ கோட்டைகளில் குடியிருக்கிறவர்களோ என்று
8. நிலம் எப்படிப்பட்டது, அது வளப்பமானதோ இளப்பமானதோ என்று
9. அதில் விருட்சங்கள் உண்டோ இல்லையோ என்று

மோசே அவர்களைப் பார்த்து, "நீங்கள் தைரியங்கொண்டிருந்து, தேசத்தின் கனிகளிலே சிலவற்றைக் கொண்டுவாருங்கள்" (எண் 13:20) என்றும் சொல்லுகிறார். அக்காலம் திராட்சச்செடி முதற்பழம் பழுக்கிற காலமாயிருக்கிறது.

பாலஸ்தீன தேசத்தின் தென்பகுதியில் ஜூலை, ஆகஸ்டு, ஆகிய மாதங்கள் திராட்சைப்பழங்கள் பழுக்கும் காலமாகும். செப்டம்பர், அக்டோபர் ஆகிய மாதங்கள் திராட்சைப்பழம் அறுக்கும் மாதமாகும். வடக்கு பிரதேசத்தில் திராட்சைப்பழம் பழுக்கும் காலமாக இருக்கும். இஸ்ரவேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்திலிருந்து மே மாதம் 20 ஆம் தேதி புறப்படுகிறார்கள். (எண் 10:11).

அதன்பின்பு, கிப்ரோத்-அத்தாவாவில் ஒரு மாதம் தங்கியிருக்கிறார்கள். அங்கு அவர்களுக்குக் காடைகள் கொடுக்கப்படுகிறது (எண் 11:20, 31-35) அதன்பின்பு, ஆஸரோத்தில் ஏழு நாட்கள் தங்கியிருக்கிறார்கள். (எண் 11:35-12:16) இந்த வரலாற்றைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது வேவுகாரர்கள் ஜூலை மாதத்தின் ஆரம்பத்தில் கானான் தேசத்திற்குள் பிரவேசித்திருக்கவேண்டும் என்று தெரியவருகிறது.

மோசே பன்னிரண்டு வேவுகாரர்களையும் அனுப்பும்போது, "தைரியங்கொண்டிருங்கள்" என்று சொல்லுகிறார். இந்த வாக்கியத்திற்கு, அவர்கள் கர்த்தர்மீது நம்பிக்கை வைக்கவேண்டும் என்றும், மனுஷரைப் பார்த்து பயப்படக்கூடாது என்றும் பொருள். மோசே அவர்களிடத்தில் பல காரியங்களை பார்த்து வருமாறு சொல்லியிருக்கிறார். அவர்கள் அந்தக் காரியங்களையெல்லாம் பார்த்து, இஸ்ரவேலின் பாளயத்திலிருக்கிற ஜனங்களுக்கு நல்ல செய்திகளை கொண்டு வரவேண்டும். அவர்களுடைய செய்தி இஸ்ரவேல் புத்திரரை உற்சாகப்படுத்த வேண்டும்.

இஸ்ரவேல் புத்திரரின் பிரபுக்கள் வாக்குத்தத்த தேசத்தைச் சுற்றிப் பார்க்கப்போகிறார்கள்.

அவர்கள் போய், சீன் வனாந்தரந் தொடங்கி, ஆமாத்துக்குப் போகிற வழியாகிய ரேகொப் மட்டும், தேசத்தைச் சுற்றிப் பார்க்கிறார்கள் (எண் 13:21). இஸ்ரவேலின் பன்னிரண்டு பிரபுக்களும் கானான் தேசத்தை சுற்றிப் பார்க்கும்போது அவர்கள் வெவ்வேறு பிரிவுகளாக பிரிந்து, செல்கிறார்கள்.

பாரானின் வடக்கு பகுதியில் சீன் வனாந்தரம் அமைந்திருக்கிது. ரேகோப் பாலஸ்தீனத்தின் வடக்கு பகுதியில் உள்ளது. (2சாமு 8:3). இங்கிருந்து இவர்கள் தெற்கு பகுதியிலுள்ள எபிரோனுக்குத் திரும்புகிறார்கள். (எண் 13:22) அதன்பின்பு, எஸ்கோல் பள்ளத்தாக்கிற்குச் சென்று அங்கியிருந்து திராட்சைப்பழங்களையும், மாதுளம்பழங்களையும், அத்திப்பழங்களையும், சேகரித்துக் கொண்டு தங்கள் பாளயத்திற்குத் திரும்பி வருகிறார்கள்.

"உங்கள் தென்புறம் சீன்வனாந்தரம் தொடங்கி ஏதோம் தேசத்தின் ஓரமட்டும் இருக்கும்; கிழக்கே இருக்கிற உப்புக்கடலின் கடைசி தொடங்கி உங்கள் தென்எல்லையாயிருக்கும்" (எண் 34:3).

"ஓர் என்னும் மலை தொடங்கி, ஆமாத்திற்குப் போகிற வழியைக் குறிப்பாக வைத்து, அங்கேயிருந்து அந்த எல்லை சேதாத்திற்குப் போய், அங்கேயிருந்து அது சிப்ரோனுக்குப் போய், ஆத்சார் ஏனானிலே முடியும்; அதுவே உங்களுக்கு வடபுறத்து எல்லையாயிருக்கும்" (எண் 34:8,9).

இந்த வசனப்பகுதியில் எபிரோனைப்பற்றி விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. "அதன் பின்பு அவர்கள் தெற்கேயும் சென்று, எபிரோன்மட்டும் போகிறார்கள்; அங்கே ஏனாக்கின் குமாரராகிய அகீமானும் சேசாயும் தல்மாயும் இருக்கிறார்கள். எபிரோன் எகிப்திலுள்ள சோவானுக்கு ஏழுவருஷத்திற்கு முன்னே கட்டப்பட்டது" (எண் 13:22).

ஏனோக்கியரின் கோத்திரப்பிதா அர்பா என்பவர். (யோசு 14:15; யோசு 15:13). எபிரோன் கீரியாத்-அர்பா என்று அழைக்கப்பட்டது. (ஆதி 23:2,19). அகீமான், சேசாய், தல்மாய் ஆகியோர் ஏனோக்கியரின் ராட்சத சந்ததியார் ஆவார்கள். 50 வருஷங்களுக்குப் பின்பு காலேப் இவர்களை முறியடித்தார். (யோசு 15:14; நியா 1:10).

எபிரோன் எகிப்திலுள்ள சோவானுக்கு ஏழுவருஷத்திற்கு முன்னே கட்டப்பட்டது. சோவான் கீழ் எகிப்து தேசத்தின் தலைநகரம். இதைவிட எபிரோன் பழமை வாய்ந்தது.

எபிரொனிலே மக்பேலா குகை இருக்கிறது. இந்தக் குகையில் இஸ்ரவேலரின் முற்பிதாக்கள் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

"அதற்குப்பின் ஆபிரகாம் தன் மனைவியாகிய சாராளைக் கானான் தேசத்தில் எப்பெரோன் ஊர் பூமியான மம்ரேக்கு எதிரே இருக்கிற மக்பேலா என்னும் நிலத்தின் குகையிலே அடக்கம் பண்ணினான்" (ஆதி 23:19).

கானான் தேசத்தை சுற்றிப் பார்க்கப்போன இஸ்ரவேலின் கோத்திரப்பிரபுக்கள் மக்பேலாவிலுள்ள, தங்கள் முற்பிதாக்களின் கல்லறைக்குப்போகிறார்கள். அந்த பகுதிக்கு அருகாமையிலுள்ள பட்டணத்தில் ஏனாக்கின் குமாரர் குடியிருக்கிறார்கள். தங்களுடைய முற்பிதாக்களின் கல்லறைகள் எங்கே இருக்கிறாதோ, அந்த இடத்தையும், அதற்கு அருகாமையிலுள்ள இடத்தையும் ஏனாக்கின் குமாரர் கைப்பற்றியிருக்கிறார்கள்.

பின்பு, அவர்கள் எஸ்கோல் பள்ளத்தாக்கு மட்டும் போய், அங்கே ஒரே குலையுள்ள ஒரு திராட்சைக் கொடியை அறுக்கிறார்கள்; அதை ஒரு தடியிலே இரண்டு பேர் கட்டித் தூக்கிக்கொண்டு வருகிறார்கள்; மாதளம்பழங்களிலும் அத்திப்பழங்களிலும் சிலவற்றைக் கொண்டுவருகிறார்கள் (எண் 13:23). இஸ்ரவேல் புத்திரர் அங்கே அறுத்த திராட்சக்குலையினிமித்தம், அவ்விடம் எஸ்கோல் பள்ளத்தாக்கு என்னப்பட்டது (எண் 13:24).

எபிரோனின் தென்பகுதியிலுள்ள எஸ்கோல் பள்ளத்தாக்கு வளம் நிறைந்தது. எஸ்கோல் என்பதற்கு "திராட்சைக்குலை" (ஆதி 14:13) என்று பொருள். வேதாகமத்தில் நான்கு இடங்களில் எஸ்கோலைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. (எண் 13:23-24; எண் 32:9; உபா 1:24). கானான் தேசம் யோசுவாவின்கீழ் பங்குபாகம் பண்ணப்பட்டபோது, இந்தப் பள்ளத்தாக்கு யூதாவின் பங்குவீதமாகக் கிடைக்கிறது.

கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம் என்பதற்கு இந்தத் திராட்சப்பழங்களும், மாதுளம் பழங்களும், அத்திப்பழங்களும் அடையாளமாயிருக்கிறது. ஆகையினால் இந்தப் பள்ளத்தாக்குக்கு எஸ்கோல் பள்ளத்தாக்குக்கு என்று பேரிடுகிறார்கள். எஸ்கோல் என்னும் பெயருக்கு திராட்சக்குலை என்று பொருள். கானான் தேசத்திலுள்ள எல்லா பழங்களுக்கும், இந்த திராட்சக்குலையானது அடையாளமாகவும் அச்சாரமாகவும் இருக்கிறது.

இஸ்ரவேல் கோத்திரத்தின் பன்னிரண்டு பிரபுக்களும் தேசத்தைச் சுற்றிப் பார்த்து, நாற்பதுநாள் சென்றபின்பு திரும்புகிறார்கள் (எண் 13:25).

இஸ்ரவேல் புத்திரரின் வேவுகாரர்கள் கானான் தேசத்தை நாற்பது நாட்களுக்குச் சுற்றி பார்த்துவிட்டு, தங்கள் பாளயத்திற்குத் திரும்பி வருகிறார்கள். நாற்பது என்னும் எண்ணில் விசேஷித்த ஆவிக்குரிய வியாக்கியானம் எதுவுமில்லை. (உபா 4:2; உபா 12:32; நீதி 30:6; வெளி 22:18-19).

கானான் தேசத்தைச் சுற்றிப்பார்க்கப்போன பன்னிரண்டு பிரபுக்களும் திரும்பி வருகிறார்கள். அவர்கள் ஒரே குலையுள்ள ஒரு திராட்சக்கொடியையும், மாதளம்பழங்களிலும், அத்திப்பழங்களிலும் சிலவற்றையும் கொண்டு வருகிறார்கள். இவை கானான் தேசம் செழிப்பான தேசம் என்பதற்கு அடையாளமாயும் அச்சாரமாயும் இருக்கிறது. இதில் அவர்களுக்குள் கருத்து வேறுபாடு எதுவுமில்லை.

மோசே அவர்களிடத்தில் கானான் தேசத்தைப்பற்றியும், கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களையும் பற்றி செய்தி கொண்டு வருமாறு சொன்னார். பன்னிரண்டு பிரபுக்களும் கானான் தேசம் செழிப்பான தேசம் என்று ஒன்றுபோல் ஒரே செய்தியை சொல்லுகிறார்கள். அவர்களுடைய செய்திக்கு, அவர்கள் கொண்டு வரும் பழம் அடையாளமாயிருக்கிறது.

ஆனால் அவர்கள் கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களைப்பற்றி வெவ்வேறு செய்திகளை சொல்லுகிறார்கள். பன்னிரண்டு பிரபுக்களில் பத்து பிரபுக்கள் கானான் தேசத்திற்கு போகவேண்டாம் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் தங்கள் செய்தியினால் இஸ்ரவேல் புத்திரருடைய இருதயத்தைக் கலங்கப்பண்ணுகிறார்கள். மீதமுள்ள இரண்டு பிரபுக்களும், கர்த்தருடைய துணையினால், கானான் தேசத்தை சுதந்தரிக்கலாம் என்று விசுவாச வார்த்தைகளை சொல்லுகிறார்கள்.

கானான் தேசம் செழிப்பான தேசம் என்பதிலும், கனிகொடுக்கும் விருட்சங்கள் அங்கு திரளாயிருக்கிறது என்பதிலும், கனிகளும் பெரிதாயிருக்கிறது என்பதிலும் பிரபுக்கள் மத்தியிலே கருத்து வேறுபாடு எதுவுமில்லை.

இஸ்ரவேலின் கோத்திரப்பிரபுக்கள் பன்னிரண்டு பேரும் கானான் தேசத்தைச் சுற்றிப் பார்த்து, நாற்பதுநாள் சென்றபின்பு திரும்பி வருகிறார்கள். அவர்கள் பாரான் வனாந்தரத்தில் இருக்கிற காதேசுக்கு வந்து, மோசே ஆரோன் என்பவர்களிடத்திலும் இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரிடத்திலும் சேர்ந்து, அவர்களுக்கும் சபையார் அனைவருக்கும் சமாசாரத்தை அறிவித்து, தேசத்தின் கனிகளை அவர்களுக்குக் காண்பிக்கிறார்கள் (எண் 13:25,26).

காதேஸ்பர்னேயாவில் இஸ்ரவேல் புத்திரர் நாற்பது நாட்களுக்குப் பாளயமிறங்கியிருந்தார்கள். (உபா 1:19). இது என்-மிஸ்பாத் (ஆதி 14:7) என்று அழைக்கப்பட்டது. எபிரோனிலிருந்து தென்பகுதியில் 24 மைல் தூரத்திலுள்ளது. எபிரோன் கானான் தேசத்தின் தென்பகுதியின் எல்லையாகும். இங்கு மிரியாம் மரித்தார். ஜனங்கள் மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாக இங்கு கூட்டம் கூடினார்கள். (எண் 20:1-3).

வேவுகாரர் கானான் தேசத்து திராட்சைக்குலையை ஒரு தடியில் இரண்டுபேர் கட்டி, தூக்கிக் கொண்டு வருகிறார்கள் (எண் 13:23). கானான் தேசத்து திராட்சைப்பழங்களும், மாதுளம் பழங்களும், அத்திப்பழங்களும் அளவில் பெரியவை. வளப்பமானவை (எண் 13:23).

அவர்கள் மோசேயை நோக்கி, "நீர் எங்களை அனுப்பின தேசத்துக்கு நாங்கள் போய்வந்தோம்; அது பாலும் தேனும் ஓடுகிற தேசந்தான்; இது அதினுடைய கனி" (எண் 13:27) என்று சொல்லுகிறார்கள்.

அவர்கள் கானான் தேசத்தைப்பற்றிச் சொல்லிய பின்பு கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களைப்பற்றியும் சொல்லுகிறார்கள். ஜனங்களைப்பற்றிச் சொல்லும்போது, பிரபுக்கள் மத்தியிலே கருத்து வேறுபாடு காணப்படுகிறது.

கோத்திரப்பிரபுக்களில் பத்துபேர், கானான் தேசத்தைப்பற்றிச் சொல்லும்போது, அது பாலும் தேனும் ஓடுகிற தேசம் என்று சொல்லிவிட்டு, அதன் பின்பு, "நாங்கள் போய்ச் சுற்றிப் பார்த்து வந்த அந்த தேசம் தன் குடிகளைப் பட்சிக்கிற தேசம்" (எண் 13:32) என்றும் சொல்லுகிறார்கள். அவர்களுடைய வார்த்தையில் உறுதியும், நிச்சயமும் இல்லை. நடுக்கமும், பயமும், தடுமாற்றமும் இருக்கிறது.

கோத்திரப்பிரபுக்கள் கானான் தேசத்தைச் சுற்றிப்பார்த்தபோது, அந்த தேசத்திலே மிகப்பெரிய வாதை இருந்திருக்கவேண்டும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். ஆகையினால் அவர்களுடைய பார்வையில் கானான் தேசம் தன் குடிகளை பட்சிக்கிற தேசமாக அவர்களுக்கு தெரிந்திருக்கிறது.

கானான் தேசத்தைச் சுற்றிப்பார்த்து வந்த பிரபுக்கள், அந்த தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களைப்பற்றியும் சொல்லுகிறார்கள்.

ஆனாலும், அந்த தேசத்திலே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்கள்; பட்டணங்கள் அரணிப்பானவைகளும் மிகவும் பெரியவைகளுமாய் இருக்கிறது; அங்கே ஏனாக்கின் குமாரரையும் கண்டோம் (எண் 13:28) என்றும்,

அமலேக்கியர் தென்புறமான தேசத்தில் குடியிருக்கிறார்கள்; ஏத்தியரும், எபூசியரும், எமோரியரும் மலைநாட்டில் குடியிருக்கிறார்கள்; கானானியர் கடல் அருகேயும் யோர்தானண்டையிலும் குடியிருக்கிறார்கள் (எண் 13:29) என்றும் சொல்லுகிறார்கள்.

கானான் தேசத்தை சுற்றிப்பார்ப்பதற்காக அனுப்பப்பட்டவர்கள் திரும்பி வந்த போது, அவர்களில் அநேகர் சொன்ன பொதுவான செய்தியின் விவரம் வருமாறு :

1. நீர் எங்களை அனுப்பின தேசத்துக்கு நாங்கள் போய்வந்தோம்; அது பாலும் தேனும் ஓடுகிற தேசந்தான்; இது அதினுடைய கனி. (எண் 13:26-27).

2. அந்த தேசத்திலே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்கள். (எண் 13:28).

3. பட்டணங்கள் அரணிப்பானவைகளும் மிகவும் பெரியவைகளுமாய் இருக்கிறது.

4. அங்கே இராட்சதப் பிறவியான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப்போல் இருந்தோம். (எண் 13:28-29,32-33).

5. நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது; அவர்கள் நம்மைப்பார்க்கிலும் பலவான்கள் (எண் 13:31).

கானான் தேசத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு திரும்பி வந்திருக்கிற பன்னிரண்டு பிரபுக்கள் மத்தியில் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. அவர்களில் பத்துபேர் ஒரே மாதிரியாகவும், மீதமுள்ள காலேப், யோசுவா ஆகிய இரண்டுபேரும் வேறுமாதிரியாகவும், கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களைப்பற்றியும், அந்த தேசத்தை சுதந்தரிப்பது பற்றியும் தங்களுடைய செய்தியை சொல்லுகிறார்கள்.

வேவுகாரர் கண்டதைப் பற்றி எண் 13:28,32,33 ஆகிய வசனங்களில் கூறுகிறார்கள். இறுதியில் தங்களுடைய அவிசுவாசத்தை வெளிப்படுத்துவதற்கு "ஆனாலும்" என்று கூறிவிடுகிறார்கள். விசுவாசித்து நடக்காமல் தரிசித்து நடந்தால் இப்படிப்பட்ட பிரச்சனைகள் வரத்தான் செய்யும். (2கொரி 5:7). காலேபும், யோசுவாவும் விசுவாசத்தில் நடந்தார்கள். கர்த்தரிடத்தில் விசுவாசம் வைக்கிறவர் நம்பிக்கையோடு இருப்பார். பயப்படமாட்டார். (எண் 13:30; எண் 14:7-9).

தேசத்தை சுற்றிப்பார்த்து விட்டு வந்த பிரபுக்களில் பத்துபேர், கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களைப் பார்த்து பயப்படுகிறார்கள்.

நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது; அவர்கள் நம்மைப்பார்க்கிலும் பலவான்கள் (எண் 13:31) என்றும், நாங்கள் அதிலே கண்ட ஜனங்கள் எல்லாரும் மிகவும் பெரிய ஆட்கள் (எண் 13:32) என்றும் சொல்லுகிறார்கள்.

கானான் தேசத்தில் குடியிருக்கிறவர்கள் தங்களுக்குள் எப்போதும் சண்டையிட்டுக் கொண்டிருப்பார்கள். அவர்கள் எல்லோரும் வாதையினால் அழிவார்கள்.

வேவுக்காரருடைய பார்வையில் கானான் தேசத்தார் இராட்சதரைப் போலவும், தாங்கள் வெட்டுக்கிளிகளைப் போலவும் இருக்கிறார்கள். (எண் 13:32-33).

இராட்சதர் இராட்சதரைப் பெற்றெடுப்பார்கள் (2சாமு 21:16-22, 1நாளா 20:4-8). இவர்கள் ஏனோக்கின் புத்திரர். ஏனோக்கியர் எல்லோருமே இராட்சதர்கள். (உபா 2:11).

கானான் தேசத்தைச் சுதந்தரிக்கப்போகும் முன்பாகவே, அந்த தேசத்தை தங்களால் சுதந்தரிக்க முடியாது என்று பத்து பிரபுக்களும் அவிசுவாசமான வார்த்தைகளை சொல்லுகிறார்கள்.

பத்து பிரபுக்களும் மோசேயை நோக்கி, "அங்கே இராட்சதப் பிறவியான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப்போல் இருந்தோம், அவர்கள் பார்வைக்கும், அப்படியே இருந்தோம்" (எண் 13:33) என்று சொல்லுகிறார்கள். இவ்வாறாக அவர்கள் இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே தாங்கள் சுற்றிப் பார்த்துவந்த தேசத்தைக்குறித்து துர்ச்செய்தி பரம்பச்செய்கிறார்கள்.

வேவுகாரர்களில் பத்து பேர் துர்ச்செய்தியைப் பரப்புகிறார்கள். இது கர்த்தருக்கு விசனமாக இருக்கிறது. துர்ச்செய்தியைப் பரப்பியவர்கள் நியாயந்தீர்க்கப்படுகிறார்கள் (எண் 14:37).

கானான் தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி அனுப்பப்பட்ட பன்னிரண்டு பிரபுக்களில் பத்துபேர், மாம்சப்பிரகாரமாக சிந்திக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய பலத்தையும் அவருடைய வல்லமையையும் நோக்கிப் பார்ப்பதற்கு பதிலாக தங்களுடைய மாம்ச பலத்தை நோக்கிப் பார்க்கிறார்கள். கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களோடு ஒப்பிடும்போது, இஸ்ரவேல் புத்திரரின் மாம்ச பலமும் அதிகமாகவே இருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் கானானியரை விட திரளான எண்ணிக்கை உள்ளவர்கள். இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமே கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கவேண்டும் என்னும் ஒரே நோக்கத்தோடிருக்கிறார்கள். அவர்களுடைய சிந்தனையிலும், செயலிலும் ஒற்றுமையிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும், ஒவ்வொரு கோத்திரமாக அணியணியாக புறப்பட்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் மத்தியிலே ஒழுங்கும் கட்டுப்பாடும் இருக்கிறது. மோசே அவர்களுக்கு தலைவராகயிருக்கிறார். அவர் ஞானமும் தைரியமுமுள்ளவர். மெய்யாகவே இஸ்ரவேல் புத்திரரின் மாம்ச பலம், கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களைவிட அதிகமாகவே இருக்கிறது.

கானான் தேசத்தை வேவுபார்க்கும்படி அனுப்பப்பட்டவர்கள், மாம்சப்பிரகாரமாக சிந்தித்துப்பார்த்தாலும், இவ்வளவு கோழையாகயிருக்கவேண்டிய அவசியமில்லை. "நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது" என்றோ, "அவர்கள் நம்மைப் பார்க்கிலும் பலவான்கள்" என்றோ கோழைத்தனமாக பேசவேண்டிய அவசியமில்லை. வேவுகாரரின் பத்துபேர் மனம் தளர்ந்துபோயிருக்கிறார்கள்.

வேவுகாரர் சொன்ன பிரகாரம், கானானியர் இஸ்ரவேல் புத்திரரைவிட பலவான்களாகயிருந்தாலும், அவர்களால் கர்த்தரைவிட பெரிய பலவான்களாயிருக்க முடியாது. கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளம் இஸ்ரவேல் புத்திரருக்கு மத்தியிலே இருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு கூடயிருக்கும்போது, அவர்களுக்கு விரோதமாக யாராலும் எதிர்த்து நிற்கமுடியாது.

கானானியரின் பட்டணங்கள் அரணிப்பானவைகளாகவும், மிகவும் பெரியவைகளாகவும் இருக்கிறது என்று வேவுகாரர் சொல்லுகிறார்கள். ஆனாலும் இந்தப் பிரபஞ்சத்திலுள்ள எந்த ஜனத்தாலும், பரலோகத்திற்கு விரோதமாக அரண்களை கட்ட முடியாது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், பரலோகத்தின் தேவனாகவும் இருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய புயத்தின் வல்லமையை பல சந்தர்ப்பங்களில் அனுபவித்திருக்கிறார்கள். கர்த்தருடைய புயம் குறுகிப்போகாத நீண்ட புயம். அவருடைய புயம் சத்துருக்களுக்கு விரோதமாக நீட்டப்பட்டிருக்கிற புயம். கர்த்தர் தம்முடைய பலத்த புயத்தினால் இஸ்ரவேல் புத்திரரை பாதுகாக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் 430 வருஷங்களாக எகிப்து தேசத்திலே அடிமைகளாகயிருந்தார்கள். கர்த்தர் தம்முடைய பலத்த புயத்தினால், இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக்கொண்டார். கானானியரைப்போலவே எகிப்தியரும் பலமுள்ளவர்கள். கர்த்தர் எகிப்தியரை அதம்பண்ணியதுபோல, கானானியரையும் அதம்பண்ணுவார். ஆனால் வேவுபார்க்கப் போன கோத்திரப் பிரபுக்களுக்கோ, கர்த்தர்மீது போதுமான அளவு நம்பிக்கையில்லை.

கர்த்தர் தம்முடைய பட்டயத்தைப் பயன்படுத்தாமலேயே, எகிப்தியரின் குதிரை வீரர்களையும் இரதங்களையும் செங்கடலிலே மூழ்கச் செய்தார். எகிப்தியர்கள் மொத்தமாய் அழிந்துபோனார்கள். அமலேக்கியர்கள் சிதறிப்போனார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்காக யுத்தம்பண்ணுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய வார்த்தையை நம்பி, கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, கர்த்தர் தம்முடைய ஜனத்திற்காக கானானியர்மீது யுத்தம்பண்ணுவார். கானானியரால் கர்த்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண முடியாது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கானானியருக்கு விரோதமாக மேற்கொள்ளும் எல்லா யுத்தங்களிலும், இஸ்ரவேல் புத்திரருக்கு கானானியர்மீது ஜெயம் கிடைக்கும் என்பது கர்த்தருடைய வாக்குத்தத்தம்.

ஆபிரகாமின் சந்ததியார் கானான் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்று கர்த்தர் ஏற்கெனவே வாக்குப்பண்ணியிருக்கிறார். கர்த்தருடைய வாக்குத்தத்தம் நிச்சயம் நிறைவேறும்.

"அந்நாளிலே கர்த்தர் ஆபிராமோடே உடன்படிக்கைபண்ணி, எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதும், கேனியரும், கெனிசியரும், கத்மோனியரும், ஏத்தியரும், பெரிசியரும், ரெப்பாயீமியரும், எமோரியரும், கானானியரும், கிர்காசியரும், எபூசியரும் என்பவர்கள் இருக்கிறதுமான இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன் என்றார்" (ஆதி 15:18-21)

"நீ பரதேசியாய்த் தங்கிவருகிறகானான் தேசமுழுவதையும், உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நித்திய சுதந்தரமாகக் கொடுத்து, நான் அவர்களுக்குத் தேவனாயிருப்பேன் என்றார்" (ஆதி 17:8).

கர்த்தர் கானானியரை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக துரத்திவிடுவார். இது கர்த்தர் மோசேயின் மூலமாக இஸ்ரவேல் புத்திரருக்கு சொன்ன வாக்குத்தத்தம்.

"நான் ஒரு தூதனை உங்களுக்கு முன்பாக அனுப்பி, கானானியனையும் எமோரியனையும் ஏத்தியனையும் பெரிசியனையும் ஏவியனையும் எபூசியனையும் துரத்திவிடுவேன்" (யாத் 33:2).

கர்த்தர் கானியரை ஒரே வேளையில் மொத்தமாக துரத்திவிடாமல், அவர்களை தம்முடைய சித்தத்தின் பிரகாரம், கொஞ்சம் கொஞ்சமாக துரத்துவார்.

"நீ விருத்தியடைந்து, தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்வரைக்கும், அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாய் உன் முன்னின்று துரத்திவிடுவேன்" (யாத் 23:30).

கானான் தேசத்தை சுற்றிப்பார்க்கும்படி அனுப்பப்பட்ட பிரபுக்களில் பத்துபேர் கர்த்தரையும், அவருடைய வார்த்தைகளையும், வாக்குத்தத்தங்களையும் நம்பாமல், "நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது" என்று அவிசுவாசமான வார்த்தைகளை சொல்லுகிறார்கள். அவர்கள் இவ்வாறு பேசுவது, "கர்த்தரால் தம்முடைய வார்த்தையை நிறைவேற்ற முடியுமோ அல்லது முடியாதோ என்று தெரியவில்லையே" என்று சந்தேகத்தோடு கேட்பதற்கு சமம்.

பன்னிரண்டு வேவுகாரரில் ஒருவராகிய காலேபு இஸ்ரவேல் ஜனங்களிடத்தில் விசுவாசமான வார்த்தைகளை சொல்லுகிறார். காலேபு சொல்லுகிற வார்த்தைகளை யோசுவாவும் அங்கீகரிக்கிறார். காலேபு மோசேக்கு முன்பாக ஜனங்களை அமர்த்துகிறார். தான் சொல்லுவதை இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் செவிகொடுத்து கேட்கவேண்டும் என்பது காலேபின் விருப்பம். காலேபு என்னும் பெயருக்கு "முழுஇருதயம்" என்று பொருள். இஸ்ரவேல் புத்திரர் காலேபின் வார்த்தைக்கு செவிகொடுத்தால் அவர்களும் முழுஇருதயத்தோடு கர்த்தருடைய வார்த்தைகளையும், வாக்குத்தத்தங்களையும் நம்புவார்கள்.

காலேபு இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக்கொள்வோம்; நாம் அதை எளிதாய் ஜெயித்துக்கொள்ளலாம்" (எண் 13:30) என்று சொல்லுகிறார்.

காலேபின் வார்த்தையில் உறுதியிருக்கிறது. "நாம் அதை எளிதாய் ஜெயித்துக்கொள்ளலாம்" என்று காலேபு சொல்லுகிறார். கானானியர் பலவான்களாகயிருந்தாலும், இஸ்ரவேல் புத்திரரும் பலவான்களாகவே இருக்கிறார்கள். காலேபு இஸ்ரவேல் புத்திரரை உற்சாகப்படுத்துகிறார். "நான் உடனே போய் அதை சுதந்தரித்துக்கொள்வோம்" என்று காலேபு ஆர்வத்தோடு சொல்லுகிறார். அவர் இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணும்போது, முன்னணியில் புறப்பட்டுப்போகிறவர். காலேபு யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவர். ஆகையினால் காலேபு அவர்களுக்கு உற்சாகத்தையும், தைரியத்தையும், தெம்பையும், நம்பிக்கையையும் கொடுத்து, அவர்களை வழிநடத்துகிறார்.

கானான் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளவேண்டும் என்பதே இஸ்ரவேல் புத்திரரின் விருப்பம். தங்கள் விருப்பத்தை காலதாமதம்பண்ணாமல், உடனே நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென்று காலேபு விரும்புகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை நம்பாமல் அவருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். இதனால் கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் இடையே வாக்குவாதமுண்டாயிற்று. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது கோபப்படுகிறார். அவர்கள் கானான் தேசத்தின் இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று கர்த்தர் தம்முடைய கோபத்திலே சொல்லுகிறார்.

கானான் தேசத்தை சுற்றிப்பார்த்து வந்தவர்களில் பத்துபேர் அந்த தேசத்தைக் குறித்து, இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே துர்ச்செய்தி பரம்பச்செய்கிறார்கள். இதனால் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள் (எண் 14:1-4).

மோசேயும் ஆரோனும், காலேபும் யோசுவாவும் இஸ்ரவேல் புத்திரருடைய கலகத்தை அடக்குவதற்கு முயற்சி செய்கிறார்கள். ஆனால் அவர்களுடைய முயற்சி பிரயோஜனமில்லாமல் போயிற்று (எண் 14:5-10).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். கர்த்தர் அவர்களை அழித்துப்போடப்போவதாக, அவர்களுக்கு எச்சரிப்பாய்ச் சொல்லுகிறார் (எண் 14:11,12). மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக கர்த்தருடைய சமுகத்திலே பணிவாய் விண்ணப்பம்பண்ணுகிறார் (எண் 14:13-19).

கர்த்தர் மோசேயின் விண்ணப்பத்திற்கு செவிகொடுக்கிறார். அவர் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரையும் அழித்துப்போடவில்லை. தம்மை பரீட்சை பார்த்த மனிதரில் ஒருவரும் கானான் தேசத்தைக் காணமாட்டார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். காலேபும் யோசுவாவும், அவர்களுடைய சந்ததியாரும் கானான் தேசத்தை சுதந்தரிப்பார்கள் (எண் 14:20-35).

கானான் தேசத்தை சுற்றிப்பார்த்துவிட்டு, இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே துர்ச்செய்தியை சொன்னவர்கள், கர்த்தருடைய சந்நிதியில் வாதையினால் செத்துப்போகிறார்கள் (எண் 14:36-39). இஸ்ரவேல் புத்திரரில் அநேகர், கர்த்தருடைய அனுமதியில்லாமல், கானான் தேசத்திற்குப்போவோம் என்று சொல்லி மலையின்மேல் ஏறித்துணிகிறார்கள் (எண் 14:40-45). அமலேக்கியரும் கானானியரும் இஸ்ரவேல் புத்திரரை முறியடித்து துரத்துகிறார்கள்.

கானான் தேசத்தை சுற்றிப்பார்க்கும்படி போனவர்களில் பத்துபேர், இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே கானான் தேசத்தைக் குறித்து துர்ச்செய்தியை சொல்லுகிறார்கள். அப்பொழுது சபையார் எல்லாரும் கூக்குரலிட்டுப் புலம்புகிறார்கள்; ஜனங்கள் அன்று இராமுழுதும் அழுதுகொண்டிருக்கிறார்கள் (எண் 14:1).

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தங்கள் மத்தியில் துர்ச்செய்தியைப் பரம்பச்செய்கிற வேவுகாரரின் வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இஸ்ரவேலின் பாளயத்திலிருக்கிறவர்களுக்கு இப்போது ஒரு ஆபத்தும் வரவில்லை. ஆனாலும் அவர்கள் தங்களுக்கு ஆபத்துக்கள் வந்ததுபோல பாவித்து, சபையார் எல்லாரும் கூக்குரலிட்டு புலம்புகிறார்கள். அவர்கள் அழுவதற்கு நியாயமான காரணம் எதுவுமில்லை. ஆனாலும் அவர்கள் அன்று இராமுழுவதும் அழுதுகொண்டிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய ஊழியக்காரருக்கு விரோதமாக முறுமுறுப்பதினால், அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகவும் பேசுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரருடைய கூக்குரலுக்கும் புலம்பலுக்கும், அவர்களுடைய கோத்திரப்பிதாக்களின் பிரபுக்களே காரணம். அவர்கள் இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் துர்ச்செய்தியைப் பரம்பச்செய்கிறார்கள். அந்தச் செய்தி உண்மையான செய்தியல்ல. அவர்கள் சொன்ன செய்திக்கு ஆதாரம் எதுவுமில்லை. ஆனாலும் அவர்கள் சொன்ன பொய்யான செய்தியை சபையார் எல்லாரும் கேட்டு கூக்குரலிட்டு புலம்புகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும், மோசேயையும், ஆரோனையும் நோக்கி, "எகிப்துதேசத்திலே செத்துப்போனோமானால் நலமாயிருக்கும்; இந்த வனாந்தரத்திலே நாங்கள் செத்தாலும் நலம். நாங்கள் பட்டயத்தால் மடியும்படிக்கும், எங்கள் பெண்ஜாதிகளும் பிள்ளைகளும் கொள்ளையாகும்படிக்கும், கர்த்தர் எங்களை இந்த தேசத்துக்குக் கொண்டு வந்தது என்ன? எகிப்துக்குத் திரும்பிப்போகிறதே எங்களுக்கு உத்தமம் அல்லவோ" (எண் 14:2,3) என்று சொல்லுகிறார்கள்.

கர்த்தர் எல்லா வார்த்தைகளையும் சீர்தூக்கிப் பார்த்தால் யாரும் தப்பமுடியாது. (மத் 12:36) துர்மார்க்கருடைய ஜெபம் கர்த்தருக்கு அருவருப்பானது என்று சாலொமோன் கூறுகிறார். (நீதி 15:8). வனாந்தரத்திலே இஸ்ரவேல் புத்திரருடைய இந்த ஜெபத்திற்குக் கர்த்தர் அவர்கள் கேட்டுக் கொண்ட பிரகாரமாகவே பதில் கொடுத்துவிடுகிறார். நாற்பது வருஷக்காலத்தில் யோசுவாவையும், காலேபையும் தவிர பழைய சந்ததியார் எல்லோரும் வனாந்தரத்தில் செத்துப்போகிறார்கள். மரணம் உடனடியாக ஆரம்பித்துவிடுகிறது. (எண் 14:23-37).

எகிப்து தேசத்தில் செத்துப்போனால் நலமாயிருக்கும் என்று இஸ்ரவேல் புத்திரர் சொல்லுகிறார்கள். அவர்கள் எகிப்து தேசத்தை விட்டு புறப்பட்டு வந்து பல மாதங்களாயிற்று. இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் இதுவரையிலும் பிரயாணம் செய்தார்கள். கர்த்தருடைய பிரசன்னம் அவர்களோடு கூடயிருந்தது. கர்த்தர் அவர்களை இதுவரையிலும் போஷித்து, பராமரித்து பாதுகாத்து வந்திருக்கிறார். அவர்கள் கர்த்தருடைய நன்மைகளை அனுபவித்து வந்திருக்கிறார்கள்.

ஆனால் இப்போதோ, எகிப்து தேசத்திலே செத்துப்போனால் நலமாயிருக்கும் என்று சொல்லுகிறார்கள். வனாந்தரத்திலே செத்துப்போவதற்கு பதிலாக, எகிப்து தேசத்திலே செத்துப்போவதை விரும்புகிறார்கள். "எகிப்துதேசத்திலே செத்துப்போனோமானால் நலமாயிருக்கும்; இந்த வனாந்தரத்திலே நாங்கள் செத்தாலும் நலம்" (எண் 14:2) என்று இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக சொல்லுகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பண்ணி அழைத்து வந்திருக்கிறார். அவர்களை கானான் தேசத்திற்கு வழிநடத்திக்கொண்டு போகிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு கானான் தேசத்தை சுதந்தர தேசமாக கொடுப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ, "நாங்கள் பட்டயத்தால் மடியும்படிக்கும், எங்கள் பெண்ஜாதிகளும் பிள்ளைகளும் கொள்ளையாகும்படிக்கும், கர்த்தர் எங்களை இந்த தேசத்துக்குக் கொண்டு வந்தது என்ன?" (எண் 14:3) என்று கேட்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருடைய பெண்ஜாதிகளும், பிள்ளைகளும் ஒரு தப்பிதமும் செய்யவில்லை. கர்த்தர் அவர்களை பாதுகாத்து பராமரிக்கிறார். ஆனால் அவர்கள் கொள்ளையாவார்கள் என்று இஸ்ரவேல் புத்திரர் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்திற்குப்போகவேண்டியவர்கள். ஆனால் அவர்கள் இப்போது எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போகவேண்டும் என்று விரும்புகிறார்கள். "எகிப்துக்குத் திரும்பிப்போகிறதே எங்களுக்கு உத்தமம் அல்லவோ" என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு மோசே தலைவராயிருக்கிறார். மோசே அவர்களை கானான் தேசத்திற்கு நடத்திக்கொண்டு போகிறார். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தார் மோசேயின் ஆளுகையை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து கானான் தேசத்திற்குப்போக விரும்பவில்லை. அவர்கள் மோசேக்கு பதிலாக ஒரு புதிய தலைவனை தெரிந்துகொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர், "நாம் ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு எகிப்துக்கு திரும்பிப்போவோம் வாருங்கள்" (எண் 14:4) என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொள்கிறார்கள். எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போவதே தங்களுக்கு நலமாயிருக்கும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அவர்கள் எகிப்தின் அடிமைத்தனத்தை அனுபவித்தவர்கள். எகிப்தியர்கள் மூலமாக பாடுகளையும், வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவித்தவர்கள். ஆனால் அவர்களுக்கு கானான் தேசத்தைவிட எகிப்து தேசம் நலமான தேசமாய்த் தெரிகிறது.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து வனாந்தரத்தின் வழியாக, கானான் தேசத்தின் எல்லைப்பகுதிக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இப்போது இதே வனாந்தரத்தின் வழியாக, இங்கே இருந்து எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போகவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இது அவர்களுடைய மதியீனம்.

கானான் தேசம் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சுதந்தரமாகக் கொடுத்திருக்கிற தேசம். அவர்களுடைய பங்குவீதம் கானான் தேசத்திலே இருக்கிறது. ஆனால் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசம் பிடிக்கவில்லை. அவர்களுக்கு எகிப்து தேசமே பிடித்திருக்கிறது. எகிப்து தேசம் இஸ்ரவேல் புத்திரருடைய சுதந்தர தேசமல்ல. அங்கே அவர்களுக்கு பங்குவீதம் இல்லை. ஆனாலும் அவர்கள் எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போகவிரும்புகிறார்கள்.

கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் ஸ்தலத்தில் நாம் திருப்தியாயிருக்கவேண்டும். கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஊழியத்தை உண்மையோடு செய்யவேண்டும். கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற ஆசீர்வாதங்களில் நாம் திருப்தியடையவில்லையென்றால், நமக்கு ஒருபோதும் திருப்தி ஏற்படாது. கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் ஸ்தானத்தில் திருப்தியடையவேண்டும். அந்த ஸ்தானத்தில் நாம் திருப்தியடையாமல், இந்தப் பிரபஞ்சத்தில் எந்த இடத்திற்கு சுற்றி அலைந்தாலும், அங்கே நமக்கு திருப்தி ஏற்படப்போவதில்லை.

கர்த்தர் நம்மை எந்த சூழ்நிலையில் வைத்திருந்தாலும், நாம் அந்த சூழ்நிலையில் கர்த்தருக்குள் சந்தோஷமாயும், திருப்தியாயும் இருக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரர், "எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போவது நலமாயிருக்கும்" என்று சொல்லுவதற்கு பதிலாக, "கர்த்தர் தங்களை எந்த ஸ்தலத்தில் வைத்திருக்கிறாரோ அந்த ஸ்தலத்திலே திருப்தியாயிருப்பது தங்களுக்கு நலமாயிருக்கும்" என்று சொல்லவேண்டும்.

துர்ச்செய்தியினால் ஏற்பட்ட விளைவுகளின் விவரம் வருமாறு :

1. சபையார் எல்லாரும் கூக்குரலிட்டுப் புலம்பினார்கள்; ஜனங்கள் அன்று இராமுழுதும் அழுதுகொண்டிருந்தார்கள். (எண் 14:1)

2. இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். (எண் 14:2).

3. எகிப்துதேசத்திலே செத்துப் போனோமானால் நலமாயிருக்கும்; இந்த வனாந்தரத்திலே நாங்கள் செத்தாலும் நலம் என்று சபையாரெல்லாரும் முறுமுறுத்தார்கள்.

4. கர்த்தர் தங்களை ஏமாற்றிவிட்டதாக அவரைத் தூஷித்தார்கள். (எண் 14:3).

5. நாம் ஒரு தலைவனை ஏற்படுத்திக் கொண்டு எகிப்துக்கு திரும்பிப் போவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள். (எண் 14:3-4,9).

6. இவர்களுடைய துர்ச்செய்தியினால் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் பயமும், கோழைத்தனமும் உண்டாயிற்று. (எண் 14:3,9).

7. இந்தத் துர்ச்செய்தியின்நிமித்தமாக இது வரையிலும் அவர்கள் நம்பிக்கை வைத்திருந்த மோசேக்கும், ஆரோனுக்கும் எதிராகக் கலகம் பண்ணினார்கள். (எண் 14:10).

தங்களுடைய அவிசுவாசமான வார்த்தைகளினால் இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்குத் தாங்களே அழிவைத் தேடிக்கொள்கிறார்கள். அவர்களை அழிவிலிருந்து தப்பிக்க வைப்பதற்காக, அவர்களுடைய சிநேகிதர்கள் முயற்சி பண்ணுகிறார்கள். ஆனால் அந்த முயற்சி வீணாய்ப்போயிற்று. இஸ்ரவேல் புத்திரர் இன்னும் கலகருணமுள்ளவர்களாகவே இருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர், "நாம் ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு எகிப்துக்கு திரும்பிப்போவோம் வாருங்கள்" என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொள்கிறார்கள். அப்பொழுது மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரின் சபையாராகிய எல்லாக் கூட்டத்தாருக்கு முன்பாகவும் முகங்குப்புற விழுகிறார்கள் (எண் 13:5).

இதற்கு முன்பாக ஆரோனும், மோசேயும் இஸ்ரவேல் புத்திரரைக் கர்த்தருக்குக் கீழ்ப்படிய செய்ய முயற்சி மேற்கொண்டார்கள் (எண் 13:30; உபா 1:29). ஆனால் அவர்கள் முயற்சி தோல்வியுற்றது. வேறுவழியில்லாமல், இப்போது கர்த்தருடைய சமுகத்தில் முகங்குப்புற விழுகிறார்கள்.

கலகக்காரரின் எண்ணிக்கை ஏராளமாயிருக்கிறது. அவர்களுடைய சத்தமும் அதிகமாயிருக்கிறது. அவர்கள் மத்தியிலே மோசேயும் ஆரோனும் பேசுகிறார்கள். ஆனால் திரளான ஜனங்களுக்கு மத்தியில் இவர்களுடைய பேச்சு கேட்கவில்லை. இவர்களுடைய பேச்சைக் கேட்க கலகக்காரர் யாரும் ஆயத்தமாயில்லை.

மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் பேசுவதற்கு பதிலாக வேறொரு உபாயத்தைக் கையாளுகிறார்கள். அவர்கள் இருவரும் இஸ்ரவேல் புத்திரரின் சபையாராகிய எல்லாக் கூட்டத்தாருக்கு முன்பாகவும் முகங்குப்புற விழுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணிக்கொண்டிருக்கும்போது, மோசேயும் ஆரோனும் கர்த்தருடைய சமுகத்திலே தங்களை தாழ்த்தி ஒப்புக்கொடுத்து ஜெபம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கு விரோதமாகப் பேசுகிறார்கள். தங்களுக்கு வேறொரு தலைவனை ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமென்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொள்கிறார்கள். இதனால் மோசேயின் ஆவியும், ஆரோனின் ஆவியும் கலக்கமடைந்திருக்கிறது. அவர்களுடைய மனதிலே குழப்பமுண்டாயிற்று.

இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்திற்குப்போக மனதில்லாமல், எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போவோம் என்று சொல்லுகிறார்கள். அதைக் கேட்டபோது மோசேக்கு அதிர்ச்சி உண்டாயிற்று. அவர்கள் கர்த்தருடைய கிருபையையும், இரக்கத்தையும் விட்டு விலகிப்போவதைப் பார்த்து, மோசேயும் ஆரோனும் அதிர்ச்சியடைந்தவர்களாக, தரையிலே முகங்குப்புற விழுகிறார்கள்.

இந்த சம்பவம் உபாகமம் புஸ்தகத்தில் மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. மோசே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொன்ன வார்த்தைகள், அந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

"அப்பொழுது நான் உங்களை நோக்கி: நீங்கள் கலங்காமலும் அவர்களுக்குப் பயப்படாமலும் இருங்கள். உங்களுக்கு முன் செல்லும் உங்கள் தேவனாகிய கர்த்தர் தாமே எகிப்தில் உங்களோடிருந்து, உங்கள் கண்களுக்கு முன்பாகச் செய்ததெல்லாவற்றைப்போலவும், வனாந்தரத்தில் செய்துவந்ததுபோலவும், உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்" (உபா 1:29,30) என்று சொன்னேன் என்று மோசே சொல்லுகிறார்.

மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரின் சபையாராகிய எல்லா கூட்டத்தாருக்கும் முன்பாக முகங்குப்புற விழுந்து கிடக்கும்போது, காலேபும் யோசுவாவும் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் பேசுவதற்கு முயற்சி செய்கிறார்கள். அவர்கள் இருவரும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்கிறார்கள். ஜனங்களுடைய பாவத்தினிமித்தமாக அவர்கள் இருவரும் மிகுந்த துக்கப்பட்டு தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்கிறார்கள்.

தேவனுடைய கோபம் இஸ்ரவேல் புத்திரர்மீது வந்திருக்கிறது. கர்த்தருடைய கோபம் இப்போதே வெளிப்படப்போவதை யோசுவாவும் காலேபும் காண்கிறார்கள். அந்த வேதனையை அவர்களால் தாங்க முடியவில்லை. அவர்களுடைய வேதனை அதிகரிப்பதினால், அவர்கள் இருவரும் தங்கள் வஸ்திரங்களை கிழித்துக்கொள்கிறார்கள்.

தேசத்தைச் சுற்றிப்பார்த்தவர்களில் நூனின்குமாரனாகிய யோசுவாவும், எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும், தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, இஸ்ரவேல் புத்திரரின் சமஸ்த சபையையும் நோக்கி பேசுகிறார்கள். யோசுவாவும் காலேபும் அதிகாரத்தோடு பேசுகிறார்கள்.

கானான் தேசத்தை சுற்றிப்பார்க்கப்போன பிரபுக்களோடு காலேபும் யோசுவாவும் போயிருந்தார்கள். அது பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. அது நல்ல தேசம். அந்த தேசத்தைச் சுதந்தரிக்கும்போது தங்களுக்கு அநேக நன்மைகள் கிடைக்கும் என்று காலேபும் யோசுவாவும் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் சொல்லுகிறார்கள்.

அவர்கள் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நாங்கள் போய்ச் சுற்றிப்பார்த்து சோதித்த தேசம் மகா நல்ல தேசம். கர்த்தர் நம்மேல் பிரியமாயிருந்தால், அந்தத் தேசத்திலே நம்மைக் கொண்டுபோய், பாலும் தேனும் ஓடுகிற அந்தத் தேசத்தை நமக்குக் கொடுப்பார்" (எண் 14:7,8) என்று சொல்லுகிறார்கள்.

கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெறுவதன் இரகசியம் இதுதான். கர்த்தரிடத்தில் நாம் பிரியமாயிருந்தால் அவரும் நம்மிடத்தில் பிரியமாயிருப்பார். தமக்குப் பிரியமானவனைக் கர்த்தர் ஆசீர்வதிப்பார்.

கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்கள் இராட்சதராகயிருந்தாலும், அந்த தேசத்தின் ஜனங்களுக்கு இஸ்ரவேல் ஜனத்தார் பயப்படவேண்டிய அவசியமில்லை. யோசுவாவும் காலேபும் கர்த்தருக்கு முக்கியத்துவம் கொடுத்து பேசுகிறார்கள்.

யோசுவாவும் காலேபும், இஸ்ரவேல் ஜனத்தாரை நோக்கி, "கர்த்தருக்கு விரோதமாகமாத்திரம் கலகம்பண்ணாதிருங்கள்; அந்த தேசத்தின் ஜனங்களுக்கு நீங்கள் பயப்படவேண்டியதில்லை; அவர்கள் நமக்கு இரையாவார்கள்; அவர்களைக் காத்த நிழல் அவர்களைவிட்டு விலகிப்போயிற்று; கர்த்தர் நம்மோடே இருக்கிறார்; அவர்களுக்குப் பயப்படவேண்டியதில்லை" (எண் 14:9) என்று சொல்லுகிறார்கள்.

"அவர்கள் நமக்கு இரையாவார்கள்" என்பது எபிரெயரின் வழக்குச்சொல்லாகும். அவர்களை முறியடித்துவிடலாம் என்பது இதன் பொருள். அவர்களைக் காத்த நிழல் அவர்களைவிட்டு விலகிப்போயிற்று. நிழல் இல்லையென்றால், அங்கு வெயில் அதிகமாக இருக்கும். வெயிலில் மன்னா உருகிப்போகும். (யாத் 16:21). அதுபோன்று, கானான் தேசத்தாரும், காணாமற்போய்விடுவார்கள். (யாத் 15:15; யோசு 2:9,11; ஏசா 13:7; ஏசா 19:1; எசே 21:7).

கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்கள் அரணிப்பான பட்டணங்களில் இருந்தாலும், அவர்களுக்கு மெய்யான பாதுகாப்பு எதுவுமில்லை. அவர்களைக் காத்த நிழல் அவர்களைவிட்டு விலகிப்போயிற்று. அவர்களுடைய அரண்கள் அவர்களுக்கு பாதுகாப்பை தராது.

மற்ற வேவுகாரர்கள் கானான் தேசத்தாரின் உருவத்தையும், பலத்தையும் பார்த்தார்கள். ஆனால் யோசுவாவும் காலேபுமோ, கானானியரின் துன்மார்க்கத்தைப் பார்க்கிறார்கள். அவர்களுடைய பாவங்களினிமித்தமாகவும், அக்கிரமத்தினிமித்தமாகவும், அவர்களைக் காத்த நிழல் அவர்களைவிட்டு விலகிப்போயிற்று என்று, யோசுவாவும் காலேபும் சொல்லுகிறார்கள். கர்த்தருடைய பாதுகாப்பு பாவிகளுக்கு கிடைக்காது.

கானானியர் கர்த்தருக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய அக்கிரமங்களினிமித்தமாக, கர்த்தர் அவர்களை அழித்துப்போட சித்தமுள்ளவராயிருக்கிறார். கானானியர் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுவதுபோல, இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணக்கூடாது. கலகம்பண்ணினால் கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கும் சத்துருவாயிருப்பார். ஆகையினால், "கர்த்தருக்கு விரோதமாக மாத்திரம் கலகம்பண்ணாதிருங்கள்" என்று யோசுவாவும் காலேபும் இஸ்ரவேல் புத்திரிடத்தில் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரோ, யோசுவாவின் வார்த்தைக்கும், காலேபின் வார்த்தைக்கும் செவிகொடுக்கவில்லை. இஸ்ரவேல் புத்திரருடைய கோபம் காலேபின்மீதும் யோசுவாவின்மீதும் திரும்புகிறது. அவர்களுடைய கோபம் அதிகரிக்கிறது. இஸ்ரவேல் சபையார் எல்லாருமாய்ச் சேர்ந்து, காலேபின்மேலும் யோசுவாவின் மேலும் கல்லெறியவேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

தாங்கள் இருவரும் கர்த்தருடைய சார்பாக பேசுவதை காலேபும் யோசுவாவும் அறிந்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரைக் கனம்பண்ணுகிறார்கள். கர்த்தர் தங்கள் பட்சத்திலிருப்பார் என்றும், அவர் தங்களை பாதுகாத்துக்கொள்வார் என்றும் காலேபும் யோசுவாவும் நம்பிக்கையோடிருக்கிறார்கள். அவர்களுடைய நம்பிக்கை வீணாய்ப்போகவில்லை. கர்த்தரை நம்புகிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை. அவர்கள் கர்த்தரை நம்பினதினால் ஏமாற்றமடையவில்லை.

அவர்கள்மேல் கல்லெறிய வேண்டுமென்று இஸ்ரவேல் சபையார் எல்லாரும் சொன்னபோது, உடனே கர்த்தருடைய மகிமை ஆசரிப்புக்கூடாரத்தில் இஸ்ரவேல் புத்திரர் எல்லாருக்கும் முன்பாகக் காணப்படுகிறது (எண் 14:10). இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய மகிமையைக் காண்கிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள்மேல் கல்லெறிய வேண்டுமென்று சொன்னவர்களுக்கு குழப்பமும், திகிலும், பயமும் உண்டாயிற்று.

இஸ்ரவேல் புத்திரரின் கலகம் உச்சநிலையை அடைகிறது. கர்த்தருடைய மகிமை ஆசரிப்புக் கூடாரத்தில் உடனடியாகக் காணப்படாமல் போயிருக்குமானால், அவர்கள் தங்கள் தலைவர்களைக் கல்லெறிந்து கொன்று போட்டிருப்பார்கள்.

கர்த்தருடைய மகிமை ஆசரிப்புக்கூடாரத்தில் காணப்படுகிறது. கர்த்தர் மோசேயை ஆசரிப்புக்கூடாரத்திற்கு அழைக்கிறார் என்பதற்கு கர்த்தருடைய மகிமை காணப்பட்டது அடையாளமாகும். மோசே உடனே ஆசரிப்புக்கூடாரத்திற்கு புறப்பட்டுப்போகிறார். கர்த்தர் மோசேயோடு பேசுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "எது வரைக்கும் இந்த ஜனங்கள் எனக்குக் கோபம் உண்டாக்குவார்கள்? தங்களுக்குள்ளே நான் காட்டின சகல அடையாளங்களையும் அவர்கள் கண்டும், எதுவரைக்கும் என்னை விசுவாசியாதிருப்பார்கள்? நான் அவர்களைக் கொள்ளைநோயினால் வாதித்து, சுதந்தரத்துக்கும் புறம்பாக்கிப்போட்டு, அவர்களைப்பார்க்கிலும் உன்னைப் பெரிதும் பலத்ததுமான ஜாதியாக்குவேன்" (எண் 14:11,12) என்று சொல்லுகிறார்.

தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவாரா என்று ஜனங்கள் இன்றும் அவிசுவாசத்தோடு கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களும், அவருடைய அற்புதங்களையும், அடையாளங்களையும் தங்கள் கண்களால் கண்டவர்கள். ஆயினும் அவர்களிடத்திலும் அவிசுவாசமும், இருதயக் கடினமும் காணப்பட்டது (மாற்கு 16:14; லூக்கா 24:25).

"அவர்களைப்பார்க்கிலும் உன்னைப் பெரிதும் பலத்ததுமான ஜாதியாக்குவேன்" என்று கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். யாத் 32:10-14 ஆகிய வசனங்களில் கர்த்தர் செய்ததுபோல, தேவன் இஸ்ரவேல் தேசம் முழுவதையும் அழிக்கப்போவதாக எச்சரிக்கிறார். இஸ்ரவேலரின் புதிய ஜாதிக்கு மோசே முற்பிதாவாக ஆவதற்கு வாய்ப்பு வருகிறது. ஆனாலும் மோசே தன் ஜனங்கள்மீது வைத்திருக்கும் அன்பினாலும், பிரியத்தினாலும் தேவன் தனக்குக் கொடுக்க விரும்பும் சிலாக்கியத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. தேவனுடைய நாமம் தூஷிக்கப்படக்கூடாது என்பதில் மோசே அக்கறையோடு இருக்கிறார் (எண் 14:12-20).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றி மோசேயினிடத்தில் முறையிடுகிறார். கர்த்தருடைய வார்த்தைகள் நீதியானது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றி மோசேயினிடத்தில் இரண்டு காரியங்களை சொல்லுகிறார். அவையாவன : 1. இஸ்ரவேல் புத்திரரின் பாவம். 2. இஸ்ரவேல் புத்திரர் பாவத்தில் தொடர்ந்து நிலைத்திருப்பது.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவத்தினால் கர்த்தருக்கு கோபமுண்டாக்குகிறார்கள். அவர்கள் கர்த்தரை மறுதலித்துவிட்டு, அவரை விட்டு விலகிப்போய்விடுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தாரின் அவிசுவாசமே, வனாந்தரத்தில் கர்த்தருக்கு அவர்கள்மீது கோபத்தை உண்டுபண்ணுகிறது. "எது வரைக்கும் இந்த ஜனங்கள் எனக்கு கோபமுண்டாக்குவார்கள்" என்றும், "எது வரைக்கும் என்னை விசுவாசியாதிருப்பார்கள்" என்றும் கர்த்தர் கேட்கிறார்.

"வனாந்தரத்திலே கோபமூட்டின போதும், சோதனைநாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்" (எபி 3:8).

இஸ்ரவேல் புத்திரர் பாவம் செய்கிறார்கள். அவர்கள் தங்கள் பாவத்தை விட்டு விலகிவராமல், பாவத்திலே தொடர்ந்து ஜீவிக்கிறார்கள். "அவர்கள் எதுவரைக்கும் பாவம் செய்வார்கள்" என்று கர்த்தர் கேட்கிறார். கர்த்தர் அவர்களுக்குள்ளே ஏராளமான அடையாளங்களைக் காண்பித்திருக்கிறார். அவர்களும் அந்த அடையாளங்களை தங்கள் கண்களால் கண்டிருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் கர்த்தரை விசுவாசியாதிருக்கிறார்கள்.

கர்த்தர் நமக்காக அதிகமான காரியங்களை செய்யும்போது, நாம் கர்த்தர்மீது அதிகமாய் நம்பிக்கை வைக்கவேண்டும். கர்த்தர் நமக்கு அதிகமான நன்மைகளை செய்திருந்தும், நாம் கர்த்தரை விசுவாசியாதிருப்போமென்றால், கர்த்தருடைய கோபம் நமக்கு விரோதமாக அதிகமாயிருக்கும்.

இஸ்ரவேல் புத்திரருடைய அவிசுவாசத்தினிமித்தமாகவும், அவர்களுடைய கலகக்குணத்தினிமித்தமாகவும் கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய நீதியான தண்டனையைக் கொடுக்கிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நான் அவர்களைக் கொள்ளைநோயினால் வாதித்து, சுதந்தரத்துக்கும் புறம்பாக்கிப் போட்டு, அவர்களைப்பார்க்கிலும் உன்னைப் பெரிதும் பலத்ததுமான ஜாதியாக்குவேன்" (எண் 14:12) என்று சொல்லுகிறார்.

அவர்கள் வனாந்தரத்தில் செத்துப்போவோம் என்று சொன்னார்கள். கர்த்தர் அவர்களை செத்துப்போக அனுமதிக்கிறார். அவர்களுடைய வேரோ அல்லது கிளையோ மீதமாயிராதபடிக்கு, அவர்களை முற்றிலுமாய் அழித்துப்போட கர்த்தர் சித்தமுள்ளவராயிருக்கிறார். கர்த்தர் அவர்களை கொள்ளைநோயினால் வாதித்து, அவர்களுக்கு பூரண முடிவை உண்டுபண்ணப்போகிறார். கர்த்தருடைய வாதை அவர்கள்மீது வரும்போது, இப்போது மீதியாயிருப்பவையெல்லாம் முற்றிலுமாய் அழிந்துபோகும்.

கர்த்தர் மோசேயினிடத்தில் இஸ்ரவேலுக்கு விரோதமாகப் பேசுகிறார். கர்த்தருடைய வார்த்தையில் அவருடைய கோபம் வெளிப்படுகிறது. மோசே கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசுகிறார். "இந்த ஜனங்களின் அக்கிரமத்தை மன்னித்தருளும்" (எண் 14:19) என்பதே மோசேயின் சுருக்கமான ஜெபமாகும்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவத்தினிமித்தமாக அழிவுக்கு பாத்திரமாகயிருக்கிறார்கள். அவர்கள்மீது நீதியான நியாயத்தீர்ப்பும், அவர்களுக்கு நீதியான தண்டனையும் கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் தண்டிக்கப்படுவதற்கு பாத்திரராயிருக்கிறார்கள். ஆனாலும் கர்த்தர் தமது கிருபையினால், இஸ்ரவேல் புத்திரரின் அக்கிரமத்தை மன்னித்தருள வேண்டுமென்று, மோசே அவர்களுக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார். தம்மை சிலுவையில் அறைந்தவர்களுக்காக கிறிஸ்துவானவர் பிதாவினிடத்தில் பரிந்து பேசினார். "பிதாவே, அவர்களுக்கு மன்னியும்" என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தம்மை சிலுவையில் அறைந்தவர்களுக்காக பிதாவினிடத்தில் ஜெபித்தார்.

மோசே கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசும்போது, அவர் பல விண்ணப்பங்களை ஏறெடுக்கிறார். கர்த்தர் தம்முடைய கிருபையினுடைய மகத்துவத்தின்படி, இஸ்ரவேல் புத்திரர்மீது கிருபையும் இரக்கமும் காண்பிக்கவேண்டும் என்று மோசே இஸ்ரவேல் ஜனத்தாருக்காக விண்ணப்பம்பண்ணுகிறார்.

மோசே கர்த்தரை நோக்கி, "எகிப்தியர் இதைக் கேட்பார்கள், அவர்கள் நடுவிலிருந்து உம்முடைய வல்லமையினாலே இந்த ஜனங்களைக் கொண்டுவந்தீரே" (எண் 14:13) என்று மோசே கர்த்தருடைய வல்லமையை உயர்த்திப்பேசுகிறார்.

இதற்கு முன்பு இதுபோன்று ஒரு சூழ்நிலை வந்தபோது, மோசே எப்படி ஜெபித்தாரோ அப்படியே இப்போதும் ஜெபிக்கிறார். மற்ற தேசங்களுக்கு முன்பாக தேவன் இஸ்ரவேல் தேசத்திற்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுமாறு மோசே விண்ணப்பம்பண்ணுகிறார். (எண் 14:13-20 =யாத் 32:10-14). வாக்குத்தத்தம் நிறைவேறவில்லையென்றால், மற்ற தேசத்தார் கர்த்தரைத் தூஷிப்பார்களே என்று தேவனிடத்தில் கெஞ்சிப் பிரார்த்தனை பண்ணுகிறார்.

தேவனுடைய வாக்குத்தத்தங்களும், ஆசீர்வாதங்களும், உடன்படிக்கைகளையும், நிறைவேற வேண்டுமானால் அவர் நியமித்து வைத்திருக்கும் நிபந்தனைகளை மனுஷன் நிறைவேற்ற வேண்டும். தமக்குக் கீழ்ப்படிபவருக்கு ஆசீர்வாதத்தையும், கீழ்ப்படியாதோருக்குச் சாபத்தையும் கர்த்தர் தமக்கு முன் வைத்திருக்கிறார். மற்றவர்கள் தம்மைப் பற்றி எப்படி நினைப்பார்கள் என்பதில் கர்த்தர் கவனம் செலுத்துவதற்குப் பதிலாகத், தாம் பட்சபாதம் இல்லாத நியாயாதிபதி என்பதை நிரூபிக்க விரும்புகிறார்.

புறஜாதியார் கர்த்தரைப்பற்றியும், கர்த்தருடைய ஜனத்தைப்பற்றியும் கேட்டிருக்கும் காரியங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களின் நடுவில் இருக்கிறார்.

2. கர்த்தராகிய நீர்முகமுகமாய்த் தரிசனமாகிறீர்.

3. உம்முடைய மேகம் இவர்கள்மேல் நிற்கிறது.

4. பகலில் மேகத்தூணிலும், இரவில் அக்கினித்தூணிலும், நீர் இவர்களுக்கு முன் செல்லுகிறீர்.

புறஜாதியார் கர்த்தருடைய மகிமையைக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்தாருக்குக் கர்த்தர் நன்மை செய்ய விரும்புகிறார் என்பதும் புறஜாதியாருக்குத் தெரிந்திருக்கிறது. ஆகையினால், புறஜாதியார் இஸ்ரவேல் தேசத்தாரோடு யுத்தம் பண்ண விரும்புவதில்லை (எண் 14:9).

கர்த்தருடைய மகிமையைப்பற்றி புறஜாதி ஜனங்களும் கேள்விப்பட்டிருக்கிறார்கள். கர்த்தருடைய நாமம் சகல ஜாதியார் மத்தியிலும் உயர்ந்த நாமமாயிருக்கிறது.

மோசே கர்த்தரை நோக்கி, "கர்த்தராகிய நீர் இந்த ஜனங்களின் நடுவே இருக்கிறதையும், கர்த்தராகிய நீர்முகமுகமாய்த் தரிசனமாகிறதையும், உம்முடைய மேகம் இவர்கள்மேல் நிற்கிறதையும், பகலில் மேகத்தூணிலும், இரவில் அக்கினித்தூணிலும், நீர் இவர்களுக்கு முன் செல்லுகிறதையும் கேட்டிருக்கிறார்கள்; இந்த தேசத்தின் குடிகளுக்கும் சொல்லுவார்கள்" (எண் 14:14) என்று சொல்லுகிறார்.

கர்த்தரோ இப்போது இஸ்ரவேல் புத்திரர்மீது கோபமாயிருக்கிறார். அவர்களை கொள்ளை நோயினால் வாதித்து, அவர்களை சுதந்தரத்திற்கு புறம்பாக்கிப்போட ஆயத்தமாயிருக்கிறார். இந்த சூழ்நிலையில் மோசே கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசுகிறார்.

மோசே கர்த்தரை நோக்கி, "ஒரே மனிதனைக் கொல்லுகிறதுபோல இந்த ஜனங்களையெல்லாம் நீர் கொல்வீரானால், அப்பொழுது உம்முடைய கீர்த்தியைக் கேட்டிருக்கும் புறஜாதியார்: கர்த்தர் அந்த ஜனங்களுக்குக் கொடுப்போம் என்று ஆணையிட்டிருந்த தேசத்திலே அவர்களைக் கொண்டுபோய் விடக்கூடாதே போனபடியினால், அவர்களை வனாந்தரத்திலே கொன்றுபோட்டார் என்பார்களே" (எண் 14:15,16) என்று சொல்லி பரிந்து பேசுகிறார்.

புறஜாதியார் கர்த்தருடைய கீர்த்தியைக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய ஜனங்களை இதுபோல கொன்றுபோட்டால், புறஜாதியார் மத்தியில் கர்த்தரைப் பற்றிய மதிப்பும், கர்த்தருடைய ஜனங்களைப் பற்றிய பயமும் குறைந்து போகும். (எண் 14:13-20). கர்த்தர் மோசேயின் ஜெபத்தைக் கேட்டு, இஸ்ரவேல் புத்திரரை ஒரே சமயத்தில் அழித்துப் போடுவதை நிறுத்திக் கொள்கிறார். ஆயினும், கலகம் பண்ணிய இஸ்ரவேல் புத்திரரை நாற்பது வருஷகாலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக அழித்துப்போட வேண்டும் என்பது தேவனுடைய திட்டம். (எண் 14:23-35).

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மையான காரியங்களையெல்லாம் மறந்துவிட்டு, அவர்கள் அவிசுவாசமான வார்த்தைகளைப் பேசுகிறார்கள். கலகக்காரர்களையெல்லாம் கொள்ளைநோயினால் வாதிக்கவேண்டும் என்பது தேவனுடைய விருப்பமாயிருக்கிறது. அவர்களால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு விரோதமாக கலகம்பண்ண முடியாது. அவர்கள்மீது கொள்ளைநோய் வரும்போது அவர்கள் எல்லோரும் மொத்தமாய் அழிந்துபோவார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் அழிந்துபோவதை எகிப்து தேசத்திலுள்ள ஜனங்களும் கேள்விப்படுவார்கள். காத் ஊரிலுள்ள ஜனங்கள், இஸ்ரவேல் ஜனங்கள் அழிந்துபோனதைப்பற்றி சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருப்பார்கள். ஆஸ்கலோன் பட்டணத்து வீதிகளிலே இஸ்ரவேல் புத்திரரின் அழிவைப்பற்றி கதை கதையாகப் பேசிக்கொண்டிருப்பார்கள். கர்த்தருடைய ஜனம் அழிந்துபோவதைப் பார்க்கும்போது புறஜாதி ஜனங்களுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாகும். புறஜாதியார் தங்கள் இருதயத்தில் பெருமைப்படுவார்கள்.

புறஜாதியாருக்கு இஸ்ரவேல் புத்திரரின் பாவமும் தெரியாது. அவர்களுக்கு கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பும் புரியாது. அவர்கள் கர்த்தரைப்பற்றி தப்பிதமாய்ப் புரிந்துகொள்வார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் அழிந்துபோவதைப் பார்க்கும்போது, கர்த்தருடைய வல்லமை குறைந்துபோயிற்று என்று ஏளனமாய்ப் பேசுவார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசும்போது, "என் ஆண்டவருடைய வல்லமை பெரிதாய் விளங்குவதாக" (எண் 14:18) என்று சொல்லுகிறார். கர்த்தருடைய நாமம் ஒரேபிலே மகிமையுள்ளதாக அறிவிக்கப்பட வேண்டும். கர்த்தரே தம்முடைய நாமத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

"கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்துபோகிறபோது, அவர்: கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர் என்று கூறினார்" (யாத் 34:6,7).

மோசே கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசும்போது, அவருடைய நாமத்தை தன்னுடைய விண்ணபத்தில் சொல்லி ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர் தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தவேண்டும் என்பது மோசேயின் விண்ணப்பமாயிருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை தண்டித்து திருத்துவதற்கு விரோதமாக மோசே ஒன்றும் சொல்லவில்லை. மோசே கர்த்தருடைய தண்டனைக்கு விரோதமாக ஜெபம்பண்ணவுமில்லை. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை கொள்ளை நோயினால் வாதித்து, அவர்களை சுதந்தரத்திற்கு புறம்பாக்கிப்போடுவதாக சொன்னார் (எண் 14:12).

கர்த்தர் தம்முடைய கிருபையினால் இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களையும், அக்கிரமங்களையும் மன்னித்தருளவேண்டும் என்றும், அவர்களை தம்முடைய சுதந்தரத்திற்கு புறம்பாக்கிப்போடாமல், தம்முடைய ஜனமாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும், மோசே கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

மோசே கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்துபேசும்போது, "ஆகையால் கர்த்தர் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர் என்றும், அக்கிரமத்தையும் மீறுதலையும் மன்னிக்கிறவர் என்றும், குற்றமுள்ளவர்களைக் குற்றமற்றவர்களாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர் என்றும், நீர் சொல்லியிருக்கிறபடியே, என் ஆண்டவருடைய வல்லமை பெரிதாய் விளங்குவதாக" (எண் 14:17,18) என்று சொல்லி ஜெபம்பண்ணுகிறார்.

பாவம் செய்தவர்கள் தங்கள் பாவத்திற்காக மனந்திருந்தி, தேவனிடத்தில் பாவ அறிக்கை செய்து, பாவநிவாரண பலி செலுத்தும்போது கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறார். அதேவேளையில், ஜனங்கள் மனந்திருந்தாமல், பாவத்தில் தொடர்ந்து ஜீவித்து, தேவனுக்கு எதிராகத் தொடர்ந்து கலகம் பண்ணும்போது, கர்த்தர் நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையும் உள்ளவராக இருந்தபோதிலும், அவர் நீதிபரராக இருக்கிறபடியினால், பாவிகளை ஆசீர்வதிக்கமாட்டார். (1யோவான் 1:9).

"எனக்கு விரோதமாய்ப் பாவம் செய்தவன் எவனோ, அவன் பேரை என் புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடுவேன்" (யாத் 32:33) என்று கர்த்தர் ஏற்கெனவே கூறியிருக்கிறார். குற்றமுள்ளவன் தன் குற்றத்தைத் தேவனிடத்தில் அறிக்கை செய்து, பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவன் மனந்திருந்தவில்லையென்றால் அவனுக்கு மன்னிப்பில்லை. கர்த்தர் அவனைக் குற்றமற்றவனாகப் பாவிக்கமாட்டார். அவனுடைய பாவத்திற்குத் தகுந்தபடி கர்த்தர் அவனைத் தண்டித்துப்போடுவார்.

மோசே கர்த்தருடைய அன்புக்காகவும், கிருபைக்காகவும், வாக்குத்தத்தங்களுக்காகவும் ஜெபிக்கிறார். (எண் 14:17-20). தேவனுடைய குணாதிசயத்தைக் கூறி நாம் ஜெபம் பண்ணும்போது, அந்த ஜெபத்திற்கு விரைவில் பதில் கிடைக்கிறது. அதே சமயத்தில் நாம் தேவனுடைய சித்தம் நிறைவேற வேண்டுமென்றும் ஜெபிக்க வேண்டும்.

கர்த்தர் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர். அவர் அக்கிரமத்தையும் மீறுதலையும் மன்னிக்கிறவர். கர்த்தர் தமது கிருபையினால் இஸ்ரவேல் புத்திரருடைய அக்கிரமங்களையும் மீறுதல்களையும் மன்னித்திருக்கிறார். கர்த்தர் கடந்த காலத்தில், இஸ்ரவேல் ஜனத்தாரை தமது கிருபையினால் மன்னித்ததுபோல, இப்போதும் மன்னித்தருளவேண்டுமென்று, மோசே கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார்.

மோசே கர்த்தரை நோக்கி, "உமது கிருபையினுடைய மகத்துவத்தின்படியும், எகிப்தை விட்டதுமுதல் இந்நாள்வரைக்கும் இந்த ஜனங்களுக்கு மன்னித்து வந்ததின்படியேயும், இந்த ஜனங்களின் அக்கிரமத்தை மன்னித்தருளும்" (எண் 14:19) என்று விண்ணப்பம்பண்ணுகிறார்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பாவிகள் ஜெபிக்கும்போது, "எகிப்தை விட்டதுமுதல் இந்நாள்வரைக்கும் இந்த ஜனங்களுக்கு மன்னித்துவந்ததின்படியே என் அக்கிரமத்தை மன்னித்தருளும்" என்று ஜெபிப்பது வழக்கம். லூக்கா 18:13 ஆவது வசனத்தில் ஆயக்காரன் ஜெபித்தது இந்த ஜெபத்தைப் போன்றிருக்கிறது. எகிப்து தேசத்தைவிட்டுப் புறப்பட்ட போது கர்த்தர் தங்களை மன்னித்ததுபோல மறுபடியும் மன்னிக்க வேண்டுமென்று மோசே கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய அக்கிரமத்தை மன்னிப்பதினால், அவருடைய நீதிக்கு களங்கம் ஏற்படாது. கர்த்தருடைய கிருபைக்கும் இரக்கத்திற்கும் நிந்தை உண்டாகாது. கர்த்தர் ஏற்கெனவே தமது கிருபையினால் இஸ்ரவேல் புத்திரருடைய அக்கிரமங்களை மன்னித்திருக்கிறார். அதே கிருபையினால் அவர் இப்போதும், இந்த ஜனங்களின் அக்கிரமத்தை மன்னித்தருளவேண்டும் என்றும், இதன் மூலமாக கர்த்தருடைய வல்லமை பெரிதாய் விளங்கும் என்றும் மோசே கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

மோசேயின் விண்ணப்பத்திற்கு கர்த்தர் பிரதியுத்தரம் சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தையில் அவருடைய இரக்கமும் நியாயத்தீர்ப்பும் இடம் பெற்றிருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய அவிசுவாசத்தினிமித்தமாக, அவர்களை கொள்ளைநோயினால் வாதித்து, சுதந்தரத்திற்கு புறம்பாக்கிப்போடவேண்டும் (எண் 14:12) என்று தீர்மானித்திருந்தார்.

மோசே கர்த்தருடைய சமுகத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசி ஜெபம்பண்ணினார். மோசேயினுடைய பணிவான ஜெபத்தினிமித்தமாக, கர்த்தருடைய கோபம் தணிகிறது. கர்த்தர் மோசேயை நோக்கி, "உன் வார்த்தையின்படியே இஸ்ரவேல் புத்திரரை மன்னித்தேன்" (எண் 14:20) என்று சொல்லுகிறார்.

மோசேயின் விண்ணப்பத்திற்குக் கர்த்தர் உடனடியாகப் பதில் தருகிறார். ஒரு பாவி மனந்திருந்தி, தேவனிடத்தில் விசுவாசத்தோடு வரும்போது, கர்த்தர் அவன் பாவங்களை உடனடியாக மன்னிக்கிறார். (ஏசா 55:7; ரோமர் 10:9-10; 1யோவான் 1:9).

மோசேயைப்போலவே நாமும் மற்றவர்களுக்காக கர்த்தருடைய சமுகத்திலே பரிந்து பேசி ஜெபம்பண்ணவேண்டும். பரிந்து பேசும் ஜெபம் மிகுந்த வல்லமையுள்ளது. நமக்கு மற்றவர்கள்மீது அன்பும், கரிசனையும் இருந்தால் மாத்திரமே, நாம் அவர்களுக்காக பரிந்து பேசி ஜெபம்பண்ணுவோம். நம்முடைய சத்துருக்களையும் நாம் சிநேகிக்கவேண்டும் என்றும், நமக்கு விரோதமாக தூஷணவார்த்தைகளை பேசுகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணவேண்டும் என்றும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு உபதேசம்பண்ணுகிறார்.

மோசேயினுடைய பரிந்து பேசும் ஜெபத்தினால், இஸ்ரவேல் தேசம் முழுவதும் அழிவுக்கு தப்பித்துக்கொள்கிறார்கள். ஒரு நீதிமானுடைய ஊக்கமான ஜெபத்தின் மூலமாக, ஏராளமான பாவிகள் தண்டனைக்கு தப்பிக்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணுவதோடு, தம்முடைய மகிமையையும் விளங்கப்பண்ணுகிறார். "பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும் என்று என்னுடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" (எண் 14:21) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும்......" என்பது தீர்க்கதரிசன வாக்கியம். இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. இது ஆயிரம் வருஷ அரசாட்சியில் நிறைவேறும். (ஏசா 4:4-5; ஏசா 11:9; ஏசா 35:2; ஏசா 66:18-19). எண் 14:22-24 ஆகிய வசனங்களில் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

இந்தத் தீர்க்கதரிசனம் நிபந்தனை யற்றது என்று சிலர் கருதுகிறார்கள். மனுஷர் பாவம் செய்யும்போது அங்கு சாபம் வரும். பாவத்தின் சம்பளம் மரணம். கிறிஸ்துவின் ஆயிரம் வருஷ அரசாட்சியில் சாபம் இராது. ஆகையினால் அப்போது பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும். (2கொரி 15:24-28; எபே 1:10; வெளி 20).

மோசே கர்த்தருடைய சமுகத்திலே இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசி ஜெபம்பண்ணியபோது, கர்த்தருடைய மகிமைக்கு முக்கியத்துவம் கொடுத்தார். கர்த்தருடைய மகிமை தூஷிக்கப்படக்கூடாது என்பதில் மோசே மிகுந்த கவனத்தோடிருந்தார். "என் ஆண்டவருடைய வல்லமை பெரிதாய் விளங்குவதாக" (எண் 14:18) என்பதே மோசேயின் அடிப்படை ஜெபமாகும்.

கர்த்தர் பாவத்தை வெறுக்கிறவர். தம்முடைய சொந்த ஜனத்தாரிடத்தில் பாவம் காணப்பட்டாலும், கர்த்தர் அவர்களுடைய பாவங்களையும் வெறுக்கிறவர். அவர் குற்றமுள்ளவர்களை குற்றமற்றவர்களாக விடமாட்டார். பிதாக்கள் செய்த அக்கிரமத்தை, மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவர்.

கர்த்தர் நீதியுள்ளவர். அவர் பாவத்தை வெறுக்கிறவர். அதே வேளையில் கர்த்தர் கிருபையுள்ளவராகவும், பாவிகள்மீது இரக்கம் காண்பிக்கிறவராகவும் இருக்கிறார். கர்த்தர் நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர் என்றும், அவர் அக்கிரமத்தையும் மீறுதலையும் மன்னிக்கிறவர் என்றும் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். இந்த சுபாவங்களெல்லாம் கர்த்தருடைய நாமமாயிருக்கிறது. இதுவே அவருடைய வல்லமையாயிருக்கிறது. ஆண்டவருடைய வல்லமை பெரிதாய் விளங்கவேண்டுமென்று மோசே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, பிதாவினிடத்தில் ஜெபம்பண்ணியபோது, "பிதாவே உமது நாமத்தை மகிமைப்படுத்தும்" என்று ஜெபம்பண்ணினார். அப்பொழுது வானத்திலிருந்து பிதாவின் வார்த்தை உண்டாயிற்று. பிதாவானவர் தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துவதோடு, இன்னும்மும் மகிமைப்படுத்துவேன் என்று வாக்குப்பண்ணவும் செய்கிறார்.

"பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும் என்றார். அப்பொழுது: மகிமைப்படுத்தினேன், இன்னமும் மகிமைப்படுத்துவேன் என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று" (யோவா 12:28).

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய அவிசுவாசத்தினிமித்தமாக கர்த்தருக்கு கோபமூட்டுகிறார்கள். அவர்களுடைய கலகக்குணம் கர்த்தருக்கு விசனமாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கர்த்தருடைய மகிமையையும், அவர் எகிப்திலும் வனாந்தரத்திலும் செய்த அவருடைய அடையாளங்களையும் கண்டிருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடாமல் போகிறார்கள்.

"இஸ்ரவேல் புத்திரர், தன்னோடே பத்துமுறை என்னைப் பரீட்சை பார்த்தார்கள்" (எண் 14:22) என்று கர்த்தர் சொல்லுகிறார். "எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிற இந்தப் பொல்லாத சபையாரை எதுவரைக்கும் பொறுப்பேன்? இஸ்ரவேல் புத்திரர் எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதைக் கேட்டேன்" (எண் 14:27). என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

"என் மகிமையையும், நான் எகிப்திலும் வனாந்தரத்திலும் செய்த என் அடையாளங்களையும் கண்டிருந்தும்", இஸ்ரவேல் புத்திரர் தம்முடைய சத்தத்திற்கு செவிகொடுக்கவில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்தக் காரணத்திற்காகத்தான் கர்த்தர் வனாந்தரத்தில் தமக்கு எதிராகக் கலகம் பண்ணிய இஸ்ரவேல் புத்திரரின் பழைய சந்ததியாரை அழித்துப் போடுகிறார் (எண் 14:22-23).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை பத்துமுறை பரீட்சை பார்த்த சம்பவங்களின் விவரம் வருமாறு :

1. கர்த்தர் தங்களை ஏமாற்றிவிட்டார் என்றும், எகிப்தியர் தங்களைக் கொன்று போடுவதற்காக தங்களை ஒரு கண்ணியில் சிக்கவைத்துவிட்டார் என்றும் கர்த்தருக்கு எதிராக முறையிட்ட சம்பவம். (யாத் 14:11-12).
2. தண்ணீருக்காக மாராவில் முறுமுறுத்தது. (யாத் 15:23-26).
3. சீனாய் வனாந்தரத்திற்குப் போய் சேருவதற்கு முன்பாக இறைச்சிக்காகவும், அப்பத்திற்காகவும் முறுமுறுத்தது. யாத் 16:1-18).
4. மன்னாவை விடியற்காலமட்டும் கொஞ்சம் மீதியாக வைத்து, கீழ்ப்படியாமல் போனது. (யாத் 16:19-22).
5. ரெவிதீமில் தண்ணீருக்காக முறுமுறுத்தது. (யாத் 17:1-7).
6. பொன்கன்றுக்குட்டியைச் செய்து விக்கிரகாராதனை செய்தது. (யாத் 32).
7. தபேராவில் முறுமுறுத்தது. (எண் 11:1-3).
8. இறைச்சிக்காக முறுமுறுத்தது. (எண் 11:4-35).
9. கர்த்தரையும், அவருடைய வார்த்தையும் விசுவாசிக்காமல், வேவுகாரரைக் கானான் தேசத்திற்கு அனுப்பியது. (எண் 13:1-25=உபா 1:20-25).
10. காதேசில் கர்த்தருக்கு எதிரான கலகம். (எண் 13:26-14:37; உபா 1:26-46).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை பரீட்சை பார்க்கிறார்கள். அவருடைய வல்லமையை பரீட்சை பார்க்கிறார்கள். அவர்கள் தேவனுடைய நீதியையும், நியாயத்தையும் பரீட்சை பார்க்கிறார்கள். தங்களுடைய அவிசுவாசத்தினிமித்தமாகவும், கலகக்குணத்தினிமித்தமாகவும் கர்த்தர் தங்களை தண்டிப்பாரா அல்லது தண்டியாமல் மன்னித்து விட்டுவிடுவாரா என்று இஸ்ரவேல் புத்திரர் பத்துமுறை கர்த்தரை பரீட்சை பார்த்திருக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் பொல்லாத ஜனமாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் தமக்கு விரோதமாக முறுமுறுக்கிறதை கர்த்தர் கேட்கிறார். அவர் நீடிய சாந்தமும், நீடிய பொறுமையுள்ளவராகயிருந்தாலும், "எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிற இந்த பொல்லாத சபையாரை எதுவரைக்கும் பொறுப்பேன்" (எண் 14:27) என்று கர்த்தர் கேட்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய மகிமையையும் அவருடைய அடையாளங்களையும், வல்லமையையும் எகிப்து தேசத்திலும் வனாந்தரத்திலும் கண்டிருக்கிறார்கள். அதன் பின்பும் அவர்கள் கர்த்தரை பரீட்சை பார்க்கிறார்கள் (எண் 14:22).

"இஸ்ரவேல் புத்திரர் இதனோடே பத்துமுறை என்னைப் பரீட்சை பார்த்தார்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். "பத்துமுறை" என்னும் வார்த்தைக்கு "அநேகந்தரம்" என்று பொருள். கர்த்தரை பரீட்சை பார்ப்பது இஸ்ரவேல் புத்திரரின் சுபாவமாயிருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றிருந்தாலும், தங்கள் பாவசுபாவத்திலிருந்து அவர்கள் இன்னும் விடுதலை பெறவில்லை.

இஸ்ரவேல் புத்திரருடைய பாவத்தினிமித்தமாக கர்த்தர் அவர்களுக்கு தண்டனை கொடுக்கிறார். "அவர்கள் பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தைக் காணமாட்டார்கள்; எனக்குக் கோபம் உண்டாக்கினவர்களில் ஒருவரும் அதைக் காணமாட்டார்கள்" (எண் 14:23) என்பதே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுக்கும் தண்டனையாயிருக்கிறது.

கர்த்தர் அவர்களை கானான் தேசத்திலே குடியேற்றுவேன் என்று ஆணையிட்டார். ஆனால் கர்த்தர் ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தில் இஸ்ரவேல் புத்திரர் பிரவேசிக்கமாட்டார்கள் (எண் 14:30). இதுவும் கர்த்தர் அவர்களுக்கு கொடுக்கும் தண்டனையாயிருக்கிறது.

கர்த்தருடைய வாக்குத்தத்தம், அவருக்கு விரோதமாக கலகம்பண்ணி, முறுமுறுக்கிற ஜனங்களுக்கு நிறைவேறாது. அவர்கள் கானான் தேசத்தில் பிரவேசிக்கமாட்டார்கள். ஆனாலும் அவர்களுடைய பின்சந்ததியாராகிய பிள்ளைகளை கர்த்தர் கானான் தேசத்தில் பிரவேசிக்கச் செய்வார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தின் எல்லையிலே கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்து கலகம்பண்ணுகிறார்கள். கர்த்தர் அவர்களை வனாந்தரத்திற்கு திரும்பிப்போகுமாறு கட்டளையிடுகிறார். தங்கள் அவிசுவாசத்தினிமித்தமாக அவர்கள் கானான் தேசத்திற்குள்ளே பிரவேசிப்பதற்கு ஆயத்தமாயில்லை. கர்த்தர் அவர்களுக்கு வாக்குப்பண்ணின தேசத்தை அவர்கள் சுதந்தரித்துக்கொள்ள விரும்பவில்லை. ஆகையினால் அவர்கள் மறுபடியும் வனாந்தரத்திற்கு பின்னிட்டு திரும்பிப்போகவேண்டுமென்று கர்த்தர் கட்டளை கொடுக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "அமலேக்கியரும் கானானியரும் பள்ளத்தாக்கிலே குடியிருக்கிறபடியினால், நாளைக்கு நீங்கள் திரும்பி சிவந்த சமுத்திரத்துக்குப் போகிறவழியாய் வனாந்தரத்துக்குப் பிரயாணம்பண்ணுங்கள்" (எண் 14:25) என்று சொல்லுகிறார்.

இவர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு எதிராக யுத்தம் பண்ண ஆயத்தமாக இருக்கிறார்கள். ஆனால் கர்த்தரோ தம்முடைய ஜனங்களை யுத்தம் பண்ணாமல் சிவந்த சமுத்திரத்துக்குப் போகிறவழியாய் வனாந்தரத்துக்குப் பிரயாணம் பண்ணுங்கள் என்று கூறிவிடுகிறார். இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் நாற்பது வருஷங்களுக்கு அலைந்து திரிய வேண்டும். ஆகையினால் அவர்கள் யுத்தம் பண்ணுவதைக் கர்த்தர் அனுமதிக்கவில்லை (எண் 14:25,33,42-45).

தமக்கு விரோதமாக முறுமுறுத்து கலகம்பண்ணுகிற ஜனங்களுக்கு கர்த்தர் தம்முடைய நீதியினால் மரணதண்டனையை கொடுக்கிறார். அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கமாட்டார்கள். அவர்கள் எல்லோரும் வனாந்தரத்திலே செத்துப்போவார்கள். அவர்கள் ஒரே வேளையில், ஒரே இடத்தில் செத்துப்போவதற்கு பதிலாக, வனாந்தரத்தின் பல்வேறு இடங்களில், வெவ்வேறு காலங்களில் செத்துப்போவார்கள்.

"இந்த வனாந்தரத்தில் உங்கள் பிரேதங்கள் விழும்; உங்களில் இருபது வயது முதல் அதற்கு மேற்பட்டவர்களாக எண்ணப்பட்டு, உங்கள் தொகைக்கு உட்பட்டவர்களும் எனக்கு விரோதமாய் முறுமுறுத்திருக்கிறவர்களுமாகிய அனைவரின் பிரேதங்களும் விழும்" (எண் 14:29) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். சபையார் எல்லாரும் அவர்களை நோக்கி: எகிப்துதேசத்திலே செத்துப்போனோமானால் நலமாயிருக்கும்; இந்த வனாந்தரத்திலே நாங்கள் செத்தாலும் நலம் என்று சொன்னார்கள் (எண் 14:2).

தங்களுக்கு எது நலமாயிருக்கும் என்று இஸ்ரவேல் புத்திரர் சொன்னார்களோ, அந்தக் காரியத்தை அவர்களுக்கு செய்யவேண்டுமென்று கர்த்தர் தீர்மானம்பண்ணுகிறார். அவர்களுடைய விருப்பத்திற்கு கர்த்தர் "ஆமென்" என்று சொல்லுகிறார். அவர்களுடைய விருப்பத்தின் பிரகாரம் வனாந்தரத்தில் அவர்கள் பிரேதங்கள் விழும் என்பது கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரரை வனாந்தரத்திலே கொன்றுபோடவேண்டும் என்பது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பாயிருக்கிறது. ஆனாலும் அவர்கள் செத்துப்போவதற்கு முன்பாக வனாந்தரத்திலே அலைந்து திரிவார்கள் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். பாதைதெரியாத பயணக்காரர்கள் அங்கும் இங்கும் அலைந்து திரிவதுபோல, இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே நாற்பது வருஷங்கள் அலைந்து திரிவார்கள்.

"உங்கள் பிரேதங்களோ இந்த வனாந்தரத்திலே விழும். அவைகள் வனாந்தரத்திலே விழுந்து தீருமட்டும், உங்கள் பிள்ளைகள் நாற்பது வருஷம் வனாந்தரத்திலே திரிந்து, நீங்கள் சோரம்போன பாதகத்தைச் சுமப்பார்கள்" (எண் 14:32,33) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்திலே நாற்பது வருஷம் அலைந்து திரியும்போது அவர்கள் தம்முடைய முகத்தை தேடவேண்டும் என்பதும், அவர்கள் தம்முடைய கிருபையையும், இரக்கத்தையும் வாஞ்சித்து பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதும், அவர்கள் தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி தம்முடைய சமுகத்திலிருந்து பாவமன்னிப்பை பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதும் கர்த்தருடைய விருப்பமாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் இந்த வனாந்தரத்திலே கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்து பாவம் செய்து, இங்கேயே செத்துப்போனாலும், அவர்கள் மறுமையிலே தம்மோடு கூடயிருக்கவேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். பாவங்கள் மன்னிக்கப்பட்டால் மாத்திரமே பரலோகத்தில் பிரவேசிக்க முடியும். அவர்கள் பூமிக்குரிய கானானில் பிரவேசிக்காவிட்டாலும், பரமகானானில் பிரவேசிக்க வேண்டும் என்பது தேவனுடைய விருப்பமாயிருக்கிறது.

கர்த்தர் அதற்காக அவர்களை நாற்பது வருஷங்களாக வனாந்தரத்திலே அலைந்து திரியப்பண்ணுகிறார். இந்தக் காலத்தில் அவர்கள் தங்களுடைய பாவங்களை உணரவேண்டும். கர்த்தருடைய வல்லமையையும், அவருடைய மகிமையையும், அவருடைய கிருபையையும் இரக்கத்தையும் புரிந்துகொண்டு, அவருடைய சமுகத்திலே தங்களை தாழ்த்தி ஒப்புக்கொடுக்கவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். அவர்கள் கர்த்தருக்கு உடன்படிக்கையின் ஜனங்களாகயிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய வார்த்தையிலும், வாக்குத்தத்திலும், உடன்படிக்கையிலும் உண்மையுள்ளவர். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரோடு செய்து கொண்ட உடன்படிக்கையை காத்துக்கொள்கிறார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, கர்த்தரோடு செய்து கொண்ட உடன்படிக்கையை மீறி, அவருக்கு விரோதமாகக் கலகம்பண்ணி, முறுமுறுத்து, பாவம் செய்கிறார்கள்.

கர்த்தருடைய உடன்படிக்கையை மீறுவது பாவம். இதனால் தங்களுக்கு சாபமும், தீங்குகளும், ஆபத்துக்களும் வரும் என்பதை இஸ்ரவேல் புத்திரர் உணரவேண்டும். இதை இஸ்ரவேல் புத்திரர் புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவே, கர்த்தர் அவர்களை வனாந்தரத்திலே நாற்பது வருஷம் அலைந்து திரியப்பண்ணுகிறார்.

கர்த்தர் நம்மை ஒருபோதும் கைவிடுகிற தேவனல்ல. நம்மை கரம்பிடித்து வழிநடத்துகிறவர். அவர் உண்மையுள்ள தேவன். அவர் நம்மை முற்றும் முடிய கரம்பிடித்து வழிநடத்துவார். ஆனாலும் நாம் கர்த்தரோடு செய்துகொண்ட உடன்படிக்கையை மீறி, கர்த்தரை விட்டு விலகிப்போகும்போது, கர்த்தரும் நம்மை விட்டு விலகிப்போய்விடுவார். நாம் அவரை விட்டு விலகும் வரையிலும் அவர் நம்மோடு கூடவே இருப்பார். கர்த்தர் ஒருபோதும் நம்மைவிட்டு முதலில் விலகிப்போகமாட்டார்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே நாற்பது வருஷங்களாக சுற்றி அலையும்போது அவர்களுடைய புதிய சந்ததியார் பிறப்பார்கள். கர்த்தர் தம்முடைய ஆசீர்வாதங்களை அவர்களுடைய பிள்ளைகளுக்கு உடனே கொடுத்துவிடமாட்டார். பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் பாதகத்தை வனாந்தரத்திலே சுமப்பார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் பிரேதங்கள் வனாந்தரத்திலே விழுந்து தீருமட்டும், அவர்களுடைய பிள்ளைகள் நாற்பது வருஷம் வனாந்தரத்திலே திரிந்து, அவர்களுடைய சோரம்போன பாதகத்தைச் சுமப்பார்கள் (எண் 14:33) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரின் பின்மாற்றத்தின் நிமித்தம் அவர்களுடைய பிள்ளைகள் வனாந்தரத்தில் நாற்பது வருஷங்களுக்கு அலைந்து திரிந்து பாடுகளை அனுபவிப்பார்கள்.

இஸ்ரவேல் புத்திரருடைய பிள்ளைகள் வனாந்தரத்தில் பிறந்து வளரும்போது, அவர்கள் கர்த்தருடைய கோபத்தை அனுபவிப்பார்கள். தங்கள் பெற்றோருடைய பாதகத்தினிமித்தமாக, அவர்களுடைய பிள்ளைகளுக்கு வேதனைகளும், பாடுகளும் உண்டாகும். இந்த வேதனைகளையெல்லாம் தங்கள் பெற்றோரின் கீழ்ப்படியாமையினால் தங்களுக்கு வந்திருக்கிறது என்பதை பிள்ளைகளும் உணர்ந்துகொள்வார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் பிள்ளைகள் நாற்பது வருஷம் வனாந்தரத்திலே திரிந்து, தங்கள் பெற்றோரின் சோரம்போன பாதகத்தை சுமக்கும்போது, பாவத்திற்கு விரோதமாக எச்சரிக்கப்படுவார்கள். தங்கள் பெற்றோரைப்போல தாங்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் போய்விடக்கூடாது என்று, பிள்ளைகள் மிகுந்த கவனமாயும், எச்சரிப்பாயும் ஜீவிப்பார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் பாவத்தினிமித்தமாக கர்த்தர் அவர்கள்மீது தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பையும், கடினமான தண்டனையையும் சொல்லுகிறார். கர்த்தருடைய கோபத்திற்கு மத்தியில், அவருடைய கிருபையும் வெளிப்படுகிறது.

தமக்கு விரோதமாக கலகம்பண்ணின இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பைச் சொல்லும்போது, "என் மகிமையையும், நான் எகிப்திலும் வனாந்தரத்திலும் செய்த என் அடையாளங்களையும் கண்டிருந்தும், என் சத்தத்துக்குச் செவிகொடாமல், இதனோடே பத்துமுறை என்னைப் பரீட்சைபார்த்த மனிதரில் ஒருவரும், அவர்கள் பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தைக் காணமாட்டார்கள்; எனக்குக் கோபம் உண்டாக்கினவர்களில் ஒருவரும் அதைக் காணமாட்டார்கள்" (எண் 14:22,23) என்று சொல்லுகிறார்.

ஆனாலும் தம்மை உத்தமமாய்ப் பின்பற்றின காலேபுக்கு கர்த்தர் ஆசீர்வாதமான வார்த்தைகளை சொல்லுகிறார். "என்னுடைய தாசனாகிய காலேப் வேறே ஆவியை உடையவனாயிருக்கிறபடியினாலும், உத்தமமாய் என்னைப் பின்பற்றி வந்தபடியினாலும், அவன் போய்வந்த தேசத்திலே அவனைச் சேரப்பண்ணுவேன்; அவன் சந்ததியார் அதைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்" (எண் 14:24) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"என்னுடைய தாசனாகிய காலேப்" என்று கர்த்தர் இந்த வசனத்தில் காலேபைப்பற்றிச் சொல்லுகிறார். எண் 14:30 ஆவது வசனத்தில் யோசுவாவையும் பற்றியும், யோசு 14:1; யோசு 22:13 ஆகிய வசனங்களில் ஆசாரியரைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. இவர்களும் கர்த்தருடைய ஆவியைப் பெற்றிருந்து, அவரை உத்தமமாய் பின்பற்றினார்கள்.

தமக்கு விரோதமாக முறுமுறுத்த இஸ்ரவேல் சபையாரை வனாந்தரத்திலே கொன்றுபோடுவதாக கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பை சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிற இந்தப் பொல்லாத சபையாரை எதுவரைக்கும் பொறுப்பேன்? இஸ்ரவேல் புத்திரர் எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதைக் கேட்டேன். நீ அவர்களோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நீங்கள் என் செவிகள் கேட்கச்சொன்னபிரகாரம் உங்களுக்குச் செய்வேன் என்பதை என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தர் உரைக்கிறார்" (எண் 14:27,28) என்றும்,

"இந்த வனாந்தரத்தில் உங்கள் பிரேதங்கள் விழும்; உங்களில் இருபது வயது முதல் அதற்கு மேற்பட்டவர்களாக எண்ணப்பட்டு, உங்கள் தொகைக்கு உட்பட்டவர்களும் எனக்கு விரோதமாய் முறுமுறுத்திருக்கிறவர்களுமாகிய அனைவரின் பிரேதங்களும் விழும்" (எண் 14:29) என்றும் சொல்லுகிறார்.

"உங்கள் தொகைக்கு உட்பட்டவர்கள்" என்பது இஸ்ரவேல் புத்திரரின் இருபது வயது முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ளவர்கள் வரைக்கும் எண்ணித்தொகையேற்றப்பட்டவர்களைக் குறிக்கிறது. இருபது வயது முதல் அதற்கு மேற்பட்டவர்களாக எண்ணப்பட்டவர்கள் வனாந்தரத்தில் மரித்துப் போவார்கள். (எண் 14:29-35) இருபது வயதுக்கு உட்பட்ட தங்களுடைய பிள்ளைகள் மரித்துப் போகும் என்று இஸ்ரவேல் புத்திரர் பயந்தார்கள்.

ஆனால் அவர்களோ கானான் தேசத்திற்குள் பிரவேசித்து, அந்தத் தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். (எண் 14:31). மனுஷருடைய பயத்திற்கு ஆதாரமே இல்லை. கர்த்தர் நம்பட்சத்தில் இருக்கும்போது நமக்கு எதிராக யாரும் நிற்கமுடியாது. கர்த்தர் பெரியவர். அவர் பெரிய காரியங்களைச் செய்வார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சாபமான வார்த்தைகளை சொல்லும்போது, தம்மை உத்தமமாய் பின்பற்றின காலேபுக்கும் யோசுவாவும் ஆசீர்வாதமான வார்த்தைகளையும் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "எப்புன்னேயின் குமாரன் காலேபும், நூனின் குமாரன் யோசுவாவும் தவிர, மற்றவர்களாகிய நீங்கள் நான் உங்களைக் குடியேற்றுவேன் என்று ஆணையிட்டுக் கொடுத்த தேசத்தில் பிரவேசிப்பதில்லை. கொள்ளையாவார்கள் என்று நீங்கள் சொன்ன உங்கள் குழந்தைகளையோ நான் அதில் பிரவேசிக்கச் செய்வேன்; நீங்கள் அசட்டைப்பண்ணின தேசத்தை அவர்கள் கண்டறிவார்கள்" (எண் 14:30,31) என்று சொல்லுகிறார்.

காலேபும் யோசுவாவும் வேறே ஆவியையுடையவர்களாயிருக்கிறார்கள். இவர்களுடைய ஆவிக்கும், கானான் தேசத்தை வேவுபார்ப்பதற்காகப்போன மற்ற பிரபுக்களின் ஆவிக்கும் வித்தியாசம் இருக்கிறது. இவர்கள் இருவரும் கர்த்தரை முழுவதுமாய்ப் பின்பற்றுகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய சித்தத்திற்கும் விருப்பத்திற்கும், திட்டத்திற்கும் கீழ்ப்படிகிறார்கள்.

கர்த்தர் இவர்கள் இருவருடைய கீழ்ப்படிதலையும் கனம்பண்ணுகிறார். கர்த்தர் இவர்களையும், இவர்களுடைய சந்ததியாரையும் கானான் தேசத்தில் பிரவேசிக்கப்பண்ணுகிறார். அவர்கள் கானான் தேசத்தை சுதந்தரிப்பார்கள்.

கர்த்தர் காலேபுக்கு தம்முடைய ஆசீர்வாதத்தை முதலாவதாக சொன்னபோது, அங்கே யோசுவாவைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை (எண் 14:24). கர்த்தர் காலேபுக்கு மறுபடியும் ஆசீர்வாதமான வார்த்தையைச் சொல்லும்போது, அவர் யோசுவாவுக்கும் தம்முடைய ஆசீர்வாதத்தை சேர்த்து சொல்லுகிறார் (எண் 14:30,31).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணியபோது, தங்கள் பிள்ளைகளும் செத்துப்போவார்கள் என்று ஒரு காரணத்தை சொன்னார்கள், "நாங்கள் பட்டயத்தால் மடியும்படிக்கும், எங்கள் பெண்ஜாதிகளும் பிள்ளைகளும் கொள்ளையாகும்படிக்கும், கர்த்தர் எங்களை இந்த தேசத்துக்குக் கொண்டு வந்தது என்ன?" (எண் 14:3) என்று இஸ்ரவேல் புத்திரர் சொன்னார்கள்.

ஆனால் கர்த்தரோ இஸ்ரவேல் புத்திரரின் பிள்ளைகளைக் குறித்து வேறொரு திட்டம் வைத்திருக்கிறார். இஸ்ரவேல் புத்திரரே கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்தவர்கள். அவர்களுடைய பிள்ளைகள் ஒருவேளை சிறுவர்களாகவோ அல்லது இனிமேல் அவர்களுக்கு பிறக்கப்போகிறவர்களாகவோ இருக்கலாம். கர்த்தர் அவர்களுடைய பிள்ளைகளை உயிரோடு காப்பாற்றுகிறார். இது கர்த்தருடைய கிருபை.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "கொள்ளையாவார்கள் என்று நீங்கள் சொன்ன உங்கள் குழந்தைகளையோ நான் அதில் பிரவேசிக்கச் செய்வேன்; நீங்கள் அசட்டைப்பண்ணின தேசத்தை அவர்கள் கண்டறிவார்கள்" (எண் 14:31) என்று சொல்லுகிறார்.

கானான் தேசத்தில் பிரவேசிப்பதற்கு கர்த்தர் ஒரு சந்ததியை மீதமாய் வைத்திருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் கலகக்குணமுள்ளவர்களாயிருந்தாலும், கர்த்தர் அவர்களுடைய பிள்ளைகளை தண்டியாமல், கானான் தேசத்தை அவர்களுக்கு சுதந்தரமாகக் கொடுக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தை சுதந்தரிக்கவேண்டியவர்கள். ஆனால் அவர்களோ தேசத்தை சுதந்தரியாமல் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தமாகவும், கலகக்குணத்தினிமித்தமாகவும் அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதை கர்த்தரும் தடைபண்ணுகிறார். அவர்கள் மறுபடியும் வனாந்தரத்திற்கு திரும்பிப்போகுமாறு கர்த்தர் கட்டளை கொடுக்கிறார்.

அவர்கள் வனாந்தரத்திலே நாற்பது வருஷங்களாக சுற்றி அலைவார்கள். அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கமாட்டார்கள். அவர்கள் வனாந்தரத்திலே செத்துப்போவார்கள்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "நீங்கள் தேசத்தைச் சுற்றிப்பார்த்த நாற்பதுநாள் இலக்கத்தின்படியே, ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வருஷமாக, நீங்கள் நாற்பது வருஷம் உங்கள் அக்கிரமங்களைச் சுமந்து, என் உடன்படிக்கைக்கு வந்த மாறுதலை உணருவீர்கள்" (எண் 14:34) என்றும்,

"கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன்; எனக்கு விரோதமாய் கூட்டங்கூடின இந்தப் பொல்லாத சபையார் யாவருக்கும் இப்படியே செய்வேன்; இந்த வனாந்தரத்திலே அழிவார்கள், இங்கே சாவார்கள் என்று சொல்" (எண் 14:35) என்றும் சொல்லுகிறார்.

கர்த்தருக்கு ஒரு நாள் என்பது ஒரு வருஷம் போன்றது என்பதை விளக்குவதற்காக ஒருசிலர் இந்த வசனத்தைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் இதை ஒரு வேதாகமக் கோட்பாடாகக் கூறமுடியாது. ஒருநாள் என்பது ஒரு நாள்தான். ஒரு வருஷம் என்பது ஒரு வருஷம் தான்.

"என் உடன்படிக்கைக்கு வந்த மாறுதல்" என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். ஆனாலும் கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, தம்முடைய உடன்படிக்கையில் மாறுதலை உண்டுபண்ணுகிறார். இஸ்ரவேல் புத்திரரைக் கானான் தேசத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். இது அவருடைய உடன்படிக்கை. ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ தங்களுக்கு நியமிக்கப்பட்டிருந்த நிபந்தனைகளைக் காத்துக் கொள்ளவில்லை. கர்த்தருக்கு எதிராகக் கலகம் பண்ணுகிறார்கள். கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார். அவர்களோடு செய்துகொண்ட உடன்படிக்கையைக் கர்த்தர் மாற்றிப்போடுகிறார் (எண் 14:22,27-35).

கானான் தேசத்தை வேவுபார்க்கப் போனவர்களில் பத்து பிரபுக்கள் திடீரென்று செத்துப்போகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தார்மீது தம்முடைய நியாயத்தீர்ப்பை சொல்லுகிறார். ஜனங்கள்மீது நியாயத்தீர்ப்பு வருவதற்கு முன்பாக, ஜனங்கள் மத்தியிலே துர்ச்செய்தியை பரம்பச்செய்த, பத்து வேவுகாரர்மீது உடனடியாக நியாயத்தீர்ப்பு வருகிறது. அந்த பத்து மனிதரும் கர்த்தருடைய சந்நிதியில் வாதையினால் செத்துப்போகிறார்கள்.

கானான் தேசத்தைச் சோதித்துப் பார்க்கும்படி மோசேயால் அனுப்பப்பட்டுத் திரும்பி, அந்த தேசத்தைக்குறித்துத் துர்ச்செய்தி கொண்டுவந்து, சபையார் எல்லாரும் அவருக்கு விரோதமாய் முறுமுறுக்கும்படி அந்தத் துர்ச்செய்தியைச் சொன்னவர்களாகிய அந்த மனிதர் கர்த்தருடைய சந்நிதியில் வாதையினால் செத்துப்போகிறார்கள் (எண் 14:36,37).

பத்துவேவுகாரரும், கர்த்தர் வாக்குத்தத்தம்பண்ணின தேசத்தைக் குறித்து துர்ச்செய்தியைக் கொண்டு வந்தவர்கள். கர்த்தர் அந்த தேசத்தை பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம் என்று சொல்லுகிறார். ஆனால் இவர்களோ கர்த்தருடைய வார்த்தையை நம்பாமல், அந்த தேசத்தைக் குறித்து நல்ல செய்தியை சொல்லாமல் துர்ச்செய்தியை சொல்லுகிறார்கள்.

தம்முடைய வார்த்தைக்கு விரோதமாகப் பேசுகிறவர்கள்மீதும், தம்முடைய வார்த்தையை தப்பிதமாக வியாக்கியானம் பண்ணுகிறவர்கள்மீதும் கர்த்தருடைய கோபமும் நியாயத்தீர்ப்பும் வரும். சத்தியத்தைப் புரட்டுகிறவர்கள் மனுஷர் மத்தியிலே துர்ச்செய்தியை பரம்பச்செய்கிறார்கள். அவர்கள் தங்களுடைய சாதுரிய வார்த்தை களினாலும் பொய்புரட்டுக்களினாலும் மனுஷருடைய சிந்தையையும், இருதயத்தையும் களங்கப்படுத்துகிறார்கள்.

கள்ளப்போதகர்கள் சத்தியத்தைப் போதியாமல், கள்ளஉபதேசங்களைப் போதிக்கிறார்கள். இதனால் மனுஷரால் கர்த்தருடைய மகிமையையும், வல்லமையையும் தியானிக்க முடியவில்லை. கள்ளப்போதகர்கள் மனுஷரை சத்தியத்தைவிட்டு தவறான பாதையில் வழிநடத்தி செல்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய பாதையைவிட்டு தவறான பாதையில் போகிறவர்களையும் தண்டிக்கிறார். அந்த தப்பிதமான பாதையில் போகுமாறு அவர்களை வழிநடத்துகிற கள்ளப்போதகர்களையும், கர்த்தர் முதலாவதாக தண்டிக்கிறார்.

வேவுகாரரில் பத்துபேர் இஸ்ரவேல் புத்திரரை பாவம் செய்யப்பண்ணினவர்கள். சபையார் எல்லாரும் தேவனுக்கு விரோதமாக முறுமுறுக்கும்படி இந்தப் பத்துபேரும் அவர்களிடத்தில் துர்ச்செய்தி சொன்னவர்கள்.

கானான் தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி பன்னிரண்டு பிரபுக்கள் போனார்கள். அவர்களில் பத்து பேர் கர்த்தருடைய சந்நிதியில் வாதையினால் செத்துப்போகிறார்கள். மீதி இரண்டுபேர் மாத்திரம் வாதைக்கு தப்பித்து உயிரோடிருக்கிறார்கள்.

தேசத்தைச் சுற்றிப்பார்க்கப்போன அந்த மனிதரில் நூனின் குமாரனாகிய யோசுவாவும், எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும்மாத்திரம் உயிரோடிருக்கிறார்கள் (எண் 14:38).

நற்செய்தியை விசுவாசத்தோடு சொன்னதினால், இவர்கள் இருவரும் வாதையினால் செத்துப்போகவில்லை. உயிரோடிருக்கிறார்கள்.

தங்களுக்கு துர்ச்செய்தியை கொண்டு வந்தவர்களின் வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரர் நம்பினார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். அவர்கள் கானான் தேசத்தில் பிரவேசிப்பதில்லையென்றும், அவர்கள் வனாந்தரத்திலே நாற்பது வருஷங்களுக்கு அலைந்து திரிவார்கள் என்றும், அவர்களுடைய பிரேதங்கள் வனாந்தரத்திலே விழும் என்றும் கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

கர்த்தர் கானான் தேசத்தை அவர்களுடைய பிள்ளைகளுக்கு சுதந்தரமாகக் கொடுக்கிறார். மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தர் சொன்ன வார்த்தைகளை சொல்லுகிறார். மோசே இந்த வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் சொன்னபோது, ஜனங்கள் மிகவும் துக்கிக்கிறார்கள் (எண் 14:39).

கானான் தேசத்திற்குள் உடனடியாகப் பிரவேசிக்க முடியாது. இன்னும் நாற்பது வருஷங்களாகும். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவரும் வனாந்தரத்தில் மடிந்துபோவார்கள் என்று தேவனுடைய நியாயத்தீர்ப்பை மோசே ஜனங்களோடு கூறுகிறார். இதைக் கேட்டபோது, ஜனங்கள் மிகவும் துக்கிக்கிறார்கள். (எண் 14:39-45).

அவர்கள் அழுது புலம்பியும், துக்கித்தும் அவர்களுக்கு ஒரு நன்மையும் ஏற்படவில்லை. தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்து, கர்த்தரைச் சார்ந்திருந்தால் ஒருவேளை அவர்கள் மன்னிக்கப்பட்டிருப்பார்கள். ஆனால் அவர்கள் தங்கள் சொந்த பலத்தின்மீது நம்பிக்கை வைத்து, கர்த்தர் வாக்குத்தத்தம்பண்ணின இடத்துக்கு நாங்கள் போவோம் என்று சொல்லி மலையின் உச்சியில் ஏறத் துணிகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுக்கு துர்ச்செய்தி சொன்ன பத்துவேவுகாரரின் வார்த்தைகளைக் கேட்டு கானான் தேசத்திற்குள் போகக்கூடாது என்று சொன்னார்கள். அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகவும், கர்த்தருக்கு விரோதமாகவும் முறுமுறுத்தார்கள். அவர்கள் கானான் தேசத்தை சுதந்தரிக்கப்போகாமல், எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போக வேண்டுமென்று சொன்னார்கள். இப்போதோ அவர்கள் தங்களுடைய பாவத்தை உணருகிறார்கள்.

கர்த்தர் அவர்களை வனாந்தரத்திற்கு திரும்பிப்போகுமாறு சொல்லுகிறார். ஆனால் அவர்களோ கானான் தேசத்திற்கு புறப்பட்டுப்போக துணிகிறார்கள். அவர்கள் அதிகாலமே எழுந்திருந்து, "நாங்கள் பாவஞ்செய்தோம், கர்த்தர் வாக்குத்தத்தம்பண்ணின இடத்துக்கு நாங்கள் போவோம்" என்று சொல்லி மலையின் உச்சியில் ஏறத்துணிகிறார்கள் (எண் 14:40).

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணியபோது, "நாம் ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு எகிப்திற்கு திரும்பிப்போவோம் வாருங்கள்" (எண் 14:4) என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள். ஆனால் இப்போதோ அவர்கள் "கர்த்தர் வாக்குத்தத்தம்பண்ணின இடத்திற்கு நாங்கள் போவோம்" என்று சொல்லுகிறார்கள். தங்களை கானான் தேசத்திற்கு வழிநடத்துமாறு மோசேயை கேட்டுக்கொள்கிறார்கள்.

கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ணின இஸ்ரவேல் ஜனத்தார் இப்போது தங்கள் பாவத்தை உணர்ந்திருக்கிறார்கள். "நாங்கள் பாவம் செய்தோம்" என்று சொல்லுகிறார்கள். அவர்களுடைய மனந்திரும்புதலினால் கர்த்தருடைய நாமம் மகிமைப்படுகிறது. ஆனாலும் அதனால் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் ஏற்படவில்லை. அவர்கள் காலம் கடந்து தங்களுடைய பாவங்களை உணருகிறார்கள். ஆகையினால் அவர்களுக்கு ஒரு நன்மையும் உண்டாகவில்லை.

கானான் தேசத்திற்குப்போவோம் என்று இஸ்ரவேல் புத்திரர் சொல்லும்போது, மோசே அவர்களுக்கு ஆதரவாகப் பேசவில்லை. அவர்கள் கானான் தேசத்திற்குப்போகக்கூடாது என்றும், வனாந்தரத்திற்கு திரும்பிப்போகவேண்டும் என்றும் மோசே சொல்லுகிறார். மோசே தன்னுடைய சொந்த வார்த்தையை பேசவில்லை. அவர் கர்த்தருடைய வார்த்தையை அவர்களுக்கு சொல்லுகிறார்.

மோசே அவர்களை நோக்கி, "நீங்கள் இப்படி கர்த்தரின் கட்டளையை மீறுகிறதென்ன? அது உங்களுக்கு வாய்க்காது. நீங்கள் உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறிய அடிக்கப்படாதபடிக்கு ஏறிப்போகாதிருங்கள்; கர்த்தர் உங்கள் நடுவில் இரார். அமலேக்கியரும் கானானியரும் அங்கே உங்களுக்குமுன்னே இருக்கிறார்கள்; பட்டயத்தினால் விழுவீர்கள்; நீங்கள் கர்த்தரை விட்டுப் பின்வாங்கினபடியால், கர்த்தர் உங்களோடே இருக்கமாட்டார்" (எண் 14:41-43) என்று சொல்லுகிறார்.

"கர்த்தர் உங்களோடே இருக்கமாட்டார்" என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். அவர்கள் தோல்வியடைந்ததற்கு இதுதான் காரணம். மோசேயும், கர்த்தருடைய பெட்டியும் தங்களோடு வராமல், அவர்கள் தாங்களாகவே யுத்தம் பண்ண புறப்பட்டு போகிறார்கள். (எண் 14:44). மோசே முன்னறிவித்ததுபோலவே, இஸ்ரவேல் புத்திரர் யுத்தத்தில் தோல்வியடைகிறார்கள். (எண் 14:45).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளையை மீறி, கானான் தேசத்திற்கு புறப்பட்டுப்போனால், அவர்களுக்கு வரப்போகும் ஆபத்துக்களைக் குறித்து மோசே அவர்களை எச்சரிக்கிறார். "அமலேக்கியரும் கானானியரும் அங்கே உங்களுக்கு முன்னே இருக்கிறார்கள்" என்றும், "கர்த்தர் உங்களோடே இருக்கமாட்டார்" என்றும் மோசே சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரோடு கர்த்தர் கூடயிருக்கவில்லையென்றால், அவர்களுக்கு பாதுகாப்பு இல்லை. அவர்கள் தங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறியடிக்கப்படுவார்கள். இஸ்ரவேல் புத்திரர் சத்துருக்களின் பட்டயத்தினால் விழுவார்கள்.

கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற பாதையில் நாம் செல்லவில்லையென்றால், கர்த்தருடைய பாதுகாப்பும், பராமரிப்பும் நமக்கு கிடைக்காது. கர்த்தருக்கு விரோதமான பாதை, நம்மை அழிவுக்கு நேராக கொண்டு போய்விடும். கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற ஊழியத்தை செய்யவேண்டும். அந்த ஊழியத்தில் கர்த்தருடைய ஆசீர்வாதம் இருக்கும்.

கர்த்தருடைய சித்தமும் விருப்பமும் நம்முடைய விருப்பமாகயிருக்கவேண்டும். கர்த்தர் நம்முடைய சொந்த விருப்பத்தை நிறைவேற்றவேண்டும் என்று எதிர்பார்க்காமல், கர்த்தருடைய விருப்பத்தை நிறைவேற்ற, நாம் நம்மை முற்றிலுமாய் ஒப்புக்கொடுக்கவேண்டும்.

கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிகிறவர்கள் காலதாமதம்பண்ணாமல், உடனே கீழ்ப்படிந்து விடவேண்டும். நமக்கு இஷ்டமான நேரத்தில் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியலாம் என்று அசட்டையாயிருக்கக்கூடாது. கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு நாம் காலதாமதம்பண்ணக்கூடாது.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை விட்டு பின்வாங்கிப்போய்விட்டார்கள். ஆகையினால் கர்த்தர் அவர்களைவிட்டு விலகிவிட்டார். இப்போது அவர்கள் தாங்கள் செய்த பாவத்தை உணர்ந்து, கர்த்தரிடத்தில் திரும்பி வந்திருக்கிறார்கள். தங்களுடைய விருப்பமும், ஆசையும் நிறைவேறவேண்டும் என்பதற்காகவே அவர்கள் கர்த்தரிடத்தில் வந்திருக்கிறார்கள். கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவேண்டும் என்னும் தீர்மானம் அவர்களிடத்தில் இல்லை.

அவர்கள் வனாந்தரத்திற்கு திரும்பிப்போகவேண்டும் என்பதே கர்த்தருடைய கட்டளை. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிய தங்களை ஒப்புக்கொடுத்திருந்தால், அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க துணியமாட்டார்கள். கர்த்தர் தங்களுக்கு கட்டளையிட்ட பிரகாரம், அவர்கள் வனாந்தரத்திற்கு திரும்பிப்போயிருப்பார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் துணிகரமான செயலுக்கு மோசே ஒத்துப்போகவில்லை. அவர்களை எச்சரிக்கிறார். ஆனால் அவர்களோ மோசேயின் வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. தங்கள் சுயவிருப்பத்தின் பிரகாரமாகவும், சுயதீர்மானத்தின் பிரகாரமாகவும் அவர்கள் மலையின் உச்சியில் ஏறத்துணிகிறார்கள்.

மோசே அவர்களோடு கூடப்போகவில்லை. கர்த்தருடைய உடன்படிக்கையின் பெட்டியும் மோசேயும் பாளயத்தை விட்டுப் போகவில்லை (எண் 14:44). இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருடைய கட்டளையை மீறி, கர்த்தருக்கு விரோதமாக செயல்பட துணிகிறார்கள்.

உடன்படிக்கைப் பெட்டி எப்போதும் மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருப்பதில்லை. இஸ்ரவேல் புத்திரர் ஒரு முக்கியமான காரியமாகப் பிரயாணம் பண்ணும்போது, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியையும், தங்களோடு எடுத்துச் செல்வது வழக்கம். கர்த்தருடைய பிரசன்னத்திற்கு இது அடையாளம். ஆனால் இங்கு உடன்படிக்கைப்பெட்டி அவர்களோடு செல்லவில்லை.

மோசே இஸ்ரவேல் புத்திரரை எச்சரித்து சொன்ன பிரகாரம், சத்துருக்கள் அவர்களுக்கு விரோதமாக வருகிறார்கள். அப்பொழுது அமலேக்கியரும் கானானியரும் அந்த மலையிலே இருந்து இறங்கி வந்து, அவர்களை முறிய அடித்து, அவர்களை ஓர்மாமட்டும் துரத்துகிறார்கள் (எண் 14:45).

இஸ்ரவேல் ஜனத்தார் மலையின் உச்சியில் ஏறத்துணியும்போது, அமலேக்கியரும் கானானியரும் ஏற்கெனவே அந்த மலையின்மீது இருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தைச் சுற்றிப்பார்ப்பதற்காக வேவுகாரரை அனுப்பினார்கள். கானானியரிடத்திலும் வேவுகாரர் இருக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் ஜனத்தாரின் ஒவ்வொரு அசைவையும் வேவுபார்க்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மலையின்மேல் ஏறுவதற்கு முன்பாகவே, சத்துருக்கள் மலையிலிருந்து இறங்கி வருகிறார்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாத ஜனத்திற்கு, ஆபத்து தேடி வரும். அது சீக்கிரத்தில் வரும். அமலேக்கியரும் கானானியரும் இஸ்ரவேல் புத்திரரை முறியடித்து துரத்தியபோது, இஸ்ரவேல் புத்திரரில் அநேகர் செத்துப்போயிருப்பார்கள் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ஓரேபிலிருந்து காதேஸ்பர்னேயாவுக்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள். மோசே இந்த சம்பவத்தை இஸ்ரவேல் சபையாருக்கு ஞாபகப்படுத்துகிறார். அவர்கள் பிரயாணம்பண்ணின வழி பயங்கரமான பெரிய வனாந்தர வழியாயிருக்கிறது.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டபடியே, நாம் ஓரேபைவிட்டுப் பிரயாணம்பண்ணி, எமோரியரின் மலைநாட்டிற்கு நேராக நீங்கள் கண்ட அந்தப் பயங்கரமான பெரிய வனாந்தரவழி முழுவதும் நடந்து வந்து, காதேஸ்பர்னேயாவிலே சேர்ந்தோம்" (உபா 1:19) என்று சொல்லுகிறார்.

அவர்கள் அந்தப் பயங்கரமான பெரிய வனாந்தரவழி முழுவதும் நடந்து வந்தார்கள். இந்த வாக்கியம் வனாந்தரத்தில் இஸ்ரவேல் புத்திரரின் பதினொறுநாள் அனுபவத்தை குறிப்பிடுகிறது (உபா 1:2. உபா 8:15; உபா 12:16; உபா 13:26; எண் 10:1-11:35).

கர்த்தர் இஸ்ரவேல் சபையாருக்கு செய்த நன்மைகளை மோசே அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறார். வனாந்தர வழி பயங்கரமான பெரிய வழியாக இருந்தாலும், கர்த்தர் தம்முடைய ஜனத்தை அந்த வழியாகவும் பாதுகாப்பாக வழிநடத்தி வந்திருக்கிறார். அவர்கள் வனாந்தர வழியிலே பல ஆபத்துக்களை சந்தித்தார்கள். அவர்களுக்கு பல பிரச்சனைகள் உண்டாயிற்று. இவையெல்லாவற்றிலும் கர்த்தர் அவர்களோடு கூடயிருந்து, அந்த பயங்கரமான வனாந்தரத்தை கடக்கப்பண்ணியிருக்கிறார்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும் நாம் பல ஆபத்துக்களையும், சோதனைகளையும், வேதனைகளையும் கடந்து வந்திருக்கிறோம். கர்த்தர் தம்முடைய கிருபையினாலே, நம்மை எல்லா ஆபத்துக்களுக்கும் விலக்கி இரட்சித்திருக்கிறார். கர்த்தருடைய அற்புதமான விடுதலைகளுக்காக நாம் அவரை நன்றியோடு துதிக்கவேண்டும். கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளை நன்றியுள்ள இருதயத்தோடு நினைவுகூரவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தை சுதந்தரமாக வாக்குப்பண்ணியிருக்கிறார். அவர்கள் கானான் தேசத்திற்கு மிக அருகாமையிலிருக்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரமாக அவர்கள் கானான் தேசத்தை சுதந்தரித்துக்கொள்ள வேண்டும். மோசே இஸ்ரவேல் புத்திரரை உற்சாகப்படுத்தும் நல்ல வார்த்தைகளை சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்குக் கொடுக்கும் எமோரியரின் மலைநாடுமட்டும் வந்து சேர்ந்தீர்கள். இதோ, உன் தேவனாகிய கர்த்தர் அந்த தேசத்தை உனக்கு முன்பாக வைத்திருக்கிறார்; உன் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடியே, நீ போய் அதைத் சுதந்தரித்துக்கொள்; பயப்படாமலும் கலங்காமலும் இரு" (உபா 1:20,21) என்று சொல்லுகிறார்.

"எமோரியரின் மலைநாடுமட்டும் வந்து சேர்ந்தீர்கள்" என்னும் வாக்கியம், இஸ்ரவேல் புத்திரர் முதன் முறையாகக் காதேசிற்கு வந்த சம்பவத்தைக் குறிக்கிறது (உபா 1:19-22=எண் 13-14).

ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லை. அவர்கள் கானான் தேசத்தைச் சுதந்தரிப்பதற்கு முன்னேறிப் போகவில்லை. அவர்கள் கானான் தேசத்திற்கு அருகாமையிலிருந்தாலும், தங்கள் சொந்தக் கதவுகளில் தாழ்ப்பாள்களைப்போட்டு, தங்கள் கதவுகளை அடைத்துக்கொள்கிறார்கள். அவர்கள் கதவைத் திறந்து கானான் தேசத்தை நோக்கி புறப்பட்டுப்போகாமல், தாங்கள் அடைத்துக்கொண்ட தங்கள் கதவுகளுக்குள்ளே இருந்துவிடுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரமாக, கானான் தேசத்தைச் சுதந்தரிக்கப்போகாமல், அந்த தேசத்தை சோதித்துப் பார்க்க வேவுகாரரை அனுப்புகிறார்கள்.

எண்ணாகமம் புஸ்தகத்தில், கர்த்தரே இஸ்ரவேல் புத்திரரை கானான் தேசத்திற்குள் வேவுகாரராக அனுப்பினார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கும் கானான் தேசத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு நீ மனிதரை அனுப்பு; ஒவ்வொரு பிதாக்களின் கோத்திரத்திலும் ஒவ்வொரு பிரபுவாகிய புருஷனை அனுப்பவேண்டும்" (எண் 13:1,2) என்றார்.

கர்த்தர் கானான் தேசத்தைச் சுற்றிப்பார்ப்பதற்கு வேவுகாரரை அனுப்புவதற்கு முன்பாகவே, இஸ்ரவேல் சபையார் அந்த தேசத்தை சோதித்துப் பார்ப்பதற்கு வேவுகாரரை அனுப்ப வேண்டு மென்று ஆலோசனை பண்ணினார்கள். அவர்களுடைய ஆலோசனை தப்பிதமானதாகயிருந்தாலும், கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை அவர்களுடைய ஆலோசனைக்கு ஒப்புக்கொடுத்துவிடுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தை சோதித்துப் பார்க்க, "நமக்கு முன்னாக மனிதரை அனுப்புவோம்" (உபா 1:22) என்று சொன்னார்கள். மோசே இஸ்ரவேல் புத்திரரிடத்தில் கர்த்தருடைய வார்த்தையைச் சொன்னார். "உன் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடியே, நீ போய் அதைத் சுதந்தரித்துக்கொள்; பயப்படாமலும் கலங்காமலும் இரு" (உபா 1:21) என்று மோசே சொன்னார்.

வேவுகாரர்களை அனுப்புவதற்குப் பதிலாக கானானை உடனடியாகச் சுதந்தரிக்க வேண்டுமென்பது மோசேயின் விருப்பம் (உபா 1:20-21; உபா 9:23). ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ வேவுகாரரை அனுப்ப வேண்டுமென்று ஆலோசனை கூறுகிறார்கள். இதைப் பற்றி மோசே கர்த்தரிடத்தில் கேட்டதற்கு, அவரும் வேவுகாரரை அனுப்ப சம்மதிக்கிறார் (எண் 13:1-25).

ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ மோசேயின் வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லை. அவர்களுடைய இருதயம் கடின இருதயமா யிருக்கிறது. அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை விசுவாசியாமல், தங்களுடைய சுயபலத்தையும், சுயஞானத்தையும், சுயபுத்தியையும் நம்புகிறார்கள்.

தேவனுடைய தெய்வீக ஞானமே தங்களுக்கு தேவையானது என்பதை இஸ்ரவேல் புத்திரர் அறிந்துகொள்ளவில்லை. தங்களுடைய சுயபுத்தியினால் யோசித்து ஒவ்வொரு காரியத்தையும் செய்யவேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரர் நினைக்கிறார்கள்.

"நீங்கள் போய் கானான் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்" என்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் சொல்லுகிறார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, கானான் தேசத்தைச் சோதித்துப் பார்ப்பதற்கு, "நமக்கு முன்னாக மனிதரை அனுப்புவோம்" என்று சொல்லுகிறார்கள். தங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர் என்பதையும், எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தங்களை விடுவித்து, இம்மட்டுமாக தங்களை பயங்கரமான பெரிய வனாந்தர வழியாய் வழிநடத்தி வந்த கர்த்தர், கானான் தேசம் வரையிலும் தங்களை வழிநடத்துவதற்கு உண்மையுள்ளவர் என்பதையும் இஸ்ரவேல் சபையார் புரிந்துகொள்ளவில்லை. அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை பரிபூரணமாக நம்பவில்லை.

இந்தப் பூமியின் மீது சூரியனின் வெளிச்சம் தாராளமாய்ப்படும்போது, எங்கும் வெளிச்சம் பிரகாசமாகயிருக்கும். சூரியவெளிச்சம் இருக்கும்போது விளக்கு வெளிச்சம் தேவையில்லை. ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, சூரிய வெளிச்சம் இருந்தாலும், தங்களுக்கு விளக்கின் வெளிச்சம் வேண்டும் என்று நினைத்து, தங்கள் சுயபுத்தியினாலும், சுயமுயற்சியினாலும், சூரிய வெளிச்சத்திற்கு முன்பாக தங்கள் விளக்கை ஏற்றுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தைச் சோதித்துப் பார்க்க, "நமக்கு முன்பாக மனிதரை அனுப்புவோம்" என்று சொன்னபோது, மோசே அவர்களுடைய வார்த்தைக்கு மறுப்பு சொல்லவில்லை. அவர்களுடைய தீர்மானம் மோசேக்கு நன்றாய் காணப்படுகிறது. மோசே இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரத்திற்கு ஒருவனாக, பன்னிரண்டு மனிதரை தெரிந்தெடுத்து, கானான் தேசத்தை வேவுபார்ப்பதற்காக அனுப்புகிறார் (உபா 1:23).

இஸ்ரவேலின் பன்னிரண்டு வேவுகாரரும் புறப்பட்டு, மலைகளில் ஏறி, எஸ்கோல் பள்ளத்தாக்குமட்டும் போய், அதை வேவுபார்க்கிறார்கள். அவர்கள் கானான் தேசத்து கனிகளில் சிலவற்றைத் தங்கள் கையில் எடுத்துக்கொண்டு இஸ்ரவேல் சபையாரிடத்தில் திரும்பி வருகிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்குக் கொடுக்கும் தேசம் நல்ல தேசம்" (உபா 1:24,25) என்று சொல்லுகிறார்கள்.

வேவுகாரர்கள் கானான் தேசத்தைப்பற்றி நல்ல செய்தியை சொன்னாலும், அவர்கள் ஜனங்கள் மத்தியிலே துர்ச்செய்தியையும் சொல்லி அவர்களை கலங்கப்பண்ணுகிறார்கள். வேவுகாரரில் பத்துபேர், இஸ்ரவேல் சபையாரை நோக்கி, "நாம் எங்கே போகலாம்; அந்த ஜனங்கள் நம்மைப்பார்க்கிலும் பலவான்களும், நெடியவர்களும், அவர்கள் பட்டணங்கள் பெரியவைகளும், வானத்தையளாவும் மதிலுள்ளவைகளுமாய் இருக்கிறதென்றும், ஏனாக்கியரின் புத்திரரையும் அங்கே கண்டோம்" (உபா 1:28) என்று சொல்லி ஜனங்களுடைய இருதயத்தைக் கலங்கப்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கானானியரின் வெளித்தோற்றத்தைப் பார்க்கிறார்கள். மனுஷன் வெளித்தோற்றத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் (1சாமு 16:7; 2கொரி 10:7).

ஏனாக்கியரின் புத்திரர் என்பவர்கள் வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் வலிமையான ராட்சத சந்ததியார். (உபா 1:28; உபா 2:10,11,21; உபா 9:2; யோசு 11:21,22; யோசு 14:12,15).

ஒருசில வார்த்தைகளால் சகோதரருடைய இருதயங்களைக் கலங்கப்பண்ண முடிகிறது. கர்த்தர் அவர்களோடு கூடவே இருப்பதினால், அவர்களுக்கு ஒரு ஆபத்தும் இல்லை. அவர்கள் கலங்க வேண்டிய அவசியமுமில்லை. நாற்பது வருஷங்களுக்குப் பின்பு இஸ்ரவேல் புத்திரர் தைரியமாக, கலங்காமல், கானான் தேசத்திற்குள் பிரவேசித்து, அந்தத் தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்கிறார்கள். (எண் 21:1-35; எண் 31:49).

வேவுகாரரின் அவிசுவாசமான வார்த்தைகளைக் கேட்டு மோசே கலங்கவில்லை. ஜனங்களுடைய இருதயங்கள் கலங்கியிருக்கும்போது, மோசே அவர்களை நோக்கி, "நீங்கள் கலங்காமலும் அவர்களுக்குப் பயப்படாமலும் இருங்கள்" (உபா 1:29) என்று சொல்லுகிறார்.

பத்து வேவுகாரர்கள் துர்ச்செய்தியைப் பரப்பினபோது, இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய இருதயங்களில் கலங்கினார்கள். எகிப்திலிருந்து தேவன் பலத்த கிரியைகளைச் செய்து, இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்தி வந்திருக்கும் சம்பவங்களையெல்லாம் மோசே அவர்களுக்கு விவரித்துக் கூறி, அவர்களைக் கலங்காமலும், சத்துருக்களுக்குப் பயப்படாமலும் இருக்கும்படியாகத் தைரியப்படுத்துகிறார். (உபா 1:29-31).

கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் இஸ்ரவேல் புத்திரரோடு கூடயிருக்கும் என்று மோசே வாக்குப்பண்ணுகிறார். அவர்களை உற்சாகப்படுத்தும் விசுவாசமான வார்த்தைகளை மோசே அவர்களுக்கு சொல்லுகிறார். இஸ்ரவேல் சபையாருடைய விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணுவதற்காக, கர்த்தர் எகிப்து தேசத்திலே அவர்களோடு கூடயிருந்து, அவர்களுடைய கண்களுக்கு முன்பாக செய்த அற்புதங்களையெல்லாம் எடுத்து சொல்லுகிறார். கர்த்தர் வனாந்தரத்திலே இஸ்ரவேல் புத்திரருக்கு இதுவரையிலும் செய்த வந்த நன்மையான காரியங்களையெல்லாம் மோசே அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறார்.

மோசே இஸ்ரவேல் சபையாரை நோக்கி, "உங்களுக்கு முன் செல்லும் உங்கள் தேவனாகிய கர்த்தர் தாமே எகிப்தில் உங்களோடிருந்து, உங்கள் கண்களுக்கு முன்பாகச் செய்ததெல்லாவற்றைப்போலவும், வனாந்தரத்தில் செய்துவந்ததுபோலவும், உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்" (உபா 1:30) என்றும்,

"ஒரு மனிதன் தன் பிள்ளையைச் சுமந்துகொண்டு போவதுபோல, நீங்கள் இவ்விடத்திற்கு வருகிறவரைக்கும், நடந்துவந்த வழிகள் எல்லாவற்றிலும், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சுமந்துகொண்டு வந்ததைக் கண்டீர்களே" (உபா 1:31) என்றும்,

"உங்கள் தேவனாகிய கர்த்தர் நீங்கள் பாளயமிறங்கத்தக்க இடத்தைப் பார்க்கவும், நீங்கள் போகவேண்டிய வழியை உங்களுக்குக் காட்டவும், இரவில் அக்கினியிலும் பகலில் மேகத்திலும் உங்களுக்குமுன் சென்றாரே" (உபா 1:32,33) என்றும் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் எங்கு பாளயமிறங்க வேண்டுமென்பது கர்த்தருக்குத் தெரியும். ஆகையினால் வனாந்தரத்தில் அவர்களை வழிநடத்துவதற்கு எத்திரோவின் மகனான ஒபாபைப்போன்றவர்கள் தேவைப்படமாட்டார்கள். (எண் 10:29-31).

அற்புதங்கள் ஒருவருடைய அவிசுவாசத்தை அன்றும் குணப்படுத்தவில்லை, இன்றும் குணப்படுத்தவில்லை. எகிப்திலிருந்து புறப்பட்ட நாளிலிருந்து இஸ்ரவேல் புத்திரர்கள் அனுதினமும் கர்த்தருடைய அற்புதங்களைக் கண்டார்கள். ஆனாலும் அவரை விசுவாசியாமற்போனார்கள்.

அதுபோலவே, இயேசு கிறிஸ்துவின் சீஷர்களும் கிறிஸ்துவின் அற்புதங்களை ஏராளமாகக் கண்டிருக்கிறார்கள். ஆயினும் இயேசுவின் சீஷரிடத்திலும் அவிசுவாசம் காணப்படுகிறது. (மாற்கு 16:14; லூக்கா 24:25).

கர்த்தருடைய வார்த்தைகளுக்கு நாம் செவிகொடுக்க வேண்டும். அப்படி செவிகொடுக்காதவர்கள் மரித்தோரிலிருந்து ஒருவன் எழும்பிப்போனாலும், கர்த்தரை விசுவாசிக்கமாட்டார்கள். (லூக்கா 16:30-31) இஸ்ரவேல் புத்திரர் அன்றாடம் மன்னாவைப் புசித்தார்கள். (யாத் 16) பகலில் மேகஸ்தம்பமும், இரவில் அக்கினி ஸ்தம்பமும் அவர்களை வழிநடத்திற்று. (உபா 1:33) ஆயினும், அவர்களால் இன்னும் கர்த்தரைப் பூரணமாக நம்ப முடியவில்லை.

இப்படியிருந்தும், இந்தக் காரியத்தில் இஸ்ரவேல் புத்திரர் மோசேயை விசுவாசியாமற்போகிறார்கள். மோசே இஸ்ரவேல் புத்திரரை பார்த்து, "நீ போய் கானான் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்" என்று சொன்னபோது, அவர்கள் "போகமாட்டோம்" (உபா 1:26) என்று சொல்லி, தங்கள் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைக்கு விரோதமாக எதிர்த்து நிற்பது, இஸ்ரவேலருடைய வரலாற்றில் இது அவர்கள் செய்த மிகப்பெரிய தவறாகும். உபா 1:20-21 ஆகிய வசனங்களில் மோசே கூறியதற்குக் கீழ்ப்படிந்திருந்தால், அவர்கள் வேவுகாரர்களை அனுப்பியிருக்கமாட்டார்கள். நாற்பது வருஷங்களுக்கு வனாந்தரத்தில் அலைந்து திரிய வேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்காது.

இஸ்ரவேல் புத்திரர் வேவுகாரரை அனுப்பாமல், கானான் தேசத்தைச் சுதந்தரிந்திருந்தால், அவர்களுக்கு கிடைத்திருக்கும் ஆசீர்வாதங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. நாற்பது வருஷத்திற்கு முன்பாகவே கானானைச் சுதந்தரித்திருப்பார்கள்.

2. பழைய சந்ததியார் கானான் தேசத்திற்குள் பிரவேசித்திருப்பார்கள், மரித்துப் போயிருக்க மாட்டார்கள். (எண் 14)

3. நாற்பது வருஷங்களாக உண்டான கஷ்டங்கள், வாதைகள், சாபங்கள் (எண் 14-25) ஆகியவை அவர்களுக்கு வந்திருக்காது.

4. தேவன் மகிமையடைந்திருப்பார் (எண் 13-14)

5. சத்துருக்கள் தேவனுடைய ஜனங்களை ஜெயித்திருக்கமாட்டார்கள். (எண் 14:40-45)

6. கலகம் தவிர்க்கப்பட்டிருக்கும். (எண் 16-17)

7. நாற்பது வருஷங்களுக்கு முன்பாகவே நல்ல போஜனமும், வஸ்திரமும், வாழும் சூழ்நிலைகளும் உண்டாயிருக்கும். (எண் 11; எண் 20)

இஸ்ரவேல் சபையார் தங்கள் கூடாரங்களில் முறுமுறுத்து, "கர்த்தர் நம்மை வெறுத்து, நம்மை அழிக்கும்பொருட்டாக நம்மை எமோரியரின் கையில் ஒப்புக்கொடுக்கும்படி நம்மை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினார்" (உபா 1:27) என்று சொல்லுகிறார்கள்.

மோசே இஸ்ரவேல் சபையாரிடத்தில், அவர்களுடைய பாவங்களை ஞாபகப்படுத்துகிறார். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் போனதும், கர்த்தருடைய கட்டளைக்கு விரோதமாக எதிர்த்து நின்று கலகம்பண்ணியதும் இஸ்ரவேல் புத்திரருடைய பிரதான பாவமாயிருக்கிறது.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு இதுவரையிலும் நன்மையான ஈவுகளை கொடுத்திருந்தும், இஸ்ரவேல் சபையார் கர்த்தருடைய நன்மையை மறந்துவிடுகிறார்கள். கர்த்தர் தங்களை பாதுகாப்பாக இதுவரையிலும் வழிநடத்தி வந்ததை மறந்துவிடுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் இருதயத்தில் கர்த்தரை விசுவாசிக்கவில்லை. "நீங்கள் அவரை விசுவாசியாமற்போனீர்கள்" (உபா 1:33) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக குற்றம் சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார், தேவனாகிய கர்த்தரை, தங்களுடைய தேவன் என்று விசுவாசிக்கவில்லை. இதுவே அவர்களுடைய எல்லா பாவங்களுக்கும் அடிப்படை காரணமாயிருக்கிறது.

கர்த்தருடைய கோபம் உபா 1:34-46

உபா 1:34. ஆகையால் கர்த்தர் உங்கள் வார்த்தைகளின் சத்தத்தைக் கேட்டு, கடுங்கோபங்கொண்டு:

உபா 1:35. உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று நான் ஆணையிட்ட அந்த நல்ல தேசத்தை இந்தப் பொல்லாத சந்ததியாராகிய மனிதரில் ஒருவரும் காண்பதில்லை என்றும்,

உபா 1:36. எப்புன்னேயின் குமாரனாகிய காலேப்மாத்திரம் அதைக் காண்பான்; அவன் கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றினபடியினால், நான் அவன் மிதித்து வந்த தேசத்தை அவனுக்கும் அவன் பிள்ளைகளுக்கும் கொடுப்பேன் என்றும் ஆணையிட்டார்.

உபா 1:37. அன்றியும் உங்கள் நிமித்தம் கர்த்தர் என்மேலும் கோபங்கொண்டு: நீயும் அதில் பிரவேசிப்பதில்லை;

உபா 1:38. உனக்கு முன்பாக நிற்கிற நூனின் குமாரனாகிய யோசுவா அதில் பிரவேசிப்பான்; அவனைத் திடப்படுத்து; அவனே அதை இஸ்ரவேலுக்குச் சுதந்தரமாகப் பங்கிடுவான்.

உபா 1:39. கொள்ளையாவார்கள் என்று நீங்கள் சொன்ன உங்கள் குழந்தைகளும், இந்நாளிலே நன்மை தீமை அறியாத உங்கள் பிள்ளைகளும் அதில் பிரவேசிப்பார்கள்; அவர்களுக்கு அதைக் கொடுப்பேன்; அவர்கள் அதைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்.

உபா 1:40. நீங்களோ திரும்பிக்கொண்டு, சிவந்த சமுத்திரத்தின் வழியாய் வனாந்தரத்திற்குப் பிரயாணப்பட்டுப் போங்கள் என்றார்.

உபா 1:41. அப்பொழுது நீங்கள் எனக்குப் பிரதியுத்தரமாக: கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தோம்; நம்முடைய தேவனாகிய கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் நாங்கள் போய் யுத்தம்பண்ணுவோம் என்று சொல்லி, நீங்கள் யாவரும் உங்கள் ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு, மலையின்மேல் ஏற ஆயத்தமாயிருந்தீர்கள்.

உபா 1:42. அப்பொழுது கர்த்தர் என்னைப் பார்த்து: நீங்கள் உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறிந்துபோகாதபடிக்கு, போகாமலும் யுத்தம்பண்ணாமலும் இருப்பீர்களாக; நான் உங்கள் நடுவே இரேன் என்று அவர்களுக்குச் சொல் என்றார்.

உபா 1:43. அப்படியே நான் உங்களுக்குச் சொன்னேன்; நீங்களோ செவிகொடாமல், கர்த்தருடைய கட்டளைக்கு விரோதமாகத் துணிந்து மலையின்மேல் ஏறினீர்கள்.

உபா 1:44. அந்த மலையிலே குடியிருந்த எமோரியர் உங்களை எதிர்க்கும்படி புறப்பட்டு வந்து, தேனீக்கள் துரத்துகிறதுபோல உங்களைத் துரத்தி, உங்களைச் சேயீர் தொடங்கி ஓர்மாமட்டும் முறிய அடித்தார்கள்.

உபா 1:45. நீங்கள் திரும்பிவந்து, கர்த்தருடைய சமுகத்தில் அழுதீர்கள்; கர்த்தர் உங்கள் சத்தத்தைக் கேட்கவில்லை, உங்களுக்குச் செவிகொடுக்கவும் இல்லை.

உபா 1:46. இப்படி காதேசிலே தங்கி, அங்கே வெகுநாளாயிருந்தீர்கள்.

இஸ்ரவேல் சபையார் தங்கள் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைக்கு விரோதமாக எதிர்த்து பேசுகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய அவிசுவாசமான வார்த்தைகளின் சத்தத்தைக் கேட்டு, அவர்கள்மீது கோபங்கொள்கிறார் *(உபா 1:34).*

இஸ்ரவேல் தேசத்தாருடைய அவிசுவாசத்தின் நிமித்தமாகவும், கலகக் குணத்தின் நிமித்தமாகவும் கர்த்தர் அவர்கள்மீது பலதடவை கடுங்கோபங் கொண்டார். மோசேயைவிட இரண்டு மடங்கு அதிகமான தடவைகள் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது கடுங்கோபங் கொண்டிருக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று நான் ஆணையிட்ட அந்த நல்ல தேசத்தை இந்தப் பொல்லாத சந்ததியாராகிய மனிதரில் ஒருவரும் காண்பதில்லை என்றும், எப்புன்னேயின் குமாரனாகிய காலேப்மாத்திரம் அதைக் காண்பான்; அவன் கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றினபடியினால், நான் அவன் மிதித்து வந்த தேசத்தை அவனுக்கும் அவன் பிள்ளைகளுக்கும் கொடுப்பேன்" *(உபா 1:35,36)* என்று ஆணையிடுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் நிமித்தம் மோசேயின்மீதும் கோபங்கொள்கிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "நீயும் அதில் பிரவேசிப்பதில்லை; உனக்கு முன்பாக நிற்கிற நூனின் குமாரனாகிய யோசுவா அதில் பிரவேசிப்பான்; அவனைத் திடப்படுத்து; அவனே அதை இஸ்ரவேலுக்குச் சுதந்தரமாகப் பங்கிடுவான்" *(உபா 1:37,38)* என்று சொல்லுகிறார்.

கன்மலையைப் பார்த்து பேசுவதற்குப் பதிலாக மோசே கன்மலையை இரண்டுதரம் அடித்து விட்டார். தேவனுடைய கட்டளைக்கு மோசே கீழ்ப்படியவில்லை *(எண் 20:8-13).* கன்மலை கிறிஸ்துவிற்கு அடையாளம். கிறிஸ்து ஏற்கெனவே சிலுவையில் அறையப்பட்டுவிட்டார். மோசே கன்மலையை இரண்டுதரம் அடித்தது கிறிஸ்துவை மறுபடியும் சிலுவையில் அறைவதற்கு அடையாளம். ஆகையினால் கர்த்தர் மோசேயின்மீது கோபங்கொண்டார்.

யாசுவாவை திடப்படுத்துமாறு கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். யோசுவா போன்ற தலைவர்களையும் மோசே திடப்படுத்த வேண்டியதாயிருக்கிறது. தலைவர்களுக்கு எவ்வளவுதான் அதிகாரமும், பொறுப்பும் இருந்தாலும், அவர்களும் தோல்வியடைவதற்கும், வழிவிலகிச் சென்றுவிடுவதற்கும் வாய்ப்புள்ளது. ஆகையினால், இங்கு மோசே யோசுவாவைத் திடப்படுத்துகிறார்.

கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ணின இஸ்ரவேல் புத்திரர் பொல்லாத சந்ததியாராயிருக்கிறார்கள். அவர்கள் கானான் தேசத்தை காணமாட்டார்கள். ஆனாலும் காலேபும் யோசுவாவும் அந்த தேசத்தைக் காண்பார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே பொன்கன்றுக்குட்டியை வார்ப்பித்து அதை ஆராதித்தார்கள். அப்போதெல்லாம் கர்த்தர் அவர்கள்மீது இந்த அளவுக்கு கோபப்படவில்லை. ஆனாலும் கர்த்தர் இப்போது, இஸ்ரவேல் புத்திரருடைய அவிசுவாசத்தைப் பார்த்து, அவர்கள்மேல் கடுங்கோபங்கொள்கிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திலே நம்முடைய ஆத்துமாவுக்கு இரட்சிப்பு வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. நாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுகிறோம். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை நாம் விசுவாசிக்கவில்லையென்றால், நாம் இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்பு இல்லை. நம்முடைய ஆத்துமாவை அழித்துப்போடும் பாவங்களில், அவிசுவாசமே மிகப்பெரிய பாவமாயிருக்கிறது.

கர்த்தர் நமக்கு வாக்குப்பண்ணியிருக்கும் ஒவ்வொரு வாக்குத்தத்தத்தையும், விசுவாசத்தினாலேயே நாம் பெற்றுக்கொள்கிறோம். நம்மிடத்தில் விசுவாசம் இல்லையென்றால், நம்மால் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தில் எதையும் பெற்றுக்கொள்ள முடியாது. விசுவாசமில்லாதவர்கள் கர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்கு அந்நியர்களாயிருப்பார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தை வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆனால் அவர்களோ தங்கள் அவிசுவாசத்தினால், கானான் தேசத்திற்குள் பிரவேசியாமல் போனார்கள். அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கவேண்டுமென்று கர்த்தருடைய வார்த்தை சொன்னாலும், அவர்கள் அந்த தேசத்திற்குள் போகமாட்டோம் என்று தங்கள் அவிசுவாசத்தினால் சொல்லிவிடுகிறார்கள். கர்த்தர் தங்களுக்கு வாக்குப்பண்ணியிருக்கும் ஆசீர்வாதங்களை சுதந்தரிப்பதற்காக புறப்பட்டுப்போகாமல், தங்களுடைய அவிசுவாசத்தினால், தங்களுடைய கதவுகளை தாங்களே இறுக அடைத்துக்கொள்கிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் சபையாருடைய அவிசுவாசத்தினிமித்தமாக அவர்கள்மீது கோபங்கொள்கிறார். கர்த்தர் அவர்கள் நிமித்தம் மோசேயின்மேலும் கோபங்கொள்கிறார். "நீயும் அதில் பிரவேசிப்பதில்லை" என்று கர்த்தர் தன்னைப்பற்றியும் சொல்லிவிடுகிறார் என்று மோசே வேதனையோடு சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது கோபமான வார்த்தைகளைச் சொன்னாலும், அவருடைய கோபத்தின் நடுவில், அவருடைய கிருபையும் இரக்கமும் வெளிப்படுகிறது. மோசே இஸ்ரவேல் சபையாரை கானான் தேசத்திற்குள் வழிநடத்தி செல்லவில்லையென்றாலும், மோசேக்கு பதிலாக யோசுவா இஸ்ரவேல் புத்திரரை கானான் தேசத்திற்குள் வழிநடத்திச் செல்லுவார். அவர் கானான் தேசத்தில் இஸ்ரவேல் புத்திரருக்கு சுதந்தரமாகப் பங்கிட்டு கொடுப்பார்.

கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிற இந்த சந்ததியார் பொல்லாத சந்ததியாராயிருக்கிறார்கள். இவர்களில் ஒருவரும் கர்த்தர் அவர்களுக்கு ஆணையிட்ட அந்த நல்ல தேசத்தை காணமாட்டார்கள். ஆனாலும் அவர்களுடைய வருங்கால சந்ததியார் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் சபையாரை நோக்கி, "கொள்ளையாவார்கள் என்று நீங்கள் சொன்ன உங்கள் குழந்தைகளும், இந்நாளிலே நன்மை தீமை அறியாத உங்கள் பிள்ளைகளும் அதில் பிரவேசிப்பார்கள்; அவர்களுக்கு அதைக் கொடுப்பேன்; அவர்கள் அதைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்" (உபா 1:39) என்று சொல்லுகிறார்.

சில காரியங்களைக் குறித்து நாம் பயப்படுகிறோம். நமக்கு ஒரு படிப்பினையைக் கற்றுத் தருவதற்காகவும், தமது வல்லமையை வெளிப்படுத்திக் காண்பதற்காகவும், கர்த்தர் நாம் பயப்படும் காரியமே நமக்கு வந்துவிடுவதற்கு அனுமதிக்கிறார்.

இஸ்ரவேல் சபையார் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு கர்த்தர் அனுமதி கொடுக்கவில்லை. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீங்கள் புறப்பட்டுப்போய் கானான் தேசத்தை சுதந்தரித்துக்கொள்ளுங்கள்" என்று சொன்னபோது, அவர்கள் "நாங்கள் போகமாட்டோம்" என்று கர்த்தருடைய வார்த்தைக்கு விரோதமாக எதிர்த்துப் பேசினார்கள். கர்த்தரோ அவர்களுடைய விருப்பத்திற்கு அவர்களை ஒப்புக்கொடுத்துவிடுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் சபையாரை நோக்கி, "நீங்களோ திரும்பிக்கொண்டு, சிவந்த சமுத்திரத்தின் வழியாய் வனாந்தரத்திற்குப் பிரயாணப்பட்டுப் போங்கள்" (உபா 1:40) என்று சொல்லிவிடுகிறார்.

கர்த்தருடைய கோபமான வார்த்தைகளைக் கேட்டு இஸ்ரவேல் புத்திரர் கலக்கமடைகிறார்கள். கர்த்தர் அவர்கள்மேல் கடுங்கோபங்கொண்டு, "உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று நான் ஆணையிட்ட அந்த நல்ல தேசத்தை இந்தப் பொல்லாத சந்ததியாராகிய மனிதரில் ஒருவரும் காண்பதில்லை" (உபா 1:35) என்று சொல்லிவிடுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு கர்த்தர் அனுமதி மறுத்துவிடுகிறார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, கர்த்தர் தங்களை அனுமதிக்காவிட்டாலும், தாங்கள் தங்கள் சுயமுயற்சியினாலும், சுயபலத்தினாலும், சுயபிரயாசத்தினாலும், கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீங்களோ திரும்பிக்கொண்டு, சிவந்த சமுத்திரத்தின் வழியாய் வனாந்தரத்திற்குப் பிரயாணப்பட்டுப்போங்கள்" (உபா 1:40) என்று சொல்லுகிறார். ஆனால் அவர்களோ வனாந்தரத்திற்கு பிரயாணப்பட்டுப்போகாமல், கானான் தேசத்திற்குள் பிரயாணப்பட்டுப்போக முயற்சி பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் அவருடைய கட்டளைக்கு விரோதமாக எதிர்த்து நின்றார்கள். இப்போது அவர்கள் தங்கள் தப்பிதத்தை உணருகிறார்கள். "கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தோம்" (உபா 1:41) என்று இஸ்ரவேல் சபையார் தங்கள் பாவத்தை அறிக்கை செய்கிறார்கள்.

கர்த்தர் பழைய சந்ததியாரைச் சபித்து விடுகிறார். அவர்கள் கானான் தேசத்தைச் சுதந்தரிக்காமல் மரித்துப் போவார்கள். இது கர்த்தருடைய சாபம். இஸ்ரவேல் புத்திரர்கள் மனந்திரும்புவதுபோல நடித்து, யுத்தம் பண்ண புறப்படுகிறார்கள். யுத்தம் பண்ண கர்த்தர் அனுமதிக்கவில்லை. ஆகையினால், அவர்கள் அந்த யுத்தத்தில் தோல்வியுறுகிறார்கள். (எண் 14:23-45).

கர்த்தர் எல்லாவற்றிற்கும் ஒரு காலத்தை நியமித்திருக்கிறார். பாவிகள் மனந்திரும்புவதற்கும் கர்த்தர் ஒரு காலத்தை நியமித்திருக்கிறார். பாவிகள் தங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற கிருபையின் காலத்தில், தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, ஆத்தும இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளவேண்டும். கிருபையின் காலம் முடிந்துபோன பின்பு, மனந்திரும்புவதற்கோ, இரட்சிக்கப்படுவதற்கோ வாய்ப்பு இருக்காது.

கர்த்தர் தங்கள்மேல் கோபமாயிருப்பதைப்பார்த்து, இஸ்ரவேல் சபையார் தங்கள் பாவங்களுக்கு மனம் வருந்துகிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு பிரதியுத்தரமாக, "கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தோம்; நம்முடைய தேவனாகிய கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் நாங்கள் போய் யுத்தம்பண்ணுவோம்" (உபா 1:41) என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் யாவரும் தங்கள் ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு, மலையின்மேல் ஏற ஆயத்தமாயிருக்கிறார்கள். ஆனால் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு அனுமதி கொடுக்கவில்லை. கர்த்தர் அவர்களை சிவந்த சமுத்திரத்தின் வழியாய் வனாந்தரத்திற்கு பிரயாணப்பட்டுப்போகுமாறு கட்டளை கொடுக்கிறார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ இப்போதும் கர்த்தருடைய கட்டளைக்கு விரோதமாக எதிர்த்து நின்று, தங்கள் ஆயுதங்களை தரித்துக்கொண்டு, கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க ஆயத்தமாயிருக்கிறார்கள்.

கர்த்தர் அவர்களை கானான் தேசத்தைச் சுதந்தரிக்கச் சொன்னபோது, அவர்கள் கானானியரை பார்த்து பயந்தார்கள். "கானான் தேசத்து ஜனங்கள் நம்மைப்பார்க்கிலும் பலவான்களும், நெடியவர்களும், அவர்கள் பட்டணங்கள் பெரியவைகளும், வானத்தையளாவும் மதிலுள்ளவைகளுமாய் இருக்கிறதென்றும், ஏனாக்கியரின் புத்திரரையும் அங்கே கண்டோம்" (உபா 1:28) என்று சொல்லி, இஸ்ரவேல் சபையாருடைய இருதயத்தைக் கலங்கப்பண்ணினார்கள். இப்போதோ அவர்கள், "நம்முடைய தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு கட்டளையிட்டபடியெல்லாம் நாங்கள் போய் கானானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவோம்" என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருடைய வார்த்தையைக் கேட்கும்போது, அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பியதுபோலவும், அவர்களுடைய இருதயங்கள் புதுப்பிக்கப்பட்டதுபோலவும் தெரிகிறது. ஆனால் அவர்கள் மெய்யாகவே தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. அவர்களுடைய இருதயங்கள் புதுப்பிக்கப்படவில்லை. அவர்கள் தங்கள் இருதயத்தை இன்னும் அதிகமாக கடினப்படுத்தி, கர்த்தருடைய கட்டளைக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதை இப்போது கர்த்தர் அனுமதிக்கவில்லை. கர்த்தர் அவர்களை மோசேயின் மூலமாக தடுத்து நிறுத்த முயற்சி பண்ணுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "நீங்கள் உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறிந்துபோகாதபடிக்கு, போகாமலும் யுத்தம்பண்ணாமலும் இருப்பீர்களாக; நான் உங்கள் நடுவே இரேன் என்று அவர்களுக்குச் சொல்" (உபா 1:42) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் தனக்கு சொன்னதை மோசே அப்படியே அவர்களுக்கு சொல்லுகிறார். ஆனால் அவர்களோ மோசேயின் வார்த்தைகளுக்கு செவிகொடாமல், கர்த்தருடைய கட்டளைக்கு விரோதமாகத் துணிந்து மலையின்மேல் ஏறுகிறார்கள் (உபா 1:43).

இது பழைய சந்ததியாரின் இருதயக் கடினத்தைக் காண்பிக்கிறது. கானான் தேசத்திற்குள் போகவேண்டுமென்று கர்த்தர் கூறியபோது, அவர்கள் போகமாட்டோம் என்று கலகம் பண்ணினார்கள் (எண் 13:26-14:35) அங்கு போகவேண்டாமென்று கர்த்தர் கூறுகிறபோது, அவர்கள் போவோம் என்று கலகம் பண்ணுகிறார்கள் (உபா 1:42-43). முன்னறிவித்த பிரகாரமாகவே கர்த்தருடைய உத்தரவை மீறி போனபோது, அவர்கள் தோல்வியடைகிறார்கள். (உபா 1:43-46).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவில்லை. ஆகையினால் கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம், அவர்களோடு கூடயில்லை. கர்த்தருடைய பாதுகாப்பும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. அவர்கள் தங்கள் சுயமுயற்சியினால், கர்த்தருடைய கட்டளைக்கு விரோதமாக துணிந்து மலையின்மேல் ஏறுகிறார்கள்.

அப்போது அந்த மலையிலே குடியிருந்த எமோரியர் அவர்களை எதிர்க்கும்படி புறப்பட்டு வந்து, தேனீக்கள் துரத்துகிறதுபோல அவர்களைத் துரத்தி, உங்களைச் சேயீர் தொடங்கி ஓர்மாமட்டும் முறிய அடிக்கிறார்கள் (உபா 1:44).

எமோரியர் என்பவர்கள் அமலேக்கியர் என்றும், எண் 14:40-45 ஆகிய வசனங்களில் கானானியர் என்றும் அழைக்கப்படுகிறார்கள். எமோரியர் அமலேக்கியரையும், கானானியரையும் முப்பத்தெட்டு வருஷக்கால வரலாற்றில், ஜெயித்திருக்கிறார்கள். ஆகையினால் அவர்களைப் பற்றிக் கூறும்போது, அவர்கள் எமோரியர் என்றே அழைக்கப் படுகிறார்கள். கானான் தேசத்தாருக்கு எமோரியர் என்னும் பொதுவான பெயர் வழங்கப்படுகிறது.

தேவனுடைய கட்டளைக்கு மீறி, இஸ்ரவேல் புத்திரர் எமோரியர்மீது யுத்தம் பண்ணப் புறப்படுகிறார்கள். (உபா 1:42) எமோரியர் எண்ணிக்கையில் அதிகமானவர்கள். அவர்கள் தேனீக்களைப்போல இருக்கிறார்கள். தேனீ உருவத்தில் சிறியதுதான். ஒரு சிறு குழந்தைகூட ஒரு தேனீயைக் கொன்றுவிடும். ஆனால் தேனீக்கள் கூட்டமாக வந்தால், அது எல்லோருக்கும் ஆபத்தானது. தேனீக்கூட்டம் பெரிய மிருகத்தைக்கூட கொன்று போடும். சில சமயங்களில் தேனீக்களின் தொல்லை தாங்கமுடியாமல், சிலர் வீட்டை விட்டும், ஊரைவிட்டும் காலிபண்ணியிருக்கிறார்கள்.

ஓர்மா என்பது சவக்கடலுக்கு தென்மேற்கிலுள்ள பட்டணம். (எண் 14:45; எண் 21:1-3). யூதாவும், சிமியோனும் இந்தப் பட்டணத்தைக் கைப்பற்றினார்கள். (நியா 1:17; யோசு 12:14) இந்தப் பட்டணம் இவர்களுக்கு பொதுவான சுதந்தரமாகக் கொடுக்கப்பட்டது. (யோசு 15:30; யோசு 19:4; 1சாமு 30:30; 1நாளா 4:30) இதன் மறுபெயர் சேப்பாத் (நியா 1:17).

கர்த்தர் தங்களுக்கு சொன்ன நியாயத்தீர்ப்பை, தங்களுடைய சுயமுயற்சியினாலும், சுயபலத்தினாலும் மாற்றிப்போடலாம் என்று இஸ்ரவேல் புத்திரர் நினைத்தார்கள். ஆனால் அவர்களுடைய முயற்சி வெற்றி பெறவில்லை. இப்போது கர்த்தருடைய சமுகத்திலே கண்ணீர்விட்டு அழுகிறார்கள். தங்களுடைய கண்ணீரும் அழுகையும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை மாற்றிப்போடும் என்று இஸ்ரவேல் சபையார் நினைக்கிறார்கள்.

எமோரியரால் துரத்தியடிக்கப்பட்ட இஸ்ரவேல் புத்திரர், திரும்பி வந்து, கர்த்தருடைய சமுகத்தில் அழுகிறார்கள். கர்த்தர் அவர்கள் சத்தத்தைக் கேட்கவில்லை, அவர்களுக்குச் செவிகொடுக்கவும் இல்லை (உபா 1:45). இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. ஆகையினால் கர்த்தரும் அவர்களுடைய வார்த்தைக்கு செவிகொடுக்க மறுத்துவிடுகிறார்.

மனந்திருந்தும்போது, ஜனங்கள் அழுவார்கள். ஆனால் இங்கு இஸ்ரவேல் புத்திரர்கள் யுத்தத்தில் தோல்வியடைந்ததினால், கர்த்தருடைய சமுகத்தில் அழுகிறார்கள். பழைய சந்ததியார் வனாந்தரத்தில் மரித்துப் போகவேண்டுமென்று, கர்த்தர் ஏற்கெனவே தீர்மானம்பண்ணி, அவர்களைச் சபித்துப் போட்டார். கர்த்தர் அவர்கள்மீது எவ்வளவோ பொறுமையாக இருந்தார். ஆயினும், அவர்களுடைய கலகக்குணத்தின் நிமித்தமாக பழைய சந்ததியார்மீது கர்த்தருடைய சாபம் வந்தது. அவர்கள் அழுவதினால் எந்தப் பயனும் இல்லை. (எண் 14:23-35).

நாம் கர்த்தரோடு கூடயிருக்கும்போது கர்த்தரும் நம்மோடு கூடயிருப்பார். நாம் கர்த்தரை விட்டு தூரமாய் விலகிப்போகும்போது, கர்த்தரும் நம்மைவிட்டு தூரமாய் விலகிப்போய்விடுவார்.

இஸ்ரவேல் புத்திரர் காதேசிலே தங்கி, அங்கே வெகுநாளாயிருக்கிறார்கள் (உபா 1:46). இஸ்ரவேல் புத்திரர்கள் காதேசைவிட்டு உடனடியாகப் புறப்பட்டுப்போகாமல், அங்கு வெகுநாட்களாகத் தங்கியிருக்கிறார்கள் (உபா 1:46).

2 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் சிவந்த சமுத்திரத்திற்கு போகிற வழியாய் வனாந்தரத்திற்கு திரும்பி பிரயாணம்பண்ணுகிறார்கள். வனாந்தர பாதை மிகவும் கடினமான பாதையாக இருந்தாலும், கர்த்தர் தம்முடைய கிருபையினால் அவர்களை பாதுகாத்துக்கொள்கிறார். சுமார் முப்பத்தெட்டு வருஷங்களாக இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணுகிறார்கள். ஆனாலும் இந்தப் பிரயாணத்தில் இஸ்ரவேல் புத்திரருக்கு ஏற்பட்ட அனுபவங்களைப்பற்றி, மோசே அதிகமாக ஒன்றும் எழுதவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் சேயீர் மலைநாட்டிலிருந்து வடக்கே திரும்பி மறுபடியுமாய் கானான் தேசத்தை நோக்கி பிரயாணம்பண்ணுகிறார்கள் (உபா 2:1-3). வழியிலே அவர்கள் ஒரு சில தேசங்களை கடந்துபோகிறார்கள். அந்த தேசத்தாரைப்பற்றி கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சொன்ன கட்டளைகள் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் வருத்தப்படுத்தாமலும், போர்செய்யாமலும் இருக்கவேண்டிய ஒரு சில ஜாதியாரைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஏதோமியர்கள் (உபா 2:4-8). மோவாபியர்கள் (உபா 2:9). ஏதோமியரைப்பற்றிய பூர்வகாலத்து சரித்திரம் (உபா 2:10-12).

இஸ்ரவேல் புத்திரர் சேரேத் ஆற்றை கடந்துபோகிறார்கள் (உபா 2:13-16). இஸ்ரவேல் புத்திரர் அம்மோன் புத்திரருக்கு விரோதமாக போர்செய்யக்கூடாது (உபா 2:17-23).

இஸ்ரவேல் புத்திரர் யுத்தம் செய்யவேண்டிய ஜாதியாரைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. எஸ்போனின் ராஜாவாகிய சீகோனுக்கு விரோதமாக இஸ்ரவேல் புத்திரர் யுத்தம்பண்ணவேண்டும். சீகோன் ஒரு எமோரியன் (உபா 2:24,25).

சீகோனுக்கு விரோதமான யுத்த சரித்திரம் (உபா 2:26-32). கர்த்தர் சீகோனை இஸ்ரவேல் புத்திரர் கையிலே ஒப்புக்கொடுக்கிறார் (உபா 2:33-37).

சேயீர் வனாந்தரம்
உபா 2:1-7

உபா 2:1. கர்த்தர் எனக்குச் சொல்லியபடி நாம் திரும்பி, சிவந்த சமுத்திரத்திற்குப் போகிற வழியாய் வனாந்தரத்திற்குப் பிரயாணம்பண்ணி, அநேக நாள் சேயீர் நாட்டைச் சுற்றித்திரிந்தோம்.

உபா 2:2. அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி:

உபா 2:3. நீங்கள் இந்த மலைநாட்டைச் சுற்றித் திரிந்தது போதும்; வடக்கே திரும்புங்கள்.

உபா 2:4. ஜனங்களுக்கு நீ கட்டளையிடவேண்டியது என்னவென்றால்: சேயீரிலே குடியிருக்கிற ஏசாவின் புத்திரரான உங்கள் சகோதரரின் எல்லையைக் கடக்கப்போகிறீர்கள்; அவர்கள் உங்களுக்குப் பயப்படுவார்கள்; நீங்களோ மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்;

உபா 2:5. அவர்களோடே போர்செய்யவேண்டாம்; அவர்கள் தேசத்திலே ஒரு அடி நிலமும் உங்களுக்குக் கொடேன்; சேயீர் மலைநாட்டை ஏசாவுக்குச் சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறேன்.

உபா 2:6. போஜனபதார்த்தங்களை அவர்கள் கையிலே பணத்திற்கு வாங்கிப் புசித்து, தண்ணீரையும் அவர்கள் கையிலே பணத்திற்கு வாங்கிக் குடியுங்கள்.

உபா 2:7. உன் தேவனாகிய கர்த்தர் உன் கைக்கிரியைகளிலெல்லாம் உன்னை ஆசீர்வதித்து வருகிறார்; இந்தப் பெரிய வனாந்தரவழியாய் நீ நடந்துவருகிறதை அறிவார்; இந்த நாற்பது வருஷமும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருந்தார்; உனக்கு ஒன்றும் குறைவுபடவில்லை என்று சொல் என்றார்.

இஸ்ரவேல் புத்திரர், கர்த்தர் தங்களுக்கு கட்டளையிட்ட பிரகாரம், காதேஸ்பர்னேயாவிலிருந்து, சிவந்த சமுத்திரத்தின் வழியாக, வனாந்தரத்திற்கு பிரயாணப்பட்டுப்போகிறார்கள் (உபா 1:49; 2:1). அவர்கள் அநேக நாட்களாக சேயீர் நாட்டை சுற்றித் திரிகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைச் சபித்த பின்பு, அவர்கள் காதேசில் பல நாட்களாகத் தங்கியிருக்கிறார்கள். ஒருவேளை பல மாதங்களாகவோ, அல்லது ஒரு வருஷமாகவோ அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்குமாகவோ அவர்கள் காதேசில் தங்கியிருந்திருக்க வேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் சிவந்த சமுத்திரத்திற்குப் போகிற வழியாய் பிரயாணம்பண்ணுகிறார்கள். அவர்கள் காதேசிலிருந்து தெற்கு திசை வழியாகப் பிரயாணம் பண்ணுகிறார்கள்.

சேயீர் நாடு என்பது பல மலைகள் அடங்கிய பகுதி. இது வடக்கிலும், தெற்கிலும் 70 மைல் நீளத்திற்கும், கிழக்கிலும், மேற்கிலும் 30மைல் அகலத்திற்கும் பரவியுள்ள மலைப் பிரதேசம். இந்த மலைப்பிரதேசத்தில் இஸ்ரவேல் புத்திரர்கள் பல இடங்களில் பாளயமிறங்கியிருந்தார்கள். அதன் பின்பு, அவர்கள் செங்கடலை அடைந்து, அங்கு எசியோன் கேபேரிலும், ஏலாத்திலும் வந்து சேர்ந்தார்கள்.

ஏலாத்திற்கு அகபா வளைகுடா என்னும் மறுபெயரும் உண்டு (உபா 2:8; 1இராஜா 9:26). வழியில் 17 அல்லது 18 இடங்களில் இஸ்ரவேல் புத்திரர்கள் பாளயமிறங்கியிருந்திருக்கிறார்கள். (எண் 33:18-35). ஒவ்வொரு பாளயத்திலும் அவர்கள் பல நாட்கள் தங்கியிருந்திருப்பார்கள். இதன் பின்பு, இறுதியாக ஏதோம், மோவாப் ஆகிய தேசங்களின் கிழக்கு திசை வழியாக வந்து யோர்தானின் கிழக்கு வழியாக கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கிறார்கள். (எண் 33:36-50).

அவர்கள் சுமார் முப்பத்தெட்டு வருஷங்களாக சேயீர் வனாந்தரத்திலே சுற்றித்திரிகிறார்கள். இந்த வனாந்தரத்தில் அவர்கள் பல இடங்களில் பாளயமிறங்கியிருக்கிறார்கள். ஒரு சில இடங்களில் அவர்கள் பல வருஷங்களாக தங்கள் கூடாரங்களிலே தங்கியிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் சேயீர் நாட்டைச் சுற்றித்திரிகிறபோது, கர்த்தர் மோசேயை நோக்கி, "நீங்கள் இந்த மலைநாட்டைச் சுற்றித் திரிந்தது போதும்; வடக்கே திரும்புங்கள்" (உபா 2:2,3) என்று சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் வடக்கே திரும்பி பிரயாணம்பண்ணினால், அந்தப்பாதை கானான் தேசத்திற்கு நேராகப்போகும். கர்த்தர் தம்முடைய ஜனத்தை மறுபடியுமாய் கானான் தேசத்திற்கு நேராக வழிநடத்துகிறார்.

அவர்கள் சேயீர் நாட்டியிலிருந்து, வடக்கே திரும்பி பிரயாணம்பண்ணும்போது ஏதோமியருடைய தேசத்தின் எல்லையைக் கடக்கப்போகிறார்கள். ஏசா இஸ்ரவேலின் சகோதரன். ஏசாவின் புத்திரர் ஏதோமின் சந்ததியைச் சேர்ந்தவர்கள். ஏசாவின் புத்திரர் சேயீரிலே குடியிருக்கிறார்கள். கர்த்தர் சேயீர் நாட்டை ஏசாவுக்கு சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். ஆகையினால் இஸ்ரவேல் ஜனத்தார் ஏதோமியரை வருத்தப்படுத்தக்கூடாது என்றும், அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணக்கூடாது என்றும் கர்த்தர் கட்டளையிடுகிறார்.

கர்த்தர் மோசேக்கு சொல்லுகிற கட்டளையை, மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கட்டளையாய் சொல்லவேண்டும். கர்த்தர் மோசேயை நோக்கி, "சேயீரிலே குடியிருக்கிற ஏசாவின் புத்திரரான உங்கள் சகோதரரின் எல்லையைக் கடக்கப்போகிறீர்கள்; அவர்கள் உங்களுக்குப் பயப்படுவார்கள்; நீங்களோ மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களோடே போர்செய்யவேண்டாம்; அவர்கள் தேசத்திலே ஒரு அடி நிலமும் உங்களுக்குக் கொடேன்; சேயீர் மலைநாட்டை ஏசாவுக்குச் சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறேன்" (உபா 2:4,5) என்று சொல்லுகிறார்.

கர்த்தரைப் பற்றிய பயம் சுற்றிலுமுள்ள தேசங்களில் பரவிற்று. ஆகையினால், இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சத்துருக்களில் பலரோடு யுத்தம் பண்ணாமல் இருந்து விடுகிறார்கள் (உபா 2:4; யோசு 2:9-11).

ஏசாவின் நிலத்தை இப்பொழுது இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்க கர்த்தருக்குச் சித்தமில்லை. வருங்காலத்தில் அவர்கள் ஏதோமையும், மோவாபையும், சீனாய் வளைகுடா முழுவதையும் சுதந்தரித்துக் கொள்வார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ஏதோமியரை தங்கள் சத்துருக்களாக பாவிக்கக்கூடாது. அவர்கள் ஏசாவின் புத்திரர். ஏசா இஸ்ரவேலின் சகோதரன். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் ஏசாவின் புத்திரரோடே போர்செய்யவேண்டாம் என்று கர்த்தர் கட்டளையிடுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் அண்டை தேசத்தாரோடு வியாபாரம்பண்ணுவதுபோல, ஏசாவின் புத்திரரோடே வியாபாரம் பண்ணவேண்டும். அவர்கள் போஜனபதார்த்தங்களையும், தண்ணீரையும் கிரயம் செலுத்தி வாங்கவேண்டும். கர்த்தர் மோசேயை நோக்கி, "போஜனபதார்த்தங்களை அவர்கள் கையிலே பணத்திற்கு வாங்கிப் புசித்து, தண்ணீரையும் அவர்கள் கையிலே பணத்திற்கு வாங்கிக் குடியுங்கள்" (உபா 2:6) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேலர்கள் காதேசில் இருந்தபோது, மோசே ஏதோமிற்குச் சில பிரதானிகளை அனுப்பினார். அப்போது ஏதோமியர் இஸ்ரவேல் புத்திரர்மீது விரோதத்தில் இருந்தார்கள். தங்கள் தேசத்தின் வழியாகப் பிரயாணம் பண்ணுவதற்கு ஏதோமியர் இஸ்ரவேல் புத்திரரை அனுமதிக்கவில்லை. ஆனால் இப்பொழுதோ ஏதோமியர் இஸ்ரவேலரைப் பார்த்து, அஞ்சுகிறார்கள். (உபா 2:4-5= எண் 20:14-22).

கர்த்தருடைய பிள்ளைகள் இந்தப் பூமியில் ஜீவிக்கும் காலமெல்லாம், மிகவும் கண்ணியமாகவும், நேர்மையாகவும் ஜீவிக்கவேண்டும். அவர்கள் கர்த்தருக்கு சாட்சியுள்ளவர்களாயிருக்கவேண்டும். கர்த்தருடைய ஜனத்தார் எல்லா ஜனங்களுக்கும் உதவி செய்கிறவர்களாகவும், உபகாரம்பண்ணுகிறவர்களாகவும் இருக்கவேண்டும். பிறருடைய பொருட்களை கிரயத்திற்கு வாங்கி பயன்படுத்துவது தவறல்ல. ஆனால் மற்றவர்களுடைய பொருட்களை கிரயம் செலுத்தாமல் அபகரித்துக்கொள்வது அநீதியானது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அதிகமாய் ஆசீர்வதித்திருக்கிறார். அவர்களை இதுவரையிலும் பாதுகாத்து பராமரித்து வந்திருக்கிறார். கர்த்தருடைய கிருபை அவர்களுக்கு போதுமானது. இஸ்ரவேல் ஜனத்தார் ஒருபோதும் பிறருடைய பொருளை இச்சிக்கக்கூடாது. கர்த்தர் தம்முடைய ஜனத்தை இதுவரையிலும் ஆசீர்வதித்திருப்பது பற்றி மோசேயினிடத்தில் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "உன் தேவனாகிய கர்த்தர் உன் கைக்கிரியைகளிலெல்லாம் உன்னை ஆசீர்வதித்து வருகிறார்; இந்தப் பெரிய வனாந்தரவழியாய் நீ நடந்துவருகிறதை அறிவார்; இந்த நாற்பது வருஷமும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருந்தார்; உனக்கு ஒன்றும் குறைவுபடவில்லை" (உபா 2:7) என்று சொல்லுகிறார்.

எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளிலிருந்து கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு ஆயத்தமாக இருக்கும் நாள்வரையிலும் உள்ளது நாற்பது வருஷம். இதில் சீனாய் வனாந்தரத்திலிருந்து புறப்படுவதற்கு முன்பாக இருந்த, ஒருவருஷமும் ஒரு மாதமும் ஐந்து நாட்களும் (எண் 10:11; எண் 33:3), காதேசில் கலகம் பண்ணியதினால் 38 வருஷங்கள் அலைந்து திரிந்ததும் (எண் 14, உபா 2:14) இந்த நாற்பது வருஷத்தில் அடங்கும்.

கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளை மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கட்டளையாக சொல்லவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஏதோமைக் குறித்து சொன்ன கட்டளைகளின் விவரம் வருமாறு :

1. நீங்கள் இந்த மலைநாட்டைச் சுற்றித் திரிந்தது போதும்; வடக்கே திரும்புங்கள் (உபா 2:3)

2. சேயீரிலே குடியிருக்கிற ஏசாவின் புத்திரரான உங்கள் சகோதரரின் எல்லையைக் கடக்கப் போகிறீர்கள்; அவர்கள் உங்களுக்குப் பயப்படுவார்கள்; நீங்களோ மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களோடே போர்செய்யவேண்டாம் (உபா 2:4-5)

3. போஜனபதார்த்தங்களை அவர்கள் கையிலே பணத்திற்கு வாங்கிப் புசித்து, தண்ணீரையும் அவர்கள் கையிலே பணத்திற்கு வாங்கிக் குடியுங்கள். உன் தேவனாகிய கர்த்தர் உன் கைக்கிரியைகளிலெல்லாம் உன்னை ஆசீர்வதித்து வருகிறார்; இந்தப் பெரிய வனாந்தரவழியாய் நீ நடந்துவருகிறதை அறிவார்; இந்த நாற்பது வருஷமும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருந்தார்; உனக்கு ஒன்றும் குறைவுபடவில்லை (உபா 2:6-7).

இஸ்ரவேல் புத்திரர் ஏதோமுக்கும், மோவாபுக்கும் விரோதமாக போர்செய்யக்கூடாது என்பதும், அவர்களை ஒடுக்கக்கூடாது என்பதும் கர்த்தருடைய கட்டளையாயிருக்கிறது.

இவ்விரண்டு தேசங்களையும் ஜெயிப்பதற்குக் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்தியிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்வதற்குக் கர்த்தர் அனுமதிக்கவில்லை. ஆகையினால், இவ்விரண்டு தேசங்களையும் சுற்றிச் செல்லுமாறு கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்குக் கட்டளையிடுகிறார்.

ஆயிரம் வருஷ அரசாட்சியில் இதுபோன்ற தேசங்கள் (ஆதி 15:18-21; எசே 48) மேசியாவின் ஆளுகைக்குக் கீழும், இஸ்ரவேல் தேசத்தின் ஆளுகைக்குக்கீழும் வரும் (எண் 24:17-19; சங் 60:8-12; ஏசா 11:14; ஏசா 63:1).

இஸ்ரவேல் வரலாற்றில் தாவீது, சாலொமோன், மேலும் பல ராஜாக்களின் ஆட்சிக் காலங்களில் இந்தத் தேசங்களை இஸ்ரவேல் புத்திரர்கள் ஆட்சி புரிந்தார்கள்.

இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வெளியேறி வந்தபோது, இந்தத் தேசம் அவர்களுக்கு மிகவும் பெரியதாக இருந்தது. ஆகையினால், ஏதோமையும், மோவாபையும் கர்த்தர் இஸ்ரவேலருக்குக் கொடுக்காமல், அவற்றை அப்படியே விட்டுவிட்டார்.

சீகோன், ஒக் மேலும் பல ராஜாக்கள், தேசங்கள் ஆகியவற்றை இஸ்ரவேல் புத்திரருக்குக் கர்த்தர் உடனடியாகக் கொடுத்து விடுகிறார். இவை எல்லாவற்றின் மூலமாக கர்த்தர் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரோடு தாம் பண்ணிய உடன்படிக்கையை நிறைவேற்றுகிறார்.

ஏதோமியர்
உபா 2:8-23

உபா 2:8. அப்படியே நாம் சேயீரிலே குடியிருக்கிற நம்முடைய சகோதரராகிய ஏசாவின் புத்திரரை விட்டுப் புறப்பட்டு, அந்தரவெளி வழியாய் ஏலாத்மேலும், எசியோன்கேபேர்மேலும் போய், திரும்பிக்கொண்டு, மோவாப் வனாந்தரவழியாய் வந்தோம்.

உபா 2:9. அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: நீ மோவாபை வருத்தப்படுத்தாமலும், அவர்களோடே போர்செய்யாமலும் இரு; அவர்கள் தேசத்தில் உனக்கு ஒன்றும் சுதந்தரமாகக் கொடேன்; ஆர் என்னும் பட்டணத்தின் சீமையை லோத் புத்திரருக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன்.

உபா 2:10. திரளானவர்களும் ஏனாக்கியரைப் போல நெடியவர்களுமான பலத்த ஜனங்களாகிய ஏமியர் அதில் முன்னே குடியிருந்தார்கள்.

உபா 2:11. அவர்களும் ஏனாக்கியரையொத்த இராட்சதர் என்று எண்ணப்பட்டார்கள், மோவாபியரோ அவர்களை ஏமியர் என்று சொல்லுகிறார்கள்.

உபா 2:12. ஓரியரும் சேயீரில் முன்னே குடியிருந்தார்கள்; கர்த்தர் தங்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்த தேசத்தாரை இஸ்ரவேல் துரத்தினதுபோல், ஏசாவின் புத்திரர் அந்த ஓரியரைத் துரத்தி, அவர்களைத் தங்கள் முகத்திற்கு முன்பாக அழித்து, அவர்கள் இருந்த ஸ்தானத்தில் குடியேறினார்கள்.

உபா 2:13. நீங்கள் எழுந்து, சேரேத் ஆற்றைக் கடந்துபோங்கள் என்று சொன்னார்; அப்படியே சேரேத் ஆற்றைக் கடந்தோம்.

உபா 2:14. யுத்த மனிதரான அந்தச் சந்ததியெல்லாம் கர்த்தர் தங்களுக்கு ஆணையிட்டபடியே பாளயத்தின் நடுவிலிருந்து மாண்டுபோக, நாம் காதேஸ்பர்னேயாவை விட்டுப் புறப்பட்டது முதற்கொண்டு, சேரேத் ஆற்றைக் கடக்குமட்டும், சென்ற காலம் முப்பத்தெட்டு வருஷமாயிற்று.

உபா 2:15. அவர்கள் பாளயத்தின் நடுவிலிருந்து மாண்டு ஒழியுமட்டும் கர்த்தரின் கை அவர்களை நிர்மூலமாக்கும்படிக்கு அவர்களுக்கு விரோதமாயிருந்தது.

உபா 2:16. யுத்தமனிதர் எல்லாரும் ஜனத்தின் நடுவிலிருந்து செத்துத் தீர்ந்தபின்பு,

உபா 2:17. கர்த்தர் என்னை நோக்கி:

உபா 2:18. நீ ஆர் பட்டணம் இருக்கிற மோவாபின் எல்லையை இன்றைக்குக் கடந்து,

உபா 2:19. அம்மோன் புத்திரருக்கு எதிராகச் சேரப்போகிறாய்; நீ அவர்களை வருத்தப்படுத்தவும் அவர்களோடே போர்செய்யவும் வேண்டாம்; அம்மோன் புத்திரரின் தேசத்தில் ஒன்றும் உனக்குச் சுதந்தரமாகக் கொடேன்; அதை லோத் புத்திரருக்குச் சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறேன்.

உபா 2:20. அதுவும் இராட்சதருடைய தேசமாக எண்ணப்பட்டது; முற்காலத்தில் இராட்சதர் அதிலே குடியிருந்தார்கள், அம்மோனியர் அவர்களைச் சம்சூமியர் என்று சொல்லுகிறார்கள்.

உபா 2:21. அவர்கள் திரளானவர்களும் ஏனாக்கியரைப்போல நெடியவர்களுமான பலத்த ஜனங்களாயிருந்தார்கள்; கர்த்தரோ சேயீரில் குடியிருந்த ஏசாவின் புத்திரருக்கு முன்பாக ஓரியரை அழிக்க, அவர்கள் அந்த ஜனங்களைத் துரத்திவிட்டு, அவர்கள் இருந்த ஸ்தானத்தில் இந்நாள்வரைக்கும் குடியிருக்கிறதுபோலவும்,

உபா 2:22. கப்தோரிலிருந்து புறப்பட்ட கப்தோரியர் ஆசேரீம் தொடங்கி ஆசாமட்டும் குடியிருந்த ஆவியரை அழித்து, அவர்கள் இருந்த ஸ்தானத்திலே குடியேறினது போலவும்,.

உபா 2:23. கர்த்தர் அவர்களை இவர்களுக்கு முன்பாக அழியப்பண்ண, இவர்கள் அவர்களைத் துரத்திவிட்டு, அவர்கள் இருந்த ஸ்தானத்திலே குடியேறினார்கள்.

கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளை மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். மோசே ஏதோமியரைப்பற்றிச் சொல்லும்போது, "அவர்கள் நம்முடைய சகோதரராகிய ஏசாவின் புத்திரர்" (உபா 2:8) என்று சொல்லுகிறார்.

ஏசா இஸ்ரவேலுக்கு உதவி செய்ய முன்வரவில்லை. தன்னுடைய தேசத்தின் வழியாக பிரயாணம்பண்ணுவதற்கு ஏதோமியர் இஸ்ரவேல் புத்திரருக்கு அனுமதி கொடுக்கவில்லை. ஆனாலும் மோசே ஏதோமியருக்கு விரோதமாக கோபப்படவில்லை. மோசே அவர்களைப்பற்றிச் சொல்லும்போது, "அவர்கள் நம்முடைய சகோதரராகிய ஏசாவின் புத்திரர்" என்று சகோதர பாசத்தோடு சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரிடத்திலே, தங்களுடைய பிரயாண அனுபவங்களைப்பற்றிச் சொல்லுகிறார். மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நாம் சேயீரிலே குடியிருக்கிற நம்முடைய சகோதரராகிய ஏசாவின் புத்திரரை விட்டுப் புறப்பட்டு, அந்தரவெளி வழியாய் ஏலாத்மேலும், எசியோன்கேபேர்மேலும் போய், திரும்பிக்கொண்டு, மோவாப் வனாந்தரவழியாய் வந்தோம்" *(உபா 2:8)* என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் ஏதோமியரை வருத்தப்படுத்தாமலிருப்பதுபோல, அவர்கள் மோவாபியரையும் வருத்தப்படுத்தக்கூடாது என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ மோவாபை வருத்தப்படுத்தாமலும், அவர்களோடே போர்செய்யாமலும் இரு; அவர்கள் தேசத்தில் உனக்கு ஒன்றும் சுதந்தரமாகக் கொடேன்; ஆர் என்னும் பட்டணத்தின் சீமையை லோத் புத்திரருக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன்" *(உபா 2:9)* என்று சொல்லுகிறார்.

உபா 2:2-8 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் செய்திக்கும், இந்த வசனத்திற்கும் இடையில் ஒரு காலஇடைவெளி இருக்கிறது. இப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் ஏதோமைக் கடந்து வந்துவிட்டார்கள். மோவாபை நெருங்கி வந்து கொண்டிருக்கிறார்கள். இஸ்ரவேலர்கள் ஏதோமோடு யுத்தம் பண்ணக்கூடாது என்று சொன்னதுபோலவே, கர்த்தர் இப்பொழுது அவர்களை மோவாபோடும் யுத்தம் பண்ணக்கூடாது என்று கூறிவிடுகிறார் *(உபா 2:9-18)*.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு மோவாபைக்குறித்து சொன்ன கட்டளைகளின் விவரம் வருமாறு :

1. நீ மோவாபை வருத்தப்படுத்தாமலும், அவர்களோடே போர்செய்யாமலும் இரு; அவர்கள் தேசத்தில் உனக்கு ஒன்றும் சுதந்தரமாகக் கொடேன். *(உபா 2:9)*

2. நீங்கள் எழுந்து, சேரேத் ஆற்றைக் கடந்துபோங்கள் *(உபா 2:13)*

3. நீ ஆர் பட்டணம் இருக்கிற மோவாபின் எல்லையை இன்றைக்குக் கடந்து போங்கள். *(உபா 2:18)*

"அவர்கள் தேசத்தில் உனக்கு ஒன்றும் சுதந்தரமாகக் கொடேன்" என்று கர்த்தர் இப்பொழுது மோவாபைக் குறித்து சொல்லுகிறார். ஆனாலும் பிற்காலங்களில் இஸ்ரவேல் மோவாப் தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும். *(சங் 60:6-9; ஏசா 11:14; எரே 48:47)*.

மோசே இஸ்ரவேல் புத்திரரிடத்தில் மோவாபியர், ஏதோமியர், அம்மோன் புத்திரர் ஆகியோருடைய பூர்வகாலத்து சரித்திரத்தைப்பற்றிச் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் சேயீர் மலை நாட்டிலிருந்து, கானான் தேசத்தை நோக்கி பிரயாணம்பண்ணுகிற வழியிலே, மோவாபியர், ஏதோமியர், அம்மோன் புத்திரர் ஆகியோர் வாசம்பண்ணுகிறார்கள். இவர்களுடைய தேசங்கள், இந்தப் பகுதியிலே எப்படி ஸ்தாபிக்கப்பட்டது என்னும் சரித்திர விவரத்தை மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

மோவாபியர் இப்போது வாசம்பண்ணுகிற இந்த தேசமானது ஏமியர் என்னும் இராட்சத ஜாதியாருக்கு சொந்தமானதாகயிருந்தது. ஏமியர் திரளானவர்களாயிருந்தார்கள். அவர்கள் ஏனாக்கியரைப்போல நெடியவர்களாகவும், பலத்த ஜனங்களாகவும் இருந்தார்கள். மோவாபியர் இப்போது குடியிருக்கிற இந்த நாட்டிலே, முன்பு ஏமியர் குடியிருந்தார்கள் *(உபா 2:10)*.

ஏமியர் என்பவர்கள் இராட்சத சந்ததியார். ஏமியர், ஏனாக்கியர், ஒரியர் ஆகியோரும் இவர்களைப்போன்ற இராட்சத சந்ததியார் ஆவர்.

ஏமியரும் ஏனாக்கியரையொத்த இராட்சதர் என்று எண்ணப்பட்டார்கள், மோவாபியரோ அவர்களை ஏமியர் என்று சொல்லுகிறார்கள் *(உபா 2:11)*.

ஏசாவின் புத்திரராகிய ஏதோமியர் இப்போது சேயீர் மலை தேசத்திலே குடியிருக்கிறார்கள். பூர்வகாலத்தில் இந்த தேசத்தில் ஓரியர் குடியிருந்தார்கள். ஏதோமியர் சேயீர் மலைத்தேசத்திலிருந்து, ஓரியரைத் துரத்திவிட்டு, அவர்கள் இருந்த தேசத்தில் இப்போது குடியிருக்கிறார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரரிடத்தில், ஏதோமியரின் சரித்திரத்தையும், அவர்கள் சேயீர் மலைத்தேசத்திலே எவ்வாறு குடியேறினார்கள் என்பதையும் இஸ்ரவேல் புத்திரருக்கு விரிவாக எடுத்து சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "ஓரியரும் சேயீரில் முன்னே குடியிருந்தார்கள்; கர்த்தர் தங்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்த தேசத்தாரை இஸ்ரவேல் துரத்தினதுபோல, ஏசாவின் புத்திரர் அந்த ஓரியரைத் துரத்தி, அவர்களைத் தங்கள் முகத்திற்கு முன்பாக அழித்து, அவர்கள் இருந்த ஸ்தானத்தில் குடியேறினார்கள்" (உபா 2:12) என்று சொல்லுகிறார்.

ஏதோமியர் சேயீர் மலைத்தேசத்தில் குடியேறின சம்பவம் மறுபடியுமாக உபா 2:21- ஆவது வசனத்தில், "அவர்கள் திரளானவர்களும் ஏனாக்கியரைப்போல நெடியவர்களுமான பலத்த ஜனங்களாயிருந்தார்கள்; கர்த்தரோ சேயீரில் குடியிருந்த ஏசாவின் புத்திரருக்கு முன்பாக ஓரியரை அழிக்க, அவர்கள் அந்த ஜனங்களைத் துரத்திவிட்டு, அவர்கள் இருந்த ஸ்தானத்தில் இந்நாள்வரைக்கும் குடியிருக்கிறதுபோலவும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த சம்பவம் ஆதி 36:20,21-ஆவது வசனத்திலும் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. "அந்தத் தேசத்தின் குடிகளாகிய ஓரியனான சேயீரின் குமாரர், லோத்தான், சோபால், சிபியோன், ஆனாகு, திஷோன், ஏத்சேர், திஷான் என்பவர்கள்; இவர்களே ஏதோம் தேசத்தில் சேயீரின் புத்திராகிய ஓரியருடைய சந்ததியாயிருந்த பிரபுக்கள்".

இஸ்ரவேல் புத்திரர் சேயீர் நாட்டிலிருந்து வடக்கு திசையில், கானான் தேசத்தை நோக்கிப் பிரயாணம்பண்ணும்போது, அவர்கள் அம்மோன் புத்திரருடைய தேசத்திற்கு எதிராகவும் சேரப்போகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு அம்மோன் புத்திரரின் தேசத்தை சுதந்தரமாகக் கொடுக்கவில்லை. ஆகையினால் அவர்கள் அம்மோன் புத்திரருக்கு விரோதமாக போர்செய்யக்கூடாது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "அம்மோன் புத்திரருக்கு எதிராகச் சேரப்போகிறாய்; நீ அவர்களை வருத்தப்படுத்தவும் அவர்களோடே போர்செய்யவும் வேண்டாம்; அம்மோன் புத்திரரின் தேசத்தில் ஒன்றும் உனக்குச் சுதந்தரமாகக் கொடேன்; அதை லோத் புத்திரருக்குச் சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறேன்" (உபா 2:19) என்று சொல்லுகிறார்.

அம்மோன் புத்திரர் இப்போது வாசம்பண்ணுகிற தேசத்திலே, எவ்வாறு வந்து குடியேறினார்கள் என்னும் சரித்திர சம்பவத்தையும் கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். அம்மோன் புத்திரருடைய தேசமும், பூர்வகாலத்தில், இராட்சதருடைய தேசமாக எண்ணப்பட்டது; முற்காலத்தில் இராட்சதர் அதிலே குடியிருந்தார்கள், அம்மோனியர் அவர்களைச் சம்சூமியர் என்று சொல்லுகிறார்கள் (உபா 2:20). சம்சூமியர் திரளானவர்களும் ஏனாக்கியரைப்போல நெடியவர்களுமான பலத்த ஜனங்களாயிருந்தார்கள் (உபா 2:21).

ஏதோம், மோவாபைப் போலவே அம்மோன் தேசமும் இராட்சதருடைய தேசமாக எண்ணப்பட்டது. தேவன் அவர்களை அகற்றிவிட்டு, அங்கு ஆபிரகாம், லோத், ஆகியோருடைய சந்ததியினரைக் குடியேற்றினார். (உபா 2:20-23). நோவாவின் காலத்து ஜலப்பிரளயத்திற்குப் பின்பு, 897 வருஷங்களுக்குப் பின்பு, இந்தப் பகுதியில் அம்மோனியர் இராட்சதர்களை வெளியேற்றினார்கள்.

உபாகமம் புஸ்தகத்தில் பல இராட்சத சந்ததியாரைப் பற்றிக்கூறப்பட்டிருக்கிறது. ஏனாக்கியர், ஏமியர், ஓரியர், சம்சூமியர், ஆவியர் ஆகியோர் இராட்சத சந்ததியார் ஆவர். (உபா 1:28-29; உபா 2:10-12,20-23; உபா 3:11-13). சில இராட்சத சந்ததியார் அழிக்கப்படாமல், இஸ்ரவேலரோடு யுத்தம் பண்ணுவதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால் அவர்களைப் பார்த்து பயப்படவேண்டாம் என்று கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்குக் கூறியிருக்கிறார். (உபா 1:28-29; எண் 13:26-33).

"பதினாலாம் வருஷத்திலே கெதர்லாகோமேரும், அவனோடே கூடியிருந்த ராஜாக்களும் வந்து, அஸ்தரோத்கர்னாயீமிலே இருந்த ரெப்பாயீமியரையும், காமிலே இருந்த சூசிமியரையும், சாவேகீரியத்தாயீமிலே இருந்த ஏமியரையும், சேயீர் மலைகளில் இருந்த ஓரியரையும், வனாந்தரத்துக்கு அருகான எல்பாரான்மட்டும் முறியடித்தார்கள்" (ஆதி 14:5,6)

இந்த வசனத்தில் சூசிமியர் என்று அழைக்கப்படுகிறவர்கள், சம்சூமியராகயிருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

கப்தோரியர் பெலிஸ்தருடைய சந்ததியை சேர்ந்தவர்கள். "பத்ருசீமையும், பெலிஸ்தரின் சந்ததிக்குத் தலைவனாகிய கஸ்லூகீமையும், கப்தொரீமையும் பெற்றான்" (ஆதி 10:14). கப்தோரிலிருந்து புறப்பட்ட கப்தோரியர் ஆசேரீம் தொடங்கி ஆசாமட்டும் குடியிருந்த ஆவியரை அழித்து, அவர்கள் இருந்த ஸ்தானத்திலே குடியேறினார்கள் (உபா 2:22).

ஆசேரீம் என்பதற்கான எபிரெய வார்த்தை "காட்சரிம்" என்பதாகும். இது "காட்சர்" என்னும் வார்த்தையிலிருந்து வந்திருக்கிறது. இதற்கு கிராமம், குடியிருப்பு என்று பொருள்.

கப்தோரியரைப் பற்றி அதிகமான விவரம் எதுவும் தெரியவில்லை. இவர்கள் எகிப்தில் குடியேறிய மிஸ்ராயீமின் சந்ததியார். (ஆதி 10:13-14).

கப்தோரியர் ஆவியரை துரத்தினார்கள். துரத்தப்பட்ட ஆவியர்கள் அசீரிய தேசத்தில் குடியேறினார்கள் என்று சரித்திர ஆசிரியர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

"ஆவியர் நிபேகாசையும் தர்தாக்கையும் உண்டாக்கினார்கள், செப்பர்வியர் செப்பர்வாயிமின் தேவர்களாகிய அத்ரமலேக்குக்கும் அன்னமலேக்குக்கும் தங்கள் பிள்ளைகளை அக்கினியில் தகனித்து வந்தார்கள்" (2இராஜா 17:31).

இஸ்ரவேல் புத்திரர் சேயீர் மலை நாட்டிலிருந்து வடக்கே திரும்பி பிரயாணம்பண்ணுகிறார்கள். அவர்கள் சேயீரிலே குடியிருக்கிற தங்கள் சகோதரராகிய ஏசாவின் புத்திரரை விட்டு புறப்பட்டு, அந்தரவெளி வழியாய் ஏலாத்மேலும், எசியோன்கேபேர்மேலும் போய், திரும்பிக்கொண்டு, மோவாப் வனாந்தரவழியாய் வருகிறார்கள் (உபா 2:8).

அதன்பின்பு அவர்கள் சேரேத் ஆற்றை கடந்துபோகிறார்கள் (உபா 2:13). அவர்கள் சேரேத் ஆற்றை கடக்கும்போது, கர்த்தர் தங்களுக்கு சொன்ன வார்த்தையை மோசே நினைவுகூருகிறார். கர்த்தருடைய வார்த்தை நிறைவேறுகிறது.

சேரேத் ஆறு அர்னோன் நதிக்குள் பாய்கிறது. இது மோவாபியருக்கும், அம்மோனியருக்கும் இடையிலுள்ள வடக்கு எல்லையாகும். (எண் 21:13).

யுத்த மனிதரான அந்தச் சந்ததியெல்லாம் கர்த்தர் தங்களுக்கு ஆணையிட்டபடியே பாளயத்தின் நடுவிலிருந்து மாண்டுபோக, இஸ்ரவேல் புத்திரர் காதேஸ்பர்னேயாவை விட்டுப் புறப்பட்டது முதற்கொண்டு, சேரேத் ஆற்றைக் கடக்குமட்டும், சென்ற காலம் முப்பத்தெட்டு வருஷமாயிற்று (உபா 2:14).

இஸ்ரவேல் புத்திரர் முப்பத்தெட்டு வருஷமாக வனாந்தரத்தில் அலைந்து திரிந்த விவரம் வருமாறு :

காதேசில் இஸ்ரவேலர் கர்த்தருக்கு எதிராகக் கலகம் பண்ணிய நாளிலிருந்து (எண் 13-14), சேரேத் ஆற்றைக் கடந்து போகும் வரையிலும் 38 வருஷமாயிற்று. சேரேத் ஆறு மோவாபின் வடக்கு எல்லையில் உள்ளது.

உபா 2:7 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் நாற்பது வருஷங்களில் இந்த வருஷங்களும் அடங்கும். இந்த 38 வருஷத்தில் சீனாய் மலையில் அவர்கள் பதினொறு மாதங்கள் தங்கியிருந்த காலமும் அடங்கும். எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு, முதன் முறையாக காதேசிற்குப் பிரயாணம் பண்ணுவதற்குச் சுமார் இரண்டு வருஷங்களாயிற்று. இதன் பின்பு, யோர்தானைக் கடந்து, கானான் தேசத்திற்குப் பிரவேசிப்பதற்கு, மேலும் சில மாதங்கள் ஆயிருக்கலாம்.

சேரேத்தின் ஆற்றைக் கடக்கும்போது இஸ்ரவேல் புத்திரரில் மூத்த சந்ததியார் மரித்துப்போனார்கள். (உபா 2:14)38 வருஷக்காலங்களில் இவர்கள் மரித்துப் போயிருக்கிறார்கள். (எண் 13-14) கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, அவர்களுடைய பிரயாணக்காலம் நாற்பது வருஷங்களாக இருக்கும்.

அவர்கள் இன்னும் சீகோனோடும், ஓகோடும் (எண் 21) அமலேக்கோடும் (எண் 31) யுத்தம் பண்ண வேண்டும். யோர்தானின் கிழக்குப் பகுதியிலுள்ள பட்டணங்களைப் புதுப்பித்து, அதில் குடியேற வேண்டும். யோசு 3 ஆவது அதிகாரத்தில் யோர்தான் நதியைக் கடந்து போவதைப் பற்றிக்கூறப்பட்டிருக்கிறது. அதற்குள் இந்தச் சம்பவங்களெல்லாம் நிறைவேற வேண்டும்.

அவர்கள் பாளயத்தின் நடுவிலிருந்து மாண்டு ஒழியுமட்டும் கர்த்தரின் கை அவர்களை நிர்மூலமாக்கும்படிக்கு அவர்களுக்கு விரோதமாயிருக்கிறது (உபா 2:15).

யுத்தமனிதர் எல்லாரும் ஜனத்தின் நடுவிலிருந்து செத்துத் தீர்ந்தபின்பு, (உபா 2:16). கர்த்தர் மோசேயோடு பேசுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரின் பழைய சந்ததியார் மோவாபைக் கடந்து, யோர்தானுக்கு அருகில் வருவதற்குக்கூட கர்த்தர் அவர்களை அனுமதிக்கவில்லை. எண் 13-14 ஆகிய அதிகாரங்களில் தாம் கூறிய நியாயத் தீர்ப்புக்களைக் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது நிறைவேற்றி விடுகிறார் (உபா 2:14-18).

சீனாய் மலையிலே எண்ணித்தொகையேற்றப்பட்ட இஸ்ரவேல் புத்திரரில், ஒருவர்கூட வாக்குப்பண்ணப்பட்ட கானான் தேசத்தைப் பார்க்கவில்லை.

"அவர்கள் பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தைக் காணமாட்டார்கள்; எனக்குக் கோபம் உண்டாக்கினவர்களில் ஒருவரும் அதைக் காணமாட்டார்கள்" (எண் 14:23).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவேண்டும். அவருடைய வார்த்தைகளை அசட்டைபண்ணக்கூடாது. கர்த்தர் ஏதோமியரைக் குறித்தும், மோவாபியரைக் குறித்தும், அம்மோன் புத்திரரைக்குறித்தும் இஸ்ரவேல் புத்திரருக்கு தெளிவான கட்டளையைக் கொடுத்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிய மிகவும் கவனமாயிருக்கவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: நீ மோவாபை வருத்தப்படுத்தாமலும், அவர்களோடே போர்செய்யாமலும் இரு; அவர்கள் தேசத்தில் உனக்கு ஒன்றும் சுதந்தரமாகக் கொடேன்; ஆர் என்னும் பட்டணத்தின் சீமையை லோத் புத்திரருக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன்" (உபா 2:9) என்று சொல்லியிருக்கிறார்.

கர்த்தர் மோவாபைக்குறித்து சொன்னதுபோல, ஏதோமியரைக்குறித்தும், அம்மோன் புத்திரரைக்குறித்தும் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லியிருக்கிறார். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் ஏதோமியரையும், மோவாபியரையும், அம்மோன் புத்திரரையும் வருத்தப்படுத்தக்கூடாது அவர்களுக்கு விரோதமாக போர் செய்யக்கூடாது.

மோவாபியர் லோத்தின் சந்ததியைச் சேர்ந்தவர்கள். "ஆர் என்னும் பட்டணத்தின் சீமையை லோத் புத்திரருக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன்" (உபா 2:9) என்றும், "அம்மோன் புத்திரரின் தேசத்தில் ஒன்றும் உனக்குச் சுதந்தரமாகக் கொடேன்; அதை லோத் புத்திரருக்குச் சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறேன்" (உபா 2:19) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

அம்மோன் புத்திரரின் தேசத்தில் ஒன்றும் அவர்களுக்குச் சுதந்தரமாகக் கொடுக்கப் படவில்லை. கர்த்தர் அதை லோத் புத்திரருக்குச் சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். மூன்றாம் முறையாகக் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை யுத்தம் பண்ணாமல், தடுத்து, அந்த மூன்று தேசங்களிலுமுள்ள ஜனங்களை இஸ்ரவேலரின் பட்டயத்திற்கு விலக்கிவிடுகிறார்.

கர்த்தர் அம்மோன் புத்திரருக்கு சுதந்தரமாகக் கொடுத்த தேசத்தை அவர் இஸ்ரவேல் புத்திரருக்கு சுதந்தரமாகக் கொடுக்கவில்லை. கர்த்தர் ஒரே தேசத்தை இரண்டு ஜாதியாருக்கு சுதந்தரமாகக் கொடுப்பதில்லை. "அம்மோன் புத்திரரின் தேசத்தில் ஒன்றும் உனக்கு சுதந்தரமாகக் கொடேன்" (உபா 2:19) என்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தெளிவாகச் சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு ஏராளமான நன்மைகளை செய்கிறார். அவர்களுடைய கைகளின் கிரியைகளை ஆசீர்வதிக்கிறார். கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஆசீர்வாதங்களில் நாம் திருப்தியோடிருக்கவேண்டும். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பதுபோலவே மற்றவர்களையும் ஆசீர்வதிக்கிறார். மற்றவர்களுக்கு கொடுக்கப்படும் ஆசீர்வாதம் நமக்கும் வேண்டும் என்று நாம் பேராசைப்படக்கூடாது.

கானான் தேசம் மாத்திரமே இஸ்ரவேல் புத்திரருடைய சுதந்தரதேசம். அவர்கள் மற்ற தேசங்களை சுதந்தரிக்க வேண்டுமென்று ஆசைப்படக்கூடாது. கர்த்தர் நம்மை மாத்திரமே நேசிக்கிறார் என்றும், அவர் நம்மை நேசிப்பதுபோல வேறு யாரையும் நேசிப்பதில்லை என்றும் நாம் இறுமாப்பாய் நினைக்கக்கூடாது. கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. அவர் நம்மிடத்தில் அன்புகூருவதுபோல, பிறரிடத்திலும் அன்புகூருகிறார். கர்த்தருடைய ஜனமாகிய நாம், நம்முடைய சுயவிருப்பம் நிறைவேறவேண்டும் என்று ஆசைப்படாமல், கர்த்தருடைய விருப்பம் நிறைவேறவேண்டும் என்று தீர்மானித்து, அவருடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு மோவாபியரைப்பற்றியும் ஏதோமியரைப்பற்றியும் சொன்ன சரித்திர சம்பவங்கள், கர்த்தர் மோசேக்கு சொன்ன செய்தியாகும். கர்த்தர் தனக்கு சொன்னதை மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு மோவாபியரின் சரித்திரத்தையும், ஏதோமியரின் சரித்திரத்தையும் சொன்ன பின்பு, அம்மோன் புத்திரரின் சரித்திரத்தையும் சொல்லுகிறார்.

சீகோன்
உபா 2:24-37

உபா 2:24. நீங்கள் எழுந்து பிரயாணம்பண்ணி, அர்னோன் ஆற்றைக் கடந்துபோங்கள்; எஸ்போனின் ராஜாவாகிய சீகோன் என்னும் எமோரியனையும் அவன் தேசத்தையும் உன் கையிலே ஒப்புக்கொடுத்தேன்; இதுமுதல் அதைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அவனோடே யுத்தஞ்செய்.

உபா 2:25. வானத்தின்கீழ் எங்குமுள்ள ஜனங்கள் உன்னாலே திகிலும் பயமும் அடையும்படி செய்ய இன்று நான் தொடங்குவேன்; அவர்கள் உன் கீர்த்தியைக் கேட்டு, உன்னிமித்தம் நடுங்கி, வேதனைப்படுவார்கள் என்றார்.

உபா 2:26. அப்பொழுது நான் கெதெமோத் வனாந்தரத்திலிருந்து எஸ்போனின் ராஜாவாகிய சீகோனிடத்தில், சமாதான வார்த்தைகளைச் சொல்லும்படி ஸ்தானாபதிகளை அனுப்பி:

உபா 2:27. நான் உம்முடைய தேசத்தைக் கடந்துபோகும்படி உத்தரவுகொடும்; வலதுபுறம் இடதுபுறம் சாயாமல் பெரும்பாதை வழியாய் நடப்பேன்.

உபா 2:28. சேயீரில் குடியிருக்கிற ஏசாவின் புத்திரரும், ஆர் பட்டணத்தில் குடியிருக்கிற மோவாபியரும் எனக்குச் செய்ததுபோல, நீரும், நான் யோர்தானைக் கடந்து, எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்குக் கொடுக்கிற தேசத்தில் சேருமட்டும்,

உபா 2:29. எனக்குப் புசிக்க ஆகாரத்தையும் குடிக்கத் தண்ணீரையும் கிரயத்துக்குத் தாரும்; நான் கால்நடையாய்க் கடந்துபோகமாத்திரம் உத்தரவுகொடும் என்று சொல்லி அனுப்பினேன்.

உபா 2:30. ஆனாலும் தன் தேசத்தைக் கடந்து போகும்படி, எஸ்போனின் ராஜாவாகிய சீகோன் நமக்கு உத்தரவு கொடுக்கவில்லை; இந்நாளில் இருக்கிறதுபோல, உன் தேவனாகிய கர்த்தர் அவனை உன் கையில் ஒப்புக்கொடுக்கும்படி, அவன் மனதைக் கடினப்படுத்தி, அவன் இருதயத்தை உரங்கொள்ளப்பண்ணியிருந்தார்.

உபா 2:31. அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: இதோ, சீகோனையும் அவன் தேசத்தையும் உனக்கு ஒப்புக்கொடுக்கப் போகிறேன்; இதுமுதல் அவன் தேசத்தை வசப்படுத்தி, சுதந்தரித்துக்கொள் என்றார்.

உபா 2:32. சீகோன் தன்னுடைய எல்லா ஜனங்களோடுங்கூட நம்மோடே யுத்தம்பண்ணப் புறப்பட்டு, யாகாசிலே வந்தான்.

உபா 2:33. அவனை நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்கு ஒப்புக்கொடுத்தார்; நாம் அவனையும் அவன் குமாரரையும் அவனுடைய சகல ஜனங்களையும் முறிய அடித்து,

உபா 2:34. அக்காலத்தில் அவன் பட்டணங்களையெல்லாம் பிடித்து, சகல பட்டணங்களிலும் இருந்த ஸ்திரீ புருஷரையும், பிள்ளைகளையும், ஒருவரையும் மீதியாகவைக்காமல் சங்காரம்பண்ணினோம்.

உபா 2:35. மிருகஜீவன்களையும் நாம் பிடித்த பட்டணங்களில் கொள்ளையடித்த பொருள்களையு மாத்திரம் நமக்கென்று வைத்துக்கொண்டோம்.

உபா 2:36. அர்னோன் ஆற்றங்கரையில் இருக்கிற ஆரோவேரும் ஆற்றண்டையில் இருக்கிற பட்டணமும் தொடங்கி, கீலேயாத்வரைக்கும் நமக்கு எதிர்த்துநிற்கத்தக்க அரணிப்பான பட்டணம் இருந்ததில்லை, எல்லாவற்றையும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்கு ஒப்புக்கொடுத்தார்.

உபா 2:37. அம்மோன் புத்திரருடைய தேசத்தையும், யாபோக் ஆற்றங்கரையிலுள்ள இடங்களையும், மலைகளிலுள்ள பட்டணங்களையும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்கு விலக்கின மற்ற இடங்களையும் சேராமல் விலகிப்போனாய்.

இஸ்ரவேல் ஜனத்தார் ஏதோமியர், மோவாபியர், அம்மோன் புத்திரர் ஆகியோரின் தேசங்களைச் சுற்றி பிரயாணம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் அந்த ஜாதியாரைவிட ஜனம் பெருத்தவர்களாகவும், பலமிக்கவர்களாகவும் இருக்கிறார்கள். மேலும் ஏதோமியர், மோவாபியர், அம்மோன் புத்திரர் ஆகியோரின் தேசங்கள் செழிப்பான தேசங்களாகயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரரோ இன்னும் தங்கள் சொந்த தேசத்திற்குப்போய் குடியேறவில்லை. அவர்கள் இப்போது வனாந்தரத்திலே சஞ்சரித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ஏதோமியர், மோவாபியர், அம்மோன் புத்திரர் ஆகியோரின் தேசங்கள்மீது ஆசைப்படக்கூடாது என்றும், அவர்களை வருத்தப்படுத்தக்கூடாது என்றும், அவர்களுக்கு விரோதமாக போர்செய்யக்கூடாது என்றும் கர்த்தர் கட்டளையிடுகிறார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிறார்கள்.

ஏதோமியர், மோவாபியர், அம்மோன் புத்திரர் ஆகியோரின் தேசங்கள் செழிப்பான தேசங்களாக இருந்தாலும், இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, அந்த தேசத்தாரை வருத்தப்படுத்தாமல், அந்த தேசத்தைச்சுற்றி பிரயாணம்பண்ணுகிறார்கள். கர்த்தருடைய ஜனத்தார் இச்சையடக்கமாயிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் அந்த தேசத்தாருக்கு விரோதமாக போர்செய்யவில்லை.

இஸ்ரவேல் ஜனத்தார் தம்முடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, ஏதோமியர், மோவாபியர், அம்மோன் புத்திரர் ஆகிய தேசத்தாரை வருத்தப்படுத்தாமல், அவர்களுக்கு விரோதமாக போர்செய்யாமல், அவர்களுடைய தேசங்களைச் சுற்றி அமைதியாக பிரயாணம்பண்ணுவதற்காக, கர்த்தர் தம்முடைய ஜனத்தை ஆசீர்வதிக்கிறார். தம்முடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்ததினால் இஸ்ரவேல் புத்திரருக்கு ஏற்பட்ட நஷ்டத்தை, கர்த்தர் எமோரியர் மூலமாக ஈடுகட்டுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீங்கள் எழுந்து பிரயாணம்பண்ணி, அர்னோன் ஆற்றைக் கடந்துபோங்கள்; எஸ்போனின் ராஜாவாகிய சீகோன் என்னும் எமோரியனையும் அவன் தேசத்தையும் உன் கையிலே ஒப்புக்கொடுத்தேன்; இதுமுதல் அதைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அவனோடே யுத்தஞ்செய்" *(உபா 2:24)* என்றும்,

"வானத்தின்கீழ் எங்குமுள்ள ஜனங்கள் உன்னாலே திகிலும் பயமும் அடையும்படி செய்ய இன்று நான் தொடங்குவேன்; அவர்கள் உன் கீர்த்தியைக் கேட்டு, உன்னிமித்தம் நடுங்கி, வேதனைப்படுவார்கள்" *(உபா 2:25)* என்றும் சொல்லுகிறார்.

470 வருஷங்களுக்கு முன்பாகத் தேவன் ஆபிரகாமிற்கு வாக்குத்தத்தம் பண்ணிய தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்வது இங்கு ஆரம்பமாகிறது. *(ஆதி 12:1-7; ஆதி 13:14-17; ஆதி 15:18-21)* இந்தச் சமயத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரர் பல தேசங்களை ஜெயித்து அதைச் சுதந்தரித்துக் கொள்கிறார்கள். தாவீது, சாலொமோன் ஆகியோருடைய ஆட்சிக் காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் சீரியர், மோவாபியர், ஏதோமியர், அம்மோனியர், பெலிஸ்தர், மேலும் பல ஜனங்களையும் ஆட்சி புரிகிறார்கள். *(2சாமு 5,8,10).*

எஸ்போனின் ராஜவாகிய சீகோனுக்கு விரோதமாக தாங்கள் யுத்தம்பண்ணி, அவனுடைய தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்வோம் என்று, இஸ்ரவேல் ஜனத்தார் எதிர்பார்க்கவில்லை. இஸ்ரவேல் புத்திரர் எதிர்பாராத காரியத்தை கர்த்தர் செய்யச்சொல்லுகிறார்.

"சீகோனையும், அவனுடைய தேசத்தையும் உன் கையிலே ஒப்புக்கொடுத்தேன்" என்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

கர்த்தருடைய வார்த்தை மோசேக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கெதெமோத் வனாந்தரத்திலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். அப்போது மோசே எஸ்போனின் ராஜாவாகிய சீகோனிடத்தில் தன்னுடைய ஸ்தானாபதிகளை அனுப்புகிறார்.

மோசே கெதெமோத் வனாந்தரத்திலிருந்து எஸ்போனின் ராஜாவாகிய சீகோனிடத்தில், சமாதான வார்த்தைகளைச் சொல்லும்படி ஸ்தானாபதிகளை அனுப்புகிறார் *(உபா 2:26).*

எமோரியரோடு யுத்தம்பண்ண மோசே முதலில் விரும்பவில்லை. அவர்கள் தேசத்தைக் கடந்து போவதற்கு, உத்தரவு கொடுக்குமாறு சீகோனிடத்தில் சமாதான வார்த்தைகளைச் சொல்லும்படி ஸ்தானாபதிகளை அனுப்புகிறார். வலதுபுறம் இடதுபுறம் சாயாமல் பெரும்பாதை வழியாய் நடப்போம் என்று உறுதி பண்ணுகிறார்.

எங்களுக்குப் புசிக்க ஆகாரத்தையும் குடிக்கத் தண்ணீரையும் கிரயத்துக்குத் தாரும்; நாங்கள் கால்நடையாய்க் கடந்து போகமாத்திரம் உத்தரவுகொடும் என்று சொல்லி மோசே ஸ்தானாபதிகளை அனுப்பினார் *(உபா 2:26-29).* ஆனால் சீகோன் மறுத்து விட்டான். வேறுவழியில்லாமல் இஸ்ரவேல் புத்திரர் சீகோனோடு யுத்தம் பண்ண வேண்டியதாயிற்று. *(உபா 2:30-37).*

சீகோனுக்கு விரோதமாக யுத்தம்பண்ணவேண்டுமென்று மோசே ஆசைப்படவில்லை. சீகோனுடைய தேசத்தை இஸ்ரவேல் புத்திரர் கடந்துபோகும்படியாக உத்தரவு வேண்டுமென்று மோசே தன் ஸ்தானாபதி மூலமாக செய்தி சொல்லியனுப்புகிறார். மோசேயின் செய்தி சமாதானத்தின் செய்தியாகயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் சீகோனுடைய தேசத்தின் வழியாக நடப்பதினால், தங்கள் மூலமாக அந்த தேசத்திற்கு எந்த சேதமும் ஏற்படாது என்று மோசே வாக்குப்பண்ணுகிறார்.

மோசே தன்னுடைய ஸ்தானாபதிகள் மூலமாக எஸ்போனின் ராஜாவாகிய சீகோனை நோக்கி, "நான் உம்முடைய தேசத்தைக் கடந்துபோகும்படி உத்தரவுகொடும்; வலதுபுறம் இடதுபுறம் சாயாமல் பெரும்பாதை வழியாய் நடப்பேன்" (உபா 2:27) என்றும்,

"சேயீரில் குடியிருக்கிற ஏசாவின் புத்திரரும், ஆர் பட்டணத்தில் குடியிருக்கிற மோவாபியரும் எனக்குச் செய்ததுபோல, நீரும், நான் யோர்தானைக் கடந்து, எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்குக் கொடுக்கிற தேசத்தில் சேருமட்டும், எனக்குப் புசிக்க ஆகாரத்தையும் குடிக்கத் தண்ணீரையும் கிரயத்துக்குத் தாரும்; நான் கால்நடையாய்க் கடந்து போகமாத்திரம் உத்தரவுகொடும்" (உபா 2:28,29) என்றும் செய்தி சொல்லியனுப்புகிறார்.

ஆனால் எஸ்போனின் ராஜாவோ முரட்டுக்குணமுள்ளவனாகவும், கடினமான இருதயமுள்ளவனாகவும் இருக்கிறான். இஸ்ரவேல் புத்திரர் தன் தேசத்தின் வழியாய்க் கடந்துபோவதற்கு சீகோன் அனுமதி கொடுக்கவில்லை. கர்த்தரே சீகோனுடைய மனதைக் கடினப்படுத்துகிறார். அவனுடைய இருதயத்தை உரங்கொள்ளப்பண்ணுகிறார். சீகோனையும் அவனுடைய தேசத்தையும் இஸ்ரவேல் புத்திரருடைய கையிலே ஒப்புக்கொடுக்கவேண்டும் என்பதும், சீகோனுடைய தேசத்தை இஸ்ரவேல் புத்திரர் சுதந்தரித்துக்கொள்ளும்படி அவனோடே யுத்தம் செய்யவேண்டும் என்பதும் கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

மோசே எஸ்போனின் ராஜாவாகிய சீகோனிடத்தில் தன்னுடைய ஸ்தானாபதிகளை சமாதான செய்திகளோடு அனுப்புகிறார். "ஆனாலும் தன் தேசத்தைக் கடந்து போகும்படி, எஸ்போனின் ராஜாவாகிய சீகோன் நமக்கு உத்தரவு கொடுக்கவில்லை; இந்நாளில் இருக்கிறதுபோல, உன் தேவனாகிய கர்த்தர் அவனை உன் கையில் ஒப்புக்கொடுக்கும்படி, அவன் மனதைக் கடினப்படுத்தி, அவன் இருதயத்தை உரங்கொள்ளப்பண்ணியிருந்தார்" (உபா 2:30) என்று மோசே சொல்லுகிறார்.

மோசே உபா 2:26-29 ஆகிய வசனங்களில் சீகோனிடம் அறிவிக்கும் காரியங்கள் நியாயமானவைகள். சீகோன் தன்னையும், தன் ஜனங்களையும் யுத்தம் பண்ணாமல் தவிர்த்திருக்கலாம். ஆனால் சீகோன் இறுமாப்பானவன், பெருமைக்காரன். சமாதான வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவன். சீகோன் யுத்தத்திற்கு ஆயத்தமாகிறான்.

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி, "இதோ, சீகோனையும் அவன் தேசத்தையும் உனக்கு ஒப்புக்கொடுக்கப் போகிறேன்; இதுமுதல் அவன் தேசத்தை வசப்படுத்தி, சுதந்தரித்துக்கொள்" (உபா 2:31) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் சீகோனுக்கு விரோதமாக இன்னும் யுத்தம்பண்ண புறப்பட்டுப்போகவில்லை. ஆனால் சீகோனோ, இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ண முந்திக்கொள்கிறான். சீகோன் தன்னுடைய அழிவுக்கு நேராக விரைந்து ஓடி வருகிறான்.

சீகோன் தன்னுடைய எல்லா ஜனங்களோடுங்கூட இஸ்ரவேல் புத்திரரோடே யுத்தம்பண்ணப் புறப்பட்டு, யாகாசிலே வருகிறான் (உபா 2:32).

"சீகோனை நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்கு ஒப்புக்கொடுத்தார்; நாம் அவனையும் அவன் குமாரரையும் அவனுடைய சகல ஜனங்களையும் முறிய அடித்து, அக்காலத்தில் அவன் பட்டணங்களையெல்லாம் பிடித்து, சகல பட்டணங்களிலும் இருந்த ஸ்திரீ புருஷரையும், பிள்ளைகளையும், ஒருவரையும் மீதியாகவைக்காமல் சங்காரம்பண்ணினோம். மிருகஜீவன்களையும் நாம் பிடித்த பட்டணங்களில் கொள்ளையடித்த பொருள்களையுமாத்திரம் நமக்கென்று வைத்துக்கொண்டோம்" (உபா 2:33-35) என்று மோசே சீகோனோடு நடைபெற்ற யுத்தத்தைப்பற்றியும், அந்த யுத்தத்திலே கர்த்தர் சீகோனை தங்கள் கையிலே ஒப்புக்கொடுத்ததுபற்றியும் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் சீகோனோடு யுத்தம் பண்ணியதினால் ஏற்பட்ட விளைவுகளின் விவரம் வருமாறு :

1. அவனை நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்கு ஒப்புக்கொடுத்தார் (உபா 2:33)

2. நாம் அவனையும் அவன் குமாரரையும் அவனுடைய சகல ஜனங்களையும் முறிய அடித்தோம்.

3. அவன் பட்டணங்களையெல்லாம் பிடித்தோம் (உபா 2:34)

4. பட்டணங்களிலும் இருந்த ஸ்திரீ புருஷரையும், பிள்ளைகளையும், ஒருவரையும் மீதியாகவைக்காமல் சங்காரம்பண்ணினோம்.

5. மிருகஜீவன்களையும் கொள்ளையடித்தோம் (உபா 2:35)

6. பட்டணங்களில் கொள்ளையடித்த பொருள்களையுமாத்திரம் நமக்கென்று வைத்துக்கொண்டோம்.

7. நமக்கு எதிர்த்துநிற்கத்தக்க அரணிப்பான பட்டணம் இருந்ததில்லை, எல்லாவற்றையும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்கு ஒப்புக்கொடுத்தார் (உபா 2:36)

சீகோனுக்கு விரோதமாக நடைபெற்ற யுத்தத்தில், இஸ்ரவேல் புத்திரர் சீகோனுடைய சகல ஸ்திரீகளையும், புருஷரையும் சங்காரம்பண்ணுகிறார்கள். அவர்கள் இஸ்ரவேலின் சத்துருக்களாக மரித்துப்போகவில்லை. அவர்கள் எல்லோரும் தேவனுடைய நீதிக்கு பலிகளாக செலுத்தப்படுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் சீகோனுடைய பட்டணங்களையெல்லாம் பிடிக்கிறார்கள்.

அர்னோன் ஆற்றங்கரையில் இருக்கிற ஆரோவேரும் ஆற்றண்டையில் இருக்கிற பட்டணமும் தொடங்கி, கீலேயாத்வரைக்கும் நமக்கு எதிர்த்துநிற்கத்தக்க அரணிப்பான பட்டணம் இருந்ததில்லை, எல்லாவற்றையும் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், இஸ்ரவேல் புத்திரருக்கு ஒப்புக்கொடுக்கிறார் (உபா 2:36).

இஸ்ரவேல் புத்திரர் அம்மோன் புத்திரருடைய தேசத்தையும், யாபோக் ஆற்றங்கரையிலுள்ள இடங்களையும், மலைகளிலுள்ள பட்டணங்களையும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தங்களுக்கு விலக்கின மற்ற இடங்களையும் சேராமல் விலகிப்போகிறார்கள் (உபா 2:37)

சீகோன் ராஜ்யத்திற்கு அம்மோன் வடமேற்கு திசையில் உள்ளது. ஓகின் ராஜ்யத்திற்கு அம்மோன் தென்மேற்கில் உள்ளது. யாப்போக்கு ஆற்றுக்கு அருகில் அம்மோன் அமைந்திருக்கிறது. யாப்போக்கு ஆறு சீகோனையும், ஓகையும் இரண்டாகப் பிரிக்கிறது. இந்த ஆற்றின் கரையில் யாக்கோபு கர்த்தரின் தூதனோடு யுத்தம் பண்ணினார். (ஆதி 32:22-32). மோவாப், ஏதோமியரின் தேசங்களைப் போன்று அம்மோனியரின் தேசமும் இந்த சமயத்தில் யுத்தத்திலிருந்து விலக்கப்பட்டிருக்கிறது. (உபா 2:4-23).

3 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் பாசானின் ராஜாவாகிய ஓகை முறியடித்த சம்பவத்தையும், அவனுடைய தேசத்தை பிடித்துக்கொண்ட சம்பவத்தையும் மோசே இந்த அதிகாரத்தில் சொல்லுகிறார் (உபா 3:1-11).

இஸ்ரவேல் புத்திரர் யோர்தானுக்கு இக்கரையிலே, சமீபத்தில் பிடித்துக்கொண்ட தேசங்களை, மோசே இஸ்ரவேலின் இரண்டரைக் கோத்திரத்தாருக்கு பங்குவீதமாகக் கொடுக்கிறார் (உபா 3:12-17). மோசே இந்த இரண்டரைக் கோத்திரத்தாருக்கு ஒரு சில நிபந்தனைகளையும் சொல்லுகிறார் (உபா 3:18-20).

இஸ்ரவேல் புத்திரர் ஆரம்பித்திருக்கிற இந்த யுத்தங்களை, யோசுவா கானான் தேசத்திலே தொடர்ந்து மேற்கொள்ளவேண்டுமென்று, மோசே அவருக்கு ஆலோசனை சொல்லி, அவரை உற்சாகப்படுத்துகிறார் (உபா 3:21,22).

கானான் தேசத்தைப் பார்க்கும்படி கர்த்தர் தனக்கு உத்தரவு கொடுத்தருளவேண்டுமென்று மோசே விண்ணப்பம்பண்ணுகிறார் (உபா 3:23-25). கர்த்தரோ மோசேயின் விண்ணப்பத்தை அங்கீகரிக்க மறுத்துவிடுகிறார் (உபா 3:26-29).

ஓக்
உபா 3:1-11

உபா 3:1. பின்பு நாம் திரும்பி, பாசானுக்குப் போகிற வழியாய்ப் போனோம்; பாசானின் ராஜாவாகிய ஓக் தன்னுடைய சகல ஜனங்களோடும் நம்மோடே எதிர்த்து யுத்தம்பண்ணும்படி புறப்பட்டு, எத்ரேயிக்கு வந்தான்.

உபா 3:2. அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: அவனுக்குப் பயப்படவேண்டாம்; அவனையும் அவனுடைய ஜனங்கள் எல்லாரையும் அவன் தேசத்தையும் உன் கையில் ஒப்புக்கொடுத்தேன்; எஸ்போனிலே குடியிருந்த எமோரியரின் ராஜாவாகிய சீகோனுக்கு நீ செய்தது போல, அவனுக்கும் செய்வாய் என்றார்.

உபா 3:3. அப்படியே நம்முடைய தேவனாகிய கர்த்தர் பாசானின் ராஜாவாகிய ஓகையும் அவனுடைய சகல ஜனங்களையும் நம்முடைய கையில் ஒப்புக்கொடுத்தார்; அவனுக்கு ஒருவரும் மீதியாயிராமற் போகுமட்டும் அவனை முறிய அடித்தோம்.

உபா 3:4. அக்காலத்திலே அவனுடைய பட்டணங்களையெல்லாம் பிடித்தோம்; அவர்களிடத்தில் நாம் பிடித்துக்கொள்ளாத பட்டணம் இல்லை; பாசானிலிருந்த ஓகின் ராஜ்யமான அறுபது பட்டணங்களுள்ள அர்கோப் தேசம் முழுவதையும் பிடித்தோம்.

உபா 3:5. அந்தப் பட்டணங்களெல்லாம் உயர்ந்த மதில்களாலும் வாசல்களாலும் தாழ்ப்பாள்களாலும் அரணாக்கப்பட்டிருந்தது; அவைகள் அன்றி, மதிலில்லாத பட்டணங்களும் அநேகம்.

உபா 3:6. அவைகளையும் சங்காரம்பண்ணினோம்; நாம் எஸ்போனின் ராஜாவாகிய சீகோனுக்குச் செய்ததுபோல, அந்த எல்லாப் பட்டணங்களிலுமுள்ள புருஷரையும் ஸ்திரீகளையும் பிள்ளைகளையும் சங்காரம்பண்ணினோம்.

உபா 3:7. ஆனாலும் பட்டணங்களிலுள்ள ஆஸ்தியையும் சகல மிருகஜீவன்களையும் நமக்கென்று கொள்ளையிட்டோம்.

உபா 3:8. இப்படியே யோர்தானுக்கு இப்புறத்திலுள்ள அர்னோன் நதிதொடங்கி, எர்மோன் மலைவரைக்குமுள்ள தேசத்தை நாம் அக்காலத்தில் எமோரியருடைய இரண்டு ராஜாக்களிடத்திலுமிருந்து பிடித்தோம்.

உபா 3:9. சீதோனியர் எர்மோனைச் சீரியோன் என்கிறார்கள்; எமோரியரோ அதைச் சேனீர் என்கிறார்கள்.

உபா 3:10. சமனான நாட்டின் எல்லாப் பட்டணங்களையும், கீலேயாத் முழுவதையும், சல்காயி, எத்ரேயி என்னும் பாசானிலிருந்த ஓகுடைய ராஜ்யத்தின் பட்டணங்கள்மட்டுமுள்ள பாசான் முழுவதையும் பிடித்தோம்.

உபா 3:11. மீந்திருந்த இராட்சதரில் பாசானின் ராஜாவாகிய ஓக் என்பவன்மாத்திரம் தப்பியிருந்தான்; இரும்பினாற் செய்த அவனுடைய கட்டில் மனிதருடைய கை முழத்தின்படியே, ஒன்பது முழ நீளமும் நாலு முழ அகலமுமாயிருந்தது; அது அம்மோன் புத்திரருடைய ரப்பாபட்டணத்தில் இருக்கிறதல்லவா?

இஸ்ரவேல் புத்திரருக்கு பாசான் தேசத்தின் ராஜாவாகிய ஓகின்மீது வெற்றி கிடைத்திருக்கிறது. கர்த்தரே ஓகையும், அவனுடைய தேசத்தையும், இஸ்ரவேல் புத்திரர் கையிலே ஒப்புக்கொடுத்திருக்கிறார். பாசான் தேசம் பெரிய தேசம். அது மிகவும் செழிப்பான தேசம். அக்காலத்தில் பாசானின் எருதுகள் மிகவும் பிரபல்யமானவை.

பாசானின் ராஜாவாகிய ஓக் ஒரு இராட்சதன். அவனுடைய சேனை திரளானது. அது வலிமையுள்ளது. ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர் ஓகை முறியடிக்கிறார்கள். கர்த்தர் ஓகையும் அவனுடைய ஜனங்கள் எல்லாரையும், அவன் தேசத்தையும் இஸ்ரவேல் புத்திரர் கையிலே ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

கர்த்தர் அவர்களை ஒப்புக்கொடுக்கும்போது, அவர்கள் இராட்சதர்களாகயிருந்தாலும், அவர்கள் இஸ்ரவேல் புத்திரருடைய கைகளிலே, வெட்டுக்கிளிகளைப்போல சாதாரண ஜனங்களாயிருப்பார்கள்.

கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர். அவருக்கு விரோதமாக யாராலும் எதிர்த்து நின்று யுத்தம்பண்ண முடியாது. கர்த்தருடைய வல்லமைக்கு முன்பாக, மனுஷருடைய வல்லமை ஒன்றுமில்லாமல் போய்விடும். ஓகின் சேனையில் திரளான இராணுவ வீரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோருமே பலசாலிகள். ஓகின் தேசத்திலே அரணான பட்டணங்கள் மாத்திரம் அறுபது இருக்கிறது. இவை தவிர மதிலில்லாத பட்டணங்களும் அநேகம் இருக்கிறது. ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர் பாசானின் ராஜாவாகிய ஓகையும், அவனுடைய சகல ஜனங்களையும் முறியடிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் பாசானின் ராஜாவாகிய ஓகுக்கு விரோதமாக யுத்தம்பண்ணின சம்பவத்தை மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு ஞாபகப்படுத்தி சொல்லுகிறார்.

"பின்பு நாம் திரும்பி, பாசானுக்குப் போகிற வழியாய்ப் போனோம்; பாசானின் ராஜாவாகிய ஓக் தன்னுடைய சகல ஜனங்களோடும் நம்மோடே எதிர்த்து யுத்தம்பண்ணும்படி புறப்பட்டு, எத்ரேயிக்கு வந்தான்" (உபா 3:1) என்று மோசே சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் சீகோனையும், எமோரியரையும் முழுவதுமாக அழித்த பின்பு, யாப்போக்கிலிருந்து யோர்தான் நதிக்கரையிலுள்ள அர்னோன் தேசம் வரையிலும் சுதந்தரித்துக் கொள்கிறார்கள். அதன் பின்பு, அவர்கள் பாசானுக்குச் சென்று, பாசானின் ராஜாவாகிய ஓகை ஜெயிக்கிறார்கள் (உபா 3:1-22).

ஓக் ஒரு இராட்சதன். இவன் ரெபாயீமியரில் ஒருவன். இவனுடைய கட்டில் இரும்பினால் செய்யப்பட்டிருக்கிறது. அதன் நீளம் ஒன்பது முழம். அதன் அகலம் நாலு முழம். (உபா 3:11) பல இராட்சத சந்ததியார் எண்ணிக்கையில் பலத்திருக்கிறார்கள். ஆனால் ரெபாயீமியரோ அழிந்துபோய்க் கொண்டிருக்கிறார்கள். மீந்திருந்த இராட்சதரில் ஓக் என்பவன் மாத்திரம் தப்பியிருக்கிறான் (உபா 3:11).

ஒக் தன்னுடைய சுயபலத்தையும், தன்னுடைய இராணுவத்தின் பலத்தையும் நம்புகிறான். அவனுடைய இருதயம் கடினப்பட்டிருக்கிறது. பாசானின் ராஜாவாகிய ஒக் இஸ்ரவேல் புத்திரர்களோடு எதிர்த்து யுத்தம்பண்ணும்படி புறப்பட்டு வருகிறான். அவன் தன்னுடைய அழிவைத்தேடி வேகமாக புறப்பட்டு வருகிறான். இஸ்ரவேல் புத்திரர் ஒகையும் அவனுடைய சகல ஜனங்களையும் பார்த்து பயப்படக்கூடாது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "அவனுக்குப் பயப்படவேண்டாம்; அவனையும் அவனுடைய ஜனங்கள் எல்லாரையும் அவன் தேசத்தையும் உன் கையில் ஒப்புக்கொடுத்தேன்; எஸ்போனிலே குடியிருந்த எமோரியரின் ராஜாவாகிய சீகோனுக்கு நீ செய்தது போல, அவனுக்கும் செய்வாய்" (உபா 3:2) என்று சொல்லுகிறார்.

மோசே கர்த்தரை நம்புகிறார். மோசேயின் விசுவாசம் உறுதியாயிருக்கிறது. அவர் கர்த்தருக்கு பயப்படுகிறவர். கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் மனுஷருக்கு பயப்படமாட்டார்கள். மோசே பாசானின் ராஜாவாகிய ஒகை பார்த்தோ, அல்லது அவனோடு வருகிற அவனுடைய சகல ஜனங்களையும் பார்த்தோ பயப்படவில்லை. ஆனாலும் கர்த்தர் மோசேயை நோக்கி, "அவனுக்கு பயப்படவேண்டாம்" என்று சொல்லுகிறார்.

மோசே பாசானின் ராஜாவாகிய ஒகுக்கு பயப்படாவிட்டாலும், இஸ்ரவேல் புத்திரரில் அநேகர் அவனுக்கு பயப்படுகிறார்கள். அவன் ஒரு இராட்சதனாகயிருப்பதினாலும், அவனோடுகூட திரளான ஜனங்கள் தங்களுக்கு எதிராக யுத்தம்பண்ண வருவதினாலும், அவர்களைப் பார்த்து, இஸ்ரவேல் புத்திரரில் சிலர் பயப்படுகிறார்கள். அவர்கள் ஒகை பார்த்து பயப்படவேண்டாம் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கர்த்தருடைய வார்த்தையை மறுபடியுமாய்ச் சொல்லவேண்டும். கர்த்தர் ஒகையும், அவனுடைய ஜனங்கள் எல்லாரையும், அவனுடைய தேசத்தையும் இஸ்ரவேல் புத்திரர் கையிலே ஒப்புக்கொடுத்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் ஒகையும் அவனுடைய ஜனங்களையும் அழித்துப்போட்டு, அவனுடைய தேசத்தைக் கட்டிக்கொள்ளவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய வார்த்தையை நம்புகிறார்கள். அவர்கள் கர்த்தருக்குள் திடன்கொள்கிறார்கள். ஒகும் அவனுடைய சகல ஜனங்களும் இஸ்ரவேல் புத்திரரோடே எதிர்த்து யுத்தம்பண்ணும்படி புறப்பட்டு வரும்போது, இஸ்ரவேல் புத்திரரும் அவர்களை எதிர்த்து யுத்தம்பண்ணுகிறார்கள். யுத்தம் கர்த்தருடையது. கர்த்தர் தம்முடைய வார்த்தையின் பிரகாரம், ஒகையும், அவனுடைய ஜனங்களையும், அவனுடைய தேசத்தையும் இஸ்ரவேல் புத்திரர் கையிலே ஒப்புக்கொடுக்கிறார்.

மோசே இந்த சம்பவத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு நினைவுபடுத்தி சொல்லுகிறார். "அப்படியே நம்முடைய தேவனாகிய கர்த்தர் பாசானின் ராஜாவாகிய ஒகையும் அவனுடைய சகல ஜனங்களையும் நம்முடைய கையில் ஒப்புக்கொடுத்தார்; அவனுக்கு ஒருவரும் மீதியாயிராமற் போகுமட்டும் அவனை முறிய அடித்தோம்" (உபா 3:3) என்றும்,

"அக்காலத்திலே அவனுடைய பட்டணங்களையெல்லாம் பிடித்தோம்; அவர்களிடத்தில் நாம் பிடித்துக்கொள்ளாத பட்டணம் இல்லை; பாசானிலிருந்த ஒகின் ராஜ்யமான அறுபது பட்டணங்களுள்ள அர்கோப் தேசம் முழுவதையும் பிடித்தோம்" (உபா 3:4) என்றும் மோசே சொல்லுகிறார்.

யோர்தான் நதியின் கிழக்கு பகுதியிலுள்ள தேசம் அனைத்தும் அர்கோப் தேசம் என்று அழைக்கப்படுகிறது. இது ஒகினுடைய ராஜ்யத்தின் ஒரு பகுதியாகும் (உபா 3:4; 1இராஜா 4:13)

பூர்வகாலங்களில் அர்கோபில் இராட்சத சந்ததியார் குடியிருந்தார்கள். அவர்களுடைய பெரிய வீடுகள் இன்றும் புதைபொருள் ஆராய்ச்சியின் மூலமாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. வீட்டுச்சுவர்களின் அகலம் 5 முதல் 8 அடி வரையிலும் உள்ளது. வீட்டின் கூரை 20 முதல் 30 அடி உயரம் வரையிலும் உள்ளது. நிலைக்கதவுகளின் உயரம் சுமார் 10 அடியாகும்.

அந்தப் பட்டணங்களெல்லாம் உயர்ந்த மதில்களாலும் வாசல்களாலும் தாழ்ப்பாள்களாலும் அரணாக்கப்பட்டிருக்கிறது; அவைகள் அன்றி, மதிலில்லாத பட்டணங்களும் அநேகம் (உபா 3:5).

இஸ்ரவேல் புத்திரர் அவைகளையும் சங்காரம்பண்ணுகிறார்கள்; அவர்கள் எஸ்போனின் ராஜாவாகிய சீகோனுக்குச் செய்ததுபோல, அந்த எல்லாப் பட்டணங்களிலுமுள்ள புருஷரையும் ஸ்திரீகளையும் பிள்ளைகளையும் சங்காரம்பண்ணுகிறார்கள் (உபா 3:6).

உபா 3:4 ஆவது வசனத்தில் ஒகின் ராஜ்யத்தில் அறுபது பட்டணங்கள் இருந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. இவை உயர்ந்த மதில்களாலும் வாசல்களாலும் தாழ்ப்பாள்களாலும் அரணாக்கப்பட்டிருக்கிறது. அவைகள் அன்றி, மதிலில்லாத பட்டணங்களும் அநேகமிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் மீதியானியரை முழுவதுமாக அழிக்கவில்லை. இதனால் மோசேக்கு அவர்கள்மீது கோபம் உண்டாயிற்று (எண் 31:13-19) இப்பொழுது இஸ்ரவேல் புத்திரர்கள் எதிரிகளைச் சங்காரம் பண்ண வேண்டிய பிரகாரமாகச் சங்காரம் பண்ணி விடுகிறார்கள். மீதியான் தேசத்தில் செய்ததுபோன்றே புருஷசம்யோகத்தை அறியாத ஸ்திரீகளை உயிரோடு பிடித்துக் கொள்கிறார்கள். (எண் 31:18).

இஸ்ரவேல் புத்திரர் பட்டணங்களிலுள்ள ஆஸ்தியையும் சகல மிருகஜீவன்களையும் தங்களுக்கென்று கொள்ளையிடுகிறார்கள் (உபா 3:7). மீதியானில் கொள்ளையிட்ட பொருட்கள் யுத்தம் பண்ணியவர்களுக்கும், சபையாருக்கும் பிரித்துக் கொடுக்கப்படுகிறது (எண் 31:25-54).

பாசான் தேசத்திலுள்ள எல்லா பட்டணங்களையும் இஸ்ரவேல் புத்திரர் பிடித்துக்கொள்கிறார்கள். அவர்களுடைய சகல ஆஸ்திகளையும் கொள்ளையிடுகிறார்கள்.

இப்படியே இஸ்ரவேல் புத்திரர் யோர்தானுக்கு இப்புறத்திலுள்ள அர்னோன் நதிதொடங்கி, எர்மோன் மலைவரைக்குமுள்ள தேசத்தை நாம் அக்காலத்தில் எமோரியருடைய இரண்டு ராஜாக்களிடத்திலுமிருந்து பிடித்துக்கொள்கிறார்கள் (உபா 3:8).

மோவாபிற்கும், சீகோனுக்கும் இடையில் அர்னோன் நதி எல்லையாக அமைந்திருக்கிறது. எர்மோன் மலை பாலஸ்தீன தேசத்திற்கு வடக்கு கடைசியில் உள்ளது. யாப்போக்கு நதி எமோரியரின் இரண்டு ராஜ்யங்களைப் பிரிக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் சமனான நாட்டின் எல்லாப் பட்டணங்களையும், கீலேயாத் முழுவதையும், சல்காயி, எத்ரேயி என்னும் பாசானிலிருந்த ஒகுடைய ராஜ்யத்தின் பட்டணங்கள்மட்டுமுள்ள பாசான் முழுவதையும் பிடித்துக்கொள்கிறார்கள் (உபா 3:10).

மோசே பாசானுக்கு விரோதமான யுத்தத்தைப்பற்றிச் சொல்லும்போது, பழங்காலத்து சரித்திர சம்பவங்களையும் சொல்லுகிறார். அவர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "சீதோனியர் எர்மோனைச் சீரியோன் என்கிறார்கள்; எமோரியரோ அதைச் சேனீர் என்கிறார்கள்" (உபா 3:9) என்று சொல்லுகிறார். ஒகின் கீழிருந்த பாசானியரும், எமோரியராகவே இருக்கிறார்கள்.

சீரியோன் என்னும் பெயருக்கு மார்க்கவசம் என்று பொருள். சேனீர் என்னும் பெயருக்கு போர்க்கவசம் என்று பொருள்.

மேலும் மோசே இஸ்ரவேல் ஜனத்தாரிடம், இந்த யுத்தத்தைப்பற்றிச் சொல்லும்போது, "மீந்திருந்த இராட்சதரில் பாசானின் ராஜாவாகிய ஓக் என்பவன்மாத்திரம் தப்பியிருந்தான்; இரும்பினாற் செய்த அவனுடைய கட்டில் மனிதருடைய கை முழத்தின்படியே, ஒன்பது முழ நீளமும் நாலு முழ அகலமுமாயிருந்தது; அது அம்மோன் புத்திரருடைய ரப்பாபட்டணத்தில் இருக்கிறதல்லவா?" (உபா 3:11) என்றும் சொல்லுகிறார்.

இராட்சதர் என்பதற்கான எபிரெய வார்த்தை "ராஃப்பா" என்பதாகும். ரெப்பாயீமியர் இராட்சத சந்ததியார். பூர்வகாலங்களில் இவர்கள் பாலஸ்தீன தேசத்தில் குடியிருந்தார்கள். ஆபிரகாமின் நாட்களில் கிழக்கு தேசத்தின் ராஜாக்கள் ரெப்பாயீமியரை யுத்தத்தில் ஜெயித்தார்கள். இது 470 வருஷங்களுக்கு முன்பு நடைபெற்ற சம்பவம். (ஆதி 14:5)

இஸ்ரவேல் புத்திரர் ஓகோடு யுத்தம் பண்ணியதினால் ஏற்பட்ட விளைவுகளாவன:

1. தேவனாகிய கர்த்தர் பாசானின் ராஜாவாகிய ஓகையும் அவனுடைய சகல ஜனங்களையும் இஸ்ரவேலர் கையில் ஒப்புக்கொடுத்தார் (உபா 3:3).

2. ஒருக்கு ஒருவரும் மீதியாயிராமற் போகுமட்டும் இஸ்ரவேலர் அவனை முறிய அடித்தார்கள்.

3. இஸ்ரவேலர் அறுபது பட்டணங்களை பிடித்தார்கள். அந்தப் பட்டணங்களெல்லாம் உயர்ந்த மதில்களாலும் வாசல்களாலும் தாழ்ப்பாள்களாலும் அரணாக்கப் பட்டிருந்தது; அவைகள் அன்றி, மதிலில்லாத பட்டணங்களும் அநேகம் (உபா 3:4-5).

4. இஸ்ரவேலர் அவைகளையும் சங்காரம்பண்ணினார்கள்; அவர்கள் எஸ்போனின் ராஜாவாகிய சீகோனுக்குச் செய்ததுபோல, அந்த எல்லாப் பட்டணங்களிலுமுள்ள புருஷரையும் ஸ்திரீகளையும் பிள்ளைகளையும் சங்காரம்பண்ணினார்கள் (உபா 3:6).

5. பட்டணங்களிலுள்ள ஆஸ்தியையும் சகல மிருகஜீவன்களையும் இஸ்ரவேலர் தங்களுக்கென்று கொள்ளையிட்டார்கள் (உபா 3:7).

6. யோர்தானுக்கு இப்புறத்திலுள்ள அர்னோன் நதிதொடங்கி, எர்மோன் மலைவரைக்குமுள்ள தேசத்தை இஸ்ரவேலர் அக்காலத்தில் எமோரியருடைய இரண்டு ராஜாக்களிடத்திலுமிருந்து பிடித்தார்கள். (உபா 3:8-9).

7. இஸ்ரவேலர் சமனான நாட்டின் எல்லாப் பட்டணங்களையும், கிலேயாத் முழுவதையும், சல்காயி, எத்ரேயி என்னும் பாசானிலிருந்த ஓகுடைய ராஜ்யத்தின் பட்டணங்கள்மட்டுமுள்ள பாசான் முழுவதையும் பிடித்தார்கள் (உபா 3:10).

இரண்டரைக்கோத்திரம்
உபா 3:12-20

உபா 3:12. அக்காலத்திலே சுதந்தரமாகப்பெற்றுக்கொண்ட தேசத்தை அர்னோன் நதியருகேயுள்ள ஆரோவேர் தொடங்கி, கிலேயாத் மலைநாட்டில் பாதியையும், அதிலிருக்கிற பட்டணங்களையும், ரூபனியருக்கும் காத்தியருக்கும் கொடுத்தேன்.

உபா 3:13. கிலேயாத்தின் மற்றப் பங்கையும், ஓகின் ராஜ்யமாயிருந்த பாசான் முழுவதையும், மனாசேயின் பாதிக் கோத்திரத்துக்குக் கொடுத்ததும் அன்றி, இராட்சத தேசமென்னப்பட்ட பாசானுக்குள்ளான அர்கோப் சீமையாவையும் கொடுத்தேன்.

உபா 3:14. மனாசேயின் குமாரனாகிய யாவீர் அர்கோப் சீமை முழுவதையும் கேசூரியர் மாகாத்தியர் என்பவர்களுடைய எல்லை மட்டும் கட்டிக்கொண்டு, அதற்குத் தன் நாமத்தின்படியே பாசான் அவோத்யாயீர் என்று பேரிட்டான், அது இந்நாள் வரைக்கும் வழங்கிவருகிறது.

உபா 3:15. மாகீருக்குக் கிலேயாத்தைக் கொடுத்தேன்.

உபா 3:16. மேலும் கிலேயாத் தொடங்கி அர்னோன் நதி ஓடுகிற பள்ளத்தாக்கும், கடையாந்தரமுமான அம்மோன் புத்திரரின் எல்லையாகிய யாபோக்கு ஆறுமட்டும் இருக்கிற தேசத்தையும்,

உபா 3:17. கின்னரேத் தொடங்கி அஸ்தோத் பிஸ்காவுக்குத் தாழ்வாய்க் கிழக்கே இருக்கிற உப்புக்கடலான சமனான வெளியின் கடல்மட்டும், யோர்தானின் எல்லைக்குள் அடங்கிய சமனான வெளியையும், ரூபனியருக்கும் காத்தியருக்கும் கொடுத்தேன்.

உபா 3:18. அக்காலத்திலே நான் உங்களை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு இந்த தேசத்தைச் சுதந்தரமாகக் கொடுத்தார்; யுத்தஞ்செய்யத்தக்கவர்களாகிய நீங்கள் எல்லாரும் இஸ்ரவேல் புத்திரரான உங்கள் சகோதரருக்கு முன்னே ஆயுதபாணிகளாக நடந்து போங்கள்.

உபா 3:19. உங்கள் மனைவிகளும் உங்கள் பிள்ளைகளும் உங்கள் ஆடுமாடுகளும்மாத்திரம் நான் உங்களுக்குக் கொடுத்த உங்கள் பட்டணங்களில் இருக்கட்டும்; உங்களுக்குத் திரளான ஆடுமாடுகள் உண்டென்று அறிவேன்.

உபா 3:20. ஆனாலும் கர்த்தர் உங்களை இளைப்பாறப்பண்ணினதுபோல, உங்கள் சகோதரரையும் இளைப்பாறப்பண்ணி, யோர்தானுக்கு அப்புறத்தில் உங்கள் தேவனாகிய கர்த்தர் கொடுக்கிற தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுமட்டும் நீங்கள் இருந்து, பின்பு அவரவர் நான் உங்களுக்குக் கொடுத்த உங்கள் சுதந்தரத்துக்குத் திரும்புவீர்களாக என்றேன்.

யோர்தானுக்கு இக்கரையிலுள்ள தேசங்களை கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய கையிலே ஒப்புக்கொடுக்கிறார். அந்த தேசத்தாருக்கு விரோதமாக நடைபெற்ற யுத்தங்களில் இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயம் கிடைக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் அவர்களுடைய தேசம் முழுவதையும் பிடித்துக்கொள்கிறார்கள். மோசே யோர்தான் நதிக்கு இப்புறத்திலுள்ள அந்த தேசங்களை, ரூபன் புத்திரர், காத் புத்திரர், மனாசேயின் பாதிக்கோத்திரத்தார் ஆகியோருக்கு சுதந்தரமாகப் பிரித்துக்கொடுக்கிறார்.

யோர்தானுக்கு இப்புறத்திலுள்ள தேசத்தை மோசே இஸ்ரவேலின் இரண்டரைக் கோத்திரத்தாருக்கு பிரித்துக்கொடுத்த சம்பவம், எண்ணாகமம் 32-ஆவது அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

மோசே அக்காலத்திலே சுதந்தரமாகப்பெற்றுக்கொண்ட தேசத்தை அர்னோன் நதியருகேயுள்ள ஆரோவேர் தொடங்கி, கீலேயாத் மலைநாட்டில் பாதியையும், அதிலிருக்கிற பட்டணங்களையும், ரூபனியருக்கும் காத்தியருக்கும் கொடுக்கிறார் (உபா 3:12).

மோசே கீலேயாத்தின் மற்றப் பங்கையும், ஓகின் ராஜ்யமாயிருந்த பாசான் முழுவதையும், மனாசேயின் பாதிக் கோத்திரத்துக்குக் கொடுத்ததும் அன்றி, இராட்சத தேசமென்னப்பட்ட பாசானுக்குள்ளான அர்கோப் சீமை யாவையும் கொடுக்கிறார் (உபா 3:13).

இராட்சத தேசம் என்பது ரெப்பாயீமின் தேசமாகும். ரெப்பாயீம் பாசானின் பட்டணங்களைக் கட்டினான். அந்தத் தேசங்களை ரெப்பாயீமும் எண் 1:28; எண் 2:10-12,20-23; ஆதி 6:3; எண் 13:33; ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற மற்ற இராட்சத சந்ததியாரும் சேர்ந்து சுதந்தரித்துக் கொண்டார்கள்.

மனாசேயின் குமாரனாகிய யாவீர் அர்கோப் சீமை முழுவதையும் கேசூரியர் மாகாத்தியர் என்பவர்களுடைய எல்லை மட்டும் கட்டிக்கொண்டு, அதற்குத் தன் நாமத்தின்படியே பாசான் அவோத்யாயீர் என்று பேரிடுகிறான், அது இந்நாள் வரைக்கும் வழங்கிவருகிறது (உபா 3:14).

பாசான் அவோத்யாயீர் என்னும் பெயருக்கு பாசானிலுள்ள யாவீரின் கிராமங்கள் என்று பொருள். (யோசு 13:30; நியா 10:4; 1இராஜா 4:13; 1நாளா 2:23).

மோசே கீலேயாத் தேசத்தை இஸ்ரவேலின் இரண்டரை கோத்திரத்தாருக்கு பங்கிட்டு கொடுக்கும்போது "இந்நாள் வரைக்கும்" என்னும் வாக்கியத்தைப் பயன்படுத்துகிறார். இந்த வாக்கியத்திற்கு, இந்தப்புஸ்தகம் எழுதப்படும் வரைக்கும், அதாவது, எண் 21 ஆவது அதிகாரத்திலிருந்து உபா 1:3 ஆவது வசனத்தின் நாற்பது வருஷங்கள் வரைக்கும் என்பது பொருளாகும்.

மோசே மாகீருக்குக் கீலேயாத்தைக் கொடுக்கிறார் (உபா 3:15).

மேலும் கீலேயாத் தொடங்கி அர்னோன் நதி ஓடுகிற பள்ளத்தாக்கும், கடையாந்தரமுமான அம்மோன் புத்திரரின் எல்லையாகிய யாபோக்கு ஆறுமட்டும் இருக்கிற தேசத்தையும், கின்னரேத் தொடங்கி அஸ்தோத் பிஸ்காவுக்குத் தாழ்வாய்க் கிழக்கே இருக்கிற உப்புக்கடலான சமனான வெளியின் கடல்மட்டும், யோர்தானின் எல்லைக்குள் அடங்கிய சமனான வெளியையும், மோசே ரூபனியருக்கும் காத்தியருக்கும் கொடுக்கிறார் (உபா 3:16,17).

அம்மோனியர் யோர்தான் நதிக்கரையில் குடியிருக்கவில்லை. அவர்கள் யாப்போக்கு ஆற்றின் அருகில் குடியிருக்கிறார்கள். சவக்கடலிலிருந்து யோர்தான் வழியாகக் கலிலேயாக்கடல் முழுவதும் எர்மோன் மலையும் இஸ்ரவேலருக்குரியது.

அஸ்தோத் பிஸ்கா என்னும் பெயருக்கு பிஸ்காவின் நீரூற்றுகள் என்று பொருள்.

மோசே இஸ்ரவேலின் இரண்டு கோத்திரத்தாருக்கு, யோர்தானுக்கு இப்புறத்திலுள்ள தேசத்தை சுதந்தரமாகப் பிரித்துக்கொடுக்கும்போது ஒரு சில நிபந்தனைகளையும் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தைச் சுதந்தரிக்கவேண்டும். அந்த தேசத்தை சுதந்தரிப்பதற்கு, இப்போது சுதந்தரம் பெற்றுக்கொண்ட இரண்டரைக் கோத்திரத்தாரும் உதவி செய்யவேண்டும். மோசே சொன்ன இந்த நிபந்தனைக்கு கீழ்ப்படிவதாக, இரண்டரைக்கோத்திரத்தாரும் வாக்குப்பண்ணுகிறார்கள். மோசே அந்த சம்பவத்தை இங்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார்.

அக்காலத்திலே மோசே இஸ்ரவேலின் இரண்டாரைக்கோத்திரத்தாரை நோக்கி, "உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு இந்த தேசத்தைச் சுதந்தரமாகக் கொடுத்தார்; யுத்தஞ்செய்யத்தக்கவர்களாகிய நீங்கள் எல்லாரும் இஸ்ரவேல் புத்திரரான உங்கள் சகோதரருக்கு முன்னே ஆயுதபாணிகளாக நடந்து போங்கள்" (உபா 3:18) என்றும்,

"உங்கள் மனைவிகளும் உங்கள் பிள்ளைகளும் உங்கள் ஆடுமாடுகளும்மாத்திரம் நான் உங்களுக்குக் கொடுத்த உங்கள் பட்டணங்களில் இருக்கட்டும்; உங்களுக்குத் திரளான ஆடுமாடுகள் உண்டென்று அறிவேன்" (உபா 3:19) என்றும்,

"ஆனாலும் கர்த்தர் உங்களை இளைப்பாறப்பண்ணினதுபோல, உங்கள் சகோதரரையும் இளைப்பாறப்பண்ணி, யோர்தானுக்கு அப்புறத்தில் உங்கள் தேவனாகிய கர்த்தர் கொடுக்கிற தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுமட்டும் நீங்கள் இருந்து, பின்பு அவரவர் நான் உங்களுக்குக் கொடுத்த உங்கள் சுதந்தரத்துக்குத் திரும்புவீர்களாக" (உபா 3:20) என்றும் சொன்னார்.

ரூபனியரும், காத்தியரும் மற்ற கோத்திரத்தாரோடு சேர்ந்து, ஆயுதபாணிகளாகச் செல்ல வேண்டும். தேசத்தைச் சுதந்தரிப்பதற்கு அவர்களுக்கு உதவி புரிய வேண்டும். அதன் பின்பு, அவர்கள் தங்கள் காணியாட்சிக்குத் திரும்பி வரலாம். (உபா 3:18-20).

கானான் தேசத்தை சுதந்தரிப்பதற்கு, யோர்தானுக்கு இக்கரையிலே ஏற்கெனவே சுதந்தரம் பெற்றுக்கொண்ட இரண்டு கோத்திரத்தாரும் உதவி செய்யவேண்டும். அவர்களும் மற்ற கோத்திரத்தாரோடு சேர்ந்து கானானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ண வேண்டும். இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசம் முழுவதையும் சுதந்தரிக்கும் வரையிலும், இரண்டரைக்கோத்திரத்தாரின் மனைவிகளும், அவர்களுடைய பிள்ளைகளும், அவர்களுடைய ஆடுமாடுகளும், யோர்தானுக்கு இக்கரையிலுள்ள அவர்களுடைய சுதந்தர தேசத்தில் இருக்கலாம் என்று மோசே சொல்லுகிறார்.

விசுவாசிகள் தங்களுடைய சுயநலத்தை மாத்திரம் பார்க்காமல், தங்கள் குடும்பத்தாரின் பொதுவான நலத்தையும் பார்க்கவேண்டும். நம்முடைய குடும்பத்தாரின் பிரச்சனைகளை, நம்முடைய சொந்த பிரச்சனைகளைப்போல பாவித்து, அவற்றை சமாதானமாய் தீர்த்து வைப்பதற்கு முயற்சி செய்யவேண்டும். நம்முடைய மொத்த குடும்பத்தின் சந்தோஷமும், சமாதானமும், ஆறுதலுமே, நமக்கு மெய்யான சந்தோஷத்தைக் கொடுக்கும்.

"நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும், இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய்" (சங் 128:6).

யோசுவா
உபா 3:21,22

உபா 3:21. அக்காலத்திலே நான் யோசுவாவை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் அந்த இரண்டு ராஜாக்களுக்கும் செய்தவைகளையெல்லாம் உன் கண்கள் கண்டது; நீ போய்ச் சேரும் எல்லா ராஜ்யங்களுக்கும் கர்த்தர் அப்படியே செய்வார்.

உபா 3:22. அவர்களுக்குப் பயப்படீர்களாக; உங்கள் தேவனாகிய கர்த்தர் தாமே உங்களுக்காக யுத்தம்பண்ணுவார் என்று சொன்னேன்.

மோசேக்கு பின்பு யோசுவா இஸ்ரவேல் புத்திரருக்கு தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். மோசே யோசுவாவுக்கு உற்சாகமான வார்த்தைகளை சொல்லுகிறார். மோசே யோசுவாவின் மூலமாக இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் தன்னுடைய வார்த்தைகளை சொல்லுகிறார்.

"அவர்களுக்கு பயப்படீர்களாக" என்று மோசே சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சத்துருக்களுக்கு பயப்படக்கூடாது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தாமே, இஸ்ரவேல் புத்திரருக்காக யுத்தம்பண்ணுவார். கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறவர்கள், கர்த்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள்.

மோசே யோசுவாவை நோக்கி, "உங்கள் தேவனாகிய கர்த்தர் அந்த இரண்டு ராஜாக்களுக்கும் செய்தவைகளையெல்லாம் உன் கண்கள் கண்டது; நீ போய்ச் சேரும் எல்லா ராஜ்யங்களுக்கும் கர்த்தர் அப்படியே செய்வார். அவர்களுக்குப் பயப்படீர்களாக; உங்கள் தேவனாகிய கர்த்தர் தாமே உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்" (உபா 3:21,22) என்று சொல்லுகிறார்.

"அவர்களுக்குப் பயப்படீர்களாக" என்று மோசே சொல்லுவது, யோசுவாவிற்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளையாகும். கர்த்தர் அவர்களுக்காக யுத்தம் பண்ணுவார். சீகோனையும், ஓகையும்போல அவர்கள் போய்ச் சேரும் எல்லா ராஜ்யங்களுக்கும் கர்த்தர் அப்படியே செய்வார். (உபா 3:21-22).

இஸ்ரவேல் புத்திரர் தங்களை உற்சாகப்படுத்திக் கொள்வதற்கு இரண்டு காரியங்களை நினைவுகூரவேண்டும். அவையாவன : 1. கர்த்தர் அவர்களுக்கு ஏற்கெனவே செய்தது. 2. கர்த்தர் அவர்களுக்கு சொல்லியிருக்கிற வாக்குத்தத்தங்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ஏற்கெனவே எஸ்போனின் ராஜாவாகிய சீகோனையும், பாசானின் ராஜாவாகிய ஓகையும் முறியடித்திருக்கிறார்கள். தேவனாகிய கர்த்தர் இவ்விரண்டு ராஜாக்களையும் இஸ்ரவேல் புத்திரருடைய கைகளிலே ஒப்புக்கொடுத்திருக்கிறார். கர்த்தர் இந்த இரண்டு ராஜாக்களுக்கும் செய்ததை இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் தங்கள் கண்களால் பிரத்தியட்சமாக கண்டிருக்கிறார்கள்.

கர்த்தர் சீகோனுக்கும், ஓகுக்கும் செய்ததுபோல, கானான் தேசத்திலுள்ள எல்லா ராஜாக்களுக்கும் அப்படியே செய்வார். "நீ போய்ச்சேரும் எல்லா ராஜ்யங்களுக்கும் கர்த்தர் அப்படியே செய்வார்" என்று மோசே சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரரை இரட்சிக்கக்கூடாதபடிக்கு கர்த்தருடைய கரம் ஒருபோதும் குறுகிப்போகவில்லை.

கர்த்தர் மாறாதவர். அவருடைய வார்த்தைகளும் வாக்குத்தத்தங்களும் ஒருபோதும் மாறுவதில்லை. கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் எக்காலத்திலும் தடைபடாது. கர்த்தரே ஒவ்வொரு காரியத்தையும் ஆரம்பித்து வைக்கிறவர். தாம் ஆரம்பித்து வைக்கிற காரியத்தை கர்த்தர் நிச்சயமாய் முடித்து வைப்பவர்.

"உங்கள் தேவனாகிய கர்த்தர் தாமே உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்" என்பது கர்த்தருடைய வாக்குத்தத்தம். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்காக யுத்தம்பண்ணவில்லையென்றால் அவர்களால் ஓகையும் சீகோனையும் முறியடித்திருக்க முடியாது. சேனைகளின் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்காக யுத்தம்பண்ணுவதினால், அவர்களுக்கு விரோதமாக எந்த சத்துருக்களாலும் யுத்தம்பண்ணி ஜெயிக்க முடியவில்லை. யுத்தம் கர்த்தருடையது. ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சத்துருக்களுக்கு பயப்படக்கூடாது என்று மோசே யோசுவாவுக்கு ஆலோசனை சொல்லுகிறார்.

மோசேயின் ஜெபம்
உபா 3:23-29

உபா 3:23. அக்காலத்திலே நான் கர்த்தரை நோக்கி:

உபா 3:24. கர்த்தராகிய ஆண்டவரே, நீர் உமது அடியேனுக்கு உமது மகத்துவத்தையும் உமது வல்லமையுள்ள கரத்தையும் காண்பிக்கத் தொடங்கினீர்; வானத்திலும் பூமியிலும் உம்முடைய கிரியைகளுக்கும் உம்முடைய வல்லமைகளுக்கும் ஒப்பாகச் செய்யத்தக்க தேவன் யார்?

உபா 3:25. நான் கடந்துபோய் யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள அந்த நல்ல தேசத்தையும், அந்த நல்ல மலையையும், லீபனோனையும் பார்க்கும்படி உத்தரவு கொடுத்தருளும் என்று வேண்டிக்கொண்டேன்.

உபா 3:26. கர்த்தரோ உங்கள் நிமித்தம் என்மேல் கோபங்கொண்டு, எனக்குச் செவிகொடாமல், என்னை நோக்கி: போதும், இனி இந்தக் காரியத்தைக்குறித்து என்னோடே பேசவேண்டாம்.

உபா 3:27. நீ பிஸ்காவின் கொடுமுடியில் ஏறி, உன் கண்களை மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் கிழக்கிலும் ஏறெடுத்து, உன் கண்களினாலே அதைப் பார்; இந்த யோர்தானை நீ கடந்துபோவதில்லை.

உபா 3:28. நீ யோசுவாவுக்குக் கட்டளை கொடுத்து, அவனைத் திடப்படுத்திப் பலப்படுத்து; அவன் இந்த ஜனங்களுக்கு முன்பாகக் கடந்துபோய், அவனே நீ காணும் தேசத்தை அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுப்பான் என்றார்.

உபா 3:29. பின்பு பெத்பெயோருக்கு எதிரான பள்ளத்தாக்கில் தங்கியிருந்தோம்.

மோசே கர்த்தரிடத்தில் தனக்காக விண்ணப்பம்பண்ணுகிறார். மோசேயின் ஜெபத்திற்கு கர்த்தரும் உடனே பதில் கொடுக்கிறார். ஆனாலும் மோசே எதிர்பார்த்த பதிலை கர்த்தர் அவருக்கு சொல்லவில்லை.

மோசே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, தன்னுடைய விண்ணப்பத்தை சொல்லுவதற்கு முன்பாக, கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறார்.

மோசே கர்த்தரை நோக்கி, "கர்த்தராகிய ஆண்டவரே, நீர் உமது அடியேனுக்கு உமது மகத்துவத்தையும் உமது வல்லமையுள்ள கரத்தையும் காண்பிக்கத் தொடங்கினீர்; வானத்திலும் பூமியிலும் உம்முடைய கிரியைகளுக்கும் உம்முடைய வல்லமைகளுக்கும் ஒப்பாகச் செய்யத்தக்க தேவன் யார்?" (உபா 3:24) என்று சொல்லி கர்த்தருடைய நாமத்தை முதலாவதாக மகிமைப்படுத்துகிறார்.

இது கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதைக் குறித்து, மோசே கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணிய கடைசி சம்பவம். கன்மலையைப் பார்த்து பேசுவதற்குப் பதிலாக அதை இரண்டுதரம் அடித்ததினால், மோசேக்கு கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும் சிலாக்கியம் கிடைக்கவில்லை. (உபா 3:23-25; உபா 4:21-22; எண் 20:8-13)

வாக்குத்தத்த தேசத்திற்குப் பிரவேசிக்க கர்த்தர் தன்னை அனுமதிப்பார் என்று மோசே நினைக்கிறார். இத்தனை வருஷங்களாக மோசே கர்த்தருக்கு உண்மையுள்ளவராக இருந்திருக்கிறார். ஆகையினால், தன்னுடைய விண்ணப்பம் அங்கிகரிக்கப்படும் என்பது மோசேயின் நம்பிக்கை. தான் மரிக்கும் தருவாயில், மோசே இந்த விண்ணப்பத்தை ஏறெடுக்கிறார்.

பொதுவாக இப்படிப்பட்ட சூழ்நிலையில் எல்லோரும் தங்களுடைய இரக்கத்தைக் காண்பிப்பார்கள். கர்த்தரும் இரக்கம் உள்ளவர். ஆனால் ஒரு மனிதன் மரிக்கும்போது கர்த்தர் மனுஷனைப்போல இரக்கம் காண்பிப்பார் என்று எதிர்பார்க்கமுடியாது. கர்த்தர் எது நீதியானதோ, எது நியாயமானதோ அதை பட்சபாதமில்லாமல் செய்து முடித்துவிடுவார்.

மோசே கன்மலையை இரண்டுதரம் அடித்தது கிறிஸ்துவை மறுபடியும் சிலுவையில் அறைந்ததற்கு அடையாளம். அதைக் கர்த்தரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஆகையினால் கர்த்தர் மோசேக்குக் கொடுத்த நியாயத்தீர்ப்பை, அவர் திரும்பப் பெற்றுக் கொள்ளவில்லை. மோசேயின் விண்ணப்பம் அங்கிகரிக்கப்படவில்லை (எண் 20:8-12)

அதற்கு பின்பு மோசே கர்த்தரிடத்தில் தன்னுடைய விண்ணப்பத்தை ஏறெடுக்கிறார். மோசே கர்த்தரை நோக்கி, "நான் கடந்துபோய் யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள அந்த நல்ல தேசத்தையும், அந்த நல்ல மலையையும், லீபனோனையும் பார்க்கும்படி உத்தரவு கொடுத்தருளும்" (உபா 3:25) என்று வேண்டிக்கொள்கிறார்.

மோசேயின் மனதில் பேராசை எதுவுமில்லை. யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள அந்த நல்ல தேசத்தைப் பார்க்கும்படி கர்த்தர் தனக்கு உத்தரவு கொடுத்தருளவேண்டும் என்பதே மோசேயின் விண்ணப்பம். மோசே இவ்வாறு ஜெபிப்பதற்கு பதிலாக, "யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள அந்த நல்ல தேசத்தை ஆளுகை செய்வதற்கு தனக்கு உத்தரவு கொடுத்தருவேண்டும்" என்று ஜெபம்பண்ணவில்லை.

மோசே ஒருபோதும் தன்னுடைய சுயமேன்மையையோ, சுயமகிமையையோ தேடுகிறவரல்ல. கர்த்தர் தன்னை எந்த சூழ்நிலையில் வைத்திருந்தாலும், கர்த்தர் தன்னை எந்த ஸ்தானத்தில் அல்லது எந்த அந்தஸ்தில் வைத்திருந்தாலும், மோசே எல்லா சூழ்நிலையிலும் திருப்தியோடிருக்கிறவர். மோசே இஸ்ரவேல் ஜனத்தாரை வழிநடத்தி ஆளுகை செய்கிற தன்னுடைய தலைமை ஸ்தானத்தை, ஏற்கெனவே யோசுவாவுக்கு கொடுத்துவிட்டார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு வாக்குப்பண்ணியிருக்கிற கானான் தேசத்தை தன் கண்களால் பார்க்கவேண்டுமென்று மோசே விரும்புகிறார். கானான் தேசத்தையும், அந்த தேசத்திலுள்ள நல்ல மலையையும், லீபனோனையும் பார்க்கவேண்டும் என்பது மோசேயின் விருப்பம்.

மோசே கானான் தேசத்திற்குள் பிரவேசித்து, அந்த தேசத்திலே இஸ்ரவேல் புத்திரருக்கு அதிபதியாயிருக்க வேண்டுமென்று ஆசைப்படவில்லை. அவர் கானான் தேசத்திற்குள் பிரவேசித்து, கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கிருபையாய்க் கொடுத்திருக்கிற அந்த நல்ல தேசத்தை, தன் கண்களால் பார்த்து, கர்த்தரை மகிமைப்படுத்த விரும்புகிறார்.

மோசேயின் விண்ணப்பத்திற்கு கர்த்தர் உடனே பதில் சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "போதும், இனி இந்தக் காரியத்தைக்குறித்து என்னோடே பேசவேண்டாம்" (உபா 3:26) என்று சொல்லிவிடுகிறார். மோசே கர்த்தரிடத்திலிருந்து இப்படிப்பட்ட பதிலை எதிர்பார்க்கவில்லை. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் நிமித்தம் மோசேயின்மீது கோபங்கொண்டு, அவருடைய விண்ணப்பத்திற்கு செவிகொடுக்கவில்லை. மோசேயின் விண்ணப்பத்தை கர்த்தர் அங்கீகரிக்காமல், நிராகரித்து விடுகிறார்.

கர்த்தரிடத்தில் ஜெபிக்கும்போது, அவருடைய சித்தத்தின் பிரகாரமாகவும், அவருடைய வார்த்தையின் பிரகாரமாகவும் ஜெபிக்க வேண்டும். கர்த்தர் எல்லா ஜெபங்களுக்கும் எப்போதும் "ஆம்" என்று பதில் கொடுக்கிறார் என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் சில சமயங்களில் கர்த்தர் "இல்லை" என்றும் கூறிவிடுகிறார். கர்த்தர் மோசேயிடம் "போதும், இனி இந்தக் காரியத்தைக்குறித்து என்னோடே பேசவேண்டாம்" என்று கூறிவிட்டார்.

ஒருவர் கிறிஸ்துவிற்குள் இருக்கும்போது, அவருடைய ஜெபம் கேட்கப்படும். அவருடைய ஜெபத்திற்குப் பதில் கிடைக்கும். அவர் தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாகவும், அவருடைய வாக்குத்தத்தத்தை மையமாக வைத்தும் ஜெபிக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே விசுவாசத்தோடு ஜெபிக்கும்போது, கர்த்தர் ஜெபத்திற்குப் பதில் கொடுப்பார். அவர் தம்முடைய வார்த்தையை நிறைவேற்றுவார். வாக்குத்தத்தம் பண்ணியவர் அதை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவர்.

ஜெபத்திற்குப் பதில் கிடைக்கவில்லையென்றால், அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். பாவம், நியாயத்தீர்ப்பு, அவிசுவாசம் ஆகியவை ஜெபத்திற்குப் பதில் கிடைப்பதைத் தடைபண்ணிவிடும் (மத் 17:20; மத் 21:22). தேவனுடைய பிள்ளைகள் தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாகவே ஜெபிப்பார்கள் (மாற்கு 11:22-24; யோவான் 15:7).

கர்த்தருடைய வார்த்தையில் கோபமும், அவருடைய நீதியான நியாயத்தீர்ப்பும் கலந்திருக்கிறது. "கர்த்தரோ உங்கள் நிமித்தம் என்மேல் கோபங்கொண்டார்" என்று மோசே சொல்லுகிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் நிமித்தமாக கோபப்படவேண்டுமென்றால், கர்த்தர் அவர்கள்மீது தான் கோபப்படவேண்டும். ஆனால் கர்த்தரோ இஸ்ரவேல் புத்திரர் நிமித்தமாக, மோசேயின்மேல் கோபப்படுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் மோசேக்கு கோபத்தை உண்டுபண்ணினார்கள். அதன் நிமித்தமாக மோசே பாவம் செய்தார்.

"மேரிபாவின் தண்ணீர்களிடத்திலும் அவருக்குக் கடுங்கோபம் மூட்டினார்கள்; அவர்கள் நிமித்தம் மோசேக்கும் பொல்லாப்பு வந்தது. அவர்கள் அவன் ஆவியை விசனப்படுத்தினதினாலே, தன் உதடுகளினால் பதறிப்பேசினான்" (சங் 106:32,33).

இஸ்ரவேல் புத்திரர் யோர்தானைக் கடந்து கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கப்போகிறார்கள். இது அவர்களுடைய சரித்திரத்தில் மிகவும் முக்கியமான பகுதி. இந்த சூழ்நிலையில் மோசேயின் ஆலோசனைகளும், வழிநடத்துதல்களும் இஸ்ரவேல் புத்திரருக்கு அதிகமாய்த் தேவைப்படுகிறது. ஆனால் கர்த்தரோ மோசேயை கானான் தேசத்திற்கு அனுப்பாமல், தம்முடைய சமுகத்திலே சேர்த்துக்கொள்ள சித்தங்கொள்கிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரோடுகூட இல்லாமல் போவது, அவர்களுக்கு மிகப்பெரிய இழப்பாகயிருக்கிறது. கர்த்தர் அவர்களுடைய பாவத்தினிமித்தமாக, இந்த சூழ்நிலையில் மோசேயை அவர்களோடுகூட கானான் தேசத்திற்கு அனுப்பாமல், இஸ்ரவேல் புத்திரரை தண்டிக்கிறார்.

மோசே யாக்கோபின் வித்தாகயிருக்கிறவர். அவர் இஸ்ரவேல் புத்திரரை வனாந்தரப்பாதையின் வழியாக வழிநடத்தி வந்தவர். கானான் தேசம் கர்த்தருடைய வாக்குத்தத்த தேசம். இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, தானும் அந்த தேசத்திற்குள் பிரவேசித்து, அந்த தேசத்தின் நன்மையைக் காணவேண்டுமென்று மோசே விரும்புவதில் தவறு ஒன்றுமில்லை. மோசேயின் விண்ணப்பம் நியாயமானது. ஆனால் கர்த்தரோ மோசேயின் விண்ணப்பத்திற்கு சாதகமான பதிலை சொல்லாமல், "போதும் இனி இந்தக் காரியத்தைக் குறித்து என்னோடே பேசவேண்டாம்" என்று சொல்லிவிடுகிறார்.

மோசேயைப்போலவே நாமும் கர்த்தருடைய சமுகத்தில் பல காரியங்களுக்காக ஜெபம்பண்ணுகிறோம். கர்த்தர் நம்முடைய ஜெபவார்த்தைகளுக்கு செவிகொடுக்கிறார். ஆனாலும் நம்முடைய ஜெபத்தில், நாம் விண்ணப்பம்பண்ணுகிற எல்லா காரியங்களையும் சில சமயங்களில் நாம் பெற்றுக்கொள்வதில்லை. கர்த்தருக்கு சித்தமான காரியம் மாத்திரமே வாய்க்கும். கர்த்தர் நம்முடைய ஆசைகளையெல்லாம் நிறைவேற்றுவதாக எந்த இடத்திலும் வாக்குப்பண்ணவில்லை. தன்னுடைய விண்ணப்பத்திற்கு, கர்த்தர் தனக்கு சொன்ன பிரதியுத்தரத்தை மோசேயும் ஏற்றுக்கொள்கிறார். மோசே கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் நிமித்தம் தன்மீது கோபங்கொண்டிருப்பதாக மோசே சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தையில் கோபமும் இருக்கிறது. அதே வேளையில் அந்த வார்த்தைகளில் அவருடைய கிருபையும் இரக்கமும் அன்பும் வெளிப்படுகிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "போதும்" என்று சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய வார்த்தையின் மூலமாக மோசேயின் ஆவியை சாந்தப்படுத்துகிறார். கர்த்தர் சொல்லுகிற வார்த்தைகள் மோசேயின் மனதிற்கு போதுமானதாகயிருக்கும். கர்த்தருடைய வார்த்தையோடு அவருடைய தெய்வீக வல்லமையும் புறப்பட்டு வருகிறது.

மோசே கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியவேண்டும். கர்த்தர் மோசேயைப் பார்த்து, "போதும்" என்று சொல்லும்போது, கர்த்தர் தனக்கு எதைச் சொன்னாலும், அதை ஏற்றுக்கொள்ளவும், அதற்கு கீழ்ப்படியவும் மோசே ஆயத்தமாயிருக்கிறார்.

கர்த்தர் சில சமயங்களில் நம்முடைய ஜெபவிண்ணப்பங்களுக்கு, நாம் எதிர்பார்க்கிற பதிலைக் கொடுக்காமலிருக்கலாம். ஆனாலும் கர்த்தருடைய கிருபை நமக்கு எப்போதுமே போதுமானதாகயிருக்கும். நாம் விரும்புகிற காரியத்தை கர்த்தர் நமக்கு கொடுக்காவிட்டாலும், அந்தக் காரியம் நமக்கு கிடைக்காமலேயே, நாம் கர்த்தருடைய சமுகத்தில் ஆறுதலடையவும், திருப்தியடையவும், கர்த்தருடைய கிருபை நமக்கு போதுமானதாயிருக்கும்.

கர்த்தரே நமக்கு கொடுக்கிறவர். அவரே நமக்கு கொடுக்காதிருக்கிறவர். கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக கிரியை செய்கிறார். ஆகையினால் கொடுத்தாலும் அவரே நம்முடைய கர்த்தர் என்றும், கொடுக்காவிட்டாலும் அவர் நம்முடைய கர்த்தராகவே இருக்கிறார் என்றும் நாம் விசுவாசத்தோடு சொல்லவேண்டும். கர்த்தருடைய சித்தத்திற்கு நாம் கீழ்ப்படியவேண்டும். நாம் விரும்புகிற காரியத்தை கர்த்தர் நமக்கு கொடுக்காவிட்டாலும், கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற காரியங்களில் நாம் திருப்தியடைய கற்றுக்கொள்ளவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "இனி இந்தக் காரியத்தைக் குறித்து என்னோடே பேசவேண்டாம்" என்று சொல்லுகிறார். தான் ஏற்கெனவே கர்த்தரிடத்தில் ஏறெடுத்த விண்ணப்பத்தை, அவர் செவிகொடுத்து கேட்காமல் விட்டுவிட்டாரோ என்னும் சந்தேகம் மோசேயின் மனதில் ஏற்படக்கூடாது. நாம் கர்த்தரிடத்தில் எதை விண்ணப்பம்பண்ணினாலும், அதை அவர் செவிகொடுத்து கேட்கிறார். ஆனாலும் கர்த்தர் நம்முடைய ஜெபத்திற்கு கொடுக்கிற பதில், அவருடைய சித்தத்தின் பிரகாரமாகவே இருக்கும்.

நாம் கர்த்தரிடத்தில் ஒருதரம் கேட்பதற்கு பதிலாக, அதே காரியத்தை பல தரம் கேட்கும்போது, கர்த்தர் நம்மீது மனமிறங்கி, தம்முடைய சித்தத்தை மாற்றி, நம்முடைய ஆசைகளை நிறைவேற்றி தருவார் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. கர்த்தர் மனம் மாறுகிறவரல்ல. கர்த்தருடைய வார்த்தைகளும் வாக்குத்தத்தங்களும், அவருடைய சித்தங்களும் ஒருபோதும் மாறுவதில்லை. கர்த்தர் தம்முடைய தெய்வீக சுபாவத்தைப்பற்றி மோசேக்கு தெளிவுபடுத்துவதற்காக, அவரை நோக்கி, "போதும், இனி இந்தக் காரியத்தைக் குறித்து என்னோடே பேசவேண்டாம்" என்று சொல்லிவிடுகிறார்.

மோசே விரும்பிய பிரகாரம் கர்த்தர் அவருடைய விண்ணப்பத்திற்கு பதில் கொடுக்கவில்லை. ஆனாலும் கர்த்தர் மோசேயின்மீது அன்பாயிருக்கிறார். அவருக்கு கர்த்தர் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் வெளிப்படுத்துகிறார். மோசே பிஸ்காவின் கொடுமுடியில் ஏறி கானான் தேசத்தைப் பார்ப்பார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ பிஸ்காவின் கொடுமுடியில் ஏறி, உன் கண்களை மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் கிழக்கிலும் ஏறெடுத்து, உன் கண்களினாலே அதைப் பார்; இந்த யோர்தானை நீ கடந்துபோவதில்லை" (உபா 3:27) என்று சொல்லுகிறார்.

மோசே யோர்தானுக்கு இக்கரையிலிருந்தே கானான் தேசத்தைப் பார்ப்பார். தான் விரும்பிய பிரகாரம் மோசே யோர்தானைக் கடந்துபோய், யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள அந்த நல்ல தேசத்தையும், அந்த நல்ல மலையையும், லீபனோனையும் பார்க்கமாட்டார். ஆனாலும் அவர் பிஸ்காவின் கொடுமுடியில் ஏறி கானான் தேசத்தைப் பார்ப்பார். கர்த்தர் தனக்கு கொடுக்கும் ஆசீர்வாதத்தில் மோசே திருப்தியடையவேண்டும்.

மோசேயைப்போலவே விசுவாசிகளாகிய நாம் எல்லோருமே, கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஆசீர்வாதங்களில் திருப்தியடையவேண்டும். கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிவதே நமக்கு மெய்யான ஆசீர்வாதம். கர்த்தருடைய பரிபூரணமான சித்தத்தில் நாம் நிலைத்திருக்கும்போது, நம்முடைய மனதிலே சந்தோஷமும், ஆறுதலும், திருப்தியும் பூரணமாயிருக்கும்.

மோசேயின் ஊழியம் யோர்தானுக்கு இக்கரையில் முடிவு பெறுகிறது. ஆனாலும் யோர்தானுக்கு அக்கரையில், மோசே இதுவரையிலும் செய்து வந்த ஊழியத்தை, யோசுவா யோர்தானுக்கு அக்கரையிலே தொடர்ந்து செய்வார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ யோசுவாவுக்குக் கட்டளை கொடுத்து, அவனைத் திடப்படுத்திப் பலப்படுத்து; அவன் இந்த ஜனங்களுக்கு முன்பாகக் கடந்துபோய், அவனே நீ காணும் தேசத்தை அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுப்பான்" (உபா 3:28) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தைச் சுதந்தரிக்கவேண்டும் என்பதும், கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் அந்த நல்ல தேசம் இஸ்ரவேல் புத்திரருக்கு சுதந்தரமாக பங்கிட்டு கொடுக்கப்படவேண்டும் என்பதும் மோசேயின் இருதயத்திலுள்ள விருப்பமாகும். இது கர்த்தருடைய சித்தம். மோசேயின் விருப்பமும் கர்த்தருடைய சித்தமும் மாறுபடாமல் ஒன்றாயிருக்கிறது. கர்த்தர் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுகிறார். மோசே தன்னுடைய மனதின் விருப்பம் நிறைவேறப்போவதை கேள்விப்பட்டு சந்தோஷப்படுகிறார்.

பின்பு இஸ்ரவேல் புத்திரர் பெத்பெயோருக்கு எதிரான பள்ளத்தாக்கில் தங்கியிருக்கிறார்கள் (உபா 3:29).

பெத்பேயோர் என்னும் பெயருக்கு பேயோரின் வீடு என்று பொருள். இங்கு பாகாலுக்கு ஒரு ஆலயம் உள்ளது. இது பெயோர் மலையில் அமைந்திருக்கிறது பெத்பெயோர் ரூபன் புத்திரருக்குச் சுதந்தரவீதமாகப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது (யோசு 13:20).

4 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளுக்கும், அவருடைய நியாயங்களுக்கும், பிரமாணங்களுக்கும் கீழ்ப்படியவேண்டும். மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய கட்டளைகளையும் நியாயங்களையும் போதிக்கிறார் (உபா 4:1-40).

இஸ்ரவேல் புத்திரர் யோர்தானுக்கு இப்புறத்திலே அடைக்கலப்பட்டணங்களை ஏற்படுத்தவேண்டும் (உபா 4:41-43). மோசே மறுபடியுமாய் இஸ்ரவேல் புத்திரருக்கு தன்னுடைய பிரமாணங்களை சொல்லுகிறார் (உபா 4:44-49).

மோசேயின் போதகம் உபா 4:1-40

உபா 4:1. இஸ்ரவேலரே, நீங்கள் பிழைத்திருக்கும்படிக்கும், உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கிற தேசத்தில் நீங்கள் பிரவேசித்து, அதைச் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கும், நீங்கள் கைக்கொள்வதற்கு நான் உங்களுக்குப் போதிக்கிற கட்டளைகளையும் நியாயங்களையும் கேளுங்கள்.

உபா 4:2. நான் உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ளும்படி, நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்.

உபா 4:3. பாகால்பேயோரின் நிமித்தம் கர்த்தர் செய்ததை உங்கள் கண்கள் கண்டிருக்கிறது; பாகால்பேயோரைப் பின்பற்றின மனிதரையெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இராதபடிக்கு அழித்துப் போட்டார்.

உபா 4:4. ஆனாலும் உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பற்றிக்கொண்ட நீங்களெல்லாரும் இந்நாள்வரைக்கும் உயிரோடிருக்கிறீர்கள்.

உபா 4:5. நீங்கள் சுதந்தரித்துக் கொள்ளும்படி பிரவேசிக்கும் தேசத்தில் நீங்கள் கைக்கொள்ளும்பொருட்டு, என் தேவனாகிய கர்த்தர் எனக்குக் கற்பித்தபடியே, நான் உங்களுக்குக் கட்டளைகளையும் நியாயங்களையும் போதித்தேன்.

உபா 4:6. ஆகையால் அவைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; ஜனங்களின் கண்களுக்குமுன்பாகவும் இதுவே உங்களுக்கு ஞானமும் விவேகமுமாய் இருக்கும்; அவர்கள் இந்தக் கட்டளைகளையெல்லாம் கேட்டு, இந்தப் பெரிய ஜாதியே ஞானமும் விவேகமுமுள்ள ஜனங்கள் என்பார்கள்.

உபா 4:7. நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம், அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல, தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது?

உபா 4:8. இந்நாளில் நான் உங்களுக்கு விதிக்கிற இந்த நியாயப்பிரமாணம் முழுமைக்கும் ஒத்த இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும் நியாயங்களையும் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதியும் எது?

உபா 4:9. ஒரேபிலே உன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நீ நிற்கும்போது, கர்த்தர் என்னை நோக்கி: ஜனங்களை என்னிடத்தில் கூடிவரச்செய்து, என் வார்த்தைகளை அவர்கள் கேட்கும்படி பண்ணுவேன்; அவர்கள் பூமியில் உயிரோடிருக்கும் நாளெல்லாம் எனக்குப் பயந்திருக்கும்படி அவைகளைக் கற்றுக்கொண்டு, தங்கள் பிள்ளைகளுக்கும் போதிக்கக்கடவர்கள் என்று சொல்லிய நாளில்,

உபா 4:10. உன் கண்கள் கண்ட காரியங்களை நீ மறவாதபடிக்கும், உன் ஜீவனுள்ள நாளெல்லாம் அவைகள் உன் இருதயத்தை விட்டு நீங்காதபடிக்கும் நீ எச்சரிக்கையாயிருந்து, உன் ஆத்துமாவைச் ஜாக்கிரதையாய்க் காத்துக்கொள்; அவைகளை உன் பிள்ளைகளுக்கும் உன் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் அறிவிக்கக்கடவாய்.

உபா 4:11. நீங்கள் சேர்ந்துவந்து, மலையின் அடிவாரத்தில் நின்றீர்கள்; அந்த மலையில்வானத்தை அளாவிய அக்கினி எரிய, இருளும் மேகமும் அந்தகாரமும் சூழ்ந்தது.

உபா 4:12. அந்த அக்கினியின் நடுவிலிருந்து கர்த்தர் உங்களோடே பேசினார்; வார்த்தைகளின் சத்தத்தை நீங்கள் கேட்டீர்கள்; அந்தச் சத்தத்தை நீங்கள் கேட்டதேயன்றி, ஒரு ரூபத்தையும் காணவில்லை.

உபா 4:13. நீங்கள் கைக்கொள்ளவேண்டும் என்று அவர் உங்களுக்குக் கட்டளையிட்ட பத்துக் கற்பனைகளாகிய தம்முடைய உடன்படிக்கையை அவர் உங்களுக்கு அறிவித்து, அவைகளை இரண்டு கற்பலகைகளில் எழுதினார்.

உபா 4:14. நீங்கள் சுதந்தரித்துக்கொள்ளப் போகிற தேசத்தில் நீங்கள் கைக்கொள்ள வேண்டிய கட்டளைகளையும் நியாயங்களையும் உங்களுக்குப் போதிக்கவேண்டுமென்று அக்காலத்திலே கர்த்தர் எனக்குக் கட்டளையிட்டார்.

உபா 4:15. கர்த்தர் ஓரேபிலே அக்கினியின் நடுவிலிருந்து உங்களோடே பேசினநாளில், நீங்கள் ஒரு ரூபத்தையும் காணவில்லை.

உபா 4:16. ஆகையால் நீங்கள் உங்களைக் கெடுத்துக்கொண்டு, ஆண் உருவும், பெண் உருவும்,

உபா 4:17. பூமியிலிருக்கிற யாதொரு மிருகத்தின் உருவும், ஆகாயத்தில் பறக்கிற செட்டையுள்ள யாதொரு பட்சியின் உருவும்,

உபா 4:18. பூமியிலுள்ள யாதொரு ஊரும் பிராணியின் உருவும், பூமியின்கீழ்த் தண்ணீரிலுள்ள யாதொரு மச்சத்தின் உருவுமாயிருக்கிற இவைகளில் யாதொரு உருவுக்கு ஒப்பான விக்கிரகத்தை உங்களுக்கு உண்டாக்காதபடிக்கும்,

உபா 4:19. உங்கள் கண்களை வானத்திற்கு ஏறெடுத்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் வானத்தின் கீழெங்கும் இருக்கிற எல்லா ஜனங்களுக்கும் ஏற்படுத்தின வானத்தின் சர்வ சேனைகளாகிய சந்திர சூரிய நட்சத்திரங்களை நோக்கி, அவைகளைத் தொழுது சேவிக்க இணங்காதபடிக்கும், உங்கள் ஆத்துமாக்களைக்குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்.

உபா 4:20. இந்நாளில் நீங்கள் இருக்கிறதுபோல, தமக்குச் சுதந்தரமான ஜனமாயிருக்கும்படி, கர்த்தர் உங்களைச் சேர்த்துக்கொண்டு, உங்களை எகிப்து என்னும் இருப்புக்கான வாயிலிருந்து புறப்படப்பண்ணினார்.

உபா 4:21. கர்த்தர் உங்கள் நிமித்தம் என்மேல் கோபங்கொண்டு, நான் யோர்தானைக் கடந்துபோவதில்லை என்றும், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கிற அந்த நல்ல தேசத்தில் நான் பிரவேசிப்பதில்லை என்றும் ஆணையிட்டார்.

உபா 4:22. அதினால் இந்த தேசத்தில் நான் மரணமடையவேண்டும்; நான் யோர்தானைக் கடந்துபோவதில்லை; நீங்களோ கடந்துபோய், அந்த நல்ல தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்வீர்கள்.

உபா 4:23. நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையை மறந்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் வேண்டாம் என்று விலக்கின எவ்வித சாயலான விக்கிரகத்தையும் உங்களுக்கு உண்டாக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

உபா 4:24. உன் தேவனாகிய கர்த்தர் பட்சிக்கிற அக்கினி, அவர் எரிச்சலுள்ள தேவன்.

உபா 4:25. நீங்கள் பிள்ளைகளும் பிள்ளைகளின் பிள்ளைகளும் பெற்று, தேசத்தில் வெகுநாள் இருந்தபின்பு, நீங்கள் உங்களைக் கெடுத்து, யாதொரு விக்கிரகத்தையாவது யாதொரு சாயலான சுரூபத்தையாவதுபண்ணி, உன் தேவனாகிய கர்த்தருக்குக் கோபம் உண்டாக்க அவர் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தால்,

உபா 4:26. நீங்கள் யோர்தானைக் கடந்து சுதந்தரிக்கப்போகிற தேசத்தில் இராமல், சீக்கிரமாய் முற்றிலும் அழிந்துபோவீர்கள் என்று, இந்நாளில் உங்களுக்கு விரோதமாய் வானத்தையும் பூமியையும் சாட்சி வைக்கிறேன்; நீங்கள் அதிலே நெடுநாள் இராமல் நிர்மூலமாக்கப்படுவீர்கள்.

உபா 4:27. கர்த்தர் உங்களைப் புறஜாதிகளுக்குள்ளே சிதற அடிப்பார்; கர்த்தர் உங்களைக் கொண்டுபோய் விடப்போகிற ஜாதிகளிடத்திலே கொஞ்ச ஜனங்களாய் மீந்திருப்பீர்கள்.

உபா 4:28. அங்கே காணாமலும் கேளாமலும் சாப்பிடாமலும் முகராமலும் இருக்கிற மரமும் கல்லுமான, மனுஷர் கைவேலையாகிய தேவர்களைச் சேவிப்பீர்கள்.

உபா 4:29. அப்பொழுது அங்கேயிருந்து உன் தேவனாகிய கர்த்தரைத் தேடுவாய்; உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அவரைத் தேடும்போது, அவரைக் கண்டடைவாய்.

உபா 4:30. நீ வியாகுலப்பட இவைகளெல்லாம் உன்னைத் தொடர்ந்து பிடிக்கும்போது, கடைசி நாட்களில் உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பி அவர் சத்தத்திற்குக் கீழ்ப்படிவாயானால்,

உபா 4:31. உன் தேவனாகிய கர்த்தர் இரக்கமுள்ள தேவனாயிருக்கிறபடியால், அவர் உன்னைக் கைவிடவுமாட்டார், உன்னை அழிக்கவுமாட்டார், உன் பிதாக்களுக்குத் தாம் ஆணையிட்டுக் கொடுத்த உடன்படிக்கையை மறக்கவுமாட்டார்.

உபா 4:32. தேவன் மனுஷனைப் பூமியிலே சிருஷ்டித்த நாள்முதல், உனக்கு முன் இருந்த பூர்வநாட்களில், வானத்தின் ஒருமுனை தொடங்கி அதின் மறுமுனைமட்டுமுள்ள எவ்விடத்திலாகிலும் இப்படிப்பட்ட பெரிய காரியம் நடந்ததுண்டோ, இப்படிப்பட்ட காரியம் கேள்விப்பட்டதுண்டோ;

உபா 4:33. அக்கினியின் நடுவிலிருந்து பேசுகிற தேவனுடைய சத்தத்தை நீ கேட்டது போல, யாதொரு ஜனமாவது கேட்டதும் உயிரோடிருந்ததும் உண்டோ,

உபா 4:34. அல்லது உங்கள் தேவனாகிய கர்த்தர் எகிப்திலே உங்கள் கண்களுக்கு முன்பாக உங்களுக்குச் செய்தபடியெல்லாம் தேவன் அந்நிய ஜாதிகளின் நடுவிலிருந்து ஒரு ஜனத்தைச் சோதனைகளினாலும், அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், யுத்தத்தினாலும், வல்லமையுள்ள கரத்தினாலும், ஓங்கிய புயத்தினாலும், மகா பயங்கரமான செயல்களினாலும், தமக்கென்று தெரிந்துகொள்ள வகைபண்ணினதுண்டோ என்று நீ விசாரித்துப்பார்.

உபா 4:35. கர்த்தரே தேவன், அவரையல்லாமல் வேறொருவரும் இல்லை என்பதை நீ அறியும்படிக்கு, இது உனக்குக் காட்டப்பட்டது.

உபா 4:36. உன்னை உபதேசிக்கும்படிக்கு, அவர் வானத்திலிருந்து தமது சத்தத்தை உனக்குக் கேட்கப்பண்ணி, பூமியிலே தமது பெரிய அக்கினியை உனக்குக் காண்பித்தார்; அக்கினியின் நடுவிலிருந்து உண்டான அவருடைய வார்த்தைகளைக் கேட்டாய்.

உபா 4:37. அவர் உன் பிதாக்களில் அன்புகூர்ந்தபடியால், அவர்களுடைய பின்சந்ததியைத் தெரிந்துகொண்டு,

உபா 4:38. உன்னிலும் பலத்த பெரிய ஜாதிகளை உனக்கு முன்னின்று துரத்தவும், உன்னை அழைத்துக்கொண்டுபோய், இந்நாளில் இருக்கிறதுபோல, அவர்கள் தேசத்தை உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கவும், உன்னைத் தமது முகத்துக்குமுன் தமது மிகுந்த வல்லமையினால் எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்.

உபா 4:39. ஆகையால், உயர வானத்திலும் தாழ பூமியிலும் கர்த்தரே தேவன், அவரைத் தவிர ஒருவரும் இல்லை என்பதை நீ இந்நாளில் அறிந்து, உன் மனதிலே சிந்தித்து,

உபா 4:40. நீயும் உனக்குப் பின்வரும் உன் பிள்ளைகளும் நன்றாயிருக்கும்படிக்கும், உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு என்றைக்கும் கொடுக்கிற தேசத்திலே நீ நீடித்த நாளாயிருக்கும்படிக்கும், நான் இன்று உனக்குக் கற்பிக்கிற அவருடைய கட்டளைகளையும் அவருடைய கற்பனைகளையும் கைக்கொள்ளக்கடவாய் என்றான்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய வார்த்தைகளை மறுபடியும் மறுபடியுமாய்ப் போதிக்கிறார். மோசேயின் போதகத்தில் ஜீவனும், ஞானமும் நிரம்பியிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் கடந்த காலத்தில் பல அனுபவங்களை அனுபவித்திருக்கிறார்கள். தங்கள் அனுபவத்தின் மூலமாக, இஸ்ரவேல் சபையார் கர்த்தரைப்பற்றியும், அவருடைய வார்த்தைகளைப்பற்றியும் அதிகமாய்க் கற்றுக்கொள்ளவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை பாதுகாத்து பராமரித்ததுபோல, கர்த்தர் இக்காலத்தில் நம்மையும் பராமரிக்கிறார். கர்த்தர் நம்மீதும் கரிசனையாயிருக்கிறார். மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிற போதகத்தின் மூலமாக, விசுவாசிகளாகிய நாமும் ஆவிக்குரிய உபதேசங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும். நாம் கர்த்தருடைய வார்த்தைக்கும், அவருடைய கட்டளைகளுக்கும், நியமங்களுக்கும் கீழ்ப்படியவேண்டும்.

கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற ஒவ்வொரு காரியங்களையும், நாம் நேர்த்தியாய்ச் செய்து முடிக்க வேண்டும். இது நம்முடைய கடமை. கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற கடமைகளில் நாம் ஒன்றுமே செய்யாமல், கர்த்தர் நமக்கு நன்மை செய்யவேண்டுமென்று எதிர்பார்க்க முடியாது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். அவர்கள் கர்த்தருடைய சமுகத்திற்கு அருகாமையில் வந்து, அவருடைய ஊழியத்தை செய்யவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை விட்டு விட்டு, வேறு அந்நிய தெய்வங்களை பின்பற்றிப்போய்விடக்கூடாது. நாம் கர்த்தரை விட்டு விலகிப்போனால், கர்த்தரும் நம்மை விட்டு விலகிப்போய்விடுவார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரிடமிருந்து எதிர்பார்க்கிற காரியங்களை, மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவேண்டும். "இஸ்ரவேலே கேள்" என்பது, மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிற பிரதான கட்டளையாயிருக்கிறது.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "இஸ்ரவேலரே, நீங்கள் பிழைத்திருக்கும்படிக்கும், உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கிற தேசத்தில் நீங்கள் பிரவேசித்து, அதைச் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கும், நீங்கள் கைக்கொள்வதற்கு நான் உங்களுக்குப் போதிக்கிற கட்டளைகளையும் நியாயங்களையும் கேளுங்கள்" (உபா 4:1) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கைக்கொள்ள வேண்டிய கட்டளைகளையும், நியாயங்களையும் பற்றிய விவரம் வருமாறு :

1. நீங்கள் கைக்கொள்வதற்கு நான் உங்களுக்குப் போதிக்கிற கட்டளைகளையும் நியாயங்களையும் கேளுங்கள். (உபா 4:1)

2. நான் உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ளும்படி, நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம் (உபா 4:2).

3. என் தேவனாகிய கர்த்தர் எனக்குக் கற்பித்தபடியே, நான் உங்களுக்குக் கட்டளைகளையும் நியாயங்களையும் போதித்தேன். ஜனங்களின் கண்களுக்கு முன்பாகவும் இதுவே உங்களுக்கு ஞானமும் விவேகமுமாய் இருக்கும். (உபா 4:5-6).

4. உன் கண்கள் கண்ட காரியங்களை நீ மறவாதபடிக்கும், உன் ஜீவனுள்ள நாளெல்லாம் அவைகள் உன் இருதயத்தை விட்டு நீங்காதபடிக்கும் நீ எச்சரிக்கையாயிருந்து, உன் ஆத்துமாவைச் ஜாக்கிரதையாய்க் காத்துக்கொள். (உபா 4:9).

5. அவர்கள் பூமியில் உயிரோடிருக்கும் நாளெல்லாம் எனக்குப் பயந்திருக்கும்படி அவைகளைக் கற்றுக்கொண்டு, தங்கள் பிள்ளைகளுக்கும் போதிக்கக்கடவர்கள். அவைகளை உன் பிள்ளைகளுக்கும் உன் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் அறிவிக்கக்கடவாய் (உபா 4:9-10).

6. பூமியிலிருக்கிற மிருகங்கள், ஆகாயத்திலுள்ள பட்சிகள், தண்ணீரிலுள்ள மீன்கள் இவைகளில் யாதொரு உருவுக்கு ஒப்பான விக்கிரகத்தை உங்களுக்கு உண்டாக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் (உபா 4:15-20).

7. நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையை மறந்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் வேண்டாம் என்று விலக்கின எவ்வித சாயலான விக்கிரகத்தையும் உங்களுக்கு உண்டாக்காத படிக்கு எச்சரிக்கையாயிருங்கள். (உபா 4:23-24)

8. உயர வானத்திலும் தாழ பூமியிலும் கர்த்தரே தேவன், அவரைத் தவிர ஒருவரும் இல்லை என்பதை நீ இந்நாளில் அறிந்து, உன் மனதிலே சிந்தித்துக் கொள் (உபா 4:39).

9. நான் இன்று உனக்குக் கற்பிக்கிற அவருடைய கட்டளைகளையும் அவருடைய கற்பனைகளையும் கைக்கொள்ளக்கடவாய் (உபா 4:40).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளையும், நியாயங்களையும் கைக்கொள்ளுவதினால் வரும் ஆசீர்வாதங்களைப்பற்றிய விவரம் வருமாறு:

1. நீடித்த வாழ்வு (உபா 4:1,4,10,40)

2. வெற்றி (உபா 4:1,5,40)

3. இரக்கமும், நீதியும் (உபா 4:3)

4. ஞானமும், விவேகமும் (உபா4:6)

5. மற்ற ஜனங்கள் இஸ்ரவேல் புத்திரரை ஞானமும், விவேகமுமுள்ள ஜனங்கள் என்று அறிக்கையிடுதல் (உபா 4:6,7)

6. தேவனுக்குச் சமீபமாய் இருப்பது. (உபா 4:7)

7. ஜெபங்களுக்குப் பதில் பெறுவது

8. நியாயப்பிரமாணங்களின் முழுமை (உபா 4:8)

9. நல்ல ஞாபகசக்தி (உபா 4:9)

10. பிள்ளைகளுக்குப் போதிக்கத்தக்க மெய்யான மார்க்கம். (உபா 4:9-10)

11. கர்த்தருக்குப் பயப்படுவதைக் கற்றுக்கொள்ளுதல். (நீதி 1:7)

12. விக்கிரகாராதனையிலிருந்து வரும் அழிவினால் பாதுகாக்கப்படுதல். (உபா 4:16-19)

13. தேவனுக்கு விசேஷித்த ஜனமாயிருப்பது. (உபா 4:20)

14. சுதந்தரவீதம் (உபா 4:20,38)

15. தேவனோடு உடன்படிக்கை (உபா 4:23)

16. தேவனுடைய உண்மை (உபா 4:31)
17. தேவனுடைய வெளிப்பாடுகள் (உபா 4:32-34)
18. கர்த்தரே தேவன் என்பதற்கு ஆதாரம் (உபா 4:35,39)
19. விரோதிகள்மீது வெற்றி (உபா 4:38)
20. செழிப்பும் வளமையும் (உபா 4:40)
21. பிள்ளைகள்மீது ஆசீர்வாதங்கள் (உபா 4:40)

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய வார்த்தைக்கு கவனமாய்ச் செவிகொடுக்க வேண்டும். மோசே கர்த்தருடைய பிரமாணத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு பல சமயங்களில் போதித்திருக்கிறார். மோசே எப்போதெல்லாம் போதிக்கிறாரோ, அப்போதெல்லாம் அவர்கள் மோசேயின் போதக வார்த்தைக்கு செவிகொடுக்கவேண்டும்.

மோசேயின் போதகம் தவிர, கர்த்தருடைய நியாயப்பிரமாணம் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே பல சமயங்களில் வாசிக்கப்படுகிறது. கர்த்தருடைய வார்த்தை போதிக்கப்படும்போது, இஸ்ரவேல் புத்திரர் அதற்கு செவிகொடுப்பதுபோல, கர்த்தருடைய வார்த்தை வாசிக்கப்படும்போதும், அவர்கள் அதற்கு செவிகொடுக்கவேண்டும்.

யூதமார்க்கத்து ரபீமார்கள் கர்த்தருடைய வார்த்தையை இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே வாசிக்கிறார்கள். அவர்கள் வாசிப்பதுபோலவே, எபிரெய பாஷையை எழுத படிக்க தெரிந்த எல்லோருமே, கர்த்தருடைய வார்த்தையை வாசிக்கவேண்டும். வாசிக்கத்தெரியாத ஜனங்களுக்கு, வாசிக்கத் தெரிந்தவர்கள் வாசித்து சொல்லவேண்டும்.

கர்த்தருடைய வார்த்தையை மிகவும் கவனமாய்க் கேட்கவேண்டும். அதை ஏதோ ஒரு கதை கேட்பதுபோல கேட்டுவிட்டு, அதை சீக்கிரத்தில் மறந்துவிடக்கூடாது. கர்த்தருடைய வார்த்தை நம்முடைய இருதயத்தில் பதியவேண்டும். கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவேண்டும் என்னும் நோக்கத்தோடு, கர்த்தருடைய கட்டளைகளைப்பற்றிய வார்த்தைகளை நாம் கவனித்து கேட்கவேண்டும்.

"நீங்கள் கைக்கொள்வதற்கு நான் உங்களுக்கு போதிக்கிற கட்டளைகளையும், நியாயங்களையும் கேளுங்கள்" என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய கட்டளையை பரிசுத்தம்பண்ணவேண்டும். மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்கு கர்த்தருடைய கட்டளையை போதிக்கிறார். அந்த வசனத்தோடே, இஸ்ரவேல் ஜனத்தார், தங்கள் சொந்த வார்த்தைகளை கூட்டக்கூடாது. கர்த்தருடைய கட்டளையிலிருந்து, தாங்கள் விரும்பிய பிரகாரம், எந்த வார்த்தையையும் குறைக்கவும் கூடாது.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நான் உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ளும்படி, நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்" (உபா 4:2) என்று சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய கட்டளைகளை போதிப்பதற்கு ஒரு நோக்கமுண்டு. அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை கைக்கொள்ளவேண்டும். அதற்காகவே மோசே கர்த்தருடைய கட்டளைகளை இஸ்ரவேல் புத்திரருக்கு போதிக்கிறார்.

மோசேயின் மூலமாக தாங்கள் கேட்ட கர்த்தருடைய கட்டளைகளை, தங்கள் ஜீவியத்தில் கைக்கொண்டு நடக்கவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார், தாங்கள் செய்யும் ஒவ்வொரு கிரியைகளையும், கர்த்தருடைய கட்டளைகளின் பிரகாரம் செய்யவேண்டும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கட்டளையிட்ட பத்து கற்பனைகளாகிய தம்முடைய உடன்படிக்கையை, மோசே அவர்களுக்கு போதிக்கிறார்.

விசுவாசிகளாகிய நாம் கர்த்தருடைய வார்த்தைகளையும், உபதேசங்களையும், போதகங்களையும் கேட்பதற்கு ஒரு நோக்கமுண்டு. நாம் கேட்ட சத்தியத்தின் பிரகாரம் செயல்படவேண்டும். இதுவே பிரசங்கத்தைக் கேட்பதன் அடிப்படை நோக்கம். நமக்கு சத்தியத்தைப்பற்றிய அறிவு உண்டாகும்போது, அதை நம்முடைய அன்றாட ஜீவியத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும். நடைமுறையில் பயன்படுத்தாத அறிவும் ஞானமும், யாருக்கும் பிரயோஜனமாயிருக்காது.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் நீதியுள்ளவர். மோசே இஸ்ரவேல் ஜனத்தாரிடம் பாகால் பேயோரைப்பற்றி விசேஷமாகச் சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் ஜனங்களை நோக்கி, "பாகால்பேயோரின் நிமித்தம் கர்த்தர் செய்ததை உங்கள் கண்கள் கண்டிருக்கிறது; பாகால்பேயோரைப் பின்பற்றின மனிதரையெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இராதபடிக்கு அழித்துப் போட்டார். ஆனாலும் உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பற்றிக்கொண்ட நீங்களெல்லாரும் இந்நாள்வரைக்கும் உயிரோடிருக்கிறீர்கள்" (உபா 4:3,4) என்று சொல்லுகிறார்.

பாகால்பேயோரின் நிமித்தம் கர்த்தர் செய்த காரியங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் புத்திரர்மீது கோபங்கொண்டார்.
2. இஸ்ரவேல் புத்திரரின் ஆயிரம் பிரபுக்களை மரத்தினால் தூக்கிப்போட்டார்.
3. பாகாலை ஆராதித்தவர்களோடு சேர்ந்துகொண்ட எல்லா புருஷரையும் கொன்றுபோட்டார்.
4. சிம்ரியைக் கொலைசெய்த பினெகாசை ஆசீர்வதித்தார்.
5. கர்த்தர் வாதையை அனுப்பினார். அதில் 24,000பேர் மரித்தார்கள்.
6. பாவத்தின் நிமித்தமாக மீதியானியரை அழிக்கக் கட்டளையிட்டார்.

கர்த்தருடைய வாதையினால் 24,000பேர் மரித்துப் போனார்கள். மற்றவர்கள் இன்னும் உயிரோடிருக்கிறார்கள். உயிரோடிருக்கிறவர்கள் கர்த்தரைப் பற்றிக் கொண்டவர்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் பாகால்பேயோரை பின்பற்றின சம்பவம் சமீபத்தில் நடைபெற்றது. பாகால்பேயோரை பின்பற்றினவர்கள் அழிந்துபோனார்கள். கர்த்தரைப் பின்பற்றினவர்கள் ஜீவனோடு பாதுகாக்கப்பட்டார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே நிறைவேற்றின தம்முடைய நியாயத்தீர்ப்பை, ஜனங்களுடைய கண்கள் கண்டது.

கர்த்தரை விட்டு விலகிப்போனால் தங்களுக்கும் இதுபோல தண்டனை கிடைக்கும் என்னும் பயம், இஸ்ரவேல் புத்திரருடைய இருதயத்தில் நிரம்பியிருக்க வேண்டும். அதே சமயத்தில் கர்த்தரைப்பற்றிக் கொண்டால் அவருடைய ஆசீர்வாதம் தங்களுக்கு கிடைக்கும் என்னும் நம்பிக்கையும் இஸ்ரவேல் புத்திரருடைய இருதயத்திலே வர்த்திக்கவேண்டும். கர்த்தரைப்பற்றிக்கொண்ட ஜனங்கள் எல்லோரும் இந்நாள் வரைக்கும் உயிரோடிருக்கிறார்கள்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், இஸ்ரவேல் புத்திரருடைய பிதாக்களின் தேவனாயிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரருக்கும், கர்த்தருக்கும் இடையே உள்ள ஐக்கியத்தையும், தொடர்புகளையும் மோசே இந்த வசனப்பகுதியில் விளக்கிச் சொல்லுகிறார். கர்த்தர் சர்வஆளுகையுள்ளவர். இஸ்ரவேல் புத்திரரை ஆளுகை செய்யும் அதிகாரம் கர்த்தருக்கு உண்டு. இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தருடைய ஆளுகைக்கு தங்களை ஒப்புக்கொடுக்கவேண்டும்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், அவர்களுடைய பிதாக்களின் தேவனாகயிருப்பதினால், இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமே, கர்த்தருடைய சுதந்தரமாக இருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரருடைய பிதாக்கள் எல்லோருமே கர்த்தருடையவர்கள். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய வீட்டில் பிறந்தவர்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரரிடத்தில் கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது, "உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர்" (உபா 4:1) என்று சொல்லிவிட்டு, "உங்கள் தேவனாகிய கர்த்தர்" (உபா 4:2) என்றும் சொல்லுகிறார். ஆகையினால் இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் பிதாக்கள் மூலமாகவும் கர்த்தருக்குரியவர்களாயிருக்கிறார்கள், தங்களுடைய சொந்த தீர்மானத்தின் மூலமாகவும் அவர்கள் கர்த்தருக்குரியவர்களாகயிருக்கிறார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரரிடத்தில் கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது, "என் தேவனாகிய கர்த்தர்" (உபா 4:5) என்றும் சொல்லுகிறார். இதன் மூலமாக, மோசே தன்னை இஸ்ரவேல் புத்திரருக்கு, கர்த்தருடைய வார்த்தையை சொல்லும் ஸ்தானிகராக பாவித்துக்கொள்கிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீங்கள் சுதந்தரித்துக்கொள்ளும்படி பிரவேசிக்கும் தேசத்தில் நீங்கள் கைக்கொள்ளும்பொருட்டு, என் தேவனாகிய கர்த்தர் எனக்குக் கற்பித்தபடியே, நான் உங்களுக்குக் கட்டளைகளையும் நியாயங்களையும் போதித்தேன்" (உபா 4:5) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளையும், நியாயங்களையும் கைக்கொண்டு நடக்கவேண்டும். இதுவே அவர்களுக்கு ஞானமும் விவேகமுமாயிருக்கும். தேவனுடைய தெய்வீக வெளிப்படுத்தலின் பிரகாரமாக வழிநடத்தப்படுகிறவையெல்லாமே ஞானமுள்ளதாகவும், விவேகமுள்ளதாகவும் இருக்கும். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து கிரியை செய்கிறவர்கள், ஞானமுள்ள கிரியைகளையும், விவேகமுள்ள கிரியைகளையும் செய்வார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "ஆகையால் அவைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; ஜனங்களின் கண்களுக்குமுன்பாகவும் இதுவே உங்களுக்கு ஞானமும் விவேகமுமாய் இருக்கும்; அவர்கள் இந்தக் கட்டளைகளையெல்லாம் கேட்டு, இந்தப் பெரிய ஜாதியே ஞானமும் விவேகமுமுள்ள ஜனங்கள் என்பார்கள்" (உபா 4:6) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தேவனுக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கும்போது மற்ற தேசங்களைவிட ஆசீர்வாதமாக இருப்பார்கள். ஆகையினால் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நடப்பது அவர்களுக்கு ஞானமும் விவேகமுமாய் இருக்கும் (உபா 4:6-8).

புறஜாதி ஜனங்கள், இஸ்ரவேல் ஜனங்களை பெரிய ஜாதி என்று சொல்லுவார்கள். பெரிய ஜாதியில் காணப்படும் அம்சங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. தேவனுடைய பிரமாணத்தின் மூலமாக ஞானமும், விவேகமும். (உபா 4:5-6)

2. தேவனுடைய வார்த்தைக்கும், அவருடைய சித்தத்திற்கும் தங்களைப் பிரதிஷ்டை பண்ணும்போது தேவனுக்குச் சமீபமாயிருப்பது. (உபா 4:7)

3. ஜெபங்களுக்கு கர்த்தரிடத்திலிருந்து அற்புதமாய் உத்தரவு பெறுவது.

4. தேவனுடைய நீதியுள்ள கட்டளைகளையும், நியாயங்களையும் பெற்றிருப்பது. (உபா 4:8)

5. தேவனுடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவது. (உபா 4:1,5-6,9,14,23-24)

6. தேவனுடைய வார்த்தையைக் கூட்டாமல், குறைக்காமல் உள்ளபடியே ஏற்றுக் கொள்வது. (உபா 4:2)

7. விக்கிரகாராதனையை வெறுப்பது. (உபா 4:3-4,15-19)

8. வேதாகமத்தின் பிரகாரம் கல்வி, பொருளாதாரம், சமுதாயம் ஆகியவற்றில் நல்ல திட்டங்கள் உண்டாவது. (உபா 4:5-10,14)

9. தேவனுடைய பராமரிப்பை நம்புவது. தங்கள் சத்துருக்களிடமிருந்து கர்த்தர் தங்களைப் பாதுகாப்பார் என்று அவரையே நம்பி ஜீவிப்பது. (உபா 4:38-40)

10. எல்லாக் காரியங்களையும் சிருஷ்டித்தவர் கர்த்தரே என்றும், அவர் சர்வ வல்லமையுள்ளவர் என்றும் அங்கிகரிப்பது. (உபா 4:16-20,32,39-40)

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு மிகவும் விசேஷமானவர்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு மிகவும் விசேஷமான கிருபைகளையும், சிலாக்கியங்களையும் கொடுத்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் அனுபவிக்கும் சிலாக்கியங்களைப்போல, இந்தப் பிரபஞ்சத்தில் வேறு எந்த ஜாதியாரும் இவ்வளவு விசேஷமான சிலாக்கியங்களை பெற்றுக்கொள்ளவுமில்லை, அனுபவிக்கவுமில்லை.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம், அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல, தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது?" (உபா 4:7) என்றும்,

"இந்நாளில் நான் உங்களுக்கு விதிக்கிற இந்த நியாயப்பிரமாணம் முழுமைக்கும் ஒத்த இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும் நியாயங்களையும் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதியும் எது?" (உபா 4:8) என்றும் கேட்கிறார்.

மோசே கேட்கிற இந்தக் கேள்விக்கு, "இஸ்ரவேல் ஜாதியைப்போல, சிலாக்கியம் பெற்ற ஜாதி, வேறு ஒரு ஜாதியும் இல்லை" என்று மாத்திரமே பதில் சொல்ல முடியும்.

விசுவாசிகளாகிய நாம் கர்த்தரோடு ஐக்கியமாயிருக்கிறோம். இந்த ஐக்கியம் விசுவாசிகளுக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். கர்த்தருடைய வார்த்தையின் மூலமாகவும், நம்முடைய ஜெபத்தின் மூலமாகவும், நாம் கர்த்தரோடு ஐக்கியமாயிருக்கிறோம். கர்த்தரோடு ஐக்கியமாகயிருப்பதே விசுவாசிகளுக்கு மிகுந்த சந்தோஷம்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய வார்த்தையைப் பெற்றிருப்பதினாலும், கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவதினாலும், அவர்கள் கர்த்தரோடு ஐக்கியமாயிருக்கிறார்கள். ஆகையினால் இஸ்ரவேல் ஜாதியார், வானத்திற்கு கீழே உள்ள மற்ற எல்லா ஜாதியாரையும்விட, மிகுந்த சந்தோஷமுள்ள ஜாதியாராயிருக்கிறார்கள்.

இந்தப் பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு தேசத்திலும் சட்டங்களும், கட்டளைகளும், பிரமாணங்களும் உள்ளன. தேசத்தின் கட்டளைகளைவிட கர்த்தருடைய கட்டளைகளே உன்னதமானது. அதுவே மேன்மையானது. தேவனுடைய கட்டளைகளைப்போல உறுதியான கட்டளைகள் இந்த உலகத்தில் வேறு எதுவுமே இல்லை. கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். கர்த்தருடைய கட்டளைகள் எக்காலத்திலும் மாறாமல் நிலைத்து நிற்கிறது.

கர்த்தருடைய கட்டளைகள் எல்லாமே மனுக்குலத்திற்கு நன்மை செய்யக்கூடியதாயிருக்கிறது. கர்த்தருடைய பிரமாணங்களும், நியதிகளும் மனுஷருடைய நன்மையை நாடுகிறது. மனுபுத்திரர் எல்லோருமே நன்றாயிருக்க வேண்டும் என்பது தான் கர்த்தருடைய சித்தம். அவர்கள் நன்றாயிருக்க வேண்டுமென்றால், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை, தங்கள் தேவனாக்கிக்கொள்ளவேண்டும். மேலும் அவர்கள், கர்த்தருடைய கட்டளைகளுக்கு செவிகொடுத்து, அவற்றிற்கு கீழ்ப்படியவேண்டும்.

"எல்லாவற்றைப்பற்றியும் நீர் அருளின எல்லாக் கட்டளைகளும் செம்மையென்று எண்ணி, சகல பொய்வழிகளையும் வெறுக்கிறேன்" (சங் 119:128).

கர்த்தரின் கட்டளைகளை கனம்பண்ணுகிறவர்களை, அந்தக் கட்டளைகள் கனம்பண்ணும். மனுபுத்திரர் தங்களுடைய ஜீவியத்தில் கர்த்தரின் கட்டளைகளை உயர்த்தும்போது, அந்தக் கட்டளைகள் அவர்களை உயர்த்தும்.

கர்த்தர் சீனாய் மலையிலே இஸ்ரவேல் புத்திரருக்கு தன்னை வெளிப்படுத்தினார். அப்போது கர்த்தர் தம்முடைய கட்டளைகளை அவர்களுக்கு கொடுத்தார். கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வார்த்தைகளை, மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு ஞாபகப்படுத்தி சொல்லுகிறார்.

ஓரேபிலே உன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நீ நிற்கும்போது, கர்த்தர் என்னை நோக்கி, "ஜனங்களை என்னிடத்தில் கூடிவரச்செய்து, என் வார்த்தைகளை அவர்கள் கேட்கும்படி பண்ணுவேன்; அவர்கள் பூமியில் உயிரோடிருக்கும் நாளெல்லாம் எனக்குப் பயந்திருக்கும்படி அவைகளைக் கற்றுக்கொண்டு, தங்கள் பிள்ளைகளுக்கும் போதிக்கக்கடவர்கள்" (உபா 4:9) என்று சொன்னார்.

இஸ்ரவேல் குடும்பத்திலுள்ள ஒவ்வொரு பெற்றோரும் தேவனுடைய ஞானத்தையும், அறிவையும், அவர்களுடைய பிள்ளைகளின் இருதயத்தில் கற்பித்துத் தரவேண்டும். (உபா 4:9-10,14; உபா 6:6-9; 2தீமோ 2:14; 2தீமோ 3:15-17).

அந்த நாளில் கர்த்தர் மோசேயை நோக்கி, "உன் கண்கள் கண்ட காரியங்களை நீ மறவாதபடிக்கும், உன் ஜீவனுள்ள நாளெல்லாம் அவைகள் உன் இருதயத்தை விட்டு நீங்காதபடிக்கும் நீ எச்சரிக்கையாயிருந்து, உன் ஆத்துமாவைச் ஜாக்கிரதையாய்க் காத்துக்கொள்; அவைகளை உன் பிள்ளைகளுக்கும் உன் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் அறிவிக்கக்கடவாய்" (உபா 4:10) என்றும் சொன்னார்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லாக் காலங்களிலும் தேவனுடைய வார்த்தையை தங்களுடைய காதுகளால் கேட்பதற்கு இதுவே காரணமாகும். (ரோமர் 10:17; 2தீமோ 2:15; தீமோ 3:15-17).

கர்த்தர் மோசேயோடு பேசியபோது, இஸ்ரவேல் புத்திரர் சேர்ந்துவந்து, மலையின் அடிவாரத்தில் நின்றார்கள்; அந்த மலையில்வானத்தை அளாவிய அக்கினி எரிய, இருளும் மேகமும் அந்தகாரமும் சூழ்ந்தது (உபா 4:11).

தேவனுடைய வெளிப்பாட்டை இஸ்ரவேல் புத்திரர்கள் பார்த்தார்கள். மலையில் வானத்தை அளாவிய அக்கினி எரிகிறது. இருளும் மேகமும் அந்தகாரமும் மலையைச் சூழ்ந்திருக்கிறது. அவர்கள் தேவனுடைய சப்தத்தையும் கேட்கிறார்கள். (உபா 4:12-13; உபா 5:22-24). அக்கினி எரியும்போது அங்கு புகை இருந்ததா, அந்தகாரத்தில் இருள் இருந்ததா, என்பதெல்லாம் இங்கு வெளிப்படுத்தப் படவில்லை. எகிப்தில் இருந்ததுபோல, இங்கு அவர்கள் கர்த்தருக்கு அருகாமையில் இருந்திருந்தால் இதையெல்லாம் உணர்ந்திருப்பார்கள். (யாத் 10:21). மனுஷனுடைய இயற்கையான புலன்களால் கர்த்தரை அறிந்து கொள்ள முடியும்.

அந்த அக்கினியின் நடுவிலிருந்து கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடே பேசினார்; அவர்கள் வார்த்தைகளின் சத்தத்தை கேட்டார்கள்; இஸ்ரவேல் புத்திரர் அந்தச் சத்தத்தை கேட்டதேயன்றி, ஒரு ரூபத்தையும் காணவில்லை (உபா 4:12).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு புரியும் வண்ணமாக, அவர்களுடைய பாஷையில் பேசியிருக்கிறார். கர்த்தர் தங்களிடத்தில் பேசின வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரரும் கேட்டு, அதை புரிந்துகொண்டார்கள். கர்த்தர் தம்மைப்பற்றி நமக்கு எந்த அளவுக்கு வெளிப்படுத்தியிருக்கிறாரோ, அதுவே அவரை விசுவாசிப்பதற்கு, போதுமானது.

கர்த்தர் இந்த உலகத்திலுள்ள தம்முடைய சிருஷ்டிப்பின் கிரியைகள் மூலமாக, தம்மை மனுபுத்திரருக்கு வெளிப்படுத்துகிறார். பழைய ஏற்பாட்டுக் காலத்தில், கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு பேசியதுபோல, புதிய ஏற்பாட்டுக்காலத்தில் நம்மோடு பேசாவிட்டாலும், கர்த்தரைப்பற்றிய வெளிப்பாடுகள், இயற்கையில் காணப்படுகிற அவருடைய சிருஷ்டிப்புக்களின் மூலமாக நமக்கு கிடைத்திருக்கிறது.

"வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை" (சங் 19:1-3).

இஸ்ரவேல் புத்திரரோ, இயற்கையில் காணப்படுகிற, கர்த்தருடைய சிருஷ்டிப்பின் மூலமாகவும், அவரைப்பற்றிய வெளிப்பாடுகளைப் பெற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் அக்கினியின் நடுவிலிருந்து தங்களோடு பேசின கர்த்தருடைய வார்த்தைகளின் சத்தத்தையும் கேட்டிருக்கிறார்கள். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இஸ்ரவேல் சபையார், தங்கள் விசுவாசத்தின் ஆரம்ப நிலையிலிருக்கிறார்கள். ஆகையினால் கர்த்தர் விசேஷித்த உபாயங்கள் மூலமாக, இஸ்ரவேல் புத்திரருக்கு, தம்மைப்பற்றி வெளிப்படுத்தியிருக்கிறார்.

கர்த்தர் பத்துக்கற்பனைகளாகிய தம்முடைய உடன்படிக்கையை, மோசேயின் மூலமாக இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுக்கிறார். மோசே இதுபற்றி இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லும்போது,

"நீங்கள் கைக்கொள்ளவேண்டும் என்று அவர் உங்களுக்குக் கட்டளையிட்ட பத்துக் கற்பனைகளாகிய தம்முடைய உடன்படிக்கையை அவர் உங்களுக்கு அறிவித்து, அவைகளை இரண்டு கற்பலகைகளில் எழுதினார்" (உபா 4:13) என்றும்,

"நீங்கள் சுதந்தரித்துக்கொள்ளப் போகிற தேசத்தில் நீங்கள் கைக்கொள்ள வேண்டிய கட்டளைகளையும் நியாயங்களையும் உங்களுக்குப் போதிக்கவேண்டுமென்று அக்காலத்திலே கர்த்தர் எனக்குக் கட்டளையிட்டார்" (உபா 4:14) என்றும் சொல்லுகிறார்.

தேவனுடைய உடன்படிக்கை இங்கு பத்துக் கற்பனைகள் என்று அழைக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய உடன்படிக்கையில் பத்துக் கற்பனைகளே மையமான சாரப்பகுதியாகும். பத்துக் கட்டளைகளில்லாமல் தேவனுடைய உடன்படிக்கை பூர்த்தியாகாது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பழைய உடன்படிக்கை ஒழிந்துபோயிற்று. (2கொரி 3:6-15) ஆயினும் தற்போதும், பத்துக் கட்டளைகளில் ஒன்பது கட்டளைகள் புதிய உடன்படிக்கையில் இடம் பெற்றிருக்கிறது. ஓய்வுநாளைப் பற்றிய பிரமாணம் புதிய ஏற்பாட்டில் முழுவதுமாக அகற்றப்பட்டு விட்டது.

கர்த்தர் தம்முடைய பத்துக்கற்பனைகளை இரண்டு கற்பலகைகளில் எழுதினார். கர்த்தர் அவற்றை இரண்டுதரம் எழுதினார். (உபா 4:13; யாத் 24:12; யாத் 32:19; யாத் 34:1-4,28).

மோசே கர்த்தரிடமிருந்து பத்துக் கற்பனைகளை அக்காலத்தில் பெற்றுக் கொண்டார். அத்துடன் இஸ்ரவேல் புத்திரருக்குப் போதிப்பதற்காக மேலும் பல கட்டளைகளையும், நியாயங்களையும், பிரமாணங்களையும் மோசே பெற்றுக் கொண்டார்.

இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகாராதனைக்கு விலகியிருக்க வேண்டும். மோசே இரண்டுவிதமான விக்கிரகாராதனைகளைப்பற்றி இஸ்ரவேல் புத்திரருக்கு எச்சரிப்பாய்ச் சொல்லுகிறார். அவையாவன : 1. ஒரு விக்கிரகத்தை உண்டுபண்ணி அதை தங்கள் தெய்வமாக ஆராதிப்பது. 2. கர்த்தர் ஏற்படுத்தின வானத்தின் சர்வசேனைகளாகிய சந்திர சூரிய நட்சத்திரங்களை, தங்கள் தெய்வமாக ஆராதிப்பது.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, விக்கிரகாராதனைக்கு விரோதமாக எச்சரித்துச் சொல்லுகிறார்.

"கர்த்தர் ஓரேபிலே அக்கினியின் நடுவிலிருந்து உங்களோடே பேசினநாளில், நீங்கள் ஒரு ரூபத்தையும் காணவில்லை" (உபா 4:15) என்றும்,

"ஆகையால் நீங்கள் உங்களைக் கெடுத்துக்கொண்டு, ஆண் உருவும், பெண் உருவும், பூமியிலிருக்கிற யாதொரு மிருகத்தின் உருவும், ஆகாயத்தில் பறக்கிற செட்டையுள்ள யாதொரு பட்சியின் உருவும், பூமியிலுள்ள யாதொரு ஊரும் பிராணியின் உருவும், பூமியின் கீழ்த் தண்ணீரிலுள்ள யாதொரு மச்சத்தின் உருவுமாயிருக்கிற இவைகளில் யாதொரு உருவுக்கு ஒப்பான விக்கிரகத்தை உங்களுக்கு உண்டாக்காதபடிக்கு மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்" (உபா 4:16-18) என்றும் மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் ஓரேபிலே அக்கினியின் நடுவிலிருந்து இஸ்ரவேல் புத்திரரோடு பேசினார். ஆனால் அவர்கள் கர்த்தருடைய ரூபத்தைக் காணவில்லை. கர்த்தர் தமது ரூபத்தை வெளிப்படுத்தியிருந்தால், பலவீனமான இஸ்ரவேல் புத்திரர்கள் கர்த்தருக்கும் ஒரு விக்கிரகத்தைச் செய்து, விக்கிரகாராதனையில் மூழ்கியிருந்திருப்பார்கள். *(உபா 4:15-19).*

ஆயினும் கர்த்தருக்கு ஒரு ரூபம் உள்ளது என்று வேத பண்டிதர்கள் சொல்லுகிறார்கள். அவருக்கு ஒரு சாயல் உள்ளது. அவருக்கு ஆவிக்குரிய சரீரமும் உண்டு. பிரத்தியட்சமான சரீரமும் உண்டு. தேவன் இஸ்ரவேலின் 74 மூப்பர்களோடு புசித்துக் குடித்திருக்கிறார். *(யாத் 24:9-11)* மோசேக்கு கர்த்தர் தம்மை பிரத்தியட்சமாக வெளிப்படுத்திக் காண்பித்திருக்கிறார். கர்த்தர் மோசேயோடு முகமுகமாய் பேசினார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்குத் தம்மைப் பற்றி வெளிப்படுத்தாத பல அம்சங்களை அவர் மோசேக்கு வெளிப்படுத்தினார். அவர்கள் தேவனுடைய ரூபத்தைக் காணவில்லை. மோசே தேவனுடைய ரூபத்தைக் கண்டார். *(உபா 4:12,15-16=எண் 12:8, யோவான் 4:24).*

கர்த்தர் ஆவியானவராக இருக்கிறார். அவரே சர்வ சிருஷ்டிகளையும் சிருஷ்டித்த சர்வசிருஷ்டிகர். கர்த்தருடைய ரூபத்திற்கு ஒப்பாக வேறு எந்த உருவத்தையும் செய்யக்கூடாது. கர்த்தருக்கு ஒப்பாக ஒரு ருபத்தை உண்டுபண்ணுவது, கர்த்தருடைய சத்தியத்தை பொய்யாக்கும் காரியமாகவும், அது அவருடைய மகிமையை அவமாக்கும் காரியமாகவும் இருக்கிறது.

கர்த்தருக்கு ஒப்பாக விக்கிரகத்தை உண்டுபண்ணுகிறவர்கள், தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்கிறார்கள். அவர்கள் கர்த்தரை அவமானப்படுத்துகிறார்கள். கர்த்தருக்கு ரூபம் இல்லை என்பதை மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு தெளிவுபடுத்துகிறார். "கர்த்தர் ஓரேபிலே அக்கினியின் நடுவிலிருந்து உங்களோடே பேசினநாளில், நீங்கள் ஒரு ரூபத்தையும் காணவில்லை" *(உபா 4:15)* என்று மோசே சொல்லுகிறார்.

கர்த்தர் ஓரேபிலே இஸ்ரவேல் புத்திரருக்கு தம்மை வார்த்தையாக வெளிப்படுத்தினார். அவர்கள் அந்த வார்த்தையின் சத்தத்தைக் கேட்டார்கள். கர்த்தர் தம்மை ஒரு ரூபமாக வெளிப்படுத்தவுமில்லை, இஸ்ரவேல் புத்திரரும் ஓரேபிலே கர்த்தரை ஒரு ரூபமாக காணவுமில்லை.

விசுவாசிகளாகிய நாம் பரலோகத்திலே பிரவேசிக்கும்போது, அங்கே நம்முடைய கர்த்தரை முகமுகமாக தரிசிப்போம். இந்தப் பூமியிலே நம்மால் கர்த்தருடைய ரூபத்தைப் பார்க்க முடியாது. இந்தப் பூமியில் தம்முடைய ரூபத்தை மனுபுத்திரருக்கு வெளிப்படுத்த வேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமுமல்ல. கர்த்தருக்கு சித்தமில்லாத ஒரு காரியம் நடைபெறும் என்று நாம் எதிர்பார்க்கவும் கூடாது.

மோசே இந்த சத்தியத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். "நீங்கள் சேர்ந்துவந்து, மலையின் அடி வாரத்தில் நின்றீர்கள்; அந்த மலையில்வானத்தை அளாவிய அக்கினி எரிய, இருளும் மேகமும் அந்தகாரமும் சூழ்ந்தது. அந்த அக்கினியின் நடுவிலிருந்து கர்த்தர் உங்களோடே பேசினார்; வார்த்தைகளின் சத்தத்தை நீங்கள் கேட்டீர்கள்; அந்தச் சத்தத்தை நீங்கள் கேட்டதேயன்றி, ஒரு ரூபத்தையும் காணவில்லை" *(உபா 4:11,12).*

இஸ்ரவேல் புத்திரர் வானத்தின் சர்வசேனைகளாகிய சந்திர, சூரிய நட்சத்திரங்களையும் தொழுது சேவிக்கக்கூடாது. இவை சிருஷ்டிகள். கர்த்தரே இவற்றை சிருஷ்டித்தவர்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உங்கள் கண்களை வானத்திற்கு ஏறெடுத்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் வானத்தின் கீழெங்கும் இருக்கிற எல்லா ஜனங்களுக்கும் ஏற்படுத்தின வானத்தின் சர்வ சேனைகளாகிய சந்திர சூரிய நட்சத்திரங்களை நோக்கி, அவைகளைத் தொழுது சேவிக்க இணங்காதபடிக்கும், உங்கள் ஆத்துமாக்களைக்குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்" *(உபா 4:19)* என்று சொல்லுகிறார்.

வானத்தின் சர்வ சேனைகளாகிய சந்திர சூரிய நட்சத்திரங்களை இஸ்ரவேல் புத்திரர்கள் தொழுது சேவிக்கக்கூடாது. (2இராஜா 17:16; 2இராஜா 23:4; ஆமோ 5:26; அப் 7:42) சந்திரன், சூரிய நட்சத்திரங்கள் ஆகியவை பூமியிலுள்ள எல்லா ஜனங்களுக்காகவும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது (உபா 4:19; ஆதி 1:14-18).

சந்திர சூரிய நட்சத்திரங்களை தொழுதுகொள்வது பூர்வகாலத்து விக்கிரகாராதனை. இது மனுஷருடைய ஆத்துமாவுக்கு மிகவும் ஆபத்தானது. சந்திரனும் சூரியனும் நட்சத்திரங்களும் வானத்திலே உயரத்திலிருக்கிறது. அவை பிரகாசமாகயிருக்கிறது. இவற்றைப் பார்க்கும்போது மனுஷருடைய மனதிலே ஆச்சரியமுண்டாகிறது.

சந்திர சூரிய நட்சத்திரங்கள் பிரமாண்டமானவைகளாகயிருந்தாலும், இவற்றை தெய்வங்களாக பாவித்து ஆராதிக்கக்கூடாது. கர்த்தரே தம்முடைய சிருஷ்டிக்கும் வல்லமையினால், இவற்றை சிருஷ்டித்தார் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். ஆனாலும் வானமண்டலங்களிலிருக்கிற வானத்தின் சர்வசேனைகளுடைய பிரமாண்டங்களைப் பார்த்து, ஒரு சிலர் ஏமாந்துபோய், அவற்றை தெய்வங்களாக பாவித்து ஆராதிக்கிறார்கள்.

கர்த்தர் அதரிசனமானவர். நம்முடைய கண்களால் பிரத்தியட்சமாய்க் காணக்கூடாத தேவனை, மனக்கண்களாலும், விசுவாசக்கண்களாலும் தரிசிக்கவேண்டும். மனுஷருடைய விசுவாசம் பலவீனமாயிருக்கும்போது, அவன் காணக்கூடிய பொருட்களை தனக்கு தெய்வமாக்கிவிடுகிறான்.

கர்த்தர் வானத்தின் சர்வசேனைகளாகிய சந்திர சூரிய நட்சத்திரங்களை, மனுக்குலத்திற்கு பிரயோஜனமானவைகளாக சிருஷ்டித்திருக்கிறார். மனுஷன் அவற்றை தெய்வங்களாக ஆராதிக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமல்ல. வானத்தின் சர்வசேனைகளும் பூமிக்கு வெளிச்சம் கொடுப்பதற்காக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைப்பற்றிய சத்தியங்களையும், அவருடைய பிரமாணங்களையும், கட்டளைகளையும் கற்றுக்கொள்வதோடு, அவற்றை தங்கள் பிள்ளைகளுக்கும் போதிக்கவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "ஜனங்களை என்னிடத்தில் கூடிவரச்செய்து, என் வார்த்தைகளை அவர்கள் கேட்கும்படி பண்ணுவேன்; அவர்கள் பூமியில் உயிரோடிருக்கும் நாளெல்லாம் எனக்குப் பயந்திருக்கும்படி அவைகளைக் கற்றுக்கொண்டு, தங்கள் பிள்ளைகளுக்கும் போதிக்கக்கடவர்கள்" (உபா 4:9) என்றும்,

"உன் கண்கள் கண்ட காரியங்களை மறவாதபடிக்கும், உன் ஜீவனுள்ள நாளெல்லாம் அவைகள் உன் இருதயத்தை விட்டு நீங்காதபடிக்கும் நீ எச்சரிக்கையாயிருந்து, உன் ஆத்துமாவைச் ஜாக்கிரதையாய்க் காத்துக்கொள்; அவைகளை உன் பிள்ளைகளுக்கும் உன் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் அறிவிக்கக்கடவாய்" (உபா 4:10) என்றும் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லியிருக்கிற வார்த்தைகளை அவர்கள் மறந்துவிடக்கூடாது. "நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையை மறந்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் வேண்டாம் என்று விலக்கின எவ்வித சாயலான விக்கிரகத்தையும் உங்களுக்கு உண்டாக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" (உபா 4:23) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் ஓரேபிலே அக்கினியின் நடுவிலிருந்து இஸ்ரவேல் புத்திரரோடு பேசின நாளில், அவர்கள் ஒரு ரூபத்தையும் காணவில்லை. ஆனாலும் கர்த்தர் தம்முடைய வல்லமையை இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே வெளிப்படுத்தியிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்தார்கள். அந்த தேசம் இஸ்ரவேல் புத்திரருக்கு இருப்புக்காளவாயைப்போல இருந்தது. அவர்கள் சூளைகளிலே, அக்கினியின் நடுவிலே செங்கல் அறுக்கிற வேலைகளை செய்தார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய ரூபத்தைக் காணாவிட்டாலும், அவர்கள் கர்த்தருடைய வல்லமையை கண்டார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் இந்நாளிலிருக்கிறதுபோல தமக்கு சுதந்தரமாக ஜனமாயிருக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம். இதற்காக கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை சேர்த்துக்கொண்டு, அவர்களை எகிப்து என்னும் இருப்புக்காளவாயிலிருந்து புறப்படப்பண்ணினார் (உபா 4:20).

எகிப்து தேசத்தில் இஸ்ரவேல் புத்திரரின் அனுபவம் இருப்புக்காள வாயில் போடப்பட்ட அனுபவத்தைப் போன்று இருந்தது (1இராஜா 8:51-53; எரே 11:4) எகிப்தின் அடிமைத்தனத்தில் அவர்கள் பல பாடுகளையும், வேதனைகளையும் அனுபவித்தார்கள்.

மோசே இந்த செய்தியை இஸ்ரவேல் புத்திரருக்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார். "உங்கள் தேவனாகிய கர்த்தர் எகிப்திலே உங்கள் கண்களுக்கு முன்பாக உங்களுக்குச் செய்தபடியெல்லாம் தேவன் அந்நிய ஜாதிகளின் நடுவிலிருந்து ஒரு ஜனத்தைச் சோதனைகளினாலும், அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், யுத்தத்தினாலும், வல்லமையுள்ள கரத்தினாலும், ஓங்கிய புயத்தினாலும், மகா பயங்கரமான செயல்களினாலும், தமக்கென்று தெரிந்துகொள்ள வகைபண்ணினதுண்டோ என்று நீ விசாரித்துப்பார்" (உபா 4:34) என்று மோசே இஸ்ரவேல் ஜனத்தாரிடத்தில் சொல்லுகிறார்.

அவர் உன் பிதாக்களில் அன்புகூர்ந்தபடியால், அவர்களுடைய பின்சந்ததியைத் தெரிந்துகொண்டு, உன்னிலும் பலத்த பெரிய ஜாதிகளை உனக்கு முன்னின்று துரத்தவும், உன்னை அழைத்துக்கொண்டுபோய், இந்நாளில் இருக்கிறதுபோல, அவர்கள் தேசத்தை உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கவும், உன்னைத் தமது முகத்துக்குமுன் தமது மிகுந்த வல்லமையினால் எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார் (உபா 4:37,38) என்றும் மோசே இஸ்ரவேல் புத்திரரிடத்தில் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து என்னும் இருப்புக்காளவாயிலிருந்து புறப்படப்பண்ணி, கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு போகிறார். கர்த்தர் கானான் தேசத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் யோர்தானைக் கடந்து, கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, தனக்கு அந்த சிலாக்கியம் கிடைக்கவில்லை என்பதையும் மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு தெளிவுபடுத்துகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "கர்த்தர் உங்கள் நிமித்தம் என்மேல் கோபங்கொண்டு, நான் யோர்தானைக் கடந்துபோவதில்லை என்றும், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கிற அந்த நல்ல தேசத்தில் நான் பிரவேசிப்பதில்லை என்றும் ஆணையிட்டார். அதினால் இந்த தேசத்தில் நான் மரணமடையவேண்டும்; நான் யோர்தானைக் கடந்துபோவதில்லை; நீங்களோ கடந்துபோய், அந்த நல்ல தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்வீர்கள்" (உபா 4:21,22) என்று சொல்லுகிறார்.

மோசே கர்த்தருடைய மகிமையையும், அவருடைய மகத்துவத்தையும் இஸ்ரவேல் புத்திரருக்கு தெளிவாகப் போதிக்கிறார். நாம் கர்த்தருடைய மகிமையை புரிந்துகொண்டால், அவருக்கு விரோதமாகப் பாவம் செய்ய துணியமாட்டோம். மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உன் தேவனாகிய கர்த்தர் பட்சிக்கிற அக்கினி, அவர் எரிச்சலுள்ள தேவன்" (உபா 4:24) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் மாத்திரமே ஜீவனுள்ள தேவன். அவர் ஒருவர் மாத்திரமே மெய்யான தேவன். புறஜாதியாரின் தெய்வங்கள் எல்லாம் மனுஷருடைய கைகளின் கிரியைகளாயிருக்கிறது. அவற்றிற்கு ஜீவனுமில்லை. வல்லமையுமில்லை. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை மாத்திரம் ஆராதிப்பதாக, அவரோடு உடன்படிக்கை செய்திருக்கிறார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையை மறந்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் வேண்டாம் என்று விலக்கின எவ்வித சாயலான விக்கிரகத்தையும் உங்களுக்கு உண்டாக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" (உபா 4:23) என்று சொல்லுகிறார்.

நாம் கர்த்தருக்கு கொடுக்க வேண்டிய மகிமையை விக்கிரகங்களோடு பகிர்ந்துகொள்ளக்கூடாது. கர்த்தரைத் தொழுதுகொள்கிறவர்கள் அவரை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும்.

"ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம். நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே" (எபி 12:28,29).

கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் ஆராதியாமல், கர்த்தருடைய சாயலுக்கு ஒப்பாக ஒரு விக்கிரகத்தை உண்டுபண்ணி, அதை ஆராதிக்கிறவர்களுக்கு, கர்த்தர் பட்சிக்கிற அக்கினியாக இருப்பார். கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கிறவர்களுக்கோ அவர் இரக்கமுள்ள தேவனாயிருப்பார் (உபா 4:31).

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு முன்னறிவித்த காரியங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. நீங்கள் பிள்ளைகளும் பிள்ளைகளின் பிள்ளைகளும் பெறுவீர்கள். (உபா 4:25). இந்தத் தீர்க்கதரிசனத்திற்குப் பின்பு இஸ்ரவேல் புத்திரரின் 35 சந்ததியார் இஸ்ரவேல் தேசத்தில் குடியிருக்கிறார்கள். அதன்பின்பு, கி.பி. 70 ஆம் வருஷத்தில் ரோமர்கள் இஸ்ரவேல் புத்திரரைச் சிதறடித்தார்கள். எல்லா தேசங்களுக்கும் இஸ்ரவேலர்கள் சிதறிப்போனார்கள். (மத் 23:37-39; லூக்கா 21:20-24).

2. நீங்கள் தேசத்தில் வெகுநாள் இருப்பீர்கள். (உபா 4:25). இஸ்ரவேல் புத்திரர் தேசங்களுக்கு சிதறிப்போவதற்கு முன்பாக சுமார் 1,800 வருஷங்களுக்குக் கானான் தேசத்தில் குடியிருக்கிறார்கள். இதில் பாபிலோனிய சிறையிருப்பின் 70 வருஷங்கள் சேர்க்கப்படவில்லை. (எரே 25:11-12; தானி 9:2).

3. நீங்கள் தேசத்தில் உங்களைக் கெடுத்துக் கொள்வீர்கள். (உபா 4:25) யோசுவாவும், இஸ்ரவேலின் மூப்பர்களும் மரித்துப்போன பின்பு, இஸ்ரவேல் புத்திரர்கள் தங்களைக் கெடுத்துக் கொள்ள ஆரம்பித்தார்கள். (யோசு 24:31; நியா 2:7-23) நியாயாதிபதிகள்,சாமுவேல், ராஜாக்கள், நாளாகமம் ஆகிய புஸ்தகங்களில் வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் அவர்கள் பாவத்தில் ஜீவித்து, இறுதியில் சிறையிருப்பிற்குப் போய்விடுகிறார்கள்.

மேசியாவை ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்து கி.பி. 70 ஆம் வருஷத்தில் இஸ்ரவேல் தேசம் ஒரு தேசமாக இராதவாறு முழுவதுமாக அழிக்கப்பட்டது. விக்கிரகாராதனை, தேவனுக்கு எதிரான கலகங்கள், நீதிநெறிக்கு எதிரான பாவங்கள், ஆகியவற்றோடு இயேசு கிறிஸ்துவையும் அவருடைய அப்போஸ்தலர்களையும் ஏற்றுக் கொள்ளாமல் அவர்களைப் புறக்கணித்து இஸ்ரவேல் புத்திரர்கள் தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள். (நியா 2; 2இராஜா 17; மத் 23; லூக்கா 21:20-24).

4. தேசத்தில் நீங்கள் முற்றிலும் அழிந்துபோவீர்கள். (உபா 4:26). கி.மு. 722, கி.பி. 606 ஆகிய வருஷங்களில் இது அப்படியே நிறைவேறிற்று. எருசலேம் அழிக்கப்பட்ட போது, ஒருசிலரைத் தவிர, மற்ற இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் பாபிலோனிய சிறையிருப்பிற்கு உட்படுத்தப்பட்டார்கள். (2இராஜா 17, 2இராஜா 25). மறுபடியும் இஸ்ரவேல் தேசம் கி.பி. 70 ஆம் வருஷத்தில் அழிக்கப்பட்டது. அதன் பின்பு, இன்று வரையிலும் அவர்களுக்கு வாக்குப் பண்ணப்பட்ட கானான் தேசத்தில் அநேக யூதர்கள் காணப்படவில்லை. (லூக்கா 21:20-24).

5. கர்த்தர் உங்களைப் புறஜாதிகளுக்குள்ளே சிதற அடிப்பார். நீங்கள் கொஞ்ச ஜனங்களாய் மீந்திருப்பீர்கள். (உபா 4:27). இந்தத் தீர்க்கதரிசனமும், நிறைவேறிற்று. இன்றும் நிறைவேறி வருகிறது.

6. நீங்கள் மனுஷர் கைவேலையாகிய தேவர்களைச் சேவிப்பீர்கள். (உபா 4:28) இந்தத் தீர்க்கதரிசனமும், நிறைவேறிற்று. (ஏசா 2:18-20; ஏசா 31:7; சக 10:2; சக 13:2).

7. உன் தேவனாகிய கர்த்தரைத் தேடுவாய்;...... அவரைத் தேடும்போது, அவரைக் கண்டடைவாய். (உபா 4:29-31). இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும்.

இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லப்பட்டிருக்கும் வாக்குத்தத்தங்களின் விவரம் வருமாறு :

1. அவர் உன்னைக் கைவிடமாட்டார்.

(1) மனுஷரோடு தம்முடைய உடன்படிக்கையைக் காத்துக் கொள்வார். (உபா 4:31)

(2) சத்துருக்களிடமிருந்து வெற்றியைத் தருவார். (உபா 31:6)

(3) ஜீவியத்தின் பொறுப்புக்களில் உதவி புரிவார். (யோசு 1:5)

(4) கர்த்தர் தம்முடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கு அடுத்த சகல கிரியைகளையும் நீ முடித்து தீருமட்டும் அவர் உன்னைவிட்டு, விலகவுமாட்டார். உன்னை கைவிடவுமாட்டார். (1நாளா 28:20)

(5) கிறிஸ்தவ ஜீவியத்தில் உதவி புரிவார். (எபி 13:5-6)

2. அவர் உன்னை அழிக்கமாட்டார்.

3. அவர் உன் பிதாக்களுக்குத் தாம் ஆணையிட்டுக் கொடுத்த உடன்படிக்கையை மறக்கமாட்டார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பாக, மோசே அவர்களுக்கு கர்த்தரைப்பற்றிய சத்தியத்தைப் போதிக்கிறார். அவர்கள் யோர்தானைக் கடந்து கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, கர்த்தரைப்பற்றிய மெய்யான சத்தியத்தையும், கர்த்தருடைய வார்த்தைகளையும் தங்களோடு சுமந்து செல்லவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, மோசே அவர்களோடுகூட அந்த தேசத்திற்குப் போகமாட்டார். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்ல வேண்டிய உபதேசங்களையெல்லாம், மோசே யோர்தானுக்கு இக்கரையிலே தெளிவாக சொல்லுகிறார்.

கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற தேசமாயிருக்கிறது. அதே வேளையில் அந்த தேசம் விக்கிரகாராதனை நிரம்பிய தேசமாகவும் இருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்திற்குள் பிரவேசித்த பின்பு, தங்கள் தேவனாகிய கர்த்தரையும், அவர் தங்களோடு பண்ணின உடன்படிக்கையையும் மறந்துவிட்டு, புறஜாதி ஜனங்களைப்போல, தங்களுக்கு விக்கிரகங்களை உண்டுபண்ணிவிடக்கூடாது. கர்த்தருடைய ஜனம் விக்கிரகாராதனைக்கு விரோதமாக எச்சரிப்பாயிருக்கவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய கட்டளைகளுக்கும், அவருடைய நியதிகளுக்கும் கீழ்ப்படியவில்லையென்றால், கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வரும். அவர்கள் கானான் தேசத்திலே வாசம்பண்ணினாலும், அந்த தேசத்திலேயே அவர்கள் நிர்மூலமாவார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீங்கள் பிள்ளைகளும் பிள்ளைகளின் பிள்ளைகளும் பெற்று, தேசத்தில் வெகுநாள் இருந்தபின்பு, நீங்கள் உங்களைக் கெடுத்து, யாதொரு விக்கிரகத்தையாவது யாதொரு சாயலான சுரூபத்தையாவதுபண்ணி, உன் தேவனாகிய கர்த்தருக்குக் கோபம் உண்டாக்க அவர் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தால், நீங்கள் யோர்தானைக் கடந்து சுதந்தரிக்கப்போகிற தேசத்தில் இராமல், சீக்கிரமாய் முற்றிலும் அழிந்துபோவீர்கள் என்று, இந்நாளில் உங்களுக்கு விரோதமாய் வானத்தையும் பூமியையும் சாட்சி வைக்கிறேன்; நீங்கள் அதிலே நெடுநாள் இராமல் நிர்மூலமாக்கப்படுவீர்கள்" (உபா 4:25,26) என்றும்,

"கர்த்தர் உங்களைப் புறஜாதிகளுக்குள்ளே சிதற அடிப்பார்; கர்த்தர் உங்களைக் கொண்டுபோய் விடப்போகிற ஜாதிகளிடத்திலே கொஞ்ச ஜனங்களாய் மீந்திருப்பீர்கள். அங்கே காணாமலும் கேளாமலும் சாப்பிடாமலும் முகராமலும் இருக்கிற மரமும் கல்லுமான, மனுஷர் கைவேலையாகிய தேவர்களைச் சேவிப்பீர்கள்" (உபா 4:27,28) என்றும் சொல்லுகிறார்.

நாம் எந்த இடத்திலிருந்தாலும், அந்த இடத்திலிருந்து கர்த்தரைத் தேடவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்கு போனபின்பு, கர்த்தரைத் தேடுவார்கள் என்றும், அவர்கள் கர்த்தரைத் தேடும்போது அவரை கண்டடைவார்கள் என்றும் மோசே சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "கானான் தேசத்திலிருந்து உன் தேவனாகிய கர்த்தரைத் தேடுவாய்; உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அவரைத் தேடும்போது, அவரைக் கண்டடைவாய்" (உபா 4:29) என்றும்,

"நீ வியாகுலப்பட இவைகளெல்லாம் உன்னைத் தொடர்ந்து பிடிக்கும்போது, கடைசி நாட்களில் உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பி அவர் சத்தத்திற்குக் கீழ்ப்படிவாயானால், உன் தேவனாகிய கர்த்தர் இரக்கமுள்ள தேவனாயிருக்கிறபடியால், அவர் உன்னைக்கைவிடவுமாட்டார், உன்னை அழிக்கவுமாட்டார், உன் பிதாக்களுக்குத் தாம் ஆணையிட்டுக் கொடுத்த உடன்படிக்கையை மறக்கவுமாட்டார்" (உபா 4:30,31) என்றும் சொல்லுகிறார்.

நாம் எந்த தேசத்திலிருந்தாலும் அந்த தேசத்திலிருந்து நம்முடைய தேவனாகிய கர்த்தரைத் தேடவேண்டும். நம்முடைய சொந்த தேசத்தைவிட்டு தூரதேசத்திலிருந்தாலும், நம்முடைய ஆலயத்தை விட்டுத் தூரமாயிருந்தாலும், நாம் இருக்கும் இடத்திலிருந்து கர்த்தரைத் தேடும்போது, அவரைக் கண்டடையலாம். கர்த்தர் சர்வவியாபகர். புதிய ஏற்பாட்டுக்காலத்தில், கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் ஒரு குறிப்பிட்ட ஸ்தலத்தில் மாத்திரமே இருக்கும் என்று நிர்ணயம்பண்ணப்படவில்லை.

கர்த்தரைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு, அவர்களுடைய இருதயத்தில் ஆறுதலும், சமாதானமும், சந்தோஷமும் உண்டாகும். இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்திலே வியாகுலப்படும்போதும், கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வரும்போதும், பாடுகளும் பிரச்சனைகளும் அவர்களை மேற்கொள்ளும்போதும், அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரைத் தேடுவார்கள். அவர்கள் கர்த்தரைக் கண்டுபிடித்து கர்த்தரிடத்தில் திரும்பி வந்து அவருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிவார்கள்.

நாம் கர்த்தரை விட்டு விலகிப்போகும்போது கர்த்தர் நமக்கு பாடுகளையும், வேதனைகளையும், வியாகுலங்களையும் அனுமதிக்கிறார். நம்முடைய ஜீவியத்திலே பிரச்சனைகள் வரும்போது, நம்முடைய தேவனாகிய கர்த்தரை முழுஇருதயத்தோடும், முழுஆத்துமாவோடும் விரைவாக தேடவேண்டும். நாம் மனந்திரும்பவேண்டும் என்பதற்காகவே கர்த்தர் பல சமயங்களில் நம்முடைய வாழ்க்கையிலே வியாகுலங்களை அனுமதிக்கிறார். நாம் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருக்கவேண்டும் என்பதும், நாம் கர்த்தரை விட்டு விலகிப்போனாலும், மறுபடியும் அவரிடத்தில் வந்து சேரவேண்டும் என்பதும் கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை தமக்கு சொந்த ஜனமாக தெரிந்துகொண்டார். தேவனாகிய கர்த்தர் இரக்கமுள்ள தேவனாகயிருக்கிறபடியினால் , அவர் இஸ்ரவேல் புத்திரரை கைவிடவுமாட்டார், அவர்களை அழிக்கவும் மாட்டார். அவர்களுடைய பிதாக்களுக்கு தாம் ஆணையிட்டுக்கொடுத்த உடன்படிக்கையை மறக்கவும் மாட்டார்.

இந்தப் பிரபஞ்சத்திலே இஸ்ரவேல் புத்திரர் விசேஷித்த ஜனமாயிருக்கிறார்கள். அவர்கள் விசேஷமான வழிகளிலே கர்த்தருடைய கிருபைகளையும், இரக்கங்களையும், ஆசீர்வாதங்களையும், சிலாக்கியங்களையும் அனுபவிக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் அனுபவிக்கும் விசேஷித்த சிலாக்கியங்களை மோசே இந்த வசனப்பகுதியிலே அவர்களுக்கு எடுத்து சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "தேவன் மனுஷனைப் பூமியிலே சிருஷ்டித்த நாள்முதல், உனக்கு முன் இருந்த பூர்வநாட்களில், வானத்தின் ஒருமுனை தொடங்கி அதின் மறுமுனைமட்டுமுள்ள எவ்விடத்திலாகிலும் இப்படிப்பட்ட பெரிய காரியம் நடந்ததுண்டோ, இப்படிப்பட்ட காரியம் கேள்விப்பட்டதுண்டோ" (உபா 4:32) என்றும்,

"அக்கினியின் நடுவிலிருந்து பேசுகிற தேவனுடைய சத்தத்தை நீ கேட்டது போல, யாதொரு ஜனமாவது கேட்டதும் உயிரோடிருந்ததும் உண்டோ" (உபா 4:33) என்றும் கேட்கிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உங்கள் தேவனாகிய கர்த்தர் எகிப்திலே உங்கள் கண்களுக்கு முன்பாக உங்களுக்குச் செய்தபடியெல்லாம் தேவன் அந்நிய ஜாதிகளின் நடுவிலிருந்து ஒரு ஜனத்தைச் சோதனைகளினாலும், அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், யுத்தத்தினாலும், வல்லமையுள்ள கரத்தினாலும், ஓங்கிய புயத்தினாலும், மகா பயங்கரமான செயல்களினாலும், தமக்கென்று தெரிந்துகொள்ள வகைபண்ணினதுண்டோ என்று நீ விசாரித்துப்பார்" (உபா 4:34) என்று சொல்லுகிறார்.

கர்த்தரே தேவன், அவரையல்லாமல் வேறொருவரும் இல்லை என்பதை நீ அறியும்படிக்கு, இது உனக்குக் காட்டப்பட்டது (உபா 4:35) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

தேவன் இஸ்ரவேல் புத்திரரோடு அவர்கள் காதுகள் கேட்கப் பேசியதற்கு இதுவே அவருடைய நோக்கமாகும். (உபா 4:33) தம்முடைய மகா வல்லமையை கர்த்தர் அவர்களுக்குக் காண்பித்தார். (உபா 4:34) கர்த்தரே தேவன் அவரையல்லாமல் வேறொருவரும் இல்லை என்பதை அவர்கள் புரிந்து கொள்வதற்காக தேவன் இஸ்ரவேல் புத்திரர் நடுவில் பலத்த காரியங்களைச் செய்தார்.

மோசே தன்னுடைய போதகத்தின் முடிவுரையாக, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு காண்பித்த கிருபைகளையும், வல்லமைகளையும் அவர்களுக்கு எடுத்து சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உன்னை உபதேசிக்கும்படிக்கு, அவர் வானத்திலிருந்து தமது சத்தத்தை உனக்குக் கேட்கப்பண்ணி, பூமியிலே தமது பெரிய அக்கினியை உனக்கு காண்பித்தார் அக்கினியின் நடுவிலிருந்து உண்டான அவருடைய வார்த்தைகளைக் கேட்டாய்" (உபா 4:36) என்றும்,

"அவர் உன் பிதாக்களில் அன்புகூர்ந்தபடியால், அவர்களுடைய பின்சந்ததியைத் தெரிந்துகொண்டு, உன்னிலும் பலத்த பெரிய ஜாதிகளை உனக்கு முன்னின்று துரத்தவும், உன்னை அழைத்துக்கொண்டுபோய், இந்நாளில் இருக்கிறதுபோல, அவர்கள் தேசத்தை உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கவும், உன்னைத் தமது முகத்துக்குமுன் தமது மிகுந்த வல்லமையினால் எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்" (உபா 4:37,38) என்றும் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு நடப்பித்த பெரிய காரியங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்குத் தமது சத்தத்தைக் கேட்கப்பண்ணினார். (உபா 4:32,36)

2. தேவன் இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்து வந்தார். (உபா 4:34)

தேவன் இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்து வந்த விதமாவது:

1. சோதனைகள், பரீட்சைகள் (உபா 29:3)
2. அடையாளங்கள் - அக்கினிஸ்தம்பமும், மேகஸ்தம்பமும்
3. அற்புதங்கள்
4. யுத்தங்களை அனுமதித்து வெற்றி தந்தார்.
5. வல்லமையுள்ள கரத்தினால்
6. ஓங்கிய புயத்தினால்
7. மகா பயங்கரமான செயல்களினால்

தேவன் இஸ்ரவேல் புத்திரரைத் தெரிந்தெடுத்து அவர்களை ஆசீர்வதித்ததற்கான காரணங்களாவன :

1. கர்த்தர் அவர்களுடைய பிதாக்களில் அன்புகூர்ந்தார் (உபா 4:37)
2. பக்தியில்லாத பெரிய ஜாதிகளைத் துரத்தி அழித்தார் (உபா 4:38)
3. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருடைய சந்ததிக்கு அவர்களுடைய தேசத்தைச் சுதந்தரமாகக் கொடுத்தார் (உபா 4:38)

மோசே தன்னுடைய போதகத்தின் முடிவுரையாக, "ஆகையால், உயர வானத்திலும் தாழ பூமியிலும் கர்த்தரே தேவன், அவரைத் தவிர ஒருவரும் இல்லை என்பதை நீ இந்நாளில் அறிந்து, உன் மனதிலே சிந்தித்து, நீயும் உனக்குப் பின்வரும் உன் பிள்ளைகளும் நன்றாயிருக்கும்படிக்கும், உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு என்றைக்கும் கொடுக்கிற தேசத்திலே நீ நீடித்த நாளாயிருக்கும்படிக்கும், நான் இன்று உனக்குக் கற்பிக்கிற அவருடைய கட்டளைகளையும் அவருடைய கற்பனைகளையும் கைக்கொள்ளக்கடவாய்" (உபா 4:39,40) என்று இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்

அடைக்கலப்பட்டணங்கள் உபா 4:41-43

உபா 4:41. முற்பகையின்றிக் கைப்பிசகாய் பிறனைக் கொன்றவன் அடைக்கலப்பட்டணங்களில் ஒரு பட்டணத்தில் தப்பியோடிப் போய்ப் பிழைத்திருக்கும்படியாக,

உபா 4:42. ரூபனியரைச் சேர்ந்த சமபூமியாகிய வனாந்தரத்திலுள்ள பேசேரும், காத்தியரைச் சேர்ந்த கீலேயாத்திலுள்ள ராமோத்தும், மனாசேயரைச் சேர்ந்த பாசானிலுள்ள கோலானுமாகிய,

உபா 4:43. மூன்று பட்டணங்களை மோசே யோர்தானுக்கு இப்புறத்தில் சூரியோதய திசையிலே ஏற்படுத்தினான்.

மோசே யோர்தானுக்கு இப்புறத்திலே மூன்று அடைக்கலப்பட்டணங்களை ஏற்படுத்துகிறார். அவற்றில் ஒன்று ரூபன் புத்திரருடைய சுதந்தரத்திலும், மற்றொன்று காத் புத்திரருடைய சுதந்தரத்திலும், வேறொன்று மனாசேயின் பாதிக்கோத்திரத்தாருடைய சுதந்தரத்திலும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

முற்பகையின்றிக் கைப்பிசகாய் பிறனைக் கொன்றவன் அடைக்கலப்பட்டணங்களில் ஒரு பட்டணத்தில் தப்பியோடிப் போய்ப் பிழைத்திருக்கும்படியாக மோசே யோர்தானுக்கு இப்புறத்திலே மூன்று அடைக்கலப்பட்டணங்களை ஏற்படுத்தியிருக்கிறார் (உபா 4:41).

ரூபனியரைச் சேர்ந்த சமபூமியாகிய வனாந்தரத்திலுள்ள பேசேரும், காத்தியரைச் சேர்ந்த கீலேயாத்திலுள்ள ராமோத்தும், மனாசேயரைச் சேர்ந்த பாசானிலுள்ள கோலானுமாகிய, மூன்று பட்டணங்களை மோசே யோர்தானுக்கு இப்புறத்தில் சூரியோதய திசையிலே அடைக்கலப்பட்டணங்களாக ஏற்படுத்தி இருக்கிறார் (உபா 4:42,43).

மோசேயின் பிரமாணம்
உபா 4:44-49

உபா 4:44. இதுவே மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு விதித்த பிரமாணம்.

உபா 4:45. இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து புறப்பட்டபின்பு, யோர்தானுக்கு இப்புறத்தில் எஸ்போனில் குடியிருந்த எமோரியரின் ராஜாவாகிய சீகோனுடைய தேசத்திலுள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே, அவர்களுக்கு மோசே சொன்ன சாட்சிகளும் கட்டளைகளும் நியாயங்களும் இவைகளே.

உபா 4:46. மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் எகிப்திலிருந்து புறப்பட்டபின்பு அந்த ராஜாவை முறிய அடித்து,

உபா 4:47. யோர்தானுக்கு இப்புறத்தில் சூரியோதய திசையில் அர்னோன் ஆற்றங்கரையிலுள்ள ஆரோவேர் தொடங்கி எர்மோன் என்னும் சீயோன் மலைவரைக்குமுள்ள தேசமும்,

உபா 4:48. யோர்தானுக்கு இப்புறத்தில் சூரியோதய திசையில் அஸ்தோத் பிஸ்காவுக்கும் தாழ்ந்த சமனான வெளியைச்சேர்ந்த கடல்மட்டுமுள்ள சமனான வெளியனைத்துமாகிய,

உபா 4:49. எமோரியருடைய இரண்டு ராஜாக்களின் தேசங்களான சீகோனுடைய தேசத்தையும், பாசானின் ராஜாவாகிய ஓகின் தேசத்தையும் கட்டிக்கொண்டார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு, இந்த அதிகாரத்தில் சொல்லியிருக்கிற போதகத்தைத் தவிர, மேலும் ஒரு போதகத்தையும் ஆயத்தம்பண்ணுகிறார். அந்தப்போதகம் இதற்கு அடுத்து வரும் அதிகாரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் முன்னுரை இந்த அதிகாரத்திலிருக்கிறது. மோசே ஒருவேளை இந்தப் போதகத்தை, அடுத்த ஓய்வுநாளில் பிரசங்கம் செய்திருப்பார் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

தன்னுடைய போதகத்திற்கு இஸ்ரவேல் புத்திரர் செவிகொடுக்க வேண்டுமென்றும், தன்னுடைய வார்த்தைகளுக்கு அவர்கள் கீழ்ப்படியவேண்டும் என்றும் மோசே சொல்லுகிறார். மோசே கர்த்தருடைய பிரமாணங்களையும், அவருடைய கட்டளைகளையும் இஸ்ரவேல் புத்திரருக்கு போதிக்கிறார்.

இதுவே மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு விதித்த பிரமாணம். இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து புறப்பட்டபின்பு, யோர்தானுக்கு இப்புறத்தில் எஸ்போனில் குடியிருந்த எமோரியரின் ராஜாவாகிய சீகோனுடைய தேசத்திலுள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே, அவர்களுக்கு மோசே சொன்ன சாட்சிகளும் கட்டளைகளும் நியாயங்களும் இவைகளே (உபா 4:44,45).

ஆரம்பத்தில் 40 வருஷங்களுக்கு முன்பாக கர்த்தர் சீனாய் மலையில் பத்துக் கற்பனைகளைக் மோசேயிடம் கொடுத்தார். (யாத் 20) இப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பாக, அந்தப் பத்துக் கற்பனைகளோடு வேறுசில சாட்சிகளும் கட்டளைகளும் நியாயங்களும் சேர்க்கப்பட்டு இஸ்ரவேல் புத்திரருக்கு மறுபடியும் அறிவிக்கப்படுகிறது (உபா 5:1-21).

இஸ்ரவேல் புத்திரர் சீகோனுடைய தேசத்தையும், ஓகின் தேசத்தையும் கட்டிக்கொண்ட சம்பவம் இந்த வசனப்பகுதியில் மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் எகிப்திலிருந்து புறப்பட்டபின்பு அந்த ராஜாவை முறிய அடித்து, யோர்தானுக்கு இப்புறத்தில் சூரியோதய திசையில் அர்னோன் ஆற்றங்கரையிலுள்ள ஆரோவேர் தொடங்கி எர்மோன் என்னும் சீயோன் மலைவரைக்குமுள்ள தேசமும், யோர்தானுக்கு இப்புறத்தில் சூரியோதய திசையில் அஸ்தோத் பிஸ்காவுக்கும் தாழ்ந்த சமனான வெளியைச்சேர்ந்த கடல்மட்டுமுள்ள சமனான வெளியனைத்துமாகிய, எமோரியருடைய இரண்டு ராஜாக்களின் தேசங்களான சீகோனுடைய தேசத்தையும், பாசானின் ராஜாவாகிய ஓகின் தேசத்தையும் கட்டிக்கொண்டார்கள்" (உபா 4:46-49).

5 அதிகாரம்

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சொன்ன பத்துக்கட்டளைகள் இந்த அதிகாரத்தில் மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடே உடன்படிக்கை பண்ணுகிறார் (உபா 5:1-5).

கர்த்தருடைய பத்து கட்டளைகள் இந்த வசனப்பகுதியில் மறுபடியுமாய்ச் சொல்லப்படுகிறது (உபா 5:6-21). கர்த்தர் தம்முடைய கட்டளைகளை மகாசத்தத்தோடே சொல்லுகிறார். அவைகளை இரண்டு கற்பலகைகளில் எழுதி மோசேயினிடத்தில் கொடுக்கிறார் (உபா 5:22).

தங்களுக்கும் தேவனுக்கும் நடுவே மோசே மத்தியஸ்தராய் ஊழியம் செய்யவேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரர் கேட்டுக்கொள்கிறார்கள். இது இஸ்ரவேல் சபையாருடைய பணிவான விண்ணப்பமாகும் (உபா 5:23-27). கர்த்தர் தமது கிருபையினால் இஸ்ரவேல் சபையாருடைய விண்ணப்பத்தை அங்கீகரிக்கிறார் (உபா 5:28-31).

கர்த்தர் தங்களுக்கு கற்பித்தபடியே செய்ய இஸ்ரவேல் சபையார் சாவதானமாயிருக்கவேண்டும். கர்த்தர் தங்களுக்கு விதித்த வழிகளிலெல்லாம் அவர்கள் நடக்கவேண்டும் (உபா 5:32,33).

கர்த்தருடைய உடன்படிக்கை உபா 5:1-5

உபா 5:1 மோசே இஸ்ரவேலர் எல்லாரையும் அழைப்பித்து, அவர்களை நோக்கி: இஸ்ரவேலரே, நான் இன்று உங்கள் காதுகள் கேட்கச் சொல்லும் கட்டளைகளையும் நியாயங்களையும் கேளுங்கள்; நீங்கள் அவைகளின்படியே செய்யும்படிக்கு அவைகளைக் கற்றுக் கைக்கொள்ளக்கடவீர்கள்.

உபா 5:2. நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஓரேபிலே நம்மோடே உடன்படிக்கைபண்ணினார்.

உபா 5:3. அந்த உடன்படிக்கையைக் கர்த்தர் நம்முடைய பிதாக்களுடன் பண்ணாமல், இந்நாளில் இங்கே உயிரோடிருக்கிற நம்மெல்லாரோடும் பண்ணினார்.

உபா 5:4. கர்த்தர் மலையிலே அக்கினியின் நடுவிலிருந்து முகமுகமாய் உங்களோடே பேசினார்.

உபா 5:5. கர்த்தருடைய வார்த்தையை உங்களுக்கு அறிவிக்கும்படி, அக்காலத்திலே நான் கர்த்தருக்கும் உங்களுக்கும் நடுவாக நின்றேன்; நீங்கள் அக்கினிக்குப் பயந்து மலையில் ஏறாமல் இருந்தீர்கள்; அப்பொழுது அவர் சொன்னது என்னவென்றால்:

மோசே இஸ்ரவேலர் எல்லாரையும் அழைப்பித்து, அவர்களை ஒன்றாய்க்கூட்டி, அவர்களோடு கர்த்தருடைய உடன்படிக்கையின் வார்த்தைகளை சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் மோசேயின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவேண்டும். அவர்கள் கர்த்தருடைய கட்டளைகளை கற்று கைக்கொள்ளவேண்டும்.

மோசே இஸ்ரவேலர் எல்லாரையும் அழைப்பித்து, அவர்களை நோக்கி, "இஸ்ரவேலரே, நான் இன்று உங்கள் காதுகள் கேட்கச் சொல்லும் கட்டளைகளையும் நியாயங்களையும் கேளுங்கள்; நீங்கள் அவைகளின்படியே செய்யும்படிக்கு அவைகளைக் கற்றுக் கைக்கொள்ளக்கடவீர்கள்" (உபா 5:1) என்று சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்குக் கர்த்தருடைய கட்டளைகளையும், நியாயங்களையும் சொல்லுகிறார். மோசே மற்ற பிரமாணங்களோடு பத்துக் கற்பனைகளையும் சொல்லுகிறார். (உபா 5:1-21) பத்துக் கற்பனைகள் மற்ற கட்டளைகளையும், நியாயங்களையும் போன்றவையாகும். (உபா 5:1; உபா 4:44-45).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளைக் கேட்பதற்கு மூன்று காரணங்கள் உண்டு. அவையாவன : 1. இஸ்ரவேல் புத்திரர் கட்டளைகளைக் கற்றுக் கொள்வார்கள், 2. அவைகளைக் கைக்கொள்வார்கள், 3. அவைகளின்படியே செய்வார்கள்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் ஒரேபிலே அவர்களோடே உடன்படிக்கை பண்ணினார் (உபா 5:2).

உடன்படிக்கைபண்ணுதல் என்பதற்கான எபிரெய வார்த்தை "கரத்" என்பதாகும். இதற்கு வெட்டுதல் என்று பொருள். பலிசெலுத்தும் போது, அதை துண்டுதுண்டாக வெட்டுதல் என்றும் பொருள் கூறலாம். இரத்தத்தினாலும், மரணத்தினாலும் இரண்டு பேரை ஒன்றாக இணைப்பதற்குப் பலியைத் துண்டுகளாக வெட்டி, அவர்களுக்குக் கொடுப்பது வழக்கம். வெட்டுதல் என்று பொருள்படும் இந்த எபிரெய வார்த்தை உடன்படிக்கை பண்ணுவதற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய உடன்படிக்கை இஸ்ரவேல் புத்திரரை ஆளுகை செய்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆரம்பத்தில் தம்முடைய கட்டளைகளை சொன்னார். அதன்பின்பு கர்த்தர் தமது கிருபையினால், தம்முடைய கட்டளைகளை, அவர்களுக்கு உடன்படிக்கையாக மாற்றுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடே உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். "அந்த உடன்படிக்கையைக் கர்த்தர் நம்முடைய பிதாக்களுடன் பண்ணாமல், இந்நாளில் இங்கே உயிரோடிருக்கிற நம்மெல்லாரோடும் பண்ணினார்" (உபா 5:3) என்று மோசே சொல்லுகிறார்.

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகிய முற்பிதாக்களோடு கர்த்தர் இந்த உடன்படிக்கையை பண்ணவில்லை. கர்த்தர் அந்த உடன்படிக்கையை இங்கே இந்நாளில் உயிரோடிருக்கிற இவர்களெல்லாரோடும் பண்ணியிருக்கிறார். சீனாய் மலையில் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோட இந்த உடன்படிக்கையைப் பண்ணியிருக்கிறார். (உபா 5:2-3; உபா 29:14).

இப்போது உயிரோடிருக்கிற, இவர்களுடைய பிதாக்களோடு, கர்த்தர் சீனாய் மலையிலே உடன்படிக்கை பண்ணினார். அந்த உடன்படிக்கைக்கு இப்போது உயிரோடிருக்கிற இஸ்ரவேல் புத்திரரும் கீழ்ப்படியவேண்டும்.

தம்முடைய உடன்படிக்கையை கர்த்தர் தாமே இஸ்ரவேல் புத்திரருக்கு சொன்னார். "கர்த்தர் மலையிலே அக்கினியின் நடுவிலிருந்து முகமுகமாய் உங்களோடே பேசினார்" (உபா 5:4) என்று மோசே சொல்லுகிறார்.

நாற்பது வருஷங்களுக்கு முன்பு நடைபெற்ற சம்பவத்தை மோசே இங்கு கூறுகிறார் (யாத் 20; எண் 14:23-35).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு முகமுகமாகவும் பேசினார். அவர் அவர்களோடு ஒவ்வொரு வார்த்தையையும் சொன்னார். மோசே கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் நடுவிலே மத்தியஸ்தராகயிருக்கிறார். "கர்த்தருடைய வார்த்தையை உங்களுக்கு அறிவிக்கும்படி, அக்காலத்திலே நான் கர்த்தருக்கும் உங்களுக்கும் நடுவாக நின்றேன்" (உபா 5:5) என்று மோசே சொல்லுகிறார்.

மோசே கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறார். கிறிஸ்துவானவர் தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவிலே மத்தியஸ்தராயிருந்து, அவர் நமக்கு கர்த்தருடைய வார்த்தையை வெளிப்படுத்துகிறார். கிறிஸ்துவின் கிருபையுள்ள கரம் மனுபுத்திரராகிய நம்மீது வைக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் கர்த்தருடைய வார்த்தையை கேட்பதற்கும், கர்த்தரோடு பேசுவதற்கும் நாம் சிலாக்கியம் பெற்றிருக்கிறோம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக தேவனுடைய கிருபாசனத்தண்டையிலே, பயமும் நடுக்கமும் இல்லாமல், தைரியமாய்க் கிட்டிச்சேருகிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

கர்த்தர் மலையிலே, அக்கினியின் நடுவிலிருந்து, முகமுகமாய், இஸ்ரவேல் புத்திரரோடு பேசினபோது, அவர்கள் அக்கினிக்கு பயந்து மலையில் ஏறாமலிருந்தார்கள். அவர்கள் கர்த்தரோடு பேசாமல் மோசேயோடு பேசினார்கள். மோசே தங்களுக்காக கர்த்தருடைய சமுகத்திலே பேசவேண்டுமென்று இஸ்ரவேல் சபையார் கேட்டுக்கொண்டார்கள்.

பத்துக்கட்டளைகள்
உபா 5:6-22

உபா 5:6. உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே.

உபா 5:7. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள உண்டாயிருக்கவேண்டாம்.

உபா 5:8. மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சுரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்.

உபா 5:9. நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்து பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்.

உபா 5:10. என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ்செய்கிறவராயிருக்கிறேன்.

உபா 5:11. உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல்விடார்.

உபா 5:12. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டபடியே, ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிப்பாயாக.

உபா 5:13. ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக.

உபா 5:14. ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் எருதானாலும், உன் கழுதையானாலும், உனக்கு இருக்கிற மற்றெந்த மிருகஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும் யாதொரு வேலையும் செய்யவேண்டாம்; நீ இளைப்பாறுவதுபோல உன் வேலைக்காரனும் உன் வேலைக்காரியும் இளைப்பாறவேண்டும்;

உபா 5:15. நீ எகிப்துதேசத்தில் அடிமையாயிருந்தாய் என்றும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னை அவ்விடத்திலிருந்து வல்லமையுள்ள கரத்தினாலும் ஓங்கிய புயத்தினாலும் புறப்படப்பண்ணினார் என்றும் நினைப்பாயாக; ஆகையால் ஓய்வுநாளை ஆசரிக்க உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டார்.

உபா 5:16. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கும், நீ நன்றாயிருப்பதற்கும், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டபடியே, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.

உபா 5:17. கொலை செய்யாதிருப்பாயாக.

உபா 5:18. விபசாரம் செய்யாதிருப்பாயாக.

உபா 5:19. களவு செய்யாதிருப்பாயாக.

உபா 5:20. பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

உபா 5:21. பிறனுடைய மனைவியை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய வீட்டையும், அவனுடைய நிலத்தையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்றார்.

உபா 5:22. இந்த வார்த்தைகளைக் கர்த்தர் மலையிலே அக்கினியிலும் மேகத்திலும் காரிருளிலும் இருந்து உங்கள் சபையார் எல்லாரோடும் மகா சத்தத்துடனே சொன்னார்; அவைகளோடு ஒன்றும் கூட்டாமல், அவைகளை இரண்டு கற்பலகைகளில் எழுதி, என்னிடத்தில் கொடுத்தார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஏற்கெனவே சொன்ன பத்துக்கட்டளைகள் இங்கு மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் பத்துக்கட்டளைகளை தம்முடைய வாயின் வார்த்தைகளினாலும் சொன்னார். எழுத்துகளினாலும் சொன்னார். அந்த வார்த்தைகளை இரண்டு கற்பலகைகளில் எழுதி மோசேயினிடத்திலும் கொடுத்தார். அந்த பத்துக்கட்டளைகளும் இங்கு மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஏற்கெனவே சொன்ன பத்துக்கட்டளைகள் யாத்திராகமம் 20-ஆவது அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

தேவன் இஸ்ரவேல் புத்திரருக்கு பத்துக்கட்டளைகளைக் கொடுக்கிறார். இந்த அதிகாரத்தின் ஆரம்பத்தில் "தேவன் பேசிச்சொல்லிய சகல வார்த்தைகளுமாவன" (யாத் 20:1) என்று சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் தாமே இந்த வார்த்தைகளை சொல்லுகிறார். கர்த்தரே இந்தக் கட்டளைகளை இயற்றியவர். கர்த்தரே இந்தக் கட்டளையின் வார்த்தைகளை சொல்லுகிறவர்.

தேவன் பத்துக் கட்டளைகளை சொல்லுகிறார். அதன்பின்பு, தேவனுடைய சப்தத்தைத் தாங்கள் கேட்டால் செத்துப்போவோம் என்று இஸ்ரவேல் புத்திரர் சொல்லுகிறார்கள். (உபா 5:22-29) அதன் பின்பு, தேவன் மோசேயிடம் மட்டுமே பேசுகிறார். கர்த்தர் மோசேயின் மூலமாக இஸ்ரவேல் புத்திரருக்கு மற்ற கற்பனைகளைக் கொடுக்கிறார். மோசே பத்துக் கட்டளைகளையும் மற்ற கட்டளைகளையும் ஒரு புஸ்தகத்தில் எழுதி, அதை மிருகங்களின் இரத்தத்தினால் உறுதிபண்ணுகிறார். (யாத் 24:3-8) தேவன் சகல வார்த்தைகளையும் சொல்லுகிறார். மோசே அந்த வார்த்தைகள் எல்லாவற்றையும் எழுதுகிறார் (யாத் 20:1=யாத் 24:3-4).

பரிசுத்த வேதாகமத்தில் பத்துக்கட்டளைகள் அல்லது பத்து கற்பனைகளைப்பற்றிய சத்தியம் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. பத்துக் கற்பனைகள் என்னும் வாக்கியம் வேதாகமத்தில் மூன்று முறைகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (யாத் 34:28; உபா 4:13; உபா 10:4).

2. மோசேயின் மொத்த பிரமாணத்திற்கும், பத்து கற்பனைகள் ஓர் அடிப்படையாகும். இயேசு கிறிஸ்து மத் 22:35-40 ஆகிய வசனங்களில் "இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது" என்று கூறியிருப்பது போன்று, பத்துக் கற்பனைகளில் மோசேயின் மொத்த பிரமாணமும் அடங்கியிருக்கிறது.

3. மோசேயின் பிரமாணத்தில் இந்தப் பகுதியை மட்டுமே கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரின் செவிகளில் தொனிக்கும் படியாகக் கூறினார். (உபா 5:22; உபா 10:4).

4. ஆதாமுக்குப் பத்துக் கற்பனைகளைப் பற்றித் தெரியாது. அவருக்கு ஒரு கட்டளை மட்டுமே கொடுக்கப்பட்டது. அவர் அதற்குக் கீழ்ப்படியாமல் போனதினால் மனுக்குலம் முழுவதற்கும் அவர் மூலமாக பாவம் வந்தது (ஆதி 2:17; ரோமர் 5:12-21). தன் தாயையும், தகப்பனையும் கனம்பண்ணுவதற்கு ஆதாமிற்குப் பெற்றோர் யாருமில்லை. அதுபோலவே விபசாரம் பண்ணாதிருப்பாயாக, பிறர்பொருளை இச்சியாதிருப்பாயாக என்னும் பிரமாணங்களும் ஆதாமும், ஏவாளும் மட்டும் இருந்த காலத்தில் அவர்களுக்குப் பொருந்தாது.

5. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, சீனாய் வனாந்தரத்திற்கு இஸ்ரவேலர் வருவதற்கு முன்பாக இருந்த அவர்களுடைய முற்பிதாக்கள் ஆகியோருக்குப் பத்துக் கற்பனைகளைப் பற்றித் தெரியாது. (உபா 5:2-3). ஆபிரகாமிற்கும், அவர் சந்ததிக்கும் தேவன் பதினான்கு கட்டளைகளைக் கொடுத்தார். (ஆதி 12:1; ஆதி 26:5) இவை தவிர, நோவாவின் மூலமாக மனுஷரைக் குறித்த சில பிரமாணங்களும் மனுக்குலத்திற்குக் கொடுக்கப்பட்டது. (ஆதி 9:1-18). தேவன் இஸ்ரவேலருக்குச் சீனாய்மலையில் பத்துக் கற்பனைகளைக் கொடுப்பதற்கு முன்பாக மோசேக்கு ஏற்கெனவே 184 கற்பனைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. (யாத் 16:28)

6. சீனாய் வனாந்தரத்திற்கு வருவதற்கு முன்பாக இஸ்ரவேலருக்கும் பத்துக் கற்பனைகளைப் பற்றித் தெரியாது. (உபா 4:7-8; உபா 5:2-3; நெகே 9:13-14).

7. மோசேயின் பிரமாணத்தில் மட்டுமே பத்துக் கற்பனைகள் காணப்படுகிறது. (யாத் 20; உபா 5). மோசேயின் பிரமாணத்தில் இவை சேர்க்கப்படவில்லையென்றால், இஸ்ரவேலருக்குப் பத்துக் கற்பனைகளைப் பற்றித் தெரிந்திருப் பதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில் தேவன் பத்துக் கற்பனைகளை எழுதிய கற்பலகைகள் இப்பொழுது எங்குள்ளது என்று தெரியவில்லை. ஒருசிலர் மோசேயின் பிரமாணத்தைப் பத்துக் கட்டளையிலிருந்து வேறுபிரித்து அதைத் தேவனுடைய பிரமாணம் என்று கூறுகிறார்கள். ஆனால் இது தவறான உபதேசம். மோசேயின் பிரமாணத்தில் ஒரு பகுதியே பத்துக் கற்பனைகளாகும்.

8. மோசேயின் பிரமாணத்தில் பத்துக் கற்பனைகளோடு மேலும் 203 கட்டளைகள் இடம் பெற்றுள்ளன. இவை சீனாய் மலையில் தேவன் மோசேயிடம் பத்துக் கற்பனைகளைக் கொடுப்பதற்கு முன்பாகக் கொடுக்கப் பட்டவையாகும். மோசே பத்துக் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டபோது, மேலும் 155 கற்பனைகளைத் தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொண்டார் (யாத் 20:18-23:33). இந்தக் கற்பனைகள் எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டபின்பு, நியாயப்பிரமாணப் புஸ்தகம் மிருகங்களின் இரத்தத்தினால் உறுதிபண்ணப்பட்டது. (யாத் 24:1-8). இதன்பின்பு, மோசேயின் பிரமாணப் புஸ்தகத்தில் மேலும் 2,345 கற்பனைகள் சேர்க்கப்பட்டன. (யாத் 24-உபா 34).

9. பத்துக் கற்பனைகள் உடன்படிக்கை என்று அழைக்கப்படுகிறது. சீனாய் வனாந்தரத்தில் தேவனுக்கும், இஸ்ரவேலருக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் அஸ்திபாரம் பத்துக்கட்டளையாகும். (யாத் 34:28; உபா 4:13). பத்துக் கட்டளைகள் மட்டுமே தேவனுடைய பிரமாணம் என்றோ, மோசேயின் பிரமாணம் என்றோ கூறமுடியாது. இவை தேவன் உரைத்த பிரமாணத்தின் முதற்பகுதியாகும். (உபா 5:22) பத்துக் கற்பனைகள் கொடுத்தவுடன், பிரமாணம் முடிந்துபோகவில்லை. தேவனுடைய சப்தத்தை இனிமேல் தங்களால் கேட்க முடியாது என்று இஸ்ரவேலர்கள் முறையிட்டார்கள். தேவன் அவர்களுடைய முறையீட்டைக் கேட்டு, அவர்களோடு நேரடியாகப் பேசுவதை நிறுத்திக் கொண்டார். (உபா 5:23-29; எபி 12:18-21).

10. பத்துக் கற்பனைகளும், தேவனுடைய இதர பிரமாணங்களும், மோசேயின் முழுப் பிரமாணமும் இஸ்ரவேல் புத்திரருக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டவை (யாத் 24:7-8; யாத் 34:27-28; லேவி 26:9,44-45; 1இராஜா 8:53; அப் 3:25; ரோமர் 2:14-29; ரோமர் 3:1-2; ரோமர் 9:4-5) புறஜாதியாருக்கும், பத்துக் கற்பனைகளுக்கும் சம்பந்தம் எதுவுமில்லை. புறஜாதியார் இஸ்ரவேல் தேசத்தில் அங்கம் வகிக்க விரும்பும்போது அவர்கள் மோசேயின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படியவேண்டும். (யாத் 12:24; எண் 15:16,29).

11. ஆதித்திருச்சபையில் இருந்த விசுவாசிகள் பத்துக் கற்பனைகளுக்கும் கீழ்ப்படிந்து ஜீவித்தார்கள் என்று சிலர் உபதேசம் பண்ணுகிறார்கள். ஆனால் இது தவறான உபதேசம். புதிய ஏற்பாட்டுச் சபையில் பத்துக் கற்பனைகளில் ஒன்பது கற்பனைகளை மட்டுமே விசுவாசிகள் கடைபிடித்தார்கள். ஓய்வுநாள் பிரமாணம் முழுவதுமாக ஒதுக்கி வைக்கப்பட்டது. யூதருடைய ஓய்வுநாள் பிரமாணத்தை ஆசரிக்க வேண்டிய அவசியம் கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு நியமிக்கப்படவில்லை. ஆகையினால் ஆதித் திருச்சபையின் விசுவாசிகள் யூதருடைய ஓய்வுநாளை ஆசரிக்கவில்லை. மற்றவர்களையும், இதை ஆசரிக்குமாறு உபதேசம் பண்ணவும் இல்லை.(ரோமர் 14:5-6; கலா 4:9-10; கொலோ 2:14-17). அவர்கள் வாரத்தின் முதலாம் நாளை ஓய்வுநாளாக ஆசரித்து அதைப் பரிசுத்தப்படுத்தினார்கள்.

12. சீனாய் மலையில் தேவன் மோசேயிடம் பத்துக்கற்பனைகளைக் கொடுப்பதற்கு முன்பாக இவை செவி வழிசெய்தியாகப் பல சந்ததிகளுக்குக் கடந்து வந்திருக்கிறது என்று ஒருசிலர் உபதேசம் பண்ணுகிறார்கள். ஆனால் இதற்கு வேதாகமத்தில் ஆதாரம் எதுவுமில்லை.

13. மோசேயின் பிரமாணத்தின் இந்தப் பகுதி மட்டுமே இரண்டு கற்பலகைகளில் எழுதப்பட்டது (உபா 4:13; உபா 9:9-15; உபா 10:4). அதே சமயத்தில் அப்போஸ்தலர் பவுல் மோசேயின் பிரமாணத்தில் இந்தப் பகுதி மட்டுமே ஒழிந்துபோயிற்று என்று வலியுறுத்திக் கூறுகிறார் (2கொரி 3:6-15, கொலோ 2:14-17).

14. சடங்காச்சார பிரமாணங்கள் (ceremonial laws) கொடுக்கப்பட்ட அதே சமயத்தில் பத்துக் கற்பனைகளும் கொடுக்கப் பட்டிருக்கிறது (யாத் 19:1-23; யாத் 24:12-18; யாத் 25:40; யாத் 26:30; யாத் 27:8; யாத் 31:18; யாத் 32:1-19; யாத் 33:6; யாத் 34:1-32; லேவி 7:38; லேவி 25:1; லேவி 26:46; லேவி 27:34; எண் 3:1; எண் 15:22-23; எண் 28:6; எபி 8:5).

15. பத்துக் கற்பனைகளை மோசேயின் பிரமாணம் என்றும், தேவனுடைய பிரமாணம் என்றும் வேதாகமம் அங்கீகரிக்கிறது. தேவனுடைய பிரமாணம் இல்லையென்றால், அது மோசேயின் பிரமாணமாகவும் இராது. பிரமாணத்திற்கு வேதாகமத்தில் பல பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

16. கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் பத்துக் கற்பனைகளை மோசேயினுடைய பிரமாணத்தின் ஒரு பகுதியாகக் கூறியிருக்கிறார்கள். இதை தேவனுடைய பிரமாணம் என்று கூறும்போது அப்போஸ்தலரின் உபதேசத்திற்கு இது மாற்று உபதேசமாக இருக்கிறது (மத் 22:36-40=யாத் 20:1-6; மாற்கு 7:10= யாத் 20:12; ரோமர் 2:21-22; ரோமர் 7:7-16= யாத் 20:12-17, யோசு 7:11; யாத் 20:15)

17. வேதாகமத்தின் மற்ற புஸ்தகங்களை எழுதியிருக்கும் ஆசிரியர்கள் பத்துக் கற்பனைகளை மோசேயினுடைய பிரமாணத்தின் ஒரு பகுதி என்று அறிவித்திருக்கிறார்கள்.

(யோசு 1:8-9; நியா 3:4; 1இராஜா 2:3; 2இராஜா 18:6; 2இராஜா 21:8; 2இராஜா 23:25; 2நாளா 35:12; நெகே 1:7; நெகே 8:1; நெகே 10:29; மல் 4:4). ஓய்வுநாள் பிரமாணத்தை மோசேயே கொடுத்தார் என்று நெகேமியாவில் கூறப்பட்டிருக்கிறது. (நெகே 9:14).

18. தேவன் மோசேயோடும், இஸ்ரவேல் புத்திரரோடும் செய்துகொண்ட உடன்படிக்கையே பத்துக் கற்பனைகள் என்னும் உபதேசமும் உள்ளது. (யாத் 34:28; 2நாளா 5:10). மோசே உடன்படிக்கை புஸ்தகத்தை எடுத்து, அதைப் பிரதிஷ்டை பண்ணினார். இதில் பத்துக் கற்பனைகளும், மேலும் 115 கட்டளைகளும் உள்ளன (யாத் 24:7-8).

19. தேவனுடைய பிரமாணமும், மோசேயின் பிரமாணமும் நீதிநெறி பிரமாணம் **(moral law)** என்றும், சடங்காச்சார பிரமாணம் **(ceremonial law)** என்றும் பிரிக்கப்படவில்லை. பத்துக் கற்பனைகள் கற்பலகைகளில் எழுதப்பட்டது. மற்றவை புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஏற்ற வேளையில் மோசேயின் புஸ்தகத்தில் பத்துக் கற்பனைகளும், மற்ற எல்லாக் கட்டளைகளும் எழுதப்பட்டிருக்கிறது.

நீதிநெறி பிரமாணத்தில் வாழவேண்டிய முறையைப் பற்றி யாத் 20:18-23:33 ஆகிய வசனங்களில் பதினான்கு கட்டளைகள் உள்ளன. (யாத் 20:26; யாத் 21:2-11,22-23; யாத் 22:16-17,19)

பத்துக் கற்பனைகளில் மூன்று கற்பனைகள் மனுஷன் தேவனோடு வைத்திருக்க வேண்டிய ஐக்கியத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது. யாத் 20:18-23:33 ஆகிய வசனங்களில் இதுபோன்று 35 கட்டளைகள் உள்ளன. (யாத் 20:23-26; யாத் 22:20,28-31; யாத் 23:13-19, 21-22,24-25,32-33).

மோசேயின் பிரமாணத்தில் தெய்வீகச் சட்டங்கள் **(statutes)**, பிரமாணங்கள் **(judgments)**, நியமங்கள் **(ordinances)** ஆகியவை அடங்கியுள்ளன. மார்க்கச் சம்பந்தமான நியமங்களும் (யாத் 12:14; யாத் 13:10; எசே 46:14; 2கொரி 11:2) வாழும்முறை நியமங்களும் **(civil laws)** (யாத் 15:25-26; லேவி 18:1-30; லேவி 22:1-9; யோசு 24:20-25; 1சாமு 30:25; ஏசா 58:2) மோசேயின் பிரமாணங்களில் உள்ளன.

20. வேதாகமத்தில் கற்பனை என்று கூறப்பட்டிருப்பது பத்துக் கற்பனைகளை மட்டும் குறிக்காமல், அநேக கற்பனைகளைக் குறிக்கிறது. பழைய ஏற்பாட்டில் பத்துக் கற்பனைகள் என்னும் வாக்கியம் எல்லாக் கற்பனைகளையும் குறிப்பதில்லை. (யாத் 15:26; ஆதி 26:5; லேவி 4:2,13,22; லேவி 22:31; லேவி 27:34)

மத் 5:19; யோவான் 14:15-21; யோவான் 15:10; அப் 1:2; 2கொரி 7:19; 2கொரி 14:37; 1யோவான் 2:3-4; 1யோவான் 3:22-24; 1யோவான் 5:2-6; 2யோவான் 1:6; வெளி 12:17; வெளி 14:12; வெளி 22:14 ஆகிய வசனங்களில் கற்பனைகள் என்னும் வார்த்தை புதிய ஏற்பாட்டின் கற்பனைகள் அனைத்தையும் குறிக்கும். இது பத்துக் கற்பனைகளைக் குறிப்பதில்லை.

புதிய ஏற்பாட்டிலுள்ள கற்பனைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, பத்துக் கற்பனைகளில் ஒன்பது கற்பனைகள் புதிய ஏற்பாட்டில் அங்கிகரிக்கப்பட்டிருக்கின்றன. ஓய்வுநாள் கற்பனை மட்டும் அங்கீகரிக்கப்படவில்லை. (ரோமர் 14:5-6; கொலோ 2:14-17).

புறஜாதி தேசத்தார் மோசேயின் பிரமாணங்களுக்கு கீழ்ப்படியவேண்டும் என்று வேதாகமத்தில் எங்கும் உபதேசம்பண்ணப்படவில்லை. புறஜாதியார் ஒரு சில காரியங்களில் பங்குபெறக்கூடாது என்று மோசேயின் பிரமாணத்தில் அவர்கள் தடைபண்ணப்பட்டிருக்கிறார்கள். அதன் விவரம் வருமாறு :

1. விருத்தசேதனம் பண்ணிக் கொள்ளாமல் பஸ்காவைப் புசிக்கக்கூடாது (யாத் 12:43,45)
2. பரிசுத்தமானவைகளைப் புசிக்கக் கூடாது. (யாத் 29:33; லேவி 22:10-13).
3. பரிசுத்த அபிஷேக எண்ணெயினால் அபிஷேகம் பண்ணிக்கொள்ளக்கூடாது. (யாத் 30:33).
4. ஆசரிப்புக்கூடார வேலையில் பங்குபெறக் கூடாது. அதற்கு அருகிலும் வரக்கூடாது. (எண் 1:51).
5. ஆசாரிய ஊழியம் செய்யக்கூடாது. (எண் 3:10,38).
6. தூபம் காண்பிக்கக்கூடாது (எண் 16:40).
7. ஆசாரியருடைய ஊழியத்தில் அவர்களுக்கு அருகில் போகக்கூடாது. (எண் 18:4,7).
8. இஸ்ரவேலருக்கு ராஜாவாக இருக்கக் கூடாது. (உபா 17:15).
9. வட்டி கொடுப்பதிலிருந்து விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது (உபா 23:20).
10. இஸ்ரவேலிலுள்ள விதவைகளைத் திருமணம் செய்யக்கூடாது (உபா 25:5).

புறஜாதி தேசத்தார் மோசேயின் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று வேதாகமம் எங்கும் உபதேசம் பண்ணவில்லை. மோசேயின் பிரமாணத்தில் அந்நியர் என்னும் வார்த்தை 80 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மோசேயின் பிரமாணத்தில் இஸ்ரவேல் புத்திரரும், அந்நியரும் சமமானவர்கள் என்று எங்கும் கூறப்படவில்லை. தேவன் புறஜாதியாரைப் பழைய பிரமாணத்தின் பிரகாரம் நியாயந்தீர்க்கிறார். (ஆதி 2:17; ரோமர் 5:12-21)

புதிய ஏற்பாட்டிலுள்ள கிருபையின் பிரமாணம் மோசேயின் பிரமாணத்தில் ஒரு பகுதியல்ல. புதிய பிரமாணத்தில் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகிறவர்கள் எல்லோருமே இரட்சிக்கப்படுகிறார்கள் (ரோமர் 4; கலா 3:3-16; எபி 4:1-2; எபி 11:1-40). புறஜாதியார் நோவாவின் உடன்படிக்கைக்கும், (ஆதி 9) ஆபிரகாமின் உடன்படிக்கைக்கும் (ஆதி 12:1-3; ரோமர் 4) கீழ்ப்பட்டிருக்கிறவர்கள். இவர்கள் மோசேயின் உடன்படிக்கைக்குக் கீழ்ப்பட்டவர்களல்ல.

இஸ்ரவேலரின் பிரமாணங்களில் புறஜாதியாருக்கு பங்கில்லை. இதன் விவரம் வருமாறு :

1. இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற வந்தபோது, அவர் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் மட்டுமே சென்றார். (மத் 10:5-6; மத் 15:24)
2. யூதர்கள் இயேசு கிறிஸ்துவையும், அவருடைய சுவிசேஷத்தையும் ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்தார்கள். ஆகையினால் இயேசு கிறிஸ்து யூதரிடமிருந்து தேவனுடைய ராஜ்ஜியத்தை எடுத்து அதைப் புறஜாதியாருக்குக் கொடுத்தார். மோசேயின் பிரமாணத்தைப் புறஜாதியாருக்குக் கொடுக்கவில்லை. (மத் 21:33-46; யோவான் 10:16).
3. புதிய ஏற்பாட்டின் சுவிசேஷத்தினால் புறஜாதியாரும் இஸ்ரவேலரோடு ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். மோசேயின் பிரமாணத்தினால் புறஜாதியார் ஆசீர்வதிக்கப்படவில்லை. (யோவான் 3:16; ரோமர் 1:16; ரோமர் 11:1-25; 2கொரி 12:13; கலா 3:28-29; எபே 3:1-6; கொலோ 3:11).
4. புறஜாதியார் விசுவாசத்தினால் யூதராக முடியாது. (ரோமர் 2:28-29; ரோமர் 9:6-7).

5. மோசேயினுடைய பிரமாணத்தின் பிரகாரம் புறஜாதியார்மீது இஸ்ரவேலருக்கு அநேக சிலாக்கியங்கள் கொடுக்கப்பட்டிருந்தது. (ரோமர் 2:17-29; ரோமர் 3:1-2; ரோமர் 9:4-5). புதிய ஏற்பாட்டிலும், சுவிசேஷத்திலும் பட்சபாதம் எதுவுமில்லை. (ரோமர் 10:9-21; ரோமர் 11:1-25; 2கொரி 12:13; கலா 3:28; கொலோ 3:11).

6. புறஜாதியார் நியாயப்பிரமாணத்தைப் பெற்றிருக்கவில்லை என்று பவுல் கூறியிருக்கிறார். (ரோமர் 2:12-16).

7. இஸ்ரவேலின் வாக்குத்தத்தங்களுக்கும், உடன்படிக்கைகளுக்கும் புறஜாதியார் அந்நியராகவும், பரதேசிகளாகவும் இருப்பதாக அப்போஸ்தலர்கள் உபதேசம் பண்ணியிருக்கிறார்கள் (எபே 2:12,19).

முதலாவது ஆலோசனைச் சங்கம் கூடியபோது, புறஜாதியார் விருத்தசேதனம் பண்ணிக் கொள்ள வேண்டாமென்றும், ஓய்வுநாளை ஆசரிக்க வேண்டாமென்றும், மோசேயின் பிரமாணத்தில் எதிலும் பங்குபெற வேண்டியதில்லையென்றும் அப்போஸ்தலர்கள் தீர்மானம் பண்ணினார்கள். (அப் 15:1-41).

பரிசுத்த வேதாகமத்தில் பிரமாணத்திற்கு வேறு சில மாற்றுப்பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. ஒரு நியாயப்பிரமாணம் "a law" (உபா 33:2-4; சங் 78:5)

2. நியாயப்பிரமாணம் "the law" (யோசு 1:7-8; யோசு 8:31-35; யோசு 22:5; 2இராஜா 17:13; மத் 5:17; மத் 7:12; மத் 11:13; மத் 23:23; யோவான் 1:17; எபி 7:11-10:28);

3. என் (தேவனுடைய) போதகம் "My (God's) law" (சங் 89:30-31; நீதி 3:1; நீதி 7:2; எசே 22:26; ஓசி 8:12-13);

4. கர்த்தருடைய வேதம் "the law of the Lord" (எஸ்றா 7:10; லூக்கா 2:22-39);

5. தேவனுடைய கர்த்தரின் நியாயப்பிரமாணப் புஸ்தகம் "the book (not stones) of the law of God" (யோசு 24:25-26; 2கொரி 17:6-9; நெகே 8:1-13; நெகே 9:3; நெகே 10:29);

6. மோசேயின் நியாயப்பிரமாணப் புஸ்தகம் "the book of the law of Moses" (யோசு 8:30; யோசு 23:6; 2இராஜா 14:6; 2நாளா 34:14-19; நெகே 8:1)

7. தேவனுடைய நியாயப்பிரமாணமும், மோசேயின் நியாயப்பிரமாணமும் "the law of God and the law of Moses" (யோவான் 1:17; யோவான் 7:19; யோவான் 8:5; அப் 6:11,14; அப் 13:39; அப் 15:5; ரோமர் 7:22-25; எபி 10:28)

8. சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணம், "the law of commandments and the hand writing of ordinances" (எபே 2:15; கொலோ 2:14-17)

9. நியாயப்பிரமாணமும், கற்பனையும் "the law and commandment" (2இராஜா 17:34)

10. திட்டங்களும், முறைமைகளும், நியாயப்பிரமாணங்களும், கற்பனைகளும் "the statutes, and the ordinances, and the law, and the commandment" (2இராஜா 17:37)

11. நியாயப்பிரமாணத்தின்படி என் (தேவனுடைய) கற்பனைகளும், என் கட்டளைகளும் "My (God's) commandments, and My statutes, according to all the law" (2இராஜா 17:13; 2இராஜா 21:8)

12. நியாயப்பிரமாணம் முழுவதும் **"the whole law"** *(கலா 5:3)*

13. மோசே **"Moses"** *(லூக்கா 16:29,31; லூக்கா 24:27,44; அப் 15:21; அப் 26:22; அப் 28:23)*

14. பழைய ஏற்பாடு **"the old testament"** *(2கொரி 3:6-15; எபி 8: 6-9:10).*

மோசேயின் பிரமாணத்தில் கற்பனைகள், தெய்வீகக்கட்டளைகள், நியமங்கள் ஆகியவை அடங்கியிருக்கின்றன. *(2கொரி 33:8)* நியாயப்பிரமாணம் ஒழிக்கப்பட்டபோது இவையெல்லாமே ஒழிந்துபோயிற்று. *(2கொரி 3:6-15; கலா 3:19-25; கலா 4:21-31; எபி 7:11-10:18).* கீழே சொல்லப்பட்டிருக்கிற காரியங்கள் நியமங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

1. லேவி 1-29 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் திருமணம், பாலியல் உறவு ஆகியவற்றின் கட்டளைகள் நியமங்கள் என்று அழைக்கப்படுகின்றன *(லேவி 18:30)*

2. தீட்டுக்களிலிருந்து சுத்திகரிக்கப்படுவது தொடர்பான சரீர ஆரோக்கிய பிரமாணங்கள் நியமங்கள் என்று அழைக்கப்படுகின்றன *(லேவி 22:8-9)*

3. மார்க்கக் கட்டளைகள் - பத்துக் கற்பனைகளில் முதலாம் கற்பனையும், இரண்டாம் கற்பனையும் நியமங்கள் என்று அழைக்கப்படுகின்றன. *(யோசு 24:20-25)*

4. யுத்தத்தில் வெற்றி பெறும்போது கொள்ளைப் பொருட்களைப் பங்கிடுவது தொடர்பான நியமங்கள் *(1சாமு 30:21-26)*

5. நீதியின் சட்டங்கள் நீதியின் பிரமாணங்கள் என்று அழைக்கப் படுகின்றன. *(ஏசா 58:2)*

6. தேவனுடைய ஆலயத்திற்குக் கொடுப்பது சம்பந்தமான மார்க்கக் கட்டளைகள் நியமங்கள் என்று அழைக்கப்படுகின்றன. *(நெகே 10:32)*

7. மார்க்கத்தோடு தொடர்பில்லாத அரசாங்கத்தின் சட்டங்கள் நியமங்கள் என்று அழைக்கப்படுகின்றன. *(ரோமர் 13:2; கொலோ 2:14,20; 1பேதுரு 2:13)*

பிரமாணங்கள் **"Judgments"** என்னும் வார்த்தையும், கற்பனைகள் **"commandments,"** என்னும் வார்த்தையும் ஒரே பொருளைக் கொடுக்கக்கூடியவை. யாத் 20:1-17 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பத்துக் கற்பனைகளுக்கும், யாத் 21:1-23:33; யாத் 24:3; லேவி 18:4-5,26 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நியாயத் தீர்ப்புகளுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.

எபிரெய மொழியில் நியாயத்தீர்ப்பு என்பதற்கான எபிரெய வார்த்தை "மிஸ்பத்" **(mishpat)** என்பதாகும். வேதாகமத்திலுள்ள நியாயத்தீர்ப்புக்களைக் கற்பனைகளைப் போன்றே பாவிக்க வேண்டும் *(லேவி 18:4-5,26; லேவி 19:37; லேவி 20:22; லேவி 25:18)* மற்ற கற்பனைகளைப் போன்றே நியாயத்தீர்ப்புக்களும் வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிறது *(உபா 7:11; 1இராஜா 8:58).*

தெய்வீகக் கட்டளைகளும் **(Statutes)** அதிகாரப்பூர்வமான நியமங்களாகும். தேவனுடைய பிரமாணங்களை வலியுறுத்திக் கூறுவதற்குத் தெய்வீகக் கட்டளைகள் என்னும் வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. *(யாத் 15:26; யாத் 18:16; லேவி 10:11; லேவி 18:5,26).* ஒரு கற்பனையைக் குறிப்பதற்கு நியமங்கள் என்னும் வார்த்தையும், தெய்வீகக் கட்டளை என்னும் வார்த்தையும் மாறிமாறி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. *(லேவி 26:46; உபா 4:1,5,8; உபா 5:1, உபா 5:31; உபா 6:1-2; உபா 7:11)*

எல்லாக் கற்பனைகளும் கட்டளைகளாகக் கூறப்பட்டிருக்கிறது. (உபா 4:13; உபா 6:25; உபா 27:1); உடன்படிக்கையும் கட்டளையிடப் பட்டிருக்கிறது (உபா 4:13); தெய்வீகக் கட்டளையும் கட்டளையிடப் பட்டிருக்கிறது. (உபா 4:14; உபா 6:17); பிரமாணங்களும் கட்டளையிடப்பட்டிருக்கிறது. (உபா 4:14; உபா 6:20); சாட்சிகளும் கட்டளையிடப் பட்டிருக்கிறது. (உபா 6:17,20); நியமங்களும் கட்டளையிடப்பட்டிருக்கிறது. (எண் 19:2; எண் 31:21); கர்த்தருடைய எல்லா வார்த்தைகளும் கட்டளைகளாகவே கூறப்பட்டிருக்கிறது. (யாத் 35:1).

சீனாய் மலையிலும், ஆசரிப்புக் கூடாரத்திலும், மற்றும் பல இடங்களிலும் கூறப்பட்ட சட்டங்கள் அனைத்துமே கற்பனைகளாகும். (யாத் 34:32; லேவி 7:38; லேவி 25:1; லேவி 26:46; லேவி 27:34).

கர்த்தர் மனுபுத்திரரோடு பல வழிகளில் பேசுகிறார். "தேவன் ஒருவிசை சொல்லியிருக்கிற காரியத்தை இரண்டாம் விசை பார்த்துத் திருந்துகிறவரல்லவே" (யோபு 33:14). அவர் பத்துக்கட்டளைகளை கொடுக்கும்போது பேசியதுபோல, மற்ற சந்தர்ப்பங்களில் அதுபோல பேசியதில்லை.

கர்த்தர் மனுஷருக்கு பத்து கட்டளைகளை கொடுப்பதற்கு முன்பாகவே, இந்தக் கட்டளைகளின் வார்த்தைகளெல்லாம் மனுஷருடைய இருதயங்களில் இயற்கையாகவே எழுதப்பட்டிருந்தது. ஆனால் மனுஷனுடைய பாவசுபாவத்தினால், இந்த வார்த்தைகள் மனுஷருடைய இருதயத்தில் மங்கிப்போயிற்று. இந்த வார்த்தைகளில் பல அழிந்தும் போயிற்று.

கர்த்தர் மனுக்குலத்திற்கு கொடுத்திருக்கிற பத்துக்கட்டளைகள், நம்முடைய நன்மைக்காக கொடுக்கப்பட்டிருக்கிறது. அவை நமக்கு மிகுந்த பிரயோஜனமாயிருக்கும். ஆனால் மனுஷருடைய பாவம், பிரயோஜனமாயிருக்கிற பத்துக்கட்டளைகளை அழித்துப்போடுகிறது. ஆகையினால் கர்த்தர் இந்தக் கட்டளைகளை மனுப்புத்திரருக்கு மறுபடியும் கொடுக்க வேண்டியது அவசியமாயிற்று.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு பத்துக்கட்டளைகளை கொடுப்பதற்கு முன்பாக, "உன் தேவனாகிய கர்த்தர் நானே" (யாத் 20:2) என்று தம்மைப்பற்றிச் சொல்லுகிறார். கர்த்தரே பத்துக்கட்டளைகளின் ஆசிரியர். அவரே இந்தக் கட்டளைகளை இயற்றியவர். கர்த்தருக்கு பத்துக்கட்டளைகளின்மீது தெய்வீக அதிகாரமுள்ளது.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தம்மைப்பற்றிச் சொல்லும்போது, "உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவர்" என்று சொல்லுகிறார். இந்த நிகழ்ச்சி வேதாகமத்தில் மிகவும் முக்கியமானதாகும். பஞ்சாகமத்தில் மட்டும் 44 தடவைகள் இந்த நிகழ்ச்சியைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

பரிசுத்த வேதாகமத்தில் கர்த்தர் தம்மைப்பற்றிச் சொல்லும் பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்றிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. கர்த்தர் நானே (I am the Lord) (Jehovah) (ஆதி 15:7; யாத் 6:2; லேவி 11:45; எண் 3:13; 1இராஜா 20:13; ஏசா 42:8; எரே 9:24; எசே 6:7; மல் 3:6).

2. நான் சர்வ வல்லமையுள்ள தேவன் (I am the Almighty God) (ஆதி 17:1).

3. நான் ஆபிரகாமுடைய தேவன் (I am the God of Abraham) (ஆதி 26:24; ஆதி 28:13).

4. பெத்தேலிலே உனக்குத் தரிசனமான தேவன் நானே. (I am the God of Bethel) (ஆதி 31:13).

5. நான் சர்வவல்லமையுள்ள தேவன் (I am God Almighty) (ஆதி 35:11).

6. நான் தேவன், நான் உன் தகப்பனுடைய தேவன் (I am God, the God of thy father) (ஆதி 46:3; யாத் 3:6).

7. நான் இருக்கிறவராக இருக்கிறேன் (I am that I am) (யாத் 3:14).

8. நான் இருக்கிறேன் (I am) *(யாத் 3:14).*

9. உங்கள் தேவனாகிய கர்த்தர் (I am the Lord your God) *(யாத் 6:7; லேவி 11:44; எண் 10:10; நியா 6:10; எசே 20:5; யோவே 2:27).*

10. உன் தேவனாகிய கர்த்தர் நானே (I am the Lord thy God) *(யாத் 20:2; உபா 5:6; சங் 81:10; ஏசா 43:3; ஓசி 13:4).*

11. நான் அவர்கள் தேவனாகிய கர்த்தர் (I am the Lord their God) *(லேவி 26:44; எசே 28:26; சக 10:6).*

12. நான் நானே அவர் (I am He) *(உபா 32:39; ஏசா 41:4; ஏசா 43:10).*

13. நானே தேவன் (I am God) *(சங் 46:10; ஏசா 43:12; ஏசா 45:22; ஓசி 11:9).*

14. நான் உன் தேவன் (I am thy God) *(ஏசா 41:10).*

15. நான் உங்கள் பரிசுத்தராகிய கர்த்தர் (I am the Lord, your Holy One) *(ஏசா 43:15).*

16. நான் முந்தினவரும், நான் பிந்தினவருந்தானே (I am the first, and I am the last) *(ஏசா 44:6; ஏசா 48:12).*

17. நான் இஸ்ரவேலின் பரிசுத்தரும், உன் இரட்சகருமாயிருக்கிற உன் தேவனாகிய கர்த்தர் (I am the Lord thy God, the Holy One of Israel) *(ஏசா 43:3).*

18. கர்த்தரும், யாக்கோபின் வல்லவருமாகிய நான் உன் இரட்சகரும், உன் மீட்பரும் (I the Lord am thy Saviour and thy Redeemer, the mighty One of Jacob) *(ஏசா 49:26).*

19. நானே சாட்சி (I am a witness) *(எரே 29:23).*

20. நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர் (I am the Lord, the God of all flesh) *(எரே 32:27).*

21. கர்த்தராகிய ஆண்டவர் (I am the Lord God) *(எசே 13:9; எசே 23:49; எசே 24:24; எசே 28:24; எசே 29:16).*

22. நான் உங்கள் தேவன் (I am your God) *(எசே 34:31).*

23. நான் மகத்துவமான ராஜா (I am a Great King) *(மல் 1:14).*

24. நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன். (I am the God of Abraham, and the God of Isaac, and the God of Jacob) *(மத் 22:31; மாற்கு 12:26).*

25. நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன். (I am the God of thy fathers, the God of Abraham, and the God of Isaac, and the God of Jacob) *(அப் 7:32).*

புதிய ஏற்பாட்டில் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றி சொன்ன பல்வேறு சம்பவங்களின் விவரம் வருமாறு :

1. ஜீவஅப்பம் நானே (I am the bread of life) *(யோவான் 6:35,48).*

2. நானே வானத்திலிருந்திறங்கின ஜீவஅப்பம் (I am the living bread) *(யோவான் 6:51).*

3. நான் உலகத்தின் ஒளி (I am the light of the world) *(யோவான் 8:12).*

4. நானே அவர் (I am He) *(யோவான் 8:24,28; யோவான் 13:19).*

5. நான் இருக்கிறேன் (I am) *(யோவான் 8:58)*.

6. நானே ஆடுகளுக்கு வாசல் (I am the door of the sheep) *(யோவான் 10:7)*.

7. நானே வாசல் (I am the door) *(யோவான் 10:9)*.

8. நானே நல்ல மேய்ப்பன் (I am the good shepherd) *(யோவான் 10:11,14)*.

9. நானே தேவனுடைய குமாரன் (I am the Son of God) *(யோவான் 10:36)*.

10. நானே உயிர்த்தெழுதலும், ஜீவனுமாயிருக்கிறேன் (I am the resurrection, and the life) *(யோவான் 11:25)*.

11. நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் (I am the way, the truth, and the life) *(யோவான் 14:6)*.

12. நான் மெய்யான திராட்சச்செடி (I am the true vine) *(யோவான் 15:1)*.

13. இயேசு நானே (I am Jesus) *(அப் 9:5; அப் 22:8; அப் 26:15)*.

14. நான் அல்பாவும் ஒமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் (I am Alpha and Omega, the beginning and the ending) *(வெளி 1:8; வெளி 21:6; வெளி 22:13)*.

15. நான் முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன் (I am the first and the last) *(வெளி 1:11,17; வெளி 22:13)*.

16. சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன் (I am He that liveth) *(வெளி 1:18)*.

17. நான் தாவீதின் வேரும், சந்ததியுமாயிருக்கிறேன் (I am the root and offspring of David) *(வெளி 22:16)*.

18. நான் பிரகாசமுள்ள விடிவெள்ளியாய் இருக்கிறேன். (I am the bright and morning star) *(வெளி 22:16)*.

பத்துக்கற்பனைகளைப்பற்றி புதிய உடன்படிக்கையிலும், பழைய உடன்படிக்கையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. யாத் 20:3 ஆவது வசனத்தை மத் 22:37; மாற்கு 12:30; லூக்கா 10:27 ஆகிய வசனங்களோடு ஒப்பிடுக.

2. யாத் 20:4-6 ஆகிய வசனங்களை அப் 15:20,29; அப் 21:25; ரோமர் 1:18-32; ரோமர் 2:22; 2கொரி 10:7,14; கலா 5:20; கொலோ 3:5; 1யோவான் 5:20 ஆகிய வசனங்களோடு ஒப்பிடுக.

3. யாத் 20:7 ஆகிய வசனத்தை மத் 12:31-32; மாற்கு 3:28-29; மாற்கு 7:22; லூக்கா 12:10; கொலோ 3:8 ஆகிய வசனங்களோடு ஒப்பிடுக.

4. யாத் 20:8-11 ஆகிய வசனங்களை ரோமர் 14:5-6; கலா 4:9-10; கொலோ 2:14-17 ஆகிய வசனங்களோடு ஒப்பிடுக.

5. யாத் 20:12 ஆகிய வசனங்களை மத் 15: 4; மத் 19:19; மாற்கு 7:10; மாற்கு 10:19; லூக்கா 18:20; எபே 6:2; கொலோ 3:20; 2தீமோ 3:2 ஆகிய வசனங்களோடு ஒப்பிடுக.

6. யாத் 20:13 ஆகிய வசனங்களை மத் 5:21; மாற்கு 10:19; லூக்கா 18:20; ரோமர் 13:9; யாக் 2:11; 1பேதுரு 4:15; 1யோவான் 3:15 ஆகிய வசனங்களோடு ஒப்பிடுக.

7. யாத் 20:14 ஆகிய வசனங்களை மத் 5:27-32; மத் 19:9,18; மாற்கு 10:11-12, 19; லூக்கா 16:18; லூக்கா 18:20; ரோமர் 2:22; ரோமர் 13:9; கலா 5:19; யாக் 2:11 ஆகிய வசனங்களோடு ஒப்பிடுக.

8. யாத் 20:15 ஆகிய வசனங்களை மத் 19:18; மாற்கு 10:19; லூக்கா 18:20; ரோமர் 2:21; ரோமர் 13:9; எபே 4:28 ஆகிய வசனங்களோடு ஒப்பிடுக.

9. யாத் 20:16 ஆகிய வசனங்களை மத் 15:19; மத் 19:18; மாற்கு 10:19; லூக்கா 18:20; ரோமர் 13:9 ஆகிய வசனங்களோடு ஒப்பிடுக.

10. யாத் 20:17 ஆகிய வசனங்களை மாற்கு 7:22; லூக்கா 12:15; ரோமர் 1:29; ரோமர் 7:7; ரோமர் 13:9; 2கொரி 6:10; எபே 5:3-5; கொலோ 3:5; 1தீமோ 3:3; 1தெச 2:5; எபி 13:5 ஆகிய வசனங்களோடு ஒப்பிடுக.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்மைப்பற்றிச் சொல்லும்போது, "உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே" (யாத் 20:2) என்று சொல்லுகிறார். அவர்கள் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்" (யாத் 20:3) என்று கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தெளிவாகச் சொல்லுகிறார்.

பத்துக்கட்டளைகளில் முதல் நான்கு கட்டளைகளும் கர்த்தரை ஆராதிப்பது சம்பந்தமானது. கர்த்தரே இஸ்ரவேல் புத்திரருடைய தேவனாகயிருக்கிறார். ஆகையினால் அவர் மாத்திரமே இஸ்ரவேல் ஜனத்தாருடைய துதிகளுக்கும், ஸ்தோத்திரங்களுக்கும், ஆராதனைகளுக்கும் பாத்திரராயிருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியவேண்டும். தம்முடைய கட்டளைகளுக்கெல்லாம், இஸ்ரவேல் ஜனத்தார் கீழ்ப்படிய வேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்தால் அவர்களுக்கு ஆசீர்வாதம் கிடைக்கும். அவர்கள் கீழ்ப்படியவில்லையென்றால் அவர்களுக்கு தண்டனை கிடைக்கும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். இதன் மூலமாக அவர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு உடன்படிக்கையின் தேவனாகயிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தாரும் கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம், ஞானஸ்நானத்தின் மூலமாக, நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவோடு உடன்படிக்கை செய்துகொள்கிறோம். இயேசுகிறிஸ்துவானவரே நம்முடைய கர்த்தர் என்பதை, நம்முடைய ஞானஸ்நானத்தின் மூலமாக அங்கீகரித்து, அறிக்கை செய்கிறோம்.

நாம் கிறிஸ்துவோடு உடன்படிக்கை செய்திருக்கிறோம். அவருடைய உபதேசத்திற்கு விசுவாசிகளாகிய நாம் எல்லோரும் கீழ்ப்படியவேண்டும். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு நாம் கீழ்ப்படியவில்லையென்றால், நாம் கிறிஸ்துவானவருக்கு உண்மையுள்ளவர்களாயில்லை என்றும், நாம் கிறிஸ்துவோடு செய்துகொண்ட உடன்படிக்கையை மீறிவிட்டோம் என்றும் அர்த்தமாகும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அவர்களுடைய அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவர். கர்த்தரே அவர்களை மீட்டுக்கொண்டவர். ஆகையினால் அவர்களை ஆளுகை செய்யும் உரிமையும் அதிகாரமும் அவர்களுடைய தேவனாகிய கர்த்தருக்கு உண்டு.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக்கொண்டதினால், அவர்கள் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும். அவர்கள் கர்த்தரை மாத்திரமே சேவிக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் இனிமேல் எகிப்தியருக்கு அடிமைகளல்ல. ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிககளாகிய நம்மை, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு இரட்சித்திருக்கிறார். ஆகையினால் நாம் இயேசுகிறிஸ்துவுக்கு நன்றியுள்ளவர்களாய் ஜீவிக்கவேண்டும். கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யவேண்டும். அவரை ஆராதிக்கவேண்டும்.

"தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு, நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும், நம்மை இரட்சிக்கும்படிக்கு, தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக்கொம்பை ஏற்படுத்தினார்" (லூக் 1:74,75).

கர்த்தர் தம்முடைய பத்துக்கட்டளைகளையும் இரண்டு கற்பலகைகளில் எழுதியிருக்கிறார். முதல் நான்கு கட்டளைகளும் முதலாவது பலகையில் எழுதப்பட்டிருக்கிறது. இந்த நான்கு கட்டளைகளும், நாம் கர்த்தரை ஆராதிக்கவேண்டிய முறைகளைப்பற்றி சொல்லுகிறது.

நம்முடைய உற்றார் உறவினர்கள், அயல் வீட்டுக்காரர்கள் ஆகியோரை நாம் நேசிப்பதற்கு முன்பாக, நம்மை சிருஷ்டித்த கர்த்தரை நாம் நேசிக்கவேண்டும். கர்த்தரிடத்தில் அன்புகூரவேண்டியது நம்முடைய கடமை. நம்முடைய நீதிகளையும்,பிறருக்கு நாம் செய்யும் உதவிகளையும், கர்த்தருக்கு கீழ்ப்படிந்து செய்யவேண்டும்.

கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் நம்மால் எந்த நல்ல காரியத்தையும் செய்ய முடியாது. நாம் எதைச் செய்தாலும் கர்த்தரை கனம்பண்ணும் வண்ணமாகவே செய்யவேண்டும். அப்போதுதான் நம்முடைய நற்கிரியைகள் கர்த்தருடைய சமுகத்தில் அங்கீகரிக்கப்படும்.

நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயில்லையென்றால், நம்முடைய சகோதரர்களுக்கும் உண்மையுள்ளவர்களாயிருக்கமாட்டோம். தாங்கள் கர்த்தருக்கு பொய்யர்களாக இருப்போமென்றும், ஆனாலும் தங்கள் சகோதரருக்கு தாங்கள் உண்மையுள்ளவர்களாயிருப்போம் என்றும் ஒருசிலர் சொல்லுகிறார்கள். இவர்களுடைய வார்த்தைகளில் உண்மையில்லை. இது மாய்மாலமான வார்த்தை. கர்த்தர்மீது அன்புகூராமல், மனுஷர்மீது மெய்யான அன்பு கூரமுடியாது.

முதலாவது கட்டளை : நாம் யாரை ஆராதிக்கவேண்டுமென்று பத்துக்கட்டளைகளில் முதலாவது கட்டளை தெளிவாக சொல்லுகிறது. "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்" (யாத் 20:3) என்பதை கர்த்தர் தம்முடைய முதலாவது கட்டளையாக இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

எகிப்து தேசத்திலும், அந்த தேசத்திற்கு அருகாமையிலுள்ள மற்ற தேசங்களிலும் ஏராளமான தெய்வங்கள் இருக்கிறது. அவர்கள் சிருஷ்டிகளை ஆராதிக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு விநோதமான தெய்வங்களை உண்டுபண்ணுகிறார்கள். இவையெல்லாம் நூதன தெய்வங்களாக இருக்கிறது. இவை மனுஷரால் உண்டாக்கப்பட்டவை.

கர்த்தரே சர்வசிருஷ்டிகர். அவரே நம்மை சிருஷ்டித்தவர். நம்முடைய துதி கனம், மகிமை அனைத்தையும் கர்த்தருக்கு மாத்திரமே செலுத்தவேண்டும். ஆனால் மனுஷனோ கர்த்தருக்கு செலுத்த வேண்டிய மகிமையை, ஒரு சில சிருஷ்டிகளுக்கு செலுத்தி விடுகிறான். இது கர்த்தருக்கு விரோதமான பாவம்.

மனுஷனுடைய மனதிலே பெருமை இருக்கிறது. அவனுடைய பெருமையே அவனுக்கு ஒரு விக்கிரகமாக மாறிவிடுகிறது. மனுஷனுடைய குணத்திலே பேராசை இருக்கிறது. மனுஷனுடைய பேராசை பணத்தை அவனுக்கு தெய்வமாக ஆக்குகிறது. ஒரு சிலர் போஜனபிரியராயிருக்கிறார்கள். போஜனம் அவர்களுக்கு தெய்வமாக இருக்கிறது. இப்படிப்பட்டவர்கள் கர்த்தருக்கு கொடுக்க வேண்டிய கனத்தையும் மகிமையையும், தங்களுடைய இருதயத்தின் பெருமைக்கும், பண ஆசைக்கும், பெருந்தீனிக்கும் கொடுக்கிறார்கள்.

பொருளாசைக்காரருக்கு, கர்த்தரைவிட உலகப்பிரகாரமான பொருட்களே பெரிதாயிருக்கும். அவர்கள் கர்த்தரை நம்புவதற்கு பதிலாக தங்கள் ஐசுவரியத்தை நம்புவார்கள். அவர்கள் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பதற்கு பதிலாக, தங்களுடைய ஐசுவரியத்திலே சந்தோஷமாயிருக்கவேண்டுமென்று முயற்சி செய்வார்கள்.

நாம் கர்த்தரை மாத்திரமே அதிகமாய் நேசிக்கவேண்டும். அவருக்கு மாத்திரமே பயப்படவேண்டும். அவரை மாத்திரமே சேவிக்கவேண்டும். நாம் கர்த்தரில் மாத்திரமே சந்தோஷமாயிருக்கவேண்டும். நாம் கர்த்தரை மாத்திரமே சார்ந்து ஜீவிக்கவேண்டும். நாம் கர்த்தருக்கு பயப்படாமல், வேறு எதற்காவது அதிகமாக பயப்பட்டால், அதுவே நமக்கு விக்கிரகமாகயிருக்கும். நாம் கர்த்தரை நேசிக்காமல், கர்த்தரைவிட வேறு எதையாவது அதிகமாய் நேசித்தால் அதுவும் நமக்கு விக்கிரகமாகயிருக்கும்.

புறஜாதி ஜனங்கள் கல்லினாலும், மண்ணினாலும், மரத்தினாலும் விக்கிரகங்களை செய்கிறார்கள். கர்த்தருடைய ஜனம் ஒருவேளை இப்படிப்பட்ட விக்கிரகங்களை செய்யாமலிருக்கலாம். ஆனாலும் அவர்கள் தங்களுடைய மனதிற்குள்ளே பெருமை, பேராசை, பொருளாசை போன்ற விக்கிரகங்களை செய்து, அவற்றை ஆராதிப்பார்கள். கர்த்தரை ஆராதியாமல் இப்படிப்பட்ட காரியங்களை ஆராதிக்கும்போது, இவர்களும் புறஜாதியாரைப்போல, விக்கிரகாராதனைக்காரராகவே இருக்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய முதலாவது கட்டளையை "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்" என்று தெளிவாகவும், திட்டமாகவும் சொல்லுகிறார். நாம் கர்த்தருக்கு தெரியாமல், மறைவாக, இரகசியமாக எந்த விக்கிரகத்தையும் ஆராதிக்க முடியாது. கர்த்தருக்கு தெரியாத இரகசியம் எதுவுமில்லை. கர்த்தர் சர்வஞானமுள்ளவர். அவர் சகலவற்றையும் அறிந்திருக்கிறவர். கர்த்தர் மனுஷருடைய இருதயங்களின் நினைவுகளையும் அறிந்திருக்கிறார்.

மனுஷன் கர்த்தரையல்லாமல் வேறே தேவர்களை ஆராதிக்கும்போது, அவன் கர்த்தருடைய முகத்திற்கு முன்பாக துணிகரமாய்ப் பாவம் செய்கிறான். கர்த்தர் நம்முடைய பாவங்களை கண்டுகொள்ளாமல் விட்டுவிடமாட்டார். மனுஷருடைய பாவங்களெல்லாம் கர்த்தருடைய பார்வையில் பிரத்தியட்சமாயிருக்கும்.

இரண்டாவது கட்டளை : கர்த்தர் இரண்டாவது கட்டளையாக தம்மை ஆராதிக்கும் பிரமாணங்களை சொல்லுகிறார். நாம் கர்த்தரை எவ்வாறு ஆராதிக்கவேண்டும் என்பது இரண்டாவது கட்டளையில் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தரைத் தொழுதுகொள்கிறவர்கள் அவரை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும். கர்த்தரை ஆராதிப்பதற்காக, ஒரு விக்கிரகத்தை செய்து, அதை ஆராதிக்கக்கூடாது.

"மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்" (யாத் 20:4,5) என்று கர்த்தர் தம்முடைய இரண்டாவது கட்டளையை சொல்லுகிறார்.

பரிசுத்த வேதாகமத்தில் நாம் ஆராதிக்கக்கூடாது என்று ஒரு சில காரியங்களைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. மரம், கல், உலோகம் ஆகியவற்றால் செதுக்கப்பட்ட விக்கிரகம் (யாத் 20:4; உபா 4:15-16)

2. ஆண் அல்லது பெண்ணுக்கு ஒப்பாயிருக்கும் சொரூபம். (யாத் 20:4; உபா 4:16)

3. மிருகத்தின் சொரூபம். (உபா 4:17)

4. பறவைகளின் சொரூபம் (உபா 4:17)

5. தரையில் ஊரும்பிராணிகளின் சொரூபம் (உபா 4:18; ரோமர் 1:23)

6. பூமியின்கீழ் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான சொரூபம் (யாத் 20:4)

7. தண்ணீரில் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான மச்சத்தின் சொரூபம் (யாத் 20:4; உபா 4:18)

8. வானத்தில் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான சொரூபம் (யாத் 20:4; ரோமர் 1:23)

9. சூரியன் (உபா 4:19; எசே 8:16)

10. சந்திரன் (உபா 4:19)

11. நட்சத்திரங்கள் (உபா 4:19)

12. பரலோகத்தின் சேனைகள் (யாத் 20:4; உபா 4:19; 2இராஜா 17:16; 2இராஜா 21:3; 2நாளா 33:3)

கர்த்தர் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறார். கர்த்தர் எரிச்சலுள்ள தேவன் என்று வேதாகமத்தில் 10 இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (யாத் 20:5; யாத் 34:14; உபா 4:24; உபா 5:9; உபா 6:15; யோசு 24:19; எசே 39:25; யோவே 2:18; சக 1:14; சக 8:2). எரிச்சலில் பக்தியுள்ள எரிச்சல் என்றும் (godly jealousy) (2கொரி 11:2), பக்தியற்ற எரிச்சல் (ungodly) (நீதி 6:34; உன் 8:6) என்றும் வேறுபாடு உள்ளது.

கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியும்போது நமக்கு ஆசீர்வாதமும், அவருடைய கட்டளைகளை மீறும்போது நமக்கு தண்டனைகளும் கொடுக்கப்படும். கர்த்தருடைய பத்துக்கட்டளைகளில், அந்தக் கட்டளைகளை மீறுகிறவர்களுக்கு கொடுக்கப்படும் தண்டனையைக் குறித்து எச்சரிப்பாக சொல்லப்பட்டிருக்கிறது. அந்த எச்சரிப்புக்களின் விவரம் வருமாறு :

1. என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன் (யாத் 20:5)

2. கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார் (யாத் 20:7)

3. ஆயுசுநாட்கள் குறைந்துபோகும். (யாத் 20:12)

பத்துக்கட்டளைகளை மீறுகிறவர்களுக்கு கொடுக்கப்படும் தண்டனைகளின் விவரம் வருமாறு :

1. வேறே தேவர்களை ஆராதிக்கிறவர்களுக்கு மரண தண்டனை (யாத் 20:3; லேவி 18:21-29; லேவி 20:1-6; உபா 13; உபா 17: 2-7; உபா 18:20-22; உபா 30:15-19). இந்தப் பாவம் செய்கிறவர்களுடைய பெயர்களைத் தேவன் தம்முடைய ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடுவார். (யாத் 32:30-33).

2. விக்கிரகங்களைச் செய்கிறவர்களுக்கு மரண தண்டனை (யாத் 20:4-6; உபா 13; உபா 17:2-7; உபா 18:20-22; உபா 27:15; உபா 30:15-19; கலா 5:19-21). இந்தப் பாவம் செய்கிறவர்களுடைய பெயர்களைத் தேவன் தம்முடைய ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப் போடுவார். (யாத் 32:30-33; cp. சங் 69: 25-28; 2கொரி 6:9-10; கலா 5:19-21; கொலோ 3:5-6; வெளி 3:5; வெளி 22:18-19).

3. தேவதூஷணம் சொல்லுகிறவர்களுக்கு மரண தண்டனை (யாத் 20:7; லேவி 24:10-16,23; எண் 15: 30-31; மத் 12:31-32; எபி 10:29).

4. ஒய்வுநாளைப் பரிசுத்தக்குலைச்சல் ஆக்குகிறவர்களுக்கும், ஓய்வுநாளில் வேலை செய்கிறவர்களுக்கும் மரண தண்டனை (யாத் 20: 8-11; யாத் 31:14-15; யாத் 35:2-3; எண் 15:33-36). புதிய ஏற்பாட்டில் இதற்குத் தண்டனை கொடுக்கப்பட வில்லை. (ரோமர் 14:5-6)

5. பெற்றோரைக் கனம்பண்ணாதோருக்கு மரணதண்டனை. (யாத் 20:12; யாத் 21:15,17; லேவி 20:9; உபா 21:18-23; உபா 27:16; ரோமர் 1:29-32; எபே 6: 2-3).

6. கொலைசெய்கிறவர்களுக்கு மரண தண்டனை (யாத் 20:13; யாத் 21:12, 14-15,23; லேவி 24:17,21; உபா 27:24-25; மத் 5:21-22; கலா 5:19-21; 1யோவான் 3:15).

7. விபசாரம் செய்கிறவர்களுக்கு மரண தண்டனை (யாத் 20:14; லேவி 18:20; லேவி 20:10-22; உபா 22:20-30; உபா 27:20-23; ரோமர் 1:29-32; கலா 5:19-21).

8. களவுசெய்கிறவர்களுக்கு மரண தண்டனை (உபா 24:7); யாத் 20:15; யாத் 22:1-12; 2கொரி 6:8-10).

9. பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்களுக்கு மரண தண்டனை (யாத் 20:16) உபா 19:16-21, வெளி 21:8,27; வெளி 22:15)

10. இச்சிக்கிறவனுக்கு மரணதண்டனை என்று கூறப்படவில்லை. (யாத் 20:17) ஆனாலும் யோசு 7:21-26 ஆகிய வசனங்களில் இச்சித்ததின் விளைவாக மரணதண்டனை கிடைத்தது பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

"என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். தாயாருடைய அக்கிரமம் என்று இங்கு கூறப்படவில்லை. ஏவாளின் அக்கிரமம் அல்ல. ஆதாமின் அக்கிரமமே மனுக்குலத்திற்குப் பாவத்தைக் கொண்டுவந்தது. தகப்பன் என்பவன் தனி மனுஷன் மட்டுமல்ல. அவன் தன் சந்ததிக்குப் பிரதிநிதியாக இருக்கிறான்.

தேவனுக்குக் கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதமும், தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணினால் சாபமும், அவனுக்கும், அவன் சந்ததிக்கும் வரும். (ஆதி 2:17; ஆதி 3:1-24; ரோமர் 5:12-21; 2கொரி 15:21-22,45-48). தந்தையின் மூலமாகவே பாவம் தொடரும் என்றும், தாயாரின் மூலமாக பாவம் தொடராது என்றும் வேதம் கூறுகிறது. (யாத் 20:5; யாத் 34:7; லேவி 26:39-40; எண் 14:18; உபா 5:9) ஆகையினால்தான் இயேசு கிறிஸ்து கன்னிமரியாளின் வயிற்றில் பிறந்தார். பத்துக் கற்பனைகளைப் பற்றி கூறப்பட்டிருக்கும் இரண்டு அட்டவணைகளிலும், இந்த வாக்கியம் கூறப்பட்டிருக்கிறது (யாத் 20:5; உபா 5:9).

கர்த்தர் தம்முடைய கட்டளைகளை சொல்லும்போது, ஒரு சில பிரதான அறிவிப்புக்களையும் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன் (யாத் 20:5; யாத் 34:7; எண் 14:18; உபா 5:9)

2. ஏதோமியர், எகிப்தியர் ஆகியோரின் பிள்ளைகளில் மூன்றாம் தலைமுறை வரைக்கும் கர்த்தருடைய சபைக்குட்படலாகாது (உபா 23:7-8).

3. வேசிப்பிள்ளையும் கர்த்தருக்கு சபைக்கு உட்படலாகாது. அவனுக்குப் பத்தாம் தலைமுறையானவனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது. (உபா 23:2)

4. அம்மோனியனும் மோவாபியனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது. பத்தாம் தலைமுறையிலும் என்றைக்கும் அவர்கள் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது. (உபா 23:3)

5. யெகூவின் சந்ததியார் இஸ்ரவேலுடைய சிங்காசனத்தின்மேல் நாலு தலைமுறையாக வீற்றிருப்பார்கள். (2இராஜா 10:30; 2இராஜா 15:12)

இஸ்ரவேல் புத்திரர் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த பின்பு, இந்தக் கட்டளைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள். அவர்களில் அநேகர் அதுவரையிலும் கர்த்தருக்கு ஒப்பாக விக்கிரகங்களை செய்து, சித்திரங்களை வரைந்து, அவற்றை ஆராதித்தார்கள். யூதர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த பின்பு, கர்த்தருக்கு ஒப்பாக தாங்கள் செய்திருந்த விக்கிரகங்களையும், தாங்கள் வரைந்திருந்த சித்திரங்களையும் அழித்துப்போட்டார்கள்.

ரோமப்பேரரசின் படைவீரர்கள் இராயனுடைய உருவத்தை தங்களுடைய மார்புகளிலும், வஸ்திரங்களின் தோள்பட்டைகளிலும் பதக்கங்களாக அணிந்திருப்பார்கள். இவையெல்லாம் இஸ்ரவேல் புத்திரருக்கு அருவருப்புக்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"மேலும், பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே. வாசிக்கிறவன் சிந்திக்கக் கடவன். நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது, யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்" (மத் 24:15,16).

விக்கிரகங்கள் பொய்யை உபதேசிக்கும். அவை சத்தியத்தை பொய்யாக மாற்றும். "தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். ஆமென்" (ரோம 1:25).

நாம் ஆராதிக்கிற தேவனுக்கு எந்த ஒரு உருவத்தையும் கொடுக்க முடியாது. கர்த்தர் ஆவியாயிருக்கிறார்.

"சித்திரக்காரனுக்கு அவன் செய்த சுரூபமும், ஊமையான தெய்வங்களை உண்டுபண்ணித் தான் உருவாக்கின சுரூபத்தை நம்பினவனுக்கு வார்க்கப்பட்டதும் பொய்ப்போதகம் பண்ணுகிறதுமான விக்கிரகமும் என்னத்துக்கு உதவும்?" (ஆப 2:18).

மனுஷன் தன்னுடைய மனதின் கற்பனையின்படி தேவனுக்கு ஒரு விக்கிரகத்தை செய்கிறான். அவன் மனுஷனாகயிருப்பதினால், தேவனை மனுஷரூபத்திலே விக்கிரகமாக உண்டுபண்ணுகிறான். நம்முடைய ஆராதனை ஆவிக்குரியதாக இருக்கவேண்டும். விக்கிரகங்கள் நம்முடைய ஆராதனையை ஆளுகை செய்யக்கூடாது. நம்முடைய ஆராதனையை விசுவாசத்தின் வல்லமை ஆளுகை செய்யவேண்டும். நம்முடைய கற்பனையின் வல்லமை ஆராதனையை ஆளுகை செய்யக்கூடாது. மனுஷருடைய கற்பனையின் வல்லமையினால் விக்கிரகங்கள் செய்யப்படுகிறது.

மனுஷன் ஏன் விக்கிரகத்தை உண்டாக்கக்கூடாது என்பதற்கும் கர்த்தர் காரணத்தை சொல்லுகிறார். "உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்" (யாத் 20:5) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய ஆராதனையில் எரிச்சலுள்ள தேவனாகயிருக்கிறார். அவர் வைராக்கியமுள்ளவர். கர்த்தர் விக்கிரகாராதனைக்காரருக்கு தண்டனைகளை நியமித்திருக்கிறார். விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள் கர்த்தரைப் பகைக்கிறார்கள். கர்த்தர் விக்கிரகாராதனைக்காரருடைய அக்கிரமங்களை, அவர்களுடைய பிள்ளைகளிடத்தில் விசாரிப்பதாக சொல்லுகிறார்.

பெற்றோர் விக்கிரகாராதனைக் காரராயிருக்கும்போது, கர்த்தர் அவர்களுடைய பிள்ளைகளை தண்டிப்பார் என்று இந்த வாக்கியத்திற்கு வியாக்கியானம் சொல்லக்கூடாது. பெற்றோர் விக்கிரகாராதனைக்காரராயிருந்து, அவர்களுடைய பிள்ளைகளும் விக்கிரகாராதனைக்காரர்களாயிருப்பார்களென்றால், கர்த்தர் பெற்றோரின் அக்கிரமங்களை அவர்களுடைய பிள்ளைகளிடத்தில் விசாரிப்பார்.

பெற்றோர் விக்கிரகாராதனைக் காரராயிருந்து, அவர்களுடைய பிள்ளைகள் விக்கிரகங்களை ஆராதிக்காமல், கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிப்பார்களென்றால், கர்த்தர் அவர்களுடைய பெற்றோரின் அக்கிரமங்களை, இந்தப் பிள்ளைகளிடத்தில் விசாரிக்கமாட்டார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை, "அப்பா பிதாவே" என்று அழைக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். கிறிஸ்துவானவரே நம்முடைய பரமதகப்பனாகயிருக்கிறார். அவரிடத்தில் பாவமோ, அக்கிரமமோ இல்லை. புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டிகளாயிருக்கிறோம்.

நமக்கு மாம்சப்பிரகாரமான பெற்றோர் இருந்தாலும், அவர்கள் விக்கிரகங்களை ஆராதித்து, கர்த்தரைப் பகைத்து, அக்கிரமங்களை செய்தவர்களாகயிருந்தாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, நமக்கு ஆவிக்குரிய பிதாவாகயிருக்கிறார். கிறிஸ்துவினிடத்தில் பாவமோ, அக்கிரமமோ, தேவனை பகைக்கும் சுபாவமோ இல்லை. கிறிஸ்துவானவர் தம்முடைய பிதாவின் சித்தத்திற்கு பூரணமாய்க் கீழ்ப்படிந்தவர். கிறிஸ்துவின் ஆவிக்குரிய பிள்ளைகளாகிய நாம் அவருடைய ஆசீர்வாதத்திற்கு சுதந்தரவாளிகளாகயிருக்கிறோம்.

பெற்றோர் விக்கிரகங்களை ஆராதிக்கும்போது, அவர்கள் ஒருவேளை தங்கள் அறியாமையினால் இந்தப் பாவத்தை செய்திருக்கலாம். அவர்களுக்கு மெய்த்தேவனாகிய கர்த்தரைப்பற்றிய அறிவும், வெளிப்பாடும் இல்லாதிருக்கலாம். கர்த்தரோ அப்படிப்பட்ட பெற்றோரை உடனே தண்டித்துவிடமாட்டார். விக்கிரகாராதனைக்காரர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டுமென்று கர்த்தர் நீடியபொறுமையோடு காத்திருக்கிறார்.

ஒருவேளை விக்கிரகாராதனைக்காரர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல் மரித்துப்போனால், அவர்களுடைய பிள்ளைகள் விக்கிரகங்களை ஆராதியாமல் தம்மை ஆராதிப்பார்கள் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். ஒருவேளை பிள்ளைகளும் கர்த்தரை ஆராதியாமல், விக்கிரகங்களை ஆராதிப்பார்களென்றால், கர்த்தர் அப்போதும் அவர்களை தண்டியாமல், அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புவார்கள் என்று நீடிய பொறுமையோடு காத்திருப்பார்.

பிள்ளைகளுடைய மூன்றாம், நான்காம் தலைமுறை மட்டும், அவர்களுடைய அக்கிரமங்களை விசாரியாமல் கர்த்தர் பொறுமையோடு காத்திருக்கிறார். அவர்களுடைய அக்கிரமத்தின் அளவு பூரணமாகும்போது, கர்த்தர் அவர்களை விசாரியாமல் விட்டுவிடமாட்டார். கர்த்தர் தம்மைப் பகைத்து, விக்கிரகங்களை ஆராதிக்கிற பிதாக்களுடைய அக்கிரமத்தை, பிள்ளைகளிடத்தில் மூன்றாம், நான்காம் தலைமுறை மட்டும் விசாரிப்பார் (யாத் 20:5).

கர்த்தர் விக்கிரகாராதனைக் காரர்களை உடனே தண்டியாமல் பொறுமையோடிருந்தாலும், அவர் நித்திய காலமாக அவர்கள்மீது பொறுமையோடிருக்கமாட்டார். ஏற்ற காலம் வரும்போது கர்த்தர் அவர்களை தண்டிக்க ஆரம்பிப்பார். விக்கிரகங்களை ஆராதியாமல், கர்த்தரை ஆராதிக்கிறவர்களுக்கு, அவருடைய ஆசீர்வாதம் கிடைக்கும்.

"என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ் செய்கிறவராயிருக்கிறேன்" (யாத் 20:6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய முதலாவது கட்டளை, நம்முடைய உள்ளான ஆராதனைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் அவரை ஆவியினாலும் உண்மையினாலும் ஆராதிக்கவேண்டும். நம்முடைய உள்ளான ஆராதனையில் நமக்கு கர்த்தருக்குள் சந்தோஷம் இருக்கும். கர்த்தரை ஆராதிக்கவேண்டும் என்னும் ஆர்வம் நமக்குள் நிரம்பியிருக்கும். கர்த்தரை ஆராதிக்கும்போது நம்முடைய இருதயத்தில் சந்தோஷம் நிரம்பியிருக்கும். நாம் கர்த்தரை நம்பிக்கையோடும் விசுவாசத்தோடும் ஆராதிப்போம். நம்முடைய உள்ளான ஆராதனையில், நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து, கர்த்தரைத் துதிக்கும் துதிகளும், ஸ்தோத்திரங்களும் புறப்பட்டு வரும்.

கர்த்தருடைய இரண்டாவது கட்டளை, நம்முடைய வெளிப்படையான ஆராதனையோடு தொடர்புடையது. நாம் கர்த்தரை ஆராதிக்கும்போது, கர்த்தரைத் துதிக்கும் வார்த்தைகளும், ஜெபவார்த்தைகளும், விண்ணப்பங்களின் வார்த்தைகளும் நம்முடைய வாயிலிருந்து புறப்பட்டு வரும். கர்த்தரை ஆராதிக்கும்போது, கர்த்தருடைய வார்த்தைக்கு நாம் கவனமாய்ச் செவிகொடுப்போம்.

கர்த்தரை உண்மையாய் நேசிக்கிறவர்கள் அவருடைய கற்பனைகளை எப்போதும் காத்து நடப்பார்கள். அதிலும் விசேஷமாக கர்த்தரை ஆராதிக்கும் விஷயத்திலே, அவர்கள் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிவார்கள். கர்த்தரை நேசித்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்கிறவர்கள், கர்த்தருடைய கிருபைகளைப் பெற்றுக்கொள்வார்கள். கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள அவருடைய கிருபைகள் நமக்கு உதவி செய்யும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்கிறோம். கர்த்தருடைய சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாமல், நம்மால் கர்த்தரை உண்மையாய் ஆராதிக்க முடியாது.

தம்மை பகைக்கிறவர்களுடைய அக்கிரமத்தை கர்த்தர் விசாரிக்கிறார். தம்மிடத்தில் அன்புகூர்ந்து, தம்முடைய கற்பனைகளை கைக்கொள்கிறவர்களுக்கோ கர்த்தர் ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கம் செய்கிறார். கர்த்தரை உண்மையாய் ஆராதிப்பதற்கு, கர்த்தருடைய இரக்கம் நமக்கு தேவையாயிருக்கிறது. கர்த்தருடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு, கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வது அவசியமாயிருக்கிறது.

மூன்றாவது கட்டளை : நாம் கர்த்தரை எவ்வாறு ஆராதிக்கவேண்டும் என்பது பற்றி மூன்றாவது கட்டளை விளக்குகிறது. "உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக" (யாத் 20:7) என்பது மூன்றாவது கட்டளையாகும். கர்த்தருடைய நாமம் பரிசுத்தமானது. அந்த நாமத்தை வீணிலே வழங்கும்போது, நாம் கர்த்தருடைய நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்கிறோம்.

பொய்யாணையிடுதல், தேவதூஷணம் கூறுதல், தேவனுடைய நாமத்தைத் தேவையில்லாமல் பயன்படுத்துதல் ஆகியவற்றை இந்தக் கற்பனை குறிப்பிடுகிறது. தேவனுடைய நாமத்தைப் பில்லிசூனியம், குறிசொல்லுதல் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தக்கூடாது. ஜெபம், துதி, தீர்க்கதரிசனம் உரைத்தல், உபதேசம் பண்ணுதல், ஆராதனை செய்தல் ஆகிய பக்திவிருத்தியான காரியத்திற்கு மட்டுமே தேவனுடைய நாமத்தைப் பயன்படுத்தவேண்டும். (மல் 3:16).

"கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்" என்று கர்த்தர் சொல்லுகிறார். இதற்கு என்ன தண்டனை கொடுக்கப்படும் என்று இந்த வசனத்தில் கூறப்படாவிட்டாலும், லேவி 24:10-16,23; எண் 15:30-31 ஆகிய வசனங்களில் அதற்கு மரணதண்டனை கொடுக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்கிறோம். கர்த்தருடைய சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாமல், நம்மால் கர்த்தரை உண்மையாய் ஆராதிக்க முடியாது.

தம்மை பகைக்கிறவர்களுடைய அக்கிரமத்தை கர்த்தர் விசாரிக்கிறார். தம்மிடத்தில் அன்புகூர்ந்து, தம்முடைய கற்பனைகளை கைக்கொள்கிறவர்களுக்கோ கர்த்தர் ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கம் செய்கிறார். கர்த்தரை உண்மையாய் ஆராதிப்பதற்கு, கர்த்தருடைய இரக்கம் நமக்கு தேவையாயிருக்கிறது. கர்த்தருடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு, கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வது அவசியமாயிருக்கிறது.

மூன்றாவது கட்டளை : நாம் கர்த்தரை எவ்வாறு ஆராதிக்கவேண்டும் என்பது பற்றி மூன்றாவது கட்டளை விளக்குகிறது. "உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக" *(யாத் 20:7)* என்பது மூன்றாவது கட்டளையாகும். கர்த்தருடைய நாமம் பரிசுத்தமானது. அந்த நாமத்தை வீணிலே வழங்கும்போது, நாம் கர்த்தருடைய நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்கிறோம்.

பொய்யாணையிடுதல், தேவதூஷணம் கூறுதல், தேவனுடைய நாமத்தைத் தேவையில்லாமல் பயன்படுத்துதல் ஆகியவற்றை இந்தக் கற்பனை குறிப்பிடுகிறது. தேவனுடைய நாமத்தைப் பில்லிசூனியம், குறிசொல்லுதல் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தக்கூடாது. ஜெபம், துதி, தீர்க்கதரிசனம் உரைத்தல், உபதேசம் பண்ணுதல், ஆராதனை செய்தல் ஆகிய பக்திவிருத்தியான காரியத்திற்கு மட்டுமே தேவனுடைய நாமத்தைப் பயன்படுத்தவேண்டும். *(மல் 3:16).*

"கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்" என்று கர்த்தர் சொல்லுகிறார். இதற்கு என்ன தண்டனை கொடுக்கப்படும் என்று இந்த வசனத்தில் கூறப்படாவிட்டாலும், லேவி *24:10-16,23;* எண் *15:30-31* ஆகிய வசனங்களில் அதற்கு மரணதண்டனை கொடுக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது.

ஒரு சிலர் கர்த்தருக்கு ஊழியம் செய்வதாக சொல்லுகிறார்கள். அவர்கள் தேவனுடைய நாமத்தினால் ஊழியம் செய்கிறார்கள். ஆனால் அவர்களுடைய ஜீவியம் பரிசுத்தமாயிராது. அவர்கள் பிரசங்கம்பண்ணுவதும், அவர்கள் ஜீவிப்பதும் முரண்பட்டிருக்கும். இது மாய்மாலமான ஊழியம். இவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியமாட்டார்கள். ஆனாலும் இப்படிப்பட்ட மாய்மாலக்காரர்கள் கர்த்தருடைய நாமத்தை தாராளமாய்ப் பயன்படுத்துவார்கள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தை நாம் பயன்படுத்தும்போது, நாம் அவருடைய உபதேசங்களுக்கு கீழ்ப்படியவேண்டும். நாம் இயேசுகிறிஸ்துவை நம்முடைய இரட்சராக பற்றிக்கொள்வோமென்றால், நாம் பாவங்களையும், அசுத்தங்களையும், அக்கிரமங்களைவிட்டு விலகிப் போய்விடவேண்டும். இயேசுகிறிஸ்துவையும் பற்றிக்கொண்டு, பாவத்திற்கும் பங்காளிகளாயிருப்பது என்பது மாய்மாலம். இது கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்குகிற காரியம்.

கர்த்தர் நம்மோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். நாம் உடன்படிக்கையில் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். நாம் கர்த்தரோடு பண்ணிய உடன்படிக்கையை மீறக்கூடாது. கர்த்தருக்கு பொருத்தனை செய்த காரியங்களை நாம் நிறைவேற்றவேண்டும். கர்த்தருக்கு பொருத்தனை செய்வதை நிறைவேற்றாமலிருப்பது, அவருடைய நாமத்தை வீணிலே வழங்குகிற காரியம்.

"ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து" *(மத் 5:23,24).*

ஒரு சிலர் தங்களுடைய வார்த்தைகளை உறுதிபண்ணுவதற்காக தேவனுடைய பெயரிலே ஆணையிடுகிறார்கள். அவர்களுக்கு தேவன்மீது பக்தியும் இருக்காது. மரியாதையும் இருக்காது. ஆனாலும் தேவனுடைய பெயரை தங்கள் இஷ்டம்போல பயன்படுத்துவார்கள். தங்களுடைய வார்த்தைகள் பொய்வார்த்தைகளாகயிருந்தாலும், அதை மெய்வார்த்தைகளாக மாற்றவேண்டும் என்பதற்காக, இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய நாமத்தினாலே ஆணையிடுவார்கள். இவர்களுக்கு கர்த்தர்மீது பயம் இருக்காது. இவர்கள் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்குகிறார்கள்.

யூதர்கள் தங்களுடைய வார்த்தைகளை மெய்ப்பிப்பதற்காக கர்த்தருடைய நாமத்தினால் ஆணையிடுவது வழக்கம். "உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவரைச் சேவித்து, அவரைப் பற்றிக்கொண்டிருந்து, அவருடைய நாமத்தைக் கொண்டு ஆணையிடுவாயாக" (உபா 10:20).

ஆனாலும் ஒரு சிலர் பொய்யாணையிடுகிறார்கள். தங்களுடைய பொய்யை உண்மையென்று நிரூபிப்பதற்காக, கர்த்தருடைய ஆணையினால் ஆணையிட்டு தங்களுக்கு ஆதாயம் தேடப்பார்க்கிறார்கள். இதுவும் கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்குகிற காரியமாகும்.

கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவர்கள் அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தமாட்டார்கள். அவர்கள் கர்த்தரை கனம்பண்ணமாட்டார்கள். தங்களுடைய மாய்மாலத்திற்கும், பொய்வார்த்தைகளுக்கும் கர்த்தருடைய நாமம் துணையாகயிருக்கும் என்று நினைத்து, கர்த்தருடைய நாமத்தை இவர்கள் வீணிலே வழங்குகிறார்கள். கர்த்தர் ஒருபோதும் பாவத்தை அங்கீகரிக்கமாட்டார். அவர் எக்காலத்திலும் பாவத்திற்கு துணைபோகவும் மாட்டார்.

தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவர்களை கர்த்தர் தண்டிப்பார். "கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனை தண்டியாமல் விடார்" (யாத் 20:7). மனுஷர் மத்தியிலே ஏற்படுகிற வழக்குகளை நியாயாதிபதிகள் விசாரிப்பார்கள். அவர்கள் குற்றம் செய்தவர்களுக்கு தண்டனை கொடுப்பார்கள். உலகப்பிரகாரமான நியாயாதிபதிகளின் பார்வையில், கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்குவது, மிகப்பெரிய குற்றமாகவோ அல்லது பாதகமாகவோ அவர்களுக்கு தெரியாது. ஏனென்றால் கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்குவதினால், எந்த மனுஷருக்கும் இரத்த சேதாரம் ஏற்படுவதில்லை. இதனால் யாருடைய தனிப்பட்ட சொத்துக்கும் பாதிப்பு ஏற்படப்போவதில்லை.

ஒருவன் கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்குவதினால், மனுஷர் மத்தியில் காணப்படுகிற அமைதி குலைந்துபோவதுமில்லை. இப்படிப்பட்ட பாவத்தினால் மனுஷருக்கு பெரிய பாதிப்பு எதுவும் ஏற்படப்போவதில்லை. ஆகையினால் ஒருவன் கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்கும்போது, உலகப்பிரகாரமான நியாயாதிபதிகள், அவனைத் தண்டியாமல் விட்டுவிடுகிறார்கள். ஆனால் கர்த்தரோ தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனை தண்டியாமல் விடார். அவனை நிச்சயமாகவே தண்டிப்பார்.

கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவன் கர்த்தருக்கு விரோதமாக துணிகரமாய்ப் பாவம் செய்கிறான். அவன் ஜீவனுள்ள தேவனுக்கு விரோதமாக பேசுகிறான். கர்த்தருடைய கைகளில் விழுவது மிகவும் பயங்கரமானதாகயிருக்கும் என்பதை பாவிகள் அறிந்துகொள்வார்கள். உலகப்பிரகாரமான நியாயாதிபதி தண்டிப்பதைவிட, சர்வலோகத்தையும் நியாயந்தீர்க்கிற தெய்வீக நியாயாதிபதியாகிய கர்த்தர், தண்டிக்கும்போது, அவருடைய தண்டனை மிகவும் பயங்கரமாயிருக்கும்.

நான்காவது கட்டளை : நாம் கர்த்தரை ஆராதிக்கும் வேளைகளைக் குறித்து இந்தக் கட்டளை விளக்குகிறது. நாம் கர்த்தரை எல்லா நாளிலும் ஆராதனை செய்யவேண்டும். அவரை எல்லா நாளிலும் கனப்படுத்தவேண்டும். ஆனாலும் கர்த்தர் ஏழாவது நாளை தமக்கு பரிசுத்தப்படுத்தியிருக்கிறார். வாரத்தில் ஏழுநாட்கள் இருக்கிறது. அந்த ஏழுநாட்களில் ஒருநாள் கர்த்தருக்கு பரிசுத்தமானது. இந்த நாளில் நாம் கர்த்தரை விசேஷமாய்க் கனம்பண்ணவேண்டும். நாம் இந்த நாளை பரிசுத்தம்பண்ணவேண்டும். பரிசுத்தமான இந்த நாளில் உலகப்பிரகாரமான வேலைகள் எதையும் செய்யாமல் நாம் ஓய்ந்திருக்கவேண்டும். கர்த்தருக்கு பரிசுத்தமான ஓய்வுநாளிலே, நாம் கர்த்தருக்கு ஊழியம் செய்ய முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

“ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக” *(யாத் 20:8)* என்று கர்த்தர் சொல்லுகிறார். “ஏழாம் நாளோ உன் கர்த்தருடைய ஓய்வுநாள்” *(யாத் 20:10)* என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த நாளிலே இஸ்ரவேல் புத்திரர் யாதொரு வேலையும் செய்யக்கூடாது.

இந்த வாக்கியம் ஆதி 2:2-3 ஆகிய வசனத்தைக் குறிப்பிடவில்லை. இது தேவனுடைய ஓய்வு. தேவன் தம்முடைய கிரியைகளை முடித்துவிட்டு, அவர் ஓய்ந்திருந்தார். இஸ்ரவேல் புத்திரர் யாத் 16:22-26 ஆகிய வசனங்களை நினைத்துப் பார்க்க வேண்டும். அவர்கள் ஒரு குறிப்பிட்ட நாளை ஓய்வுநாளாக ஆசரிக்க வேண்டும். அதைப் பரிசுத்தமாகவும் ஆசரிக்க வேண்டும்.

“ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருகஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்ய வேண்டாம்” *(யாத் 20:9,10)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மனுஷர் ஆறுநாள் வேலைசெய்ய வேண்டும். அதன் பின்பு ஒருநாள் ஓய்ந்திருக்க வேண்டும் என்னும் கட்டளை மோசேயின் பிரமாணத்தில் எட்டு தடவைகள் கூறப்பட்டிருக்கிறது. *(யாத் 16:26; யாத் 20:9-10; யாத் 23:12; யாத் 31:15; யாத் 34:21; யாத் 35:2; லேவி 23:3; உபா 5:13)* இது புதிய உடன்படிக்கையில் காணப்படவில்லை. பழைய உடன்படிக்கை ஒழிந்துபோயிற்று. கிறிஸ்தவ விசுவாசிகள் தங்களுடைய விருப்பம்போல் எந்த நாளையும் ஓய்வுநாளாக நியமித்துக் கொள்ளலாம். *(அப் 20:7, ரோமர் 14:5-6; கலா 4:9-10; கொலோ 2:14-17).*

ஏழாம்நாள் எல்லா வருஷங்களிலும் யூதருக்கு ஒரே கிழமையில் வராது. “தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்” என்பது தேவனுக்காகவும், அவருடைய கட்டளைகளுக்காகவும் பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிற நாள்.

ஓய்வுநாளில் யாதொரு வேலையும் செய்ய வேண்டாம் என்று கர்த்தர் சொல்லுகிறார். நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் ஓய்வுநாளில் ஒரு வேலையும் செய்யக்கூடாது. பெற்றோர், பிள்ளைகள், வேலைக்காரர்கள், மிருகஜீவன்கள், அந்நியர் ஆகியோர் யாரும் ஓய்வுநாளில் எந்த வேலையும் செய்யக்கூடாது. ஆனாலும், அந்த நாளில் சில அத்தியாவசியமான வேலைகளைச் செய்வதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

லேவியர்கள் ஓய்வுநாளில் பலிகளைச் செலுத்த வேண்டும். *(எண் 28:9-10; 1நாளா 9:32)* அத்தியாவசியமான வேலைகளை ஓய்வுநாளில் செய்வது தடைபண்ணப்படவில்லை *(லேவி 12:3 = யோவான் 7:22-23).*

எஜமான்கள் தங்களுடைய வேலையாட்களையும், மிருகஜீவன்களையும் வேலைவாங்காமல், அவர்களுக்கு ஓய்வு கொடுக்கவேண்டும் *(லேவி 23:7-8,21,25,35).*

மிருகஜீவன்களுக்கு அவசர உதவி தேவைப்பட்டால் அதை ஓய்வுநாளில் செய்யலாம். *(மத் 12:3-8,12; மாற்கு 2:27-28; மாற்கு 3:4; லூக்கா 3:15; லூக்கா 14:5).*

வியாபாரம், தொழில் போன்ற அன்றாட நடைமுறை காரியங்களை ஒய்வுநாளில் செய்யக்கூடாது. (யாத் 16:23; யாத் 34:21; யாத் 35:3; எண் 15:32-36; நெகே 13:15; எரே 17:21)

கர்த்தர் ஆதியிலேயே ஏழாம் நாளை பரிசுத்தப்படுத்தி, அதை ஆசீர்வதித்திருக்கிறார். "தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஒய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்" (ஆதி 2:3).

கர்த்தர் இப்போது மறுபடியுமாய், "ஒய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக" என்று கட்டளையிடுகிறார். கர்த்தர் ஏற்கெனவே இந்தக் கட்டளையை கொடுத்திருப்பதினால், இது புதிய கட்டளையாகாது. கர்த்தர் தம்முடைய பழைய கட்டளையை இப்போது மறுபடியும் புதுப்பிக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரருக்கு ஏழாம்நாள் அவர்களுடைய தேவனாகிய கர்த்தருடைய ஒய்வுநாள். அவர்கள் ஆறுநாளும் வேலை செய்து தங்கள் கிரியைகளையெல்லாம் நடப்பிக்கவேண்டும். ஆறு வேலைநாட்களுக்கு பின்பு வருகிற நாளே ஏழாம் நாள். அதுவே கர்த்தருக்கு ஒய்வுநாள். அந்த நாளை அவர்கள் கர்த்தருக்கு பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும்.

ஒய்வுநாள் பிரமாணத்தைக் குறித்து வேதபண்டிதர்கள் பல்வேறுவிதமாக விளக்கம் சொல்லுகிறார்கள். ஏழாம் நாளை எப்படி கணக்கிடுவது என்பதுபற்றி வேதபண்டிதர்கள் மத்தியிலே வேறுபட்ட கருத்துக்கள் உள்ளது. இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலிருந்து விடுதலை பெற்ற நாள் முதலாவது நாள் என்றும், ஏழாம் நாளை அந்த நாளிலிருந்து கணக்கிடவேண்டும் என்றும், வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள்.

வேறு சிலரோ ஏழாம் நாளை, ஆதிகாலத்திலிருந்தே கணக்கு பார்க்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆகையினால் ஏழாம் நாளை கணக்கிடுவதில் தெளிவு இல்லாமல் குழப்பம் காணப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரருக்கு ஏழாம் நாள், அவர்களுடைய தேவனாகிய கர்த்தருடைய ஒய்வுநாள். அந்த நாளில் அவர்கள் யாதொரு வேலையும் செய்யக்கூடாது. உலகப்பிரகாரமான வேலைகள் எதையும் செய்யாமல் அவர்கள் ஒய்ந்திருக்கவேண்டும். ஏழாம் நாள் கர்த்தருக்கு பரிசுத்தமான நாள். பரிசுத்தமான கர்த்தரை கனம்பண்ணுவதற்காக, இந்த ஏழாம் நாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும். இந்த நாளிலே கர்த்தரை ஆராதிக்கும் ஆராதனை காரியங்கள், அவரை துதிக்கும் துதியின் காரியங்கள் போன்ற ஆவிக்குரிய காரியங்கள் அதிகமாய் நடைபெறவேண்டும்.

கர்த்தர் ஏழாம் நாளை ஆசீர்வதித்திருக்கிறார். ஆகையினால் இது பரிசுத்தமான நாளாகயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் ஒய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும். இது கர்த்தருடைய ஒய்வுநாள். யாரெல்லாம் கர்த்தருடைய ஒய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும் என்றும் இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரரும், அவர்களுடைய குமாரனும், அவர்களுடைய குமாரத்தியும், ஒய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும்.

கர்த்தர் தம்முடைய ஒய்வுநாளை யாரெல்லாம் பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும் என்று சொல்லும்போது, இஸ்ரவேல் புத்திரரும், அவனுடைய குமாரனும், குமாரத்தியும் என்று மாத்திரமே இந்த வசனத்தில் சொல்லுகிறார். அவனுடைய மனைவியைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. மனைவி தன் புருஷனோடு இசைந்திருக்கிறாள். புருஷனும் மனைவியும் தங்கள் குடும்பத்தில் ஒன்றாயிருக்கிறார்கள். ஆகையினால் புருஷன் ஒய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும் என்று சொல்லும்போது, அவனுடைய மனைவியும் அவனோடுகூட, ஒய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும் என்று பொருள்படும்.

ஒய்வுநாட்களிலே நாம் என்ன வேலைகளை செய்யவேண்டும் என்றும், என்ன வேலைகளை செய்யக்கூடாது என்றும் கர்த்தர் நமக்கு தெளிவாக சொல்லுகிறார். ஒய்வுநாளிலே நம்முடைய வேலைக்காரனும், வேலைக்காரியும், மிருகஜீவனும், நாம் வாசல்களிலிருக்கிற அந்நியனும் யாதொரு வேலையும் செய்யக்கூடாது. கர்த்தர் தம்முடைய ஒய்வுநாள் பிரமாணத்தைப்பற்றிச் சொல்லும்போது, "ஒய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக" என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஒய்வுநாள் பிரமாணத்தை ஏற்கெனவே ஸ்தாபனம்பண்ணியிருக்கிறார். கர்த்தர் பத்துக்கட்டளைகளில் நான்காவது கட்டளையாக, ஒய்வுநாளைப்பற்றிய கட்டளையை சொல்லுவதற்கு முன்பாகவே, இஸ்ரவேல் புத்திரர் ஒய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரித்துக்கொண்டிருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலே பல வருஷங்களாக அடிமைகளாயிருந்தார்கள். அந்தக் காலத்திலே அவர்கள் ஒய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஒய்வுநாளை ஆசரிப்பதிலிருந்து அவர்கள் பின்வாங்கிப்போனார்கள். ஒருவேளை எகிப்தியர்கள் இஸ்ரவேல் ஜனத்தாரை ஒய்வுநாட்களிலும் கட்டாயப்படுத்தி வேலை செய்ய வைத்திருக்கலாம். இஸ்ரவேல் ஜனத்தாரோ அந்நிய தேசத்திலே அடிமைகளாயிருக்கிறார்கள். அவர்களால் எகிப்தியரின் ஆளோட்டிகளை மீறி, ஒய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க முடியாமல் போயிருக்கலாம்.

இப்போதோ கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்திருக்கிறார். ஆகையினால் அவர்கள் மறுபடியும் ஒய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைக்கவேண்டும் என்று கர்த்தர் அவர்களுக்கு கட்டளையிடுகிறார்.

ஒய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிப்பதற்கு முன்பு, அந்த நாளுக்காக நம்மை ஆயத்தம்பண்ணவேண்டும். ஒய்வுநாள் வருவதற்கு முன்பாகவே, நாம் ஒய்வுநாளைப்பற்றி நினைத்துப் பார்த்து, அதற்கு நம்மை ஆயத்தம்பண்ணவேண்டும். அப்போதுதான் ஒய்வுநாள் வரும் போது அந்த நாளை பரிசுத்தமாய் ஆசரிக்க முடியும். ஒய்வுநாளுக்கு முந்தின நாளிலே, நாம் என்னென்ன காரியங்களையெல்லாம் செய்யவேண்டுமென்று கர்த்தர் நமக்கு கட்டளை கொடுத்திருக்கிறார். நாம் வரப்போகிற ஒய்வுநாளை நினைத்துப் பார்த்து, அதற்காக நம்மை ஆயத்தம்பண்ணினால் மாத்திரமே, நம்மால் ஒய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க முடியும். ஆகையினால் கர்த்தர் ஒய்வுநாளைப்பற்றிய கட்டளையை சொல்லும்போது, "ஒய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக" என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் ஒய்வுநாளை ஏன் பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும் என்பதற்கான காரணத்தையும் கர்த்தர் சொல்லுகிறார். "கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஒய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஒய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்" (யாத் 20:11).

யாத் 20:11 ஆவது வசனத்திற்கு வேதபண்டிதர்கள் பலவிதமான விளக்கங்களை சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்லும் பொதுவான விளக்கம் வருமாறு :

1. கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினார். இஸ்ரவேல் புத்திரரும் வாரத்தில் ஆறுநாட்கள் வேலைசெய்ய வேண்டும். (யாத் 20: 8-11=ஆதி 1:3-31)

2. கர்த்தர் ஏழாம்நாளிலே ஒய்ந்திருந்தார். இஸ்ரவேல் புத்திரரும் வாரத்தில் ஆறுநாட்கள் வேலைசெய்த பின்பு, ஏழாம்நாளிலே ஒய்ந்திருக்க வேண்டும். (யாத் 20:8-11=ஆதி 2:2-3)

3. வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் கர்த்தர் ஆறுநாட்களில் சிருஷ்டித்தார். ஒரு நாள் என்பது 24 மணி நேரங்களைக் கொண்ட ஒரு காலமாகும் (யாத் 20:8-11=ஆதி 1:3-31)

4. கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார். அதுபோல இஸ்ரவேல் புத்திரரும் ஒருநாளை ஓய்வுநாளாக நியமித்து, அதைப் பரிசுத்தப்படுத்த வேண்டும் (யாத் 20:11= ஆதி 2:2-3; உபா 5:12)

கிறிஸ்துவில் உண்டாகும் இளைப்பாறுதலுக்கு ஓய்வுநாள் ஓர் அடையாளமாகும். (மத் 11:28-30; கொலோ 2:14-17). கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தபோது, அடையாளமாக ஆசரிக்கப்பட்டு வந்த ஓய்வுநாள் பிரமாணம் அவசியமில்லாமல் போயிற்று. (கலா 3:19-25; கலா 4:21-31; எபி 7:11-10:18).

வாரத்திலே ஏழுநாட்கள் உள்ளது. நாம் ஆறுநாட்களும் வேலை செய்யவேண்டும். அந்த நாட்களிலே நம்முடைய கிரியைகளையெல்லாம் நடப்பிக்கவேண்டும். நம்முடைய வேலைகளையெல்லாம் செய்து முடிப்பதற்கு ஆறுநாட்கள் நமக்கு போதுமானது. ஏழாம் நாளோ நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள். அந்த நாளிலே நாம் யாதொரு வேலையும் செய்யாமல், அந்த நாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும். ஓய்வுநாளில் நாம் கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும். இந்த நாளிலே நாம் கர்த்தரை விசேஷமாய்க் கனம்பண்ணி, அவரை ஆராதிக்கவேண்டும்.

கர்த்தர் தம்முடைய கிருபையினால் நமக்கு ஓய்வுநாள் பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார். ஏழாம் நாள் நாம் ஓய்ந்திருக்க வேண்டிய நாள். கர்த்தர் நம்மீது அன்பும், கிருபையும், இரக்கமும், மனதுருக்கமும் உள்ளவராகயிருப்பதினால், நாம் ஏழுநாட்களும் வேலை செய்யவேண்டும் என்று சொல்லாமல், ஆறுநாட்கள் நாம் வேலை செய்தால் போதும் என்றும், ஏழாம் நாளிலே யாதொரு வேலையும் செய்யாமல் ஓய்ந்திருக்கவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

ஏழாம் நாள் கர்த்தருடைய நாள். இந்த நாள் நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள். கர்த்தரே நமக்கு ஓய்வுநாள் பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார். இந்த நாளை கர்த்தர் தமக்கு பரிசுத்தமான நாளாக நியமித்திருக்கிறார். ஆகையினால் ஏழாம் நாள் மனுஷருடைய ஓய்வுநாள் என்று அழைக்கப்படாமல், நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள் என்று அழைக்கப்படுகிறது.

கர்த்தரே சர்வசிருஷ்டிகர். ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். கர்த்தர் இந்தப் பூமியையும், இந்தப் பூமியிலுள்ள ஜீவராசிகள் அனைத்தையும் சிருஷ்டித்தார். கர்த்தரே சர்வசிருஷ்டிகர் என்பதை நாம் நினைவுகூரும் வண்ணமாகவும், நம்முடைய சிருஷ்டிகரை கனம்பண்ணும் வண்ணமாகவும், அவரை மகிமைப்படுத்தும் வண்ணமாகவும், நாம் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும்.

யூதர்கள் ஏழாம் நாளை ஓய்வுநாளாக அங்கீகரித்து, அந்த நாளை பரிசுத்தமாய் ஆசரிக்கிறார்கள். இதன் மூலமாக கர்த்தரே இந்த உலகத்தை சிருஷ்டித்தார் என்பதை அவர்கள் நினைவுகூருகிறார்கள். சிருஷ்டிகரை மகிமைப்படுத்தும் வண்ணமாகவே யூதர்கள் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கிறார்கள்.

கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து அதை பரிசுத்தமாக்கினார். யூதர்களும் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கிறார்கள். ஏழாம் நாள் தங்கள் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள் என்பதை யூதர்கள் அங்கீகரித்து, அந்த நாளிலே அவர்கள் யாதொரு வேலையும் செய்யாமல், அந்த நாளை பரிசுத்தமாய் ஆசரிக்கிறார்கள். அந்த நாளிலே இந்த உலகத்தை சிருஷ்டித்த கர்த்தரை கருத்தாய் ஆராதிக்கிறார்கள்.

யூதர்கள் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிப்பதினால், யூதாதேசத்தார் மற்ற தேசத்தாரிடமிருந்து தங்களை வேறுபடுத்தி காண்பிக்கிறார்கள். அந்நிய தேசத்தார் தாங்கள் உண்டாக்கின தெய்வங்களை ஆராதிக்கிறார்கள். யூதர்களோ வானத்தையும், பூமியையும், தங்களையும் சிருஷ்டித்த தங்கள் சிருஷ்டிகராகிய கர்த்தரை ஆராதிக்கிறார்கள்.

புறஜாதி தேசத்தார் சிருஷ்டிகரை ஆராதியாமல் சிருஷ்டிகளை ஆராதிக்கிறார்கள். யூதர்களோ சிருஷ்டிகளை ஆராதியாமல், சிருஷ்டிகரை ஆராதிக்கிறார்கள்.

நாம் எவ்வாறு ஓய்ந்திருக்கவேண்டும் என்பதற்கு கர்த்தர் ஒரு முன்மாதிரியைக் கொடுத்திருக்கிறார். கர்த்தர் ஆறுநாட்களாக கிரியைகளை நடப்பித்து ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். நாமும் ஆறுநாளும் வேலை செய்து நம்முடைய கிரியைகளையெல்லாம் நடப்பிக்கவேண்டும். ஏழாம் நாளிலே நாம் யாதொரு வேலையும் செய்யாமல் ஓய்ந்திருக்கவேண்டும்.

கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து அதை பரிசுத்தமாக்கினார். கர்த்தர் ஓய்வுநாளின்மீது தம்முடைய ஆசீர்வாதத்தை சொல்லுகிறார். நாம் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கும்போது, கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட ஓய்வுநாளின் ஆசீர்வாதத்தில் நமக்கும் பங்கு இருக்கும். நாம் கர்த்தருடைய ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கும்போது, கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்ததுபோல நம்மையும் ஆசீர்வதிப்பார். இந்த நாள் கர்த்தர் உண்டுபண்ணின நாள். கர்த்தருடைய நாளை நாம் பரிசுத்தம்பண்ணவேண்டும்.

பத்துக்கட்டளைகளில் முதல் நான்கு கட்டளைகளும், கர்த்தரை ஆராதிப்பது சம்பந்தமான கட்டளைகளாகும். இந்த நான்கு கட்டளைகளும் முதலாவது பலகையில் எழுதப்பட்டிருக்கிறது என்றும், மீதமுள்ள ஆறு கட்டளைகளும் இரண்டாவது பலகையில் எழுதப்பட்டிருக்கிறது என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

முதல் நான்கு கட்டளைகளும் கர்த்தரை ஆராதிப்பது சம்பந்தமானவை. மீதமுள்ள ஆறு கட்டளைகளிலும், நாம் நமக்கு ஆற்ற வேண்டிய கடமைகளும், நாம் மற்றவர்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளும் உள்ளது. நாம் நம்மை நேசிப்பதுபோல, பிறரையும் நேசிக்கவேண்டும்.

ஐந்தாவது கட்டளை : நம்முடைய உற்றார் உறவினருக்கு நாம் செலுத்தவேண்டிய மரியாதைகளைப்பற்றி ஐந்தாவது கட்டளையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலும் விசேஷமாக பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு ஆற்றவேண்டிய கடமைகளைப்பற்றி, கர்த்தர் தம்முடைய ஐந்தாவது கட்டளையில் சொல்லுகிறார். "உன் தகப்பனையும், உன் தாயையும் கனம்பண்ணுவாயாக" (யாத் 20:12) என்பது ஐந்தாவது கட்டளையாகும்.

பத்துக் கற்பனைகளில் இந்தக் கற்பனையே வாக்குத்தத்தத்தோடு கூறப்பட்டிருக்கிறது. (எபே 6:2). மனுஷர் எந்த வயதில் மரிக்க வேண்டுமென்று கால அளவுஎதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. தன்னுடைய ஆயுசுகாலத்தின் அளவை மனுஷனே இந்தக் கட்டளையின் பிரகாரம் தீர்மானம் பண்ணிக் கொள்ளலாம். (சங் 91; 2கொரி 11:30).

பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு மதிப்பு கொடுக்கவேண்டும். பிள்ளைகளுடைய இருதயத்தில், தங்கள் பெற்றோர்மீது மதிப்பும் மரியாதையும் நிரம்பியிருக்க வேண்டும். அவர்கள் அந்த மரியாதையை தங்களுடைய வெளிப்படையான செயல்கள் மூலமாகவும் வெளிப்படுத்திக் காண்பிக்கவேண்டும்.

நம்முடைய பெற்றோருக்கு நாம் கர்த்தருக்குள் கீழ்ப்படிவது அவசியமாயிருக்கிறது. பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு நியாயமான கட்டளைகளைக் கொடுக்கும்போது, பிள்ளைகள் அந்தக் கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வேண்டியது அவசியம்.

"பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும். உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது" (எபே 6:1-3).

பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு அன்பினால் கீழ்ப்படியவேண்டும். ஒருவேளை பிள்ளைகள் ஆரம்பத்தில் பெற்றோருக்கு கீழ்ப்படியாவிட்டாலும், அதன் பின்பு அவர்கள் தங்களுடைய தப்பிதத்திற்கு மனந்திரும்பி, தங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படிய முன்வரவேண்டும். "அதற்கு அவன்: மாட்டேன் என்றான்; ஆகிலும், பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான்" (மத் 21:29).

பிள்ளைகள் தப்பு செய்யும்போது பெற்றோர் அவர்களை கண்டித்து திருத்துவார்கள். அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல புத்திமதிகளை சொல்லுவார்கள். பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் நன்மைகளுக்காகவே அவர்களைக் கண்டிக்கிறார்கள். பிரம்பைக் கையாடாதவன் தன் மகனை பகைக்கிறான்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளை நிதானமாகவும், மென்மையாகவும் கண்டிப்பார்கள். தப்பு செய்கிற பிள்ளைகளை அவர்களுடைய பெற்றோர் கண்டித்து திருத்தவில்லையென்றால், அந்தப் பிள்ளைகள் பிற்காலத்தில் துன்மார்க்கராய் வளருவார்கள். பெற்றோர் கண்டிக்காத பிள்ளைகளை ஊரிலுள்ளவர்களும், காவல்துறையிலுள்ளவர்களும் கண்டிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

பிள்ளைகளுடைய மனச்சாட்சி சுத்தமாயிருக்கும்போது, அவர்கள் தங்கள் பெற்றோரைக் கனம்பண்ணுவார்கள். பெற்றோர் தங்களைக் கடிந்துகொண்டாலும், தங்களுக்கு புத்திமதிகளை சொன்னாலும், பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிவார்கள். பிள்ளைகளுடைய மனச்சாட்சி கர்த்தருக்கு முன்பாக சுத்தமாயிருக்கும்போது, அவர்கள் தங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படிவார்கள். அவர்கள் தங்கள் பெற்றோரைக் கனம்பண்ணுவார்கள். கர்த்தருக்கு கீழ்ப்படியாதவர்கள் தங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படியமாட்டார்கள். கர்த்தரைக் கனம்பண்ணாதவர்கள் தங்கள் பெற்றோரையும் கனம்பண்ணமாட்டார்கள்.

பெற்றோர் வயது முதிர்ந்தவராயிருக்கும்போது, அவர்களுடைய பிள்ளைகள் அவர்களுக்கு ஆதரவாயிருக்கவேண்டும். பெற்றோர் தங்கள் முதிர்வயதில் சந்தோஷமாய் ஜீவிப்பதற்கு பிள்ளைகள் அவர்களுக்கு உதவியாயிருக்கவேண்டும். பெற்றோருக்கு தேவையான எல்லா உதவிகளையும் செய்வதற்கு பிள்ளைகள் முன்வரவேண்டும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் தம்முடைய உபதேசத்திலே ஐந்தாவது கட்டளையை விளக்கமாக சொல்லியிருக்கிறார்.

"உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்றும்; தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் கொல்லப்படவேண்டும் என்றும், தேவன் கற்பித்திருக்கிறாரே. நீங்களோ, எவனாகிலும் தகப்பனையாவது தாயையாவது நோக்கி: உனக்கு நான் செய்யத்தக்க உதவி எது உண்டோ, அதைக் காணிக்கையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லி, தன் தகப்பனையாவது தன் தாயையாவது கனம்பண்ணாமற்போனாலும், அவனுடைய கடமை தீர்ந்ததென்று போதித்து, உங்கள் பாரம்பரியத்தினலே தேவனுடைய கற்பனையை அவமாக்கிவருகிறீர்கள்" *(மத் 15:4-6)*.

பிள்ளைகள் தங்கள் பெற்றோரை கனம்பண்ணும்போது, கர்த்தர் அவர்களை விசேஷமாய் ஆசீர்வதிக்கிறார். பிள்ளைகள் தங்கள் தாயையும், தகப்பனையும் கனம்பண்ணும்போது, கர்த்தர் அவர்களுக்கு கொடுக்கிற தேசத்திலே, அவர்கள் நாட்கள் நீடித்திருக்கும் என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார் *(யாத் 20:12)*.

ஐந்தாவது கட்டளை, இரண்டாவது கற்பலகையில் எழுதப்பட்டிருக்கிற முதலாவது கட்டளையாகும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வரப்போகிறார். கர்த்தர் கானான் தேசத்தை குறிக்கும் வண்ணமாக, "உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு கொடுக்கிற தேசம்" என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திலே வாசம்பண்ணும்போது, அவர்களுடைய ஆயுசுநாட்கள் நீடித்திருக்கவேண்டுமென்றால், அவர்கள் தங்கள் தகப்பனையும், தாயையும் கனம்பண்ணவேண்டும்.

ஆறாவது கட்டளை : இந்தக் கட்டளையில் கர்த்தர் நம்முடைய ஜீவனைப்பற்றியும், மற்றவர்களுடைய ஜீவனைப்பற்றியும் சொல்லுகிறார். "கொலை செய்யாதிருப்பாயாக" (யாத் 20:13) என்பது ஆறாவது கட்டளையாகும். நம்முடைய சொந்த சரீரத்திற்கோ அல்லது மற்றவர்களுடைய சரீரத்திற்கோ நாம் எந்த விதமான தீங்கும் செய்யக்கூடாது. யாருடைய சரீரத்திலும் காயங்களை ஏற்படுத்தக்கூடாது. சரீரத்தின் ஆரோக்கியத்தை கெடுத்துப்போடுகிற எந்தக் காரியத்தையும் நாம் செய்யக்கூடாது.

இந்தக் கற்பனை மரணதண்டனை நிறைவேற்றுவதையும், யுத்தத்தில் எதிரிகளைச் சங்காரம் பண்ணுவதையும் தடைபண்ண வில்லை. ஆனால் சுயநல நோக்கத்தோடு பிறரைக் கொலைபண்ணக் கூடாது. கோபம், பொறாமை, பழிவாங்குதல், ஆதாயத்திற்காகத் தாக்குதல் ஆகியவை நிமித்தமாகக் கொலைசெய்வது தடைபண்ணப் பட்டிருக்கிறது. (யாத் 21:12, யாத் 21:14, யாத் 21:18, லேவி 19:14,17, லேவி 19:18, உபா 22:8).

ஒரு தேசத்திற்கும், மற்றொரு தேசத்திற்கும் இடையே யுத்தம் நடைபெறும்போது, யுத்தவீரர்கள் தங்களைக் காத்துக்கொள்வதற்காக, எதிரி தேசத்து வீரர்களைக் கொன்றுபோடுகிறார்கள். இது யுத்தம்பண்ணுகிற பிரமாணம். கர்த்தர் இந்தப் பிரமாணத்திற்கு விரோதமாக தம்முடைய ஆறாவது கற்பனையில் ஒன்றும் சொல்லவில்லை.

நம்முடைய சமுதாய ஜீவியத்திலே, நாம் மற்றவர்களுடைய ஜீவனுக்கு அநியாயமாக தீங்கு செய்யக்கூடாது. நாம் கோபத்தினாலும், பொறாமையினாலும் நிறைந்து பிறரை கொன்றுபோடக்கூடாது. தன்னுடைய சகோதரனை பகைக்கிறவன், அவனைக்கொலைபண்ணுகிறவனாயிருப்பான். பழிவாங்கவேண்டும் என்னும் தீயஎண்ணம் ஒருவனுடைய மனதிலே வளர்ச்சி பெறும்போது, அவன் மற்றவனைக் கொலை செய்வதற்கும் துணிந்துவிடுகிறான்.

ஒரு சிலர் பிறர்மீது கோபப்பட்டு, அவசரத்திலும், ஆத்திரத்திலும் மற்றவர்களைக் கொன்றுபோடுகிறார்கள். ஒரு சிலர் தங்களுடைய வாழ்க்கையில் வரும் பிரச்சனைகளை சந்திக்க முடியாமல், மனம் வேதனைப்பட்டு, தற்கொலை செய்து கொள்கிறார்கள். "கொலை செய்யாதிருப்பாயாக" என்பது கர்த்தருடைய ஆறாவது கட்டளை. இந்தக் கட்டளையின் பிரகாரம் தற்கொலை செய்து கொள்வதும், பிறரை கொலை செய்வதும் பாவமாகும்.

"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்" (மத் 5:22).

ஏழாவது கட்டளை : ஏழாவது கட்டளை நம்முடைய கற்போடும், மற்றவர்களுடைய கற்போடும் தொடர்புடையது. "விபசாரம் செய்யாதிருப்பாயாக" (யாத் 20:14) என்பது ஏழாவது கட்டளையாகும்.

மனுஷர்கள் பலுகிப்பெருக வேண்டும். ஆனாலும் தேவன் இதற்குச் சில நியதிகளை வகுத்திருக்கிறார். திருமணம் புனிதமானது. திருமண உறவின் மூலமாகவே சந்ததி பெருக வேண்டும் என்பது தேவனுடைய சித்தம். இதற்கு விரோதமான பாலுறவுகள் வேதாகமத்தில் அங்கிகரிக்கப்படவில்லை.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்தக் கட்டளையை, ஆறாவது கட்டளைக்கு முன்பாக சொல்லுகிறார். "விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, கொலைசெய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, வஞ்சனை செய்யாதிருப்பாயாக, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்கிற கற்பனைகளை அறிந்திருக்கிறாயே என்றார்" (மாற் 10:19).

நம்முடைய ஜீவன் நமக்கு எவ்வளவு முக்கியமானதோ, அதுபோல நம்முடைய கற்பும் நமக்கு முக்கியமானதாயிருக்க வேண்டும். நம்முடைய சரீரத்தை தீட்டுப்படுத்தி, அதை அழித்துப்போடும் பாவமான காரியங்களுக்கு விரோதமாக நாம் மிகவும் எச்சரிப்பாயிருக்கவேண்டும்.

எட்டாவது கட்டளை : இந்தக் கட்டளை நம்முடைய சம்பத்தோடும், மற்றவர்களுடைய சம்பத்தோடும் தொடர்புடையது. இந்தக் கட்டளையில் நம்முடைய ஐசுவரியம், ஆஸ்தி, அதுபோலவே பிறருடைய ஐசுவரியம், ஆஸ்தி ஆகியவற்றைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. "களவு செய்யாதிருப்பாயாக" (யாத் 20:15) என்பது எட்டாவது கட்டளையாகும்.

நம்மிடத்திலுள்ள ஐசுவரியத்தை நாம் பாவமான காரியங்களுக்கு செலவு பண்ணக்கூடாது. அவ்வாறு செலவு பண்ணுவது நம்மிடத்திலுள்ள ஐசுவரியத்தை நாமே களவு செய்வதற்கு சமம். நாம் பாவமான காரியங்களில் ஈடுபட்டு நம்முடைய ஆஸ்திகளை தொலைத்துவிடக்கூடாது. கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் வசதிகளையும், வாய்ப்புக்களையும் பரிசுத்தமாக பயன்படுத்தவேண்டும்.

நாம் மற்றவர்களுடைய ஐசுவரியங்களையும் களவு செய்யக்கூடாது. பிறருடைய எல்லைக்குறியை அநியாயமாக மாற்றிப்போடக்கூடாது. மற்றவர்களுடைய உரிமைகளில் தேவையில்லாமல் தலையிடக்கூடாது. மற்றவர்களுடைய பொருள்களையும், அவர்களுடைய நிலங்களையும், அவர்களுடைய வீடுகளையும் அநியாயமாக அபகரித்துக் கொள்ளக்கூடாது.

நாம் பிறரிடத்தில் கடன் வாங்கியிருந்தால் அதை முறைப்படி திரும்ப செலுத்தவேண்டும். கடன் தொகையை திரும்ப செலுத்தாமல், கடன்கொடுத்தவனை ஏமாற்றுவது பாவம். அது அவனுடைய பொருளை களவு செய்வதற்கு சமம். அதுபோலவே வீட்டின் சொந்தக்காரருக்கு வாடகை கொடுக்காமலேயே அதில் குடியிருப்பது, நம்மிடத்தில் வேலை செய்கிற வேலையாட்களுக்கு சம்பளம் கொடுக்காமலேயே வேலை வாங்கி அவர்களை வஞ்சிப்பது ஆகியவையெல்லாமே களவு செய்வதற்கு சமமான பாவம்.

ஒரு சிலர் அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டிய வரிப்பணத்தை செலுத்தாமல், களவு செய்கிறார்கள். ராயனுக்குரியதை ராயனுக்கும், கர்த்தருக்குரியதை கர்த்தருக்கும் செலுத்தவேண்டும். விசுவாசிகளில் சிலர் கர்த்தருக்கு கொடுக்க வேண்டிய காணிக்கைகளை கொடுக்காமல், தாங்களே வைத்துக்கொள்கிறார்கள். இதுவும் கர்த்தருடைய பார்வையில் களவு செய்கிற காரியமாயிருக்கிறது.

ஒன்பதாவது கட்டளை : நாம் நம்முடைய நற்பெயரையும், மற்றவர்களுடைய நற்பெயரையும் கெடுத்துப்போடக்கூடாது. "பிறனுக்கு விரோதமாக பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக" (யாத் 20:16) என்பது ஒன்பதாவது கட்டளையாகும்.

மற்றவர்களுக்கு விரோதமாக துரோகமான வார்த்தைகளைப் பேசுவது, அவர்களுக்கு விரோதமாக தூஷண வார்த்தைகளைப் பேசுவது, பொய்சொல்லுவது, மற்றவர்களை ஏமாற்றுவதற்காக கட்டுக்கதைகளை சொல்லுவது, பிறரை வஞ்சிப்பது ஆகியவையெல்லாமே இந்தக் கட்டளையின் பிரகாரம் தடைபண்ணப்பட்டிருக்கிறது.

மற்றவர்களுடைய நல்ல பெயரை கெடுக்கும் வண்ணமாக அல்லது களங்கப்படுத்தும் வண்ணமாக, அவர்களுக்கு விரோதமாக அநியாயமான காரியங்களை தூஷணமாய்ப் பேசுவது பாவமாகும்.

ஒரு சிலர் பிறருக்கு விரோதமாக பொய்ச்சாட்சி சொல்லுவார்கள். தங்களுக்கு ஒரு காரியத்தைப்பற்றி தெரியாவிட்டாலும், அதைப்பற்றி தங்களுக்கு நிச்சயமாய் தெரிந்திருப்பதுபோல பேசுவார்கள். சில வேளைகளில் இவர்களுக்கு ஒரு காரியத்தைப்பற்றி நன்றாய்த் தெரிந்திருக்கும். ஆனாலும் இவர்கள் தங்களுக்கு தெரிந்த காரியத்தை மூடி மறைத்துவிட்டு, தங்களுக்கு அதுபற்றி தெரியாது என்று சாதிப்பார்கள்.

ஒரு சிலர் மற்றவர்களுக்கு விரோதமாக புரணி பேசுவார்கள். அவர்களைப்பற்றிய கட்டுக்கதைகளை திருப்பி சொல்லுவார்கள். தங்களால் மற்றவர்களுக்கு எப்படிப்பட்ட பாதிப்பு வரும் என்பதை யோசித்துப் பார்க்காமல், பிறர்மீது பொய்யான குற்றச்சாட்டுக்களையும், அவதூறான வார்த்தைகளையும் பேசுவார்கள். பிறர்மீது கட்டுக்கதைகளையும், அவதூறான வார்த்தைகளையும் பேசுகிறவர்களுக்கு சமுதாயத்தில் மதிப்பு இருக்காது. இவர்கள் மற்றவர்களுடைய மதிப்பையும் சேதப்படுத்துவார்கள்.

பத்தாவது கட்டளை : பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்பது பத்தாவது கட்டளையாகும். மற்றவர்களுக்கு தீங்கு உண்டாக்கக்கூடிய எந்தக் காரியத்தையும் நாம் பேசவும் கூடாது, செய்யவும் கூடாது. மற்றவர்களுக்கு விரோதமாக கிரியை செய்வது மாத்திரமல்ல, நம்முடைய மனதிலும் மற்றவர்களுக்கு விரோதமாக எந்தத் தீமையான எண்ணமும் ஏற்படக்கூடாது.

கர்த்தர் தம்முடைய பத்தாவது கட்டளையில், "பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக" (யாத் 20:17) என்று சொல்லுகிறார்.

நாம் பிறருடைய பொருட்கள்மீது ஆசைப்படக்கூடாது. கர்த்தர் அப்போஸ்தலர் பவுலை சந்தித்தபோது, பவுலின் கண்களிலிருந்து செதில்கள் கீழே விழுந்தது. இதனால் அவருடைய பார்வை பரிசுத்தமாயிற்று.

நம்முடைய பார்வை பாவம் நிரம்பியதாயிருக்கும்போது, நம்முடைய சிந்தனைகளும் பாவம் நிரம்பியதாயிருக்கும். பாவமான சிந்தனைகள், பாவமான வார்த்தைகளாகவும், பாவமான கிரியைகளாகவும் வெளிப்படும். மனதின் ஆசையே எல்லா பாவங்களுக்கும் ஆதரமாயிருக்கிறது. ஆகையினால் "பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக" என்று கர்த்தர் திட்டமாக சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஏற்கெனவே சொன்ன பத்துக்கட்டளைகள் யாத்திராகமம் 20-ஆவது அதிகாரத்தில் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது சொல்லப்பட்டிருக்கும் பத்துக்கட்டளைகளுக்கும், ஏற்கெனவே சொன்ன பத்துக்கட்டளைகளுக்கும் வித்தியாசம் எதுவுமில்லை.

முதல் மூன்று கட்டளைகளும், யாத்திராகமம் 20-ஆவது அதிகாரத்தில் சொல்லப்பட்டிருப்பது போலவே, இந்த வசனப்பகுதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

"உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள உண்டாயிருக்கவேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சுரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்" *(உபா 5:6-8)*

"என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்" என்பது உபா 4:44-45 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள், பிரமாணங்கள், சாட்சிகள், நியமங்கள் ஆகியவற்றின் ஆரம்பமாகும். உபா 5:1 ஆவது வசனத்திலும் கட்டளைகளையும், நியாயங்களையும் பற்றி கூறப்பட்டிருக்கிறது. *(உபா 5:10,29,31; யாத் 34:28)*

"நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்து பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன். என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ்செய்கிறவராயிருக்கிறேன்" *(உபா 5:9,10)*

உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல்விடார் *(உபா 5:11)*

"ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிப்பாயாக" என்பது நான்காவது கட்டளையாகும். இப்போது சொல்லப்பட்டிருக்கும் பத்துக்கட்டளைகளில், நான்காவது கட்டளைக்கு அதிகமான விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பத்துக்கட்டளைகள் முதலாவது சொல்லப்பட்டபோது, கர்த்தருடைய கிரியைகள் இந்த உலகத்தை சிருஷ்டித்ததிலிருந்து ஆரம்பமாயிற்று. இப்போதோ கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்த நாளிலிருந்து, சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருந்தார்கள். அப்போது அவர்களுடைய தேவனாகிய கர்த்தர், அவர்களை அவ்விடத்திலிருந்து, தம்முடைய வல்லமையுள்ள கரத்தினாலும், ஓங்கிய புயத்தினாலும் புறப்படப்பண்ணினார் *(உபா 5:15)*.

எகிப்து தேசத்தில் இஸ்ரவேல் புத்திரர்கள் ஓய்வில்லாமல் இருந்தார்கள். கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து வல்லமையுள்ள கரத்தினாலும், ஓங்கிய புயத்தினாலும் புறப்படப்பண்ணினார். ஓய்வுநாளில் இதை அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நம்மை பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு இரட்சித்திருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டது, இயேசுகிறிஸ்துவின் மூலமாய் மனுபுத்திரர் தங்கள் பாவங்களின் அடிமைத்தனத்திலிருந்து இரட்சிக்கப்படுவதற்கு அடையாளமாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் ஓய்வுநாளிலே இளைப்பாறவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். ". உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டபடியே, ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிப்பாயாக. ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக. ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் எருதானாலும், உன் கழுதையானாலும், உனக்கு இருக்கிற மற்றெந்த மிருகஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும் யாதொரு வேலையும் செய்யவேண்டாம்; நீ இளைப்பாறுவதுபோல உன் வேலைக்காரனும் உன் வேலைக்காரியும் இளைப்பாறவேண்டும்" (உபா 5:12-14).

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம், ஆவிக்குரிய ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும். ஓய்வுநாளில் பரிசுத்த சபை கூடுதல் இருக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தில் அடிமைகளாக இருந்தார்கள் என்பதையும், அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து விடுதலைபண்ணி புறப்படப்பண்ணினார் என்பதையும் இஸ்ரவேல் புத்திரர் நினைவுகூரவேண்டும். ஆகையினால் ஓய்வுநாளிலே இஸ்ரவேல் புத்திரர் மாத்திரம் வேலை செய்யாமல் இளைப்பாறினால் போதுமானதாயிருக்காது. அவர்களுடைய வேலைக்காரரும், வேலைக்காரிகளும் ஓய்வுநாளிலே யாதொரு வேலையும் செய்யாமல் இளைப்பாறவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும். கர்த்தர் தங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து, தம்முடைய வல்லமையுள்ள கரத்தினாலும், ஓங்கிய புயத்தினாலும் விடுவித்ததை இஸ்ரவேல் ஜனத்தார் ஓய்வுநாளிலே பயபக்தியோடு நினைவுகூரவேண்டும். அந்நாளிலே அவர்கள், கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மையான காரியங்களையெல்லாம் நினைத்துப் பார்க்கவேண்டும்.

இயேசுகிறிஸ்துவினுடைய உயித்தெழுதலினால், விசுவாசிகளாகிய நாம் தேவனுடைய பிள்ளைகள் என்னும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். நம்முடைய தேவனாகிய கர்த்தரை, "அப்பா பிதாவே" என்று அழைக்கும் புத்திர சுவீகார சிலாக்கியம் நமக்கு கிடைத்திருக்கிறது. தம்முடைய பிள்ளைகளாகிய நம்மை, கர்த்தர் ஓங்கிய புயத்தினாலும், வல்லமையுள்ள கரத்தினாலும் பாதுகாத்து வழிநடத்துகிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாமும், வாரத்தின் முதலாம் நாளை, ஓய்வுநாளாக பரிசுத்தப்படுத்தி ஆசரிக்கிறோம். இந்நாளிலே விசுவாசிகள் சபையாராக கூடிவந்து, கர்த்தருடைய வல்லமையுள்ள கிரியைகளையும், அவருடைய கிருபைகளையும் பயபக்தியோடு நினைவுகூருகிறோம்.

கர்த்தர் தம்முடைய ஐந்தாம் கட்டளையாக, " உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கும், நீ நன்றாயிருப்பதற்கும், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டபடியே, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக" (உபா 5:16) என்று இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

ஐந்தாவது கட்டளையில், "நீ நன்றாயிருப்பதற்கும்" என்னும் வாக்கியம் புதிதாய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் இந்தக் கட்டளையை ஏற்கெனவே சொன்னபோது, "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக" (யாத் 20:12) என்று மாத்திரமே சொன்னார்.

"உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும். உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது" (எபே 6:3).

கடைசி ஐந்து கட்டளைகளும், ஒரே கட்டளையாக சேர்க்கப்பட்டிருக்கிறது. "கொலை செய்யாதிருப்பாயாக. விபசாரம் செய்யாதிருப்பாயாக. களவு செய்யாதிருப்பாயாக. பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக. பிறனுடைய மனைவியை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய வீட்டையும், அவனுடைய நிலத்தையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக" (உபா 5:17-21) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யாத்திராகமம் 20-ஆவது அதிகாரத்தில், இந்தக் கட்டளைகள் ஐந்தும் தனித்தனியாக சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய கட்டளைகள் எல்லாமே தனித்தனியாக பிரிந்திராமல், ஒன்றாய்ச் சேர்ந்திருக்கிறது.

"இந்த வார்த்தைகளைக் கர்த்தர் மலையிலே அக்கினியிலும் மேகத்திலும் காரிருளிலும் இருந்து உங்கள் சபையார் எல்லாரோடும் மகா சத்தத்துடனே சொன்னார்; அவைகளோடு ஒன்றும் கூட்டாமல், அவைகளை இரண்டு கற்பலகைகளில் எழுதி, என்னிடத்தில் கொடுத்தார்" (உபா 5:22) என்று மோசே சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரின் ஜனத்தொகை சுமார் 60 இலட்சம் பேர். இவர்கள் எல்லோருக்கும் கேட்கும்படியாகப் பேசுவதே மிகப்பெரிய அற்புதம். சீனாய் மலையில் அக்கினியின் நடுவிலும், மேகத்தின் நடுவிலும், காரிருளின் நடுவிலும் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு பேசினார்.

பத்துக் கற்பனைகளை மட்டுமே இஸ்ரவேல் புத்திரர் கேட்டார்கள். மற்றவற்றை கர்த்தர் மோசேயின் மூலமாகப் பேசினார். (உபா 5:22-31; உபா 4:10-14). பத்துக் கற்பனைகளைக் கர்த்தர் இரண்டு கற்பலகைகளில் எழுதினார் (உபா 5:22; யாத் 24:12) மோசே அவற்றை ஒரு புஸ்தகத்தில் எழுதினார். (உபா 4:44-5:21; யாத் 20:1-24:8). மோசே சீனாய் மலையில் நாற்பது நாட்களுக்கு உபவாசம் இருந்த பின்பு, கர்த்தர் அந்தக் கற்பலகைகளை மோசேயிடம் கொடுத்தார். இஸ்ரவேல் புத்திரரின் பாவத்தைப் பார்ப்பதற்காகக் கர்த்தர் மோசேயைச் சீனாய் மலையிலிருந்து கீழே அனுப்பினார் (யாத் 24:13-18; யாத் 31:18; யாத் 32:1-19).

உபாகமம் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கும் கட்டளைகளாவன :

1. நான் இன்று உங்கள் காதுகள் கேட்கச் சொல்லும் கட்டளைகளையும் நியாயங்களையும் கேளுங்கள் (உபா 5:1).

2. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள உண்டாயிருக்கவேண்டாம் (உபா 5:7).

3. வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சுரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம் (உபா 5:8).

4. நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம் (உபா 5:9).

5. உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக (உபா 5:11).

6. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டபடியே, ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிப்பாயாக (உபா 5:12).

7. ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக. ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள் (உபா 5:13-14).

8. நீ எகிப்துதேசத்தில் அடிமையாயிருந்தாய் என்றும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னை அவ்விடத்திலிருந்து வல்லமையுள்ள கரத்தினாலும் ஓங்கிய புயத்தினாலும் புறப்படப்பண்ணினார் என்றும் நினைப்பாயாக (உபா 5:15).

9. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டபடியே, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக (உபா 5:16).

10. கொலை செய்யாதிருப்பாயாக (உபா 5:17).

11. விபசாரம் செய்யாதிருப்பாயாக (உபா 5:18).

12. களவு செய்யாதிருப்பாயாக (உபா 5:19).

13. பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக (உபா 5:20).

14. பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக (உபா 5:21).

15. உங்கள் கூடாரங்களுக்குத் திரும்பிப்போங்கள் என்று அவர்களுக்குச் சொல் (உபா 5:30).

16. நீயோ இங்கே என்னிடத்தில் நில்; நான் அவர்களுக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் தேசத்தில் அவர்கள் செய்யும்படி நீ அவர்களுக்குப் போதிக்கவேண்டிய சகல கற்பனைகளையும் கட்டளைகளையும் நியாயங்களையும் உனக்குச் சொல்லுவேன் (உபா 5:31).

17. உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கற்பித்தபடியே செய்ய சாவதானமாயிருங்கள்; வலதுபுறம் இடதுபுறம் சாயாதிருப்பீர்களாக (உபா 5:32).

18. உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு விதித்த வழிகளெல்லாவற்றிலும் நடக்கக் கடவீர்கள் (உபா 5:33).

ஜனங்கள் மோசேயிடம் சொன்ன விண்ணப்பம் உபா 5:23-27

உபா 5:23. மலை அக்கினியாய் எரிகையில் இருளின் நடுவிலிருந்து உண்டான சத்தத்தை நீங்கள் கேட்டபோது, கோத்திரத் தலைவரும் மூப்பருமாகிய நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வந்து:

உபா 5:24. இதோ, நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்குத் தம்முடைய மகிமையையும் தம்முடைய மகத்துவத்தையும் காண்பித்தார்; அக்கினியின் நடுவிலிருந்து உண்டான அவருடைய சத்தத்தையும் கேட்டோம்; தேவன் மனுஷனோடே பேசியும், அவன் உயிரோடிருக்கிறதை இந்நாளிலே கண்டோம்.

உபா 5:25. இப்பொழுது நாங்கள் சாவானேன்? இந்தப் பெரிய அக்கினி எங்களைப் பட்சிக்குமே; நாங்கள் இன்னும் நம்முடைய தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கேட்போமாகில் சாவோம்.

உபா 5:26. நாங்கள் கேட்டதுபோல, அக்கினியின் நடுவிலிருந்து பேசுகிற ஜீவனுள்ள தேவனுடைய சத்தத்தை மாம்சமானவர்களில் யாராவது கேட்டு உயிரோடிருந்தது உண்டோ?

உபா 5:27. நீரே சமீபித்துப்போய், நம்முடைய தேவனாகிய கர்த்தர் சொல்வதையெல்லாம் கேட்டு, நம்முடைய தேவனாகிய கர்த்தர் சொல்வதையெல்லாம் நீரே எங்களுக்குச் சொல்லவேண்டும்; நாங்கள் கேட்டு, அதின்படியே செய்வோம் என்றீர்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய வார்த்தைகளை மலையிலே அக்கினியிலும், மேகத்திலும், காரிருளிலும் இருந்து சொல்லுகிறார். அந்த மலை அக்கினியாய் எரிகையில் இருளின் நடுவிலிருந்து உண்டான சத்தத்தை அவர்கள் கேட்டபோது, அவர்கள் எல்லோரும் பயப்படுகிறார்கள் (உபா 5:23).

யாத் 20:18-21 ஆகிய வசனங்களில் சுருக்கமாக விவரிக்கப்பட்டிருக்கும் சம்பவம் உபா 5:23-33 ஆகிய வசனங்களில் விரிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது. மோசே தேவனுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் நடுவில் மத்தியஸ்தராக இருக்கிறார். தேவன் இஸ்ரவேல் புத்திரரின் விண்ணப்பத்தை அங்கிகரிக்கிறார். (உபா 5:28) இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களினால் கர்த்தரோடு அவர்களால் நேரடியாக ஐக்கியமாக இருக்க முடியாது.

மலை அக்கினியாய் எரிகையில் இருளில் நடுவிலிருந்து உண்டான சத்தத்தை இஸ்ரவேல் புத்திரர் கேட்ட போது, அவர்கள் கண்ட காரியங்களாவன : 1. தேவனுடைய மகிமை, 2. தேவனுடைய மகத்துவம், 3. தேவனுடைய சத்தம், 4. தேவன் மனுஷரோடே பேசியும் அவர்கள் உயிரோடிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரருடைய கோத்திரத் தலைவரும் மூப்பருமாகிய அவர்கள் எல்லாரும் மோசேயினிடத்தில் வந்து, "இதோ, நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்குத் தம்முடைய மகிமையையும் தம்முடைய மகத்துவத்தையும் காண்பித்தார்; அக்கினியின் நடுவிலிருந்து உண்டான அவருடைய சத்தத்தையும் கேட்டோம்; தேவன் மனுஷனோடே பேசியும், அவன் உயிரோடிருக்கிறதை இந்நாளிலே கண்டோம்" (உபா 5:24) என்று சொல்லுகிறாகள்.

அவர்கள் மேலும் மோசேயை நோக்கி, "இப்பொழுது நாங்கள் சாவானேன்? இந்தப் பெரிய அக்கினி எங்களைப் பட்சிக்குமே; நாங்கள் இன்னும் நம்முடைய தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கேட்போமாகில் சாவோம்" (உபா 5:25) என்றும் சொல்லுகிறார்கள்.

"கர்த்தரின் சத்தத்தைக் கேட்போமாகில் சாவோம்" என்பது புறஜாதி மார்க்கத்தின் நம்பிக்கை. இதற்கு வேதாகமத்தில் ஆதாரம் எதுவுமில்லை.

கர்த்தருக்கும் தங்களுக்கும் நடுவிலே மோசே நிற்கவேண்டும் என்றும், கர்த்தர் மோசேயோடு பேசவேண்டும் என்றும், கர்த்தர் தனக்கு சொன்னதை மோசே தங்களுக்கு சொல்லவேண்டும் என்றும் இஸ்ரவேல் புத்திரர் மோசேயினிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் மோசேயை நோக்கி, "நாங்கள் கேட்டதுபோல, அக்கினியின் நடுவிலிருந்து பேசுகிற ஜீவனுள்ள தேவனுடைய சத்தத்தை மாம்சமானவர்களில் யாராவது கேட்டு உயிரோடிருந்தது உண்டோ? நீரே சமீபித்துப்போய், நம்முடைய தேவனாகிய கர்த்தர் சொல்வதையெல்லாம் கேட்டு, நம்முடைய தேவனாகிய கர்த்தர் சொல்வதையெல்லாம் நீரே எங்களுக்குச் சொல்லவேண்டும்; நாங்கள் கேட்டு, அதின்படியே செய்வோம்" (உபா 5:26,27) என்று சொல்லுகிறார்கள்.

"நாங்கள் கேட்டு, அதின்படியே செய்வோம்" என்று மூன்று வெவ்வேறு சம்பவங்களில் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய உடன்படிக்கைக்குக் கீழ்ப்படிவதாக வாக்குப்பண்ணுகிறார்கள். (உபா 5:27; யாத் 19:8; யாத் 24:3,7).

கர்த்தர் தம்முடைய பத்து கட்டளைகளை சொல்லும்போது, ஜனங்கள் எல்லோரும் இடிமுழக்கங்களையும், எக்காள சத்தத்தையும், மலைபுகைகிறதையும் காண்கிறார்கள். கர்த்தருடைய மகிமை அங்கு வெளிப்படுகிறது. ஜனங்கள் பின்வாங்கி தூரத்திலே நிற்கிறார்கள். கர்த்தருடைய மகிமைக்கு முன்பாக, இஸ்ரவேல் ஜனங்கள் தங்களை வெகுவாய்த் தாழ்த்துகிறார்கள்.

சுவிசேஷத்தின் மூலமாய் மனுஷருடைய ஆத்துமாக்களுக்கு ஆறுதல் கிடைக்கும். அது தெய்வீக ஆறுதல். ஜனங்கள் சுவிசேஷத்தின் மூலமாய் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு, கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய மகிமையையும் மகத்துவத்தையும் வெளிப்படுத்தி, அவர்களை ஆயத்தம்பண்ணுகிறார்.

மோசேயின் நியாயப்பிரமாணம் மனுஷரை தாழ்த்துகிறது. இயேசுகிறிஸ்துவின் மூலமாக வரும் கிருபையும் சத்தியமுமோ, மனுஷரை கிருபாசனத்தண்டையில் தைரியமாய்க் கிட்டிசேரப்பண்ணுகிறது. கர்த்தர் தம்முடைய பத்துக்கட்டளைகளை வெளிப்படுத்தும்போதோ, ஜனங்கள் அதைக் கண்டு, பின்வாங்கி தூரத்திலே நிற்கிறார்கள் (யாத் 20:18).

நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட போது இடிமுழக்கங்களும், எக்காளச் சத்தமும் தொனிக்கிறது. ஜனங்கள் மின்னல்களையும், மலை புகைகிறதையும் காண்கிறார்கள். இதன் மூலமாகத் தேவனுடைய பரிசுத்தமும், அவருடைய பிரமாணத்தின் பரிசுத்தமும் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு வலியுறுத்தப்படுகிறது. ஜனங்கள் இதைக் கண்டும், கேட்டும் பயப்படுகிறார்கள்.

இதற்கு முன்பு இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தர் குறித்திருந்த எல்லையைக் கடந்து, அவரிடத்தில் வர முயற்சி பண்ணினார்கள் (யாத் 19:17-25). ஆனால் இப்போதோ ஜனங்கள் பின்வாங்கிப்போய், தூரத்திலே நிற்கிறார்கள்.

இந்தக் காட்சி மோசே "நான் மிகவும் பயந்து நடுங்குகிறேன்" என்று சொல்லத்தக்கதாக அவ்வளவு பயங்கரமாயிருந்தது. (எபி 12:21). தேவனுக்கும், மனுஷருக்கும் மத்தியில் ஒரு மத்தியஸ்தர் தேவை என்பதை இந்த நிகழ்ச்சி வலியுறுத்துகிறது. (1தீமோ 2:4-5).

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் இடிமுழக்கங்களையும், மின்னல்களையும், எக்காள சத்தத்தையும், மலைபுகைகிறதையும் கண்டு மிகவும் பயப்படுகிறார்கள். அவர்கள் பயத்தோடும், மிகுந்த நடுக்கத்தோடும், மோசேயை நோக்கி, "நீர் எங்களோடே பேசும், நாங்கள் கேட்போம்; தேவன் எங்களோடே பேசாதிருப்பாராக, பேசினால் நாங்கள் செத்துப்போவோம்" (யாத் 20:19) என்று சொல்லுகிறார்கள்.

"எக்காளமுழக்கத்தினிடத்திற்கும், வார்த்தைகளுடைய சத்தத்தினிடத்திற்கும் நீங்கள் வந்து சேரவில்லை; அந்தச் சத்தத்தைக் கேட்டவர்கள் பின்னும் தங்களுக்கு வார்த்தை சொல்லப்படாதபடிக்கு வேண்டிக்கொண்டார்கள்" (எபி 12:19).

இஸ்ரவேல் புத்திரர் மிகுந்த பயத்தினாலே தேவன் தங்களோடு பேசக்கூடாது என்று சொல்லுகிறார்கள். ஆனாலும் மோசே தங்களோடு பேசவேண்டும் என்றும் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இக்காலத்திலும் விசுவாசிகளில் சிலர் பரிசுத்த ஆவியானவர் தங்களோடே நேரடியாகப் பேசக்கூடாது என்றும், அவர் தங்களுக்கு பிடித்தமான ஊழியக்காரர் மூலமாக பேசவேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள்.

கர்த்தரின் பிரதியுத்தரம் உபா 5:28-33

உபா 5:28. நீங்கள் என்னோடே பேசுகையில், கர்த்தர் உங்கள் வார்த்தைகளைக் கேட்டு, கர்த்தர் என்னை நோக்கி: இந்த ஜனங்கள் உன்னோடே சொன்ன வார்த்தைகளைக் கேட்டேன்; அவர்கள் சொன்னது எல்லாம் நன்றாய்ச் சொன்னார்கள்.

உபா 5:29. அவர்களும் அவர்கள் பிள்ளைகளும் என்றென்றைக்கும் நன்றாயிருக்கும்படி, அவர்கள் எந்நாளும் எனக்குப் பயந்து, என் கற்பனைகளையெல்லாம் கைக்கொள்வதற்கேற்ற இருதயம் அவர்களுக்கு இருந்தால் நலமாயிருக்கும்.

உபா 5:30. நீ போய்: உங்கள் கூடாரங்களுக்குத் திரும்பிப்போங்கள் என்று அவர்களுக்குச் சொல்.

உபா 5:31. நீயோ இங்கே என்னிடத்தில் நில்; நான் அவர்களுக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் தேசத்தில் அவர்கள் செய்யும்படி நீ அவர்களுக்குப் போதிக்கவேண்டிய சகல கற்பனைகளையும் கட்டளைகளையும் நியாயங்களையும் உனக்குச் சொல்லுவேன் என்றார்.

உபா 5:32. உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கற்பித்தபடியே செய்ய சாவதானமாயிருங்கள்; வலதுபுறம் இடதுபுறம் சாயாதிருப்பீர்களாக.

உபா 5:33. நீங்கள் சுதந்தரிக்கும் தேசத்திலே பிழைத்து சுகித்து நீடித்திருக்கும்படி, உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு விதித்த வழிகளெல்லாவற்றிலும் நடக்கக் கடவீர்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தார் சொன்ன வார்த்தைகளை கவனமாய்க் கேட்டு, அவர்களுடைய விண்ணப்பத்தை அங்கீகரிக்கிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "இந்த ஜனங்கள் உன்னோடே சொன்ன வார்த்தைகளைக் கேட்டேன்; அவர்கள் சொன்னது எல்லாம் நன்றாய்ச் சொன்னார்கள்" (உபா 5:28) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கேட்டுக்கொண்ட பிரகாரம், தேவனாகிய கர்த்தர் சொல்லுவதையெல்லாம், மோசே அவர்களுக்கு சொல்லுவார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிற வார்த்தைகளை, இப்போது மோசேயின் மூலமாக சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "அவர்களும் அவர்கள் பிள்ளைகளும் என்றென்றைக்கும் நன்றாயிருக்கும்படி, அவர்கள் எந்நாளும் எனக்குப் பயந்து, என் கற்பனைகளையெல்லாம் கைக்கொள்வதற்கேற்ற இருதயம் அவர்களுக்கு இருந்தால் நலமாயிருக்கும். நீ போய்: உங்கள் கூடாரங்களுக்குத் திரும்பிப்போங்கள் என்று அவர்களுக்குச் சொல்" (உபா 5:29,30) என்று சொல்லுகிறார்.

"என் கற்பனைகளையெல்லாம் கைக்கொள்வதற்கேற்ற இருதயம் அவர்களுக்கு இருந்தால் நலமாயிருக்கும்" என்று கர்த்தர் தம்முடைய இருதயத்தின் வாஞ்சையை வெளிப்படுத்துகிறார். ஆனால் கர்த்தருடைய இந்த வாஞ்சை நிறைவேறவில்லை. இது ஆயிரம் வருஷ அரசாட்சியிலும், புதிய பூமியிலும் நித்திய காலமாக நிறைவேறும். (தானி 7:27; வெளி 21:3-7; வெளி 22:4-5). இது போன்ற இருதயம் மனுஷருக்கு இருக்கும் போது, அது அவர்களுக்கு நித்திய ஆசீர்வாதத்தை வருவிக்கும். (மாற்கு 7:19-21).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு மோசேயின் மூலமாக பேசியதுபோல, இக்காலத்திலும் அவர் ஜனங்கள் மத்தியிலே தீர்க்கதரிசிகள் மூலமாகவும், அப்போஸ்தலர்கள் மூலமாகவும், சுவிசேஷகர்கள் மூலமாகவும் பேசுகிறார். நாம் கர்த்தருடைய ஊழியக்காரரின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவேண்டும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு செவிகொடுக்காதவர்கள், கர்த்தரே தங்களிடத்தில் நேரடியாக வந்து பேசினாலும், அவருக்கு செவிகொடுக்கமாட்டார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தி, கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்கக்கூடாது என்று தீர்மானம்பண்ணி, தங்களுடைய செவிகளை அடைத்துக்கொள்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கூடாரங்களுக்கு திரும்பிப்போக வேண்டுமென்று மோசே அவர்களுக்கு சொல்லவேண்டும். மோசே அவர்களோடுகூட தன்னுடைய கூடாரத்திற்கு திரும்பிப்போய்விடக்கூடாது. கர்த்தர் மோசேயை நோக்கி, "நீயோ இங்கே என்னிடத்தில் நில்" (உபா 5:31) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயோடு தனிப்பட்ட விதத்தில் பேசப்போகிறார். மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்கு சொல்ல வேண்டிய கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயங்களையும் கர்த்தர் அவருக்கு சொல்லப்போகிறார். அதற்காக, "நீயோ இங்கே என்னிடத்தில் நில்" என்று கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நான் அவர்களுக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் தேசத்தில் அவர்கள் செய்யும்படி நீ அவர்களுக்குப் போதிக்கவேண்டிய சகல கற்பனைகளையும் கட்டளைகளையும் நியாயங்களையும் உனக்குச் சொல்லுவேன்" (உபா 5:31) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் சபையார், கர்த்தர் தங்களுக்கு சொன்ன கட்டளைகளுக்கெல்லாம் கீழ்ப்படியவேண்டும். மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கற்பித்தபடியே செய்ய சாவதானமாயிருங்கள்; வலதுபுறம் இடதுபுறம் சாயாதிருப்பீர்களாக" (உபா 5:32) என்றும்,

"நீங்கள் சுதந்தரிக்கும் தேசத்திலே பிழைத்து சுகித்து நீடித்திருக்கும்படி, உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு விதித்த வழிகளெல்லாவற்றிலும் நடக்கக் கடவீர்கள்" (உபா 5:33) என்றும் சொல்லுகிறார்.

தங்கள் தேவனாகிய கர்த்தர் தங்களுக்கு விதித்த வழிகள் எல்லாவற்றிலும் இஸ்ரவேல் புத்திரர் நடக்கும்போது, அவர்களுக்கு ஒரு சில ஆசீர்வாதங்கள் வரும். அவையாவன :

1. கர்த்தருடைய இரக்கத்தைப் பெறுவார்கள். *(உபா 5:10).*

2. அவர்களுடைய ஆயுசுநாட்கள் நீடித்திருக்கும். *(உபா 5:16,33; உபா 6:2).*

3. அவர்கள் நன்றாய் இருப்பார்கள். *(உபா 5:16,33; உபா 6:3,18)*

4. அவர்களுடைய பிள்ளைகளும் என்றென்றைக்கும் நன்றாய் இருப்பார்கள். *(உபா 5:29; உபா 6:2).*

5. பிழைத்திருப்பார்கள். *(உபா 5:33; உபா 6:24).*

6. சுகித்து நீடித்திருப்பார்கள். *(உபா 6:3).*

7. விருத்தியடைவார்கள். *(உபா 6:18).*

8. சத்துருக்களைத் துரத்திவிடுவார்கள். *(உபா 6:19).*

9. அவர்களுக்கு நல்லது இருக்கும். *(உபா 6:24).*

10. அவர்களுக்கு நீதியாயிருக்கும். *(உபா 6:25).*

6 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, அங்கே அவர்கள் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியவேண்டும் என்று மோசே இந்த அதிகாரத்திலும் அவர்களுக்கு தொடர்ந்து சொல்லுகிறார். உபாகமம் 4-ஆவது அதிகாரத்தில் சொல்லப்பட்டதுபோல, இந்த அதிகாரத்திலும், மோசேயின் போதகம் சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியவேண்டும் (உபா 6:1-3). அவர்கள் எதற்கெல்லாம் கீழ்ப்படியவேண்டும் என்பதை மோசே இந்த வசனப்பகுதியில் தெளிவுபடுத்துகிறார். இஸ்ரவேல் சபையார் சத்தியத்தை விசுவாசிக்கவேண்டும். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் என்பதே மெய்யான சத்தியம் (உபா 6:4).

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில், தங்கள் முழுஇருதயத்தோடும் தங்கள் முழுஆத்துமாவோடும், தங்கள் முழுபலத்தோடும் அன்புகூரவேண்டும் (உபா 6:5).

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய வார்த்தைகளை கட்டளையாகச் சொல்லுகிறார். இந்த வார்த்தைகள் அவர்களுடைய இருதயத்தில் இருக்கவேண்டும் (உபா 6:6-9).

கர்த்தருடைய கிருபையினால் இஸ்ரவேல் புத்திரர் அதிகமாய் ஆசீர்வதிக்கப்படுவார்கள். அவர்கள் செழித்திருப்பார்கள். செழிப்பும் திரட்சியும் தங்களை அழித்துப்போடாதவாறு, இஸ்ரவேல் புத்திரர் மிகவும் எச்சரிப்பாயிருக்கவேண்டும் (உபா 6:10-12).

இஸ்ரவேல் ஜனத்தார் அந்நிய தேவர்களைப் பின்பற்றக்கூடாது (உபா 6:14,15). அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு பயந்து அவருக்கே ஆராதனை செய்யவேண்டும். அவர்கள் கர்த்தரை பரீட்சை பார்க்கக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளை கைக்கொள்ளவேண்டும் (உபா 6:13,16-18).

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பிள்ளைகளுக்கும், கர்த்தருடைய கட்டளைகளையும் நியாயங்களையும் விளங்கப்பண்ணி போதிக்கவேண்டும் (உபா 6:20-25).

மோசேயின் போதகம்
உபா 6:1-3

உபா 6:1. நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம், நீயும் உன் குமாரனும் உன் குமாரத்தியும், நான் உனக்கு விதிக்கிற அவருடைய எல்லாக் கற்பனைகளையும் கட்டளைகளையும் கைக்கொள்ளுகிறதினாலே உன் வாழ்நாட்கள் நீடித்திருக்கும்படி,

உபா 6:2. நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசத்திலே கைக்கொள்வதற்காக, உங்களுக்குப் போதிக்கவேண்டும் என்று உங்கள் தேவனாகிய கர்த்தர் கற்பித்த கற்பனைகளும் கட்டளைகளும் நியாயங்களும் இவைகளே.

உபா 6:3. இஸ்ரவேலே, நீ நன்றாயிருப்பதற்கும், உன் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி, பாலும் தேனும் ஓடுகிற தேசத்தில் நீ மிகவும் விருத்தியடைவதற்கும், அவைகளுக்குச் செவி கொடுத்து, அவைகளின்படி செய்யச் சாவதானமாயிரு.

இஸ்ரவேல் புத்திரருக்கு போதிக்கவேண்டுமென்று, கர்த்தர் தனக்கு கற்பித்த கட்டளைகளையும், கற்பனைகளையும், நியாயங்களையும் பற்றி மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். கர்த்தர் தனக்கு கற்பித்ததை மாத்திரமே மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு போதிக்கிறார்.

மோசேயைப்போலவே, புதிய ஏற்பாட்டுக் காலத்து ஊழியக்காரர்களும், கர்த்தர் தங்களுக்கு கட்டளையிட்டதை மாத்திரம் ஜனங்களுக்கு போதிக்கவேண்டும். நாம் கர்த்தருடைய வார்த்தையில் எதையும் கூட்டவும் கூடாது, எதையும் குறைக்கவும் கூடாது.

"நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்" *(மத் 28:20).*

ஊழியக்காரர்கள் ஜனங்களுக்கு உபதேசம்பண்ணுவதற்கு ஒரு நோக்கமுண்டு. ஜனங்கள் கர்த்தருடைய கற்பனைகளையும், கட்டளைகளையும் கற்றுக்கொண்டு, அவற்றை கைக்கொள்ளவேண்டும். மோசே அதற்காகவே கர்த்தருடைய கட்டளைகளை இஸ்ரவேல் புத்திரருக்கு போதிக்கிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம், நீயும் உன் குமாரனும் உன் குமாரத்தியும், நான் உனக்கு விதிக்கிற அவருடைய எல்லாக் கற்பனைகளையும் கட்டளைகளையும் கைக்கொள்ளுகிறதினாலே உன் வாழ்நாட்கள் நீடித்திருக்கும்படி, நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசத்திலே கைக்கொள்வதற்காக, உங்களுக்குப் போதிக்கவேண்டும் என்று உங்கள் தேவனாகிய கர்த்தர் கற்பித்த கற்பனைகளும் கட்டளைகளும் நியாயங்களும் இவைகளே" *(உபா 6:1,2)* என்று சொல்லுகிறார்.

கர்த்தர் எப்பொழுதுமே மனிதனைத் தண்டிப்பதற்குக் கோபமாக இருப்பார், ஆகையினால் அவருக்குப் பயப்பட வேண்டும் என்னும் பொருளில் இந்த வாக்கியம் கூறப்படவில்லை. கர்த்தரிடத்தில் பயபக்தியுடன் இருக்க வேண்டும். அவர் நமது பிதாவாகிய தேவனாக இருப்பதினால், அவருக்குரிய கனத்தையும், மரியாதையையும், நாம் பணிவுடன் அவருக்குச் செலுத்த வேண்டும். கர்த்தர் இரக்கமுள்ளவர். கிருபையுள்ளவர். அதே வேளையில் அவர் நீதியானவர். கர்த்தரைப் பற்றி நினைக்கும்போது அவருடைய சுபாவங்களைப் பற்றியும் நாம் தியானிக்க வேண்டும். கர்த்தருக்குப் பயப்படும் பயமில்லாமல் அவரோடு நடப்பது இயலாத காரியம்.

கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் தங்களுடைய பிள்ளைகளையும், கர்த்தருக்குப் பயப்படும் பயத்தோடு வளர்ப்பார்கள். தங்களுடைய வார்த்தையிலும், செயலிலும் பரிசுத்தமாக ஜீவித்து, அவர்களுக்கு முன்மாதிரியாக இருப்பார்கள். *(2கொரி 7:1; எபே 6:4;பிலி 2:12; எபி 12:28).*

நம் வாழ்நாட்கள் நீடித்திருக்கும்படி நாம் செய்ய வேண்டிய காரியங்களாவன :

1. விக்கிரகாராதனையிலிருந்து விலகி ஜீவிக்க வேண்டும். *(உபா 4:25-26)*
2. கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும். *(உபா 4:40; உபா 6:2; உபா 11:8-9; உபா 32:46-47)*
3. பெற்றோரைக் கனம்பண்ண வேண்டும். *(உபா 5:16; எபே 6:2)*
4. கர்த்தருடைய வழிகளில் நடக்க வேண்டும். *(உபா 5:33)*
5. கர்த்தருக்குப் பயப்படவேண்டும். *(உபா 6:2; நீதி 10:27; பிர 8:13)*
6. தாழ்மையுடனும், கீழ்ப்படிதலுடனும் ஜீவிக்க வேண்டும். *(உபா 17:20)*
7. மிருகஜீவன்களிடமும் பரிவுடன் நடந்து கொள்ள வேண்டும். *(உபா 22:6-7)*
8. தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். *(உபா 30:18)*
9. ஞானமும், விவேகமும் உடையவர்களாய் இருக்க வேண்டும். *(நீதி 28:2)*
10. பேராசையை வெறுக்க வேண்டும். *(நீதி 28:16)*

எல்லாக் கற்பனைகளையும் கட்டளைகளையும் கைக்கொள்ளவேண்டும். கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து, அவைகளைக் கைக்கொள்ள வேண்டும். *(உபா 6:1,2)* இதனால் தீமையின்மீது வெறுப்பு உண்டாகும். நமக்கு ஆசீர்வாதங்கள் வரும்.

"உங்கள் தேவனாகிய கர்த்தர் கற்பித்த கற்பனைகளும் கட்டளைகளும் நியாயங்களும் இவைகளே" என்று மோசே சொல்லுகிறார். உபா 5 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கிற கற்பனைகளும், அதைத் தொடர்ந்து கூறப்பட்டிருக்கும் கற்பனைகளும் இதில் அடங்கும்.

இஸ்ரவேல் புத்திரர் யோர்தானைக் கடந்து கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க ஆயத்தமாயிருக்கிறார்கள். அவர்கள் அந்த தேசத்திலே விருத்தியடையவேண்டும். அவர்கள் அங்கே செழித்திருக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் வாசம்பண்ணும்போது, அவர்களுக்கு அங்கே கர்த்தருடைய கிருபையும், இரக்கமும், அநுக்கிரகமும், ஆசீர்வாதமும், பாதுகாப்பும் பராமரிப்பும் கிடைக்கவேண்டும். அதற்கான வழியை மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "இஸ்ரவேலே, நீ நன்றாயிருப்பதற்கும், உன் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி, பாலும் தேனும் ஓடுகிற தேசத்தில் நீ மிகவும் விருத்தியடைவதற்கும், அவைகளுக்குச் செவி கொடுத்து, அவைகளின்படி செய்யச் சாவதானமாயிரு" (உபா 5:3) என்று சொல்லுகிறார்.

விசுவாசமும் கீழ்ப்படிதலும் உபா 6:4-16

உபா 6:4. இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்.

உபா 6:5. நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக.

உபா 6:6. இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது.

உபா 6:7. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசி,

உபா 6:8. அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது.

உபா 6:9. அவைகளை உன் வீட்டு நிலைகளிலும், உன் வாசல்களிலும் எழுதுவாயாக.

உபா 6:10. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுப்பேன் என்று ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களாகிய உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தில் உன்னைப் பிரவேசிக்கப்பண்ணும்போதும், நீ கட்டாத வசதியான பெரிய பட்டணங்களையும்,

உபா 6:11. நீ நிரப்பாத சகல நல்ல வஸ்துக்களாலும் நிரம்பிய வீடுகளையும், நீ வெட்டாமல் வெட்டப்பட்டிருக்கிற துரவுகளையும், நீ நடாத திராட்சத்தோட்டங்களையும் ஒலிவத்தோப்புகளையும், அவர் உனக்குக் கொடுப்பதினால், நீ சாப்பிட்டுத் திருப்தியாகும்போதும்,

உபா 6:12. நீ அடிமைப்பட்டிருந்த வீடாகிய எகிப்துதேசத்திலிருந்து உன்னைப் புறப்படப்பண்ணின கர்த்தரை மறவாதபடிக்கு எச்சரிக்கையாயிரு.

உபா 6:13. உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவருக்கே ஆராதனைசெய்து, அவருடைய நாமத்தைக்கொண்டே ஆணையிடுவாயாக.

உபா 6:14. உன் தேவனாகிய கர்த்தருடைய கோபம் உன்மேல் மூண்டு, உன்னைப் பூமியில் வைக்காமல் அழித்துப்போடாதபடிக்கு, உங்களைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களின் தேவர்களாகிய அந்நிய தேவர்களைப் பின்பற்றாதிருப்பீர்களாக.

உபா 6:15. உன் நடுவிலிருக்கிற உன் தேவனாகிய கர்த்தர் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறாரே.

உபா 6:16. நீங்கள் மாசாவிலே செய்ததுபோல, உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பரிட்சை பாராதிருப்பீர்களாக.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை விசுவாசிக்கவேண்டும். அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியவேண்டும். விசுவாசமில்லாமல் தேவனைப்பிரியப் படுத்துவது கூடாதகாரியம். பலிசெலுத்துவதைவிட கீழ்ப்படிதலே உத்தமம். இஸ்ரவேல் புத்திரர் எதை விசுவாசிக்கவேண்டும் என்பதையும், எதற்கு கீழ்ப்படியவேண்டும் என்பதையும் மோசே இங்கு தெளிவுபடுத்துகிறார்.

"இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்" (உபா 6:4).

"நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக" (உபா 6:5).

இவ்விரண்டு வாக்கியங்களும் யூதருக்கு மிகவும் முக்கியமான வாக்கியங்களாகும். யூதர்கள் இவ்விரண்டு வசனங்களையும் எப்போதும் ஞாபகத்தில் வைத்திருப்பார்கள். இந்த வசனங்களை எழுதி ஞாபக்குறியாக அவர்கள் தங்கள் கைகளில் கட்டிக்கொள்வது வழக்கம். யூதர்களுடைய ரபீமார்களில் சிலர் இந்த வசனங்களை எழுதி, தங்கள் வஸ்திரத்தின் தொங்களில்களில் கட்டிக்கொள்வது வழக்கம்.

பொதுவாக யூதர்கள் ஒவ்வொருவரும், இவ்விரண்டு வசனங்களையும், அன்றாடம் இரண்டுதரமாவது சொல்லுவார்கள். ஒவ்வொரு யூதரும் இந்த வசனங்களை அனுதினமும் இரண்டுமுறையாவது சொல்லவேண்டுமென்று, யூதருடைய பாரம்பரிய பிரமாணம் சொல்லுகிறது.

இவ்விரு வசனங்களையும் சொல்லும் யூதருடைய மனதிலே மிகுந்த சந்தோஷமுண்டாகும். யூதர்கள் ஒருவரையொருவர் வாழ்த்திக்கொள்ளும்போதும், இந்த வசனங்களை சொல்லுவது வழக்கம்.

யூதர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும்போது, இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரை கர்த்தர்" என்று ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும் சொல்லுகிற நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று சொல்லிக்கொள்வது வழக்கம்.

அவர்கள் கர்த்தரை விசுவாசிக்கவேண்டும். கர்த்தரைப்பற்றி எதை விசுவாசிக்கவேண்டும் என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு போதிக்கிறார். "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்" என்னும் சத்தியத்தை இஸ்ரவேல் புத்திரர் விசுவாசிக்கவேண்டும்.

நாம் ஆராதிக்கிற தேவன் "கர்த்தர்" என்பதை இஸ்ரவேல் புத்திரர் அறிந்திருக்கவேண்டும். அவர் நித்தியமானவர் என்பதையும், பரிபூரணமானவர் என்பதையும், அவர் என்றும் இருந்தவர், இருக்கிறவர், இருக்கப்போகிறவர் என்பதையும் இஸ்ரவேல் புத்திரர் விசுவாசிக்கவேண்டும்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் ஒருவர் மாத்திரமே ஜீவனுள்ள தேவனாகவும், மெய்யான தேவனாகவும் இருக்கிறார். கர்த்தர் மாத்திரமே தேவன். கர்த்தரையல்லாமல் வேறு தெய்வம் ஒருவருமில்லை. இஸ்ரவேல் புத்திரர் இந்த சத்தியத்தை தங்கள் இருதயத்தில் பதிய வைத்திருப்பார்கள். இந்த சத்தியம் அவர்களுடைய மனதில் ஆழமாய்ப் பதிந்து, எல்லாவிதமான விக்கிரகாராதனைகளிலிருந்தும் அவர்களை காத்துக்கொள்ளும்.

ஏராளமான தெய்வங்கள் இருக்கிறது என்பது புறஜாதியாரின் துர்உபதேசம். இப்படிப்பட்ட உபதேசங்களுக்கு செவிகொடுக்கிறவர்கள், சீக்கிரத்தில் விக்கிரகாராதனையில் விழுந்துவிடுவார்கள். "நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்" என்னும் அடிப்படை விசுவாசம் நம்முடைய மனதிலே ஆழமாய்ப் பதிந்திருக்கவேண்டும்.

நம்முடைய கர்த்தருக்கு மாத்திரமே நாம் ஊழியம் செய்யவேண்டும். நம்முடைய கர்த்தர் ஒருவரே. நாம் கர்த்தருக்கு மாத்திரம் பிரியமானவர்களாகவும், பிரயோஜனமானவர்களாகவும் இருந்தால் போதுமானது. மற்ற தெய்வங்களை சேவிக்கவேண்டும் என்னும் அவசியம் நமக்கு இல்லை.

நாம் கர்த்தரை மாத்திரமே தேடவேண்டும். நாம் புறஜாதியாரின் விக்கிரகங்களை தேடவேண்டியதில்லை. நாம் அந்நிய தெய்வங்களைப்பற்றி தியானிக்கவேண்டிய அவசியமில்லை. நமக்கு ஒரு நீரூற்று இருந்தால் மாத்திரமே போதுமானது. கர்த்தரே நம்முடைய நீரூற்று. அந்த ஊற்றிலிருந்து ஜீவத்தண்ணீர் புறப்பட்டு வருகிறது.

நம்முடைய ஆவிக்குரிய தாகத்தை தணிப்பதற்கு, புறஜாதியாரின் விக்கிரகங்களை நாடிப்போகவேண்டிய அவசியமில்லை. நமக்கு போதுமானவையெல்லாமே கர்த்தரிடத்தில் உள்ளது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் நமக்கு எக்காலத்திலும் போதுமானவராயிருக்கிறார்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தராயிருக்கிறார். தம்முடைய பிள்ளைகளாகிய நமக்கு கர்த்தர் ஒரு பிரதான கட்டளையை சொல்லியிருக்கிறார். அந்தக் கட்டளைக்கு நாம் கீழ்ப்படிந்து, அதன் பிரகாரம் நடந்துகொள்ளவேண்டும். நம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்தில், நம் முழுஇருதயத்தோடும், நம் முழுஆத்துமாவோடும், நம் முழுபலத்தோடும் அன்புகூரவேண்டும் *(உபா 6:5)*.

இந்த உலகத்தில் ஏராளமான ராஜ்யங்களும், அதற்கு ராஜாக்களும் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் தேசங்களிலே சட்டங்களையும், கட்டளைகளையும் இயற்றுகிறார்கள். தங்கள் தேசத்தின் சட்டத்திற்கும், கட்டளைக்கும் ஜனங்கள் கீழ்ப்படியவேண்டும் என்று மாத்திரமே இந்த உலகத்திலுள்ள ராஜாக்கள் சொல்லுவார்கள். எந்த ராஜாவும், தன்னுடைய தேசத்தின் குடிமக்கள், தன் மீது அன்புகூரவேண்டும் என்று சொல்லமாட்டார். ஜனங்களும் தங்கள் ராஜாவினிடத்தில் பூரணமாய் அன்புகூரமாட்டார்கள்.

கர்த்தரோ தம்முடைய தெய்வீக கிருபையினால், தம்முடைய ஜனத்திற்கு கொடுக்கும் கற்பனைகளில், பிரதான கற்பனையாக, தம்முடைய ஜனங்கள், தம்மிடத்தில் அன்புகூரவேண்டுமென்று சொல்லுகிறார். நாம் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவேண்டும். நாம் அவரிடத்தில் அன்புகூருவதினால், அவருடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிறோம். அன்பே பிரதானம். அன்பே நமக்கும் கர்த்தருக்கும் இடையே உள்ள ஐக்கியத்திற்கு ஆதாரமாயிருக்கிறது.

"முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழுப்பலத்தோடும் அவரிடத்தில் அன்புகூருகிறதும், தன்னிடத்தில் அன்புகூருகிறதுபோல் பிறனிடத்தில் அன்புகூருகிறதுமே சர்வாங்க தகனம் முதலிய பலிகளைப் பார்க்கிலும் முக்கியமாயிருக்கிறது என்றான்" *(மாற் 12:33)*.

நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்க வேண்டும் என்று பரிசுத்த வேதாகமத்தில் பல வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. கர்த்தர் நம்மைக் குறித்து கட்டளையிடுவது என்ன என்று கேட்க வேண்டும். *(எண் 9:8)*.
2. கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்க வேண்டும். *(எண் 12:6)*.
3. லேவியின் புத்திரரே கேளுங்கள். *(எண் 16:8)*.

4. கலகக்காரரே கேளுங்கள். (எண் 20:10).

5. இஸ்ரவேலரே, கர்த்தருடைய கட்டளைகளையும், நியாயங்களையும் கேளுங்கள். (உபா 5:1).

6. கர்த்தருடைய கட்டளைகளுக்குச் செவிகொடுத்து அவைகளின்படி செய்ய சாவதானமாயிரு. (உபா 6:3).

7. நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். (உபா 6:4).

8. நீ இப்பொழுது யோர்தானைக் கடப்பாய். (உபா 9:1).

9. கர்த்தருடைய எல்லா வார்த்தைகளையும் நீ கவனித்துக்கேள். (உபா 12:28)

10. இஸ்ரவேலரே, கேளுங்கள். இன்று உங்கள் சத்துருக்களுடன் யுத்தஞ்செய்யப் போகிறீர்கள். உங்கள் இருதயம் துவளவேண்டாம். (உபா 20:3).

உபாகமம் 6ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகளைப்பற்றிய விவரம் வருமாறு :

1. இஸ்ரவேலே, கர்த்தர் கற்பித்த கற்பனைகளுக்கும் கட்டளைகளுக்கும் செவி கொடுத்து, அவைகளின்படி செய்யச் சாவதானமாயிரு (உபா 6:3).

2. இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் (உபா 6:4).

3. நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக (உபா 6:5).

4. இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது (உபா 6:6).

5. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிற போதும், படுத்துக்கொள்ளும் போதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேச வேண்டும் (உபா 6:7).

6. அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது (உபா 6:8; யாத் 13:9).

7. அவைகளை உன் வீட்டு நிலைகளிலும், உன் வாசல்களிலும் எழுதுவாயாக (உபா 6:9).

8. நீ அடிமைப்பட்டிருந்த வீடாகிய எகிப்துதேசத்திலிருந்து உன்னைப் புறப்படப்பண்ணின கர்த்தரை மறவாத படிக்கு எச்சரிக்கையாயிரு (உபா 6:12).

9. உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவருக்கே ஆராதனைசெய்து, அவருடைய நாமத்தைக்கொண்டே ஆணையிடுவாயாக (உபா 6:13).

10. உங்களைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களின் தேவர்களாகிய அந்நிய தேவர்களைப் பின்பற்றாதிருப்பீர்களாக (உபா 5:14-15).

11. நீங்கள் மாசாவிலே செய்ததுபோல, உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பரிட்சை பாராதிருப்பீர்களாக (உபா 6:16).

12. உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கற்பித்த அவருடைய கற்பனைகளையும் அவருடைய சாட்சிகளையும் அவருடைய கட்டளைகளையும் கருத்தாய்க் கைக் கொள்வீர்களாக (உபா 6:17).

13. நீ கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையும் நன்மையுமாய் இருக்கிறதைச் செய்வாயாக (உபா 6:18).

14. நம்முடைய தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கட்டளையிட்ட இந்த சாட்சிகளையும் கட்டளைகளையும் நியாயங்களையும் உன் புத்திரனிடத்தில் சொல்வாயாக (உபா 5:20-25).

"நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்" என்னும் சத்தியத்தின் விளக்கம் வருமாறு :

"ஒருவரே" என்பதற்கான எபிரெய வார்த்தை "ஏகாத்" என்பதாகும். இது "ஆகாத்" என்னும் எபிரெய வார்த்தையிலிருந்து வந்திருக்கிறது.

யூதருடைய ஆராதனைகளில் காலையிலும், மாலையிலும் இந்த வார்த்தைகளைப் பயன்படுத்துவார்கள். (உபா 5:4-5) இதை யூதருடைய விசுவாசப் பிரமாணம் எனவும் அழைக்கலாம். இந்த வாக்கியத்தில் திரித்துவத்தைப் பற்றியும், மெய்யான ஆவிக்குரிய ஆராதனையைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. கர்த்தர் ஒருவராகவே இருக்கிறார். யூதர்கள் ஞாபகக் குறியாக தங்களுடைய காப்புநாடாக்களில் உபா 6:1-8 ஆகிய வசனங்களையும், அத்துடன் உபா 11:18-21; யாத் 13:2-10,11-16 ஆகிய வசனங்களையும் எழுதி வைத்திருப்பார்கள்.

இந்த வாக்கியத்தில் மூன்று அடிப்படை உபதேசங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அவையாவன:

1. தேவனுடைய ஒற்றுமை
2. தேவனுடைய திரித்துவம்
3. மெய்யான ஆவிக்குரிய ஆராதனை (மத் 22:36-40).

கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூரவேண்டும். கர்த்தரிடத்தில் ஒருவர் தம்மைப் பூரணமாக ஒப்புக் கொடுத்து, கீழ்ப்படிந்து ஆராதனை செய்யவேண்டும் என்பது இந்த வாக்கியத்தின் பொருளாகும் (மத் 22:37).

நம்முடைய கர்த்தரை நாம் அறிந்திருந்தால் மாத்திரமே, நம்மால் அவரிடத்தில் முழுஇருதயத்தோடும், முழுஆத்துமாவோடும், முழுபலத்தோடும் அன்புகூரமுடியும். நாம் கர்த்தரிடத்தில் அன்புகூரும்போது, அவரிடத்தில் அன்புகூருவதற்கான காரணங்களையும் கண்டுபிடிப்போம்.

கர்த்தர் நமக்கு கட்டளையிடுகிற எல்லா வார்த்தைகளும் நம்முடைய இருதயத்திலிருக்கவேண்டும். கர்த்தருடைய உபதேசங்களெல்லாம் நம்முடைய மனதில் பதிந்திருக்கவேண்டும். கர்த்தருடைய கற்பனைகளையும், பிரமாணங்களையும், நியமங்களையும் நம்முடைய இருதயத்திலும், நம்முடைய வீடுகளிலும் ஞாபகமாய் நினைவில் வைத்திருப்பதற்கு ஒரு சில ஆலோசனைகள் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய வார்த்தைகள் நம்முடைய மனதை விட்டு நீங்கிப்போகாமல், அவற்றை நம்முடைய மனதிலே பதிய வைத்திருக்கவேண்டும். அதற்காக இங்கு இரண்டு ஆலோசனைகள் சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன :
1. கர்த்தருடைய வார்த்தைகளை தியானிப்பது.
2. கர்த்தருடைய வார்த்தைகளை நம்முடைய பிள்ளைகளுக்கு கருத்தாய்ப் போதிப்பது.

கர்த்தர் நமக்கு கட்டளையிடுகிற வார்த்தைகளை தியானிக்கும்போது, அவை நம்முடைய இருதயத்திலிருக்கும். "இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது" (உபா 6:6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மெய்யான அன்பு, ஆராதனை, பரிசுத்தமான எண்ணங்கள் ஆகியவை மனுஷருடைய இருதயங்களிலிருந்து வருகிறது. ஆகையினால், இவை எப்பொழுதும் மனுஷருடைய இருதயத்தில் தங்கியிருக்க வேண்டும். தீமையான சிந்தனைகளும், மனுஷருடைய இருதயத்திலிருந்தே வெளிவருகிறது. தீமையான சிந்தனைகளுக்குப் பதிலாக நன்மையான சிந்தனைகள் மனுஷருடைய இருதயத்தில் தங்கியிருக்க வேண்டும். (மாற்கு 7:19-21).

நம்முடைய பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய சத்தியங்களை கருத்தாய்ப் போதிக்கவேண்டும். "நான் உனக்கு கட்டளையிடுகிற இந்த வார்த்தைகளை, உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசு" (உபா 6:7) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

பெற்றோரின் கடமைகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடு அன்புகூரவேண்டும். (உபா 6:5)

2. கர்த்தருடைய வார்த்தைகள் இருதயத்தில் இருக்க வேண்டும் (உபா 6:6)

3. கர்த்தருடைய வார்த்தைகளைப் பிள்ளைகளுக்குக் கருத்தாய் போதிக்க வேண்டும். (உபா 6:7,20-25)

4. கர்த்தருடைய வார்த்தைகளை வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக் கொள்ளும் போதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசவேண்டும். (உபா 6:7)

5. கர்த்தருடைய வார்த்தைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக் கொள்ள வேண்டும். (உபா 6:8; யாத் 13:9)

6. அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்க வேண்டும். (உபா 6:9)

7. கர்த்தருடைய வார்த்தைகளை உன் வீட்டு நிலைகளிலும், உன் வாசல்களிலும் எழுதவேண்டும் (உபா 6:10-12)

8. தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவருக்கே ஆராதனைசெய்து, அவருடைய நாமத்தைக்கொண்டே ஆணையிடவேண்டும். (உபா 6:13)

9. அந்நிய தேவர்களைப் பின்பற்றக்கூடாது. (உபா 6:14-15)

10. கர்த்தரைப் பரிட்சை பார்க்கக்கூடாது. (உபா 6:16)

11. தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கற்பித்த அவருடைய கற்பனைகளையும் அவருடைய சாட்சிகளையும் அவருடைய கட்டளைகளையும் கருத்தாய்க் கைக்கொள்ள வேண்டும். (உபா 6:17)

12. கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையும் நன்மையுமாய் இருக்கிறதைச் செய்ய வேண்டும். (உபா 6:19)

நாம் கர்த்தரைப்பற்றியும், அவருடைய வார்த்தைகளைப்பற்றியும் அறிந்திருக்கிற சத்தியங்களை, மற்றவர்களுக்கு போதிக்கும்போது, சத்தியத்தைப்பற்றிய நம்முடைய அறிவு விருத்தியடையும். நம்முடைய பிள்ளைகளோடு எல்லா சூழ்நிலைகளிலும் நாம் ஆவிக்குரிய காரியங்களைப்பற்றி பேசவேண்டும். கர்த்தர் நமக்கு தெளிவுபடுத்தியிருக்கிற சத்தியங்களை அவர்களுக்கு போதித்தால் போதுமானது.

கர்த்தர் நமக்கு இன்னும் வெளிப்படுத்தாத இரகசியங்களையோ அல்லது நமக்கே தெளிவில்லாமல் சந்தேகத்திற்கும் விவாதத்திற்கும் இடம் கொடுக்கும் காரியங்களையோ நம்முடைய பிள்ளைகளுக்கு போதிக்கக்கூடாது. நாம் தெளிவான சத்தியங்களையும், கர்த்தருடைய கட்டளைகளையும், நம்முடைய சமாதானத்திற்கு துணையாகயிருக்கும் காரியங்களையும் நம்முடைய பிள்ளைகளுக்கு போதிக்கவேண்டும்.

கர்த்தருடைய கட்டளைகளையும், அவரைப்பற்றிய சத்தியங்களையும் நம்முடைய பிள்ளைகளுக்கு அதிகமாய்ப் போதிக்கும்போது, கர்த்தருடைய வார்த்தைகளைப்பற்றிய அறிவு நமக்குள்ளே விருத்தியடையும். நம்முடைய ஜீவியத்தில் நாம் கர்த்தரை மகிமைப்படுத்துவோம். கர்த்தருடைய வார்த்தைகள் நமக்குள்ளே கிரியை செய்யும். நம்முடைய ஜீவியத்திலும், நம்முடைய வார்த்தையிலும் தெய்வீக வெளிச்சம் பிரதிபலிக்கும்.

இஸ்ரவேல் புத்திரர், தம்முடைய வார்த்தைகளில் ஒரு பகுதியை அல்லது கர்த்தருடைய கட்டளைகளில் ஒரு சில கட்டளைகளை அடையாளமாக எழுதுவதற்கு கர்த்தர் அனுமதி கொடுக்கிறார். அவற்றை நினைவில் வைத்திருக்கும்படியாக சுருக்கமாய் எழுதவேண்டும்.

"நான் உனக்கு கட்டளையிடுகிற இந்த வார்த்தைகளை, உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது. அவைகளை உன் வீட்டு நிலைகளிலும், உன் வாசல்களிலும் எழுதுவாயாக" *(உபா 6:8,9)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில், கர்த்தருடைய நியாயப்பிரமாணம் எழுதப்பட்ட தோல்சுருள்களை இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய கைகளில் அடையாளமாக கட்டிக்கொண்டார்கள். அவை இஸ்ரவேல் புத்திரருக்கு ஞாபககுறியாக இருக்கிறது. யூதமார்க்கத்து ரபீமார்கள், கர்த்தருடைய வார்த்தையில் ஒரு சில வசனங்களை நாடாக்களில் எழுதி, அதை தங்கள் வஸ்திரங்களின் ஓரத்தில் தொங்கவிடுவது வழக்கம்.

பரிசேயர்கள் இதுபோன்ற நாடாக்களை தங்கள் வஸ்திரத்திலே தொங்கவிட்டார்கள். ஆனாலும் தங்களுடைய பக்தியையும், வேதஅறிவையும் விளம்பரம் பண்ணும் வண்ணமாக, பரிசேயர்கள் தங்கள் நாடாக்களின் அகலத்தை அதிகமாக்கினார்கள். இதன் நிமித்தமாக கிறிஸ்துவானவர் கர்த்தர் அவர்களை கடிந்துகொண்டார்.

"பரிசேயர் தங்கள் கிரியைகளையெல்லாம் மனுஷர் காணவேண்டுமென்று செய்கிறார்கள்; தங்கள் காப்புநாடாக்களை அகலமாக்கி, தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களைப் பெரிதாக்கி, விருந்துகளில் முதன்மையான இடங்களையும், ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும், சந்தைவெளிகளில் வந்தனங்களையும், மனுஷரால் ரபீ, ரபீ, என்று அழைக்கப்படுவதையும் விரும்புகிறார்கள்" *(மத் 23:5-7).*

சபையின் சரித்திரத்திலே, கிறிஸ்தவ மார்க்கம் மறுமலர்ச்சியடைந்தபோது, அச்சடிக்கப்பட்ட பரிசுத்த வேதாகமம் போதுமான அளவு கிடைக்கவில்லை. அக்காலத்தில் விசுவாசிகள் வேதாகமத்திலுள்ள ஒரு சில வசனங்களை தங்கள் வீட்டு சுவர்களிலும், ஆலயத்தின் தூண்களிலும் எழுதி வைத்து படித்தார்கள். ஜனங்கள் இந்த வசனங்களை அடிக்கடி பார்த்து மனப்பாடம் செய்துகொண்டார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் எல்லா காலங்களிலும் கர்த்தரை தேடவேண்டும். தங்களுடைய வாழ்க்கையில் செழிம்பும், திரட்சியும், தாராளமும் ஏற்படும்போது, தங்களை ஆசீர்வதித்த கர்த்தரை மறந்துவிடக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர் பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்கு போகப்போகிறார்கள். அந்த தேசத்திலே அவர்கள் செழித்திருப்பார்கள். அந்த சூழ்நிலைகளில் அவர்கள் கர்த்தரை மறந்துவிடக்கூடாது என்று மோசே எச்சரிக்கிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுப்பேன் என்று ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களாகிய உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தில் உன்னைப் பிரவேசிக்கப்பண்ணும்போதும், நீ கட்டாத வசதியான பெரிய பட்டணங்களையும், நீ நிரப்பாத சகல நல்ல வஸ்துக்களாலும் நிரம்பிய வீடுகளையும், நீ வெட்டாமல் வெட்டப்பட்டிருக்கிற துரவுகளையும், நீ நடாத திராட்சத்தோட்டங்களையும் ஒலிவத்தோப்புகளையும், அவர் உனக்குக் கொடுப்பதினால், நீ சாப்பிட்டுத் திருப்தியாகும்போதும், நீ அடிமைப்பட்டிருந்த வீடாகிய எகிப்துதேசத்திலிருந்து உன்னைப் புறப்படப்பண்ணின கர்த்தரை மறவாதபடிக்கு எச்சரிக்கையாயிரு" *(உபா 6:10-12)* என்று சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு இந்த வார்த்தைகளை சொல்லும்போது, கர்த்தர் அவர்களை நன்மையினால் ஆசீர்வதிக்கப்போகிறார் என்பதையும் வாக்குப்பண்ணுகிறார். கர்த்தர் அவர்களுக்கு வாக்குப்பண்ணியிருக்கிற தேசம் நல்ல தேசமாயிருக்கிறது. அது செழிப்பான தேசமாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் இப்போது மேய்ப்பர்களைப்போல கூடாரங்களில் தங்கியிருக்கிறார்கள். அவர்கள் பரதேசிகளைப்போல வனாந்தரத்திலே சஞ்சரித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கானான் தேசத்திலே பிரவேசிக்கும்போது, தாங்கள் கட்டாத வசதியான பெரிய பட்டணங்களில் தங்கியிருப்பார்கள். தாங்கள் நிரப்பாத சகல வஸ்துக்களாலும் நிரம்பிய வீடுகளிலே வாசம்பண்ணுவார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே பிரயாணம்பண்ணும்போது அவர்களுக்கு தண்ணீர் துரவுகளும் இல்லை, திராட்சத்தோட்டங்களும் இல்லை. ஒலிவத்தோப்புகளும் இல்லை. அவர்கள் கானான் தேசத்தில் பிரவேசிக்கும்போதோ, கர்த்தருடைய கிருபையினால் இவைகளெல்லாம் அவர்களுக்கு கொடுக்கப்படும். தங்களுக்கு வசதிகளும், செழிப்பும் வரும்போது இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் தேவனாகிய கர்த்தரை மறந்துவிடக்கூடாது.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திலே வாசம்பண்ணும்போது, தாங்கள் ஒரு காலத்தில் எகிப்து தேசத்தில் அடிமைப்பட்டிருந்ததையும் நினைவுகூரவேண்டும். கர்த்தரே தம்முடைய கிருபையினாலும், ஓங்கிய புயத்தினாலும், பலத்த கையினாலும் தங்களை எகிப்து என்னும் இருப்புகாளவாயிலிருந்து விடுதலைபண்ணி, வனாந்தர பாதையின் வழியாக பாதுகாப்பாய் வழிநடத்தி, தங்களை கானான் தேசத்திலே பிரவேசிக்கப்பண்ணி, இங்கே வசதியாக குடியிருக்கப்பண்ணியிருக்கிறார் என்பதை இஸ்ரவேல் புத்திரர் மறவாமல் நினைவுகூரவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். அவரை மாத்திரமே கனம்பண்ணவேண்டும். "உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவருக்கே ஆராதனைசெய்து, அவருடைய நாமத்தைக்கொண்டே ஆணையிடுவாயாக" (உபா 6:13) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் புறஜாதியாரோடும், அண்டை தேசத்தாரோடும் ஆணையிடும்போது, தங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக்கொண்டே ஆணையிடவேண்டும். அவர்கள் ஒருபோதும் புறஜாதியாருடைய அந்நிய தேவர்களின் நாமத்தைக் கொண்டு ஆணையிடக்கூடாது.

இஸ்ரவேல் புத்திரர் நடுவிலிருக்கிற அவர்கள் தேவனாகிய கர்த்தர் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறார் (உபா 6:15). இஸ்ரவேல் ஜனத்தார் எந்தக் காரணத்தைக் கொண்டும், புறஜாதியாருடைய அந்நிய தெய்வங்களை கனம்பண்ணவேண்டுமென்று நினைக்கக்கூடாது.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் குடியேறும்போது, அவர்களைச் சுற்றிலும் அந்நிய ஜனங்கள் குடியிருப்பார்கள். அவர்கள் அந்நிய தேவர்களை ஆராதிக்கிறவர்கள். இஸ்ரவேல் புத்திரர் புறஜாதி ஜனங்களுடைய அந்நிய தேவர்களை பின்பற்றக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளையை மீறி, அந்நிய தேவர்களைப் பின்பற்றினால், கர்த்தருடைய கோபம் இஸ்ரவேல் புத்திரர் மேல் மூளும். அவர் இஸ்ரவேல் புத்திரரை பூமியின்மேல் வைக்காமல் அழித்துப்போடுவார் (உபா 6:14).

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை பரீட்சை பார்த்து அவரை கனவீனம்பண்ணக்கூடாது. அவர்கள் கர்த்தருடைய வல்லமையையும், அவருடைய பிரசன்னத்தையும், அவருடைய தெய்வீக பராமரிப்பையும் நம்பாமல் அவிசுவாசமாயிருக்கக்கூடாது. அவர்கள் எல்லா வேளையிலும் கர்த்தரையும், அவருடைய கிருபைகளையும் நம்பவேண்டும்.

"நீங்கள் மாசாவிலே செய்ததுபோல, உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பரிட்சை பாராதிருப்பீர்களாக" (உபா 6:16) என்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

தேவன் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்திருக்கும் காரியங்களாவன :

1. வாக்குத்தத்த தேசம்

2. ஏற்கெனவே கட்டப்பட்டிருக்கும் வசதியான பெரிய பட்டணங்கள்.

3. நல்ல வஸ்துக்களால் நிரம்பிய வீடுகள். (உபா 6:11)

4. ஏற்கெனவே வெட்டப்பட்டிருக்கிற துரவுகள்.

5. ஏற்கெனவே நட்டப்பட்டிருக்கும் திராட்சைத் தோட்டங்களும், ஒலிவத்தோப்புகளும்.

நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டிய காரியங்களாவன :

1. கர்த்தருடைய தூதருக்குக் கீழ்ப்படிய வேண்டும். (யாத் 23:21)

2. பின்மாறிப்போய்விடக்கூடாது. (உபா 6:12)

3. தேவனை மறக்கக்கூடாது. (உபா 8:11)

4. பொல்லாத சிந்தனைகள் வரக்கூடாது. (உபா 15:9)

5. கர்த்தருடைய வார்த்தையை மீறக்கூடாது. (நியா 13:4,13).

கருத்தாய் செய்ய வேண்டிய காரியங்களாவன :

1. கர்த்தருடைய வார்த்தைக்குச் செவி கொடுக்க வேண்டும். (உபா 28:1; யாத் 15:26; எரே 17:24; சக 6:15).

2. ஏற்கெனவே அனுபவித்த காரியங்களை ஆத்துமாக்களில் ஞாபகமாக வைத்திருக்க வேண்டும். (உபா 4:9).

3. கர்த்தருடைய வார்த்தையைப் பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும். (உபா 6:7).

4. கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும். (உபா 6:17).

5. கர்த்தருடைய கற்பனைகளுக்குச் செவிகொடுக்க வேண்டும். (உபா 11:13).

6. எல்லாக் கற்பனைகளையும் கைக்கொள்ள வேண்டும். (உபா 11:22).

7. சத்தியத்தை விசாரிக்க வேண்டும். (உபா 13:14; உபா 17:4).

8. சரியான போதனையைக் கடைபிடிக்க வேண்டும். (உபா 24:8).

கர்த்தருடைய கட்டளைகள் உபா 6:17-25

உபா 6:17. உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கற்பித்த அவருடைய கற்பனைகளையும் அவருடைய சாட்சிகளையும் அவருடைய கட்டளைகளையும் கருத்தாய்க் கைக்கொள்வீர்களாக.

உபா 6:18. நீ நன்றாயிருக்கிறதற்கும், கர்த்தர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக்கொடுத்த நல்ல தேசத்தில் நீ பிரவேசித்து, அதைச் சுதந்தரிப்பதற்கும்,

உபா 6:19. கர்த்தர் தாம் சொன்னபடி, உன் சத்துருக்களையெல்லாம் உன் முகத்திற்கு முன்பாகத் துரத்திவிடுவதற்கும், நீ கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையும் நன்மையுமாய் இருக்கிறதைச் செய்வாயாக.

உபா 6:20. நாளைக்கு உன் புத்திரன்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கட்டளையிட்ட இந்த சாட்சிகளும் கட்டளைகளும் நியாயங்களும் என்ன என்று உன்னிடத்தில் கேட்டால்;

உபா 6:21. நீ உன் புத்திரனை நோக்கி: நாங்கள் எகிப்திலே பார்வோனுக்கு அடிமைகளாயிருந்தோம்; கர்த்தர் பலத்த கையினாலே எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்.

உபா 6:22. கர்த்தர் எங்கள் கண்களுக்கு முன்பாக, எகிப்தின்மேலும் பார்வோன் மேலும் அவன் குடும்பம் அனைத்தின் மேலும் கொடிதான பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் விளங்கப்பண்ணி,

உபா 6:23. தாம் நம்முடைய பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தேசத்துக்கு எங்களை அழைத்துக்கொண்டுபோய், அதை நமக்குக் கொடுக்கும்படி எங்களை அவ்விடத்திலிருந்து புறப்படப்பண்ணினார்.

உபா 6:24. இந்நாளில் இருக்கிறதுபோல, நம்மை அவர் உயிரோடே காப்பதற்கும், எந்நாளும் நன்றாயிருக்கிறதற்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து இந்த எல்லாக் கட்டளைகளின்படியேயும் செய்யக் கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டார்.

உபா 6:25. நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டபடியே நாம் அவர் சமுகத்தில் இந்த எல்லாக் கட்டளைகளின்படியும் செய்யச் சாவதானமாயிருந்தால், நமக்கு நீதியாயிருக்கும் என்று சொல்வாயாக.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு தன்னுடைய போதகத்தை தொடர்ந்து சொல்லுகிறார். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அவருடைய கட்டளைகளை கைக்கொள்ளவேண்டும். இதுவே மோசேயின் பிரதான போதகம்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கற்பித்த அவருடைய கற்பனைகளையும் அவருடைய சாட்சிகளையும் அவருடைய கட்டளைகளையும் கருத்தாய்க் கைக்கொள்வீர்களாக" *(உபா 6:17)* என்றும்,

"நீ நன்றாயிருக்கிறதற்கும், கர்த்தர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக்கொடுத்த நல்ல தேசத்தில் நீ பிரவேசித்து, அதைச் சுதந்தரிப்பதற்கும், கர்த்தர் தாம் சொன்னபடி, உன் சத்துருக்களையெல்லாம் உன் முகத்திற்கு முன்பாகத் துரத்திவிடுவதற்கும், நீ கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையும் நன்மையுமாய் இருக்கிறதைச் செய்வாயாக" *(உபா 6:18,19)* என்றும் போதிக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர், கர்த்தருடைய கட்டளைகளையும் சாட்சிகளையும், நியாயங்களையும் தங்களுடைய பிள்ளைகளுக்கு போதிக்கவேண்டும். பிள்ளைகள் சிறுவயதிலிருக்கும்போதே, அவர்களுக்கு கர்த்தரைப்பற்றிய சத்தியத்தை, அவருடைய கட்டளைகளைப்பற்றிய விளக்கத்தையும் கற்றுக்கொடுக்கவேண்டும். அப்போதுதான் சிறுபிள்ளைகள் மார்க்க காரியங்களில் தெளிந்த புத்தியோடு கலந்துகொள்வார்கள். பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களாகும்போதும், கர்த்தரையும், அவருடைய கட்டளைகளையும் விட்டு பிரியாமலிருப்பார்கள். அவர்கள் பிற்காலத்தில் தங்களுடைய பிள்ளைகளுக்கும், கர்த்தருடைய சாட்சிகளையும், அவருடைய கட்டளைகளையும், அவருடைய நியாயங்களையும் போதிப்பார்கள்.

சிறுபிள்ளைகள் தங்கள் பெற்றோரிடத்தில் அதிகமாய்க் கேள்வி கேட்பார்கள். அவர்கள் கேட்கும் கேள்விகளையும், அந்தக் கேள்விகளுக்கு அவர்களுடைய பெற்றோர் சொல்லவேண்டிய பதில்களையும் மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நாளைக்கு உன் புத்திரன்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கட்டளையிட்ட இந்த சாட்சிகளும் கட்டளைகளும் நியாயங்களும் என்ன என்று உன்னிடத்தில் கேட்டால்" *(உபா 6:20)* என்று சொல்லி, பிள்ளைகள் கேட்கக்கூடிய கேள்விகளைப்பற்றிச் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு பண்டிகைகளை ஆசரிக்கிறார்கள். அந்தப் பண்டிகைகளின் அர்த்தங்களையும், விளக்கங்களையும், தாற்பரியங்களையும் குறித்து பிள்ளைகள் கேள்விகள் கேட்கும்போது, பெற்றோர் அவர்களுக்கு சரியான விளக்கம் சொல்லவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு பலவிதமான பலிகளை செலுத்துகிறார்கள். பிள்ளைகள் அந்தப் பலிகளைப்பற்றிய விவரங்களையும், அந்தப் பலிகள் செலுத்தப்படுவதற்கான காரணங்களையும் பற்றியும் கேள்விகளைக் கேட்கும்போது, பெற்றோர் அவர்களுக்கு சரியான விளக்கம் சொல்லவேண்டும்.

பிள்ளைகள் பண்டிகைகளைப்பற்றியும், பலிகளைப்பற்றியும் கேள்விகளை கேட்பதுபோல, யூதருடைய பாரம்பரிய பழக்க வழக்கங்களைப்பற்றியும் கேள்வி கேட்பார்கள். பிள்ளைகள் கேட்கும் கேள்விகளுக்கு, பெற்றோர் பதில் சொல்லவேண்டுமென்றால், பெற்றோரிடத்தில் அதுபற்றிய தெளிவான ஞானம் இருக்கவேண்டும். கர்த்தருடைய கட்டளைகளைப்பற்றியும், சாட்சிகளைப்பற்றியும், நியாயங்களைப்பற்றியும் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்கவேண்டுமென்றால், முதலாவதாக பெற்றோர் அவற்றை தெளிவாக கற்றுக்கொள்ளவேண்டும்.

தேவனுடைய தெய்வீக நியமங்கள் எல்லாவற்றிற்குமே ஆவிக்குரிய அர்த்தமுள்ளது. தேவன் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாகவும், தெய்வீக நோக்கத்தின் பிரகாரமாகவும் ஒவ்வொரு நியமங்களையும் ஏற்படுத்தியிருக்கிறார். அவற்றின் அர்த்தங்களையும், தாற்பரியங்களையும் அறிந்து கொள்வது நமக்கு நல்லது. அப்போதுதான் நம்முடைய ஆராதனை புத்தியுள்ள ஆராதனையாயிருக்கும். நமக்கு ஆராதனையின் தாற்பரியமும், பலிசெலுத்துவதன் தாற்பரியமும் தெரியவில்லையென்றால், குருடும், நசலும், ஊனமுமானதை கர்த்தருடைய பலிபீடத்திலே பலியாக செலுத்துவோம்.

பிள்ளைகள் தங்களிடத்தில் கேட்கும் கேள்விகளுக்கு பெற்றோர் ஞானமுள்ள பதிலை சொல்லவேண்டும். கர்த்தருடைய கட்டளைகளின் அர்த்தத்தையும் விளக்கத்தையும் பிள்ளைகள் கேள்வியாய்க் கேட்கும்போது, பெற்றோருக்கு அதுபற்றி விளக்கமாக பதில் சொல்ல தெரிந்திருக்கவேண்டும். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு பூர்வகாலம் முதலே நன்மை செய்திருக்கிறார். பிள்ளைகளின் கேள்விகளுக்கு ஞானமுள்ள பதிலை சொல்லவேண்டுமென்றால், பெற்றோருக்கு தங்கள் பூர்வீகத்தின் சரித்திரம் தெரிந்திருக்கவேண்டும். கர்த்தர் தங்களுக்கும், தங்கள் முற்பிதாக்களுக்கும் செய்த நன்மைகளையெல்லாம் பெற்றோர் அறிந்திருக்கவேண்டும். அப்போதுதான் அவர்களால், தங்கள் பிள்ளைகள் கேட்கும் கேள்விகளுக்கு ஞானமுள்ள பதிலை சொல்ல முடியும்.

பிள்ளைகள் கேட்கக்கூடிய கேள்விகளை மோசே முதலாவதாக சொல்லுகிறார். அதன் பின்பு பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு சொல்லவேண்டிய பதிலையும் மோசே இங்கு சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீ உன் புத்திரனை நோக்கி: நாங்கள் எகிப்திலே பார்வோனுக்கு அடிமைகளாயிருந்தோம்; கர்த்தர் பலத்த கையினாலே எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார். கர்த்தர் எங்கள் கண்களுக்கு முன்பாக, எகிப்தின்மேலும் பார்வோன் மேலும் அவன் குடும்பம் அனைத்தின் மேலும் கொடிதான பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் விளங்கப்பண்ணி, தாம் நம்முடைய பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தேசத்துக்கு எங்களை அழைத்துக்கொண்டுபோய், அதை நமக்குக் கொடுக்கும்படி எங்களை அவ்விடத்திலிருந்து புறப்படப்பண்ணினார்" (உபா 6:21-23) என்று சொல்லுகிறார்.

தங்களுக்கு நன்மைகள் உண்டாகவே, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு பயந்து, அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியவேண்டும் என்று மோசே சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களிடத்தில் கேள்விகளை கேட்கிற, தங்கள் பிள்ளைகளை நோக்கி, "இந்நாளில் இருக்கிறதுபோல, நம்மை அவர் உயிரோடே காப்பதற்கும், எந்நாளும் நன்றாயிருக்கிறதற்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து இந்த எல்லாக் கட்டளைகளின்படியேயும் செய்யக் கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டார்" (உபா 6:24) என்று சொல்லவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு பல கட்டளைகளை சொல்லியிருக்கிறார். அந்தக் கட்டளைகள் எல்லாவற்றிலும், "நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக" (உபா 6:5) என்பதே பிரதான கட்டளையாயிருக்கிறது.

கர்த்தருடைய கட்டளைகளில் ஒரு கட்டளை பிரதான கட்டளையாகயிருந்தாலும், அவர் சொன்ன எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படிய வேண்டியது இஸ்ரவேல் புத்திரருக்கு அவசியமாயிருக்கிறது. "நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டபடியே நாம் அவர் சமுகத்தில் இந்த எல்லாக் கட்டளைகளின் படியும் செய்யச் சாவதானமாயிருந்தால், நமக்கு நீதியாயிருக்கும்" (உபா 6:25) என்று மோசே சொல்லுகிறார்.

7 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கற்பனைகளைக் கைகொள்ளவேண்டும் என்று மோசே இந்த அதிகாரத்திலும் அவர்களுக்கு உபதேசம் பண்ணுகிறார் (உபா 7:11,12). இஸ்ரவேல் ஜனத்தார் விக்கிரகாராதனைக்காரரை விட்டு விலகி, பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும்.

கர்த்தர் அழிவுக்கு நியமித்திருக்கிற புறஜாதி ஜனங்களை இஸ்ரவேல் புத்திரர் முற்றிலுமாக முறியடித்து, அவர்களை சங்காரம்பண்ணவேண்டும் (உபா 7:1,2,16,24). விக்கிரகாராதனைக்காரரில் அழிந்து போகாமல், உயிரோடிருக்கிறவர்களோடே, இஸ்ரவேல் ஜனத்தார் விவாகசம்பந்தம் பண்ணக்கூடாது (உபா 7:3,4).

இஸ்ரவேல் புத்திரர் புறஜாதியாரின் பலிபீடங்களை இடித்து, அவர்கள் சிலைகளை தகர்த்து, அவர்கள் தோப்புகளை வெட்டி, அவர்கள் விக்கிரகங்களை அக்கினியிலே எரித்துப்போடவேண்டும் (உபா 7:5,25,26).

இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்கும் கர்த்தருக்கும் இடையே உள்ள ஐக்கியத்தையும், தங்களைக் குறித்து கர்த்தர் வைத்திருக்கிற சித்தத்தையும் அறிந்துகொள்ளவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு பரிசுத்த ஜனமாயிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை தமக்கு சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொண்டார் (உபா 7:6). கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை தமக்கு சொந்த ஜனமாகத் தெரிந்துகொண்டதற்கும், அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக் கொண்டதற்கும் காரணம் (உபா 7:7,8).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு சொந்த ஜனமாகயிருப்பதினாலும், கர்த்தர் தங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக்கொண்டதினாலும், கர்த்தர் அவர்களிடத்திலிருந்து எதிர்பார்க்கும் காரியங்கள் (உபா 7:9,10).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய நியாயங்களைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்யும்போது கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பதாக வாக்குப்பண்ணுகிறார் (உபா 7:12,15).

கர்த்தர் அழிவுக்கு நியமித்திருக்கிற புறஜாதியாரை இஸ்ரவேல் புத்திரர் துரத்திவிடவேண்டும். அப்போது கர்த்தர் தம்முடைய வார்த்தையின் பிரகாரம் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிப்பாக வாக்குப்பண்ணுகிறார் (உபா 7:17-26).

இஸ்ரவேலருக்கு உபதேசம் உபா 7:1-11

உபா 7:1. நீ சுதந்தரிக்கப்போகிற தேசத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைப் பிரவேசிக்கப்பண்ணி, உன்னைப்பார்க்கிலும் ஜனம் பெருத்த ஜாதிகளாகிய ஏத்தியர், கிர்காசியர், எமோரியர், கானானியர், பெரிசியர், ஏவியர், எபூசியர் என்னும் ஏழு பலத்த ஜாதிகளை உனக்கு முன்பாகத்துரத்தி,

உபா 7:2. உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன்னிடத்தில் ஒப்புக்கொடுக்கும்போது, அவர்களை முறிய அடித்து, அவர்களைச் சங்காரம் பண்ணக்கடவாய்; அவர்களோடே உடன்படிக்கைபண்ணவும் அவர்களுக்கு இரங்கவும் வேண்டாம்.

உபா 7:3. அவர்களோடே சம்பந்தம் கலவாயாக; உன் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடாமலும், அவர்கள் குமாரத்திகளை உன் குமாரருக்குக் கொள்ளாமலும் இருப்பாயாக.

உபா 7:4. என்னைப் பின்பற்றாமல், அந்நிய தேவர்களைச் சேவிக்கும்படி அவர்கள் உன் குமாரரை விலகப்பண்ணுவார்கள்; அப்பொழுது கர்த்தருடைய கோபம் உங்கள் மேல் மூண்டு, உங்களைச் சீக்கிரத்தில் அழிக்கும்.

உபா 7:5. நீங்கள் அவர்களுக்குச் செய்யவேண்டியது என்னவென்றால்: அவர்கள் பலிபீடங்களை இடித்து, அவர்கள் சிலைகளைத் தகர்த்து, அவர்கள் தோப்புகளை வெட்டி, அவர்கள் விக்கிரகங்களை அக்கினியிலே எரித்துப்போடவேண்டும்.

உபா 7:6. நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொண்டார்.

உபா 7:7. சகல ஜனங்களிலும் நீங்கள் திரட்சியான ஜனமென்று கர்த்தர் உங்கள்பேரில் அன்புவைத்து உங்களைத் தெரிந்து கொள்ளவில்லை; நீங்கள் சகல ஜனங்களிலும் கொஞ்சமாயிருந்தீர்கள்.

உபா 7:8. கர்த்தர் உங்களில் அன்புகூர்ந்ததினாலும், உங்கள் பிதாக்களுக்கு இட்ட ஆணையைக் காக்கவேண்டும் என்பதினாலும்; கர்த்தர் பலத்த கையினால் உங்களைப் புறப்படப்பண்ணி, அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்தும் அதின் ராஜாவான பார்வோனின் கையினின்றும் உங்களை மீட்டுக்கொண்டார்.

உபா 7:9. ஆகையால் உன் தேவனாகிய கர்த்தரே தேவன் என்றும், தம்மில் அன்புகூர்ந்து, தமது கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் ஆயிரம் தலைமுறைமட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன் என்றும்,

உபா 7:10. தம்மைப் பகைக்கிறவர்களுக்குப் பிரத்தியட்சமாய்ப் பதிலளித்து அவர்களை அழிப்பார் என்றும், தம்மைப் பகைக்கிறவனுக்கு அவர் தாமதியாமல் பிரத்தியட்சமாய்ப் பதிலளிப்பார் என்றும் நீ அறியக்கடவாய்.

உபா 7:11. ஆகையால் நீ செய்யும்படி நான் இன்று உனக்குக் கட்டளையிடுகிற கற்பனைகளையும் கட்டளைகளையும் நியாயங்களையும் கைக்கொள்வாயாக.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பரிசுத்த ஜனமாயிருக்கிறார்கள். அவர்கள் விக்கிரகங்களை விட்டும், விக்கிரகாராதனைக்காரரைவிட்டும் விலகி பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார் விக்கிரகாராதனைக்காரரோடு எந்த விதமான சிநேகமும், ஐக்கியமும் வைத்துக்கொள்ளக்கூடாது.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தைச் சுதந்தரிக்கப்போகிறார்கள். அந்த தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். அந்த தேசத்திலே விக்கிரகங்களை ஆராதிக்கிற புறஜாதி ஜனங்கள் இருக்கிறார்கள். அந்த ஜாதியாரில், குறிப்பிட்ட ஏழு ஜாதியாரை இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தைவிட்டு துரத்திவிடவேண்டும் என்றும், அவர்களை முற்றிலுமாய் சங்காரம்பண்ணவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். மோசே கர்த்தருடைய வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீ சுதந்தரிக்கப்போகிற தேசத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைப் பிரவேசிக்கப்பண்ணி, உன்னைப்பார்க்கிலும் ஜனம் பெருத்த ஜாதிகளாகிய ஏத்தியர், கிர்காசியர், எமோரியர், கானானியர், பெரிசியர், ஏவியர், எபூசியர் என்னும் ஏழு பலத்த ஜாதிகளை உனக்கு முன்பாகத் துரத்திவிடவேண்டும்" *(உபா 7:1)* என்று சொல்லுகிறார்.

ஏத்தியர், கிர்காசியர், எமோரியர், கானானியர், பெரிசியர், ஏவியர், எபூசியர் என்னும் ஏழுஜாதிகளைப்பற்றிய விவரம் வருமாறு :

1. ஏத்தியர் - இவர்கள் கானான் குமாரனான ஏத்தின் சந்ததியார். *(ஆதி 10:15; ஆதி 23:3-18; ஆதி 27:46; ஆதி 49:32).* ஆபிரகாமின் காலத்திலிருந்தே இவர்கள் பலவான்களாக இருந்தார்கள். அசீரிய சாம்ராஜ்யம், பாபிலோனிய சாம்ராஜ்யம் ஆகியவை தோன்றும் வரையிலும் ஏத்தியர் வல்லமை பொருந்தியவர்களாக இருந்தார்கள்.

ஏத்தியரின் தேசத்தைக் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்தார். யோசுவா இந்தத் தேசத்தை முதலாவதாகப் பிடித்தார். (உபா 7:1; யாத் 3:8; யோசு 1:4; யோசு 9:1-12:24).

தாவீதின் சேனையில் ஏத்தியருடைய பிரதானிகளில் சிலர் பணிபுரிந்தார்கள். (2சாமு 11:3; 2சாமு 23:39). சாலொமோனிடத்திலும் சில ஏத்தியர்கள் வேலை பார்த்திருக்கிறார்கள் (1இராஜா 9:20-21)

வடக்கு சீரியாவிலும், மேலும் பல பகுதிகளிலும் ஏத்தியருக்கு ராஜாக்கள் இருந்தார்கள். (1இராஜா 10:29; 2இராஜா 7:6; 2நாளா 1:17). நேபுகாத்நேச்சாரின் காலத்தில் அவர்களுடைய வல்லமை முழுவதுமாக அழிக்கப்பட்டது.

2. கிர்காசியர் - இவர்கள் கானானின் சந்ததியார். (உபா 7:1; ஆதி 10:16; ஆதி 15:21; யோசு 3:10; யோசு 24:11; சங். 9:8).

3. எமோரியர் - இவர்கள் கானானின் சந்ததியார். (ஆதி 10:15-16; 1நாளா 1:13-14). இவர்களில் சிலர் இராட்சதர்களாக இருந்தார்கள். (ஆமோஸ் 2:9) கெதர்லா கோமேர் இவர்களை முறியடித்தார். ஆபிரகாம் இவர்களை மீட்டுக் கொண்டார். (ஆதி 14). இவர்களுடைய தேசம் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது.

4. கானானியர் - இந்த வார்த்தை கானான் தேசத்தில் குடியிருப்பவர்களுக்கும், கானானின் சந்ததியான பதினொரு தேசங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது. (ஆதி 10:15-19) இந்த வசனத்தில் கானானியர் என்னும் வார்த்தை கானான் தேசத்தில் குடியிருக்கும் மற்ற ஜாதிகளைப் போல ஒரு தனி ஜாதியைக் குறிப்பிடுகிறது.

5. பெர்சியர் - இந்த வார்த்தைக்கு நாட்டுப்புறத்தில் வசிக்கிறவர் என்று பொருள். இவர்களும் கானானியரோடு சேர்த்திருந்தார்கள். (உபா 7:1; ஆதி 13:7; ஆதி 34:30; நியா 1:4)

6. ஏவியர் - இவர்கள் கானானின் சந்ததியார். (ஆதி 10:17; 1நாளா 1:15) சீகேமியர், கிபியோனியர் ஆகியோர் ஏவியர் ஆவார்கள். (ஆதி 32:2; யோசு 9:7; யோசு 11:19) இவர்களுடைய தேசம் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது (உபா 7:1; உபா 20:17; யாத் 23, யாத் 28; நியா 3:5).

யோசுவா இவர்களை ஜெயித்தார். (யோசு 9:1; யோசு 12:8; யோசு 24:11) பிற்காலத்தில் இவர்கள் சாலொமோனுக்குப் பணிவிடை செய்தார்கள் (1இராஜா 9:21; 2நாளா 8:8).

7. எபூசியர் - இவர்களும் கானானின் சந்ததியார். (ஆதி 10:16; 1நாளா 1:14). இவர்கள் எபூஸ் பட்டணத்தைச் சுற்றிலும் வசித்தவர்கள். இந்தப் பட்டணம் பிற்காலத்தில் எருசலேம் என்று அழைக்கப்படுகிறது (நியா 19:10-11; 1நாளா 11:4-5).

கர்த்தர் தங்களுக்கு கொடுக்கும் கட்டளையை இஸ்ரவேல் புத்திரர் அறிந்திருக்கவேண்டும். கர்த்தருடைய கட்டளைகளில் நிபந்தனைகளும், கட்டுப்பாடுகளும், எல்லைகளும் சேர்ந்திருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திலுள்ள இந்த ஏழுஜாதிகளை மாத்திரமே துரத்திவிடவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தை சுதந்தரிக்கப்போகிறார்கள். அப்போது அவர்கள் கானான் தேசத்திலுள்ள இந்த ஏழுஜாதியாரை, அந்த தேசத்தை விட்டு துரத்திவிடவேண்டும். இது மாத்திரமே கர்த்தருடைய கட்டளை. இஸ்ரவேல் ஜனத்தார் இந்த ஏழுஜாதியாரை தவிர வேறு யாரையும் துரத்திவிடவேண்டுமென்று, கர்த்தர் கட்டளை கொடுக்கவில்லை.

மேலும் கர்த்தர் இங்கு சொல்லுகிற கட்டளை, இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தைச் சுதந்தரிக்கப்போகும்போது, நிறைவேற்றவேண்டிய கட்டளையாகும். இந்தக் கட்டளையை இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுக்கு நித்திய கட்டளையாக எடுத்துக்கொள்ளக்கூடாது. அவர்கள் அந்நிய தேசத்தாரை, அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற தேசங்களிலிருந்து துரத்திவிடுவதற்கு முயற்சி பண்ணக்கூடாது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நேசிப்பதுபோலவே, இந்தப் பூமியிலுள்ள எல்லா ஜாதியாரையும் நேசிக்கிறார். கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, உலகஇரட்சகராகயிருக்கிறார். தம்மிடத்தில் வருகிற எந்த ஜாதியாரையும், எந்த தேசத்தாரையும், கிறிஸ்துவானவர் புறம்பே தள்ளிவிடாமல், அவர்கள் எல்லோரையும் தம்முடைய ஜனமாக ஏற்றுக்கொள்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தைச் சுதந்தரிக்கும்போது, அந்தத் தேசத்தில் வாசம்பண்ணுகிற ஜனம் பெருத்த ஜாதிகளாகிய, ஏத்தியர், கிர்காசியர், எமோரியர், கானானியர், பெரிசியர், ஏவியர், எபூசியர் என்னும் ஏழு பலத்த ஜாதிகளை துரத்திவிடுமாறு கர்த்தர் அவர்களுக்கு கட்டளை கொடுக்கிறார்.

கர்த்தர் இந்த ஜாதியாரை துரத்திவிடுமாறு கட்டளை கொடுக்கும்போது, இஸ்ரவேல் புத்திரர் அந்த ஜாதியாரை, கானான் தேசத்திற்குள்ளே ஏற்றுக்கொள்ளக்கூடாது. அவர்களை கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க அனுமதிக்கக்கூடாது. அவர்களை இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்திற்குள் வரவேற்கவும் கூடாது.

இஸ்ரவேல் புத்திரர் இந்த ஏழு ஜாதியாரையும் துரத்திவிட்டு, முற்றிலுமாய் சங்காரம்பண்ணவேண்டும். அவர்களை சங்காரம்பண்ணாமல், இஸ்ரவேல் ஜனத்தார் அவர்களை தங்களுக்கு அடிமைகளாகவோ, கப்பம் கட்டுகிறவர்களாகவோ ஒடுக்கி வைத்துக்கொள்ளக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர் இந்த ஏழுஜாதியாரையும் முற்றிலுமாய் சங்காரம்பண்ணிவிடவேண்டும்.

எமோரியரின் அக்கிரமம் இப்போது அதிகரித்திருக்கிறது. கர்த்தர் எமோரியர்மீது பழிவாங்கும் அளவுக்கு, அவர்களுடைய அக்கிரமம் இப்போது நிறைவாயிருக்கிறது. எமோரியர் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள். இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருக்கு பரிசுத்தமானவர்கள். கர்த்தருடைய பரிசுத்த வித்தாகயிருக்கிற இஸ்ரவேல் புத்திரர், அவருக்கு அருவருப்பாயிருக்கிற எமோரியரோடும், கர்த்தர் அருவருக்கிற மற்ற புறஜாதியாரோடும் ஐக்கியமாயிருக்கக்கூடாது.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன்னிடத்தில் ஒப்புக்கொடுக்கும்போது, அவர்களை முறிய அடித்து, அவர்களைச் சங்காரம் பண்ணக்கடவாய்; அவர்களோடே உடன்படிக்கைபண்ணவும் அவர்களுக்கு இரங்கவும் வேண்டாம்" (உபா 7:2) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் எமோரியருடைய அக்கிரமங்களினிமித்தமாக, அவர்களை பழிவாங்கும் காலம் வந்திருக்கிறது. இதுவே கர்த்தருக்கு சித்தமான காலம். கர்த்தர் சத்துருக்களை பழிவாங்கும்போது, இஸ்ரவேல் புத்திரர் அவர்களோடு ஐக்கியமாயிருந்து, தங்களைக் கெடுத்துக்கொள்ளக்கூடாது.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் கர்த்தருக்கு பரிசுத்தமானவர்களாய் ஜீவிக்கவேண்டும். நம்முடைய ஆத்துமாக்களிலே, பாவத்திற்கு விரோதமாக யுத்தம் நடைபெறுகிறது. கர்த்தர் நம்முடைய மாம்சத்தின் இச்சைகளை அழித்துப்போடவேண்டுமென்று சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தையினாலும், அவருடைய வாக்குத்தத்தத்தினாலும், நாம் பாவத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணி, நம்முடைய பாவங்களை முற்றிலுமாய் அழித்துப்போடவேண்டும். நம்முடைய மாம்சத்தின் இச்சைகளோடு நாம் சிநேகமாயிருக்கக்கூடாது.

பாவம் நம்மை மேற்கொள்ளவும் கூடாது, அது நம்மை ஆளுகை செய்யவும் கூடாது. நாம் பாவத்திற்கு அனுமதி கொடுத்தால் மாத்திரமே, அந்தப் பாவம் நமக்குள்ளே தங்கியிருக்கும். இஸ்ரவேல் புத்திரர் சத்துருக்களை துரத்திவிட்டு, அவர்களை சங்காரம்பண்ணவேண்டுமென்று கர்த்தர் அவர்களுக்கு கட்டளை கொடுக்கிறார். அதுபோலவே விசுவாசிகளாகிய நாம், நம்முடைய மாம்சத்தின் இச்சைகளை அழித்துவிட்டு, பாவங்களை நம்மைவிட்டு துரத்தவேண்டும் என்று நம்முடைய கர்த்தர் நமக்கு கட்டளை கொடுக்கிறார்.

பாவத்திற்கு விரோதமாக யுத்தம் செய்கிற நாம், பாவத்திற்கு சிநேகிதராயிருக்கக்கூடாது. பாவத்தின்மீது இரக்கம் காண்பிக்கக்கூடாது. பாவத்தோடு சமாதான உடன்படிக்கை பண்ணாமல், அதை முற்றிலுமாக சங்காரம்பண்ணவேண்டும். நம்முடைய பாவங்களை நாம் சிலுவையில் அறையவேண்டும். அப்போதுதான் அந்தப் பாவங்களை நம்மால் முற்றிலுமாய் அழிக்க முடியும்.

கர்த்தர் அழிவுக்கு நியமித்திருக்கிற ஏழுஜாதியாரையும் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பட்டயத்தினால் சங்காரம்பண்ணவேண்டும். புறஜாதியாரில் சிலர் பட்டயத்திற்கு தப்பித்திருக்கலாம். இஸ்ரவேல் புத்திரர் அவர்களோடு விவாக சம்பந்தம் எதுவும் பண்ணக்கூடாது என்று கர்த்தர் கட்டளை கொடுக்கிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "அவர்களோடே சம்பந்தம் கலவாயாக; உன் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடாமலும், அவர்கள் குமாரத்திகளை உன் குமாரருக்குக் கொள்ளாமலும் இருப்பாயாக" (உபா 7:3) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் புறஜாதியாரோடு ஏன் விவாகசம்பந்தம் பண்ணக்கூடாது என்பதற்கான காரணத்தையும், கர்த்தர் இங்கு தெளிவுபடுத்துகிறார்.

"என்னைப் பின்பற்றாமல், அந்நிய தேவர்களைச் சேவிக்கும்படி அவர்கள் உன் குமாரரை விலகப்பண்ணுவார்கள்; அப்பொழுது கர்த்தருடைய கோபம் உங்கள் மேல் மூண்டு, உங்களைச் சீக்கிரத்தில் அழிக்கும்" (உபா 7:4) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் புறஜாதியாரோடு விவாகம்பண்ணுவதினால் தவறு ஒன்றுமில்லை என்று ஒரு சிலர் விவாதம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரரை விவாகம்பண்ணுகிற புறஜாதியார், தங்கள் புறஜாதிமார்க்கத்தை விட்டு விட்டு, யூதமார்க்கத்தைப் பின்பற்றுவார்கள் என்பது இவர்களுடைய விவாதம்.

ஆனாலும், இஸ்ரவேல் புத்திரர் புறஜாதியாரை விவாகம்பண்ணும்போது, புறஜாதியார் யூதமார்க்கத்தை ஏற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு இருப்பதுபோல, இஸ்ரவேல் புத்திரரும், புறஜாதியாரின் விக்கிரகாராதனையை பின்பற்றிப்போகும் ஆபத்தும் இருக்கிறது. "என்னைப் பின்பற்றாமல், அந்நிய தேவர்களைச் சேவிக்கும்படி அவர்கள் உன் குமாரரை விலகப்பண்ணுவார்கள்" என்று கர்த்தரும் இஸ்ரவேல் புத்திரரை எச்சரிக்கிறார். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கும்போது, ஆபத்துக்களுக்கு விலக்கி பாதுகாப்பாயிருக்கலாம்.

விக்கிரகாராதனைக்காரரோடு விவாகசம்பந்தம் பண்ணுகிறவர்கள், அவர்களுடைய விக்கிரகங்களோடு விவாகசம்பந்தம் பண்ணுகிறார்கள். விக்கிரகங்களை விவாகம்பண்ணுகிறவர்கள், அந்த விக்கிரகங்களோடு ஐக்கியமாயிருப்பார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் பிரவேசிக்கும்போது, விக்கிரகாராதனைக்காரரோடு எந்த விதமான சம்பந்தமும் பண்ணக்கூடாது என்று கர்த்தர் எச்சரிக்கிறார். கானான் தேசம் கர்த்தருடைய தேசம். அந்த தேசம் அவருக்கு பரிசுத்தமான தேசம். கானான் தேசத்தில் விக்கிரங்களோ, மேடைகளோ இருக்கக்கூடாது என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீங்கள் அவர்களுக்குச் செய்யவேண்டியது என்னவென்றால்: அவர்கள் பலிபீடங்களை இடித்து, அவர்கள் சிலைகளைத் தகர்த்து, அவர்கள் தோப்புகளை வெட்டி, அவர்கள் விக்கிரகங்களை அக்கினியிலே எரித்துப்போடவேண்டும்" (உபா 7:5) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தர்மீது பக்தி வைராக்கியமாயிருந்து, புறஜாதியாரின் சிலைகளை தகர்த்துப்போடவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் பிற்காலத்தில் விக்கிரகாராதனையில் ஈடுபடக்கூடாது என்றால், அவர்கள் இப்போதோ கானான் தேசத்திலிருந்து விக்கிரகங்களை அக்கினியிலே எரித்துப்போட்டு, தேசத்திலே விக்கிரகங்கள் இராதவாறு, அதை சுத்தம்பண்ண வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலமாக, இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே விக்கிரகாராதனை, ஒரு கொள்ளை நோயைப்போல பரவுவதை தடைபண்ண முடியும்.

இஸ்ரவேல் புத்திரர் கானானை ஜெயிக்கும்போது செய்ய வேண்டிய காரியங்களாவன :

1. அவர்களை முறிய அடித்து சங்காரம் பண்ண வேண்டும்.

2. அவர்களோடு உடன்படிக்கை பண்ணக் கூடாது.

3. அவர்களுக்கு இரங்கக்கூடாது.

4. அவர்களோடு திருமண சம்பந்தம் பண்ணக்கூடாது. (உபா 7:3).

5. தங்கள் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடுக்கக்கூடாது. அவர்கள் குமாரத்திகளை தங்கள் குமாரருக்குக் கொள்ளக்கூடாது.

6. அவர்கள் பலிபீடங்களை இடித்து, அவர்கள் சிலைகளைத் தகர்த்து, அவர்கள் தோப்புகளை வெட்டி, அவர்கள் விக்கிரகங்களை அக்கினியிலே எரித்துப் போடவேண்டும். (உபா 7:5).

இஸ்ரவேல் ஜனத்தார், கானான் தேசத்தில் வாசம்பண்ணுகிற புறஜாதி ஜனங்களுக்கு இரங்கக்கூடாது. குற்றம் செய்தவனுக்கு நியாயம் பண்ணும் போது அவனுக்கு இரக்கம் காண்பிக்கக்கூடாது. இந்தத் தேசத்தாரின் பாவமான கிரியைகளைப் பற்றி லேவி 18 ஆவது அதிகாரத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

கர்த்தர் கானான் தேசத்தாரைச் சங்காரம் பண்ணச் சொல்லுவதற்குக் காரணங்கள் :

1. என்னைப் பின்பற்றாமல், அந்நிய தேவர்களைச் சேவிக்கும்படி அவர்கள் உன் குமாரரை விலகப்பண்ணுவார்கள்.

2. அவர்கள் உங்களை விக்கிரகாராதனைக் காரர்களாக்கி விடுவார்கள்.

3. நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம் (உபா 7:6).

4. பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்து கொண்டார்.

கர்த்தர் கிருபையுள்ளவர். இரக்கமுள்ளவர். மன்னிக்கிறவர். அதேசமயத்தில் அவர் நீதியுள்ளவர். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர்கள் தம்முடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டுமென்று கர்த்தர் எச்சரித்து கூறியிருக்கிறார். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதம் வரும். கர்த்தருக்கு எதிராகக் கலகம் பண்ணினால் சாபம் வரும். நம்முடைய பாவங்களைக் கர்த்தரிடத்தில் அறிக்கையிடும்போது அவர் அந்தப் பாவங்களைத் தமது கிருபையினால்மூடி, நம்மை மன்னிக்கிறார்.

கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் இடையே உள்ள விசேஷித்த ஐக்கியத்தை மோசே இந்த வசனப்பகுதியில் தெளிவுபடுத்துகிறார். "நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொண்டார்" (உபா 7:6) என்று மோசே சொல்லுகிறார்.

கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் இடையே உள்ள உறவைப்பற்றிய விவரம் வருமாறு :

1. கர்த்தருடைய ஜனம். (யாத் 3:7)

2. விசேஷித்த சம்பத்து (யாத் 19:5; உபா 26:18)

3. ஞானமும், விவேகமும் உள்ள ஜனம் (உபா 4:6)

4. கர்த்தருக்குச் சுதந்தரமான ஜனம் (உபா 4:20)

5. பரிசுத்த ஜனம் (உபா 7:6; உபா 14:2,21)

6. கர்த்தருக்குச் சொந்தமான ஜனம். (உபா 7:6)

7. விசேஷித்த ஜனம். (உபா 14:2; 1பேதுரு 2:9)

8. தேவனுடைய ஜனம். (2சாமு 14:13)

9. பூர்வகாலத்து ஜனம் (ஏசா 44:7)

10. பரிசுத்த தேசம். (1பேதுரு 2:9)

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை தம்முடைய ஜனமாக தெரிந்துகொண்டதற்கு, அவருடைய அன்பே பிரதான காரணம். அவர் இஸ்ரவேல் புத்திரரை தெரிந்துகொண்டதற்கு, அவர்களுடைய பக்தியோ, பரிசுத்தமோ, பெலமோ, விசேஷித்த நற்குணங்களோ காரணமல்ல.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "சகல ஜனங்களிலும் நீங்கள் திரட்சியான ஜனமென்று கர்த்தர் உங்கள்பேரில் அன்புவைத்து உங்களைத் தெரிந்து கொள்ளவில்லை; நீங்கள் சகல ஜனங்களிலும் கொஞ்சமாயிருந்தீர்கள்" (உபா 7:7) என்றும்,

"கர்த்தர் உங்களில் அன்புகூர்ந்ததினாலும், உங்கள் பிதாக்களுக்கு இட்ட ஆணையைக் காக்கவேண்டும் என்பதினாலும்; கர்த்தர் பலத்த கையினால் உங்களைப் புறப்படப்பண்ணி, அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்தும் அதின் ராஜாவான பார்வோனின் கையினின்றும் உங்களை மீட்டுக்கொண்டார்" (உபா 7:8) என்றும் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைத் தெரிந்து கொண்டதற்குக் காரணங்கள் :

1. கர்த்தர் அவர்களில் அன்புகூர்ந்தார்.

2. கர்த்தர் அவர்களுடைய பிதாக்களுக்கு இட்ட ஆணையைக் காக்கவேண்டுமென்று சித்தம் கொண்டிருந்தார்.

கர்த்தருடைய பெரிதான கிருபையினாலேயே, இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு சொந்தமான ஜனமாகயிருக்கிறார்கள். கர்த்தர் அவர்கள்மீது அன்பு வைத்து, அவர்களை தமக்கு சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொண்டார்.

"நான் அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவேன்; அவர்களை மனப்பூர்வமாய்ச் சிநேகிப்பேன்; என் கோபம் அவர்களை விட்டு நீங்கிற்று" (ஓசி 14:4).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருந்தார்கள். கர்த்தர் அவர்களை தம்முடைய பலத்த கையினால் புறப்படப்பண்ணி, அவர்களை அடிமைத்தன வீடாகிய எகிப்திலின்றும், எகிப்தின் ராஜாவாகிய பார்வோனின் கையினின்றும் மீட்டுக்கொண்டார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக்கொண்டதற்கு, அவர் அவர்கள்மேல் அன்புகூர்ந்ததும், அவர் இஸ்ரவேல் புத்திரருடைய முற்பிதாக்களுக்கு இட்ட ஆணையை காக்கவேண்டும் என்பதுமே காரணம்.

கர்த்தர் இஸ்ரவேலின் முற்பிதாக்களுக்கு ஆணையிட்டு கொடுத்தது மாத்திரமல்ல, அவர்களுக்கு தம்முடைய வாக்குத்தத்தங்களையும் கொடுத்திருக்கிறார். மோசே இந்த வசனப்பகுதியில், கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருடைய முற்பிதாக்களுக்கு சொன்ன வாக்குத்தத்தங்களையும் நினைவுபடுத்துகிறார்.

தேவன் இஸ்ரவேல் புத்திரருக்குச் செய்திருக்கும் காரியங்கள் :

1. கர்த்தர் பலத்த கையினால் அவர்களைப் புறப்படப்பண்ணினார்.

2. அடிமைத்தன வீடாகிய எகிப்திலின்றும் அதின் ராஜாவான பார்வோனின் கையினின்றும் அவர்களை மீட்டுக் கொண்டார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "ஆகையால் உன் தேவனாகிய கர்த்தரே தேவன் என்றும், தம்மில் அன்புகூர்ந்து, தமது கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் ஆயிரம் தலைமுறைமட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன் என்றும், தம்மைப் பகைக்கிறவர்களுக்குப் பிரத்தியட்சமாய்ப் பதிலளித்து அவர்களை அழிப்பார் என்றும், தம்மைப் பகைக்கிறவனுக்கு அவர் தாமதியாமல் பிரத்தியட்சமாய்ப் பதிலளிப்பார் என்றும் நீ அறியக்கடவாய்" (உபா 7:9,10) என்று சொல்லுகிறார்.

தேவனைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டிய காரியங்கள் :

1. தேவனாகிய கர்த்தரே தேவன்.
2. உண்மையுள்ள தேவன்
3. தமது உடன்படிக்கையைக் காக்கிறவர்.
4. தமது கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்குத் தயவைக் காண்பிக்கிற தேவன்.
5. ஆயிரம் தலைமுறைமட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காக்கிறவர்.
6. தம்மைப் பகைக்கிறவர்களுக்குப் பிரத்தியட்சமாய்ப் பதிலளித்து அவர்களை அழிக்கிறவர்.
7. தம்மைப் பகைக்கிறவனுக்கு அவர் தாமதியாமல் பிரத்தியட்சமாய்ப் பதிலளிக்கிறவர்.

கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் தங்களுடைய ஜீவியங்களிலே சித்திக்கவேண்டுமென்றால், இஸ்ரவேல் புத்திரர், கர்த்தர் தங்களுக்கு கட்டளையிடுகிற கற்பனைகளையும், கட்டளைகளையும் நியாயங்களையும், கைக்கொள்ளவேண்டும் (உபா 7:11).

கர்த்தர் தம்முடைய வார்த்தையிலும், உடன்படிக்கையிலும் உண்மையுள்ளவராயிருப்பார். இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். அவர்கள் கர்த்தரோடு கூடயிருந்தால், அவரும் அவர்களோடு கூடயிருப்பார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை விட்டு விலகிப்போனால், கர்த்தரும் அவர்களை விட்டு விலகிப்போய்விடுவார்.

இஸ்ரவேலருக்கு வாக்குத்தத்தம் உபா 7:12-26

உபா 7:12. இந்த நியாயங்களை நீங்கள் கேட்டு, கைக்கொண்டு, அவைகளின்படி செய்வீர்களானால், அப்பொழுது உன் தேவனாகிய கர்த்தர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த உடன்படிக்கையையும் கிருபையையும் உனக்காகக் காத்து,

உபா 7:13. உன்மேல் அன்புவைத்து, உன்னை ஆசீர்வதித்து, உனக்குக் கொடுப்பேன் என்று உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தில் உன்னைப் பெருகப்பண்ணி, உன் கர்ப்பக்கனியையும், உன் நிலத்தின் கனிகளாகிய உன் தானியத்தையும், உன் திராட்சரசத்தையும், உன் எண்ணெயையும், உன் மாடுகளின் பலனையும், உன் ஆட்டுமந்தைகளையும் ஆசீர்வதிப்பார்.

உபா 7:14. சகல ஜனங்களைப்பார்க்கிலும் நீ ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்; உங்களுக்குள்ளும் உங்கள் மிருகஜீவன்களுக்குள்ளும் ஆணிலாகிலும் பெண்ணிலாகிலும் மலடிருப்பதில்லை.

உபா 7:15. கர்த்தர் சகல நோய்களையும் உன்னை விட்டு விலக்குவார்; உனக்குத் தெரிந்திருக்கிற எகிப்தியரின் கொடிய ரோகங்களில் ஒன்றும் உன்மேல் வரப்பண்ணாமல், உன்னைப் பகைக்கிற யாவர்மேலும் அவைகளை வரப்பண்ணுவார்.

உபா 7:16. உன் தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் ஒப்புக்கொடுக்கும் சகல ஜனங்களையும் நிர்மூலமாக்கக்கடவாய்; உன் கண் அவர்களுக்கு இரங்காதிருப்பதாக; அவர்கள் தேவர்களை நீ சேவியாமல் இருப்பாயாக; அது உனக்குக் கண்ணியாயிருக்கும்.

உபா 7:17. அந்த ஜாதிகள் என்னிலும் ஜனம் பெருத்தவைகள், நான் அவர்களைத் துரத்திவிடுவது எப்படி என்று உன் இருதயத்தில் சொல்லிக்கொண்டாயானால்,

உபா 7:18. உன் தேவனாகிய கர்த்தர் பார்வோனுக்கும் எகிப்தியர் யாவருக்கும் செய்ததையும்,

உபா 7:19. உன் கண்கள் கண்ட பெரிய சோதனைகளையும், அடையாளங்களையும் அற்புதங்களையும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னைப் புறப்படப்பண்ணிக் காண்பித்த பலத்த கையையும் ஓங்கிய புயத்தையும் நன்றாய் நினைத்து, அவர்களுக்குப் பயப்படாதிரு; நீ பார்த்துப் பயப்படுக்கிற எல்லா ஜனங்களுக்கும் உன் தேவனாகிய கர்த்தர் அப்படியே செய்வார்.

உபா 7:20. மீதியாயிருந்து உனக்குத் தப்பிஒளித்துக்கொள்ளுகிறவர்களும் அழிந்து போகுமட்டும் உன் தேவனாகிய கர்த்தர் அவர்களுக்குள்ளே குளவிகளை அனுப்புவார்.

உபா 7:21. அவர்களைப் பார்த்துப் பயப்படவேண்டாம்; உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குள்ளே இருக்கிறார், அவர் வல்லமையும் பயங்கரமுமான தேவன்.

உபா 7:22. அந்த ஜாதிகளை உன் தேவனாகிய கர்த்தர் கொஞ்சம் கொஞ்சமாய் உன்னை விட்டுத் துரத்திவிடுவார்; நீ அவர்களை ஒருமிக்க நிர்மூலமாக்கவேண்டாம்; நிர்மூலமாக்கினால் காட்டுமிருகங்கள் உன்னிடத்தில் பெருகிப்போகும்.

உபா 7:23. உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன்னிடத்தில் ஒப்புக்கொடுத்து, அவர்கள் அழியுமட்டும் அவர்களை மிகவும் கலங்கடிப்பார்.

உபா 7:24. அவர்களுடைய ராஜாக்களை உன் கையில் ஒப்புக்கொடுப்பார்; அவர்கள் பேர் வானத்தின்கீழ் இராதபடிக்கு அவர்களைச் சங்கரிக்கக்கடவாய்; நீ அவர்களைச் சங்கரித்துத் தீருமட்டும் ஒருவரும் உனக்கு எதிர்த்து நிற்கமாட்டார்கள்.

உபா 7:25. அவர்கள் தேவர்களின் விக்கிரகங்களை அக்கினியினால் சுட்டெரிக்கக்கடவாய்; நீ அவைகளால் சிக்கிக்கொள்ளாதபடிக்கு, அவைகளில் இருக்கிற வெள்ளியையும் பொன்னையும் இச்சியாமலும், அதை எடுத்துக்கொள்ளாமலும் இருப்பாயாக; அவைகள் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவைகள்.

உபா 7:26. அவைகளைப்போல நீ சாபத்துக்குள்ளாகாதபடி, அருவருப்பானதை உன் வீட்டிலே கொண்டுபோகாயாக; அதைச் சீ என்று வெறுத்து முற்றிலும் அருவருக்கக்கடவாய், அது சாபத்திற்குள்ளானது.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு உபதேசம்பண்ணும்போது, விக்கிரகாராதனைக்கு விரோதமான காரியங்களை அவர்களுக்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார். அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயங்களையும் கைக்கொள்ளவேண்டும். இதுவே மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு, மறுபடியும் மறுபடியுமாய்ச் சொல்லுகிற அடிப்படை உபதேசமாயிருக்கிறது.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "ஆகையால் நீ செய்யும்படி நான் இன்று உனக்குக் கட்டளையிடுகிற கற்பனைகளையும் கட்டளைகளையும் நியாயங்களையும் கைக்கொள்வாயாக. இந்த நியாயங்களை நீங்கள் கேட்டு, கைக்கொண்டு, அவைகளின்படி செய்வீர்களானால், அப்பொழுது உன் தேவனாகிய கர்த்தர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த உடன்படிக்கையையும் கிருபையையும் உனக்காகக் காத்து, உன்மேல் அன்புவைத்து, உன்னை ஆசீர்வதித்து, உனக்குக் கொடுப்பேன் என்று உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தில் உன்னைப் பெருகப்பண்ணி, உன் கர்ப்பக்கனியையும், உன் நிலத்தின் கனிகளாகிய உன் தானியத்தையும், உன் திராட்சரசத்தையும், உன் எண்ணெயையும், உன் மாடுகளின் பலனையும், உன் ஆட்டுமந்தைகளையும் ஆசீர்வதிப்பார்" (உபா 7:11-13) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய நியாயங்களைக் கேட்டு, அவைகளின்படி செய்தால், கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பார். அவர்களுடைய கர்ப்பத்தின் கனிகளையும், மிருகஜீவன்களையும், விளைச்சலையும் ஆசீர்வதிப்பார். "சகல ஜனங்களைப்பார்க்கிலும் நீ ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்; உங்களுக்குள்ளும் உங்கள் மிருக ஜீவன்களுக்குள்ளும் ஆணிலாகிலும் பெண்ணிலாகிலும் மலடிருப்பதில்லை" (உபா 7:14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்தில் காணப்படுகிற சகலவிதமான விக்கிரகாராதனைகளை விட்டு விலகி ஜீவிக்கவேண்டும். அப்போது, "கர்த்தர் சகல நோய்களையும் உன்னை விட்டு விலக்குவார்; உனக்குத் தெரிந்திருக்கிற எகிப்தியரின் கொடிய ரோகங்களில் ஒன்றும் உன்மேல் வரப்பண்ணாமல், உன்னைப் பகைக்கிற யாவர்மேலும் அவைகளை வரப்பண்ணுவார்" (உபா 7:15) என்று மோசே சொல்லுகிறார்.

"கர்த்தர் சகல நோய்களையும் உன்னை விட்டு விலக்குவார்" என்று கர்த்தர் மூன்றாம் முறையாக இந்த வாக்குத்தத்தத்தைக் கூறுகிறார். இஸ்ரவேல் புத்திரர்மீது வியாதியும், ரோகமும் வராது. (யாத் 15:26; யாத் 23:25; சங் 91; சங் 103:3; ஏசா 53; ஏசா 58).

வியாதி என்பதற்கான எபிரெய வார்த்தை "கோலி" என்னும் வார்த்தையிலிருந்து வந்திருக்கிறது. கோலி என்னும் எபிரெய வார்த்தை "காலா" என்னும் எபிரெய வார்த்தையிலிருந்து வந்திருக்கிறது. இதற்கு வியாதிப்படுதல் என்று பொருள்.

ரோகம் என்பதற்கான எபிரெய வார்த்தை "மகலா" என்பதாகும். மனுஷனுடைய பாவத்தின் விளைவினால் அவனுக்கு வியாதியும், ரோகமும் வருகிறது. பாவத்தின் சம்பளம் மரணம். தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பின் பிரகாரம் மனுஷருக்கு வியாதி வருகிறது. சாத்தானுடைய அந்தகாரச் சக்திகள் மனுஷனைப் பாவம் செய்யுமாறு தூண்டுகின்றன. மனுஷன் தன்னைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கும்போது அவன் பாவம் செய்கிறான். அவன் செய்த பாவத்தின் விளைவினால் அவனுக்கு வியாதியும், ரோகமும் வருகிறது.

ரோகம் என்னும் வார்த்தையும், "காலா" என்னும் எபிரெய வார்த்தையிலிருந்தே வந்திருக்கிறது. உபா 7:15 ஆவது வசனத்தில் "ரோகம்" என்பதற்கான எபிரெய வார்த்தை "மத்வே" என்பதாகும். இது இந்த வசனத்திலும், எண் 28:60 ஆவது வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பண்ணியபோது, எகிப்தியரைத் தண்டிப்பதற்காக அவர்கள்மீது வாதைகளை வரப்பண்ணினார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கும்போது, அந்த வாதைகளில் எதுவும் அவர்கள்மீது வராது.

கர்த்தர் தமது நீதியினால் எகிப்து தேசத்தின்மீது வரப்பண்ணின வாதைகளை தவிர, அந்த தேசமானது ஏற்கெனவே பலவிதமான நோய்களினாலும், கொடிய ரோகங்களினாலும் வாதிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் விக்கிரகங்களை ஆராதிப்பதினால் எகிப்து தேசம் கொடிய வியாதிகளினாலும் நோய்களினாலும் சபிக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய நியாயங்களைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்யும்போது, கர்த்தர் அவர்களை எகிப்தியர் மத்தியிலே காணப்படுகிற சகல நோய்களுக்கும், கொடிய ரோகங்களுக்கும் விலக்கிப் பாதுகாத்துக்கொள்வார்.

எகிப்தியர் மத்தியிலே காணப்படுகிற நோய்களும், சகல ரோகங்களும், அவர்களுடைய தேசத்தின் மொத்த பாவங்களினால் வந்த வியாதிகளாகும். ஒரு தேசம் முழுவதும் பாவம் செய்யும்போது, அந்த தேசம் முழுவதின்மேலும் கர்த்தருடைய கோபம் வருகிறது.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் பிரவேசிக்கும்போது, அந்த தேசத்திலிருக்கிற புறஜாதி ஜனங்களை முற்றிலுமாய் நிர்மூலம்பண்ணவேண்டும். "உன் தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் ஒப்புக்கொடுக்கும் சகல ஜனங்களையும் நிர்மூலமாக்கக்கடவாய்; உன் கண் அவர்களுக்கு இரங்காதிருப்பதாக; அவர்கள் தேவர்களை நீ சேவியாமல் இருப்பாயாக; அது உனக்குக் கண்ணியாயிருக்கும்" (உபா 7:16) என்று மோசே சொல்லுகிறார்.

நிர்மூலம் பண்ணுதல் அல்லது பட்சித்தல் என்னும் வாக்கியம் பலவிதமாகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. அவையாவன:

1. ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும் போது பகலிலே வெயிலும், இரவிலே குளிரும் யாக்கோபைப் பட்சித்தது. (ஆதி 31:40).

2. தாயின் கர்ப்பத்தில் பாதி மாம்சம் அழுகி, செத்து விழுந்த பிள்ளை (எண் 12:12).

3. மோவாபுடைய ஆர் என்னும் ஊரையும், அர்னோனுடைய மேடுகளிலுள்ள ஆண்டவமார்களையும், அக்கினியின் ஜுவாலையும் பட்சித்தது (எண் 21:28).

4. அக்கினி கற்பாறையிலிருந்து எழும்பி, இறைச்சியையும், புளிப்பில்லாத அப்பங்களையும் பட்சித்தது (நியா 6:21)

இந்த வசனங்களிலெல்லாம் பட்சித்தல் என்பதைக் குறிப்பதற்கு "ஆகல்" என்னும் வார்த்தையே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய சத்துருக்களுக்கு இரக்கம் காண்பித்தால் அவர்கள் இஸ்ரவேலரை வஞ்சித்து விடுவார்கள். அவர்களோடு கலந்தால் அவர்கள் இஸ்ரவேலரை விக்கிரகாராதனைக்கும், வேசித்தனத்திற்கும் வழிநடத்துவார்கள். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரருடைய கண்கள் தங்களுடைய சத்துருக்களுக்கு இரங்கக்கூடாது.

கானான் தேசத்திலே, இஸ்ரவேல் புத்திரரைப் பார்க்கிலும், ஜனம் பெருத்த ஜாதிகளாகிய ஏத்தியர், கிர்காசியர், எமோரியர், கானானியர், பெரிசியர், ஏவியர், எபூசியர் என்னும் ஏழு பலத்த ஜாதிகள் இருக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் இவர்கள் எல்லோரையும் கானான் தேசத்தை விட்டு துரத்தவேண்டும்.

கர்த்தரே இஸ்ரவேல் புத்திரரை கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு போகிறார். கானான் தேசத்திலிருக்கிற புறஜாதியார் ஜனம் பெருத்தவர்களாகயிருந்தாலும், கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்காக யுத்தம்பண்ணுவார். யுத்தம் கர்த்தருடையது. கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர். அவர் சேனைகளின் கர்த்தர். இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய சொந்த பலத்தினாலோ, பராக்கிரமத்தினாலோ, சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண முடியாது. அவர்கள் தங்களுடைய பலவீனத்தையும் சொற்ப எண்ணிக்கையையும் நினைத்து சோர்ந்துபோய்விடக்கூடாது.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "அந்த ஜாதிகள் என்னிலும் ஜனம் பெருத்தவைகள், நான் அவர்களைத் துரத்திவிடுவது எப்படி என்று உன் இருதயத்தில் சொல்லிக்கொண்டாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பார்வோனுக்கும் எகிப்தியர் யாவருக்கும் செய்ததையும், உன் கண்கள் கண்ட பெரிய சோதனைகளையும், அடையாளங்களையும் அற்புதங்களையும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னைப் புறப்படப்பண்ணிக் காண்பித்த பலத்த கையையும் ஓங்கிய புயத்தையும் நன்றாய் நினைத்து, அவர்களுக்குப் பயப்படாதிரு; நீ பார்த்துப் பயப்படுகிற எல்லா ஜனங்களுக்கும் உன் தேவனாகிய கர்த்தர் அப்படியே செய்வார்" (உபா 7:17-19) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் எகிப்து தேசத்திலே இஸ்ரவேல் புத்திரருக்காக செய்த கிரியைகளின் விவரம் வருமாறு :

1. பார்வோனையும், அவன் சேனையையும் அழித்தார்.

2. எகிப்தியரை அழித்தார்.

3. பெரிய சோதனைகளைக் காண்பித்தார்.

4. அடையாளங்களைக் காண்பித்தார்.

5. அற்புதங்களைச் செய்தார்.

6. பலத்த கையினால் இஸ்ரவேலரை வழிநடத்தினார்.

7. ஓங்கிய புயத்தினால் இஸ்ரவேலரைப் பாதுகாத்தார்.

கானான் தேசத்திலிருக்கிற புறஜாதியார், இஸ்ரவேல் புத்திரருடைய பட்டயங்களுக்கு தப்பித்து ஓடினாலும், கர்த்தர் அவர்களை நிர்மூலம்பண்ணுவார். "மீதியாயிருந்து உனக்குக் தப்பிஒளித்துக்கொள்ளுகிறவர்களும் அழிந்து போகுமட்டும் உன் தேவனாகிய கர்த்தர் அவர்களுக்குள்ளே குளவிகளை அனுப்புவார். அவர்களைப் பார்த்துப் பயப்படவேண்டாம்; உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குள்ளே இருக்கிறார், அவர் வல்லமையும் பயங்கரமுமான தேவன்" (உபா 7:20,21) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு உற்சாகமான வார்த்தைகளை சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது அவர்களை மொத்தமாக நிர்மூலம்பண்ணுவார். ஆனாலும் கர்த்தர் அவர்களை ஒருமிக்க நிர்மூலம்பண்ணாமல், அவர்களை கொஞ்சம் கொஞ்சமாய் நிர்மூலம்பண்ணுவார். "அந்த ஜாதிகளை உன் தேவனாகிய கர்த்தர் கொஞ்சம் கொஞ்சமாய் உன்னை விட்டுத் துரத்திவிடுவார்; நீ அவர்களை ஒருமிக்க நிர்மூலமாக்கவேண்டாம்; நிர்மூலமாக்கினால் காட்டுமிருகங்கள் உன்னிடத்தில் பெருகிப்போகும்" (உபா 7:22) என்று மோசே சொல்லுகிறார்.

இக்காலத்திலும் விசுவாசிகளுக்கு விரோதமாகவும், கர்த்தருடைய சபைக்கு விரோதமாகவும் சத்துருக்கள் எழும்பி யுத்தம்பண்ணுகிறார்கள். சில சமயங்களில் சத்துருக்களுக்கு விரோதமான யுத்தத்தில் நமக்கு உடனே ஜெயம் கிடைக்கவில்லையென்றும், சத்துருக்கள் உடனே நிர்மூலமாகவில்லையென்றும் நினைத்து, நாம் சோர்ந்துபோகிறோம். சத்துருக்கள் உடனே அழிந்துபோகாவிட்டாலும் நாம் சோர்ந்துபோகக்கூடாது. கர்த்தருடைய கரம் சத்துருக்களுக்கு விரோதமாக நீட்டப்பட்டிருக்கிறது. கர்த்தர் தம்முடைய வார்த்தையின் பிரகாரமாக, தம்முடைய சத்துருக்களை தமக்கு சித்தமான வேளையிலே, கொஞ்சம் கொஞ்சமாய் நிர்மூலம்பண்ணுவார். முடிவிலே சத்துருக்கள் முழுவதுமாக நிர்மூலமாவார்கள்.

விசுவாசிகளாகிய நாம் கர்த்தருடைய வேளைக்காக காத்திருக்கவேண்டும். கர்த்தருடைய வழிகளை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய வழியே நமக்கு எப்போதும் நல்ல வழியாக இருக்கும். பாவிகள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும். பாவிகள் உடனே நியாயந்தீர்க்கப்பட்டு, அழிந்துபோகாவிட்டாலும், அவர்களுக்கு அழிவு நியமிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் நியமித்திருக்கிற காலத்திலே துன்மார்க்கருக்கு நிச்சயமாக அழிவு வரும்.

"உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன்னிடத்தில் ஒப்புக்கொடுத்து, அவர்கள் அழியுமட்டும் அவர்களை மிகவும் கலங்கடிப்பார். அவர்களுடைய ராஜாக்களை உன் கையில் ஒப்புக்கொடுப்பார்; அவர்கள் பேர் வானத்தின்கீழ் இராதபடிக்கு அவர்களைச் சங்கரிக்கக்கடவாய்; நீ அவர்களைச் சங்கரித்துத் தீருமட்டும் ஒருவரும் உனக்கு எதிர்த்து நிற்கமாட்டார்கள்" (உபா 7:23,24) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு, இதற்கு முன்பு கர்த்தருடைய வார்த்தையை சொன்னபோது, "அவர்கள் பலிபீடங்களை இடித்து, அவர்கள் சிலைகளைத் தகர்த்து, அவர்கள் தோப்புகளை வெட்டி, அவர்கள் விக்கிரகங்களை அக்கினியிலே எரித்துப்போடவேண்டும்" (உபா 7:5) என்று சொன்னார். இப்போது மோசே மறுபடியுமாய், கானான் தேசத்திலுள்ள விக்கிரகங்களை அழித்துப்போடவேண்டுமென்று, இஸ்ரவேல் புத்திரருக்கு உபதேசம்பண்ணுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "அவர்கள் தேவர்களின் விக்கிரகங்களை அக்கினியினால் சுட்டெரிக்கக்கடவாய்; நீ அவைகளால் சிக்கிக்கொள்ளாதபடிக்கு, அவைகளில் இருக்கிற வெள்ளியையும் பொன்னையும் இச்சியாமலும், அதை எடுத்துக்கொள்ளாமலும் இருப்பாயாக; அவைகள் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவைகள். அவைகளைப்போல நீ சாபத்துக்குள்ளாகாதபடி அருவருப்பானதை உன் வீட்டிலே கொண்டுபோகாயாக; அதைச் சீ என்று வெறுத்து முற்றிலும் அருவருக்கக்கடவாய், அது சாபத்திற்குள்ளானது" (உபா 7:25,26) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இந்த வசனப்பகுதியில் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஒரு சில ஆசீர்வாதங்களை சொல்லியிருக்கிறார். அவற்றின் விவரம் வருமாறு :

1. உன்னோடு உடன்படிக்கையைக் காப்பேன். (உபா 7:12).

2. கிருபையைக் காண்பிப்பேன்.

3. உன்மேல் அன்புவைப்பேன். (உபா 7:13).

4. உன்னை ஆசீர்வதிப்பேன்.

5. உன்னைப் பெருகப்பண்ணுவேன்.

6. உன் கர்ப்பக்கனிகளை ஆசீர்வதிப்பேன்.

7. உன் நிலத்தின் கனிகளை ஆசீர்வதிப்பேன்.

8. உன் தானியத்தை ஆசீர்வதிப்பேன்.

9. உன் திராட்சரசத்தை ஆசீர்வதிப்பேன்.

10. உன் எண்ணெயை ஆசீர்வதிப்பேன்.

11. உன் மாடுகள் அதிகரிக்கும்.

12. உன் ஆட்டுமந்தைகள் அதிகரிக்கும்.

13. சகல ஜனங்களைப் பார்க்கிலும் நீ ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய் (உபா 7:14).

14. ஆணிலாகிலும், பெண்ணிலாகிலும் மலடு இருப்பதில்லை.

15. உன் மிருகஜீவன்கள் மலடாயிருப்பதில்லை.

16. கர்த்தர் சகல நோய்களையும் உன்னைவிட்டு விலக்குவார்(உபா 7:15).

17. கொடிய ரோகங்களில் ஒன்றும் உன்மேல் வரப்பண்ணார்.

18. உன்னைப் பகைக்கிற யாவர்மேலும் அவற்றை வரப்பண்ணுவார்.

19. உன் சத்துருக்கள்மீது உனக்கு வெற்றியைத் தருவார். (உபா 7:16).

20. அவர்களை உன் கையில் ஒப்புக் கொடுப்பார்.

21. பார்வோனைப்போல அவர்களை அழிப்பார். (உபா 7:17-19).

22. கர்த்தர் அவர்களுக்குள்ளே குளவிகளை அனுப்பி, அவர்களை அழிப்பார். (உபா 7:20).

23. கர்த்தர் உங்களுக்குள்ளே இருக்கிறார். (உபா 7:21).

24. சத்துருக்களைக் கொஞ்சம் கொஞ்சமாக உன்னைவிட்டு துரத்திவிடுவார். (உபா 7:22).

25. அவர்கள் அழியுமட்டும் கர்த்தர் அவர்களை உன்னிடத்தில் ஒப்புக் கொடுப்பார். (உபா 7:23).

26. அவர்களுடைய ராஜாக்களை உன்கையில் ஒப்புக்கொடுப்பார். (உபா 7:24).

27. ஒருவரும் உனக்கு எதிர்த்து நிற்கமாட்டார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆசீர்வாதங்களை சொல்லும்போது, அந்த ஆசீர்வாதங்களோடு சேர்த்து ஒரு சில நிபந்தனைகளையும் சொல்லுகிறார். அந்த நிபந்தனைகளின் விவரம் வருமாறு :

1. கர்த்தருடைய கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயங்களையும் கைக்கொள்ள வேண்டும். (உபா 7:11).

2. உன் கண்கள் சத்துருக்களுக்கு இரங்கக்கூடாது. அவர்களை நிர்மூலம் பண்ண வேண்டும். (உபா 7:16).

3. அவர்களுடைய தேவர்களைச் சேவிக்கக்கூடாது.

4. உன்னைச் சுற்றிலுமுள்ள ஜனங்களைப் பார்த்து பயப்படக்கூடாது. (உபா 7:18).

5. அவர்கள் தேவர்களின் விக்கிரகங்களை அக்கினியினால் சுட்டெரிக்க வேண்டும். (உபா 7:25).

6. விக்கிரகங்களில் இருக்கிற பொன்னையும், வெள்ளியையும் இச்சிக்கக்கூடாது. அவற்றை எடுத்துக் கொள்ளவும் கூடாது.

7. உன் வீட்டிற்குள் அருவருப்பானதைக் கொண்டுவரக்கூடாது. (உபா 7:25-26).

கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் அவர் கொடுக்கும் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படியும்போது வருகிறது. நாம் கர்த்தருடைய உடன்படிக்கையில் நமது பகுதியைச் செய்யும்போது, கர்த்தர் தமது பகுதியைச் செய்வதில் உண்மையுள்ளவர். தம்முடைய வாக்குத்தத்தங்கள் எல்லாவற்றையும் கர்த்தர் காத்துக்கொள்வார்.

8 அதிகாரம்

உபாகமம் 6-ஆவது அதிகாரத்தில், பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு கர்த்தருடைய பிரமாணங்களையும், கட்டளைகளையும், நியாயங்களையும் உபதேசம்பண்ணவேண்டுமென்று மோசே போதித்தார்.

"நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசு" (உபா 6:7).

மோசே இந்த வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரருக்கு, திரும்ப திரும்ப சொல்லி போதித்திருக்கிறார். இந்த அதிகாரத்தில், மோசே தன்னை இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு தகப்பனாகவும், இஸ்ரவேல் புத்திரர் எல்லோரையும் தன்னுடைய பிள்ளைகளாகவும் பாவித்து, அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தைகளைப் போதிக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு கீழ்ப்படியவேண்டும். கர்த்தர் தங்களுக்கு விதிக்கிற எல்லா கட்டளைகளின்படியும் செய்ய அவர்கள் சாவதானமாயிருக்கவேண்டும் (உபா 8:1,6). கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு வனாந்தரத்திலே மகிமையான காரியங்களை

செய்திருக்கிறார். மோசே கர்த்தருடைய மகத்தான கிரியைகளை இஸ்ரவேல் புத்திரருக்கு இந்த வசனப்பகுதியில் மறுபடியுமாய் ஞாபகப்படுத்துகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளுக்கும், கற்பனைகளுக்கும், நியாயங்களுக்கும் கீழ்ப்படியவேண்டும் என்று மோசே அவர்களுக்கு மறுபடியுமாய்ப் போதிக்கிறார் (உபா 8:2-5,15,16).

இஸ்ரவேல் புத்திரர் சுதந்தரிக்கப்போகிற தேசம் நல்ல தேசமாகயிருக்கிறது. கானான் தேசத்தைப்பற்றிய விவரத்தை மோசே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு விரிவாக எடுத்து சொல்லுகிறார் (உபா 8:7-9).

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திலே தாழ்ச்சியில்லாமல் செழிப்படைந்திருப்பார்கள். அவர்கள் புசித்து திருப்தியடைந்திருக்கும்போது, தங்கள் தேவனாகிய கர்த்தரை மறவாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும் (உபா 8:10-14,17,18).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை மறந்து, வேறே தேவர்களை சேவித்தால், அவர்கள் நிச்சயமாய் அழிந்துபோவார்கள் (உபா 8:19,20).

குறைவில்லும் பரிசுத்தம்
உபா 8:1-9

உபா 8:1. நீங்கள் பிழைத்துப் பெருகி, கர்த்தர் உங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தேசத்திலே பிரவேசித்து, அதைச் சுதந்தரிக்கும்படி நான் இன்று உங்களுக்கு விதிக்கிற எல்லாக் கட்டளைகளின்படியும் செய்யச் சாவதானமாயிருப்பீர்களாக.

உபா 8:2. உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிறுமைப்படுத்தும்படிக்கும், தம்முடைய கட்டளைகளை நீ கைக்கொள்வாயோ கைக்கொள்ளமாட்டாயோ என்று அவர் உன்னைச் சோதித்து, உன் இருதயத்திலுள்ளதை நீ அறியும்படிக்கும், உன்னை இந்த நாற்பது வருஷமளவும் வனாந்தரத்திலே நடத்திவந்த எல்லா வழியையும் நினைப்பாயாக.

உபா 8:3. அவர் உன்னைச் சிறுமைப்படுத்தி, உன்னைப் பசியினால் வருத்தி, மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல, கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்பதை உனக்கு உணர்த்தும்படிக்கு, நீயும் உன் பிதாக்களும் அறியாதிருந்த மன்னாவினால் உன்னைப் போதித்தார்.

உபா 8:4. இந்த நாற்பது வருஷமும் உன்மேலிருந்த வஸ்திரம் பழையதாய்ப் போகவும் இல்லை, உன் கால் வீங்கவும் இல்லை.

உபா 8:5. ஒருவன் தன் புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிட்சிக்கிறார் என்று நீ உன் இருதயத்தில் அறிந்துகொள்வாயாக.

உபா 8:6. ஆகையால், உன் தேவனாகிய கர்த்தருடைய வழிகளில் நடந்து, அவருக்குப் பயப்படும்படிக்கு, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளக்கடவாய்.

உபா 8:7. உன் தேவனாகிய கர்த்தர் உன்னை நல்ல தேசத்திலே பிரவேசிக்கப்பண்ணுகிறார்; அது பள்ளத்தாக்குகளிலும் மலைகளிலுமிருந்து புறப்படுகிற ஆறுகளும் ஊற்றுகளும் ஏரிகளுமுள்ள தேசம்;

உபா 8:8. அது கோதுமையும் வாற்கோதுமையும் திராட்சச்செடிகளும் அத்திமரங்களும் மாதளஞ்செடிகளுமுள்ள தேசம்; அது ஒலிவமரங்களும், எண்ணெயும் தேனுமுள்ள தேசம்;

உபா 8:9. அது தாழ்ச்சியில்லாமல் அப்பம் புசிக்கத்தக்கதும் ஒன்றும் உனக்குக் குறைவு படாததுமான தேசம்; அது கல்லுகள் இரும்பாயிருக்கிறதும், செம்பு வெட்டி எடுக்கத்தக்க மலைகளுள்ளதுமான தேசம்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவேண்டும். அவர் தங்களுக்கு விதிக்கிற எல்லா கட்டளைகளின்படியும் செய்ய சாவதானமாயிருக்கவேண்டும். மோசே இந்த சத்தியத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு ஏற்கெனவே போதித்திருக்கிறார். இப்போது அதே சத்தியத்தை அவர்களுக்கு இந்த அதிகாரத்தில் மறுபடியுமாய்ச் சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீங்கள் பிழைத்துப் பெருகி, கர்த்தர் உங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தேசத்திலே பிரவேசித்து, அதைத் சுதந்தரிக்கும்படி நான் இன்று உங்களுக்கு விதிக்கிற எல்லாக் கட்டளைகளின்படியும் செய்யச் சாவதானமாயிருப்பீர்களாக" (உபா 8:1) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளுக்கும், கற்பனைகளுக்கும், நியாயங்களுக்கும் கீழ்ப்படியவேண்டுமென்று மோசே அவர்களுக்கு போதிக்கிறார். மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லும் போதகத்தின் பொதுவான விவரம் வருமாறு:

1. கர்த்தர் விதிக்கிற எல்லாக் கட்டளைகளின் படியும் செய்ய சாவதானமாக இருக்கவேண்டும். (உபா 8:1).

2. கர்த்தர் இந்த நாற்பது வருஷம் அளவும் வனாந்தரத்திலே நடத்திவந்த, எல்லா வழியையும் நினைக்கவேண்டும். (உபா 8:2).

3. தேவனாகிய கர்த்தர் சிட்சிக்கிறார் என்பதை இருதயத்தில் அறிந்து கொள்ள வேண்டும். (உபா 8:5).

4. தேவனாகிய கர்த்தருடைய வழியில் நடந்து, அவருக்குப் பயப்படும்படிக்கு அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும். (உபா 8:6).

5. கர்த்தர் கொடுத்த நல்ல தேசத்திற்காக அவரை ஸ்தோத்தரிக்க வேண்டும். (உபா 8:10).

6. புசித்து திருப்தியாகி, இருக்கும்போது கர்த்தரையும், கர்த்தருடைய கற்பனைகளையும் மறந்துவிடக்கூடாது. (உபா 8:11-17).

7. கர்த்தரே ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறதற்கான பெலனைக் கொடுக்கிறவர் என்பதை நினைவுகூர வேண்டும். (உபா 8:17 -18)

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை வனாந்தரத்தின் வழியாக நடத்தி வந்திருக்கிறார். அவர்கள் கடந்த நாற்பது வருஷங்களாக வனாந்தரப்பாதையின் வழியாக பிரயாணம் செய்திருக்கிறார்கள். இப்போது அவர்கள் தங்கள் சுதந்தர தேசமாகிய கானான் தேசத்தில் பிரவேசிப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தை விட்டு வெளியேறியபோது, அவர்கள் சொற்பஎண்ணிக்கையுள்ள ஜனமாயிருந்தார்கள். கர்த்தர் அவர்களை வனாந்தரத்தின் வழியாக வழிநடத்தினார். இஸ்ரவேல் புத்திரர் 430 வருஷங்களாக எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருந்தார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே பிரயாணம்பண்ணின நாற்பது வருஷகாலத்திலே, கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமும், திட்டத்தின் பிரகாரமும் அவர்களை உருவாக்கினார். அவர்களுக்கு நல்ல பயிற்சிகளைக் கொடுத்தார்.

இஸ்ரவேல் புத்திரருக்கு, வனாந்தரமானது நல்ல பயிற்சி பெறுகிற பாடசாலையைப்போல இருந்தது. மாணவர்கள் தங்கள் பள்ளிக்கூடத்தில் தங்கி படிப்பதுபோல, இஸ்ரவேல் புத்திரரும் வனாந்தரத்திலே தங்கி, கர்த்தரிடத்திலிருந்து அவருடைய உபதேசங்களைக் கற்றுக்கொண்டார்கள்.

பள்ளிக்கூடத்தில் தங்கி படிக்கும் மாணவர்களுக்கு உணவு கொடுக்கப்படும். கர்த்தரும் இஸ்ரவேல் புத்திரருக்கு, வனாந்தரத்திலே, நாற்பது வருஷங்களாக, மன்னாவை போஜனமாகக் கொடுத்து, அவர்களை அற்புதமாய்ப் போஷித்து, அவர்களுக்கு பயிற்சிகளைக் கொடுத்து, அவர்களை தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக உருவாக்கினார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் வனாந்தர அனுபவங்களை மறந்துவிடக்கூடாது. கர்த்தர் அவர்களை கடந்த நாற்பது வருஷமளவும் வனாந்தரத்திலே நடத்தி வந்த வழிகளையும் அவர்கள் மறந்துவிடக்கூடாது. மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிறுமைப்படுத்தும்படிக்கும், தம்முடைய கட்டளைகளை நீ கைக்கொள்வாயோ கைக்கொள்ளமாட்டாயோ என்று அவர் உன்னைச் சோதித்து, உன் இருதயத்திலுள்ளதை நீ அறியும்படிக்கும், உன்னை இந்த நாற்பது வருஷமளவும் வனாந்தரத்திலே நடத்திவந்த எல்லா வழியையும் நினைப்பாயாக" (உபா 8:2) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை சோதித்ததற்கு காரணங்கள் :

1. அவர்களைச் சிறுமைப்படுத்த வேண்டும். (உபா 8:2-3,16).

2. அவர்களைச் சோதிக்க வேண்டும்.

3. தம்முடைய கட்டளைகளை அவர்கள் கைக்கொள்வார்களாக என்று அவர்களுடைய இருதயத்தில் உள்ளதை அறிய வேண்டும் (உபா 8:2-6,16).

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே பல சமயங்களில் சிறுமைப்படுத்தப்பட்டார்கள். கர்த்தரே தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காக இஸ்ரவேல் புத்திரரை சிறுமைப்படுத்தினார். அவர்களுடைய மனதில் பெருமை இருக்கக்கூடாது. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தவேண்டும். அவர்கள் கர்த்தரை உயர்த்தி, அவரை மகிமைப்படுத்தவேண்டும். இதற்காகவே கர்த்தர் அவர்களை பல சமயங்களில் சிறுமைப்படுத்தினார்.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது, கர்த்தர் பல வேளைகளில் அவர்களை பசியினால் வருத்தினார். மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல, கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்பதை இஸ்ரவேல் புத்திரர் உணரவேண்டும். கர்த்தர் இந்த சத்தியத்தை அவர்களுக்கு உணர்த்தும்படியாக, இஸ்ரவேல் புத்திரர் அறியாதிருந்த மன்னாவினால் அவர்களை போஷித்தார் (உபா 8:3).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை சிறுமைப்படுத்துகிறார். இஸ்ரவேல் புத்திரரைக் கர்த்தர் சோதித்து, சிறுமைப்படுத்துகிறார். பசி, தாகம், வறட்சி, சிட்சை ஆகியவற்றினால் கர்த்தர் இஸ்ரவேலரைச் சிறுமைப்படுத்துகிறார். (உபா 8:3-6).

"மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல, கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" என்னும் சத்தியத்தை தம்முடைய பிள்ளைகளுக்கு உணர்த்துவதற்காகவே கர்த்தர் அவர்களைச் சோதிக்கிறார். சாத்தான் இயேசு கிறிஸ்துவைச் சோதித்தபோது கிறிஸ்து இந்த வாக்கியத்தைச் சாத்தானிடம் மேற்கோளாகக் கூறினார் (மத் 4:4; லூக்கா 4:4).

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய சுயபலத்தின்மீதும், சுயபராக்கிரமத்தின்மீதும், சுயபுத்தியின்மீதும் நம்பிக்கை வைக்கக்கூடாது. அவர்கள் கர்த்தர்மீதும், அவருடைய வாக்குத்தத்தத்தின்மீதும் தங்களுடைய முழுநம்பிக்கையையும் வைக்கவேண்டும். தங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வந்த கர்த்தர், தம்முடைய வார்த்தையின் பிரகாரம், தங்களை கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு போய், அங்கே தங்களை குடியேற்றுவார் என்று இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நம்பி, அவரை சார்ந்து ஜீவிக்கவேண்டும்.

தங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின கர்த்தர் உண்மையுள்ளவர் என்பதையும், அவர் வாக்குமாறாதவர் என்பதையும் இஸ்ரவேல் ஜனத்தார் உணரவேண்டும். இதற்காக கர்த்தர் பல சமயங்களில், இஸ்ரவேல் புத்திரரை வனாந்தரத்திலே சிறுமைப்படுத்தினார். அவர்களை பசியினால் வருத்தினார். அவர்கள் அறியாதிருந்த மன்னாவினால் அவர்களை போஷித்தார்.

கர்த்தரே நம்மைப் போஷிக்கிறார் என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். நமக்குத் தேவையான எல்லா ஈவுகளும் கர்த்தரிடத்திலிருந்தே வருகிறது. நாம் ஜீவனோடிருப்பதற்கு போஜனம் தேவை என்பதை கர்த்தர் அறிந்திருக்கிறார். மனுஷனுடைய இருதயத்தைத் திடப்படுத்துவதற்கு, அவனுக்கு போஜனம் கொடுக்கவேண்டும். மனுஷன் புசிக்கவில்லையென்றால் அவன் செத்துப்போவான். இது இயற்கையின் பிரமாணம்.

கர்த்தரோ இயற்கையின் பிரமாணத்திற்கும் மேலானவர். கர்த்தரால் எதையும் செய்ய முடியும். அவர் சர்வவல்லமையுள்ள தேவன். அவர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது. கர்த்தருடைய கிரியைகளை இயற்கையின் பிரமாணங்களால் தடைபண்ண முடியாது. மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல, தம்முடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும், கர்த்தரால் மனுஷனை பிழைக்க வைக்க முடியும்.

மனுஷன் கர்த்தருடைய வல்லமையை அறிந்துகொள்ளவேண்டும். இந்த சத்தியத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு உணர்த்தும்படிக்கு, அவர்கள் அறியாதிருந்த மன்னாவினால் அவர்களை போஷித்தார். மனுஷரை பிழைக்க வைப்பதற்கு, கர்த்தருக்கு இந்த மன்னா கூட தேவையில்லை. மனுஷன் காற்றை மாத்திரம் சுவாசித்தாலும், அவனையும் கர்த்தரால் பிழைக்க வைக்க முடியும். நாம் சுவாசிக்கிற காற்று, கர்த்தருடைய வார்த்தையினால் பரிசுத்தப்படுத்தப்படும்போது, அந்தக் காற்றினாலும் நம்மால் பிழைக்க முடியும்.

இயேசுகிறிஸ்து வனாந்தரத்திலே நாற்பது நாள் உபவாசம்பண்ணினார். அப்போது அவருக்கு பசி உண்டாயிற்று. சாத்தான் இயேசுகிறிஸ்துவை சோதிப்பதற்கு வந்தான்.

"அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்" (மத் 4:3,4).

இயேசுகிறிஸ்து சொன்ன வார்த்தைகளுக்கு வேதபண்டிதர்கள் ஆவிக்குரிய வியாக்கியானம் சொல்லுகிறார்கள். தேவனுடைய வார்த்தை என்பது, தேவனுடைய சித்தத்தின் வெளிப்பாடாகும். நாம் விசுவாசத்தினால் தேவனுடைய கிருபைகளைப் பெற்றுக்கொள்கிறோம். தேவனுடைய வார்த்தையே நம்முடைய ஆத்துமாவுக்கு ஆகாரமாயிருக்கிறது.

மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் பிழைப்பான் என்று இந்த உலகம் சொல்லுகிறது. கர்த்தரோ, "மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல, கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது, கர்த்தர் அவர்களை மன்னாவினால் போஷித்தார். பழைய ஏற்பாட்டுக்காலத்து மன்னா, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறது. கிறிஸ்துவானவர் ஜீவஅப்பமாகயிருக்கிறார். அவரே தேவனுடைய வார்த்தையாகவும் இருக்கிறார். நாம் ஜீவஅப்பமாகிய கிறிஸ்துவினால் பிழைக்கிறோம்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை வனாந்தரத்திலே மன்னாவினால் போஷித்தபோது, அவர்களுக்கு ஒரு குறைவும் உண்டாகவில்லை. "இந்த நாற்பது வருஷமும் உன்மேலிருந்த வஸ்திரம் பழையதாய்ப் போகவும் இல்லை, உன் கால் வீங்கவும் இல்லை" (உபா 8:4) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு ஞாபகப்படுத்துகிறார்.

இது இஸ்ரவேல் புத்திரருக்கு ஏற்பட்ட மிகப்பெரிய அற்புதம். வஸ்திரம் விரைவில் பழையதாகும். ஆனால் இங்கு அது பழையதாகவில்லை. அவர்களுடைய உருவத்திற்குத் தகுந்தபடி வஸ்திரம் பெரிதானது அல்லது குறைந்துபோனது என்று பொருள்கூற முடியாது. ஆனாலும் அவர்களுடைய வஸ்திரங்கள் நாற்பது வருஷங்களுக்கு உழைத்தது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது அன்பாயிருக்கிறார். ஒரு தகப்பன் தன் பிள்ளைகளை வழிநடத்துவதுபோல, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை வனாந்தரப்பாதை வழியாக வழிநடத்தி வந்திருக்கிறார். தன் பிள்ளைகள்மீது அன்பையும், பாசத்தையும் காண்பிக்கிற தகப்பன், அவர்களை சிட்சிக்கவும் செய்கிறார்.

"ஒருவன் தன் புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிட்சிக்கிறார் என்று நீ உன் இருதயத்தில் அறிந்துகொள்வாயாக" (உபா 8:5) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரப்பாதை வழியாக, நாற்பது வருஷங்களாக பிரயாணம் செய்து வந்திருக்கிறார்கள். இந்த நாற்பது வருஷ காலமாக, கர்த்தர் அவர்களுக்கு கடுமையான பயிற்சிகளைக் கொடுத்திருக்கிறார். தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக அவர்களை உருவாக்கவேண்டும் என்பதே கர்த்தருடைய சித்தம். இதற்காகவே கர்த்தர் அவர்களை சிட்சிக்கிறார். கர்த்தர் ஒருபோதும் தேவையில்லாமல் தம்முடைய ஜனத்தை சிட்சிக்கிறவரல்ல.

இஸ்ரவேல் புத்திரரை குற்றப்படுத்த வேண்டும் என்பதற்காகவோ, அவர்களை நிர்மூலம்பண்ணவேண்டும் என்பதற்காகவோ கர்த்தர் அவர்களை சிட்சிக்கவில்லை. தம்முடைய ஜனத்தை குற்றப்படுத்த வேண்டும் என்பது கர்த்தருடைய நோக்கமுமல்ல.

மனுஷன் தண்டிக்கிற பிரகாரமாக கர்த்தர் யாரையும் தண்டிப்பதில்லை. ஒருவன் தன்னுடைய சத்துருவுக்கு விரோதமாக, தன்னுடைய ஆயுதத்தை எடுக்கும்போது, அவனைக் காயப்படுத்த வேண்டும் என்னும் நோக்கத்தோடும், அவனைக் கொன்றுபோடவேண்டும் என்னும் நோக்கத்தோடும் அவனைத் தாக்குவான். தன் சத்துருவை அழித்துப்போடவேண்டும் என்பதே மனுஷனுடைய நோக்கம்.

கர்த்தரோ தம்முடைய ஜனத்தை அழித்துப்போடவேண்டும் என்னும் நோக்கத்தோடு, அவர் யாரையும் சிட்சிப்பதில்லை. ஒரு தகப்பன் தன் புத்திரனை சிட்சிப்பதுபோல, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை சிட்சிக்கிறார். தன்னுடைய புத்திரன் நன்றாயிருக்கவேண்டும், அவன் ஒழுக்கத்தோடிருக்கவேண்டும், மற்ற பிள்ளைகளுக்கு மத்தியிலே தன்னுடைய புத்திரன் உயர்ந்திருக்கவேண்டும் என்பதே தகப்பனுடைய நோக்கமாயிருக்கும். தன் புத்திரனுடைய சந்தோஷத்திற்காகவும், அவனுடைய நன்மைக்காகவும், தகப்பன் அவனை சிட்சிக்கிறார்.

அதுபோலவே கர்த்தரும், தம்முடைய பிள்ளைகளின் நன்மைக்காகவும், அவர்களுடைய ஆசீர்வாதங்களுக்காகவும், அவர்களுடைய சந்தோஷத்திற்காகவும் அவர்களை சிட்சிக்கிறார். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை சிட்சிக்கும்போது, தாம் அவர்களை சிட்சிப்பதற்கான காரணத்தையும் சொல்லி, அவர்களுக்கு உபதேசம்பண்ணுகிறார்.

"கர்த்தாவே, துன்மார்க்கனுக்குக் குழிவெட்டப்படும்வரைக்கும், நீர் தீங்குநாட்களில் அமர்ந்திருக்கப்பண்ணி, சிட்சித்து, உம்முடைய வேதத்தைக்கொண்டு போதிக்கிற மனுஷன் பாக்கியவான்" (சங் 94:12,13).

இஸ்ரவேல் புத்திரர் இன்னும் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கவில்லை. அவர்கள் மோவாபின் சமவெளிகளில் தங்கியிருக்கிறார்கள். கர்த்தருடைய திட்டத்தின் பிரகாரமாக, இஸ்ரவேல் சபையார், சீக்கிரத்திலே யோர்தானைக் கடந்து, கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கப்போகிறார்கள். அந்த தேசத்திலே அவர்கள் கர்த்தரை மறந்துவிடக்கூடாது. அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளையும், கட்டளைகளையும், கற்பனைகளையும், நியாயங்களையும், பிரமாணங்களையும் மறந்துவிடக்கூடாது. கர்த்தர் இப்போது அவர்களுக்கு சிட்சித்து பயிற்சி கொடுக்கிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு, அவர்கள் பிரவேசிக்கப்போகிற கானான் தேசத்தைப்பற்றிச் சொல்லுவதற்கு முன்பாக, அவர்கள் கர்த்தருடைய வழிகளில் நடக்கவேண்டும் என்பதை மறுபடியுமாய்ச் சொல்லுகிறார். மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "ஆகையால், உன் தேவனாகிய கர்த்தருடைய வழிகளில் நடந்து, அவருக்குப் பயப்படும்படிக்கு, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளக்கடவாய்" (உபா 8:6) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை கானான் தேசத்திற்குள் வழிநடத்தப்போகிறார். அந்த தேசம் எப்படிப்பட்ட தேசம் என்பதை, மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு விளக்கமாக எடுத்து சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உன் தேவனாகிய கர்த்தர் உன்னை நல்ல தேசத்திலே பிரவேசிக்கப்பண்ணுகிறார்; அது பள்ளத்தாக்குகளிலும் மலைகளிலுமிருந்து புறப்படுகிற ஆறுகளும் ஊற்றுகளும் ஏரிகளுமுள்ள தேசம்" (உபா 8:7) என்றும்,

"அது கோதுமையும் வாற்கோதுமையும் திராட்சச்செடிகளும் அத்திமரங்களும் மாதளஞ்செடிகளுமுள்ள தேசம்; அது ஒலிவமரங்களும், எண்ணெயும் தேனுமுள்ள தேசம்" (உபா 8:8) என்றும்,

"அது தாழ்ச்சியில்லாமல் அப்பம் புசிக்கத்தக்கதும் ஒன்றும் உனக்குக் குறைவு படாததுமான தேசம்; அது கல்லுகள் இரும்பாயிருக்கிறதும், செம்பு வெட்டி எடுக்கத்தக்க மலைகளுள்ளதுமான தேசம்" (உபா 8:9) என்றும் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பாக, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வதும், அவருடைய வழிகளில் நடப்பதும் அவசியமாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, தங்களுக்கு இஷ்டமான வழிகளிலே நடந்துபோகக்கூடாது. அவர்கள் கர்த்தருடைய வழிகளில் மாத்திரமே நடக்கவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தைப்பற்றி விளக்கமாகச் சொல்லுகிறார். அந்த தேசத்தைப்பற்றிய விளக்கம் வருமாறு :

1. நல்ல தேசம் (உபா 8:7)
2. ஆறுகள் உள்ள தேசம்
3. ஊற்றுகளும் ஏரிகளும் உள்ள தேசம்
4. கோதுமை உள்ள தேசம் (உபா 8:8)
5. வாற்கோதுமை உள்ள தேசம்
6. திராட்சைத்தோட்டங்கள் உள்ள தேசம்
7. அத்திமரங்கள் உள்ள தேசம்
8. மாதுளஞ்செடிகள் உள்ள தேசம்

9. ஒலிவமரங்கள் உள்ள தேசம்

10. தேன் உள்ள தேசம்

11. குறைவுபடாத தேசம் (உபா 8:9)

12. செம்பும், இரும்பும் உள்ள தேசம்

நிறைவிலும் பரிசுத்தம் உபா 8:10-20

உபா 8:10. ஆகையால் நீ புசித்துத் திருப்தியடைந்திருக்கையில், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த அந்த நல்ல தேசத்துக்காக அவரை ஸ்தோத்திரிக்கக்கடவாய்.

உபா 8:11. உன் தேவனாகிய கர்த்தரை மறவாதபடிக்கும், நான் இன்று உனக்கு விதிக்கிற அவருடைய கற்பனைகளையும் நியாயங்களையும் கட்டளைகளையும் கைக்கொள்ளாமற் போகாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு.

உபா 8:12. நீ புசித்துத் திருப்தியாகி, நல்ல வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருக்கும் போதும்,

உபா 8:13. உன் ஆடுமாடுகள் திரட்சியாகி, உனக்கு வெள்ளியும் பொன்னும் பெருகி, உனக்கு உண்டானவையெல்லாம் வர்த்திக்கும்போதும்,

உபா 8:14. உன் இருதயம் மேட்டிமையடையாமலும், உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினவரும்,

உபா 8:15. உன்னுடைய பின்நாட்களில் உனக்கு நன்மை செய்யும்பொருட்டு, உன்னைச் சிறுமைப்படுத்தி, உன்னைச் சோதித்து, கொள்ளிவாய்ச் சர்ப்பங்களும் தேள்களும், தண்ணீரில்லாத வறட்சியுமுள்ள பயங்கரமான பெரிய வனாந்தரவழியாய் உன்னை அழைத்துவந்தவரும், உனக்காகப் பாறையான கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணினவரும்,

உபா 8:16. உன் பிதாக்கள் அறியாத மன்னாவினால் வனாந்தரத்திலே உன்னைப் போஷித்துவந்தவருமான உன் தேவனாகிய கர்த்தரை நீ மறவாமலும்,

உபா 8:17. என் சாமார்த்தியமும் என் கைப்பெலனும் இந்த ஐசுவரியத்தை எனக்குச் சம்பாதித்தது என்று நீ உன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளாமலும் இருக்க எச்சரிக்கையாயிருந்து,

உபா 8:18. உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக; அவரே உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக்கொடுத்த தம்முடைய உடன்படிக்கையை உறுதிப்படுத்தும்படி, இந்நாளில் உனக்கு உண்டாயிருக்கிறதுபோல், ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறதற்கான பெலனை உனக்குக் கொடுக்கிறவர்.

உபா 8:19. உன் தேவனாகிய கர்த்தரை நீ மறந்து, வேறே தேவர்களைப் பின்பற்றி அவர்களைச் சேவித்து, அவர்களைப் பணிந்து கொள்வாயானால், நிச்சயமாய் அழிந்து போவீர்கள் என்று இன்று உங்களுக்குச் சாட்சியாய் அறிவிக்கிறேன்.

உபா 8:20. உன் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்திற்கு நீங்கள் கீழ்ப்படியாமற்போவதினால், கர்த்தர் உங்களுக்கு முன்பாக அழித்த ஜாதிகளைப்போல நீங்களும் அழிவீர்கள்.

கானான் தேசத்தின் செழிப்பைப்பற்றி மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். அந்த தேசம் கோதுமையும், வாற்கோதுமையும் தேனுமுள்ள தேசம். அந்த தேசத்தில் இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு குறைவும் ஏற்படாது. இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்திலே பிரவேசிக்கும்போது, அந்த தேசத்தின் நன்மைகளை அனுபவித்து, செழித்திருப்பார்கள். தாங்கள் செழிப்பாயிருக்கும் காலத்தில், அவர்கள் கர்த்தரை மறந்துவிடக்கூடாது.

இஸ்ரவேல் புத்திரர் இதுவரையிலும் வறட்சியான வனாந்தர பாதையின் வழியாக கடந்து வந்திருக்கிறார்கள். மன்னாவே இதுவரையிலும் அவர்களுடைய பிரதான போஜனம். கானான் தேசத்திலோ அவர்களுக்கு கோதுமையும், வாற்கோதுமையும், பழங்களும், எண்ணெயும் தேனும் திரளாயிருக்கிறது. வறட்சியான வனாந்தரத்திலிருந்து, செழிப்பான கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, அவர்கள் கர்த்தரை மறந்துவிடுவதற்கு வாய்ப்புள்ளது.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய செழிப்பான காலத்திலும் கர்த்தரை மறந்துவிடக்கூடாது என்று மோசே அவர்களை எச்சரிக்கிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீ புசித்துத் திருப்தியடைந்திருக்கையில், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த அந்த நல்ல தேசத்துக்காக அவரை ஸ்தோத்திரிக்கக்கடவாய். உன் தேவனாகிய கர்த்தரை மறவாதபடிக்கும், நான் இன்று உனக்கு விதிக்கிற அவருடைய கற்பனைகளையும் நியாயங்களையும் கட்டளைகளையும் கைக்கொள்ளாமற் போகாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு" (உபா 8:10,11) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசித்தபின்பு, அங்கு செழித்திருப்பார்கள். புசித்து திருப்தியடைந்திருப்பார்கள். அப்படிப்பட்ட காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டு, பின்வாங்கிப்போவார்கள் என்பதை வெளிப்படுத்தும் மூன்றாவது தீர்க்கதரிசனம் இதுவாகும் (உபா 4:25-31; உபா 6:10-12; உபா 8:10-20).

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் அனுபவிக்கப்போகும் வளமையும் செழுமையுமான ஆசீர்வாதங்கள் :

1. நீ புசித்துத் திருப்தியாவாய்.
2. நல்ல வீடுகளைக் கட்டுவாய்.
3. உன் ஆடுமாடுகள் திரட்சியாகும். (உபா 8:13)
4. உனக்கு வெள்ளியும் பொன்னும் பெருகும்.
5. உனக்கு உண்டானவையெல்லாம் வர்த்திக்கும்

நம்முடைய ஜீவியத்தில் நமக்கு செழிப்பான ஆசீர்வாதங்கள் வரும்போது, நாம் கர்த்தரை மகிமைப்படுத்தவேண்டும். நம்முடைய வாழ்க்கைத்தரம் உயரும்போது, நம்முடைய ஜீவியத்தில் கர்த்தருடைய நாமமும், அவருடைய மகிமையும் உயரவேண்டும்.

நாம் ஒவ்வொரு முறை போஜனம்பண்ணும்போதும், போஜனம்பண்ணுவதற்கு முன்பாக கர்த்தரைத் துதிக்கவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு உபதேசம் செய்திருக்கிறார்.

"அப்பொழுது அவர் ஜனங்களைப் புல்லின்மேல் பந்தியிருக்கக் கட்டளையிட்டு, அந்த ஐந்து அப்பங்களையும், அந்த இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்துபார்த்து, ஆசீர்வதித்து, அப்பங்களைப் பிட்டுச் சீஷர்களிடத்தில் கொடுத்தார்; சீஷர்கள் ஜனங்களுக்குக் கொடுத்தார்கள். எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்; மீதியான துணிக்கைகளைப் பன்னிரண்டு கூடைநிறைய எடுத்தார்கள்" (மத் 14:19,20).

மோசேயோ இஸ்ரவேல் புத்திரருக்கு உபதேசம்பண்ணும்போது, அவர்கள் புசித்து திருப்தியடைந்த பின்பு, தாங்கள் புசித்த போஜனத்திற்காக கர்த்தரை ஸ்தோத்திரிக்கவேண்டுமென்று சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் ஒவ்வொரு முறை போஜனம்பண்ணும்போதும், கர்த்தருக்கு ஸ்தோத்திரங்களை ஏறெடுப்பது வழக்கம். அவர்கள் நறுமணம் வீசும் பூக்களை பார்த்தால்கூட, "அந்தப் பூக்களுக்கு நல்ல மணத்தைக் கொடுத்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று ஸ்தோத்திரம்பண்ணுவார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீ புசித்துத் திருப்தியாகி, நல்ல வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருக்கும் போதும், உன் ஆடுமாடுகள் திரட்சியாகி, உனக்கு வெள்ளியும் பொன்னும் பெருகி, உனக்கு உண்டானவையெல்லாம் வர்த்திக்கும்போதும்" உன் இருதயம் மேட்டிமையடையாமல் இருப்பதாக" (உபா 8:12-14) என்று சொல்லுகிறார்.

வளமையினாலும், செழுமையினாலும் வரும் சோதனைகள் (உபா 8:14)

1. பெருமையும், மேட்டிமையும்

2. ஆசீர்வாதத்திற்குக் காரணமான கர்த்தரை மறந்து தன்னுடைய கைப்பெலனில் நம்பிக்கையாயிருப்பது. (உபா 8:17-18)

இஸ்ரவேல் புத்திரருக்கு வளமும், ஆசீர்வாதமும், வெற்றியும் வரும்போது, அவர்கள் கர்த்தரை மறந்துவிடுவார்கள். இது கர்த்தருக்கு மறைபொருள் அல்ல. தனக்கு வாழ்வில் வெற்றி வரும்போது, மனுஷன் அதைத் தன்னுடைய சொந்த முயற்சியினால் வந்தது என்று நினைக்கிறான். ஆனால் மனுஷனுக்கு ஜெயத்தைக் கொடுக்கிறவர் கர்த்தரே (உபா 8:17-18).

எல்லோரும் செழித்திருக்க வேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம். அதிலும் விசேஷமாகத் தம்முடைய பிள்ளைகள் ஒரு குறைவுமில்லாமல் எல்லாக் காரியங்களிலும் செழித்திருக்க வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். நமக்கு செழிப்பு வரும்போது அதற்காகக் கர்த்தரைத் துதிக்க வேண்டும். கர்த்தர் நமக்குத் தேவையான எல்லா ஆசீர்வாதங்களையும் கொடுத்து, நம்மை ஆசீர்வதிக்கிறார். (2பேதுரு 1:3-4; 3யோவான் 1:2).

இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருக்கிறவர்கள் கர்த்தரிடத்தில் கேட்கும் போது அது அவர்களுக்குக் கொடுக்கப் படும். (மத் 17:20; மத் 21:22; மாற்கு 11:22-24; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; யோவான் 16:23-26).

கர்த்தரே இஸ்ரவேல் ஜனத்தாரை அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினவர். கர்த்தர் அவர்களுடைய பின்நாட்களில் அவர்களுக்கு நன்மை செய்யும்பொருட்டு, அவர்களைச் சிறுமைப்படுத்தி, அவர்களைச் சோதித்து, கொள்ளிவாய்ச் சர்ப்பங்களும் தேள்களும், தண்ணீரில்லாத வறட்சியுமுள்ள பயங்கரமான பெரிய வனாந்தரவழியாய் அவர்களை அழைத்துவந்தவர். கர்த்தர் அவர்களுக்காக பாறையான கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணினவர் (உபா 8:14,15).

வனாந்தரத்தில் தேள்களைப் பற்றி இங்கு மட்டுமே கூறப்பட்டிருக்கிறது. சீனாய் வனாந்தரத்தில் பலவிதமான தேள்களும், சர்ப்பங்களும் இருந்தன.

தங்கள் பிதாக்கள் அறியாத மன்னாவினால் வனாந்தரத்திலே தங்களைப் போஷித்துவந்தவருமான தங்கள் தேவனாகிய கர்த்தரை இஸ்ரவேல் புத்திரர் மறந்துவிடக்கூடாது (உபா 8:16).

வனாந்தரத்தில் இஸ்ரவேல் புத்திரரின் எண்ணிக்கை 6,100,800 பேராகும். இத்தனை பேருக்கும் அன்றாடம் போஜனமும், தண்ணீரும் கொடுப்பது மிகப்பெரிய வேலை. எகிப்து தேசத்திலிருந்து கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க அவர்களுக்கு 41 வருஷங்களும், 3 மாதங்களும் ஆயிற்று. இந்தக் காலத்தில் அவர்கள் வனாந்தரத்தில் 15,065 நாட்கள் தங்கியிருக்கிறார்கள். இத்தனை நாட்களுக்கும் இத்தனை பேருக்கும் கர்த்தர் இயற்கையான ஆதாரங்கள் மூலமாகவும், பரலோகத்தின் ஆதாரங்கள் மூலமாகவும் புசிப்பதற்கு மன்னாவைத் தருகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு இதுவரையிலும் செய்து வந்திருக்கிற மேன்மையான காரியங்களைப்பற்றி மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். அவற்றின் விவரம் வருமாறு :

1. அவர்கள் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்தார். (உபா 8:1).

2. அவர்களைச் சிறுமைப்படுத்தும்படிக்கு நாற்பது வருஷமளவும் வனாந்தரத்தில் நடத்தி வந்தார். (உபா 8:2,15-16).

3. அவர்களைச் சிறுமைப்படுத்தி பசியினால் வருத்தினார். (உபா 8:3)

4. அவர்களுக்கு மன்னாவைக் கொடுத்து, அவர்களைப் போஷிக்கிறவர் கர்த்தரே என்பதை உணர்த்தினார்.

5. அவர்களுடைய வஸ்திரம் பழையதாய்ப் போகாமல் காத்துக் கொண்டார். (உபா 8:4).

6. தகப்பன் தன் புத்திரனைச் சிட்சிக்கிறது போல அவர்களைச் சிட்சித்தார். (உபா 8:5).

7. நல்ல தேசத்தை அவர்களுக்கு வாக்குப் பண்ணினார். (உபா 8:7-10).

8. கைக்கொள்வதற்கு அவர்களுக்குப் பிரமாணங்களைக் கொடுத்தார். (உபா 8:1,11).

9. தம்மைவிட்டுப் பின்வாங்கிப்போவதைக் குறித்து அவர்களை எச்சரித்தார். (உபா 8:10-20).

10. செழுமையையும், வளமையையும் அவர்களுக்கு வாக்குப்பண்ணினார். (உபா 8:12-13).

11. அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து அவர்களைப் புறப்படப்பண்ணினார். (உபா 8:14).

12. அவர்களுடைய தேவைகளைச் சந்திப்பதற்கு அற்புதங்களைச் செய்தார். (உபா 8:15-16).

13. அவர்களுக்கு நித்திய நன்மையைத் திட்டம் பண்ணினார். (உபா 8:16)

14. அவர்கள் ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறதற்கான பெலனைக் கொடுத்தார். (உபா 8:17-18).

15. அவர்களோடு தம்முடைய உடன்படிக்கையை உறுதிப்படுத்தினார். (உபா 8:18).

16. தம்மை விட்டுப் பின்வாங்கிப் போனால் தண்டனை உண்டு என்பதை வாக்குப் பண்ணினார். (உபா 8:19-20).

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் பிரவேசிக்கும்போது புசித்து திருப்தியடைவார்கள். அந்த தேசம் இரும்பையும் செம்பையும் வெட்டி எடுக்கத்தக்க மலைகளுள்ள தேசம். இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே ஐசுவரியம் மிகுதியாயிருக்கும்.

தாங்கள் ஐசுவரிய சம்பன்னராயிருக்கும்போது, "என் சாமார்த்தியமும் என் கைப்பெலனும் இந்த ஐசுவரியத்தை எனக்குச் சம்பாதித்தது" என்று அவர்கள் தங்கள் இருதயத்தில் சொல்லிக்கொள்ளாமலிருக்க எச்சரிக்கையாயிருக்கவேண்டும். தாங்கள் ஐசுவரியத்தில் செழித்திருக்கும்போதும், இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தரை நினைக்கவேண்டும் (உபா 8:17,18).

ஐசுவரியத்தைச் சம்பாதிப்பதில் பாவம் ஒன்றுமில்லை. அதற்கான பெலனைக் கொடுக்கிறவர் கர்த்தரே. ஆனால் ஐசுவரியத்தைச் சேர்த்து, அதைத் தவறான வழிகளில் பயன்படுத்தக்கூடாது. தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக ஐசுவரியத்தைப் பயன்படுத்துவது பாவம்.

மோசே இஸ்ரவேல் புத்திரருடைய ஐசுவரியத்தைப்பற்றிச் சொல்லும்போது, "கர்த்தரே உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக்கொடுத்த தம்முடைய உடன்படிக்கையை உறுதிப்படுத்தும்படி, இந்நாளில் உனக்கு உண்டாயிருக்கிறதுபோல, ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறதற்கான பெலனை உனக்குக் கொடுக்கிறவர்" (உபா 8:18) என்று சொல்லுகிறார்.

மனுஷருக்கு ஐசுவரியம் பெருகும்போது, அவர்கள் கர்த்தரை மறந்துவிடுவதற்கு வாய்ப்புள்ளது. மனுஷருடைய சொத்துக்களும் சம்பத்துக்களும் பெருகும்போது, அவர்களுடைய பெருமையும், மேட்டிமையும் பெருகும். அவர்கள் கர்த்தரை நம்பாமல் தங்கள் ஐசுவரியத்தை நம்புவார்கள். இஸ்ரவேல் புத்திரர் இதுபோன்ற ஆபத்துக்களில் சிக்கிக்கொள்ளக்கூடாது. தாங்கள் ஐசுவரியவான்களாயிருந்தாலும் கர்த்தரே இந்த ஐசுவரியத்தை சம்பாதிக்கிறதற்கான பெலத்தை தங்களுக்கு கொடுக்கிறவர் என்பதை நினைவுகூர்ந்து, அவர்கள் கர்த்தரை துதிக்கவேண்டும்.

ஒரு மனிதனுக்கு ஐசுவரியமும் சம்பத்தும் விருத்தியடையும்போது, அவன் கர்த்தரை விட்டு விலகிப்போகிறான். கர்த்தரும் அவருடைய வார்த்தைகளும் தனக்கு தேவையில்லை என்று அவன் நினைத்து விடுகிறான். இது ஐசுவரியவான்களுக்கு வருகிற பொதுவான சோதனை. தங்களுடைய ஜீவியத்தில் கர்த்தர் இல்லாவிட்டாலும், தங்களிடத்தில் ஐசுவரியம் இருப்பதை நினைத்து இவர்கள் சந்தோஷப்படுகிறார்கள். ஐசுவரியம் எந்த மனுஷனுக்கும் மெய்யான சந்தோஷத்தைக் கொடுக்காது.

ஐசுவரியவான்கள் தங்களுடைய ஐசுவரியத்தின் மிகுதியினால் தங்கள் மனதிலே பெருமையும் மேட்டிமையும் அடைகிறார்கள். அவர்களிடத்தில் மனத்தாழ்மை இருக்காது. பணிவான சுபாவம் இருக்காது. ஐசுவரியவான்கள் யாருக்கும் உதவி செய்யமாட்டார்கள். அவர்கள் கர்த்தருக்கும் ஊழியம் செய்யமாட்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, அந்த தேசத்தில் காணப்படுகிற விக்கிரகங்களை நிர்மூலம்பண்ணவேண்டும். அவர்கள் கர்த்தரை மறந்து அந்நிய தெய்வங்களை பின்பற்றிப்போகக்கூடாது.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உன் தேவனாகிய கர்த்தரை நீ மறந்து, வேறே தேவர்களைப் பின்பற்றி அவர்களைச் சேவித்து, அவர்களைப் பணிந்து கொள்வாயானால், நிச்சயமாய் அழிந்து போவீர்கள் என்று இன்று உங்களுக்குச் சாட்சியாய் அறிவிக்கிறேன்" (உபா 8:19) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் பிரவேசிக்கும்போது, தங்கள் தேவனாகிய கர்த்தரை மறவாமலிருக்கவேண்டும். அவர்கள் அந்த தேசத்திலே கர்த்தர் தங்களுக்கு விதித்திருக்கிற கற்பனைகளையும், நியாயங்களையும், கட்டளைகளையும் கைக்கொள்ளவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் போனால் கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வரும் என்று மோசே அவர்களை எச்சரிக்கிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உன் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்திற்கு நீங்கள் கீழ்ப்படியாமற்போவதினால், கர்த்தர் உங்களுக்கு முன்பாக அழித்த ஜாதிகளைப்போல நீங்களும் அழிவீர்கள்" (உபா 8:20) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரை அழிந்துபோகச் செய்யும் பாவங்கள்

1. தேவனாகிய கர்த்தரை மறப்பது.
2. வேறே தேவர்களைப் பின்பற்றுவது.
3. அவர்களைச் சேவிப்பது
4. அவர்களைப் பணிந்து கொள்வது.

தேவனிடத்தில் பட்சபாதம் இல்லை. (அப் 10:34) தமக்கு விரோதமாக எழும்பியவர்களைக் கர்த்தர் அழித்துப் போடுவார். அவர்கள் புறஜாதிகளாக இருந்தாலும், இஸ்ரவேல் புத்திரராக இருந்தாலும் கர்த்தர் வித்தியாசம் பார்க்கமாட்டார். அவர் நீதியாக நியாயந்தீர்க்கிறவர். கர்த்தருடைய வல்லமையை இஸ்ரவேல் புத்திரர்கள் தங்களுடைய அனுபவங்களில் உணர்ந்திருக்கிறார்கள். கர்த்தர் புறஜாதியாரை அழித்தது அவர்களுக்குத் தெரியும். அதே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரையும், அவர்கள் தமக்குக் கீழ்ப்படியாமல் பாவம் செய்தால், அந்த ஜாதிகளைப்போல இவர்களையும் அழித்துப் போடுவார். (ரோமர் 11)

9 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் யோர்தானைக் கடந்து கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கப்போகிறார்கள். அவர்கள் அந்த தேசத்திலே தங்களிலும் ஜனம் பெருத்ததும், பலத்ததுமான ஜாதிகளை துரத்திவிடப்போகிறார்கள். அவர்கள் கானான் தேசத்தில் வானத்தை அளாவிய மதில் சூழ்ந்த பெரிய பட்டணங்களை பிடித்துக்கொள்ளப்போகிறார்கள் என்று மோசே சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரருக்கு, கானான் தேசத்திலே தங்கள் சத்துருக்கள்மீது நிச்சமாய் ஜெயம் கிடைக்கும் என்று மோசே சொல்லுகிறார் *(உபா 9:1-3)*. ஆனாலும் தங்களுடைய நீதியினிமித்தமாகவோ அல்லது தங்களுடைய பலத்தினாலோ, பராக்கிரமத்தினாலோ கானான் தேசத்திலே தங்களுக்கு சத்துருக்கள்மீது வெற்றி கிடைத்தது என்று இஸ்ரவேல் புத்திரர் நினைத்துவிடக்கூடாது.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் நீதியினிமித்தமும், தங்கள் இருதயத்தினுடைய உத்தமத்தினிமித்தமும் கானான் தேசத்தை சுதந்தரிக்கும்படி பிரவேசிக்கமாட்டார்கள். கர்த்தருடைய நீதியின்படியாகவும், கானான் தேசத்திலுள்ள புறஜாதியாருடைய ஆகாமியத்தின் நிமித்தமாகவும் இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தைச் சுதந்தரிக்கும்படி பிரவேசிப்பார்கள் *(உபா 9:4-6)*. ஆகையினால் இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய சுயநீதியில் பெருமைப்படக்கூடாது.

தாங்கள் வனாந்தரத்தில் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு கடுங்கோபம் உண்டாக்கினவர்கள் என்பதையும், தாங்கள் இதுவரையிலும் கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ணினவர்கள் என்பதையும் இஸ்ரவேல் புத்திரர் நினைத்துப் பார்க்கவேண்டும் *(உபா 9:7-24)*.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்து, வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டியை தங்களுக்கு உண்டாக்கினார்கள் *(உபா 9:8-21)*. அவர்கள் தபேராவிலும், மாசாவிலும், கிப்ரோத் அத்தாவாவிலும் கர்த்தருக்குக் கடுங்கோபம் உண்டாக்கினார்கள் *(உபா 9:22)*. இஸ்ரவேல் புத்திரர் காதேஸ்பர்னேயாவில் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள் *(உபா 9:23,)*. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாக தொடர்ந்து கலகம்பண்ணினார்கள் *(உபா 9:24)*.

மோசே ஓரேபிலே கர்த்தருடைய சமுகத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசுகிறார். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை அழித்துப்போடாதபடிக்கு, அவர்களுக்காக விண்ணப்பம்பண்ணுகிறார் *(உபா 9:25-29)*.

கர்த்தருடைய நீதி
உபா 9:1-6

உபா 9:1. இஸ்ரவேலே, கேள்: நீ இப்பொழுது யோர்தானைக் கடந்து, உன்னிலும் ஜனம் பெருத்ததும் பலத்ததுமான ஜாதிகளைத் துரத்தி, வானத்தையளாவிய மதில் சூழ்ந்த பெரிய பட்டணங்களைப் பிடித்து,

உபா 9:2. ஏனாக்கின் புத்திரராகிய பெரியவர்களும் நெடியவர்களுமான ஜனங்களைத் துரத்திவிடப்போகிறாய்; இவர்கள் செய்தியை நீ அறிந்து, ஏனாக் புத்திரருக்கு முன்பாக நிற்பவன் யார் என்று சொல்லப்படுவதை நீ கேட்டிருக்கிறாய்.

உபா 9:3. உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு முன்பாகக் கடந்துபோகிறவர் என்பதை இன்று அறியக்கடவாய்; அவர் பட்சிக்கிற அக்கினியைப்போல அவர்களை அழிப்பார்; அவர்களை உனக்கு முன்பாக விழப்பண்ணுவார்; இவ்விதமாய்க் கர்த்தர் உனக்குச் சொன்னபடியே, நீ அவர்களைச் சீக்கிரமாய்த் துரத்தி, அவர்களை அழிப்பாய்.

உபா 9:4. உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உனக்கு முன்பாகத் துரத்துகையில், நீ உன் இருதயத்திலே: என் நீதியினிமித்தம் இந்த தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி கர்த்தர் என்னை அழைத்துவந்தார் என்று சொல்லாயாக; அந்த ஜாதிகளுடைய ஆகாமியத்தினிமித்தமே கர்த்தர் அவர்களை உனக்கு முன்பாகத் துரத்தி விடுகிறார்.

உபா 9:5. உன் நீதியினிமித்தமும் உன் இருதயத்தினுடைய உத்தமத்தினிமித்தமும் நீ அவர்கள் தேசத்தைச் சுதந்தரிக்கும்படி பிரவேசிப்பதில்லை; அந்த ஜாதிகளுடைய ஆகாமியத்தினிமித்தமாகவும், ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்னும் உன் பிதாக்களுக்குக் கர்த்தர் ஆணையிட்டுச் சொன்ன வார்த்தையை நிறைவேற்றும்படியாகவும், உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உனக்கு முன்பாகத் துரத்திவிடுகிறார்.

உபா 9:6. ஆகையால், உன் நீதியினிமித்தம் உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு அந்த நல்ல தேசத்தைச் சுதந்தரிக்கக் கொடார் என்பதை அறியக்கடவாய்; நீ வணங்காக் கழுத்துள்ள ஜனம்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு தன்னுடைய புதிய பிரசங்கச் செய்தியை உபதேசம்பண்ணுகிறார். அவர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "இஸ்ரவேலே கேள்" (உபா 9:1) என்று சொல்லி, தன்னுடைய புதிய பிரசங்கத்தை ஆரம்பிக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் யோர்தானைக் கடந்து கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கப்போகிறார்கள். கானான் தேசத்தில் வாசம்பண்ணுகிற சத்துருக்கள் இஸ்ரவேல் புத்திரரைவிட ஜனம்பெருத்தவர்கள். அவர்களைவிட பலத்தவர்கள். ஆனாலும் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்திலே சத்துருக்கள்மீது ஜெயம் கிடைக்கும் என்று மோசே சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீ இப்பொழுது யோர்தானைக் கடந்து, உன்னிலும் ஜனம் பெருத்ததும் பலத்ததுமான ஜாதிகளைத் துரத்தி, வானத்தையளாவிய மதில் சூழ்ந்த பெரிய பட்டணங்களைப் பிடித்து, ஏனாக்கின் புத்திரராகிய பெரியவர்களும் நெடியவர்களுமான ஜனங்களைத் துரத்திவிடப்போகிறாய்" (உபா 9:1,2) என்று சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்திலுள்ள சத்துருக்களைப்பற்றி விரிவாகச் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. உன்னிலும் ஜனம் பெருத்ததும் பலத்ததுமான ஜாதிகள்.

2. வானத்தையளாவிய மதில் சூழ்ந்த பெரிய பட்டணங்கள்.

3. பெரியவர்களும் நெடியவர்களுமான ஜனங்கள்.

"வானத்தையளாவிய மதில் சூழ்ந்த பெரிய பட்டணங்கள்" என்னும் வாக்கியம் வானம் மட்டும் எழுப்பப்பட்டிருக்கும் சுவர்களைக் குறிக்கும் (ஆதி 11:4).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய எதிரிகளைப் பற்றிக் கூறுகிறார். அதேவேளையில் தம்முடைய உதவியில்லாமல் இஸ்ரவேலரால் அவர்களை மேற்கொள்ள முடியாது என்பதையும் கர்த்தர் வெளிப்படுத்துகிறார். கர்த்தர் பட்சிக்கிற அக்கினியைப்போல அவர்களை அழிப்பார். கர்த்தர் தங்களுக்கு ஆதரவாகக் கிரியை செய்ய வேண்டுமானால், இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்து, அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் கானானியரைப்பற்றிய செய்திகளை ஏற்கெனவே அறிந்திருக்கிறார்கள். அவர்களைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறார்கள். "இவர்கள்செய்தியை நீ அறிந்து, ஏனாக் புத்திரருக்கு முன்பாக நிற்பவன் யார் என்று சொல்லப்படுவதை நீ கேட்டிருக்கிறாய்" (உபா 9:2) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் காதேஸ்பர்னேயாவிலிருந்தபோது, கானான் தேசத்தை வேவுபார்ப்பதற்காக, பன்னிரண்டு வேவுகாரர்களை அனுப்பினார்கள். அவர்கள் கானான் தேசத்தைப்பற்றியும், அந்த தேசத்தாரைப்பற்றியும், இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே துர்ச்செய்தியை பரம்பச்செய்தார்கள்.

"ஆனாலும், அந்த தேசத்திலே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்கள்; பட்டணங்கள் அரணிப்பானவைகளும் மிகவும் பெரியவைகளுமாய் இருக்கிறது; அங்கே ஏனாக்கின் குமாரரையும் கண்டோம்" (எண் 13:28) என்றும்,

"நாங்கள் போய்ச் சுற்றிப் பார்த்து வந்த அந்த தேசம் தன் குடிகளைப் பட்சிக்கிற தேசம்; நாங்கள் அதிலே கண்ட ஜனங்கள் எல்லாரும் மிகவும் பெரிய ஆட்கள். அங்கே இராட்சதப் பிறவியான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப்போல் இருந்தோம், அவர்கள் பார்வைக்கும், அப்படியே இருந்தோம்" (எண் 13:32,33) என்றும் சொல்லி, பத்து வேவுகாரர்கள் இப்படி இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே தாங்கள் சுற்றிப் பார்த்துவந்த தேசத்தைக்குறித்து துர்ச்செய்தி பரம்பச்செய்தார்கள்.

மோசே கானான் தேசத்தாரைப்பற்றி சொல்லுகிற வார்த்தைகளும், வேவுகாரர்கள் ஏற்கெனவே சொன்ன வார்த்தைகளைப்போலவே இருக்கிறது. ஆனால் வேவுகாரர்கள் கானான் தேசத்தாரைப்பற்றி அவிசுவாசமான வார்த்தைகளைச் சொல்லி, இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே துர்ச்செய்தியை பரம்பச்செய்தார்கள். மோசேயோ இஸ்ரவேல் புத்திரரை உற்சாகப்படுத்தும் செய்தியை சொல்லுகிறார்.

மோசே கானான் தேசத்தாரைப்பற்றிச் சொல்லும்போது, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப்பற்றியும் சொல்லுகிறார். மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு முன்பாகக் கடந்துபோகிறவர் என்பதை இன்று அறியக்கடவாய்; அவர் பட்சிக்கிற அக்கினியைப்போல அவர்களை அழிப்பார்; அவர்களை உனக்கு முன்பாக விழப்பண்ணுவார்; இவ்விதமாய்க் கர்த்தர் உனக்குச் சொன்னபடியே, நீ அவர்களைச் சீக்கிரமாய்த் துரத்தி, அவர்களை அழிப்பாய்" (உபா 9:3) என்று சொல்லுகிறார்.

வேவுகாரர் சொன்ன செய்தியினால் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டு துரத்தப்பட்டார்கள். கர்த்தர்மீது அவர்கள் வைத்திருந்த விசுவாசமெல்லாம் அவர்களைவிட்டு விலகிப்போயிற்று. வேவுகாரரின் செய்தியைக்கேட்டு, இஸ்ரவேல் புத்திரர் கலக்கமடைந்தார்கள்.

மோசே கானான் தேசத்தாரைப்பற்றிய செய்தியை சொன்னாலும், அவர் கர்த்தரைப்பற்றியும் நல்ல செய்தியை சொல்லுகிறார். மோசேயின் செய்தியைக்கேட்டு இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் நெருக்கமாய்ச் சேர்க்கப்படுகிறார்கள். கர்த்தர்மீது தங்கள் விசுவாசத்தை வைக்குமாறு மோசே அவர்களை உற்சாகப்படுத்துகிறார்.

சத்துருக்கள் இஸ்ரவேல் புத்திரரைவிட ஜனம்பெருத்தவர்களாகவும், பலத்த ஜாதிகளாகவும் இருந்தாலும், கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு கூடயிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் யோர்தானைக் கடந்துபோகும்போது, அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் அவர்களுக்கு முன்பாக கடந்துபோகிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்காக கானானியர்மீது யுத்தம்பண்ணுவார். யுத்தம் கர்த்தருடையது. இந்த யுத்தத்திலே இஸ்ரவேல் புத்திரருக்கு வெற்றி நிச்சயமாய்க் கிடைக்கும் என்று மோசே சொல்லுகிறார்.

கர்த்தரே கானானியரை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக துரத்துவார். இந்த யுத்தத்திலே இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயம் கிடைக்கும். தங்களுடைய சுயநீதியினாலும், சுயபரிசுத்தத்தினாலும், கர்த்தர் தங்களுக்கு கானான் தேசத்தை சுதந்தரிக்கக் கொடுத்திருக்கிறார் என்று நினைக்கக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர் ஒருபோதும் தங்களைப்பற்றி பெருமையாய் இஸ்ரவேல் புத்திரர் நினைக்கக்கூடாது. அவர்கள் பெருமைப்படும்படியாக அவர்களிடத்தில் ஒரு நற்குணமும் காணப்படவில்லையென்று மோசே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தெளிவுபடுத்துகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உனக்கு முன்பாகத் துரத்துகையில், நீ உன் இருதயத்திலே: என் நீதியினிமித்தம் இந்த தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி கர்த்தர் என்னை அழைத்துவந்தார் என்று சொல்லாயாக; அந்த ஜாதிகளுடைய ஆகாமியத்தினிமித்தமே கர்த்தர் அவர்களை உனக்கு முன்பாகத் துரத்தி விடுகிறார்" (உபா 9:4) என்று சொல்லுகிறார்.

கானான் தேசத்தில் வாசம்பண்ணுகிற கானானியர்கள் விக்கிரகாராதனைக்காரராயிருக்கிறார்கள். அவர்களுடைய ஆகாமியத்தினிமித்தம் கர்த்தர் அவர்களை கானான் தேசத்திலிருந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக துரத்திவிடுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு மறுபடியுமாய் இந்த சத்தியத்தை தெளிவுபடுத்தும் வண்ணமாக, அவர்களை நோக்கி, "உன் நீதியினிமித்தமும் உன் இருதயத்தினுடைய உத்தமத்தினிமித்தமும் நீ அவர்கள் தேசத்தைச் சுதந்தரிக்கும்படி பிரவேசிப்பதில்லை; அந்த ஜாதிகளுடைய ஆகாமியத்தினிமித்தமாகவும், ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்னும் உன் பிதாக்களுக்குக் கர்த்தர் ஆணையிட்டுச் சொன்ன வார்த்தையை நிறைவேற்றும்படியாகவும், உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உனக்கு முன்பாகத் துரத்திவிடுகிறார்" (உபா 9:5) என்றும்,

"ஆகையால், உன் நீதியினிமித்தம் உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு அந்த நல்ல தேசத்தைச் சுதந்தரிக்கக் கொடார் என்பதை அறியக்கடவாய்; நீ வணங்காக் கழுத்துள்ள ஜனம்" (உபா 9:6) என்றும் சொல்லுகிறார்.

கிரியையினால் யாரும் இரட்சிக்கப்படுவதில்லை. தேவனுடைய கிருபையினாலேயே நாம் இரட்சிக்கப்படுகிறோம். (எபே 2:8-9) இஸ்ரவேல் புத்திரருக்குள் நீதியில்லை. அவர்கள் கர்த்தருக்கு எதிராகக் கலகம் பண்ணும் வணங்காக் கழுத்துள்ள ஜனம். உபா 9:4-29 ஆகிய வசனங்களில் இஸ்ரவேல் புத்திரரின் கலகக் குணங்களை மோசே விவரித்துக் கூறியிருக்கிறார்.

கர்த்தருடைய உதவியும், ஒத்தாசையும், கிருபையும், அநுக்கிரகமும் இல்லையென்றால் இஸ்ரவேல் புத்திரரால் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கவும் முடியாது. அவர்களால் கானானியரை அந்த தேசத்திலிருந்து துரத்திவிடவும் முடியாது. ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சுயநீதியைக் குறித்தும், சுயபரிசுத்தத்தைக் குறித்தும் தங்கள் இருதயங்களில் பெருமைப்படக்கூடாது.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசித்ததுபோலவே, புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம், பரமகானானை நோக்கி பிரயாணம்பண்ணுகிறோம். நம்முடைய சுயநீதியினாலோ அல்லது நம்முடைய சுயபரித்தத்தினாலோ நம்மால் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க முடியாது. கர்த்தருடைய வல்லமையினாலும், அவருடைய கிருபையினாலுமே, நாம் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்கிறோம்.

இஸ்ரவேல் புத்திரர் வணக்காக் கழுத்துள்ள ஜனமாகயிருந்தாலும், கர்த்தர் அவர்களை பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான கானான் தேசத்திற்குள் வழிநடத்துவதற்கான காரணத்தையும் மோசே இந்த வசனப்பகுதியில் இஸ்ரவேல் புத்திரருக்கு தெளிவுபடுத்துகிறார்.

கானான் தேசத்தாரிடத்தில் ஆகாமியம் காணப்படுகிறது. அவர்கள் கர்த்தருக்கு அருவருப்பானவர்களாக இருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருடைய முற்பிதாக்களுக்கு, கானான் தேசத்தைச் சுதந்தரமாகக் கொடுப்பதாக, ஆணையிட்டுக்கொடுத்திருக்கிறார். கர்த்தர் தாம் சொன்ன வார்த்தையை நிறைவேற்றுகிறவர். இதன் நிமித்தமாகவே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தைச் சுதந்தரிக்கக்கொடுக்கிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிற பிரமாணத்தின் விவரம் வருமாறு:

1. இஸ்ரவேலே, கேள்: நீ இப்பொழுது யோர்தானைக் கடந்து, உன்னிலும் ஜனம் பெருத்ததும் பலத்ததுமான ஜாதிகளைத் துரத்துவாய். (உபா 9:1)

2. உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு முன்பாகக் கடந்துபோகிறவர் என்பதை இன்று அறியக்கடவாய்; அவர் பட்சிக்கிற அக்கினியைப்போல அவர்களை அழிப்பார்; அவர்களை உனக்கு முன்பாக விழப்பண்ணுவார் (உபா 9:3)

3. நீ அவர்களைச் சீக்கிரமாய்த் துரத்தி, அவர்களை அழிப்பாய்.

4. என் நீதியினிமித்தம் இந்த தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி கர்த்தர் என்னை அழைத்துவந்தார் என்று சொல்லாயாக; அந்த ஜாதிகளுடைய ஆகாமியத்தினிமித்தமே கர்த்தர் அவர்களை உனக்கு முன்பாகத் துரத்தி விடுகிறார். (உபா 9:4-5)

5. உன் நீதியினிமித்தம் உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு அந்த நல்ல தேசத்தைச் சுதந்தரிக்கக் கொடார் என்பதை அறியக்கடவாய்; நீ வணங்காக் கழுத்துள்ள ஜனம். (உபா 9:6)

6. நீ வனாந்தரத்தில் உன் தேவனாகிய கர்த்தருக்குக் கடுங்கோபம் உண்டாக்கினதை நினை, அதை மறவாயாக; நீங்கள் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாள் முதல், இவ்விடத்தில் வந்து சேருமட்டும், கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினீர்கள். (உபா 9:7-24)

இஸ்ரவேலருடைய நீதி உபா 9:7-29

உபா 9:7. நீ வனாந்தரத்தில் உன் தேவனாகிய கர்த்தருக்குக் கடுங்கோபம் உண்டாக்கினதை நினை, அதை மறவாயாக; நீங்கள் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட நாள் முதல், இவ்விடத்தில் வந்து சேருமட்டும், கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினீர்கள்.

உபா 9:8. ஓரேபிலும் நீங்கள் கர்த்தருக்குக் கடுங்கோபம் உண்டாக்கினதினால், கர்த்தர் உங்களை அழிக்கத்தக்கதான உக்கிரங் கொண்டார்.

உபா 9:9. கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கைப் பலகைகளாகிய கற்பலகைகளைப் பெற்றுக்கொள்ளும்படி நான் மலையில் ஏறினபோது, நாற்பதுநாள் இரவும்பகலும் மலையில் தங்கி அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் இருந்தேன்.

உபா 9:10. அப்பொழுது தேவனுடைய விரலினால் எழுதியிருந்த இரண்டு கற்பலகைகளைக் கர்த்தர் என்னிடத்தில் ஒப்புக் கொடுத்தார்; சபை கூடியிருந்த நாளில் கர்த்தர் மலையிலே அக்கினியின் நடுவிலிருந்து உங்களுடனே பேசின வார்த்தைகளின்படியே அவைகளில் எழுதியிருந்தது.

உபா 9:11. இரவும் பகலும் நாற்பதுநாள் முடிந்து, கர்த்தர் எனக்கு அந்த உடன்படிக்கையின் இரண்டு கற்பலகைகளைக் கொடுக்கிறபோது,

உபா 9:12. கர்த்தர் என்னை நோக்கி: நீ எழுந்து, சீக்கிரமாய் இவ்விடம் விட்டு, இறங்கிப்போ; நீ எகிப்திலிருந்து அழைத்துக் கொண்டுவந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள்; நான் அவர்களுக்கு விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாக விட்டு விலகி, வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தைத் தங்களுக்காக உண்டாக்கினார்கள் என்றார்.

உபா 9:13. பின்னும் கர்த்தர் என்னை நோக்கி: இந்த ஜனங்களைப் பார்த்தேன்; அது வணங்காக் கழுத்துள்ள ஜனம்.

உபா 9:14. ஆகையால், நான் அவர்களை அழித்து, அவர்கள் பேரை வானத்தின் கீழ் அற்றுப்போகப்பண்ணும்படி, நீ என்னை விட்டுவிடு; அவர்களைப்பார்க்கிலும் உன்னைப் பலத்ததும் ஜனம் பெருத்ததுமான ஜாதியாக்குவேன் என்றார்.

உபா 9:15. அப்பொழுது நான் திரும்பி மலையிலிருந்து இறங்கினேன், மலையானது அக்கினி பற்றி எரிந்துகொண்டிருந்தது; உடன்படிக்கையின் இரண்டு பலகைகளும் என் இரண்டு கைகளில் இருந்தது.

உபா 9:16. நான் பார்த்தபோது, நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்து, வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டியை உங்களுக்கு உண்டாக்கி, கர்த்தர் உங்களுக்கு விதித்த வழியைச் சீக்கிரமாய் விட்டு விலகினதைக் கண்டேன்.

உபா 9:17. அப்பொழுது நான் என் இரண்டு கைகளிலும் இருந்த அந்த இரண்டு பலகைகளையும் ஓங்கி எறிந்து, அவைகளை உங்கள் கண்களுக்கு முன்பாக உடைத்துப்போட்டேன்.

உபா 9:18. கர்த்தரைக் கோபப்படுத்துவதற்கு நீங்கள் அவருடைய சமுகத்தில் பொல்லாப்புச் செய்துநடப்பித்த உங்களுடைய சகல பாவங்கள் நிமித்தமும், நான் கர்த்தருக்கு முன்பாக முன்போல இரவும் பகலும் நாற்பதுநாள் விழுந்துகிடந்தேன்; நான் அப்பம் புசிக்கவுமில்லை, தண்ணீர் குடிக்கவுமில்லை.

உபா 9:19. கர்த்தர் உங்களை அழிக்கும்படி உங்கள்மேல் கொண்டிருந்த கோபத்திற்கும் உக்கிரத்திற்கும் பயந்திருந்தேன்; கர்த்தர் அந்த முறையும் என் மன்றாட்டைக் கேட்டார்.

உபா 9:20. ஆரோன்மேலும் கர்த்தர் மிகவும் கோபங்கொண்டு, அவனை அழிக்கவேண்டும் என்றிருந்தார்; அப்பொழுது ஆரோனுக்காகவும் விண்ணப்பம்பண்ணினேன்.

உபா 9:21. உங்கள் பாவக்கிரியையாகிய அந்தக் கன்றுக்குட்டியை நான் எடுத்து அக்கினியில் எரித்து, அதை நொறுக்கி, தூளாய்ப் போகுமட்டும் அரைத்து, அந்தத் தூளை மலையிலிருந்து ஓடுகிற ஆற்றிலே போட்டுவிட்டேன்.

உபா 9:22. தபேராவிலும், மாசாவிலும், கிப்ரோத் அத்தாவாவிலும் கர்த்தருக்குக் கடுங்கோபம் உண்டாக்கினீர்கள்.

உபா 9:23. நீங்கள் போய், நான் உங்களுக்குக் கொடுத்த தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள் என்று கர்த்தர் காதேஸ்பர்னேயாவிலிருந்து உங்களை அனுப்புகையிலும், நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரை விசுவாசியாமலும், அவருடைய சத்தத்துக்குச் செவிகொடாமலும், அவருடைய வாக்குக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினீர்கள்.

உபா 9:24. நான் உங்களை அறிந்த நாள்முதற் கொண்டு, நீங்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறவர்களாயிருந்தீர்கள்.

உபா 9:25. கர்த்தர் உங்களை அழிப்பேன் என்று சொன்னபடியினால், நான் முன்போல் கர்த்தரின் சமுகத்தில் இரவும் பகலும் நாற்பதுநாள் விழுந்துகிடந்தேன்; அப்பொழுது நான் கர்த்தரை நோக்கிப் பண்ணின விண்ணப்பமாவது:

உபா 9:26. கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் உம்முடைய மகத்துவத்தினாலே மீட்டு, பலத்த கையினால் எகிப்திலிருந்து கொண்டு வந்த உமது ஜனத்தையும், உமது சுதந்தரத்தையும் அழிக்காதிருப்பீராக.

உபா 9:27. கர்த்தர் அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருந்த தேசத்தில் அவர்களைப் பிரவேசிக்கப் பண்ணக்கூடாமற் போனபடியினாலும், அவர்களை வெறுத்தபடியினாலும், அவர்களை வனாந்தரத்தில் கொன்று போடும்படிக்கே கொண்டுவந்தார் என்று நாங்கள் விட்டுப் புறப்படும்படி நீர் செய்த தேசத்தின் குடிகள் சொல்லாதபடிக்கு,

உபா 9:28. தேவரீர் இந்த ஜனங்களின் முரட்டாட்டத்தையும், இவர்கள் ஆகாமியத்தையும், இவர்கள் பாவத்தையும் பாராமல், உமது தாசராகிய ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களை நினைத்தருளும்.

உபா 9:29. நீர் உமது மகா பலத்தினாலும், ஓங்கிய புயத்தினாலும் புறப்படப்பண்ணின இவர்கள் உமது ஜனமும் உமது சுதந்தரமுமாயிருக்கிறார்களே என்று விண்ணப்பம்பண்ணினேன்.

தங்களுடைய நீதியினிமித்தமும், தங்கள் இருதயத்தினுடைய உத்தமத்தினிமித்தமும், தாங்கள் கானான் தேசத்தைச் சுதந்தரிக்கும்படி, அந்த தேசத்தில் பிரவேசித்திருப்பதாக இஸ்ரவேல் புத்திரர் தங்கள் மனதிலே நினைக்கக்கூடாது. அவர்களிடத்தில் நீதியுமில்லை. அவர்களுடைய இருதயமும் உத்தமமால்லை. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய நீதியினாலேயே கானான் தேசத்தில் பிரவேசிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் தங்கள் தேவனாகிய கர்த்தருக்குக் கடுங்கோபம் உண்டாக்கினார்கள். அவர்கள் அதை நினைத்துப் பார்க்கவேண்டும். தாங்கள் கர்த்தருக்கு கோபமுண்டாக்கினதை அவர்கள் ஒருபோதும் மறக்கக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட நாள் முதல், இவ்விடத்தில் வந்து சேருமட்டும், கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினார்கள் *(உபா 9:7)*.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளிலிருந்து நாற்பது வருஷக்காலமாக கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினார்கள் *(உபா 2:7; உபா 8:2,4; உபா 9:3; யோசு 5:6)*.

இஸ்ரவேல் புத்திரரிடத்தில் நீதியில்லை. அதற்கு பதிலாக அவர்களிடத்தில் கீழ்ப்படியாமையும் கலககுணமும் காணப்படுகிறது. அவர்கள் பல சமயங்களிலே, தங்களுடைய கீழ்ப்படியாமையினிமித்தமாகவும், கலககுணத்தினிமித்தமாகவும் கர்த்தருக்கு கோபம் உண்டுபண்ணியிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே நாற்பது வருஷங்களாக சுற்றி அலைந்தார்கள். மோசே அவர்களுடைய வனாந்தர அனுபவத்தைப்பற்றிச் சொல்லும்போது, அவர்களுடைய வனாந்தர பிரயாணத்தின், முதலாவது வருஷத்து சரித்திரத்தையும், கடைசி வருஷத்து சரித்திரத்தையும் அதிகமாய் சொல்லியிருக்கிறார். இடைப்பட்ட வருஷங்களில், இஸ்ரவேல் புத்திரரின் சரித்திரத்தைப்பற்றி நமக்கு போதுமான விவரங்கள் கிடைக்கவில்லை.

ஆனாலும், "நீங்கள் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட நாள் முதல், இவ்விடத்தில் வந்து சேருமட்டும், கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினீர்கள்" என்று மோசே இஸ்ரவேல் புத்திரரின் கலகக்குணத்தைப்பற்றி பொதுவாக சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு கடும்கோபமுண்டாக்கினதினால், அவர்கள் கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும், நன்மையையும் பெற்றுக்கொள்வதற்கு அபாத்திரராயிருக்கிறார்கள். ஆகையினால் தங்கள் நீதியினிமித்தம், கானான் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி, கர்த்தர் தங்களை கானான் தேசத்திற்கு அழைத்து வந்திருக்கிறார் என்று இஸ்ரவேல் புத்திரர் நினைக்கவும் கூடாது, சொல்லவும் கூடாது. அவர்கள் எப்போதுமே கலககுணமுள்ள ஜனங்களாகவும், வணங்காக்கழுத்துள்ள ஜனங்களாகவும் இருக்கிறார்கள்.

"ஓரேபிலும் நீங்கள் கர்த்தருக்குக் கடுங்கோபம் உண்டாக்கினதினால், கர்த்தர் உங்களை அழிக்கத்தக்கதான உக்கிரங்கொண்டார்" *(உபா 9:8)* என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். மோசே இந்த சம்பவத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு இந்த வசனப்பகுதியில் விரிவாகச் சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கைப் பலகைகளாகிய கற்பலகைகளைப் பெற்றுக்கொள்ளும்படி நான் மலையில் ஏறினபோது, நாற்பதுநாள் இரவும்பகலும் மலையில் தங்கி அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் இருந்தேன்" *(உபா 9:9)* என்று சொல்லுகிறார்.

"கற்பலகைகளைப் பெற்றுக்கொள்ளும்படி" (யாத் 24:12-18; யாத் 32:15-19) மோசே மலையில் ஏறினபோது அங்கு நாற்பதுநாள் உபவாசம் இருந்தார். (மத் 4:2)

"அப்பொழுது தேவனுடைய விரலினால் எழுதியிருந்த இரண்டு கற்பலகைகளைக் கர்த்தர் என்னிடத்தில் ஒப்புக் கொடுத்தார்; சபை கூடியிருந்த நாளில் கர்த்தர் மலையிலே அக்கினியின் நடுவிலிருந்து உங்களுடனே பேசின வார்த்தைகளின்படியே அவைகளில் எழுதியிருந்தது" (உபா 9:10).

"இரண்டு கற்பலகைகளைக் கர்த்தர் என்னிடத்தில் ஒப்புக் கொடுத்தார்" என்பது ஆரோன் பொன்கன்றுக்குட்டியைச் செய்து, இஸ்ரவேல் புத்திரர் பாவம் செய்தபின்பு நடைபெற்ற சம்பவமாகும் (உபா 9:10; யாத் 32:1-24).

"கர்த்தர் மலையிலே அக்கினியின் நடுவிலிருந்து உங்களுடனே பேசின வார்த்தைகள்" என்பது பத்துக் கற்பனைகளை மட்டுமே குறிக்கும். சீனாய் மலையில் இஸ்ரவேல் புத்திரரின் செவிகள் கேட்க கர்த்தர் பத்துக் கற்பனைகளை மட்டுமே கூறினார் (உபா 9:10; உபா 5:6-22; யாத் 20:1-17).

"இரவும் பகலும் நாற்பதுநாள் முடிந்து, கர்த்தர் எனக்கு அந்த உடன்படிக்கையின் இரண்டு கற்பலகைகளைக் கொடுக்கிறபோது, கர்த்தர் என்னை நோக்கி: நீ எழுந்து, சீக்கிரமாய் இவ்விடம் விட்டு, இறங்கிப்போ; நீ எகிப்திலிருந்து அழைத்துக் கொண்டுவந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள்; நான் அவர்களுக்கு விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாக விட்டு விலகி, வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தைத் தங்களுக்காக உண்டாக்கினார்கள் என்றார்" (உபா 9:11,12).

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: இந்த ஜனங்களைப் பார்த்தேன்; அது வணங்காக் கழுத்துள்ள ஜனம். ஆகையால், நான் அவர்களை அழித்து, அவர்கள் பேரை வானத்தின் கீழ் அற்றுப்போகப்பண்ணும்படி, நீ என்னை விட்டுவிடு; அவர்களைப்பார்க்கிலும் உன்னைப் பலத்ததும் ஜனம் பெருத்ததுமான ஜாதியாக்குவேன் என்று சொல்லுகிறார் (உபா 9:13,14).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அழித்துப்போட சித்தம் கொண்டார். ஆனால் மோசேயோ இஸ்ரவேல் புத்திரருக்காகக் கர்த்தரிடத்தில் பரிந்துபேசி ஜெபிக்கிறார். அவர்களுக்காகப் பரிந்து பேசவேண்டாமென்றும், அவர்களை அழிப்பதற்கு நீ விட்டுவிடவேண்டுமென்றும் கர்த்தர் மோசேயிடம் கூறுகிறார் (யாத் 32:10-14).

"அப்பொழுது நான் திரும்பி மலையிலிருந்து இறங்கினேன், மலையானது அக்கினி பற்றி எரிந்துகொண்டிருந்தது; உடன்படிக்கையின் இரண்டு பலகைகளும் என் இரண்டு கைகளில் இருந்தது. நான் பார்த்தபோது, நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்து, வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டியை உங்களுக்கு உண்டாக்கி, கர்த்தர் உங்களுக்கு விதித்த வழியைச் சீக்கிரமாய் விட்டு விலகினதைக் கண்டேன். அப்பொழுது நான் என் இரண்டு கைகளிலும் இருந்த அந்த இரண்டு பலகைகளையும் ஓங்கி எறிந்து, அவைகளை உங்கள் கண்களுக்கு முன்பாக உடைத்துப்போட்டேன்" (உபா 9:15-17) என்று மோசே சொல்லுகிறார்.

"கர்த்தரைக் கோபப்படுத்துவதற்கு நீங்கள் அவருடைய சமுகத்தில் பொல்லாப்புச் செய்துநடப்பித்த உங்களுடைய சகல பாவங்கள் நிமித்தமும், நான் கர்த்தருக்கு முன்பாக முன்போல இரவும் பகலும் நாற்பதுநாள் விழுந்துகிடந்தேன்; நான் அப்பம் புசிக்கவுமில்லை, தண்ணீர் குடிக்கவுமில்லை. கர்த்தர் உங்களை அழிக்கும்படி உங்கள்மேல் கொண்டிருந்த கோபத்திற்கும் உக்கிரத்திற்கும் பயந்திருந்தேன்; கர்த்தர் அந்த முறையும் என் மன்றாட்டைக் கேட்டார்" (உபா 9:18,19) என்றும் மோசே சொல்லுகிறார்.

மோசே இரண்டுதரம் நாற்பது நாட்களுக்கு உபவாசம் இருக்கிறார். இது இரண்டாவது நாற்பதுநாள் உபவாச சம்பவம். இவ்விரண்டு நாற்பது நாட்களுக்கும் இடையில் மோசே அப்பம் புசித்தாரா, தண்ணீர் குடித்தாரா என்பது தெரியவில்லை. (யாத் 32:15-35; யாத் 34:10-35) ஒன்றும் புசியாமலும், குடியாமலும் இருந்திருப்பாரென்றால், மோசே மொத்தம் 80 நாட்களுக்கு உபவாசம் பண்ணுகிறார். அதிக நாட்கள் உபவாசம் பண்ணியவர் மோசே. இந்த நாற்பது நாள் உபவாசம் உபா 9:25-29 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

"ஆரோன்மேலும் கர்த்தர் மிகவும் கோபங்கொண்டு, அவனை அழிக்கவேண்டும் என்றிருந்தார்; அப்பொழுது ஆரோனுக்காகவும் விண்ணப்பம்பண்ணினேன்" (உபா 9:20) என்று மோசே சொல்லுகிறார்.

ஆரோன் பொன்கன்றுக் குட்டியைச் செய்தார். கர்த்தர் அவர்மீதும் கோபங்கொண்டார். மோசேயின் விண்ணப்பத்தைக் கேட்டு, கர்த்தர் ஆரோனை அன்றைய தினம் அழிக்காமல் விட்டுவிட்டார். ஆரோன் மேலும் 38 வருஷங்கள் உயிரோடு இருந்தார். கானான் தேசத்திற்குள் இஸ்ரவேல் புத்திரர் பிரவேசிப்பதற்கு முன்பாக ஓர் மலையில் ஆரோன் மரித்துப் போனார் (எண் 20:22-29).

"உங்கள் பாவக்கிரியையாகிய அந்தக் கன்றுக்குட்டியை நான் எடுத்து அக்கினியில் எரித்து, அதை நொறுக்கி, தூளாய்ப் போகுமட்டும் அரைத்து, அந்தத் தூளை மலையிலிருந்து ஓடுகிற ஆற்றிலே போட்டுவிட்டேன்" (உபா 9:21) என்று மோசே சொல்லுகிறார்.

இந்த சம்பவம் யாத் 31:18-32:20 ஆகிய வசனப்பகுதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

மோசே சீனாய்மலையில் நாற்பது நாள் உபவாசம்பண்ணி முடிந்தபின்பு. (யாத் 24:12-18; உபா 9:9-18) ஆசரிப்புக் கூடாரம் (யாத் 25:1-27:21; யாத் 30:1-21) ஆசாரியத்துவம், வஸ்திரங்கள், ஊழியங்கள் (யாத் 28:1-29:46), அபிஷேகத்தைலம், தூபவர்க்கங்கள் (யாத் 30:22-38), விசித்திரவேலை செய்கிறவர்கள் (யாத் 31:1-11), ஓய்வுநாளைப் பற்றிய புதிய கட்டளைகள் (யாத் 31:12-18) ஆகியவற்றைப் பற்றிய வெளிப்பாடுகளைத் தேவனிடமிருந்து பெற்றுக் கொண்ட பின்பு. மோசே சீனாய் மலையிலிருந்து ஆறாம் முறையாகக் கீழே இறங்கி வருவதற்கு ஆயத்தமாக இருக்கிறார். (யாத் 19:3).

மோசே சீனாய் மலையிலே, கர்த்தருடைய சமுகத்திலே நாற்பதுநாள் இரவும் பகலும் இருக்கிறார். கர்த்தர் மோசேயோடு பேசி முடித்த பின்பு, இரண்டு பலகைகளை அவரிடத்தில் கொடுக்கிறார். இவை தேவனுடைய விரலினால் எழுதப்பட்ட கற்பலகைகளாகிய சாட்சியின் இரண்டு பலகைகளாகும்.

கர்த்தர் சொன்ன பத்துக்கட்டளைகள் இந்தப் பலகைகளில் எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தர் சீனாய் மலையிலிருந்து பத்துக்கட்டளைகளை சொன்னபோது, அதை இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கேட்டார்கள். தாம் சொன்ன பத்துக்கட்டளைகளை, கர்த்தர் இப்போது தம்முடைய விரலினால் இரண்டு கற்பலகைகளில் எழுதி, அதை மோசேயினிடத்தில் கொடுக்கிறார்.

எழுதப்பட்டது சீக்கிரத்தில் அழிந்துபோகாமல் நிலைத்திருக்கும். கர்த்தர் தம்முடைய கட்டளைகளை காகிதத்தில் எழுதாமல் கற்பலகைகளில் எழுதியிருக்கிறார். கர்த்தருடைய கட்டளைகளெல்லாமே இஸ்ரவேல் புத்திரருக்கு நித்திய கட்டளைகளாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறை தோறும், கர்த்தருடைய கட்டளைகளை நினைவுகூர்ந்து, அவற்றை கைக்கொள்ளவேண்டும்.

கர்த்தர் பத்துக்கட்டளைகளையும் இரண்டு கற்பலகைகளில் எழுதியிருக்கிறார். காகிதத்தில் எழுதப்பட்டதைவிட, கற்பலகைகளில் எழுதப்பட்டது நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்கும்.

யாத் 24:12 ஆவது வசனத்தில் தேவன் மோசேயை நோக்கி "நீ மலையின்மேல் என்னிடத்திற்கு ஏறிவந்து, அங்கே இரு. நான் உனக்குக் கற்பலகைகளைக் கொடுப்பேன்" என்று கூறினார்.

கர்த்தர் தம்முடைய கட்டளைகளை எழுதுவதற்கு எழுத்தாணியை பயன்படுத்தவில்லை. கர்த்தருடைய கட்டளைகள் தேவனுடைய விரலினால் எழுதப்பட்டிருக்கிறது. தேவன் தம்முடைய சித்தத்தினாலும் வல்லமையினாலும், தம்முடைய கட்டளைகளை, கற்பலகைகளில் எழுதியிருக்கிறார்.

"தேவனுடைய விரல்" என்னும் வாக்கியம் மிகவும் விசேஷமானது. தானி 5:5,24; யோவான் 8:6 ஆகிய வசனங்களைப் போல இதைப் பிரத்தியட்சமான அர்த்தத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இது தேவனுடைய வல்லமையைக் குறிக்கும் என்று இதற்கு உருவகப் பொருள் கூறுவதற்கு வாய்ப்பில்லை. (யாத் 8:19; லூக்கா 11:20). தேவன் தம்முடைய விரலினால் இந்தக் கற்பலகைகளை எழுதினார். தேவனுக்குக் கைகளும், விரல்களும் உள்ளன (யாத் 24:12; யாத் 31:18; யாத் 32:14-15; யாத் 34:27-28; உபா 5:22; உபா 9:10; 2கொரி 3:6).

கர்த்தருடைய ஆவியானவரே, தம்முடைய கட்டளைகளை மனுஷருடைய இருதயங்களில் எழுதுகிறார்.

"ஏனெனில் நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்களென்று வெளியரங்கமாயிருக்கிறது; அது மையினாலல்ல, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும்; கற்பலகைகளிலல்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது. நாங்கள் தேவனுக்கு முன்பாகக் கிறிஸ்துவின் மூலமாய் இப்படிப்பட்ட நம்பிக்கையைக் கொண்டிருக்கிறோம்" (2கொரி 3:3,4).

கர்த்தர் தம்முடைய பத்துக்கட்டளை களையும் ஒரே பலகையில் எழுதாமல், இரண்டு பலகைகளில் எழுதியிருக்கிறார். நாம் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர் களாயிருக்கவேண்டும் என்பதும், மனுஷர்மீது அன்புள்ளவர்களாயிருக்கவேண்டும் என்பதும் இதற்கு அடையாளம். நாம் கர்த்தருக்கு செய்ய வேண்டிய ஊழியத்தையும் செய்யவேண்டும். மனுஷருக்கு செய்யவேண்டிய கடமைகளையும் செய்யவேண்டும்.

கர்த்தர் மோசேயிடம் கொடுத்த பலகைகள் சாட்சியின் பலகைகள் என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பலகைகளில் கர்த்தருடைய சித்தம் சாட்சியாக எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது அன்பாகயிருக்கிறார் என்பதற்கும், கர்த்தர் அவர்களுக்கு நன்மை செய்வார் என்பதற்கும் கற்பலகைகளில் எழுதப்பட்டிருக்கிற வாக்கியங்கள் சாட்சியாயிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் இந்தப் பலகைகளில் எழுதப்பட்டிருக்கிற கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியவில்லையென்றால், அந்த வார்த்தைகள் அவர்களுக்கு விரோதமாக சாட்சியாயிருக்கும். ஆகையினால் தேவனுடைய விரலினால் எழுதப்பட்ட இரண்டு கற்பலகைகளும், சாட்சியின் பலகைகள் என்று அழைக்கப்படுகிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, கானான் தேசத்திற்கு அழைத்து வருகிறார். கர்த்தர் அவர்கள் மத்தியிலே அற்புதங்களையும் அடையாளங்களையும் நடப்பித்து தம்முடைய வல்லமையை வெளிப்படுத்துகிறார். அவர்களை ஆளுகை செய்வதற்காக கர்த்தர் தம்முடைய கட்டளைகளையும், பிரமாணங்களையும் அவர்களுக்கு சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதாக வாக்குப்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரப்பாதையின் வழியாக கானான் தேசத்தை நோக்கி பிரயாணம்பண்ணுகிறார்கள். கர்த்தர் தம்முடைய கிருபைகளையும், சிலாக்கியங்களையும் அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார். இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, கர்த்தரோடு சமாதானமாயிருக்கிறார்கள்.

மோசே சீனாய் மலையில் நாற்பது நாட்கள் இரவும் பகலும் கர்த்தருடைய சமுகத்திலே உபவாசத்தோடிருக்கிறார். அந்த நாற்பது நாட்கள் நிறைவுபெறுகிறது. கர்த்தர் மோசேயின் கையிலே தம்முடைய விரலால் எழுதின இரண்டு கற்பலகைகளைக் கொடுக்கிறார். மோசே அந்தக் கற்பலகைகளை பெற்றுக்கொண்டு, சீனாய் மலையிலிருந்து கீழே இறங்கி வர தன்னை ஆயத்தப்படுத்துகிறார்.

சீனாய் மலைக்கு கீழே இஸ்ரவேல் புத்திரர் பாளயமிறங்கியிருக்கிறார்கள். அவர்கள் தன்னை அன்போடு வரவேற்பார்கள் என்றும், கர்த்தருடைய வார்த்தைகளை அவர்களுக்கு சொல்லும்போது, அவர்கள் கர்த்தருடைய பிரமாணங்களுக்கு சந்தோஷமாய்க் கீழ்ப்படிவார்கள் என்றும் மோசே எதிர்பார்க்கிறார். சீனாய் மலையிலிருந்து கீழே இறங்கி வந்தவுடன், இஸ்ரவேல் புத்திரர் நடுவிலே, கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்தை போடவேண்டும் என்னும் திட்டமும் மோசேயின் மனதிலிருக்கிறது.

ஆனால் மோசே எதிர்பார்த்த பிரகாரம், சீனாய் மலைக்கு கீழே இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு முன்பாக காத்திருக்கவில்லை. இஸ்ரவேல் புத்திரர் தங்களை பாவத்திற்கும், அக்கிரமத்திற்கும், விக்கிரகாராதனைக்கும் ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். மோசே அந்த ஸ்தலத்திலே இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே, கர்த்தருடைய பிரமாணங்களை சொன்னார். அவர்களும், கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிவதாக வாக்குப்பண்ணினார்கள். இப்போதோ அவர்கள் அதே ஸ்தலத்தில், கர்த்தரை ஆராதியாமல், ஒரு பொன்கன்றுக்குட்டியை செய்து, அதை ஆராதிக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை விட்டு விலகிப்போனதினால், கர்த்தரும் அவர்களை விட்டு விலகிப்போகிறார். கர்த்தருடைய கிருபையும், சிலாக்கியமும் அவர்களை விட்டு விலகிப்போகிறது. கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் இடையே பரிசுத்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்களோ அந்த உடன்படிக்கையை மீறி, கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயில்லை. அவர்களிடத்தில் ஆவிக்குரிய வேசித்தனம் காணப்படுகிறது. இதனால் கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் நடுவே இருக்கிற உடன்படிக்கையும், ஐக்கியமும் முறிந்துபோயிற்று. முறிந்துபோன ஐக்கியத்தை மறுபடியும் ஒன்றாய் இணைப்பது மிகவும் கடினமான காரியம்.

இஸ்ரவேல் புத்திரர் ஒரு பொன்கன்றுக்குட்டியை செய்து அதைத் தங்கள் தெய்வமாக ஆராதிக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரின் பாவத்தில் ஆரோனுக்கும் பங்கு இருக்கிறது (யாத் 32:1-6).

இஸ்ரவேல் புத்திரரின் விக்கிரகாராதனையைப்பற்றி கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். மோசே இப்போது கர்த்தரோடு சீனாய் மலையிலிருக்கிறார் (யாத் 32:7,8). இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக கர்த்தருடைய கோபம் எழும்பியிருக்கிறது. கர்த்தர் தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பை அவர்களுக்கு விரோதமாகச் சொல்லுகிறார் (யாத் 32:9,10).

மோசே சீனாய் மலையிலே, இஸ்ரவேல் புத்திரருக்காக, கர்த்தருடைய சமுகத்திலே பரிந்து பேசுகிறார் (யாத் 32:14). மோசே சீனாய் மலையிலிருந்து கீழே இறங்கி வருகிறார். இஸ்ரவேல் புத்திரர் பொன்கன்றுக்குட்டியை செய்து அதை ஆராதித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய விக்கிரகாராதனைக்கு மோசே கண்ணாரக்கண்ட சாட்சியாயிருக்கிறார் (யாத் 32:15-19).

மோசே இஸ்ரவேல் புத்திரருடைய விக்கிரகாராதனையைக் கண்டபோது கோபமூண்டவராகி, தன் கையிலிருக்கிற கற்பலகைகளை உடைத்துப்போடுகிறார் (யாத் 32:19) இஸ்ரவேல் ஜனத்தார் உண்டுபண்ணின பொன்கன்றுக்குட்டியை அக்கினியில் சுட்டெரித்துப்போடுகிறார் (யாத் 32:20).

மோசே சீனாய்மலையில் நாற்பது நாட்களுக்கு உபவாசித்து ஜெபிக்கிறார். இந்தச் சம்பவம் அவருடைய உபவாசத்தின் 38 அல்லது 39 ஆவது நாளில் நடைபெற்ற சம்பவமாக இருக்கலாம். யாத் 32:5 ஆவது வசனத்தில் "நாளைக்குக் கர்த்தருக்குப் பண்டிகை" என்று ஆரோன் கூறுகிறார். ஆரோன் கன்றுக்குட்டியை வார்த்துச் செய்திருக்கிறார். ஒரே நாளில் பொன்னையெல்லாம் உருக்கி, கன்றுக்குட்டியை வார்ப்பிக்கிறார். பண்டிகை நாளில் மோசே சீனாய் மலையிலிருந்து கீழே இறங்கி வருகிறார் (யாத் 32:5-28).

மோசே சீனாய் மலையிலே கர்த்தருடைய சமுகத்திலே இரவும் பகலும் நாற்பது நாட்களாக இருக்கிறார். கர்த்தர் மோசேயின் கையிலே தம்முடைய விரலினால் எழுதப்பட்ட இரண்டு கற்பலகைகளைக் கொடுக்கிறார். அப்போது இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் சீனாய் மலைக்கு கீழே பாளயமிறங்கியிருக்கிறார்கள். அவர்கள் அங்கே கர்த்தரைப்பற்றியும், அவர் ஏற்கெனவே தங்களுக்கு சொன்ன பிரமாணங்களைப்பற்றியும் தியானிக்கலாம். ஆனால் அவர்களோ கர்த்தரைப்பற்றியும் அவருடைய வார்த்தைகளைப்பற்றியும் தியானிக்காமல், கர்த்தருக்கு விரோதமான நூதன காரியங்களைப்பற்றி யோசிக்கிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய பிரமாணங்களை ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். அவர்களும் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிவதாக வாக்குப்பண்ணியிருக்கிறார்கள். ஆனாலும் அவர்களில் சிலர் கர்த்தருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படியாமல், கர்த்தருக்கு விரோதமாக எவ்வாறு கலகம்பண்ணுவது என்று யோசிக்கிறார்கள்.

மோசே சீனாய் மலையில் கர்த்தருடைய சமுகத்திலே நாற்பது நாட்களாகயிருக்கிறார். அவர் அங்கே இருந்த முப்பத்தொன்பதாவது நாளிலே, மலைக்கு கீழே இருக்கிற இஸ்ரவேல் புத்திரரில் சிலர் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். கர்த்தருடைய பிரமாணத்தை எவ்வாறு மீறலாம் என்று அவர்கள் ஆலோசனை செய்கிறார்கள்.

மோசேயின் சகோதரனாகிய ஆரோன் இஸ்ரவேல் புத்திரர் நடுவிலே இருக்கிறார். மோசே சீனாய் மலையின்மீது கர்த்தருடைய சமுகத்திலே இருக்கிறார். மோசே இஸ்ரவேல் புத்திரரோடு இருக்க முடியாத இந்த நாட்களிலே, மோசேயின் ஸ்தானத்திலே ஆரோன் அவர்களை ஆளுகை செய்கிறார். மோசே மலையிலிருந்து இறங்கி வர தாமதமாகிறது என்று ஜனங்கள் நினைக்கிறார்கள்.

சீனாய் மலையின்கீழே பாளயமிறங்கியிருக்கிற இஸ்ரவேல் புத்திரருக்கு பொறுமையில்லை. அவர்கள் தங்களுக்கு தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிற ஆரோனிடத்தில் கூட்டங்கூடி வருகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் ஆரோனை நோக்கி, "எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும்" *(யாத் 32:1)* என்று சொல்லுகிறார்கள்.

அவர்கள் ஆரோனிடத்தில் கூட்டங் கூடுகிறார்கள். எகிப்து தேசத்திற்குத் திரும்பிப் போகவேண்டுமென்றும் தங்களுக்குத் தெய்வங்களை உண்டுபண்ண வேண்டுமென்றும் இஸ்ரவேல் புத்திரர் தீர்மானமாக இருக்கிறார்கள். *(யாத் 32:1,22; அப் 7:39-40).* மோசே அவர்கள் மத்தியில் இல்லை. ஆரோனால் அவர்களைத் தைரியமாக வழிநடத்த இயலவில்லை. ஜனங்களுடைய விண்ணப்பத்திற்குச் செவிகொடுத்து, ஆரோனும் ஒரு தெய்வத்தைச் செய்து, அவர்களோடு எகிப்திற்குத் திரும்பிப்போகச் சம்மதிக்கிறார் *(யாத் 32:1-6).*

இஸ்ரவேல் புத்திரர் ஆரோனிடம் "நீர் எழுந்து, எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும்" என்று சொல்லுகிறார்கள். பத்துக் கற்பனைகளில் முதல் இரண்டு கற்பனைகளை இஸ்ரவேல் புத்திரர் மீறுகிறார்கள். தேவனுக்கும், அவருடைய பிரமாணத்திற்கும் கீழ்ப்படிவோம் என்று அவர்கள் ஆணையிட்டதை மீறிவிடுகிறார்கள் *(யாத் 20:3-6; யாத் 24:3,7).*

"மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம்" என்றும் இஸ்ரவேல் புத்திரர் ஆரோனிடம் சொல்லுகிறார்கள். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மோசே இஸ்ரவேல் புத்திரரை விடுவித்து, வனாந்தரத்தின் வழியாக வழிநடத்திக் கொண்டு வருகிறார். தேவன் மோசேயின் மூலமாகப் பல அற்புதங்களைச் செய்திருக்கிறார். எகிப்தின் தெய்வங்களுக்கு வல்லமையில்லை என்பது நிரூபணமாகியிருக்கிறது. ஆனாலும் தங்களுக்கு ஒரு தெய்வத்தை உண்டுபண்ண வேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரர் ஆரோனிடம் கூறுகிறார்கள். மோசே விக்கிரகாராதனையைத் தடைபண்ணியிருக்கிறார். *(யாத் 20:3-6).* இஸ்ரவேலரின் தூஷணமான இந்தச் செய்கையை மோசே உபா *9:8-21,25-29;* உபா *10:1-11* ஆகிய வசனங்களில் குறிப்பிட்டிருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் சீனாய் மலைக்கு கீழே பாளயமிறங்கியிருக்கிறார்கள். மோசே இப்போது அவர்கள் மத்தியிலே இல்லை. அவர் சீனாய் மலையின்மேலே கர்த்தருடைய சமுகத்திலிருக்கிறார். மோசே இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் இல்லாதபோது, அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக சிந்திக்கிறார்கள். அவர்களுடைய மனது கெட்டுப்போயிற்று. அவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரால் மோசே வரும் வரையிலும் பொறுமையோடு காத்திருக்க முடியவில்லை. அவர்கள் திரளான ஜனங்களாயிருக்கிறார்கள். அவர்கள் மத்தியிலே கோபமும், வாக்குவாதங்களும், முரட்டாட்டங்களும் உண்டாயிற்று.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தை நோக்கி பிரயாணம் பண்ணுகிறார்கள். அந்த தேசம் அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம். அது பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ வாக்குத்தத்த தேசத்திற்கு போகபொறுமையில்லாதவர் களாயிருக்கிறார்கள். அவர்கள் காத்திருப்பதினால் களைப்படைந்து போயிருக்கிறார்கள். கானான் தேசத்திற்கு உடனே போய்ச்சேரவேண்டுமென்று அவசரப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, தங்களோடுகூட கர்த்தருடைய வார்த்தைகளையும் கொண்டுபோகவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணுகிற இந்த நாட்களிலே, கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய கட்டளைகளையும், பிரமாணங்களையும், வார்த்தைகளையும் ஒவ்வொன்றாக வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய வார்த்தைகளை, அவருடைய சமுகத்திலே பொறுமையோடு காத்திருந்து பெற்றுக்கொள்ள ஆயத்தமாயில்லை. அவர்கள் பொறுமையில்லாமல் அவசரப்படுகிறார்கள்.

கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை நாம் பெற்றுக்கொள்வதற்கு முன்பாக, நாம் கர்த்தருடைய பிரமாணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு காத்திருக்கவேண்டும். கர்த்தர் தம்முடைய ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களோடு ஒரு சில நிபந்தனைகளையும் சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தைகளை பொறுமையோடு கேட்டால்தான், அவர் சொல்லுகிற நிபந்தனைகள் என்ன என்பது நமக்கு தெரியவரும். கர்த்தருடைய சமுகத்திலே காத்திருப்பதினால் நமக்கு நன்மையே உண்டாகும். காத்திருக்கும் காலம் ஒருபோதும் வீணாய்ப்போவதில்லை.

இஸ்ரவேல் ஜனத்தார் சீனாய் மலையின்கீழே பாளயமிறங்கியிருக்கிறார்கள். மோசே ஏற்கெனவே சீனாய் மலைக்கு மேலே ஏறிப்போயிருக்கிறார். மோசே மலையிலிருந்து இறங்கி வருவதற்காக ஜனங்கள் மலைக்கு கீழே காத்திருக்கிறார்கள். மோசே மலையிலிருந்து இறங்கிவர தாமதமாயிற்று. அவர்கள் மோசேயைப்பற்றிச் சொல்லும்போது, "எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக்கொண்டு வந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம்" (யாத் 32:1) என்று சொல்லுகிறார்கள்.

அவர்கள் மோசேயைப்பற்றிச் சொல்லும்போது, மரியாதையில்லாமல் "அந்த மோசே" என்று மரியாதை குறைவான வார்த்தையை சொல்லுகிறார்கள். மோசே அவர்கள்மீது அன்பாகவும், கரிசனையாகவும் இருக்கிறார். அவர் இஸ்ரவேல் ஜனத்தாருக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார். மோசே இஸ்ரவேல் ஜனத்தாரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதற்கு கர்த்தருடைய கருவியாகப் பயன்பட்டவர்.

ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ, மோசே இதுவரையிலும் தங்களுக்கு செய்த உதவிகளை மறந்துவிடுகிறார்கள். அவர்கள் மோசேக்கு நன்றியுள்ளவர்களாகயில்லை. மோசே அவர்களுக்காகத்தான் சீனாய் மலைக்குமேல் ஏறிப்போயிருக்கிறார். மோசே அவர்களுக்காகத்தான் கர்த்தருடைய சமுகத்திலே நாற்பதுநாள் இரவும் பகலும் உபவாசத்தோடு இருக்கிறார்.

மோசே சீனாய் மலையிலிருக்கும்போது கர்த்தர் அவரோடு கூட பேசுகிறார். மோசே மலையிலிருந்து இறங்கிவர தாமதமாகிறது என்றால், கர்த்தர் அவரோடுகூட பேசவேண்டியது ஏராளமாயிருக்கிறது என்று பொருள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் நன்மைக்காகவே மோசேயினிடத்தில் தம்முடைய வார்த்தைகளை சொல்லுகிறார். மோசே கர்த்தருடைய வார்த்தைகளை அதிகமாய்ப் பெற்றுக்கொண்டால், இஸ்ரவேல் புத்திரருக்கு அதிகமான நன்மை உண்டாகும்.

மோசே சீனாய் மலையின்மேல் தனக்காகவோ அல்லது தன்னுடைய சொந்த குடும்பத்திற்காகவோ ஏறிப்போகவில்லை. அவர் இஸ்ரவேல் புத்திரரின் பிரதிநிதியாக சீனாய் மலையின்மேல் ஏறி, கர்த்தருடைய சமுகத்திலே இருக்கிறார். அவர் நாற்பது நாள் இரவும் பகலும் அந்த மலையின்மீது இருந்தாலும், அவர் ஒன்றும் புசியாமல் உபவாசத்தோடு கர்த்தருடைய சமுகத்திலே இருக்கிறார்.

மோசே மலையின்மேல் ஏறிப்போயிருந்தாலும், கர்த்தருடைய வார்த்தைகளை பெற்றுக்கொண்ட பின்பு, அவர் நிச்சயமாய் மலைக்கு கீழே இறங்கிவருவார். மோசே போன காரியம் முடிந்துவிட்டால், அவர் மலையின் மேலேயே தங்கிவிடமாட்டார். கர்த்தர் மோசேயோடு பேசுவதற்கு நாற்பது நாட்களை எடுத்துக்கொள்கிறார். இதனால்தான் மோசே மலையிலிருந்து இறங்கி வர தாமதமாயிற்று.

ஆனால் மலையின் கீழே இருக்கிற இஸ்ரவேல் புத்திரரோ, மோசே மலையிலிருந்து இறங்கி வர தாமதமானதை, தங்களுடைய துன்மார்க்கமான யோசனைக்கு சாதகமாக பயன்படுத்துகிறார்கள். சகலமும் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமும், அவருடைய வேளையிலும் நடைபெறும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு மறுபடியும் வருவதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். அவர் தமக்கு சித்தமான வேளையிலே மறுபடியும் வருவார். அவர் வருவதற்கு தாமதமாகும்போது, அந்த தாமதத்திற்கு தப்பிதமாக வியாக்கியானம் பண்ணக்கூடாது. கர்த்தருடைய வேளை வரும் வரையிலும் நாம் பொறுமையோடு காத்திருக்கவேண்டும். தப்பிதமான வியாக்கியானங்கள் நம்மை தவறான பாதையில் வழிநடத்தும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இப்போது பரலோகத்திலே தம்முடைய பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்ந்திருக்கிறார். அங்கே அவர் நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். நம்முடைய சரீரப்பிரகாரமான கண்களால், கிறிஸ்துவானவர் பிதாவினிடத்தில் பரிந்துபேசுவதை, நம்மால் பிரத்தியட்சமாய்ப் பார்க்க முடியாது. பரலோகத்தின் இரகசியங்கள் நமக்கு மறைவாயிருக்கிறது. ஆனாலும் நாம் தரிசித்து ஜீவிக்காமல், கர்த்தரை விசுவாசித்து ஜீவிக்கவேண்டும்.

கர்த்தருக்காக காத்திருப்பதில் நாம் ஒருபோதும் சோர்ந்துபோய்விடக்கூடாது. கர்த்தருடைய சமுகத்திலே பொறுமையோடு காத்திராதவர்கள் பல்வேறு விதமான சோதனைகளிலே சிக்கிக்கொள்கிறார்கள். கர்த்தருடைய சமுகத்திலே காத்திருக்கிறவர்களோ புதுபெலன் பெறுகிறார்கள்.

மோசே சீனாய் மலையிலிருந்து கீழே இறங்கி வர ஆயத்தமாயிருக்கிறார். மலைக்கு கீழே இருக்கிற இஸ்ரவேல் புத்திரர், இன்னும் ஒரு நாள் காத்திருந்தால், மோசே அவர்கள் மத்தியிலே வந்துவிடுவார். அப்போது மோசேக்கு என்ன சம்பவித்தது என்பதை அவர்கள் அறிந்துகொள்ளலாம். ஆனால் அவர்களோ பொறுமையில்லாதவர்களாக, அவசரப்பட்டு, "அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம்" என்று சொல்லுகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே தெய்வீக ஆராதனையை ஸ்தாபனம்பண்ணுகிறார். அவர்களுக்கு தம்முடைய தெய்வீக பிரமாணங்களையும் சொல்லுகிறார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய தெய்வீக பிரமாணங்களை பெற்றுக்கொள்ள காத்திருப்பதிலே சோர்ந்துபோயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் இந்த மலையிலே கர்த்தரை ஆராதிக்கவேண்டும் என்று கர்த்தர் அவர்களுக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். ஆனால் அவர்கள் விரும்பிய பிரகாரம், அவர்களால் கர்த்தரை உடனே ஆராதிக்க முடியவில்லை. தமக்கு பரிசுத்த ஸ்தலத்தை ஸ்தாபிப்பதற்கான கட்டளைகளை கர்த்தர் மோசேக்கு சொல்லியிருக்கிறார். அந்தக் கட்டளைகளை மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லும் முன்பாகவே, இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய சுயயோசனையின் பிரகாரமாக ஒருவிக்கிரகத்தை செய்து அதை ஆராதிக்கிறார்கள்.

தாங்கள் செய்த விக்கிரகம் தேவனுடைய பிரசன்னத்திற்கு அடையாளம் என்று அவர்கள் தங்களுக்கு தாங்களே நினைத்துக்கொள்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகாராதனையில் சந்தோஷப்படுகிறார்கள். தாங்கள் உண்டுபண்ணின பொன்கன்றுக்குட்டியை நினைத்து அவர்கள் பெருமைப்படவும் செய்கிறார்கள். தங்கள் கைகளால் உண்டுபண்ணின விக்கிரகத்தை அவர்கள் ஆராதனை செய்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ஒரு பொன்கன்றுக்குட்டியை செய்து அதை தெய்வமாக ஆராதிக்கிறார்கள். அவர்கள் எகிப்து தேசத்திலே இருந்தபோது, எகிப்தியர்கள் கன்றுக்குட்டியை தங்கள் தெய்வமாக ஆராதனை செய்ததை, இஸ்ரவேல் ஜனத்தார் பார்த்திருப்பார்கள். எகிப்தியர்கள் கன்றுக்குட்டியை மாத்திரமல்ல, மேலும் பல தெய்வங்களையும் ஆராதிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தர் மாத்திரமே தேவனாயிருக்கிறார். கர்த்தர் ஒருவரே. ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ ஆரோனை நோக்கி, "தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும்" என்று சொல்லுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரருடைய மனதிலே பல தெய்வங்களை ஆராதிக்கும் எண்ணம் இருக்கிறது. தங்களுக்கு எத்தனை தெய்வங்கள் வேண்டும் என்பது அவர்களுக்கே தெரியாது. கர்த்தர் மாத்திரமே அவர்களுக்கு போதுமானவராயிருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரரோ தங்களுடைய தேவனாகிய கர்த்தரை மறந்துவிட்டு, தங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை தங்களுக்காக உண்டுபண்ணும் என்று ஆரோனிடம் சொல்லுகிறார்கள். அவர்கள் எத்தனை தெய்வங்களை உண்டுபண்ணினாலும், அவை மெய்யான தெய்வமல்ல. கர்த்தர் மாத்திரமே மெய்யான தேவன். அவரே சர்வசிருஷ்டிகர். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, சிருஷ்டிகராகிய கர்த்தரை ஆராதியாமல், தாங்கள் உண்டுபண்ணின சிருஷ்டியாகிய பொன்கன்றுக்குட்டியை ஆராதிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ஆரோனிடம், "நீர் எழுந்து, எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும்" என்று சொல்லுகிறார்கள். அதற்கு ஆரோன், "உங்கள் மனைவிகள் குமாரர் குமாரத்திகளுடைய காதுகளில் இருக்கிற பொன்னணிகளைக் கழற்றி, என்னிடத்தில் கொண்டுவாருங்கள்" (யாத் 32:2) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் ஆரோனிடம், "தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும்" என்று சொன்னபோது, ஆரோன் அவர்களுடைய யோசனையை மறுத்ததாக தெரியவில்லை. அவர்களுடைய வார்த்தைகளை நிராகரித்ததாகவோ அல்லது அவர்களுடைய யோசனைக்கு எதிர்ப்பு சொன்னதாகவோ இந்த வசனத்தில் சொல்லப்படவில்லை. அவர்கள் கேட்டுக்கொண்ட பிரகாரம், அவர்களுக்காக தெய்வங்களை உண்டுபண்ண ஆரோன் ஆயத்தமாயிருக்கிறார். ஆரோன் அவர்களுடைய கோரிக்கையை அங்கீகரிக்கிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் இல்லாதபோது, ஆரோன் அவர்களுடைய ஆவிக்குரிய காரியங்களை கவனிக்கவேண்டும். ஆரோன் அவர்களுக்கு கர்த்தரைப்பற்றிய சத்தியத்தை உபதேசம்பண்ணவேண்டும். ஆனால் ஆரோனோ, இஸ்ரவேல் புத்திரருக்கு மறுப்பு வார்த்தை ஒன்றும் சொல்லாமல், அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு தெய்வங்களை உண்டுபண்ண சம்மதிக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுக்காக தெய்வங்களை உண்டுபண்ண வேண்டும் என்று கேட்பது அவர்களுடைய மதியீனமான காரியம். அவர்கள் ஆரோனிடத்தில் கேட்டது ஒருவேளை ஆரோனுக்கு நகைப்பாகவும், ஏளனமாகவும் இருந்திருக்கலாம் என்று வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள். ஆரோன் அவர்களுக்கு வேடிக்கையான ஒரு பொருளை செய்து, அதை அவர்களுடைய தெய்வம் என்று சொல்ல நினைத்திருப்பார் என்றும் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரருடைய மதியீனத்தை அவர்களுக்கு விளக்கி சொல்ல ஆரோன் முன்வந்தார் என்றும் வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள்.

ஆரோன் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உங்கள் மனைவிகள் குமாரர் குமாரத்திகளுடைய காதுகளில் இருக்கிற பொன்னணிகளைக் கழற்றி, என்னிடத்தில் கொண்டுவாருங்கள்" என்று சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரருடைய ஸ்திரீகளுக்கு காதுகளிலிருக்கிற பொன்னணிகள் மிகவும் விசேஷமானது. அவை தங்களுக்கு அலங்காரமானது என்றும், முக்கியமானது என்றும் இஸ்ரவேல் ஸ்திரீகள் நினைக்கிறார்கள். அவர்களுடைய ஸ்திரீகள் தங்கள் காதுகளில் இருக்கிற பொன்னணிகளை கழற்றமாட்டார்கள் என்று ஆரோன் எதிர்பார்த்திருப்பார் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

ஸ்திரீகள் தங்கள் பொன்னணிகளை கழற்றி ஆரோனிடத்தில் கொடுப்பதற்கு பதிலாக, தங்களுக்கு தெய்வங்களை உண்டுபண்ணவேண்டாம் என்று சொல்லுவார்கள் என்று ஆரோன் எதிர்பார்த்தார் என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். ஆரோன் இஸ்ரவேல் புத்திரருடைய மதியீனமான யோசனையை அழித்துப்போட முயற்சி பண்ணுகிறார். அவர்கள் எல்லோரும் பொன்னாபரணங்கள்மீது பேராசையுள்ளவர்கள். பொன்னாபரணங்களை கழற்றி கொடுத்துவிட்டால் தங்களுக்கு பெருத்த நஷ்டம் உண்டாகும் என்று நினைத்து, தங்கள் பொன்னணிகளை கழற்றிக்கொடுக்கமாட்டார்கள் என்றும், தங்களுக்கு தெய்வங்களை உண்டுபண்ணவேண்டாம் என்று சொல்லுவார்கள் என்றும் ஆரோன் எதிர்பார்த்தார் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

"பையிலிருக்கிற பொன்னைக்கொட்டி, வெள்ளியைத் தராசில் நிறுத்து, தட்டானுடனே கூலிபொருத்திக்கொள்ளுகிறார்கள்; அவன் ஒரு தெய்வத்தை உண்டாக்குகிறான்; அதை வணங்கிப் பணிந்துகொள்ளுகிறார்கள்" (ஏசா 46:6).

இஸ்ரவேல் புத்திரரோ, தங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை தங்களுக்காக உண்டுபண்ணவேண்டும் என்பதில் உறுதியாயிருக்கிறார்கள். தங்களுடைய பொன்னணிகளை ஆரோனிடத்தில் கொடுப்பதினால், தங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும், தங்களுக்கு தெய்வங்கள் உண்டுபண்ணப்படவேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாயிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு தங்கள் பொன்னணிகளைவிட, விக்கிரகங்களே முக்கியமானதாகயிருக்கிறது. இஸ்ரவேலின் ஸ்திரீகள், தங்கள் பொன்னணிகளினால் தங்களை அலங்கரித்து பெருமைப்படுவதற்கு பதிலாக, தங்களுக்கு விக்கிரகங்களை செய்து, அந்த விக்கிரகங்களில் பெருமைப்படுகிறார்கள்.

ஆரோன் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் கேட்டுக்கொண்ட பிரகாரம், ஜனங்கள் எல்லாரும் தங்கள் காதுகளில் இருந்த பொன்னணிகளைக் கழற்றி, அவரிடத்தில் கொண்டு வருகிறார்கள் (யாத் 32:3).

முதல் முறையாகக் காதணிகளையும், பொன்னணிகளையும் இஸ்ரவேல் புத்திரர் கொடுக்கிறார்கள். (யாத் 32:2-6). ஆசரிப்புக்கூடாரத்தைப் பண்ணும்போது அவர்கள் மறுபடியுமாகத் தங்கள் பொன்னணிகளைக் கொடுக்கிறார்கள். (யாத் 35:22-29).

கிழக்குத் தேசங்களில் ஸ்திரீகளைப்போல புருஷர்களும் காதணிகளையும், வளையங்களையும், மூக்குத்திகளையும் அணிந்திருந்தார்கள். பொன்னணிகள் பொதுவாக ஸ்திரீகளுக்கே உரியவை. (யாத் 35:22; எண் 31:50; ஏசா 3:19-21; எசே 16:11-12). ஒட்டகங்களும் பொன்சரப்பணிகளைத் தரித்திருந்தன. (நியா 8:26).

ஆரோனிடத்தில் ஆவிக்குரிய பின்மாற்றம் காணப்படுகிறது. அதைப்பற்றிய விவரம் வருமாறு :

1. ஜனங்கள் மோசேயைப் பற்றித் தவறாகக் கூறியதை ஆரோன் கவனித்துக் கேட்கிறார் (யாத் 32:1).

2. திரளான ஜனங்கள் விக்கிரகாராதனை செய்ய வேண்டுமென்று கூறியபோது, ஆரோனும் சம்மதம் தெரிவித்து, தன்னுடைய பெயர், புகழை ஸ்தாபிக்க விரும்புகிறார் (யாத் 32:1,22).

3. ஒரு விக்கிரகத்தைச் செய்வதற்கு ஆரோனும் ஜனங்களோடு சம்மதம் தெரிவிக்கிறார் (யாத் 31:2).

4. விக்கிரகத்தை வார்ப்பிக்க ஜனங்களிடத்திலிருந்து பொன்னணிகளைப் பெற்றுக் கொள்கிறார் (யாத் 31:4).

5. ஆராதனை செய்வதற்கு ஜனங்களுக்கு ஒரு பொன்கன்றுக்குட்டியை வார்ப்பிக்கிறார்.

6. பொன்கன்றுக்குட்டிக்கு முன்பாக ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார் (யாத் 31:5).

7. கன்றுக்குட்டிக்கு ஒரு பண்டிகையை நியமித்து, கன்றுக்குட்டியைக் கர்த்தரோடு ஒப்பிட்டுக் கூறுகிறார்.

8. கன்றுக்குட்டிக்குச் சர்வாங்க தகனபலிகளையிட்டு, சமாதான பலிகளைச் செலுத்துகிறார் (யாத் 31:6).

9. கன்றுக்குட்டியை ஆராதிக்கும்போது ஜனங்களைப் புசிக்கவும், குடிக்கவும், உட்கார்ந்து விளையாடவும் அனுமதிக்கிறார் (யாத் 32:6,19).

10. கன்றுக்குட்டியைப் பணிந்து கொள்கிறார் (யாத் 31:8).

11. இஸ்ரவேலரை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக் கொண்டுவந்த தெய்வங்கள் இவைகளே என்று விக்கிரகங்களைக் குறித்துக் கூறுகிறார்.

12. ஆரோன் தான் செய்த பாவத்தை மற்றவர்கள்மீது சுமத்துகிறார் (யாத் 32:21-23).

13. கன்றுக்குட்டி அக்கினியிலிருந்து தானாக வந்தது என்று பொய்கூறுகிறார் (யாத் 31:24).

14. தேவனுடைய கோபத்திற்கு முன்பாக ஜனங்களை நிறுத்திவிடுகிறார் (யாத் 32: யாத் 11-14,25).

ஆரோன் அவர்கள் கையிலிருந்து அந்தப் பொன்னை வாங்கி, சிற்பக்கருவியினால் கருப்பிடித்து, ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பிக்கிறார். அப்பொழுது அவர்கள்: "இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே" (யாத் 32:4) என்று சொல்லுகிறார்கள்.

எகிப்து தேசத்தில் கன்றுக்குட்டி பிரதான தெய்வமாக இருக்கிறது. அதற்கு "ஆபீஸ்" என்று பெயர். கோசேன் பகுதிக்கு அருகில் மெம்பீஸ் பட்டணத்தில் எகிப்தியர் கன்றுக்குட்டியை வழிபட்டார்கள். இஸ்ரவேலர்கள் எகிப்து தேசத்தில் விக்கிரகங்களை ஆராதனை செய்தார்கள். (யோசு 24:14; எசே 20:8; யாத் 23:3-8).

"உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே" என்று ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரும் கன்றுக்குட்டியைத் தெய்வங்கள் என்று கூறுகிறார்கள். இந்த வசனத்தில் தெய்வங்கள் என்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் எபிரெய வார்த்தை "எலோஹிம்" என்பதாகும். தேவனுடைய பெயரைக் கன்றுக்குட்டிக்குக் கொடுக்கிறார்கள் (யாத் 32:1,4,8,23,31).

இஸ்ரவேல் புத்திரர், "எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும்" என்று கேட்டபோது ஆரோன் அவர்களுடைய யோசனையை மறுக்கவில்லை. தெய்வங்களை உண்டுபண்ணக்கூடாது என்று அவர்களிடத்தில் சொல்லாமல், பொன்னணிகளை கழற்றி தன்னிடத்தில் கொண்டு வருமாறு சொன்னார். அவர்களும் ஆரோன் சொன்ன பிரகாரம் தங்கள் காதுகளிலிருந்த பொன்னணிகளை கழற்றி ஆரோனிடத்தில் கொண்டு வந்து கொடுக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஸ்திரீகளுக்கு காதுகளிலிருக்கிற பொன்னணிகள் மிகவும் விசேஷமானது. அது அவர்களுக்கு மேன்மையானது. ஸ்திரீகளுக்கு அவர்களுடைய காதுகளிலிருக்கிற பொன்னணிகளே மிகுந்த அலங்காரமானது. இஸ்ரவேல் ஜனத்தாருக்கு மிகவும் பிரியமான பொன்னணிகளினால், அவர்களுக்கு விக்கிரகங்களை செய்யும்போது, அவர்கள் அந்த விக்கிரகத்திற்கு அதிக மதிப்பு கொடுப்பார்கள் என்று ஆரோன் நினைத்திருக்கலாம். மரத்தாலும், இரும்பாலும், வெண்கலத்தாலும் செய்யப்படுகிற விக்கிரகத்தைவிட, பொன்னால் செய்யப்படுகிற விக்கிரகத்திற்கு ஜனங்கள் அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள் என்று ஆரோன் நினைத்திருக்கலாம்.

ஆரோன் அவர்கள் கையிலிருந்து பொன்னணிகளை வாங்கி உருக்குகிறார். அதை சிற்பக்கருவியினால் கருப்பிடித்து, ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பிக்கிறார். கன்றுக்குட்டியின் வார்ப்பு வடிவம் ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கிறது. அந்த வார்ப்பிலே உருக்கப்பட்ட பொன்னை ஊற்றுகிறார். அந்த பொன் ஒரு கன்றுக்குட்டியாக வார்ப்பிக்கப்படுகிறது. ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரும் வார்ப்பிக்கப்பட்ட பொன்கன்றுக்குட்டியைப் பார்க்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் வார்ப்பிக்கப்பட்ட பொன்கன்றுக்குட்டியைப் பார்த்து, மற்ற ஜனங்களை நோக்கி, "இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே" (யாத் 32:4) என்று சொல்லுகிறார்கள்.

ஆரோனுடைய மனதிலே ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பிக்கவேண்டும் என்னும் எண்ணம் இருந்தது என்றும் வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். கன்றுக்குட்டியானது தேவனுடைய தெய்வீக பிரசன்னத்திற்கு அடையாளம் என்று ஆரோன் நினைக்கிறார். கன்றுக்குட்டிக்கு தலையும் கொம்புகளும் உள்ளது. இவை தேவனுடைய வல்லமைக்கு அடையாளம் என்று ஆரோன் நினைத்திருக்கலாம்.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே ஆடுமாடுகளும், கன்றுக்குட்டிகளும் ஏராளமாயிருக்கிறது. அவர்கள் தங்கள் மத்தியிலே திரளாயிருக்கிற கன்றுக்குட்டியைப்போன்ற உருவமுள்ள, இந்தப் பொன்கன்றுக்குட்டியை, தங்களுடைய தெய்வமாக நினைத்து, அதை ஆராதிக்கமாட்டார்கள் என்று ஆரோன் நினைத்திருக்கலாம். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரோ அந்தக் கன்றுக்குட்டியைப் பார்த்து, "உங்கள் தெய்வங்கள் இவைகளே" என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் பல வருஷங்களாக எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருந்தவர்கள். எகிப்தியர்கள் கன்றுக்குட்டிகளையும், காளைகளையும் தங்கள் தெய்வங்களாக ஆராதிக்கிறவர்கள். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்த காலத்தில், அவர்கள் கன்றுக்குட்டியை ஆராதிக்க கற்றுக்கொண்டிருப்பார்கள்.

"அவர்களோ, என் சொல்லைக் கேட்க மனதில்லாமல் எனக்கு விரோதமாய் இரண்டகம்பண்ணினார்கள்; அவரவர் தங்கள் கண்களால் நோக்கின அருவருப்புகளைத் தள்ளிப்போடாமலும், எகிப்தின் நரகலான விக்கிரகங்களை விடாமலும் இருந்தார்கள்; ஆதலால் எகிப்து தேசத்தின் நடுவிலே என் கோபத்தை அவர்களிலே தீர்த்துக்கொள்ளும்படிக்கு என் உக்கிரத்தை அவர்கள்மேல் ஊற்றுவேன் என்றேன்" (எசே 20:8).

ஆரோன் ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்தபோது, அதைப் பார்த்த உடனேயே, இஸ்ரவேல் புத்திரர் அதைத் தங்கள் தெய்வமாக அங்கீகரிக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் இன்னும் விக்கிரகாராதனையிலிருந்து விடுவிக்கப்படவில்லை. அவர்கள் எகிப்தின் விக்கிரகங்களை விட்டு விலகி வரவில்லை.

"தான் எகிப்திலே பண்ணின வேசித்தனங்களை அவள் விடவில்லை; அவர்கள் அவளுடைய வாலிபத்திலே அவளோடே சயனித்து, அவளுடைய கன்னிமையின் கொங்கைகளைத் தொட்டு, அவளிடத்தில் தங்கள் வேசித்தனத்தை நடப்பித்தார்கள்" (எசே 23:8).

ஆரோன் வார்ப்பித்த கன்றுக்குட்டியை இஸ்ரவேல் புத்திரர் பார்க்கிறார்கள். அதை தங்கள் தெய்வம் என்று சொல்லி, இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய மதியீனத்தை வெளிப்படுத்துகிறார்கள். "தங்கள் மகிமையைப் புல்லைத் தின்கிற மாட்டின் சாயலாக மாற்றினார்கள்" (சங் 106:20).

இஸ்ரவேல் புத்திரர் ஓரேபிலே கன்றுக்குட்டியை வார்ப்பிக்கிறார்கள். அவர்கள் வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தை ஆராதிக்கிறார்கள். "அவர்கள் ஓரேபிலே ஒரு கன்றுக்குட்டியையுண்டாக்கி, வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தை நமஸ்கரித்தார்கள்" (சங் 106:19).

தான் வார்ப்பித்த கன்றுக்குட்டியைப் பார்த்து இஸ்ரவேல் புத்திரர் சந்தோஷப்படுவதையும், அவர்கள் அதை தங்கள் தெய்வமாக அங்கீகரிப்பதையும் ஆரோன் பார்க்கிறார். ஆரோனுடைய மனதிலும் அதை பார்த்து சந்தோஷமுண்டாயிற்று. ஆரோன் இஸ்ரவேல் ஜனத்தாருடைய சந்தோஷத்தை அதிகப்படுத்தும் வண்ணமாக, தான் வார்ப்பித்த கன்றுக்குட்டியைப் பார்த்து அதற்கு முன்பாக ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார்.

ஆரோன் பலிபீடத்தை கட்டிய பின்பு "நாளைக்கு கர்த்தருக்கு பண்டிகை" (யாத் 32:5) என்றும் சொல்லுகிறார். இந்தப் பண்டிகையானது ஆரோன் கட்டின பலிபீடத்தை பிரதிஷ்டைபண்ணும் பண்டிகையாகும். இந்தப் பலிபீடம் வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டிக்கு முன்பாக கட்டப்பட்டிருக்கிறது. இது விக்கிரத்தின் பலிபீடம். ஆனால் ஆரோனோ இதைப்பற்றிச் சொல்லும்போது. "இது கர்த்தருக்கு பண்டிகை" என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் ஒரே நாளில் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போகிறார்கள். தேவன் நடப்பித்த அற்புதங்களையெல்லாம் கன்றுக்குட்டி தங்களுக்குச் செய்ததாகக் கூறுகிறார்கள். இந்த வசனத்தில் கன்றுக்குட்டியைக் கர்த்தர் என்று அழைக்கிறார்கள். இதற்கு ஆரோன் பயன்படுத்தும் எபிரெய வார்த்தை "யெகோவா" என்பதாகும். கன்றுக்குட்டியைத் தெய்வம் என்றவர்கள், இப்பொழுது அதைக் கர்த்தர் என்றே கூறிவிடுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாருடைய பார்வையிலே, வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டியானது ஒரு தெய்வமாக தெரிகிறது. ஆரோனுடைய பார்வையிலே, அந்தக் கன்றுக்குட்டி, கர்த்தருக்கு ஒப்பானதாக தெரிகிறது. இந்தக் கன்றுக்குட்டியின் மூலமாக கர்த்தரை ஆராதிக்கலாம் என்று ஆரோன் நினைக்கிறார். கர்த்தர் வேறு, வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டி வேறு. ஆரோன் அதை வேறுபிரிக்காமல், அந்தக் கன்றுக்குட்டியையும், அதற்காக கட்டப்பட்ட பலிபீடத்தையும் பிரதிஷ்டைபண்ணும் வண்ணமாக, ஒரு பண்டிகையை ஆசரிக்கிறார். அந்தப் பண்டிகையை "கர்த்தருக்கு பண்டிகை" என்று சொல்லுகிறார்.

ஆரோனுடைய வார்த்தை இஸ்ரவேல் ஜனங்களுக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. மறுநாள் அவர்கள் அதிகாலையில் எழுந்து, சர்வாங்க தகனபலிகளையிட்டு, சமாதானபலிகளைச் செலுத்துகிறார்கள்; பின்பு, ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து, விளையாட எழுந்திருக்கிறார்கள் (யாத் 32:6).

இஸ்ரவேல் புத்திரர் கன்றுக்குட்டிக்குச் செய்த ஆராதனையில் சிலவற்றை அவர்களுடைய மெய்யான தேவனாகிய கர்த்தருக்கே செய்ய வேண்டும். ஆனால் இப்போதோ அவர்கள் கன்றுக்குட்டியைப் பணிந்துகொண்டு, அதற்குப் பலிசெலுத்துகிறார்கள். ஆடிப்பாடுகிறார்கள். கர்த்தரை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும். மெய்யான ஆவிக்குரிய அனுபவம் விசுவாசிகளிடத்தில் வளர வேண்டும். (2தீமோ 3:5).

ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து, விளையாட எழுந்திருக்கிறார்கள். விளையாடுதல் என்பதற்கு இங்கு பயன்படுத்தப் பட்டிருக்கும் எபிரெய வார்த்தை "ட்சாக்காக்" என்பதாகும். இதற்குப் பலமாகச் சிரித்தல், பரியாசம் பண்ணுதல், வேசிமார்க்கத்தாரோடு விளையாடுதல் என்று பொருள். இந்த வார்த்தை வேதாகமத்தில் பலவிதமாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. விளையாடுதல் என்பது பொதுவாக விபசாரத்தைக் குறிக்கிறது. ஆதி 39:14 ஆவது வசனத்தில் இது பரியாசம் பண்ணுதலைக் குறிக்கிறது.

சில விக்கிரகங்களுக்கு ஸ்திரீகளை அர்ப்பணம் செய்யும் வழக்கமும் இருந்தது. தேவதாசிகள் என்று அழைக்கப்படும் இவர்கள் வேசித்தனத்தில் பயன்படுத்தப்பட்டார்கள். விக்கிரகாராதனையில் வேசித்தனமும் கலந்திருந்தபடியினால் இந்த ஆராதனைகளெல்லாம் தோப்புக்களிலும், உயர்ந்த மேடைகளாகிய மறைவிடங்களிலும் நடைபெற்றன.

இஸ்ரவேல் புத்திரர் கன்றுக்குட்டியைப் பணிந்து கொண்டபோது, "தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள்" என்று கர்த்தர் அவர்களைக் குறித்து கூறுகிறார் (யாத் 32:7) அவர்கள் தேவனுடைய நாமத்தைத் தூஷிக்கிறார்கள். அதை வீணாகப் பயன்படுத்துகிறார்கள். பெற்றோரைக் கனப்படுத்தாமல் அவமதிக்கிறார்கள். விபசாரம் பண்ணுகிறார்கள். பொய்கூறுகிறார்கள். பிறர்பொருளை இச்சிக்கிறார்கள். தேவனுடைய எல்லாக் கற்பனைகளையுமே இஸ்ரவேல் புத்திரர்கள் மீறிவிடுகிறார்கள். (யாத் 20:1-17)

மோசே இஸ்ரவேல் புத்திரரோடு இல்லாத சமயத்தில் அவர்கள் தேவனைவிட்டு வழிவிலகி, விக்கிரகாராதனைக்கே சென்று விடுகிறார்கள். தேவன் அவர்கள்மீது கோபம்கொண்டு, அவர்களை அழிக்க ஆயத்தமாகிறார். மோசேயின் சந்ததியின் மூலமாக ஒரு புதிய தேசத்தை உண்டுபண்ணப்போவதாகக் கர்த்தர் கூறுகிறார். ஆனால் மோசேயோ கர்த்தரிடத்தில் தன்னுடைய ஜனங்களுக்காகப் பரிந்துபேசி, கெஞ்சிப் பிரார்த்திக்கிறார். கர்த்தர் மோசேயின் விண்ணப்பத்தைக் கேட்டு, இஸ்ரவேல் புத்திரர்மீது இரக்கம் காண்பிக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் பூர்வகாலத்து வழக்கத்தின் பிரகாரமாக, பண்டிகையை சந்தோஷமாய் ஆசரிக்க தங்களை ஆயத்தம்பண்ணுகிறார்கள். அவர்கள் ஆரோன் கட்டின பலிபீடத்திலே வார்ப்பிக்கப்பட்ட பொன்கன்றுக்குட்டிக்கு சர்வாங்க தகனபலிகளையும், சமாதானபலிகளையும் செலுத்துகிறார்கள். அவர்கள் பலியாக செலுத்தப்பட்ட மிருகத்தின் மாம்சத்தையும் புசிக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாருடைய காதுகளிலிருந்த பொன்னணிகளெல்லாம் இப்போது வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டியாகவும், அந்தக் கன்றுக்குட்டிக்கு முன்பாக கட்டப்பட்ட பலிபீடமாகவும், அந்தக் கன்றுக்குட்டிக்காக செலுத்தப்பட்ட சர்வாங்க தகனபலிகளாகவும், சமாதான பலிகளாகவும் ஆயிற்று. இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்கு சொந்தமான மிருகங்களை, வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டிக்கு பலியிட்டு, அந்த விக்கிரகத்தை மேன்மைப்படுத்துகிறார்கள்.

கர்த்தர் தமது கிருபையினால் இஸ்ரவேல் புத்திரருக்கு பொன்னாபரணங்களையும், ஆடுமாடு களையும் கொடுத்திருக்கிறார். கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கிற ஐசுவரியத்திற்காக அவர்கள் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கவேண்டும். தங்களுடைய பொன்னாலும், மற்ற உடைமைகளாலும் அவர்கள் கர்த்தரை ஆராதித்து அவரை மகிமைப்படுத்த வேண்டும். ஆனால் அவர்களோ கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கிற பொருளாதார ஆசீர்வாதங்களை, விக்கிரகங்களை மகிமைப்படுத்த பயன்படுத்துகிறார்கள்.

சீனாய் மலையின் கீழே இஸ்ரவேல் புத்திரர் திரளான எண்ணிக்கையில் பாளயமிறங்கியிருக்கிறார்கள். அவர்களில் அநேகர் வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டிக்கு பலிகளை செலுத்தி, புசித்து குடித்து வெறித்திருக்கிறார்கள். இதே ஸ்தலத்திலே, ஒரு சில நாட்களுக்கு முன்பாக கர்த்தர் அக்கினியிலே, அவர்களுக்கு மத்தியிலே வெளிப்பட்டார். அவர்கள் எல்லோரும் தங்களோடு பேசுகிற கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரிடத்தில், "உங்களுக்கு வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தை உண்டுபண்ணவேண்டாம்" என்று சொன்னார். அவர்களும் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, அவரோடு உடன்படிக்கை செய்துகொண்டார்கள். கர்த்தர் தங்களுக்கு சொன்ன எல்லா பிரமாணங்களுக்கும் தாங்கள் கீழ்ப்படிவதாக அவர்கள் உறுதிபண்ணினார்கள்.

"உடன்படிக்கையின் புஸ்தகத்தை எடுத்து, ஜனங்களின் காது கேட்க வாசித்தான்; அவர்கள் கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்து, கீழ்ப்படிந்து நடப்போம் என்றார்கள்" (யாத் 24:7).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஓரேபிலே தம்முடைய கட்டளைகளை கொடுத்தார். கர்த்தர் எந்த ஓரேபிலே தம்முடைய கட்டளைகளை அவர்களுக்கு கொடுத்தாரோ, அந்த ஓரேபிலே இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்கு பொன்கன்றுக்குட்டியை வார்ப்பிக்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் ஜனங்கள் மத்தியிலே இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. கர்த்தருடைய சுவிசேஷம் விக்கிரகாராதனைக்காரருக்கும் சொல்லப்படுகிறது. ஜனங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பெற்றுக்கொண்டபோது, தங்கள் விக்கிரகாராதனையைவிட்டு உடனே வெளியேறி வருகிறார்கள்.

"ஏனெனில், அவர்கள் தாமே எங்களைக் குறித்து, உங்களிடத்தில் நாங்கள் அடைந்த பிரவேசம் இன்னதென்பதையும், ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு, நீங்கள் விக்கிரகங்களைவிட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பினதையும், அவர் மரித்தோரிலிருந்தெழுப்பினவரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதையும், அறிவிக்கிறார்களே" (1தெச 1:9,10).

இஸ்ரவேல் புத்திரர் பொன்கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதற்கு பலிகளை செலுத்தி, கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். இந்த விக்கிரகாராதனையிலே ஆரோனுக்கும் பங்கு இருக்கிறது. ஆரோனே விக்கிரகத்தை வார்ப்பித்தார். அவரே அந்த விக்கிரகத்திற்கு முன்பாக ஒரு பலிபீடத்தைக்கட்டி, "நாளைக்கு கர்த்தருக்கு பண்டிகை" என்று சொன்னார்.

இதே ஆரோன் இதற்கு முன்பு மோசேயோடுகூட சீனாய் மலைக்கு ஏறிப்போனவர். கர்த்தருடைய பிரசன்னத்தை மோசே தரிசித்ததுபோல, ஆரோனும் அவரோடுகூட கர்த்தருடைய பிரசன்னத்தை பிரத்தியட்சமாய்ப் பார்த்தவர்.

"கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இறங்கிப்போ; பின்பு நீயும் ஆரோனும் கூடி ஏறிவாருங்கள்; ஆசாரியர்களும் ஜனங்களும், கர்த்தர் தங்களுக்குள்ளே சங்காரம்பண்ணாதபடிக்கு, எல்லையைக் கடந்து கர்த்தரிடத்தில் வராதிருக்கக்கடவர்கள் என்றார்" (யாத் 19:24).

"பின்பு மோசேயும் ஆரோனும் நாதாபும் அபியூவும், இஸ்ரவேலருடைய மூப்பரில் எழுபதுபேரும் ஏறிப்போய், இஸ்ரவேலின் தேவனைத் தரிசித்தார்கள். அவருடைய பாதத்தின்கீழே நீலக்கல்லிழைத்த வேலைக்கு ஒப்பாகவும் தெளிந்த வானத்தின் பிரபைக்கு ஒப்பாகவும் இருந்தது" (யாத் 24:9,10).

கர்த்தருடைய மகிமை எப்படியிருக்கும் என்பது ஆரோனுக்கு தெரியும். அந்த மகிமையை வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டியின் மகிமையோடு ஒப்பிடமுடியாது என்பதும் ஆரோனுக்கு தெரியும். வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டிக்கு ஜீவனுமில்லை மகிமையுமில்லை. ஆனாலும் ஆரோன் அந்தக் கன்றுக்குட்டிக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார். கர்த்தருடைய பெயரினால் அந்தக் கன்றுக்குட்டிக்கு பண்டிகையை ஆசரிக்கிறார்.

கர்த்தருடைய மகிமையை தரிசித்த ஆரோனால், ஒரு பொன்கன்றுக்குட்டியை எவ்வாறு ஆராதிக்க முடிகிறது என்று வேதபண்டிதர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். ஆரோன் தெளிந்த புத்தியில்லாமல், புத்திமயக்கத்தினால் இந்தக் காரியங்களை செய்தார் என்று சிலர் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் திரளான எண்ணிக்கையிலிருக்கிறார்கள். அவர்கள் வெகுஜனமாக ஆரோனிடத்தில் வந்து, "எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும்" என்று அதிகாரத்தோடு கேட்கிறார்கள். ஆரோன் அவர்களுடைய திரளான எண்ணிக்கையும், அவர்களுடைய கோபத்தையும் பார்த்து, பயந்து, அவர்களுக்கு ஒரு பொன்கன்றுக்குட்டியை வார்ப்பித்தார் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

இந்த சம்பவத்தைப்பற்றி யூதருடைய பாரம்பரிய சரித்திரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் ஆரோனை நோக்கி, "எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும்" என்று சொன்னபோது, ஆரோனுக்கு அருகிலிருந்த ஊர் என்பவன், இஸ்ரவேல் புத்திரரை எதிர்த்தார் என்றும், அவர்களுடைய கோரிக்கையை ஊர் ஏற்றுக்கொள்ளவில்லையென்றும், இதனால் இஸ்ரவேல் புத்திரர் ஊரின்மீது கோபப்பட்டு, அவரை கல்லெறிந்து கொன்றுபோட்டார்கள் என்றும் யூதருடைய பாரம்பரிய சரித்திரம் சொல்லுகிறது.

ஆரோன் ஊரின் மரணத்தைப் பார்த்து பயந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு பொன்கன்றுக்குட்டியை வார்ப்பித்துக் கொடுத்தார் என்றும் யூதருடைய பாரம்பரிய சரித்திரம் சொல்லுகிறது. பரிசுத்த வேதாகமத்திலும் இந்த சம்பவத்திற்கு பின்பு ஊரைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. ஊர் என்பவர், ஆரோன், மோசே ஆகியோரின் சகோதரியாகிய மீரியாமின் கணவர் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

மோசே சீனாய் மலையின்மேலே கர்த்தருடைய சமுகத்திலிருக்கும்போது, சீனாய் மலையின்கீழே இஸ்ரவேல் புத்திரருடைய பாளையத்திலே நடைபெறுகிற சம்பவங்களை கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இறங்கிப்போ; எகிப்துதேசத்திலிருந்து நீ நடத்திக் கொண்டுவந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள். அவர்களுக்கு நான் விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள்; அவர்கள் தங்களுக்கு ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதைப் பணிந்துகொண்டு, அதற்குப் பலியிட்டு: இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்று சொன்னார்கள்" (யாத் 32:7,8) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் பாவத்தைப்பற்றிச் சொல்லும்போது, அவர்கள் தங்களை கெடுத்துக்கொள்கிறார்கள் என்று சொல்லுகிறார். பாவம் மனுஷருடைய ஆத்துமாவைக் கெடுத்துப்போடும்.

கர்த்தர் அவர்களுடைய பாவத்தைப்பற்றிச் சொல்லும்போது, தாம் அவர்களுக்கு விதித்த வழியை அவர்கள் விட்டு விலகிப்போகிறார்கள் என்றும் சொல்லுகிறார். நம்முடைய ஜீவியத்தின் பாதையில் பாவம் ஒரு குறுக்கு வழியாக இருக்கிறது. நாம் நேர் வழியில் செல்லாதவாறு பாவம் நம்மை வழிவிலகிப்போகப்பண்ணுகிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய பிரமாணங்களைக் கொடுத்தபோது, அவர்கள் கர்த்தருடைய பிரமாணங்களுக்கெல்லாம் கீழ்ப்படிவதாக வாக்குப்பண்ணினார்கள். இப்போதோ அவர்கள் தங்களுடைய வார்த்தையை மீறி, கர்த்தருடைய பிரமாணத்தை விட்டு விலகிப்போகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியாமல், அவருக்கு விரோதமாக கலகம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக ஏராளமான பாவங்களை செய்தாலும், கர்த்தர் இந்த வசனப்பகுதியில் அவர்கள் செய்கிற ஒரு பாவத்தை விசேஷமாகச் சொல்லுகிறார். அவர்கள் தங்களுக்கு ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதைப் பணிந்துகொண்டு, அதற்கு பலியிடுகிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நம்முடைய பாவங்களை நாம் எப்படித்தான் மூடி மறைத்து வைத்தாலும், அது கர்த்தருக்கு முன்பாக வெளியரங்கமாகயிருக்கும். கர்த்தர் மனுஷருடைய இருதயத்தின் அந்தரங்க இரகசியங்களையெல்லாம் அறிந்து வைத்திருக்கிறார். நம்முடைய மீறுதல்கள் எல்லாம் கர்த்தருக்கு பிரத்தியட்சமாய்த் தெரியும். கர்த்தர் நம்முடைய பாவங்களுக்கு தக்கபடி நம்மை தண்டிக்காமல், தம்முடைய கிருபையை நமக்கு வெளிப்படுத்துகிறார்.

நம்முடைய பாவங்களுக்காக கர்த்தர் நம்மை உடனே தண்டிக்கவில்லையென்றால், அந்தப் பாவத்தைப்பற்றி கர்த்தருக்கு ஒன்றும் தெரியாது என்றும், நாம் அந்தப் பாவத்தை கர்த்தருக்கு தெரியாமல் மறைத்து ஒளித்து வைத்துவிடலாம் என்றும் நினைக்கக்கூடாது. கர்த்தருக்கு மறைவான இரகசியம் ஒன்றுமே இல்லை. கர்த்தர் தம்முடைய இரக்கத்தினாலும், கிருபையினாலும், மனதுருக்கத்தினாலுமே, நம்முடைய பாவங்களுக்குத்தக்கபடி நம்மைத் தண்டியாமல், விட்டு வைத்திருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்பதும், அவர்கள் தமக்கு பிரியமான ஜனமாயிருக்கவேண்டும் என்பதும் கர்த்தருடைய விருப்பமாயிருக்கிறது. ஆனால் அவர்களோ கர்த்தரை விட்டு விலகிப்போகிறார்கள். அவர்கள் தங்களுக்கு ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதைப் பணிந்து கொள்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை விட்டு விலகிப்போவதினால், கர்த்தரும் அவர்களை விட்டு விலகிப்போகிறார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை தங்கள் தேவனாயிராதபடிக்கு புறக்கணிப்பதினால், கர்த்தரும் அவர்களை தம்முடைய ஜனமாயிராதபடிக்கு புறக்கணிக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றி மோசேயினிடத்தில் சொல்லும்போது, "எகிப்துதேசத்திலிருந்து நீ நடத்திக் கொண்டுவந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள்" (யாத் 32:7) என்று சொல்லுகிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை "தம்முடைய ஜனம்" என்று சொல்லுவதற்கு பதிலாக, "உன் ஜனங்கள்" என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதைப்பணிந்துகொண்டு, அதற்கு பலியிட்டு தங்களைக் கெடுத்துக்கொள்கிறார்கள். அவர்கள் தங்களைத் தாங்களே அவமானப்படுத்துகிறார்கள். அவர்கள் தங்களை வெட்கப்படுத்துகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர், தங்களுடைய விக்கிரகாராதனையினால் தங்களுக்கு அவமானத்தை உண்டுபண்ணுகிறார்கள்.

கர்த்தரும் அவர்களைப்பற்றி நினைக்கும்போதும், அவர்கள்மீது தாம் அன்பாயிருந்ததை எண்ணிப் பார்க்கும்போதும் வெட்கப்படுகிறார்.

கர்த்தர் மோசேயை சீனாய் மலையிலிருந்து, இஸ்ரவேல் புத்திரரின் பாளயத்திற்கு சீக்கிரமாய் இறங்கிப்போகுமாறு அவசரப்படுத்துகிறார். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தார்மீது கோபமாயிருக்கிறார். அவர்களுடைய பாவத்தின் நிமித்தமாக, கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் மூளுகிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "இந்த ஜனங்களைப் பார்த்தேன்; இவர்கள் வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள். ஆகையால், என் கோபம் இவர்கள் மேல் மூளவும், நான் இவர்களை அழித்துப் போடவும் நீ என்னை விட்டுவிடு; உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன்" (யாத் 32:9,10) என்று சொல்லுகிறார்

தேவன் இஸ்ரவேல் புத்திரர்மீது இரக்கம் காண்பிக்க மறுத்துவிட்டு, கோபம் கொள்கிறார். இஸ்ரவேல் புத்திரரைப் பற்றி தேவன் கூறிய காரியங்கள் மோசேக்கு இன்னும் தெரியவில்லை. இஸ்ரவேலரின் பாவங்களை மோசே கண்டபோது, அவர்களில் 3,000 பேரை கொன்றுபோடுகிறார். (யாத் 32:26-28). தம்மைவிட்டுப் பாவத்திற்குத் திரும்பிப்போகும் ஜனங்களைத் தேவன் அழித்துப்போடுவார்.

"உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன்" என்று தேவன் மோசேயிடம் கூறுகிறார். தேவன் ஆபிரகாமிடம் கூறியதுபோல, மோசேயிடமும் இப்பொழுது கூறுகிறார். மோசே சுயநலமுள்ளவராக இருந்திருந்தால், தேவனுடைய வார்த்தையை அங்கிகரித்திருப்பார். இஸ்ரவேலரோடு தேவன் செய்து கொண்ட உடன்படிக்கைகள் நிறைவேற வேண்டுமானால், அவர்கள் தேவனுக்கும், அவருடைய வார்த்தைக்கும் கீழ்ப்படிய வேண்டும்.

இஸ்ரவேல் புத்திரருடைய உண்மையான சுபாவத்தை கர்த்தர் அறிந்திருக்கிறார். அவர்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்களாயிருக்கிறார்கள். மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ நம்முடைய இருதயத்தையும், நீதியையும் பார்க்கிறார். நாம் என்ன செய்கிறோம் என்பதை மாத்திரமல்ல, நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதையும், நம்முடைய சுபாவம் எப்படிப்பட்டது என்பதையும் கர்த்தர் நோக்கிப் பார்க்கிறார். கர்த்தருடைய பார்வையில், வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டியை ஆராதிக்கிற இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் வணங்காக் கழுத்துள்ள ஜனங்களாயிருக்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய நீதியினால் இஸ்ரவேல் புத்திரர்மீது கோபப்படுகிறார். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய், கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் மூளுகிறது. நம்முடைய பாவம் கர்த்தருடைய கோபத்திற்கு முன்பாக நம்மை நிறுத்தும். கர்த்தருடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் அவருடைய கோபம் தணியவில்லையென்றால், நாம் அவருடைய கோபத்திற்கு முன்பாக எரிந்து பொசுங்கிப்போவோம்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக தம்மிடத்தில் பரிந்து பேசி ஜெபம்பண்ணுவார் என்பது கர்த்தருக்கு தெரியும். மோசே அவர்களுக்காக ஜெபம்பண்ணுவதை கர்த்தர் தடைபண்ணுவதுபோல பேசுகிறார். "நீ என்னை விட்டு விடு" என்று கர்த்தர் மோசேயினிடத்தில் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரருடைய பாவத்தின் நிமித்தமாக, அவர்களை அழித்துப்போடவேண்டும் என்று கர்த்தர் சித்தமுள்ளவராயிருக்கிறார். மோசே அவர்களுக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசி ஜெபம்பண்ணினால், கர்த்தருடைய கோபம் குறையும்.

மோசே வணங்காக் கழுத்துள்ள இஸ்ரவேல் புத்திரருக்காக ஜெபிக்கவேண்டாம் என்பதுபோலவும், அவர் தம்மை தனியே விட்டுவிடவேண்டும் என்றும் தாம் இஸ்ரவேல் புத்திரரை அழித்துப்போடப்போவதாகவும் கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் இந்த வார்த்தைகளின் மூலமாக ஜெபத்தைக் கனம்பண்ணுகிறார். இஸ்ரவேல் புத்திரர் அழிவுக்கு தப்பிக்கவேண்டுமென்றால், மோசே அவர்களுக்காக கர்த்தரிடத்தில் பரிந்துபேசி ஜெபிக்கவேண்டும். கர்த்தருடைய கோபத்தை குறைப்பதற்கு, அவருடைய சமுகத்திலே பரிந்து பேசி ஜெபம்பண்ணுவதைவிட வேறு உபாயம் எதுவுமில்லை. கர்த்தர் மோசேயை பெரிய ஜாதியாக்குவதாகவும் வாக்குப்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கர்த்தருடைய கோபத்தினால் அழிந்துபோனபின்பு, தான் ஒரு பெரிய ஜாதியாகவேண்டும் என்னும் விருப்பம் மோசேயினிடத்தில் இல்லை. கர்த்தருடைய கோபம் தணியவேண்டும் என்றும், இஸ்ரவேல் புத்திரர் அழிவுக்கு தப்பிக்கவேண்டும் என்றும் மோசே விரும்புகிறார். மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக தேவனுடைய சமுகத்திலே பரிந்து பேசுகிறார்.

மோசே தன் தேவனாகிய கர்த்தரை நோக்கி, "கர்த்தாவே, தேவரீர் மகா பலத்தினாலும் வல்லமையுள்ள கையினாலும் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உம்முடைய ஜனங்களுக்கு விரோதமாக உம்முடைய கோபம் பற்றியெரிவதென்ன?" *(யாத் 32:11)* என்று ஜெபம்பண்ணுகிறார்.

தேவன் பொதுவாக ஜனங்களை அமைதிப் படுத்துவார். ஆனால் இங்கு மனுஷன் கர்த்தரை அமைதிப்படுத்துகிறான். *(யோனா 4:1-9).* தேவன் கோபிப்பதில் தாமதிக்கிறவர். *(சங் 103:9; சங் 145:8)* மனுஷன் தேவனுக்கு எரிச்சல்மூட்டும் காரியங்களைச் செய்யும்போது அவர் கோபம் கொள்கிறார். *(உபா 4:25; உபா 9:18; உபா 31:29; உபா 32:16,21; எண் 14:22).*

மோசே இஸ்ரவேல் ஜனங்களை "உம்முடைய ஜனங்கள்" என்று தேவனிடம் கூறுகிறார். தேவனே எகிப்து தேசத்திலிருந்து அவர்களைப் புறப்படப் பண்ணினார் என்று அங்கிகரிக்கிறார். யாத் 32:7 ஆவது வசனத்தில் தேவன் மோசேயிடம் "எகிப்து தேசத்திலிருந்து நீ நடத்திக் கொண்டுவந்த உன் ஜனங்கள்" என்று இஸ்ரவேல் புத்திரரைப் பற்றிக் கூறுகிறார். இஸ்ரவேல் புத்திரரைத் தேவனும், தம்முடைய ஜனமாக அங்கீகரிக்கவில்லை. மோசேயும் அவர்களை தன்னுடைய ஜனமாக அங்கீகரிக்கவில்லை. இப்பொழுது அவர்கள் வனாந்தரத்தில் அனாதைகளைப் போல இருக்கிறார்கள்.

மோசே தேவனாகிய கர்த்தரை, "கர்த்தாவே, தேவரீர்" என்று அழைக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை புறக்கணித்து ஒதுக்கி தள்ளிவிட்டார். தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேலின் தேவனாகயிராவிட்டாலும், அவர் தன்னுடைய தேவனாக இருக்கவேண்டும் என்று விரும்பி, மோசே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "கர்த்தாவே, தேவரீர்" என்று சொல்லி ஜெபம்பண்ணுகிறார்.

கர்த்தர் மோசேயை பார்த்து "நீ என்னை விட்டு விடு" என்று சொன்னார். கர்த்தர் இந்த வார்த்தையை சொல்லும்போது, மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக தம்மிடத்தில் பரிந்து பேசி ஜெபம்பண்ணுவதை விரும்பாதது போல தெரிகிறது. ஆனால் மெய்யாகவே, மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக தம்மிடத்தில் பரிந்து பேசி ஜெபம்பண்ணுமாறு, கர்த்தர் மோசேயை உற்சாகப்படுத்துகிறார். விசுவாசத்தோடு ஏறெடுக்கப்படும் ஜெபம் வல்லமையுள்ளது.

கர்த்தர் தம்முடைய நீதியினாலேயே இஸ்ரவேல் புத்திரர்மேல் கோபங்கொண்டிருக்கிறார். கர்த்தருடைய கோபம் அநீதியானதல்ல. கர்த்தர் தேவையில்லாமல், நியாயமில்லாமல், நீதியில்லாமல் இஸ்ரவேல் புத்திரர்மீது கோபங்கொண்டிருக்கிறார் என்று, மோசே அவர் மீது குற்றம் சொல்லவில்லை. ஆனாலும் கர்த்தருடைய கோபம் மிகவும் அதிகமாயிருக்கிறது என்றும், அவருடைய கோபம் இஸ்ரவேல் ஜனங்களுக்கு விரோதமாக பற்றியெரிகிறது என்றும் மோசே மிகுந்த வேதனையோடு கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்துபேசுகிறார்.

மோசேயின் வாயில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசும் வார்த்தைகள் நிரம்பியிருக்கிறது. அவர் கர்த்தரோடு விவாதம்பண்ணுவதுபோல தெரிகிறது. தன்னுடைய சாதுரிய வார்த்தைகளினால் கர்த்தரை அசைக்க முடியாது என்பது மோசேக்கு நன்றாய்த் தெரியும். ஆனாலும் விசுவாசமுள்ள ஜெபம் ஜெயத்தைக் கொடுக்கும் என்று மோசே நம்பிக்கையோடிருக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது கோபப்பட்டு, மோசேயியினிடத்தில் அவர்களைப்பற்றிச் சொல்லும்போது, "எகிப்து தேசத்திலிருந்து நீ நடத்திக்கொண்டு வந்த உன் ஜனங்கள்" (யாத் 32:7) என்று சொன்னார். கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன இந்த வார்த்தைகளை, மோசே கர்த்தரிடத்தில் மிகுந்த பணிவோடு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார்.

"கர்த்தாவே, தேவரீர் மகா பலத்தினாலும் வல்லமையுள்ள கையினாலும் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உம்முடைய ஜனங்கள்" (யாத் 32:11) என்று மோசே இஸ்ரவேல் புத்திரரைப்பற்றிச் சொல்லுகிறார். கர்த்தரே இஸ்ரவேல் புத்திரருடைய தேவனாயிருக்கிறார். மோசே கர்த்தருடைய ஊழியக்காரர் மாத்திரமே. மோசே அவர்களை எகிப்து தேசத்திலிருந்து நடத்திக்கொண்டு வரவில்லை. கர்த்தரே அவர்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவர். மோசே கர்த்தருடைய கரத்திலே பயன்படுத்தப்படும் ஒரு கருவியாக மாத்திரமே இருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக்கொள்வதற்கு அபாத்திரராயிருக்கிறார்கள். கர்த்தருடைய உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்களுக்கு எந்த விதமான தகுதியுமில்லை. ஆனாலும் கர்த்தர் தம்முடைய கிருபையினால், இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினார். அவர்கள் எகிப்தியரின் தெய்வங்களை ஆராதித்தாலும், கர்த்தர் தம்முடைய மகாபலத்தினாலும், வல்லமையுள்ள கையினாலும், அவர்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினார்.

"கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம்பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான்" (யோசு 24:15).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே கர்த்தருக்கு விரோதமாக என்ன பாவம் செய்தார்களோ, அதே மாதிரியான பாவத்தையே இப்போது வனாந்தரத்திலேயும் சீனாய் மலையின் கீழே செய்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலிருந்ததுபோலவே, இப்போதும் வணங்காக் கழுத்துள்ள ஜனங்களாயிருக்கிறார்கள். கர்த்தர் தமது கிருபையினால் அவர்களுக்கு எகிப்து தேசத்தில் உதவி செய்ததுபோல, இப்போதும் உதவி செய்யவேண்டுமென்று மோசே கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசி ஜெபம்பண்ணுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக கர்த்தரிடத்தில் பரிந்துபேசும்போது, "உம்முடைய ஜனங்களுக்கு விரோதமாக உம்முடைய கோபம் பற்றியெரிவதென்ன" என்று கேட்கிறார். மோசே கர்த்தரிடத்தில் மேலும் ஜெபம்பண்ணும்போது, "மலைகளில் அவர்களைக் கொன்று போடவும், பூமியின்மேல் இராதபடிக்கு அவர்களை நிர்மூலமாக்கவும், அவர்களுக்குத் தீங்குசெய்யும் பொருட்டே அவர்களைப் புறப்படப்பண்ணினார் என்று எகிப்தியர் சொல்லுவானேன்? உம்முடைய கோபத்தின் உக்கிரத்தை விட்டுத் திரும்பி, உமது ஜனங்களுக்குத் தீங்குசெய்யாதபடிக்கு, அவர்கள்மேல் பரிதாபங்கொள்ளும்" (யாத் 32:12) என்றும் ஜெபம்பண்ணுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக ஜெபம்பண்ணும்போது, கர்த்தருடைய மகிமையை முன் வைத்து, அவர்களுக்காக பரிந்து பேசுகிறார். "மலைகளில் அவர்களைக் கொன்று போடவும், பூமியின்மேல் இராதபடிக்கு அவர்களை நிர்மூலமாக்கவும், அவர்களுக்குத் தீங்குசெய்யும் பொருட்டே அவர்களைப் புறப்படப்பண்ணினார் என்று எகிப்தியர் சொல்லுவானேன்?" என்று மோசே கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்.

எகிப்தியர்கள் கர்த்தருடைய நாமத்தைத் தூஷிப்பதை மோசே கேட்க விரும்பவில்லை. இஸ்ரவேல் புத்திரருடைய பாவத்தினால், கர்த்தர் அவர்களை தம்முடைய நீதியினால் தண்டிக்கிறார். ஆனால் எகிப்தியர்களோ, கர்த்தருடைய நீதியைப்பற்றி அறியாதவர்களாக கர்த்தரை தூஷிப்பதற்கு வாய்ப்புள்ளது. எகிப்தியர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பேசும் தூஷண வார்த்தைகளை மோசேயால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. "கர்த்தாவே, எகிப்தியர்கள் உமக்கு விரோதமான தூஷண வார்த்தைகளை சொல்லுவானேன்" என்று மோசே கர்த்தரிடத்தில் கேட்கிறார்.

கர்த்தர் தம்முடைய மகாபலத்தினாலும், வல்லமையுள்ள கையினாலும் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினார். கர்த்தர் மிகவும் அற்புதமாக இஸ்ரவேல் புத்திரரை இரட்சித்தார். அவர்கள் எவ்வளவு வேகமாக இரட்சிக்கப்பட்டார்களோ, அவ்வளவு வேகமாக அழிந்துபோனால், இந்த உலகம் அவர்களை வேடிக்கைப் பார்க்கும். எகிப்தியர்கள் ஏற்கெனவே இஸ்ரவேல் புத்திரர்மீதும், அவர்களுடைய தேவனாகிய கர்த்தர்மீதும் கோபமாகவும் விரோதமாகவும் இருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் அழிந்துபோவதை எகிப்தியர்கள் பார்க்கும்போது, அவர்கள் மிகவும் சந்தோஷப்படுவார்கள். அவர்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை தூஷிப்பார்கள். கர்த்தரே இஸ்ரவேல் புத்திரரின் இரட்சிப்பை ஆரம்பித்து வைத்தவர். ஆரம்பித்த கர்த்தரால் அவர்களுடைய இரட்சிப்பை நிறைவேற்றிக்கொடுக்க முடியவில்லை என்று எகிப்தியர்கள் கர்த்தருக்கு விரோதமாக தூஷணவார்த்தைகளை சொல்லுவார்கள்.

கர்த்தரே எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரரை புறப்படப்பண்ணினவர். ஆனால் அவரால் அவர்களை கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு போகமுடியவில்லை. மலைகளில் அவர்களைக் கொன்று போடவும், பூமியின்மேல் இராதபடிக்கு அவர்களை நிர்மூலமாக்கவும், அவர்களுக்குத் தீங்குசெய்யும் பொருட்டே அவர்களைப் புறப்படப்பண்ணினார் என்று எகிப்தியர் சொல்லுவார்கள்.

கர்த்தர் தம்முடைய மகாபலத்தினாலும், வல்லமையுள்ள கையினாலும் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினார். ஆனால் கர்த்தருடைய வல்லமை குறைவுள்ளது என்றும், அவருடைய பலமும் குறைவானது என்றும், ஆகையினால் கர்த்தரால் இஸ்ரவேல் புத்திரரை கானான் தேசத்திற்கு கொண்டு போய் சேர்க்க முடியவில்லை என்றும் எகிப்தியர்கள் கர்த்தருக்கு விரோதமாக குற்றம் சொல்லுவார்கள்.

விசுவாசிகளாகிய நாம் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். நாம் கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தவேண்டியவர்கள். நம்முடைய வார்த்தையின் மூலமாகவோ, செய்கையின் மூலமாகவோ அல்லது நம்முடைய ஜீவியத்தின் மூலமாகவோ கர்த்தருடைய நாமம் தூஷிக்கப்படுவதற்கு நாம் ஒருபோதும் காரணமாயிருக்கக்கூடாது.

கர்த்தர் இஸ்ரவேலின் முற்பிதாக்களுக்கு தம்முடைய வாக்குத்தத்தத்தை சொல்லியிருக்கிறார். வாக்குத்தத்தம்பண்ணிய கர்த்தர் உண்மையுள்ளவர். அவர் வாக்குமாறாதவர். மோசே கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசி ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் இஸ்ரவேலரின் முற்பிதாக்களுக்கு சொன்ன வாக்குத்தத்தத்தையும், மோசே கர்த்தருக்கு முன்பாக சொல்லி பிரார்த்திக்கிறார்.

மோசே கர்த்தரை நோக்கி, "உமது தாசராகிய ஆபிரகாமையும் ஈசாக்கையும் இஸ்ரவேலையும் நினைத்தருளும்: உங்கள் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலப் பெருகப் பண்ணி, நான் சொன்ன இந்தத் தேசம் முழுவதையும் உங்கள் சந்ததியார் என்றைக்கும் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு, அவர்களுக்குக் கொடுப்பேன் என்று உம்மைக் கொண்டே அவர்களுக்கு ஆணையிட்டுச் சொன்னீரே" *(யாத் 32:13)* என்று கெஞ்சிப் பிரார்த்திக்கிறார்.

நாமும் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, மோசேயைப்போல, கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை, நம்முடைய வேண்டுதல்களிலும், விண்ணப்பங்களிலும் பயன்படுத்தவேண்டும். கர்த்தர் மோசேயின் பரிந்து பேசும் ஜெபத்திற்கு செவிகொடுக்கிறார். அப்பொழுது கர்த்தர் தமது ஜனங்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்குப் பரிதாபங்கொள்கிறார் *(யாத் 32:14)*.

ஜெபம் வல்லமையுள்ளது. நாம் கர்த்தருடைய சமுகத்தில் மிகுந்த பணிவோடு ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் நமக்கு இரக்கம் காண்பிக்கிறார். மோசே கர்த்தரிடத்தில் கெஞ்சி பிரார்த்தனை செய்கிறார். கர்த்தர் மோசேயின் ஜெபத்தைக் கேட்டு, இஸ்ரவேல் புத்திரருக்கு தாம் செய்ய நினைத்த தீங்கை செய்யாதபடிக்கு, அவர்கள்மீது பரிதாபங்கொள்கிறார். கர்த்தர் பாவிகள்மீது கிருபையும், இரக்கமும், மனதுருக்கமுமுள்ளவர். நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்கு கர்த்தர் கிருபை பெருத்தவர்.

கர்த்தர் மோசேக்கு தம்முடைய விசேஷித்த கிருபைகளை வெளிப்படுத்தியிருக்கிறார். அவர் மோசேயின்மீது நம்பிக்கை வைத்து, அவருடைய கையிலே இரண்டு சாட்சிப்பலகைகளைக் கொடுத்திருக்கிறார். இந்தப் பலகைகள் சாதாரண கல்லிலே எழுதப்பட்டிருந்தாலும், கர்த்தருடைய கட்டளைகள் இந்தக் கல்லிலே எழுதப்பட்டிருக்கிறது. ஆகையினால் சாட்சிப்பலகைகள் இரண்டும் மிகவும் விசேஷமானவை ஆகும். ஆரோனுடைய மார்ப்பதக்கத்திலே விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்டிருக்கிறது. மோசேயின் கையிலிருக்கிற சாட்சிப்பலகைகள் இரண்டும், ஆரோனின் மார்ப்பதக்கத்திலுள்ள கற்களைவிட மிகவும் விலையேறப்பெற்றது.

மோசே மலையிலிருந்து இறங்கி வருகிறார். சாட்சிப்பலகைகள் இரண்டும் அவருடைய கையில் இருக்கிறது; அந்தப் பலகைகள் இருபுறமும் எழுதப்பட்டிருக்கிறது, அவைகள் இந்தப் பக்கத்திலும் அந்தப் பக்கத்திலும் எழுதப்பட்டிருக்கிறது. அந்தப் பலகைகள் தேவனால் செய்யப்பட்டதாயும், அவைகளிலே பதிந்த எழுத்து தேவனால் எழுதப்பட்ட எழுத்துமாயிருக்கிறது *(யாத் 32:15,16)*.

மோசே சீனாய் மலையின்மேல் ஏறிப்போனபோது யோசுவாவும் அவரோடுகூட ஏறிப்போனார். மோசே தேவபர்வதத்திலே கர்த்தருடைய சமுகத்திலிருந்தபோது, யோசுவாவோ மோசேயோடு கூடயிருக்கவில்லை. அவர் அதே பர்வதத்தில், மோசே அவருக்கு நியமித்திருந்த வேறொரு இடத்தில் தனியாகயிருந்தார்.

மோசே கர்த்தர் கொடுத்த சாட்சிப்பலகைகளைப் பெற்றுக்கொண்டு மலையிலிருந்து கீழே இறங்கி வருகிறார். அவர் யோசுவா இருக்கிற இடத்திற்குப்போய் அவரையும் அழைத்துக்கொண்டு, இருவருமாக மலையிலிருந்து கீழே இறங்கி வருகிறார்கள். யோசுவா ஒரு இராணுவ வீரர். மிகுந்த கட்டுப்பாடு உடையவர். மோசே அவரை எந்த இடத்திலே தங்கியிருக்கவேண்டும் என்று சொன்னாரோ, அந்த இடத்திலே இந்த நாற்பது நாட்களும் தங்கியிருக்கிறார்.

சீனாய் மலைக்கு கீழே இஸ்ரவேல் புத்திரர் பொன்னால் ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து அதற்கு பலிகளை செலுத்தி, புசித்து குடித்து விளையாடுகிறார்கள். அவர்கள் ஆரவாரம்பண்ணுகிறார்கள். பொன்கன்றுக்குட்டிக்கு முன்பாக பாடல்களைப்பாடி நடனமாடுகிறார்கள். யோசுவா அந்த சத்தத்தைக் கேட்டு, பாளயத்தில் யுத்தத்தின் இரைச்சல் உண்டாயிருக்கிறது என்று நினைக்கிறார் (யாத் 32:17). இஸ்ரவேல் புத்திரருடைய பாளயத்தில் யுத்தத்தின் இரைச்சல் கேட்கப்படும்போது, யுத்தவீரராகிய யோசுவாவும் அங்கே இருக்கவேண்டுமென்று பிரியப்படுகிறார்.

பாளயத்தில் எப்படிப்பட்ட இரைச்சல் உண்டாயிருக்கிறது என்பது மோசேக்கு தெரியும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய விக்கிரகாராதனையைப்பற்றி மோசேக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். மோசேக்கு யுத்த இரைச்சலுக்கும், பாடலின் சத்தத்திற்கும் வித்தியாசம் தெரிகிறது.

ஜனங்கள் ஆரவாரம் பண்ணுகிறதை யோசுவா கேட்டு,மோசேயை நோக்கி, "பாளயத்தில் யுத்தத்தின் இரைச்சல் உண்டாயிருக்கிறது" என்று சொல்லுகிறார். அதற்கு மோசே, "அது ஜெயதொனியாகிய சத்தமும் அல்ல, அபஜெயதொனியாகிய சத்தமும் அல்ல; பாடலின் சத்தம் எனக்குக் கேட்கிறது" (யாத் 32:17,18) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் பொன்கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதற்கு பலிகளை செலுத்தி அதை ஆராதிக்கிறார்கள். அவர்களுடைய விக்கிரகாராதனையினிமித்தமாக மோசே அவர்கள்மீது கோபமூண்டவராயிருக்கிறார். மோசேயின் கோபம் நீதியானது. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். விக்கிரகாராதனை கர்த்தருக்கு விரோதமான பாவம். அவர்கள் கர்த்தரை ஆராதியாமல் விக்கிரகத்தை ஆராதித்து தங்களைத் தாங்களே கெடுத்துக்கொள்கிறார்கள்.

மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரின் பாளயத்திற்கு சமீபமாய் வருகிறார்கள். அங்கே அவர்கள் வார்ப்பித்த கன்றுக்குட்டியையும், அதற்கு முன்பாக இஸ்ரவேல் புத்திரர் நடனம்பண்ணுவதையும் மோசே காண்கிறார். அதைக் கண்டபோது மோசே மிகுந்த கோபமூண்டவராகிறார். அவர் தன் கையிலிருக்கிற சாட்சிப்பலகைகள் இரண்டையும் மலையின் அடியிலே எறிந்து உடைத்துப்போடுகிறார் (யாத் 32:19).

மோசேக்குக் கோபம் இல்லாதபோது, அவர் தேவனைச் சமாதானப்படுத்த முயற்சி பண்ணுகிறார் (யாத் 32:11). ஜனங்களுடைய பாவமான காரியங்களை மோசே தன் கண்களால் கண்டபோது தேவனுடைய நீதியைக் காண்கிறார், கோபங்கொள்கிறார். அவர் 3,000 பேரைக் கொன்று போடுகிறார் (யாத் 32:19-28).

மோசே தன் கையிலே இருந்த பலகைகளை மலையின் அடியிலே எறிந்து உடைத்துப் போடுகிறார். ருமாசே இஸ்ரவேல் புத்திரரின் விக்கிரகாராதனையைக் காண்கிறார். மோசே தேவனிடம் கெஞ்சிப் பிரார்த்திக்கவில்லை என்றால், தேவன் அவர்களை அழித்துப் போட்டிருப்பார். தேவனே கற்பலகைகளை எறிந்து உடைத்துப்போட்டிருப்பார். தேவன் செய்ய வேண்டிய காரியத்தை இங்கு மோசே செய்கிறார் (யாத் 32:10).

மோசே சாந்தகுணமுள்ளவர். ஆனாலும் அவர் வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டியையும், அதற்கு முன்பாக இஸ்ரவேல் புத்திரர் நடனம்பண்ணுவதையும் பார்க்கிறபோது, அவருக்கு கோபமுண்டாகிறது. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சாந்தகுணமுள்ளவர்களாயிருக்கவேண்டும். அவசரப்பட்டு கோபப்படக்கூடாது. கோபப்படுவதற்கு தாமதம்பண்ண வேண்டும். ஆனால் மோசேயோ, சாந்தகுணமுள்ளவஜாக யிருந்தாலும், இஸ்ரவேல் புத்திரரின் விக்கிரகாராதனையை கண்டபோது, கோபமூண்டவராயிருக்கிறார்.

மோசேயின் கோபம் நீதியானது. அவர் துன்மார்க்கருடைய அக்கிரமத்தைப் பார்த்து கோபப்படுகிறார். மோசே கர்த்தருக்காக பக்தி வைராக்கியமாயிருக்கிறார். அவர் சாந்தகுணமுள்ளவராகயிருந்தாலும், இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்வதை பார்க்கும்போது, அவருடைய மனதிலே நீதியான கோபம் உண்டாயிற்று. இது பக்தி வைராக்கியத்தினால் ஏற்படுகிற கோபம்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து, அவர்கள் தேவனுடைய கிருபையை இழந்து போயிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய மகாபெரிய கிருபையினால் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய கட்டளைகளையும், பிரமாணங்களையும் வெளிப்படுத்தி யிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரருக்கு தேவனால் எழுதப்பட்ட சாட்சியின் பலகைகள் கொடுக்கப்பட்டிருப்பது, அவர்களுக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். இதற்காக அவர்கள் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தரை ஆராதியாமல், ஒரு பொன்கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதற்கு பலிகளை செலுத்தி அதை ஆராதிக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்வதற்கு அபாத்திரராயிருக்கிறார்கள். மோசே பொன்கன்றுகுட்டியையும், அதற்கு முன்பாக அவர்கள் நடனம்பண்ணுவதையும் பார்த்து, அவர்கள் மீது கோபப்பட்டு, தன் கையிலிருக்கிற சாட்சியின் பலகைகள் இரண்டையும் மலையின் அடியிலே எரிந்து உடைத்துப்போடுகிறார்.

மோசேயின் கோபமான முகத்தை இஸ்ரவேல் புத்திரர் பார்க்கிறார்கள். அவர் சாட்சியின் பலகைகளை எரிந்து உடைத்துப்போட்டதைப் பார்த்து இஸ்ரவேல் புத்திரர் குழப்பமடைகிறார்கள். தாங்கள் எவ்வளவு பெரிய சிலாக்கியத்தை இழந்துபோயிருக்கிறோம் என்பதை அவர்கள் அறிந்து மிகுந்த மனவேதனைப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரோடு பண்ணின உடன்படிக்கையை முறித்துப்போட்டு கன்றுக்குட்டியை ஆராதிக்கிறார்கள். மோசே அவர்களுடைய பாவத்தை அவர்களுக்கு உணர்த்த விரும்புகிறார். அவர் தன்னுடைய கையிலிருக்கிற சாட்சிப்பலகைகளை உடைத்துப்போடுவது மாத்திரமல்ல, அவர், அவர்கள் உண்டுபண்ணின கன்றுக்குட்டியை எடுத்து, அக்கினியில் சுட்டெரித்து, அதைப் பொடியாக அரைத்து, தண்ணீரின்மேல் தூவி, அதை இஸ்ரவேல் புத்திரர் குடிக்கும்படி செய்கிறார் (யாத் 32:20).

மோசே வார்ப்பிக்கப்பட்ட தங்கக் கன்றுக்குட்டியை மறுபடியுமாக உருக்கி, பொடியாக அரைத்து, அதைத் தண்ணீரின்மீது தூவுகிறார். தங்கத்தின் தூள் தண்ணீரில் மிதக்கும். அதை இஸ்ரவேல் புத்திரர் குடிக்கும்படி செய்கிறார் (உபா 9:21).

தாங்கள் வார்ப்பித்த கன்றுக்குட்டியை தங்களுக்கு முன்செல்லும் தெய்வம் என்று இஸ்ரவேல் புத்திரர் நினைத்தார்கள். ஆனால் அந்தக் கன்றுக்குட்டி இப்போது அக்கினியிலே எரிந்துகொண்டிருக்கிறது. அந்த விக்கிரகத்தால் தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை. மோசே வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டியை அக்கினியில் சுட்டெரித்து, அதைப் பொடியாக அரைக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் எந்தக் கன்றுக்குட்டியை தங்களுடைய தெய்வம் என்று நம்பினார்களோ, அந்த கன்றுக்குட்டி, இப்போது சுட்டெரிக்கப்பட்டு, பொடியாக அரைக்கப்பட்டு, தண்ணீரின்மேல் தூவப்பட்டிருக்கிறது.

மோசே சுட்டெரிக்கப்பட்ட பொன்கன்றுக்குட்டியின் தூசியை தண்ணீரின்மேல் தூவுவதை இஸ்ரவேலின் பாளயத்திலுள்ளவர்கள் எல்லோரும் பார்க்கிறார்கள். மோசே பொன்கன்றுக்குட்டியின் பொடியை தண்ணீரின்மேல் தூவி, அதை இஸ்ரவேல் புத்திரர் குடிக்கும்படி செய்கிறார். விக்கிரகத்திற்கு ஜீவனும் பெலனும் இல்லை என்பதை மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு பிரத்தியட்சமாக வெளிப்படுத்திக் காண்பிக்கிறார்.

"விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிக்கிற விஷயத்தைப் பற்றி, உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லையென்றும் ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் அறிந்திருக்கிறோம்" (1கொரி 8:4).

இஸ்ரவேல் புத்திரர் ஓரேபிலே கர்த்தருக்கு கடும்கோபம் உண்டாக்கினதுமல்லாமல், அவர்கள் தபேராவிலும், மாசாவிலும், கிப்ரோத் அத்தாவாவிலும் கர்த்தருக்குக் கடுங்கோபம் உண்டாக்கினார்கள் (உபா 8:22).

இஸ்ரவேல் புத்திரர் தபேராவிலே கர்த்தருக்கு கோபம் உண்டாக்கின சம்பவம் எண்ணாகமம் 11:1-3 ஆகிய வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாக முறையிட்டு பாவம் செய்கிறார்கள். கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார். நியாயப்பிரமாணத்தினால் பாவத்தைக் கண்டு பிடிக்க முடியும். எது பாவம் என்று நியாயப்பிரமாணம் சொல்லும். ஆனாலும் பாவத்தை அழிக்கும் வல்லமை நியாயப்பிரமாணத்திற்கு இல்லை.

இஸ்ரவேல் ஜனத்தார் பாவம் செய்யும்போது, அவர்கள் செய்வது பாவம் என்று நியாயப்பிரமாணம் சொல்லும். ஆனாலும் பாவத்தை மேற்கொள்ளும் வல்லமை நியாயப்பிரமாணத்தின் மூலமாக வராது. இஸ்ரவேல் ஜனங்கள் முறையிட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது அவர்களுடைய பாவம்.

கர்த்தர் அவர்களுக்கு அநேக நன்மைகளை செய்திருக்கிறார். கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளையெல்லாம் நினைத்து, அவர்கள் கர்த்தரை நன்றியோடு துதிக்கவேண்டும். ஆனால் அவர்களோ கர்த்தரை துதியாமல், தங்களிடத்தில் காணப்படுகிற ஒரு சில குறைவுகளை நினைத்துப் பார்த்து, கர்த்தருக்கு விரோதமாக முறையிடுகிறார்கள். துதியின் வார்த்தைகள் வரவேண்டிய அவர்களுடைய வாய்களில், முறையிடும் வார்த்தைகள் வருகிறது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் முறையிடும் அளவுக்கு, அவர்களிடத்தில் ஒரு குறைவும் காணப்படவில்லை. அவர்களுக்கு சகலமும் நிறைவாகவும், ஆசீர்வாதமாகவும் இருக்கிறது. அவர்களுக்கு ஒரு குறைவும் இல்லாதிருந்தும், அவர்கள் கர்த்தரிடத்தில் முறையிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் முறையிடுவதை கர்த்தர் செவிகொடுத்து கேட்கிறார். அது கர்த்தருடைய செவிகளில் பொல்லாப்பாயிருக்கிறது. கர்த்தர் அவர்களுடைய முறையிடுகளை கேட்கும்போது, அவருடைய கோபம் மூளுகிறது. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாக முறையிடும்போது, அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள்.

பாவத்தின் சம்பளம் மரணம். இஸ்ரவேல் ஜனத்தார் பாவம் செய்யும்போது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்களுக்கு விரோதமாக வருகிறது. அவர்களுடைய பாவத்தினிமித்தமாக கர்த்தர் அவர்களை தண்டிக்கவேண்டும் என்று தீர்மானம்பண்ணுகிறார். இது கர்த்தருடைய நீதி.

கர்த்தர் அவர்களுடைய முறையீடுகளை கேட்டு, அவர்கள் மீது கோபப்படுகிறார். அப்போது கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றியெரிகிறது. அது அவருடைய நியாயத்தீர்ப்பின் அக்கினி. அந்த அக்கினி பாளயத்தின் கடைசியிலிருந்த சிலரை பட்சிக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் இதற்கு முன்பாக பல சமயங்களில் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்திருக்கிறார்கள். எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட ஆரம்ப நாட்களிலேயே அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். அவர்களுடைய முறுமுறுப்பைப்பற்றி யாத் 15;16;17 ஆகிய அதிகாரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தரிடத்தில் முறையிடுவதும், அவருக்கு விரோதமாக முறுமுறுப்பதும் இஸ்ரவேல் புத்திரரின் பொதுவான சுபாவம். அவர்கள் தமக்கு விரோதமாக முறையிட்டாலும் கர்த்தர் உடனே அவர்கள்மீது கோபப்படவில்லை. அவர்களுடைய பாவங்களினிமித்தமாக அவர்களை வாதிக்க வேண்டும் என்றும் கர்த்தர் தீர்மானம்பண்ணவில்லை.

ஆனால் இப்போதோ இஸ்ரவேல் புத்திரருடைய முறையிடு கர்த்தருடைய செவிகளில் பொல்லாப்பாயிருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் பல அனுபவங்களை கடந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தர் தங்களுக்கு செய்த அநேக நன்மைகளை அனுபவித்திருக்கிறார்கள். அவர்கள் தம்முடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். அவர்களிடத்தில் ஆவிக்குரிய வளர்ச்சியும் முதிர்ச்சியும் காணப்படவேண்டும்.

ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் இன்னும் குழந்தைகளாகவே இருக்கிறார்கள். கர்த்தர் அவர்களுக்கு ஏராளமான நன்மைகளை செய்திருந்தும், அவர்கள் தங்கள் ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சி பெறவில்லை. கர்த்தர் இதுவரையிலும் அவர்களைக் கைவிடாமல், அவர்களுக்கு நன்மை செய்து வந்திருக்கிறார். அவர் இனிமேலும் தங்களை கைவிடமாட்டார் என்றும், தங்களுக்கு இன்னும் தொடர்ந்து நன்மை செய்வார் என்றும் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தர்மீது நம்பிக்கையாயிருக்கவேண்டும்.

ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரோ கர்த்தர்மீது நம்பிக்கை வைக்காமல் அவரிடத்தில் முறையிடுகிறார்கள். அவர் தங்களுக்கு செய்த நன்மைகளை நினைத்துப் பார்த்து, அவரை நன்றியோடு துதிப்பதற்கு பதிலாக, அவருக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். அவர்களுடைய முறையிடுகள் கர்த்தருடைய செவிகளில் பொல்லாப்பாயிருக்கிறது. கர்த்தர் அவர்களுடைய முறையிடுகளை கேட்டபோது, அவர்களுக்கு விரோதமாக அவருடைய கோபம் மூளுகிறது.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இஸ்ரவேல் புத்திரர்மேல் வருகிறது. கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றியெரிகிறது. அந்த அக்கினி அவர்களுடைய பாளயத்தின் கடைசியிலிருந்த சிலரை பட்சிக்கிறது (எண் 11:1).

இது தேவனுக்கு எதிராகக் கூறப்படும் முறையீடாகும் (சங் 78:19). கர்த்தர் கலகக்காரர்களைச் சகித்துக் கொள்வதில்லை. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு எதிராக முறையிட்ட படியினால், அது கர்த்தருடைய செவிகளில் பொல்லாப்பாயிருக்கிறது; கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றியெறிந்து, பாளயத்தின் கடைசியிலிருந்த சிலரைப் பட்சிக்கிறது (எண் 11:1).

அவர்களுக்கு நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பாகவும் அவர்கள் தேவனுக்கு எதிராக முறையிட்டார்கள். (யாத் 14:11-15; யாத் 15:24-26; யாத் 16:2-4,9,20,27,28; யாத் 17:2-4) ஆனாலும் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட பின்பு அவர்கள் தண்டிக்கப்பட்டதுபோல, அப்போது தண்டிக்கப்படவில்லை.

அப்பொழுது ஜனங்கள் மோசேயை நோக்கிக் கூப்பிடுகிறார்கள்; மோசே கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறார்; உடனே அக்கினி அவிந்துபோயிற்று (எண் 11:2).

நியாயத்தீர்ப்பின் மூலமாக மனந்திரும்புதல் வருகிறது. மோசே ஜனங்களுக்காக ஜெபிக்கிறார். வாதை நிறுத்தப்படுகிறது (எண் 11:2-3).

மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறவர். தங்களுக்குள்ளே கர்த்தருடைய அக்கினி பற்றியெரியும்போது, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிடாமல் மோசேயை நோக்கிக் கூப்பிடுகிறார்கள். மோசே தங்களுக்காக கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ண வேண்டும் என்று இஸ்ரவேல் ஜனத்தார் எதிர்பார்க்கிறார்கள்.

மோசே கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் நடுவிலே மத்தியஸ்தராகயிருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் தன்னை நோக்கிக் கூப்பிட்டபோது, மோசே கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறார். கர்த்தர் மோசேயின் விண்ணப்பத்திற்கு செவிகொடுக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் தம்மிடத்தில் முறையிட்ட முறுமுறுப்பான வார்த்தைகளுக்கு செவிகொடுத்த கர்த்தர், இப்போது மோசேயின் விண்ணப்பத்திற்கும் செவிகொடுக்கிறார்.

மோசே கர்த்தரிடத்தில் தங்களுக்காக பரிந்து பேசுவார் என்றும், கர்த்தர் மோசேயின் விண்ணப்பத்திற்கு செவிகொடுப்பார் என்றும் இஸ்ரவேல் ஜனத்தார் நம்புகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது கோபமூண்டாவராகயிருந்தாலும், மோசேயின்மீது பிரியமாயிருந்து அவருடைய விண்ணப்பத்திற்கு செவிகொடுக்கிறார். உடனே இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே பற்றியெரிந்த கர்த்தருடைய அக்கினி அவிந்துபோயிற்று. இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக மூண்ட கர்த்தருடைய கோபமும் தணிந்துபோயிற்று.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்த அந்த ஸ்தலத்திற்கு புதிய பெயர் கொடுக்கப்படுகிறது. இஸ்ரவேல் ஜனங்களுடைய முறுமுறுப்பின் நிமித்தமாக அவர்களுக்கு வெட்கமும் அவமானமும் ஏற்படவேண்டும்.

கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றியெறிந்ததினால், மோசே அவ்விடத்துக்குத் தபேரா என்று பேரிடுகிறார் (எண் 11:3).

தபேரா என்னும் பெயருக்கு "பற்றியெறிவது" என்று பொருள். இந்த ஸ்தலத்தின் பெயரை மற்ற ஜனங்களும் கேள்விப்படுவார்கள். அவர்களுக்கு தபேரா என்னும் பெயருக்கு அர்த்தம் தெரியும். இஸ்ரவேல் ஜனங்களுக்குள்ளே கர்த்தருடைய அக்கினி பற்றியெரிந்தது என்பதை அவர்கள் அறிந்துகொள்வார்கள். அவர்களுடைய மனதிலே கர்த்தருக்கு ஏற்படும் பயம் உண்டாகும். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்து பாவம் செய்ததுபோல, தாங்கள் பாவம் செய்யக்கூடாது என்னும் எச்சரிப்பைப் பெற்றுக்கொள்வார்கள். இதன் நிமித்தமாகவே மோசே அவ்விடத்திற்கு தபேரா என்று பேரிடுகிறார்.

எண்ணாகமத்தில் கூறப்பட்டிருக்கும் வாதைகளைப்பற்றிய விவரம் வருமாறு :

1. அக்கினி - அவர்களின் நாவின் பொல்லாப்பின்நிமித்தம். (எண் 11:1-3)
2. வியாதி - நாவின் பொல்லாப்பும், மாம்சத்தின் இச்சையும் (எண் 11:4-35)
3. குஷ்டம் - நாவின் பொல்லாப்பும், பொறாமையும் (எண் 12:1-16)
4. மரணம் - நாவின் பொல்லாப்பும், கலகமும் (எண் 14:28-35)
5. வியாதி - நாவின் பொல்லாப்பும், கலகமும் (எண் 13:31-33; எண் 14:37)
6. பூமியதிர்ச்சி - நாவின் பொல்லாப்பும், கலகமும் (எண் 16:1-3,29-33)
7. அக்கினி - நாவின் பொல்லாப்பும், கலகமும் (எண் 16:1-3,34-35)
8. வியாதி - நாவின் பொல்லாப்பும், கலகமும் (எண் 16:41-50)
9. கொள்ளிவாய் சர்ப்பங்கள் - நாவின் பொல்லாப்பு (எண் 21:5-9)

10. வியாதி - வேசித்தனமும், விக்கிரகாராதனையும் (எண் 25:1-9) எண் 11:1-3

இஸ்ரவேல் புத்திரர் மாசாவிலே கர்த்தருக்கு கோபம் உண்டாக்கின சம்பவம் யாத்திராகமம் 17:1-7 ஆகிய வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

பின்பு இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் கர்த்தருடைய கட்டளையின்படியே சீன்வனாந்தரத்திலிருந்து புறப்பட்டு, பிரயாணம்பண்ணி, ரெவிதீமிலே வந்து பாளயமிறங்குகிறார்கள். இஸ்ரவேலர்கள் பாளயமிறங்கிய இரண்டு இடங்கள் இந்தப் பகுதியில் கூறப்படவில்லை. (யாத் 16:1=எண் 33:12-14)

அங்கே ஜனங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லை (யாத் 17:1). ஜனங்கள் அவ்விடத்திலே தண்ணீர் தவனமாயிருக்கிறார்கள் (யாத் 17:3).

கர்த்தர் தம்முடைய கிருபையினால் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்கிறார். அவர்களை திருப்தியாய்ப் போஷிக்கிறார். ஆனாலும் அவர்களுக்கு சில சமயங்களில் குறைவுகள் வருகிறது. அப்போது அவர்கள் பொறுமையோடிருந்து கர்த்தரை நம்புவதற்கு பதிலாக, கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய விருப்பத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தங்களுடைய சுயசித்தத்திற்கும், மாம்சத்தின் இச்சைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

ரெவிதீமிலே ஜனங்களுக்கு குடிக்க தண்ணீர் இல்லை. அப்பொழுது ஜனங்கள் மோசேயோடே வாதாடுகிறார்கள். அவர்கள் மோசேயை நோக்கி, "நாங்கள் குடிக்கிறதற்கு எங்களுக்குத் தண்ணீர் தரவேண்டும்" என்று சொல்லுகிறார்கள் (யாத் 17:2). மோசே இஸ்ரவேல் புத்திரரிடத்தில் கடன்பட்டவர்போல குற்றம் சுமத்தப்படுகிறார்.

இந்த சம்பவம் இஸ்ரவேலரின் ஐந்தாவது முறையீடு ஆகும் (யாத் 5:19) அவர்கள் மோசேயிடம் தண்ணீர் வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்கள் ஒருவேளை மோசே தங்களுக்கு தண்ணீர் தருவார் என்று அவர்மீது நம்பிக்கை வைத்திருக்கலாம். அல்லது இப்படிப்பட்ட இடத்திற்குத் தங்களைக் கொண்டுவந்ததற்காக அவர்கள் மோசேக்கு எதிராகப் பேசியிருக்கலாம். இஸ்ரவேல் ஜனத்தாரைத் தேவனே வழிநடத்திச் செல்கிறார். தேவன் அக்கினிஸ்தம் பத்தினாலும், மேகஸ்தம்பத்தினாலும் அவர்களை வழிநடத்துகிறார். இங்கு அவர்கள் பாளயமிறங்குவதற்கும் தேவனே காரணம். தேவன் அவர்களைச் சோதிப்பதற்காகத் இங்கு அழைத்து வந்திருக்கிறார். தண்ணீருக்கு என்ன செய்யவேண்டும் என்பது தேவனுக்குத் தெரியும் (யாத் 17:6).

இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கு விரோதமாய் முறுமுறுக்கிறார்கள். அவர்கள் மோசேயை நோக்கி, "நீர் எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் எங்கள் ஆடுமாடுகளையும் தண்ணீர்த் தவனத்தினால் கொன்றுபோட எங்களை எகிப்திலிருந்து ஏன் கொண்டு வந்தீர்" (யாத் 17:3) என்று கேட்கிறார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபண்ணி அழைத்துக்கொண்டு வந்திருக்கிறார். அவர்கள் எல்லோரும் கானான் தேசத்தில் குடியேறி, சுகமாய் ஜீவிக்கவேண்டும் என்பது மோசேயின் விருப்பம். ஆனால் மோசே தங்களையும், தங்கள் ஆடுமாடுகளையும் தண்ணீர் தவனத்தினால் கொன்றுபோடுவதாக, இஸ்ரவேல் புத்திரர் சொல்லுகிறார்கள். இதற்காகவே அவர் எகிப்திலிருந்து தங்களை அழைத்துக்கொண்டு வந்திருக்கிறார் என்று சொல்லி, இஸ்ரவேல் புத்திரர் அவருக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு மோசேயின்மீது கோபம் அதிகரிக்கிறது. அவர்களுக்கு தண்ணீர் தவனம் அதிகமாகும்போது, மோசேயின்மீது கோபமும் அதிகமாகிறது. அவர்கள் ஒரு சூழ்நிலையில் மோசேயின்மீது கல்லெறியப் பார்க்கிறார்கள் (யாத் 17:4). தங்களைக் கொன்றுபோடுவதற்காக மோசே எகிப்திலிருந்து அழைத்துக்கொண்டு வந்திருக்கிறார் என்றும், அந்த மோசேயை கல்லெறிந்து கொன்றுபோடவேண்டும் என்றும், இஸ்ரவேல் புத்திரர் மோசேயின்மீது கோபமாயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மோசேயின்மேல் கல்லெறியப்பார்க்கிறார்கள். பரிசுத்த வேதாகத்தில் மனுஷர்மீது கல்லெறியும் ஒரு சில சம்பவங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. தூஷிக்கிறவர்கள் (லேவி 24:11-23)
2. ஓய்வுநாள் பிரமாணத்தை மீறுகிறவர்கள் (எண் 15:36)
3. ஆகானும் அவன் குடும்பத்தாரும் (யோசு 7:25)
4. அபிமெலேக்கு (நியா 9:53)
5. அதோராம் (1இராஜா 12:18)
6. நாபோத் (1இராஜா 21:13-15)
7. சகரியா (2நாளா 24:21)
8. ஸ்தேவான் (அப் 7:58-59)
9. பவுல் (அப் 14:5,19; 2கொரி 11:25)

கர்த்தர் தங்களோடு இருக்கிறாரா என்னும் சந்தேகம் இஸ்ரவேல் புத்திரருக்கு வந்திருக்கிறது. கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாக, பகலிலே மேகஸ்தம்பமும் இரவிலே அக்கினி ஸ்தம்பமும் அவர்கள் மத்தியிலே இருக்கிறது. ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தரை பரீட்சை பார்க்கிறார்கள். "கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரா, இல்லையா" என்று கேட்கிறார்கள் (யாத் 17:7).

கர்த்தர் தங்கள் நடுவில் இருக்கிறாரா, இல்லையா என்று இஸ்ரவேல் புத்திரர் கேட்கும் கேள்விக்கு, மெய்யாகவே தேவன் என்பவர் இருக்கிறாரா அல்லது தேவனே இல்லையா என்பது பொருளாகும்.

கர்த்தரே சர்வசிருஷ்டிகர். அவர் தம்முடைய தெய்வீக பராமரிப்பினால் சர்வசிருஷ்டிகளையும் போஷிக்கிறார். தேவன் தம்முடைய பொதுவான பராமரிப்பினால் இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் ஆளுகை செய்கிறார். கர்த்தருடைய பொதுவான பராமரிப்பு எல்லா ஜீவராசிகளுக்கும் வெளிப்படுத்தப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருடைய விசேஷித்த பராமரிப்புக்களையும், அவருடைய விசேஷித்த வாக்குத்தத்தங்களையும் பெற்றிருக்கிறார்கள். ஆனால் இஸ்ரவேல் புத்திரருக்கு தங்களை விசேஷமாய் ஆதரிக்கிற கர்த்தர்மீது சந்தேகம் வருகிறது. அவர்கள் கர்த்தரை பரீட்சை பார்க்கிறார்கள். கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவராயிருப்பாரா என்று சந்தேகப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ரெவிதீமிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். அங்கே ஜனங்களுக்கு குடிக்க தண்ணீர் இல்லை. இஸ்ரவேல் புத்திரர் அவ்விடத்திலே தண்ணீர் தவனமாயிருக்கிறார்கள். தங்களுக்கு தண்ணீர் கொடுக்க வேண்டியது மோசேயின் கடமை என்று இஸ்ரவேல் ஜனத்தார் எதிர்பார்க்கிறார்கள். மோசே தங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக்கொண்டு வந்ததினால், அவர் தங்களுடைய எல்லா தேவைகளையும் சந்திக்கவேண்டும் என்று இஸ்ரவேல் புத்திரர், மோசேயின்மீது பொறுப்புகளை சுமத்துகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு குடிக்க தண்ணீர் இல்லாமல் போனபோது, அவர்களுக்கு மோசேயின்மீது நம்பிக்கையும் இல்லாமல் போயிற்று. மோசே தங்களை ஏமாற்றுகிறாரோ என்னும் சந்தேகம் அவர்களுக்கு வந்துவிடுகிறது. ஆகையினால் அவர்கள் மோசேயோடே வாதாடுகிறார்கள். அவர்கள் மோசேக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். அவர்கள் மோசேயின்மேல் கல்லெறியப் பார்க்கிறார்கள்.

கர்த்தர் தங்கள் நடுவில் இருக்கிறாரா என்னும் சந்தேகம் இஸ்ரவேல் புத்திரருக்கு வந்துவிடுகிறது. அவர்கள் கர்த்தரை நோக்கிப் பார்க்கவில்லை. கர்த்தர் தங்கள் நடுவில் இருக்கிறார் என்னும் நிச்சயம் இருந்தால் மாத்திரமே, அவர்களால் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ண முடியும். அவர்களுடைய விசுவாசக்கண்கள் இருளடைந்திருக்கிறது.

மோசே இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் பிரத்தியட்சமாயிருக்கிறார். ஜனங்கள் கர்த்தரை நோக்கிப் பார்க்காமல், மோசேயை நோக்கிப் பார்த்து, அவரோடே வாதாடுகிறார்கள். கர்த்தர் தங்கள் நடுவிலிருக்கிறார் என்னும் நிச்சயம் அவர்களுக்கு இருக்குமென்றால், அவர்கள் தங்கள் தேவைகளையும், கவலைகளையும் கர்த்தரிடத்தில் முறையிடுவார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கு விரோதமாக வாதாடி, முறுமுறுக்கும்போது, மோசே அவர்களைக் கடிந்துகொள்கிறார். மோசே அவர்களை நோக்கி, "என்னோடே ஏன் வாதாடுகிறீர்கள், கர்த்தரை ஏன் பரீட்சை பார்க்கிறீர்கள்" (யாத் 17:2) என்று கேட்கிறார். மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு பதில் சொல்லும்போது, அவர்களை மென்மையாக கடிந்துகொள்கிறார். அவர்கள் மோசேக்கு விரோதமாக வாதாடினாலும், அவர்கள் அவருக்கு விரோதமாக முறுமுறுத்தாலும், ஜனங்கள் மெய்யாகவே கர்த்தருக்கு விரோதமாகவே முறுமுறுக்கிறார்கள்.

மோசே தன்னோடே வாதாடுகிற இஸ்ரவேல் புத்திரரை பார்த்து, "கர்த்தரை ஏன் பரீட்சை பார்க்கிறீர்கள்" என்று கேட்கிறார். அவர்கள் மோசேக்கு விரோதமாக முறுமுறுப்பதன் மூலமாக, கர்த்தருடைய வல்லமையை சந்தேகப்படுகிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு கோபம் உண்டுபண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தன்னோடே வாதாடும்போது, மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார். மோசே கர்த்தரை நோக்கி, "இந்த ஜனங்களுக்கு நான் என்ன செய்வேன், இவர்கள் என்மேல் கல்லெறியப் பார்க்கிறார்களே" (யாத் 17:4) என்று சொல்லுகிறார்.

மனுஷர் நமக்கு விரோதமாக அநியாயமாய் வாதாடும்போது, நாம் அவர்களோடு சண்டைபோடக்கூடாது. நாமும் அவர்களைப்போல வாதாடக்கூடாது. அவர்களிடத்தில் அநியாயம் இருந்தாலும், நாம் அவர்களோடே சண்டைபோடாமல், அந்த சூழ்நிலையிலும் மோசேயைப்போல, கர்த்தரை நோக்கிக் கூப்பிடவேண்டும். நம்முடைய பாரங்களையெல்லாம் கர்த்தர்மீது வைத்துவிடவேண்டும். நாம் கர்த்தருடைய சமுகத்திலே ஜெபம்பண்ணி, நம்முடைய கவலைகள், கஷ்டங்கள், மனவேதனைகள் ஆகிய எல்லாவற்றையும் கர்த்தருடைய சமுகத்திலே ஒப்புவிக்கவேண்டும்.

நம்முடைய பிரச்சனைகளை நாம் மனுஷரிடத்தில் சொல்லும்போது, அவர்கள் ஒருவேளை நமக்கு செவிகொடுக்காமல் போய்விடுவார்கள். நம்முடைய கர்த்தரோ நம்முடைய ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறவர். நாம் கர்த்தரிடத்தில் நம்முடைய பிரச்சனைகளை சொல்லும்போது, அவர் மிகுந்த கரிசனையோடும், இரக்கத்தோடும் நம்முடைய வார்த்தைகளுக்கு செவிகொடுப்பார்.

இஸ்ரவேல் புத்திரர் மோசேயோடே வாதாடுகிறார்கள். அவருக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். இந்த சூழ்நிலையில் தான் என்ன செய்யவேண்டும் என்பது மோசேக்கு தெரியவில்லை. மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார். மோசேக்கு கர்த்தருடைய உதவியும், ஆலோசனையும் தேவைப்படுகிறது. தன்னோடே வாதாடுகிற இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே தான் என்ன செய்யவேண்டும் என்று மோசே கர்த்தருடைய ஆலோசனையை கேட்கிறார்.

மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிடும்போது கர்த்தர் அவருக்கு, தம்முடைய கிருபையுள்ள வார்த்தைகளை சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் மூப்பரில் சிலரை உன்னோடே கூட்டிக் கொண்டு, நீ நதியை அடித்த உன் கோலை உன் கையிலே பிடித்துக்கொண்டு, ஜனங்களுக்கு முன்னே நடந்துபோ. அங்கே ஓரேபிலே நான் உனக்கு முன்பாக கன்மலையின்மேல் நிற்பேன்; நீ அந்தக் கன்மலையை அடி; அப்பொழுது ஜனங்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும்" (யாத் 17:5,6) என்று சொல்லுகிறார்.

மோசே தினமும் இந்தக் கோலைத் தன்னோடு எடுத்துச் செல்கிறார். செங்கடலை இரண்டாகப் பிரித்த சம்பவத்தில் மோசே இந்தக் கோலை இதற்கு முன்பு கடைசியாகப் பயன்படுத்தினார் (யாத் 14:16).

ஓரேப் என்பது ஒரு சிறிய கன்மலை. இது 15அடி நீளமும், 10அடி அகலமும், 12அடி உயரமும் உடையது. மோசே இந்தக் கன்மலையை அடிக்கிறார். இந்தக் கன்மலையிலிருந்து இலட்சக்கணக்கான ஜனங்களுக்குத் தேவையான தண்ணீர் புறப்பட்டு வருகிறது. பின்பு இந்தத் தண்ணீர் நின்று போயிற்று. மறுபடியும் அற்புதம் செய்து கன்மலையிலிருந்து தண்ணீர் வரவேண்டியதாயிற்று. (எண் 20:8-11).

இஸ்ரவேலின் மூப்பர்கள் அவிசுவாசத்தோடு இருந்தாலும் இங்கு அற்புதம் நடைபெறுகிறது. தேவன் சூழ்நிலைகளினால் மட்டுப்படுகிறவர் அல்ல. இயேசு கிறிஸ்துவும் அவிசுவாசிகளுக்கு மத்தியில் அநேக அற்புதங்களைச் செய்தார்.

இஸ்ரவேல் புத்திரர் மோசேயோடே வாதாடும்போது, அவர்கள் மோசேக்கு விரோதமாக முறுமுறுக்கும்போது, மோசே அவர்களை விட்டு பயந்து ஓடிப்போய்விடக்கூடாது. அவர் கர்த்தர்மீது நம்பிக்கை வைத்து இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன்பாக நிற்கவேண்டும். இஸ்ரவேலின் மூப்பரில் சிலரை மோசே தன்னோடே கூட்டிக்கொள்ளவேண்டும். அவர் தன்னுடைய கையிலே கோலைப் பிடித்துக்கொண்டு ஜனங்களுக்கு முன்னே நடந்துபோகவேண்டும். மோசே ஜனங்களைப் பார்த்து பயந்து ஓடிப்போகாமல், ஜனங்களுக்கு விரோதமாக சண்டைபோடாமல், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, ஜனங்களுக்கு முன்னே நடந்துபோகவேண்டும்.

மோசேயின் கையில் கோல் இருக்கிறது. மோசே இந்தக் கோலால் நதியை அடித்தார். எகிப்தியர்மீது வாதைகள் வருவதற்கு மோசே இந்தக் கோலை பயன்படுத்தினார். அதுபோல, தனக்கு விரோதமாக முறுமுறுக்கிற இஸ்ரவேல் புத்திரரை தண்டிப்பதற்காகவோ அல்லது அவர்கள்மீது வாதைகள் வரப்பண்ணுவதற்காகவோ, மோசே இப்போது தன் கையிலே கோலைப் பிடித்திருக்கவில்லை. ஜனங்களுக்கு குடிக்க தண்ணீர் புறப்படப்பண்ணுவதற்காக மோசேயின் கையில் கோல் இருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் கலககுணமுள்ளவர்களாகவும், கர்த்தர்மீது நம்பிக்கையில்லாதவர்களாகவும், கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் கர்த்தரோ அவர்களை உடனே தண்டித்துப்போடாமல், அவர்கள்மீது நீடியபொறுமையுள்ளவராயிருக்கிறார்.

ஆகார் வனாந்தரத்தில் தண்ணீர் தாகமாயிருந்தபோது, கர்த்தர் அவளுக்கு தண்ணீரைக் கொடுத்து, அவளுடைய தாகத்தைத் தீர்த்து வைத்தார். கர்த்தர் அதுபோல இப்போது இந்த வனாந்தரத்திலே, மோசேக்கு தண்ணீர் ஊற்றை காண்பித்திருந்தால், இஸ்ரவேல் புத்திரருக்கு குடிக்க தண்ணீர் கிடைத்திருக்கும். அவர்கள் எல்லோரும் அந்த ஊற்றண்டைக்குப்போய், தண்ணீரைக் குடித்து தங்கள் தாகத்தைத் தீர்த்துக்கொள்வார்கள்.

ஆனால் இஸ்ரவேல் புத்திரர் பாளயமிறங்கியிருக்கிற ரெவிதீமிலே தண்ணீர் ஊற்று எதுவுமில்லை. கர்த்தர் அவர்களுக்கு அங்கே தண்ணீர் ஊற்றைக் காண்பிக்கவில்லை. கர்த்தர் ஓரேபிலே கன்மலையின்மேல் நிற்கிறார். கன்மலைக்குள்ளே என்ன இருக்கிறது என்பது இஸ்ரவேல் புத்திரருக்கு தெரியாது. அவர்களுக்கு மோசேயோடே வாதாடவும், மோசேக்கு விரோதமாக முறுமுறுக்கவும் தெரியும். அவர்களுக்கு கர்த்தருடைய வல்லமையும், மகத்துவமும், மகிமையும் தெரியாது. கர்த்தர் தங்கள்மீது இரக்கமாயும், மனவுருக்கமாயும் இருக்கிறார் என்பதுகூட இஸ்ரவேல் புத்திரருக்கு தெரியாது.

கர்த்தர் மோசேக்கு ரெவிதீமிலே தண்ணீர் ஊற்றைக் காண்பிக்கவில்லை. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே தம்முடைய வல்லமையையும், அவர்கள்மீது தாம் வைத்திருக்கிற கிருபையையும், இரக்கத்தையும் வெளிப்படுத்த விரும்புகிறார் கர்த்தர் அவர்களுக்கு ஒரு அற்புதத்தை நடப்பித்து, தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் வெளிப்படுத்த தீர்மானித்திருக்கிறார். கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

மோசே எங்கு போகவேண்டும் என்றும், அவர் தன்னோடு இஸ்ரவேலின் மூப்பரை அங்கே கூட்டிக்கொண்டு போகவேண்டும் என்றும் கர்த்தர் அவருக்கு கட்டளை கொடுக்கிறார். கர்த்தர் நடப்பிக்கிற அற்புதத்திற்கு, இஸ்ரவேலின் மூப்பர்கள் கண்ணாரக்கண்ட சாட்சிகளாயிருப்பார்கள். கர்த்தருடைய தெய்வீக பிரசன்னம் தங்கள் நடுவிலே இருக்கிறது என்பதை அவர்கள் பிரத்தியட்சமாய்ப் பார்த்து, கர்த்தர்மீது நம்பிக்கை வைப்பார்கள்.

கர்த்தர் நடப்பிக்கிற அற்புதம் ஏதோ ஒரு மூலையில் இரகசியமாய் நடைபெறுகிற சம்பவமல்ல. கர்த்தர் தம்முடைய அற்புத வல்லமையை இஸ்ரவேலின் மூப்பருக்கு முன்பாக வெளிப்படுத்துகிறார். இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தர்மீது நம்பிக்கை வரவேண்டும். கர்த்தர் தங்கள் நடுவிலிருக்கிறார் என்னும் நிச்சயம் அவர்களுடைய இருதயத்தில் நிரம்பியிருக்கவேண்டும்.

மோசே இஸ்ரவேலின் மூப்பரில் சிலரை தன்னோடே கூட்டிக்கொண்டு போகும்போது, கர்த்தர் ஓரேபிலே, மோசேக்கு முன்பாக, கன்மலையிலே நிற்பதாக வாக்குப்பண்ணுகிறார். அப்பொழுது மோசே அந்தக் கன்மலையை, தன் கையில் பிடித்திருக்கிற கோலால் அடிக்கவேண்டும். மோசே இஸ்ரவேல் மூப்பரின் கண்களுக்கு முன்பாக, கர்த்தர் தனக்கு கட்டளையிட்ட பிரகாரம், கன்மலையை அடிக்கிறார். அப்பொழுது அந்தக் கன்மலையிலிருந்து, ஜனங்கள் குடிப்பதற்கு தண்ணீர் புறப்பட்டு வருகிறது. அங்கிருந்து திரளான தண்ணீர் புறப்பட்டு வருகிறது. இதுவரையிலும் அங்கே ஜனங்களுக்கு குடிக்க தண்ணீர் இல்லாதிருந்தது. இப்போதோ கன்மலையிலிருந்து, ஜனங்கள் குடிப்பதற்கு ஏராளமான தண்ணீர் புறப்பட்டு வருகிறது.

கன்மலையிலிருந்து புறப்பட்டு வருகிற தண்ணீர், "தண்ணீர் தடாகம்" என்று அழைக்கப்படுகிறது. "அவர் கன்மலையைத் தண்ணீர்த்தடாகமாகவும், கற்பாறையை நீரூற்றுகளாகவும் மாற்றுகிறார்" *(சங் 114:8).*

கன்மலையிலிருந்து புறப்படும் தண்ணீர், தேனும் எண்ணெயும் என்று அழைக்கப்படுகிறது. "பூமியிலுள்ள உயர்ந்தஸ்தானங்களின்மேல் அவனை ஏறிவரப்பண்ணினார்; வயலில் விளையும் பலனை அவனுக்குப் புசிக்கக் கொடுத்தார்; கன்மலையிலுள்ள தேனையும், கற்பாறையிலிருந்து வடியும் எண்ணெயையும் அவன் உண்ணும்படி செய்தார்" *(உபா 32:13).*

ரெவிதீமிலே பாளயமிறங்கியிருக்கிற இஸ்ரவேல் புத்திரர் தண்ணீர் தவனமாயிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய தாகத்திற்கு தேனையும், எண்ணெயையும் தாராளமாய்க் கொடுக்கிறார். கன்மலையிருந்து புறப்பட்டு வருகிற தண்ணீர் இஸ்ரவேல் புத்திரருக்கு தேனைப்போலவும், எண்ணெயைப்போலவும் இருக்கிறது. இது அவர்களுக்கு சந்தோஷத்தையும், ஆனந்தத்தையும் கொடுக்கிறது.

பொதுவாக கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்பட்டு வரும் என்று யாரும் எதிர்பார்க்கமாட்டார்கள். நாம் கர்த்தர்மீது நம்பிக்கையாயிருக்கும்போது, நாம் எதிர்பார்க்காத திசையிலிருந்து, நமக்கு நன்மைகள் வரும். கர்த்தர் தம்முடைய ஆசீர்வாதங்களின் ஊற்றுக்களை நமக்காக திறந்துகொடுத்து, நம்முடைய தேவைகளை சந்திப்பார்.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு வனாந்தரத்திலே வழியையும், அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குகிறார்.

"இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்; இப்பொழுதே அது தோன்றும்; நீங்கள் அதை அறியீர்களா? நான் வனாந்தரத்திலே வழியையும், அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன். நான் தெரிந்துகொண்ட என் ஜனத்தின் தாகத்துக்கு வனாந்தரத்திலே தண்ணீர்களையும் அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவதினால், காட்டுமிருகங்களும், வலுசர்ப்பங்களும், கோட்டான் குஞ்சுகளும் என்னைக் கனம்பண்ணும்" *(ஏசா 43:19,20).*

நாம் வனாந்தரத்திலே பிரயாணம்பண்ணினாலும், கர்த்தர் நமக்கு உண்டுபண்ணின வழியிலே பிரயாணம் பண்ணவேண்டும். நாம் கர்த்தர்மீது நம்பிக்கை வைத்து, கர்த்தரையே நோக்கிப் பார்த்து, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி பிரயாணம்பண்ண வேண்டும். கர்த்தர் நம் நடுவிலிருக்கிறார் என்றும், அவர் நம்முடைய தேவைகளை சந்தித்து நமக்கு உதவிசெய்வார் என்றும் நாம் கர்த்தர்மீது நம்பிக்கை வைக்கவேண்டும்.

பரிசுத்த ஆவியானவரின் கிருபைகளும் ஆறுதல்களும் ஜீவத்தண்ணீருள்ள நதிகளுக்கு ஒப்பாக சொல்லப்பட்டிருக்கிறது.

"வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப் படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை" *(யோவா 7:38,39)*

"நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்" *(யோவா 4:14)*.

ஜீவத்தண்ணீருள்ள நதிகள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்திலிருந்து புறப்பட்டு வருகிறது. கிறிஸ்துவனாவரே மோசேயின் நியாயப்பிரமாணத்தினால் அடிக்கப்பட்ட கன்மலையாகயிருக்கிறார். கிறிஸ்துவானவர் கொடுக்கும் ஜீவத்தண்ணீர் மாத்திரமே ஆத்துமாவின் தேவைகளை சந்திக்கும். ஜீவத்தண்ணீர் மாத்திரமே நம்முடைய ஆத்துமாவின் தாகத்தை தணிக்கும்.

கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்பட்டு வரவேண்டுமென்றால், ஊற்று திறக்கப்படவேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, திறக்கப்பட்ட நீரூற்றாகயிருக்கிறார். கன்மலையாகிய இயேசுகிறிஸ்துவினிடத்திலிருந்து புறப்பட்டு வரும் ஜீவத்தண்ணீர் பரிசுத்தமானதாகவும், தெளிவானவதாகவும், நம்முடைய ஆத்துமாவின் தாகத்தை தீர்க்கக்கூடியதாகவும், நமக்கு சந்தோஷத்தையும், ஆறுதலையும், கொடுக்கக்கூடியதாகவும் இருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் இந்த ஸ்தலத்திலே மோசேக்கு விரோதமாக வாதாடினார்கள். கர்த்தர் தங்கள் நடுவில் இருக்கிறாரா இல்லையா என்று, இஸ்ரவேல் புத்திரர் இந்த ஸ்தலத்திலே கர்த்தரை பரீட்சை பார்த்தார்கள். மோசே இந்த ஸ்தலத்திற்கு மாசா என்றும், மேரிபா என்றும் புதிய பேரிடுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவங்களையும், முறுமுறுப்புக்களையும் நினைவுகூரவேண்டும். மாசா என்னும் பெயருக்கு பரீட்சை அல்லது சோதனை என்று பொருள். இஸ்ரவேல் புத்திரர் இந்த ஸ்தலத்திலே கர்த்தரை பரீட்சை பார்த்தார்கள். மேரிபா என்னும் பெயருக்கு வாதாடுதல் என்று பொருள். இஸ்ரவேல் புத்திரர் இந்த ஸ்தலத்திலே மோசேயோடு வாதாடினார்கள்.

"மாசா" என்னும் பெயருக்கு "சோதனை அல்லது கர்த்தரைப் பரீட்சை பார்ப்பது" என்று பொருள்.

"மேரிபா" என்னும் பெயருக்கு "வாதாடுதல்" என்று பொருள். தண்ணீருக்காக ஜனங்கள் மோசேயோடு வாதாடினார்கள். *(யாத் 17:2-4,7)*.

"கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரா இல்லையா" என்று இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக பேசுகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு அநேக அற்புதங்களைச் செய்திருக்கிறார். கர்த்தர் தினமும் அவர்களை அக்கினிஸ்தம்பத்தினாலும், மேகஸ்தம்பத்தினாலும் வழிநடத்துகிறார். இவ்வளவு காரியம் நடைபெற்ற பின்பும், கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரா இல்லையா என்று கேட்பது கர்த்தரைக் கோபமூட்டும் செயலாகும். இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியில் காணப்படும் அவிசுவாசம் அவர்களைத் தேவனுடைய கிருபையிலிருந்து விலக்கிப்போடும். *(எண் 14:1-35; யூதா 1:5)*.

இஸ்ரவேல் புத்திரர் கிப்ரோத் அத்தாவாவிலே கர்த்தருக்கு கோபம் உண்டாக்கின சம்பவம் எண்ணாகமம் 11:31-35 ஆகிய வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

கர்த்தர் மோசேயின் விண்ணப்பத்திற்கு செவிகொடுக்கிறார். இஸ்ரவேல் ஜனங்களின் பாரங்களை சுமப்பதற்கு, கர்த்தர் மூப்பர்களை நியமனம் செய்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் இறைச்சி சாப்பிடவேண்டும் என்று இச்சித்தார்கள். கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய வார்த்தையின் பிரகாரம் இறைச்சியைப் புசிக்கக் கொடுக்கிறார்.

அப்பொழுது கர்த்தரிடத்திலிருந்து புறப்பட்ட ஒரு காற்று சமுத்திரத்திலிருந்து காடைகளை அடித்துக்கொண்டு வந்து, பாளையத்திலும் பாளையத்தைச் சுற்றிலும், இந்தப்பக்கம் ஒருநாள் பிரயாணமட்டும் அந்தப்பக்கம் ஒருநாள் பிரயாணமட்டும், தரையின்மேல் இரண்டு முழ உயரம் விழுந்துகிடக்கச் செய்கிறது (எண் 11:31).

இந்தக் காற்று கர்த்தரிடத்திலிருந்து வந்த காற்றாகும். இஸ்ரவேலரின் பாளயத்தைச் சுற்றிலும் இந்தக் காற்று காடைகளை அடித்துக் கொண்டு வருகிறது. லட்சக்கணக்கான காடைகள் ஒரே நேரத்தில் வந்து சேர்ந்ததும் மிகப்பெரிய அற்புதமாகும். அப்பொழுது ஜனங்கள் எழும்பி, அன்று பகல்முழுவதும், இராமுழுவதும், மறுநாள் முழுவதும் காடைகளைச் சேர்க்கிறார்கள். கொஞ்சமாய் சேர்த்தவன்கூட பத்து கூடைகள் நிறையச்சேர்க்கிறான். அவைகளைப் பாளயத்தைச் சுற்றிலும் தங்களுக்காகக் குவித்துவைக்கிறார்கள். ஒருவேளை காடைகளின் இறகுகளைப் பிரித்து அவைகளைப் பாளயத்தைச் சுற்றிலும் குவித்து வைத்திருக்கலாம்.

கர்த்தரிடத்திலிருந்து புறப்பட்ட காற்று என்பது, கீழ்க்காற்றாக இருக்கவேண்டுமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

"ஆகாசத்திலே கீழ்காற்றை வரப்பண்ணி, தம்முடைய வல்லமையினால் தென்றலையும் வீசச்செய்து, மாம்சத்தைத் தூளத்தனையாயும், சிறகுள்ள பறவைகளைக் கடற்கரை மணலத்தனையாயும் வருஷிக்கப்பண்ணி, அவைகளை அவர்கள் பாளயத்தின் நடுவிலும், அவர்கள் கூடாரங்களைச் சுற்றிலும் இறங்கப்பண்ணினார்" (சங் 78:26-28).

காடைகள் என்பது எப்படிப்பட்ட பறவைகள் என்று தெளிவாக தெரியவில்லை. இவை சிறகுள்ள பறவைகள் என்று சங்கீதக்காரர் சொல்லுகிறார். காடைகள் என்பது வெட்டுக்கிளிகளை குறிக்கலாம் என்றும் வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். பாலஸ்தீன தேசத்தில் வெட்டுக்கிளிகளானது சுவை மிகுந்த போஜனமாக கருதப்பட்டது. இவை காற்றில் குவியல் குவியலாக அடித்துக் கொண்டு வரப்படும். சூரிய உஷ்ணத்திலே இவை எல்லாம் உலர்ந்துபோகும். இவற்றைப் புசிப்பதற்கு சுவையாகயிருக்கும்.

காடைகள் என்பது எப்படிப்பட்ட பறவைகளாகயிருந்தாலும், அவை இஸ்ரவேல் புத்திரர் புசிப்பதற்கு இறைச்சியைக் கொடுக்கிறது. அவர்கள் ஒரு மாதம் வரைக்கும் புசிப்பதற்குத் தேவையான காடைகளை சேகரிக்கிறார்கள்.

அப்பொழுது ஜனங்கள் எழும்பி, அன்று பகல்முழுவதும், இராமுழுவதும், மறுநாள் முழுவதும் காடைகளைச் சேர்க்கிறார்கள்; கொஞ்சமாய்ச் சேர்த்தவன் பத்து ஓமர் அளவு சேர்க்கிறான்; அவைகளைப் பாளையத்தைச் சுற்றிலும் தங்களுக்காகக் குவித்துவைக்கிறார்கள் (எண் 11:32).

இஸ்ரவேல் புத்திரர் இறைச்சியை இச்சிக்கிறார்கள். மாம்சத்தின் இச்சைக்கு கீழ்ப்படிவது கர்த்தருக்கு விரோதமான பாவம். இதன் நிமித்தமாக கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வருகிறது.

தங்கள் பற்கள் நடுவே இருக்கும் இறைச்சியை அவர்கள் மென்று தின்னுமுன்னே கர்த்தருடைய கோபம் ஜனங்களுக்குள்ளே மூளுகிறது; கர்த்தர் ஜனங்களை மகா பெரிய வாதையால் வாதிக்கிறார் (எண் 11:33). இந்த வாதையில் இஸ்ரவேல் புத்திரரில் அநேகர் செத்துப்போகிறார்கள்.

பல மாதங்களாக இஸ்ரவேல் புத்திரர்கள் மன்னாவை மட்டுமே போஜனமாகப் புசித்து வருகிறார்கள். அவர்களுடைய கலகக்குணத்தின் காரணமாகக் கர்த்தர் ஜனங்களை மகா பெரிய வாதையால் வாதிக்கிறார். ஏராளமான ஜனங்கள் வாதையினால் மாண்டுபோகிறார்கள் (எண் 11:33-34).

இச்சித்த ஜனங்களை அங்கே அடக்கம்பண்ணுகிறார்கள். ஆகையினால் மோசே அந்த ஸ்தலத்துக்குக் கிப்ரோத் அத்தாவா என்று பேரிடுகிறார் (எண் 11:34). கிப்ரோத் அத்தாவா என்னும் பெயருக்கு இச்சையின் பிரேதக்குழிகள் அல்லது இச்சித்தவர்களின் பிரேதக்குழிகள் என்று பொருள்.

பின்பு, இஸ்ரவேல் ஜனங்கள் கிப்ரோத் அத்தாவா என்னும் இடத்தைவிட்டு, ஆஸரோத்துக்குப் பிரயாணம் பண்ணி, ஆஸரோத்திலே தங்குகிறார்கள் (எண் 11:35).

சீனாய் வனாந்தரத்திற்குப் பின்பு இஸ்ரவேல் புத்திரர் பாளயமிறங்கிய இடம் ஆஸரோத்தாகும். இது சீனாயிலிருந்து வடகிழக்காக நாற்பது மைல் தூரத்திலுள்ளது. இது காதேசிற்குப் போகும் பாதையிலுள்ளது.

இஸ்ரவேல் புத்திரர் தபேராவிலும், மாசாவிலும், கிப்ரோத் அத்தாவாவிலும் கர்த்தருக்குக் கடுங்கோபம் உண்டாக்கினதுபோல, அவர்கள் காதேஸ்பர்னேயாவிலும், கர்த்தரை விசுவாசியாமலும், அவருடைய சத்தத்துக்குச் செவிகொடாமலும், அவருடைய வாக்குக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினார்கள் (உபா 9:23).

காதேஸ் பர்னேயாவிலிருந்து இஸ்ரவேல் புத்திரர்கள் கானான் தேசத்தைச் சுதந்தரிப்பதற்கு உடனடியாகச் செல்ல வேண்டும். இதுவே கர்த்தருடைய திட்டம். ஆனால் இஸ்ரவேலின் மூப்பர்களோ, கானான் தேசத்திற்குள் வேவுகாரர்களை அனுப்பி, கானான் தேசத்தைப் பற்றி கர்த்தர் சொன்ன வார்த்தை உண்மைதானா என்று சோதித்து அறிய விரும்பினார்கள். கர்த்தருடைய கட்டளைக்கு எதிராகக் கலகம் பண்ணினார்கள். [illegible]

கர்த்தர் தங்களோடு இருந்து, இராட்சதரை ஜெயிப்பதற்கும், கானான் தேசத்தைச் சுதந்தரிப்பதற்கும் தங்களுக்கு உதவி புரிவார் என்று இஸ்ரவேல் ஜனங்கள் விசுவாசிக்கவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் காதேஸ்பர்னேயாவிலிருந்தபோது, கர்த்தர் அவர்களை நோக்கி, "நீங்கள் போய், நான் உங்களுக்குக் கொடுத்த தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்" (உபா 9:23) என்று அவர்களை அனுப்பினார். ஆனால் அவர்களோ தங்கள் தேவனாகிய கர்த்தரை விசுவாசியாமலும், அவருடைய சத்தத்துக்குச் செவிகொடாமலும், அவருடைய வாக்குக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினார்கள். இந்த சம்பவம் எண்ணாகமம் 13,14 ஆகிய அதிகாரங்களில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே, கானான் தேசத்தின் எல்லை வரைக்கும் போய்ச்சேருகிறார்கள். கானான் தேசத்தில் பிரவேசிக்க அவர்கள் ஆயத்தமாயிருக்கிறார்கள். ஆனாலும் அவர்களுடைய அவிசுவாசத்தின் நிமித்தமாகவும், முறுமுறுப்புக்களின் நிமித்தமாகவும், கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார். அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசியாமல் வனாந்தரத்திலே திரும்பி வந்து அலைந்து திரிகிறார்கள்.

இந்த சம்பவம் சங்கீதப்புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

"இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்தில் கோபம் மூட்டினபோதும் சோதனை நாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள். அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சை பார்த்து, என் கிரியையையும் கண்டார்கள். நாற்பது வருஷமாய் நான் அந்தச் சந்ததியை அரோசித்து, அவர்கள் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி, என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று, என்னுடைய [illegible] ஆணையிட்டேன்" ([illegible] சங் 95:8-11).

எபிரெயருக்கு நிருபம் எழுதின ஆசிரியரும் இந்த சம்பவத்தை விசுவாசிகளாகிய நமக்கு எச்சரிப்பாக எழுதியிருக்கிறார்.

"ஆகையால், பரிசுத்தஆவியானவர் சொல்லுகிறபடியே: இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்திலே கோபமூட்டின போதும், சோதனைநாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள். அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சைபார்த்து, நாற்பது வருஷகாலம் என் கிரியைகளைக் கண்டார்கள். ஆதலால், நான் அந்தச் சந்ததியை அரோசித்து, அவர்கள் எப்பொழுதும் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி; என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் என்றார்" (எபி 3:7-11).

கானான் தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி ஒவ்வொரு பிதாக்களின் கோத்திரத்திலும் ஒவ்வொரு பிரபு வீதமாக பன்னிரண்டு புருஷர்கள் அனுப்பப்படுகிறார்கள் (எண் 13:1-16).

மோசே அந்தப் பன்னிரண்டு வேவுகாரருக்கும் கட்டளைகளைக் கொடுக்கிறார் (எண் 13:17-20). மோசே தங்களுக்கு சொன்ன பிரகாரம் கானான் தேசத்தைச் சுற்றிப்பார்த்து, திரும்பி வருகிறார்கள் (எண் 13:21-25). பன்னிரண்டு வேவுகாரரும் தாங்கள் கொண்டு வந்த செய்தியை இஸ்ரவேலின் பாளயத்திலிருக்கிறவர்களுக்கு சொல்லுகிறார்கள் (எண் 13:26-33).

கர்த்தர் மோசேயை நோக்கி, "நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கும் கானான் தேசத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு நீ மனிதரை அனுப்பு; ஒவ்வொரு பிதாக்களின் கோத்திரத்திலும் ஒவ்வொரு பிரபுவாகிய புருஷனை அனுப்ப வேண்டும்" (எண் 13:1,2) என்று சொல்லுகிறார்.

இந்தச் சம்பவம் இஸ்ரவேல் புத்திரர் பாரான் வனாந்தரத்தில் தங்கியிருந்தபோது நிகழ்ந்ததாகும். (எண் 13:2-3)

அந்த மனிதர் யாவரும் இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்கள் எண் 13:4-15 ஆகிய வசனங்களில் இவர்களுடைய பெயர்கள் கூறப்பட்டிருக்கிறது. இந்த அட்டவணையும், எண் 1:5-15 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் அட்டவணையும் ஒன்றல்ல. இவர்கள் பிதாக்களின் வம்சத்து தலைவர்கள். (எண் 1:4) இவர்கள் இஸ்ரவேலில் ஆயிரவர்களுக்குத் தலைவர்கள் (எண் 1:16), சேனைத்தலைவர்கள் (எண் 2:3-32), இஸ்ரவேலின் தலைவர்கள் (எண் 13:3).

கானான் தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி பன்னிரண்டு வேவுகாரர் அனுப்பப்படுகிறார்கள். இவர்களை அனுப்புமாறு கர்த்தரே மோசேயினிடத்தில் சொன்னதுபோல இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால் உபாகமம் புஸ்தகத்தில் இந்த சம்பவம் வேறு விதமாக சொல்லப்பட்டிருக்கிறது. ஜனங்கள் மோசேயினிடத்தில் வந்து, கானான் தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி மனுஷரை அனுப்பவேண்டுமென்று சொன்னதாக உபாகமம் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது

"அப்பொழுது நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வந்து: நமக்காக அந்த தேசத்தைச் சோதித்துப்பார்க்கவும், நாம் இன்னவழியாக அதில் சென்று, இன்ன பட்டணங்களுக்குப் போகலாம் என்று நமக்கு மறுசெய்தி கொண்டுவரவும், நமக்கு முன்னாக மனிதரை அனுப்புவோம் என்றீர்கள்" (உபா 1:22).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தைக் கொடுப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற நலமான தேசம். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ கர்த்தருடைய வார்த்தையை நம்பவில்லை. அவர்கள் கானான் தேசத்தை சோதித்துப் பார்க்க விரும்புகிறார்கள். கர்த்தர் சொன்னது மெய்யான வார்த்தைதானா என்பதை அவர்கள் சோதித்தறிய ஆசைப்படுகிறார்கள்.

கர்த்தர் ஏற்கெனவே கானான் தேசத்தை சோதித்துப் பார்த்து, அது பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம் என்பதை உறுதி செய்து, அதன் பின்பே அந்த தேசத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தர் சோதித்துப் பார்த்ததையும் நம்பவில்லை, கானான் தேசத்தைப்பற்றி கர்த்தர் தங்களுக்கு சொன்ன வார்த்தையையும் நம்பவில்லை. அவர்கள் அந்த தேசத்தை சோதித்துப் பார்க்க தங்களுக்கு முன்னாக வேவுகாரரை அனுப்புகிறார்கள்.

கர்த்தருடைய ஜனம் அவருடைய வார்த்தையை நம்பவேண்டும். கர்த்தருடைய வாக்குத்தத்தங்களெல்லாம் ஆம் என்றும், ஆமென் என்றும் இருக்கிறது. கர்த்தர் நமக்கு நன்மையான ஈவுகளை மாத்திரமே கொடுப்பார் என்னும் நிச்சயம் நம்முடைய மனதில் இருக்கவேண்டும். நாம் கர்த்தருடைய கிருபையையும், இரக்கத்தையும், அவருடைய தெய்வீக வழிநடத்துதலையும் நம்பாமல், நம்முடைய சுயபுத்தியையும், சுயவல்லமையையும் நம்பினால், நாம் சீக்கிரத்தில் அழிந்துபோவோம்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், தேவனுடைய தெய்வீக வெளிப்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். கர்த்தருடைய வெளிப்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், நம்முடைய சுயபுத்திக்கு முக்கியத்துவம் கொடுத்தால், நமக்கு சமாதானம் கிடைக்காது. நம்முடைய காரியங்கள் எல்லமே குழப்பமாகிவிடும். விசுவாசிகளாகிய நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கவேண்டியவர்கள்.

கானான் தேசத்தை சோதித்து அறியும்படி தங்களுக்கு முன்னாக ஜனங்களை அனுப்பவேண்டும் என்று இஸ்ரவேல் புத்திரர் மோசேயிடம் சொல்லுகிறார்கள். மோசேயும் அவர்களுக்கு மறுப்பு சொல்லவில்லை. அவர்களுடைய விருப்பத்தை மோசே கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார். கர்த்தரும் ஜனங்களுடைய மனவிருப்பத்தின்படியே அவர்களை விட்டுவிடுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய தெய்வீக ஆலோசனையின் பிரகாரம் முன்செல்லாமல், தங்களுடைய சுயஆலோசனையின் பிரகாரமாக முன்செல்கிறார்கள். கர்த்தருடைய ஆலோசனை அவர்களை வழிநடத்தாமல், அவர்களுடைய மாம்சத்தின் விருப்பங்களும், ஆசைகளும், ஆலோசனைகளும் அவர்களை வழிநடத்துகிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் தம்முடைய வார்த்தையை நம்பாமல், கானான் தேசத்தை சோதித்தறிய, தங்களுக்கு முன்பாக ஆட்களை அனுப்பவேண்டும் என்று சொன்னபோது, கர்த்தரும் அவர்களுடைய விருப்பத்திற்கு அவர்களை ஒப்புக்கொடுத்துவிடுகிறார். "நான் இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுக்கும் கானான் தேசத்தைச் சுற்றிப்பார்ப்பதற்கு நீ மனிதரை அனுப்பு" *(எண் 13:2)* என்று கர்த்தர் மோசேயினிடத்தில் சொல்லுகிறார்.

மோசே கர்த்தருடைய வாக்கின் படியே அவர்களைப் பாரான் வனாந்தரத்திலிருந்து அனுப்புகிறார்; அந்த மனிதர் யாவரும் இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்கள் *(எண் 13:3).*

இந்த வசனப்பகுதியில் அவர்களுடைய பெயர்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு பிதாக்களின் கோத்திரத்திற்கு பிரபுவாகயிருக்கிறார்கள். கோத்திரத்திற்கு ஒருவர் வீதமாக, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாருக்கும் பன்னிரண்டு பிரபுக்கள் அனுப்பப்படுகிறார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கோத்திரத்திற்கு பிரதிநிதியாகயிருக்கிறார்கள்.

கானான் தேசத்தை சுற்றிப்பார்க்கும்படி அனுப்பப்பட்ட கோத்திரப்பிரபுக்களின் பெயர்கள் வருமாறு :

ரூபன் கோத்திரத்தில் சக்கூரின் குமாரன் சம்முவா. சிமியோன் கோத்திரத்தில் ஓரியின் குமாரன் சாப்பாத். யூதா கோத்திரத்தில் எப்புன்னேயின் குமாரன் காலேப் *(எண் 13:4-6).*

காலேப் யூதா கோத்திரத்தையும், யோசுவா எப்பிராயீம் கோத்திரத்தையும் சேர்ந்தவர்கள். (எண் 13:8,16) இவர்கள் இருவரும் தேசத்தைச் சுற்றிப்பார்த்து, நற்செய்தியைக் கொண்டு வந்தார்கள். (எண் 13:30; எண் 14:24,30,38). மோசேக்குப் பின்பு யோசுவா இஸ்ரவேலின் தலைவனானார் (உபா 34:9-12; ஒசி 1:1-18; ஒசி 3:7-8).

இசக்கார் கோத்திரத்தில் யோசேப்பின் குமாரன் ஈகால். எப்பிராயீம் கோத்திரத்தில் நூனின் குமாரன் ஓசேயா. பென்யமீன் கோத்திரத்தில் ரப்பூவின் குமாரன் பல்த்தி. செபுலோன் கோத்திரத்தில் சோதியின் குமாரன் காதியேல் (எண் 13:7-10).

மனாசேக்குப் பதிலாக யோசேப்பின் பெயரும், லேவிக்குப் பதிலாக எப்பிராயீமின் பெயரும் இங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. (எண் 13:8).

யோசேப்பின் கோத்திரத்தைச் சேர்ந்த மனாசே கோத்திரத்தில் சூசின் குமாரன் காதி. தாண் கோத்திரத்தில் கெமல்லியின் குமாரன் அம்மியேல். ஆசேர் கோத்திரத்தில் மிகாவேலின் குமாரன் சேத்தூர். நப்தலி கோத்திரத்தில் ஒப்பேசியின் குமாரன் நாகபி. காத் கோத்திரத்தில் மாகியின் குமாரன் கூவேல் (எண் 13:11-15).

சேத்தூர் என்னும் எபிரெய பெயருக்கு, "தேவனால் உறுதிபண்ணப்பட்டவர்" என்று பொருள். எபிரெய மொழியில் எழுத்துக்களே எண்களாகவும் பயன்படுகிறது. சேத்தூர் என்னும் எபிரெய பெயரின் கூட்டு எண்ணிக்கை 666 ஆகும். இந்த எண்ணிக்கை அந்திக் கிறிஸ்துவின் அடையாளம் என்று ஒருசிலர் வியாக்கியானம் பண்ணுகிறார்கள் (வெளி 13).

இந்த அட்டவணை பிறப்பின் பிரகாரமாகவோ, (ஆதி 29:32-35; ஆதி 35:16-18) அல்லது ஆசரிப்புக் கூடாரத்தைச் சுற்றிலும் பாளயமிறங்கியிருக்கும் வரிசைப்பிரகாரமாகவோ கூறப்படவில்லை. (எண் 2:3-32).

ஜனங்களைத் திருப்திப்படுத்துவதற்காக மோசே வேவுகாரரை அனுப்புகிறார். (உபா 1:19-22). வாக்குத்தத்த கானான் தேசத்தைப் பற்றி தேவன் அவர்களுக்கு ஏற்கெனவே அறிவித்திருக்கிறார். (உபா 8:7-9). இஸ்ரவேல் புத்திரர் அதை நம்பியிருந்தால், கானான் தேசத்திற்குள் விசுவாசத்தோடு சென்று அதைச் சுதந்தரித்திருப்பார்கள். வனாந்தரத்தில் அவர்கள் நாற்பது வருஷங்கள் அலைந்து திரிந்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

ஒசேயாவுக்கு யோசுவா என்று மோசே பேரிட்டிருக்கிறார். ஓசேயா என்னும் பெயருக்கு இரட்சகர் அல்லது இரட்சிப்பு என்று பொருள். மோசே ஓசேயா என்னும் பெயரை யோசுவா என்று மாற்றுகிறார் (யாத் 17:9) யோசுவா என்னும் பெயருக்கு இரட்சிப்பார் அல்லது தேவனுடைய இரட்சிப்பு என்று பொருள். தேவனுடைய பெயரிலுள்ள ஒரு எழுத்து யோசுவாவின் பெயரில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி மோசே அனுப்பின மனிதரின் நாமங்கள் இவைகளே; நூனின் குமாரனாகிய ஓசேயாவுக்கு யோசுவா என்று மோசே பேரிட்டிருக்கிறார் (எண் 13:16).

ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஒவ்வொரு பிரபு வீதமாக பன்னிரண்டு பிரபுக்கள் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். இது மிகவும் நல்ல திட்டம். எந்தக் கோத்திரமும் ஒதுக்கி வைக்கப்படவில்லை. கானான் தேசத்தைச் சுற்றிப்பார்ப்பதற்கு எல்லா கோத்திரத்தாருக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. இந்த திட்டம் நல்லதாகயிருந்தாலும், இதன் மூலமாக நல்ல விளைவு ஏற்படவில்லை.

கானான் தேசத்தைச் சுற்றிப்பாப்பதற்காக அனுப்பப்பட்ட கோத்திரப்பிதாக்களின் குணாதிசயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஒவ்வொரு பிரபு அனுப்பப்படுகிறார். ஆனால் அனுப்பப்படுகிற அந்த பிரபுக்கு எப்படிப்பட்ட நற்குணம் இருக்கவேண்டும் என்பதில் யாரும் கவனம் செலுத்தவில்லை.

கோத்திரப்பிதாக்கள் கானான் தேசத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு, தாங்கள் புறப்பட்ட இடத்திற்கு திரும்பி வருகிறார்கள். அவர்கள் இஸ்ரவேலின் பாளயத்திலுள்ளவர்களுக்கு சொல்லும் செய்திகள் அவர்களுடைய மனம் போலவே இருக்கிறது. தீயசுபாவமுள்ளவர்கள் தீயசெய்திகளை சொல்லுகிறார்கள். நல்ல சுபாவமுள்ளவர்கள் நல்ல செய்திகளைச் சொல்லுகிறார்கள்.

கானான் தேசத்திற்கு அனுப்பப்பட்டவர்களில் பத்துபேர் கர்த்தருடைய வார்த்தைக்கும், அவருடைய வல்லமைக்கும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அவர்கள் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை நம்பவில்லை. அவர்கள் கர்த்தருடைய பலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தங்களுடைய சொந்த பலத்துக்கும், கானான் தேசத்திலிருக்கிற கானானியரின் பலத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அவர்கள் கானானியரை தங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள்.

கானான் தேசத்தை சுற்றிப் பார்க்க போனவர்களில் இருவர் மாத்திரம் கர்த்தரையும், அவருடைய வார்த்தையையும் நம்புகிறார்கள். அவர்கள் கானானியரின் பலத்தை கர்த்தருடைய பலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சர்வவல்லமையுள்ள தேவன்.

யோசுவாவின் பழைய பெயர் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய பழைய பெயர் ஓசேயா என்பதாகும். மோசே ஓசேயா என்னும் பெயரை, யோசுவா என்று மாற்றியிருக்கிறார். ஓசேயா என்னும் பெயருக்கு, இரட்சிப்புக்காக ஜெபம்பண்ணுவது என்று பொருள். ஓசேயா என்னும் பெயருக்கு "நீர் இரட்சிப்பீர்" என்று பொருள் சொல்லலாம். யோசுவா என்னும் பெயர் இரட்சிப்பின் வாக்குத்தத்தத்தைக் குறிப்பிடுகிறது. யோசுவா என்னும் பெயருக்கு "அவர் இரட்சிப்பார்" என்று பொருள் சொல்லலாம்.

ஓசேயா என்னும் பெயரும், யோசுவா என்னும் பெயரும் இரண்டு வெவ்வேறு பெயர்களாகயிருந்தாலும், இவ்விரண்டிற்கும் நெருங்கிய தொடர்புள்ளது. ஒரு பெயர் ஜெபத்திற்கு அடையாளம். மற்றொரு பெயர் வாக்குத்தத்தத்திற்கு அடையாளம். ஜெபத்தின் மூலமாக வாக்குத்தத்தம் நிறைவேறுகிறது. வாக்குத்தத்தம் நிறைவேறவேண்டும் என்பதற்காக நாம் ஜெபம்பண்ணுகிறோம்.

இயேசு என்னும் பெயரும், யோசுவா என்னும் பெயரும் ஒரே பொருளை உடையது. நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்துவுக்கு இயேசு என்பதே பெயர். மோசேக்கு பின்பு யோசுவா இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்தினார். அவரே இஸ்ரவேலின் தளபதியாகவும், கானான் தேசத்தைச் சுதந்தரிக்கிறவராகவும் இருக்கிறார்.

யோசுவா கர்த்தருடைய ஜனங்களை, கானான் தேசத்தின் வல்லமைகளிலிருந்து விடுவித்து இரட்சித்தார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ தம்முடைய ஜனங்களை பாதாளத்தின் வல்லமைகளிலிருந்து மீட்டு இரட்சிக்கிறார்.

மோசே இஸ்ரவேலின் பன்னிரண்டு பிரபுக்களையும் கானான் தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி அனுப்புகிறார். அவர்கள் கானான் தேசத்தில் எங்கெல்லாம் போகவேண்டும் என்றும், அவர்கள் எதையெல்லாம் பார்க்கவேண்டும் என்றும், அவர்கள் தன்னிடத்தில் மறுபடியும் திரும்பி வரும்போது, அவர்கள் எதைப்பற்றிய செய்திகளை கொண்டுவரவேண்டும் என்றும் மோசே அவர்களுக்கு கட்டளை கொடுக்கிறார்.

மோசே அவர்களுக்கு சொன்ன கட்டளையில் இரண்டு பகுதிகள் உள்ளது. அவையாவன : 1. அவர்கள் கானான் தேசத்தைப்பற்றி அறிந்து வரவேண்டும். 2. அவர்கள் கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களைப்பற்றி அறிந்து வரவேண்டும்.

மோசே அவர்களை நோக்கி, "நீங்கள் இப்படித் தெற்கே போய், மலையில் ஏறி, தேசம் எப்படிப்பட்டதென்றும், அங்கே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்களோ பலவீனர்களோ, கொஞ்சம்பேரோ அநேகம் பேரோ என்றும் (எண் 13:17,18) பாருங்கள் என்று சொல்லுகிறார்.

தெற்கு பகுதியில் நேகேப் மலை இருக்கிறது. இது கானானின் தென்பகுதியாகும். கானானின் தென்பகுதியும், மையப்பகுதியும் மலைகள் சூழ்ந்துள்ள இடம்.

அவர்கள் குடியிருக்கிற தேசம் எப்படிப்பட்டது. அது நல்லதோ கெட்டதோ என்றும், அவர்கள் பட்டணங்கள் எப்படிப்பட்டதென்றும், அவர்கள் கூடாரங்களில் குடியிருக்கிறவர்களோ கோட்டைகளில் குடியிருக்கிறவர்களோ என்றும், நிலம் எப்படிப்பட்டது, அது வளப்பமானதோ இளப்பமானதோ என்றும்; அதில் விருட்சங்கள் உண்டோ இல்லையோ என்றும் பாருங்கள் (எண் 13:19,20) என்று மோசே வேவுகாரரிடம் சொல்லுகிறார்.

வேவுகாரர்கள் பார்த்து வரவேண்டிய காரியங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. தேசம் எப்படிப்பட்டது என்று
2. அங்கே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்களோ பலவீனர்களோ என்று
3. கொஞ்சம்பேரோ அநேகம் பேரோ என்று
4. அவர்கள் குடியிருக்கிற தேசம் எப்படிப்பட்டது என்று
5. அந்த தேசம் நல்லதோ கெட்டதோ என்று
6. அவர்கள் பட்டணங்கள் எப்படிப்பட்டதென்று
7. அவர்கள் கூடாரங்களில் குடியிருக்கிறவர்களோ கோட்டைகளில் குடியிருக்கிறவர்களோ என்று
8. நிலம் எப்படிப்பட்டது, அது வளப்பமானதோ இளப்பமானதோ என்று
9. அதில் விருட்சங்கள் உண்டோ இல்லையோ என்று

மோசே அவர்களைப் பார்த்து, "நீங்கள் தைரியங்கொண்டிருந்து, தேசத்தின் கனிகளிலே சிலவற்றைக் கொண்டுவாருங்கள்" (எண் 13:20) என்றும் சொல்லுகிறார். அக்காலம் திராட்சச்செடி முதற்பழம் பழுக்கிற காலமாயிருக்கிறது.

பாலஸ்தீன தேசத்தின் தென்பகுதியில் ஜூலை, ஆகஸ்டு, ஆகிய மாதங்கள் திராட்சைப்பழங்கள் பழுக்கும் காலமாகும். செப்டம்பர், அக்டோபர் ஆகிய மாதங்கள் திராட்சைப்பழம் அறுக்கும் மாதமாகும். வடக்கு பிரதேசத்தில் திராட்சைப்பழம் பழுக்கும் காலமாக இருக்கும். இஸ்ரவேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்திலிருந்து மே மாதம் 20 ஆம் தேதி புறப்படுகிறார்கள். (எண் 10:11).

அதன்பின்பு, கிப்ரோத்-அத்தாவாவில் ஒரு மாதம் தங்கியிருக்கிறார்கள். அங்கு அவர்களுக்குக் காடைகள் கொடுக்கப்படுகிறது (எண் 11:20, 31-35) அதன்பின்பு, ஆஸரோத்தில் ஏழு நாட்கள் தங்கியிருக்கிறார்கள். (எண் 11:35-12:16) இந்த வரலாற்றைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது வேவுகாரர்கள் ஜூலை மாதத்தின் ஆரம்பத்தில் கானான் தேசத்திற்குள் பிரவேசித்திருக்க வேண்டும் என்று தெரியவருகிறது.

மோசே பன்னிரண்டு வேவுகாரர்களையும் அனுப்பும்போது, "தைரியங்கொண்டிருங்கள்" என்று சொல்லுகிறார். இந்த வாக்கியத்திற்கு, அவர்கள் கர்த்தர்மீது நம்பிக்கை வைக்கவேண்டும் என்றும், மனுஷரைப் பார்த்து பயப்படக்கூடாது என்றும் பொருள். மோசே அவர்களிடத்தில் பல காரியங்களை பார்த்து வருமாறு சொல்லியிருக்கிறார். அவர்கள் அந்தக் காரியங்களையெல்லாம் பார்த்து, இஸ்ரவேலின் பாளயத்திலிருக்கிற ஜனங்களுக்கு நல்ல செய்திகளை கொண்டு வரவேண்டும். அவர்களுடைய செய்தி இஸ்ரவேல் புத்திரரை உற்சாகப்படுத்த வேண்டும்.

இஸ்ரவேல் புத்திரரின் பிரபுக்கள் வாக்குத்தத்த தேசத்தைச் சுற்றிப் பார்க்கப்போகிறார்கள்.

அவர்கள் போய், சீன் வனாந்தரந் தொடங்கி, ஆமாத்துக்குப் போகிற வழியாகிய ரேகொப் மட்டும், தேசத்தைச் சுற்றிப் பார்க்கிறார்கள் (எண் 13:21). இஸ்ரவேலின் பன்னிரண்டு பிரபுக்களும் கானான் தேசத்தை சுற்றிப் பார்க்கும்போது அவர்கள் வெவ்வேறு பிரிவுகளாக பிரிந்து, செல்கிறார்கள்.

பாரானின் வடக்கு பகுதியில் சீன் வனாந்தரம் அமைந்திருக்கிது. ரேகோப் பாலஸ்தீனத்தின் வடக்கு பகுதியில் உள்ளது. (2சாமு 8:3). இங்கிருந்து இவர்கள் தெற்கு பகுதியிலுள்ள எபிரோனுக்குத் திரும்புகிறார்கள். (எண் 13:22) அதன்பின்பு, எஸ்கோல் பள்ளத்தாக்கிற்குச் சென்று அங்கியிருந்து திராட்சைப்பழங்களையும், மாதுளம்பழங்களையும், அத்திப்பழங்களையும், சேகரித்துக் கொண்டு தங்கள் பாளயத்திற்குத் திரும்பி வருகிறார்கள்.

"உங்கள் தென்புறம் சீன்வனாந்தரம் தொடங்கி ஏதோம் தேசத்தின் ஓரமட்டும் இருக்கும்; கிழக்கே இருக்கிற உப்புக்கடலின் கடைசி தொடங்கி உங்கள் தென்எல்லையாயிருக்கும்" (எண் 34:3).

"ஓர் என்னும் மலை தொடங்கி, ஆமாத்திற்குப் போகிற வழியைக் குறிப்பாக வைத்து, அங்கேயிருந்து அந்த எல்லை சேதாத்திற்குப் போய், அங்கேயிருந்து அது சிப்ரோனுக்குப் போய், ஆத்சார் ஏனானிலே முடியும்; அதுவே உங்களுக்கு வடபுறத்து எல்லையாயிருக்கும்" (எண் 34:8,9).

இந்த வசனப்பகுதியில் எபிரோனைப்பற்றி விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. "அதன் பின்பு அவர்கள் தெற்கேயும் சென்று, எபிரோன்மட்டும் போகிறார்கள்; அங்கே ஏனாக்கின் குமாரராகிய அகீமானும் சேசாயும் தல்மாயும் இருக்கிறார்கள். எபிரோன் எகிப்திலுள்ள சோவானுக்கு ஏழுவருஷத்திற்கு முன்னே கட்டப்பட்டது" (எண் 13:22).

ஏனோக்கியரின் கோத்திரப்பிதா அர்பா என்பவர். (யோசு 14:15; யோசு 15:13). எபிரோன் கீரியாத்-அர்பா என்று அழைக்கப்பட்டது. (ஆதி 23:2,19). அகீமான், சேசாய், தல்மாய் ஆகியோர் ஏனோக்கியரின் ராட்சத சந்ததியார் ஆவார்கள். 50 வருஷங்களுக்குப் பின்பு காலேப் இவர்களை முறியடித்தார். (யோசு 15:14; நியா 1:10).

எபிரோன் எகிப்திலுள்ள சோவானுக்கு ஏழுவருஷத்திற்கு முன்னே கட்டப்பட்டது. சோவான் கீழ் எகிப்து தேசத்தின் தலைநகரம். இதைவிட எபிரோன் பழமை வாய்ந்தது.

எபிரொனிலே மக்பேலா குகை இருக்கிறது. இந்தக் குகையில் இஸ்ரவேலரின் முற்பிதாக்கள் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

"அதற்குப்பின் ஆபிரகாம் தன் மனைவியாகிய சாராளைக் கானான் தேசத்தில் எப்பெரோன் ஊர் பூமியான மம்ரேக்கு எதிரே இருக்கிற மக்பேலா என்னும் நிலத்தின் குகையிலே அடக்கம் பண்ணினான்" (ஆதி 23:19).

கானான் தேசத்தை சுற்றிப் பார்க்கப்போன இஸ்ரவேலின் கோத்திரப்பிரபுக்கள் மக்பேலாவிலுள்ள, தங்கள் முற்பிதாக்களின் கல்லறைக்குப்போகிறார்கள். அந்த பகுதிக்கு அருகாமையிலுள்ள பட்டணத்தில் ஏனாக்கின் குமாரர் குடியிருக்கிறார்கள். தங்களுடைய முற்பிதாக்களின் கல்லறைகள் எங்கே இருக்கிறாதோ, அந்த இடத்தையும், அதற்கு அருகாமையிலுள்ள இடத்தையும் ஏனாக்கின் குமாரர் கைப்பற்றியிருக்கிறார்கள்.

பின்பு, அவர்கள் எஸ்கோல் பள்ளத்தாக்கு மட்டும் போய், அங்கே ஒரே குலையுள்ள ஒரு திராட்சைக் கொடியை அறுக்கிறார்கள்; அதை ஒரு தடியிலே இரண்டு பேர் கட்டித் தூக்கிக்கொண்டுவருகிறார்கள்; மாதளம்பழங்களிலும் அத்திப்பழங்களிலும் சிலவற்றைக் கொண்டுவருகிறார்கள் (எண் 13:23). இஸ்ரவேல் புத்திரர் அங்கே அறுத்த திராட்சக்குலையினிமித்தம், அவ்விடம் எஸ்கோல் பள்ளத்தாக்கு என்னப்பட்டது (எண் 13:24).

எபிரோனின் தென்பகுதியிலுள்ள எஸ்கோல் பள்ளத்தாக்கு வளம் நிறைந்தது. எஸ்கோல் என்பதற்கு "திராட்சைக்குலை" (ஆதி 14:13) என்று பொருள். வேதாகமத்தில் நான்கு இடங்களில் எஸ்கோலைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. (எண் 13:23-24; எண் 32:9; உபா 1:24). கானான் தேசம் யோசுவாவின்கீழ் பங்குபாகம் பண்ணப்பட்டபோது, இந்தப் பள்ளத்தாக்கு யூதாவின் பங்குவீதமாகக் கிடைக்கிறது.

கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம் என்பதற்கு இந்தத் திராட்சப்பழங்களும், மாதுளம் பழங்களும், அத்திப்பழங்களும் அடையாளமாயிருக்கிறது. ஆகையினால் இந்தப் பள்ளத்தாக்குக்கு எஸ்கோல் பள்ளத்தாக்குக்கு என்று பேரிடுகிறார்கள். எஸ்கோல் என்னும் பெயருக்கு திராட்சக்குலை என்று பொருள். கானான் தேசத்திலுள்ள எல்லா பழங்களுக்கும், இந்த திராட்சக்குலையானது அடையாளமாகவும் அச்சாரமாகவும் இருக்கிறது.

இஸ்ரவேல் கோத்திரத்தின் பன்னிரண்டு பிரபுக்களும் தேசத்தைச் சுற்றிப் பார்த்து, நாற்பதுநாள் சென்றபின்பு திரும்புகிறார்கள் (எண் 13:25).

இஸ்ரவேல் புத்திரரின் வேவுகாரர்கள் கானான் தேசத்தை நாற்பது நாட்களுக்குச் சுற்றி பார்த்துவிட்டு, தங்கள் பாளயத்திற்குத் திரும்பி வருகிறார்கள். நாற்பது என்னும் எண்ணில் விசேஷித்த ஆவிக்குரிய வியாக்கியானம் எதுவுமில்லை. (உபா 4:2; உபா 12:32; நீதி 30:6; வெளி 22:18-19).

கானான் தேசத்தைச் சுற்றிப்பார்க்கப்போன பன்னிரண்டு பிரபுக்களும் திரும்பி வருகிறார்கள். அவர்கள் ஒரே குலையுள்ள ஒரு திராட்சக்கொடியையும், மாதளம்பழங்களிலும், அத்திப்பழங்களிலும் சிலவற்றையும் கொண்டு வருகிறார்கள். இவை கானான் தேசம் செழிப்பான தேசம் என்பதற்கு அடையாளமாயும் அச்சாரமாயும் இருக்கிறது. இதில் அவர்களுக்குள் கருத்து வேறுபாடு எதுவுமில்லை.

மோசே அவர்களிடத்தில் கானான் தேசத்தைப்பற்றியும், கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களையும் பற்றி செய்தி கொண்டு வருமாறு சொன்னார். பன்னிரண்டு பிரபுக்களும் கானான் தேசம் செழிப்பான தேசம் என்று ஒன்றுபோல் ஒரே செய்தியை சொல்லுகிறார்கள். அவர்களுடைய செய்திக்கு, அவர்கள் கொண்டு வந்த பழம் அடையாளமாயிருக்கிறது.

ஆனால் அவர்கள் கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களைப்பற்றி வெவ்வேறு செய்திகளை சொல்லுகிறார்கள். பன்னிரண்டு பிரபுக்களில் பத்து பிரபுக்கள் கானான் தேசத்திற்கு போகவேண்டாம் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் தங்கள் செய்தியினால் இஸ்ரவேல் புத்திரருடைய இருதயத்தைக் கலங்கப்பண்ணுகிறார்கள். மீதமுள்ள இரண்டு பிரபுக்களும், கர்த்தருடைய துணையினால், கானான் தேசத்தை சுதந்தரிக்கலாம் என்று விசுவாச வார்த்தைகளை சொல்லுகிறார்கள்.

கானான் தேசம் செழிப்பான தேசம் என்பதிலும், கனிகொடுக்கும் விருட்சங்கள் அங்கு திரளாயிருக்கிறது என்பதிலும், கனிகளும் பெரிதாயிருக்கிறது என்பதிலும் பிரபுக்கள் மத்தியிலே கருத்து வேறுபாடு எதுவுமில்லை.

இஸ்ரவேலின் கோத்திரப்பிரபுக்கள் பன்னிரண்டு பேரும் கானான் தேசத்தைச் சுற்றிப் பார்த்து, நாற்பதுநாள் சென்றபின்பு திரும்பி வருகிறார்கள். அவர்கள் பாரான் வனாந்தரத்தில் இருக்கிற காதேசுக்கு வந்து, மோசே ஆரோன் என்பவர்களிடத்திலும் இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரிடத்திலும் சேர்ந்து, அவர்களுக்கும் சபையார் அனைவருக்கும் சமாசாரத்தை அறிவித்து, தேசத்தின் கனிகளை அவர்களுக்குக் காண்பிக்கிறார்கள் (எண் 13:25,26).

காதேஸ்பர்னேயாவில் இஸ்ரவேல் புத்திரர் நாற்பது நாட்களுக்குப் பாளயமிறங்கியிருந்தார்கள். (உபா 1:19). இது என்-மிஸ்பாத் (ஆதி 14:7) என்று அழைக்கப்பட்டது. எபிரோனிலிருந்து தென்பகுதியில் 24 மைல் தூரத்திலுள்ளது. எபிரோன் கானான் தேசத்தின் தென்பகுதியின் எல்லையாகும். இங்கு மிரியாம் மரித்தார். ஜனங்கள் மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாக இங்கு கூட்டம் கூடினார்கள். (எண் 20:1-3).

வேவுகாரர் கானான் தேசத்து திராட்சைக்குலையை ஒரு தடியில் இரண்டுபேர் கட்டி, தூக்கிக் கொண்டு வருகிறார்கள் (எண் 13:23). கானான் தேசத்து திராட்சைப்பழங்களும், மாதுளம் பழங்களும், அத்திப்பழங்களும் அளவில் பெரியவை. வளப்பமானவை (எண் 13:23).

அவர்கள் மோசேயை நோக்கி, "நீர் எங்களை அனுப்பின தேசத்துக்கு நாங்கள் போய்வந்தோம்; அது பாலும் தேனும் ஓடுகிற தேசந்தான்; இது அதினுடைய கனி" (எண் 13:27) என்று சொல்லுகிறார்கள்.

அவர்கள் கானான் தேசத்தைப்பற்றிச் சொல்லிய பின்பு கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களைப்பற்றியும் சொல்லுகிறார்கள். ஜனங்களைப்பற்றிச் சொல்லும்போது, பிரபுக்கள் மத்தியிலே கருத்து வேறுபாடு காணப்படுகிறது.

கோத்திரப்பிரபுக்களில் பத்துபேர், கானான் தேசத்தைப்பற்றிச் சொல்லும்போது, அது பாலும் தேனும் ஓடுகிற தேசம் என்று சொல்லிவிட்டு, அதன் பின்பு, "நாங்கள் போய்ச் சுற்றிப் பார்த்து வந்த அந்த தேசம் தன் குடிகளைப் பட்சிக்கிற தேசம்" (எண் 13:32) என்றும் சொல்லுகிறார்கள். அவர்களுடைய வார்த்தையில் உறுதியும், நிச்சயமும் இல்லை. நடுக்கமும், பயமும், தடுமாற்றமும் இருக்கிறது.

கோத்திரப்பிரபுக்கள் கானான் தேசத்தைச் சுற்றிப்பார்த்தபோது, அந்த தேசத்திலே மிகப்பெரிய வாதை இருந்திருக்கவேண்டும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். ஆகையினால் அவர்களுடைய பார்வையில் கானான் தேசம் தன் குடிகளை பட்சிக்கிற தேசமாக அவர்களுக்கு தெரிந்திருக்கிறது.

கானான் தேசத்தைச் சுற்றிப்பார்த்து வந்த பிரபுக்கள், அந்த தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களைப்பற்றியும் சொல்லுகிறார்கள்.

ஆனாலும், அந்த தேசத்திலே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்கள்; பட்டணங்கள் அரணிப்பானவைகளும் மிகவும் பெரியவைகளுமாய் இருக்கிறது; அங்கே ஏனாக்கின் குமாரரையும் கண்டோம் (எண் 13:28) என்றும்,

அமலேக்கியர் தென்புறமான தேசத்தில் குடியிருக்கிறார்கள்; ஏத்தியரும், எபூசியரும், எமோரியரும் மலைநாட்டில் குடியிருக்கிறார்கள்; கானானியர் கடல் அருகேயும் யோர்தானண்டையிலும் குடியிருக்கிறார்கள் (எண் 13:29) என்றும் சொல்லுகிறார்கள்.

கானான் தேசத்தை சுற்றிப்பார்ப்பதற்காக அனுப்பப்பட்டவர்கள் திரும்பி வந்த போது, அவர்களில் அநேகர் சொன்ன பொதுவான செய்தியின் விவரம் வருமாறு :

1. நீர் எங்களை அனுப்பின தேசத்துக்கு நாங்கள் போய்வந்தோம்; அது பாலும் தேனும் ஓடுகிற தேசந்தான்; இது அதினுடைய கனி. (எண் 13:26-27).

2. அந்த தேசத்திலே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்கள். (எண் 13:28).

3. பட்டணங்கள் அரணிப்பானவைகளும் மிகவும் பெரியவைகளுமாய் இருக்கிறது.

4. அங்கே இராட்சதப் பிறவியான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப்போல் இருந்தோம். (எண் 13:28-29,32-33).

5. நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது; அவர்கள் நம்மைப்பார்க்கிலும் பலவான்கள் (எண் 13:31).

கானான் தேசத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு திரும்பி வந்திருக்கிற பன்னிரண்டு பிரபுக்கள் மத்தியில் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. அவர்களில் பத்துபேர் ஒரே மாதிரியாகவும், மீதமுள்ள காலேப், யோசுவா ஆகிய இரண்டுபேரும் வேறுமாதிரியாகவும், கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களைப்பற்றியும், அந்த தேசத்தை சுதந்தரிப்பது பற்றியும் தங்களுடைய செய்தியை சொல்லுகிறார்கள்.

வேவுகாரர் கண்டதைப் பற்றி எண் 13:28,32,33 ஆகிய வசனங்களில் கூறுகிறார்கள். இறுதியில் தங்களுடைய அவிசுவாசத்தை வெளிப்படுத்துவதற்கு "ஆனாலும்" என்று கூறிவிடுகிறார்கள். விசுவாசித்து நடக்காமல் தரிசித்து நடந்தால் இப்படிப்பட்ட பிரச்சனைகள் வரத்தான் செய்யும். (2கொரி 5:7). காலேபும், யோசுவாவும் விசுவாசத்தில் நடந்தார்கள். கர்த்தரிடத்தில் விசுவாசம் வைக்கிறவர் நம்பிக்கையோடு இருப்பார். பயப்படமாட்டார். (எண் 13:30; எண் 14:7-9).

தேசத்தை சுற்றிப்பார்த்து விட்டு வந்த பிரபுக்களில் பத்துபேர், கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களைப்பார்த்து பயப்படுகிறார்கள்.

நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது; அவர்கள் நம்மைப்பார்க்கிலும் பலவான்கள் (எண் 13:31) என்றும், நாங்கள் அதிலே கண்ட ஜனங்கள் எல்லாரும் மிகவும் பெரிய ஆட்கள் (எண் 13:32) என்றும் சொல்லுகிறார்கள்.

கானான் தேசத்தில் குடியிருக்கிறவர்கள் தங்களுக்குள் எப்போதும் சண்டையிட்டுக் கொண்டிருப்பார்கள். அவர்கள் எல்லோரும் வாதையினால் அழிவார்கள்.

வேவுக்காரருடைய பார்வையில் கானான் தேசத்தார் இராட்சதரைப் போலவும், தாங்கள் வெட்டுக்கிளிகளைப் போலவும் இருக்கிறார்கள். (எண் 13:32-33).

இராட்சதர் இராட்சதரைப் பெற்றெடுப்பார்கள் (2சாமு 21:16-22, 1நாளா 20:4-8). இவர்கள் ஏனோக்கின் புத்திரர். ஏனோக்கியர் எல்லோருமே இராட்சதர்கள். (உபா 2:11).

கானான் தேசத்தைச் சுதந்தரிக்கப்போகும் முன்பாகவே, அந்த தேசத்தை தங்களால் சுதந்தரிக்க முடியாது என்று பத்து பிரபுக்களும் அவிசுவாசமான வார்த்தைகளை சொல்லுகிறார்கள்.

பத்து பிரபுக்களும் மோசேயை நோக்கி, "அங்கே இராட்சதப் பிறவியான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப்போல் இருந்தோம், அவர்கள் பார்வைக்கும், அப்படியே இருந்தோம்" (எண் 13:33) என்று சொல்லுகிறார்கள். இவ்வாறாக அவர்கள் இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே தாங்கள் சுற்றிப் பார்த்துவந்த தேசத்தைக்குறித்து துர்ச்செய்தி பரம்பச்செய்கிறார்கள்.

வேவுகாரர்களில் பத்து பேர் துர்ச்செய்தியைப் பரப்புகிறார்கள். இது கர்த்தருக்கு விசனமாக இருக்கிறது. துர்ச்செய்தியைப் பரப்பியவர்கள் நியாயந்தீர்க்கப்படுகிறார்கள் (எண் 14:37).

கானான் தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி அனுப்பப்பட்ட பன்னிரண்டு பிரபுக்களில் பத்துபேர், மாம்சப்பிரகாரமாக சிந்திக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய பலத்தையும் அவருடைய வல்லமையையும் நோக்கிப் பார்ப்பதற்கு பதிலாக தங்களுடைய மாம்ச பலத்தை நோக்கிப் பார்க்கிறார்கள். கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களோடு ஒப்பிடும்போது, இஸ்ரவேல் புத்திரரின் மாம்ச பலமும் அதிகமாகவே இருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் கானானியரை விட திரளான எண்ணிக்கை உள்ளவர்கள். இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமே கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கவேண்டும் என்னும் ஒரே நோக்கத்தோடிருக்கிறார்கள். அவர்களுடைய சிந்தனையிலும், செயலிலும் ஒற்றுமையிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும், ஒவ்வொரு கோத்திரமாக அணியணியாக புறப்பட்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் மத்தியிலே ஒழுங்கும் கட்டுப்பாடும் இருக்கிறது. மோசே அவர்களுக்கு தலைவராகயிருக்கிறார். அவர் ஞானமும் தைரியமுமுள்ளவர். மெய்யாகவே இஸ்ரவேல் புத்திரரின் மாம்ச பலம், கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களைவிட அதிகமாகவே இருக்கிறது.

கானான் தேசத்தை வேவுபார்க்கும்படி அனுப்பப்பட்டவர்கள், மாம்சப்பிரகாரமாக சிந்தித்துப் பார்த்தாலும், இவ்வளவு கோழையாகயிருக்கவேண்டிய அவசியமில்லை. "நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது" என்றோ, "அவர்கள் நம்மைப் பார்க்கிலும் பலவான்கள்" என்றோ கோழைத்தனமாக பேசவேண்டிய அவசியமில்லை. வேவுகாரரின் பத்துபேர் மனம் தளர்ந்துபோயிருக்கிறார்கள்.

வேவுகாரர் சொன்ன பிரகாரம், கானானியர் இஸ்ரவேல் புத்திரரைவிட பலவான்களாகயிருந்தாலும், அவர்களால் கர்த்தரைவிட பெரிய பலவான்களாயிருக்க முடியாது. கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளம் இஸ்ரவேல் புத்திரருக்கு மத்தியிலே இருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு கூடயிருக்கும்போது, அவர்களுக்கு விரோதமாக யாராலும் எதிர்த்து நிற்கமுடியாது.

கானானியரின் பட்டணங்கள் அரணிப்பானவைகளாகவும், மிகவும் பெரியவைகளாகவும் இருக்கிறது என்று வேவுகாரர் சொல்லுகிறார்கள். ஆனாலும் இந்தப் பிரபஞ்சத்திலுள்ள எந்த ஜனத்தாலும், பரலோகத்திற்கு விரோதமாக அரண்களை கட்ட முடியாது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், பரலோகத்தின் தேவனாகவும் இருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய புயத்தின் வல்லமையை பல சந்தர்ப்பங்களில் அனுபவித்திருக்கிறார்கள். கர்த்தருடைய புயம் குறுகிப்போகாத நீண்ட புயம். அவருடைய புயம் சத்துருக்களுக்கு விரோதமாக நீட்டப்பட்டிருக்கிற புயம். கர்த்தர் தம்முடைய பலத்த புயத்தினால் இஸ்ரவேல் புத்திரரை பாதுகாக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் 430 வருஷங்களாக எகிப்து தேசத்திலே அடிமைகளாகயிருந்தார்கள். கர்த்தர் தம்முடைய பலத்த புயத்தினால், இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக்கொண்டார். கானானியரைப்போலவே எகிப்தியரும் பலமுள்ளவர்கள். கர்த்தர் எகிப்தியரை அதம்பண்ணியதுபோல, கானானியரையும் அதம்பண்ணுவார். ஆனால் வேவுபார்க்கப்போன கோத்திரப்பிரபுக்களுக்கோ, கர்த்தர்மீது போதுமான அளவு நம்பிக்கையில்லை.

கர்த்தர் தம்முடைய பட்டயத்தைப் பயன்படுத்தாமலேயே, எகிப்தியரின் குதிரை வீரர்களையும் இரதங்களையும் செங்கடலிலே மூழ்கச் செய்தார். எகிப்தியர்கள் மொத்தமாய் அழிந்துபோனார்கள். அமலேக்கியர்கள் சிதறிப்போனார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்காக யுத்தம்பண்ணுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய வார்த்தையை நம்பி, கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, கர்த்தர் தம்முடைய ஜனத்திற்காக கானானியர்மீது யுத்தம்பண்ணுவார். கானானியரால் கர்த்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண முடியாது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கானானியருக்கு விரோதமாக மேற்கொள்ளும் எல்லா யுத்தங்களிலும், இஸ்ரவேல் புத்திரருக்கு கானானியர்மீது ஜெயம் கிடைக்கும் என்பது கர்த்தருடைய வாக்குத்தத்தம்.

ஆபிரகாமின் சந்ததியார் கானான் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்று கர்த்தர் ஏற்கெனவே வாக்குப்பண்ணியிருக்கிறார். கர்த்தருடைய வாக்குத்தத்தம் நிச்சயம் நிறைவேறும்.

"அந்நாளிலே கர்த்தர் ஆபிராமோடே உடன்படிக்கைபண்ணி, எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதும், கேனியரும், கெனிசியரும், கத்மோனியரும், ஏத்தியரும், பெரிசியரும், ரெப்பாயீமியரும், எமோரியரும், கானானியரும், கிர்காசியரும், எபூசியரும் என்பவர்கள் இருக்கிறதுமான இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன் என்றார்" (ஆதி 15:18-21)

"நீ பரதேசியாய்த் தங்கிவருகிறகானான் தேசமுழுவதையும், உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நித்திய சுதந்தரமாகக் கொடுத்து, நான் அவர்களுக்குத் தேவனாயிருப்பேன் என்றார்" (ஆதி 17:8).

கர்த்தர் கானானியரை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக துரத்திவிடுவார். இது கர்த்தர் மோசேயின் மூலமாக இஸ்ரவேல் புத்திரருக்கு சொன்ன வாக்குத்தத்தம்.

"நான் ஒரு தூதனை உங்களுக்கு முன்பாக அனுப்பி, கானானியனையும் எமோரியனையும் ஏத்தியனையும் பெரிசியனையும் ஏவியனையும் எபூசியனையும் துரத்திவிடுவேன்" (யாத் 33:2).

கர்த்தர் கானியரை ஒரே வேளையில் மொத்தமாக துரத்திவிடாமல், அவர்களை தம்முடைய சித்தத்தின் பிரகாரம், கொஞ்சம் கொஞ்சமாக துரத்துவார்.

"நீ விருத்தியடைந்து, தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்வரைக்கும், அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாய் உன் முன்னின்று துரத்திவிடுவேன்" (யாத் 23:30).

கானான் தேசத்தை சுற்றிப்பார்க்கும்படி அனுப்பப்பட்ட பிரபுக்களில் பத்துபேர் கர்த்தரையும், அவருடைய வார்த்தைகளையும், வாக்குத்தத்தங்களையும் நம்பாமல், "நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது" என்று அவிசுவாசமான வார்த்தைகளை சொல்லுகிறார்கள். அவர்கள் இவ்வாறு பேசுவது, "கர்த்தரால் தம்முடைய வார்த்தையை நிறைவேற்ற முடியுமோ அல்லது முடியாதோ என்று தெரியவில்லையே" என்று சந்தேகத்தோடு கேட்பதற்கு சமம்.

பன்னிரண்டு வேவுகாரரில் ஒருவராகிய காலேபு இஸ்ரவேல் ஜனங்களிடத்தில் விசுவாசமான வார்த்தைகளை சொல்லுகிறார். காலேபு சொல்லுகிற வார்த்தைகளை யோசுவாவும் அங்கீகரிக்கிறார். காலேபு மோசேக்கு முன்பாக ஜனங்களை அமர்த்துகிறார். தான் சொல்லுவதை இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் செவிகொடுத்து கேட்கவேண்டும் என்பது காலேபின் விருப்பம். காலேபு என்னும் பெயருக்கு "முழுஇருதயம்" என்று பொருள். இஸ்ரவேல் புத்திரர் காலேபின் வார்த்தைக்கு செவிகொடுத்தால் அவர்களும் முழுஇருதயத்தோடு கர்த்தருடைய வார்த்தைகளையும், வாக்குத்தத்தங்களையும் நம்புவார்கள்.

காலேபு இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக்கொள்வோம்; நாம் அதை எளிதாய் ஜெயித்துக்கொள்ளலாம்" (எண் 13:30) என்று சொல்லுகிறார்.

காலேபின் வார்த்தையில் உறுதியிருக்கிறது. "நாம் அதை எளிதாய் ஜெயித்துக்கொள்ளலாம்" என்று காலேபு சொல்லுகிறார். கானானியர் பலவான்களாகயிருந்தாலும், இஸ்ரவேல் புத்திரரும் பலவான்களாகவே இருக்கிறார்கள். காலேபு இஸ்ரவேல் புத்திரரை உற்சாகப்படுத்துகிறார். "நான் உடனே போய் அதை சுதந்தரித்துக்கொள்வோம்" என்று காலேபு ஆர்வத்தோடு சொல்லுகிறார். அவர் இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணும்போது, முன்னணியில் புறப்பட்டுப்போகிறவர். காலேபு யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

ஆகையினால் காலேபு அவர்களுக்கு உற்சாகத்தையும், தைரியத்தையும், தெம்பையும், நம்பிக்கையையும் கொடுத்து, அவர்களை வழிநடத்துகிறார்.

கானான் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளவேண்டும் என்பதே இஸ்ரவேல் புத்திரரின் விருப்பம். தங்கள் விருப்பத்தை காலதாமதம்பண்ணாமல், உடனே நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென்று காலேபு விரும்புகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை நம்பாமல் அவருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். இதனால் கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் இடையே வாக்குவாதமுண்டாயிற்று. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது கோபப்படுகிறார். அவர்கள் கானான் தேசத்தின் இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று கர்த்தர் தம்முடைய கோபத்திலே சொல்லுகிறார்.

கானான் தேசத்தை சுற்றிப்பார்த்து வந்தவர்களில் பத்துபேர் அந்த தேசத்தைக் குறித்து, இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே துர்ச்செய்தி பரம்பச்செய்கிறார்கள். இதனால் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள் (எண் 14:1-4).

மோசேயும் ஆரோனும், காலேபும் யோசுவாவும் இஸ்ரவேல் புத்திரருடைய கலகத்தை அடக்குவதற்கு முயற்சி செய்கிறார்கள். ஆனால் அவர்களுடைய முயற்சி பிரயோஜனமில்லாமல் போயிற்று (எண் 14:5-10).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். கர்த்தர் அவர்களை அழித்துப்போடப்போவதாக, அவர்களுக்கு எச்சரிப்பாய்ச் சொல்லுகிறார் (எண் 14:11,12). மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக கர்த்தருடைய சமுகத்திலே பணிவாய் விண்ணப்பம்பண்ணுகிறார் (எண் 14:13-19).

கர்த்தர் மோசேயின் விண்ணப்பத்திற்கு செவிகொடுக்கிறார். அவர் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரையும் அழித்துப்போடவில்லை. தம்மை பரீட்சை பார்த்த மனிதரில் ஒருவரும் கானான் தேசத்தைக் காணமாட்டார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். காலேபும் யோசுவாவும், அவர்களுடைய சந்ததியாரும் கானான் தேசத்தை சுதந்தரிப்பார்கள் (எண் 14:20-35).

கானான் தேசத்தை சுற்றிப்பார்த்துவிட்டு, இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே துர்ச்செய்தியை சொன்னவர்கள், கர்த்தருடைய சந்நிதியில் வாதையினால் செத்துப்போகிறார்கள் (எண் 14:36-39). இஸ்ரவேல் புத்திரரில் அநேகர், கர்த்தருடைய அனுமதியில்லாமல், கானான் தேசத்திற்குப்போவோம் என்று சொல்லி மலையின்மேல் ஏறித்துணிகிறார்கள் (எண் 14:40-45). அமலேக்கியரும் கானானியரும் இஸ்ரவேல் புத்திரரை முறியடித்து துரத்துகிறார்கள்.

கானான் தேசத்தை சுற்றிப்பார்க்கும்படி போனவர்களில் பத்துபேர், இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே கானான் தேசத்தைக் குறித்து துர்ச்செய்தியை சொல்லுகிறார்கள். அப்பொழுது சபையார் எல்லாரும் கூக்குரலிட்டுப் புலம்புகிறார்கள்; ஜனங்கள் அன்று இராமுழுதும் அழுதுகொண்டிருக்கிறார்கள் (எண் 14:1).

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தங்கள் மத்தியில் துர்ச்செய்தியைப் பரம்பச்செய்கிற வேவுகாரரின் வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இஸ்ரவேலின் பாளயத்திலிருக்கிறவர்களுக்கு இப்போது ஒரு ஆபத்தும் வரவில்லை. ஆனாலும் அவர்கள் தங்களுக்கு ஆபத்துக்கள் வந்ததுபோல பாவித்து, சபையார் எல்லாரும் கூக்குரலிட்டு புலம்புகிறார்கள். அவர்கள் அழுவதற்கு நியாயமான காரணம் எதுவுமில்லை. ஆனாலும் அவர்கள் அன்று இராமுழுவதும் அழுதுகொண்டிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய ஊழியக்காரருக்கு விரோதமாக முறுமுறுப்பதினால், அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகவும் பேசுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரருடைய கூக்குரலுக்கும் புலம்பலுக்கும், அவர்களுடைய கோத்திரப்பிதாக்களின் பிரபுக்களே காரணம். அவர்கள் இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் துர்ச்செய்தியைப் பரம்பச்செய்கிறார்கள். அந்தச் செய்தி உண்மையான செய்தியல்ல. அவர்கள் சொன்ன செய்திக்கு ஆதாரம் எதுவுமில்லை. ஆனாலும் அவர்கள் சொன்ன பொய்யான செய்தியை சபையார் எல்லாரும் கேட்டு கூக்குரலிட்டு புலம்புகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும், மோசேயையும், ஆரோனையும் நோக்கி, "எகிப்துதேசத்திலே செத்துப்போனோமானால் நலமாயிருக்கும்; இந்த வனாந்தரத்திலே நாங்கள் செத்தாலும் நலம். நாங்கள் பட்டயத்தால் மடியும்படிக்கும், எங்கள் பெண்ஜாதிகளும் பிள்ளைகளும் கொள்ளையாகும்படிக்கும், கர்த்தர் எங்களை இந்த தேசத்துக்குக் கொண்டு வந்தது என்ன? எகிப்துக்குத் திரும்பிப்போகிறதே எங்களுக்கு உத்தமம் அல்லவோ" (எண் 14:2,3) என்று சொல்லுகிறார்கள்.

கர்த்தர் எல்லா வார்த்தைகளையும் சீர்தூக்கிப் பார்த்தால் யாரும் தப்பமுடியாது. (மத் 12:36) துர்மார்க்கருடைய ஜெபம் கர்த்தருக்கு அருவருப்பானது என்று சாலொமோன் கூறுகிறார். (நீதி 15:8). வனாந்தரத்திலே இஸ்ரவேல் புத்திரருடைய இந்த ஜெபத்திற்குக் கர்த்தர் அவர்கள் கேட்டுக் கொண்ட பிரகாரமாகவே பதில் கொடுத்துவிடுகிறார். நாற்பது வருஷக்காலத்தில் யோசுவாவையும், காலேபையும் தவிர பழைய சந்ததியார் எல்லோரும் வனாந்தரத்தில் செத்துப்போகிறார்கள். மரணம் உடனடியாக ஆரம்பித்துவிடுகிறது. (எண் 14:23-37).

எகிப்து தேசத்தில் செத்துப்போனால் நலமாயிருக்கும் என்று இஸ்ரவேல் புத்திரர் சொல்லுகிறார்கள். அவர்கள் எகிப்து தேசத்தை விட்டு புறப்பட்டு வந்து பல மாதங்களாயிற்று. இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் இதுவரையிலும் பிரயாணம் செய்தார்கள். கர்த்தருடைய பிரசன்னம் அவர்களோடு கூடயிருந்தது. கர்த்தர் அவர்களை இதுவரையிலும் போஷித்து, பராமரித்து பாதுகாத்து வந்திருக்கிறார். அவர்கள் கர்த்தருடைய நன்மைகளை அனுபவித்து வந்திருக்கிறார்கள்.

ஆனால் இப்போதோ, எகிப்து தேசத்திலே செத்துப்போனால் நலமாயிருக்கும் என்று சொல்லுகிறார்கள். வனாந்தரத்திலே செத்துப்போவதற்கு பதிலாக, எகிப்து தேசத்திலே செத்துப்போவதை விரும்புகிறார்கள். "எகிப்துதேசத்திலே செத்துப்போனோமானால் நலமாயிருக்கும்; இந்த வனாந்தரத்திலே நாங்கள் செத்தாலும் நலம்" (எண் 14:2) என்று இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக சொல்லுகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பண்ணி அழைத்து வந்திருக்கிறார். அவர்களை கானான் தேசத்திற்கு வழிநடத்திக்கொண்டு போகிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு கானான் தேசத்தை சுதந்தர தேசமாக கொடுப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ, "நாங்கள் பட்டயத்தால் மடியும்படிக்கும், எங்கள் பெண்ஜாதிகளும் பிள்ளைகளும் கொள்ளையாகும்படிக்கும், கர்த்தர் எங்களை இந்த தேசத்துக்குக் கொண்டு வந்தது என்ன?" (எண் 14:3) என்று கேட்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருடைய பெண்ஜாதிகளும், பிள்ளைகளும் ஒரு தப்பிதமும் செய்யவில்லை. கர்த்தர் அவர்களை பாதுகாத்து பராமரிக்கிறார். ஆனால் அவர்கள் கொள்ளையாவார்கள் என்று இஸ்ரவேல் புத்திரர் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்திற்குப்போகவேண்டியவர்கள். ஆனால் அவர்கள் இப்போது எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போகவேண்டும் என்று விரும்புகிறார்கள். "எகிப்துக்குத் திரும்பிப்போகிறதே எங்களுக்கு உத்தமம் அல்லவோ" என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு மோசே தலைவராயிருக்கிறார். மோசே அவர்களை கானான் தேசத்திற்கு நடத்திக்கொண்டு போகிறார். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தார் மோசேயின் ஆளுகையை ஏற்றுக்கொள்ள வில்லை. அவருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து கானான் தேசத்திற்குப்போக விரும்பவில்லை. அவர்கள் மோசேக்கு பதிலாக ஒரு புதிய தலைவனை தெரிந்து கொள்ளவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர், "நாம் ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு எகிப்துக்கு திரும்பிப்போவோம் வாருங்கள்" (எண் 14:4) என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொள்கிறார்கள். எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போவதே தங்களுக்கு நலமாயிருக்கும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அவர்கள் எகிப்தின் அடிமைத்தனத்தை அனுபவித்தவர்கள். எகிப்தியர்கள் மூலமாக பாடுகளையும், வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவித்தவர்கள். ஆனால் அவர்களுக்கு கானான் தேசத்தைவிட எகிப்து தேசம் நலமான தேசமாய்த் தெரிகிறது.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து வனாந்தரத்தின் வழியாக, கானான் தேசத்தின் எல்லைப்பகுதிக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இப்போது இதே வனாந்தரத்தின் வழியாக, இங்கே இருந்து எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போகவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இது அவர்களுடைய மதியீனம்.

கானான் தேசம் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சுதந்தரமாகக் கொடுத்திருக்கிற தேசம். அவர்களுடைய பங்குவீதம் கானான் தேசத்திலே இருக்கிறது. ஆனால் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசம் பிடிக்கவில்லை. அவர்களுக்கு எகிப்து தேசமே பிடித்திருக்கிறது. எகிப்து தேசம் இஸ்ரவேல் புத்திரருடைய சுதந்தர தேசமல்ல. அங்கே அவர்களுக்கு பங்குவீதம் இல்லை. ஆனாலும் அவர்கள் எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போகவிரும்புகிறார்கள்.

கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் ஸ்தலத்தில் நாம் திருப்தியாயிருக்கவேண்டும். கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஊழியத்தை உண்மையோடு செய்யவேண்டும். கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற ஆசீர்வாதங்களில் நாம் திருப்தியடையவில்லையென்றால், நமக்கு ஒருபோதும் திருப்தி ஏற்படாது. கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் ஸ்தானத்தில் திருப்தியடையவேண்டும். அந்த ஸ்தானத்தில் நாம் திருப்தியடையாமல், இந்தப் பிரபஞ்சத்தில் எந்த இடத்திற்கு சுற்றி அலைந்தாலும், அங்கே நமக்கு திருப்தி ஏற்படப்போவதில்லை.

கர்த்தர் நம்மை எந்த சூழ்நிலையில் வைத்திருந்தாலும், நாம் அந்த சூழ்நிலையில் கர்த்தருக்குள் சந்தோஷமாயும், திருப்தியாயும் இருக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரர், "எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போவது நலமாயிருக்கும்" என்று சொல்லுவதற்கு பதிலாக, "கர்த்தர் தங்களை எந்த ஸ்தலத்தில் வைத்திருக்கிறாரோ அந்த ஸ்தலத்திலே திருப்தியாயிருப்பது தங்களுக்கு நலமாயிருக்கும்" என்று சொல்லவேண்டும்.

துர்ச்செய்தியினால் ஏற்பட்ட விளைவுகளின் விவரம் வருமாறு :

1. சபையார் எல்லாரும் கூக்குரலிட்டுப் புலம்பினார்கள்; ஜனங்கள் அன்று இராமுழுதும் அழுதுகொண்டிருந்தார்கள். (எண் 14:1)

2. இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். (எண் 14:2).

3. எகிப்துதேசத்திலே செத்துப் போனோமானால் நலமாயிருக்கும்; இந்த வனாந்தரத்திலே நாங்கள் செத்தாலும் நலம் என்று சபையாரெல்லாரும் முறுமுறுத்தார்கள்.

4. கர்த்தர் தங்களை ஏமாற்றிவிட்டதாக அவரைத் தூஷித்தார்கள். (எண் 14:3).

5. நாம் ஒரு தலைவனை ஏற்படுத்திக் கொண்டு எகிப்துக்கு திரும்பிப் போவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள். (எண் 14:3-4,9).

6. இவர்களுடைய துர்ச்செய்தியினால் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் பயமும், கோழைத்தனமும் உண்டாயிற்று. (எண் 14:3,9).

7. இந்தத் துர்ச்செய்தியின்நிமித்தமாக இது வரையிலும் அவர்கள் நம்பிக்கை வைத்திருந்த மோசேக்கும், ஆரோனுக்கும் எதிராகக் கலகம் பண்ணினார்கள். (எண் 14:10).

தங்களுடைய அவிசுவாசமான வார்த்தைகளினால் இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்குத் தாங்களே அழிவைத் தேடிக்கொள்கிறார்கள். அவர்களை அழிவிலிருந்து தப்பிக்க வைப்பதற்காக, அவர்களுடைய சிநேகிதர்கள் முயற்சி பண்ணுகிறார்கள். ஆனால் அந்த முயற்சி வீணாய்ப்போயிற்று. இஸ்ரவேல் புத்திரர் இன்னும் கலககுணமுள்ளவர்களாகவே இருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர், "நாம் ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு எகிப்துக்கு திரும்பிப்போவோம் வாருங்கள்" என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொள்கிறார்கள். அப்பொழுது மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரின் சபையாராகிய எல்லாக் கூட்டத்தாருக்கு முன்பாகவும் முகங்குப்புற விழுகிறார்கள் (எண் 13:5).

இதற்கு முன்பாக ஆரோனும், மோசேயும் இஸ்ரவேல் புத்திரரைக் கர்த்தருக்குக் கீழ்ப்படிய செய்ய முயற்சி மேற்கொண்டார்கள் (எண் 13:30; உபா 1:29). ஆனால் அவர்கள் முயற்சி தோல்வியுற்றது. வேறுவழியில்லாமல், இப்போது கர்த்தருடைய சமுகத்தில் முகங்குப்புற விழுகிறார்கள்.

கலகக்காரரின் எண்ணிக்கை ஏராளமாயிருக்கிறது. அவர்களுடைய சத்தமும் அதிகமாயிருக்கிறது. அவர்கள் மத்தியிலே மோசேயும் ஆரோனும் பேசுகிறார்கள். ஆனால் திரளான ஜனங்களுக்கு மத்தியில் இவர்களுடைய பேச்சு கேட்கவில்லை. இவர்களுடைய பேச்சைக் கேட்க கலகக்காரர் யாரும் ஆயத்தமாயில்லை.

மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் பேசுவதற்கு பதிலாக வேறொரு உபாயத்தைக் கையாளுகிறார்கள். அவர்கள் இருவரும் இஸ்ரவேல் புத்திரரின் சபையாராகிய எல்லாக் கூட்டத்தாருக்கு முன்பாகவும் முகங்குப்புற விழுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணிக்கொண்டிருக்கும்போது, மோசேயும் ஆரோனும் கர்த்தருடைய சமுகத்திலே தங்களை தாழ்த்தி ஒப்புக்கொடுத்து ஜெபம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கு விரோதமாகப் பேசுகிறார்கள். தங்களுக்கு வேறொரு தலைவனை ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமென்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொள்கிறார்கள். இதனால் மோசேயின் ஆவியும், ஆரோனின் ஆவியும் கலக்கமடைந்திருக்கிறது. அவர்களுடைய மனதிலே குழப்பமுண்டாயிற்று.

இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்திற்குப்போக மனதில்லாமல், எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போவோம் என்று சொல்லுகிறார்கள். அதைக் கேட்டபோது மோசேக்கு அதிர்ச்சி உண்டாயிற்று. அவர்கள் கர்த்தருடைய கிருபையையும், இரக்கத்தையும் விட்டு விலகிப்போவதைப் பார்த்து, மோசேயும் ஆரோனும் அதிர்ச்சியடைந்தவர்களாக, தரையிலே முகங்குப்புற விழுகிறார்கள்.

இந்த சம்பவம் உபாகமம் புஸ்தகத்தில் மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. மோசே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொன்ன வார்த்தைகள், அந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

"அப்பொழுது நான் உங்களை நோக்கி: நீங்கள் கலங்காமலும் அவர்களுக்குப் பயப்படாமலும் இருங்கள். உங்களுக்கு முன் செல்லும் உங்கள் தேவனாகிய கர்த்தர் தாமே எகிப்தில் உங்களோடிருந்து, உங்கள் கண்களுக்கு முன்பாகச் செய்ததெல்லாவற்றைப்போலவும், வனாந்தரத்தில் செய்துவந்ததுபோலவும், உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்" (உபா 1:29,30) என்று சொன்னேன் என்று மோசே சொல்லுகிறார்.

மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரின் சபையாராகிய எல்லா கூட்டத்தாருக்கும் முன்பாக முகங்குப்புற விழுந்து கிடக்கும்போது, காலேபும் யோசுவாவும் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் பேசுவதற்கு முயற்சி செய்கிறார்கள். அவர்கள் இருவரும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்கிறார்கள். ஜனங்களுடைய பாவத்தினிமித்தமாக அவர்கள் இருவரும் மிகுந்த துக்கப்பட்டு தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்கிறார்கள்.

தேவனுடைய கோபம் இஸ்ரவேல் புத்திரர்மீது வந்திருக்கிறது. கர்த்தருடைய கோபம் இப்போதே வெளிப்படப்போவதை யோசுவாவும் காலேபும் காண்கிறார்கள். அந்த வேதனையை அவர்களால் தாங்க முடியவில்லை. அவர்களுடைய வேதனை அதிகரிப்பதினால், அவர்கள் இருவரும் தங்கள் வஸ்திரங்களை கிழித்துக்கொள்கிறார்கள்.

தேசத்தைச் சுற்றிப்பார்த்தவர்களில் நூனின்குமாரனாகிய யோசுவாவும், எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும், தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, இஸ்ரவேல் புத்திரரின் சமஸ்த சபையையும் நோக்கி பேசுகிறார்கள். யோசுவாவும் காலேபும் அதிகாரத்தோடு பேசுகிறார்கள்.

கானான் தேசத்தை சுற்றிப்பார்க்கப்போன பிரபுக்களோடு காலேபும் யோசுவாவும் போயிருந்தார்கள். அது பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. அது நல்ல தேசம். அந்த தேசத்தைச் சுதந்தரிக்கும்போது தங்களுக்கு அநேக நன்மைகள் கிடைக்கும் என்று காலேபும் யோசுவாவும் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் சொல்லுகிறார்கள்.

அவர்கள் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நாங்கள் போய்ச் சுற்றிப்பார்த்து சோதித்த தேசம் மகா நல்ல தேசம். கர்த்தர் நம்மேல் பிரியமாயிருந்தால், அந்தத் தேசத்திலே நம்மைக் கொண்டுபோய், பாலும் தேனும் ஓடுகிற அந்தத் தேசத்தை நமக்குக் கொடுப்பார்" (எண் 14:7,8) என்று சொல்லுகிறார்கள்.

கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெறுவதன் இரகசியம் இதுதான். கர்த்தரிடத்தில் நாம் பிரியமாயிருந்தால் அவரும் நம்மிடத்தில் பிரியமாயிருப்பார். தமக்குப் பிரியமானவனைக் கர்த்தர் ஆசீர்வதிப்பார்.

கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்கள் இராட்சதராகயிருந்தாலும், அந்த தேசத்தின் ஜனங்களுக்கு இஸ்ரவேல் ஜனத்தார் பயப்படவேண்டிய அவசியமில்லை. யோசுவாவும் காலேபும் கர்த்தருக்கு முக்கியத்துவம் கொடுத்து பேசுகிறார்கள்.

யோசுவாவும் காலேபும், இஸ்ரவேல் ஜனத்தாரை நோக்கி, "கர்த்தருக்கு விரோதமாகமாத்திரம் கலகம்பண்ணாதிருங்கள்; அந்த தேசத்தின் ஜனங்களுக்கு நீங்கள் பயப்படவேண்டியதில்லை; அவர்கள் நமக்கு இரையாவார்கள்; அவர்களைக் காத்த நிழல் அவர்களைவிட்டு விலகிப்போயிற்று; கர்த்தர் நம்மோடே இருக்கிறார்; அவர்களுக்குப் பயப்படவேண்டியதில்லை" (எண் 14:9) என்று சொல்லுகிறார்கள்.

"அவர்கள் நமக்கு இரையாவார்கள்" என்பது எபிரெயரின் வழக்குச்சொல்லாகும். அவர்களை முறியடித்துவிடலாம் என்பது இதன் பொருள். அவர்களைக் காத்த நிழல் அவர்களைவிட்டு விலகிப்போயிற்று. நிழல் இல்லையென்றால், அங்கு வெயில் அதிகமாக இருக்கும். வெயிலில் மன்னா உருகிப்போகும். (யாத் 16:21). அதுபோன்று, கானான் தேசத்தாரும், காணாமற்போய்விடுவார்கள். (யாத் 15:15; யோசு 2:9,11; ஏசா 13:7; ஏசா 19:1; எசே 21:7).

கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்கள் அரணிப்பான பட்டணங்களில் இருந்தாலும், அவர்களுக்கு மெய்யான பாதுகாப்பு எதுவுமில்லை. அவர்களைக் காத்த நிழல் அவர்களைவிட்டு விலகிப்போயிற்று. அவர்களுடைய அரண்கள் அவர்களுக்கு பாதுகாப்பை தராது.

மற்ற வேவுகாரர்கள் கானான் தேசத்தாரின் உருவத்தையும், பலத்தையும் பார்த்தார்கள். ஆனால் யோசுவாவும் காலேபுமோ, கானானியரின் துன்மார்க்கத்தைப் பார்க்கிறார்கள். அவர்களுடைய பாவங்களினிமித்தமாகவும், அக்கிரமத்தினிமித்தமாகவும், அவர்களைக் காத்த நிழல் அவர்களைவிட்டு விலகிப்போயிற்று என்று, யோசுவாவும் காலேபும் சொல்லுகிறார்கள். கர்த்தருடைய பாதுகாப்பு பாவிகளுக்கு கிடைக்காது.

கானானியர் கர்த்தருக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய அக்கிரமங்களினிமித்தமாக, கர்த்தர் அவர்களை அழித்துப்போட சித்தமுள்ளவராயிருக்கிறார். கானானியர் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுவதுபோல, இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணக்கூடாது. கலகம்பண்ணினால் கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கும் சத்துருவாயிருப்பார். ஆகையினால், "கர்த்தருக்கு விரோதமாக மாத்திரம் கலகம்பண்ணாதிருங்கள்" என்று யோசுவாவும் காலேபும் இஸ்ரவேல் புத்திரிடத்தில் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரோ, யோசுவாவின் வார்த்தைக்கும், காலேபின் வார்த்தைக்கும் செவிகொடுக்கவில்லை. இஸ்ரவேல் புத்திரருடைய கோபம் காலேபின்மீதும் யோசுவாவின்மீதும் திரும்புகிறது. அவர்களுடைய கோபம் அதிகரிக்கிறது. இஸ்ரவேல் சபையார் எல்லாருமாய்ச் சேர்ந்து, காலேபின்மேலும் யோசுவாவின் மேலும் கல்லெறியவேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

தாங்கள் இருவரும் கர்த்தருடைய சார்பாக பேசுவதை காலேபும் யோசுவாவும் அறிந்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரைக் கனம்பண்ணுகிறார்கள். கர்த்தர் தங்கள் பட்சத்திலிருப்பார் என்றும், அவர் தங்களை பாதுகாத்துக்கொள்வார் என்றும் காலேபும் யோசுவாவும் நம்பிக்கையோடிருக்கிறார்கள். அவர்களுடைய நம்பிக்கை வீணாய்ப்போகவில்லை. கர்த்தரை நம்புகிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை. அவர்கள் கர்த்தரை நம்பினதினால் ஏமாற்றமடையவில்லை.

அவர்கள்மேல் கல்லெறிய வேண்டுமென்று இஸ்ரவேல் சபையார் எல்லாரும் சொன்னபோது, உடனே கர்த்தருடைய மகிமை ஆசரிப்புக்கூடாரத்தில் இஸ்ரவேல் புத்திரர் எல்லாருக்கும் முன்பாகக் காணப்படுகிறது (எண் 14:10). இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய மகிமையைக் காண்கிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள்மேல் கல்லெறிய வேண்டுமென்று சொன்னவர்களுக்கு குழப்பமும், திகிலும், பயமும் உண்டாயிற்று.

இஸ்ரவேல் புத்திரரின் கலகம் உச்சநிலையை அடைகிறது. கர்த்தருடைய மகிமை ஆசரிப்புக் கூடாரத்தில் உடனடியாகக் காணப்படாமல் போயிருக்குமானால், அவர்கள் தங்கள் தலைவர்களைக் கல்லெறிந்து கொன்று போட்டிருப்பார்கள்.

கர்த்தருடைய மகிமை ஆசரிப்புக்கூடாரத்தில் காணப்படுகிறது. கர்த்தர் மோசேயை ஆசரிப்புக்கூடாரத்திற்கு அழைக்கிறார் என்பதற்கு கர்த்தருடைய மகிமை காணப்பட்டது அடையாளமாகும். மோசே உடனே ஆசரிப்புக்கூடாரத்திற்கு புறப்பட்டுப்போகிறார். கர்த்தர் மோசேயோடு பேசுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "எது வரைக்கும் இந்த ஜனங்கள் எனக்குக் கோபம் உண்டாக்குவார்கள்? தங்களுக்குள்ளே நான் காட்டின சகல அடையாளங்களையும் அவர்கள் கண்டும், எதுவரைக்கும் என்னை விசுவாசியாதிருப்பார்கள்? நான் அவர்களைக் கொள்ளைநோயினால் வாதித்து, சுதந்தரத்துக்கும் புறம்பாக்கிப்போட்டு, அவர்களைப்பார்க்கிலும் உன்னைப் பெரிதும் பலத்ததுமான ஜாதியாக்குவேன்" (எண் 14:11,12) என்று சொல்லுகிறார்.

தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவாரா என்று ஜனங்கள் இன்றும் அவிசுவாசத்தோடு கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களும், அவருடைய அற்புதங்களையும், அடையாளங்களையும் தங்கள் கண்களால் கண்டவர்கள். ஆயினும் அவர்களிடத்திலும் அவிசுவாசமும், இருதயக் கடினமும் காணப்பட்டது (மாற்கு 16:14; லூக்கா 24:25).

"அவர்களைப்பார்க்கிலும் உன்னைப் பெரிதும் பலத்ததுமான ஜாதியாக்குவேன்" என்று கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். யாத் 32:10-14 ஆகிய வசனங்களில் கர்த்தர் செய்ததுபோல, தேவன் இஸ்ரவேல் தேசம் முழுவதையும் அழிக்கப்போவதாக எச்சரிக்கிறார். இஸ்ரவேலரின் புதிய ஜாதிக்கு மோசே முற்பிதாவாக ஆவதற்கு வாய்ப்பு வருகிறது. ஆனாலும் மோசே தன் ஜனங்கள்மீது வைத்திருக்கும் அன்பினாலும், பிரியத்தினாலும் தேவன் தனக்குக் கொடுக்க விரும்பும் சிலாக்கியத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. தேவனுடைய நாமம் தூஷிக்கப்படக்கூடாது என்பதில் மோசே அக்கறையோடு இருக்கிறார் (எண் 14:12-20).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றி மோசேயினிடத்தில் முறையிடுகிறார். கர்த்தருடைய வார்த்தைகள் நீதியானது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றி மோசேயினிடத்தில் இரண்டு காரியங்களை சொல்லுகிறார். அவையாவன : 1. இஸ்ரவேல் புத்திரரின் பாவம். 2. இஸ்ரவேல் புத்திரர் பாவத்தில் தொடர்ந்து நிலைத்திருப்பது.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவத்தினால் கர்த்தருக்கு கோபமுண்டாக்குகிறார்கள். அவர்கள் கர்த்தரை மறுதலித்துவிட்டு, அவரை விட்டு விலகிப்போய்விடுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தாரின் அவிசுவாசமே, வனாந்தரத்தில் கர்த்தருக்கு அவர்கள்மீது கோபத்தை உண்டுபண்ணுகிறது. "எது வரைக்கும் இந்த ஜனங்கள் எனக்கு கோபமுண்டாக்குவார்கள்" என்றும், "எது வரைக்கும் என்னை விசுவாசியாதிருப்பார்கள்" என்றும் கர்த்தர் கேட்கிறார்.

"வனாந்தரத்திலே கோபமூட்டின போதும், சோதனைநாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்" (எபி 3:8).

இஸ்ரவேல் புத்திரர் பாவம் செய்கிறார்கள். அவர்கள் தங்கள் பாவத்தை விட்டு விலகிவராமல், பாவத்திலே தொடர்ந்து ஜீவிக்கிறார்கள். "அவர்கள் எதுவரைக்கும் பாவம் செய்வார்கள்" என்று கர்த்தர் கேட்கிறார். கர்த்தர் அவர்களுக்குள்ளே ஏராளமான அடையாளங்களைக் காண்பித்திருக்கிறார். அவர்களும் அந்த அடையாளங்களை தங்கள் கண்களால் கண்டிருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் கர்த்தரை விசுவாசியாதிருக்கிறார்கள்.

கர்த்தர் நமக்காக அதிகமான காரியங்களை செய்யும்போது, நாம் கர்த்தர்மீது அதிகமாய் நம்பிக்கை வைக்கவேண்டும். கர்த்தர் நமக்கு அதிகமான நன்மைகளை செய்திருந்தும், நாம் கர்த்தரை விசுவாசியாதிருப்போமென்றால், கர்த்தருடைய கோபம் நமக்கு விரோதமாக அதிகமாயிருக்கும்.

இஸ்ரவேல் புத்திரருடைய அவிசுவாசத்தினிமித்தமாகவும், அவர்களுடைய கலகக்குணத்தினிமித்தமாகவும் கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய நீதியான தண்டனையைக் கொடுக்கிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நான் அவர்களைக் கொள்ளைநோயினால் வாதித்து, சுதந்தரத்துக்கும் புறம்பாக்கிப்போட்டு, அவர்களைப்பார்க்கிலும் உன்னைப் பெரிதும் பலத்ததுமான ஜாதியாக்குவேன்" (எண் 14:12) என்று சொல்லுகிறார்.

அவர்கள் வனாந்தரத்தில் செத்துப்போவோம் என்று சொன்னார்கள். கர்த்தர் அவர்களை செத்துப்போக அனுமதிக்கிறார். அவர்களுடைய வேரோ அல்லது கிளையோ மீதமாயிராதபடிக்கு, அவர்களை முற்றிலுமாய் அழித்துப்போட கர்த்தர் சித்தமுள்ளவராயிருக்கிறார். கர்த்தர் அவர்களை கொள்ளைநோயினால் வாதித்து, அவர்களுக்கு பூரண முடிவை உண்டுபண்ணப்போகிறார். கர்த்தருடைய வாதை அவர்கள்மீது வரும்போது, இப்போது மீதியாயிருப்பவையெல்லாம் முற்றிலுமாய் அழிந்துபோகும்.

கர்த்தர் மோசேயினிடத்தில் இஸ்ரவேலுக்கு விரோதமாகப் பேசுகிறார். கர்த்தருடைய வார்த்தையில் அவருடைய கோபம் வெளிப்படுகிறது. மோசே கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசுகிறார். "இந்த ஜனங்களின் அக்கிரமத்தை மன்னித்தருளும்" (எண் 14:19) என்பதே மோசேயின் சுருக்கமான ஜெபமாகும்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவத்தினிமித்தமாக அழிவுக்கு பாத்திரமாகயிருக்கிறார்கள். அவர்கள்மீது நீதியான நியாயத்தீர்ப்பும், அவர்களுக்கு நீதியான தண்டனையும் கொடுக்கப்படவேண்டும். அவர்கள் தண்டிக்கப்படுவதற்கு பாத்திரராயிருக்கிறார்கள். ஆனாலும் கர்த்தர் தமது கிருபையினால், இஸ்ரவேல் புத்திரரின் அக்கிரமத்தை மன்னித்தருளவேண்டுமென்று, மோசே அவர்களுக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார். தம்மை சிலுவையில் அறைந்தவர்களுக்காக கிறிஸ்துவானவர் பிதாவினிடத்தில் பரிந்து பேசினார். "பிதாவே, அவர்களுக்கு மன்னியும்" என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தம்மை சிலுவையில் அறைந்தவர்களுக்காக பிதாவினிடத்தில் ஜெபித்தார்.

மோசே கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசும்போது, அவர் பல விண்ணப்பங்களை ஏறெடுக்கிறார். கர்த்தர் தம்முடைய கிருபையினுடைய மகத்துவத்தின்படி, இஸ்ரவேல் புத்திரர்மீது கிருபையும் இரக்கமும் காண்பிக்கவேண்டும் என்று மோசே இஸ்ரவேல் ஜனத்தாருக்காக விண்ணப்பம்பண்ணுகிறார்.

மோசே கர்த்தரை நோக்கி, "எகிப்தியர் இதைக் கேட்பார்கள், அவர்கள் நடுவிலிருந்து உம்முடைய வல்லமையினாலே இந்த ஜனங்களைக் கொண்டுவந்தீரே" (எண் 14:13) என்று மோசே கர்த்தருடைய வல்லமையை உயர்த்திப்பேசுகிறார்.

இதற்கு முன்பு இதுபோன்று ஒரு சூழ்நிலை வந்தபோது, மோசே எப்படி ஜெபித்தாரோ அப்படியே இப்போதும் ஜெபிக்கிறார். மற்ற தேசங்களுக்கு முன்பாக தேவன் இஸ்ரவேல் தேசத்திற்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுமாறு மோசே விண்ணப்பம்பண்ணுகிறார். (எண் 14:13-20 =யாத் 32:10-14). வாக்குத்தத்தம் நிறைவேறவில்லையென்றால், மற்ற தேசத்தார் கர்த்தரைத் தூஷிப்பார்களே என்று தேவனிடத்தில் கெஞ்சிப் பிரார்த்தனை பண்ணுகிறார்.

தேவனுடைய வாக்குத்தத்தங்களும், ஆசீர்வாதங்களும், உடன்படிக்கைகளையும், நிறைவேற வேண்டுமானால் அவர் நியமித்து வைத்திருக்கும் நிபந்தனைகளை மனுஷன் நிறைவேற்ற வேண்டும். தமக்குக் கீழ்ப்படிபவருக்கு ஆசீர்வாதத்தையும், கீழ்ப்படியாதோருக்குச் சாபத்தையும் கர்த்தர் தமக்கு முன் வைத்திருக்கிறார். மற்றவர்கள் தம்மைப் பற்றி எப்படி நினைப்பார்கள் என்பதில் கர்த்தர் கவனம் செலுத்துவதற்குப் பதிலாகத், தாம் பட்சபாதம் இல்லாத நியாயாதிபதி என்பதை நிரூபிக்க விரும்புகிறார்.

புறஜாதியார் கர்த்தரைப்பற்றியும், கர்த்தருடைய ஜனத்தைப்பற்றியும் கேட்டிருக்கும் காரியங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களின் நடுவில் இருக்கிறார்.
2. கர்த்தராகிய நீர்முகமுகமாய்த் தரிசனமாகிறீர்.
3. உம்முடைய மேகம் இவர்கள்மேல் நிற்கிறது.
4. பகலில் மேகத்தூணிலும், இரவில் அக்கினித்தூணிலும், நீர் இவர்களுக்கு முன் செல்லுகிறீர்.

புறஜாதியார் கர்த்தருடைய மகிமையைக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்தாருக்குக் கர்த்தர் நன்மை செய்ய விரும்புகிறார் என்பதும் புறஜாதியாருக்குத் தெரிந்திருக்கிறது. ஆகையினால், புறஜாதியார் இஸ்ரவேல் தேசத்தாரோடு யுத்தம் பண்ண விரும்புவதில்லை (எண் 14:9).

கர்த்தருடைய மகிமையைப்பற்றி புறஜாதி ஜனங்களும் கேள்விப்பட்டிருக்கிறார்கள். கர்த்தருடைய நாமம் சகல ஜாதியார் மத்தியிலும் உயர்ந்த நாமமாயிருக்கிறது.

மோசே கர்த்தரை நோக்கி, "கர்த்தராகிய நீர் இந்த ஜனங்களின் நடுவே இருக்கிறதையும், கர்த்தராகிய நீர்முகமுகமாய்த் தரிசனமாகிறதையும், உம்முடைய மேகம் இவர்கள்மேல் நிற்கிறதையும், பகலில் மேகத்தூணிலும், இரவில் அக்கினித்தூணிலும், நீர் இவர்களுக்கு முன் செல்லுகிறதையும் கேட்டிருக்கிறார்கள்; இந்த தேசத்தின் குடிகளுக்கும் சொல்லுவார்கள்" (எண் 14:14) என்று சொல்லுகிறார்.

கர்த்தரோ இப்போது இஸ்ரவேல் புத்திரர்மீது கோபமாயிருக்கிறார். அவர்களை கொள்ளை நோயினால் வாதித்து, அவர்களை சுதந்தரத்திற்கு புறம்பாக்கிப்போட ஆயத்தமாயிருக்கிறார். இந்த சூழ்நிலையில் மோசே கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசுகிறார்.

மோசே கர்த்தரை நோக்கி, "ஒரே மனிதனைக் கொல்லுகிறதுபோல இந்த ஜனங்களையெல்லாம் நீர் கொல்வீரானால், அப்பொழுது உம்முடைய கீர்த்தியைக் கேட்டிருக்கும் புறஜாதியார்: கர்த்தர் அந்த ஜனங்களுக்குக் கொடுப்போம் என்று ஆணையிட்டிருந்த தேசத்திலே அவர்களைக் கொண்டுபோய் விடக்கூடாதே போனபடியினால், அவர்களை வனாந்தரத்திலே கொன்றுபோட்டார் என்பார்களே" (எண் 14:15,16) என்று சொல்லி பரிந்து பேசுகிறார்.

புறஜாதியார் கர்த்தருடைய கீர்த்தியைக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய ஜனங்களை இதுபோல கொன்றுபோட்டால், புறஜாதியார் மத்தியில் கர்த்தரைப் பற்றிய மதிப்பும், கர்த்தருடைய ஜனங்களைப் பற்றிய பயமும் குறைந்து போகும். (எண் 14:13-20). கர்த்தர் மோசேயின் ஜெபத்தைக் கேட்டு, இஸ்ரவேல் புத்திரரை ஒரே சமயத்தில் அழித்துப் போடுவதை நிறுத்திக் கொள்கிறார். ஆயினும், கலகம் பண்ணிய இஸ்ரவேல் புத்திரரை நாற்பது வருஷகாலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக அழித்துப்போட வேண்டும் என்பது தேவனுடைய திட்டம். (எண் 14:23-35).

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மையான காரியங்களையெல்லாம் மறந்துவிட்டு, அவர்கள் அவிசுவாசமான வார்த்தைகளைப் பேசுகிறார்கள். கலகக்காரர்களையெல்லாம் கொள்ளைநோயினால் வாதிக்கவேண்டும் என்பது தேவனுடைய விருப்பமாயிருக்கிறது. அவர்களால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு விரோதமாக கலகம்பண்ண முடியாது. அவர்கள்மீது கொள்ளைநோய் வரும்போது அவர்கள் எல்லோரும் மொத்தமாய் அழிந்துபோவார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் அழிந்துபோவதை எகிப்து தேசத்திலுள்ள ஜனங்களும் கேள்விப்படுவார்கள். காத் ஊரிலுள்ள ஜனங்கள், இஸ்ரவேல் ஜனங்கள் அழிந்துபோனதைப்பற்றி சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருப்பார்கள். ஆஸ்கலோன் பட்டணத்து வீதிகளிலே இஸ்ரவேல் புத்திரரின் அழிவைப்பற்றி கதை கதையாகப் பேசிக்கொண்டிருப்பார்கள். கர்த்தருடைய ஜனம் அழிந்துபோவதைப் பார்க்கும்போது புறஜாதி ஜனங்களுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாகும். புறஜாதியார் தங்கள் இருதயத்தில் பெருமைப்படுவார்கள்.

புறஜாதியாருக்கு இஸ்ரவேல் புத்திரரின் பாவமும் தெரியாது. அவர்களுக்கு கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பும் புரியாது. அவர்கள் கர்த்தரைப்பற்றி தப்பிதமாய்ப் புரிந்துகொள்வார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் அழிந்துபோவதைப் பார்க்கும்போது, கர்த்தருடைய வல்லமை குறைந்துபோயிற்று என்று ஏளனமாய்ப் பேசுவார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசும்போது, "என் ஆண்டவருடைய வல்லமை பெரிதாய் விளங்குவதாக" *(எண் 14:18)* என்று சொல்லுகிறார். கர்த்தருடைய நாமம் ஒரேபிலே மகிமையுள்ளதாக அறிவிக்கப்படவேண்டும். கர்த்தரே தம்முடைய நாமத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

"கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்துபோகிறபோது, அவர்: கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர் என்று கூறினார்" *(யாத் 34:6,7)*.

மோசே கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசும்போது, அவருடைய நாமத்தை தன்னுடைய விண்ணப்பத்தில் சொல்லி ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர் தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தவேண்டும் என்பது மோசேயின் விண்ணப்பமாயிருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை தண்டித்து திருத்துவதற்கு விரோதமாக மோசே ஒன்றும் சொல்லவில்லை. மோசே கர்த்தருடைய தண்டனைக்கு விரோதமாக ஜெபம்பண்ணவுமில்லை. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை கொள்ளை நோயினால் வாதித்து, அவர்களை சுதந்தரத்திற்கு புறம்பாக்கிப்போடுவதாக சொன்னார் *(எண் 14:12)*.

கர்த்தர் தம்முடைய கிருபையினால் இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களையும், அக்கிரமங்களையும் மன்னித்தருளவேண்டும் என்றும், அவர்களை தம்முடைய சுதந்தரத்திற்கு புறம்பாக்கிப்போடாமல், தம்முடைய ஜனமாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும், மோசே கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

மோசே கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்துபேசும்போது, "ஆகையால் கர்த்தர் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர் என்றும், அக்கிரமத்தையும் மீறுதலையும் மன்னிக்கிறவர் என்றும், குற்றமுள்ளவர்களைக் குற்றமற்றவர்களாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர் என்றும், நீர் சொல்லியிருக்கிறபடியே, என் ஆண்டவருடைய வல்லமை பெரிதாய் விளங்குவதாக" *(எண் 14:17,18)* என்று சொல்லி ஜெபம்பண்ணுகிறார்.

பாவம் செய்தவர்கள் தங்கள் பாவத்திற்காக மனந்திருந்தி, தேவனிடத்தில் பாவ அறிக்கை செய்து, பாவநிவாரண பலி செலுத்தும்போது கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறார். அதேவேளையில், ஜனங்கள் மனந்திருந்தாமல், பாவத்தில் தொடர்ந்து ஜீவித்து, தேவனுக்கு எதிராகத் தொடர்ந்து கலகம் பண்ணும்போது, கர்த்தர் நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையும் உள்ளவராக இருந்தபோதிலும், அவர் நீதிபரராக இருக்கிறபடியினால், பாவிகளை ஆசீர்வதிக்கமாட்டார். *(1யோவான் 1:9)*.

"எனக்கு விரோதமாய்ப் பாவம் செய்தவன் எவனோ, அவன் பேரை என் புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடுவேன்" *(யாத் 32:33)* என்று கர்த்தர் ஏற்கெனவே கூறியிருக்கிறார். குற்றமுள்ளவன் தன் குற்றத்தைத் தேவனிடத்தில் அறிக்கை செய்து, பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவன் மனந்திருந்தவில்லையென்றால் அவனுக்கு மன்னிப்பில்லை. கர்த்தர் அவனைக் குற்றமற்றவனாகப் பாவிக்கமாட்டார். அவனுடைய பாவத்திற்குத் தகுந்தபடி கர்த்தர் அவனைத் தண்டித்துப்போடுவார்.

மோசே கர்த்தருடைய அன்புக்காகவும், கிருபைக்காகவும், வாக்குத்தத்தங்களுக்காகவும் ஜெபிக்கிறார். (எண் 14:17-20). தேவனுடைய குணாதிசயத்தைக் கூறி நாம் ஜெபம் பண்ணும்போது, அந்த ஜெபத்திற்கு விரைவில் பதில் கிடைக்கிறது. அதே சமயத்தில் நாம் தேவனுடைய சித்தம் நிறைவேற வேண்டுமென்றும் ஜெபிக்க வேண்டும்.

கர்த்தர் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர். அவர் அக்கிரமத்தையும் மீறுதலையும் மன்னிக்கிறவர். கர்த்தர் தமது கிருபையினால் இஸ்ரவேல் புத்திரருடைய அக்கிரமங்களையும் மீறுதல்களையும் மன்னித்திருக்கிறார். கர்த்தர் கடந்த காலத்தில், இஸ்ரவேல் ஜனத்தாரை தமது கிருபையினால் மன்னித்ததுபோல, இப்போதும் மன்னித்தருளவேண்டுமென்று, மோசே கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார்.

மோசே கர்த்தரை நோக்கி, "உமது கிருபையினுடைய மகத்துவத்தின்படியும், எகிப்தை விட்டதுமுதல் இந்நாள்வரைக்கும் இந்த ஜனங்களுக்கு மன்னித்து வந்ததின்படியேயும், இந்த ஜனங்களின் அக்கிரமத்தை மன்னித்தருளும்" (எண் 14:19) என்று விண்ணப்பம்பண்ணுகிறார்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பாவிகள் ஜெபிக்கும்போது, "எகிப்தை விட்டதுமுதல் இந்நாள்வரைக்கும் இந்த ஜனங்களுக்கு மன்னித்துவந்ததின்படியே என் அக்கிரமத்தை மன்னித்தருளும்" என்று ஜெபிப்பது வழக்கம். லூக்கா 18:13 ஆவது வசனத்தில் ஆயக்காரன் ஜெபித்தது இந்த ஜெபத்தைப் போன்றிருக்கிறது. எகிப்து தேசத்தைவிட்டுப் புறப்பட்ட போது கர்த்தர் தங்களை மன்னித்ததுபோல மறுபடியும் மன்னிக்க வேண்டுமென்று மோசே கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய அக்கிரமத்தை மன்னிப்பதினால், அவருடைய நீதிக்கு களங்கம் ஏற்படாது. கர்த்தருடைய கிருபைக்கும் இரக்கத்திற்கும் நிந்தை உண்டாகாது. கர்த்தர் ஏற்கெனவே தமது கிருபையினால் இஸ்ரவேல் புத்திரருடைய அக்கிரமங்களை மன்னித்திருக்கிறார். அதே கிருபையினால் அவர் இப்போதும், இந்த ஜனங்களின் அக்கிரமத்தை மன்னித்தருளவேண்டும் என்றும், இதன் மூலமாக கர்த்தருடைய வல்லமை பெரிதாய் விளங்கும் என்றும் மோசே கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

மோசேயின் விண்ணப்பத்திற்கு கர்த்தர் பிரதியுத்தரம் சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தையில் அவருடைய இரக்கமும் நியாயத்தீர்ப்பும் இடம் பெற்றிருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய அவிசுவாசத்தினிமித்தமாக, அவர்களை கொள்ளைநோயினால் வாதித்து, சுதந்தரத்திற்கு புறம்பாக்கிப்போடவேண்டும் (எண் 14:12) என்று தீர்மானித்திருந்தார்.

மோசே கர்த்தருடைய சமுகத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசி ஜெபம்பண்ணினார். மோசேயினுடைய பணிவான ஜெபத்தினிமித்தமாக, கர்த்தருடைய கோபம் தணிகிறது. கர்த்தர் மோசேயை நோக்கி, "உன் வார்த்தையின்படியே இஸ்ரவேல் புத்திரரை மன்னித்தேன்" (எண் 14:20) என்று சொல்லுகிறார்.

மோசேயின் விண்ணப்பத்திற்குக் கர்த்தர் உடனடியாகப் பதில் தருகிறார். ஒரு பாவி மனந்திருந்தி, தேவனிடத்தில் விசுவாசத்தோடு வரும்போது, கர்த்தர் அவன் பாவங்களை உடனடியாக மன்னிக்கிறார். (ஏசா 55:7; ரோமர் 10:9-10; 1யோவான் 1:9).

மோசேயைப்போலவே நாமும் மற்றவர்களுக்காக கர்த்தருடைய சமுகத்திலே பரிந்து பேசி ஜெபம்பண்ணவேண்டும். பரிந்து பேசும் ஜெபம் மிகுந்த வல்லமையுள்ளது. நமக்கு மற்றவர்கள்மீது அன்பும், கரிசனையும் இருந்தால் மாத்திரமே, நாம் அவர்களுக்காக பரிந்து பேசி ஜெபம்பண்ணுவோம். நம்முடைய சத்துருக்களையும் நாம் சிநேகிக்கவேண்டும் என்றும், நமக்கு விரோதமாக தூஷண வார்த்தைகளை பேசுகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ண வேண்டும் என்றும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு உபதேசம்பண்ணுகிறார்.

மோசேயினுடைய பரிந்து பேசும் ஜெபத்தினால், இஸ்ரவேல் தேசம் முழுவதும் அழிவுக்கு தப்பித்துக்கொள்கிறார்கள். ஒரு நீதிமானுடைய ஊக்கமான ஜெபத்தின் மூலமாக, ஏராளமான பாவிகள் தண்டனைக்கு தப்பிக்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணுவதோடு, தம்முடைய மகிமையையும் விளங்கப்பண்ணுகிறார். "பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும் என்று என்னுடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" (எண் 14:21) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும்......" என்பது தீர்க்கதரிசன வாக்கியம். இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. இது ஆயிரம் வருஷ அரசாட்சியில் நிறைவேறும். (ஏசா 4:4-5; ஏசா 11:9; ஏசா 35:2; ஏசா 66:18-19). எண் 14:22-24 ஆகிய வசனங்களில் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

இந்தத் தீர்க்கதரிசனம் நிபந்தனையற்றது என்று சிலர் கருதுகிறார்கள். மனுஷர் பாவம் செய்யும்போது அங்கு சாபம் வரும். பாவத்தின் சம்பளம் மரணம். கிறிஸ்துவின் ஆயிரம் வருஷ அரசாட்சியில் சாபம் இராது. ஆகையினால் அப்போது பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும். (2கொரி 15:24-28; எபே 1:10; வெளி 20).

மோசே கர்த்தருடைய சமுகத்திலே இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசி ஜெபம்பண்ணியபோது, கர்த்தருடைய மகிமைக்கு முக்கியத்துவம் கொடுத்தார். கர்த்தருடைய மகிமை தூஷிக்கப்படக்கூடாது என்பதில் மோசே மிகுந்த கவனத்தோடிருந்தார். "என் ஆண்டவருடைய வல்லமை பெரிதாய் விளங்குவதாக" (எண் 14:18) என்பதே மோசேயின் அடிப்படை ஜெபமாகும்.

கர்த்தர் பாவத்தை வெறுக்கிறவர். தம்முடைய சொந்த ஜனத்தாரிடத்தில் பாவம் காணப்பட்டாலும், கர்த்தர் அவர்களுடைய பாவங்களையும் வெறுக்கிறவர். அவர் குற்றமுள்ளவர்களை குற்றமற்றவர்களாக விடமாட்டார். பிதாக்கள் செய்த அக்கிரமத்தை, மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவர்.

கர்த்தர் நீதியுள்ளவர். அவர் பாவத்தை வெறுக்கிறவர். அதே வேளையில் கர்த்தர் கிருபையுள்ளவராகவும், பாவிகள்மீது இரக்கம் காண்பிக்கிறவராகவும் இருக்கிறார். கர்த்தர் நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர் என்றும், அவர் அக்கிரமத்தையும் மீறுதலையும் மன்னிக்கிறவர் என்றும் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். இந்த சுபாவங்களெல்லாம் கர்த்தருடைய நாமமாயிருக்கிறது. இதுவே அவருடைய வல்லமையாயிருக்கிறது. ஆண்டவருடைய வல்லமை பெரிதாய் விளங்கவேண்டுமென்று மோசே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, பிதாவினிடத்தில் ஜெபம்பண்ணியபோது, "பிதாவே உமது நாமத்தை மகிமைப்படுத்தும்" என்று ஜெபம்பண்ணினார். அப்பொழுது வானத்திலிருந்து பிதாவின் வார்த்தை உண்டாயிற்று. பிதாவானவர் தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துவதோடு, இன்னும்மும் மகிமைப்படுத்துவேன் என்று வாக்குப்பண்ணவும் செய்கிறார்.

"பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும் என்றார். அப்பொழுது: மகிமைப்படுத்தினேன், இன்னமும் மகிமைப்படுத்துவேன் என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று" (யோவா 12:28).

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய அவிசுவாசத்தினிமித்தமாக கர்த்தருக்கு கோபமூட்டுகிறார்கள். அவர்களுடைய கலகக்குணம் கர்த்தருக்கு விசனமாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கர்த்தருடைய மகிமையையும், அவர் எகிப்திலும் வனாந்தரத்திலும் செய்த அவருடைய அடையாளங்களையும் கண்டிருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடாமல் போகிறார்கள்.

"இஸ்ரவேல் புத்திரர், தன்னோடே பத்துமுறை என்னைப் பரீட்சை பார்த்தார்கள்" (எண் 14:22) என்று கர்த்தர் சொல்லுகிறார். "எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிற இந்தப் பொல்லாத சபையாரை எதுவரைக்கும் பொறுப்பேன்? இஸ்ரவேல் புத்திரர் எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதைக் கேட்டேன்" (எண் 14:27). என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

"என் மகிமையையும், நான் எகிப்திலும் வனாந்தரத்திலும் செய்த என் அடையாளங்களையும் கண்டிருந்தும்", இஸ்ரவேல் புத்திரர் தம்முடைய சத்தத்திற்கு செவிகொடுக்கவில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்தக் காரணத்திற்காகத்தான் கர்த்தர் வனாந்தரத்தில் தமக்கு எதிராகக் கலகம் பண்ணிய இஸ்ரவேல் புத்திரரின் பழைய சந்ததியாரை அழித்துப் போடுகிறார் (எண் 14:22-23).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை பத்துமுறை பரீட்சை பார்த்த சம்பவங்களின் விவரம் வருமாறு :

1. கர்த்தர் தங்களை ஏமாற்றிவிட்டார் என்றும், எகிப்தியர் தங்களைக் கொன்று போடுவதற்காக தங்களை ஒரு கண்ணியில் சிக்கவைத்துவிட்டார் என்றும் கர்த்தருக்கு எதிராக முறையிட்ட சம்பவம். (யாத் 14:11-12).
2. தண்ணீருக்காக மாராவில் முறுமுறுத்தது. (யாத் 15:23-26).
3. சீனாய் வனாந்தரத்திற்குப் போய் சேருவதற்கு முன்பாக இறைச்சிக்காகவும், அப்பத்திற்காகவும் முறுமுறுத்தது. யாத் 16:1-18).
4. மன்னாவை விடியற்காலமட்டும் கொஞ்சம் மீதியாக வைத்து, கீழ்ப்படியாமல் போனது. (யாத் 16:19-22).
5. ரெவிதீமில் தண்ணீருக்காக முறுமுறுத்தது. (யாத் 17:1-7).
6. பொன்கன்றுக்குட்டியைச் செய்து விக்கிரகாராதனை செய்தது. (யாத் 32).
7. தபேராவில் முறுமுறுத்தது. (எண் 11:1-3).
8. இறைச்சிக்காக முறுமுறுத்தது. (எண் 11:4-35).
9. கர்த்தரையும், அவருடைய வார்த்தையும் விசுவாசிக்காமல், வேவுகாரரைக் கானான் தேசத்திற்கு அனுப்பியது. (எண் 13:1-25=உபா 1:20-25).
10. காதேசில் கர்த்தருக்கு எதிரான கலகம். (எண் 13:26-14:37; உபா 1:26-46).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை பரீட்சை பார்க்கிறார்கள். அவருடைய வல்லமையை பரீட்சை பார்க்கிறார்கள். அவர்கள் தேவனுடைய நீதியையும், நியாயத்தையும் பரீட்சை பார்க்கிறார்கள். தங்களுடைய அவிசுவாசத்தினிமித்தமாகவும், கலகக்குணத்தினிமித்தமாகவும் கர்த்தர் தங்களை தண்டிப்பாரா அல்லது தண்டியாமல் மன்னித்து விட்டுவிடுவாரா என்று இஸ்ரவேல் புத்திரர் பத்துமுறை கர்த்தரை பரீட்சை பார்த்திருக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் பொல்லாத ஜனமாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் தமக்கு விரோதமாக முறுமுறுக்கிறதை கர்த்தர் கேட்கிறார். அவர் நீடிய சாந்தமும், நீடிய பொறுமையுள்ளவராகயிருந்தாலும், "எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிற இந்த பொல்லாத சபையாரை எதுவரைக்கும் பொறுப்பேன்" (எண் 14:27) என்று கர்த்தர் கேட்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய மகிமையையும் அவருடைய அடையாளங்களையும், வல்லமையையும் எகிப்து தேசத்திலும் வனாந்தரத்திலும் கண்டிருக்கிறார்கள். அதன் பின்பும் அவர்கள் கர்த்தரை பரீட்சை பார்க்கிறார்கள் (எண் 14:22).

"இஸ்ரவேல் புத்திரர் இதனோடே பத்துமுறை என்னைப் பரீட்சை பார்த்தார்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். "பத்துமுறை" என்னும் வார்த்தைக்கு "அநேகந்தரம்" என்று பொருள். கர்த்தரை பரீட்சை பார்ப்பது இஸ்ரவேல் புத்திரரின் சுபாவமாயிருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றிருந்தாலும், தங்கள் பாவசுபாவத்திலிருந்து அவர்கள் இன்னும் விடுதலை பெறவில்லை.

இஸ்ரவேல் புத்திரருடைய பாவத்தினிமித்தமாக கர்த்தர் அவர்களுக்கு தண்டனை கொடுக்கிறார். "அவர்கள் பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தைக் காணமாட்டார்கள்; எனக்குக் கோபம் உண்டாக்கினவர்களில் ஒருவரும் அதைக் காணமாட்டார்கள்" (எண் 14:23) என்பதே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுக்கும் தண்டனையாயிருக்கிறது.

கர்த்தர் அவர்களை கானான் தேசத்திலே குடியேற்றுவேன் என்று ஆணையிட்டார். ஆனால் கர்த்தர் ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தில் இஸ்ரவேல் புத்திரர் பிரவேசிக்கமாட்டார்கள் (எண் 14:30). இதுவும் கர்த்தர் அவர்களுக்கு கொடுக்கும் தண்டனையாயிருக்கிறது.

கர்த்தருடைய வாக்குத்தத்தம், அவருக்கு விரோதமாக கலகம்பண்ணி, முறுமுறுக்கிற ஜனங்களுக்கு நிறைவேறாது. அவர்கள் கானான் தேசத்தில் பிரவேசிக்கமாட்டார்கள். ஆனாலும் அவர்களுடைய பின்சந்ததியாராகிய பிள்ளைகளை கர்த்தர் கானான் தேசத்தில் பிரவேசிக்கச் செய்வார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தின் எல்லையிலே கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்து கலகம்பண்ணுகிறார்கள். கர்த்தர் அவர்களை வனாந்தரத்திற்கு திரும்பிப்போகுமாறு கட்டளையிடுகிறார். தங்கள் அவிசுவாசத்தினிமித்தமாக அவர்கள் கானான் தேசத்திற்குள்ளே பிரவேசிப்பதற்கு ஆயத்தமாயில்லை. கர்த்தர் அவர்களுக்கு வாக்குப்பண்ணின தேசத்தை அவர்கள் சுதந்தரித்துக்கொள்ள விரும்பவில்லை. ஆகையினால் அவர்கள் மறுபடியும் வனாந்தரத்திற்கு பின்னிட்டு திரும்பிப்போகவேண்டுமென்று கர்த்தர் கட்டளை கொடுக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "அமலேக்கியரும் கானானியரும் பள்ளத்தாக்கிலே குடியிருக்கிறபடியினால், நாளைக்கு நீங்கள் திரும்பி சிவந்த சமுத்திரத்துக்குப் போகிறவழியாய் வனாந்தரத்துக்குப் பிரயாணம்பண்ணுங்கள்" (எண் 14:25) என்று சொல்லுகிறார்.

இவர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு எதிராக யுத்தம் பண்ண ஆயத்தமாக இருக்கிறார்கள். ஆனால் கர்த்தரோ தம்முடைய ஜனங்களை யுத்தம் பண்ணாமல் சிவந்த சமுத்திரத்துக்குப் போகிறவழியாய் வனாந்தரத்துக்குப் பிரயாணம் பண்ணுங்கள் என்று கூறிவிடுகிறார். இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் நாற்பது வருஷங்களுக்கு அலைந்து திரிய வேண்டும். ஆகையினால் அவர்கள் யுத்தம் பண்ணுவதைக் கர்த்தர் அனுமதிக்கவில்லை (எண் 14:25,33,42-45).

தமக்கு விரோதமாக முறுமுறுத்து கலகம்பண்ணுகிற ஜனங்களுக்கு கர்த்தர் தம்முடைய நீதியினால் மரணதண்டனையை கொடுக்கிறார். அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கமாட்டார்கள். அவர்கள் எல்லோரும் வனாந்தரத்திலே செத்துப்போவார்கள். அவர்கள் ஒரே வேளையில், ஒரே இடத்தில் செத்துப்போவதற்கு பதிலாக, வனாந்தரத்தின் பல்வேறு இடங்களில், வெவ்வேறு காலங்களில் செத்துப்போவார்கள்.

"இந்த வனாந்தரத்தில் உங்கள் பிரேதங்கள் விழும்; உங்களில் இருபது வயது முதல் அதற்கு மேற்பட்டவர்களாக எண்ணப்பட்டு, உங்கள் தொகைக்கு உட்பட்டவர்களும் எனக்கு விரோதமாய் முறுமுறுத்திருக்கிறவர்களுமாகிய அனைவரின் பிரேதங்களும் விழும்" (எண் 14:29) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். சபையார் எல்லாரும் அவர்களை நோக்கி: எகிப்துதேசத்திலே செத்துப்போனோமானால் நலமாயிருக்கும்; இந்த வனாந்தரத்திலே நாங்கள் செத்தாலும் நலம் என்று சொன்னார்கள் (எண் 14:2).

தங்களுக்கு எது நலமாயிருக்கும் என்று இஸ்ரவேல் புத்திரர் சொன்னார்களோ, அந்தக் காரியத்தை அவர்களுக்கு செய்யவேண்டுமென்று கர்த்தர் தீர்மானம்பண்ணுகிறார். அவர்களுடைய விருப்பத்திற்கு கர்த்தர் "ஆமென்" என்று சொல்லுகிறார். அவர்களுடைய விருப்பத்தின் பிரகாரம் வனாந்தரத்தில் அவர்கள் பிரேதங்கள் விழும் என்பது கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரரை வனாந்தரத்திலே கொன்றுபோடவேண்டும் என்பது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பாயிருக்கிறது. ஆனாலும் அவர்கள் செத்துப்போவதற்கு முன்பாக வனாந்தரத்திலே அலைந்து திரிவார்கள் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். பாதைதெரியாத பயணக்காரர்கள் அங்கும் இங்கும் அலைந்து திரிவதுபோல, இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே நாற்பது வருஷங்கள் அலைந்து திரிவார்கள்.

"உங்கள் பிரேதங்களோ இந்த வனாந்தரத்திலே விழும். அவைகள் வனாந்தரத்திலே விழுந்து தீருமட்டும், உங்கள் பிள்ளைகள் நாற்பது வருஷம் வனாந்தரத்திலே திரிந்து, நீங்கள் சோரம்போன பாதகத்தைச் சுமப்பார்கள்" *(எண் 14:32,33)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்திலே நாற்பது வருஷம் அலைந்து திரியும்போது அவர்கள் தம்முடைய முகத்தை தேடவேண்டும் என்பதும், அவர்கள் தம்முடைய கிருபையையும், இரக்கத்தையும் வாஞ்சித்து பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதும், அவர்கள் தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி தம்முடைய சமுகத்திலிருந்து பாவமன்னிப்பை பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதும் கர்த்தருடைய விருப்பமாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் இந்த வனாந்தரத்திலே கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்து பாவம் செய்து, இங்கேயே செத்துப்போனாலும், அவர்கள் மறுமையிலே தம்மோடு கூடயிருக்கவேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். பாவங்கள் மன்னிக்கப்பட்டால் மாத்திரமே பரலோகத்தில் பிரவேசிக்க முடியும். அவர்கள் பூமிக்குரிய கானானில் பிரவேசிக்காவிட்டாலும், பரமகானானில் பிரவேசிக்க வேண்டும் என்பது தேவனுடைய விருப்பமாயிருக்கிறது.

கர்த்தர் அதற்காக அவர்களை நாற்பது வருஷங்களாக வனாந்தரத்திலே அலைந்து திரியப்பண்ணுகிறார். இந்தக் காலத்தில் அவர்கள் தங்களுடைய பாவங்களை உணரவேண்டும். கர்த்தருடைய வல்லமையையும், அவருடைய மகிமையையும், அவருடைய கிருபையையும் இரக்கத்தையும் புரிந்துகொண்டு, அவருடைய சமுகத்திலே தங்களை தாழ்த்தி ஒப்புக்கொடுக்கவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். அவர்கள் கர்த்தருக்கு உடன்படிக்கையின் ஜனங்களாகயிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய வார்த்தையிலும், வாக்குத்தத்திலும், உடன்படிக்கையிலும் உண்மையுள்ளவர். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரோடு செய்து கொண்ட உடன்படிக்கையை காத்துக்கொள்கிறார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, கர்த்தரோடு செய்து கொண்ட உடன்படிக்கையை மீறி, அவருக்கு விரோதமாகக் கலகம்பண்ணி, முறுமுறுத்து, பாவம் செய்கிறார்கள்.

கர்த்தருடைய உடன்படிக்கையை மீறுவது பாவம். இதனால் தங்களுக்கு சாபமும், தீங்குகளும், ஆபத்துக்களும் வரும் என்பதை இஸ்ரவேல் புத்திரர் உணரவேண்டும். இதை இஸ்ரவேல் புத்திரர் புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவே, கர்த்தர் அவர்களை வனாந்தரத்திலே நாற்பது வருஷம் அலைந்து திரியப்பண்ணுகிறார்.

கர்த்தர் நம்மை ஒருபோதும் கைவிடுகிற தேவனல்ல. நம்மை கரம்பிடித்து வழிநடத்துகிறவர். அவர் உண்மையுள்ள தேவன். அவர் நம்மை முற்றும் முடிய கரம்பிடித்து வழிநடத்துவார். ஆனாலும் நாம் கர்த்தரோடு செய்துகொண்ட உடன்படிக்கையை மீறி, கர்த்தரை விட்டு விலகிப்போகும்போது, கர்த்தரும் நம்மை விட்டு விலகிப்போய்விடுவார். நாம் அவரை விட்டு விலகும் வரையிலும் அவர் நம்மோடு கூடவே இருப்பார். கர்த்தர் ஒருபோதும் நம்மைவிட்டு முதலில் விலகிப்போகமாட்டார்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே நாற்பது வருஷங்களாக சுற்றி அலையும்போது அவர்களுடைய புதிய சந்ததியார் பிறப்பார்கள். கர்த்தர் தம்முடைய ஆசீர்வாதங்களை அவர்களுடைய பிள்ளைகளுக்கு உடனே கொடுத்துவிடமாட்டார். பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் பாதகத்தை வனாந்தரத்திலே சுமப்பார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் பிரேதங்கள் வனாந்தரத்திலே விழுந்து தீருமட்டும், அவர்களுடைய பிள்ளைகள் நாற்பது வருஷம் வனாந்தரத்திலே திரிந்து, அவர்களுடைய சோரம்போன பாதகத்தைச் சுமப்பார்கள் (எண் 14:33) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரின் பின்மாற்றத்தின் நிமித்தம் அவர்களுடைய பிள்ளைகள் வனாந்தரத்தில் நாற்பது வருஷங்களுக்கு அலைந்து திரிந்து பாடுகளை அனுபவிப்பார்கள்.

இஸ்ரவேல் புத்திரருடைய பிள்ளைகள் வனாந்தரத்தில் பிறந்து வளரும்போது, அவர்கள் கர்த்தருடைய கோபத்தை அனுபவிப்பார்கள். தங்கள் பெற்றோருடைய பாதகத்தினிமித்தமாக, அவர்களுடைய பிள்ளைகளுக்கு வேதனைகளும், பாடுகளும் உண்டாகும். இந்த வேதனைகளையெல்லாம் தங்கள் பெற்றோரின் கீழ்ப்படியாமையினால் தங்களுக்கு வந்திருக்கிறது என்பதை பிள்ளைகளும் உணர்ந்துகொள்வார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் பிள்ளைகள் நாற்பது வருஷம் வனாந்தரத்திலே திரிந்து, தங்கள் பெற்றோரின் சோரம்போன பாதகத்தை சுமக்கும்போது, பாவத்திற்கு விரோதமாக எச்சரிக்கப்படுவார்கள். தங்கள் பெற்றோரைப்போல தாங்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் போய்விடக்கூடாது என்று, பிள்ளைகள் மிகுந்த கவனமாயும், எச்சரிப்பாயும் ஜீவிப்பார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் பாவத்தினிமித்தமாக கர்த்தர் அவர்கள்மீது தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பையும், கடினமான தண்டனையையும் சொல்லுகிறார். கர்த்தருடைய கோபத்திற்கு மத்தியில், அவருடைய கிருபையும் வெளிப்படுகிறது.

தமக்கு விரோதமாக கலகம்பண்ணின இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பைச் சொல்லும்போது, "என் மகிமையையும், நான் எகிப்திலும் வனாந்தரத்திலும் செய்த என் அடையாளங்களையும் கண்டிருந்தும், என் சத்தத்துக்குச் செவிகொடாமல், இதனோடே பத்துமுறை என்னைப் பரீட்சைபார்த்த மனிதரில் ஒருவரும். அவர்கள் பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தைக் காணமாட்டார்கள்; எனக்குக் கோபம் உண்டாக்கினவர்களில் ஒருவரும் அதைக் காணமாட்டார்கள்" (எண் 14:22,23) என்று சொல்லுகிறார்.

ஆனாலும் தம்மை உத்தமமாய்ப் பின்பற்றின காலேபுக்கு கர்த்தர் ஆசீர்வாதமானவார்த்தைகளை சொல்லுகிறார். "என்னுடைய தாசனாகிய காலேப் வேறே ஆவியை உடையவனாயிருக்கிறபடியினாலும், உத்தமமாய் என்னைப் பின்பற்றி வந்தபடியினாலும், அவன் போய்வந்த தேசத்திலே அவனைச் சேரப்பண்ணுவேன்; அவன் சந்ததியார் அதைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்" (எண் 14:24) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"என்னுடைய தாசனாகிய காலேப்" என்று கர்த்தர் இந்த வசனத்தில் காலேபைப்பற்றிச் சொல்லுகிறார். எண் 14:30 ஆவது வசனத்தில் யோசுவாவையும் பற்றியும், யோசு 14:1; யோசு 22:13 ஆகிய வசனங்களில் ஆசாரியரைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. இவர்களும் கர்த்தருடைய ஆவியைப் பெற்றிருந்து, அவரை உத்தமமாய் பின்பற்றினார்கள்.

தமக்கு விரோதமாக முறுமுறுத்த இஸ்ரவேல் சபையாரை வனாந்தரத்திலே கொன்றுபோடுவதாக கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பை சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிற இந்தப் பொல்லாத சபையாரை எதுவரைக்கும் பொறுப்பேன்? இஸ்ரவேல் புத்திரர் எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதைக் கேட்டேன். நீ அவர்களோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நீங்கள் என் செவிகள் கேட்கச்சொன்னபிரகாரம் உங்களுக்குச் செய்வேன் என்பதை என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தர் உரைக்கிறார்" (எண் 14:27,28) என்றும்,

"இந்த வனாந்தரத்தில் உங்கள் பிரேதங்கள் விழும்; உங்களில் இருபது வயது முதல் அதற்கு மேற்பட்டவர்களாக எண்ணப்பட்டு, உங்கள் தொகைக்கு உட்பட்டவர்களும் எனக்கு விரோதமாய் முறுமுறுத்திருக்கிறவர்களுமாகிய அனைவரின் பிரேதங்களும் விழும்" (எண் 14:29) என்றும் சொல்லுகிறார்.

"உங்கள் தொகைக்கு உட்பட்டவர்கள்" என்பது இஸ்ரவேல் புத்திரரின் இருபது வயது முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ளவர்கள் வரைக்கும் எண்ணித்தொகையேற்றப்பட்டவர்களைக் குறிக்கிறது. இருபது வயது முதல் அதற்கு மேற்பட்டவர்களாக எண்ணப்பட்டவர்கள் வனாந்தரத்தில் மரித்துப் போவார்கள். (எண் 14:29-35) இருபது வயதுக்கு உட்பட்ட தங்களுடைய பிள்ளைகள் மரித்துப் போகும் என்று இஸ்ரவேல் புத்திரர் பயந்தார்கள். ஆனால் அவர்களோ கானான் தேசத்திற்குள் பிரவேசித்து, அந்தத் தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். (எண் 14:31). மனுஷருடைய பயத்திற்கு ஆதாரமே இல்லை. கர்த்தர் நம்பட்சத்தில் இருக்கும்போது நமக்கு எதிராக யாரும் நிற்கமுடியாது. கர்த்தர் பெரியவர். அவர் பெரிய காரியங்களைச் செய்வார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சாபமான வார்த்தைகளை சொல்லும்போது, தம்மை உத்தமமாய் பின்பற்றின காலேபுக்கும் யோசுவாவும் ஆசீர்வாதமான வார்த்தைகளையும் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "எப்புன்னேயின் குமாரன் காலேபும், நூனின் குமாரன் யோசுவாவும் தவிர, மற்றவர்களாகிய நீங்கள் நான் உங்களைக் குடியேற்றுவேன் என்று ஆணையிட்டுக் கொடுத்த தேசத்தில் பிரவேசிப்பதில்லை. கொள்ளையாவார்கள் என்று நீங்கள் சொன்ன உங்கள் குழந்தைகளையோ நான் அதில் பிரவேசிக்கச் செய்வேன்; நீங்கள் அசட்டைப்பண்ணின தேசத்தை அவர்கள் கண்டறிவார்கள்" (எண் 14:30,31) என்று சொல்லுகிறார்.

காலேபும் யோசுவாவும் வேறே ஆவியையுடையவர்களாயிருக்கிறார்கள். இவர்களுடைய ஆவிக்கும், கானான் தேசத்தை வேவுபார்ப்பதற்காகப்போன மற்ற பிரபுக்களின் ஆவிக்கும் வித்தியாசம் இருக்கிறது. இவர்கள் இருவரும் கர்த்தரை முழுவதுமாய்ப் பின்பற்றுகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய சித்தத்திற்கும் விருப்பத்திற்கும், திட்டத்திற்கும் கீழ்ப்படிகிறார்கள்.

கர்த்தர் இவர்கள் இருவருடைய கீழ்ப்படிதலையும் கனம்பண்ணுகிறார். கர்த்தர் இவர்களையும், இவர்களுடைய சந்ததியாரையும் கானான் தேசத்தில் பிரவேசிக்கப்பண்ணுகிறார். அவர்கள் கானான் தேசத்தை சுதந்தரிப்பார்கள்.

கர்த்தர் காலேபுக்கு தம்முடைய ஆசீர்வாதத்தை முதலாவதாக சொன்னபோது, அங்கே யோசுவாவைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை (எண் 14:24). கர்த்தர் காலேபுக்கு மறுபடியும் ஆசீர்வாதமான வார்த்தையைச் சொல்லும்போது, அவர் யோசுவாவுக்கும் தம்முடைய ஆசீர்வாதத்தை சேர்த்து சொல்லுகிறார் (எண் 14:30,31).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணியபோது, தங்கள் பிள்ளைகளும் செத்துப்போவார்கள் என்று ஒரு காரணத்தை சொன்னார்கள், "நாங்கள் பட்டயத்தால் மடியும்படிக்கும், எங்கள் பெண்ஜாதிகளும் பிள்ளைகளும் கொள்ளையாகும்படிக்கும், கர்த்தர் எங்களை இந்த தேசத்துக்குக் கொண்டு வந்தது என்ன?" (எண் 14:3) என்று இஸ்ரவேல் புத்திரர் சொன்னார்கள்.

ஆனால் கர்த்தரோ இஸ்ரவேல் புத்திரரின் பிள்ளைகளைக் குறித்து வேறொரு திட்டம் வைத்திருக்கிறார். இஸ்ரவேல் புத்திரரே கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்தவர்கள். அவர்களுடைய பிள்ளைகள் ஒருவேளை சிறுவர்களாகவோ அல்லது இனிமேல் அவர்களுக்கு பிறக்கப்போகிறவர்களாகவோ இருக்கலாம். கர்த்தர் அவர்களுடைய பிள்ளைகளை உயிரோடு காப்பாற்றுகிறார். இது கர்த்தருடைய கிருபை.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "கொள்ளையாவார்கள் என்று நீங்கள் சொன்ன உங்கள் குழந்தைகளையோ நான் அதில் பிரவேசிக்கச் செய்வேன்; நீங்கள் அசட்டைப்பண்ணின தேசத்தை அவர்கள் கண்டறிவார்கள்" (எண் 14:31) என்று சொல்லுகிறார்.

கானான் தேசத்தில் பிரவேசிப்பதற்கு கர்த்தர் ஒரு சந்ததியை மீதமாய் வைத்திருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் கலகக்குணமுள்ளவர்களாயிருந்தாலும், கர்த்தர் அவர்களுடைய பிள்ளைகளை தண்டியாமல், கானான் தேசத்தை அவர்களுக்கு சுதந்தரமாகக் கொடுக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தை சுதந்தரிக்கவேண்டியவர்கள். ஆனால் அவர்களோ தேசத்தை சுதந்தரியாமல் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தமாகவும், கலகக்குணத்தினிமித்தமாகவும் அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதை கர்த்தரும் தடைபண்ணுகிறார். அவர்கள் மறுபடியும் வனாந்தரத்திற்கு திரும்பிப்போகுமாறு கர்த்தர் கட்டளை கொடுக்கிறார். அவர்கள் வனாந்தரத்திலே நாற்பது வருஷங்களாக சுற்றி அலைவார்கள். அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கமாட்டார்கள். அவர்கள் வனாந்தரத்திலே செத்துப்போவார்கள்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "நீங்கள் தேசத்தைச் சுற்றிப்பார்த்த நாற்பதுநாள் இலக்கத்தின்படியே, ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வருஷமாக, நீங்கள் நாற்பது வருஷம் உங்கள் அக்கிரமங்களைச் சுமந்து, என் உடன்படிக்கைக்குகு வந்த மாறுதலை உணருவீர்கள்" (எண் 14:34) என்றும்,

"கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன்; எனக்கு விரோதமாய் கூட்டங் கூடின இந்தப் பொல்லாத சபையார் யாவருக்கும் இப்படியே செய்வேன்; இந்த வனாந்தரத்திலே அழிவார்கள், இங்கே சாவார்கள் என்று சொல்" (எண் 14:35) என்றும் சொல்லுகிறார்.

கர்த்தருக்கு ஒரு நாள் என்பது ஒரு வருஷம் போன்றது என்பதை விளக்குவதற்காக ஒருசிலர் இந்த வசனத்தைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் இதை ஒரு வேதாகமக் கோட்பாடாகக் கூறமுடியாது. ஒருநாள் என்பது ஒரு நாள்தான். ஒரு வருஷம் என்பது ஒரு வருஷம் தான்.

"என் உடன்படிக்கைக்கு வந்த மாறுதல்" என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். ஆனாலும் கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, தம்முடைய உடன்படிக்கையில் மாறுதலை உண்டுபண்ணுகிறார். இஸ்ரவேல் புத்திரரைக் கானான் தேசத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். இது அவருடைய உடன்படிக்கை. ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ தங்களுக்கு நியமிக்கப்பட்டிருந்த நிபந்தனைகளைக் காத்துக் கொள்ளவில்லை. கர்த்தருக்கு எதிராகக் கலகம் பண்ணுகிறார்கள். கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார். அவர்களோடு செய்துகொண்ட உடன்படிக்கையைக் கர்த்தர் மாற்றிப்போடுகிறார் (எண் 14:22,27-35).

கானான் தேசத்தை வேவுபார்க்கப் போனவர்களில் பத்து பிரபுக்கள் திடீரென்று செத்துப்போகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தார்மீது தம்முடைய நியாயத்தீர்ப்பை சொல்லுகிறார். ஜனங்கள்மீது நியாயத்தீர்ப்பு வருவதற்கு முன்பாக, ஜனங்கள் மத்தியிலே துர்ச்செய்தியை பரம்பச்செய்த, பத்து வேவுகாரர்மீது உடனடியாக நியாயத்தீர்ப்பு வருகிறது. அந்த பத்து மனிதரும் கர்த்தருடைய சந்நிதியில் வாதையினால் செத்துப்போகிறார்கள்.

கானான் தேசத்தைச் சோதித்துப் பார்க்கும்படி மோசேயால் அனுப்பப்பட்டுத் திரும்பி, அந்த தேசத்தைக்குறித்துத் துர்ச்செய்தி கொண்டுவந்து, சபையார் எல்லாரும் அவருக்கு விரோதமாய் முறுமுறுக்கும்படி அந்தத் துர்ச்செய்தியைச் சொன்னவர்களாகிய அந்த மனிதர் கர்த்தருடைய சந்நிதியில் வாதையினால் செத்துப்போகிறார்கள் (எண் 14:36,37).

பத்துவேவுகாரரும், கர்த்தர் வாக்குத்தத்தம்பண்ணின தேசத்தைக் குறித்து துர்ச்செய்தியைக் கொண்டு வந்தவர்கள். கர்த்தர் அந்த தேசத்தை பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம் என்று சொல்லுகிறார். ஆனால் இவர்களோ கர்த்தருடைய வார்த்தையை நம்பாமல், அந்த தேசத்தைக் குறித்து நல்ல செய்தியை சொல்லாமல் துர்ச்செய்தியை சொல்லுகிறார்கள்.

தம்முடைய வார்த்தைக்கு விரோதமாகப் பேசுகிறவர்கள்மீதும், தம்முடைய வார்த்தையை தப்பிதமாக வியாக்கியானம் பண்ணுகிறவர்கள்மீதும் கர்த்தருடைய கோபமும் நியாயத்தீர்ப்பும் வரும். சத்தியத்தைப் புரட்டுகிறவர்கள் மனுஷர் மத்தியிலே துர்ச்செய்தியை பரம்பச்செய்கிறார்கள். அவர்கள் தங்களுடைய சாதுரிய வார்த்தைகளினாலும் பொய்புரட்டுக்களினாலும் மனுஷருடைய சிந்தையையும், இருதயத்தையும் களங்கப்படுத்துகிறார்கள்.

கள்ளப்போதகர்கள் சத்தியத்தைப் போதியாமல், கள்ளஉபதேசங்களைப் போதிக்கிறார்கள். இதனால் மனுஷரால் கர்த்தருடைய மகிமையையும், வல்லமையையும் தியானிக்க முடியவில்லை. கள்ளப்போதகர்கள் மனுஷரை சத்தியத்தைவிட்டு தவறான பாதையில் வழிநடத்தி செல்கிறார்கள். கர்த்தர் தம்முடைய பாதையைவிட்டு தவறான பாதையில் போகிறவர்களையும் தண்டிக்கிறார். அந்த தப்பிதமான பாதையில் போகுமாறு அவர்களை வழிநடத்துகிற கள்ளப்போதகர்களையும், கர்த்தர் முதலாவதாக தண்டிக்கிறார்.

வேவுகாரரில் பத்துபேர் இஸ்ரவேல் புத்திரரை பாவம் செய்யப்பண்ணினவர்கள். சபையார் எல்லாரும் தேவனுக்கு விரோதமாக முறுமுறுக்கும்படி இந்தப் பத்துபேரும் அவர்களிடத்தில் துர்ச்செய்தி சொன்னவர்கள்.

கானான் தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி பன்னிரண்டு பிரபுக்கள் போனார்கள். அவர்களில் பத்து பேர் கர்த்தருடைய சந்நிதியில் வாதையினால் செத்துப்போகிறார்கள். மீதி இரண்டுபேர் மாத்திரம் வாதைக்கு தப்பித்து உயிரோடிருக்கிறார்கள்.

தேசத்தைச் சுற்றிப்பார்க்கப்போன அந்த மனிதரில் நூனின் குமாரனாகிய யோசுவாவும், எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும்மாத்திரம் உயிரோடிருக்கிறார்கள் (எண் 14:38).

நற்செய்தியை விசுவாசத்தோடு சொன்னதினால், இவர்கள் இருவரும் வாதையினால் செத்துப்போகவில்லை. உயிரோடிருக்கிறார்கள்.

தங்களுக்கு துர்ச்செய்தியை கொண்டு வந்தவர்களின் வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரர் நம்பினார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். அவர்கள் கானான் தேசத்தில் பிரவேசிப்பதில்லையென்றும், அவர்கள் வனாந்தரத்திலே நாற்பது வருஷங்களுக்கு அலைந்து திரிவார்கள் என்றும், அவர்களுடைய பிரேதங்கள் வனாந்தரத்திலே விழும் என்றும் கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

கர்த்தர் கானான் தேசத்தை அவர்களுடைய பிள்ளைகளுக்கு சுதந்தரமாகக் கொடுக்கிறார். மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தர் சொன்ன வார்த்தைகளை சொல்லுகிறார். மோசே இந்த வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் சொன்னபோது, ஜனங்கள் மிகவும் துக்கிக்கிறார்கள் (எண் 14:39).

கானான் தேசத்திற்குள் உடனடியாகப் பிரவேசிக்க முடியாது. இன்னும் நாற்பது வருஷங்களாகும். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவரும் வனாந்தரத்தில் மடிந்துபோவார்கள் என்று தேவனுடைய நியாயத்தீர்ப்பை மோசே ஜனங்களோடு கூறுகிறார். இதைக் கேட்டபோது, ஜனங்கள் மிகவும் துக்கிக்கிறார்கள். (எண் 14:39-45).

அவர்கள் அழுது புலம்பியும், துக்கித்தும் அவர்களுக்கு ஒரு நன்மையும் ஏற்படவில்லை. தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்து, கர்த்தரைச் சார்ந்திருந்தால் ஒருவேளை அவர்கள் மன்னிக்கப்பட்டிருப்பார்கள். ஆனால் அவர்கள் தங்கள் சொந்த பலத்தின்மீது நம்பிக்கை வைத்து, கர்த்தர் வாக்குத்தத்தம்பண்ணின இடத்துக்கு நாங்கள் போவோம் என்று சொல்லி மலையின் உச்சியில் ஏறத் துணிகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுக்கு துர்ச்செய்தி சொன்ன பத்துவேவுகாரரின் வார்த்தைகளைக் கேட்டு கானான் தேசத்திற்குள் போகக்கூடாது என்று சொன்னார்கள். அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகவும், கர்த்தருக்கு விரோதமாகவும் முறுமுறுத்தார்கள். அவர்கள் கானான் தேசத்தை சுதந்தரிக்கப்போகாமல், எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போக வேண்டுமென்று சொன்னார்கள். இப்போதோ அவர்கள் தங்களுடைய பாவத்தை உணருகிறார்கள்.

கர்த்தர் அவர்களை வனாந்தரத்திற்கு திரும்பிப்போகுமாறு சொல்லுகிறார். ஆனால் அவர்களோ கானான் தேசத்திற்கு புறப்பட்டுப்போக துணிகிறார்கள். அவர்கள் அதிகாலமே எழுந்திருந்து, "நாங்கள் பாவஞ்செய்தோம், கர்த்தர் வாக்குத்தத்தம்பண்ணின இடத்துக்கு நாங்கள் போவோம்" என்று சொல்லி மலையின் உச்சியில் ஏறத்துணிகிறார்கள் *(எண் 14:40)*.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணியபோது, "நாம் ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு எகிப்திற்கு திரும்பிப்போவோம் வாருங்கள்" *(எண் 14:4)* என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள். ஆனால் இப்போதோ அவர்கள் "கர்த்தர் வாக்குத்தத்தம்பண்ணின இடத்திற்கு நாங்கள் போவோம்" என்று சொல்லுகிறார்கள். தங்களை கானான் தேசத்திற்கு வழிநடத்துமாறு மோசேயை கேட்டுக்கொள்கிறார்கள்.

கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ணின இஸ்ரவேல் ஜனத்தார் இப்போது தங்கள் பாவத்தை உணர்ந்திருக்கிறார்கள். "நாங்கள் பாவம் செய்தோம்" என்று சொல்லுகிறார்கள். அவர்களுடைய மனந்திரும்புதலினால் கர்த்தருடைய நாமம் மகிமைப்படுகிறது. ஆனாலும் அதனால் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் ஏற்படவில்லை. அவர்கள் காலம் கடந்து தங்களுடைய பாவங்களை உணருகிறார்கள். ஆகையினால் அவர்களுக்கு ஒரு நன்மையும் உண்டாகவில்லை.

கானான் தேசத்திற்குப்போவோம் என்று இஸ்ரவேல் புத்திரர் சொல்லும்போது, மோசே அவர்களுக்கு ஆதரவாகப் பேசவில்லை. அவர்கள் கானான் தேசத்திற்குப்போகக்கூடாது என்றும், வனாந்தரத்திற்கு திரும்பிப்போகவேண்டும் என்றும் மோசே சொல்லுகிறார். மோசே தன்னுடைய சொந்த வார்த்தையை பேசவில்லை. அவர் கர்த்தருடைய வார்த்தையை அவர்களுக்கு சொல்லுகிறார்.

மோசே அவர்களை நோக்கி, "நீங்கள் இப்படி கர்த்தரின் கட்டளையை மீறுகிறதென்ன? அது உங்களுக்கு வாய்க்காது. நீங்கள் உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறிய அடிக்கப்படாதபடிக்கு ஏறிப்போகாதிருங்கள்; கர்த்தர் உங்கள் நடுவில் இரார். அமலேக்கியரும் கானானியரும் அங்கே உங்களுக்குமுன்னே இருக்கிறார்கள்; பட்டயத்தினால் விழுவீர்கள்; நீங்கள் கர்த்தரை விட்டுப் பின்வாங்கினபடியால், கர்த்தர் உங்களோடே இருக்கமாட்டார்" *(எண் 14:41-43)* என்று சொல்லுகிறார்.

"கர்த்தர் உங்களோடே இருக்கமாட்டார்" என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். அவர்கள் தோல்வியடைந்ததற்கு இதுதான் காரணம். மோசேயும், கர்த்தருடைய பெட்டியும் தங்களோடு வராமல், அவர்கள் தாங்களாகவே யுத்தம் பண்ண புறப்பட்டு போகிறார்கள். *(எண் 14:44)*. மோசே முன்னறிவித்ததுபோலவே, இஸ்ரவேல் புத்திரர் யுத்தத்தில் தோல்வியடைகிறார்கள். *(எண் 14:45)*.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளையை மீறி, கானான் தேசத்திற்கு புறப்பட்டுப்போனால், அவர்களுக்கு வரப்போகும் ஆபத்துக்களைக் குறித்து மோசே அவர்களை எச்சரிக்கிறார். "அமலேக்கியரும் கானானியரும் அங்கே உங்களுக்கு முன்னே இருக்கிறார்கள்" என்றும், "கர்த்தர் உங்களோடே இருக்கமாட்டார்" என்றும் மோசே சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரோடு கர்த்தர் கூடயிருக்கவில்லையென்றால், அவர்களுக்கு பாதுகாப்பு இல்லை. அவர்கள் தங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறியடிக்கப்படுவார்கள். இஸ்ரவேல் புத்திரர் சத்துருக்களின் பட்டயத்தினால் விழுவார்கள்.

கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற பாதையில் நாம் செல்லவில்லையென்றால், கர்த்தருடைய பாதுகாப்பும், பராமரிப்பும் நமக்கு கிடைக்காது. கர்த்தருக்கு விரோதமான பாதை, நம்மை அழிவுக்கு நேராக கொண்டு போய்விடும். கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற ஊழியத்தை செய்யவேண்டும். அந்த ஊழியத்தில் கர்த்தருடைய ஆசீர்வாதம் இருக்கும்.

கர்த்தருடைய சித்தமும் விருப்பமும் நம்முடைய விருப்பமாகயிருக்கவேண்டும். கர்த்தர் நம்முடைய சொந்த விருப்பத்தை நிறைவேற்றவேண்டும் என்று எதிர்பார்க்காமல், கர்த்தருடைய விருப்பத்தை நிறைவேற்ற, நாம் நம்மை முற்றிலுமாய் ஒப்புக்கொடுக்கவேண்டும்.

கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிகிறவர்கள் காலதாமதம்பண்ணாமல், உடனே கீழ்ப்படிந்து விடவேண்டும். நமக்கு இஷ்டமான நேரத்தில் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியலாம் என்று அசட்டையாயிருக்கக்கூடாது. கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு நாம் காலதாமதம்பண்ணக்கூடாது.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை விட்டு பின்வாங்கிப்போய்விட்டார்கள். ஆகையினால் கர்த்தர் அவர்களைவிட்டு விலகிவிட்டார். இப்போது அவர்கள் தாங்கள் செய்த பாவத்தை உணர்ந்து, கர்த்தரிடத்தில் திரும்பி வந்திருக்கிறார்கள். தங்களுடைய விருப்பமும், ஆசையும் நிறைவேறவேண்டும் என்பதற்காகவே அவர்கள் கர்த்தரிடத்தில் வந்திருக்கிறார்கள். கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவேண்டும் என்னும் தீர்மானம் அவர்களிடத்தில் இல்லை.

அவர்கள் வனாந்தரத்திற்கு திரும்பிப்போகவேண்டும் என்பதே கர்த்தருடைய கட்டளை. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிய தங்களை ஒப்புக்கொடுத்திருந்தால், அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க துணியமாட்டார்கள். கர்த்தர் தங்களுக்கு கட்டளையிட்ட பிரகாரம், அவர்கள் வனாந்தரத்திற்கு திரும்பிப்போயிருப்பார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் துணிகரமான செயலுக்கு மோசே ஒத்துப்போகவில்லை. அவர்களை எச்சரிக்கிறார். ஆனால் அவர்களோ மோசேயின் வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. தங்கள் சுயவிருப்பத்தின் பிரகாரமாகவும், சுயதீர்மானத்தின் பிரகாரமாகவும் அவர்கள் மலையின் உச்சியில் ஏறத்துணிகிறார்கள்.

மோசே அவர்களோடு கூடப்போகவில்லை. கர்த்தருடைய உடன்படிக்கையின் பெட்டியும் மோசேயும் பாளயத்தை விட்டுப் போகவில்லை (எண் 14:44). இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருடைய கட்டளையை மீறி, கர்த்தருக்கு விரோதமாக செயல்பட துணிகிறார்கள்.

உடன்படிக்கைப் பெட்டி எப்போதும் மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருப்பதில்லை. இஸ்ரவேல் புத்திரர் ஒரு முக்கியமான காரியமாகப் பிரயாணம் பண்ணும்போது, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியையும், தங்களோடு எடுத்துச் செல்வது வழக்கம். கர்த்தருடைய பிரசன்னத்திற்கு இது அடையாளம். ஆனால் இங்கு உடன்படிக்கைப்பெட்டி அவர்களோடு செல்லவில்லை.

மோசே இஸ்ரவேல் புத்திரரை எச்சரித்து சொன்ன பிரகாரம், சத்துருக்கள் அவர்களுக்கு விரோதமாக வருகிறார்கள். அப்பொழுது அமலேக்கியரும் கானானியரும் அந்த மலையிலே இருந்து இறங்கி வந்து, அவர்களை முறிய அடித்து, அவர்களை ஓர்மாமட்டும் துரத்துகிறார்கள் (எண் 14:45).

இஸ்ரவேல் ஜனத்தார் மலையின் உச்சியில் ஏறத்துணியும்போது, அமலேக்கியரும் கானானியரும் ஏற்கெனவே அந்த மலையின்மீது இருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தைச் சுற்றிப்பார்ப்பதற்காக வேவுகாரரை அனுப்பினார்கள். கானானியரிடத்திலும் வேவுகாரர் இருக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் ஜனத்தாரின் ஒவ்வொரு அசைவையும் வேவுபார்க்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மலையின்மேல் ஏறுவதற்கு முன்பாகவே, சத்துருக்கள் மலையிலிருந்து இறங்கி வருகிறார்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாத ஜனத்திற்கு, ஆபத்து தேடி வரும். அது சீக்கிரத்தில் வரும். அமலேக்கியரும் கானானியரும் இஸ்ரவேல் புத்திரரை முறியடித்து துரத்தியபோது, இஸ்ரவேல் புத்திரரில் அநேகர் செத்துப்போயிருப்பார்கள் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் வணங்காக்கழுத்துள்ள ஜனமாகயிருந்தாலும், அவர்களுடைய இருதயங்களில் நீதியோ, உத்தமமோ இல்லாதிருந்தாலும், கர்த்தர் அவர்களை தமது நீதியினாலும், அவர்களுடைய முற்பிதாக்களுக்கு தாம் ஆணையிட்டுச்சொன்ன வார்த்தையை நிறைவேற்றும்படியாகவும், கர்த்தர் அவர்களுக்கு கானான் தேசத்தைச் சுதந்தரிக்கக்கொடுக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரருடைய அவிசுவாசமும், கலகக்குணமும் அவர்களைவிட்டு ஒருபோதும் நீங்கவில்லை. மோசே அவர்களைப்பற்றிச் சொல்லும்போது, "நான் உங்களை அறிந்த நாள்முதற் கொண்டு, நீங்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறவர்களாயிருந்தீர்கள்" (உபா 9:24) என்று சொல்லுகிறார்.

எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரரை விடுவித்து, வழிநடத்தி வந்த காலத்திலிருந்துதான், அவர்களுடைய கலகக்குணத்தைக் குறித்து கர்த்தர் பேசுகிறார். இதற்கு முன்பு, அவர்கள் கர்த்தருக்கு எதிராகக் கலகம் பண்ணியதை அவர் சகித்துக் கொண்டார். ஏனெனில் அப்போது அவர்களுடைய பாடுகளிலிருந்து அவர்களை மீட்பதற்கு யாருமில்லை.

ஆனால் இப்போதோ இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பலத்த கையையும், ஓங்கிய புயத்தையும் கண்டிருக்கிறார்கள். கர்த்தருக்கு எதிராகக் கலகம் பண்ணுவதற்கு அவர்களுக்குக் காரணம் எதுவுமில்லை. தம்முடைய கற்பனைகளுக்கு இஸ்ரவேலர்கள் கீழ்ப்படிவார்கள் என்று கர்த்தர் எதிர்பார்த்தார். அவர்களும் கீழ்ப்படிவதாக மூன்றுமுறை வாக்குப்பண்ணினார்கள். (யாத் 19:8; யாத் 24:3,7). ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகத் தொடர்ந்து கலகம் பண்ணுகிறவர்களாக இருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணியதினால், கர்த்தருடைய கடுங்கோபம் அவர்கள்மேல் மூண்டது. கர்த்தர் தமது கோபத்தினால் இஸ்ரவேல் புத்திரரை அழித்துப்போடுவதாகவும் சொல்லிவிட்டார். கர்த்தருடைய கோபமான வார்த்தைகளைக் கேட்டு மோசே தன் இருதயத்தில் வேதனைப்படுகிறார். அவர் இஸ்ரவேல் புத்திரருக்காக கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அழிப்பதாக சொன்னபடியினால், மோசே முன்போல் கர்த்தரின் சமுகத்தில் இரவும் பகலும் நாற்பதுநாள் விழுந்துகிடக்கிறார். அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கிப் பண்ணின விண்ணப்பமாவது (உபா 9:25).

"நான் முன்போல் கர்த்தரின் சமுகத்தில் இரவும் பகலும் நாற்பதுநாள் விழுந்துகிடந்தேன்" என்பது உபா 9:18-21 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் இரண்டாவது நாற்பதுநாள் உபவாச சம்பவமாகும்.

"கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் உம்முடைய மகத்துவத்தினாலே மீட்டு, பலத்த கையினால் எகிப்திலிருந்து கொண்டுவந்த உமது ஜனத்தையும், உமது சுதந்தரத்தையும் அழிக்காதிருப்பீராக" (உபா 9:26) என்றும்,

"கர்த்தர் அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருந்த தேசத்தில் அவர்களைப் பிரவேசிக்கப்பண்ணக்கூடாமற் போனபடியினாலும், அவர்களை வெறுத்தபடியினாலும், அவர்களை வனாந்தரத்தில் கொன்றுபோடும்படிக்கே கொண்டுவந்தார் என்று நாங்கள் விட்டுப் புறப்படும்படி நீர் செய்த தேசத்தின் குடிகள் சொல்லாதபடிக்கு, தேவரீர் இந்த ஜனங்களின் முரட்டாட்டத்தையும், இவர்கள் ஆகாமியத்தையும், இவர்கள் பாவத்தையும் பாராமல், உமது தாசராகிய ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களை நினைத்தருளும்" (உபா 9:27,28) என்றும்,

"நீர் உமது மகா பலத்தினாலும், ஓங்கிய புயத்தினாலும் புறப்படப்பண்ணின இவர்கள் உமது ஜனமும் உமது சுதந்தரமுமாயிருக்கிறார்களே" (உபா 9:28) என்றும் மோசே கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

10 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ணினாலும், கர்த்தர் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு ஒப்புரவாகியிருக்கிறார். கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் அவர்களுக்கு காண்பிக்கப்பட்டதற்கு அடையாளமாக, இந்த வசனப்பகுதியில் பல சம்பவங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் இந்த சம்பவங்களை ஒருபோதும் மறக்கக்கூடாது.

கர்த்தர் உடன்படிக்கையின் கற்பலகைகளை இஸ்ரவேல் புத்திரருக்கு மறுபடியும் புதுப்பிக்கிறார் (உபா 10:1-5). இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தை நோக்கி பிரயாணம்பண்ணுமாறு கர்த்தர் அவர்களுக்கு கட்டளை கொடுக்கிறார் (உபா 10:6,7). தம்முடைய ஊழியத்திற்காக கர்த்தர் லேவியின் கோத்திரத்தை பிரித்தெடுக்கிறார் (உபா 10:8,9).

ஆரோன் மரித்து அடக்கம்பண்ணப்பட்ட பின்பு அவருடைய ஸ்தானத்திலே, அவருடைய குமாரனாகிய எலெயாசாரை கர்த்தர் ஆசாரியனாக நியமிக்கிறார் (உபா 10:6). மோசே கர்த்தருடைய சமுகத்திலே இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசி ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர் மோசேயின் ஜெபத்தை அங்கீகரிக்கிறார் (உபா 10:10,11).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கென்று அவருடைய வழிகளிலெல்லாம் நடக்கவேண்டும். அவர்கள் கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, தங்கள் முழுஇருதயத்தோடும், தங்கள் முழுஆத்துமாவோடும், தங்கள் தேவனாகிய கர்த்தரை சேவிக்கவேண்டும் (உபா 10:12-22).

கர்த்தருடைய ஆசீர்வாதம் உபா 10:1-11

உபா 10:1. அக்காலத்திலே கர்த்தர் என்னை நோக்கி: நீ முந்தினவைகளுக்கொத்த இரண்டு கற்பலகைகளை வெட்டிக் கொண்டு, மலையின்மேல் ஏறி, என்னிடத்தில் வா; ஒரு மரப்பெட்டியையும் செய்வாயாக.

உபா 10:2. நீ உடைத்துப்போட்ட முந்தின பலகைகளில் இருந்த வார்த்தைகளை நான் அந்தப் பலகைகளில் எழுதுவேன்; நீ அவைகளைப் பெட்டியிலே வைப்பாயாக என்றார்.

உபா 10:3. அப்படியே நான் சீத்திம் மரத்தினால் ஒரு பெட்டியைச் செய்து, முந்தினவைகளுக்கொத்த இரண்டு கற்பலகைகளை வெட்டி, அவைகளை என் கையிலே எடுத்துக்கொண்டு மலையில் ஏறினேன்.

உபா 10:4. முன்னே சபைகூடிவந்த நாளில் கர்த்தர் மலையில் அக்கினி நடுவிலிருந்து உங்களுக்கு விளம்பின பத்துக் கற்பனைகளையும் அவர் முன் எழுதியிருந்தபிரகாரம் அந்தப் பலகைகளில் எழுதி, அவைகளை என்னிடத்தில் தந்தார்.

உபா 10:5. அப்பொழுது நான் திரும்பி மலையிலிருந்து இறங்கி, அந்தப் பலகைகளை நான் செய்த பெட்டியிலே வைத்தேன்; கர்த்தர் எனக்குக் கட்டளையிட்டபடியே அவைகள் அதிலே வைத்திருக்கிறது.

உபா 10:6. பின்பு இஸ்ரவேல் புத்திரர் பெனெயாக்கானுக்கடுத்த பேரோத்திலேயிருந்து மோசெராவுக்குப் பிரயாணம்பண்ணினார்கள்; அங்கே ஆரோன் மரித்து அடக்கம்பண்ணப்பட்டான்; அவன் ஸ்தானத்திலே அவன் குமாரனாகிய எலெயாசார் ஆசாரியனானான்.

உபா 10:7. அங்கேயிருந்து குத்கோதாவுக்கும், குத்கோதாவிலிருந்து ஆறுகளுள்ள நாடாகிய யோத்பாத்துக்கும் பிரயாணம் பண்ணினார்கள்.

உபா 10:8. அக்காலத்திலே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமப்பதற்கும், இந்நாள்வரைக்கும் நடந்துவருகிறது போல, கர்த்தருடைய சந்நிதியிலே நின்று அவருக்கு ஆராதனை செய்வதற்கும், அவர் நாமத்தைக்கொண்டு ஆசீர்வதிப்பதற்கும், கர்த்தர் லேவியின் கோத்திரத்தைப் பிரித்தெடுத்தார்.

உபா 10:9. ஆகையால் லேவிக்கு அவன் சகோதரரோடே பங்கும் சுதந்தரமும் இல்லை; உன் தேவனாகிய கர்த்தர் அவனுக்குச் சொன்னபடி, கர்த்தரே அவனுக்குச் சுதந்தரம்.

உபா 10:10. நான் முந்தின பிரகாரமாகவே நாற்பதுநாள் இரவும் பகலும் மலையில் இருந்தேன்; கர்த்தர் அந்த முறையும் என் மன்றாட்டைக் கேட்டு, உன்னை அழிக்காமல் விட்டார்.

உபா 10:11. கர்த்தர் என்னை நோக்கி: நான் கொடுப்பேன் என்று அவர்களுடைய பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தில் அவர்கள் போய் அதைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி, நீ எழுந்து, ஜனத்திற்கு முன்பாகப் பிரயாணப்பட்டுப் போ என்றார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு ஒப்புரவாகியிருக்கிறார். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணி, அவருக்கு கடும் கோபம் உண்டாக்கினார்கள். கர்த்தரோ தம்முடைய கிருபையினால் அவர்களுடைய பாவங்களை மன்னித்து, அவர்களோடு ஒப்புரவாகி, தம்முடைய கிருபைகளையும் இரக்கங்களையும் அவர்களுக்கு மறுபடியும் காண்பிக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு ஒப்புரவாகியிருக்கிறார் என்பதற்கு நான்கு காரியங்கள் இங்கு அடையாளமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன : 1. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு மறுபடியுமாக இரண்டு கற்பலகைகளைக் கொடுக்கிறார். 2. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை கானான் தேசத்தை நோக்கி தொடர்ந்து வழிநடத்துகிறார். 3. தம்முடைய ஊழியத்தை செய்வதற்கு கர்த்தர் லேவி கோத்திரத்தாரை நியமனம்பண்ணுகிறார். 4. மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக தம்முடைய சமுகத்திலே பரிந்துபேசி ஜெபம்பண்ணுவதை கர்த்தர் அங்கீகரிக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு மறுபடியுமாய் தம்முடைய கிருபைகளையும், இரக்கங்களையும் வெளிப்படுத்துகிறார். அவர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய கட்டளைகளை கற்பலகைகளில் எழுதிக்கொடுக்கிறார். கர்த்தருடைய சிலாக்கியம் இஸ்ரவேல் புத்திரருக்கு கிடைத்திருக்கிறது என்பதற்கு, இந்த கற்பலகைகள் அடையாளங்களாகவும், அச்சாரமாகவும் இருக்கிறது.

அக்காலத்திலே கர்த்தர் என்னை நோக்கி, "நீ முந்தினவைகளுக்கொத்த இரண்டு கற்பலகைகளை வெட்டிக் கொண்டு, மலையின்மேல் ஏறி, என்னிடத்தில் வா; ஒரு மரப்பெட்டியையும் செய்வாயாக. நீ உடைத்துப்போட்ட முந்தின பலகைகளில் இருந்த வார்த்தைகளை நான் அந்தப் பலகைகளில் எழுதுவேன்; நீ அவைகளைப் பெட்டியிலே வைப்பாயாக" (உபா 10:1,2) என்று சொல்லுகிறார். இந்த மரப்பெட்டி யாத் 25:10-22 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் அதே மரப்பெட்டி ஆகும்.

முதலாவது நாற்பது நாட்களில் ஆசரிப்புக் கூடாரத்தையும், அதன் பணிமுட்டுக்களையும் செய்யும் கட்டளைகளைக் கர்த்தர் மோசேக்குக் கொடுக்கிறார். மோசே இரண்டாவது நாற்பது நாட்களுக்கு மலையின்மீது தங்கியிருப்பதற்கு முன்பு அல்லது தங்கியிருக்கும்போது ஆசரிப்புக்கூடாரத்து வேலை செய்தவர்கள் இந்தப் பெட்டியைச் செய்திருக்க வேண்டும். உபா 10:3,5, யாத் 34:4 ஆகிய வசனங்களின் அடிப்படையில் மோசே மலையின்மீது ஏறிச்சென்றபோது தன்னோடு கற்பலகைகளை மட்டுமே எடுத்துச் சென்றார் என்பது தெரியவருகிறது.

"நீ உடைத்துப்போட்ட முந்தின பலகைகளில் இருந்த வார்த்தைகளை நான் அந்தப் பலகைகளில் எழுதுவேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். இதற்கு முன்பு எழுதியதுபோன்று, கர்த்தர் மறுபடியுமாகப் பத்துக் கற்பனைகளை இந்தக் கற்பலகைகளில் எழுதுவதாக வாக்குப்பண்ணுகிறார் (உபா 10:2; யாத் 24:12; யாத் 32:15; யாத் 34:1,4) யாத் 34:27-28 ஆகிய வசனங்களில் மோசே புதிய கற்பலகைகளில் பத்துக் கற்பனைகளை எழுதியதுபோன்று தெரிகிறது. ஆனால் அந்த வசனங்களில் பயன்படுத்தப் பட்டிருக்கும் பிரதிப் பெயர்ச்சொற்களைப் பார்க்கும் போது இதை மோசே எழுதவில்லை என்பதும் கர்த்தரே இதை எழுதினார் என்பதும் தெளிவாகிறது.

யாத் 34:27 ஆவது வசனத்தில் கர்த்தர் மோசேயையும், பத்துக் கற்பனைகளையும் தனியாக எழுதுமாறு கூறியிருக்கிறார். மோசே அவற்றை இரண்டு முறை எழுதியிருக்கிறார் (யாத் 20, உபா 5) இது தவிர பத்துக் கற்பனைகளின் சில பகுதிகளை மோசே பல இடங்களில் எழுதியிருக்கிறார். இரண்டு கற்பலகைகளிலும் கர்த்தர் இரண்டாம் முறையாக எழுதி, அதைத் தன்னிடம் கொடுத்ததாக மோசே கூறியிருக்கிறார். (உபா 10:4).

புதிய ஏற்பாட்டுக்காலத்திலே கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை நம்முடைய இருதயங்களில் வைத்திருக்கிறார். நாம் கர்த்தரோடு ஒப்புரவாகியிருக்கிறோம் என்பதற்கும், கர்த்தர் நம்முடைய பாவங்களை மன்னித்து, அவர் நம்மோடு ஒப்புரவாகியிருக்கிறார் என்பதற்கும் அடையாளமாக கர்த்தருடைய கற்பனைகள் நம்முடைய இருதயத்தில் எழுதப்பட்டிருக்கிறது. நாம் கர்த்தருக்குள் பெற்றிருக்கும் சந்தோஷத்திற்கு, நம்முடைய இருதயத்தில் எழுதப்பட்டிருக்கும் கர்த்தருடைய வார்த்தைகளே அடையாளமாகவும் அச்சாரமாகவும் இருக்கிறது.

மோசே முந்தின கற்பலகைகளை உடைத்துப்போட்டார். கர்த்தர் அதில் எழுதியிருந்த வார்த்தைகளை, இப்போது புதிய கற்பலகைகளில் எழுதுவதாக வாக்குப்பண்ணுகிறார். மோசே புதிதாய் எழுதப்பட்ட அந்தக் கற்பலகைகளை, அதற்கென்று ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற பெட்டியிலே வைக்கவேண்டும்.

நம்முடைய இருதயம் ஒரு உடன்படிக்கைப் பெட்டியைப்போல இருக்கிறது. பேழையிலே கர்த்தர் எழுதின கற்பலகைகள் வைக்கப்பட்டது. நம்முடைய இருதயமும் கர்த்தருடைய பிரமாணத்தையும், அவருடைய சுவிசேஷத்தையும் ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும்.

கிறிஸ்துவே நமக்கு உடன்படிக்கைப்பெட்டியைப்போல இருக்கிறார் என்றும், அவருக்குள்ளே நம்முடைய ஆத்தும இரட்சிப்பு பத்திரமாக வைக்கப்பட்டிருக்கிறது என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

மோசே முந்தின கற்பலகைகளுக்கு ஒத்த இரண்டு புதிய கற்பலகைகளை வெட்டிக்கொண்டு கர்த்தரிடத்தில் வருகிறார். அந்தக் கற்பலகைகளை வைப்பதற்கு மோசே ஒரு மரப்பெட்டியையும் செய்கிறார். கர்த்தரே தம்முடைய கட்டளைகளை அந்தக் கற்பலகைகளில் எழுதுகிறார். முந்தின கற்பலகைகளில் இருந்த வார்த்தைகளை, இப்போது வெட்டப்பட்டிருக்கிற இரண்டு கற்பலகைகளில் கர்த்தர் மறுபடியுமாய் எழுதுகிறார். மோசே இவ்விரண்டு கற்பலகைகளையும், அதற்கென்று செய்யப்பட்டிருக்கிற மரப்பெட்டியிலே வைக்கவேண்டும்.

மோசே கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் சீத்திம் மரத்தினால் ஒரு பெட்டியைச் செய்து, முந்தினவைகளுக்கொத்த இரண்டு கற்பலகைகளை வெட்டி, அவைகளை தன்னுடைய கையிலே எடுத்துக்கொண்டு மலையில் ஏறுகிறார் (உபா 10:3).

முன்னே சபைகூடிவந்த நாளில் கர்த்தர் மலையில் அக்கினி நடுவிலிருந்து இஸ்ரவேல் புத்திரருக்கு விளம்பின பத்துக் கற்பனைகளையும் அவர் முன் எழுதியிருந்தபிரகாரம் அந்தப் பலகைகளில் எழுதி, அவைகளை மோசேயினிடத்தில் தருகிறார் (உபா 10:4).

அப்பொழுது மோசே திரும்பி மலையிலிருந்து இறங்கி, அந்தப் பலகைகளை தான் செய்த பெட்டியிலே வைக்கிறார்; கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே அவைகள் அதிலே வைத்திருக்கிறது (உபா 10:5).

மோசே மலையின் மேல் ஏறியபோது, பெட்டி பாளயத்திலேயே இருக்கிறது. இது ஆசரிப்புக் கூடாரத்தில் இருக்கும் நிரந்தர பேழை.

"கர்த்தர் எனக்கு கட்டளையிட்டபடியே அவைகள் அதிலே வைத்திருக்கிறது" என்று மோசே சொல்லும்போது, அவர் ஆசரிப்புக்கூடாரத்தை நோக்கிப் பார்த்துசொல்லுகிறார். கர்த்தருடைய கட்டளைகள் எழுதப்பட்ட கற்பலகைகள் மரப்பெட்டியிலே வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப்பெட்டி இப்பொழுது ஆசரிப்புக்கூடாரத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

கர்த்தர் தன்னிடத்தில் ஒப்புவித்த வேலையை மோசே நேர்த்தியாக செய்து முடித்து, அதை இஸ்ரவேல் புத்திரரிடத்தில் ஒபவித்திருக்கிறார். மோசே ஒவ்வொரு காரியத்தையும் கர்த்தர் தனக்கு கட்டளையிட்ட படியே செய்து முடித்திருக்கிறார். கர்த்தரே அந்தக் கற்பலகைகளில் தம்முடைய கட்டளைகளை எழுதினார். அதில் மனுஷருடைய கரம் எந்த மாற்றத்தையும் செய்யவில்லை. கர்த்தருடைய வார்த்தையோடு ஒரு வார்த்தையும் கூட்டப்படவுமில்லை, குறைக்கப்படவுமில்லை. உடன்படிக்கைப்பெட்டிக்குள்ளே நோக்கிப் பார்க்கிறவர்கள்கூட மரித்துப்போவார்கள். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை பரிசுத்தப்படுத்தி, அதைப் பாதுகாக்கிறார்.

கர்த்தர் மோசேயினிடத்தில், தம்முடைய கற்பனைகளை இரண்டு பலகைகளிலும் எழுதி, அவைகளை மோசேயினிடத்தில் தந்தார். அதுபோலவே கர்த்தர் இக்காலத்தில், தம்முடைய பரிசுத்த வேதாகமத்தையும், ஒய்வுநாள் பிரமாணத்தையும், தம்முடைய நியமங்களையும் விசுவாசிகளாகிய நம்மிடத்தில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். இவையெல்லாம் நம் மத்தியிலே கர்த்தருடைய பிரசன்னத்திற்கும், அவருடைய சிலாக்கியத்திற்கும் அடையாளமாயிருக்கிறது.

கர்த்தர் தன்னிடத்தில் கொடுத்த கற்பலகைகளை மோசே தான் செய்த பெட்டியிலே வைத்ததுபோல, கர்த்தர் நம்மிடத்தில் ஒப்புக்கொடுத்திருக்கிற, அவருடைய வார்த்தைகளை நம்முடைய இருதயத்தில் வைத்திருக்கவேண்டும்.

"நீ கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தோடும் அன்போடும் என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு. உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்" (2தீமோ 1:13,14).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை கானான் தேசத்தை நோக்கி வழிநடத்துகிறார். ஆனாலும் அவர்களுடைய இருதயங்கள் எகிப்து தேசத்தை நோக்கி பின்னிட்டு திரும்பிப் பார்க்கிறது. கர்த்தரோ அவர்களுடைய அவிசுவாசங்களை அவர்களை விட்டு நீக்கிப்போட்டு, அவர்களை கானான் தேசத்தை நோக்கி வழிநடத்துகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் பெனெயாக்கானுக்கடுத்த பேரோத்திலேயிருந்து மோசெராவுக்குப் பிரயாணம்பண்ணுகிறார்கள். அங்கேயிருந்து குத்கோதாவுக்கும், குத்கோதாவிலிருந்து ஆறுகளுள்ள நாடாகிய யோத்பாத்துக்கும் பிரயாணம் பண்ணுகிறார்கள் (உபா 10:6,7).

பேரோத் என்பதற்கு துரவுகள் என்று பொருள். இங்கு ஓர் என்னும் மலையில் ஆரோன் மரித்தார். அவருடைய மரணத்தையும், அவருக்குப் பின்பு அவருடைய ஸ்தானத்தில் அவருடைய குமாரன் எலெயாசார் ஆசாரியனானதையும் இந்தச் சம்பவம் அறிமுகப்படுத்துகிறது.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே பிரயாணம்பண்ணினாலும், அவர்கள் அங்கேயும் கர்த்தரை ஆராதிக்கிறார்கள். ஆரோன் அவர்களுக்கு பிரதான ஆசாரியராயிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் மோசெராவுக்கு பிரயாணம்பண்ணியபோது, ஆரோன் அங்கே மரித்து அடக்கம்பண்ணப்படுகிறார்; ஆரோனுடைய ஸ்தானத்திலே அவருடைய குமாரனாகிய எலெயாசார் ஆசாரியனாகிறார் (உபா 10:6).

ஆரோனிலிருந்து கி.பி. 70 வரையிலும் 86 பேர் இஸ்ரவேலின் பிரதான ஆசாரியர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். அவையாவன :

1. ஆரோனிலிருந்து பாபிலோனிய சிறையிருப்பு வரையிலும் - 29 பிரதான ஆசாரியர்கள்.

2. பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து கி.பி. 70 ஆம் வருஷம் வரையிலும் - 57 பிரதான ஆசாரியர்கள்.

ஆரோனிலிருந்து பாபிலோனிய சிறையிருப்பு வரையிலும் - 29 பிரதான ஆசாரியர்கள் :

1. ஆரோன் - வனாந்தரத்தில் 38 வருஷங்கள் (யாத் 28-29; லேவி 8; சங் 133; எபி 5:1-4)

2. எலெயாசார் - கானான் தேசத்தை சுதந்தரித்து, குடியேறிய சுமார் 30 வருஷங்கள். (எண் 20:24-29; உபா 10:6; யோசு 24:33)

3. பினெகாஸ் - நியாயாதிபதிகளின் காலம். (எண் 25:7-15; 1நாளா 6:4,50; நியா 20:28)

4. அபிசுவா அல்லது அபியேசர் - நியாயாதிபதிகளின் காலம் (நியா 6:34; 1நாளா 6:4-5,50)

5. புக்கி - நியாயாதிபதிகள் காலம் (1நாளா 6:5, 51; எஸ்றா 7:4)

6. ஊசி - நியாயாதிபதிகளின் காலம் (1நாளா 6:5-6, 51; எஸ்றா 7:4)

7. செரக்கியா ஏலி அகிதூப் - நியாயாதிபதிகளின் காலமும், சாமுவேல் பிறந்த சமயமும் (1நாளா 6:6,31; எஸ்றா 4; 1சாமு 1:9-4:22; 1இராஜா 2:27)

8. மெராயோத் - சாமுவேலின் காலத்தில் நியாயாதிபதிகளின் காலம். (1நாளா 6:6-7,51; 1நாளா 9:11; எஸ்றா 7:3)

9. அமரியா - சாமுவேலின் காலத்தில் கடைசிநியாயாதிபதிகளின் காலம், சவுலின் ஆட்சிக்காலத்தின் ஆரம்பகாலம். அல்லது இஸ்ரவேலின் ராஜாக்களின் காலத்தின் ஆரம்பக்காலம். (1நாளா 6:7,52)

10. அகிமெலேக்கு - சவுலின் ஆட்சிக்காலம், சவுல் அவனைக் கொன்று போட்டான். (1நாளா 8:7; 1சாமு 21:1-15; 1சாமு 22:9-22)

11. சாதோக்கு - சவுல், தாவீது ஆகியோரின் ஆட்சிக்காலம். (1நாளா 6:8,53; 1சாமு 14:3; 1சாமு 22:9-20). அபியாத்தாருக்குப் பின்பு சாலொமோனின் ஆட்சிக்காலத்திலும், ஆசாரியனாக இருக்கிறான். (1இராஜா 1:8-45; 1இராஜா 2:35) அபிமெலேக்கு அபியத்தாரின் குமாரன். சாதோக்கோடு சிலகாலம் ஆசாரியனாக இருந்தான். (1நாளா 18:16)

12. அபியத்தார் - சாதோக்கோடு ஆசாரியனாக இருந்தான். தாவீதின் ஆட்சிக்காலம். (1சாமு 22:20-23; 1சாமு23:9; 1சாமு 30:7; 2சாமு 15:24-29; 2சாமு 17:15-21; 2சாமு 19:11; 2சாமு 20:25). சாலொமோனின் ஆட்சிக் காலத்திலும் ஆசாரியனாக இருந்தான். (1இராஜா 1:8-45; 1இராஜா 2:35)

13. அகிமாஸ் - சாலொமோனின் ஆட்சிக்காலமும், ரெகொபெயாமின் ஆட்சிக்காலமும் (1நாளா 6:8; 2சாமு 15:27, 36; 2சாமு 17:17-20)

14. அசரியா அல்லது அமரியா - ஆசா, யோசபாத் ஆகியோரின் ஆட்சிக்காலம். (1நாளா 6:9; 2நாளா 19:11)

15. யோகனான் யோய்தா - யோசேபாள், யோராம், அகசியா, அத்தாலியாள், யோவாஸ் ஆகியோரின் ஆட்சிக்காலம். (2இராஜா 11-12; 1நாளா 6:9; 2நாளா 23-24)

16. அசரியா அல்லது சகரியா - யோவாகாசின் ஆட்சிக்காலம். (1நாளா 6:10; 2நாளா 24:20-22)

17. அமரியா - யோவாகாஸ், அமத்சியா, உசியா ஆகியோரின் ஆட்சிக்காலம். (1நாளா 6:11)

18. அசரியா - உசியாவின் ஆட்சிக்காலம். (2நாளா 26:17-20; 2நாளா 31:10)

19. அகிதூப் - உசியா, யோதாம் ஆகியோரின் ஆட்சிக்காலம். (1நாளா 6:11)

20. சாதோக்கு - யோதாமின் ஆட்சிக்காலம். (1நாளா6:12)

21. சல்லூம் - ஆகாஸ், எசேக்கியா ஆகியோரின் ஆட்சிக்காலம். (1நாளா 6:12; 1நாளா 9:11; எஸ்றா 7:2)

22. உரியா - ஆகாசின் ஆட்சிக்காலம். (2இராஜா 16:10-16)

23. உரியா - எசேக்கியாவின் ஆட்சிக்காலம். (ஏசா 8:2)

24. இல்க்கியா - எசேக்கியா, மனாசே, யோசியா ஆகியோரின் ஆட்சிக்காலம். (1நாளா 6:13; எஸ்றா 7:1; 2இராஜா 22:4-14; 2இராஜா 23:4, 25; 2இராஜா 34:9-22)

25. அசரியா - ஆமோன், யோசியா ஆகியோரின் ஆட்சிக்காலம். (1இராஜா 6:14)

26. செராயா - யோவாகாஸ், யோயாக்கீம் ஆகியோரின் ஆட்சிக்காலம். (1நாளா. 6:14; 2இராஜா 25:19; எரே 52:24)

27. யோசதாக் - யோயாக்கீம், சிதேக்கியா ஆகியோரின் ஆட்சிக்காலம். (1நாளா 6:14-15)

28. பஸ்கூர் - சிதேக்கியாவின் ஆட்சிக்காலம் (எரே 20:1)

29. செப்பனியா - சிதேக்கியாவின் ஆட்சிக்காலம் (எரே 29:25-29)

பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து கி.பி. 70 ஆம் வருஷம் வரையிலும் - 57 பிரதான ஆசாரியர்கள் :

1. யோசுவா (எஸ்றா 2:2; எஸ்றா 4:1-6; ஆகாய் 1:1,12-14; ஆகாய் 2:2; சக 3:1-8)

2. எஸ்றா (எஸ்றா 7:12,21; எஸ்றா 10:10-16)

3. யோயாக்கீம்

4. எலியாசாப் - கி.மு. 420 (நெகே 3:1,20; நெகே 13:4)

5. யோய்தா - கி.மு. 413 (நெகே 12:10)

6. யோனத்தான் - கி.மு. 373 (நெகே 12:11) (நெகே 12:11) இவர் மகா அலெக்சாண்டரை எருசலேமில் வரவேற்றவர். இவர் கி.மு. 321 ஆம் வருஷத்தில் மரித்தார்.

8. முதலாம் ஒனியாஸ் - கி.மு. 321. இவர் கி.மு. 301 ஆம் வருஷத்தில் மரித்தார்.

9. முதலாம் சீமோன் - கி.மு. 300. இவர் கி.மு. 291 ஆம் வருஷத்தில் மரித்தார்.

10. எலெயாசார் - கி.மு. 291. இவருடைய காலத்தில் பழைய ஏற்பாட்டில் கிரேக்க மொழிபெயர்ப்பாகிய செப்துவஜிந்த் கி.மு. 285 ஆம் வருஷம் மொழிபெயர்க்கப்படுகிறது. இவர் கி.மு. 276 ஆம் வருஷத்தில் மரித்தார்.

11. மனாசே - கி.மு. 276. இவர் கி.மு. 250 ஆம் வருஷத்தில் மரித்தார்.

12. இரண்டாம் ஒனியாஸ் - கி.மு. 250. இவர் கி.மு. 217 ஆம் வருஷத்தில் மரித்தார்.

13. இரண்டாம் சீமோன் - கி.மு. 217. இவர் கி.மு. 195 ஆம் வருஷத்தில் மரித்தார்.

14. மூன்றாம் ஒனியாஸ் - கி.மு. 175. இவர் கி.மு. 167 ஆம் வருஷத்தில் மரித்தார்.

15. யாசோன் அல்லது இயேசு - கி.மு. 175

16. நான்காம் ஒனியாஸ் - கி.மு. 172. இவர் கி.மு. 168 ஆம் வருஷத்தில் மரித்தார்.

17. லிசிமார்க்கஸ் - இவர் கி.மு. 170 ஆம் வருஷத்தில் மரித்தார்.

18. அல்சிமஸ், யாசிமஸ் அல்லது யோயாக்கீம் - கி.மு. 160

19. ஐந்தாம் ஒனியாஸ் - கி.மு. 157. இவர் எருசலேமில் ஆசாரிய ஊழியம் செய்யவில்லை. எகிப்திற்குச் சென்று அங்கு ஒனியோனின் ஆலயத்தைக் கட்டினார்.

20. யூதாஸ் மக்கபேயஸ் - எருசலேமில் பலிபீடத்தைப் புதுப்பித்து பலிகளைச் செலுத்தினார். கி.மு. 165. இவர் கி.மு. 153 ஆம் வருஷத்தில் மரித்தார்.

21. அசமோனியனான யோனத்தான் - யூதாஸ் மக்கபேயசின் சகோதரன். கி.மு. 153. இவர் கி.மு. 143 ஆம் வருஷத்தில் மரித்தார்.

22. ஜான் கிர்கேனஸ் - கி.மு. 136. இவர் கி.மு. 106 ஆம் வருஷத்தில் மரித்தார்.

23. அரிஸ்தோபுலஸ் - கி.மு. 106.

24. அலெக்ஸாண்டர் யன்னேயஸ் - கி.மு. 105.

25. கிர்கேனஸ் - கி.மு. 68 முதல் கி.மு. 42 வரை.

26. அரிஸ்தோபுலஸ் - கிர்கேனசின் சகோதரர். கி.மு. 69 முதல் 66 வரை.

27. ஆண்டிகோனஸ் - அரிஸ்தோபுலசின் குமாரன். கி.மு. 42 முதல் 37 வரை.

28. சோசியஸ் - கி.மு. 37

29. அனானேல் - கி.மு. 37 முதல் 36 வரை. பாபிலோனைச் சேர்ந்தவன். ஏரோது இவனைப் பிரதான ஆசாரியனாக்கினார்.

30. அரிஸ்தோபுலஸ் - அசமோனியரின் கடைசியானவன். கி.மு. 35. ஒரு வருஷம் பிரதான ஆசாரியனாக இருந்தான். மறுபடியும் அனானேல் பிரதான ஆசாரியனானான். (கி.மு.35)

31. பாபீசின் குமாரனாகிய இயேசு கி.மு. 20இல் பதவி இழந்தான்.

32. சீமோன் - கி.மு. 20. கி.மு. 5 இல் பதவி இழந்தான்.

33. மத்தியாஸ் - கி.மு. 5

34. ஏலேம் - கி.மு. 5. ஒருநாள் மட்டும் பிரதான ஆசாரியன்.

35. யோயாசார் - கி.மு. 4. இவனுடைய காலத்தில் இயேசு கிறிஸ்து பிறந்தார். கி.மு. 1இல் பதவி இழந்தான்.

36. எலெயாசார் - யோயாசாரின் சகோதரன். கி.மு. 1

37. சீயாவின் குமாரனாகிய இயேசு - கி.பி. 6. யோயாசார் மறுபடியும் கி.பி. 7-இல் பிரதான ஆசாரியனாகி கி.பி. 13-இல் பதவி இழந்தான்.

38. அனானஸ் - சேத்தின் குமாரன். கி.பி. 13 முதல் 24 வரை.

39. இஸ்மவேல் - பாலாவின் குமாரன். கி.பி. 24

40. எலெயாசார் - அனானசின் குமாரன். கி.பி. 24

41. சீமோன் - கமதசின் குமாரன். கி.பி. 25

42. யோசேப்பு என்னும் காய்பா - கி.பி. 26 முதல் 25 வரை. இவனுடைய ஆட்சிக்காலத்தில் இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தார்கள்.

43. யோனத்தான் - அனனிசின் குமாரன். கி.பி. 35 முதல் 37 வரை.

44. தியோப்பிலு - யோனத்தானின் குமாரன். கி.பி. 37 முதல் 41 வரை.

45. சீமோன் என்னும் கன்தரஸ் - சீமோன் போதசின் குமாரன். கி.பி. 41

46. மத்தியாஸ் - அனனசின் குமாரன். கி.பி. 42

47. எலியோனேயஸ் - கி.பி. 44 முதல் 45 வரை.

48. சீமோன் - கன்தரசின் குமாரன். கி.பி. 45. அதே வருஷத்தில் பதவி இழந்தான்.

49. யோசேப்பு - கானேசின் குமாரன். கி.பி. 45 முதல் 57 வரை.

50. அனனியா - நேபோதேசின் குமாரன். கி.பி. 47 முதல் 63 வரை.

51. இஸ்மவேல் - கி.பி. 63

52. யோசேப்பு என்னும் காபேயி - கி.பி. 63

53. அனனஸ் - அனனசின் குமாரன். கி.பி. 63

54. அனனசின் குமாரனாகிய இயேசு - கி.பி. 64

55. கமாலியேலின் குமாரனாகிய இயேசு - கி.பி. 64

56. மத்தியாஸ் - தியோபிலுவின் குமாரன். கி.பி. 70

57. பானாஸ் அல்லது பன்னியாஸ் - கி.பி. 70. இவனுடைய காலத்தில் ரோமாப் பேரரசார் எருசலேமையும், தேவாலயத்தையும் அழித்துப் போட்டார்கள். இத்துடன் தேவாலயத்தின் ஆசாரியத்துவப் பட்டம் முடிவு பெறுகிறது. மத் 23:37-39; மத் 24:2; லூக்கா 21:20-24 ஆகிய வசனங்களில் நிறைவேறிற்று.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணும்போது, கர்த்தர் அவர்களுடைய சரீரப்பிரகாரமான தேவைகளை சந்திப்பதுபோல, அவர்களுடைய ஆவிக்குரிய தேவைகளையும் சந்திக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணின நாற்பது வருஷங்களிலும், கர்த்தர் அவர்களுக்கு ஒரு குறைவும் வைக்கவில்லை.

அக்காலத்திலே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமப்பதற்கும், இந்நாள்வரைக்கும் நடந்துவருகிறது போல, கர்த்தருடைய சந்நிதியிலே நின்று அவருக்கு ஆராதனை செய்வதற்கும், அவர் நாமத்தைக்கொண்டு ஆசீர்வதிப்பதற்கும், கர்த்தர் லேவியின் கோத்திரத்தைப் பிரித்தெடுக்கிறார் (உபா 10:8).

கர்த்தர் லேவியின் கோத்திரத்தைப் பிரித்தெடுக்கிறார். இது சீனாய் வனாந்தரத்தில் இஸ்ரவேல் புத்திரர் பாளயமிறங்கியிருந்த போது நடைபெற்ற சம்பவமாகும் (உபா 10:8,10; எண் 3:40-51; எண் 8:5-26; எண் 16:9).

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே, லேவி கோத்திரத்தார் கர்த்தருக்கு ஊழியம் செய்யும் கோத்திரமாகயிருக்கிறார்கள். இவர்கள் கர்த்தருடைய பரிசுத்தமான காரியங்களில் கர்த்தருக்கு ஊழியம் செய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்கு, ஊழியக்காரர்கள் இருப்பது அவர்களுக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய பாக்கியம். கர்த்தருடைய கிருபையும் சிலாக்கியமும் இஸ்ரவேல் புத்திரருக்கு கிடைத்திருக்கிறது என்பதற்கு லேவியரின் ஊழியம் அடையாளமாயிருக்கிறது.

கர்த்தர் தம்முடைய ஊழியத்தை செய்வதற்கு லேவி கோத்திரத்தை பிரித்தெடுக்கிறார். இந்தப் பிரமாணத்தின்படி இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே, கர்த்தருடைய ஊழியம் தடையில்லாமல் தொடர்ந்து நடைபெறுகிறது. லேவி கோத்திரத்தார் தங்களுடைய சந்ததி பரம்பரையாக கர்த்தருடைய ஊழியத்தை தொடர்ந்து செய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

லேவிக்கு அவன் சகோதரரோடே பங்கும் சுதந்தரமும் இல்லை; தேவனாகிய கர்த்தர் அவனுக்குச் சொன்னபடி, கர்த்தரே அவனுக்குச் சுதந்தரம் (உபா 10:9). கர்த்தர் லேவி கோத்திரத்தாருக்கு விசேஷித்த ஊழியத்தைக் கொடுத்து, அவர்களை தம்முடைய ஊழியத்திற்காக பிரித்தெடுத்து, கர்த்தர் அவர்களை பிரதிஷ்டைபண்ணியிருக்கிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் விசுவாசிகளாகிய நம்மீது பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் அளவில்லாமலும், தாராளமாயும் ஊற்றப்படுகிறது. கர்த்தருடைய ஆவியானவர் மனுஷருடைய இருதயங்களில் கிரியை செய்கிறார். ஒவ்வொரு காலத்திலும் தம்முடைய ஊழியத்தை செய்வதற்கு, கர்த்தர் தாமே தம்முடைய பிள்ளைகளை தெரிந்தெடுத்து, அவர்களை தம்முடைய ஊழியத்திற்காக அபிஷேகம்பண்ணுகிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் கர்த்தருடைய ஊழியத்தை லேவி கோத்திரத்தார் மாத்திரம் செய்யவேண்டும் என்னும் நியமனம் எதுவுமில்லை. கர்த்தருக்கு ஊழியம் செய்கிற எல்லோருமே லேவியராயிருக்கிறார்கள். கர்த்தர் சொன்ன பிரகாரம், கர்த்தரே தம்முடைய ஊழியக்காரருக்கு சுதந்தரமாயிருக்கிறார். தம்முடைய ஊழியத்தை செய்கிற ஊழியக்காரர்களுக்கு, கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரம், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும், ஆவியானவரின் வரங்களையும் தாராளமாய்க் கொடுத்து, அவர்களை தம்முடைய ஊழியத்திலே பயன்படுத்துகிறார்.

மோசே கர்த்தருடைய சமுகத்திலே இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசி ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர் மோசேயின் பரிந்து பேசும் மத்தியஸ்த ஊழியத்தை அங்கீகரிக்கிறார். மோசே இந்த வசனப்பகுதியில் தன்னுடைய பரிந்து பேசும் மத்தியஸ்த ஊழியத்தைப்பற்றி இஸ்ரவேல் புத்திரருக்கு விவரித்து சொல்லுகிறார்.

மோசே முந்தின பிரகாரமாகவே நாற்பதுநாள் இரவும் பகலும் மலையில் இருந்தார்; கர்த்தர் அந்த முறையும் மோசேயின் மன்றாட்டைக் கேட்டு, இஸ்ரவேலை அழிக்காமல் விட்டார் (உபா 10:10).

கர்த்தர் மோசேயை நோக்கி, "நான் கொடுப்பேன் என்று அவர்களுடைய பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தில் அவர்கள் போய் அதைத் சுதந்தரித்துக்கொள்ளும்படி, நீ எழுந்து, ஜனத்திற்கு முன்பாகப் பிரயாணப்பட்டுப் போ" (உபா 10:11) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை இஸ்ரவேல் புத்திரருக்கு தலைவராகவும், அதிபதியாகவும் அங்கீகரிக்கிறார். மோசே இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்திச் செல்லவேண்டும். கர்த்தர் மோசேயின் விண்ணப்பத்தைக் கேட்டு, "நீ எழுந்து ஜனத்திற்கு முன்பாக பிரயாணப்பட்டுப்போ" என்று சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு தலைவராகயிருப்பது, கர்த்தர் அவர்களுக்கு காண்பிக்கும் கிருபைக்கும் இரக்கத்திற்கும் அடையாளமாகும். மோசே கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் சிநேகிதராகயிருக்கிறார். மோசே அவர்களுக்கு நடுவே மத்தியஸ்தராகயிருக்கிறார். மோசே கர்த்தருக்கும் உண்மையுள்ளவர். அவர் இஸ்ரவேல் புத்திரருக்கும் உண்மையுள்ளவர்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணி, அவருக்கு கடுங்கோபத்தை உண்டுபண்ணியபோது, கர்த்தர் அவர்களை அழித்துப்போடவேண்டுமென்று தீர்மானம்பண்ணினார். கர்த்தர் கோபப்படும் ஒவ்வொரு முறையும், மோசே கர்த்தருடைய சமுகத்திலே இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசி ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர் மோசேயின் மன்றாட்டைக் கேட்டு, இஸ்ரவேல் புத்திரரை அழிக்காமல் விட்டுவிடுகிறார்.

இஸ்ரவேலருடைய கடமை
உபா 10:12-22

உபா 10:12. இப்பொழுதும் இஸ்ரவேலே, நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளிலெல்லாம் நடந்து, அவரிடத்தில் அன்புகூர்ந்து, உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவித்து,

உபா 10:13. நான் இன்று உனக்குக் கற்பிக்கிற கர்த்தருடைய கற்பனைகளையும் அவருடைய கட்டளைகளையும் உனக்கு நன்மையுண்டாகும்படி கைக்கொள்ளவேண்டும் என்பதையே அல்லாமல், வேறே எதை உன் தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்.

உபா 10:14. இதோ, வானங்களும் வானாதிவானங்களும், பூமியும் அதிலுள்ள யாவும், உன் தேவனாகிய கர்த்தருடையவைகள்.

உபா 10:15. ஆனாலும் கர்த்தர் உன் பிதாக்கள் மேல் அன்புகூரும்பொருட்டு அவர்களிடத்தில் பிரியம் வைத்து, அவர்களுக்குப் பின் அவர்களுடைய சந்ததியாகிய உங்களை, இந்நாளில் இருக்கிறபடியே, சகல ஜாதிகளுக்குள்ளும் தமக்கென்று தெரிந்து கொண்டார்.

உபா 10:16. ஆகையால் நீங்கள் இனி உங்கள் பிடரியைக் கடினப்படுத்தாமல், உங்கள் இருதயத்தின் நுனித்தோலை விருத்தசேதனம்பண்ணுங்கள்.

உபா 10:17. உங்கள் தேவனாகிய கர்த்தர் தேவாதி தேவனும், கர்த்தாதி கர்த்தரும், மகத்துவமும் வல்லமையும் பயங்கரமுமான தேவனுமாயிருக்கிறார்; அவர் பட்சபாதம்பண்ணுகிறவரும் அல்ல, பரிதானம் வாங்குகிறவரும் அல்ல.

உபா 10:18. அவர் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் நியாயஞ்செய்கிறவரும், அந்நியன்மேல் அன்புவைத்து அவனுக்கு அன்னவஸ்திரம் கொடுக்கிறவருமாய் இருக்கிறார்.

உபா 10:19. நீங்களும் எகிப்துதேசத்தில் அந்நியரையிருந்தபடியால், அந்நியரைச் சிநேகிப்பீர்களாக.

உபா 10:20. உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவரைச் சேவித்து, அவரைப் பற்றிக்கொண்டிருந்து, அவருடைய நாமத்தைக் கொண்டு ஆணையிடுவாயாக.

உபா 10:21. அவரே உன் புகழ்ச்சி; உன் கண்கண்ட இந்தப் பெரிய பயங்கரமான காரியங்களை உன்னிடத்தில் செய்த உன் தேவன் அவரே.

உபா 10:22. உன் பிதாக்கள் எழுபதுபேராய் எகிப்துக்குப் போனார்கள்; இப்பொழுதோ உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் திரட்சியிலே வானத்தின் நட்சத்திரங்களைப்போலாக்கினார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியவேண்டும். பலிசெலுத்துவதைவிட கீழ்ப்படிவதே உத்தமம். கர்த்தர் தம்முடைய பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் மூன்றுவிதமான கடமைகளை கொடுத்திருக்கிறார். அவையாவன : 1. நாம் கர்த்தருக்கு செய்ய வேண்டிய கடமை. 2. நாம் பிறருக்கு செய்ய வேண்டிய கடமை. 3. நாம் நமக்கு செய்யவேண்டிய கடமை. மோசே இந்த வசனப்பகுதியில் இம்மூன்று விதமான கடமைகளைப்பற்றியும் இஸ்ரவேல் புத்திரருக்கு தெளிவாகப் போதிக்கிறார்.

நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கு நாம் பயப்படவேண்டும் (உபா 10:12). மோசே இந்த சத்தியத்தை மறுபடியுமாக, "உன் தேவனாகிய கர்த்தருக்கு பயந்து அவரை சேவிப்பாயாக" (உபா 10:20) என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய ஜனமாகிய நாம் அவருடைய மகிமையையும், மகத்துவத்தையும், சர்வவல்லமையையும் தியானித்து, அவருக்கு பயப்படவேண்டும். கர்த்தர் நல்லவராகவும், அவர் நமக்கு நன்மை செய்கிறவராகவும் இருப்பதை தியானித்து நாம் அவரிடத்தில் அன்புகூரவேண்டும்.

நாம் கர்த்தரை சேவிக்கவேண்டும் (உபா 10:20) என்றும், நாம் முழுஇருதயத்தோடும், முழுஆத்துமாவோடும் நம்முடைய தேவனாகிய கர்த்தரை சேவிக்கவேண்டும் (உபா 10:12) என்றும் மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு உபதேசம்பண்ணுகிறார். நாம் கர்த்தருக்காக எதை செய்கிறோமோ அதை சந்தோஷமாயும், உற்சாகமாயும் செய்யவேண்டும். கர்த்தரை சேவிக்கும்போது நம்முடைய இருதயத்தில் பயமும், பக்தியும், அன்பும் நிரம்பியிருக்கவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "இப்பொழுதும் இஸ்ரவேலே, நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளிலெல்லாம் நடந்து, அவரிடத்தில் அன்புகூர்ந்து, உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவிப்பாயாக" (உபா 10:12) என்றும்,

"நான் இன்று உனக்குக் கற்பிக்கிற கர்த்தருடைய கற்பனைகளையும் அவருடைய கட்டளைகளையும் உனக்கு நன்மையுண்டாகும்படி கைக்கொள்ளவேண்டும் என்பதையே அல்லாமல், வேறே எதை உன் தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்" (உபா 10:13) என்றும் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரருக்குக் கீழ்ப்படிதலைப் பற்றி சொல்லப்பட்டிருக்கும் பிரமாணம் :

1. நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயப்படு.
2. அவர் வழிகளிலெல்லாம் நட.
3. அவரிடத்தில் அன்புகூரு
4. உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவி
5. கர்த்தருடைய கற்பனைகளையும் அவருடைய கட்டளைகளையும் கைக் கொள் (உபா 10:13).

கர்த்தர் மகிமையும் மகத்துவமுமுள்ளவராக இருந்தாலும், தம்முடைய ஜனத்தாரிடமிருந்து அவர் பெரிய காரியங்கள் எதையும் கேட்கவில்லை. தம்முடைய கற்பனைகளையும், கட்டளைகளையும் நாம் கைக்கொள்ளவேண்டும் என்பதை மாத்திரமே கர்த்தர் நம்மிடத்தில் கேட்கிறார். இவற்றை கைக்கொள்வதினால் கர்த்தருக்கு ஒரு நன்மையும் உண்டாகப்போவதில்லை. இவற்றை கைக்கொள்ளும்போது நமக்கு நன்மை உண்டாகும்.

"இதோ, வானங்களும் வானாதிவானங்களும், பூமியும் அதிலுள்ள யாவும், உன் தேவனாகிய கர்த்தருடையவைகள்" (உபா 10:14) என்றும், ஆனாலும் கர்த்தர் உன் பிதாக்கள் மேல் அன்புகூரும்பொருட்டு அவர்களிடத்தில் பிரியம் வைத்து, அவர்களுக்குப் பின் அவர்களுடைய சந்ததியாகிய உங்களை, இந்நாளில் இருக்கிறபடியே, சகல ஜாதிகளுக்குள்ளும் தமக்கென்று தெரிந்து கொண்டார்" (உபா 10:15) என்றும் மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

நாம் கர்த்தருக்கு செய்ய வேண்டிய கடமைகள் இருப்பதுபோல, நமக்கு நாமே செய்துகொள்ளவேண்டிய கடமைகளும் இருக்கிறது. நம்முடைய இருதயத்தின் நுனித்தோலை நாம் விருத்தசேதனம்பண்ணவேண்டும். நம்முடைய பிடரியை நாம் இனிமேல் கடினப்படுத்தக்கூடாது (உபா 10:16).

கர்த்தருக்கு பயப்படுவதற்கும், அவரிடத்தில் அன்புகூருவதற்கும், அவருடைய கற்பனைகளையும் கட்டளைகளையும் கைக்கொள்வதற்கும் தடையாகயிருக்கும் எல்லா காரியங்களையும், நாம் நம்மை விட்டு நீக்கிப்போடவேண்டும். உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை.

நம்முடைய இருதயத்தின் நுனித்தோல் விருத்தசேதனம்பண்ணப்படும்போது, நாம் கர்த்தருடைய நுகத்தை நம்மீது மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வோம். கர்த்தருடைய கற்பனைகளையும் கட்டளைகளையும் பூரணமாய்க் கைக்கொள்வோம்.

நாம் நமக்கு நாமே செய்துகொள்ள வேண்டிய கடமை இருப்பதுபோல, நாம் பிறருக்கு செய்ய வேண்டிய கடமைகளும் உள்ளது. நாம் அந்நியரை சிநேகிக்கவேண்டும். நம்முடைய சகோதரரை நாம் சிநேகிதப்பதைவிட, அந்நியரை நம்மைப்போலவே அதிகமாய் சிநேகிக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் அந்நியரை ஏன் சிநேகிக்கவேண்டுமென்று மோசே இந்த வசனப்பகுதியில் இரண்டு காரணங்களை சொல்லுகிறார்.

தேவனாகிய கர்த்தர் தேவாதி தேவனும், கர்த்தாதி கர்த்தரும், மகத்துவமும் வல்லமையும் பயங்கரமுமான தேவனுமாயிருக்கிறார்; அவர் பட்சபாதம்பண்ணுகிறவரும் அல்ல, பரிதானம் வாங்குகிறவரும் அல்ல. அவர் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் நியாயஞ்செய்கிறவரும், அந்நியன்மேல் அன்புவைத்து அவனுக்கு அன்னவஸ்திரம் கொடுக்கிறவருமாய் இருக்கிறார் (உபா 10:17,18).

கர்த்தர் மனுபுத்திரர் எல்லோருக்கும் ஜீவனைக் கொடுக்கிறார். மனுஷர்கள் சுவாசிக்கும் காற்று கர்த்தரிடத்திலிருந்தே வருகிறது. மனுஷர்கள் இஸ்ரவேல் புத்திரராகயிருந்தாலும், அவர்கள் புறஜாதி ஜனங்களாகயிருந்தாலும், கர்த்தரிடத்தில் பட்சபாதம் எதுவுமில்லை. இஸ்ரவேலின் காணியாட்சிக்கு புறம்பானவர்களுக்கும், கர்த்தரே தேவனாயிருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரரும் ஒரு காலத்தில் எகிப்து தேசத்திலே அந்நியராயிருந்தார்கள். அவர்கள் தங்களுடைய பூர்வகாலத்து நிலமையை யோசித்துப் பார்த்து, அந்நியரை சிநேகிக்கவேண்டும் (உபா 10:19).

நாம் பாடுகளையும், வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவித்து கஷ்டப்படும்போது, கர்த்தரே நமக்கு உதவி செய்திருக்கிறார். கர்த்தர் நமக்கு இரக்கம் காண்பித்து, நம்முடைய பிரச்சனைகளிலிருந்து நம்மை மீட்டு இரட்சித்திருக்கிறார். நாம் கர்த்தருடைய இரக்கத்தைப் பெற்றவர்கள். கர்த்தர் நமக்கு உதவிசெய்ததுபோல, நாமும் துன்பப்படுகிற அந்நியருக்கு உதவிசெய்யவேண்டும். அவர்களை நேசித்து அவர்களுக்கு நன்மை செய்யவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தர் தங்களுக்குச் சொன்ன பிரமாணத்திற்கு கீழ்ப்படியவில்லை. அவர்கள் புறஜாதியாரை இஸ்ரவேலின் காணியாட்சிக்கு புறம்பானவர்கள் என்று சொல்லி வெறுத்து ஒதுக்கிவிட்டார்கள். இஸ்ரவேல் புத்திரர் அந்நியரை சிநேகிக்கவில்லை. இதனால் இஸ்ரவேல் தேசத்தார் தங்களுக்கு தாங்களே அழிவை தங்கள்மீது வரவழைத்துக்கொண்டார்கள். புறஜாதியாரை வேரோடு அழிக்கவேண்டும் என்பதே யூதர்களுடைய வெறியாகயிருந்தது. இதனால் முடிவிலே யூதர்கள் தங்களைத் தாங்களே அழித்துக்கொண்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தாங்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையிலும், தாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் கர்த்தருக்கு பயப்படவேண்டும். கர்த்தரை சேவிக்கவேண்டும். கர்த்தரை மகிமைப்படுத்தவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவரைச் சேவித்து, அவரைப் பற்றிக்கொண்டிருந்து, அவருடைய நாமத்தைக் கொண்டு ஆணையிடுவாயாக. அவரே உன் புகழ்ச்சி; உன் கண்கண்ட இந்தப் பெரிய பயங்கரமான காரியங்களை உன்னிடத்தில் செய்த உன் தேவன் அவரே" (உபா 10:20,21) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பயந்து, கர்த்தர்மீது அன்புகூர்ந்து, அவரை சேவித்து, அவருடைய கற்பனைகளையும் கட்டளைகளையும் கைக்கொள்ளும்போது கர்த்தர் அவர்களை அதிகமாய் ஆசீர்வதிப்பார். இஸ்ரவேலரின் முற்பிதாக்கள் கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உன் பிதாக்கள் எழுபதுபேராய் எகிப்துக்குப் போனார்கள்; இப்பொழுதோ உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் திரட்சியிலே வானத்தின் நட்சத்திரங்களைப்போலாக்கினார்" (உபா 10:22) என்று சொல்லுகிறார்.

தேவனாகிய கர்த்தரைப் பற்றிய சத்தியங்கள் :

1. வானங்களும் வானாதிவானங்களும் கர்த்தருடையவைகள். (உபா 10:14).
2. பூமி கர்த்தருடையது.
3. பூமிலுள்ள யாவும் கர்த்தருடையது.
4. கர்த்தர் உன் பிதாக்கள் மேல் அன்புகூர்ந்தார். (உபா 10:15).
5. அவர்களிடத்தில் பிரியம் வைத்தார்.
6. அவர்களுக்குப் பின் அவர்களுடைய சந்ததியாகிய உங்களைத் தெரிந்து கொண்டார்.
7. கற்பனைகளைக் கொடுத்தார். (உபா 10:16).
8. தேவாதிதேவன். (உபா 10:17).
9. கர்த்தாதி கர்த்தர்.
10. மகத்துவமானவர்.
11. வல்லமையுள்ளவர்.

12. பயங்கரமானவர்.

13. பட்சபாதம் பண்ணுகிறவர் அல்ல.

14. பரிதானம் வாங்குகிறவர் அல்ல.

15. திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் நியாயஞ்செய்கிறவர். (உபா 10:18).

16. அந்நியன்மேல் அன்பு வைக்கிறார்.

17. அந்நியனுக்கு அன்ன வஸ்திரம் கொடுக்கிறவர்.

18. அவரே உன் புகழ்ச்சி (உபா 10:21).

19. அவரே உன் தேவன்

20. உன் கண்கண்ட இந்தப் பெரிய பயங்கரமான காரியங்களை உன்னிடத்தில் செய்தவர்.

21. உன் பிதாக்கள் எழுபதுபேராய் எகிப்துக்குப் போனார்கள்; இப்பொழுதோ உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் திரட்சியிலே வானத்தின் நட்சத்திரங்களைப் போலாக்கினார்.

இஸ்ரவேல் புத்திரருக்குக் கீழ்ப்படிதலைப் பற்றிக் சொல்லப்பட்டிருக்கும் பிரமாணங்கள்:

1. உங்கள் இருதயத்தின் நுனித்தோலை விருத்தசேதனம் பண்ணுங்கள்.

2. உங்கள் பிடரியைக் கடினப்படுத்தாமல் இருங்கள்.

3. அந்நியரைச் சிநேகியுங்கள். (உபா 10:19)

4. உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயப்படுங்கள். (உபா 10:20).

5. அவரைச் சேவியுங்கள்.

6. அவரைப் பற்றிக்கொள்ளுங்கள்.

7. அவருடைய நாமத்தைக் கொண்டு ஆணையிடுங்கள்.

நம்முடைய இருதயத்திலுள்ள எல்லா இரகசியங்கள், அவிசுவாசங்கள் ஆகியவற்றை நாம் கர்த்தருக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கவேண்டும். இந்தக் காரியத்தில் கர்த்தர் மனுஷனுக்கு உதவி புரிவார். (உபா 30:6; லேவி 26:41; அப் 7:51) மனுஷன் தன்னைத் தாழ்த்தி, தனக்குள் கிரியை செய்வதற்குக் கர்த்தரை அனுமதிக்க வேண்டும்.

விருத்தசேதனம் பண்ணுவது பற்றி பழைய ஏற்பாட்டில் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது (ஆதி 17:10-27; ஆதி 21:4; ஆதி 34:15-24; யாத் 4:26; யாத் 12:44-48; லேவி 12:3; உபா 10:16; உபா 30:6; யோசு 5:2-8; எரே 4:4; எரே 9:25)

புதிய ஏற்பாட்டில் விருத்தசேதனத்தைப் பற்றி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது (லூக்கா 1:59; லூக்கா 2:21; யோவான் 7:22-23; அப் 7:8,22; அப் 10:45; அப் 11:2; அப் 15:1,5,24; அப் 16:3; ரோமர் 2:25-29; ரோமர் 3:1,30; ரோமர் 4:9-12; ரோமர் 15:8; 2கொரி 7:18-19; கலா 2:3-12; கலா 5:2-6,11; கலா 6:12-15; எபே 3:3; பிலி 3:3-5; கொலோ 2:11; கொலோ 3:11; கொலோ 4:11; தீத்து 1:10).

11 அதிகாரம்

மோசே இதுவரையிலும் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சொன்ன கட்டளைகளையும், நியாயங்களையும், கற்பனைகளையும் அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறார். இந்த அதிகாரத்திலும் மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு, மறுபடியுமாய் கர்த்தருடைய கற்பனைகளை சொல்லி, அவர்கள் கர்த்தருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படியவேண்டுமென்று சொல்லுகிறார். இந்த அதிகாரத்தோடு, கர்த்தருடைய பிரமாணங்களைப்பற்றி, மோசே செய்த போதகம் நிறைவுபெறுகிறது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளையும், நியாயங்களையும், கற்பனைகளையும் எப்பொழுதும் கைக்கொள்ளவேண்டும் என்னும் போதகத்தை மோசே அவர்களுக்கு மறுபடியுமாய் நினைவுபடுத்துகிறார் (உபா 11:1).

உபாகமம் 10-ஆவது அதிகாரத்தின் முடிவிலே, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு இதுவரையிலும் செய்திருக்கிற பெரிய காரியங்களை மோசே அவர்களுக்கு ஞாபகப்படுத்தினார். இந்த அதிகாரத்தில், கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு இதுவரையிலும் செய்திருக்கிற பெரிய காரியங்களில் சிலவற்றை, மோசே அவர்களுக்கு விசேஷமாய்ச் சொல்லுகிறார் (உபா 11:2-7).

மோசே இஸ்ரவேல் புத்திரருடைய வருங்காலத்தைப்பற்றிச் சொல்லுகிறார். அவர்களுடைய கிரியைகளின் பிரகாரம், அவர்களுக்கு ஜீவனோ அல்லது மரணமோ, ஆசீர்வாதமோ அல்லது சாபமோ உண்டாகும். அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொண்டால், அவர்களுக்கு ஜீவனும் ஆசீர்வாதமும் கிடைக்கும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்வதினால், அவர்களுக்கு கிடைக்கும் ஆசீர்வாதங்களை மோசே விரிவாகச் சொல்லுகிறார் (உபா 11:18-25).

தங்களுடைய ஜீவியத்தில் கர்த்தருடைய ஆசீர்வாதம் கிடைக்கவேண்டுமா அல்லது, கர்த்தருடைய சாபம் கிடைக்கவேண்டுமா என்பதை இஸ்ரவேல் புத்திரரே தீர்மானம் செய்துகொள்ளலாம் (உபா 11:26-32).

கர்த்தருடைய பிரமாணங்கள் உபா 11:1-7

உபா 11:1. நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, அவருடைய பிரமாணங்களையும், அவருடைய கட்டளைகளையும், அவருடைய நியாயங்களையும், அவருடைய கற்பனைகளையும் எப்பொழுதும் கைக்கொள்வாயாக.

உபா 11:2. உங்கள் தேவனாகிய கர்த்தர் செய்த சிட்சையையும், அவருடைய மகத்துவத்தையும், அவருடைய பலத்த கையையும், அவருடைய ஓங்கிய புயத்தையும்,

உபா 11:3. அவர் எகிப்தின் நடுவிலே எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுக்கும், அவன் தேசம் அனைத்திற்கும் செய்த அவருடைய அடையாளங்களையும், அவருடைய கிரியைகளையும்,

உபா 11:4. எகிப்திய சேனையும் அவர்கள் குதிரைகளும் இரதங்களும் உங்களைப் பின்தொடர்ந்து வருகையில், கர்த்தர் சிவந்த சமுத்திரத்தின் ஜலத்தை அவர்கள் மேல் புரளப்பண்ணி, இந்நாள் வரைக்கும் இருக்கிறதுபோல், அவர்களை அழித்த அவருடைய செய்கையையும்,

உபா 11:5. நீங்கள் இவ்விடத்திற்கு வருமளவும் அவர் உங்களுக்கு வனாந்தரத்தில் செய்ததையும்,

உபா 11:6. பூமி தன் வாயைத் திறந்து, எலியாப் என்னும் ரூபன் குமாரனுடைய மக்களான தாத்தானையும் அபிராமையும், அவர்கள் குடும்பங்களையும், அவர்கள் கூடாரங்களையும், இஸ்ரவேலர் எல்லாருக்குள்ளும் அவர்களுக்கு இருந்த அவர்களுடைய சகல பொருள்களையும் விழுங்கும்படி செய்ததையும், அறியாமலும் காணாமலும் இருக்கிற உங்கள் பிள்ளைகளுடன் நான் பேசவில்லை; இன்று நீங்களே அறிந்து கொள்ளுங்கள்.

உபா 11:7. கர்த்தர் செய்த மகத்துவமான கிரியைகளையெல்லாம் உங்கள் கண்கள் அல்லவோ கண்டது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டும். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லியிருக்கிறார். தம்மை ஆராதிக்கவேண்டிய நியமங்களையும் கர்த்தர் அவர்களுக்கு கொடுத்திருக்கிறார். கர்த்தர் தங்களிடத்தில் ஒப்புக்கொடுத்திருக்கும் பிரமாணங்களுக்கும், நியமங்களுக்கும், இஸ்ரவேல் சபையார் நம்பிக்கையுள்ளவர்களாயிருக்கவேண்டும். கர்த்தர் தங்களிடத்தில் ஒப்புக்கொடுத்ததை, இஸ்ரவேல் புத்திரர் அவருக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமே ஆசாரிய தேசமாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு பரிசுத்த ஜாதியாயிருக்கிறார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, அவருடைய பிரமாணங்களையும், அவருடைய கட்டளைகளையும், அவருடைய நியாயங்களையும், அவருடைய கற்பனைகளையும் எப்பொழுதும் கைக்கொள்வாயாக" (உபா 11:1) என்று சொல்லுகிறார்.

தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே, அவரிடத்தில் அன்புகூருவதாகும். "நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல" (1யோவா 5:3).

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு இரண்டு கட்டளைகளைச் சொல்லுகிறார். அவையாவன : 1. அவர்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்புகூரவேண்டும். 2. அவர்கள் கர்த்தருடைய கட்டளைகளையும், நியாயங்களையும், கற்பனைகளையும் கைக்கொள்ளவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்தால் மாத்திரமே, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வார்கள். கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாமல், அவரிடத்தில் அன்புகூருவது இயலாத காரியம்.

நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியும்போது, நாம் அவரிடத்தில் அன்புகூருகிறோம். நம்முடைய கீழ்ப்படிதல் மூலமாகவே, நம்முடைய அன்பு வெளிப்படுகிறது. அன்பு இல்லாமல் கீழ்ப்படிதலுமில்லை. கீழ்ப்படிதலில்லாமல் அன்பும் இல்லை.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், தம்முடைய ஜனத்திற்கு பெரிய காரியங்களை செய்திருக்கிறார். கர்த்தர் தங்களுக்கு செய்த மகத்துவமான கிரியைகளையெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் நினைவுகூர்ந்து, அவர்கள் கர்த்தரிடத்தில் அன்புகூரவேண்டும். அந்த அன்பினாலே அவர்கள் கர்த்தருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளவேண்டும்.

கர்த்தர் தங்களுக்கு செய்த எல்லா காரியங்களையும் இஸ்ரவேல் புத்திரர் அறிந்துகொள்ளவேண்டும் என்று சொல்லி, மோசே அவர்களுக்கு கர்த்தருடைய கிரியைகளை ஞாபகப்படுத்துகிறார். இஸ்ரவேல் புத்திரர் அறிந்துகொள்ள வேண்டிய காரியங்களின் விவரம் வருமாறு:

1. தங்கள் தேவனாகிய கர்த்தர் செய்த சிட்சை.

2. கர்த்தருடைய மகத்துவமும், அவருடைய பலத்த கையும், அவருடைய ஓங்கிய புயமும், (உபா 11:2).

3. கர்த்தர் எகிப்தின் நடுவிலே எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுக்கும், அவன் தேசம் அனைத்திற்கும் செய்த அவருடைய அடையாளங்களும், அவருடைய கிரியைகளும், (உபா 11:3).

4. எகிப்திய சேனையும் அவர்கள் குதிரைகளும் இரதங்களும் இஸ்ரவேல் புத்திரரை பின்தொடர்ந்து வருகையில், கர்த்தர் சிவந்த சமுத்திரத்தின் ஜலத்தை அவர்கள் மேல் புரளப்பண்ணி, இந்நாள் வரைக்கும் இருக்கிறதுபோல, அவர்களை அழித்த அவருடைய செய்கை (உபா 11:4).

5. இஸ்ரவேல் புத்திரர் இவ்விடத்திற்கு வருமளவும் கர்த்தர் அவர்களுக்கு வனாந்தரத்தில் செய்தவை (உபா 11:5).

6. பூமி தன் வாயைத் திறந்து, எலியாப் என்னும் ரூபன் குமாரனுடைய மக்களான தாத்தானையும் அபிராமையும், அவர்கள் குடும்பங்களையும், அவர்கள் கூடாரங்களையும், இஸ்ரவேலர் எல்லாருக்குள்ளும் அவர்களுக்கு இருந்த அவர்களுடைய சகல பொருள்களையும் கர்த்தர் விழுங்கும்படி செய்தது (உபா 11:6).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்காக செய்த காரியங்களை அவர்களுடைய பிள்ளைகள் அறியாமலும் காணாமலும் இருக்கிறார்கள். மோசே அவர்களுடைய பிள்ளைகளுடன் பேசாமல், கர்த்தர் செய்த மகத்துவமான கிரியைகளையெல்லாம் தங்கள் கண்களாலே கண்ட இஸ்ரவேல புத்திரரோடே பேசுகிறார் (உபா 11:7).

எச்சரிப்பின் வார்த்தைகள் உபா 11:8-17

உபா 11:8. ஆகையால் நீங்கள் பலப்படும்படிக்கும்,

உபா 11:9. நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசத்துக்குள் பிரவேசித்து அதைச் சுதந்தரிக்கும்படிக்கும், கர்த்தர் உங்கள் பிதாக்களுக்கும் அவர்கள் சந்ததிக்கும் கொடுப்பேன் என்று அவர்களுக்கு ஆணையிட்ட பாலும் தேனும் ஓடுகிற தேசத்தில் நீங்கள் நீடித்து வாழும்படிக்கும், இன்று நான் உங்களுக்குக் கற்பிக்கிற கற்பனைகளையெல்லாம் கைக்கொள்வீர்களாக.

உபா 11:10. நீ சுதந்தரிக்கப்போகிற தேசம் நீ விட்டுவந்த எகிப்து தேசத்தைப்போல் இராது; அங்கே நீ விதையை விதைத்து, கீரைத்தோட்டத்திற்கு நீர்ப்பாய்ச்சுகிறதுபோல உன் காலால் நீர்ப்பாய்ச்சி வந்தாய்.

உபா 11:11. நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசமோ, மலைகளும் பள்ளத்தாக்குகளுமுள்ள தேசம்; அது வானத்தின் மழைத்தண்ணீரைக் குடிக்கும் தேசம்;

உபா 11:12. அது உன் தேவனாகிய கர்த்தர் விசாரிக்கிற தேசம், வருஷத்தின் துவக்கமுதல் வருஷத்தின் முடிவுமட்டும் எப்பொழுதும் உன் தேவனாகிய கர்த்தரின் கண்கள் அதின்மேல் வைக்கப்பட்டிருக்கும்.

உபா 11:13. நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்பு கூர்ந்து, அவரைச் சேவிக்கும்படி, நான் இன்று உங்களுக்குக் கற்பிக்கிற என் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தால்,

உபா 11:14. நீ உன் தானியத்தையும் உன் திராட்சரசத்தையும் உன் எண்ணெயையும் சேர்க்கும்படிக்கு, நான் ஏற்றகாலத்தில் உங்கள் தேசத்தில் முன்மாரியையும் பின்மாரியையும் பெய்யப்பண்ணி,

உபா 11:15. மிருகஜீவன்களுக்காக உன் வெளிகளிலே புல் முளைக்கும்படிசெய்வேன், நீ சாப்பிட்டுத் திருப்தியடைவாய் என்கிறார்.

உபா 11:16. உங்கள் இருதயம் வஞ்சிக்கப்படாமலும், நீங்கள் வழிவிலகி அந்நிய தேவர்களைச் சேவித்து அவர்களை நமஸ்கரியாமலும் இருக்கும்படி எச்சரிக்கையாயிருங்கள்.

உபா 11:17. இல்லாவிடில் கர்த்தருடைய கோபம் உங்கள்மேல் மூண்டு, மழை பெய்யாமற்போகவும், தேசம் தன் பலனைக் கொடாமலிருக்கவும் வானத்தை அடைத்துப்போடுவார்; கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த நல்ல தேசத்திலிருந்து நீங்கள் சீக்கிரத்தில் அழிந்துபோவீர்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய கற்பனைகளையெல்லாம் கற்பிக்கிறார். அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளை ஏன் கைக்கொள்ளவேண்டும் என்பதற்கான காரணங்களையும் மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் புத்திரர் பலப்படும்படிக்கும், (உபா 11:8).

2. இஸ்ரவேல் புத்திரர் சுதந்தரிக்கப்போகிற தேசத்துக்குள் பிரவேசித்து அதைச் சுதந்தரிக்கும்படிக்கும்,

3. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய பிதாக்களுக்கும் அவர்கள் சந்ததிக்கும் கொடுப்பேன் என்று அவர்களுக்கு ஆணையிட்ட பாலும் தேனும் ஓடுகிற தேசத்தில் அவர்கள் நீடித்து வாழும்படிக்கும்,

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு இம்மூன்று காரியங்களையும் சொல்லி, இவை அவர்களுடைய ஜீவியத்தில் நிறைவேறவேண்டுமென்றால், "இன்று நான் உங்களுக்குக் கற்பிக்கிற கற்பனைகளையெல்லாம் கைக்கொள்வீர்களாக" (உபா 11:10) என்று சொல்லுகிறார்.

கர்த்தருக்குக் கீழ்ப்படிவதினால் வரும் ஆசீர்வாதங்கள் :

1. பலப்படுதல். (உபா 11:8)

2. தேசத்தைச் சுதந்தரித்தல்.

3. நீடித்து வாழுதல். (உபா 11:9)

4. எகிப்து தேசத்தைவிட நல்ல தேசம். (உபா 11:10-12)

5. ஏற்றகாலத்தில் முன்மாரியும், பின்மாரியும் பெய்தல். (உபா 11:14)

6. தானியங்களின் நல்ல விளைச்சல். (உபா 11:14-15)

7. பூமியின்மேல் வானம் இருக்கும் நாட்கள் வரைக்கும் நீடித்து வாழுதல் (உபா 11:21)

8. சத்துருக்களை முழுவதுமாக மேற் கொள்வது. (உபா 11:22-25)

9. உள்ளங்கால் மிதிக்கும் இடமெல்லாம் சொந்தமாவது. (உபா 11:24)

10. ஒருவரும் எதிர்த்து நிற்க முடியாத நிலைமை. (உபா 11:25)

11. சத்துருக்கள் இருதயங்களில் பயம்.

12. எல்லாவிதமான ஆசீர்வாதங்கள். (உபா 11:27)

எகிப்து தேசத்தில் விவசாயம் பண்ணுவதற்கு தண்ணீர் போதுமான அளவு இல்லை. துரவுகளைத் தோண்டி, காலால் மிதிக்கும் ஏற்றச்சால்களை உண்டாக்கி, எகிப்து தேசத்தில் நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பாலஸ்தீன தேசத்தில் ஏற்றகாலத்தில் முன்மாரியும், பின்மாரியும் பெய்வதினால் தண்ணீர் தாராளமாக இருக்கும். காலால் மிதித்து நீர்ப்பாய்ச்ச வேண்டிய அவசியம் இருக்காது.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் பிரவேசித்து, அந்த தேசத்தை சுதந்தரிக்கப்போகிறார்கள். கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பது, ஜீவனுக்குள் பிரவேசிப்பதற்கு அடையாளமாக சொல்லப்பட்டிருக்கிறது. கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற நல்ல தேசம். அந்த தேசத்தில் இஸ்ரவேல் புத்திரர் நீடித்து வாழ்ந்தால்தான், அந்த தேசத்தின் நன்மைகளை அனுபவிக்க முடியும்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு, அவர்கள் சுதந்தரிக்கப்போகிற கானான் தேசத்தைப்பற்றி தெளிவுபடுத்துகிறார். மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தைப்பற்றிச் சொல்லும்போது,

"நீ சுதந்தரிக்கப்போகிற தேசம் நீ விட்டுவந்த எகிப்து தேசத்தைப்போல் இராது; அங்கே நீ விதையை விதைத்து, கீரைத்தோட்டத்திற்கு நீர்ப்பாய்ச்சிகிறதுபோல உன் காலால் நீர்ப்பாய்ச்சி வந்தாய். நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசமோ, மலைகளும் பள்ளத்தாக்குகளுமுள்ள தேசம்; அது வானத்தின் மழைத்தண்ணீரைக் குடிக்கும் தேசம்" (உபா 11:10,11) என்றும்,

"அது உன் தேவனாகிய கர்த்தர் விசாரிக்கிற தேசம், வருஷத்தின் துவக்கமுதல் வருஷத்தின் முடிவுமட்டும் எப்பொழுதும் உன் தேவனாகிய கர்த்தரின் கண்கள் அதின்மேல் வைக்கப்பட்டிருக்கும்" (உபா 11:12) என்றும் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசித்து, அந்த தேசத்தை சுதந்தரிக்கும்போது, அவர்கள் அந்த தேசத்திலுள்ள புறஜாதி ஜனங்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வேண்டும். ஆனால் மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு இப்போது யுத்தம்பண்ணுவது பற்றிய பிரமாணத்தைப்பற்றி கற்பிக்கவில்லை.

ஆயுதங்களை தங்கள் சத்துருக்களுக்கு விரோதமாக எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றியோ, வில்லை எவ்வாறு நாணேற்றுவது என்பது பற்றியோ, அம்பை எவ்வாறு குறிபார்த்து எய்வது என்பது பற்றியோ, இஸ்ரவேல் புத்திரர் யுத்தம்பண்ணப்போகும்போது எவ்வாறு அணியணியாக அணிவகுத்து புறப்பட்டுப்போகவேண்டும் என்பதுபற்றியோ மோசே இப்போது இஸ்ரவேல் புத்திரருக்கு கற்பிக்கவில்லை.

கானான் தேசத்தைச் சுதந்தரிக்கப்போகும்போது இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய சரீர ஆரோக்கியத்தை எவ்வாறு காத்துக்கொள்ளவேண்டும் என்பது பற்றியோ அல்லது தங்கள் சரீரங்களை எவ்வாறு பலப்படுத்தவேண்டும் என்பது பற்றியோ மோசே இப்போது அவர்களுக்கு கற்பிக்கவில்லை.

அதற்கு பதிலாக மோசே இப்போது இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய கற்பனைகளைக் கற்பிக்கிறார். அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டும் என்று அவர்களுக்கு போதிக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு சரீர பலத்தைவிட ஆவிக்குரிய பலமே மிகவும் முக்கியமானது.

நாம் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, அவருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து, கர்த்தருக்குள் சமாதானமாகவும், சந்தோஷமாகவும் இருப்பதே நமக்கு மெய்யான பலன். நாம் கர்த்தரோடு ஒப்புரவாகி, அவரோடு ஐக்கியமாயிருக்கும்போது, நமக்கு சத்துருக்கள்மீது ஜெயம் கிடைக்கும். நாம் செய்ய வேண்டிய யுத்தங்கள் எல்லாமே கர்த்தருடைய யுத்தமாயிருக்கும். கர்த்தர் நமக்காக யுத்தம்பண்ணுவார்.

இஸ்ரவேல் புத்திரர் பாலும் தேனும் ஓடுகிற தேசத்தில் நீடித்து வாழவேண்டுமென்றால், அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டும். பாவத்தின் சம்பளம் மரணம். பாவம் மனுஷருடைய ஆயுசுகாலத்தைக் குறைத்துப்போடுகிறது. பாவம் மனுஷருடைய ஆசீர்வாதங்களையும், வளமையையும், செழிப்பையும் அவர்களை விட்டு நீக்கிப்போடுகிறது. நாம் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்போதோ, நம்முடைய ஆயுசுகாலம் நீடித்திருக்கும். கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஆசீர்வாதங்களை, நீடித்த காலமாக ஜீவனோடிருந்து, அவற்றை பூரணமாய் அனுபவிப்போம்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சாதாரண தேசத்தை சுதந்தரமாகக் கொடுக்காமல், பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுக்கிறார். கானான் தேசத்தில் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விசேஷித்த ஆசீர்வாதங்கள் இருக்கிறது. அந்த ஆசீர்வாதங்களை அவர்கள் அனுபவிக்கவேண்டுமென்றால், அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு விசேஷித்த ஆசீர்வாதங்களை வாக்குப்பண்ணியதுபோல நம்மையும் விசேஷித்த ஆசீர்வாதங்களினால் நிரப்ப விரும்புகிறார். கர்த்தர் நமக்கு கொடுக்க ஆசீர்வதிக்க விரும்பும் நன்மைகளை நாம் அனுபவிக்கவேண்டுமென்றால், நாமும் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியவேண்டியது அவசியமாயிருக்கிறது. கர்த்தர் யாருக்கு அதிகமாய்க் கொடுக்கிறாரோ, அவர்களிடத்திலிருந்து அதிகமாய் எதிர்பார்க்கிறார். கர்த்தருடைய ஆசீர்வாதங்களை அதிகமாய்ப் பெற்றுக்கொள்கிறவர்கள், அவருக்கு அதிகமாய் ஊழியம் செய்யவேண்டும்.

கர்த்தர் நமக்கு கொடுக்கும் நன்மைகளினால், நம்முடைய சரீரங்களை மாத்திரமே போஷிக்கவேண்டும் என்று அதிகமாய்க் கவனம் செலுத்தக்கூடாது. நம்முடைய சரீரத்தை போஷிக்கும்போது, நம்முடைய ஆத்துமாவையும் போஷிப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

நம்முடைய சரீரத்தின் தேவைகளையும், நம்முடைய உலகப்பிரகாரமான தேவைகளையும் குறைத்துக்கொண்டு, கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஆசீர்வாதங்களினால், கர்த்தருடைய ஊழியத்தின் எல்லைகளை விஸ்தாரம்பண்ணவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் முழுஇருதயத்தோடு கர்த்தர் மீது அன்புகூர்ந்து, அவருடைய கற்பனைகளை எப்போதும் கைக்கொள்ளவேண்டும். அப்போது கர்த்தர் அவர்களை அதிகமாய் ஆசீர்வதிப்பதாக வாக்குப்பண்ணுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப்பற்றிச் சொல்லுகிறார். அவர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூர்ந்து, அவரைச் சேவிக்கும்படி, நான் இன்று உங்களுக்குக் கற்பிக்கிற என் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தால்" (உபா 11:13) என்று ஒரு நிபந்தனையைச் சொல்லி, அதன் பின்பு கர்த்தருடைய ஆசீர்வாதங்களை சொல்லுகிறார்.

கர்த்தர் இங்கு சொல்லுகிற உடன்படிக்கையின் வார்த்தைகளை, "பாலஸ்தீன உடன்படிக்கை" என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

பாலஸ்தீன உடன்படிக்கையில் கூறப்பட்டிருக்கும் நிபந்தனைகள் :

1. நான் இன்று உங்களுக்குக் கற்பிக்கிற என் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியுங்கள். (உபா 11:13)

2. நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்புகூருங்கள். (உபா 11:13,22)

3. உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் கர்த்தரைச் சேவியுங்கள்.

4. உங்கள் இருதயம் வஞ்சிக்கப்படாமல் எச்சரிக்கையாயிருங்கள். (உபா 11:16)

5. நீங்கள் வழிவிலகி அந்நிய தேவர்களைச் சேவித்து அவர்களை நமஸ்கரியாமல் இருக்கும்படி எச்சரிக்கையாயிருங்கள்.

6. நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும் உங்கள் ஆத்துமாவிலும் பதித்து வையுங்கள். (உபா 11:19)

7. அவைகளை உங்கள் கையின்மேல் அடையாளமாக கட்டி, உங்கள் கண்களின் நடுவே ஞாபகக்குறியாக வைத்துக் கொள்ளுங்கள்.

8. அவைகளை உங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து, நீங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியிலே நடக்கிறபோதும், படுத்துக் கொள்ளுகிற போதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசுங்கள். (உபா 11:20)

9. அவைகளை உங்கள் வீட்டு நிலைகளிலும் உங்கள் வாசல்களிலும் எழுதுங்கள். (உபா 11:21)

10. நான் உங்களுக்குச் செய்யக் கற்பிக்கிற இந்தக் கற்பனைகளையெல்லாம் ஜாக்கிரதையாய்க் கைக்கொள்ளுங்கள். (உபா 11:22)

11. அவர் வழிகளிலெல்லாம் நடவுங்கள்.

12. அவரைப் பற்றிக் கொண்டிருங்கள்.

13. நான் உங்களுக்குக் கற்பிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தீர்களானால் ஆசீர்வாதமும், உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாமல், இன்று நான் உங்களுக்கு விதிக்கிற வழியைவிட்டு விலகி, நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றுவீர்களானால் சாபமும் வரும். (உபா 11:26-28)

14. உன் தேவனாகிய கர்த்தர் உன்னை கானான் தேசத்தில் பிரவேசிக்கப்பண்ணும்போது, கெரிசீம் மலையின்மேல் ஆசீர்வாதத்தையும் ஏபால் மலையின்மேல் சாபத்தையும் கூறக் கடவாய். (உபா 11:29-30)

15. உங்களுக்கு இன்று நான் ஏற்படுத்துகிற சகல கட்டளைகளையும், நியாயங்களையும் கைக்கொண்டு நடக்கவேண்டும். (உபா 11:32)

பாலஸ்தீன உடன்படிக்கையில் கூறப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்கள் :

1. கர்த்தர் ஏற்றகாலத்தில் உங்கள் தேசத்தில் முன்மாரியையும் பின்மாரியையும் பெய்யப்பண்ணி, மிருகஜீவன்களுக்காக உன் வெளிகளிலே புல் முளைக்கும்படி செய்வேன், நீ சாப்பிட்டுத் திருப்தியடைவாய் (உபா 11:14).

2. நீ உன் தானியத்தையும் உன் திராட்ச ரசத்தையும் உன் எண்ணெயையும் சேர்க்கும்படிக்குக் கர்த்தர் செய்வார்.

3. மிருகஜீவன்களுக்காக உன் வெளிகளிலே புல் முளைக்கும்படிசெய்வார், நீ சாப்பிட்டுத் திருப்தியடைவாய் (உபா 11:15)

4. கர்த்தர் உங்கள் நாட்களைப் பெருகப் பண்ணுவார் (உபா 11:18).

5. தேசத்தில், உங்கள் பிள்ளைகளின் நாட்களையும் பெருகப்பண்ணுவார்.

6. கர்த்தர் கொடுக்கும் ஆசீர்வாதங்கள் பூமியின்மேல் வானம் இருக்கும் நாட்களைப் போல அநேகமாயிருக்கும்.

7. கர்த்தர் உங்களுக்கு முன்பாக அந்த ஜாதிகளையெல்லாம் துரத்திவிடுவார் (உபா 11:23)

8. உங்களைப்பார்க்கிலும் ஜனம் பெருத்த பலத்த ஜாதிகளை நீங்கள் துரத்துவீர்கள்.

9. உங்கள் உள்ளங்கால் மிதிக்கும் இடமெல்லாம் உங்களுடையதாயிருக்கும்; வனாந்தரத்தையும் லீபனோனையும் தொடங்கி, ஐபிராத்து நதியையும் தொடங்கி, கடைசிச் சமுத்திரம்வரைக்கும் உங்கள் எல்லையாயிருக்கும் (உபா 11:24).

10. கர்த்தருடைய கற்பனைகளை நீங்கள் கைக்கொண்டு ஜீவிக்கிற வரையிலும் உங்கள்முன் ஒருவரும் எதிர்த்து நிற்பதில்லை (உபா 11:25).

11. உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொன்னபடி உங்களால் உண்டாகும் பயமும்கெடியும் நீங்கள் மிதிக்கும் பூமியின்மேலெல்லாம் வரப்பண்ணுவார்.

12. உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தீர்களானால் ஆசீர்வாதத்தைப் பெறுவீர்கள் (உபா 11:27)

13. கர்த்தருடைய உடன்படிக்கை தொடர்ந்து நினைவுபடுத்தப்படும். (உபா 11:29-30)

14. உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கிற தேசத்தைச் சுதந்தரிப்பதற்கு, நீங்கள் யோர்தானைக் கடந்துபோய், அதைச்சுதந்தரித்துக் கொண்டு, அதிலே குடியிருப்பீர்கள் (உபா 11:31)

பாலஸ்தீன உடன்படிக்கையில் கூறப்பட்டிருக்கும் சாபங்கள் :

1. கர்த்தருடைய கோபம் உங்கள்மேல் மூளும். (உபா 11:17)

2. கர்த்தருடைய கோபம் உங்கள்மேல் மூண்டு, மழை பெய்யாமற்போகும்.

3. தேசம் தன் பலனைக் கொடாமலிருக்க வானத்தை அடைத்துப்போடுவார்.

4. கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த நல்ல தேசத்திலிருந்து நீங்கள் சீக்கிரத்தில் அழிந்துபோவீர்கள்.

5. உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாமல், தங்களுக்கு விதிக்கிற வழியைவிட்டு விலகி, நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றுவீர்களானால் சாபமும் வரும். (உபா 11:26-28)

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டும் என்பது, கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு சொல்லப்பட்டிருக்கிற நிபந்தனைகளாகும். நிபந்தனைகளுக்கு கீழ்ப்படியாமல் ஆசீர்வாதம் வராது. ஆகையினால் மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு நிபந்தனைகளை முதலாவதாக சொல்லி, அந்த நிபந்தனைகளுக்கு அவர்கள் கீழ்ப்படிந்தால்,

"நீ உன் தானியத்தையும் உன் திராட்சரசத்தையும் உன் எண்ணெயையும் சேர்க்கும்படிக்கு, நான் ஏற்றகாலத்தில் உங்கள் தேசத்தில் முன்மாரியையும் பின்மாரியையும் பெய்யப்பண்ணி, மிருகஜீவன்களுக்காக உன் வெளிகளிலே புல் முளைக்கும்படிசெய்வேன், நீ சாப்பிட்டுத் திருப்தியடைவாய்" (உபா 11:14,15) என்று ஆசீர்வாதமான வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். அது மலைகளும் பள்ளத்தாக்குகளுமுள்ள தேசம். அதே வேளையில் அந்த தேசம் விக்கிரகங்களும், விக்கிரகாராதனைக்காரரும் நிரம்பியுள்ள தேசம். இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசித்து, அந்த தேசத்தை சுதந்தரித்து, அந்த தேசத்தின் நன்மைகளை அனுபவித்து சுகமாய் வாழுகிற போது, அவர்களுடைய இருதயம் வஞ்சிக்கப்பட்டு விடக்கூடாது. தங்களுக்கு கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுத்த கர்த்தரை மறந்து, அவரை விட்டு விலகி, அந்நிய தெய்வங்களை பின்பற்றிப்போய்விடக்கூடாது.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உங்கள் இருதயம் வஞ்சிக்கப்படாமலும், நீங்கள் வழிவிலகி அந்நிய தேவர்களைச் சேவித்து அவர்களை நமஸ்கரியாமலும் இருக்கும்படி எச்சரிக்கையாயிருங்கள்" (உபா 11:16) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை விட்டு விலகி, அந்நிய தேவர்களை சேவித்தால், அவர்களுடைய ஆசீர்வாதங்கள் சாபங்களாக மாறும். கர்த்தர் தங்களுக்கு கொடுத்த தேசத்தில் அவர்கள் நீடித்து வாழாமல், சீக்கிரத்திலே அழிந்துபோவார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு ஆசீர்வாதங்களை சொல்லி உற்சாகப்படுத்தும்போது, அவர்களுக்கு சாபங்களைப்பற்றியும் சொல்லி, அவர்களை எச்சரிக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் அந்நிய தேவர்களை சேவிக்காமல் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். விக்கிரகாராதனை விஷயத்தில் அவர்கள் எச்சரிக்கையாயில்லையென்றால்,

"கர்த்தருடைய கோபம் உங்கள்மேல் மூண்டு, மழை பெய்யாமற்போகவும், தேசம் தன் பலனைக் கொடாமலிருக்கவும் வானத்தை அடைத்துப்போடுவார்; கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த நல்ல தேசத்திலிருந்து நீங்கள் சீக்கிரத்தில் அழிந்துபோவீர்கள்" (உபா 11:17) என்று மோசே சொல்லுகிறார்.

ஆசீர்வாதமான வார்த்தைகள் உபா 11:18-25

உபா 11:18. ஆகையால் கர்த்தர் உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று அவர்களுக்கு ஆணையிட்ட தேசத்தில் உங்கள் நாட்களும், உங்கள் பிள்ளைகளின் நாட்களும், பூமியின்மேல் வானம் இருக்கும் நாட்களைப்போல அநேகமாயிருக்கும்படிக்கு,

உபா 11:19. நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும் உங்கள் ஆத்துமாவிலும் பதித்து, அவைகளை உங்கள் கையின்மேல் அடையாளமாக கட்டி, உங்கள் கண்களின் நடுவே ஞாபகக்குறியாக வைத்து,

உபா 11:20. அவைகளை உங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து, நீங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியிலே நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசுவீர்களாக.

உபா 11:21. அவைகளை உங்கள் வீட்டு நிலைகளிலும் உங்கள் வாசல்களிலும் எழுதுவீர்களாக.

உபா 11:22. நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, அவர் வழிகளிலெல்லாம் நடந்து, அவரைப் பற்றிக் கொண்டிருக்கும்படி, நான் உங்களுக்குச் செய்யக் கற்பிக்கிற இந்தக் கற்பனைகளையெல்லாம் ஜாக்கிரதையாய்க் கைக்கொள்வீர்களானால்,

உபா 11:23. கர்த்தர் உங்களுக்கு முன்பாக அந்த ஜாதிகளையெல்லாம் துரத்திவிடுவார்; உங்களைப்பார்க்கிலும் ஜனம் பெருத்த பலத்த ஜாதிகளை நீங்கள் துரத்துவீர்கள்.

உபா 11:24. உங்கள் உள்ளங்கால் மிதிக்கும் இடமெல்லாம் உங்களுடையதாயிருக்கும்; வனாந்தரத்தையும் லீபனோனையும் தொடங்கி, ஐபிராத்து நதியையும் தொடங்கி, கடைசிச் சமுத்திரம்வரைக்கும் உங்கள் எல்லையாயிருக்கும்.

உபா 11:25. உங்கள்முன் ஒருவரும் எதிர்த்து நிற்பதில்லை; உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொன்னபடி உங்களால் உண்டாகும் பயமும்கெடியும் நீங்கள் மிதிக்கும் பூமியின்மேலெல்லாம் வரப்பண்ணுவார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளவேண்டும் என்று தான் ஏற்கெனவே அவர்களுக்கு சொன்னதை, மோசே இங்கு அவர்களுக்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தைச் சுதந்தரிக்கப்போகிறார்கள்.

கானான் தேசம் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய பிதாக்களுக்கு கொடுப்பேன் என்று அவர்களுக்கு ஆணையிட்ட தேசம். அந்த தேசத்தில், இஸ்ரவேல் புத்திரருடைய நாட்களும், அவர்களுடைய பிள்ளைகளின் நாட்களும் அநேகமாயிருக்கவேண்டும். அவர்கள் பாலும் தேனும் ஓடுகிற தேசத்தில் நீடித்து வாழவேண்டும் (உபா 11:18).

தமக்குக் கீழ்ப்படியும்போது தம்முடைய பிள்ளைகளின் ஜீவிய நாட்களை கர்த்தர் அதிகரிக்க விரும்புகிறார் (சங் 91; 1பேதுரு 3:10-11).

பரலோகம் மெய்யாகவே இருக்கிறது. பூமி, சந்திரன், சூரியன் ஆகியவற்றை நாம் பிரத்தியட்சமாக காண்கிறோம். பரலோகத்தை நாம் தற்பொழுது பிரத்தியட்சமாகக் காணமுடியாவிட்டாலும், அது மெய்யாகவே இருக்கிறது. இரட்சிக்கப்பட்ட மனுஷர்களைக் கர்த்தர் பரலோகத்திற்குத் தம்மோடு நித்திய காலமாக இருக்குமாறு அழைத்துச் செல்வார்.

"பூமியின்மேல் வானம் இருக்கிற நாட்களைப்போல அவர்களுடைய நாட்களும் அநேகமாயிருக்கும்படிக்கு" இஸ்ரவேல் புத்திரர் என்னென்ன காரியங்களை செய்யவேண்டுமென்று மோசே அவர்களுக்கு போதிக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் செய்ய வேண்டிய காரியங்களின் விவரம் வருமாறு:

1. இஸ்ரவேல் புத்திரர் மோசேயின் வார்த்தைகளை தங்கள் இருதயத்திலும் தங்கள் ஆத்துமாவிலும் பதித்து வைக்கவேண்டும்.

2. இஸ்ரவேல் புத்திரர் அவைகளை தங்கள் கையின்மேல் அடையாளமாக கட்டி, தங்கள் கண்களின் நடுவே ஞாபகக்குறியாக வைக்கவேண்டும் (உபா 11:19).

3. இஸ்ரவேல் புத்திரர் அவைகளை தங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து, நீங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியிலே நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசவேண்டும் (உபா 11:20).

4. இஸ்ரவேல் புத்திரர் அவைகளை தங்கள் வீட்டு நிலைகளிலும் தங்கள் வாசல்களிலும் எழுதவேண்டும் (உபா 11:21).

5. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, அவர் வழிகளிலெல்லாம் நடந்து, அவரைப் பற்றிக் கொண்டிருக்கும்படி, மோசே அவர்களுக்குச் செய்யக் கற்பிக்கிற இந்தக் கற்பனைகளையெல்லாம் ஜாக்கிரதையாய்க் கைக்கொள்ளவேண்டும் (உபா 11:22).

யாத் 13:9,16; உபா 11:18; உபா 6:8 ஆகிய வசனங்களில் நியாயப்பிரமாணத்தின் ஒரு பகுதியை இஸ்ரவேல் புத்திரர்கள் தங்கள் கையின்மேலும், நெற்றியின்மேலும் அடையாளமாகக் கட்டிக் கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. இதை மெய்யாகவே கட்டிக் கொள்ள வேண்டுமா, அல்லது இது ஒரு உருவக வாக்கியமா என்று வேதபண்டிதர்கள் பலவிதமாகக் கருத்து கூறுகிறார்கள்.

பல காலங்களாக யூதமார்க்கத்தார் இந்த வசனங்களை உள்ளவாறே விசுவாசித்து, தங்களுடைய கைகளிலும், நெற்றியிலும் ஞாபகக்குறியாகக் கட்டிக் கொண்டார்கள். இதற்காக அவர்கள் யாத் 13:1-10,11-16; யாத் 6:4-9; யாத் 11:13-21 ஆகிய வசனங்களை மேற்கோளாகக் கூறுகிறார்கள்.

காப்புநாடாக்கள் எனப்படும் ஞாபகக்குறிகள் இரண்டு வகைப்படும். ஒன்று, கையில் கட்டிக் கொள்வது. மற்றொன்று நெற்றியில் கட்டிக் கொள்வது.

புருஷர்கள் மட்டுமே காப்புநாடாக்களைக் கட்டிக் கொண்டார்கள். பொதுஜனங்கள் ஜெபம் பண்ணும்போது மட்டும் காப்புநாடாக்களைக் கட்டிக் கொள்வது வழக்கம். பரிசேயர்களோ அவற்றை எப்போதும் கட்டிக் கொண்டிருப்பார்கள். காப்புநாடாக்களின் அகலத்தை அதிகமாக்கி, தங்களுடைய மாயமான பக்தியை ஜனங்களுக்கு வெளிப்படுத்திக் காண்பிப்பார்கள். கிறிஸ்து இதுபோன்ற மாயமான பழக்கங்களைக் கடிந்து கொண்டார். (மத் 23:5).

கர்த்தருடைய வார்த்தைகளை பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு உபதேசிக்க வேண்டும். எல்லா சமயங்களிலும், கர்த்தருடைய வார்த்தையைக் குறித்துப் பேசவேண்டும். அவைகளை வீட்டு நிலைகளிலும், வாசல்களிலும் எழுதி வைத்திருக்க வேண்டும் (உபா 11:19-20).

கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது ஆசீர்வாதங்களும், அவற்றைக் கைக்கொள்ளாமல் புறக்கணிக்கும் போது சாபங்களும் வரும். நமது ஜீவியத்தில் கர்த்தரிடமிருந்து ஆசீர்வாதம் வரவேண்டுமா அல்லது சாபம் வரவேண்டுமா என்று நாமே தீர்மானம் பண்ணிக் கொள்ளலாம்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கற்பனைகளையெல்லாம் ஜாக்கிரதையாய்க் கைக்கொள்ளும்போது, கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் அவர்களுக்கு கிடைக்கும். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியும்போது, கர்த்தர் தமது கிருபையினால் அவர்களை ஆசீர்வதிப்பார். கர்த்தர் அவர்களுக்கு கொடுக்கும் ஆசீர்வாதங்களை மோசே இந்த வசனப்பகுதியில் விவரிக்கிறார். அந்த ஆசீர்வாதங்களின் விவரம் வருமாறு :

1. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அந்த ஜாதிகளையெல்லாம் துரத்திவிடுவார்.

2. இஸ்ரவேல் புத்திரர் தங்களைப்பார்க்கிலும் ஜனம் பெருத்த பலத்த ஜாதிகளை துரத்துவார்கள் (உபா 11:23).

3. இஸ்ரவேல் புத்திரருக்கு தங்கள் உள்ளங்கால் மிதிக்கும் இடமெல்லாம் அவர்களுடையதாயிருக்கும்.

4. வனாந்தரத்தையும் லீபனோனையும் தொடங்கி, ஐபிராத்து நதியையும் தொடங்கி, கடைசிச் சமுத்திரம்வரைக்கும் இஸ்ரவேல் புத்திரருடைய எல்லையாயிருக்கும் (உபா 11:24).

5. இஸ்ரவேல் புத்திரர் முன் ஒருவரும் எதிர்த்து நிற்பதில்லை.

6. தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னபடி, அவர்களால் உண்டாகும் பயமும்கெடியும் அவர்கள் மிதிக்கும் பூமியின்மேலெல்லாம் வரப்பண்ணுவார் (உபா 11:25).

"உங்கள் உள்ளங்கால் மிதிக்கும் இடமெல்லாம் உங்களுடையதாயிருக்கும்" என்று கர்த்தர் சொல்லுகிறார். வாக்குத்தத்த தேசத்திற்கு எல்லை இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு நல்ல விஸ்தாரணமான ஸ்தலத்தை வாக்குப் பண்ணியிருக்கிறார். தெற்கில் சீனாய் வளைகுடா, வடக்கில் லீபனோனின் வனாந்தரம், கிழக்கில் ஐபிராத்து நதி, மேற்கில் மத்தியதரைக்கடல் ஆகியவை கானான் தேசத்தின் எல்லைகளாகும். (ஆதி 15:18-21; எசே 48).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியும்போது, அவருடைய நாமத்தினால் அவர்களுக்கு ஜெயமும், ஆசீர்வாதமும் உண்டாகும். கானான் தேசம் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட தேசமாகயிருக்கும். இஸ்ரவேல் புத்திரருடைய சிநேகிதர்களுக்கு சமாதானமும், அவர்களுடைய சத்துருக்களுக்கு பயங்கரமும் உண்டாயிருக்கும்.

நம்முடைய ஜீவியத்தை கர்த்தருடைய வார்த்தை ஆளுகை செய்யும்போது, நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கும்போது, கர்த்தர் நம்மையும் ஆசீர்வதிப்பார். அவர் நம்மையும் பாதுகாத்து பராமரிப்பார். கர்த்தர் நம்மோடு கூடயிருப்பதினால் நமக்கு விரோதமாக யாராலும் எழும்பி, நம்மை மேற்கொள்ள முடியாது.

"கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்குத் திடநம்பிக்கை உண்டு; அவன் பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கிடைக்கும். கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவஊற்று; அதினால் மரணக்கண்ணிகளுக்குத் தப்பலாம்" (நீதி 14:26,27).

ஆசீர்வாதமும் சாபமும் உபா 11:26-32

உபா 11:26. இதோ, இன்று நான் உங்களுக்கு முன்பாக ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் வைக்கிறேன்.

உபா 11:27. இன்று நான் உங்களுக்குக் கற்பிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தீர்களானால் ஆசீர்வாதமும்,

உபா 11:28. எங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாமல், இன்று நான் உங்களுக்கு விதிக்கிற வழியைவிட்டு விலகி, நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றுவீர்களானால் சாபமும் வரும்.

உபா 11:29. நீ சுதந்தரிக்கப்போகிற தேசத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைப் பிரவேசிக்கப்பண்ணும்போது, கெரிசீம் மலையின்மேல் ஆசீர்வாதத்தையும் ஏபால் மலையின்மேல் சாபத்தையும் கூறக்கடவாய்.

உபா 11:30. அவைகள் யோர்தானுக்கு அப்புறத்திலே சூரியன் அஸ்தமிக்கிற மேற்குவழியாய்க் கானானியர் குடியிருக்கிற நாட்டுவெளியிலே கில்காலுக்கு எதிரான மோரே என்னும் சமபூமியின் அருகேயல்லவோ இருக்கிறது?

உபா 11:31. உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கிற தேசத்தைச் சுதந்தரிப்பதற்கு,நீங்கள் யோர்தானைக் கடந்துபோய், அதைச்சுதந்தரித்துக் கொண்டு, அதிலே குடியிருப்பீர்கள்.

உபா 11:32. ஆகையால் உங்களுக்கு இன்று நான் ஏற்படுத்துகிற சகல கட்டளைகளையும், நியாயங்களையும் கைக்கொண்டு நடக்கக் கடவீர்கள்.

மோசே தன்னுடைய போதகத்தின் முடிவுரையாக, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டும் என்றும், அவருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்று மறுபடியுமாய்ச் சொல்லுகிறார்.

மோசே தன்னுடைய போதகத்தின் முடிவுரையில் ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் பற்றிச் சொல்லுகிறார். கர்த்தருக்கு நாம் கீழ்ப்படிந்தால் நமக்கு ஆசீர்வாதம் வரும். கீழ்ப்படியவில்லையென்றால் சாபம் வரும்.

மோசே தன்னுடைய போதகத்தின் மூலமாக, இஸ்ரவேல் புத்திரருடைய மனதிலே நம்பிக்கையையும், பயத்தையும் ஏற்படுத்துகிறார்.கர்த்தருடையகற்பனைகளைக் கைக்கொண்டால் தங்களுக்கு ஆசீர்வாதம் வரும் என்னும் நம்பிக்கை இஸ்ரவேல் புத்திரருடைய மனதில் உண்டாயிற்று. அதே வேளையில், கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவில்லையென்றால், தங்களுக்கு சாபம் வரும் என்னும் பயமும் அவர்களுடைய மனதில் உண்டாயிற்று.

நம்முடைய மனதையும் ஆத்துமாவையும், கர்த்தர்மீது நாம் வைக்கும் நம்பிக்கையும், கர்த்தருக்கு பயப்படும் பயமும் ஆளுகை செய்யவேண்டும். நம்முடைய இருதயத்தில் விசுவாசமும் பயமும் சமநிலையிலிருக்கவேண்டும். அப்போது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் ஆரோக்கியமாயிருக்கும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "இதோ, இன்று நான் உங்களுக்கு முன்பாக ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் வைக்கிறேன்" (உபா 11:26) என்றும்,

"இன்று நான் உங்களுக்குக் கற்பிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தீர்களானால் ஆசீர்வாதமும், எங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாமல், இன்று நான் உங்களுக்கு விதிக்கிற வழியைவிட்டு விலகி, நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றுவீர்களானால் சாபமும் வரும்" (உபா 11:27,28) என்றும் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்குத் தமது கற்பனைகளைக் கூறியிருக்கிறார். அவர்கள் கர்த்தருடைய கற்பனைக்குக் கீழ்ப்படிய வேண்டும். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு ஆசீர்வாதங்களை வாக்குப் பண்ணியிருக்கிறார். கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால், அவருடைய கற்பனைகளைக் கைக் கொள்ள வேண்டும். அதற்குரிய நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். கர்த்தருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதமும், கீழ்ப்படியா விட்டால் சாபமும் வரும்.

இஸ்ரவேல் புத்திரர் தேவனுடைய தெரிந்தெடுக்கப்பட்ட சந்ததியார். இருந்த போதிலும், கர்த்தருடைய ஆசீர்வாதங்களை இவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டுமானால், இவர்களும் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, அவருடைய நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். இஸ்ரவேல் புத்திரர் தேவனுக்குக் கீழ்ப்படிய வில்லையென்றால், அவர்களுக்கும் சாபம் நிச்சயம் உண்டு. (உபா 28:63-68).

கர்த்தர் ஆசீர்வாதத்தையும், சாபத்தையும் தம்முடைய பிள்ளைகளுக்கு முன்பாக வைத்திருக்கிறார். அதைப் பெற்றுக் கொள்வதற்கான நிபந்தனைகளையும் சொல்லியிருக்கிறார். வரலாற்றுக் காலங்களில் கர்த்தருடைய வார்த்தை அவர் சொன்ன பிரகாரமாகவே இதுவரையிலும் நிறைவேறி வந்திருக்கிறது. தேவனிடத்தில் பட்சபாதம் இல்லை. ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் பாவம் செய்தபோது, கர்த்தர் அவர்களையும் தமது நீதியின் பிரகாரம் நியாயந்தீர்த்து விடுகிறார். இஸ்ரவேலை நியாயந்தீர்த்த கர்த்தர் புறஜாதியாரையும் நியாயந்தீர்ப்பார். (ரோமர் 11).

கர்த்தருக்கு ஒருவர் தொடர்ந்து கீழ்ப்படியும்போது அவருக்குக் கர்த்தருடைய ஆசீர்வாதம் தொடர்ந்து வரும். நீதிமான் தன் நீதியிலிருந்து விலகி, பாவம் செய்யும்போது கர்த்தர் அவனைச் சபிப்பார் (யாத் 32:32-33; லேவி 26; உபா 11:1-68; எசே 18,33).

கர்த்தர் மனுஷனைச் சிருஷ்டித்த போது, அவனைச் சுயாதீன சித்தத்தோடு சிருஷ்டித்தார். ஆதியிலிருந்தே மனுஷன் கர்த்தருடைய சித்தத்திற்குப் பரிபூரணமாகக் கீழ்ப்படிந்து ஜீவித்திருந்தால், இந்தப் பூமியில் சாபமோ, பாவமோ இருந்திருக்காது. தேவனுடைய உடன்படிக்கைகள், பாவத்தையும், நீதியையும் அடிப்படையாக வைத்தே அமைந்திருக்கிறது. ஒருவன் பாவம் செய்தாலும் கர்த்தர் அவனைத் தொடர்ந்து ஆசீர்வதிப்பார் என்று வேதத்தில் எங்கும் சொல்லப்படவில்லை.

ஒருவன் தேவனுக்கு எதிராகவும், மனுஷருக்கு எதிராகவும் பாவம் செய்யும்போது அவன் தேவனுடைய தண்டனையையும், அரசாங்கத்தினுடைய நீதிமன்றத்தின் மூலமாக வரும் தண்டனையையும் அனுபவிக்க வேண்டும். தவறு செய்தவன் தன்னுடைய அரசாங்கத்தின் நீதிமன்றத்திடம் தன்னுடைய தவறுகளுக்காக தான் மனம் வருந்துவதாகவும், தான் இனிமேல் தவறு செய்யமாட்டேன் என்று வாக்குப் பண்ணுவதாகவும் கூறினால், எந்த அரசாங்கமும் அவனை மன்னிக்காது. நீதிமன்றத்தில் நீதி மட்டுமே இருக்கும். அங்கு குற்றவாளிக்கு கிருபையும், இரக்கமும் காண்பிக்கப்படமாட்டாது. ஆனால் கர்த்தருடைய சமுகத்தில் நீதியும் உண்டு. தன்னுடைய பாவத்தை உணர்ந்து மன்னிப்பைத் தேடுகிறவர்களுக்கு அங்குகிருபையும் இரக்கமும் உண்டு.

தேவனுடைய சமுகத்தில் மனுஷன் தேவனுடைய கிருபையைத் தவறான வழிகளில் பெற்றுக் கொள்ள முடியாது. தேவனிடத்தில் பட்சபாதம் ஏதுவுமிருக்காது. (ரோமர் 2:11; யாக் 2:9-10) பாவத்தின் சம்பளம் மரணம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையோ, நித்திய ஜீவனைத் தரும். கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, அவருடைய நிபந்தனைகளுக்குத் தொடர்ந்து கீழ்ப்படிந்து ஜீவிக்க வேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தைச் சுதந்தரித்த பின்பு, இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் மோசே சொல்லுகிற ஆசீர்வாதமான வார்த்தைகளையும், சாபமான வார்த்தைகளையும் சொல்லவேண்டும். இந்த வார்த்தைகளை எந்த இடத்திலிருந்து சொல்லவேண்டும் என்பதையும் மோசே தீர்மானம்பண்ணியிருக்கிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீ சுதந்தரிக்கப்போகிற தேசத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைப் பிரவேசிக்கப்பண்ணும்போது, கெரிசீம் மலையின்மேல் ஆசீர்வாதத்தையும் ஏபால் மலையின்மேல் சாபத்தையும் கூறக்கடவாய்" (உபா 11:29) என்று சொல்லுகிறார்.

கெரிசீம் மலையும், ஏபால் மலையும் யோர்தானுக்கு அப்புறத்திலே சூரியன் அஸ்தமிக்கிற மேற்குவழியாய்க் கானானியர் குடியிருக்கிற நாட்டுவெளியிலே கில்காலுக்கு எதிரான மோரே என்னும் சமபூமியின் அருகே இருக்கிறது (உபா 11:30).

கெரிசீம் மலை சீகேமின் தென்பகுதியிலும், ஏபாலின் வடபகுதியிலும் அமைந்துள்ளது. (உபா 11:29; உபா 27:12; யோசு 8:33-34) இதன் உயரம் 2,800 அடி. இதன் நீளம் 3 மைல்கள். கெரிசீம் மலை அழகானது, வளமானது. ஏபால் மலை வறண்ட பூமி. இவ்விரண்டு மலைகளின் இயற்கை அமைப்பு ஆசீர்வாதத்திற்கும், சாபத்திற்கும் அடையாளமாயிருக்கிறது. கெரிசீம் மலை ஆசீர்வாதத்திற்கு அடையாளம். ஏபால் மலை சாபத்திற்கு அடையாளம்.

இஸ்ரவேல் புத்திரர் யோர்தானைக் கடந்து, கானான் தேசத்திற்குள் பிரவேசித்த பின்பு, எந்தெந்த கோத்திரத்தார் கெரிசீம் மலையிலும், எந்தெந்த கோத்திரத்தார் ஏபால் மலையிலும் நிற்கவேண்டும் என்றும், யாரெல்லாம் ஆசீர்வாத வார்த்தைகளையும், யாரெல்லாம் சாபவார்த்தைகளையும் சொல்லவேண்டும் என்றும் மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார்.

அவர்கள் அந்த மலைகளின்மீது நின்று சொல்லவேண்டிய ஆசீர்வாதமான வார்த்தைகளைப்பற்றியும், சாபமான வார்த்தைகளைப்பற்றியும் மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொன்ன இந்த வார்த்தைகள் உபாகமம் 27:11-26 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

மேலும் அந்நாளிலே மோசே ஜனங்களை நோக்கி, "நீங்கள் யோர்தானைக் கடந்தபின்பு, ஜனங்கள் ஆசீர்வதிக்கப்படும்படி கெரிசீம் மலையில் சிமியோன், லேவி, யூதா, இசக்கார், யோசேப்பு, பென்யமீன் என்னும் கோத்திரங்கள் நிற்கவேண்டும்.

சாபங்கூறப்படும்பொருட்டு ஏபால் மலையில் ரூபன், காத், ஆசேர், செபுலோன், தாண், நப்தலி என்னும் கோத்திரங்கள் நிற்கவேண்டும். அப்பொழுது லேவியர் உரத்த சத்தமிட்டு இஸ்ரவேல் மனிதர் எல்லாரையும் பார்த்து:

கர்த்தருக்கு அருவருப்பான காரியமாகிய தொழிலாளிகளுடைய கைவேலையால் செய்யப்பட்டதும் வார்ப்பிக்கப்பட்டதுமான யாதொரு விக்கிரகத்தை உண்டுபண்ணி ஒளிப்பிடத்திலே வைக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; அதற்கு ஜனங்களெல்லாரும் பிரதியுத்தரமாக ஆமென் என்று சொல்லக்கடவர்கள்.

தன் தகப்பனையும் தன் தாயையும் தூஷிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்.

பிறனுடைய எல்லைக்குறியை ஒற்றிப்போடுகிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்.

குருடனை வழிதப்பச்செய்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்.

பரதேசி திக்கற்றவன் விதவை ஆகிய இவர்களுடைய நியாயத்தைப் புரட்டுகிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்.

தன் தகப்பன் மனைவியோடே சயனிக்கிறவன், தன் தகப்பனுடைய மானத்தைத் திறந்தபடியினாலே, சபிக்கப்பட்டவன் என்பார்களாக;ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்.

யாதொரு மிருகத்தோடே புணர்ச்சி செய்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்.

தன் தகப்பனுக்காவது தாய்க்காவது குமாரத்தியாகிய தன் சகோதரியோடே சயனிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்.

தன் மாமியோடே சயனிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்.

ஒளிப்பிடத்திலே பிறனைக் கொலைசெய்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்.

குற்றமில்லாதவனைக் கொலைசெய்யும்படி பரிதானம் வாங்குகிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்.

இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளையெல்லாம் கைக்கொண்டு நடவாதவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று செல்லக்கடவர்கள்" (உபா 27:11-26).

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசித்த பின்பு, மோசே தங்களுக்கு கட்டளையிட்ட பிரகாரம், அந்த மலைகளில் ஏறி நின்று ஆசீர்வாதமான வார்த்தைகளையும், சாபமான வார்த்தைகளையும் சொல்லுகிறார்கள். இந்த சம்பவம் யோசு 8:33-35 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

"இஸ்ரவேல் ஜனங்களை ஆசீர்வதிக்கும்படி கர்த்தரின் தாசனாகிய மோசே முதலில் கட்டளையிட்டிருந்தபடியே, இஸ்ரவேலர் எல்லாரும், அவர்களுடைய மூப்பரும், அதிபதிகளும், நியாயாதிபதிகளும், அந்நியர்களும், இஸ்ரவேலில் பிறந்தவர்களும் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற லேவியரான ஆசாரியருக்கு முன்பாக, பெட்டிக்கு இருபுறத்திலும், பாதிபேர் கெரிசீம் மலைக்கு எதிர்புறமாகவும், பாதிபேர் ஏபால் மலைக்கு எதிர்புறமாகவும் நின்றார்கள்.

அதற்குப்பின்பு அவன் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடி நியாயப்பிரமாணத்தில் சொல்லிய ஆசீர்வாதமும் சாபமுமாகிய சகல வார்த்தைகளையும் வாசித்தான்.

மோசே கட்டளையிட்ட எல்லாவற்றிலும் யோசுவா, இஸ்ரவேலின் முழுச்சபைக்கும், ஸ்திரீகளுக்கும் பிள்ளைகளுக்கும், அவர்களுக்குள் நடமாடி சஞ்சரித்த அந்நியர்களுக்கும் முன்பாக, ஒரு வார்த்தையும் விடாமல் வாசித்தான்" *(யோசு 8:33-35).*

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்திலிருந்து நியாயப்பிரமாணத்தைப் பெற்றிருக்கிறார்கள். மோசே கர்த்தர் சொன்ன பிரகாரம் நியாயப்பிரமாண புஸ்தகத்தை எழுதினார். இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக மோசே எழுதியிருந்த நியாயப்பிரமாணத்தை யோசுவா அங்கே கற்களில் பேர்த்தெழுதுகிறார் *(யோசு 8:32).*

யோசுவா பத்துக்கற்பனைகள் அடங்கிய நியாயப்பிரமாணத்தை, இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் முன்பாக கற்களில் எழுதுகிறார். அதை இஸ்ரவேலின் மனுஷர் எல்லோரும் பார்க்கிறார்கள்.

யோசுவா நியாயப்பிரமாணத்தை பேர்த்தெழுதின கற்களில் சாந்து பூசப்பட்டிருக்கிறது. யோசுவா நியாயப்பிரமாண வார்த்தைகளை கல்லிலே செதுக்காமல், கல்லில் பூசப்பட்டிருக்கிற சாந்தின்மீது பேர்த்தெழுதுகிறார். நியாயப்பிரமாண வார்த்தைகள் எல்லோரும் பார்க்கும் வண்ணமாக எழுதப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் நியாயப்பிரமாணத்திலே எழுதியிருக்கும் வார்த்தைகளுக்கு கீழ்ப்படியவேண்டும்.

"மேலும் நீங்கள் யோர்தானை கடந்தபோது, இன்று நான் உங்களுக்குக் கட்டளையிட்டபடி அந்தக் கல்லுகளை ஏபால் மலையிலே நாட்டி, அவைகளுக்குச் சாந்து பூசி, அங்கே இருப்பாயுதம்படாத கற்களாலே உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டக்கடவாய்" *(உபா 27:4,5).*

"அந்தக் கல்லுகளில் இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளையெல்லாம் துலக்கமாய் எழுதக்கடவாய் என்று கட்டளையிட்டான் *(உபா 27:8).*

நியாயப்பிரமாணத்திலே ஆசீர்வாதங்களும் சொல்லப்பட்டிருக்கிறது. சாபங்களும் சொல்லப்பட்டிருக்கிறது. நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வார்த்தைகளை, இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கேட்கும்படியாக வாசிக்கவேண்டும். நியாயப்பிரமாணத்தை வாசித்து முடித்தபின்பு, அதைக் கேட்டவர்கள் எல்லோரும் "ஆமென்" என்று சொல்லவேண்டும்.

நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வார்த்தைகளைக் கேட்கும்படியாக இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் கூடிவருகிறார்கள். அவர்களில் இஸ்ரவேலர் எல்லாரும், அவர்களுடைய மூப்பரும், அதிபதிகளும், நியாயாதிபதிகளும், அந்நியர்களும், இஸ்ரவேலில் பிறந்தவர்களும் இருக்கிறார்கள்.

இவர்களெல்லோரும் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற லேவியரான ஆசாரியருக்கு முன்பாக, பெட்டிக்கு இருபுறத்திலும், பாதிபேர் கெரிசீம் மலைக்கு எதிர்புறமாகவும், பாதிபேர் ஏபால் மலைக்கு எதிர்புறமாகவும் நிற்கிறார்கள் *(யோசு 8:33)*

யோசுவா நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடி நியாயப்பிரமாணத்தில் சொல்லிய ஆசீர்வாதமும் சாபமுமாகிய சகல வார்த்தைகளையும் வாசிக்கிறார் (யோசு 8:34).

நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிற வார்த்தைகள் வாசிக்கப்படும்போது அதை இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் கூடிநின்று கேட்கிறார்கள். அவர்களில் இஸ்ரவேலின் அதிபதிகளும் இருக்கிறார்கள். நியாயாதிபதிகளும் இருக்கிறாகள். தரித்திரரும் இருக்கிறார்கள்.

யூதமார்க்கத்தமைந்தவர்களும் நியாயப்பிரமாணம் வாசிக்கப்படுவதைக் கேட்கிறார்கள். இவர்கள் அந்நியர்களாகயிருந்தாலும், யூதமார்க்கத்தை ஏற்றுக்கொண்டவர்கள். இவர்களோடுகூட, இஸ்ரவேலில் பிறந்தவர்களும் நியாயப்பிரமாணம் வாசிக்கப்படும்போது அதைக் கேட்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்திலே, புறஜாதி ஜனங்களுக்கும் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் என்பதற்கு இது அடையாளமாயிருக்கிறது. புறஜாதியார் இஸ்ரவேலின் காணியாட்சிக்கு புறம்பானவர்களாகயிருந்தாலும், அவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை, தங்களுடைய சொந்த இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ளும்போது, அவர்களும் இஸ்ரவேலின் காணியாட்சிக்கு சுதந்தரவாளிகளாயிருப்பார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் பன்னிரண்டு கோத்திரத்தாராயிருக்கிறார்கள். அவர்களில் ஆறு கோத்திரத்தார் கெரிசீம் மலைக்கு எதிர்புறமாக நிற்கிறார்கள். மீதி ஆறு கோத்திரத்தார் ஏபால் மலைக்கு எதிர்புறமாக நிற்கிறார்கள். அவர்களுக்கு நடுவே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி இருக்கிறது. உடன்படிக்கைப் பெட்டியை சுமக்கிற லேவியரான ஆசாரியர் பெட்டிக்கு அருகாமையிலிருக்கிறார்கள். இஸ்ரவேல் கோத்திரத்தார் பெட்டிக்கு இருபுறத்திலும் இருக்கிறார்கள். உடன்படிக்கைப் பெட்டி கெரிசீம் மலைக்கும், ஏபால் மலைக்கும் இடையே உள்ள பள்ளத்தாக்கில் இருக்கிறது.

யோசுவா நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடி நியாயப்பிரமாணத்தில் சொல்லிய ஆசீர்வாதமும் சாபமுமாகிய சகல வார்த்தைகளையும் வாசிக்கிறார். மோசே கட்டளையிட்ட எல்லாவற்றிலும் யோசுவா, இஸ்ரவேலின் முழுச்சபைக்கும், ஸ்திரீகளுக்கும் பிள்ளைகளுக்கும், அவர்களுக்குள் நடமாடி சஞ்சரித்த அந்நியர்களுக்கும் முன்பாக, ஒரு வார்த்தையும் விடாமல் வாசிக்கிறார் (யோசு 8:34,35).

இஸ்ரவேல் ஜனங்கள் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிற எல்லா வார்த்தைகளையும் தங்களுடைய செவிகளினால் கேட்கிறார்கள். அவர்களெல்லோரும் அமைதியாக நிற்கிறார்கள். எது சாபம் என்றும், எது ஆசீர்வாதம் என்றும் இஸ்ரவேல் புத்திரருக்கு தெளிவாக வாசிக்கப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரர் சாபத்திற்கு விலகி ஜீவிக்கவேண்டும். அவர்கள் கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, கர்த்தர் மோசேயின் மூலமாக தங்களுக்கு கற்பித்த, கற்பனைகளையும் கட்டளைகளையும், நியாயங்களையும் நினைவுகூரவேண்டும். கர்த்தர் தங்களை தம்முடைய பிரமாணத்தின்படியே ஆசீர்வதிப்பார் என்பதை இஸ்ரவேல் புத்திரர் அறிந்துகொள்ளவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கிற தேசத்தைச் சுதந்தரிப்பதற்கு, நீங்கள் யோர்தானைக் கடந்துபோய், அதைச்சுதந்தரித்துக் கொண்டு, அதிலே குடியிருப்பீர்கள்" (உபா 11:31) என்றும்,

"ஆகையால் உங்களுக்கு இன்று நான் ஏற்படுத்துகிற சகல கட்டளைகளையும், நியாயங்களையும் கைக்கொண்டு நடக்கக் கடவீர்கள்" (உபா 11:32) என்றும் சொல்லுகிறார்.

12 அதிகாரம்

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய ஆராதனையைப்பற்றிப் போதிக்கிறார். அவர்கள் கர்த்தரை விட்டு விலகி அந்நிய தெய்வங்களை ஆராதிக்கக்கூடாது. தங்களுக்கு விக்கிரகங்களை தெய்வங்களாக உண்டுபண்ணவும் கூடாது.

இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்தில் பிரவேசிக்கும்போது, அந்த தேசத்திலுள்ள விக்கிரகங்களையும், சிலைகளையும், மேடுகளையும் அழித்துப்போடவேண்டும் (உபா 12:1-3).

இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்தில் வாசம்பண்ணும்போது, அவர்கள் கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்திற்கு அருகாமையிலிருக்கவேண்டும் (உபா 12:4,5). கர்த்தருடைய நியமத்தின் பிரகாரமாகவே இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை ஆராதிக்கவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய ஆராதனையைப்பற்றிய பிரமாணங்களை இந்த அதிகாரத்தில் விரிவாக எடுத்துச் சொல்லுகிறார் (உபா 12:7-32).

விக்கிரகாராதனை
உபா 12:1-4

உபா 12:1. உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சுதந்தரிக்கக் கொடுக்கிற தேசத்திலே, நீங்கள் பூமியில் உயிரோடிருக்கும் நாளெல்லாம் கைக்கொண்டு நடக்கவேண்டிய கட்டளைகளும் நியாயங்களுமாவன:

உபா 12:2. நீங்கள் துரத்திவிடும் ஜாதிகள் தங்கள் தேவர்களைச் சேவித்த உயர்ந்த மலைகளின்மேலும், மேடுகளின்மேலும், பச்சையான சகல மரங்களின் கீழுமுள்ள இடங்களையெல்லாம் முற்றிலும் அழித்து,

உபா 12:3. அவர்கள் பலிபீடங்களை இடித்து, அவர்கள் சிலைகளைத் தகர்த்து, அவர்கள் தோப்புகளை அக்கினியால் சுட்டெரித்து, அவர்கள் தேவர்களின் விக்கிரகங்களை நொறுக்கி, அவைகளின் பேரும் அவ்விடத்தில் இராமல் அழியும்படி செய்யக்கடவீர்கள்.

உபா 12:4. உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு நீங்கள் அப்படிச் செய்யாமல்,

பரிசுத்த வேதாகமத்தில் முதல் வசனமாக, "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" (ஆதி 1:1) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆதியிலே தேவன் இருந்தார் என்பது அடிப்படை சத்தியம். தேவன் இருக்கிறார் என்பதும், தேவன் ஒருவரே என்பதும் பரிசுத்த வேதாகமத்தின் ஆதார சத்தியமாகும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். அவர்கள் கர்த்தரைத் தவிர வேறு அந்நிய தேவர்கள் எதையும் ஆராதிக்கக்கூடாது. இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுக்கு விக்கிரக தெய்வங்களை உண்டுபண்ணவும் கூடாது. கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கவேண்டும். தம்முடைய ஜனம் தம்மை எப்படி ஆராதிக்கவேண்டும் என்று, கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு நியமனம் செய்திருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, அவர்கள் கர்த்தரை மறந்துவிடக்கூடாது. கர்த்தரே அவர்களை கானான் தேசத்திற்கு அழைத்து வந்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்திலே கர்த்தரை எவ்வாறு ஆராதிக்கவேண்டும் என்பது பற்றி மோசே அவர்களுக்கு போதிக்கிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சுதந்தரிக்கக் கொடுக்கிற தேசத்திலே, நீங்கள் பூமியில் உயிரோடிருக்கும் நாளெல்லாம் கைக்கொண்டு நடக்கவேண்டிய கட்டளைகளும் நியாயங்களுமாவன" (உபா 12:1) என்று சொல்லி, தன்னுடைய பிரசங்கச் செய்தியை ஆரம்பிக்கிறார்.

இந்த வசனப்பகுதியில் பழைய பிரமாணங்கள் புதிய விளக்கங்களோடு மறுபடியும் சொல்லப்பட்டிருக்கிறது. நாற்பது வருஷக்காலமாக இஸ்ரவேல் புத்திரர்கள் வனாந்தரத்தில் அலைந்து திரிந்தார்கள். அப்பொழுது சீனாய் மலையில் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளைகளையும், நியாயங்களையும் கொடுத்தார். அப்போது அவர்களுக்கு வித்தியாசமான சூழ்நிலைகள் இருந்தது.

இப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் அலைந்து திரிந்த நாற்பது வருஷக்காலத்தை நிறைவேற்றிவிட்டு, கானான் தேசத்திற்குப் பிரவேசிப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள். அங்கு புதிய சூழ்நிலைகள் அவர்களுக்கு உண்டாயிற்று. ஆயினும் பழைய பிரமாணங்கள் முற்றிலுமாக ஒழிக்கப்படவில்லை. புதிய கட்டளைகளுக்கு அவை ஆதாரமாயிற்று.

கானான் தேசத்தில் விக்கிரகாராதனைக்காரர்கள் இருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, புறஜாதியாரின் விக்கிரகங்களை அழித்துப்போடவேண்டும். இஸ்ரவேல் புத்திரருக்கும், விக்கிரகாராதனைக்கும் சம்பந்தமில்லை. அவர்கள் விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்களோடு எந்தவிதமான சம்பந்தமும் கலக்கக்கூடாது.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீங்கள் துரத்திவிடும் ஜாதிகள் தங்கள் தேவர்களைச் சேவித்த உயர்ந்த மலைகளின்மேலும், மேடுகளிமேலும், பச்சையான சகல மரங்களின் கீழுமுள்ள இடங்களையெல்லாம் முற்றிலும் அழித்து, அவர்கள் பலிபீடங்களை இடித்து, அவர்கள் சிலைகளைத் தகர்த்து, அவர்கள் தோப்புகளை அக்கினியால் சுட்டெரித்து, அவர்கள் தேவர்களின் விக்கிரகங்களை நொறுக்கி, அவைகளின் பேரும் அவ்விடத்தில் இராமல் அழியும்படி செய்யக்கடவீர்கள்" (உபா 12:2,3) என்று சொல்லுகிறார்.

கானானியர்கள் தங்களுக்கு விக்கிரகங்களை உண்டுபண்ணி, அவற்றை மேடைகளிலே நிறுத்தி, அந்த விக்கிரகதெய்வங்களை ஆராதிக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரோ புறஜாதியாரின் மேடுகளை முற்றிலுமாய் அழித்து, அதை சமமான தரையாக மாற்றவேண்டும்.

புறஜாதியார் தங்கள் விக்கிரகங்களை உயர்ந்த மலைகளின்மேலும், மேடுகளின்மேலும் ஸ்தாபித்திருக்கிறார்கள். உயர்ந்த மலைகள் பரலோகத்திற்கு சமீபமாயிருக்கும் என்பது புறஜாதியாரின் நம்பிக்கை. உயர்ந்த மலைகளிலும் மேடுகளிலும் தங்கள் விக்கிரகங்களை ஆராதித்தால், தாங்கள் சீக்கிரத்தில் பரலோகத்திற்கு போய்விடலாம் என்பது புறஜாதியாரின் நம்பிக்கை.

மரங்களின் கீழே நிழல் அதிகமாயிருக்கும். வெயிலின் உஷ்ணத்திற்கு மரத்தின் நிழலில் ஒதுங்கினால் சரீரத்திற்கும், மனதிற்கும் இதமாகயிருக்கும். புறஜாதியார்கள் சகல மரங்களின் கீழும் தங்கள் விக்கிரகங்களை ஸ்தாபித்து, அந்த இடத்திலே மனரம்மியமாகயிருக்கலாம் என்று நினைக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் நன்மையைப்பற்றிக் கொள்வதற்கு முன்பாக தீமையை வெறுக்கவேண்டும். கானான் தேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற விக்கிரகாராதனைகள் அருவருப்பான காரியங்களாகும். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் பிரவேசிக்கும்போது, முதலாவதாக அருவருப்பான விக்கிரகாராதனையை ஒழிக்கவேண்டும்.

"உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக்கொண்டிருங்கள்" *(ரோம 12:9)*.

கர்த்தரை ஆராதிக்கிறவர்கள், அவரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். அவர்கள் வேறு அந்நிய தெய்வங்களை ஆராதிக்கக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர் தம்மை மாத்திரமே ஆராதிக்கவேண்டும் என்பது, கர்த்தருடைய ஆராதனை பிரமாணமாகும்.

தேவனுடைய ராஜ்யமானது மனுஷருடைய இருதயங்களிலும், இந்தப் பூமியிலுள்ள ஸ்தலங்களிலும் ஸ்தாபிக்கப்படுகிறது. சாத்தானுடைய ராஜ்யம் அழிக்கப்பட்டு, அந்த அழிவுகளின்மேல், தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படவேண்டும். தேவனுடைய ராஜ்யமும் சாத்தானுடைய ராஜ்யமும், ஒரே இடத்தில் அருகருகே இருக்க முடியாது. கிறிஸ்துவுக்கும் பிசாசுக்கும் சம்பந்தமுமில்லலை. ஐக்கியமுமில்லை.

கானான் தேசத்தில் வாசம்பண்ணுகிற புறஜாதி ஜனங்கள் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். தங்கள் அந்நிய தேவர்களை அவர்கள் உயர்ந்த மலைகளின்மேலும், மேடுகளின்மேலும் பச்சையான சகல மரங்களின் கீழும் சேவிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகங்களை அழித்துப்போடவேண்டும். அவர்கள் விக்கிரகாராதனையில் பங்குபெறக்கூடாது. கர்த்தருடைய ஜனம் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். புறஜாதியார் விக்கிரகங்களை ஆராதிப்பதுபோல, இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை ஆராதிக்கக்கூடாது.

"உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு நீங்கள் அப்படிச் செய்யாமல்" (உபா 12:4) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். "அப்படி செய்யாமல்" என்னும் வாக்கியத்திற்கு, புறஜாதி ஜனங்கள் தங்கள் அந்நிய தேவர்களை உயர்ந்த மலைகளின்மேலும், மேடுகளின்மேலும், பச்சையான சகல மரங்களின் கீழும், ஆராதிப்பதுபோல ஆராதியாமல்" என்பது பொருளாகும்.

உயர்ந்த மலையின்மேலும், மேடுகளின் மேலுமுள்ள இடங்களையெல்லாம் முற்றிலும் அழிக்க வேண்டும். கர்த்தர் சர்வ வியாபகராக இருந்தபோதிலும், தாம் தெரிந்தெடுக்கும் இடத்தில் இஸ்ரவேல் புத்திரர்கள் தம்மை ஆராதிப்பதற்காக அங்கு வரவேண்டுமென்று சித்தம் கொண்டிருக்கிறார்.

கர்த்தரை ஆராதிக்கிறவர்கள், அவருடைய ஆராதனை பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து, அவரை ஆராதிக்கவேண்டும். கர்த்தருடைய ஆராதனை பரிசுத்தமானது. கர்த்தரைத் தொழுதுகொள்கிறவர்கள் அவரை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும். கர்த்தர் பரிசுத்தர். கர்த்தரை ஆராதிக்கிறவர்களும் பரிசுத்தமாயிருக்கவேண்டும். நம்முடைய ஆராதனையும் பரிசுத்தமானது.

கர்த்தருடைய பலிபீடம்
உபா 12:5-32

உபா 12:5. உங்கள் தேவனாகிய கர்த்தர் தம்முடைய நாமம் விளங்கும்படி, உங்கள் சகல கோத்திரங்களிலும் தெரிந்துகொள்ளும் ஸ்தானமாகிய அவருடைய வாசஸ்தலத்தையே நாடி, அங்கே போய்,

உபா 12:6. அங்கே உங்கள் சர்வாங்க தகனங்களையும், உங்கள் பலிகளையும், தசமபாகங்களையும்,உங்கள் கை ஏறெடுத்துப் படைக்கும் படைப்புகளையும், உங்கள் பொருத்தனைகளையும்,உங்கள் உற்சாகபலிகளையும், உங்கள் ஆடுமாடுகளின் தலையீற்றுகளையும் கொண்டுவந்து,

உபா 12:7. அங்கே உங்கள் தேவனாகிய கர்த்தருடையசந்நிதியிலே புசித்து, நீங்கள் கையிட்டுச் செய்ததும், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களை ஆசீர்வதித்ததுமான யாவுக்காகவும் நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் சந்தோஷப்படுவீர்களாக.

உபா 12:8. இங்கே இந்நாளில் நாம் அவனவன் தன்தன் பார்வைக்குச் சரியானதையெல்லாம் செய்கிறதுபோல நீங்கள் செய்யாதிருப்பீர்களாக.

உபா 12:9. உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கும் இளைப்பாறுதலிலும் சுதந்தரத்திலும் நீங்கள் இன்னும் பிரவேசிக்கவில்லையே.

உபா 12:10. நீங்கள் யோர்தானைக் கடந்துபோய், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சுதந்தரிக்கக் கொடுக்கும் தேசத்தில் குடியேறும்போதும், சுற்றிலும் இருக்கிற உங்கள் சத்துருக்களையெல்லாம் அவர் விலக்கி, உங்களை இளைப்பாறப்பண்ணுகிறதினால் நீங்கள் சுகமாய் வசித்திருக்கும்போதும்,

உபா 12:11. உங்கள் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஓர் இடம் உண்டாயிருக்கும்; அங்கே நீங்கள் நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் உங்கள் சர்வாங்க தகனங்களையும், உங்கள் பலி களையும், உங்கள் தசம பாகங்களையும், உங்கள் கை ஏறெடுத்துப் படைக்கும் படைப்புகளையும், நீங்கள் கர்த்தருக்கு நேர்ந்துகொள்ளும் விசேஷித்த எல்லாப் பொருத்தனைகளையும் கொண்டுவந்து,

உபா 12:12. உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் நீங்களும், உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும், உங்கள் வேலைக்காரரும், உங்கள் வேலைக்காரிகளும் உங்களோடு பங்கும் சுதந்தரமும் இல்லாமல் உங்கள் வாசல்களில் இருக்கிற லேவியனும் சந்தோஷப்படுவீர்களாக.

உபா 12:13. கண்ட இடமெல்லாம் நீ உன் சர்வாங்க தகனபலிகளை இடாதபடிக்கு எச்சரிக்கையாயிரு.

உபா 12:14. உன் கோத்திரங்கள் ஒன்றில் கர்த்தர் தெரிந்துகொள்ளும் இடத்தில்மாத்திரம் நீ உன் சர்வாங்கக தகனபலிகளையிட்டு, நான் உனக்குக் கற்பிக்கிற யாவையும் அங்கே செய்வாயாக.

உபா 12:15. ஆனாலும் உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு அருளும் ஆசீர்வாதத்திற்குத்தக்கதாய், நீ உன் வாசல்களிலெங்கும் உன் இஷ்டப்படியே மிருகஜீவன்களை அடித்துப் புசிக்கலாம்; தீட்டுப்பட்டவனும், தீட்டுப்படாதவனும் அவைகளை, வெளிமானையும் கலைமானையும் புசிக்கிறதுபோல புசிக்கலாம்.

உபா 12:16. இரத்தத்தைமாத்திரம் புசிக்கவேண்டாம்;அதைத் தண்ணீரைப்போல் தரையிலே ஊற்றிவிடவேண்டும்.

உபா 12:17. உன் தானியத்திலும் உன் திராட்சரசத்திலும் உன் எண்ணெயிலும் தசம பாகத்தையும், உன் ஆடுமாடுகளின் தலையீற்றுகளையும், நீ நேர்ந்துகொள்ளும் உன்னுடைய சகல பொருத்தனைகளையும், உன் உற்சாகக் காணிக்கைகளையும், உன் கை ஏறெடுத்துப் படைக்கும் படைப்புகளையும், நீ உன் வாசல்களில் புசிக்கவேண்டாம்.

உபா 12:18. உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்துகொள்ளும் ஸ்தானத்தில் நீயும் உன் குமாரனும், உன் குமாரத்தியும், உன் வேலைக்காரனும், உன் வேலைக்காரியும், உன் வாசல்களில் இருக்கிற லேவியனும், உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் அதைப் புசித்து, நீ கையிட்டுச் செய்யும் எல்லாக்காரியத்திலும் உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் சந்தோஷப்படுவாயாக.

உபா 12:19. நீ உன் தேசத்திலிருக்கும் நாளெல்லாம் லேவியனைக் கைவிடாதபடிக்கு எச்சரிக்கையாயிரு.

உபா 12:20. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி, உன் எல்லையை விஸ்தாரமாக்கும்போது, நீ இறைச்சி புசிக்க ஆசைகொண்டு, இறைச்சி புசிப்பேன் என்பாயானால், நீ உன் இஷ்டப்படி இறைச்சி புசிக்கலாம்.

உபா 12:21. உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம்விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானம் உனக்குத் தூரமானால், கர்த்தர் உனக்கு அளித்த உன் ஆடுமாடுகளில் எதையாகிலும் நான் உனக்கு விதித்தபடி நீ அடித்து, உன் இஷ்டப்படி உன் வாசல்களிலே புசிக்கலாம்.

உபா 12:22. வெளிமானையும் கலைமானையும் புசிக்கிறதுபோல நீ அதைப் புசிக்கலாம்; தீட்டுப்பட்டவனும் தீட்டுப்படாதவனும் அதைப் புசிக்கலாம்.

உபா 12:23. இரத்தத்தைமாத்திரம் புசிக்காதபடிக்கு எச்சரிக்கையாயிரு; இரத்தமே உயிர்; மாம்சத்தோடே உயிரையும் புசிக்கவேண்டாம்.

உபா 12:24. அதை நீ சாப்பிடாமல் தண்ணீரைப்போல் தரையிலே ஊற்றிவிடவேண்டும்.

உபா 12:25. நீ கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்வதினால், நீயும் உனக்குப் பின்வரும் உன் பிள்ளைகளும் நன்றாயிருக்கும்படி நீ அதைச் சாப்பிடலாகாது.

உபா 12:26. உனக்குரிய பரிசுத்த வஸ்துக்களையும், உன் பொருத்தனைகளையும் கர்த்தர் தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திற்கு நீ கொண்டுவந்து,

உபா 12:27. உன் தேவனாகிய கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் உன் சர்வாங்க தகனபலிகளை மாம்சத்தோடும் இரத்தத்தோடும் கூடப் பலியிடக்கடவாய்; நீ செலுத்தும் மற்றப் பலிகளின் இரத்தமும் உன் தேவனாகிய கர்த்தருடைய பலி பீடத்தின்மேல் ஊற்றப்படக்கடவது; மாம்சத்தையோ நீ புசிக்கலாம்.

உபா 12:28. நீ உன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்கு நன்மையும் செம்மையுமானதைச் செய்வதினால், நீயும் உனக்குப் பின்வரும் உன் பிள்ளைகளும் என்றென்றைக்கும் நன்றாயிருக்கும்படிக்கு, நான் உனக்குக் கற்பிக்கிற இந்த எல்லா வார்த்தைகளையும் நீ கவனித்துக்கேள்.

உபா 12:29. நீ சுதந்தரிக்கப்போகிற தேசத்தின் ஜாதிகளை உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு முன்பாகச் சங்கரிக்கும்போதும், நீ அவர்கள் தேசத்தைச் சுதந்தரித்து அதிலே குடியிருக்கும்போதும்,

உபா 12:30. அவர்கள் உனக்கு முன்பாக அழிக்கப்பட்டபின்பு, நீ அவர்களைப் பின்பற்றிச் சிக்கிக்கொள்ளாதபடிக்கும், இந்த ஜாதிகள் தங்கள் தேவர்களைச் சேவித்தபடி நானும் சேவிப்பேன் என்று சொல்லி அவர்களுடைய தேவர்களைக் குறித்துக் கேட்டு விசாரியாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு.

உபா 12:31. உன் தேவனாகிய கர்த்தருக்கு அப்படிச் செய்யாயாக; கர்த்தர் வெறுக்கிற அருவருப்பான யாவையும் அவர்கள் தங்கள் தேவர்களுக்குச் செய்து, தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் தங்கள் தேவர்களுக்கு அக்கினியிலே சுட்டெரித்தார்களே.

உபா 12:32. நான் உனக்கு விதிக்கிற யாவையும் செய்யும்படி கவனமாயிரு; நீ அதனோடே ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்.

இஸ்ரவேல் புத்திரர் இன்னும் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கவில்லை. அவர்கள் இன்னும் யோர்தானைக் கடக்கவில்லை. மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்கு இந்த வார்த்தைகளைச் சொல்லும்போது, இஸ்ரவேல் சபையார் எல்லோரும் யோர்தானுக்கு இக்கரையிலே இருக்கிறார்கள்.

கானான் தேசத்தில் கர்த்தருடைய வாசஸ்தலம் இருக்கும் என்று மோசே சொல்லுகிறார். அந்த வாசஸ்தலத்திலே, கர்த்தருக்கு பலிகளை செலுத்துவதற்காக ஒரு பலிபீடமும் இருக்கும் என்று மோசே சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, தாங்கள் கண்ட இடமெல்லாம், தங்களுடைய சர்வாங்க தகனபலிகளை இடக்கூடாது. கர்த்தர் நியமித்திருக்கிற தம்முடைய பலிபீடத்தில் மாத்திரமே, இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு பலிகளை செலுத்தவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணுகிறபோது, கர்த்தர் தம்முடைய கூடாரத்திலே வாசம்பண்ணுகிறார். கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தில் அவருக்கு பலிபீடம் இருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார், கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்திற்கு வந்து, அங்கே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற பலிபீடத்திலே, கர்த்தருக்கு பலிகளை செலுத்தி வருகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, அந்த தேசத்திலும் கர்த்தருக்கு ஒரு வாசஸ்தலம் இருக்கும் என்றும், அந்த வாசஸ்தலத்திலே பலிபீடம் இருக்கும் என்றும், இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய வாசஸ்தலத்திலுள்ள பலிபீடத்திலே, பலிகளை கொண்டு வந்து செலுத்தவேண்டும் என்று மோசே சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உங்கள் தேவனாகிய கர்த்தர் தம்முடைய நாமம் விளங்கும்படி, உங்கள் சகல கோத்திரங்களிலும் தெரிந்துகொள்ளும் ஸ்தானமாகிய அவருடைய வாசஸ்தலத்தையே நாடி, அங்கே போய், அங்கே உங்கள் சர்வாங்க தகனங்களையும், உங்கள் பலி களையும், தசமபாகங்களையும்,உங்கள் கை ஏறெடுத்துப் படைக்கும் படைப்புகளையும், உங்கள் பொருத்தனைகளையும், உங்கள் உற்சாகபலிகளையும், உங்கள் ஆடுமாடுகளின் தலையீற்றுகளையும் கொண்டுவந்து, அங்கே உங்கள் தேவனாகிய கர்த்தருடையசந்நிதியிலே புசித்து, நீங்கள் கையிட்டுச் செய்ததும், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைஆசீர்வதித்ததுமான யாவுக்காகவும் நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் சந்தோஷப்படுவீர்களாக" (உபா 12:5-7) என்று சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிற இந்தப் பிரமாணத்தின்படி, இஸ்ரவேல் சபையார் எல்லோரும் தங்கள் பலிகளை செலுத்துவதற்கு, கர்த்தருடைய வாசஸ்தலத்திற்கு வரவேண்டும். அந்த வாசஸ்தலத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற பலிபீடத்தில் மாத்திரமே, அவர்கள் பலிகளை செலுத்தவேண்டும். கர்த்தருடைய ஆராதனைகள் எல்லாமே, அவருடைய வாசஸ்தலத்திற்குள்ளேயே நடைபெறும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு, இந்தப் பிரமாணம் கொடுக்கப்படவில்லை. கர்த்தர் சர்வவியாபகராகயிருக்கிறார். கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் எந்த ஸ்தலத்திலிருந்து வேண்டுமானாலும் அவரை ஆராதிக்கலாம். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகள், ஒவ்வொரு ஊரிலும் ஜெபாலயங்களை ஏற்படுத்தி, அங்கே கர்த்தரை ஆராதித்தார்கள்.

ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, அந்த தேசத்திலே அவர்கள், கர்த்தருடைய வாசஸ்தலத்திற்குள் வந்து அவரை ஆராதிக்கவேண்டும் என்று மோசே அவர்களுக்கு ஆராதனை பிரமாணத்தைச் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் வாசம்பண்ணும்போது, அவர்கள் புறஜாதி ஜனங்கள் மத்தியிலே வாசம்பண்ணுகிறார்கள். புறஜாதியார் விக்கிரகங்களையும், அந்நிய தேவர்களையும் ஆராதிக்கிறவர்கள். அவர்கள் மலைகளின்மேலும், மேடுகளின்மேலும், பச்சையான மரங்களின் கீழும் தங்கள் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, புறஜாதியாரின் விக்கிரகங்களை ஆராதிக்காவிட்டாலும், அவர்கள் புறஜாதியாருடைய விக்கிரகாராதனையை பின்பற்றி, கர்த்தரை மலைகளின்மேலும், மேடுகளின்மேலும், சகல பச்சையான மரங்களின் கீழும் ஆராதிப்பதற்கு வாய்ப்புள்ளது.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை ஆராதித்தாலும், அவர்கள் புறஜாதியாரின் விக்கிரகாராதனையை கற்றுக்கொண்டால், பிற்காலத்தில் அவர்கள் கர்த்தரை விட்டு விலகி, விக்கிரகங்களையும், அந்நிய தெய்வங்களையும் ஆராதிப்பதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திலே காணப்படுகிற விக்கிரகங்களையும், சகல மேடுகளையும் அழித்துப்போடவேண்டுமென்றும், அந்த இடங்களிலே கர்த்தரை ஆராதியாமல், கர்த்தருடைய வாசஸ்தலத்தில் மாத்திரமே அவரை ஆராதிக்கவேண்டும் என்றும் மோசே சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் மனதிலே விக்கிரகாராதனையைப்பற்றிய எண்ணங்கள் தொற்றுநோயைப்போல பரவிவிடக்கூடாது. அவர்கள் புறஜாதியாருடைய பொய்களையும், மாயையான காரியங்களையும் பின்பற்றிவிடக்கூடாது. கர்த்தரை மலைகளின்மேலும், மேடைகளின்மேலும், பச்சையான மரங்களின் கீழும் ஆராதித்தால், தங்களுக்கு விசேஷித்த நன்மைகள் உண்டாகும் என்று, இஸ்ரவேல் ஜனத்தார் புறஜாதியாரைப்போல நினைத்துவிடக்கூடாது. கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கவேண்டும் என்பதே கர்த்தருடைய ஆராதனையின் பிரமாணமாகும்.

இஸ்ரவேல் சபையார் எல்லோரும் கர்த்தருடைய வாசஸ்தலத்திற்கு வந்து, அங்கே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற பலிபீடத்திலே கர்த்தருக்கு பலிகளை செலுத்தவேண்டும். இஸ்ரவேல் சபையார் எல்லோரும் கர்த்தரை ஆராதிப்பதற்காகவும், கர்த்தர் நியமித்திருக்கிற பண்டிகைகளை ஆசரிப்பதற்காகவும், ஒரு குறிப்பிட்ட ஸ்தலத்திற்கு கூடிவரும்போது, அவர்கள் மத்தியிலே அன்பும் ஐக்கியமும் பெருகும். இஸ்ரவேல் சபையார் எல்லோரும் ஒரே ஸ்தலத்தில் கூடிவந்து, தங்களுடைய சகோதர சிநேகத்தை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்வார்கள். இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமே ஒரே மனதோடும், ஒரே இருதயத்தோடும், கர்த்தர் தங்களுக்கு நியமித்து வைத்திருக்கிற ஒரே வழியிலே தொடர்ந்து முன்னேறிச் செல்வார்கள்.

"தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே" *(1தீமோ 2:5)* என்பது இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுக்கப்பட்டிருக்கும் மாறாத சத்தியம். பழைய ஏற்பாட்டுக்காலத்திலே, இஸ்ரவேல் சபையார் கர்த்தர் ஒருவரே என்னும் சத்தியத்தையும், கர்த்தர் வாசம்பண்ணுகிற பரிசுத்த ஸ்தலம் ஒன்றே என்னும் சத்தியத்தையும் தங்கள் இருதயத்திலே ஆழமாய்ப் பதிய வைத்திருந்தார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பாக, வனாந்தரத்திலே சுற்றி அலைந்தார்கள். அங்கே அவர்கள் கர்த்தருடைய ஆராதனை பிரமாணத்தை சரியாக கைக்கொள்ளவில்லை. அவர்கள் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது, அவனவன் தன் மனதிற்கு சரியான படியெல்லாம் கர்த்தரை ஆராதித்தார்கள். அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, தங்கள் இஷ்டப்படி கர்த்தரை ஆராதியாமல், கர்த்தர் தங்களுக்கு நியமித்திருக்கிறபடி மாத்திரமே அவரை ஆராதிக்கவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "இங்கே இந்நாளில் நாம் அவனவன் தன்தன் பார்வைக்குச் சரியானதையெல்லாம் செய்கிறதுபோல நீங்கள் செய்யாதிருப்பீர்களாக. உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கும் இளைப்பாறுதலிலும் சுதந்தரத்திலும் நீங்கள் இன்னும் பிரவேசிக்கவில்லையே" *(உபா 12:8,9)* என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் யோர்தானைக் கடந்து கானான் தேசத்தில் குடியேறும்போது, தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி ஒரிடத்தை தெரிந்துகொள்வார். இந்த இடமே கர்த்தரை ஆராதிக்கும் பரிசுத்த ஸ்தலமாகயிருக்கும். இந்த ஸ்தலத்திலே கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரம் ஸ்தாபிக்கப்படும். இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும், இந்த விசேஷித்த இடத்திற்கு, தங்கள் காணிக்கைகளையும், பொருத்தனைகளையும், பலிகளையும் கொண்டு வரவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீங்கள் யோர்தானைக் கடந்துபோய், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சுதந்தரிக்கக் கொடுக்கும் தேசத்தில் குடியேறும்போதும், சுற்றிலும் இருக்கிற உங்கள் சத்துருக்களையெல்லாம் அவர் விலக்கி, உங்களை இளைப்பாறப்பண்ணுகிறதினால் நீங்கள் சுகமாய் வசித்திருக்கும்போதும், உங்கள் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஓர் இடம் உண்டாயிருக்கும்; அங்கே நீங்கள் நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் உங்கள் சர்வாங்க தகனங்களையும், உங்கள் பலிகளையும், உங்கள் தசம பாகங்களையும், உங்கள் கை ஏறெடுத்துப் படைக்கும் படைப்புகளையும், நீங்கள் கர்த்தருக்கு நேர்ந்துகொள்ளும் விசேஷித்த எல்லாப் பொருத்தனைகளையும் கொண்டுவரவேண்டும்" *(உபா 12:10,11)* என்று சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் ஜனத்தாரிடம், "உங்கள் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஓர் இடம்" உண்டாயிருக்கும் என்று மாத்திரமே சொல்லுகிறார். அந்த இடம் எந்த இடம் என்றும், அது எங்கே உள்ளது என்றும், அந்த இடத்தின் பெயர் என்ன என்றும் மோசே சொல்லவில்லை.

மோசே இஸ்ரவேல் புத்திரரிடம், ஆசீர்வாதமான வார்த்தைகளையும், சாபமான வார்த்தைகளையும் சொல்லுவதற்கு கெரிசீம், ஏபால் ஆகிய இரண்டு மலைகளைப்பற்றிச் சொன்னார் (உபா 11:29). ஆனால் கர்த்தரை ஆராதிக்கும் இடத்தைப்பற்றி மோசே இப்பொழுது வெளிப்படுத்தவில்லை.

கர்த்தரை ஆராதிக்கும் இடம் பற்றி இஸ்ரவேல் புத்திரருக்கு இனிமேல் பரலோகத்திலிருந்து தெய்வீக வெளிப்பாடு கிடைக்கும். கர்த்தர் தம்முடைய ஜனத்தை வழிநடத்துவார். இப்போது இஸ்ரவேல் புத்திரர் யோர்தானைக் கடந்து கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கப்போகிறார்கள். அதற்கு முன்பாகவே மோசே மரித்துப்போகப்போகிறார். இந்த சம்பவங்களெல்லாம் நடைபெற்று முடிந்த பின்பு, தம்மை ஆராதிக்கும் இடம் பற்றி, கர்த்தர் இஸ்ரவேல் சபையாருக்கு வெளிப்படுத்துவார்.

கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டி அவருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாயிருக்கிறது. அந்தப் பெட்டி எங்கெல்லாம் வைக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் அது கர்த்தருடைய நாமத்தினாலே வைக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய பெட்டி வைக்கப்பட்டிருக்கிற இடமே, கர்த்தருடைய பிரசன்னம் தங்கியிருக்கும் வாசஸ்தலமாகும்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசித்த பின்பு, உடன்படிக்கைப்பெட்டி முதலாவதாக சீலோவிலே வைக்கப்பட்டது. ஆனால் சீலோவிலே கர்த்தருக்கு விரோதமான பாவம் காணப்பட்டதினால், உடன்படிக்கைப்பெட்டி சீலோவிலிருந்து நீக்கப்பட்டு, கீரியாத் - யாரீமிலே வைக்கப்பட்டது. கர்த்தருடைய பெட்டி இந்த ஸ்தலத்திலே இருந்தது, அதன் பின்பு இந்தப் பெட்டி வேறு சில இடங்களிலும் மாற்றி வைக்கப்பட்டது.

தாவீதின் காலத்திலே கர்த்தருடைய பெட்டி நீண்டகாலமாக எருசலேமிலே வைக்கப்பட்டிருந்தது. சாலொமோன் எருசலேமிலே கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டினார். தம்முடைய ஆலயம் எந்த இடத்தில் கட்டப்படவேண்டும் என்பதை கர்த்தர் தெரிந்தெடுத்து, தம்முடைய சித்தத்தை தெளிவாக வெளிப்படுத்தினார்.

"கர்த்தர் இரவிலே சாலொமோனுக்குத் தரிசனமாகி: நான் உன் விண்ணப்பத்தைக் கேட்டு, இந்த ஸ்தலத்தை எனக்குப் பலியிடும் ஆலயமாகத் தெரிந்துகொண்டேன்" (2நாளா 7:12) என்று சொன்னார்.

"அவர்: நான் என் ஜனத்தை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நாள்முதற்கொண்டு, என் நாமம் விளங்கும்படி, ஒரு ஆலயத்தைக் கட்டவேண்டுமென்று நான் இஸ்ரவேலுடைய எல்லாக் கோத்திரங்களிலுமுள்ள வேறே யாதொரு பட்டணத்தைத் தெரிந்துகொள்ளாமலும், என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் அதிபதியாயிருக்கும்படி வேறே ஒருவரைத் தெரிந்துகொள்ளாமலும், என் நாமம் விளங்கும் ஸ்தானமாக எருசலேமையும், என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் அதிபதியாயிருக்கத் தாவீதையும் தெரிந்துகொண்டேன் என்றார்" (2நாளா 6:5,6).

கர்த்தருடைய ஆலயம் என்பது, அவருக்கு பலியிடும் இடமாகும். கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலம் என்பது அவருடைய நாமம் விளங்கும் ஸ்தானமாகும். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இஸ்ரவேல் சபையார், எருசலேமுக்கு வந்து, அங்கே பலிகளை செலுத்தினார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் சுவிசேஷத்தின் காலத்தில் ஜீவிக்கிறோம். நமக்கு பொன்னை பரிசுத்தமாக்கும் தேவாலயமோ அல்லது நம்முடைய காணிக்கைகளை பரிசுத்தமாக்கும் பலிபீடமோ நியமிக்கப்படவில்லை. கிறிஸ்து மாத்திரமே நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை, நாம் எந்த ஸ்தலத்திலிருந்து வேண்டுமானாலும் ஆராதிக்கலாம்.

கர்த்தரை எல்லா இடங்களிலும் ஆராதிக்கலாம் என்றும், எல்லா இடங்களிலும் அவருக்கு காணிக்கைகளை செலுத்தலாம் என்றும், மல்கியா தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார்.

"சூரியன் உதிக்கிற திசை தொடங்கி, அது அஸ்தமிக்கிற திசைவரைக்கும், என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும்; எல்லா இடங்களிலும் என் நாமத்துக்குத் தூபமும் சுத்தமான காணிக்கையும் செலுத்தப்படும்; என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" *(மல் 1:11).*

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம், கர்த்தரை எல்லா இடங்களிலிருந்தும் ஆராதிக்கிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் அவரை ஆவியோடும், உண்மையோடும் ஆராதிக்கவேண்டும். நாம் கர்த்தரை ஒரு குறிப்பிட்ட பர்வதத்திலிருந்து ஆராதிக்கிறோமா அல்லது எருசலேமிலிருந்து ஆராதிக்கிறோமா என்பது முக்கியமல்ல. நாம் தேவனாகிய கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கிறோமா என்பதே முக்கியம்.

"உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்" *(யோவா 4:23).*

தமது நாமம் விளங்கும்படி கர்த்தர் தெரிந்துகொள்கிற இடத்திற்கு, இஸ்ரவேல் சபையார் எல்லோரும் தங்கள் காணிக்கைகளையும், பலிகளையும் கொண்டு வரவேண்டுமென்று மோசே சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "அங்கே உங்கள் சர்வாங்க தகனங்களையும், உங்கள் பலிகளையும், தசமபாகங்களையும், உங்கள் கை ஏறெடுத்துப் படைக்கும் படைப்புகளையும், உங்கள் பொருத்தனைகளையும், உங்கள் உற்சாகபலிகளையும், உங்கள் ஆடுமாடுகளின் தலையீற்றுகளையும் கொண்டுவரவேண்டும்" *(உபா 12:6)* என்றும்,

"உங்கள் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஓர் இடம் உண்டாயிருக்கும்; அங்கே நீங்கள் நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் உங்கள் சர்வாங்க தகனங்களையும், உங்கள் பலிகளையும், உங்கள் தசம பாகங்களையும், உங்கள் கை ஏறெடுத்துப் படைக்கும் படைப்புகளையும், நீங்கள் கர்த்தருக்கு நேர்ந்துகொள்ளும் விசேஷித்த எல்லாப் பொருத்தனைகளையும் கொண்டுவரவேண்டும்" *(உபா 12:11)* என்றும் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் சபையார் கர்த்தருக்கு முன்பாக தங்கள் பரிசுத்தமான காணிக்கைகளைக் கொண்டு வரும்போது, அவர்கள் கர்த்தருடைய சமுகத்திலே பண்டிகைகளை ஆசரிக்கவேண்டும். அவர்கள் கர்த்தருக்கு முன்பாக சந்தோஷமாய்க் களிகூரவேண்டும். நாம் கர்த்தரை மகிமைப்படுத்தும்போது, ஆவிக்குரிய பிரகாரமாக நம்மை நாமே போஷித்துக்கொள்கிறோம். தேவனுடைய கிருபையினால் நம்முடைய மனதிலே கர்த்தரைப்பற்றிய தெளிந்த சிந்தனை உண்டாகிறது.

நம்முடைய விசுவாசத்தினாலும், கர்த்தரை அறிகிற அறிவினாலும், கர்த்தரிடத்தில் நாம் அன்புகூருவதினாலும், நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் வளர்ச்சி பெறுகிறோம். நம்முடைய வார்த்தைகளும் கிரியைகளும் கர்த்தருக்கு பிரியமான, பக்தியுள்ள வார்த்தைகளாயிருக்கிறது. நம்முடைய சிந்தையிலும், செயலிலும் பரிசுத்தம் காணப்படுகிறது. பரிசுத்தமான காரியங்களினால் நம்முடைய ஆத்துமா போஷிக்கப்படுகிறது.

நாம் கர்த்தருடைய சந்நிதியில் கூடிவரும்போது, சந்தோஷப்படவேண்டும் என்று மோசே சொல்லுகிறார். அவர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் நீங்களும், உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும், உங்கள் வேலைக்காரரும், உங்கள் வேலைக்காரிகளும் உங்களோடு பங்கும் சுதந்தரமும் இல்லாமல் உங்கள் வாசல்களில் இருக்கிற லேவியனும் சந்தோஷப்படுவீர்களாக" *(உபா 12:12)* என்று சொல்லுகிறார்.

நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் சந்தோஷத்தோடு ஆராதிக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

"நீங்கள் இரண்டாந்தரமும் இதைச் செய்து, கர்த்தருடைய பீடத்தைக் கண்ணீரினாலும் அழுகையினாலும் பெருமூச்சினாலும் நிரப்புகிறீர்கள்; ஆகையால், அவர் இனிக் காணிக்கையை மதியார், அதை உங்கள் கைகளில் பிரியமாய் ஏற்றுக்கொள்ளவுமாட்டார்" (மல் 2:13).

நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்கு நல்ல எஜமானராயிருக்கிறார். கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்கள் சந்தோஷத்தோடும், மகிழ்ச்சியோடும், உற்சாகத்தோடும் அவருக்கு ஊழியம் செய்யவேண்டும். மனவேதனையோடும், மனவிருப்பமில்லாமலும், மனவிசனத்தோடும் தமக்கு செய்கிற ஊழியங்களை கர்த்தர் அங்கீகரிப்பதில்லை.

நாம் கர்த்தருக்கு ஊழியம் செய்யும்போது, இருதயத்தில் சந்தோஷத்தோடும், வாயிலே ஆனந்த கீதத்தோடும் கர்த்தரைத் துதித்து, அவருக்கு உற்சாகமாய் ஊழியம் செய்யவேண்டும். நம்முடைய கர்த்தர் நல்ல எஜமானாராகயிருப்பதினால், நாம் அவருக்கு ஊழியம் செய்யும்போது, கர்த்தரைத் துதித்துப்பாடும் ஆனந்த கீதத்தைப் பாடிக்கொண்டு, அவருக்கு சந்தோஷமாய் ஊழியம் செய்யலாம்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது அவர்கள் கர்த்தருடைய பலிபீடத்திலே சர்வாங்க தகனபலிகளை செலுத்தினார்கள். பலிபீடத்தில் பலியாக செலுத்தப்பட்ட மிருகங்களை இஸ்ரவேல் புத்திரர் புசிக்கக்கூடாது. அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலிலே மிருகங்களைக் கொன்று, அதை கர்த்தருக்கு சமாதான பலிகளாக செலுத்தினார்கள். அந்த மாம்சத்தின் ஒரு பகுதியை இஸ்ரவேல் புத்திரர் புசித்தார்கள்.

"இஸ்ரவேல் குடும்பத்தாரில் எவனாகிலும் மாட்டையாவது செம்மறியாட்டையாவது வெள்ளாட்டையாவது ஆசரிப்புக் கூடாரவாசலாகிய கர்த்தருடைய வாசஸ்தலத்துக்கு முன்பாக, கர்த்தருக்குச் செலுத்தும்படி கொண்டுவராமல், பாளயத்துக்குள்ளேயாகிலும் பாளயத்துக்குப் புறம்பேயாகிலும் அதைக் கொன்றால், அது அந்த மனிதனுக்கு இரத்தப்பழியாக எண்ணப்படும். அந்த மனிதன் இரத்தம் சிந்தினபடியால், தன் ஜனத்தில் இராமல் அறுப்புண்டு போவான்" (லேவி 17:3,4).

இஸ்ரவேல் சபையார் கானான் தேசத்தில் குடியேறின பின்பு, அவர்கள் கர்த்தருக்கு பலி செலுத்துவதுபற்றி புதிய பிரமாணம் கொடுக்கப்படுகிறது. கானான் தேசம் விஸ்தாரமாக பரவியிருக்கிற தேசம். தமது நாமம் விளங்கும்படி கர்த்தர் ஒரு இடத்தை தெரிந்துகொள்வார். அந்த இடத்திலே கர்த்தருடைய வாசஸ்தலமும், அதிலே அவருடைய பலிபீடமும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தர் நியமித்திருக்கிற பலிபீடத்தில் மாத்திரமே பலிசெலுத்தவேண்டும்.

"கண்ட இடமெல்லாம் நீ உன் சர்வாங்க தகனபலிகளை இடாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. உன் கோத்திரங்கள் ஒன்றில் கர்த்தர் தெரிந்துகொள்ளும் இடத்தில்மாத்திரம் நீ உன் சர்வாங்க தகனபலிகளையிட்டு, நான் உனக்குக் கற்பிக்கிற யாவையும் அங்கே செய்வாயாக" (உபா 12:13,14) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

பலிசெலுத்தும் ஸ்தானத்தைக் குறித்து தேவன் செய்யும் காரியங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. தம்முடைய வாசஸ்தலத்தின் இருப்பிடத்தைக் கர்த்தர் தெரிந்து கொள்வார்.

2. தேவனாகிய கர்த்தர் தம்முடைய நாமம் அந்த இடத்தில் விளங்கும்படி செய்வார்.

3. இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் அந்த வாசஸ்தலத்தில் கர்த்தர் வாசம் பண்ணுவார்.

தேவனுடைய வாசஸ்தலத்தில் இஸ்ரவேல் புத்திரர் செய்ய வேண்டிய காரியங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. கர்த்தர் தெரிந்துகொள்ளும் ஸ்தானமாகிய அவருடைய வாசஸ்தலத்தை இஸ்ரவேல் புத்திரர் நாடி, அங்கே போய், அவரை ஆராதிக்க வேண்டும். (உபா 12:5)
2. அங்கு கர்த்தரைத் தேடவேண்டும்.
3. சர்வாங்க தகனபலிகளை அங்கு கொண்டுவர வேண்டும். (உபா 12:6,11).
4. எல்லா பலிகளையும் அங்கு கொண்டு வரவேண்டும்.
5. அவர்களுடைய தசமபாகங்களை அங்கு கொண்டுவர வேண்டும்.
6. ஏறெடுத்துப் படைக்கும் படைப்புக்களை அங்கு கொண்டுவர வேண்டும்.
7. பொருத்தனைகளை அங்கு கொண்டுவர வேண்டும்.
8. ஆடுமாடுகளின் தலையீற்றுகளை அங்கு கொண்டுவரவேண்டும்.
9. குடும்பத்தோடும், வேலைக்காரரோடும், லேவியரோடும் கர்த்தருக்கு அங்கு பண்டிகைகளை ஆசரிக்க வேண்டும். (உபா 12:7,11-12).
10. கர்த்தருடைய சமுகத்தில் சந்தோஷமாயிருக்க வேண்டும். (உபா 12:7,12).
11. கர்த்தருடைய வாசஸ்தலத்தைத் தவிர கண்ட இடமெல்லாம் சர்வாங்க தகனபலிகளை இடாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும். (உபா 12:13-14).
12. எல்லாக் காரியங்களிலும் கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டும். (உபா 12:14).

தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் சந்தோஷப்பட வேண்டியவர்கள் :

1. இஸ்ரவேல் புத்திரர் - பெற்றோரும் குடும்பங்களின் தலைவர்களும்
2. இஸ்ரவேல் புத்திரருடைய குமாரர்
3. இஸ்ரவேல் புத்திரருடைய குமாரத்திகள்
4. இஸ்ரவேல் புத்திரருடைய வேலைக்காரர்
5. இஸ்ரவேல் புத்திரருடைய வேலைக்காரிகள்
6. லேவியர்

இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்தில் குடியிருக்கும்போது, அவர்களுடைய கோத்திரத்தாரில் அநேகர், கர்த்தருடைய வாசஸ்தலத்தை விட்டு வெகுதூரத்திலே குடியிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் குடும்பத்தின் போஜனத்திற்காக தங்கள் மந்தையிலுள்ள மிருகங்களை கொல்லவேண்டுமென்றால், அவற்றை வெகு தூரத்திலுள்ள கர்த்தருடைய வாசஸ்தலத்தில் வந்து கொல்லுவது என்பது இயலாத காரியம். ஆகையினால் இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் வீட்டு உபயோகத்திற்காக பயன்படுத்தும் மிருகங்களை, கர்த்தருடைய வாசஸ்தலத்திற்கு கொண்டு வராமல், தாங்கள் இருக்கும் இடத்திலேயே கொல்லுவதற்கு கர்த்தர் அனுமதி கொடுக்கிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "ஆனாலும் உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு அருளும் ஆசீர்வாதத்திற்குத்தக்கதாய், நீ உன் வாசல்களிலெங்கும் உன் இஷ்டப்படியே மிருகஜீவன்களை அடித்துப் புசிக்கலாம்; தீட்டுப்பட்டவனும், தீட்டுப்படாதவனும் அவைகளை, வெளிமானையும் கலைமானையும் புசிக்கிறதுபோல புசிக்கலாம். இரத்தத்தைமாத்திரம் புசிக்கவேண்டாம்; அதைத் தண்ணீரைப்போல் தரையிலே ஊற்றிவிடவேண்டும்" (உபா 12:15,16) என்றும்,

"இரத்தத்தைமாத்திரம் புசிக்காதபடிக்கு எச்சரிக்கையாயிரு; இரத்தமே உயிர்; மாம்சத்தோடே உயிரையும் புசிக்கவேண்டாம். அதை நீ சாப்பிடாமல் தண்ணீரைப்போல் தரையிலே ஊற்றிவிடவேண்டும்" (உபா 12:23,24) என்றும் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் சுத்தமான எல்லா மிருகங்களையும் புசிக்கலாம். பலியிடப்படும் மிருகங்களையும், பலியிடப்படாத மிருகங்களையும் லேவி 11, உபா 14 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் மிருக ஜீவன்களையும் புசிக்கலாம். இரத்தத்தை மாத்திரம் புசிக்கக்கூடாது. இரத்தம் ஆத்துமாவின் பாவநிவிர்த்திக்காக நியமிக்கப் பட்டிருக்கிறது. (லேவி 17:11).

பலியிடுவதற்கு மட்டுமே மிருகஜீவன்களை ஆசரிப்புக் கூடாரத்திற்குக் கொண்டுவர வேண்டும். பலியிடப்படாத மற்ற மிருகங்களை அவர்கள் வீடுகளிலேயே அடித்து புசிக்கலாம். (உபா 12:5-7)

இஸ்ரவேல் புத்திரர் ஒரு மிருகத்தைக் கொல்லும்போது, அதின் இரத்தத்தை கர்த்தருடைய பலிபீடத்திலே கொண்டு வந்து ஊற்றவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய வாசஸ்தலத்தைவிட்டு தூரமான இடங்களிலே வாசம்பண்ணும்போது, அவர்களால் மிருகத்தின் இரத்தத்தை பலிபீடத்திலே, கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக, கொண்டு வந்து ஊற்றமுடியாது.

இரத்தமே அந்த மிருகத்தின் உயிர். இஸ்ரவேல் புத்திரர் மாம்சத்தோடே உயிரையும் புசிக்கக்கூடாது. இரத்தம் மிருகத்தின் உயிராகயிருப்பதினால், இஸ்ரவேல் ஜனத்தார் இரத்தத்தைப் புசிக்கக்கூடாது என்று கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார். அந்த இரத்தத்தை அவர்களால், கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திலே, அவருடைய சந்நிதிக்கு முன்பாக, பலிபீடத்திலே கொண்டு வந்து ஊற்ற முடியாதபோது, அந்த இரத்தத்தை தண்ணீரைப்போல தரையிலே ஊற்றிவிடவேண்டும்.

மிருகத்தின் ஜீவன் இஸ்ரவேல் புத்திரருக்குரியதல்ல. அது கர்த்தருக்கு மாத்திரமே உரியது. கர்த்தரே எல்லா ஜீவராசிகளுக்கும் ஜீவனைக் கொடுத்திருக்கிறவர். இந்த சத்தியத்தை அங்கீகரிக்கும் வண்ணமாக, எல்லா ஜீவனும் கர்த்தருக்குரியது என்று இஸ்ரவேல் புத்திரர் சொல்லுகிறார்கள். இரத்தமே எல்லா மிருகங்களுக்கும் ஜீவனாகயிருக்கிறது. ஜீவனைக் கொடுத்த கர்த்தருக்கு, அந்த ஜீவனைக் காணிக்கையாகப் படைக்கும் வண்ணமாக, மிருகத்தின் இரத்தம், கர்த்தருடைய பலிபீடத்திலே ஊற்றப்படவேண்டும்.

தங்களுடைய பாவங்கள் நிவிர்த்தி பண்ணப்படுவதற்காகவும், இஸ்ரவேல் புத்திரர், கர்த்தருடைய பலிபீடத்திலே பாவநிவாரண பலிகளை செலுத்தி, அதன் இரத்தத்தை பலிபீடத்திலே ஊற்றுகிறார்கள்.

புறஜாதி ஜனங்கள் தங்கள் விக்கிரகங்களுக்கு மிருகங்களை பலியாக செலுத்தும்போது, தங்கள் விக்கிரகாராதனையின் ஒரு பகுதியாக, அந்த மிருகத்தின் இரத்தத்தைக் குடிப்பது வழக்கம். இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திலே குடியிருக்கும்போது, விக்கிரகாராதனைக்காரரின் இந்தப் பழக்கத்தைப் பின்பற்றி, தாங்கள் பலியிடும் மிருகங்களின் இரத்தத்தை குடிக்கவோ அல்லது புசிக்கவோ கூடாது.

விக்கிரகாராதனைக்காரர்கள் பிசாசுகளுக்கு பலிகளை செலுத்துகிறார்கள். பலியிடும் மிருகங்களின் இரத்தத்தைக் குடிக்கும்போது தாங்கள் அந்த பிசாசுகளோடு ஐக்கியமாயிருப்பதாக நம்புகிறார்கள். இதுபோன்ற விக்கிரகாராதனைகளில் இஸ்ரவேல் புத்திரருக்கு எந்தவிதமான பங்கும் இருக்கக்கூடாது என்பதற்காக, அவர்கள் இரத்தத்தைப் புசிப்பதை கர்த்தர் தடைபண்ணியிருக்கிறார் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு நேர்ந்துகொள்ளும் தங்களுடைய சகல பொருத்தனைகளையும், தங்களுடைய உற்சாக காணிக்கைகளையும், தாங்கள் கர்த்தருக்கு ஏறெடுத்து படைக்கும் படைப்புக்களையும், தங்கள் வீட்டு வாசல்களில் புசிக்கக்கூடாது என்றும், அதை கர்த்தருடைய சந்நிதியில் மாத்திரமே புசிக்கவேண்டும் என்றும் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கட்டளையிடுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உன் தானியத்திலும் உன் திராட்சரசத்திலும் உன் எண்ணெயிலும் தசம பாகத்தையும், உன் ஆடுமாடுகளின் தலையீற்றுகளையும், நீ நேர்ந்துகொள்ளும் உன்னுடைய சகல பொருத்தனைகளையும், உன் உற்சாகக் காணிக்கைளையும், உன் கை ஏறெடுத்துப் படைக்கும் படைப்புகளையும், நீ உன் வாசல்களில் புசிக்கவேண்டாம்" (உபா 12:17) என்றும்,

"உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்துகொள்ளும் ஸ்தானத்தில் நீயும் உன் குமாரனும், உன் குமாரத்தியும், உன் வேலைக்காரனும், உன் வேலைக்காரியும், உன் வாசல்களில் இருக்கிற லேவியனும், உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் அதைப் புசித்து, நீ கையிட்டுச் செய்யும் எல்லாக்காரியத்திலும் உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் சந்தோஷப்படுவாயாக" (உபா 12:18) என்றும் சொல்லுகிறார்.

வீடுகளில் புசிக்கக்கூடாதவை :

1. தானியத்தில் தசமபாகம்.
2. திராட்சரசத்தில் தசமபாகம்.
3. எண்ணெயில் தசமபாகம்.
4. ஆடுகளின் தலையீற்று.
5. மாடுகளின் தலையீற்று.
6. பொருத்தனைகள்
7. உற்சாகக் காணிக்கைகள்
8. ஏறெடுத்துப் படைக்கும் படைப்புகள்.

இவையனைத்தையும் தேவனுடைய வாசஸ்தலத்திற்கு எடுத்துச் சென்று, பிரமாணங்களில் கூறப்பட்டிருக்கிற பிரகாரம், அவற்றை அங்கு புசிக்க வேண்டும். இவற்றின் ஒரு பகுதி பலிசெலுத்துகிறவர்களுக்கும், ஒரு பகுதி ஆசாரியருக்கும் உரியது. (உபா 12:18).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சந்நிதியிலே, தங்கள் பொருத்தனைகளையும், காணிக்கைகளையும், ஏறெடுத்துப் படைக்கும் படைப்புக்களையும் புசிக்கும்போது அதிலே லேவியருக்கும் ஒரு பங்கு கொடுக்கவேண்டும். லேவியருக்கு கானான் தேசத்திலே சுதந்தரம் கொடுக்கப்படவில்லை. கர்த்தரே அவர்களுடைய சுதந்தரம். கர்த்தர் லேவியரை போஷிப்பதற்காக, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பொருத்தனைகளையும், காணிக்கைகளையும், ஏறெடுத்துப் படைக்கும் படைப்புகளையும், தம்முடைய வாசஸ்தலத்திற்கு கொண்டு வரவேண்டுமென்று கட்டளையிடுகிறார்.

"நீ உன் தேசத்திலிருக்கும் நாளெல்லாம் லேவியனைக் கைவிடாதபடிக்கு எச்சரிக்கையாயிரு" (உபா 12:19) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய ஆராதனை பிரமாணத்திற்கு கீழ்ப்படியும்போது, லேவியரும் அவருடைய குடும்பத்தாரும் நேர்த்தியாய்ப் போஷிக்கப்படுவார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மூன்று காரியங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கவேண்டும். அவையாவன :

1. கண்ட இடமெல்லாம் நீ உன் சர்வாங்க தகனபலிகளை இடாதபடிக்கும், உன் கோத்திரங்கள் ஒன்றில் கர்த்தர் தெரிந்துகொள்ளும் இடத்தில்மாத்திரம் பலிசெலுத்தும்படிக்கும் எச்சரிக்கையாயிரு. (உபா 12:13-14).
2. நீ உன் தேசத்திலிருக்கும் நாளெல்லாம் லேவியனைக் கைவிடாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. (உபா 12:19).
3. புறஜாதியார் உனக்கு முன்பாக அழிக்கப்பட்டபின்பு, நீ அவர்களைப் பின்பற்றிச் சிக்கிக்கொள்ளாதபடிக்கும், இந்த ஜாதிகள் தங்கள் தேவர்களைச் சேவித்தபடி நானும் சேவிப்பேன் என்று சொல்லி அவர்களுடைய தேவர்களைக் குறித்துக் கேட்டு விசாரியாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு. (உபா 12:30).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய ஆலயத்திற்கு தங்கள் பொருத்தனைகளை கொண்டு வராமல், தங்கள் ஆடுமாடுகளை தங்கள் வீடுகளில் புசிக்கவேண்டுமென்று விரும்பினால், அதையும் கர்த்தர் அனுமதிக்கிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி, உன் எல்லையை விஸ்தாரமாக்கும்போது, நீ இறைச்சி புசிக்க ஆசைகொண்டு, இறைச்சி புசிப்பேன் என்பாயானால், நீ உன் இஷ்டப்படி இறைச்சி புசிக்கலாம்" (உபா 12:20) என்றும்,

"உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம்விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானம் உனக்குத் தூரமானால், கர்த்தர் உனக்கு அளித்த உன் ஆடுமாடுகளில் எதையாகிலும் நான் உனக்கு விதித்தபடி நீ அடித்து, உன் இஷ்டப்படி உன் வாசல்களிலே புசிக்கலாம்" (உபா 12:21) என்றும், "வெளிமானையும் கலைமானையும் புசிக்கிறதுபோல நீ அதைப் புசிக்கலாம்; தீட்டுப்பட்டவனும் தீட்டுப்படாதவனும் அதைப் புசிக்கலாம்" (உபா 12:22) என்றும் சொல்லுகிறார்.

தேவனுடைய வாசஸ்தலம் இஸ்ரவேல் புத்திரரின் வீடுகளுக்கு அதிக தூரத்தில் இருக்குமானால், அவர்கள் பலியிடப்பட வேண்டிய மிருகஜீவன்களைத் தேவனுடைய வாசஸ்தலத்திற்குக் கொண்டுவராமல், அவர்களுடைய வாசல்களிலேயே, கர்த்தர் அவர்களுக்கு விதித்தபடி அடித்து, அதைப் புசிக்கலாம். (உபா 12:15-16,20-22).

இஸ்ரவேல் புத்திரர் மிருகங்களின் மாம்சத்தைப் புசிக்கும்போது, அதின் இரத்தத்தைப் புசிப்பதற்கு அவர்களுக்கு அனுமதியில்லை.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "இரத்தத்தைமாத்திரம் புசிக்காதபடிக்கு எச்சரிக்கையாயிரு; இரத்தமே உயிர்; மாம்சத்தோடே உயிரையும் புசிக்கவேண்டாம். அதை நீ சாப்பிடாமல் தண்ணீரைப்போல் தரையிலே ஊற்றிவிடவேண்டும். நீ கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்வதினால், நீயும் உனக்குப் பின்வரும் உன் பிள்ளைகளும் நன்றாயிருக்கும்படி நீ அதைச் சாப்பிடலாகாது" (உபா 12:23-25) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் மேலும் எச்சரிக்கையாயிருக்கவேண்டிய மூன்று காரியங்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. இரத்தத்தைமாத்திரம் புசிக்காதபடிக்கு எச்சரிக்கையாயிரு (உபா 12:23).

2. உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்குமென்று நிச்சயமாய் அறியுங்கள். (எண் 32:23).

3. கர்த்தராலே பொல்லாப்பு தீர்மானப்பட்டிருக்கிறது என்று அறியுங்கள். (1சாமு 20:7; லூக்கா 10:11; ரோமர் 4:16).

இஸ்ரவேல் புத்திரருடைய சந்ததி நன்றாய் இருக்க வேண்டுமென்றால், அவர்களுடைய பெற்றோர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்க வேண்டும். ஒருவன் இரத்தத்தைச் சாப்பிடாமல் இருப்பதினால் மட்டும் அவன் ஆசீர்வதிக்கப்படுவதில்லை. கர்த்தருடைய சித்தத்திற்குப் பூரணமாகக் கீழ்ப்படிவதினாலேயே அவன் ஆசீர்வதிக்கப்படுகிறான்.

கர்த்தருக்கு செலுத்தப்படும் சர்வாங்க தகனபலிகள் கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் மாத்திரமே செலுத்தப்படவேண்டும். கர்த்தருக்கு செலுத்தப்படும் சர்வாங்க தகனபலிகளை, இஸ்ரவேல் ஜனத்தார் கண்ட இடமெல்லாம் செலுத்தாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, " உனக்குரிய பரிசுத்த வஸ்துக்களையும், உன் பொருத்தனைகளையும் கர்த்தர் தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திற்கு நீ கொண்டுவந்து, உன் தேவனாகிய கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் உன் சர்வாங்க தகனபலிகளை மாம்சத்தோடும் இரத்தத்தோடும் கூடப் பலியிடக்கடவாய்; நீ செலுத்தும் மற்றப் பலிகளின் இரத்தமும் உன் தேவனாகிய கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் ஊற்றப்படக்கடவது; மாம்சத்தையோ நீ புசிக்கலாம்" (உபா 12:26,27) என்று சொல்லுகிறார்.

எல்லாப் பலிகளும் காணிக்கைகளாகிய மிருகஜீவன்கள், மாவு, எண்ணெய், திராட்சரசம், நிலங்கள், வீடுகள், கர்ததருக்குப் பிரதிஷ்டை பண்ணப்பட்ட எல்லா பொருட்களும் பரிசுத்த வஸ்துக்களாகும். (லேவி 27) தேவனுடைய பரிசுத்த உபயோகத்திற்காக இவை வேறுபிரிக்கப்பட்டிருப்பதினால், இது பரிசுத்த வஸ்துக்கள் என்று அழைக்கப்படுகிறது.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய ஆராதனை பிரமாணங்களை சொல்லுகிறார். இப்போது இஸ்ரவேல் சபையார் எல்லோரும் கூடாரங்களிலே குடியிருக்கிறார்கள். அவர்கள் பாளயமாக தங்கியிருக்கிறார்கள். ஒவ்வொரு பாளயமும் இஸ்ரவேல் புத்திரருடைய கோத்திரங்களின் பிரகாரம் வரிசையாகயிருக்கிறது. கூடாரங்கள் ஒன்றுக்கொன்று அருகாமையிலிருக்கிறது. ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்கிறார்களா என்பதை கவனிப்பது இஸ்ரவேலின் நியாயாதிபதிகளுக்கு எளிதான காரியம்.

ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பாளயமிறங்கியிருந்தபோது, அவர்களிடத்தில் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியாமையும், அவருடைய கட்டளைகளுக்கு மீறுகிறதும் காணப்படுகிறது. ஆகையினால் மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "இங்கே இந்நாளில் நாம் அவனவன் தன்தன் பார்வைக்குச் சரியானதையெல்லாம் செய்கிறதுபோல நீங்கள் செய்யாதிருப்பீர்களாக" (உபா 12:8) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் தேவனாகிய கர்த்தர் தங்களுக்கு கொடுக்கும் இளைப்பாறுதலிலும் சுதந்தரத்திலும், அவர்கள் இன்னும் பிரவேசிக்கவில்லை (உபா 12:9).

அவர்கள் கானான் தேசத்தில் இன்னும் முறைப்படி குடியேறவில்லை. இஸ்ரவேல் புத்திரர் இன்னும் தங்கள் இளைப்பாறுதலில் பிரவேசிக்கவில்லை. ஆகையினால் அவர்கள் மத்தியிலே கீழ்ப்படியாமையும், மீறுதலும் காணப்படும்போது, மோசே அவர்களுடைய தப்பிதங்களை சகித்துக்கொள்கிறார். ஆனாலும் அவர்கள் கானான் தேசத்தில் பிரவேசிக்கும்போது, அந்த தேசத்திலே அவர்கள் கர்த்தருடைய கட்டளைகளுக்கும், கற்பனைகளுக்கும், நியமங்களுக்கும் தங்கள் முழுஇருதயத்தோடும், முழுஆத்துமாவோடும், முழுமனதோடும் கீழ்ப்படியவேண்டும் என்று மோசே எதிர்பார்க்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பார்வைக்கு நன்மையும் செம்மையுமானதை செய்யவேண்டும். அப்பொழுது அவர்களும், அவர்களுடைய பின்வரும் சந்ததியாரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

ஆகையினால், "நீ உன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்கு நன்மையும் செம்மையுமானதைச் செய்வதினால், நீயும் உனக்குப் பின்வரும் உன் பிள்ளைகளும் என்றென்றைக்கும் நன்றாயிருக்கும்படிக்கு, நான் உனக்குக் கற்பிக்கிற இந்த எல்லா வார்த்தைகளையும் நீ கவனித்துக்கேள்" (உபா 12:28) என்றும்,

"நீ சுதந்தரிக்கப்போகிற தேசத்தின் ஜாதிகளை உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு முன்பாகச் சங்கரிக்கும்போதும், நீ அவர்கள் தேசத்தைச் சுதந்தரித்து அதிலே குடியிருக்கும்போதும், அவர்கள் உனக்கு முன்பாக அழிக்கப்பட்டபின்பு, நீ அவர்களைப் பின்பற்றிச் சிக்கிக்கொள்ளாதபடிக்கும், இந்த ஜாதிகள் தங்கள் தேவர்களைச் சேவித்தபடி நானும் சேவிப்பேன் என்று சொல்லி அவர்களுடைய தேவர்களைக் குறித்துக் கேட்டு விசாரியாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு" (உபா 12:29,30) என்றும் மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பலியிடும்போது மூன்று காரியங்களை செய்ய வேண்டும். அவையாவன :

1. தேவனாகிய கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனபலிகளை மாம்சத்தோடும் இரத்தத்தோடும் கூடப் பலியிடவேண்டும்.

2. பலிகளின் இரத்தமும் தேவனாகிய கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் ஊற்றப்படவேண்டும்.

3. மாம்சத்தைப் புசிக்கலாம்.

சில பலிகளை முழுவதுமாகத் தகனித்து விடவேண்டும். அதின் எந்தப் பகுதியையும் புசிக்கக்கூடாது. பலிசெலுத்தப்படும் மிருகஜீவனின் இரத்தம் பல இடங்களில் பயன்படுத்தப்படுகிறது. பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம், சரீரங்கள், வீடுகள், வஸ்திரங்கள் போன்றவை. பொதுவாக இரத்தம் வெண்கலப் பலிபீடத்தின்மீது ஊற்றப்படுகிறது.

"நீ உன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்கு நன்மையும் செம்மையுமானதைச் செய்வதினால்" நீயும் உன் பிள்ளைகளும் நன்றாயிருப்பார்கள் என்று மோசே சொல்லுகிறார். பழைய உடன்படிக்கையிலும், புதிய உடன்படிக்கையிலும் கர்த்தருடைய பார்வைக்கு நன்மையும் செம்மையுமானதைச் செய்வதினால் மனுஷருக்கு ஆசீர்வாதம் உண்டு.

இஸ்ரவேல் புத்திரர் ஆசரிக்கவேண்டிய காரிங்களைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. புளிப்பில்லா அப்பப் பண்டிகை (யாத் 12:17)
2. பஸ்கா (யாத் 12:24; உபா 16:1)
3. ஓய்வுநாட்கள் (யாத் 31:16)
4. வாரங்களின் பண்டிகை - பெந்தெகொஸ்தே (யாத் 34:22)
5. கூடாரங்களின் பண்டிகை (உபா 16:13)
6. எல்லாக் காலங்களிலும் செலுத்த வேண்டிய பலிகள் (எண் 28:2)
7. நோய், வியாதி ஆகியவற்றைப் பற்றி கூறப்பட்டிருக்கும் பிரமாணங்கள். (உபா 24:8)
8. கர்த்தருடைய வழிகள். (நீதி 23:26)
9. கர்த்தருடைய கட்டளைகள், நீதிகள், நியாயங்கள் (யாத் 34:11; லேவி 19:37).

புதிய ஏற்பாட்டுக்கால விசுவாசிகள் இயேசு கிறிஸ்து கட்டளையிட்டிருக்கும் எல்லாக் காரியங்களையும் கடைப்பிடிக்க வேண்டும். (மத்28:20; 1தீமோ 5:21). அவற்றை முழு இருதயத்தோடு கடைப்பிடிக்க வேண்டும் (சங் 119:34).

இஸ்ரவேல் ஜனத்தார் இப்போது வனாந்தரத்திலிருப்பதைவிட, அவர்கள் கானான் தேசத்தில் பிரவேசிக்கும்போது, நன்றாய் செழித்திருப்பார்கள் என்று மோசே நம்புகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றால், அவர்கள் கர்த்தருக்கு பிரியமான காரியங்களை செய்யவேண்டும். கர்த்தருக்கு அருவருப்பான காரியங்கள் எதையும் செய்துவிடாதவாறு, இஸ்ரவேல் புத்திரர் மிகுந்த எச்சரிப்போடிருக்கவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உன் தேவனாகிய கர்த்தருக்கு அப்படிச் செய்யாயாக; கர்த்தர் வெறுக்கிற அருவருப்பான யாவையும் அவர்கள் தங்கள் தேவர்களுக்குச் செய்து, தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் தங்கள் தேவர்களுக்கு அக்கினியிலே சுட்டெரித்தார்களே" (உபா 12:31) என்று சொல்லுகிறார்.

வரலாற்றுக் காலங்களில் புறஜாதியார் நரபலியிட்டிருக்கிறார்கள். தங்களுடைய தெய்வங்களின் உக்கிரக்கோபத்தைத் தணிப்பதற்காக அவர்கள் தங்கள் தேவர்களுக்குத் தங்களுடைய குமாரரையும், தங்கள் குமாரத்திகளையும் பலி செலுத்தினார்கள். இஸ்ரவேல் தேசத்தாரின் காலத்திலும் இவ்வாறு பலிசெலுத்தும் நிகழ்ச்சிகள் காணப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் புறஜாதியாருடைய வழக்கத்தின்படி செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கவேண்டும். அதே சமயத்தில் மோசே அவர்களுக்கு விதிக்கிற யாவையும் செய்யும்படி அவர்கள் கவனமாயும் இருக்கவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகள் பாவம் செய்யாமலிருந்தால்மாத்திரம் போதாது. அவர்கள் நன்மையும் செய்யவேண்டும். நாம் கர்த்தரை நம்பி நன்மை செய்யவேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நான் உனக்கு விதிக்கிற யாவையும் செய்யும்படி கவனமாயிரு; நீ அதனோடே ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்" (உபா 12:32) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் பிரவேசித்து, அந்த தேசத்தைச் சுதந்தரித்து, அதிலே குடியிருக்கும்போது மிகவும் எச்சரிப்பாகவும், கவனமாகவும் ஜீவிக்கவேண்டும். அவர்கள் கவனமாயிருக்க வேண்டிய நான்கு காரியங்களைப்பற்றி மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லியிருக்கிறார். அதன் விவரம் வருமாறு :

1. புறஜாதியார்கள் உனக்கு முன்பாக அழிக்கப்பட்டபின்பு, நீ அவர்களைப் பின்பற்றிச் சிக்கிக்கொள்ளக்கூடாது.

2. புறஜாதிகள் தங்கள் தேவர்களைச் சேவித்தபடி நானும் சேவிப்பேன் என்று சொல்லி அவர்களுடைய தேவர்களைச் சேவிக்கக்கூடாது.

3. கர்த்தர் வெறுக்கிற அருவருப்பான யாவையும் புறஜாதியார் தங்கள் தேவர்களுக்குச் செய்வதுபோல நீங்கள் செய்யக்கூடாது *(உபா 12:31)*.

4. கர்த்தர் உனக்கு விதிக்கிற யாவையும் செய்யும்படி கவனமாயிரு. நீ அதனோடே ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம் *(உபா 12:32)*.

13 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகாராதனைக்கு விரோதமாக மிகவும் எச்சரிப்பாயிருக்கவேண்டும். அவர்கள் கானான் தேசத்தில் பிரவேசித்து, அங்கே குடியிருக்கும்போது, இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே விக்கிரகாராதனை பரவிவிடாதவாறு, அவர்கள் மிகவும் கவனமாயிருக்கவேண்டும். அவர்கள் விக்கிரகங்களையும், விக்கிரகாராதனையையும், விக்கிரகாராதனைக்காரரையும் குறித்த விஷயங்களில் கவனக்குறைவாகயிருப்பார்களென்றால், இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே விக்கிரகாராதனை பிரவேசிப்பதற்கு வாய்ப்புள்ளது.

விக்கிரகாராதனை பலவிதமான மாயையான வழிகள் மூலமாக இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே பிரவேசிக்கும். மோசே இந்த அதிகாரத்தில், மூன்றுவிதமான மாயையான வழிகளைப்பற்றிச் சொல்லுகிறார். இவற்றின் மூலமாக இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் விக்கிரகாராதனை பிரவேசிப்பதற்கு வாய்ப்புள்ளது.

கள்ளத்தீர்க்கதரிசிகள் (உபா 13:1-5). நெருங்கிய உறவுக்காரர்கள் (உபா 13:6-11). இஸ்ரவேல் புத்திரர் குடியிருக்கும் பட்டணத்தார் (உபா 13:12-18).

கள்ளத்தீர்க்கதரிசிகள் உபா 13:1-5

உபா 13:1. உங்களுக்குள்ளே ஒரு தீர்க்கதரிசியாகிலும், சொப்பனக்காரனாகிலும் எழும்பி:

உபா 13:3. அந்தத் தீர்க்கதரிசியாகிலும், அந்தச் சொப்பனக்காரனாகிலும் சொல்லுகிறவைகளைக் கேளாதிருப்பீர்களாக; உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூருகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்.

உபா 13:4. நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பின்பற்றி, அவருக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவர் சத்தத்தைக் கேட்டு, அவரைச் சேவித்து, அவரைப் பற்றிக்கொள்வீர்களாக.

உபா 13:5. அந்தத் தீர்க்கதரிசியும், அந்தச் சொப்பனக்காரனும் கொலைசெய்யப்படக்கடவன்; நீங்கள் நடக்கும்படி உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு விதித்த வழியை விட்டு உங்களை விலக்கும்படி, அவன், உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவரும் உங்களை அடிமைத்தன வீட்டிலிருந்து நீங்கலாக்கி மீட்டுக்கொண்டவருமான உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமான துரோகப் பேச்சைப் பேசினான்; இப்படிப்பட்ட தீமையை உங்களிடத்திலிருந்து விலக்குவீர்களாக.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ளச்சொப்பனக்காரர்களும் எழும்புவார்கள். தாங்களும் தரிசனங்களை காண்பதாக இவர்கள் மாய்மாலம்பண்ணுவார்கள். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் தீர்க்கதரிசனம் சொல்லுவதுபோலவே, கள்ளத்தீர்க்கதரிசிகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள். ஆனால் கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளில் உண்மை இருக்காது. கள்ளத்தீர்க்கதரிசிகள் கர்த்தரை மகிமைப்படுத்தமாட்டார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் கர்த்தரை மகிமைப்படுத்தும் வார்த்தைகளை பேசாமல், இஸ்ரவேல் புத்திரர் அறியாத வேறே தேவர்களைப்பற்றிப் பேசுவார்கள். இவர்கள் அந்நிய தெய்வங்களை பின்பற்றுகிறவர்கள். இப்படிப்பட்ட கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ளச்சொப்பனக்காரர்களும் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே எழும்புவார்கள் என்று மோசே சொல்லுகிறார் (உபா 13:1).

மெய்யான ஆராதனையை இஸ்ரவேல் புத்திரர்கள் காத்துக் கொள்ள வேண்டும். கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும், சொப்பனக்காரர்களுக்கும் எதிரான எச்சரிப்புக்களை மோசே இங்கு கூறுகிறார்.

இந்த வசனத்தில் மோசே கள்ளத் தீர்க்கதரிசியைப் பற்றிக் கூறுகிறார். அவர்கள் முன்னறிவிக்கிறார்கள். அவர்கள் சொன்ன அடையாளமும், அற்புதமும் நடைபெறுகிறது. ஆயினும் அவர்களைக் குறித்து எச்சரிப்போடு இருக்க வேண்டும். சத்தியத்தை அடையாளத்தினாலும், அற்புதத்தினாலும் உறுதிபண்ணக்கூடாது. சத்தியத்தை சத்தியத்தினால் மாத்திரமே விளக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையே சத்தியம். தேவனுடைய வார்த்தைக்கு எதிராக இருப்பது எல்லாமே பொய்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, ' நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றி, அவர்களைச் சேவிப்போம் வாருங்கள் என்று சொல்லி, உங்களுக்கு ஒரு அடையாளத்தையும் அற்புதத்தையும் காண்பிப்பேன்'' (உபா 13:2) என்று குறிப்பாய்ச் சொல்லுவார்கள்.

சில சமயங்களில் கள்ளத்தீர்க்கதரிசிகள் சொல்லுகிற அடையாளமும் அற்புதமும் நடப்பதற்கும் வாய்ப்புள்ளது. இஸ்ரவேல் புத்திரர் இப்படிப்பட்ட கள்ள அடையாளங்களையும், கள்ள அற்புதங்களையும் பார்த்து ஏமாந்துவிடக்கூடாது. அவர்கள் கர்த்தரை விட்டு விலகி, வேறே தேவர்களை பின்பற்றிப்போய்விடக்கூடாது.

இப்படிப்பட்ட கள்ளத்தீர்க்கதரிசிகள் இக்காலத்திலும் ஏராளமான பேர் எழும்பியிருக்கிறார்கள். அவர்கள் தங்களையும் வஞ்சித்துக்கொண்டு மற்றவர்களையும் வஞ்சிக்கிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகள் மூலமாக வஞ்சிக்கப்படுகிறவர்களில் பாமரரும் இருக்கிறார்கள், ஐசுவரிவான்களும் இருக்கிறார்கள், படித்தவர்களும் இருக்கிறார்கள், படிக்காதவர்களும் இருக்கிறார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் சாதுரியமாய்ப் பேசக்கூடியவர்கள். இவர்கள் கர்த்தருடைய ஜனத்தை வஞ்சித்து, அவர்களை வேறே தேவர்களை பின்பற்றிப்போகப்பண்ணுவார்கள். கர்த்தரை ஆராதிக்கிற ஜனங்களை, விக்கிரகங்களை ஆராதிக்குமாறு வழிநடத்துவார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளால் வஞ்சிக்கப்படுகிறவர்கள், கர்த்தருக்கு கொடுக்க வேண்டிய மகிமையை, மனுஷருக்கும், தேவதூதர்களுக்கும் கொடுப்பார்கள்.

"அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப் படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும்'' (2தெச 2:9,10).

கள்ளத்தீர்க்கதரிசிகளைக் குறித்து மிகவும் எச்சரிப்பாயிருக்கவேண்டுமென்று மோசே இஸ்ரவேல் புத்திரரை எச்சரிக்கிறார், " அந்தத் தீர்க்கதரிசியாகிலும், அந்தச் சொப்பனக்காரனாகிலும் சொல்லுகிறவைகளைக் கேளாதிருப்பீர்களாக'' (உபா 13:3) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கள்ளத்தீர்க்கதரிசிகள் சொல்லுகிறபடி செய்யாதிருப்பது மாத்திரமல்ல, அவர்கள் சொல்லுகிறதை செவிகொடுத்து கேட்கவும் கூடாது. கள்ளத்தீர்க்கதரிசிகள் மூலமாக சோதனைகள் வருகிறது. இஸ்ரவேல் புத்திரர் சோதனைக்கு இடங்கொடுத்து அதிலே சிக்கிக்கொள்ளக்கூடாது.

இஸ்ரவேல் ஜனத்தார் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு இடங்கொடுக்காமல், அவர்களை புறம்பே ஒதுக்கி தள்ளிவிடவேண்டும். தாங்களும் அவர்களை விட்டு விலகி வந்துவிடவேண்டும்.

சில சமயங்களில், கள்ளத்தீர்க்கதரிசிகள், தம்முடைய ஜனங்களை சோதிப்பதற்கு கர்த்தரும் அனுமதிக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகள் சோதனைகளுக்கு எதிர்த்து நிற்கவேண்டும். சோதனைகளை மேற்கொள்ளவேண்டும். நாம் சோதனையில் தோல்வியடைந்து அதிலே விழுந்துவிடக்கூடாது.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூருகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்" (உபா 13:3) என்று சொல்லுகிறார்.

கள்ளமார்க்கங்களையும், சாத்தானின் வல்லமைகளையும் கர்த்தர் அனுமதிக்கிறார். இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. அவையாவன:

1. கர்த்தர் தமது ஜனங்களைச் சோதித்து அறிய விரும்புகிறார். (யாத் 16:4)

2. தமது ஜனங்கள் தங்கள் முழு ஆத்துமாவோடும், தங்கள் இருதயத்தோடும் தம்மிடத்தில் அன்புகூருகிறார்களா என்பதைக் கர்த்தர் அறிய விரும்புகிறார் (2கொரி 11:18-19; 2யோவான் 1:7-11).

கர்த்தருடைய ஜனம் எக்காலத்திலும் கர்த்தரை மாத்திரமே சேவிக்கவேண்டும். கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டும். "நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பின்பற்றி, அவருக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவர் சத்தத்தைக் கேட்டு, அவரைச் சேவித்து, அவரைப் பற்றிக்கொள்வீர்களாக" (உபா 13:4) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் தமது ஜனங்களிடம் எதிர்பார்க்கும் காரியங்களாவன :

1. கர்த்தரைப் பின்பற்றுவது. (ஆதி 17:1; யாத் 18:20; உபா 8:6; உபா 10:12)

2. கர்த்தருக்குப் பயப்படுவது. (உபா4:10; உபா 10:12,20).

3. கர்த்தருடைய கற்பனைகளைக் கைக் கொள்வது. (உபா 12:28).

4. கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிவது. (உபா 11:27; உபா 13:4; உபா 27:10).

5. கர்த்தரைச் சேவிப்பது. (உபா6:13; உபா 10:12,20; உபா 11:13).

6. கர்த்தரைப் பற்றிக்கொள்வது. (உபா 10:20; உபா 11:22; உபா 30:20).

கள்ளத்தீர்க்கதரிசிகள் தண்டிக்கப்படவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு ஆதரவு கொடுத்து, அவர்களை உபசரிக்கக்கூடாது. நம்முடைய சரீரத்தில் காயம் ஏற்பட்டு புரையோடிப்போனால், அறுவை சிகிச்சை செய்து அந்தப் புரையை அகற்றுகிறோம். இந்த விஷயத்தில் கவனமாயிருக்கவில்லையென்றால், நம்முடைய சரீரம் முழுவதும் புரை பரவுவதற்கு வாய்ப்புள்ளது.

கள்ளத்தீர்க்கதரிசிகள் மிகவும் ஆபத்தானவர்கள். இவர்கள் கர்த்தருடைய ஜனத்திற்கு தீங்கு செய்கிறவர்கள். இப்படிப்பட்ட கள்ளத்தீர்க்கதரிசிகளை தண்டிக்கவேண்டும். "அந்தத் தீர்க்கதரிசியும், அந்தச் சொப்பனக்காரனும் கொலைசெய்யப்படக்கடவன்" (உபா 13:5) என்று மோசே சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தரைப் பின்பற்றி, அவருக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவர் சத்தத்தைக் கேட்டு, அவரைச் சேவித்து, அவரைப் பற்றிக்கொள்ளவேண்டும். கர்த்தரே இஸ்ரவேல் புத்திரரை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவர். அவரே இஸ்ரவேல் ஜனத்தாரை அவர்களுடைய அடிமைத்தன வீட்டிலிருந்து நீங்கலாக்கி மீட்டுக்கொண்டவர் (உபா 13:5).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு அவர்கள் நடக்கும் படியான வழியை விதித்திருக்கிறார். ஆனால் கள்ளத்தீர்க்கதரிசிகளோ கர்த்தர் விதித்த வழியைவிட்டு விலகிப்போகும்படி இஸ்ரவேல் புத்திரரை வஞ்சிக்கிறார்கள். அவர்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமான துரோகப்பேச்சை பேசுகிறார்கள். "இப்படிப்பட்ட தீமையை உங்களிடத்திலிருந்து விலக்குவீர்களாக" (உபா 13:5) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். தீமையை விலக்குவதற்கு காலதாமதம்பண்ணக்கூடாது.

நெருங்கிய உறவுக்காரர்கள் உபா 13:6-11

உபா 13:6. உன் தாய்க்குப் பிறந்த உன் சகோதரனாகிலும், உன் குமாரனாகிலும், உன் குமாரத்தியாகிலும், உன் மார்பிலுள்ள உன் மனைவியாகிலும், உன் பிராணனைப்போலிருக்கிற உன் சிநேகிதனாகிலும் உன்னை நோக்கி: நாம் போய் வேறே தேவர்களைச் சேவிப்போம் வாருங்கள் என்று சொல்லி ,

உபா 13:7. உன்னைச் சுற்றிலும் உனக்குச் சமீபத்திலாகிலும் உனக்குத் தூரத்திலாகிலும், தேசத்தின் ஒருமுனை தொடங்கி மறுமுனைமட்டுமுள்ள எவ்விடத்திலாகிலும் இருக்கிற ஜனங்களுடைய தேவர்களில், நீயும் உன் பிதாக்களும் அறியாத அந்நிய தேவர்களைச் சேவிக்கும்படி இரகசியமாய் உன்னை ஏவிவிட்டால்,

உபா 13:8. நீ அவனுக்கு சம்மதியாமலும், அவனுக்குச் செவிகொடாமலும், உன் கண் அவன்மேல் இரக்கங்கொள்ளாமலும், அவனைத் தப்பவிடாமலும், அவனை ஒளித்து வைக்காமலும்,

உபா 13:9. அவனைக் கொலைசெய்துபோடவேண்டும்; அவனைக் கொலைசெய்வதற்கு, முதல் உன் கையும் பின்பு சகல ஜனத்தின் கையும் அவன்மேல் இருக்கக்கடவது.

உபா 13:10. அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து உன்னைப் புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தரை விட்டு விலகும்படி அவன் உன்னை ஏவினபடியினால், அவன் சாகும்படி அவன்மேல் கல்லெறியக்கடவாய்.

உபா 13:11. இஸ்ரவேலர் யாவரும் அதைக் கேட்டுப் பயந்து, இனி உன் நடுவே இப்படிப்பட்ட தீமையான காரியத்தைச் செய்யாதிருப்பார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு அவர்களுடைய நெருங்கிய உறவுக்காரர்கள் மூலமாகவும் சோதனைகள் வருவதற்கு வாய்ப்புள்ளது. நம்முடைய உறவுக்காரர்கள் எல்லோருமே நமக்கு நன்மை செய்கிறவர்களாக இருக்கமாட்டார்கள். அவர்களில் சிலர் நமக்கு தீமை செய்வார்கள். இப்படிப்பட்ட துன்மார்க்கமான உறவுக்காரர்களைக் குறித்து இஸ்ரவேல் புத்திரர் மிகவும் எச்சரிப்பாயிருக்கவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். கர்த்தரே அவர்களை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவர். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தரைப் பின்பற்றி, அவருக்கு பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவர் சத்தத்தைக் கேட்டு, அவரை சேவித்து, அவரை பற்றிக்கொள்ளவேண்டும்.

ஆனால் துன்மார்க்கமான உறவுக்காரர்களோ இஸ்ரவேல் புத்திரரை, தங்கள் தேவனாகிய கர்த்தரை விட்டு விலகும்படி ஏவிவிடுவார்கள். அப்படிப்பட்ட உறவுக்காரர்கள் தூரத்து உறவுக்காரராயிருக்காமல் அவர்களுக்கு நெருங்கிய உறவுக்காரராயிருப்பார்கள். அப்படிப்பட்ட சில உறவுக்காரர்களைப்பற்றி மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். அவர்களின் விவரம் வருமாறு:

1. உன் தாய்க்குப் பிறந்த உன் சகோதரன்.
2. உன் குமாரன்
3. உன் குமாரத்தி
4. உன் மார்பிலுள்ள உன் மனைவி
5. உன் பிராணனைப்போலிருக்கிற உன் சிநேகிதன்.

இவர்கள் எல்லோருமே இஸ்ரவேல் புத்திரருக்கு நன்மை செய்யவேண்டியவர்கள். ஆனால் இவர்கள் விக்கிரகாராதனைக்காரராயும், இஸ்ரவேல் புத்திரரை வஞ்சிக்கிறவர்களாயும் இருக்கிறார்கள். இந்த உறவுக்காரர்கள் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நாம் போய் வேறே தேவர்களைச் சேவிப்போம் வாருங்கள்" (உபா 13:6) என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே விக்கிரகாராதனை புறஜாதியார் மூலமாகவும் பிரவேசிக்கும், அவர்களுடைய நெருங்கிய உறவினர்கள் மூலமாகவும் பிரவேசிக்கும். இவர்கள் இஸ்ரவேல் புத்திரரை சுற்றிலும் அவர்களுக்குச் சமீபத்திலாகிலும் அவர்களுக்குத் தூரத்திலாகிலும், தேசத்தின் ஒருமுனை தொடங்கி மறுமுனைமட்டுமுள்ள எவ்விடத்திலாகிலும் இருப்பார்கள். இவர்கள் கர்த்தரை ஆராதியாமல், விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள். இப்படிப்பட்ட விக்கிரகாராதனைக்காரர்கள், இஸ்ரவேல் புத்திரரும், அவர்களுடைய பிதாக்களும் அறியாத அந்நிய தேவர்களைச் சேவிக்கும்படி இரகசியமாய் அவர்களை ஏவிவிடுவார்கள் (உபா 13:7).

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இஸ்ரவேல் புத்திரர் என்ன செய்யவேண்டுமென்று மோசே அவர்களுக்கு போதிக்கிறார். "நீ அவனுக்கு சம்மதியாமலும், அவனுக்குச் செவிகொடாமலும், உன் கண் அவன்மேல் இரக்கங்கொள்ளாமலும், அவனைத் தப்பவிடாமலும், அவனை ஒளித்து வைக்காமலும், அவனைக் கொலைசெய்துபோடவேண்டும்; அவனைக் கொலைசெய்வதற்கு, முதல் உன் கையும் பின்பு சகல ஜனத்தின் கையும் அவன்மேல் இருக்கக்கடவது" (உபா 13:8,9) என்றும்,

"அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து உன்னைப் புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தரை விட்டு விலகும்படி அவன் உன்னை ஏவினபடியினால், அவன் சாகும்படி அவன்மேல் கல்லெறியக்கடவாய்" (உபா 13:10) என்றும் மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

அப்போது இஸ்ரவேலர் யாவரும் அதைக் கேட்டுப் பயந்து, இனி தங்கள் நடுவே இப்படிப்பட்ட தீமையான காரியத்தைச் செய்யாதிருப்பார்கள் (உபா 13:11).

நாம் ஆவிக்குரிய காரியங்களில் அந்நியரைக் குறித்து எச்சரிப்பாயிருக்க வேண்டியதுபோல, நம்முடைய நெருங்கிய உறவினரைக் குறித்தும் எச்சரிப்பாயிருக்கவேண்டும். சாத்தான் ஆதாமை ஏவாள் மூலமாக சோதித்தான். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு பேதுரு மூலமாக சோதனை வந்தது.

கர்த்தருடைய பிரமாணத்திற்கு விரோதமாகப் பேசுகிறவர்கள் மார்க்கபேதத்தாராயிருக்கிறார்கள். இந்த அதிகாரத்தில் மார்க்கபேதத்தாரைப்பற்றி ஒருசில காரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. மார்க்கபேதத்தாருக்குச் சம்மதிக்கக்கூடாது.
2. அவர்களுக்குச்செவிகொடுக்கக்கூடாது.
3. அவர்கள்மேல் இரக்கம் கொள்ளக்கூடாது.
4. அவர்களைத் தப்பவிடக்கூடாது.
5. அவர்களை ஜனங்களின் பார்வையிலிருந்து ஒழித்து வைக்கக் கூடாது.
6. அவர்களைக் கொலைசெய்து போட வேண்டும். (உபா 13:9).
7. அவர்களைக் கொலைசெய்வதற்கு உன் கை முதலாவதாக இருக்க வேண்டும்.
8. அதன் பின்பு, ஜனத்தின் கைகள் அவர்களைக் கொலைசெய்வதற்கு இருக்க வேண்டும்.
9. மார்க்கபேதத்தாரைச் சாகும்படி அவர்கள் மேல் கல்லெறிய வேண்டும். (லேவி 20:2; உபா 13:10; உபா 17:7).

மார்க்கபேதத்தார் ஒரு பட்டணத்தில் குடியிருக்கும்போது, அந்தப் பட்டணத்தில் குடியிருக்கிற கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் மார்க்கபேதத்தைப் போதிப்பார்கள். அப்படிப்பட்ட மார்க்கபேத பட்டணங்களைப்பற்றி இந்த அதிகாரத்தில் ஒரு சில காரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. மார்க்கபேதத்து செய்தியைக் கேள்விப்படவேண்டும். (உபா 13:1-13).

2. அவர்கள் செய்தியை நன்றாக விசாரிக்க வேண்டும். (உபா 13:14).

3. அந்தச் செய்தியை கேட்டு ஆராய வேண்டும்.

4. மார்க்கபேதம் நடந்தது மெய் என்று உறுதிபண்ணிக் கொள்ள வேண்டும்.

5. மார்க்கபேதம் நடந்தது நிச்சயம் என்று உறுதிபண்ணிக் கொள்ள வேண்டும்.

6. மார்க்கபேதத்துப் பட்டணத்தின் குடிகளைப் பட்டயக்கருக்கினால் வெட்டவேண்டும். (உபா 13:15).

7. அந்தப் பட்டணத்தையும் அதிலுள்ள யாவற்றையும் சங்காரம் பண்ண வேண்டும்.

8. மார்க்கபேத பட்டணத்திலுள்ள மிருகஜீவன்களைப் பட்டயக்கருக்கினால் சங்காரம் பண்ண வேண்டும்.

9. மார்க்கபேதப்பட்டணத்தில் கொள்ளையிட்டதையெல்லாம் அதின் நடுவீதியிலே கூட்டி, அதில் கொள்ளையிடப்பட்ட யாவற்றையும் முழுவதும் அக்கினியில் சுட்டெரிக்க வேண்டும். (உபா 13:16).

மார்க்கபேதத்தார் இஸ்ரவேல் புத்திரரை, தங்கள் தேவனாகிய கர்த்தரை விட்டு விலகும்படி ஏவுவார்கள். ஜனங்களைக் கர்த்தரை விட்டு விலகும்படி ஏவுவது மிகப்பெரிய பாவம். ஆகையினால்தான், இயேசு கிறிஸ்து இப்படிப்பட்ட பாவங்களைச் செய்கிறவர்களுக்கு "ஐயோ" என்று கூறுகிறார். (மத் 23:13). ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. (யோவான் 15:13)

இஸ்ரவேலர் யாவரும் அதைக் கேட்டுப் பயந்து, இனி தங்கள் நடுவே இப்படிப்பட்ட தீமையான காரியத்தைச் செய்யாதிருப்பார்கள். ஒருவனைச் சாகும்படி கல்லெறியும்போது அதைக் காணும் அல்லது அதைக் கேட்கும் இஸ்ரவேலர் யாவரும் பயப்படுவார்கள். இனிமேல் தவறு செய்யமாட்டார்கள் (உபா 13:8-10).

குடியிருக்கும் பட்டணத்தார் உபா 13:12-18

உபா 13:12. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் குடியிருக்கும்படி கொடுக்கும் பட்டணங்கள் ஒன்றில் பேலியாளின் மக்களாகிய துஷ்டமனிதர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு,

உபா 13:13. நீங்கள் அறியாத வேறே தேவர்களைச் சேவிக்கப்போவோம் வாருங்கள் என்று தங்கள் பட்டணத்தின் குடிகளை ஏவினார்கள் என்கிற செய்தியைக் கேள்விப்படும்போது,

உபா 13:14. நீ நன்றாய் விசாரித்து, கேட்டாராய்ந்து, அப்படிப்பட்ட அருவருப்பான காரியம் உன் நடுவே நடந்தது மெய்யும் நிச்சயமும் என்று காண்பாயானால்,

உபா 13:15. அந்தப் பட்டணத்தின் குடிகளைப் பட்டயக்கருக்கினால் வெட்டி, அதையும் அதிலுள்ள யாவற்றையும் அதின் மிருக ஜீவன்களையும் பட்டயக்கருக்கினால் சங்காரம்பண்ணி,

உபா 13:16. அதில் கொள்ளையிட்டதையெல்லாம் அதின் நடுவீதியிலே கூட்டி, உன் தேவனாகிய கர்த்தருக்கு என்று அந்தப் பட்டணத்தையும், அதில் கொள்ளையிடப்பட்ட யாவற்றையும் முழுவதும் அக்கினியில் சுட்டெரிக்கக்கடவாய்; அது இனிக்கட்டப்படாமல், நித்திய மண்மேடாயிருக்கக்கடவது.

உபா 13:17. சபிக்கப்பட்ட பொருளில் ஒன்றும் உன் கையில் இருக்கவேண்டாம். நான் இன்று உனக்குக் கற்பிக்கிற உன் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் நீ கைக்கொண்டு, உன் தேவனாகிய கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதைச் செய்யும்படி, அவர் சத்தத்திற்குச் செவிகொடுப்பாயானால்,

உபா 13:18. கர்த்தர் தமது கோபத்தின் உக்கிரத்தைவிட்டுத் திரும்பி, உனக்குத் தயை செய்து, உனக்கு இரங்கி, அவர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்டபடி உன்னை விருத்தியடையப்பண்ணுவார்.

கானான் தேசம் கர்த்தருடைய தேசம். அந்த தேசம் இஸ்ரவேல் புத்திரருக்கு வாக்குத்தத்தமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிற தேசம். கானான் தேசத்தில் இஸ்ரவேல் புத்திரர் மாத்திரமே குடியிருக்கவேண்டும் என்பதும், அவர்கள் எல்லோரும் தங்கள் தேவனாகிய கர்த்தரை ஆராதிக்கவேண்டும் என்பதும் கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. இதற்காக, இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் பிரவேசிக்கும்போது, அந்த தேசத்திலுள்ள புறஜாதி ஜனங்களை, அந்த தேசத்தைவிட்டு முற்றிலுமாய்த் துரத்திவிடவேண்டுமென்று கர்த்தர் கட்டளை கொடுத்திருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திலிருந்து புறஜாதியாரைத் துரத்துவதுபோல, புறஜாதியாரின் விக்கிரகங்களையும், சிலைகளையும், அவர்களுடைய பலிபீடங்களையும் அழித்துப்போடவேண்டும். இவ்வாறாக இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்திலிருந்து விக்கிரகங்களையும், விக்கிரகாராதனையையும், விக்கிரகாராதனைக்காரரையும் முற்றிலுமாய் ஒழித்துவிடவேண்டும்.

ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருடைய கட்டளைக்கு முழுவதுமாய்க் கீழ்ப்படியவில்லை. அவர்கள் கானான் தேசத்திலுள்ள புறஜாதி ஜனங்களை அந்த தேசத்தைவிட்டு முற்றிலுமாய் துரத்திவிடவில்லை. கானான் தேசத்திலே இஸ்ரவேல் புத்திரர் பட்டணங்களில் குடியிருக்கும்போது, அவர்கள் மத்தியிலே புறஜாதி ஜனங்களும் குடியிருக்கிறார்கள். புறஜாதியாரின் விக்கிரகங்களும் பட்டணங்களிலே இருக்கிறது. புறஜாதியார் கானான் தேசத்திலுள்ள பட்டணங்களில், தங்கள் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். இவ்வாறாக கானான் தேசத்திலே, கர்த்தரை ஆராதிக்கிற ஆராதனையும் நடைபெறுகிறது, விக்கிரகங்களை ஆராதிக்கிற விக்கிரகாராதனையும் நடைபெறுகிறது.

கானான் தேசத்திலிருக்கிற விக்கிரகாராதனைக்காரரை மோசே பேலியாளின் மக்கள் என்றும், அவர்கள் துஷ்டமனுஷர் என்றும் சொல்லுகிறார். மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் குடியிருக்கும்படி கொடுக்கும் பட்டணங்கள் ஒன்றில் பேலியாளின் மக்களாகிய துஷ்டமனிதர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு, நீங்கள் அறியாத வேறே தேவர்களைச் சேவிக்கப்போவோம் வாருங்கள் என்று தங்கள் பட்டணத்தின் குடிகளை ஏவுவார்கள்" (உபா 13:12,13) என்று சொல்லுகிறார்.

பேலியாளின் மக்களாகிய துஷ்டமனுஷர் வாசம்பண்ணுகிற பட்டணம், இஸ்ரவேலின் காணியாட்சிக்குட்பட்ட பட்டணமாகயிருக்கிறது. இஸ்ரவேலின் நியாயாதிபதிகளே இந்தப் பட்டணத்தை நியாயம் விசாரிக்கவேண்டும். இந்தப் பட்டணத்திலுள்ள ஜனங்கள் ஒரு காலத்தில், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை மாத்திரமே ஆராதித்தார்கள். ஆனால் அவர்கள் இப்போது கர்த்தரை விட்டு விலகி, புறஜாதியாரின் அந்நிய தெய்வங்களையும், அவர்களுடைய விக்கிரகங்களையும் ஆராதிக்கிறார்கள்.

புறஜாதியார் இஸ்ரவேல் புத்திரருடைய பட்டணங்களில் வாசம்பண்ணுவதினால், அவர்கள் மூலமாக, இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே விக்கிரகாராதனை பிரவேசித்திருக்கிறது. விக்கிரகாராதனை கொஞ்சம் கொஞ்சமாக பரவி, இப்போது அந்தப் பட்டணம் முழுவதிலும் நிரம்பியிருக்கிறது. விக்கிரகாராதனையைக் கட்டுப்படுத்தாமல் அப்படியே விட்டுவிட்டால், ஒரு பட்டணத்தில் காணப்படுகிற விக்கிரகாராதனை, மற்ற பட்டணங்களுக்கும் பரவும். விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள், இஸ்ரவேல் புத்திரர் அறியாத வேறே தேவர்களை சேவிக்கப்போவோம் வாருங்கள் என்று தங்கள் பட்டணத்தின் குடிகளை ஏவுவார்கள்.

விக்கிரகாராதனைக்காரர்கள் பேலியாளின் மக்களாயிருக்கிறார்கள். "கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?" (2கொரி 6:15). பிசாசின் பிள்ளைகளே பேலியாளின் பிள்ளையாயிருக்கிறார்கள்.

பேலியாளின் மக்கள், கர்த்தருடைய ஜனத்தை, விக்கிரகாராதனை செய்யுமாறு ஏவுகிறார்கள் என்னும் செய்தியை, இஸ்ரவேல் புத்திரர் கேள்விப்படும்போது, அவர்கள் மிகவும் எச்சரிப்பாயிருக்க வேண்டும். இப்படிப்பட்ட துர்ச்செய்தியை கேட்டும் கேளாதவர்கள்போல இருக்கக்கூடாது. இந்தச் செய்தியை, "நீ நன்றாய் விசாரித்து, கேட்டாராயவேண்டும்" (உபா 13:14) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

தாங்கள் கேள்விப்பட்ட செய்தி உண்மையான செய்தி என்பது நிரூபிக்கப்படும்போது, இஸ்ரவேல் புத்திரர் பேலியாளின் மக்களை பட்டயக்கருக்கினால் சங்காரம்பண்ணவேண்டும் என்று மோசே சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "அப்படிப்பட்ட அருவருப்பான காரியம் உன் நடுவே நடந்தது மெய்யும் நிச்சயமும் என்று காண்பாயானால், அந்தப் பட்டணத்தின் குடிகளைப் பட்டயக்கருக்கினால் வெட்டி, அதையும் அதிலுள்ள யாவற்றையும் அதின் மிருக ஜீவன்களையும் பட்டயக்கருக்கினால் சங்காரம்பண்ணவேண்டும்" (உபா 13:14,15) என்று சொல்லுகிறார்.

பேலியாளின் மக்கள் அருவருப்பான காரியங்களை இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே செய்தது உறுதியாகும்போது, அந்தப் பட்டணத்தார் முழுவதையும் அழித்துப்போடவேண்டுமென்று மோசே சொல்லுகிறார். ஒருவேளை அந்தப் பட்டணத்தில் ஒரு சில நீதிமான்கள் இருப்பார்களென்றால், அவர்கள் பேலியாளின் மக்கள் மத்தியிலே வாசம்பண்ணாமல், தாங்களாகவே அந்தப் பட்டணத்தைவிட்டு வெளியேறிப்போய்விடுவார்கள். பேலியாளின் மக்கள் மத்தியிலே வாசம்பண்ணுவது கர்த்தருடைய பிள்ளைகளுக்கு மிகவும் ஆபத்தானதாயிருக்கும்.

இஸ்ரவேல் ஜனத்தார், பேலியாளின் மக்கள் அருவருப்பான காரியங்களை செய்கிற பட்டணத்தையும் அழித்துப்போடவேண்டுமென்று மோசே சொல்லுகிறார். மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "அந்தப் பட்டணத்தின் குடிகளைப் பட்டயக்கருக்கினால் வெட்டி, அதையும் அதிலுள்ள யாவற்றையும் அதின் மிருக ஜீவன்களையும் பட்டயக்கருக்கினால் சங்காரம்பண்ணி, அதில் கொள்ளையிட்டதையெல்லாம் அதின் நடுவீதியிலே கூட்டி, உன் தேவனாகிய கர்த்தருக்கு என்று அந்தப் பட்டணத்தையும், அதில் கொள்ளையிடப்பட்ட யாவற்றையும் முழுவதும் அக்கினியில் சுட்டெரிக்கக்கடவாய்; அது இனிக்கட்டப்படாமல், நித்திய மண்மேடாயிருக்கக்கடவது" (உபா 13:15,16) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை ஆராதிக்கிறவர்கள், விக்கிரகாராதனைக்கு விரோதமான நீதியான நியாயத்தீர்ப்பு செய்வதற்கு எப்போதுமே ஆயத்தமாயிருக்கவேண்டும். நாஸ்திகம், துன்மார்க்கம், வேசித்தனம், விபசாரம் ஆகியவற்றைவிட விக்கிரகாராதனை மிகவும் அருவருக்கப்படத்தக்க பாவமாயிருக்கிறது.

கானான் தேசத்திலே ஒரு பட்டணத்தின் குடிகள் எல்லோரையும் பட்டயத்தினால் வெட்டி சங்காரம்பண்ணுவதும், அந்தப் பட்டணம் முழுவதையும் அக்கினியினால் சுட்டெரிப்பதும், அந்தப் பட்டணத்தை திரும்பவும் கட்டாமல் அதை நித்திய மண்மேடாய் ஆக்குவதும் மிகப்பெரிய தண்டனைபோல தெரியலாம். கானான் தேசத்திலே ஒரு பட்டணமே அழிந்துபோகும் என்றுகூட இஸ்ரவேல் புத்திரர் நினைக்கலாம். ஆனாலும் கானான் தேசத்தின் மொத்த நன்மையை கணக்கில் பார்க்கும்போது, பேலியாளின் மக்கள் அருவருப்பான காரியங்களை செய்கிற ஒரு பட்டணம் அழிந்துபோவது, கர்த்தருடைய பார்வையிலே நீதியாகயிருக்கிறது.

விக்கிரகாராதனைக்காரர்கள் மனுஷருடைய தண்டனைகளிலிருந்து தப்பித்தாலும், அவர்கள் கர்த்தருடைய நீதியான ஆக்கினைத்தீர்ப்புக்கு தப்பிக்க முடியாது.

கானான் தேசம் முழுவதும் அழிந்துபோகாமல் அதைப் பாதுகாப்பதற்காக, கர்த்தர் பேலியாளின் மக்கள் அருவருப்பான காரியங்களை செய்கிற பட்டணத்தை அழித்துப்போட சித்தம்கொள்கிறார். பேலியாளின் மக்களுடைய பொருட்கள் எல்லாமே சபிக்கப்பட்ட பொருட்களாகயிருக்கிறது. அந்தப் பட்டணத்தில் கொள்ளையிடப்பட்ட யாவற்றையும் இஸ்ரவேல் புத்திரர் முழுவதுமாய் அக்கினியிலே சுட்டெரிக்கவேண்டும். "சபிக்கப்பட்ட பொருளில் ஒன்றும் உன் கையில் இருக்கவேண்டாம்" (உபா 13:17) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

சபிக்கப்பட்ட பொருளை ஆகான் தனக்காக எடுத்துக் கொண்டு பாவம் செய்தான். இதுபோன்ற பாவம் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் காணப்படக் கூடாது என்பதற்காக இந்தப் பிரமாணம் சொல்லப்பட்டிருக்கிறது. (யோசு 7).

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தரைப் பின்பற்றி, அவருக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவர் சத்தத்தைக் கேட்டு, அவரைச் சேவித்து, அவரைப் பற்றிக்கொள்ளவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நான் இன்று உனக்குக் கற்பிக்கிற உன் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் நீ கைக்கொண்டு, உன் தேவனாகிய கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதைச் செய்யும்படி, அவர் சத்தத்திற்குச் செவிகொடுப்பாயானால், கர்த்தர் தமது கோபத்தின் உக்கிரத்தைவிட்டுத் திரும்பி, உனக்குத் தயை செய்து, உனக்கு இரங்கி, அவர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்டபடி உன்னை விருத்தியடையப்பண்ணுவார்" (உபா 13:17,18) என்று சொல்லுகிறார்.

14 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விசேஷித்த ஜனமாகவும், பரிசுத்த ஜனமாகவும் இருக்கிறார்கள். அவர்கள் உலகப்பிரகாரமான புறஜாதி ஜனங்களுக்கு ஒத்த வேஷம் தரியாமல் அவர்களை விட்டு வேறுபிரிந்து ஜீவிக்கவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகள் செய்யக்கூடிய காரியங்களையும், செய்யக்கூடாத காரியங்களையும் மோசே இந்த அதிகாரத்தில் சொல்லுகிறார்.

கர்த்தருடைய பிள்ளைகள் செத்தவனுக்காக தங்களை கீறிக்கொள்ளக்கூடாது (உபா 14:1,2). அவர்கள் புசிக்கத்தகுந்ததை மாத்திரமே புசிக்கவேண்டும். புசிக்கத்தகாதவை என்று கர்த்தர் விலக்கியிருக்கிறவைகளை இஸ்ரவேல் புத்திரர் புசிக்கக்கூடாது (உபா 14:3-21).

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு எப்பொழுதும் பயந்திருக்கவேண்டும். அவர்கள் கர்த்தருக்கு தசமபாகம் செலுத்தவேண்டும். மூன்றாம் வருஷத்தின் முடிவிலே அவர்கள் விசேஷித்த தசமபாகத்தை செலுத்தவேண்டும் (உபா 14:22-29).

கர்த்தருக்குப் பரிசுத்தமான ஜனங்கள் உபா 14:1,2

உபா 14:1. நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரின் பிள்ளைகள்; செத்தவனுக்காகக் கீறிக்கொள்ளாமலும், உங்கள் கண்களுக்கு இடையிலே சவரம்பண்ணாமலும் இருப்பீர்களாக.

உபா 14:2. நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தமான ஜனங்கள்; பூமியின்மீதெங்குமுள்ள எல்லா ஜனங்களிலும் உங்களையே கர்த்தர் தமக்குச் சொந்த ஜனங்களாயிருக்கத் தெரிந்துகொண்டார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை தமக்கு சொந்த ஜனமாக தெரிந்துகொண்டார். அவர்கள் கர்த்தருக்கு பரிசுத்தமான ஜனங்களாயிருக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு மூன்று விசேஷித்த சிலாக்கியங்களைக் கொடுத்து, அவர்களை விசேஷமாய் ஆசீர்வதித்திருக்கிறார். அவையாவன :

1. கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை தமக்கு சொந்த ஜனங்களாயிருக்க தெரிந்துகொண்டார்.

2. இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரின் பிள்ளைகள்.

3. இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு பரிசுத்தமான ஜனங்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய நல்ல குணங்களையும், அவர்களுடைய திரளான எண்ணிக்கையையும், அவர்களுடைய பெலத்தையும், பரிசுத்தத்தையும் சோதித்துப் பார்த்து, அங்கீகரித்து, அவர்களை தமக்கு சொந்த ஜனங்களாக தெரிந்துகொள்ளவில்லை. கர்த்தர் தம்முடைய கிருபையினாலேயே அவர்களை தம்முடைய சொந்த ஜனமாக தெரிந்துகொண்டார்.

மற்ற தேசத்தாரைவிட இஸ்ரவேல் புத்திரரிடத்தில் விசேஷமான நற்குணங்கள் எதுவும் காணப்படவில்லை. அவர்கள் பக்தியிலும் விசுவாசத்திலும் குறைவுள்ளவர்களாகயிருந்தாலும், கர்த்தர் அவர்களை தமக்கு பரிசுத்தமான ஜனங்களாகத் தெரிந்துகொண்டார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தரின் பிள்ளைகளாயிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை தம்முடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொள்கிறார். மற்ற ஜனத்தாரைவிட, இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு பிரியமானவர்களாயும், கர்த்தருக்கு அருகாமையில் வந்து ஜீவிக்கிறவர்களாயும் இருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு ஐக்கியமாயிருக்கிறார்.

"நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரின் பிள்ளைகள்" என்று மோசே இஸ்ரவேல் புத்திரரைப்பற்றிச் சொல்லுகிறார். இது இஸ்ரவேல் புத்திரருக்குக் கிடைத்திருக்கும் மிகப்பெரிய சிலாக்கியம். இஸ்ரவேலரின் ஜீவியம் இந்தச் சத்தியத்தை மையமாக வைத்தே, பின்னப்பட்டிருக்கிறது. (உபா 14:1; சங் 87:6). இஸ்ரவேலைக் கர்த்தர் பெற்றெடுத்திருப்பதாகக் கூறியிருக்கிறார். (உபா 32:18). ஈசாக்கு ஆவியினால் பிறந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. (கலா 4:28-29).

புதிய பிறப்பினால், அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறார்கள். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் நாமும் மறுபடியும் பிறப்பதினால், தேவனுடைய சுவிகாரப் புத்திரராக இருக்கிறோம் (ரோமர் 8:15; ரோமர் 9:4; கலா 4:5; எபே 1:4) இக்காலத்தில் ஜனங்கள் இரட்சிக்கப்பட்டதுபோன்று, இஸ்ரவேலரின் வரலாற்றில் அவர்களில் பலரும் இரட்சிக்கப்பட்டிருந்தார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்காக வேறுபிரிக்கப்பட்ட ஜனங்கள். அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு பரிசுத்தமான ஜனங்கள். அவர்கள் கர்த்தரை மாத்திரமே சேவிக்கவேண்டும். கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைத் துதிக்கவேண்டும். கர்த்தர் தம்முடைய பரிசுத்த பிரமாணத்தினால் இஸ்ரவேல் புத்திரரை ஆளுகை செய்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே, கர்த்தர் தம்முடைய பரிசுத்தமான வாசஸ்தலத்திலே வாசம்பண்ணுகிறார். கர்த்தருடைய பிரசன்னம் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே இருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயங்களையும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார், இந்தப் பிரபஞ்சத்திலுள்ள, மற்ற எல்லா ஜனங்களையும்விட, கர்த்தருக்கு விசேஷித்த ஜனமாயிருக்கிறார்கள். கர்த்தருடைய ஜனமாகயிருக்கிறவர்கள், புறஜாதி ஜனங்களிடமிருந்து வேறுபிரிந்து ஜீவிக்கவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகள் புறஜாதி ஜனங்களைப்போல ஜீவிக்காமல், கர்த்தருக்கு பிரியமான ஜனமாக ஜீவிக்கவேண்டும்.

கர்த்தருடைய ஜனம் புறஜாதி ஜனத்தாரின் பழக்க வழக்கங்களை பின்பற்றக்கூடாது. அவர்கள் செத்தவனுக்காக கீறிக்கொள்ளக்கூடாது. தங்கள் கண்களுக்கு இடையில் சவரம்பண்ணக்கூடாது (உபா 14:1).

புறஜாதியாரின் இரண்டு கிரியைகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. செத்தவனுக்காகக் கீறிக்கொள்ளாமல் இருக்க வேண்டும். கானானியர் மத்தியில் இந்தப் பழக்கம் காணப்பட்டது. விக்கிரகாராதனையின் ஒரு பகுதியாக அவர்கள் இதைச் செய்து வந்தார்கள். (1இராஜா 18:28) தங்களுடைய பாவங்களைக் கழுவுவதற்கு மரித்துப் போனவர்கள் உதவி புரிய வேண்டுமென்பதற்காக புறஜாதியார் இந்தக் காரியங்களைச் செய்தார்கள்(லேவி 19:28; லேவி 21:5).

2. செத்தவனுக்காகக் கண்களுக்கு இடையிலே சவரம்பண்ணாமல் இருக்க வேண்டும். புறஜாதி தெய்வங்களுக்குத் தங்களைப் பிரதிஷ்டை பண்ணும் விதமாக தலைமுடியைச் சவரம்பண்ணும் வழக்கம் காணப்படுகிறது. மரித்தவர்களுக்காகத் துக்கம் அனுசரிக்கும்போதும் தங்கள் தலைமுடியைச் சவரம் செய்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் அருவருப்பானது ஒன்றையும் புசிக்கக்கூடாது என்று மோசே சொல்லுகிறார். மோசே இதற்கான காரணத்தைச் சொல்லும்போது, "நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தமான ஜனங்கள்; பூமியின் மீதெங்குமுள்ள எல்லா ஜனங்களிலும் உங்களையே கர்த்தர் தமக்குச் சொந்த ஜனங்களாயிருக்கத் தெரிந்துகொண்டார்" (உபா 14:2,3) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனம் கர்த்தருக்கு பரிசுத்த ஜனமாயிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய பழக்க வழக்கங்களினால், கர்த்தருடைய நாமத்தை பரிசுத்தக்குலைச்சலாக்கிவிடக்கூடாது. தங்கள் மத்தியிலே ஒருவன் செத்துப்போகும்போது புறஜாதி ஜனங்கள் தங்கள் துக்கத்தை வெளிப்படுத்துவதற்காக, தங்கள் சரீரத்தைக் கீறிக்கொள்வது வழக்கம். மேலும் அவர்கள் தங்கள் கண்களுக்கு இடையிலே சவரம்பண்ணி, தங்கள் துக்கத்தை வெளிப்படுத்துவார்கள்.

விக்கிரகாராதனைக்காரர்கள் தங்கள் சரீரத்தைக் கீறிக்கொண்டு, தங்களுடைய சொந்த இரத்தத்தை, தங்கள் விக்கிரகங்களுக்கு பலியாக செலுத்துகிறார்கள். விக்கிரகங்கள் கோபமாயிருப்பதினால், தங்கள் மத்தியிலே ஒருவன் செத்துப்போனான் என்றும், அந்த விக்கிரகத்தின் கோபத்தை குறைப்பதற்கு தங்கள் இரத்தத்ததைக் காணிக்கையாகக் கொடுக்கவேண்டும் என்பதும் புறஜாதியாரின் நம்பிக்கை.

இந்த நம்பிக்கையின் பிரகாரமாக புறஜாதியார் தங்கள் மத்தியிலே செத்தவனுக்காக தங்கள் சரீரத்தைக் கீறிக்கொள்கிறார்கள். இது விக்கிரகாராதனையோடு தொடர்புடைய ஒரு காரியம். இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு பரிசுத்த ஜனமாகயிருக்கிறார்கள். அவர்கள் இதுபோன்ற விக்கிரகாராதனை காரியங்களை செய்யக்கூடாது.

பாகாலின் தீர்க்கதரிசிகள் தங்கள் சரீரங்களைக் கீறிக்கொண்டு, தங்களுடைய இரத்தத்தை பாகாலுக்கு பலியாக செலுத்தினார்கள்.

“அவர்கள் உரத்தசத்தமாய்க் கூப்பிட்டு? தங்கள் வழக்கத்தின்படியே இரத்தம் தங்கள்மேல் வடியுமட்டும் கத்திகளாலும் ஈட்டிகளாலும் தங்களைக் கீறிக்கொண்டார்கள்” (1இராஜா 18:28).

புறஜாதி ஜனங்களுக்கு தங்கள் ஜீவனைக் குறித்து நம்பிக்கையில்லை. தாங்கள் மரித்த பின்பு எங்கே போவோம் என்னும் நிச்சயம் அவர்களிடத்தில் இல்லை. ஆகையினால் செத்துப்போனவர்களுக்காக அவர்கள் அதிகமாய்த் துக்கப்படுகிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கோ, நம்முடைய ஜீவனைக் குறித்து கர்த்தருக்குள் நம்பிக்கை உள்ளது. நம்முடைய சரீரத்திலே நாம் செத்துப்போனாலும், கர்த்தரோடுகூட பரலோகத்திலே ஜீவனோடிருப்போம் என்னும் நம்பிக்கை நமக்கு உண்டு. இது கர்த்தருடைய ஜனத்திற்கு கிடைத்திருக்கும் ஆனந்த பாக்கிய நம்பிக்கை.

கர்த்தருடைய பிள்ளைகள் மத்தியிலே ஒருவர் மரித்துப்போகும்போது, அவருடைய மரணத்தைக் குறித்த சோகமும், வருத்தமும் நம்மிடத்தில் காணப்படலாம். ஆனாலும் நாம் புறஜாதியாரைப்போல நம்பிக்கையற்றவர்களாயிருக்கக்கூடாது. நாம் கர்த்தரையும், அவருடைய வார்த்தையையும், அவர் நமக்கு வாக்குப்பண்ணியிருக்கிற பரலோகத்தையும், ஆனந்த பாக்கிய நம்பிக்கையும் நம்பவேண்டும். அப்போது நம்முடைய துக்கம் சந்தோஷமாய் மாறும்.

புசிக்கத்தக்கவைகளும், புசிக்கத்தகாதவைகளும்

உபா 14:3-21

உபா 14:3. அருவருப்பானதொன்றையும் புசிக்கவேண்டாம்.

உபா 14:4. நீங்கள் புசிக்கத்தகும் மிருகங்களாவன: மாடும், செம்மறியாடும், வெள்ளாடும்,

உபா 14:5. மானும், வெளிமானும், கலைமானும், வரையாடும், புள்ளிமானும், சருகுமானும் புல்வாயுமே.

உபா 14:6. மிருகங்களில் விரிகுளம்புள்ளதாயிருந்து, குளம்புகள் இரண்டாகப் பிரித்திருக்கிறதும், அசைபோடுகிறதுமான சகல மிருகங்களையும் நீங்கள் புசிக்கலாம்.

உபா 14:7. அசைபோடுகிறவைகளிலும், விரிகுளம்புள்ளவைகளிலும், நீங்கள் புசிக்கத்தகாதவைகள் எவையென்றால்: ஒட்டகமும், முசலும், குழிமுசலுமே; அவைகள் அசைபோட்டும் அவைகளுக்கு விரிகுளம்பில்லை; அவைகள் உங்களுக்கு அசுத்தமாயிருப்பதாக.

உபா 14:8. பன்றியும் புசிக்கத்தகாது; அது விரிகுளம்புள்ளதாயிருந்தும், அசைபோடாதிருக்கும்; அது உங்களுக்கு அசுத்தமாயிருப்பதாக; இவைகளின் மாம்சத்தைப் புசியாமலும் இவைகளின் உடலைத் தொடாமலும் இருப்பீர்களாக.

உபா 14:9. ஜலத்திலிருக்கிற எல்லாவற்றிலும் சிறகும் செதிளும் உள்ளவைகளையெல்லாம் நீங்கள் புசிக்கலாம்.

உபா 14:10. சிறகும் செதிளும் இல்லாதயாதொன்றையும் புசிக்கலாகாது; அது உங்களுக்கு அசுத்தமாயிருப்பதாக.

உபா 14:11. சுத்தமான சகல பட்சிகளையும் நீங்கள் புசிக்கலாம்.

உபா 14:12. நீங்கள் புசிக்கத்தகாதவைகள் எவையென்றால்; கழுகும், கருடனும், கடலுராஞ்சியும்,

உபா 14:13. பைரியும், வல்லூறும், சகலவிதபருந்தும்,

உபா 14:14. சகலவித காகங்களும்,

உபா 14:15. தீக்குருவியும், கூகையும், செம்புகமும், சகலவிதமான டேகையும்,

உபா 14:16. ஆந்தையும், கோட்டானும், நாரையும்,

உபா 14:17. கூழக்கடாவும், குருகும், நீர்க்காகமும்,

உபா 14:18. கொக்கும், சகலவித ராஜாளியும், புழுக்கொத்தியும், வௌவாலுமே.

உபா 14:19. பறக்கிறவைகளில் ஊர்வன யாவும் உங்களுக்கு அசுத்தமாயிருப்பதாக; அவைகள் புசிக்கத்தகாதவைகள்.

உபா 14:20. சுத்தமான பறவைகள் யாவையும் நீங்கள் புசிக்கலாம்.

உபா 14:21. தானாய் இறந்துபோனதொன்றையும் புசிக்கவேண்டாம்; உங்கள் வாசல்களில் இருக்கிற பரதேசிக்கு அதைப் புசிக்கக்கொடுக்கலாம்; அல்லது அந்நியனுக்கு அதை விற்றுப்போடலாம்; நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனங்கள். வெள்ளாட்டுக்குட்டியை அதின் தாயின் பாலிலே சமைக்கவேண்டாம்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் போஜன விஷயங்களிலும் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும். புசிக்கத்தகுந்தவை என்று கர்த்தர் தங்களுக்கு அனுமதிப்பதை மாத்திரமே இஸ்ரவேல் புத்திரர் புசிக்க வேண்டும். "அருவருப்பானதொன்றையும் புசிக்கவேண்டாம்" *(உபா 14:3)* என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

அருவருப்பான மிருகங்களை இஸ்ரவேல் புத்திரர் புசிக்கக்கூடாது. புறஜாதி ஜனங்கள் இந்த மிருகங்களையும் புசிக்கிறார்கள். ஆனால் இஸ்ரவேல் புத்திரருக்கு இந்த மிருகங்கள் புசிக்கத்தகாத மிருகங்களாயிருக்கிறது.

லேவியராகமம் புஸ்தகத்தில், மிருகங்களை, புசிக்கத்தகுந்தவை என்றும், புசிக்கத்தகாதவை என்றும் வேறுபிரித்து சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பிரமாணம் இங்கு மறுபடியுமாக விவரித்து சொல்லப்பட்டிருக்கிறது.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீங்கள் புசிக்கத்தகும் மிருகங்களாவன: மாடும், செம்மறியாடும், வெள்ளாடும், மானும், வெளிமானும், கலைமானும், வரையாடும், புள்ளிமானும், சருகுமானும் புல்வாயுமே. மிருகங்களில் விரிகுளம்புள்ளதாயிருந்து, குளம்புகள் இரண்டாகப் பிரிந்திருக்கிறதும், அசைபோடுகிறதுமான சகல மிருகங்களையும் நீங்கள் புசிக்கலாம்" *(உபா 14:4-6)* என்று சொல்லுகிறார்.

புசிக்கத்தகாத மிருகங்களெல்லாம் இஸ்ரவேல் புத்திரருக்கு அசுத்தமாயும் அருவருப்பானதாயும் இருக்கிறது. மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு புசிக்கத்தகாத மிருகங்களைப்பற்றிச் சொல்லும்போது, "அசைபோடுகிறவைகளிலும், விரிகுளம்புள்ளவைகளிலும், நீங்கள் புசிக்கத்தகாதவைகள் எவையென்றால்: ஒட்டகமும், முசலும், குழிமுசலுமே; அவைகள் அசைபோட்டும் அவைகளுக்கு விரிகுளம்பில்லை; அவைகள் உங்களுக்கு அசுத்தமாயிருப்பதாக பன்றியும் புசிக்கத்தகாது; அது விரிகுளம்புள்ளதாயிருந்தும், அசைபோடாதிருக்கும்; அது உங்களுக்கு அசுத்தமாயிருப்பதாக; இவைகளின் மாம்சத்தைப் புசியாமலும் இவைகளின் உடலைத் தொடாமலும் இருப்பீர்களாக" (உபா 14:7,8) என்று சொல்லுகிறார்.

மீன்களைப்பற்றி ஒரே ஒரு பிரமாணம் மாத்திரம் பொதுவானதாக சொல்லப்பட்டிருக்கிறது. "ஜலத்திலிருக்கிற எல்லாவற்றிலும் சிறகும் செதிளும் உள்ளவைகளையெல்லாம் நீங்கள் புசிக்கலாம். சிறகும் செதிளும் இல்லாதயாதொன்றையும் புசிக்கலாகாது; அது உங்களுக்கு அசுத்தமாயிருப்பதாக" (உபா 14:9,10) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

பறவைகளைப் பொருத்தவரையில், ஒரு சில பறவைகள் புசிக்கத்தக்கவைகளாகவும், வேறு சில பறவைகள் புசிக்கத்தகாதவைகளாகவும் இருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் சுத்தமான சகல பட்சிகளையும் புசிக்கலாம் (உபா 14:11). அவர்கள் சுத்தமான பறவைகள் யாவையும் புசிக்கலாம் (உபா 14:20) என்று மோசே மறுபடியுமாய்ச் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் புசிக்கத்தகாத பட்சிகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீங்கள் புசிக்கத்தகாதவைகள் எவையென்றால்; கழுகும், கருடனும், கடலூராஞ்சியும், பைரியும், வல்லூறும், சகலவிதபருந்தும், சகலவித காகங்களும், தீக்குருவியும், கூகையும், செம்புகமும், சகலவிதமான டேகையும், ஆந்தையும், கோட்டானும், நாரையும், கூழக்கடாவும், குருகும், நீர்க்காகமும், கொக்கும், சகலவித ராஜாளியும், புழுக்கொத்தியும், வெளவாலுமே. பறக்கிறவைகளில் ஊர்வன யாவும் உங்களுக்கு அசுத்தமாயிருப்பதாக; அவைகள் புசிக்கத்தகாதவைகள்" (உபா 14:12-19) என்று சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு புசிப்பது பற்றி சொன்ன பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. அருவருப்பானதொன்றையும் புசிக்க கூடாது. (உபா 14:3).

2. புசிக்கத்தகும் மிருகங்கள்(உபா 14:4-5).

   (1) மாடு

   (2) செம்மறியாடு

   (3) வெள்ளாடு

   (4) மான்

   (5) வெளிமான் (உபா 14:5; உபா 12:15,22; உபா 15:22; 2சாமு 2:18; 1இராஜா 4:23; 1நாளா 12:8; நீதி 5:19; நீதி 6:5; உன் 2:7-9,17; உன் 3:5; உன் 4:5; உன் 7:3; உன் 8:14; ஏசா 13:14)

   (6) கலைமான் (உபா 14:5; 1இராஜா 4:23)

   (7) வரையாடு

   (8) புள்ளிமான்

   (9) சருகுமான்

   (10) புல்வாய்

3. மிருகங்களில் விரிகுளம்புள்ளதாயிருந்து, குளம்புகள் இரண்டாகப் பிரித்திருக்கிறதும், அசைபோடுகிறதுமான சகல மிருகககளையும் புசிக்கலாம் (உபா 14:6, லேவி 11)

4. புசிக்கத்தகாத மிருகங்கள்

(1) ஒட்டகம் (உபா 14:7; லேவி 11:4)

(2) முசல் (உபா 14:7; லேவி 11:4)

(3) குழிமுசல் (உபா 14:7; லேவி 11:5; நீதி 30:24)

(4) பன்றி (உபா 14:8; லேவி 11:7)

5. இவைகளின் மாம்சத்தைப் புசியாமலும் இவைகளின் உடலைத் தொடாமலும் இருக்கவேண்டும் (உபா 14:8).

6. ஜலத்திலிருக்கிற எல்லாவற்றிலும் சிறகும் செதிளும் உள்ளவைகளையெல்லாம் புசிக்கலாம் (உபா 14:9).

7. சிறகும் செதிளும் இல்லாதயாதொன்றையும் புசிக்கலாகாது; அது அவர்களுக்கு அசுத்தமாயிருக்கிறது (உபா 14:10).

8. சுத்தமான சகல பட்சிகளையும் அவர்கள் புசிக்கலாம் (உபா 14:11).

9. புசிக்கத்தகாத அசுத்தமான பறவைகள்

(1) கழுகு (லேவி 11:13; உபா 14:12)

(2) கருடன் (லேவி 11:12; உபா 14:12)

(3) கடலுராஞ்சி (லேவி 11:13; உபா 14:12)

(4) பைரி (உபா 14:13)

(5) வல்லூறு (லேவி 11:14; உபா 14:13)

(6) பருந்து (லேவி 11:14; உபா 14:13)

(7) காகம் (லேவி 11:15; உபா 14:14)

(8) தீக்குருவி (லேவி 11:15; உபா 14:15)

(9) கூகை (லேவி 11:16; உபா 14:15)

(10) செம்புகம் (லேவி 11:16; உபா 14:15)

(11) டேகை (லேவி 11:16; உபா 14:15)

(12) ஆந்தை (லேவி 11:17; உபா 14:16)

(13) கோட்டான் (லேவி 11:17; உபா 14:16)

(14) நாரை (லேவி 11:18; உபா 14:16)

(15) கூழக்கடா (லேவி 11:18; உபா 14:17; சங் 102:6)

(16) குருகு (லேவி 11:18; உபா 14:17)

(17) நீர்க்காகம் (லேவி 11:17; உபா 14:17)

(18) கொக்கு (லேவி 11:19; உபா 14:18)

(19) ராஜாளி (லேவி 11:19; உபா 14:18)

(20) புழுக்கொத்தி (லேவி 11:19; உபா 14:18)

(21) வௌவால் (லேவி 11:19; உபா 14:18)

10. பறக்கிறவைகளில் ஊர்வன யாவும் அவர்களுக்கு அசுத்தமாயிருக்கிறது; அவைகள் புசிக்கத்தகாதவைகள். சுத்தமான பறவைகள் யாவையும் அவர்கள் புசிக்கலாம். (உபா 14:19-20)

11. தானாய் இறந்துபோனதொன்றையும் புசிக்ககூடாது (உபா 14:21).

12. தங்கள் வாசல்களில் இருக்கிற பரதேசிக்கு அதைப் புசிக்கக் கொடுக்கலாம்; அல்லது அந்நியனுக்கு அதை விற்றுப்போடலாம்.

13. வெள்ளாட்டுக்குட்டியை அதின் தாயின் பாலிலே சமைக்ககூடாது. (யாத் 23:19; யாத் 34:26; உபா 14:21).

பழைய ஏற்பாட்டுக்காலத்தில், புசிக்கத்தகாதவைகள் என்று மோசே தடைபண்ணின பட்சிகளில் ஒரு சிலவற்றை, இக்காலத்தில் இஸ்ரவேல் ஜனத்தார் புசிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தானான் இறந்துபோனது ஒன்றையும் புசிக்கக்கூடாது. ஏனெனில் இதன் இரத்தம் இதிலிருந்து பிரிக்கப்படவில்லை. இரத்தம் சிந்தப்படாமல் இந்த மிருகமோ அல்லது பறவையோ தானாய் செத்துப்போயிற்று. அதன் இரத்தம் செத்துப்போன மிருகத்தின் சரீரத்திலிருக்கிறது. மேலும் செத்துப்போன மிருகம் யூதர்களுக்கு சடங்காச்சார பிரகாரமாக அசுத்தமாயிருக்கிறது.

லேவி 22:8 ஆவது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கும் பிரமாணம் இங்கு மறுபடியும் சொல்லப்படுகிறது. இறந்துபோனதன் உடலை என்ன செய்ய வேண்டும் என்பதும் இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் தேவனுக்குப் பரிசுத்தமானவர்கள். போஜனம் பண்ணும் காரியத்திலும், பரிசுத்தமாக இருப்பதிலும் இஸ்ரவேலர்கள் புறஜாதியாரை விட்டு வேறுபிரிக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும். தானாய் இறந்துபோனதை இஸ்ரவேல் புத்திரர் புசிக்கக்கூடாது. ஆனால் அதை பரதேசிக்குப் புசிக்கக்கொடுக்கலாம் அல்லது அதை அந்நியனுக்கு விற்றுப்போடலாம். (லேவி 17:15; லேவி 24:22).

"உங்களுக்கு ஆகாரத்துக்கான ஒரு மிருகம் செத்தால், அதின் உடலைத் தொடுகிறவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான். அதின் மாம்சத்தைப் புசித்தவன் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன்; அவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; அதின் உடலை எடுத்துப்போனவனும் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன்; அவனும் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்" (லேவி 11:39,40).

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு இதுபற்றிச் சொல்லும்போது, "தானாய் இறந்துபோனதொன்றையும் புசிக்கவேண்டாம்; உங்கள் வாசல்களில் இருக்கிற பரதேசிக்கு அதைப் புசிக்கக்கொடுக்கலாம்; அல்லது அந்நியனுக்கு அதை விற்றுப்போடலாம்; நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனங்கள். வெள்ளாட்டுக்குட்டியை அதின் தாயின் பாலிலே சமைக்கவேண்டாம்" (உபா 14:21) என்று சொல்லுகிறார்.

வெள்ளாட்டுக்குட்டியை அதின் தாயின் பாலிலே சமைப்பது, விக்கிரகாராதனையோடு சம்பந்தப்பட்டதாகும். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரருக்கு இது தடைபண்ணப்பட்டிருக்கிறது.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு புசிக்கத்தகுந்த, புசிக்கத்தகாத போஜனங்களைப்பற்றிய பிரமாணத்தைச் சொல்லுகிறார். இந்தப் பிரமாணம் யூதருக்கு மாத்திரமே பொருந்தும் என்றும், இது புறஜாதியாருக்கு பொருந்தாது என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

ஏனெனில் மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு இந்தப் பிரமாணத்தைப்பற்றிச் சொல்லும்போது, "தானாய் இறந்துபோனதொன்றையும் புசிக்கவேண்டாம்; உங்கள் வாசல்களில் இருக்கிற பரதேசிக்கு அதைப் புசிக்கக்கொடுக்கலாம்" என்று சொல்லுகிறார். அல்லது தானாய் செத்துப்போனதை இஸ்ரவேல் புத்திரர் அந்நியனுக்கு விற்றுப்போடலாம் என்றும் மோசே சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு, பழைய ஏற்பாட்டுக்காலத்தில் சொன்ன பிரமாணம், புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு சொல்லப்படவில்லை என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

"தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல" (1தீமோ 4:4). இதுவே புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளுக்கு சொல்லப்பட்டிருக்கிற புதிய பிரமாணம்.

தசமபாகம்
உபா 14:22-29

உபா 14:22. நீ உன் தேவனாகிய கர்த்தருக்கு எப்பொழுதும் பயந்திருக்கப் பழகும்படிக்கும், வருஷந்தோறும் நீ விதைக்கிற விதைப்பினாலே வயலில் விளையும் எல்லாப்பலனிலும் தசமபாகத்தைப் பிரித்து,

உபா 14:23. உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே, உன் தானியத்திலும் உன் திராட்சரசத்திலும் உன் எண்ணெயிலும் தசமபாகத்தையும் உன் ஆடுமாடுகளின் தலையீற்றுகளையும் அவருடைய சந்நிதியில் புசிப்பாயாக.

உபா 14:24. உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கும் காலத்தில், உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொண்ட ஸ்தானம் உனக்கு வெகு தூரமாயிருக்கிறதினால், வழிப்பிரயாணத்தின் வெகு தொலையினிமித்தம், நீ அதைக் கொண்டுபோகக்கூடாதிருக்குமானால்,

உபா 14:25. அதைப் பணமாக்கி, பணமுடிப்பை உன் கையிலே பிடித்துக்கொண்டு, உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்துகொண்ட ஸ்தலத்திற்குப் போய்,

உபா 14:26. அங்கே உன் இஷ்டப்படி ஆடுமாடு, திராட்சரசம், மதுபானம் முதலான சகலத்தையும் பணம்கொடுத்து வாங்கி, உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில், நீயும் உன் குடும்பத்தாரும் உன் வாசல்களில் இருக்கிற லேவியனும் புசித்துச் சந்தோஷப்படுவீர்களாக.

உபா 14:27. லேவியனுக்கு உன்னோடே பங்கும் சுதந்தரமும் இல்லாதபடியால் அவனைக் கைவிடாயாக.

உபா 14:28. மூன்றாம் வருஷத்தின் முடிவிலே அவ்வருஷத்தில் உனக்கு வந்த பலன் எல்லாவற்றிலும் தசமபாகத்தைப் பிரித்து, உன் வாசல்களில் வைக்கக்கடவாய்.

உபா 14:29. லேவியனுக்கு உன்னோடே பங்கும் சுதந்தரமும் இல்லாதபடியினாலே, அவனும், உன் வாசல்களில் இருக்கிற பரதேசியும், திக்கற்றவனும், விதவையும் வந்து புசித்துத் திருப்தியடைவார்களாக; அப்பொழுது உன் கை செய்யும் வேலையிலெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு தசமபாகத்தைப்பற்றிய பிரமாணத்தை சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர், தங்கள் வயலில் விளையும் எல்லா பலனிலும் கர்த்தருக்கு தசமபாகம் செலுத்தவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் இரண்டுதரம் தசமபாகம் செலுத்தவேண்டும் என்று மோசே சொல்லுகிறார்.

ஐந்தில் ஒரு பங்கு கர்த்தருக்குரியது. மீதமுள்ள நான்கு பங்கு நமக்குரியது. தசமபாகத்தை செலுத்தவேண்டிய முறையைப்பற்றி மோசே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீ உன் தேவனாகிய கர்த்தருக்கு எப்பொழுதும் பயந்திருக்கப் பழகும்படிக்கும், வருஷந்தோறும் நீ விதைக்கிற விதைப்பினாலே வயலில் விளையும் எல்லாப்பலனிலும் தசமபாகத்தைப் பிரித்து, உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே, உன் தானியத்திலும் உன் திராட்சரசத்திலும் உன் எண்ணெயிலும் தசமபாகத்தையும் உன் ஆடுமாடுகளின் தலையீற்றுகளையும் அவருடைய சந்நிதியில் புசிப்பாயாக" (உபா 14:22,23) என்று சொல்லுகிறார்.

"விளையும் எல்லாப்பலனிலும் தசமபாகம்" என்பது சாதாரணமாக லேவியருக்குக் கொடுக்கப்படும் தசமபாகம் அல்ல என்றும் இது இரண்டாவது தசமபாகம் என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். இந்தத் தசமபாகத்தைக் கொடுக்கிறவரும் பயன்படுத்திக் கொள்ளலாம். லேவியருக்குரிய தசமபாகத்தை லேவியர் மட்டுமே பயன்படுத்த வேண்டும். (லேவி 27; எண் 18). சபையார் கூடிவரும்போது ஏற்படும் செலவுகளைச் சரி செய்வதற்காக இரண்டாம் தசமபாகம் பயன்படுத்தப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரர் தசமபாகங்களை, தமது நாமம் விளங்கும்படி கர்த்தர் தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திற்கு கொண்டு வரவேண்டும். ஒருவேளை இஸ்ரவேல் புத்திரர் வாசம்பண்ணுகிற ஸ்தானமும், கர்த்தர் தெரிந்துகொள்கிற ஸ்தானமும் ஒன்றுக்கொன்று வெகுதூரத்தில் இருக்கும்போது, இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் தசமபாகத்தை எவ்வாறு செலுத்துவது என்பது பற்றியும் மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கும் காலத்தில், உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொண்ட ஸ்தானம் உனக்கு வெகு தூரமாயிருக்கிறதினால், வழிப்பிரயாணத்தின் வெகு தொலையினிமித்தம், நீ அதைக் கொண்டுபோகக்கூடாதிருக்குமானால், அதைப் பணமாக்கி, பணமுடிப்பை உன் கையிலே பிடித்துக்கொண்டு, உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்துகொண்ட ஸ்தலத்திற்குப் போய், அங்கே உன் இஷ்டப்படி ஆடுமாடு, திராட்சரசம், மதுபானம் முதலான சகலத்தையும் பணம்கொடுத்து வாங்கி, உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில், நீயும் உன் குடும்பத்தாரும் உன் வாசல்களில் இருக்கிற லேவியனும் புசித்துச் சந்தோஷப்படுவீர்களாக" (உபா 14:24-26) என்று சொல்லுகிறார்.

முதலாவது தசமபாகம் லேவியரை ஆதரிப்பதற்காக செலுத்தப்படுகிறது. "லேவியனுக்கு உன்னோடே பங்கும் சுதந்தரமும் இல்லாதபடியால் அவனைக் கைவிடாயாக" (உபா 14:27). லேவியருக்கு ஆதரவாக, முதலாவது தசமபாகத்தை செலுத்திய பின்பு, இஸ்ரவேல் புத்திரர் இரண்டாவது தசமபாகத்தையும் செலுத்தவேண்டும்.

"லேவியனுக்கு உன்னோடே பங்கும் சுதந்தரமும் இல்லாதபடியினாலே, அவனும், உன் வாசல்களில் இருக்கிற பரதேசியும், திக்கற்றவனும், விதவையும் வந்து புசித்துத் திர்ப்தியடைவார்களாக; அப்பொழுது உன் கை செய்யும் வேலையிலெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார்" (உபா 14:29) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

மோசே இங்கு சொல்லுகிற தசமபாகம் மூன்றாவது தசமபாகம் என்றும், இந்த தசமபாகத்தை, லேவியர், பரதேசி, திக்கற்றவன், விதவை ஆகியோருக்கு பிரித்துக்கொடுக்கவேண்டும் என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு இதுபற்றிச் சொல்லும்போது, "மூன்றாம் வருஷத்தின் முடிவிலே அவ்வருஷத்தில் உனக்கு வந்த பலன் எல்லாவற்றிலும் தசமபாகத்தைப் பிரித்து, உன் வாசல்களில் வைக்கக்கடவாய்" (உபா 14:28) என்று சொல்லுகிறார்.

மோசே இந்த வசனப்பகுதியில் மூன்றுவிதமான தசமபாகங்களைப்பற்றிச் சொல்லுகிறார் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். அதன் விவரம் வருமாறு :

1. முதலாவது தசமபாகம் - லேவியருக்குக் கொடுக்கப்படுகிறது. (லேவி 27; எண் 18; உபா 14:27). இது வருஷத்திற்கு ஒரு முறை கொடுக்கப்படுகிறது.

2. இரண்டாவது தசமபாகம் - இந்தத் தசமபாகத்தைக் கொடுக்கிறவருக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் இது செலவு பண்ணப்படும். பண்டிகைகளில் ஏற்படும் செலவுகளுக்காக இது செலவு பண்ணப்படுகிறது. ஆகையினால் பண்டிகைக்கு போவதற்கு பணம் இல்லை என்கிற குறை அவருக்கு இருக்காது (உபா 14:22-26; உபா 12:11,21). இதுவும் வருஷத்திற்கு ஒருமுறை பிரித்துக் கொடுக்கப்படுகிறது.

3. மூன்றாவது தசமபாகம் - இது லேவியருக்கும், பரதேசிக்கும், திக்கற்றவருக்கும், விதவைகளுக்கும் கொடுக்கப்படுகிறது. இது ஏழைகளுக்காகக் கொடுக்கப்படும் விசேஷித்த தசமபாகமாகும். (உபா 14:28-29). மூன்று வருஷத்திற்கு ஒருமுறை இது பிரித்துக் கொடுக்கப்படும். முதல் இரண்டு தசமபாகங்களும் தேவனுடைய வாசஸ்தலத்திற்கு எடுத்துச் செல்லப்படும். மூன்றாவது தசமபாகமோ அவர்களுடைய வீடுகளிலேயே மூன்று வருஷம் முழுவதும் செலவு பண்ணப்படும்.

இஸ்ரவேல் புத்திரர் மூன்று விதமான தசமபாகங்களைச் செலுத்த வேண்டும். அப்போது கர்த்தர் அவர்களை அதிகமாக ஆசீர்வதிப்பார்.

15 அதிகாரம்

மோசே இந்த அதிகாரத்தில் கடன்பட்டவனை விடுதலைபண்ணுவது பற்றியும் (உபா 15:1-6), எளியவனுக்கு கடன்கொடுப்பது பற்றியும் (உபா 15:7-11) சொல்லுகிறார்.

விலைப்பட்டவனுக்கு ஏழாம் வருஷத்திலே விடுதலை கொடுக்கப்படவேண்டும் (உபா 15:12-18). இஸ்ரவேல் புத்திரருடைய ஆடு மாடுகளின் தலையீற்றாகிய ஆணையெல்லாம் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு பரிசுத்தமாக்கவேண்டும் (உபா 15:19-23).

கடன்பட்டவனுக்கு விடுதலை
உபா 15:1-6

உபா 15:1. ஏழாம் வருஷத்தின் முடிவிலே விடுதலைபண்ணுவாயாக.

உபா 15:2. விடுதலையின் விபரமாவது: பிறனுக்குக் கடன்கொடுத்தவன் எவனும், கர்த்தர் நியமித்த விடுதலை கூறப்பட்டபடியால், அந்தக் கடனைப் பிறன் கையிலாகிலும் தன் சகோதரன் கையிலாகிலும் தண்டாமல் விட்டுவிடக்கடவன்.

உபா 15:3. அந்நிய ஜாதியான் கையிலே நீ கடனைத் தண்டலாம்; உன் சகோதரனிடத்திலோ உனக்கு வரவேண்டியதை உன் கை விட்டுவிடக்கடவது.

உபா 15:4. எளியவன் உனக்குள் இல்லாதிருக்கும் படியாக இப்படிச் செய்யவேண்டும்; இன்று நான் உனக்குக் கற்பிக்கிற எல்லாக் கற்பனைகளின்படியும் நீ செய்யும்படி, உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்பாயானால்,

உபா 15:5. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரிக்கும்படி கொடுக்கும் தேசத்தில், உன்னை மேன்மேலும் ஆசீர்வதிப்பார்.

உபா 15:6. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி உன்னை ஆசீர்வதிப்பதினால், நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்குவதில்லை. நீ அநேகம் ஜாதிகளை ஆளுவாய், உன்னையோ அவர்கள் ஆளுவதில்லை.

கடன்பட்டவர்களை விடுதலைபண்ணும் பிரமாணத்தைப்பற்றி மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். ஏழாம் வருஷத்தின் முடிவிலே கடன்பட்டவர்களையெல்லாம் விடுதலைபண்ணவேண்டும் (உபா 15:1).

யாத் 23:10-11; லேவி 25 ஆகிய வேதவசனப் பகுதிகளில் சொல்லப்பட்டிருக்கும் ஓய்வு வருஷம் இங்கு மறுபடியும் சொல்லப்பட்டிருக்கிறது. ஏழைகளின் தேவைகளைப் பற்றி உபா 14:28-29 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதியில் அவர்களுடைய கடன்களை விடுதலை பண்ணுவது சம்பந்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. (உபா 15:1-18). இந்த வாக்கியத்தில் "ஏழாம் வருஷத்தின் முடிவிலே" என்னும் வாக்கியத்திற்கு ஏழாம் வருஷம் ஆரம்பமாகும்போது என்று பொருள். (யாத் 23:10-11; லேவி 25:3-4).

யாத் 23:10,11 ஆகிய வேதவசனப்பகுதியில் கூறப்பட்டிருக்கும் ஓய்வு வருஷத்தைப்பற்றிய விவரம் வருமாறு :

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஓய்வு வருஷ பிரமாணத்தை சொல்லுகிறார். "ஆறுவருஷம் நீ உன் நிலத்தில் பயிரிட்டு, அதின் பலனைச் சேர்த்துக்கொள். ஏழாம் வருஷத்தில் உன் ஜனத்திலுள்ள எளியவர்கள் புசிக்கவும், மீதியானதை வெளியின் ஜெந்துக்கள் தின்னவும், அந்த நிலம் சும்மா கிடக்க விட்டுவிடுவாயாக; உன் திராட்சத்தோட்டத்தையும் உன் ஒலிவத்தோப்பையும் அப்படியே செய்வாயாக" (யாத் 23:10,11) என்பது கர்த்தருடைய ஓய்வு வருஷ பிரமாணமாகும்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் நிலத்தில் ஆறுவருஷம் பயிரிடலாம். ஏழாவது வருஷத்தின் ஆரம்பத்தில் அவர்கள் தங்கள் நிலத்தை உழவோ அல்லது பயிரிடவோ கூடாது. கர்த்தருடைய பிரமாணத்தை மீறி அவர்கள் ஏழாம் வருஷத்தின் ஆரம்பத்தில் உழுது பயிரிட்டால், அந்த வருஷத்தின் முடிவிலே அவர்களுக்கு ஆசீர்வாதமான அறுவடை கிடைக்காது.

கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். அந்த தேசத்தின் செழிப்பைப்பற்றிச் சொல்லுவதற்காக, கர்த்தர் ஓய்வு வருஷத்தைப்பற்றிச் சொல்லுகிறார். அவர்களுடைய நிலம் ஏழாம் வருஷத்திலே ஓய்வாகயிருந்தாலும், அவர்களுக்கு தானியம் குறைவுபடாது.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் குடியிருக்கும்போது, அந்த தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசமாகயிருந்தாலும், அவர்கள் தங்கள் போஜனத்திற்கு தங்கள் நிலத்தின்மீது நம்பிக்கை வைக்கக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் நிலத்தை சார்ந்து ஜீவிக்காமல், கர்த்தரையே சார்ந்து ஜீவிக்கவேண்டும்.

வானமும் பூமியும் கர்த்தருடையது. கர்த்தருடைய கிருபையினாலேயே பூமியில் விளைச்சல் உண்டாகிறது. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் வயலில் விதைத்த, தங்கள் பயிர் வேலைகளின் முதற்பலனை கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்தவேண்டும். கர்த்தரே மழையைப் பெய்யப்பண்ணுகிறவர். அவரே விளைச்சலைக் கொடுக்கிறவர்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஓய்வுவருஷ பிரமாணத்தைக் கொடுத்திருந்தாலும், பிற்காலத்தில் அவர்கள் இந்தப் பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல், கர்த்தர் தங்களுக்கு வாக்குப்பண்ணின ஆசீர்வாதங்களை இழந்துபோகிறார்கள்.

"கர்த்தர் எரேமியாவின் வாயினாலே சொன்ன வார்த்தை நிறைவேறும்படிக்கு, தேசம் தன்னுடைய ஓய்வு வருஷங்களை இரம்மியமாய் அநுபவித்துத் தீருமட்டும், அது பாழாய்க்கிடந்த நாளெல்லாம், அதாவது, எழுபதுவருஷம் முடியுமட்டும் ஓய்ந்திருந்தது" (2நாளா 36:21).

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் நிலத்திலே பயிரிட்டாலும், அந்த நிலத்திலே தானியம் விளைந்தாலும், கர்த்தரே அவர்களை போஷிக்கிறவர். தேவனுடைய தெய்வீக பராமரிப்பு அவர்களுக்கு இல்லையென்றால், அவர்களுக்கு போஜனமுமில்லை. இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பயிர் நிலத்தை நம்பாமல், கர்த்தர்மீதும், கர்த்தருடைய தெய்வீக பராமரிப்பின்மீதும் நம்பிக்கை வைக்கவேண்டும்.

கர்த்தர் பத்துக்கட்டளைகளில் நான்காவது கட்டளையாக "ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக" (யாத் 20:8) என்று சொல்லியிருக்கிறார். கர்த்தர் தம்முடைய நான்காவது கட்டளையை இங்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார்.

"ஆறுநாள் உன் வேலையைச் செய்து, ஏழாம்நாளிலே உன் மாடும் உன் கழுதையும் இளைப்பாறவும், உன் அடிமைப்பெண்ணின் பிள்ளையும் அந்நியனும் இளைப்பாறவும் ஓய்ந்திருப்பாயாக" (யாத் 23:12) என்பது கர்த்தருடைய ஓய்வுநாள் பிரமாணமாகும்.

ஏழாம்நாள் ஓய்வுநாளாக அனுசரிக்கப்படுகிறது. ஒவ்வொரு வருஷமும் ஓய்வுநாள் ஒருகிழமை பிந்திவரும். ஏனெனில் பெந்தெகொஸ்தே நாளில் கூடுதலாக ஒரு ஓய்வுநாள் அனுசரிக்கப்படும்.

அவர்களுடைய மாடும், அவர்களுடைய கழுதையும் இளைப்பாறவேண்டும். அவர்களுடைய அடிமைப்பெண்ணின் பிள்ளையும் அந்நியனும் இளைப்பாறவும் ஓய்ந்திருக்கவும் வேண்டும். ஓய்வுநாள் அனுசரிப்பதின் காரணம் இதுதான். ஒவ்வொரு சிருஷ்டியும் தாங்கள் செய்த வேலையின் களைப்பு தீர ஓய்வு எடுக்க வேண்டும். அடுத்த வேலை செய்வதற்கு ஓய்வெடுத்து ஆயத்தமாக இருக்க வேண்டும்.

மனுஷன் ஆறுநாட்கள் வேலைசெய்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருக்க வேண்டுமென்பது தேவனுடைய பிரமாணம். பழைய ஏற்பாட்டில் தேவன் ஓய்வுநாளை மனுஷனுக்குத் தெரிந்தெடுத்தார். இது பழைய ஏற்பாட்டுப் பிரமாணம். புதிய ஏற்பாட்டில் தங்களுக்கு வசதியான ஓய்வுநாளை ஜனங்கள் தெரிந்துகொள்வதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. (ரோமர் 14:5-6; கொலோ 2:14-16). கிறிஸ்தவ விசுவாசிகள் வாரத்தின் முதலாம் நாளான ஞாயிற்றுக் கிழமையை ஓய்வுநாளாகத் தெரிந்தெடுத்து அதைப் பரிசுத்தப்படுத்துகிறார்கள்.

வேதபண்டிதர்களில் சிலர் கர்த்தருடைய ஓய்வுநாள் பிரமாணத்திற்கு புதிய விளக்கத்தை சொல்லுகிறார்கள். வாரத்தில் ஒரு நாளாகிய ஏழாம் நாளை ஓய்வுநாளாக ஆசரிப்பதற்கு பதிலாக, எல்லா நாளையும் ஓய்வுநாளாக ஆசரிக்கவேண்டும் என்று இவர்கள் சொல்லுகிறார்கள். வாரத்தில் ஏழாம்நாள் மாத்திரமல்ல, வாரத்தின் ஏழுநாட்களுமே பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டிய நாட்கள் ஆகும் என்பது இவர்களுடைய வியாக்கியானம்.

இஸ்ரவேல் புத்திரருக்கு ஏழாம் வருஷம் விடுதலையின் வருஷமாகயிருக்கிறது. இந்த வருஷத்திலே நிலத்திலே உழுது பயிர் செய்யக்கூடாது. நிலத்திற்கு ஓய்வு கொடுக்கவேண்டும். வேலை செய்கிறவர்களுக்கும் ஏழாம் வருஷத்திலே ஓய்வு கொடுக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரருக்கு ஏழாம் வருஷம் ஓய்வு வருஷமாக நியமிக்கப்பட்டிருக்கிறது.

ஏழாம் வருஷத்திலே செய்யவேண்டிய மேலும் சில காரியங்களைப்பற்றி கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் சொல்லியிருக்கிறார். ஏழாம் வருஷத்திலே கடன்பட்டவர்களை விடுதலைபண்ண வேண்டும். தாங்கள் வாங்கிய கடனை திரும்ப செலுத்த முடியாவிட்டாலும், ஏழாம் வருஷத்திலே, அவர்கள் வாங்கிய கடனுக்கு விடுதலை கொடுக்கவேண்டும்.

கடன்பட்டவர்களை விடுதலைபண்ணினாலும், அவர்கள் தங்கள் மனச்சாட்சியில் உணர்த்தப்பட்டு, தாங்கள் பட்ட கடனை திரும்ப செலுத்தவேண்டுமென்று விரும்பினால், அவர்கள் தாராளமாய் திரும்ப செலுத்தலாம். ஆனாலும் அவர்களுக்கு கடன்கொடுத்தவன் சட்டப்படி, கடன்பட்டவனிடத்திலிருந்து கடனை திரும்ப வசூலிக்க முடியாது.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு விடுதலையின் விவரத்தைப்பற்றி இவ்வாறு சொல்லுகிறார். "பிறனுக்குக் கடன்கொடுத்தவன் எவனும், கர்த்தர் நியமித்த விடுதலை கூறப்பட்டபடியால், அந்தக் கடனைப் பிறன் கையிலாகிலும் தன் சகோதரன் கையிலாகிலும் தண்டாமல் விட்டுவிடக்கடவன்" (உபா 15:2).

கர்த்தர் நியமித்த விடுதலையின் விவரமாவது :

1. முழு வருஷத்திற்கும் ஏழையினுடைய கடனைத் தண்டாமல் விட்டுவிட வேண்டும். (உபா 15:1-4).

2. இஸ்ரவேல் புத்திரர் இரக்கம் செய்ய கற்றுக் கொண்டு, ஏழைகள்மீது இரக்கம் காண்பிப்பார்கள். (உபா 15:7-11).

3. இஸ்ரவேல் புத்திரரின் சகோதர அன்பு புறஜாதியாருக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கும். (உபா 15:7-15).

4. ஒவ்வொரு ஏழாம் வருஷத்திலும் அடிமைகளை விடுதலை செய்ய வேண்டுமென்று தேவன் ஒரு குறித்த காலத்தை நியமித்திருக்கிறார். (உபா 15:12-18).

5. ஏழாம் வருஷம் ஓய்வு வருஷமாக இருக்கிறபடியினால், அந்த வருஷத்தை எந்தக் குறைவும் ஏற்படாதவாறு முதல் ஆறு வருஷங்களில் தானியங்களின் விளைச்சல் அதிகமாக இருக்கும். (யாத் 23:10-11; லேவி 25:2-4; உபா 15:4).

6. நிலம் ஒரு வருஷத்திற்கு ஓய்ந்திருக்கும். (யாத் 23:10-11; லேவி 25:3-4).

7. ஓய்வு வருஷத்தில் விளையும் தானியம் ஏழைகளுக்குக் கிடைக்கும். (யாத் 23:10-11; லேவி 25:5-7).

8. வேலையாட்களுக்கும், மிருக ஜீவன்களுக்கும் தங்கள் கடினமாக வேலையிலிருந்து ஒரு வருஷம் ஓய்வு கிடைக்கும். (யாத் 23:10-11; லேவி 25:5-6).

ஏழாம் வருஷம் ஒய்வு வருஷமாகயிருப்பதினால் இஸ்ரவேல் புத்திரர் விவசாய வேலைகளை செய்யமாட்டார்கள். தங்கள் விளைச்சல் நிலத்திற்கு ஒய்வுகொடுப்பார்கள். விவசாயம் நடைபெறவில்லையென்றால் விவசாயிக்கு வருமானமில்லை. அவரால் தான் பட்ட கடனை திரும்ப செலுத்த முடியாது. ஆகையினால் ஒய்வு வருஷமாகிய ஏழாம் வருஷத்தில் மாத்திரம், கடன்பட்டவர்களிடத்தில், அந்தக் கடனை தண்டாமல் விட்டுவிடவேண்டும் என்று வேதபண்டிதர்கள் இந்த வசனத்திற்கு வியாக்கியானம் சொல்லுகிறார்கள்.

ஏழாம் வருஷம் முடிந்த பின்பு, இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் தங்கள் நிலத்திலே உழுது பயிரிடுவார்கள். அந்த வருஷத்திலே அவர்களுக்கு அறுவடையும், வருமானமும் இருக்கும். அப்போது அவர்கள் பட்ட கடனை, அவர்களுடைய கையில் தண்டலாம் என்றும் வேதபண்டிதர்கள் இந்த வசனத்திற்கு விளக்கம் சொல்லுகிறார்கள்.

கடன் கொடுத்தவன், கடன்பட்டவனிடத்தில், ஒய்வு வருஷமாகிய ஏழாம் வருஷத்தில் மாத்திரம், கடனை தண்டக்கூடாது என்றும், ஒய்வு வருஷத்திற்கு முன்போ அல்லது அதற்கு பின்போ அந்தக் கடனை தண்டலாம் என்றும் வேதபண்டிதர்கள் இந்த வாக்கியத்திற்கு பொதுவான விளக்கம் சொல்லுகிறார்கள். கடனைத் தண்டுவது ஒய்வுவருஷத்திலே தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகிறது.

இந்த வசனத்திற்கு வேதபண்டிதர்களில் சிலர் வேறுவிதமாக விளக்கம் சொல்லுகிறார்கள். ஏழாம் வருஷமாகிய ஒய்வு வருஷத்திலே, கடன்பட்டவனுடைய கடன்தொகை முற்றிலுமாகவும், நிரந்தமாகவும் தள்ளுபடி பண்ணப்படும் என்றும், கடன்பட்டவன் ஏழாம் வருஷத்தில் நிரந்தரமாக விடுதலையாகிறான் என்றும் இந்த வாக்கியத்திற்கு சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் ஏழாம் நாளை கனம்பண்ணி பரிசுத்தம்பண்ணியதுபோல, ஏழாம் வருஷத்தையும் கனம்பண்ணி பரிசுத்தம்பண்ணியிருக்கிறார். ஏழாம் வருஷம் கர்த்தர் நியமித்த விடுதலையின் வருஷமாகயிருக்கிறது. கடன்பட்டவனால், கடனை திரும்ப செலுத்த முடியவில்லையென்றால், அவன் மேலும் மேலும் கடனாளியாவான். அவனுடைய தரித்திரம் அதிகரிக்கும். இஸ்ரவேல் புத்திரரில் ஒருவரும் தரித்திரத்தில் விழுந்துவிடக்கூடாது என்பதற்காக, ஒய்வுவருஷமாகிய ஏழாம் வருஷத்திலே அவர்கள் பட்ட கடனெல்லாம், முழுவதுமாகவும், நிரந்தரமாகவும் தள்ளுபடி பண்ணப்படுகிறது.

கடனைத்தண்டுவதற்கு, மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு பிரமாணத்தையும், அந்நிய ஜாதியாருக்கு வேறொரு பிரமாணத்தையும் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

"அந்நிய ஜாதியான் கையிலே நீ கடனைத் தண்டலாம்; உன் சகோதரனிடத்திலோ உனக்கு வரவேண்டியதை உன் கை விட்டுவிடக்கடவது" (உபா 15:3).

அந்நியன் இஸ்ரவேல் தேசத்தானல்ல. ஆகையினால் இஸ்ரவேலருக்கு நியமிக்கப் பட்டிருக்கும் பிரமாணத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்னும் நிர்ப்பந்தம் அவனுக்கு இல்லை. அவனுக்கு மோசேயின் பிரமாணத்தினால் உண்டாகும் ஆசீர்வாதம் எதுவும் வராது. அவனுடைய கடனும் தள்ளுபடி பண்ணப்படமாட்டாது. இதனால் புறஜாதி ஜனங்கள் தேவனிடத்திற்கும், அவருடைய ஜீவ வழிக்கும் மனம்மாறி வருவதற்கு வாய்ப்பு உண்டாகிறது.

ஏழாம் வருஷத்திலே கடன் தள்ளுபடி பண்ணப்பட்டதினால், கடன்பட்டவன், கடன்வாங்காதவன் போல விடுதலையாயிருக்கிறான். "எளியவன் உனக்குள் இல்லாதிருக்கும் படியாக இப்படிச்செய்யவேண்டும்" (உபா 15:4) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் விடுதலையின் பிரமாணத்திற்கு கீழ்ப்படியும்போது, அவர்களுக்கு ஆசீர்வாதமுண்டாகும். மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நான் உனக்குக் கற்பிக்கிற எல்லாக் கற்பனைகளின்படியும் நீ செய்யும்படி, உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரிக்கும்படி கொடுக்கும் தேசத்தில், உன்னை மேன்மேலும் ஆசீர்வதிப்பார்" (உபா 15:4,5) என்றும்,

"உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி உன்னை ஆசீர்வதிப்பதினால், நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்குவதில்லை. நீ அநேகம் ஜாதிகளை ஆளுவாய், உன்னையோ அவர்கள் ஆளுவதில்லை" (உபா 15:6) என்றும் சொல்லுகிறார்.

கடன்கொடுத்தவன், ஏழாம் வருஷத்திலே, கடன்பட்டவனுக்கு அந்தக் கடனை தள்ளுபடி பண்ணும்போது, கடன் கொடுத்தவனுக்கு பொருளாதார நஷ்டம் உண்டாகும். ஆனாலும் அவன் கடனை தள்ளுபடிபண்ணியது கர்த்தருடைய பிரமாணமாகயிருப்பதினால், அவனுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை கர்த்தர் ஈடு செய்வார். கடனை தள்ளுபடி செய்கிறவனுடைய கைகளின் பிரயாசங்களையெல்லாம் கர்த்தர் ஆசீர்வதிப்பார். ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன்கொடுக்கிறான். தான் பட்ட கடனை கர்த்தர் திரும்ப செலுத்துவார்.

எளியவனுக்கு கல்ன்கொடுப்பாயாக உபா 15:7-11

உபா 15:7. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தின் எந்த வாசலிலும் உன் சகோதரரில் எளியவனான ஒருவன் இருந்தால், எளியவனாகிய உன் சகோதரனுக்கு உன் இருதயத்தை நீ கடினமாக்காமலும், உன் கையை மூடாமலும்,

உபா 15:8. அவனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறந்து, அவனுடைய அவசரத்தினிமித்தம் அவனுக்குத் தேவையானதைக் கடன்கொடுப்பாயாக.

உபா 15:9. விடுதலை வருஷமாகிய ஏழாம் வருஷம் கிட்டியிருக்கிறதென்று சொல்லி, உன் இருதயத்திலே பொல்லாத நினைவு கொண்டு, உன் ஏழைச் சகோதரனுக்குக் கொடாமல் மறுத்து, அவன்மேல் வன்கண்வைக்காதபடிக்கும், அவன் உன்னைக் குறித்துக் கர்த்தரை நோக்கி அபயமிடாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு; அப்படிச் செய்வாயானால் அது உனக்குப் பாவமாயிருக்கும்.

உபா 15:10. அவனுக்குத் தாராளமாய்க் கொடுப்பாயாக; அவனுக்குக் கொடுக்கும்போது உன் இருதயம் விசனப்படாதிருப்பாயாக; அதினிமித்தமாக உன் தேவனாகிய கர்த்தர் உன்னுடைய எல்லாக் கிரியைகளிலும், நீ கையிட்டுச் செய்யும் எல்லாக் காரியங்களிலும் உன்னை ஆசீர்வதிப்பார்.

உபா 15:11. தேசத்திலே எளியவர்கள் இல்லாதிருப்பதில்லை; ஆகையால் உன் தேசத்தில் சிறுமைப்பட்டவனும் எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறக்கவேண்டும் என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்.

கடன்பட்டவனுடைய கடன்களெல்லாம் ஏழாம் வருஷத்திலே தள்ளுபடி பண்ணப்படுகிறது. இதனால் இஸ்ரவேல் ஜனங்கள் பொதுவாக ஏழைகளுக்கு கடன்கொடுக்க தயங்குவார்கள். தாங்கள் கொடுத்த கடனை தண்டமுடியாமல் போய்விடும் என்னும் எண்ணம் கடன்கொடுக்கிறவர்களுடைய மனதிலே இருக்கும்.

தரித்திரருக்கு பொருளாதார உதவி தேவைப்படும். ஐசுவரியவான்கள் ஏழைகளுக்கு கடன்கொடுத்து உதவிசெய்யவேண்டும். விடுதலையின் வருஷத்தைப்பற்றிய பிரமாணத்தை நினைத்து, ஐசுவரியவான்கள் தரித்திரருக்கு கடன்கொடுக்காமல் இருந்துவிடக்கூடாது.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தின் எந்த வாசலிலும் உன் சகோதரரில் எளியவனான ஒருவன் இருந்தால், எளியவனாகிய உன் சகோதரனுக்கு உன் இருதயத்தை நீ கடினமாக்காமலும், உன் கையை மூடாமலும், அவனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறந்து, அவனுடைய அவசரத்தினிமித்தம் அவனுக்குத் தேவையானதைக் கடன்கொடுப்பாயாக" (உபா 15:7,8) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமே தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து ஜீவித்தால், அவர்களுக்குள் எளியவன் ஒருவனும் இருக்கமாட்டான். அவர்களில் சிலர்தேவனுடைய கற்பனைகளைக் கைக் கொள்ளாமற் போனதினால், அவர்களுடைய ஜீவியத்தில் குறைவும், வறுமையும் காணப்பட்டது. அப்பேர்ப்பட்டவர்களுக்குக்கூட கர்த்தர் உதவி புரிய விரும்புகிறார். தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கிறவர்கள் அவர்களுடைய எளிமையிலும், வறுமையிலும் அவர்களுக்கு உதவி புரிய வேண்டும் (உபா 15:7-11, மாற்கு 14:7)

எளியவனுக்கு நம்முடைய இருதயத்தைக் கடினப்படுத்தக்கூடாது. கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கும் ஆசீர்வாதங்களை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டும். மற்றவர்களுக்கு உதவி புரியவில்லையென்றால், தேவனுடைய ஆசீர்வாதம் நின்றுபோகும். (உபா 15:7,9-10).

கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். கர்த்தர் கானான் தேசத்தையும், அதிலே வாசம்பண்ணுகிற இஸ்ரவேல் ஜனத்தாரையும் அதிகமாய் ஆசீர்வதித்திருக்கிறார். ஆனாலும் கானான் தேசத்திலே எளியவர்களும் இருக்கிறார்கள். அந்த தேசத்தில் கடன் வாங்குகிறவர்கள் எப்போதுமே இருப்பார்கள்.

இஸ்ரவேலருக்குள்ளே எளியவன் இல்லாதிருக்கும்படியாக, ஏழாம் வருஷத்திலே விடுதலை அறிவிக்கப்படுகிறது. கடன்கள் தள்ளுபடி பண்ணப்படுகிறது. ஆனாலும் கானான் தேசத்திலிருந்து ஏழ்மையை முற்றிலுமாய் நீக்க முடியவில்லை. தேசத்தில் எப்போதுமே எளியவர்கள் இருக்கிறார்கள். கடன் வாங்குகிறவர்கள் எல்லா தேசங்களிலும், எல்லா காலங்களிலும் இருப்பார்கள்.

எளியவர்களுக்கு பொருளாதார உதவி தேவைப்படும்போது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கையை தாராளமாய்த் திறந்து, எளியவர்களுடைய அவசரத்தினிமித்தம், அவர்களுக்கு தேவையானதை கடன்கொடுக்கவேண்டும். கடன்கொடுக்கும்போது தாராளமாய்க் கொடுக்க வேண்டுமென்றும், தரித்திரனுக்கு தேவையானதையெல்லாம் கடனாய்க் கொடுக்கவேண்டும் என்றும் மோசே சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் ஏழைகளுக்கு இரங்கவேண்டும். அவர்களுக்கு இலவசமாக உதவி செய்யவேண்டும். சில சமயங்களில் எல்லோராலும், எல்லோருக்கும் இலவசமாய் உதவி செய்ய முடியாது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், வசதி உள்ளவர்கள் எளியவர்களுக்கு கடன்கொடுத்து உதவிசெய்யலாம்.

இலவசமாய்க் கொடுப்பதைவிட கடனாய்க்கொடுப்பது ஞானமானது. இலவசமாய்ப் பெற்றுக்கொண்டவர்கள் மத்தியில் சோம்பல்தனம் அதிகரிக்கும். கடன்பட்டவர்களோ, தாங்கள் பட்ட கடனை திரும்ப செலுத்தவேண்டும் என்னும் அக்கரையில் கடினமாய் உழைப்பார்கள். சுறுசுறுப்பாய் வேலை செய்வார்கள். வாங்கிய கடனை அடைக்கவேண்டும் என்னும் உண்மையும் கண்ணியமும் அவர்களுடைய மனதில் இருக்கும்.

எளியவர்களுக்கு கடன்கொடுக்க வேண்டுமென்பது கர்த்தருடைய பிரமாணம். பல சமயங்களில் கடன் வாங்குகிறவர்களைப்பற்றி நமக்கு சந்தேகம் வந்துவிடும். வாங்கிய கடனை அவர்களால் திரும்ப செலுத்த முடியாமல் போய்விடுமோ என்னும் எண்ணம் கடன்கொடுத்தவருடைய மனதிலே உண்டாகும். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், கடன்கொடுக்கிறவர்கள், கடன்வாங்குகிறவர்களை நம்பாவிட்டாலும், அவர்கள் கர்த்தரை நம்பி கடன்கொடுக்கவேண்டும்.

எளியவனுடைய அவசரத்தினிமித்தம் அவனுக்கு தேவையான கடன்கொடுப்பாயாக என்று கர்த்தர் கட்டளையிடுகிறார். மோசே கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து எளியவர்களுக்கு கடன்கொடுக்கும்போது, கடன்கொடுக்கிறவருக்கு ஒரு நஷ்டமும் ஏற்படாது. கர்த்தரை நம்புகிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள்.

"உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மைசெய்யுங்கள், கைம்மாறு கருதாமல் கடன்கொடுங்கள்; அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்; அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே" (லூக் 6:35).

"நீ விருந்துபண்ணும்போது ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் அழைப்பாயாக. அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய்; அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள்; நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும் என்றார்" (லூக் 14:13,14).

நம்மிடத்தில் கடன்பட்டவர்கள், நமக்கு கடனை திரும்ப செலுத்தாவிட்டாலும், கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரம், நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் நமக்கு பதில் செய்யப்படும்.

ஏழாம் வருஷமாகிய விடுதலை வருஷத்திலே கடன்கள் தள்ளுபடி பண்ணப்படும். ஆகையினால் ஏழாம் வருஷம் கிட்டி வரும்போது, அநேகர் கடன்கொடுப்பதை நிறுத்திவிடுவார்கள். தாங்கள் கொடுக்கும் கடனெல்லாம் ஏழாம் வருஷத்தில் தள்ளுபடி ஆகிவிடும் என்று நினைத்து, ஏழாம் வருஷம் நெருங்க நெருங்க, கடன்கொடுப்பதை குறைத்துக்கொள்வார்கள்.

மோசே இதுபற்றியும் இஸ்ரவேல் புத்திரருக்கு இவ்வாறு சொல்லுகிறார். "விடுதலை வருஷமாகிய ஏழாம் வருஷம் கிட்டியிருக்கிறதென்று சொல்லி, உன் இருதயத்திலே பொல்லாத நினைவு கொண்டு, உன் ஏழைச் சகோதரனுக்குக் கொடாமல் மறுத்து, அவன்மேல் வன்கண்வைக்காதபடிக்கும், அவன் உன்னைக் குறித்துக் கர்த்தரை நோக்கி அபயமிடாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு; அப்படிச் செய்வாயானால் அது உனக்குப் பாவமாயிருக்கும்" (உபா 15:9) என்று மோசே சொல்லுகிறார்.

ஏழாம் வருஷம் விடுதலையின் வருஷமாகும். இந்த வருஷத்தில் யாரும் வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்தமாட்டார்கள். இது விடுதலை வருஷத்தின் பிரமாணம். இந்த வருஷத்தில் ஏழைச் சகோதரனுக்கு உதவி தேவைப்பட்டால் அவனுக்குக் கொடுத்து உதவி புரிய வேண்டும். அவன் திரும்பத் தரமாட்டான் என்று பொல்லாத நினைவு கொண்டு, அவனுக்கு உதவி புரிய மறுத்துவிடக்கூடாது. (உபா 13:13)

எளியவனுக்கு கடன்கொடுக்கும்போது கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார். மோசே இதுபற்றிச் சொல்லும்போது, "அவனுக்குத் தாராளமாய்க் கொடுப்பாயாக; அவனுக்குக் கொடுக்கும்போது உன் இருதயம் விசனப்படாதிருப்பாயாக; அதினிமித்தமாக உன் தேவனாகிய கர்த்தர் உன்னுடைய எல்லாக் கிரியைகளிலும், நீ கையிட்டுச் செய்யும் எல்லாக் காரியங்களிலும் உன்னை ஆசீர்வதிப்பார்" (உபா 15:10) என்று சொல்லுகிறார்.

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் கர்த்தர் பிரியமாயிருக்கிறார். (2கொரி 9:7). உற்சாகமாகவும், மனப்பூர்வமாகவும் கொடுக்கிறவர்களைக் கர்த்தர் ஆசீர்வதிக்கிறார். தனக்கு வெகுமதி கிடைக்கும் அல்லது பேரும் புகழும் கிடைக்கும் என்று நினைத்து, உதவி புரிகிறவன் அவனுடைய பலனை ஏற்கெனவே அடைந்து விட்டான். (மத் 6:1-4).

எளியவனுக்கு கடன்கொடுக்கவேண்டும் என்னும் செய்தியை மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு ஆலோசனையாகச்சொல்லாமல், அதை தன்னுடைய கட்டளையாக சொல்லுகிறார். அவர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "தேசத்திலே எளியவர்கள் இல்லாதிருப்பதில்லை; ஆகையால் உன் தேசத்தில் சிறுமைப்பட்டவனும் எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறக்கவேண்டும் என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்" (உபா 15:11) என்று சொல்லுகிறார்.

ஒருவன் எளியவனாக இருப்பதற்கு பல காரணங்கள் உள்ளன. திறமைக்குறைவு, விசுவாசக்குறைவு, வேலை செய்யாமல் சோம்பேறியாயிருப்பது, வரும் வாய்ப்புக்களைச் சாதகமாகப் பயன்படுத்தாமல் இருப்பது ஆகியவை ஒருவன் ஏழையாக இருப்பதற்குக் காரணமாகும்.

விலைப்பட்டவனுக்கு விடுதலை உபா 15:12-18

உபா 15:12. உன் சகோதரனாகிய எபிரெய புருஷனாகிலும் எபிரெய ஸ்திரீயாகிலும் உனக்கு விலைப்பட்டால், ஆறுவருஷம் உன்னிடத்தில் சேவிக்கவேண்டும்; ஏழாம் வருஷத்தில் அவனை விடுதலைபண்ணி அனுப்பி விடுவாயாக.

உபா 15:13. அவனை விடுதலைபண்ணி அனுப்பி விடும்போது அவனை வெறுமையாய் அனுப்பிவிடாமல்,

உபா 15:14. உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதித்ததின்படி, உன் ஆட்டுமந்தையிலும் உன் களத்திலும் உன் ஆலையிலும் எடுத்து அவனுக்குத் தாராளமாய்க் கொடுத்து அனுப்பிவிடுவாயாக.

உபா 15:15. நீ எகிப்துதேசத்திலே அடிமையாயிருந்ததையும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னை மீட்டுக்கொண்டதையும் நினைவுகூரக்கடவாய்; ஆகையால் நான் இன்று இந்தக் காரியத்தை உனக்குக் கட்டளையிடுகிறேன்.

உபா 15:16. ஆனாலும், அவன் உன்னிடத்தில் நன்மைபெற்று, உன்னையும் உன் குடும்பத்தையும் நேசிப்பதினால்: நான் உன்னைவிட்டுப் போகமாட்டேன் என்று உன்னுடனே சொல்வானேயாகில்,

உபா 15:17. நீ ஒரு கம்பியை எடுத்து, அவன் காதைக் கதவோடே சேர்த்துக் குத்துவாயாக; பின்பு அவன் என்றைக்கும் உனக்கு அடிமையாயிருக்கக்கடவன்; உன் அடிமைப்பெண்ணுக்கும் அப்படியே செய்யக்கடவாய்.

உபா 15:18. அவனை விடுதலையாக்கி அனுப்பிவிடுவது உனக்கு விசனமாய்க் காணப்படவேண்டாம்; இரட்டிப்பான கூலிக்கு ஈடாக ஆறு வருஷம் உன்னிடத்தில் சேவித்தானே; இப்படி உன் தேவனாகிய கர்த்தர் நீ செய்யும் எல்லாவற்றிலும் உன்னை ஆசீர்வதிப்பார்.

எபிரெய வேலைக்காரர்களைப்பற்றிய பிரமாணம் இந்த வசனப்பகுதியில் மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் தாங்கள் பட்ட கடனுக்காக தங்களை வேலைக்காரராக விற்பனை செய்திருக்கலாம் அல்லது இவர்களுடைய பெற்றோர் தாங்கள் பட்ட கடனுக்காக, இவர்களை வேலைக்காரராக ஒப்புக்கொடுத்திருக்கலாம்.

சில சமயங்களில் குற்றங்களைப்பற்றி நீதிமன்றத்திலே வழக்கு விசாரணை நடைபெறும்போது, நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் குற்றவாளிகள் வேலைக்காரராக விற்பனை செய்யப்படலாம்.

ஒரு வேலைக்காரன் எந்த சூழ்நிலையில் விலைப்பட்டுப்போயிருந்தாலும், அவன் ஆறுவருஷம் மாத்திரமே வேலை செய்வான். ஏழாம் வருஷத்தில் அவனை விடுதலை பண்ணவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உன் சகோதரனாகிய எபிரெய புருஷனாகிலும் எபிரெய ஸ்திரீயாகிலும் உனக்கு விலைப்பட்டால், ஆறுவருஷம் உன்னிடத்தில் சேவிக்கவேண்டும்; ஏழாம் வருஷத்தில் அவனை விடுதலைபண்ணி அனுப்பி விடுவாயாக" *(உபா 15:12)* என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேலரின் அடிமைகளைப்பற்றிய பிரமாணம் யாத்திராகமம் *21:2-6* ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

கர்த்தர் தம்முடைய பிரமாணங்களை மோசேக்கு தனிப்பட்ட முறையில் சொல்லுகிறார். கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளை மோசேயும் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லவேண்டும். கர்த்தர் சொல்லுகிற முதலாவது பிரமாணம் அடிமைகளுக்கும், அவர்களுடைய எஜமான்களுக்கும் இடையே உள்ள தொடர்பை பற்றியது. எஜமான்கள் தங்கள் அடிமைகளுக்கு இரக்கம் காண்பிக்கவேண்டும். அவர்களை கொடுமைப்படுத்தக்கூடாது.

முதலாவது பிரமாணம் ஆண் அடிமைகளைப்பற்றிய பிரமாணமாகும். இவர்களுடைய பெற்றோர் தங்கள் வறுமையினால், தங்கள் ஆண்பிள்ளைகளை அடிமைகளாக விற்றுப்போட்டிருக்கலாம். அல்லது பெற்றோர் ஏதாவது குற்றம் செய்ததினால், அந்தக் குற்றத்திற்கு தண்டனையாக, இவர்களுடைய ஆண்பிள்ளைகளை அடிமைகளாக கொடுத்துவிடவேண்டுமென்று நியாயாதிபதிகள் தீர்ப்பு சொல்லியிருக்கலாம்.

கர்த்தர் அடிமைகளைப்பற்றி தம்முடைய பிரமாணத்தில் சொல்லுகிறார். "எபிரெயரில் ஒரு அடிமையைக் கொண்டாயானால், அவன் ஆறுவருஷம் சேவித்து, ஏழாம் வருஷத்திலே ஒன்றும் கொடாமல் விடுதலைபெற்றுப் போகக்கடவன்" (யாத் 21:2) என்பது கர்த்தருடைய பிரமாணமாகும்.

அந்த அடிமை ஆறுவருஷம் சேவித்து, ஏழாம் வருஷத்திலே ஒன்றும் கொடாமல் விடுதலைபெற்றுப் போகக்கடவன். ஆண் அடிமைகளைக் குறித்து பதினொரு பிரமாணங்கள் கூறப்பட்டிருக்கிறது. (யாத் 21:2-6). மிகவும் ஏழையான எபிரெயன் தான் பட்ட கடனைத் தீர்ப்பதற்கு வழியில்லாமல் இருப்பானானால் அவனை அடிமையாக விற்கலாம். (யாத் 21:1-6; லேவி 25:25-26, 39-40). ஒரு திருடனுக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகையை அவனால் செலுத்த முடியவில்லையென்றால், அந்தத் திருடனை அடிமையாக விற்றுப்போடலாம். (யாத் 22:3).

அடிமையானவன் ஆறுவருஷம் அடிமை வேலை செய்யலாம். ஏழாம் வருஷத்தில் அவன் விடுதலை பெறவேண்டும். ஏழாம் வருஷம் ஒய்வு வருஷமாயிருக்கிறது. அடிமையானவன் ஒன்றிக்காரனாய் வந்திருந்தானானால், ஒன்றிக்காரனாய்ப் போகக்கடவன்; விவாகம்பண்ணினவனாய் வந்திருந்தானானால், அவன் பெண்ஜாதி அவனோடேகூடப் போகக்கடவள் (யாத் 21:3) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அவன் எஜமான் அவனுக்கு ஒரு பெண்ணை விவாகஞ்செய்துகொடுத்தும், அவள் அவனுக்கு ஆண்பிள்ளைகளையாவது பெண்பிள்ளைகளையாவது பெற்றும் இருந்தால், அந்தப் பெண்ணும் அவள் பிள்ளைகளும் அவள் எஜமானைச் சேரக்கடவர்கள்; அவன் மாத்திரம் ஒன்றியாய்ப் போகக்கடவன் (யாத் 21:4) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

அடிமையானவன் தன் எஜமானிடத்தில் ஆறுவருஷம் சேவித்த பின்பு, ஏழாவது வருஷத்தில் அவன் தன் எஜமானைவிட்டு விடுதலை பெற்று புறப்பட்டுப்போகவேண்டும் என்னும் கட்டாயம் எதுவுமில்லை. அடிமையானவன் விரும்பினால், அவன் தொடர்ந்து தன் எஜமானை சேவிக்கலாம்.

வேலைக்காரன் தன் எஜமானை ஆறுவருஷம் சேவித்த பின்பு, அவனை நோக்கி "என் எஜமானையும் என் பெண்ஜாதியையும் என் பிள்ளைகளையும் நேசிக்கிறேன்; நான் விடுதலை பெற்றுப்போக மனதில்லை" என்று மனப்பூர்வமாய்ச் சொல்வானானால், அவன் எஜமான் அவனை நியாயாதிபதிகளிடத்தில் அழைத்துக்கொண்டுபோகவேண்டும் (யாத் 21:5,6).

அந்த எஜமான் தன் வேலைக்காரனை கதவின் அருகேயாவது கதவுநிலையின் அருகேயாவது சேரப்பண்ணி, அங்கே அவன் எஜமான் அவன் காதைக் கம்பியினாலே குத்தக்கடவன்; பின்பு அவன் என்றைக்கும் அவனிடத்திலே சேவித்துக் கொண்டிருக்கக்கடவன் (யாத் 21:6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அடிமையின் காதை கம்பியினால் குத்துவது என்பது கீழ்ப்படிதலுக்கும், அடிமைத்தனத்திற்கும் அடையாளம். அவனுடைய எஜமான் மரிக்கும் வரையிலும், அல்லது யூபிலி வருஷம் வரையிலும் அந்த அடிமை தன் எஜமானுக்கு அடிமை வேலைசெய்ய வேண்டும் (லேவி 25:40-46,55).

கர்த்தர் தம்முடைய பிரமாணத்தின் மூலமாக இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய அன்பை வெளிப்படுத்துகிறார். எபிரெயருடைய வேலைக்காரனும், அவனுடைய எஜமானும் ஒருவருக்கொருவர் அன்புகூரவேண்டும். வேலைக்காரன் அடிமையானவனாகயிருந்தாலும், எஜமான் அவனை சுயாதீனமுள்ளவனைப்போல நடத்தவேண்டும்.

வேலைக்காரன் எபிரெயனாகவும், அவனுடைய எஜமானும் எபிரெயனாகவும் இருக்கும்போது, இருவருமே கர்த்தருக்குள் சகோதரர்களாகயிருக்கிறார்கள். வேலைக்காரன் தன் எஜமானுக்கு அடிமையாகயிருந்தாலும் அவன் கர்த்தருடைய சுயாதீனனாயிருக்கிறான்.

"கர்த்தருக்குள் அழைக்கப்பட்ட அடிமையானவன் கர்த்தருடைய சுயாதீனனாயிருக்கிறான்; அப்படியே அழைக்கப்பட்ட சுயாதீனன் கிறிஸ்துவினுடைய அடிமையாயிருக்கிறான். நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்; மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள்" (1கொரி 7:22,23).

எபிரெய எஜமான்கள் தங்களுடைய வேலைக்காரரை கொடுமைப்படுத்தக்கூடாது. அவர்கள் ஆறு வருஷம் தங்கள் எஜமான்களை சேவித்த பின்பு, எஜமான்கள் தங்கள் வேலைக்காரரை கர்த்தருடைய பிரமாணத்தின்படி விடுதலை செய்து விடவேண்டும். வேலைக்காரர்கள் தங்கள் எஜமான்களை சேவிக்கும் வருஷங்களில், எஜமான்கள் அவர்களை மனிதாபிமானத்தோடு நடத்தவேண்டும்.

கர்த்தர் ஆண் வேலைக்காரனைப்பற்றி தம்முடைய பிரமாணத்தில் சொல்லியதுபோல, பெண் வேலைக்காரிகளைப்பற்றியும் தம்முடைய பிரமாணத்தில் சொல்லுகிறார். வேலைக்காரிகளுடைய பெற்றோர், தங்களுடைய வறுமையினால், தங்கள் மகளை இளவயதிலேயே அடிமையாக விற்றுப்போட்டிருக்கலாம்.

கர்த்தர் வேலைக்காரிகளைப்பற்றிச் சொல்லும்போது, "ஒருவன் தன் மகளை வேலைக்காரியாக விற்றுப்போட்டானானால், வேலைக்காரன் விடுதலைபெற்றுப் போவதுபோல அவள் போகக்கூடாது. அவளைத் தனக்கு நியமித்துக் கொண்ட எஜமானின் பார்வைக்கு அவள் தகாதவளாய்ப் போனால், அவள் மீட்கப்படலாம்; அவன் அவளுக்குத் துரோகம்பண்ணி, அவளை அந்நியர் கையில் விற்றுப்போட அவனுக்கு அதிகாரம் இல்லை" (யாத் 21:7,8) என்று சொல்லுகிறார்.

"வேலைக்காரன் விடுதலைபெற்றுப் போவதுபோல அவள் போகக்கூடாது" என்னும் இந்த வாக்கியத்தில், "போவதுபோல" என்பதற்கு ஆண் அடிமை ஆறு வருஷம் வேலைசெய்து விடுதலை பெற்றுபோவதுபோல என்று பொருள் (யாத் 21:2). ஒவ்வொரு ஏழாவது வருஷமும் யூதருக்கு யூபிலி வருஷமாகும். யூபிலி வருஷத்தில் யூதர்கள் அடிமைகளை விடுதலை செய்ய வேண்டும். அவர்கள் எந்தக் காரணத்திற்காகவும் யாரையும் நிரந்தரமாக அடிமையாக்கக்கூடாது. (2இராஜா 4:1)

வேலைக்காரிகள் சிறுவயதிலேயே தங்கள் எஜமானுக்கு வேலை செய்ய வந்துவிட்டதினால், அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகும்போது, அவர்களுக்கு திருமணம் செய்து வைக்கும் பொறுப்பும் அவர்களுடைய எஜமான்களுக்கு உண்டு. எஜமான்கள் தங்கள் வேலைக்காரிகளுக்கு நன்மை செய்யவேண்டிய காலத்தில் அவர்களுக்கு நன்மை செய்யாமல், அவர்களை மிகவும் தந்திரமாக அந்நியர் கையிலே விற்றுப்போடக்கூடாது.

வேலைக்காரிகளுக்கு எஜமானுடைய வீட்டிலே ஏமாற்றம் ஏற்படக்கூடாது. அவர்கள் ஏமாறுவதற்கான சூழ்நிலை வரும்போது, எஜமான்கள் அதற்குரிய நிவாரணங்களை தங்கள் வேலைக்காரிகளுக்கு செய்யவேண்டும்.

எஜமான் தன் வேலைக்காரியை அந்நியர் கையில் விற்றுப்போடக்கூடாது. இவ்வாறு விற்றுப்போடுவதற்கு அவனுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. ஒரு பெண் அடிமை தன்னுடைய எஜமானுக்கு மனைவியானால், அவள் விடுதலை பெற்றுப் போகக்கூடாது. அவளுடைய குடும்பத்தார் அவளை மீட்கலாம். இல்லையெனில் அவள் தன் எஜமானுக்கு மனைவியாக இருக்க வேண்டும். அவளைப் புறஜாதியாருக்கு விற்கக்கூடாது (யாத் 21:7-8).

எஜமான் தன் குமாரனுக்கு அவளை நியமித்திருந்தானானால், தன் குமாரத்திகளை நடத்துவதுபோல அவளையும் நடத்தக்கடவன் (யாத் 21:9). எஜமானின் குமாரன் வேறொரு பெண்ணைக் கொண்டானாகில், இவளுக்குரிய அன்னவஸ்திர விவாகக்கடமை ஆகிய இவைகளில் குறைவுசெய்யாமல் இருப்பானாக (யாத் 21:10). எஜமானின் குமாரன் இம்மூன்றும் அவளுக்குச் செய்யாமற்போனால், அவள் பணங்கொடாமல் விடுதலைபெற்றுப்போகக்கடவள் (யாத் 21:11).

கர்த்தர் வேலைக்காரிகளுக்கு செய்யவேண்டிய நிவாரண உதவிகளைப்பற்றி தம்முடைய பிரமாணத்தில் சொல்லுகிறார். "எஜமான் தன் குமாரனுக்கு அவளை நியமித்திருந்தானானால், தன் குமாரத்திகளை நடத்துவதுபோல அவளையும் நடத்தக்கடவன். அவன் வேறொரு பெண்ணைக் கொண்டானாகில், இவளுக்குரிய அன்னவஸ்திரவிவாகக்கடமை ஆகிய இவைகளில் குறைவுசெய்யாமல் இருப்பானாக. இம்மூன்றும் அவன் அவளுக்குச் செய்யாமற்போனால், அவள் பணங்கொடாமல் விடுதலைபெற்றுப் போகக்கடவள்" (யாத் 21:9-11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இந்தப் பிரமாணம் இஸ்ரவேலருக்கு மட்டுமே உரியது. அந்நியருக்கும் பரதேசிக்கும் இந்தப் பிரமாணம் பொருந்தாது.

"எபிரெயரில் ஒரு அடிமையைக் கொண்டாயானால், அவன் ஆறுவருஷம் சேவித்து, ஏழாம் வருஷத்திலே ஒன்றும் கொடாமல் விடுதலைபெற்றுப் போகக்கடவன்" (யாத் 21:2).

ஏழாம் வருஷத்திலே விலைப்பட்டவனை விடுதலைபண்ணும்போது, அவனை வெறுமையாய் அனுப்பிவிடக்கூடாது. அவனுக்கு தாராளமாய்க் கொடுத்து அனுப்பிவிடவேண்டும். அவன் ஆறுவருஷம் வேலை செய்திருக்கிறான்.

"அவனை விடுதலைபண்ணி அனுப்பி விடும்போது அவனை வெறுமையாய் அனுப்பிவிடாமல், உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதித்ததின்படி, உன் ஆட்டுமந்தையிலும் உன் களத்திலும் உன் ஆலையிலும் எடுத்து அவனுக்குத் தாராளமாய்க் கொடுத்து அனுப்பிவிடுவாயாக" (உபா 15:13,14) என்று மோசே சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் விலைப்பட்டவனுக்கு உதவி செய்யும்போது, தாங்களும் எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருந்ததையும் நினைவுகூரவேண்டும். கர்த்தர் தமது தயவினாலும் கிருபையினாலும் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக்கொண்டார்.

"நீ எகிப்துதேசத்திலே அடிமையாயிருந்ததையும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னை மீட்டுக்கொண்டதையும் நினைவுகூரக்கடவாய்; ஆகையால் நான் இன்று இந்தக் காரியத்தை உனக்குக் கட்டளையிடுகிறேன்" (உபா 15:15) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

ஒரு சில அடிமைகள் தங்கள் எஜமானரிடத்தில் ஆறுவருஷம் வேலை செய்த பின்பும், விடுதலை பெற்றுப்போக விரும்பமாட்டார்கள். அவர்கள் தங்கள் எஜமானரிடத்தில் இன்னும் தொடர்ந்து, பல வருஷங்களுக்கு, வேலை செய்யவேண்டுமென்று விரும்புவார்கள். எஜமான் தன்னிடத்தில் விலைப்பட்டவனுக்கு அதிகமான நன்மைகளை செய்திருப்பான். அடிமையும் தன் எஜமானையும் அவனுடைய குடும்பத்தையும் நேசிப்பான். இப்படிப்பட்ட சூழ்நிலையில், விலைப்பட்டவனுக்கு என்ன செய்யவேண்டுமென்று மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

"அவன் உன்னிடத்தில் நன்மைபெற்று, உன்னையும் உன் குடும்பத்தையும் நேசிப்பதினால்: நான் உன்னைவிட்டுப் போகமாட்டேன் என்று உன்னுடனே சொல்வானேயாகில், நீ ஒரு கம்பியை எடுத்து, அவன் காதைக் கதவோடே சேர்த்துக் குத்துவாயாக; பின்பு அவன் என்றைக்கும் உனக்கு அடிமையாயிருக்கக்கடவன்; உன் அடிமைப்பெண்ணுக்கும் அப்படியே செய்யக்கடவாய்" (உபா 15:16,17) என்று மோசே சொல்லுகிறார்.

வேலைக்காரன் எபிரெயனாக இருந்தால் அவன் நிரந்தர வேலைக்காரனாக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆறுவருஷம் வேலைசெய்த பின்பு, ஏழாம் வருஷத்தில் அவன் விடுதலையாவான். ஆயினும் அவன் தன் எஜமானை விட்டு, போகமாட்டேன் என்று மனப்பூர்வமாகச் சொல்வானானால் அவன் என்றைக்கும் தன் எஜமானுக்கு அடிமையாக இருக்கலாம். எஜமானுடைய அடிமைப் பெண்ணுக்கும் இவ்வாறே செய்யப்பட வேண்டும்.

தன் எஜமானோடு என்றைக்கும் அடிமையாக இருக்க வேண்டும் என்று விரும்புகிற வேலைக்காரனுடைய காதை ஒரு கம்பியை எடுத்து கதவோடே சேர்த்துக் குத்தவேண்டும். அவன் தன் எஜமானுக்கு என்றென்றும் அடிமையாயிருப்பான்.

தன்னிடத்தில் ஆறுவருஷம் வேலை செய்தவனை ஏழாம் வருஷத்திலே விடுதலைபண்ணுவதற்கு எஜமான் தயங்கக்கூடாது. அதற்காக விசனப்படவும் கூடாது. "அவனை விடுதலையாக்கி அனுப்பிவிடுவது உனக்கு விசனமாய்க் காணப்படவேண்டாம்; இரட்டிப்பான கூலிக்கு ஈடாக ஆறு வருஷம் உன்னிடத்தில் சேவித்தானே; இப்படி உன் தேவனாகிய கர்த்தர் நீ செய்யும் எல்லாவற்றிலும் உன்னை ஆசீர்வதிப்பார்" (உபா 15:18) என்று மோசே சொல்லுகிறார்.

வேலைக்காரன் எஜமானுக்கு ஆறு வருஷங்கள் உண்மையாய் வேலைசெய்திருக்கிறான். ஏழாவது வருஷத்தில் அவனை விடுதலை பண்ணி அனுப்பும்போது, எஜமான் வருத்தப்படக்கூடாது. சந்தோஷமாய் அனுப்பி வைக்க வேண்டும்.

விடுதலையின் வருஷத்தைப்பற்றி லேவியராகமம் 25-ஆவது அதிகாரத்தில் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

மோசேயின் நியாயப்பிரமாணம் ஓய்வுநாளுக்கு அதிக முக்கியத்துவத்தைக் கொடுக்கிறது. ஒவ்வொரு வாரமும் ஏழாவது நாள் ஓய்வுநாளாகும். கர்த்தர் ஓய்வுநாளை கனம்பண்ணியிருக்கிறார். வாரத்தின் ஓய்வுநாளைப்போல, கர்த்தர் ஓய்வு வருஷத்தையும் நியமனம்பண்ணுகிறார்.

கர்த்தர் சீனாய்மலையில் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: நான் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்திலே நீங்கள் போய்ச் சேர்ந்திருக்கும்போது, தேசம் கர்த்தருக்குக்கென்று ஓய்வு கொண்டாடவேண்டும்" (லேவி 25:1,2) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் ஆறுவருஷம் தங்கள் வயலை விதைத்து, தங்கள் திராட்சத்தோட்டத்தைக் கிளைகழித்து, அதின் பலனைச் சேர்க்கவேண்டும். ஏழாம் வருஷத்திலோ, கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் ஓய்வு தேசத்திற்கு இருக்கவேண்டும்; அதில் அவர்கள் தங்கள் வயலை விதைக்காமலும், தங்கள் திராட்சத்தோட்டத்தைக் கிளைகழிக்காமலும் இருக்கவேண்டும் (லேவி 25:3,4).

இஸ்ரவேல் புத்திரருக்கு ஓய்வு வருஷம் செப்டம்பர் மாதத்தில் ஆரம்பமாகும். இது தேசத்திலே அறுவடை முடிவு பெறுகிற மாதம். யூதருடைய நாள் காட்டியின் பிரகாரமாக, ஏழாம் மாதத்தில் ஓய்வு வருஷம் ஆரம்பமாகிறது.

இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சேர்ப்பின் பண்டிகை முடிவு பெற்றவுடன் விதை விதைக்கும் காலம் ஆரம்பமாகும். ஓய்வு வருஷத்தின்போது, இஸ்ரவேல் புத்திரர் சேர்ப்பின் பண்டிகையை ஆசரித்த பின்பு, தங்கள் வயலிலே விதை விதைக்கக்கூடாது. அவர்கள் வசந்த காலத்திலே திராட்சத்தோட்டத்தை கிளைகழிக்கவும் கூடாது.

வயலில் விதை விதைக்கவில்லையென்றால் அறுவடை இருக்காது. திராட்சத்தோட்டத்தை கிளைகழிக்கவில்லையென்றால் திராட்சப்பழங்களும் பழுக்காது. இஸ்ரவேல் புத்திரர் ஒய்வு வருஷத்திலே தானிய அறுவடையையும், திராட்சப்பழம் பறிப்பதையும் எதிர்பார்க்கமாட்டார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் வயலிலே விதை விதைக்காவிட்டாலும், அது தானாய் விளைந்த பயிராகும். "தானாய் விளைந்து பயிரானதை அறுக்காமலும், கிளைக்கழிக்காதே விட்ட திராட்சச்செடியின் பழங்களைச் சேர்க்காமலும் இருப்பாயாக; தேசத்துக்கு அது ஒய்வு வருஷமாயிருக்கக்கடவது" (லேவி 25:5) என்று காத்தர் சொல்லுகிறார்.

"கிளைக்கழிக்காதே விட்ட திராட்சச்செடி" என்பதற்கு நசரேய திராட்சைச்செடி என்னும் மாற்றுப் பெயரும் உள்ளது. நசரேயருடைய தலைமயிர் சவரகன் கத்தி படாமல் வளர்ந்திருக்கும். அதுபோன்று இந்தத் திராட்சச் செடியும் கழிக்கப்படாமல் வளர்ந்திருக்கிறது (எண் 6:5).

தேசத்தின் ஒய்விலே பயிராகிறது இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஆகாரமாயிருக்கும். ஒய்வு வருஷத்திலே விளைந்திருப்பதெல்லாம், அவர்களுடைய வேலைக்காரனுக்கும், வேலைக்காரிக்கும், கூலிக்காரனுக்கும், அவர்களிடத்தில் தங்குகிற அந்நியனுக்கும், அவர்களுடைய நாட்டு மிருகத்துக்கும், தேசத்தில் இருக்கிற காட்டு மிருகத்துக்கும் ஆகாரமாயிருக்கவேண்டும் (லேவி 25:6,7).

ஏழாம் வருஷம் தேசத்தின் நிலங்களுக்கு ஒய்வு வருஷம். அந்த வருஷத்திலே அவர்கள் நிலத்திலே ஒரு வேலையும் செய்யக்கூடாது. அறுவடையையும் எதிர்ப்பார்க்கக்கூடாது. ஏழாம் வருஷத்தில் விவசாய வேலைகள் எல்லாவற்றிற்கும் ஒய்வு கொடுத்துவிடவேண்டும். அந்த வருஷத்திலே வருஷாந்தர வேலைகள் எதுவும் நடைபெறக்கூடாது.

வாரத்தின் ஒய்வுநாளின்போது ஒரு வேலையும் செய்யாமல் ஒய்ந்திருப்பதுபோல, ஒய்வு வருஷத்தின்போது இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் நிலங்களிலும், திராட்சத்தோட்டங்களிலும் ஒரு வேலையும் செய்யாமல் ஒய்ந்திருக்கவேண்டும். தங்கள் நிலங்களுக்கும் திராட்சத்தோட்டங்களுக்கும் ஒய்வு கொடுக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் உயிருள்ள ஜீவராசிகளிடத்தில் அன்பாயும் கரிசனையாயும் இருக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் வாரத்தின் ஒய்வுநாளின்போது, தங்கள் வீட்டு மிருகங்களுக்கு ஒரு வேலையும் கொடுக்காமல் அதற்கு ஒய்வுகொடுக்கிறார்கள். அதுபோலவே அவர்கள் தங்கள் நிலத்தின்மீதும் கரிசனையாகயிருந்து, ஒய்வு வருஷத்தின்போது தங்கள் நிலங்களுக்கு ஒய்வுகொடுக்கிறார்கள்.

ஏழாம் வருஷத்தில் கர்த்தருக்கென்று ஒய்ந்திருக்கும் ஒய்வு கானான் தேசத்திற்கு இருக்கவேண்டும். ஒய்வு வருஷம் ஆவிக்குரிய ஒய்வுக்கு அடையாளமாயிருக்கிறது.

"லாமேக்கு நூற்றெண்பத்திரண்டு வயதானபோது, ஒரு குமாரனைப் பெற்று, கர்த்தர் சபித்த பூமியிலே நமக்கு உண்டான வேலையிலும், நம்முடைய கைகளின் பிரயாசத்திலும், இவன் நம்மைத் தேற்றுவான் என்று சொல்லி, அவனுக்கு நோவா என்று பேரிட்டான்" (ஆதி 5:28,29).

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே மெய்யான நோவாவாக இருக்கிறார். கிறிஸ்துவானவர் நமக்கு உண்டான எல்லா வேலைகளிலும், நம்முடைய கைகளின் பிரயாசங்களிலும் நம்மைத் தேற்றுகிறார். பூமி சபிக்கப்பட்டிருந்தாலும் நமக்கு இயேசுகிறிஸ்துவின் மூலமாக ஆசீர்வாதம் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது.

ஓய்வு வருஷம் பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: நான் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்திலே நீங்கள் போய்ச் சேர்ந்திருக்கும்போது, தேசம் கர்த்தருக்குக்கென்றுஒய்வு கொண்டாட வேண்டும் (யாத் 23:10-11).

2. ஆறுவருஷம் உன் வயலை விதைத்து, உன் திராட்சத்தோட்டத்தைக் கிளை கழித்து, அதின் பலனைச் சேர்க்கவேண்டும் (லேவி 25:3).

3. ஏழாம் வருஷத்திலோ, கர்த்தருக்கென்று ஒய்ந்திருக்கும் ஒய்வு தேசத்திற்கு இருக்கவேண்டும் (லேவி 25:4)

4. ஏழாம் வருஷத்தில் உன் வயலை விதைக்காமலும், உன் திராட்சத் தோட்டத்தைக் கிளைகழிக்காமலும் இருக்கவேண்டும்.

5. தேசத்தின் ஒய்விலே பயிராகிறது உங்களுக்கு ஆகாரமாயிருப்பதாக; உன் வேலைக்காரனுக்கும், உன் வேலைக்காரிக்கும், உன் கூலிக் காரனுக்கும், உன்னிடத்தில் தங்குகிற அந்நியனுக்கும், உன் நாட்டு மிருகத்துக்கும், உன் தேசத்தில் இருக்கிற காட்டு மிருகத்துக்கும் அதில் விளைந்திருப்பதெல்லாம் ஆகாரமாயிருப்பதாக (லேவி 25:5-6)

ஏழு ஒய்வு வருஷங்களுக்கு பின்பு வரும் வருஷம் யூபிலி வருஷமாகும். கர்த்தர் யூபிலி வருஷத்தைப்பற்றிய பிரமாணத்தை இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

ஏழு ஒய்வு வருஷங்களுள்ள ஏழு ஏழு வருஷங்களை எண்ணுவாயாக; அந்த ஏழு ஒய்வு வருஷங்களும் நாற்பத்தொன்பது வருஷமாகும். அப்பொழுதும் ஏழாம் மாதம் பத்தாந் தேதியில் எக்காளச்சத்தம் தொனிக்கும்படி செய்ய வேண்டும்; பாவ நிவாரணநாளில் உங்கள் தேசமெங்கும் எக்காளச்சத்தம் தொனிக்கும்படி செய்ய வேண்டும் (லேவி 25:8,9) என்றும்,

ஐம்பதாம் வருஷத்தைப் பரிசுத்தமாக்கி, தேசமெங்கும் அதின் குடிகளுக்கெல்லாம் விடுதலை கூறக்கடவீர்கள்; அது உங்களுக்கு யூபிலி வருஷம்; அதிலே உங்களில் ஒவ்வொருவனும் தன் தன் காணியாட்சிக்கும் தன் தன் குடும்பத்துக்கும் திரும்பி போகக்கடவன் (லேவி 25:10) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

49 வருஷங்களில் ஏழு ஒய்வு வருஷங்கள் வரும். (லேவி 25:3-4) அடுத்த வருஷம் ஐம்பதாவது வருஷமாகும். அது யூபிலி வருஷம் என்று அழைக்கப்படுகிறது. (லேவி 25:8-13).

ஐம்பதாம் வருஷத்தில் தேசத்தின் குடிகளுக்கெல்லாம் விடுதலை கூறவேண்டும். கடன்கள் மன்னிக்கப்பட வேண்டும். (லேவி 25:8-13). யூபிலி வருஷத்தில் எல்லாமே மறுபடியும் ஆரம்பமாகும் (லேவி 25:14-17).

"தேசமெங்கும் அதின் குடிகளுக்கெல்லாம் விடுதலை கூறக்கடவீர்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். அமெரிக்க தேசத்தில் பென்சில்வேனியா மாகாணத்தில் பிலடெல்பியா பட்டணத்தில் சுதந்திர மணி ஒன்றுள்ளது. அதில் இந்த வாக்கியத்தை எழுதி வைத்திருக்கிறார்கள். **"Proclaim liberty throughout all the land unto all the inhabitants thereof"**

பாவநிவாரண நாளில் இஸ்ரவேல் தேசமெங்கும் எக்காள சத்தம் தொனிக்கப்படுகிறது. யூபிலி வருஷத்தை எக்காளம் தொனித்து அறிவிக்கவேண்டும். ஐம்பதாவது வருஷம் யூபிலி வருஷம். இஸ்ரவேல் புத்திரர் அந்த வருஷத்தை பரிசுத்தமாக்கி, கானான் தேசமெங்கும் அதின் குடிகளுக்கெல்லாம் விடுதலையை கூறவேண்டும்.

யூபிலி வருஷம் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சந்தோஷத்தின் வருஷமாகவும், ஜெயத்தின் வருஷமாகவும் இருக்கிறது. ஆகையினால் யூபிலி வருஷத்தை அறிவிப்பதற்காக கானான் தேசம் எங்கிலும் எக்காள சத்தம் தொனிக்கப்படுகிறது. யூபிலி என்னும் வார்த்தைக்கு, எக்காளத்திலிருந்து ஒலிக்கப்படும் விசேஷித்த தொனி என்று பொருள். யூபிலி என்னும் தொனிக்கும், எக்காளத்தின் மற்ற தொனிகளுக்கும் வித்தியாசமுண்டு.

பாவநிவாரணநாள் நிறைவுபெறும்போது எக்காளம் தொனிக்கப்படுகிறது. இஸ்ரவேல் ஜனத்தாரின் பாவம் நிவிர்த்தி செய்யப்பட்டிருப்பதினால், அவர்கள் தேவனோடு ஒப்புரவாகி, அவரிடத்தில் சமாதானமாயிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் தேவனோடு ஒப்புரவாகும்போது, அவர்களுக்கு விடுதலை அறிவிக்கப்படுகிறது.

இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஒவ்வொரு ஐம்பதாவது வருஷமும் யூபிலி வருஷமாயிருக்கும். அவர்களுக்கு ஒவ்வொரு ஏழாம் வருஷமும் ஒய்வு வருஷம். ஏழாம் வருஷத்திலே கர்த்தருக்கென்று ஒய்ந்திருக்கும் ஒய்வு கானான் தேசத்திலிருக்கும். யூபிலி வருஷமும் பரிசுத்தமான ஒய்வு வருஷம். இந்த யூபிலி வருஷம் ஒவ்வொரு ஐம்பதாம் வருஷத்திலும் வரும்.

இஸ்ரவேல் புத்திரர் ஐம்பதாம் வருஷத்தை பரிசுத்தமாக்கி, கானான் தேசம் எங்கும் அதின் குடிகளுக்கெல்லாம் விடுதலை கூறவேண்டும்.

அந்த ஐம்பதாம் வருஷம் உங்களுக்கு யூபிலி வருஷமாயிருப்பதாக; அதிலே விதைக்காமலும், தானாய் விளைந்து பயிரானதை அறுக்காமலும், கிளைக்கழிக்காமல் விடப்பட்ட திராட்சச் செடியின் பழங்களைச் சேர்க்காமலும் இருப்பீர்களாக (லேவி 25:11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அது யூபிலி வருஷம்; அது அவர்களுக்குப் பரிசுத்தமாயிருக்கவேண்டும்; அந்த வருஷத்தில் வயல்வெளியில் விளைந்தவைகளை அவர்கள் புசிக்கவேண்டும் (லேவி 25:12).

யூபிலி வருஷத்தின்போது இஸ்ரவேல் புத்திரர் தங்களிடத்தில் கடன்பட்டிருக்கிறவர்களுக்கு அவர்களுடைய கடன்களையெல்லாம் விடுதலை பண்ணிவிடுவார்கள்.

"விடுதலையின் விபரமாவது: பிறனுக்குக் கடன்கொடுத்தவன் எவனும், கர்த்தர் நியமித்த விடுதலை கூறப்பட்டபடியால், அந்தக் கடனைப் பிறன் கையிலாகிலும் தன் சகோதரன் கையிலாகிலும் தண்டாமல் விட்டுவிடக் கடவன். அந்நிய ஜாதியான் கையிலே நீ கடனைத் தண்டலாம்; உன் சகோதரனிடத்திலோ உனக்கு வரவேண்டியதை உன் கை விட்டுவிடக்கடவது" (உபா 15:2,3).

யூபிலி வருஷத்தின்போது அடைமானமாக வைக்கப்பட்ட நிலங்கள், மற்ற சொத்துக்களெல்லாம் மீட்டுக்கொள்ளப்படும். அவை மறுபடியும் அந்த நிலத்தின் சொந்தக்காரருக்கே திரும்பக் கொடுக்கப்படும். அந்த யூபிலி வருஷத்தில் உங்களில் அவனவன் தன் தன் காணியாட்சிக்குத் திரும்பிப்போகக்கடவன் (லேவி 25:13) என்று கர்த்தர் சொல்லுகிறார்

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே தங்கள் நிலங்களை விற்பதும், பிறருடைய நிலங்களை வாங்குவதும், யூபிலி வருஷங்களின் தொகைகேற்ற பிரகாரமாகவே நடைபெறுகிறது. யூபிலி வருஷத்தின்போது விற்ற பொருட்கள், வாங்கிய பொருட்கள், அடைமானமாக வைக்கப்பட்ட பொருட்கள் ஆகியவையெல்லாமே மீட்டுக்கொள்ளப்படும்.

ஆகையால் இஸ்ரவேல் புத்திரர் பிறனுக்கு எதையாவது விற்றாலும், அவனிடத்தில் எதையாவது கொண்டாலும் ஒருவருக்கொருவர் அநியாயம் செய்யக்கூடாது (லேவி 25:14).

யூபிலி வருஷத்துக்குப் பின்வரும் வருஷங்களின் தொகைக்கேற்கப் பிறனிடத்தில் கொள்ளுவாயாக; பலனுள்ள வருஷங்களின் தொகைக்கேற்க அவன் உனக்கு விற்பானாக (லேவி 25:15) என்றும்,

பலனுள்ள வருஷங்களின் இலக்கத்தைப் பார்த்து அவன் உனக்கு விற்கிறபடியால், வருஷங்களின் தொகை ஏறினால் விலையேறவும், வருஷங்களின் தொகை குறைந்தால், விலை குறையவும் வேண்டும் (லேவி 25:16) என்றும்,

உங்களில் ஒருவனும் பிறனுக்கு அநியாயம் செய்யக்கூடாது; உன் தேவனுக்குப் பயப்படவேண்டும்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் (லேவி 25:16) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

குத்தகை பொருட்கள், நிலங்களின் குத்தகை, வேலையாட்களின் சம்பளம் ஆகியவையெல்லாமே யூபிலி வருஷத்திற்கு முன்பாக உள்ள வருஷங்களைக் கணக்கில் கொண்டே நிர்ணயிக்கப்படும். (லேவி 25:15-16).

இஸ்ரவேல் தேசத்திலே ஒருவன் மற்றவருடைய நிலத்தை விலைக்கு வாங்கினாலும், அல்லது அடைமானமாக வாங்கினாலும் அதை அவன் அடுத்து வருகிற யூபிலி வருஷம் வரையில் மாத்திரமே பயன்படுத்த முடியும். அந்த நிலத்தை வரப்போகிற யூபிலி வருஷம் வரையிலும் பயிரிட்டு அறுவடை பண்ணலாம். யூபிலி வருஷம் வரும்போது விலைக்கு வாங்கின நிலத்தையும், அடைமானமாக வாங்கின நிலத்தையும் அதன் சொந்தக்காரருக்கு திருப்பி கொடுத்துவிடவேண்டும்.

ஐம்பதாம் வருஷமாகிய யூபிலி வருஷம் பரிசுத்தமான வருஷம். அந்த வருஷத்தில் கானான் தேசத்தின் குடிகளுக்கெல்லாம் விடுதலை கூறப்படுகிறது. யூபிலி வருஷத்திலே இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொருவரும் தன் தன் காணியாட்சிக்கும், தன் தன் குடும்பத்திற்கும் திரும்பிப்போவார். அவருடைய நிலம் ஏற்கெனவே விற்கப்பட்டிருந்தாலோ அல்லது அடைமானமாக வைக்கப்பட்டிருந்தாலோ, யூபிலி வருஷத்தின் போது அது அவருக்கு திரும்பக் கொடுக்கப்படும்.

இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் மற்றவருடைய நிலத்தை அதிக பட்சமாக ஐம்பது வருஷங்கள் வரையில் அதாவது யூபிலி வருஷம் வரையிலும் மாத்திரமே வைத்துக்கொள்ள முடியும். யூபிலி வருஷம் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஐம்பதாம் வருஷமும் யூபிலி வருஷம் என்று நியமிக்கப்பட்டிருக்கிறது. யூபிலி வருஷம் எப்போது வரும் என்பது இஸ்ரவேல் புத்திரருக்கு தெரியும்.

ஆகையினால் கானான் தேசத்தின் நிலத்தை வாங்குகிறவர்கள், யூபிலி வருஷத்திற்கு பின்வரும் வருஷங்களின் தொகைகேற்ப, அந்த நிலத்தை மற்றவர்களிடத்தில்கிரயத்திற்குவாங்குவார்கள். தங்கள் நிலத்தை விற்கிறவர்களும் யூபிலி வருஷத்திற்கு பின்வரும் பலனுள்ள வருஷங்களின் தொகைக்கேற்ப மற்றவர்களுக்கு விற்பார்கள்.

வியாபார ரீதியாக பார்க்கும்போது, இஸ்ரவேல் புத்திரருக்கு தங்களுடைய காணியாட்சியின் நிலத்தை விற்பதற்கு உரிமையில்லை. அவர்கள் தங்கள் நிலத்தை ஒரு யூபிலி வருஷத்திலிருந்து அடுத்த யூபிலி வருஷம் வரையிலும் குத்தகைக்கு விடுவதுபோல கொடுக்கலாம். குத்தகை காலம் அடுத்து வருகிற யூபிலி வருஷத்தை தாண்டிப்போய்விடக்கூடாது.

கர்த்தர் கானான் தேசத்தை பங்கிட்டுக்கொடுத்தபோது, தேசத்தின் நிலங்களை அந்தந்த கோத்திரத்தாருக்கு சீட்டுப்போட்டு பிரித்துக் கொடுத்தார். தேசத்தின் நிலம் விற்பனை செய்யப்படாமல், மற்றவர்களுக்கு குத்தகையாக கொடுக்கப்படுவதினால், யூபிலி வருஷத்தின்போது அந்தந்த கோத்திரத்தாரின் நிலம் அவர்களிடத்திலே திரும்பவும் வந்து சேரும்.

இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் எவ்வளவு பெரிய செல்வந்தனாகயிருந்தாலும், அவனால் அதிகமான நிலங்களை கிரயத்திற்கு வாங்க முடியாது. அவன் வாங்கின நிலமெல்லாம் யூபிலி வருஷத்தின்போது மீட்டுக்கொள்ளப்படும். கர்த்தருடைய இந்தப் பிரமாணத்தின் மூலமாக, இஸ்ரவேல் ஜனத்தாரால் தரித்திரரை வஞ்சித்து அவர்களுடைய நிலங்களை அபகரிக்க முடியாது.

"தாங்கள்மாத்திரம் தேசத்தின் நடுவில் வாசமாயிருக்கும்படி மற்றவர்களுக்கு இடமில்லாமற்போகுமட்டும், வீட்டோடே வீட்டைச் சேர்த்து, வயலோடே வயலைக் கூட்டுகிறவர்களுக்கு ஐயோ!" (ஏசா 5:8).

இஸ்ரவேல் ஜனத்தாருக்கு யூபிலி வருஷத்தின் பிரமாணம் நியமிக்கப்பட்டிருப்பதினால், நிலத்தை உழுது பயிரிடுவதற்காக மாத்திரமே, இஸ்ரவேல் புத்திரர் மற்றவர்களிடமிருந்து நிலத்தைக் கொள்ளுவார்கள். தங்களுடைய சொத்துக்களை விருத்திபண்ணவேண்டும் என்பதற்காக யாரும் நிலங்களை கொள்ளமாட்டார்கள். ஏனெனில் ஒவ்வொரு யூபிலி வருஷத்தின்போதும், அவர்கள் கொண்ட நிலங்களையெல்லாம், அந்த நிலத்தின் சொந்தக்காரர் மீட்டுக்கொள்வார்.

இஸ்ரவேல் தேசத்தில் பிறந்த ஒவ்வொருவனும் தன்னுடைய காணியாட்சியில் குடியிருக்கும் உரிமையைப் பெற்றிருக்கிறான். அவன் தரித்திரனாகி தன்னுடைய நிலத்தை பிறருக்கு விற்றுப்போட்டாலும், யூபிலி வருஷத்தின்போது அவன் திரும்பவும் தன்னுடைய காணியாட்சி நிலத்திற்கு வந்துவிடுவான். யூபிலி வருஷத்திலே இஸ்ரவேல் புத்திரரில் ஒவ்வொருவனும் தன் தன் காணியாட்சிக்கும் தன் தன் குடும்பத்திற்கும் திரும்பிப்போகவேண்டும் (லேவி 25:10) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய காணியாட்சி நிலத்தை மற்றவர்களுக்கு விற்றுப்போட்டால், அவர்கள் தங்கள் நிலத்திற்கு அந்நியராயிருப்பார்கள். ஆனாலும் யூபிலி வருஷத்தின்போது, தாங்கள் விற்றுப்போட்ட தங்கள் காணியாட்சியை திரும்பவும் மீட்டுக்கொண்டு, அதற்கு சொந்தக்காரராவார்கள். இஸ்ரவேல் புத்திரரில் தரித்திரராயிருக்கிறவர்களும், கானான் தேசத்திலே அந்நியராயிருக்கக்கூடாது என்பதற்காக கர்த்தர் யூபிலி வருஷத்தின் பிரமாணத்தை நியமனம் செய்திருக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தில் யூபிலி வருஷத்தின் பிரமாணத்தை நியமனம் செய்திருப்பதினால், ஐசுவரியவான்கள் தரித்திரரை ஒடுக்குவதற்கு வாய்ப்பில்லை. ஒருவருக்கொருவர் அநியாயம் செய்வதற்கும் வாய்ப்பில்லை. தங்கள் நிலத்தை விற்கிறவனாலும், பிறருடைய நிலத்தை கொள்ளுகிறவனாலும், யாரும் யாரையும் ஏமாற்ற முடியாது.

பிறருடைய நிலத்தைக் கொள்ளுகிறவன் யூபிலி வருஷத்துக்குப் பின்வரும் வருஷங்களின் தொகைக்கேற்கப் பிறனிடத்தில் கொள்ளுவான்; பலனுள்ள வருஷங்களின் தொகைக்கேற்ப அவன் தன் நிலத்தை கொள்ளுகிறவனுக்கு விற்பான்.

தன் நிலத்தை விற்கிறவன் பலனுள்ள வருஷங்களின் இலக்கத்தைப் பார்த்து விற்கிறபடியால், வருஷங்களின் தொகை ஏறினால் விலையேறவும், வருஷங்களின் தொகை குறைந்தால், விலை குறையவும் செய்யும்.

இஸ்ரவேல் புத்திரரில் ஒருவனும் பிறனுக்கு அநியாயம் செய்யக்கூடாது; அவர்கள் தேவனுக்குப் பயப்படவேண்டும்; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தன்னுடைய நிலத்தை விற்கிறவனுக்கும், பிறருடைய நிலத்தை வாங்குகிறவனுக்கும் கர்த்தராயிருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் யூபிலி வருஷத்தை பரிசுத்தமாய் ஆசரிப்பதினால் அவர்களுக்கு ஒரு நஷ்டமும் ஏற்படாது. "என் கட்டளைகளின்படி செய்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு அவைகளின்படி நடக்கக்கடவீர்கள்; அப்பொழுது தேசத்திலே சுகமாய்க் குடியிருப்பீர்கள். பூமி தன் கனியைத் தரும்; நீங்கள் திருப்தியாகச் சாப்பிட்டு, அதில் சுகமாய்க் குடியிருப்பீர்கள்" (லேவி 25:18,19) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"தேசத்தில் சுகமாய்க் குடியிருப்பீர்கள்" என்னும் வாக்கியத்திற்கு "தேசத்தில் பாதுகாப்பாய் குடியிருப்பீர்கள்" என்பது பொருளாகும். கானான் தேசத்தில் குடியிருக்கிற இஸ்ரவேல் புத்திரருக்கு அந்நிய தேசத்தார் மூலமாக ஆபத்து வராது. இஸ்ரவேல் புத்திரரின் ஆவியும், ஆத்துமாவும், சரீரமும் கர்த்தருக்குள் பாதுகாப்பாயிருக்கும். அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியும்போது, கர்த்தர் அவர்களை பாதுகாத்து பராமரிக்கிறார்.

கானான் தேசத்தின் பூமி தன் கனியைத் தரும். அவர்கள் திருப்தியாய்ச் சாப்பிடுவார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு பசியோ, பட்டினியோ, பஞ்சமோ ஏற்படாது. ஒவ்வொரு ஏழாம் வருஷமும் இஸ்ரவேல் புத்திரருக்கு ஓய்வு வருஷம். ஓய்வு வருஷத்திலே அவர்கள் தங்கள் வயலை விதைக்கக்கூடாது. விதைக்கவில்லையென்றால் அறுவடையும் இல்லை. ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர் பசியாயும் பட்டினியாயும் இருக்கமாட்டார்கள். அவர்கள் திருப்தியாய்ச் சாப்பிட்டு, கானான் தேசத்திலே சுகமாய்க் குடியிருப்பார்கள்.

ஏழாம் வருஷத்தில் எதைப் புசிப்போம்? நாங்கள் விதைக்காமலும், விளைந்ததைச் சேர்க்காமலும் இருக்கவேண்டுமே! என்று சொல்வீர்களானால், நான் ஆறாம் வருஷத்தில் உங்களுக்கு ஆசீர்வாதத்தை அநுக்கிரகம்பண்ணுவேன்; அது உங்களுக்கு மூன்று வருஷத்தின் பலனைத் தரும் (லேவி 25:20,21) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஏழாம் வருஷத்தில் விதைக்கக்கூடாது, விளைந்ததைச் சேர்க்கக்கூடாது. ஆனாலும் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளைக் கைவிடமாட்டார். ஆறாம் வருஷத்தில் இஸ்ரவேல் புத்திரருக்கு அதிகமான விளைச்சல் இருக்கும். அது ஏழாம் வருஷத்திற்கும் போதுமானதாக இருக்கும். ஆறாம் வருஷத்தில் கர்த்தருடைய அநுக்கிரகம் அடுத்துமூன்று வருஷங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும். ஆறாம் வருஷத்தின் விளைச்சல் மூன்று வருஷத்தின் பலனைத் தரும் (லேவி 25:20-22).

இஸ்ரவேல் புத்திரர் எட்டாம் வருஷத்திலே விதைத்து, ஒன்பதாம் வருஷம்மட்டும் பழைய பலனிலே சாப்பிடுவார்கள்; அதின் பலன் விளையும் வரைக்கும் பழைய பலனைச் சாப்பிடுவார்கள் (லேவி 25:22).

ஏழாம் வருஷத்தில் விதை விதைக்காமல், அறுவடை செய்யாமலும் இருப்பதினால், இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு குறைவும் ஏற்படாது. கர்த்தர் ஆறாம் வருஷத்திலே அவர்களுக்கு ஆசீர்வாதத்தை அநுக்கிரகம் பண்ணுகிறார். ஆறாம் வருஷத்தின் அறுவடை அவர்களுக்கு மூன்று வருஷத்தின் பலனை தரும். புதிய பலன் விளையும் வரைக்கும் அவர்கள் ஆறாம் வருஷத்தின் ஆசீர்வாதத்தினால், பழைய பலனை சாப்பிடுவார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிற வாக்குத்தத்தம், விசுவாசிகளாகிய நமக்கு உற்சாகமான வார்த்தையாயிருக்கிறது. எக்காலத்திலும் நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவேண்டும். கர்த்தர்மீது நம்முடைய கவலைகளையும் பாரங்களையும் வைத்துவிட்டு, நாம் கர்த்தரை சார்ந்து ஜீவிக்கவேண்டும். கர்த்தரை நம்புகிறவர்களுக்கு ஒரு குறைவும் ஏற்படாது.

நாம் கர்த்தருடைய வார்த்தையைக் கனம்பண்ணி, அவருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியும்போது, கர்த்தர் நம்மைப் பாதுகாத்து பராமரிக்கிறார்.

யூபிலி வருஷம் பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. ஏழு ஓய்வு வருஷங்களுள்ள ஏழு ஏழு வருஷங்களை எண்ணுவாயாக; அந்த ஏழு ஓய்வு வருஷங்களும் நாற்பத்தொன்பது வருஷமாகும்.

2. ஏழாம் மாதம் பத்தாந்தேதியில் எக்காளச்சத்தம் தொனிக்கும்படி செய்ய வேண்டும்; பாவ நிவாரணநாளில் உங்கள் தேசமெங்கும் எக்காளச்சத்தம் தொனிக்கும்படி செய்ய வேண்டும் (லேவி 25:9).

3. ஐம்பதாம் வருஷத்தைப் பரிசுத்தமாக்கி, தேசமெங்கும் அதின் குடிகளுக்கெல்லாம் விடுதலை கூறவேண்டும் (லேவி 25:10).

4. ஐம்பதாம் வருஷம் உங்களுக்கு யூபிலி வருஷமாயிருப்பதாக (லேவி 25:10-13).

5. யூபிலி வருஷத்தில் உங்களில் அவனவன் தன்தன் காணியாட்சிக்குத் திரும்பிப் போகக்கடவன்.

6. யூபிலி வருஷத்தில் உங்களில் அவனவன் தன் தன் குடும்பத்திற்குத் திரும்பிப் போகக்கடவன்.

7. யூபிலி வருஷத்தில் விதைக்காமலும், தானாய் விளைந்து பயிரானதை அறுக்காமலும், கிளைக்கழிக்காமல் விடப்பட்ட திராட்சச் செடியின் பழங்களைச் சேர்க்காமலும் இருக்கவேண்டும் (லேவி 25:11).

8. யூபிலி வருஷம்; அது உங்களுக்குப் பரிசுத்தமாயிருக்கவேண்டும் (லேவி 25:12).

9. யூபிலி வருஷத்தில் வயல்வெளியில் விளைந்தவைகளை நீங்கள் புசிக்க வேண்டும்.

10. பிறனுக்கு எதையாவது விற்றாலும், அவனிடத்தில் எதையாவது கொண்டாலும் ஒருவருக்கொருவர் அநியாயம் செய்யாமல், யூபிலி வருஷத்துக்குப் பின்வரும் வருஷங்களின் தொகைக்கேற்கப் பிறனிடத்தில் கொள்ள வேண்டும் (லேவி 25:14-17).

11. ஒருவனும் பிறனுக்கு அநியாயம் செய்யக்கூடாது (லேவி 25:14,17).

12. உன் தேவனுக்குப் பயப்படவேண்டும்.

கானான் தேசத்திலுள்ள இஸ்ரவேலரின் வீடுகளைப்பற்றிய பிரமாணத்தை கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். மேலும் இஸ்ரவேல் புத்திரர் தரித்திரப்பட்டு, தன் காணியாட்சியில் சிலதை விற்கும்போது, என்ன செய்யப்படவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

"தேசம் என்னுடையதாயிருக்கிறபடியால், நீங்கள் நிலங்களை அறுதியாய் விற்கவேண்டாம்; நீங்கள் பரதேசிகளும் என்னிடத்தில் புறக்குடிகளுமாயிருக்கிறீர்கள்" (லேவி 25:23) என்பதே கர்த்தருடைய வார்த்தை. இஸ்ரவேல் தேசம் கர்த்தருடையது. கர்த்தர் கானான் தேசத்தை இஸ்ரவேல் தேசத்திற்கு சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். அந்த தேசத்திலே அவர்களுக்கு குடியிருப்பதற்கு மாத்திரமே உரிமை உண்டு. அதை விற்க கர்த்தர் அவர்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை.

கர்த்தரே பூமியைச் சிருஷ்டித்தவர். ஆகையினால், பூமி கர்த்தருடையது. நிலங்களை அடகு வைப்பது, விற்பது ஆகியவை நிரந்தரமான காலத்திற்கென்று இருக்கக்கூடாது. இவை தற்காலிகமாக இருக்கவேண்டும். ஏனெனில் ஐம்பதாம் வருஷம் யூபிலி வருஷம். யூபிலி வருஷத்தில் எல்லாம் மீட்கப்படும். அந்த வருஷத்தில் விற்கப்பட்ட நிலம் நிலத்தின் சொந்தக்காரருக்கே திரும்பப் போய் சேர்ந்துவிடும் (லேவி 25:8-17,23-24).

கானான் தேசத்தில் வாசம்பண்ணுகிற இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் ஐசுவரியவான்களாயிருப்பதில்லை. அவர்களில் சிலர் தரித்திரப்பட்டுப்போகிறார்கள். "உங்கள் சகோதரன் தரித்திரப்பட்டு, தன் காணியாட்சியிலே சிலதை விற்றால், அவன் இனத்தான் ஒருவன் வந்து, தன் சகோதரன் விற்றதை மீட்கக்கடவன்" (லேவி 25:25) என்று கர்த்தர் சொல்லுகிறார். தங்கள் காணியாட்சியான தேசமெங்கும் நிலங்களை மீட்டுக்கொள்ள இஸ்ரவேல் புத்திரர் இடம் கொடுக்கவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார் (லேவி 25:24).

கானான் தேசம் கர்த்தருடையது. கர்த்தர் தம்முடைய தேசத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு சுதந்தர தேசமாக கொடுத்திருக்கிறார். கர்த்தர் தாமே தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, கானான் தேசத்தின் நிலங்களை இஸ்ரவேல் புத்திரரின் குடும்பங்களுக்கு பங்கு பிரித்து கொடுத்திருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் கானான் தேசத்தின் நிலம் பங்குவீதமாக கொடுக்கப்பட்டிருக்கிறது.

கானான் தேசம் கர்த்தருடையதாகயிருப்பதினால், அந்த தேசத்து நிலங்களை இஸ்ரவேல் புத்திரர் அறுதியாய் விற்கக்கூடாது. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடத்தில் பரதேசிகளாகவும், புறக்குடிகளாகவும் இருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் தரித்திரப்பட்டு, தன் காணியாட்சியில் சிலதை விற்றுப்போட்டால், பிற்காலத்தில் அதை மீட்டுக்கொள்வதற்கு அவனுக்கு திராணி வரும்போது, யூபிலி வருஷம் வருவதற்கு முன்பாகவே அவன் அதை மீட்டுக்கொள்ளலாம். தன்னுடைய காணியாட்சியை மீட்க யூபிலி வருஷம் வரும் வரையிலும் காத்திருக்கவேண்டிய அவசியமில்லை.

உங்கள் காணியாட்சியான தேசமெங்கும் நிலங்களை மீட்டுக்கொள்ள இடங்கொடுக்கக்கடவீர்கள் (லேவி 25:24) என்றும்,

உங்கள் சகோதரன் தரித்திரப்பட்டு, தன் காணியாட்சியிலே சிலதை விற்றால், அவன் இனத்தான் ஒருவன் வந்து, தன் சகோதரன் விற்றதை மீட்கக்கடவன் (லேவி 25:25) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

தரித்திரன் விற்றுப்போட்ட நிலத்தை அவனோ, அல்லது அவனுடைய இனத்தானோ மீட்க வேண்டும் (லேவி 25:25-26). மீட்பின் கிரயம் யூபிலி வருஷத்திற்கு முந்தியுள்ள வருஷங்களின் பிரகாரம் கணக்கிடப்படும் (லேவி 25:8-10).

அதை மீட்க ஒருவனும் இல்லாமல், தானே அதை மீட்கத்தக்கவனானால், அதை விற்றபின் சென்ற வருஷங்களின் தொகையைத் தள்ளி, மீந்த தொகையை ஏற்றி, கொண்டவனுக்குக் கொடுத்து, அவன் தன் காணியாட்சிக்குத் திரும்பிப்போகக்கடவன் (லேவி 25:26,27) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

தரித்திரனுக்கு யூபிலி வருஷத்தில் மற்றொரு வாய்ப்பு கொடுக்கப் படுகிறது. அவன் தன்னுடைய பொருளாதாரக் காரியங்களை மறுபடியும் ஆரம்பிக்கலாம்.

ஒருவன் தான் விற்ற நிலத்தை மீட்டுக்கொள்ளும்போது, யூபிலி வருஷத்திற்கு பின்வரும் வருஷங்களின் தொகைக்கேற்ப, அதற்கு கிரயம் செலுத்தி அதை மீட்டுக்கொள்ளவேண்டும். தன்னுடைய காணியாட்சியை அவன் எந்த வருஷம் விற்றானோ, அதை விற்ற பின் சென்ற வருஷங்களின் தொகையை தள்ளி மீந்த தொகையை ஏற்றி, அதை கொண்டவனுக்கு கொடுத்து, அவன் தன்னுடைய காணியாட்சியை மீட்டுக்கொள்ளவேண்டும். தன்னுடைய காணியாட்சியை மீட்டுக்கொள்ள ஒருவனுக்கு திராணியில்லாமல் போனால், அவன் விற்றதை, அவனுடைய சகோதரன் மீட்டுக்கொள்ளலாம்.

"அதைக் கேட்டு வாங்குகிறதற்கு இனத்தான் ஒருவனும் இல்லாதிருந்தால், அப்பொழுது அவனுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படி ஆட்டுக்கடா செலுத்தப்படுவதுமல்லாமல், கர்த்தருக்கு அந்த அபராதம் செலுத்தப்பட்டு, அது ஆசாரியனைச் சேரவேண்டும்" (எண் 5:8).

"நீ யார் என்று கேட்டான்; அவள், நான் உம்முடைய அடியாளாகிய ரூத்; நீர் உம்முடைய அடியாள்மேல் உம்முடைய போர்வையை விரியும்; நீர் சுதந்தரவாளி என்றாள்" (ரூத் 3:9).

இந்த வசனங்களில் "இனத்தான்", "சுதந்தரவாளி" ஆகிய வார்த்தைகள் எபிரெய பாஷையில் "கோயல்" என்று அழைக்கப்படுகிறது. கோயல் என்னும் எபிரெய வார்த்தைக்கு "மீட்பர்" என்று பொருள் சொல்லலாம். சுதந்தரவாளி கிறிஸ்துவுக்கு அடையாளமானவர். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மானிட ரூபம் தரித்து, நம்முடைய சுதந்தரவாளியானார்.

இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் தரித்திரப்பட்டு தன்னுடைய காணியாட்சியை விற்ற பின்பு, யூபிலி வருஷத்திற்கு முன்பு அதை மீட்டுக்கொள்வதற்கு அவனுக்கு திராணியில்லாமல் போகலாம். அவ்வாறு அவன் தன்னுடைய காணியாட்சியை யூபிலி வருஷத்திற்கு முன்பு மீட்டுக்கொள்ளவில்லையென்றால், யூபிலி வருஷத்தின்போது அவனுடைய காணியாட்சி நிலம் தானாகவே விடுதலையாகிவிடும். யூபிலி வருஷம் விடுதலையின் வருஷம்.

"அப்படிக் கொடுப்பதற்கான நிர்வாகம் அவனுக்கு இல்லாவிட்டால், அவன் விற்றது வாங்கினவன் கையிலே யூபிலி வருஷம்மட்டும் இருந்து, யூபிலி வருஷத்திலே அது விடுதலையாகும்; அப்பொழுது அவன் தன் காணியாட்சிக்குத் திரும்பப் போவான்" (லேவி 25:28) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாவிகளாகிய நாம் தேவனுடைய கிருபையினால் இலவசமாய் இரட்சிக்கப்படுகிறோம். நம்மை நாமே இரட்சித்துக்கொள்ள நமக்கு திராணியில்லை. பாவிகளாகிய நமக்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய மீட்கும் கிருபையினால், இரட்சிப்பு இலவசமாக கொடுக்கப்பட்டிருக்கிறது.

நம்முடைய ஆதி பெற்றோராகிய ஆதாமும் ஏவாளும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்தார்கள். அவர்களுடைய கீழ்ப்படியாமையினால் பரதீசுக்கு அடையாளமான ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். ஆதாமும் ஏவாளும் இழந்துபோன சிலாக்கியத்தை, நம்முடைய மீட்பராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக, நாம் திரும்ப பெற்றிருக்கிறோம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக நாம் பரதீசுக்குள் பிரவேசிக்கிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

இஸ்ரவேல் புத்திரர் தாங்கள் விற்றுப்போட்ட காணியாட்சி நிலத்தை மீட்டுக்கொள்வது போல, தங்களுடைய வீடுகளை விற்றுப்போட்டால், அதையும் மீட்டுக்கொள்ளலாம். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் வீடுகளை இரண்டுவிதமாக பிரிக்கிறார். ஒன்று மதில் சூழ்ந்த பட்டணத்திலுள்ள வீடுகள். மற்றொன்று மதில் சூழப்படாத கிராமங்களிலுள்ள வீடுகள்.

இஸ்ரவேல் புத்திரர் மதில் சூழ்ந்த பட்டணத்திலுள்ள தங்கள் வாசஸ்தலமாகிய வீட்டை அதிக பிரயாசப்பட்டு கட்டியிருப்பார்கள். அவர்களுடைய பிரயாசங்களின் பலனெல்லாம் அந்த வீடாகவே இருக்கும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்கும்போது அவர்களுக்கு வீடுகளை வாசஸ்தலமாக கொடுக்கிறார். ஆனாலும் இஸ்ரவேல் புத்திரரில் சிலர் தரித்திரப்பட்டு, தங்கள் காணியாட்சி நிலங்களை விற்றுப்போடுவதுபோல, தங்கள் வீடுகளையும் விற்றுப்போடுகிறார்கள்.

ஒருவன் மதில்சூழ்ந்த பட்டணத்திலுள்ள தன் வாசஸ்தலமாகிய வீட்டை விற்றால், அதை விற்ற ஒரு வருஷத்துக்குள் அதை மீட்டுக்கொள்ளலாம்; ஒரு வருஷத்துக்குள்ளாகவே அதை மீட்டுக்கொள்ளவேண்டும் (லேவி 25:29).

மதில்சூழ்ந்த பட்டணத்திலுள்ள வீடுகளுக்கும், மதில்சூழப் படாத பட்டணத்திலுள்ள வீடுகளுக்கும் வெவ்வேறு பிரமாணங்கள் உள்ளன. மதில்சூழப்படாத கிராமங்களிலுள்ள வீடுகளோ, தேசத்தின் நிலங்கள்போலவே பாவிக்கவேண்டும்; அவைகள் மீட்கப்படலாம்; யூபிலி வருஷத்தில் அவைகள் விடுதலையாகும் (லேவி 25:29-30= லேவி 25:31).

மதில்சூழ்ந்த பட்டணத்திலுள்ளவர்கள் தங்களுடைய வீடுகளை விற்றுப்போட்டால், அதை விற்ற ஒரு வருஷத்திற்குள் மீட்க வேண்டும். இல்லையெனில், அந்த வீடு தலைமுறைதோறும் அதை வாங்கினவனுக்கே உரியதாகும்; யூபிலி வருஷத்திலும் அது விடுதலையாகாது.

ஒரு வருஷத்துக்குள்ளே அதை மீட்டுக்கொள்ளாதிருந்தால், மதில்சூழ்ந்த பட்டணத்திலுள்ள அந்த வீடு தலைமுறைதோறும் அதை வாங்கினவனுக்கே உரியதாகும்; யூபிலி வருஷத்திலும் அது விடுதலையாகாது (லேவி 25:30).

மதில் சூழ்ந்த பட்டணத்திலுள்ள வீட்டை விற்றவன், விற்ற ஒரு வருஷத்திற்குள்ளே அதை மீட்டுக்கொள்ளவேண்டும். அவ்வாறு மீட்டுக்கொள்ளவில்லையென்றால் அந்த வீடு யூபிலி வருஷத்திலே தானாக விடுதலையாகாது. அந்த வீட்டை வாங்கினவனுக்கு அது தலைமுறை தலைமுறை தோறும் உரியதாகயிருக்கும். வாங்கினவனுக்கு வீடு சொந்தமாகிவிடும். அவனுடைய தலைமுறையார் அந்த வீட்டிலே நிரந்தரமாக குடியிருக்கலாம்.

மதில் சூழ்ந்த பட்டணத்திலுள்ள வீடுகளைப்பற்றி கர்த்தர் சொல்லுகிற பிரமாணம் அந்நியருக்கும், யூதமார்க்கத்தமைந்த புறஜாதி ஜனங்களுக்கும் பிரயோஜனமாயிருக்கிறது. அவர்கள் இஸ்ரவேல் தேசத்திலே வந்து, அங்கே தங்களுக்கு வீடுகளை வாங்கி, அதிலே குடியிருப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கிறது.

அந்நியராலும், யூதமார்க்கத்தமைந்த புறஜாதியாராலும் கானான் தேசத்தில் நிலங்களை கிரயத்திற்கு வாங்க முடியாது. ஆனால் அவர்களால் மதில் சூழ்ந்த பட்டணத்திலுள்ள வீடுகளை கிரயத்திற்கு வாங்க முடியும். அந்த வீடுகளுக்கு அவர்களால் நிரந்தர சொந்தக்காரராக முடியும்.

மதில்சூழ்ந்த பட்டணங்களிலுள்ள வீடுகளைப்பற்றிய பிரமாணத்தில், லேவியருக்கு விசேஷித்த சிலாக்கியம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

லேவியரின் காணியாட்சியாகிய பட்டணங்களிலுள்ள வீடுகளை, லேவியர் எக்காலத்திலும் மீட்டுக்கொள்ளலாம் (லேவி 25:32).

இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே லேவியருடைய பட்டணங்களிலுள்ள வீடுகள் அவர்களுக்குரிய காணியாட்சியானபடியால், லேவியரிடத்தில் அவனுடைய காணியாட்சிப் பட்டணத்திலுள்ள வீட்டை ஒருவன் வாங்கினால், விற்கப்பட்ட அந்த வீடு யூபிலி வருஷத்தில் விடுதலையாகும் (லேவி 25:33).

லேவியரின் வீடுகள் மீட்கப்படாவிட்டால், அந்த வீடு யூபிலி வருஷத்தில் தானாகவே விடுதலையாகும். அது மறுபடியும் அந்த லேவியனுக்கு சொந்தமாகும்.

மதில் சூழப்படாத கிராமங்களிலுள்ள வீடுகளுக்கு கர்த்தர் விசேஷித்த பிரமாணத்தை சொல்லுகிறார். மதில்சூழப்படாத கிராமங்களிலுள்ள வீடுகளோ, தேசத்தின் நிலங்கள்போலவே எண்ணப்படும்; அவைகள் மீட்கப்படலாம்; யூபிலி வருஷத்தில் அவைகள் விடுதலையாகும் (லேவி 25:31).

லேவியருடைய பட்டணங்களைச் சூழ்ந்த வெளிநிலம் விற்கப்படலாகாது; அது அவர்களுக்கு நித்திய காணியாட்சியாயிருக்கும் (லேவி 25:34).

இஸ்ரவேல் புத்திரர் தரித்திரரை ஆதரிக்கவேண்டும். "உன் சகோதரன் தரித்திரப்பட்டு, கையிளைத்துப் போனவனானால், அவனை ஆதரிக்கவேண்டும்; பரதேசியைப் போலும் தங்கவந்தவனைப்போலும் அவன் உன்னோடே பிழைப்பானாக" (லேவி 25:35) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூபிலி வருஷத்தில் எதை விடுதலைபண்ண முடியும், எதை விடுதலைபண்ண முடியாது என்பது பற்றி, லேவி 25:1-34 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. லேவி 25:35-55 ஆகிய வசனங்களில் அடிமைகளையும், வேலைக்காரரையும் பற்றிய பிரமாணங்கள் சொல்லப்பட்டிருக்கிறது.

தரித்திரப்பட்டு கையிளைத்துப்போன சகோதரனை ஆதரிப்பது பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. சகோதரன் தரித்திரப்பட்டு, கையிளைத்துப் போனவனானால், அவனை ஆதரிக்கவேண்டும்.

2. பரதேசியைப் போலும் தங்கவந்தவனைப் போலும் அவன் உன்னோடே பிழைப்பானாக.

3. சகோதரனுக்கு பணத்தை வட்டிக்கும், தானியத்தைப் பொலிசைக்கும் கொடுக்கக் கூடாது (லேவி 25:36,37).

4. தேவனுக்குப் பயந்து, உன் சகோதரன் உன்னோடே பிழைக்கும்படி செய்ய வேண்டும் (லேவி 25:36,38).

தரித்திரப்பட்டு கையிளைத்துப்போன சகோதரனுக்கு உதவி புரிய வேண்டும். அவன் தன் தரித்திரனிமித்தம் தேசத்திலிருந்து துரத்தப்பட்டு விடக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் ஜீவிப்பதற்கு அவனுக்கும் ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும். (லேவி 25:35-36).

நாம் எல்லோரையுமே சகோதரராக பாவிக்கவேண்டும். நம்முடைய தேவனாகிய கர்த்தர் மனுபுத்திரர் எல்லோருக்கும் பொதுவான பிதாவாகயிருக்கிறார்.

"நம்மெல்லாருக்கும் ஒரே பிதா இல்லையோ? ஒரே தேவன் நம்மைச் சிருஷ்டித்ததில்லையோ? நாம் நம்முடைய பிதாக்களின் உடன்படிக்கையைப் பரிசுத்தக்குலைச்சலாக்கி, அவனவன் தன் தன் சகோதரனுக்குத் துரோகம்பண்ணுவானேன்?" (மல் 2:10).

இஸ்ரவேல் புத்திரர் தரித்திரரை ஆதாரிக்கவேண்டும். அவர்கள் தங்களோடே பிழைக்கும்படி அவர்களுக்கு உதவி செய்யவேண்டும். "நீ அவன் கையில் வட்டியாவது பொலிசையாவது வாங்காமல், உன் தேவனுக்குப் பயந்து, உன் சகோதரன் உன்னோடே பிழைக்கும்படி செய்வாயாக. அவனுக்கு உன் பணத்தை வட்டிக்கும், உன் தானியத்தைப் பொலிசைக்கும் கொடாயாக" (லேவி 25:36,37) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தன்னுடைய சொத்தை விருத்தி பண்ணுவதற்காக ஏழைகளை அநியாயமாய் நடத்தக்கூடாது (லேவி 25:37-38).

இஸ்ரவேல் ஜனத்தார் தரித்திரரை ஒடுக்கக்கூடாது. அவர்கள் தங்களோடே பிழைப்பதற்கு உதவி செய்யவேண்டும். அவர்கள் தங்கள் பணத்தை தரித்திரருக்கு வட்டிக்கு கொடுக்கக்கூடாது. தங்கள் தானியத்தை பொலிசைக்கு கொடுக்கக்கூடாது. இஸ்ரவேல் ஜனத்தார் தரித்திரர் கையில் வட்டியாவது, பொலிசையாவது வாங்காமல், அவர்களும் தங்களோடுகூட பிழைப்பதற்கு உதவி செய்யவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய பிரமாணத்தை சொல்லும்போது, அவர்களுக்கு தாம் ஏற்கெனவே செய்த உதவிகளை இங்கு ஞாபகப்படுத்துகிறார். "உங்களுக்குக் கானான் தேசத்தைக் கொடுத்து, உங்களுக்கு தேவனாயிருக்கும்படி, உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர் நானே" (லேவி 25:38) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப் பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர் நானே" என்று, கர்த்தர் நான்கு வசனங்களில் இதுபற்றிச் சொல்லுகிறார். (லேவி 25:38,42,55; லேவி 26:13)

நிலங்களை மீட்டுக்கொள்வது பற்றிய பிரமாணத்தின் விவரம் :

1. தேசம் என்னுடையதாயிருக்கிறபடியால், நீங்கள் நிலங்களை அறுதியாய் விற்கவேண்டாம்.

2. சகோதரன் தரித்திரப்பட்டு, தன் காணியாட்சியிலே சிலதை விற்றால், அவன் இனத்தான் ஒருவன் வந்து, தன் சகோதரன் விற்றதை மீட்கக்கடவன் (லேவி 25:24-27).

3. நிலத்தை மீட்பதற்கான நிர்வாகம் அவனுக்கு இல்லாவிட்டால், அவன் விற்றது வாங்கினவன் கையிலே யூபிலி வருஷம்மட்டும் இருந்து, யூபிலி வருஷத்திலே அது விடுதலையாகும்; அப்பொழுது அவன் தன் காணியாட்சிக்குத் திரும்பப் போவான் (லேவி 25:28).

4. ஒருவன் மதில்சூழ்ந்த பட்டணத்திலுள்ள தன் வாசஸ்தலமாகிய வீட்டை விற்றால், அதை விற்ற ஒரு வருஷத்துக்குள் அதை மீட்டுக் கொள்ளலாம் (லேவி 25:29).

5. ஒரு வருஷத்துக்குள்ளே அதை மீட்டுக்கொள்ளாதிருந்தால், மதில்சூழ்ந்த பட்டணத்திலுள்ள அந்த வீடு தலைமுறைதோறும் அதை வாங்கினவனுக்கே உரியதாகும்; யூபிலி வருஷத்திலும் அது விடுதலையாகாது (லேவி 25:30).

6. மதில்சூழப்படாத கிராமங்களிலுள்ள வீடுகளோ, தேசத்தின் நிலங்கள்போலவே எண்ணப்படும்; அவைகள் மீட்கப்படலாம்; யூபிலி வருஷத்தில் அவைகள் விடுதலையாகும் (லேவி 25:31).

7. லேவியரின் காணியாட்சியாகிய பட்டணங்களிலுள்ள வீடுகளையோ லேவியர் எக்காலத்திலும் மீட்டுக்கொள்ளலாம் (லேவி 25:32).

8. லேவியரிடத்தில் அவனுடைய காணியாட்சிப் பட்டணத்திலுள்ள வீட்டை ஒருவன் வாங்கினால், விற்கப்பட்ட அந்த வீடு யூபிலி வருஷத்தில் விடுதலையாகும் (லேவி 25:33).

9. லேவியரின் பட்டணங்களைச் சூழ்ந்த வெளிநிலம் விற்கப்படலாகாது; அது அவர்களுக்கு நித்திய காணியாட்சியாயிருக்கும் (லேவி 25:34).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்திருக்கிறார். அவர்கள் மறுபடியும் அடிமைகளாயிருக்கக்கூடாது என்பது தேவனுடைய சித்தம். இஸ்ரவேல் புத்திரர் அடிமைகளல்ல. அவர்கள் சுயாதீனமுள்ளவர்கள். அவர்கள் தேவனுக்கு விசேஷித்த ஜனமாயிருக்கிறவர்கள். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சேஷ்டபுத்திர ஆசீர்வாதம் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது.

விடுதலையாயிருக்கவேண்டிய இஸ்ரவேல் ஜனத்தாரை யாரும் அடிமைப்படுத்தக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர்கூட, தங்கள் சகோதரரை அடிமையைப்போல ஊழியம் செய்ய நெருக்கக்கூடாது. "உன் சகோதரன் தரித்திரனாகி, உனக்கு விலைப்பட்டுப்போனால், அவனை அடிமையைப்போல ஊழியஞ்செய்ய நெருக்கவேண்டாம்" *(லேவி 25:39)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் தரித்திரனாகி கடன்பட்டுப்போனதினால், அவன் மற்றொரு இஸ்ரவேல் புத்திரனுக்கு விலைப்பட்டுப்போகலாம். அல்லது தான் செய்த குற்றத்தினிமித்தமாக, இஸ்ரவேல் புத்திரன் கூலிக்காரனைப்போல சேவை செய்யவேண்டியது வரலாம். நியாயாதிபதிகள் இஸ்ரவேல் புத்திரரை தண்டிக்கலாம்.

இஸ்ரவேல் புத்திரர் தரித்திரனாகி விலைப்பட்டுப்போனாலும், தாங்கள் செய்த குற்றங்களினிமித்தமாக தண்டிக்கப்பட்டாலும் அவர்கள் ஆறு வருஷங்களுக்கு மாத்திரமே கூலிக்காரனைப்போல சேவை செய்யவேண்டும். ஏழாவது வருஷத்தில் அவர்கள் விடுவிக்கப்படவேண்டும்.

"எபிரெயரில் ஒரு அடிமையைக் கொண்டாயானால், அவன் ஆறுவருஷம் சேவித்து, ஏழாம் வருஷத்திலே ஒன்றும் கொடாமல் விடுதலைபெற்றுப் போகக்கடவன்" *(யாத் 21:2)*.

இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் தரித்திரனாகி, பிறனிடத்தில் கடன்பட்டு, அந்தக் கடனை அடைக்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதிருக்கும்போது, தனக்கு கடன் கொடுத்தவனுக்கு அவன் விலைப்பட்டுப்போக வாய்ப்புள்ளது. தான் பட்ட கடனை அடைப்பதற்கு அவனுக்கு எந்தவிதமான நிர்வாகமும் இல்லையென்றால், அவனுடைய சரீரமும் ஜீவனும் மாத்திரமே அவனிடத்தில் இருக்கும். இஸ்ரவேல் புத்திரன் தான் பட்ட கடனுக்காக தன் சரீரத்தையும் ஜீவனையும் விலைப்பட்டுப்போகப்பண்ணலாம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் விலைப்பட்டுப்போனவனுக்கு என்ன செய்யவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

உன் சகோதரன் தரித்திரனாகி, உனக்கு விலைப்பட்டுப்போனால், அவனை அடிமையைப்போல ஊழியஞ்செய்ய நெருக்கவேண்டாம். அவன் கூலிக்காரனைப்போலவும் தங்கவந்தவனைப்போலவும் உன்னோடே இருந்து, யூபிலி வருஷம்மட்டும் உன்னிடத்தில் சேவிக்கக்கடவன் *(லேவி 25:39,40)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தரித்திரனாகி விலைப்பட்டுப்போன இஸ்ரவேல் புத்திரனை, விலைக்கு வாங்கின இஸ்ரவேல் புத்திரன் அடிமையைப்போல ஊழியம் செய்ய நெருக்கக்கூடாது. தரித்திரனாகி விலைப்பட்டுப்போன இஸ்ரவேல் புத்திரனை அடிமைகளாக விற்கவும் கூடாது *(லேவி 25:42)*. விலைப்பட்டுப்போனவன் கூலிக்காரனைப்போலவும் தங்க வந்தவனைப்போலவும், தன்னை விலைக்கு வாங்கினவனிடத்தில் சேவிக்கவேண்டும்.

விலைப்பட்டுப்போன இஸ்ரவேல் புத்திரனை, அவனுடைய எஜமான் அடிமையைப்போல நடத்தக்கூடாது. அவனை ஒரு கூலிக்காரனைப்போல நடத்தலாம். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்திருக்கிறார். கர்த்தர் விடுவித்தவர்களை மனுஷன் அடிமைப்படுத்தக்கூடாது.

அவர்கள் நான் எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின என்னுடைய ஊழியக்காரர்; ஆகையால், அவர்கள் அடிமைகளாக விற்கப்படலாகாது *(லேவி 25:42)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

விலைப்பட்டுப்போன இஸ்ரவேல் புத்திரனை விலைக்கு வாங்கினவன் கொடூரமாய் ஆளுகை செய்யக்கூடாது. அவனை விலைக்கு வாங்கினவனும் தன்னுடைய தேவனாகிய கர்த்தருக்கு பயந்திருக்கவேண்டும். தானும் அல்லது தன்னுடைய முன்னோரும் ஒரு காலத்தில் எகிப்து தேசத்திலே அடிமைகளாகயிருந்தவர்கள் என்பதையும், கர்த்தர் தாமே எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தங்களை விடுவித்தவர் என்பதையும் அவர்கள் நினைவுகூரவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே அடிமைகளாகயிருந்தபோது எகிப்தியர்கள் அவர்களை கொடூரமாய் ஆளுகை செய்தார்கள். எகிப்தியரின் ஆளோட்டிகள் அவர்களை அடித்து துன்பப்படுத்தினார்கள். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு அதுபோன்ற துன்பமும் வேதனையும் மறுபடியும் வரக்கூடாது.

இஸ்ரவேல் புத்திரன் தரித்திரனாகி, மற்றொரு இஸ்ரவேல் புத்திரனுக்கு விலைப்பட்டுப்போகும்போது, அவன் கூலிக்காரனைப்போல வேலை செய்யவேண்டும். அவனை விலைக்கு வாங்கினவன் அவனை அடிமையைப்போல ஊழியம் செய்ய நெருக்கக்கூடாது. விலைப்பட்டுப்போனவனும் ஆபிரகாமின் சந்ததியைச் சேர்ந்தவனாயிருக்கிறான் என்னும் எண்ணம், அவனை விலைக்கு கொண்டவனுடைய மனதில் இருக்கவேண்டும்.

விலைப்பட்டுப்போன இஸ்ரவேல் புத்திரன் யூபிலி வருஷமட்டும், தன்னை விலைக்கு வாங்கினவனிடத்தில் சேவிக்கவேண்டும். பின்பு அவன் தன் பிள்ளைகளோடுங்கூட உன்னைவிட்டு நீங்கலாகி, தன் குடும்பத்தாரிடத்துக்கும் தன் பிதாக்களின் காணியாட்சிக்கும் திரும்பிப்போகக்கடவன் (லேவி 25:41) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூபிலி வருஷத்தின் எக்காள சத்தம் தொனிக்கப்படுவதற்கு பத்து நாட்களுக்கு முன்பே, யூதர்கள் மத்தியிலே விலைப்பட்டுப்போயிருக்கிற இஸ்ரவேல் புத்திரரை விடுதலைபண்ணும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகிவிடும் என்று யூதமார்க்கத்தின் சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள்.

அப்போது, எஜமான்கள் தங்கள் வேலைக்காரர்களுக்கு புதிய வஸ்திரங்களைக் கொடுத்து, அவர்களுக்கு விருந்து உபசரணை செய்து, அவர்களையும் அவர்களுடைய குடும்பத்தாரையும், அவர்களுடைய பூர்வீக காணியாட்சிக்கு அனுப்பி வைப்பது வழக்கம்.

எபிரெயரில் விலைப்பட்டுப்போனவன் பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. உன் சகோதரன் தரித்திரனாகி, உனக்கு விலைப்பட்டுப்போனால், அவனை அடிமையைப் போல ஊழியஞ்செய்ய நெருக்கவேண்டாம்.

2. அவன் கூலிக்காரனைப்போலவும் தங்கவந்தவனைப்போலவும் உன்னோடே இருந்து, யூபிலி வருஷம்மட்டும் உன்னிடத்தில் சேவிக்கக்கடவன் (லேவி 25:40).

3. யூபிலி வருஷம்மட்டும் உன்னிடத்தில் சேவிக்கக்கடவன். பின்பு, தன் பிள்ளைகளோடுங் கூட உன்னைவிட்டு நீங்கலாகி, தன் குடும்பத்தாரிடத்துக்கும் தன் பிதாக்களின் காணியாட்சிக்கும் திரும்பிப்போகக்கடவன் (லேவி 25:40-41).

4. உன் சகோதரர்கள் அடிமைகளாக விற்கப்படக்கூடாது (லேவி 25:42-43).

5. நீ அவனைக் கொடூரமாய் ஆளாமல், உன் தேவனுக்குப் பயந்திரு (லேவி 25:43).

இஸ்ரவேல் புத்திரர், தங்கள் சகோதரர்களை அடிமையைப்போல ஊழியம் செய்ய நெருக்கக்கூடாது. இஸ்ரவேல் ஜனத்தார் அடிமைகளாக விற்கப்படலாகாது என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர் புறஜாதிகளை அடிமைகளாக விலைக்கு வாங்கலாம்.

உனக்கு இருக்கும் ஆண் அடிமையும் பெண் அடிமையும் சுற்றிலும் இருக்கிற புறஜாதிகளாயிருக்கவேண்டும்; அவர்களில் நீ ஆண் அடிமையையும் பெண் அடிமையையும் விலைக்கு வாங்கலாம் (லேவி 25:44) என்றும்,

அவர்களை உங்களுக்கு பின்வரும் உங்கள் சந்ததியாரும் சுதந்தரிக்கும்படி நீங்கள் அவர்களைச் சுதந்தரமாக்கிக் கொள்ளலாம்; என்றைக்கும் அவர்கள் உங்களுக்கு அடிமைகளாயிருக்கலாம்; உங்கள் சகோதரராகிய இஸ்ரவேல் புத்திரரோ ஒருவரையொருவர் கொடூரமாக ஆளக்கூடாது (லேவி 25:46) என்றும் கர்த்தர் சொல்லுகிறார். அடிமைகளாகயிருக்கிற புறஜாதியாரை யூபிலி வருஷத்திலே விடுதலை பண்ணவேண்டியதில்லை.

புறஜாதியாரில் விலைப்பட்டுப்போனவன் பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. உனக்கு இருக்கும் அடிமைகள் உன் சகோதரர்களாயிராமல் புறஜாதிகளாயிருக்க வேண்டும்.

2. பரதேசிகளாய்த் தங்குகிற அந்நிய புத்திரரில் அடிமைகளைக் கொள்ளலாம் (லேவி 25:45).

3. உங்கள் தேசத்தில் உங்களிடத்திலே பிறந்திருக்கிற அவர்களுடைய குடும்பத்தாரிலும் நீங்கள் உங்களுக்கு அடிமைகளைக் கொள்ளலாம் (லேவி 25:45).

4. அவர்களை உங்களுக்கு பின்வரும் உங்கள் சந்ததியாரும் சுதந்தரிக்கும்படி நீங்கள் அவர்களைச் சுதந்தரமாக்கிக் கொள்ளலாம்; என்றைக்கும் அவர்கள் உங்களுக்கு அடிமைகளாயிருக்கலாம்; உங்கள் சகோதரராகிய இஸ்ரவேல் புத்திரரோ ஒருவரையொருவர் கொடூரமாக ஆளக்கூடாது (லேவி 25:46).

இஸ்ரவேல் புத்திரர் தரித்திரனாகி, மற்றொரு இஸ்ரவேல் புத்திரனிடத்தில் விலைப்பட்டுப்போவதுபோல, அவன் யூதமார்க்கத்தமைந்தவனிடத்திலும், இஸ்ரவேல் தேசத்திலே பரதேசியும் அந்நியனுமாயிருக்கிறவனிடத்திலும் விலைப்பட்டுப்போவதற்கு வாய்ப்புள்ளது.

உன்னிடத்தில் இருக்கிற பரதேசியும் அந்நியனும் செல்வனாயிருக்க, அவனிடத்தில் இருக்கிற உன் சகோதரன் தரித்திரப்பட்டு, அந்தப் பரதேசிக்காவது, அந்நியனுக்காவது, பரதேசியின் குடும்பத்தாரில் எவனுக்காவது அவன் விலைப்பட்டுப்போனால், அவன் விலைப்பட்டுபோனபின் திரும்ப மீட்கப்படலாம்; அவன் சகோதரரில் ஒருவன் அவனை மீட்கலாம் (லேவி 25:47,48) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அவனுடைய பிதாவின் சகோதரனாவது, அந்தச் சகோதரனுடைய புத்திரனாவது, அவன் குடும்பத்திலுள்ள அவனைச் சேர்ந்த இனத்தாரில் எவனாவது அவனை மீட்கலாம்; தன்னால் கூடுமானால், தன்னைத் தானே மீட்டுக்கொள்ளலாம் (லேவி 25:49).

மீட்கும் இனத்தாரின் பிரமாணத்தைப் பற்றி இங்கு கூறப்பட்டிருக்கிறது (லேவி 25:25, 48-49) ரூத்தின் புஸ்தகத்தில் இதைப் பற்றிய செய்தி தெளிவாக உள்ளது.

விலைப்பட்டுப்போன இஸ்ரவேல் புத்திரனை மீட்டுக்கொள்வதற்கான மீட்பின் கிரயத்தைப்பற்றியும் கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

அவன் தான் விலைப்பட்ட வருஷந்தொடங்கி, யூபிலி வருஷம்வரைக்கும் உண்டான காலத்தைத் தன்னை விலைக்குக் கொண்டவனுடன் கணக்குப்பார்க்கக்கடவன்; அவனுடைய விலைக்கிரயம் கூலிக்காரனுடைய காலக்கணக்குப்போல, வருஷத்தொகைக்கு ஒத்துப்பார்க்கவேண்டும். இன்னும் அநேக வருஷங்கள் இருந்தால், அவன் தன் விலைக்கிரயத்திலே அவைகளுக்குத் தக்கதைத் தன்னை மீட்கும்பொருளாகத் திரும்பக் கொடுக்கக்கடவன். யூபிலி வருஷம்மட்டும் மீதியாயிருக்கிற வருஷங்கள் கொஞ்சமேயானால், அவனோடே கணக்குப்பார்த்து, தன் வருஷங்களுக்குத்தக்கதை, தன்னை மீட்கும் பொருளாகத் திரும்பக் கொடுக்க வேண்டும் (லேவி 25:50-52) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

விலைப்பட்டுப்போன இஸ்ரவேல் புத்திரனை விலைக்கு வாங்கின இஸ்ரவேல் புத்திரன் அடிமையைப்போல ஊழியம் செய்ய நெருக்கக்கூடாது. அதுபோலவே அவனை விலைக்கு வாங்கின பரதேசியும் அந்நியனுமாயிருக்கிறவன், அவனை கொடூரமாய் ஆளக்கூடாது. இஸ்ரவேல் புத்திரன் அந்நியனிடத்தில் வருஷத்திற்கு வருஷம் கூலிபொருந்திக்கொண்ட கூலிக்காரனைப்போல, அவனிடத்தில் இருக்கவேண்டும்; அந்நியன் இஸ்ரவேல் புத்திரனை கொடூரமாய் ஆளக்கூடாது (லேவி 25:53).

எபிரெயரில் அடிமையானவன் ஆறு வருஷங்களுக்கு மட்டுமே கூலிக்காரனாக வேலைசெய்வான். அதற்குப் பின்பு, அவன் தன்னை மனப்பூர்வமாக ஒப்புக்கொடுத்தால் மட்டுமே அவனைக் கூலிக்காரனாக வேலைவாங்க முடியும் (யாத் 21:1-6).

தன்னை மீட்டுக்கொள்ள இஸ்ரவேல் புத்திரனுக்கு திராணியில்லையென்றால் அல்லது அவனை மீட்டுக்கொள்ள அவனுடைய இனத்தாரில் ஒருவனும் முன்வரவில்லையென்றால், இவனும் இவனோடேகூட இவன் பிள்ளைகளும் யூபிலி வருஷத்தில் விடுதலையாவார்கள் (லேவி 25:54). தன்னை மீட்கும் பொருளாக விலைக்கிரயத்தை கொடுக்க முடியாத இஸ்ரவேல் புத்திரன், யூபிலி வருஷத்திலே தானாகவே விடுதலையாவான். இது விலைப்பட்டுப்போன இஸ்ரவேல் புத்திரருக்கு கிடைத்திருக்கிற சிலாக்கியம்.

இஸ்ரவேல் புத்திரர் என் ஊழியக்காரர்; அவர்கள் நான் எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின என் ஊழியக்காரரே; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் (லேவி 25:55) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அந்நியரிடத்தில் விலைப்பட்டுப்போன எபிரெயரைப்பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. உன்னிடத்தில் இருக்கிற பரதேசியும் அந்நியனும் செல்வனாயிருக்க, அவனிடத்தில் இருக்கிற உன் சகோதரன் தரித்திரப்பட்டு, அந்தப் பரதேசிக்காவது, அந்நியனுக்காவது, பரதேசியின் குடும்பத்தாரில் எவனுக்காவது அவன் விலைப்பட்டுப்போனால், அவன் விலைப்பட்டுபோனபின் திரும்ப மீட்கப்படலாம் (லேவி 25:47-48).
2. அவனுடைய பிதாவின் சகோதரனாவது, அந்தச் சகோதரனுடைய புத்திரனாவது, அவன் குடும்பத்திலுள்ள அவனைச் சேர்ந்த இனத்தாரில் எவனாவது அவனை மீட்கலாம் (லேவி 25:48-49).
3. தன்னால் கூடுமானால், தன்னைத் தானே மீட்டுக்கொள்ளலாம் (லேவி 25:49).
4. அவன் தான் விலைப்பட்ட வருஷந் தொடங்கி, யூபிலி வருஷம்வரைக்கும் உண்டான காலத்தைத் தன்னை விலைக்குக் கொண்டவனுடன் கணக்குப் பார்க்கக்கடவன் (லேவி 25:50-52).
5. இவன் வருஷத்திற்கு வருஷம் கூலி பொருந்திக்கொண்ட கூலிக்காரனைப் போல, அவனிடத்தில் இருக்கவேண்டும் (லேவி 25:53).
6. அவன் இவனை உனக்கு முன்பாகக் கொடூரமாய் ஆளக்கூடாது.
7. இவன் மீட்டுக்கொள்ளப்படாதிருந்தால், இவனும் இவனோடேகூட இவன் பிள்ளைகளும் யூபிலி வருஷத்தில் விடுதலையாவார்கள் (லேவி 25:54-55).

அந்நியரிடத்தில் விலைப்பட்டுப்போன எபிரெயரை மீட்பது பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. எபிரெயரில் அடிமையாய் விலைப்பட்டுப் போனவன் ஆறு வருஷங்களுக்கு மட்டுமே வேலைசெய்வான். (யாத் 21:1-6). லேவி 25:40 ஆவது வசனத்தில் "யூபிலி வருஷம் மட்டும்" என்னும் வாக்கியம் யூபிலி வருஷத்திற்கு முந்திய ஆறு வருஷங்களைக் குறிக்கும். அடிமையானவன் தானாக மனமுவந்து ஒப்புக் கொண்டால், அவன் தன் வாழ்நாள் முழுவதும் எஜமானுக்குச் சேவைசெய்யலாம். (யாத் 21:1-6)

2. எபிரெயரில் அடிமையாய் விலைப்பட்டுப் போனவன் தன்னால் கூடுமானால், தன்னைத் தானே மீட்டுக்கொள்ளலாம். அல்லது அவன் குடும்பத்திலுள்ள அவனைச் சேர்ந்த இனத்தாரில் எவனாவது அவனை மீட்கலாம். (லேவி 25:47-49).

3. அவன் தான் விலைப்பட்ட வருஷந் தொடங்கி, யூபிலி வருஷம்வரைக்கும் உண்டான காலத்தைத் தன்னை விலைக்குக் கொண்டவனுடன் கணக்குப் பார்க்கக்கடவன்; (லேவி 25:48-53).

4. ஆறாவது வருஷத்தில் இவன் மீட்டுக்கொள்ளப்படாதிருந்தால், இவனும் இவனோடேகூட இவன் பிள்ளைகளும் யூபிலி வருஷத்தில் விடுதலையாவார்கள் (லேவி 25:54-55).

தலையீற்று
உபா 15:19-23

உபா 15:19. உன் ஆடுமாடுகளில் தலையீற்றாகிய ஆணையெல்லாம் உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தமாக்கக்கடவாய்; உன் மாட்டின் தலையீற்றை வேலைகொள்ளாமலும், உன் ஆட்டின் தலையீற்றை மயிர் கத்தரியாமலும் இருப்பாயாக.

உபா 15:20. கர்த்தர் தெரிந்துகொள்ளும் ஸ்தலத்திலே வருஷந்தோறும் நீயும் உன் வீட்டாருமாய் உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் அப்படிப்பட்டவைகளைப் புசிக்கக்கடவீர்கள்.

உபா 15:21. அதற்கு முடம் குருடு முதலான யாதொரு பழுது இருந்தால், அதை உன் தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடவேண்டாம்.

உபா 15:22. அப்படிப்பட்டதை நீ உன் வாசல்களிலே, கலைமானையும் வெளிமானையும் புசிப்பதுபோலப் புசிக்கலாம்; தீட்டுப்பட்டவனும் தீட்டுப்படாதவனும் அதைப் புசிக்கலாம்.

உபா 15:23. அதின் இரத்தத்தைமாத்திரம் சாப்பிடாமல், அதை தண்ணீரைப்போலத் தரையிலே ஊற்றிவிடக்கடவாய்.

மந்தையின் தலையீற்றுக்களைப்பற்றிய பிரமாணம் இந்த வசனப்பகுதியில் மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. "உன் ஆடுமாடுகளில் தலையீற்றாகிய ஆணையெல்லாம் உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தமாக்கக்கடவாய்; உன் மாட்டின் தலையீற்றை வேலைகொள்ளாமலும், உன் ஆட்டின் தலையீற்றை மயிர் கத்தரியாமலும் இருப்பாயாக" (உபா 15:19) என்று மோசே சொல்லுகிறார்.

ஆடுமாடுகளின் தலையீற்றுகளைப்பற்றிய பிரமாண விவரம் :

1. உன் ஆடுமாடுகளில் தலையீற்றாகிய ஆணையெல்லாம் உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தமாக்கவேண்டும். (யாத் 13; உபா 15:19).

2. உன் மாட்டின் தலையீற்றை வேலைகொள்ளாமலும், உன் ஆட்டின் தலையீற்றை மயிர் கத்தரியாமலும் இருப்பாயாக (உபா 15:19).

3. வருடந்தோறும் உன் ஆடுமாடுகளில் தலையீற்றாகியவைகளை கர்த்தருக்கென்று செலுத்தி, கர்த்தரை ஆராதனை செய்யவேண்டும் (உபா 15:20).

4. கர்த்தர் தெரிந்துகொள்ளும் ஸ்தலத்திலே வருஷந்தோறும் நீயும் உன் வீட்டாருமாய் உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் அப்படிப்பட்டவைகளைப் புசிக்க வேண்டும். (உபா 15:20; லேவி 7:15-16; எண் 18:18)

5. உன் ஆடுமாடுகளில் முடம் குருடு முதலான யாதொரு பழுது இருந்தால், அதை உன் தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடவேண்டாம். அப்படிப்பட்டதை நீ உன் வாசல்களிலே, கலைமானையும் வெளிமானையும் புசிப்பதுபோலப் புசிக்கலாம் (உபா 15:21-22).

6. தீட்டுப்பட்டவனும் தீட்டுப்படாதவனும் அதைப் புசிக்கலாம் (உபா 15:22).

7. அதின் இரத்தத்தை மாத்திரம் சாப்பிடாமல், அதை தண்ணீரைப்போலத் தரையிலே ஊற்றிவிட வேண்டும். (உபா 15:23).

தலையீற்றுக்களைப்பற்றிய பிரமாணம் யாத்திராகமம் 13:1,2 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

முதற்பேறு அனைத்தும் கர்த்தருடையது. கர்த்தர் எகிப்து தேசத்திலே எகிப்தியரின் முதற்பேறு அனைத்தையும் அழித்துப்போட்டார். இஸ்ரவேலரின் முதற்பேறுகளை கர்த்தர் பாதுகாத்தார். ஆகையினால் முதற்பேறு அனைத்தும் கர்த்தருடையது. முதற்பேறு அனைத்தையும் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பரிசுத்தப்படுத்தவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "இஸ்ரவேல் புத்திரருக்குள் மனிதரிலும் மிருகஜீவன்களிலும் கர்ப்பந்திறந்து பிறக்கிற முதற்பேறனைத்தையும் எனக்குப் பரிசுத்தப்படுத்து; அது என்னுடையது" (யாத் 13:1,2) என்று சொல்லுகிறார்.

"எனக்குப் பரிசுத்தப்படுத்து" என்னும் வாக்கியம், பாவத்திலிருந்து சுத்திகரிப்பது என்றோ அல்லது பழைய மனுஷனைக் களைந்துபோடுவது என்றோ பொருள்படாது. தேவனுடைய பரிசுத்தக் காரியங்களுக்காக மனுஷருடைய தலைப்பிள்ளைகளையும், மிருகங்களின் தலையீற்றையும் வேறுபிரிக்க வேண்டும் என்பது இதன் பொருளாகும் (யாத் 13:2,12).

கர்த்தர் நமக்கு முதன்மையானவராகவும், மேன்மையானவராகவும் இருக்கிறார். அவரே நமக்கு விசேஷமானவர். நம்முடைய குடும்பத்தில் நமக்கு முதற்பேறுகள் முக்கியமானவை. அவை விசேஷமானவை. நம்முடைய ஜீவியத்தில் நமக்கு எது முக்கியமானதாகவும், மேன்மையானதாகவும், விசேஷமானதாகவும் இருக்கிறதோ, அதை கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தாருடைய குடும்பங்களில், அவர்களுக்கு பிறக்கிற முதல் பிள்ளைகள், அவர்களுக்கு மிகவும் விசேஷமானவர்கள். தலைப்பிள்ளைகள் குடும்பத்திற்கு சந்தோஷத்தையும், நம்பிக்கையும் கொடுக்கும். ஆகையினால் அந்த முதற்பேறுகள் தம்முடையது என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்" (எபி 12:23,24).

"தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்; எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்" (ரோம 8:29,30).

நம்முடைய இரட்சிப்பின் அனுபவம், மறுபடியும் பிறக்கும் அனுபவமாயிருக்கிறது. நாம் பரலோகத்திலிருந்து பிறக்கும் வல்லமையினால் கிறிஸ்துவுக்குள் மறுபடியும் பிறந்திருக்கிறோம். மறுபடியும் பிறந்த விசுவாசிகள் எல்லோருமே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முதற்பேறானவர்களாகயிருக்கிறோம். இந்த சிலாக்கியம் விசுவாசிகளாகிய எல்லோருக்கும் கிடைத்திருக்கிறது. நாம் கர்த்தருடைய பிள்ளைகளாகயிருப்பதினால், அவருக்கு சுதந்தரராகவும் இருக்கிறோம்.

மறுபடியும் பிறந்த விசுவாசிகளாகிய நாம், கர்த்தருக்கு முதற்பேறானவர்களாகயிருப்பதினால் நாம் கர்த்தருடையவர்கள். கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம், முதற்பேறானவர்களாகிய நாம், நம்மை கர்த்தருக்கு பரிசுத்தப்படுத்த வேண்டும்.

பரிசுத்தமாக்கப்பட்ட ஆடுமாடுகளை வேலை கொள்ளக்கூடாது. அவற்றின் மயிரையும் கத்தரிக்கக்கூடாது. கர்த்தருக்கு இவை பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் இவை கர்த்தருக்கே உரியது. இவற்றைக் கர்த்தர் தெரிந்துகொள்ளும் ஸ்தலத்திலே வருஷந் தோறும் அவனும், அவன் வீட்டாரும் புசிக்க வேண்டும் (உபா 15:19-20).

இந்த வசனப்பகுதியில் மாட்டின் தலையீற்று என்பது பசுமாட்டின் பெண்கன்றுக்குட்டியைக் குறிப்பிடும். அதுபோலவே ஆட்டின் தலையீற்று என்பது ஆட்டின் பெண்குட்டியைக் குறிப்பிடும் வார்த்தையாகும்.

"கர்த்தர் தெரிந்துகொள்ளும் ஸ்தலத்திலே வருஷந்தோறும் நீயும் உன் வீட்டாருமாய் உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் அப்படிப்பட்டவைகளைப் புசிக்கக்கடவீர்கள்" (உபா 15:20) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

மந்தையிலுள்ள மாடுகளும் ஆடுகளும், அது ஆணாகயிருந்தாலும் அது பெண்ணாயிருந்தாலும், அதிலே முடம் குருடு முதலான யாதொரு பழுது இருந்தால், அதை தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடக்கூடாது (உபா 15:21). இப்படிப்பட்ட முடமான மிருகங்களை கர்த்தருடைய சந்நிதியில் புசிக்கவும் கூடாது. கர்த்தரைக் கனம்பண்ணுவதற்கு, முடம் குருடு முதலான பழுதுள்ள மிருகங்கள் தகுதியற்றவையாக கருதப்படுகிறது.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு இப்படிப்பட்ட நியதிகள் எதுவும் கொடுக்கப்படவில்லை. நம்மிடத்தில் சரீரப்பிரகாரமான பழுது இருந்தாலும் நாமும் கர்த்தரை மகிமைப்படுத்தலாம். முடமானவர்களும், அங்கவீனமுள்ளவர்களும் கர்த்தருக்கு ஊழியம் செய்யலாம். நம்முடைய முடமோ, குருடோ அல்லது சரீரத்தில் காணப்படுகிற வேறு எந்த விதமான அங்கவீனமோ கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்கும், அவரை கனம்பண்ணுவதற்கும் தடையாயில்லை.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் ஆடுமாடுகளின் தலையீற்றாகிய ஆண்கள் மாத்திரமே கர்த்தருக்கு பரிசுத்தமாக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு இப்படிப்பட்ட பிரமாணம் கொடுக்கப்படவில்லை. ஒரு குடும்பத்தில் தலைப்பிள்ளையாகயிருந்தாலும் அல்லது அது கடைசிப்பிள்ளையாகயிருந்தாலும், எல்லா பிள்ளைகளும் கர்த்தருக்கு ஊழியம் செய்யலாம். அந்தப் பிள்ளை ஆண்பிள்ளையாகயிருந்தாலும், பெண்பிள்ளையாகயிருந்தாலும், அந்தப் பிள்ளைக்கு கர்த்தருடைய ஊழியத்தை செய்ய தடை எதுவுமில்லை.

ஆடு மாடுகளில் முடம் குருடு முதலான யாதொரு பழுது இருந்தால், அதை கர்த்தருக்கு பலியிடவும் கூடாது. அதை கர்த்தருடைய சந்நிதியில் புசிக்கவும் கூடாது. அப்படிப்பட்டதை இஸ்ரவேல் புத்திரர், தங்கள் வாசல்களிலே, கலைமானையும் வெளிமானையும் புசிப்பதுபோலப் புசிக்கலாம்; தீட்டுப்பட்டவனும் தீட்டுப்படாதவனும் அதைப் புசிக்கலாம். அதின் இரத்தத்தைமாத்திரம் சாப்பிடாமல், அதை தண்ணீரைப்போலத் தரையிலே ஊற்றிவிடவேண்டும் (உபா 15:22,23).

16 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொரு வருஷமும் வருஷாந்தர பண்டிகைகளை ஆசரிக்கவேண்டுமென்று கர்த்தர் நியமனம்பண்ணியிருக்கிறார். அதுபற்றிய பிரமாணம் இந்த அதிகாரத்தில் மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

பஸ்கா பண்டிகை (உபா 16:1-8). பெந்தெகொஸ்தே பண்டிகை (உபா 16:9-12). கூடாரங்களின் பண்டிகை (உபா 16:13-15). இந்தப் பண்டிகைகளின்போது இஸ்ரவேல் புத்திரரின் ஆண்மக்கள் யாவரும், தங்கள் தேவனாகிய கர்த்தர் தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே, அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து காணப்படவேண்டும் (உபா 16:16,17).

நியாயாதிபதிகள் ஏற்படுத்தப்பட வேண்டிய பிரமாணமும், அவர்களுடைய நியாயவிசாரணைகளைப்பற்றிய பிரமாணமும் (உபா 16:18-20). விக்கிரகாராதனைக்கு விரோதமான பிரமாணம் (உபா 16:21,22).

பஸ்கா பண்டிகை
உபா 16:1-8

உபா 16:1. ஆபிப் மாதத்தைக் கவனித்திருந்து, அதில் உன் தேவனாகிய கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்கக்கடவாய்; ஆபிப்மாதத்திலே இராக்காலத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினாரே.

உபா 16:2. கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானத்தில், உன் தேவனாகிய கர்த்தருக்குப் பஸ்காவின் பலியாகிய ஆடுமாடுகளைப் பலியிடுவாயாக.

உபா 16:3. நீ எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட நாளை நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் நினைக்கும்படி, பஸ்காப்பலியுடனே புளிப்புள்ள அப்பம் புசியாமல், சிறுமையின் அப்பமாகிய புளிப்பில்லாத அப்பங்களை ஏழுநாள்வரைக்கும் புசிக்கக்கடவாய், நீ தீவிரமாய் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்டபடியினால் இப்படிச் செய்யவேண்டும்.

உபா 16:4. ஏழுநாள் அளவும் உன் எல்லைகளிலெங்கும் புளிப்புள்ள அப்பம் உன்னிடத்தில் காணப்படலாகாது; நீ முதல்நாள் சாயங்காலத்தில் இட்ட பலியின் மாம்சத்தில் ஏதாகிலும் இராமுழுவதும் விடியற் காலம்வரைக்கும் வைக்கவேண்டாம்.

உபா 16:5. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் உன்னுடைய வாசல்களில் எதிலும் நீ பஸ்காவை அடிக்கவேண்டாம்.

உபா 16:6. உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே, நீ எகிப்திலிருந்து புறப்பட்ட நேரமாகிய சாயங்காலத்திலே சூரியன் அஸ்தமிக்கிறபோது பஸ்காவை அடித்து,

உபா 16:7. உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்துகொண்ட ஸ்தானத்திலே, அதைப் பொரித்துப் புசித்து, விடியற்காலத்திலே உன் கூடாரங்களுக்குத் திரும்பிப்போவாயாக.

உபா 16:8. நீ ஆறுநாளும் புளிப்பில்லாத அப்பம் புசிக்கவேண்டும், ஏழாம் நாள் உன் தேவனாகிய கர்த்தருக்கு ஆசரிக்கப்படும் நாளாயிருக்கும்; அதிலே யாதொரு வேலையும் செய்யவேண்டாம்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரும், கர்த்தருடைய இஸ்ரவேலரும் நெருங்கிய ஐக்கியத்திலிருக்கிறார்கள். தம்முடைய பிள்ளைகள் தம்முடைய சமுகத்திலே கூடிவரவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். இதற்காக கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு மூன்று வருஷாந்தர பண்டிகைகளை நியமித்திருக்கிறார். இந்தப் பண்டிகைகளின்போது இஸ்ரவேல் புத்திரரின் ஆண்மக்கள் யாவரும், கர்த்தருடைய சமுகத்திலே கூடிவரவேண்டும்.

பஸ்கா பண்டிகை, பெந்தெகொஸ்தே பண்டிகை, கூடாரப்பண்டிகை ஆகியவை கர்த்தர் நியமித்திருக்கிற மூன்று வருஷாந்தர பண்டிகைகளாகும். இந்தப் பண்டிகைகளைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் ஏற்கெனவே பல வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தச் செய்தி இந்த வசனப்பகுதியிலும் மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

பஸ்கா பண்டிகை இஸ்ரவேல் புத்திரருக்கு மிகவும் முக்கியமான பண்டிகையாகும். அவர்கள் ஆபிப் மாதத்தில் பஸ்காவை ஆசரிக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஆபிப் மாதம் முழுவதுமே பண்டிகையை ஆசரிக்கும் பரிசுத்தமான மாதமாயிருக்கிறது. இந்த மாதத்தின் மத்தியிலே அவர்கள் பஸ்காவை ஆசரிப்பது வழக்கம்.

"ஆபிப் மாதத்தைக் கவனித்திருந்து, அதில் உன் தேவனாகிய கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்கக்கடவாய்; ஆபிப்மாதத்திலே இராக்காலத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினாரே" *(உபா 16:1)* என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

ஆபிப் என்பது எகிப்தியருக்குப் பச்சைக்கதிரைக் குறிக்கும் வார்த்தையாகும். அதிலும் சிறப்பாக அது வாற்கோதுமைக் கதிரைக் குறிக்கும். ஆபிப் மாதத்தில் தங்கள் விளைச்சலின் முதற்பலனைக் கர்த்தருக்குப் படைப்பார்கள். இந்த வசனத்திற்குப் பின்பு, ஆபிப் மாதத்தைப் பற்றி ஒன்றும் கூறப்படவில்லை. ஆயினும் இந்த வார்த்தை இதற்கு முன்பு நான்கு இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. *(யாத் 13:4; யாத் 23:15; யாத் 34:18).*

செப்துவஜிந்த் பதிப்பில் ஆபிப் என்பதற்கு புதிய காரியங்களின் மாதம் என்று பொருள். இதன் பின்பு, ஆபிப் என்னும் பெயருக்குப் பதிலாக நிசான் என்னும் பெயர் வழங்கப்பட்டிருக்கிறது. இதற்கு பூக்களின் மாதம் என்று பொருள். *(நெகே 2:1; எஸ் 3:7).* ஆபிப் மாதத்தில் இஸ்ரவேல் புத்திரரின் பொதுவான தேவாலயத்தில் ஜனங்கள் ஒன்றுகூடி கர்த்தரை ஆராதிப்பார்கள். வருஷத்திற்கு மூன்று பண்டிகைகளை இஸ்ரவேல் புத்திரர் ஆசரிக்க வேண்டும். *(உபா 16:2,6,7,11,15,16).*

இஸ்ரவேல் புத்திரர் இப்போது கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள். கடந்த 39 வருஷக்காலமாக இவர்கள் எந்தப் பண்டிகையையும் ஆசரிக்கவில்லை. வனாந்தரத்தில் ஒரே ஒரு பஸ்காவை மட்டுமே இவர்கள் ஆசரித்திருக்கிறார்கள். *(எண் 9).*

இஸ்ரவேல் புத்திரர் ஆபிப் மாதத்திலே, ஒரு வாரத்திற்கு மாத்திரமே பஸ்கா பண்டிகையை ஆசரிப்பார்கள். ஆனாலும் பஸ்கா பண்டிகை ஆரம்பமாவதற்கு முன்பாக அவர்கள் ஏராளமான ஆயத்த வேலைகளை செய்யவேண்டும். ஆயத்த நாட்கள் எல்லாமே இஸ்ரவேல் சபையாருக்கு பரிசுத்தமான நாட்களாயிருக்கும்.

பிற்காலங்களில் இஸ்ரவேல் சபையார், பஸ்கா பண்டிகை ஆரம்பமாவதற்கு முன்பாக அநேக ஆயத்த வேலைகளையும், பஸ்கா பண்டிகை முடிந்த பின்பு ஏராளமான துதிகளையும் ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்கிறார்கள். இதனால் அவர்களுக்கு ஆபிப் மாதம் முழுவதுமே பஸ்கா பண்டிகையோடு தொடர்புடைய பரிசுத்த மாதமாயிற்று.

பஸ்கா பண்டிகையை எவ்வாறு ஆசரிக்கவேண்டுமென்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய பிரமாணத்தை ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். கர்த்தர் சொன்ன வார்த்தைகளை மோசே இப்போது மறுபடியுமாய் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி,

"கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானத்தில், உன் தேவனாகிய கர்த்தருக்குப் பஸ்காவின் பலியாகிய ஆடுமாடுகளைப் பலியிடுவாயாக" *(உபா 16:2)* என்றும்,

"நீ எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட நாளை நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் நினைக்கும்படி, பஸ்காப்பலியுடனே புளிப்புள்ள அப்பம் புசியாமல், சிறுமையின் அப்பமாகிய புளிப்பில்லாத அப்பங்களை ஏழுநாள்வரைக்கும் புசிக்கக்கடவாய், நீ தீவிரமாய் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்டபடியினால் இப்படிச் செய்யவேண்டும்" (உபா 16:3) என்றும்,

"ஏழுநாள் அளவும் உன் எல்லைகளிலெங்கும் புளிப்புள்ள அப்பம் உன்னிடத்தில் காணப்படலாகாது; நீ முதல்நாள் சாயங்காலத்தில் இட்ட பலியின் மாம்சத்தில் ஏதாகிலும் இராமுழுவதும் விடியற் காலம்வரைக்கும் வைக்கவேண்டாம்" (உபா 16:4) என்றும் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் தாங்கள் விரும்புகிற எந்த இடத்திலும் பஸ்காவின் பலியாகிய ஆடுகளை செலுத்துவதற்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானத்தில் மாத்திரமே, இஸ்ரவேல் புத்திரர் பஸ்காவின் பலியாகிய ஆடுமாடுகளை பலியிடவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு, பஸ்காவின் பலியாகிய ஆடுமாடுகளை பலியிடவேண்டிய ஸ்தலத்தைப்பற்றிச் சொல்லும்போது,

"உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் உன்னுடைய வாசல்களில் எதிலும் நீ பஸ்காவை அடிக்கவேண்டாம்" (உபா 16:5) என்றும்,

"உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே, நீ எகிப்திலிருந்து புறப்பட்ட நேரமாகிய சாயங்காலத்திலே சூரியன் அஸ்தமிக்கிறபோது பஸ்காவை அடித்து, உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்துகொண்ட ஸ்தானத்திலே, அதைப் பொரித்துப் புசித்து, விடியற்காலத்திலே உன் கூடாரங்களுக்குத் திரும்பிப்போவாயாக" (உபா 16:6,7) என்றும் சொல்லுகிறார்.

வீடுகளில் பஸ்காவை ஆசரிக்கக்கூடாது. ஆசரிப்புக் கூடாரம் இருக்கும் இடத்தில்தான் பஸ்காவை ஆசரிக்க வேண்டும். (உபா 16:5-6). இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தில் இருந்தபோது, ஒவ்வொரு குடும்பத்தாரும் ஒரு பஸ்கா ஆட்டுக் குட்டியை அடித்து அதன் இரத்தத்தைத் தங்கள் வீட்டு நிலை வாசல்களில் தெளித்து, ஆட்டுக் குட்டியின் மாம்சத்தைப் புசித்தார்கள். (யாத் 12).

சாயங்காலத்திலே சூரியன் அஸ்தமிக்கிற போது பஸ்காவை அடிக்கவேண்டும். எகிப்தில் இஸ்ரவேல் புத்திரர் சாயங்காலத்தில் பஸ்காவை அடித்தார்கள். (யாத் 12:6) ஆயினும், நடு இரவு வரையிலும் அவர்கள் எகிப்து தேசத்தை விட்டுப் புறப்பட்டுப் போகவில்லை. (யாத் 29-42).

இஸ்ரவேல் புத்திரர் பஸ்கா பண்டிகையை ஆசரிக்கும் ஏழு நாளளவும் புளிப்புள்ள அப்பங்களை புசிக்கக்கூடாது. அந்த ஏழு நாளளவும் அவர்களுடைய எல்லைகள் எங்கிலும் புளிப்புள்ள அப்பம் அவர்களிடத்தில் காணப்படக்கூடாது.

"நீ ஆறுநாளும் புளிப்பில்லாத அப்பம் புசிக்கவேண்டும், ஏழாம் நாள் உன் தேவனாகிய கர்த்தருக்கு ஆசரிக்கப்படும் நாளாயிருக்கும்; அதிலே யாதொரு வேலையும் செய்யவேண்டாம்" (உபா 16:8) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் அப்போஸ்தலர் பவுல் புளிப்பில்லாத அப்பத்திற்கு ஆவிக்குரிய விளக்கம் சொல்லுகிறார்.

"ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே" (1கொரி 5:7).

"ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக் கடவோம்" (1கொரி 5:8).

பஸ்கா பண்டிகையைப்பற்றிய விவரம் யாத்திராகமம் 12:1-20,43-51 ஆகிய வசனப்பகுதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

கர்த்தர் மோசேக்கும் ஆரோனுக்கும் பஸ்காவைப்பற்றிய நியமத்தைக் கொடுக்கிறார். கர்த்தர் எகிப்து தேசத்தில் மோசேயையும் ஆரானையும் நோக்கி, "இந்த மாதம் உங்களுக்குப் பிரதான மாதம்; இது உங்களுக்கு வருஷத்தின் முதலாம் மாதமாயிருப்பதாக" (யாத் 12:1,2) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரருக்கு இதுவரையிலும், வருஷத்தின் முதலாவது மாதம் செப்டம்பர் மாதத்தின் நடுவில் வரும். கர்த்தர் முதலாவது மாதத்தை மாற்றுகிறார். இனிமேல் அவர்களுடைய வருஷத்தின் முதலாம் மாதம் மார்ச் மாதத்தின் நடுவில் வரும்.

நாம் ஒவ்வொரு வருஷத்தின் முதல் மாதத்தையும் கர்த்தரோடு ஆரம்பம் பண்ணவேண்டும். நம்முடைய ஜீவியம் கர்த்தரோடு ஐக்கியமாயிருக்கும்போது, வருஷத்தின் முதலாம் மாதத்தையும், கர்த்தரோடு ஆரம்பிப்பது நமக்கு ஆசீர்வாதமாயிருக்கும்.

இஸ்ரவேல் புத்திரருக்கு, வருஷத்தின் முதலாம் மாதம் வசந்தகாலமாயிருக்கிறது. மரங்களிலும் தாவரங்களிலும் புதிய இலைகள் துளிக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கர்த்தருடைய புதிய கிருபை கிடைத்திருக்கிறது. அவர்களுடைய புதுவாழ்வு இப்போது ஆரம்பமாகிறது.

மோசே கர்த்தருடைய கட்டளையின் பிரகாரமாக எகிப்து தேசத்தின்மீது பத்து வாதைகளை வரப்பண்ணுகிறார். ஒவ்வொரு வாதை வரும்போதும், இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டுப்போகும் நாள் சமீபமாய் வருகிறது. இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலே நானூற்று முப்பது வருஷங்கள் அடிமைகளாகயிருந்தார்கள். அவர்கள் இப்போது திடீரென்று விடுவிக்கப்படுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு தங்களுடைய உடமைகளையெல்லாம் சேகரித்து எடுத்துக்கொண்டுபோக போதுமான காலஅவகாசம் கொடுக்கப்படவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் அவசரம் அவசரமாக எகிப்து தேசத்தைவிட்டு புறப்பட்டுப்போகிறார்கள். தங்கள் தேசத்தைவிட்டு சீக்கிரத்தில் புறப்பட்டுப்போகுமாறு, எகிப்தியர்களும் இஸ்ரவேல் புத்திரரை துரிதப்படுத்துகிறார்கள். தங்களுக்கு எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை கிடைக்கும் என்னும் நம்பிக்கைகூட இஸ்ரவேல் புத்திரருடைய மனதில் இதுவரையிலும் ஏற்படவில்லை. இப்போது இஸ்ரவேல் புத்திரர் விடுவிக்கப்படுவது அவர்களுக்கு மிகுந்த ஆச்சரியமாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரருக்கு அவர்களுடைய சுயபலத்தினாலோ அல்லது சுயபராக்கிரமத்தினாலோ எகிப்து தேசத்திலிருந்து விடுதலை கிடைக்கவில்லை. கர்த்தருடைய பலத்த புயத்தினால் அவர்களுக்கு விடுதலை கிடைத்திருக்கிறது. ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர், எகிப்து தேசத்தைவிட்டு புறப்பட்டுப்போகும் முன்பாக, கர்த்தரை கனம்பண்ணுகிறார்கள். கர்த்தர் அவர்களுக்கு கட்டளையிட்டிருக்கிற பஸ்காவை, பயபக்தியோடு ஆசரிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டுப்போவதற்கு, கர்த்தர் ஒரு இரவு வேளையை நியமித்திருக்கிறார். அந்த இரவு வேளையில் தானே, இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும், எகிப்து தேசத்தை விட்டு புறப்பட்டுப்போகவேண்டும். அந்த நாளிலே அவர்கள் பஸ்காவை ஆசரிக்கவேண்டும்.

இஸ்ரவேல் சபையார் யாவரும் பஸ்காவை எவ்வாறு ஆசரிக்கவேண்டும் என்றும் கர்த்தர் கட்டளை கொடுக்கிறார். கர்த்தர் இந்தக் கட்டளையை, மோசே ஆரோன் ஆகியோர் மூலமாக இஸ்ரவேல் சபையார் யாவருக்கும் சொல்லுகிறார்.

பஸ்காவை ஆசரிக்க வேண்டிய விதமாவது இந்த மாதம் பத்தாம் தேதியில் வீட்டுத்தலைவர்கள், வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டியாக, ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்து கொள்ளக்கடவர்கள்.

ஒரு வீட்டில் இருக்கிறவர்கள் ஒரு ஆட்டுக்குட்டியைப் புசிக்கிறதற்குப் போதுமான பேர்களாயிராமற்போனால், அவனும் அவன் சமீபத்திலிருக்கிற அவனுடைய அயல்வீட்டுக்காரனும், தங்களிடத்திலுள்ள ஆத்துமாக்களின் இலக்கத்திற்குத்தக்கதாக ஒரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ள வேண்டும்; அவனவன் புசிப்புக்குத்தக்கதாக இலக்கம் பார்த்து, ஆட்டுக்குட்டியைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

அந்த ஆட்டுக்குட்டி பழுதற்றதும் ஆணும் ஒரு வயதுள்ளதுமாய் இருக்க வேண்டும்; செம்மறியாடுகளிலாவது வெள்ளாடுகளிலாவது அதைத் தெரிந்து கொள்ளலாம் (யாத் 12:3-5).

பஸ்கா ஆட்டுக்குட்டியை, இந்த மாதம் பதினாலாம் தேதி வரைக்கும் வைத்திருந்து, இஸ்ரவேல் சபையின் ஒவ்வொரு கூட்டத்தாரும் சாயங்காலத்தில் அதை அடிக்கவேண்டும் (யாத் 12:6).

பஸ்கா ஆட்டுக்குட்டியை அடிப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன்பாகவே, அந்த ஆட்டுக்குட்டியை அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். அவர்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியை பத்தாம் தேதியிலே தெரிந்துகொண்டு அதை பதினாலாம் தேதி சாயங்காலத்திலே அடிக்கவேண்டும்.

பஸ்கா கர்த்தருடைய நியமம். கர்த்தர் தங்களுக்கு செய்திருக்கிற நன்மைகளை நினைவுகூரும் வண்ணமாக, இஸ்ரவேல் புத்திரர் பஸ்காவை ஆசரித்து கர்த்தரை கனம்பண்ணுகிறார்கள். பஸ்காவை எவ்வாறு ஆசரிக்கவேண்டும் என்று கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறாரோ, அதன் பிரகாரமாகவே அவர்கள் பஸ்காவை ஆசரிக்கிறார்கள்.

கர்த்தர் எகிப்து தேசத்தின்மீது வாதைகளை வரப்பண்ணுகிறார். அந்த வாதைகள் இஸ்ரவேல் புத்திரர்மீது வரவில்லை. கர்த்தர் தம்முடைய ஜனத்தை வாதைகளுக்கு தப்புவிக்கப்பண்ணுகிறார். எகிப்தியர்மீது வந்த வாதை, இஸ்ரவேல் புத்திரர்மீது வராமலிருப்பது கர்த்தருடைய சுத்தகிருபை. கர்த்தர் தங்களுக்கு செய்த எல்லா நன்மைகளையும் இஸ்ரவேல் புத்திரர் நினைவுகூர்ந்து, பஸ்காவை ஆசரிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் பதினாலாம்தேதி சாயங்காலத்திலே பஸ்கா ஆட்டுக்குட்டியை அடித்து, அன்று ராத்திரியிலே அதின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு, புளிப்பில்லா அப்பத்தோடும் கசப்பான கீரையோடும் அதைப் புசிக்க வேண்டும் (யாத் 12:8).

இஸ்ரவேல் புத்திரர் பஸ்கா ஆட்டுக்குட்டியை எவ்வாறு புசிக்கவேண்டும் என்றும் கர்த்தர் கட்டளை கொடுக்கிறார். "அதைப் புசிக்கவேண்டிய விதமாவது, நீங்கள் உங்கள் அரைகளில் கச்சை கட்டிக்கொண்டும், உங்கள் கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டும், உங்கள் கையில் தடி பிடித்துக்கொண்டும் அதைத் தீவிரமாய்ப் புசிக்கக்கடவீர்கள்; அது கர்த்தருடைய பஸ்கா" (யாத் 12:11).

இஸ்ரவேல் புத்திரர் அன்று இராத்திரியிலே பஸ்கா ஆட்டுக்குட்டி முழுவதையும் புசித்துவிடவேண்டும். அதிலே ஒன்றையும் விடியற்காலம் மட்டும் மீதியாக வைக்காமல், விடியற்காலம்மட்டும் அதிலே மீதியாய் இருக்கிறதை அக்கினியால் சுட்டெரிக்க வேண்டும் (யாத் 12:10).

கர்த்தர் நமக்கு அன்றன்றுள்ள அப்பத்தைக் கொடுத்து, நம்மைப் போஷிக்கிறார். நாம் நாளையதினத்து போஜனத்திற்காக கவலைப்பட வேண்டியதில்லை. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய தெய்வீக பராமரிப்பை உணரவேண்டும். ஆகையினால் அவர்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியின் மாம்சத்தை விடியற்காலம் மட்டும் மீதியாக வைக்கக்கூடாது. கர்த்தரே இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்துகிறார். தங்களை வழிநடத்துகிற கர்த்தர், தங்களைப் போஷிப்பார் என்று இஸ்ரவேல் புத்திரர் நம்பவேண்டும்.

பஸ்கா ஆட்டுக்குட்டியின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு, புளிப்பில்லா அப்பத்தோடும் கசப்பான கீரையோடும் அதைப் புசிக்க வேண்டும். பச்சையாயும் தண்ணீரில் அவிக்கப்பட்டதாயும் அல்ல; அதின் தலையையும் அதின் தொடைகளையும் அதற்குள்ள யாவையும் ஏகமாய் நெருப்பினால் சுட்டதாய் அதைப் புசிக்கவேண்டும் (யாத் 12:8,9).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தைவிட்டு புறப்பட்டுப்போகும் நாளை மறவாமல் நினைவுகூரவேண்டும். அவர்களுடைய பின்சந்ததியாரும் பஸ்கா பண்டிகையை தங்கள் தலைமுறை தோறும் நித்திய நியமமாக ஆசரிக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் பஸ்கா பண்டிகையை எவ்வாறு ஆசரிக்கவேண்டும் என்றும் கர்த்தர் அவர்களுக்கு கட்டளை கொடுக்கிறார். அதன் விவரம் வருமாறு :

அந்த நாள் அவர்களுக்கு நினைவுகூருதலான நாளாய் இருக்க வேண்டும்; அவர்கள் அதைக் கர்த்தருக்குப் பண்டிகையாக ஆசரிக்கவேண்டும். அதை தங்கள் தலைமுறைதோறும் நித்திய நியமமாக ஆசரிக்கவேண்டும்.

புளிப்பில்லா அப்பத்தை ஏழுநாளளவும் புசிக்கவேண்டும். முதலாம் நாளில்தானே புளித்தமாவை தங்கள் வீடுகளிலிருந்து நீக்கவேண்டும்; முதலாம்நாள் தொடங்கி ஏழாம் நாள்வரைக்கும் புளித்த அப்பம் புசிக்கிறவன் எவனோ அந்த ஆத்துமா இஸ்ரவேலிலிருந்து அறுப்புண்டுபோவான்.

முதலாம் நாளில் பரிசுத்த சபை கூடுதலும், ஏழாம் நாளிலும் பரிசுத்த சபைகூடுதலும் இருக்கவேண்டும்; அவைகளில் ஒரு வேலையும் செய்யப்படலாகாது; அவரவர் சாப்பிடுகிறவதற்குத் தேவையானதுமாத்திரம் உங்களால் செய்யப்படலாம்.

இஸ்ரவேல் புத்திரர் புளிப்பில்லா அப்பப்பண்டிகையை ஆசரிக்கவேண்டும்; இந்த நாளில்தான் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் சேனைகளை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினார்; ஆகையால், இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறைதோறும் நித்திய நியமமாக இந்த நாளை ஆசரிக்கக்கவேண்டும்.

முதலாம் மாதம் பதினாலாம் தேதி சாயங்காலந்தொடங்கி மாதத்தின் இருபத்தோராம் தேதி சாயங்காலம்வரைக்கும் புளிப்பில்லா அப்பம் புசிக்கக்கவேண்டும்.

ஏழுநாளளவும் தங்கள் வீடுகளில் புளித்த மா காணப்படலாகாது; எவனாகிலும் புளிப்பிடப்பட்டதைப் புசித்தால், அவன் பரதேசியானாலும் சுதேசியானாலும், அந்த ஆத்துமா இஸ்ரவேல் சபையில் இராமல் அறுப்புண்டுபோவான்.

புளிப்பிடப்பட்ட யாதொன்றையும் அவர்கள் புசிக்கக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் புளிப்பில்லா அப்பம் புசிக்கக்கவேண்டும் (யாத் 12:14-20).

இஸ்ரவேல் புத்திரர் பஸ்கா பண்டிகையை ஏழுநாட்களுக்கு ஆசரிக்கவேண்டும். இந்த ஏழுநாட்களிலும் அவர்கள் புளிப்பில்லா அப்பத்தை மாத்திரம் புசிக்கவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டுப்போன அந்த இராத்திரியிலே, புளிப்பில்லா அப்பத்தைப் புசித்தார்கள். அந்த நாளை நினைவுகூரும் வண்ணமாக, இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும், ஒவ்வொரு வருஷமும், பஸ்கா பண்டிகையின்போது, ஏழுநாட்களுக்கு புளிப்பில்லா அப்பத்தை மாத்திரம் புசிக்கவேண்டும்.

பஸ்கா ஆட்டுக்குட்டி இயேசு கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறது. "ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலி யிடப்பட்டிருக்கிறாரே" (1கொரி 5:7).

பஸ்காவின்போது ஆட்டுக்குட்டி அடிக்கப்படுகிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே தேவஆட்டுக்குட்டியாகயிருக்கிறார். "மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவா 1:29) என்று சொன்னார்.

வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகத்தில் ஆட்டுக்குட்டியானவரைப்பற்றி பல வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவானவர் சாந்தகுணமுள்ள ஆட்டுக்குட்டியைப்போல இருக்கிறார். அவர் மயிர்க்கத்தரிக்கிறவர்களுக்கு முன்பாக, சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப்போல அமைதியாகயிருக்கிறார். அவர் அடிக்கப்படும்போது தம்முடைய பாடுகளை பொறுமையாக சகித்துக்கொள்கிறார்.

பஸ்கா ஆட்டுக்குட்டி பழுதற்றதும், ஆணும், ஒரு வயது உள்ளதுமாயிருக்கவேண்டும் (யாத் 12:5). ஆட்டுக்குட்டிக்கு ஒரு வயது என்பது, அதன் ஜீவியத்தின் பிரதான பகுதி. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய ஜீவியத்தின் பிரதான பகுதியில், தம்மை அடிக்கப்படுவதற்கு ஒப்புக்கொடுத்தார். கிறிஸ்துவானவர் பெத்லகேமிலே சிறுபிள்ளையாகயிருந்தபோது, அவர் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுக்கவில்லை. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முப்பத்து மூன்றரை வயதாகும்போது, அவர் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார்.

பஸ்கா ஆட்டுக்குட்டி பழுதற்றதாக இருக்கவேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் பாவம் எதுவுமில்லை. அவர் பரிசுத்தர்.

"குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே" (1பேது 1:19).

இஸ்ரவேல் புத்திரரின் வீட்டுத்தலைவர்கள் வருஷத்தின் முதலாம் மாதம் பத்தாம் தேதியிலே பஸ்கா ஆட்டுக்குட்டியை தெரிந்துகொள்ளவேண்டும். அதை அவர்கள் அந்த மாதத்தின் பதினாலாம் தேதி வரைக்கும் வைத்திருந்து, அன்று சாயங்காலத்திலே அதை அடிக்கவேண்டும் (யாத் 12:3,6).

இஸ்ரவேல் புத்திரருடைய வீடுகளில் பல ஆடுகள் இருந்தாலும், பஸ்கா ஆட்டுக்குட்டியானது, அடிக்கப்படுவதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறது. இது மற்ற ஆடுகளிலிருந்து வேறுபிரிக்கப்பட்ட ஆடாகயிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், நம்முடைய ஆத்தும இரட்சகராக வேறுபிரிக்கப்பட்டு, விசேஷித்தவராயிருக்கிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பஸ்கா பண்டிகையின்போது, கல்வாரி சிலுவையில் அறையப்பட்டார். பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்படுகிற அதே நாளிலே, நம்முடைய பஸ்காவாகிய இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் அறையப்பட்டது, தெய்வீக சித்தமாகும்.

பஸ்கா ஆட்டுகுட்டி அடிக்கப்படுவதற்கு நான்கு நாட்களுக்கு முன்பு, அது வேறுபிரிக்கப்பட்டு ஆயத்தமாக வைக்கப்பட்டிருக்கும். கிறிஸ்துவானவர் கல்வாரி சிலுவையில் அறையப்படுவதற்கு நான்கு நாட்களுக்கு முன்பாக, எருசலேம் நகரத்திற்குள் பிரவேசித்தார். அந்த நாளிலேதானே யூதர்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியை தெரிந்துகொண்டு, அதை வேறுபிரிப்பது வழக்கம்.

பஸ்கா ஆட்டுக்குட்டி, சாயங்காலத்திலே அடிக்கப்படும். அன்று இராத்திரியிலே ஆட்டுக்குட்டியின் மாம்சம் நெருப்பினால் சுடப்படும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அனுபவித்த மகாவேதனைகளுக்கு, பஸ்கா ஆட்டுக்குட்டியின் மாம்சம் நெருப்பினால் சுடப்படுவது அடையாளமாயிருக்கிறது. கிறிஸ்துவானவர் மரணபரியந்தம் வேதனைகளை அனுபவித்தார். அவர் கல்வாரி சிலுவையிலே தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார்.

இஸ்ரவேல் சபையார் யாவரும் பஸ்கா ஆட்டுக்குட்டியை அடிக்கவேண்டும். யூதர்கள் எல்லோரும் ஒன்றாய்ச் சேர்ந்து, இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறைந்தார்கள். கிறிஸ்துவானவர் இந்த உலகத்தின் கடைசி காலத்திலே, யூதர்களுடைய கையினால் பாடுகளை அனுபவித்தார்.

"பிரதான ஆசாரியன் அந்நிய இரத்தத்தோடே வருஷந்தோறும் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கிறதுபோல, அவர் அநேகந்தரம் தம்மைப் பலியிடும்படிக்குப் பிரவேசிக்கவில்லை.அப்படியிருந்ததானால், உலகமுண்டானது முதற்கொண்டு அவர் அநேகந்தரம் பாடுபடவேண்டியதாயிருக்குமே; அப்படியல்ல, அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார்" (எபி 9:25,26)

"ஜனங்களெல்லாரும் அதைக் கேட்டு: இவனை அகற்றும், பரபாசை எங்களுக்கு விடுதலையாக்கும் என்று சத்தமிட்டுக் கேட்டார்கள்" (லூக் 23:18).

இயேசுகிறிஸ்துவின் மரணத்தினால் விசுவாசிகளாகிய நமக்கு ஜீவன் உண்டாயிருக்கிறது. இஸ்ரவேல் சபையார் யாவரும் பஸ்கா ஆட்டுக்குட்டியை அடித்தார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்தில், விசுவாசிகளாகிய நாமே ஆவிக்குரிய இஸ்ரவேலராயிருக்கிறோம். நம்முடைய நன்மைக்காக கிறிஸ்துவானவர் கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனை, ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தார்.

பஸ்கா ஆட்டுக்குட்டியில் ஒரு எலும்பையும் முறிக்கப்படாது (யாத் 12:46). இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரிக்கும்போது அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படவில்லை.

"அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவர் மரித்திருக்கிறதைக் கண்டு, அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை" (யோவா 19:33)

"அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்கிற வேதவாக்கியம் நிறைவேறும்படி இவைகள் நடந்தது" (யோவா 19:36).

எலும்பு பலத்திற்கும், வல்லமைக்கும் அடையாளம். இயேசுகிறிஸ்துவின் எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படவில்லை என்பது, அவருடைய வல்லமை முறிந்துபோகவில்லை அல்லது குறைந்துபோகவில்லை என்பதற்கு அடையாளமாயிருக்கிறது.

பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் வீட்டு வாசல் நிலைக்கால்கள் இரண்டிலும், நிலையின் மேற்சட்டத்திலும் தெளிக்கப்பட வேண்டும். பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் தெளிக்கப்படுவது, மிகவும் விசேஷமான ஒரு சம்பவமாகும் (யாத் 12:7).

பஸ்கா ஆட்டுக்குட்டியை அடிக்கும்போது, அதின் இரத்தம் சிந்தப்படும். ஆட்டுக்குட்டியின் இரத்தம் சிந்தப்பட்டால் மாத்திரம் போதாது. அந்த இரத்தம் தெளிக்கப்படவும் வேண்டும். இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் உண்டாகும் நன்மைகள் நம்முடைய ஆத்துமாக்களுக்கும் கிடைக்கவேண்டும். நாம் விசுவாசத்தினால் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தை ஏற்றுக்கொள்ளும்போது, நம்முடைய ஆத்துமா இரட்சிக்கப்படும்.

"அதுவுமல்லாமல், இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துமூலமாய் நாம் தேவனைப்பற்றியும் மேன்மைபாராட்டுகிறோம்" (ரோம 5:11).

பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை ஈசோப் கொழுந்துகளின் கொத்தை எடுத்து, அதை அந்த இரத்தத்தில் தோய்த்து, வாசல் நிலைக்கால்களின் மேல்சட்டத்தில், வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் தெளிக்கவேண்டும் (யாத் 12:22). ஈசோப் கொழுந்துகளின் கொத்தை கிண்ணியிலிருக்கும் இரத்தத்தில் தோய்த்து, அதைத் தெளிக்கவேண்டும்.

நம்முடைய விசுவாசம் ஈசோப் கொழுந்துகளின் கொத்திற்கு அடையாளமாயிருக்கிறது. கொத்தை கிண்ணியிலிருக்கும் இரத்தத்தில் தோய்ப்பதுபோல, நம்முடைய விசுவாசத்தை இயேசுகிறிஸ்துவின் வாக்குத்தத்தங்களில் தோய்த்து, அவற்றை நமக்கு சொந்தமாக்கிக்கொள்ளவேண்டும்.

பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் வீட்டுவாசல் நிலைக்கால்கள் இரண்டிலும், நிலையின் மேற்சட்டத்திலும் தெளிக்கப்பட வேண்டும். நாம் இயேசுகிறிஸ்துவில் வைத்திருக்கும் விசுவாசத்தை வெளிப்படையாக சாட்சியாய் அறிவிப்பதற்கு இந்த சம்பவம் அடையாளமாயிருக்கிறது. நாம் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிகிறோம் என்பதற்கு இது அடையாளமாகும்.

பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் நிலைக்கால்களிலும், நிலையின் மேற்சட்டத்திலும் தெளிக்கப்படுகிறது. அந்த இரத்தம் வீட்டு வாசற்படியின்மேல் தெளிக்கப்படவில்லை. வாசல்படியின்மீது கால்பதித்து நடக்கிறோம். பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் உடன்படிக்கையின் இரத்தமாகயிருப்பதினால், அந்த இரத்தத்தை நாம் காலில் போட்டு மிதித்துவிடக்கூடாது இதற்கு அடையாளமாக, பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் வாசல்படியின்மீது தெளிக்கப்படுவதில்லை.

"தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்த மென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்" *(எபி 10:29)*.

பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் நிலைக்கால்களிலும், நிலையின் மேற்சட்டத்திலும் தெளிக்கப்படுகிறது. இது இஸ்ரவேல் புத்திரருக்கு பாதுகாப்பைத் தருகிறது. சங்காரதூதன், எகிப்து தேசத்திலுள்ள தலைச்சன் பிள்ளைகளை அதம்பண்ணும்போது, எந்த வீட்டின் நிலைக்கால்களிலும், நிலையின் மேற்சட்டத்திலும் இரத்தம் தெளிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த இரத்தத்தைப் பார்த்து, சங்காரதூதன் அந்த வீட்டிலுள்ளவர்களை அழிக்காமல் கடந்துபோவார்.

"அந்த ராத்திரியிலே நான் எகிப்து தேசம் எங்கும் கடந்துபோய், எகிப்து தேசத்திலுள்ள மனிதர்முதல் மிருகஜீவன்கள் மட்டும், முதற்பேறாயிருக்கிறவைகளையெல்லாம் அதம்பண்ணி, எகிப்து தேவர்களின்மேல் நீதியைச் செலுத்துவேன்; நானே கர்த்தர். நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்காக அடையாளமாய் இருக்கும்; அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன்; நான் எகிப்து தேசத்தை அழிக்கும் போது, அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும்" *(யாத் 12:12,13)*.

அழிக்கும் வாதை இஸ்ரவேல் புத்திரருக்கு வராதிருக்கும் என்பதற்கு பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம், அடையாளம் எங்கே இரத்தம் தெளிக்கப்பட்டிருக்கிறதோ, அங்கே சங்காரதூதனுக்கு அழிக்கும் வேலை இல்லை.

பஸ்கா ஆட்டுக்குட்டியை அடித்து, அதின் மாம்சத்தை புசிக்கவேண்டும். ஆட்டுக்குட்டியின் மாம்சத்தைப் புசிப்பது என்பது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு நாம் செய்ய வேண்டிய சுவிசேஷ ஊழியத்திற்கு அடையாளமாயிருக்கிறது.

பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்படவேண்டும். அந்த ஆட்டுக்குட்டி வீட்டில் அழகுக்காக கட்டிவைக்கப்படும் ஆடு அல்ல. அல்லது நாம் பார்த்து ரசிக்கவேண்டும் என்பதற்காக பஸ்கா ஆட்டுக்குட்டி தெரிந்துகொள்ளப்படவில்லை. அது அடிக்கப்படுவதற்காகவே தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது. பஸ்கா ஆட்டுக்குட்டியை அடித்தால் மாத்திரம் போதாது. அதின் மாம்சத்தைப் புசிக்கவும் வேண்டும். அப்போது ஆட்டுக்குட்டியின் மாம்சம், அதைப் புசிக்கிறவர்களோடு ஐக்கியமாயிருக்கும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நமக்கு பஸ்கா ஆட்டுக்குட்டியாயிருக்கிறார். நம்முடைய விசுவாசத்தினால், நாம் கிறிஸ்துவானவரை நமக்கு சொந்தமாக்கிக்கொள்ளவேண்டும். பஸ்கா ஆட்டுக்குட்டியின் மாம்சத்தைப் புசிப்பதுபோல, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை நாம் போஜனமாக புசிக்கவேண்டும். இதனால் நமக்கு ஆவிக்குரிய ஆகாரமும், ஆவிக்குரிய போஜனமும், ஆவிக்குரிய பெலனும் கிடைக்கும். போஜனத்திலிருந்து நமது சரீரத்திற்கு பெலன் கிடைப்பதுபோல, இயேசுகிறிஸ்துவினுடைய வார்த்தை மூலமாய் நம்முடைய ஆவிக்கும் ஆத்துமாவுக்கும் ஆவிக்குரிய பெலன் கிடைக்கிறது.

"அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன். என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது" *(யோவா 6:53-55)* என்று சொன்னார்.

இஸ்ரவேல் புத்திரர் பஸ்கா ஆட்டுக்குட்டியிலுள்ள யாவையும் ஏகமாய் புசிக்கவேண்டும். அதிலே ஒன்றையும் விடியற்கால மட்டும் மீதியாய் வைக்கக்கூடாது *(யாத் 12:9,10)*.

நாம் விசுவாசத்தினாலே இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை போஜனமாகப் புசிக்கிறோம். கிறிஸ்துவானவருடைய வார்த்தைகளை அரையும் குறையுமாக போஜனம் பண்ணக்கூடாது. அவருடைய வார்த்தைகள் அனைத்தையும் நாம் புசிக்கவேண்டும். அப்போதுதான் நமக்குள்ளே கிறிஸ்துவானவர் பூரணமாக உருவாகுவார். நாம் கிறிஸ்துவின் பூரண சத்தியத்தை ஏற்றுக்கொள்ளும்போது, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நமக்கு பூரண பலன் உண்டாகும்.

நாம் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை பூரணமாய் ஏற்றுக்கொள்ளும்போது, நாம் இயேசுகிறிஸ்துவையும் அவருடைய நுகத்தையும் ஏற்றுக்கொள்வோம். அதுபோலவே நாம் கிறிஸ்துவையும் அவருடைய சிலுவையையும் ஏற்றுக்கொள்வோம். அது மாத்திரமல்ல, நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது அவருடைய கிரீடத்தையும் ஏற்றுக்கொள்வோம்.

இஸ்ரவேல் புத்திரர் பஸ்கா ஆட்டுக்குட்டியை புசிக்கும்போது, அதை ஏகமாய் உடனே புசிக்கவேண்டும். அதிலே ஒன்றையும் விடியற்காலம் மட்டும் மீதியாக வைக்கக்கூடாது.

நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய இயேசுகிறிஸ்து, இன்றைக்கு பாவநிவாரண பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறார். ஆகையினால் நாம் இயேசுகிறிஸ்துவை நம்முடைய இரட்சகராக ஏற்றுக்கொள்வதற்கு காலதாமதம்பண்ணாமல், இன்றைக்கே அவரை நம்முடைய ஆத்தும இரட்சகராக ஏற்றுக்கொள்ளவேண்டும். அவரை நாளைக்கு இரட்சகராக ஏற்றுக்கொள்ளலாம் என்று காலதாமதம்பண்ணக்கூடாது.

பஸ்கா ஆட்டுக்குட்டியின் மாம்சத்தை, கசப்பான கீரையோடு புசிக்கவேண்டும் (யாத் 12:8). இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே 430 வருஷங்களுக்கு அடிமைகளாகயிருந்தார்கள். இது அவர்களுக்கு கசப்பான அனுபவம். எகிப்து தேசத்தில் இஸ்ரவேல் புத்திரர் அனுபவித்த அடிமைத்தனத்தின் கசப்பான அனுபவத்தை நினைவுகூரும் வண்ணமாக, பஸ்கா ஆட்டுக்குட்டியின் மாம்சத்தை, கசப்பான கீரையோடு புசிக்கவேண்டும்.

நம்முடைய பாவம் நமக்கு கசப்பாயிருக்கிறது. கசப்பான பாவத்திற்கு, கசப்பான கீரை அடையாளமாயிருக்கிறது. நம்முடைய பாவம் கசப்பாகயிருந்தாலும், இயேசுகிறிஸ்துவின் மூலமாக வரும் ஆத்தும இரட்சிப்பு, நமக்கு மதுரமான அனுபவத்தைக் கொடுக்கும்.

இஸ்ரவேல் புத்திரர் பஸ்காவை புசிக்கும்போது, தங்கள் அரைகளில் கச்சை கட்டிக்கொண்டும், தங்கள் கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டும், தங்கள் கையில் தடி பிடித்துக்கொண்டும், அதை தீவிரமாய் புசிக்கவேண்டும் (யாத் 12:11). இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தைவிட்டுப் புறப்பட்டுப்போக ஆயத்தமாயிருக்கிறார்கள். தீவிரமாக பிரயாணம் புறப்படுகிறவர்கள், அவசரம் அவசரமாக போஜனம்பண்ணுவார்கள். அதுபோலவே இஸ்ரவேல் புத்திரர் பிரயாண ஆயத்தத்தோடு பஸ்காவை புசிக்க வேண்டும்.

நாம் விசுவாசத்தினாலே இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை புசிக்கும்போது, பாவம் நம்மை ஆளுகை செய்யக்கூடாது. நாம் உலகப்பிரகாரமான ஆசைகளையும், பாவத்தின் சிற்றின்பங்களையும் வெறுத்து ஒதுக்கிவிட வேண்டும். கிறிஸ்துவுக்காக பாவமான எல்லாவற்றையும் விட்டு விலகி வரவேண்டும். நாம் மறுபடியும் பாவத்தோடு உடன்படிக்கை செய்து, அதற்கு பங்காளிகளாகிவிடக்கூடாது.

"ஆகையால், நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப்போகக்கடவோம். நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை; வரப்போகிறதையே நாடித்தேடுகிறோம்" (எபி 13:13,14).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாள், அவர்களுக்கு நினைவுகூருதலான நாளாயிருக்கவேண்டும். அதை அவர்கள் கர்த்தருக்கு பண்டிகையாக ஆசரிக்கவேண்டும். இந்தப் பண்டிகை புளிப்பில்லா அப்பப்பண்டிகை என்று அழைக்கப்படுகிறது. கர்த்தருக்காக ஆசரிக்கப்படும் இந்தப் பண்டிகையை, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறைதோறும் நித்திய நியமமாக ஆசரிக்கவேண்டும்.

புளிப்பில்லா அப்பப்பண்டிகை நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்திற்கு அடையாளமாயிருக்கிறது.

"ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்" (1கொரி 5:7,8).

விசுவாசிகளாகிய நாம் இயேசுகிறிஸ்துவை நம்முடைய ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆகையினால் நாம் பரிசுத்த சந்தோஷத்தோடே கர்த்தருக்கு பண்டிகையை ஆசரிக்கவேண்டும். இது கர்த்தருடைய பஸ்காவாக இருக்கிறது. ஆகையினால் விசுவாசிகள் எல்லோரும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள், எப்போதும் சந்தோஷமாகயிருந்து, கர்த்தருக்கு பண்டிகையை ஆசரிக்கவேண்டும்.

கர்த்தருடைய பண்டிகையை நித்திய நியமமாக ஆசரிக்கவேண்டும். கர்த்தருடைய பண்டிகை எப்போதும் தொடர்ந்து ஆசரிக்கப்படவேண்டும். கர்த்தருடைய பண்டிகை என்பது, விசுவாசிகள் கர்த்தருக்குள் சந்தோஷமாகயிருப்பதற்கு அடையாளம். விசுவாசிகளாகிய நாம் கர்த்தருடைய பண்டிகையை தொடர்ந்து ஆசரித்து, கர்த்தருக்குள் எப்போதும் சந்தோஷமாயிருக்கவேண்டும் என்பதே கர்த்தருடைய சித்தம்.

நாம் கிறிஸ்துவுக்குள் சந்தோஷமாயில்லையென்றால், அதற்கு கிறிஸ்துவானவர் காரணமல்ல. நாம் கர்த்தருடைய பண்டிகையை தொடர்ந்து ஆசரிக்கவில்லை என்பதே காரணம்.

கர்த்தருடைய பண்டிகையில் புளிப்பில்லா அப்பத்தை ஏழுநாளளவும் புசிக்கவேண்டும். ஆகையினால் இது புளிப்பில்லா அப்பப்பண்டிகை என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பண்டிகை நாளின்போது நம்முடைய வீடுகளில் புளித்த மா இருக்கக்கூடாது. அவை நம்மைவிட்டு நீக்கப்படவேண்டும். துர்க்குணம், பொல்லாப்பு, மாய்மாலம் ஆகியவையெல்லாம் புளித்த மாவுக்கு அடையாளம். கர்த்தருடைய பண்டிகையை ஆசரிக்கிறவர்கள், தங்களிடத்திலுள்ள அசுத்தத்தை நீக்கிவிட்டு, அதை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும்.

பஸ்காவின் நியமத்தைப்பற்றி மேலும் சில செய்திகள் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் இனிமேல் வரப்போகிற நாட்களில், பஸ்காவை ஆசரிக்கும்போது, கர்த்தர் அது குறித்து தங்களுக்கு கட்டளையிட்டிருக்கிற பிரகாரம் அதை ஆசரிக்கவேண்டும்.

இஸ்ரவேல் சபையார் எல்லோரும் பஸ்காவை ஆசரிக்கவேண்டும் (யாத் 12:47). கர்த்தருடைய கிருபைகளையும் இரக்கங்களையும் யாரெல்லாம் பெற்றிருக்கிறார்களோ, அவர்கள் எல்லோருமே கர்த்தரைத் துதிப்பதில் பங்குபெறவேண்டும். கர்த்தர் இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் நன்மை செய்திருக்கிறார். ஆகையினால் அவர்கள் எல்லோரும் பஸ்காவை ஆசரிக்க வேண்டுமென்று கர்த்தர் கட்டளையிடுகிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் கர்த்தருடைய பந்தியானது. பஸ்காவுக்கு அடையாளமாக ஆசரிக்கப்படுகிறது. விசுவாசிகள் கர்த்தருடைய பந்தியிலே பயபக்தியோடு பங்குபெறவேண்டும். விசுவாசிகளில் ஒருவரும் கர்த்தருடைய பந்தியை அசட்டைசெய்து, அதில் பங்குபெறாமல் இருந்துவிடக்கூடாது.

அந்நிய புத்திரர் பஸ்காவை ஆசரிக்கக்கூடாது. விருத்தசேதனமில்லாத அந்நியருக்கு பஸ்காவை ஆசரிக்க அனுமதியில்லை.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "பஸ்காவின் நியமமாவது, அந்நிய புத்திரன் ஒருவனும் அதைப் புசிக்கவேண்டாம்" என்றும், "அந்நியனும் கூலியாளும் அதிலே புசிக்கவேண்டாம்" என்றும்,

"அந்நியன் ஒருவன் உன்னிடத்திலே தங்கி, கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்க வேண்டுமென்று இருந்தால், அவனைச் சேர்ந்த ஆண்பிள்ளைகள் யாவரும் விருத்தசேதனம்பண்ணப்படவேண்டும்; பின்பு அவன் சேர்ந்து அதை ஆசரிக்கவேண்டும்; அவன் சுதேசியைப்போல் இருப்பான்; விருத்தசேதனம் இல்லாத ஒருவனும் அதில் புசிக்கவேண்டாம்" *(யாத் 12:43,45,48)* என்றும் சொல்லுகிறார்.

கர்த்தருடைய பந்தியிலே பங்குபெறுகிற விசுவாசிகள் எல்லோரும், கர்த்தருடைய வார்த்தையினால் மறுபடியும் பிறந்தவர்களாகயிருக்கவேண்டும். நம்முடைய இருதயம் முதலாவதாக விருத்தசேதனம்பண்ணப்பட்டிருக்கவேண்டும். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் பஸ்காவில் பங்குபெறுகிறவர்கள், விருத்தசேதனம்பண்ணப்படவேண்டும் என்னும் நியமம் இருந்தது.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு, மாம்சத்தில் விருத்தசேதனம் நியமிக்கப்படவில்லை. ஆனால் நம்முடைய இருதயம் விருத்தசேதனம்பண்ணப்படவேண்டியது அவசியமாயிருக்கிறது.

"அல்லாமலும், நீங்கள் கிறிஸ்துவைப்பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள்" *(கொலோ 2:11)*.

கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுகிற விசுவாசிகள், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபாதார பலிமரணத்தினால் வாக்குப் பண்ணப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்களுக்கு பங்குள்ளவர்களாகயிருக்கிறார்கள்.

விருத்தசேதனம்பண்ணப்பட்ட அந்நியன் பஸ்காவை ஆசரிக்கலாம் என்று அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது "பணத்தினால் கொள்ளப்பட்ட அடிமையானவன் எவனும், நீ அவனுக்கு விருத்தசேதனம்பண்ணினபின், அவன் அதைப் புசிக்கலாம்" *(யாத் 12:44)*.

நாம் கர்த்தருக்கு நம்மை முற்றிலுமாய் ஒப்புக்கொடுக்கவேண்டும். நம்முடையது எல்லாமே கர்த்தருடையது என்று அவருக்கு அர்ப்பணிக்கவேண்டும். கர்த்தர் தம்முடைய கிருபையினால் அந்நியரும் பஸ்காவை ஆசரிப்பதற்கு அனுமதி கொடுக்கிறார். கர்த்தருடைய பஸ்காவிலே, இஸ்ரவேல் புத்திரர் மாத்திரம் என்றல்லாமல், விருத்தசேதனம்பண்ணப்பட்ட அந்நியரும் பங்குபெறுவதற்கு, கர்த்தர் அனுமதி கொடுக்கிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் புறஜாதியாரும் கர்த்தருடைய சபையிலே சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்பதற்கு, இந்த சம்பவம் அடையாளமாயிருக்கிறது. கர்த்தருடைய சபையிலே யூதரென்றும் புறஜாதியாரென்றும் வித்தியாசமில்லை. எல்லோரும் கர்த்தருடைய பார்வையில் சமமாகயிருக்கிறார்கள்.

"சுதேசிக்கும் உங்களிடத்தில் தங்கும் பரதேசிக்கும் ஒரே பிரமாணம் இருக்கக்கடவது" *(யாத் 12:49)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மோசேயின் பிரமாணம் இஸ்ரவேலருக்கு மட்டுமே உரியது. *(உபா 4:6-8,44-45; ரோமர் 2:12-16; ரோமர் 3:1-2)* இஸ்ரவேலர்கள் மோசேயின் பிரமாணங்கள் அனைத்திற்கும் கீழ்ப்படிய வேண்டும். *(எண் 15:16)*. புறஜாதியார் இஸ்ரவேலரைப்போல மோசேயின் பிரமாணத்திற்குட்பட விரும்பினால், அவர்களுடைய ஆண்பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் செய்யப்படவேண்டும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம், ஆவிக்குரிய இஸ்ரவேலராயிருக்கிறோம். இதன் பிரகாரமாக, நாம் ஆபிரகாமின் சந்ததியாராயும் இருக்கிறோம். கர்த்தர் ஆபிரகாமுக்கு சொன்ன வாக்குத்தத்தங்கள், ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நமக்கும் நிறைவேறும்.

பஸ்காவை ஆசரிக்கும்போது அதை ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் புசிக்கவேண்டும்; அந்த மாம்சத்தில் கொஞ்சமாகிலும் வீட்டிலிருந்து வெளியே கொண்டுபோகக்கூடாது; அதில் ஒரு எலும்பையும் முறிக்கக்கூடாது (யாத் 12:46).

பஸ்காவை ஆசரிக்கும்போது, வீட்டிலுள்ளோர் அனைவரும் சந்தோஷமாயும் ஐக்கியமாயும் இருக்கவேண்டும். அப்போது ஒருவருக்கொருவர் பஸ்காவைக் குறித்து, ஆவிக்குரிய விளக்கங்களையும், புத்திமதிகளையும் சொல்லி, ஒருவரையொருவர் பலப்படுத்தவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டுப்போகிற சம்பவம் இங்கு மறுபடியுமாக சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் எல்லோரும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறார்கள். இஸ்ரவேல் சபையார் எல்லோரும் பஸ்காவை ஆசரிக்கக்கடவர்கள் என்று கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார். இப்படியே இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் செய்கிறார்கள்; கர்த்தர் மோசேக்கும் ஆரோனுக்கும் கட்டளையிட்டபடியே செய்கிறார்கள் (யாத் 12:50).

பரிசுத்த வேதாகமத்தில் பஸ்காவின் நியமத்தைப்பற்றி தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. நிசான் மாதம் 10ஆம் தேதி. இது வருஷத்தின் முதலாம் மாதம். ஒரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்து கொண்டு அதைப் பதினாலாம் தேதி வரையிலும் வைத்திருக்க வேண்டும். (யாத் 12:3-6).

2. ஒரு ஆட்டுக்குட்டியைப் புசிப்பதற்கு வீட்டில் போதுமான நபர்கள் இல்லையென்றால், அவர்கள் அயல்வீட்டுக்காரரைச் சேர்த்துக் கொள்ளலாம். ஆட்டுக்குட்டி வீணாகக் கூடாது. (யாத் 12:4).

3. அந்த ஆட்டுக்குட்டி பழுதற்றதாக இருக்க வேண்டும். (யாத் 12:5).

4. அந்த ஆட்டுக்குட்டி ஆணும், ஒரு வயதுள்ளதுமாய் இருக்க வேண்டும். (யாத் 12:5).

5. நிசான் மாதம் பதினாலாம் தேதி சாயங்காலத்தில் அந்த ஆட்டுக்குட்டியை அடிக்க வேண்டும். (யாத் 12:6)

6. அந்த ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை வீட்டு வாசல் நிலைக்கால்கள் இரண்டின் நிலையின் மேற்சட்டத்திலும் தெளிக்க வேண்டும். (யாத் 12:7,22-23).

7. அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு, புளிப்பில்லா அப்பத்தோடும் கசப்பான கீரையோடும் அதைப் புசிக்க வேண்டும். (யாத் 12:8-9)

8. பச்சையாயும், தண்ணீரில் அவிக்கப் பட்டதாயும், அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் மாம்சத்தைப் புசிக்கக்கூடாது. (யாத் 12:9).

9. அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் மாம்சத்தை விடியற்காலம் மட்டும் மீதியாக வைக்காமல், விடியற்காலம்மட்டும் அதிலே மீதியாய் இருக்கிறதை அக்கினியால் சுட்டெரிக்க வேண்டும். (யாத் 12:10).

10. அதைத் தீவிரமாய் புசிக்கவேண்டும். அரைகளில் கச்சை கட்டிக்கொண்டு, கால்களில் பாதரட்சை தொடுத்துக் கொண்டு பிரயாணத்திற்கு ஆயத்தமாக அதைப்புசிக்க வேண்டும். (யாத் 12:11).

11. ராத்திரியில் அதைப் புசிக்க வேண்டும் (யாத் 12:8,10,18).

12. பஸ்கா நியமம் இஸ்ரவேலருக்கு நித்திய நினைவுகூருதலாக இருக்க வேண்டும். (யாத் 12:14,17,24; எசே 45:17).

13. வீடுகளிலிருந்து புளித்த மாவை நீக்க வேண்டும். புளிப்பில்லா அப்பத்தை மாத்திரம் புசிக்க வேண்டும். (யாத் 12:15,19-20; யாத் 13:3-7).

14. பஸ்காவின்போது, புளிப்பில்லா அப்பப் பண்டிகையை ஆசரிக்கத் துவங்க வேண்டும். (யாத் 12:15-20).

15. புளிப்பில்லா அப்பத்தை ஏழு நாளளவும் புசிக்க வேண்டும். (யாத் 12:15).

16. முதலாம் நாளிலும், ஏழாம் நாளிலும் ஒரு வேலையும் செய்யப்படலாகாது. அந்த நாட்களில் பரிசுத்த சபை கூடுதல் இருக்க வேண்டும். (யாத் 12:16).

17. ஏழு நாளளவும் வீடுகளில் புளித்தமா காணப்படலாகாது. (யாத் 12:18-19).

18. அந்நிய புத்திரன் ஒருவனும் பஸ்காவைப் புசிக்கக்கூடாது. (யாத் 12:43).

19. விருத்தசேதனம் பண்ணாத எந்த மனுஷனும் பஸ்காவைப் புசிக்கக்கூடாது. (யாத் 12:44-48).

20. அந்நியனும், கூலியாளும் பஸ்காவைப் புசிக்கக்கூடாது. (யாத் 12:45).

21. பஸ்காவை ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் புசிக்கவேண்டும்; அந்த மாம்சத்தில் கொஞ்சமாகிலும் வீட்டிலிருந்து வெளியே கொண்டுபோகக்கூடாது. (யாத் 12:46).

22. பஸ்கா ஆட்டுக்குட்டியின் ஒரு எலும்பையும் முறிக்கக்கூடாது. (யாத் 12:46; யோவான் 19:33,36).

23. இஸ்ரவேல் சபையார் எல்லாரும் பஸ்காவை ஆசரிக்கவேண்டும். (யாத் 12:47).

24. ஆபிப் அல்லது நிசான் மாதத்தில் பஸ்காவை ஆசரிக்க வேண்டும். (யாத் 13:5) பஸ்காவை ஒவ்வொரு வருஷமும் ஆசரிக்க வேண்டும் (எண் 9:2-6).

25. பஸ்காவை ஆசரிக்க வேண்டிய நாளில், ஜனங்கள் தீட்டுப்பட்டிருந்தால், அதை அவர்கள் ஒருமாதத்திற்குப் பின்பு புசிக்கலாம். (எண் 9:2-14).

26. பஸ்கா ஆட்டுக்குட்டியை ஆசரிப்புக் கூடாரத்தில் மட்டுமே அடிக்க வேண்டும். (உபா 16:5-6).

அன்றையத்தினமே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அணியணியாய் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணுகிறார் (யாத் 12:51). "அன்றையத்தினமே" என்பது நிசான் மாதம் பதினைந்தாம் நாளைக் குறிக்கிறது (யாத் 12:41,51; எண் 33:3).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அணியணியாய் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணுகிறார். இஸ்ரவேலர்கள் எகிப்து தேசத்தில் அடிமைகளாக இருந்தாலும், அவர்கள் யுத்தம் பண்ணுவதில் பழக்கம் உள்ளவர்கள். எகிப்தியர்களுக்காக அவர்கள் யுத்தம் பண்ணியிருக்கிறார்கள்.

ஆகையினால் குறைந்த கால அவகாசத்தில் இஸ்ரவேல் புத்திரர் போர்வீரர்களைப்போல அணியணியாகப் புறப்பட்டுப்போக ஆயத்தமாக இருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொருவரும் தங்களுடைய ஸ்தானத்தையும், கடமையையும் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

பஸ்கா பண்டிகையைப்பற்றிய விவரம் லேவியராகமம் 23:4-8 ஆகிய வசனப்பகுதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

லேவி 23:4-8 ஆகிய வசனங்களில் பண்டிகை நாட்களானது, "கர்த்தரின் பண்டிகைகள்" என்று மறுபடியுமாய் சொல்லப்பட்டிருக்கிறது. "சபைகூடிவந்து பரிசுத்தமாய் ஆசரிக்கும்படி, நீங்கள் குறித்தகாலத்தில் கூறவேண்டிய கர்த்தரின் பண்டிகைகளாவன" (லேவி 23:4) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தரே பண்டிகை நாட்களை நியமித்திருக்கிறார். ஆகையினால் இந்த நாட்கள் கர்த்தருடைய பண்டிகைநாட்கள் என்று அழைக்கப்படுகிறது.

பொதுவாக பண்டிகை நாட்கள் சந்தோஷம் மிகுந்த நாட்களாகயிருக்கும். வாரத்தின் ஓய்வுநாள் சந்தோஷமான நாள். இஸ்ரவேல் ஜனத்தார் ஒவ்வொரு வருஷமும் ஆசரிக்கும் பண்டிகை நாட்கள் எல்லாமே சந்தோஷமான நாட்களாகவே இருக்கிறது. ஆனால் பாவநிவாரண நாள் சந்தோஷமான நாளாயிருக்காது. அது துக்கப்படுகிற நாள். பாவநிவாரண நாளை தவிர, கர்த்தரின் மற்ற பண்டிகை நாட்கள் எல்லாமே சந்தோஷமான நாட்களாகும்.

கர்த்தருடைய பண்டிகை நாட்களிலே நாம் எவ்வாறு சந்தோஷமாயிருக்கவேண்டும் என்றும் கர்த்தர் நமக்கு போதிக்கிறார். பண்டிகை நாட்களிலே கர்த்தரை துதித்து, அவரை நன்றியுள்ள இருதயத்தோடு ஆராதிக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் ஏழுநாள் புளிப்பில்லா அப்பங்களை புசிக்கவேண்டும். அவர்கள் ஏழுநாளும் கர்த்தருக்கு தகனபலியிடவேண்டும். ஏழாம்நாள் பரிசுத்தமான சபை கூடுதல்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "முதலாம் மாதம் பதினாலாம் தேதி அந்திநேரமாகிற வேளையிலே கர்த்தரின் பஸ்கா பண்டிகையும், அந்த மாதம் பதினைந்தாம் தேதியிலே, கர்த்தருக்குப் புளிப்பில்லா அப்பப்பண்டிகையுமாய் இருக்கும்; ஏழுநாள் புளிப்பில்லா அப்பங்களைப் புசிக்கவேண்டும்" (லேவி 23:5,6) என்றும்,

"முதலாம் நாள் உங்களுக்குப் பரிசுத்தமான சபைகூடுதல்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யவேண்டாம். ஏழுநாளும் கர்த்தருக்குத் தகனபலியிட வேண்டும்; ஏழாம்நாள் பரிசுத்தமான சபைகூடுதல்; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது என்று சொல்" (லேவி 23:7,8) என்றும் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரருக்கு முதலாம் நாள் பரிசுத்தமான சபை கூடும் நாள். அந்த நாளிலே அவர்கள் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யக்கூடாது. ஏழாம் மாதம் முதலாந்தேதி எக்காள சத்தத்தால் ஞாபகுறியாக கொண்டாடுகிற பண்டிகை. ஏழாம் மாதம் பத்தாந்தேதி இஸ்ரவேல் புத்திரருக்கு பாவநிவிர்த்தி செய்யும் நாள். ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி முதல் ஏழுநாளளவும் கர்த்தருக்கு ஆசரிக்கும் கூடாரப்பண்டிகை.

பாவநிவாரண நாளின்போது இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களுக்காக துக்கப்படவேண்டும். இது பரிசுத்தமான துக்கம். அவர்கள் ஆறுநாட்களுக்கு பரிசுத்தமான சந்தோஷத்திலிருந்து, ஏழாம் நாளில் பரிசுத்தமான துக்கத்தை ஆசரிக்கவேண்டும்.

புளிப்பில்லா அப்பப்பண்டிகை பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. முதலாம் மாதம் பதினைந்தாம் தேதியிலே, கர்த்தருக்குப் புளிப்பில்லா அப்பப் பண்டிகையாக ஆசரிக்கவேண்டும் (லேவி 23:6).

2. அப்பப்பண்டிகையின் ஏழுநாட்களிலும் புளிப்பில்லா அப்பங்களைப் புசிக்க வேண்டும்.

3. அப்பப்பண்டிகையின் முதலாம் நாள் உங்களுக்குப் பரிசுத்தமான சபைகூடுதல் (லேவி 23:7).

4. அப்பப்பண்டிகையின் முதலாம் நாளிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யக்கூடாது.

5. ஏழுநாளும் கர்த்தருக்குத் தகனபலியிட வேண்டும் (லேவி 23:8).

6. ஏழாம்நாள் பரிசுத்தமான சபைகூடுதல்.

7. ஏழாம் நாளில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யக்கூடாது.

பஸ்கா பண்டிகையைப்பற்றிய விவரம் எண்ணாகமம் 28:16-25 ஆகிய வசனப்பகுதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

கர்த்தர் பஸ்காவின்போது செலுத்த வேண்டிய பலிகளை நியமனம் பண்ணுகிறார். பஸ்கா பலிகளைப்பற்றி கர்த்தர் தம்முடைய நியமங்களை ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்.

முதலாம் மாதம் பதினாலாம் தேதி கர்த்தருக்கு உரிய பஸ்கா. அந்த மாதம் பதினைந்தாம் தேதி பண்டிகைநாள்; ஏழுநாளளவும் புளிப்பில்லாத அப்பம் புசிக்க வேண்டும் (எண் 28:16,17) என்பது பஸ்காவைப்பற்றிய கர்த்தருடைய நியமம் ஆகும்.

இஸ்ரவேல் ஜனத்தார் ஆறு பண்டிகைகளை வருஷாந்திர பண்டிகைகளாக ஆசரிக்கிறார்கள். அதன் விவரம் வருமாறு :

1. பஸ்கா பண்டிகை (எண் 28:16; யாத் 12:1-39; லேவி 23:5-14)

2. புளிப்பில்லா அப்பப்பண்டிகை (எண் 28:17-25; யாத் 12:8,15-20; லேவி 23:6-8)

3. பெந்தெகொஸ்தே தினத்தில் முதற் பலன்களின் பண்டிகை (எண் 28:26-31)

4. எக்காளங்களின் பண்டிகை (எண் 29:1-6; லேவி 23:23-25)

5. மகா பாவநிவாரண நாளின் பண்டிகை (எண் 29:7-11; லேவி 23:26-32)

6. கூடாரங்களின் பண்டிகை (எண் 29:12-40; லேவி 23:33-44)

பஸ்கா பண்டிகை ஏழுநாட்களுக்கு ஆசரிக்கப்படுகிறது. இந்த ஏழு நாட்களில் முதலாவது நாளும், கடைசி நாளும், ஓய்வுநாட்களாக பரிசுத்தம்பண்ணப்பட்டிருக்கிறது. இது பரிசுத்தமான ஓய்வுநாள். அந்த நாளில் பரிசுத்தமான சபை கூடுதல் இருக்கவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக்கொண்டார். இது கர்த்தருடைய கிருபை. கர்த்தர் தங்களுக்கு கொடுத்த இரட்சிப்பை இஸ்ரவேல் புத்திரர் எக்காலத்திலும் நன்றியுள்ள இருதயத்தோடு நினைவுகூரவேண்டும். அதற்கு அடையாளமாக அவர்கள் பஸ்கா பண்டிகை நாளில் கர்த்தருக்கு விசேஷித்த பலிகளை செலுத்துகிறார்கள்.

பஸ்கா பண்டிகை ஏழுநாட்களுக்கு ஆசரிக்கப்படும்போது, இந்த ஏழுநாட்களில் முதலாவது நாளும் கடைசி நாளும், கர்த்தருக்கு ஓய்வுநாட்களாகயிருப்பதினால், அந்த நாட்களிலே விசேஷித்த பலிகள் செலுத்தப்படுகிறது. ஓய்வுநாளின்போது செலுத்தவேண்டிய பலிகளைப்பற்றி கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "முதலாம் நாளிலே பரிசுத்த சபை கூடுதல் இருக்கவேண்டும்; அன்றைத்தினம் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது. அப்பொழுது நீங்கள் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாக இரண்டு காளைகளையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும், அவைகளுக்கேற்ற போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவிலே காளைக்காகப் பத்தில் மூன்று பங்கையும், ஆட்டுக்கடாவுக்காகப் பத்தில் இரண்டு பங்கையும், ஏழு ஆட்டுக்குட்டிகளில் ஒவ்வொன்றிற்காகப் பத்தில் ஒரு பங்கையும், உங்கள் பாவநிவிர்த்திக்கென்று பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தக்கடவீர்கள்" (எண் 28:18-22) என்று சொல்லுகிறார்.

இந்தப் பலிகளெல்லாம் ஓய்வுநாளில் செலுத்தப்படவேண்டிய பலிகளாகும். இந்தப் பலிகளோடு சேர்த்து காலையிலே நித்தமும் செலுத்தும் சர்வாங்க தகனபலியையும் செலுத்தவேண்டும் (எண் 28:23).

இந்தப்பிரகாரம் ஏழுநாளளவும் நாடோறும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி செலுத்த வேண்டும்; நித்தமும் செலுத்தப்படும் சர்வாங்க தகனபலியையும் அதின் பானபலியையும் அன்றி, இதையும் செலுத்த வேண்டும் (எண் 28:24).

ஏழாம் நாளிலே பரிசுத்த சபைகூடுதல் இருக்கவேண்டும்; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது (எண் 28:25) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

புளிப்பில்லாத அப்பப்பண்டிகையைப் பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. முதலாம் மாதம் பதினாலாம் தேதியில் புளிப்பில்லா அப்பப்பண்டிகை ஆரம்பமாகும். அதை ஏழுநாட்களுக்கு ஆசரிக்க வேண்டும். (எண் 28:16-17).

2. அந்த மாதம் பதினைந்தாம் தேதி பண்டிகைநாள்; ஏழுநாளளவும் புளிப்பில்லாத அப்பம் புசிக்க வேண்டும் (எண் 28:17; யாத் 12:8,15-20; லேவி 23:6-8).

3. முதலாம் நாளிலே பரிசுத்த சபை கூடுதல் இருக்கவேண்டும்; அன்றைத்தினம் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது (எண் 28:18; லேவி 23:7).

4. கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாக இரண்டு காளைகளையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும் செலுத்தவேண்டும் (எண் 28:19).

5. போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவிலே காளைக்காகப் பத்தில் மூன்று பங்கையும், ஆட்டுக்கடாவுக்காகப் பத்தில் இரண்டு பங்கையும், ஏழு ஆட்டுக்குட்டிகளில் ஒவ்வொன்றிற்காகப் பத்தில் ஒரு பங்கையும் செலுத்தவேண்டும் (எண் 28:20-21; எண் 15:2-12).

6. பாவநிவிர்த்திக்கென்று பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தவேண்டும். (எண் 28:22; எண் 28:5,7,9,14-15; எண் 15:4-5).

7. நித்தமும் செலுத்தப்படும் சர்வாங்க தகனபலியையும் அதின் பானபலியையும் அன்றி, போஜனபலியையும் செலுத்த வேண்டும் (எண் 28:5-8,24).

8. இந்தப்பிரகாரம் ஏழுநாளளவும் நாடோறும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி செலுத்த வேண்டும்; நித்தமும் செலுத்தப்படும் சர்வாங்க தகனபலியையும் அதின் பானபலியையும் அன்றி, இதையும் செலுத்த வேண்டும் (எண் 28:24).

9. ஏழாம் நாளிலே பரிசுத்த சபைகூடுதல் இருக்கவேண்டும்; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது (எண் 28:25).

மெல்லிய மாவு செலுத்தப்பட்ட சம்பவங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. முதலாம் மாதம் பதினாலாம் தேதியில் புளிப்பில்லா அப்பப்பண்டிகை ஆரம்பமாகும். அதை ஏழுநாட்களுக்கு ஆசரிக்க வேண்டும். (எண் 28:16-17).

2. அந்த மாதம் பதினைந்தாம் தேதி பண்டிகைநாள்; ஏழுநாளளவும் புளிப்பில்லாத அப்பம் புசிக்க வேண்டும் (எண் 28:17; யாத் 12:8,15-20; லேவி 23:6-8).

3. முதலாம் நாளிலே பரிசுத்த சபை கூடுதல் இருக்கவேண்டும்; அன்றைத்தினம் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது (எண் 28:18; லேவி 23:7).

4. கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாக இரண்டு காளைகளையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும் செலுத்தவேண்டும் (எண் 28:19).

5. போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவிலே காளைக்காகப் பத்தில் மூன்று பங்கையும், ஆட்டுக்கடாவுக்காகப் பத்தில் இரண்டு பங்கையும், ஏழு ஆட்டுக்குட்டிகளில் ஒவ்வொன்றிற்காகப் பத்தில் ஒரு பங்கையும் செலுத்தவேண்டும் (எண் 28:20-21; எண் 15:2-12).

6. பாவநிவிர்த்திக்கென்று பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தவேண்டும். (எண் 28:22; எண் 28:5,7,9,14-15; எண் 15:4-5).

7. நித்தமும் செலுத்தப்படும் சர்வாங்க தகனபலியையும் அதின் பானபலியையும் அன்றி, போஜனபலியையும் செலுத்த வேண்டும் (எண் 28:5-8,24).

8. இந்தப்பிரகாரம் ஏழுநாளளவும் நாடோறும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி செலுத்த வேண்டும்; நித்தமும் செலுத்தப்படும் சர்வாங்க தகனபலியையும் அதின் பானபலியையும் அன்றி, இதையும் செலுத்த வேண்டும் (எண் 28:24).

9. ஏழாம் நாளிலே பரிசுத்த சபைகூடுதல் இருக்கவேண்டும்; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது (எண் 28:25).

மெல்லிய மாவு செலுத்தப்பட்ட சம்பவங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. ஒவ்வொரு காளையோடு - பத்தில் மூன்று பங்கு (எண் 28:20,28; எண் 15:9; எண் 29:3,9,14)

2. ஒவ்வொரு ஆட்டுக்கடாவோடு - பத்தில் இரண்டு பங்கு (எண் 28:20,28; எண் 15:6; எண் 29:3,9,14)

3. ஒவ்வொரு ஆட்டுக்குட்டியோடு - பத்தில் ஒரு பங்கு (எண் 28:4-5,9,13,21,29; எண் 29:4; யாத் 29:40; லேவி 14:10,21).

4. ஒவ்வொரு வெள்ளாட்டுக்கடாவோடு - பத்தில் ஒரு பங்கு (எண் 28:22; எண் 15:3-4)

இவைதவிர, அடைகள், அதிரசங்கள் ஆகியவையும் மாவினால் செய்யப்பட்டு கர்த்தருக்குப் படைக்கப்பட்டது. (யாத் 29:2; லேவி 2:1-16; லேவி 5:11; லேவி 6:15,20; லேவி 7:12; லேவி 24:5; எண் 6:15; எண் 7:13).

பானபலி செலுத்தப்பட்ட சம்பவங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. ஒவ்வொரு காளையோடு - அரைப்படி (எண் 28:14; எண் 15:9-10)

2. ஒவ்வொரு ஆட்டுக்கடாவோடு - படியில் மூன்றில் ஒரு பங்கு (எண் 28:14; எண் 15:7)

3. ஒவ்வொரு ஆட்டுக்குட்டியோடு - காற்படியில் ஒரு பங்கு (எண் 28:14; எண் 15:5; யாத் 29:40; லேவி 23:12-13)

வாரங்களின் பண்டிகை உபா 16:9-12

உபா 16:9. ஏழு வாரங்களை எண்ணுவாயாக; அறுப்பு அறுக்கத்தொடங்கும் காலமுதல் நீ அந்த ஏழு வாரங்களையும் எண்ண வேண்டும்.

உபா 16:10. அவைகள் முடிந்தபோது வாரங்களின் பண்டிகையை உன் தேவனாகிய கர்த்தருக்கு என்று ஆசரித்து, உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதித்ததற்குத் தக்கதாய் உன் கைக்கு நேர்ந்த மனப்பூர்வமான காணிக்கையாகிய பகுதியைச் செலுத்தி,

உபா 16:11. உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே, நீயும், உன் குமாரனும், உன் குமாரத்தியும், உன் வேலைக்காரனும், உன் வேலைக்காரியும், உன் வாசல்களில் இருக்கிற லேவியனும், உன்னிடத்தில் இருக்கிற பரதேசியும், திக்கற்ற பிள்ளையும், விதவையும், உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் சந்தோஷப்பட்டு,

உபா 16:12. நீ எகிப்தில் அடிமையாயிருந்ததை நினைத்து, இந்தக் கட்டளைகளைக் கைக்கொண்டு இவைகளின்படி செய்யக்கடவாய்.

இஸ்ரவேல் புத்திரர் பஸ்கா பண்டிகையை ஆசரித்து முடித்து ஏழு வாரங்கள் சென்ற பின்பு, அவர்கள் பெந்தெகொஸ்தே பண்டிகையை ஆசரிக்கவேண்டும். இந்தப் பண்டிகை வாரங்களின் பண்டிகை என்றும் அழைக்கப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரர் பஸ்கா பண்டிகையை ஆசரித்து முடித்து, ஏழு வாரங்களை எண்ணவேண்டும்; அறுப்பு அறுக்கத்தொடங்கும் காலமுதல், அவர்கள் அந்த ஏழு வாரங்களையும் எண்ண வேண்டும். அவைகள் முடிந்தபோது வாரங்களின் பண்டிகையை தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு என்று ஆசரிக்கவேண்டும் (உபா 16:9,10).

"அறுப்பு அறுக்கத்தொடங்கும் காலமுதல்" என்பது பஸ்காவிற்குப் பின்பு வரும் ஓய்வுநாளுக்கு அடுத்த நாளாகும். அந்நாளில் கோதுமை அறுவடையின் முதற்பலனைக் கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டும் பலியாகச் செலுத்துவார்கள். (லேவி 23:6-16). ஒவ்வொரு வருஷமும் கோதுமை அறுவடையும், எல்லா பருவக்காலங்களும் சிறப்பாக அமைந்திருக்க வேண்டும் என்பதை இது குறிப்பிடுகிறது.

பெந்தெகொஸ்தே பண்டிகை வாரங்களின் பண்டிகை என்று அழைக்கப்படுகிறது. முதற்கனிகளின் பண்டிகைக்கும், பெந்தெகொஸ்தே பண்டிகைக்கும் இடையில் ஏழு வாரங்கள் முடிந்த பின்பு இந்தப் பண்டிகை வருகிறது. (லேவி 23:6-16; உபா 16:10).

காணிக்கையாகிய பகுதி என்பது பெந்தெகொஸ்தே நாளில் கர்த்தருக்கு மனப்பூர்வமாகச் செலுத்தப்படும் காணிக்கையாகும். ஒவ்வொரு வருஷமும் கர்த்தர் ஜனங்களை ஆசீர்வதித்திருப்பதற்குத் தக்கதாக இந்தக் காணிக்கை செலுத்தப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரருக்குக் கர்த்தர் தாராளமான ஆசீர்வாதத்தைக் கொடுத்திருப்பதினால், இந்தக் காணிக்கைப் பகுதியைக் காணிக்கை செலுத்துகிறவனும், அவனுடைய பிள்ளைகளும் அவனுடைய வேலைக்காரரும், லேவியனும், பரதேசியும், திக்கற்ற பிள்ளையும், விதவையும் கர்த்தருடைய சந்நிதியில் புசிக்கலாம். (உபா 16:11)

இஸ்ரவேல் புத்திரர், தங்கள் தேவனாகிய கர்த்தர் தங்களை ஆசீர்வதித்ததற்குத் தக்கதாய் தங்கள் கைக்கு நேர்ந்த மனப்பூர்வமான காணிக்கையாகிய பகுதியை கர்த்தருக்கு செலுத்தவேண்டும் (உபா 16:10).

இஸ்ரவேல் சபையார் வாரங்களின் பண்டிகையின்போது கர்த்தருக்கு காணிக்கையைக் கொண்டு வரவேண்டும். இந்தக் காணிக்கையானது, "மனப்பூர்வமான காணிக்கையாகிய பகுதி" என்று அழைக்கப்படுகிறது. இஸ்ரவேல் ஜனத்தார், வாரங்களின் பண்டிகையின்போது, எவ்வளவு காணிக்கைகளைக் கொண்டு வரவேண்டும் என்று கர்த்தர் நியமனம்பண்ணவில்லை. அவர்கள் ஒவ்வொருவரும் கர்த்தர் தங்களை ஆசீர்வதித்ததற்கு தக்கதாய், தங்களுடைய காணிக்கைகளை, மனப்பூர்வமாய்க் கொண்டு வரலாம்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு மனப்பூர்வமான காணிக்கையைக் கொண்டு வரும்போது, அதை கர்த்தருடைய சந்நிதியில் உற்சாகமாய் செலுத்தவேண்டும். சந்தோஷமாய்ச் செலுத்தப்படும் காணிக்கையே, மனப்பூர்வமான காணிக்கை என்று அழைக்கப்படுகிறது.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே, நீயும், உன் குமாரனும், உன் குமாரத்தியும், உன் வேலைக்காரனும், உன் வேலைக்காரியும், உன் வாசல்களில் இருக்கிற லேவியனும், உன்னிடத்தில் இருக்கிற பரதேசியும், திக்கற்ற பிள்ளையும், விதவையும், உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் சந்தோஷப்பட்டு, நீ எகிப்தில் அடிமையாயிருந்ததை நினைத்து, இந்தக் கட்டளைகளைக் கைக்கொண்டு இவைகளின்படி செய்யக்கடவாய்" (உபா 16:11,12) என்று சொல்லுகிறார்.

வாரங்களின் பண்டிகையாகிய பெந்தெகொஸ்தே பண்டிகையைப்பற்றி லேவியராகமம் 23:15-22 ஆகிய வசனப்பகுதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

பெந்தெகொஸ்தே பண்டிகையானது வாரங்களின் பண்டிகை என்றும் அழைக்கப்படுகிறது. "ஏழு வாரங்களை எண்ணுவாயாக; அறுப்பு அறுக்கத்தொடங்கும் காலமுதல் நீ அந்த ஏழு வாரங்களையும் எண்ண வேண்டும். அவைகள் முடிந்தபோது வாரங்களின் பண்டிகையை உன் தேவனாகிய கர்த்தருக்கு என்று ஆசரிக்கவேண்டும்" (உபா 16:9,10).

பெந்தெகொஸ்தே பண்டிகை பஸ்கா பண்டிகைக்கு ஐம்பது நாட்களுக்கு பின்பு அல்லது ஏழு வாரங்களுக்கு பின்பு வருகிறது. "நீங்கள் அசைவாட்டும் கதிர்க்கட்டைக் கொண்டுவரும் ஓய்வுநாளுக்கு மறுநாள் முதற்கொண்டு எண்ணத்துவக்கி, ஏழுவாரங்கள் நிறைவேறினபின்பு, ஏழாம் ஓய்வுநாளுக்கு மறுநாளாகிய ஐம்பதாம் நாள்மட்டும் எண்ணி, கர்த்தருக்குப் புதிய போஜனபலியைச் செலுத்தக்கடவீர்கள்" (லேவி 23:15,16) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஏழாம் ஓய்வுநாளுக்கு மறுநாள் என்பது முதற்கனிகளின் பண்டிகையிலிருந்து 50 ஆம் நாள் (லேவி 23:6,11,15). கிரேக்க மொழியில் "ஐம்பது" என்னும் எண்ணைக் குறிப்பதற்கு "பெந்தெகொஸ்தே" என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

புதிய போஜனபலி என்பது ஒரு மரக்காலிலே பத்தில் இரண்டு பங்காகிய மெல்லிய மாவிலே புளிப்பாகப் பாகம்பண்ணப்பட்ட இரண்டு அப்பங்கள் (லேவி 23:17). எல்லாப் போஜனபலிகளும் ஆசாரியரிடம் கொடுக்கப்பட வேண்டும். (லேவி 2:8).

பெந்தெகொஸ்தே பண்டிகையானது அறுப்புக்கால பண்டிகை என்றும் அழைக்கப்படுகிறது. "நீ வயலில் விதைத்த உன் பயிர்வேலைகளின் முதற்பலனைச் செலுத்துகிற அறுப்புக்கால பண்டிகையையும், வருஷ முடிவிலே நீ வயலில் உன் வேலைகளின் பலனைச் சேர்த்துத் தீர்ந்தபோது, சேர்ப்புக்கால பண்டிகையையும் ஆசரிப்பாயாக" (யாத் 23:16).

கர்த்தருடைய சந்நிதியில் அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை கொண்டு வரும்போது, அது அறுப்புக்காலத்திற்கு ஆரம்பமாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் தங்கள் அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை படைத்த பின்பு அவர்கள் தேசத்தின் வெள்ளாண்மையை அறுவடை செய்யலாம். பெந்தெகொஸ்தே பண்டிகையின்போது அறுவடை காலம் நிறைவுபெறுகிறது.

பெந்தெகொஸ்தே பண்டிகையின்போது இஸ்ரவேல் புத்திரர் ஒரு மரக்காலிலே பத்தில் இரண்டு பங்காகிய மெல்லிய மாவிலே புளிப்பாகப் பாகம்பண்ணப்பட்ட அசைவாட்டும் காணிக்கையாயிருக்கிற இரண்டு அப்பங்களை தங்கள் வாசஸ்தலங்களிலிருந்து கர்த்தருக்கென்று முதற்பலனாகக் கொண்டுவரவேண்டும் (லேவி 23:17).

இஸ்ரவேல் புத்திரர் இரண்டு அப்பங்களை தங்கள் வாசஸ்தலங்களிலிருந்து கர்த்தருக்கென்று முதற்பலனாக கொண்டு வரவேண்டும். ஒவ்வொரு வீட்டிலிருந்தும் இரண்டு அப்பங்களை ஆசாரியரிடம் கொண்டு வரவேண்டும் என்பது இதன் பொருளல்ல. இஸ்ரவேல் புத்திரர் அனைவருக்கும் பொதுவானதாக அவர்களுடைய வாசஸ்தலங்களிலிருந்து செய்யப்பட்ட இரண்டு அப்பங்களைக் கொண்டு வந்து, ஆசாரியரிடம் கொடுக்க வேண்டும்.

போஜனபலிகள் அனைத்தும் ஆசாரியரையே சாரும். அவர்கள் செய்யும் ஆசாரிய ஊழியத்திற்காக இது கர்த்தர் அவர்களுக்குக் கொடுக்கும் பங்குவீதம். (லேவி 2:2-3,8-10, 14-16).

அசைவாட்டும் காணிக்கையானது "ஒரு மரக்காலிலே பத்தில் இரண்டு பங்காகிய மெல்லிய மாவிலே புளிப்பாக பாகம்பண்ணப்பட்டிருக்கவேண்டும்" இவ்வளவு மாவினால் சுடப்படும் அப்பம் அளவில் பெரியதாக இருக்கும். எபிரெயருடைய வரலாற்றின் பிரகாரம் இந்த அப்பம் 28 அங்குல நீளமும், 16 அங்குல அகலமும், 7 அங்குலம் கனமும் உள்ளதாக இருக்கும். (லேவி 23:17).

பலிபீடத்தில் புளிப்பிடப்பட்ட எந்த அப்பமும் தகனிக்கப்படுவதில்லை (லேவி 2:11) ஆகையினால், இங்கு செலுத்தப்படும் புளிப்பாகப் பாகம்பண்ணப்பட்ட அப்பங்கள் சர்வாங்க தகனபலியாகச் செலுத்தப்படுவதற்கு அல்ல. கர்த்தர் தங்களுக்குக் கொடுத்திருக்கும் விளைச்சலிலிருந்து உச்சிதமான பொருளை ஜனங்கள் கர்த்தருக்கு ஸ்தோத்திர காணிக்கையாகச் செலுத்துகிறார்கள். அந்த வருஷத்தில் கர்த்தருடைய கிருபையினால் விளைச்சல் நன்றாக இருந்தது என்பதை அங்கிகரித்து ஜனங்கள் ஸ்தோத்திரப் பலிகளைச் செலுத்துகிறார்கள்.

முதற்பலன்கள் என்பது கோதுமை அறுவடையின் முதற்பலனைக் குறிக்கும். (லேவி 23:17).

பஸ்கா பண்டிகையின்போது இஸ்ரவேல் புத்திரர் புளிப்பில்லாத அப்பத்தை புசித்தார்கள். பெந்தெகொஸ்தே பண்டிகையின்போதோ அவர்கள் புளிப்பாக பாகம்பண்ணப்பட்ட அப்பங்களை கர்த்தருக்கென்று கொண்டு வருகிறார்கள். கர்த்தர் தங்களுடைய அன்றாட போஜனத்திற்கு ஆதரவாயிருக்கிறார் என்பதையும், கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளையும் நினைவுகூர்ந்து, இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு புளிப்பாக பாகம்பண்ணப்பட்ட அப்பங்களை காணிக்கையாக கொண்டு வருகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் அந்த அப்பத்தோடேகூடக் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாக, ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும், ஒரு காளையையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாக அவைகளுக்கு அடுத்த போஜனபலியையும், பானபலிகளையும் செலுத்தவேண்டும் (லேவி 23:18).

ஒவ்வொரு மிருகஜீவனைப் பலிசெலுத்தும்போதும் அதோடு சேர்ந்து அதற்குரிய மெல்லிய மாவையும், எண்ணெயையும், திராட்சரசத்தையும் சேர்த்து நியமிக்கப்பட்ட அளவின் பிரகாரம் காணிக்கையாகச் செலுத்தவேண்டும் (எண் 15:3-10).

இஸ்ரவேல் புத்திரர் அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை அசைவாட்டும் நாளிலே, கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியாக ஒரு வயதான பழுதற்ற ஒரு ஆட்டுக்குட்டியை செலுத்தவேண்டும் (லேவி 23:12). அவர்கள் கர்த்தருக்கு புளிப்பாக பாகம்பண்ணபட்ட அப்பத்தை சர்வாங்க தகனபலியாக செலுத்தும்போது, ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும், ஒரு காளையையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும் சுகந்தவாசனையான தகனபலியாக செலுத்தவேண்டும்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே அவர்களுடைய அறுவடையின் தேவனாகயிருக்கிறார். கர்த்தர் தங்களுக்கு ஆசீர்வாதமான அறுவடையைக் கொடுத்ததற்காக, இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு சுகந்த வாசனையான தகனபலிகளை செலுத்தி, அவரை கனம்பண்ணுகிறார்கள்.

அப்பத்தோடே செலுத்தப்படும் பலிகளோடு, அவர்கள் வெள்ளாடுகளில் ஒரு கடாவை பாவநிவாரண பலியாக செலுத்துகிறார்கள். இவை தவிர அவர்கள் ஒரு வயதான இரண்டு ஆட்டுக்குட்டிகளையும் சமாதான பலிகளாக செலுத்துகிறார்கள் (லேவி 23:19). தாங்கள் அறுவடை செய்திருக்கிற தானியக்கதிர்கள்மீது கர்த்தருடைய ஆசீர்வாதம் தங்கியிருக்கவேண்டும் என்று பணிவாய் விண்ணப்பம்பண்ணுகிறார்கள். தங்கள் விண்ணப்பத்தை உறுதிபண்ணும் வண்ணமாய் அவர்கள் ஒரு வயதான இரண்டு ஆட்டுக்குட்டிகளை சமாதான பலிகளாக செலுத்துகிறார்கள்.

பெந்தெகொஸ்தே பண்டிகையின்போது, 13 மிருகஜீவன்கள் பலியாகச் செலுத்தப் படுகின்றன. அவற்றில் ஒன்று பாவநிவாரண பலியாகச் செலுத்தப்படுகிறது. (லேவி 23:19; எபி 10:3) பத்து மிருகஜீவன்கள் சர்வாங்க தகனபலிகளாகவும், (லேவி 23:18); இரண்டு மிருகஜீவன்கள் சமாதான பலிகளாகவும், (லேவி 23:19) செலுத்தப்படுகின்றன. இவை தவிர, அன்றாட பலிகளும், அந்தி சந்தி பலிகளும் செலுத்தப்படும்.

இரண்டு ஆட்டுக்குட்டிகள் அப்பம், மாவு, எண்ணெய், திராட்சரசம் ஆகியவற்றோடு அசைவாட்டும் பலியாகச் செலுத்தப்படுகிறது. (லேவி 23:18,20). யூதருடைய பாரம்பரியத்தின் பிரகாரம், இவ்விரண்டு ஆட்டுக்குட்டிகளும் பலிசெலுத்தப் படுவதற்கு முன்பாக உயிரோடு அசைவாட்டப்படும். பல சமயங்களில் ஆட்டுக்குட்டிகளைப் பலிசெலுத்திய பின்பு, ஆசாரியர்கள் அவற்றின் துண்டங்களை எடுத்து, தங்கள் கைகளில் பிடித்து அசைவாட்டுவார்கள் (யாத் 29:24-27).

அவைகளை ஆசாரியன் முதற்பலனாகிய அப்பத்தோடும் இரண்டு ஆட்டுக்குட்டிகளோடுங்கூட கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டக்கடவன்; கர்த்தருக்குப் பரிசுத்தமாகிய அவைகள் ஆசாரியனுடையவைகளாகும் (லேவி 23:20) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அந்த நாள் இஸ்ரவேல் புத்திரருக்கு சபை கூடும் பரிசுத்தநாளாயிருக்கவேண்டும். இந்தப் பரிசுத்த நாளிலே இஸ்ரவேல் சபையார் எல்லோரும் ஒன்றாய்க்கூடி கர்த்தருடைய பரிசுத்த சமுகத்திலே பிரவேசிக்கிறார்கள். அவர்கள் கர்த்தரை தரிசிக்க வந்திருக்கிறார்கள். இஸ்ரவேல் சபையார் எல்லோரும் பரிசுத்த ஸ்தலத்திற்கு வரும்போது, அவர்கள் ஒருவரையொருவர் சந்தித்துக்கொள்கிறார்கள்.

அந்த நாள் உங்களுக்குச் சபைகூடும் பரிசுத்த நாள் என்று கூறவேண்டும்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது; இது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைதோறும் செல்லவேண்டிய நித்திய கட்டளை (லேவி 23:21) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சாதாரணமான ஓய்வுநாட்களோடு பெந்தெகொஸ்தே நாள் ஒரு விசேஷித்த ஓய்வுநாளாகச் சேர்க்கப்படுகிறது. இதனால் ஒவ்வொரு வருஷமும் ஓய்வுநாளின் கிழமை மாற்றமடையும்.

கர்த்தர் புளிப்பில்லா அப்பப்பண்டிகையை ஆசரிப்பதற்கு ஏழுநாட்களை நியமனம் செய்திருக்கிறார். ஆனால் பெந்தெகொஸ்தே பண்டிகையை ஆசரிப்பதற்கு கர்த்தர் ஒரு நாளை மாத்திரமே நியமனம் செய்திருக்கிறார். பெந்தெகொஸ்தே பண்டிகை காலம் இஸ்ரவேல் புத்திரருக்கு அறுவடையின் காலமாகும். இந்தக் காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் தங்களுடைய வெள்ளாண்மையை சுறுசுறுப்பாய் அறுவடை செய்யவேண்டும். அவர்கள் ஒரு நாள் மாத்திரம் பெந்தெகொஸ்தே பண்டிகையை ஆசரித்தால் போதுமானது. ஒரே நாளில் பண்டிகையை ஆசரித்து முடித்து விட்டு, அவர்கள் தங்களுடைய வெள்ளாண்மையை அறுப்பதற்கு, தங்கள் நிலங்களுக்கு விரைந்து திரும்பிப் போகவேண்டும்.

பெந்தெகொஸ்தே பண்டிகையானது, கர்த்தர் சீனாய் மலையிலே மோசேக்கு தம்முடைய பிரமாணத்தைக் கொடுத்த நாளின் நினைவுகூருதலாகவும் இருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட ஐம்பதாவது நாளில், கர்த்தர் சீனாய் மலையிலே மோசேக்கு தம்முடைய கட்டளைகளைக் கொடுத்தார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்திலே பெந்தெகொஸ்தே நாளின்போது, மேலறையில் ஒருமனப்பட்டு கூடியிருந்த அப்போஸ்தலர்கள்மீது பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டார். அப்போது பெந்தெகொஸ்தே பண்டிகையானது பரிபூரணமாயிற்று. இந்த நாளிலே விசுவாசத்தின் பிரமாணம் கொடுக்கப்பட்டது.

"பெந்தெகோஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஒரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது, அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்" (அப் 2:1-4).

பெந்தெகொஸ்தே பண்டிகை பஸ்கா பண்டிகை ஆசரிக்கப்பட்டு ஐம்பது நாட்களுக்கு பின்பு வரும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நமக்கு பஸ்கா ஆட்டுக்குட்டியாகயிருக்கிறார். கிறிஸ்துவானவர் கல்வாரி சிலுவையில் அறையப்பட்டு, அவர் நமக்காக தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்த நாளுக்கு, ஐம்பது நாட்களுக்கு பின்பு, பெந்தெகொஸ்தே பண்டிகை நாள் வருகிறது. அந்த நாளிலே அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டார்கள்.

பெந்தெகொஸ்தே பண்டிகையின்போது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேசத்தின் வெள்ளாண்மையை எவ்வாறு அறுக்கவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் தங்கள் தேசத்தின் வெள்ளாண்மையை அறுக்கையில், வயலின் ஓரத்தில் இருக்கிறதை முற்றிலும் அறுக்காமலும், சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும், எளியவனுக்கும் பரதேசிக்கும் அவைகளை விட்டுவிடவேண்டும் (லேவி 23:22).

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் வெள்ளாண்மையை அறுப்பது பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. வயலின் ஓரத்தில் இருக்கிறதை முற்றிலும் அறுக்க வேண்டாம்.
2. சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்கக் கூடாது.
3. எளியவனுக்கும் பரதேசிக்கும் அவைகளை விட்டுவிடவேண்டும்.

பெந்தெகொஸ்தே பண்டிகை இஸ்ரவேல் புத்திரருக்கு சந்தோஷமான பண்டிகை. அந்தப் பண்டிகை நாளின்போது தரித்திரரும் சந்தோஷமாயிருக்கவேண்டும். தங்கள் நிலத்திலே அறுவடை செய்கிறவர்கள் தரித்திரரையும் நினைவுகூர்ந்து, அவர்களுக்கு உதாரத்துவமாய் உதவி செய்யவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி பெந்தெகொஸ்தே பண்டிகையின் பிரமாணத்தை சொல்லும்போது, "நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல்" என்று சொல்லுகிறார். கர்த்தர் தனக்கு சொன்னதை மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லவேண்டும். மோசே கர்த்தருடைய பண்டிகைகளை இஸ்ரவேல் புத்திரருக்கு தெரிவிக்கிறார் *(லேவி 23:44)*.

பெந்தெகொஸ்தே பண்டிகை பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. ஒய்வுநாளுக்கு மறுநாள் முதற்கொண்டு எண்ணத்துவக்கி, ஏழுவாரங்கள் நிறைவேறின பின்பு நீங்கள் அசைவாட்டும் கதிர்க்கட்டைக் கொண்டு வாருங்கள் *(லேவி 23:15)*

2. ஏழாம் ஒய்வுநாளுக்கு மறுநாளாகிய ஐம்பதாம் நாள் பண்டிகை *(லேவி 23:16)*.

3. ஐம்பதாம் நாள்மட்டும் எண்ணி, கர்த்தருக்குப் புதிய போஜனபலியைச் செலுத்த வேண்டும்.

4. மெல்லிய மாவிலே புளிப்பாகப் பாகம் பண்ணப்பட்ட அசைவாட்டும் காணிக்கையாயிருக்கிற இரண்டு அப்பங்களை உங்கள் வாசஸ்தலங்களிலிருந்து கர்த்தருக்கென்று முதற்பலனாகக் கொண்டுவாருங்கள் *(லேவி 23:17)*.

5. அப்பத்தோடேகூடக் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாக, ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும், ஒரு காளையையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும் செலுத்த வேண்டும் *(லேவி 23:18)*.

6. கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாக அவைகளுக்கு அடுத்த போஜனபலியையும், பானபலிகளையும் செலுத்தவேண்டும்.

7. வெள்ளாடுகளில் ஒரு கடாவைப் பாவநிவாரணபலியாகவும், ஒரு வயதான இரண்டு ஆட்டுக்குட்டிகளைச் சமாதான பலியாகவும் இடவேண்டும். *(லேவி 23:19)*.

8. ஆசாரியன் முதற்பலனாகிய அப்பத்தோடும் இரண்டு ஆட்டுக்குட்டிகளோடுங்கூட கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டவேண்டும் *(லேவி 23:20)*.

9. கர்த்தருக்குப் பரிசுத்தமாகிய அவைகள் ஆசாரியனுடையவைகளாகும்.

10. அந்த நாள் உங்களுக்குச் சபைகூடும் பரிசுத்த நாள் என்று கூறவேண்டும் *(லேவி 23:21)*.

11. பரிசுத்த நாளிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது.

12. இது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைதோறும் செல்ல வேண்டிய நித்திய கட்டளை.

ஒய்வுநாளுக்கு மறுநாள் என்பது ஆபிப் அல்லது நிசான் மாதம் பதினாறாம் தேதியைக் குறிக்கும். இது ஏப்ரல்மாதம் ஆகும் *(லேவி 23:11,15)*. ஏழுவாரங்கள் என்பது முதற்கனிகளின் பண்டிகைக்கு 49 நாட்களுக்குப் பின்பு வரும் நாட்களாகும் *(லேவி 23:6,11,15)*. ஒய்வுநாளைக் குறிப்பதற்கு வாரம் என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது *(லேவி 25:8; மத் 28:1)*.

பெந்தெகொஸ்தே பண்டிகைக்கு கொடுக்கப்பட்டிருக்கும் மறுபெயர்களின் விவரம் வருமாறு :

1. பெந்தெகொஸ்தே என்னும் நாள் *(அப் 2:1; அப் 20:16)*

2. அறுப்புக்கால பண்டிகை *(யாத் 23:16)*

3. வாரங்களின் பண்டிகை (யாத் 34:22; உபா 16:10)

4. முதற்பலன்களைச் செலுத்தும் பண்டிகை நாள் (எண் 28:26)

பெந்தெகொஸ்தே நாளில் செலுத்தப்படும் பலிகளைப்பற்றிய விவரம் வருமாறு :

1. ஒரு மரக்காலிலே பத்தில் இரண்டு பங்காகிய மெல்லிய மாவு.

2. ஏழு ஆட்டுக்குட்டிகள்

3. ஒரு காளை

4. இரண்டு ஆட்டுக்கடாக்கள்

5. வெள்ளாடுகளில் ஒரு கடா.

6. ஒரு வயதான இரண்டு ஆட்டுக்குட்டிகள்

7. ஒவ்வொரு ஆட்டுக்குட்டியுடனும், ஒரு வெள்ளாடுகளில் ஒரு கடாவுடனும், ஒரு மரக்காலில் பத்தில் ஒரு பங்கு மெல்லிய மாவு. (எண் 15:3-5)

8. ஒவ்வொரு ஆட்டுக்குட்டியுடனும், ஒரு வெள்ளாடுகளில் ஒரு கடாவுடனும், காற்படி எண்ணெய்.

9. ஒவ்வொரு ஆட்டுக்குட்டியுடனும், ஒரு வெள்ளாடுகளில் ஒரு கடாவுடனும், பானபலியாக காற்படி திராட்சரசம்.

10. காளையோடு பத்தில் மூன்று பங்கான மெல்லிய மாவு. (எண் 15:8-10)

11. காளையோடு அரைப்படி எண்ணெய்.

12. காளையோடு பானபலியாக அரைப்படி திராட்சரசம்.

13. ஒவ்வொரு ஆட்டுக்கடாவுக்கும் பத்தில் இரண்டு பங்கான மெல்லிய மாவு. (எண் 15:6-7)

14. ஒவ்வொரு ஆட்டுக்கடாவுக்கும் ஒரு படியில் மூன்றில் ஒரு பங்காகிய எண்ணெய்

15. ஒவ்வொரு ஆட்டுக்கடாவுக்கும் பானபலியாக ஒரு படியில் மூன்றில் ஒரு பங்கு திராட்சரசம்.

வாரங்களின் பண்டிகையாகிய பெந்தெகொஸ்தே பண்டிகையைப்பற்றி எண்ணாகமம் 28:26-31 ஆகிய வசனப்பகுதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

கர்த்தர் பஸ்கா பண்டிகையின்போது செலுத்தவேண்டிய பலிகளை நியமனம் செய்வதோடு, பெந்தெகொஸ்தே பண்டிகையின்போதும் செலுத்த வேண்டிய பலிகளையும் நியமனம்பண்ணுகிறார். இந்த வசனத்தில் பெந்தெகொஸ்தே பண்டிகை என்பது "முதற்கனிகளை செலுத்தும் பண்டிகை" என்று அழைக்கப்படுகிறது.

முதற்கனிகளைச் செலுத்தும் பண்டிகை நாள் என்பது பெந்தெகொஸ்தே நாளுடனும், கோதுமை அறுவடை நாளுடனும் தொடர்புடையது. லேவி 23:10-14 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் முதற்பலன்களின் நாளுக்கு ஏழு வாரங்களுக்குப் பின்பு வரும்.

"அந்த வாரங்களுக்குப் பின் நீங்கள் கர்த்தருக்குப் புதிய போஜனபலியாக முதற்கனிகளைச் செலுத்தும் பண்டிகைநாளிலும் பரிசுத்த சபைகூடுதல் இருக்க வேண்டும்; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது" (எண் 28:26) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையின்போது அவர்கள் தாங்கள் அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்துகிறார்கள். இது அவர்களுடைய வெள்ளாண்மையை அறுக்கும் ஆரம்பகாலமாகும்.

"நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நான் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்தில் நீங்கள் போய்ச்சேர்ந்து, அதின் வெள்ளாண்மையை அறுக்கும்போது, உங்கள் அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை ஆசாரியனிடத்தில் கொண்டுவரக்கடவீர்கள்" (லேவி 23:10).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் தங்கள் அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்தி, ஏழுவாரங்களுக்கு பின்பு, அவர்கள் கர்த்தருக்கு ஒரு புதிய போஜனபலியை படைக்கிறார்கள். இப்போது தங்கள் வெள்ளாண்மையை அறுவடை செய்யும் காலம் அவர்களுக்கு முடிவு பெறுகிறது. இந்தப் பண்டிகை நாள் இஸ்ரவேல் புத்திரருக்கு பெந்தெகொஸ்தே பண்டிகை நாள் என்று அழைக்கப்படுகிறது.

பெந்தேகொஸ்தே நாளில் முதற்கனிகளைச் செலுத்துவது பற்றிய பிராமணத்தின் விவரம் வருமாறு :

1. போஜனபலியாக முதற்கனிகளைச் செலுத்தும் பண்டிகைநாளில் பரிசுத்த சபைகூடுதல் இருக்க வேண்டும்; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது (எண் 28:26).

2. கர்த்தருக்குச் சுகந்த வாசனையான சர்வாங்க தகனபலியாக இரண்டு காளைகளையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான ஏழு ஆட்டுக்குட்டிகளையும் செலுத்தவேண்டும் (எண் 28:27).

3. போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவில் ஒரு காளைக்காகப் பத்தில் மூன்று பங்கை செலுத்தவேண்டும் (எண் 28:28-29).

4. பாவநிவிர்த்தி செய்யும்படிக்கு ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும் (எண் 28:30; எண் 15:5).

5. நித்திய சர்வாங்க தகனபலியையும் அதின் போஜனபலியையும் அதின் பானபலியையும் அன்றி, இவைகளையும் செலுத்த வேண்டும். இவைகள் பழுதற்றவைகளாயிருக்க வேண்டும். (எண் 28:20,24,28,31).

பெந்தேகொஸ்தே நாளில் பலியிடப்படும் மிருகஜீவன்களைப் பற்றி லேவி 23:15-22 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. அந்த நாளில் ஏழு ஆட்டுக்குட்டிகள், ஒரு காளை, இரண்டு ஆட்டுக்கடாக்கள், ஒரு வெள்ளாட்டுக்கடா, சமாதான பலியாக மேலும் இரண்டு ஆட்டுக்குட்டிகள் பலியிடப்படுகிறது.

இந்த பலிகளும், எண் 28:27-31 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பலிகளும் பெந்தெகொஸ்தே நாளின் முதற்கனிகளைச் செலுத்தும் பண்டிகை நாளில் பலியாகச் செலுத்தப்படுகிறது.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில், பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி, பெந்தெகொஸ்தே நாளில், சீஷர்கள்மீது ஊற்றப்பட்டது.

"பெந்தெகோஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது, அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்" (அப் 2:1-4).

இந்த நாளுக்கு பின்பு அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் நிரம்பி, ஜனங்கள் மத்தியிலே இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணினார்கள். ஆயிரக்கணக்கானோர் இரட்சிக்கப்பட்டார்கள். இரட்சிக்கப்பட்டவர்கள் கர்த்தருடைய சபையிலே சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் அறுப்பின் முதற்பலன்களை கர்த்தருக்கு காணிக்கையாக படைத்ததுபோல, புதிய ஏற்பாட்டுக்காலத்திலே அப்போஸ்தலர்கள் தங்கள் ஊழியத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தருக்கு முன்பாக படைத்தார்கள்.

பெந்தெகொஸ்தே நாளின்போது கர்த்தருக்கு புதிய போஜனபலியாக முதற்கனிகள் செலுத்தப்படுகிறது. ஆகையினால் இந்தப் பண்டிகை முதற்கனிகளை செலுத்தும் பண்டிகை என்று அழைக்கப்படுகிறது.

புளிப்பில்லா அப்பப்பண்டிகையின் முதலாம் நாளிலே பரிசுத்த சபை கூடுதல் இருக்கவேண்டும். அதுபோலவே ஏழாம் நாளிலும் பரிசுத்த சபைகூடுதல் இருக்கவேண்டும்; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது. அந்த வாரங்களுக்குப் பின் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்குப் புதிய போஜனபலியாக முதற்கனிகளைச் செலுத்தும் பண்டிகைநாளிலும் பரிசுத்த சபைகூடுதல் இருக்க வேண்டும்; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு காணிக்கைகளை செலுத்தும்போது, எண்ணெயையும் காணிக்கையாக செலுத்துகிறார்கள். அதன் விவரம் வருமாறு:

1. ஒவ்வொரு காளையோடு - அரைப்படி அல்லது பத்தில் மூன்று பங்கு (எண் 15:8-10)

2. ஒவ்வொரு ஆட்டுக்கடாவோடு - பத்தில் இரண்டு பங்கு அல்லது ஒருபடியில் மூன்றில் ஒரு பங்கு. (எண் 15:6)

3. ஒவ்வொரு ஆட்டுக்குட்டி அல்லது வெள்ளாட்டுக்கடாவோடு - காற்படி மரக்காலில் பத்தில் ஒரு பங்கு. (எண் 15:3-4; எண் 28:5; யாத் 29:40)

கர்த்தருக்கு புதிய போஜனபலியாக முதற்கனிகளை செலுத்தும் பண்டிகை நாளில், இஸ்ரவேல் புத்திரர் தமக்கு செலுத்த வேண்டிய பலிகளைப்பற்றி கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி :

"நீங்கள் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான சர்வாங்க தகனபலியாக இரண்டு காளைகளையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான ஏழு ஆட்டுக்குட்டிகளையும் (எண் 28:27). அவைகளின் போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவில் ஒரு காளைக்காகப் பத்தில் மூன்று பங்கையும், அந்த ஒரு ஆட்டுக்கடாவுக்காகப் பத்தில் இரண்டு பங்கையும், (எண் 28:28). ஏழு ஆட்டுக்குட்டிகளில் ஒவ்வொன்றிற்காகப் பத்தில் ஒரு பங்கையும், உங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்கு ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தக் கடவீர்கள்" (எண் 28:29,30) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் நித்திய சர்வாங்க தகனபலியையும் அதின் போஜனபலியையும் அதின் பானபலியையும் அன்றி, இவைகளையும் செலுத்த வேண்டும்; இவைகள் பழுதற்றவைகளாயிருக்க வேண்டும் (எண் 28:31).

கூடாரப்பண்டிகை
உபா 16:13-15

உபா 16:13. நீ உன் களத்தின் பலனையும் உன் ஆலையின் பலனையும் சேர்த்தபின்பு, கூடாரப்பண்டிகையை ஏழுநாள் ஆசரித்து,

உபா 16:14. உன் பண்டிகையில் நீயும், உன் குமாரனும், உன் குமாரத்தியும், உன் வேலைக்காரனும், உன் வேலைக்காரியும், உன் வாசல்களில் இருக்கிற லேவியனும், பரதேசியும், திக்கற்ற பிள்ளையும், விதவையும் சந்தோஷப்படக்கடவீர்கள்;

உபா 16:15. உனக்கு உண்டான எல்லா வரத்திலும் உன் கைகளுடைய எல்லாக் கிரியையிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதித்தபடியினால், கர்த்தர் தெரிந்து கொள்ளும் ஸ்தானத்தில் உன் தேவனாகிய கர்த்தருக்கு ஏழுநாளளவும் பண்டிகையை ஆசரித்துச் சந்தோஷமாயிருப்பாயாக.

இஸ்ரவேல் சபையார் ஒவ்வொருவரும் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கவேண்டும். கர்த்தர் தங்களுடைய கைகளின் கிரியைகளை ஆசீர்வதித்திருப்பதற்காகவும், அவர் தங்களுடைய களத்தின் பலனையும், ஆலையின் பலனையும் ஆசீர்வதித்திருப்பதற்காகவும், இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய சமுகத்திலே சந்தோஷப்பட்டு களிகூரவேண்டும். அவர்கள் சந்தோஷப்படுவது மாத்திரமல்ல, மற்றவர்களும் சந்தோஷப்படுவதற்கு உதவி செய்யவேண்டும்.

"நீ உன் களத்தின் பலனையும் உன் ஆலையின்பலனையும் சேர்த்தபின்பு, கூடாரப்பண்டிகையை ஏழுநாள் ஆசரித்து, உன் பண்டிகையில் நீயும், உன் குமாரனும், உன் குமாரத்தியும், உன் வேலைக்காரனும், உன் வேலைக்காரியும், உன் வாசல்களில் இருக்கிற லேவியனும், பரதேசியும், திக்கற்ற பிள்ளையும், விதவையும் சந்தோஷப்படக்கடவீர்கள்" (உபா 16:13,14) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

"கெட்டுப்போக இருந்தவனுடைய ஆசீர்வாதம் என்மேல் வந்தது; விதவையின் இருதயத்தைக் கெம்பீரிக்கப்பண்ணினேன்" (யோபு 29:13).

உபா 16:11 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் வாரங்களின் பண்டிகையைப்போலவே, கூடாரப் பண்டிகையையும் எல்லோரும் அனுபவித்து சந்தோஷப்படவேண்டும். உபா 16:10 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருப்பதுபோல, இந்தப் பண்டிகைக்கும், இஸ்ரவேல் புத்திரர் மனப்பூர்வமான காணிக்கையாகிய பகுதியைச் செலுத்த வேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கூடாரங்களின் பண்டிகையை ஆசரிக்கும்போது, தங்களிடத்திலிருக்கிற பரதேசிகளையும் திக்கற்ற பிள்ளைகளையும் தங்களிடத்தில் சேர்த்துக்கொண்டு அவர்களோடுகூட சந்தோஷமாயிருக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கூடாரங்களின் பண்டிகையை ஆசரிக்கவேண்டிய விதம்பற்றியும் மோசே அவர்களுக்கு சொல்லுகிறார். "உனக்கு உண்டான எல்லா வரத்திலும் உன் கைகளுடைய எல்லாக் கிரியையிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதித்தபடியினால், கர்த்தர் தெரிந்து கொள்ளும் ஸ்தானத்தில் உன் தேவனாகிய கர்த்தருக்கு ஏழுநாளளவும் பண்டிகையை ஆசரித்துச் சந்தோஷமாயிருப்பாயாக" (உபா 16:15) என்று மோசே சொல்லுகிறார்.

கூடாரப்பண்டிகையைப்பற்றி லேவியராகமம் 23:33-44 ஆகிய வசனப்பகுதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

இஸ்ரவேல் சபையாருக்கு மூன்று பண்டிகைகள் மிகவும் விசேஷமானது. அந்தப் பண்டிகைகளின்போது இஸ்ரவேல் ஜனத்தாரில் ஆண்மக்கள் எல்லோரும் பங்குபெறவேண்டும் என்பது கர்த்தருடைய பிரமாணம். அப்படிப்பட்ட மூன்று பிரதான பண்டிகைகளில் கூடாரங்களின் பண்டிகையும் ஒன்று.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: அந்த ஏழாம் மாதம் பதினைந்தாந்தேதிமுதல் ஏழுநாளளவும் கர்த்தருக்கு ஆசரிக்கும் கூடாரப்பண்டிகையாயிருப்பதாக" (லேவி 23:33,34) என்று சொல்லுகிறார்.

பஸ்கா பண்டிகை, புளிப்பில்லா அப்பப்பண்டிகை ஆகியவற்றைப் போலவே கூடாரங்களின் பண்டிகையும் பதினைந்தாம் தேதி ஆரம்பமாகிறது. இக்காலத்தில் எல்லாக் கனிகளும், திராட்சைப்பழங்களும், தானிய வகைகளும் அறுவடை செய்யப்பட்டிருக்கும். (யாத் 23:16).

பாவநிவாரண நாள் ஏழாம் மாதம் பத்தாந்தேதி ஆசரிக்கப்படுகிறது. கூடாரங்களின் பண்டிகை ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி முதல் ஏழு நாளளவும் ஆசரிக்கப்படுகிறது. பாவநிவாரண நாளுக்கு ஐந்து நாட்களுக்கு பின்பு, கூடாரங்களின் பண்டிகை ஆரம்பமாகிறது.

பாவநிவாரண நாளின்போது, இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும், அந்தப் பண்டிகையை ஆசரிக்க வேண்டும் என்னும் கட்டாயமில்லை. ஆனாலும் பக்தியுள்ள யூதர்கள், பாவநிவாரண நாளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, கூடாரங்களின் பண்டிகை ஆரம்பமாவதற்கு முன்பாகவே கர்த்தருடைய சந்நிதியில் வந்து தங்களுடைய பாவங்களை நிவிர்த்தி செய்துகொள்வார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் பாவநிவாரண நாளின்போது தங்களுடைய ஆத்துமாக்களை தாழ்மைப்படுத்துவார்கள். அவர்கள் தங்கள் ஆத்துமாக்களை தாழ்மைப்படுத்தும்போது, கூடாரங்களின் பண்டிகையை சந்தோஷமாய் ஆசரிப்பதற்கு அவர்களை ஆயத்தம்பண்ணுகிறது.

நம்முடைய பாவங்களினிமித்தமாக நாம் எந்த அளவுக்கு அதிகமாக துக்கப்படுகிறோமோ, அந்த அளவுக்கு நமக்கு பரிசுத்த ஆவியானவரின் ஆறுதல் கிடைக்கும்.

கூடாரங்களின் பண்டிகை எட்டு நாட்களுக்கு ஆசரிக்கப்படுகிறது. ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி முதல் ஏழு நாளளவும் கூடாரப்பண்டிகை கர்த்தருக்கு ஆசரிக்கப்படுகிறது. இந்த எட்டு நாட்களில் முதல் நாளும் கடைசி நாளும் பரிசுத்த ஓய்வுநாட்களாக ஆசரிக்கப்படும். முதலாம் நாள் சபைகூடும் பரிசுத்த நாள்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது *(லேவி 23:35)* என்று கர்த்தர் சொல்லுகிறார். முதலாம் நாளிலும் எட்டாம் நாளிலும் ஓய்வு *(லேவி 23:39)*.

பண்டிகையின் முதலாவது நாளில் தேவையில்லாத வேலைகளைச் செய்யக்கூடாது. பண்டிகைக் காலத்தில் தங்கியிருப்பதற்காக இஸ்ரவேல் புத்திரர்கள் கூடாரங்களைப் போடவேண்டும் *(லேவி 23:39-40)* கூடாரப்பண்டிகையின்போது, இஸ்ரவேல் ஜனத்தார் கூடாரங்களைப் போட்டு அதில் தங்கியிருக்க வேண்டும். கூடாரங்களைப் போடுவதும் ஒரு வேலைதான். ஆகையினால், ஓய்வுநாளில் எந்த வேலையும் செய்யக்கூடாது என்று கூறும் உபதேசம் தவறானது. அத்தியாவசியமான வேலைகளை ஓய்வுநாளில் செய்துகொள்ளலாம்.

முதலாம் நாளிலும் ஓய்வு; எட்டாம் நாளிலும் ஓய்வு. எட்டு நாட்களில் இரண்டு ஓய்வுநாட்கள் வருகிறது. ஆகையினால் எல்லா வருஷத்திலும் ஒரே கிழமையில் ஓய்வுநாள் வரும் என்று கூற இயலாது. ஒவ்வொரு வருஷமும் ஓய்வுநாளின் கிழமை மாற்றமடைந்திருக்கும் *(லேவி 23:34,36,39)*.

இஸ்ரவேல் புத்திரர், கூடாரப்பண்டிகையின் முதல் நாளிலே அலங்காரமான விருட்சங்களின் கனிகளையும் பேரீச்சின் ஓலைகளையும் தழைத்திருக்கிற விருட்சங்களின் கிளைகளையும் ஆற்றலரிகளையும் கொண்டுவந்து, தங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் ஏழுநாளும் மகிழ்ச்சியாயிருக்கவேண்டும் *(லேவி 23:40)*.

முதல் நாள் என்பது எட்டு நாட்களில் முதலாவது ஓய்வுநாளாகும். இந்த நாளில் இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்குக் கூடாரங்களைப் போடவேண்டும். *(லேவி 23:39-40)*. முதல் நாளில் கூடாரம் போடும் வேலை நடைபெறுவதினால் இரண்டாம் நாளில்தான் கூடாரப்பண்டிகையின் காரியங்கள் நடைபெறுகின்றன. கூடாரங்களைப் போடும் முதல் ஓய்வுநாளுக்கும், கடைசி ஓய்வுநாளுக்கும் இடையில் ஆறு நாட்கள் உள்ளன *(லேவி 23:36-39; எண் 29:35; நெகே 8:18)*.

தங்கும் கூடாரங்களில் பயன்படுத்தப்பட்ட பொருட்களின் விவரம் வருமாறு :

1. அலங்காரமான விருட்சங்களின் கனிகள்
2. பேரீச்சின் ஓலைகள்.
3. தழைத்திருக்கிற விருட்சங்களின் கிளைகள்.
4. ஆற்றலரிகள்.

இஸ்ரவேல் புத்திரர் வருஷந்தோறும் ஏழுநாள் கர்த்தருக்கு இந்தப் பண்டிகையை ஆசரிக்க வேண்டும். ஏழுநாட்கள் என்பது கூடாரப் பண்டிகையின் இரண்டாம் நாளில் ஆரம்பமாகி, எட்டாம் நாளில் முடிவு பெற்றிருக்கலாம். லேவி 23:41-42 ஆகிய வசனங்களின் பிரகாரம், இஸ்ரவேல் புத்திரர்கள் ஏழுநாட்களுக்குக் கூடாரங்களில் குடியிருக்க வேண்டும். முதல் நாள் முழுவதும் அவர்கள் கூடாரம் போடும் வேலைகளைச் செய்வதினால் மீதமுள்ள ஏழுநாட்களில் அவர்கள் கூடாரங்களில் தங்கியிருக்க வேண்டும்.

"நான் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபோது, அவர்களைக் கூடாரங்களில் குடியிருக்கப்பண்ணினதை உங்கள் சந்ததியார் அறியும்படிக்கு, ஏழுநாள் கூடாரங்களில் குடியிருக்கக்கடவீர்கள்; இஸ்ரவேலில் பிறந்தவர்கள் எல்லாரும் கூடாரங்களில் வாசம் பண்ணவேண்டும்" *(லேவி 23:42,43)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து கர்த்தர் புறப்படப்பண்ணினபோது, அவர் அவர்களைக் கூடாரங்களில் குடியிருக்கப் பண்ணினார். இதை அவர்களுடைய சந்ததியார் அறிய வேண்டும். இஸ்ரவேல் புத்திரரின் அனுபவங்களை நினைவுகூரும் விதமாக கூடாரப்பண்டிகை ஆசரிக்கப்படுகிறது. (சக 14:16-21).

கூடாரப்பண்டிகையின்போது யூதர்கள் கர்த்தரைத் துதித்து கீதங்களை பாடி, சந்தோஷமாய் நடனமாடுவது வழக்கம். கூடாரப்பண்டிகை காலத்தின்போது யூதர்கள் பாரம்பரிய இசைக்கருவிகளை இசைத்து கர்த்தரை துதித்துப் பாடுவார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்பட பண்ணினபோது அவர்களை கூடாரங்களில் குடியிருக்கப்பண்ணினார். தாங்கள் கூடாரங்களில் குடியிருந்ததை நினைவுகூரும் வண்ணமாக இஸ்ரவேல் ஜனத்தார் கூடாரங்களின் பண்டிகையை ஆசரிக்கிறார்கள்.

கூடாரப்பண்டிகையானது சேர்ப்புக்கால பண்டிகை என்றும் அழைக்கப்படுகிறது. "நீ வயலில் விதைத்த உன் பயிர்வேலைகளின் முதற்பலனைச் செலுத்துகிற அறுப்புக்கால பண்டிகையையும், வருஷ முடிவிலே நீ வயலில் உன் வேலைகளின் பலனைச் சேர்த்துத் தீர்ந்தபோது, சேர்ப்புக்கால பண்டிகையையும் ஆசரிப்பாயாக" (யாத் 23:16).

இஸ்ரவேல் புத்திரர் கூடாரங்களின் பண்டிகையை எட்டு நாட்களுக்கு ஆசரிக்கவேண்டும். முதலாம் நாள் சபைகூடும் பரிசுத்த நாள்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது (லேவி 23:35).

அவர்கள் ஏழுநாளும் கர்த்தருக்குத் தகனபலி செலுத்த வேண்டும்; எட்டாம் நாள் அவர்களுக்குச் சபைகூடும் பரிசுத்தநாள்; அதிலே அவர்கள் கர்த்தருக்குத் தகனபலி செலுத்த வேண்டும்; அது ஆசரிக்கப்படும் நாள்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யக்கூடாது (லேவி 23:36).

பண்டிகையின் ஒவ்வொரு நாளிலும் தகனபலியாக எத்தனை மிருகஜீவன்கள் பலியிடப்பட்டன என்று கூறப்படவில்லை. எண் 29:12-40 ஆகிய வசனங்களில் ஒரு அட்டவணை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் பிரகாரம் 199 மிருகஜீவன்களை கூடாரப் பண்டிகையில் பலியாகச் செலுத்தினார்கள். அவற்றின் விவரமாவது:

1. காளைகள் - 71
2. ஆட்டுக்கடாக்கள் - 15
3. ஆட்டுக்குட்டிகள் - 105
4. வெள்ளாடுகளின் கடாக்கள் - 8

எட்டாம் நாள் அவர்களுக்குச் சபைகூடும் பரிசுத்தநாள் கூடாரப்பண்டிகை ஏழு நாட்களுக்கு ஆசரிக்கப்படும். இது அதோடு சேர்க்கப்படும் கூடுதலான விசேஷித்த நாள். இது ஒரு விசேஷித்த ஓய்வுநாள். சபை கூடிவரும் நாள். (லேவி 23:36,39; எண் 29:35) இந்தப் பண்டிகையும், அந்தெந்த வருஷங்களில் எல்லாப் பண்டிகைகளும் இந்த எட்டாம் நாளில் முடிவு பெறுகிறது. இந்த நாளில் ஆசாரியர்கள் விசேஷித்த பலிகளைச் செலுத்துவார்கள். (எண் 29:12-38). இயேசுகிறிஸ்து இந்த நாளில் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை வாக்குப்பண்ணினார் (யோவான் 7:37-39).

பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாள் என்பது பண்டிகையின் எட்டாவது நாள் ஆகும். இந்த நாளில் இஸ்ரவேல் ஜனங்களுக்காக பலிகள் செலுத்தப்படும். முதல் ஏழு நாட்களுக்கு இஸ்ரவேல் ஜனங்கள் மற்ற தேசங்களுக்காகப் பலிகளைச் செலுத்துவார்கள் (லேவி 23:34-36).

எட்டாவது நாளில் இஸ்ரவேல் ஜனங்களுக்காகப் பலிகள் செலுத்தப் படுவதினால் தேவாலயத்தில் இஸ்ரவேல் புத்திரர் ஏராளமானோர் கூடி வந்திருப்பார்கள். இந்தப் பிரதான நாளில் ஆசாரியரில் ஒருவர் சீலோவாம் குளத்திலிருந்து பொற்குடத்தில் தண்ணீர் கொண்டு வருவார். காலை வேளையிலே, பலி செலுத்தப்படும் பொழுது, பலிபீடத்தின்மீது சீலோவாம் தண்ணீரைத் திராட்சரசத்தோடு கலந்து, ஊற்றுவார். அப்போது இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் சந்தோஷமாகக் கர்த்தரைப் பாடித் துதிப்பார்கள்.

இப்பேர்ப்பட்ட சமயத்தில்தான் இயேசு கிறிஸ்து இந்த வாக்கியத்தைக் கூறுகிறார். இது பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைக் குறிக்கும் தீர்க்கதரிசனம். ஒவ்வொரு விசுவாசிக்கும் இந்த ஆசீர்வாதம் தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்டிருக்கிறது. பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப் படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை (யோவான் 7:37-39).

இஸ்ரவேல் புத்திரர் யாதொரு வேலையும் செய்யக்கூடாத நாட்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. வாரஓய்வுநாட்கள். (லேவி 23:3; யாத் 20:8-11)
2. விசேஷித்த ஓய்வுநாட்களும், உபவாச நாட்களும் (லேவி 23:6-8,34-36)
3. பெந்தெகொஸ்தே நாள். (லேவி 23:21)
4. எக்காளங்களின் பண்டிகை நாள். (லேவி 23:25)
5. மகா பாவநிவாரண பண்டிகை நாள் (லேவி 23:27-32)

"நீங்கள் கர்த்தருடைய ஓய்வுநாட்களில் செலுத்துவதும் தவிர, நீங்கள் கர்த்தருக்குப் படைக்கிற உங்கள் எல்லாக் காணிக்கைகளும் பொருத்தனைகளும் உற்சாகபலிகளும் தவிர, நீங்கள் அந்தந்த நாளுக்குத்தக்கதாய்க் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலி, போஜனபலி, இரத்தபலி, பானபலி முதலானவைகளைச் செலுத்தும்படி சபைகூடிவந்து, பரிசுத்தமாய் ஆசரிப்பதற்காக நீங்கள் கூறவேண்டிய கர்த்தருடைய பண்டிகைகள் இவைகளே" (லேவி 23:37,38) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கூடாரங்களின் பண்டிகையை ஆசரிக்கவேண்டிய காலத்தையும் கர்த்தர் தெளிவுபடுத்துகிறார். "நிலத்தின் பலனை நீங்கள் சேர்த்துவைக்கும் ஏழாம் மாதம் பதினைந்தாந்தேதிமுதல் கர்த்தருக்குப் பண்டிகையை ஏழுநாள் ஆசரிக்கக்கடவீர்கள்; முதலாம் நாளிலும் ஓய்வு; எட்டாம் நாளிலும் ஓய்வு" (லேவி 23:39) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் பண்டிகை நாட்களிலே கர்த்தருக்கு காணிக்கைகளையும், பொருத்தனைகளையும் உற்சாக பலிகளையும் செலுத்தவேண்டும். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஏராளமான பண்டிகைகளை நியமனம் செய்யவில்லை. கர்த்தர் ஒரு சில குறிப்பிட்ட பண்டிகைகளை மாத்திரமே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு நியமனம் செய்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பண்டிகை நாட்களிலே உற்சாக பலிகளை தாராளமாய் செலுத்தவேண்டும்.

கர்த்தருக்கு பலிகளை செலுத்துவது இஸ்ரவேல் ஜனத்தாருக்கு பாரமானதாகவோ, தங்களால் தாங்க முடியாத அளவுக்கு அதிக கிரயம் செலுத்தக்கூடியதாகவோ இருக்காதவாறு கர்த்தர் பார்த்துக்கொள்கிறார். கர்த்தருடைய நியமனம் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆசீர்வாதமானது.

கர்த்தருடைய பண்டிகைகள் அனைத்திற்கும் ஆவிக்குரிய முக்கியத்துவம் உள்ளது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்தப் பூமிக்கு மறுபடியும் வந்து தம்முடைய ஜனங்களையெல்லாம் சேர்த்துக்கொள்வார். அது கடைசியான சேர்ப்புக்கால பண்டிகையாகயிருக்கும். அந்தப் பண்டிகை நாள் விசுவாசிகள் அனைவருக்கும் மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும் நாளாகயிருக்கும்.

கூடாரங்களின் பண்டிகையைப்பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: அந்த ஏழாம் மாதம் பதினைந்தாந்தேதிமுதல் ஏழுநாளளவும் கர்த்தருக்கு ஆசரிக்கும் கூடாரப் பண்டிகையாயிருப்பதாக (லேவி 23:34).

2. முதலாம் நாள் சபைகூடும் பரிசுத்த நாள் (லேவி 23:35).

3. அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யக்கூடாது.

4. ஏழுநாளும் கர்த்தருக்குத் தகனபலி செலுத்தவேண்டும். (லேவி 23:36).

5. எட்டாம் நாள் உங்களுக்குச் சபைகூடும் பரிசுத்தநாள்.

6. கர்த்தருக்குத் தகனபலி செலுத்த வேண்டும்.

7. எட்டாம் நாளாகிய பரிசுத்த நாளிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யவேனண்டாம்.

8. முதலாம் நாளிலும் ஓய்வு; எட்டாம் நாளிலும் ஓய்வு (லேவி 23:39).

9. ஏழாம் மாதம் பதினைந்தாந்தேதிமுதல் கர்த்தருக்குப் பண்டிகையை ஏழுநாள் ஆசரிக்க வேண்டும். அந்த ஏழுநாள் கூடாரங்களில் குடியிருக்கவேண்டும். (லேவி 23:40-42).

10. உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் ஏழுநாளும் மகிழ்ச்சியாயிருங்கள் (லேவி 23:40-41).

11. இது உங்கள் தலைமுறைதோறும் செல்லவேண்டிய நித்திய கட்டளை (லேவி 23:41-43).

கூடாரப்பண்டிகையைப்பற்றி எண்ணாகமம் 29:12-38 ஆகிய வசனப்பகுதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

இஸ்ரவேல் சபையார் பாவநிவாரண நாளிலே தங்கள் ஆத்துமாக்களைத் தாழ்த்துகிறார்கள். இந்த நாளுக்கு பின்பு கூடாரங்களின் பண்டிகை நாள் வருகிறது. இந்த நாளிலே அவர்கள் கர்த்தருடைய சமுகத்தில் மகிழ்ந்து களிகூரவேண்டும். கண்ணீரோடு விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடு அறுவடை செய்வார்கள்.

கூடாரங்களின் பண்டிகை ஏழுநாட்களுக்கு ஆசரிக்கப்படுகிறது. இந்த நாட்களில் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகள் செலுத்தப்படுகிறது. ஏழுநாட்களும் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகள் செலுத்தப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரர் கூடாரங்களின் பண்டிகையை ஆசரிக்கும்போது மகிழ்ந்து களிகூருகிறார்கள். அவர்கள் மகிழ்ந்து களிகூரும் நாட்கள், கர்த்தருக்கு பலிகளை செலுத்தும் நாட்களாகயிருக்கிறது.

இஸ்ரவேல் சபையார், கூடாரப்பண்டிகையின்போது, ஏழுநாட்களும் கூடாரங்களில் வாசம்பண்ணுவார்கள். அந்த நாட்களில் அவர்கள் அன்றாடம் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகளை செலுத்துவார்கள். கூடாரங்களின் பண்டிகையின்போது, இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொரு நாளிலும் கர்த்தருக்கு செலுத்தவேண்டிய சர்வாங்க தகனபலிகளைப்பற்றிய விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு நாளும் ஒரே விதமான பலிகளே செலுத்தப்படுகிறது. ஆனாலும் பலிசெலுத்தப்படும் காளைகளின் எண்ணிக்கை ஒவ்வொன்றாக குறைகிறது. ஒவ்வொரு நாளும் செலுத்தவேண்டிய பலிகளை கர்த்தரே நியமனம் செய்திருக்கிறார்.

முதலாம் நாளிலே அவர்கள் பதிமூன்று காளைகளை சர்வாங்க தகனபலியாக செலுத்துகிறார்கள். இரண்டாம் நாளிலோ பன்னிரண்டு காளைகளை சர்வாங்க தகனபலியாக செலுத்துகிறார்கள். இவ்வாறாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காளையாக குறைகிறது. கூடாரப்பண்டிகையின் கடைசி நாளாகிய ஏழாம் நாளிலே, இஸ்ரவேல் சபையார் ஏழு காளைகளையும் சர்வாங்க தகனபலியாக செலுத்துகிறார்கள்.

இஸ்ரவேல் சபையார் கூடாரங்களின் பண்டிகையை ஏழுநாட்களுக்கு ஆசரிக்கிறார்கள். ஒவ்வொரு நாளிலும் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகளை செலுத்துகிறார்கள். சர்வாங்க தகனபலியாக செலுத்தப்படும் மிருகங்களில் காளையே அதிக விலைமதிப்புள்ளது.

இஸ்ரவேல் சபையார் கூடாரங்களின் பண்டிகையின்போது ஒவ்வொரு நாளும் பலிசெலுத்துகிறார்கள். ஏழு நாட்களும் பலிசெலுத்துகிறார்கள். எட்டாம் நாள் இஸ்ரவேல் சபையாருக்கு விசேஷித்த ஆசரிப்பு நாளாயிருக்கிறது. அந்த நாளிலே அவர்கள் கர்த்தருக்கு சுகந்த வாசனையுள்ள தகனமான சர்வாங்க தகனபலியாக ஒரு காளையை மாத்திரம் செலுத்துகிறார்கள் (எண் *29:35,36*).

கூடாரங்களின் பண்டிகை ஏழுநாட்களுக்கு ஆசரிக்கப்படுகிறது. எட்டாம் நாள் அவர்களுக்கு விசேஷித்த ஆசரிப்பு நாளாயிருக்கிறது. இந்த நாளில் ஏராளமான காளைகள் சர்வாங்க தகனபலியாக செலுத்தப்படாமல், ஒரே ஒரு காளை மாத்திரமே சர்வாங்க தகனபலியாக செலுத்தப்படுகிறது. எட்டாம் நாள் பண்டிகையின் முடிவு நாள் ஆகும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில், பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே, இயேசு நின்று, சத்தமிட்டு, "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" (யோவா *7:37,38*) என்று சொன்னார்.

கூடாரங்களின் பண்டிகை நாட்களில் செலுத்தவேண்டிய எல்லா பலிகளும் செலுத்தி முடிக்கப்பட்டு விடுகிறது. அப்போது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நின்று சத்தமிட்டு, "ஒருவன் இன்னும் நீதியின் மேல் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம்பண்ணக்கடவன்" என்று சொல்லுகிறார்.

கூடாரங்களின் பண்டிகையின்போது ஏராளமான மிருகங்கள் சர்வாங்க தகனபலியாக செலுத்தப்பட்டது. இந்தப் பலிகள் போதுமானதல்ல என்றும், இதைவிட மகாபிரதான பலியானது செலுத்தப்படவேண்டும் என்றும் யாராவது விரும்பினால், அவர்கள் இயேசுகிறிஸ்துவிடம் வரவேண்டும். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் செலுத்தப்பட்ட காளைகள், வெள்ளாட்டுக்கடாக்கள் ஆகியவை மனுஷருடைய பாவங்களை போக்குவதற்கும், அவர்களை நீதிமான்களாக்குவதற்கும் போதுமானவையல்ல. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபாதார பலி மரணம் மாத்திரமே, மனுக்குலத்தை இரட்சிப்பதற்கு போதுமானதாயிருக்கிறது.

ஆகையினால் இயேசுகிறிஸ்து கூடாரங்களின் பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே, நின்று, சத்தமிட்டு, "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம்பண்ணக்கடவன்" என்று தம்முடைய மரணத்தைப்பற்றிச் சொல்லுகிறார்.

ஒவ்வொரு நாளும் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகள் செலுத்தப்படும்போது, அதோடு சேர்ந்து போஜனபலிகளும் பானபலிகளும் செலுத்தப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரர் ஏழுநாட்களுக்கும் கூடாரங்களின் பண்டிகையை ஆசரித்து சந்தோஷமாயிருக்கிறார்கள். அவர்கள் மகிழ்ந்து களிகூர்ந்தாலும், ஒவ்வொரு நாளும் பாவநிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்துகிறார்கள். இஸ்ரவேல் சபையார் பண்டிகையை ஆசரித்து சந்தோஷமாயிருந்தாலும், தங்களுடைய பாவங்கள் நிவிர்த்தி பண்ணப்படவேண்டும் என்பதிலும் கவனம் செலுத்துகிறார்கள்.

கூடாரங்களின் பண்டிகையின்போது, ஏழு நாட்களும் கர்த்தருக்கு விசேஷித்த பலிகள் செலுத்தப்படுகிறது. இவையெல்லாம் செலுத்தப்படும்போது, அன்றாடம் செலுத்தவேண்டிய நித்திய தகனபலியும், செலுத்தப்படுகிறது. ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் சர்வாங்க தகனபலி செலுத்தப்படுகிறது. கூடாரங்களின் பண்டிகை நாட்களில், விசேஷித்த பலிகள் செலுத்தப்படுவதற்கு முன்பாக, காலையிலே நித்திய சர்வாங்க தகனபலி முதலாவதாக செலுத்தப்படுகிறது. அதன் பின்பு, ஒவ்வொரு நாள் மாலையிலும் நித்திய சர்வாங்க பலி கடைசியாக செலுத்தப்பட்டு, பலிகள் செலுத்தப்படுவது அந்தந்த நாளில் நிறைவுபெறுகிறது.

நாம் கர்த்தருக்காக எவ்வளவுதான் அதிகமாக ஊழியம் செய்தாலும், விசேஷித்த கூட்டங்களை நடத்தினாலும், ஊழியங்களிலே புதிய புதிய திட்டங்களை வகுத்து, அதை செயல்படுத்திக்கொண்டிருந்தாலும், ஒவ்வொரு நாளும் நம்முடைய தியான நேரத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். கர்த்தரைப்பற்றியும் அவருடைய வார்த்தையைப்பற்றியும் நாம் அன்றாடம் தியானம்பண்ணவேண்டும். நமக்கு அதிகமான ஊழியங்கள் இருக்கிறது என்பதற்காக தியானிப்பதையும் ஜெபிப்பதையும் நிறுத்திவிடக்கூடாது.

ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்த சபைகூடும் நாளாயிருக்கவேண்டும்; அதில் அவர்கள் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யக்கூடாது. இஸ்ரவேல் சபையார் ஏழுநாள் கர்த்தருக்கு கூடாரங்களின் பண்டிகையை ஆசரிக்க வேண்டும்.

ஒவ்வொரு நாளிலும் இஸ்ரவேல் சபையார் கர்த்தருக்கு செலுத்தவேண்டிய பலிகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

முதலாம் நாளிலே அவர்கள் கர்த்தருக்குச் சுகந்த வாசனையுள்ள சர்வாங்க தகனபலியாக பதின்மூன்று காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும், அவைகளின் போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவிலே அந்தப் பதின்மூன்று காளைகளில் ஒவ்வொன்றிற்காகப் பத்தில் மூன்று பங்கையும், அந்த இரண்டு ஆட்டுக்கடாக்களில் ஒவ்வொன்றிற்காக இரண்டு பங்கையும், பதினான்கு ஆட்டுக்குட்டிகளில் ஒவ்வொன்றிற்காக ஒரு பங்கையும், நித்திய தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும் (எண் 29:13-16).

இஸ்ரவேல் சபையார் கூடாரப்பண்டிகையின் முதலாம் நாளில் செய்யவேண்டிய காரியங்களின் விவரம் வருமாறு :

1. ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி உங்களுக்குப் பரிசுத்த சபைகூடும் நாளாயிருக்க வேண்டும் (எண் 29:12).

2. அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது.

3. ஏழுநாள் கர்த்தருக்குப் பண்டிகை ஆசரிக்கவேண்டும்.

4. நீங்கள் கர்த்தருக்குச் சுகந்த வாசனையுள்ள சர்வாங்க தகனபலியாக பதின்மூன்று காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக் குட்டிகளையும் செலுத்தவேண்டும் (எண் 29:13).

5. அவைகளின் போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவிலே அந்தப் பதின்மூன்று காளைகளில் ஒவ்வொன்றிற்காகப் பத்தில் மூன்று பங்கையும், அந்த இரண்டு ஆட்டுக்கடாக்களில் ஒவ்வொன்றிற்காக இரண்டு பங்கையும், பதினான்கு ஆட்டுக்குட்டிகளில் ஒவ்வொன்றிற்காக ஒரு பங்கையும் செலுத்தவேண்டும் (எண் 29: 14-15; எண் 28:24,28).

6. பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக் கடாவையும் அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் செலுத்த வேண்டும் (எண் 29:16; எண் 15:3-11; யாத் 29:40).

7. நித்திய தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும்.

இரண்டாம் நாளிலே அவர்கள் பன்னிரண்டு காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும், காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத் தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலி களையும், நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும் அன்றி, பாவநிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தவேண்டும் (எண் 29:17-19).

இஸ்ரவேல் சபையார் கூடாரப்பண்டிகையின் இரண்டாம் நாளில் செய்யவேண்டிய காரியங்களின் விவரம் வருமாறு :

1. இரண்டாம் நாளிலே பன்னிரண்டு காளைகளையும், இரண்டு ஆட்டுக் கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும் செலுத்த வேண்டும் (எண் 29:17).

2. காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத் தக்கதாக முறைமையின் படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும் செலுத்த வேண்டும் (எண் 29:18; எண் 28:20,24,28).

3. பாவநிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டுக் கடாவையும் அதின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும் செலுத்த வேண்டும் (எண் 29:19; எண் 15:3-11; யாத் 29:40).

4. நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும் அன்றி, பாவநிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும்.

மூன்றாம் நாளிலே அவர்கள் பதினொரு காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும், காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத் தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலி களையும், நித்திய சர்வாங்க தகனபலி யையும், அதின் போஜனபலியையும் அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தவேண்டும் (எண் 29:20-22).

இஸ்ரவேல் சபையார் கூடாரப்பண்டிகையின் மூன்றாம் நாளில் செய்யவேண்டிய காரியங்களின் விவரம் வருமாறு :

1. மூன்றாம் நாளிலே பதினொரு காளைகளையும், இரண்டு ஆட்டுக் கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும் செலுத்தவேண்டும்.

2. காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத் தக்கதாக முறைமையின் படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும் செலுத்த வேண்டும் (எண் 29:21; எண் 28:20,24,28).

3. நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும் அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும்.

நான்காம் நாளிலே அவர்கள் பத்துக் காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும், காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத்தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும், நித்திய சர்வாங்க தகனபலி யையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தவேண்டும் (எண் 29:23-25).

இஸ்ரவேல் சபையார் கூடாரப்பண்டிகையின் நான்காம் நாளில் செய்யவேண்டிய காரியங்களின் விவரம் வருமாறு :

1. நான்காம் நாளிலே பத்துக் காளைகளையும், இரண்டு ஆட்டுக் கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும் செலுத்தவேண்டும்.

2. காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக் குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத் தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும் செலுத்தவேண்டும் (எண் 29:24; எண் 28:20,24,28).

3. பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக் கடாவையும் அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் செலுத்த வேண்டும். (எண் 29:25; எண் 15:3-11; யாத் 29:30).

4. நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும் (எண் 29:25).

ஐந்தாம் நாளிலே அவர்கள் ஒன்பது காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும், காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத்தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும், நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும் (எண் 29:26-28).

இஸ்ரவேல் சபையார் கூடாரப்பண்டிகையின் ஐந்தாம் நாளில் செய்யவேண்டிய காரியங்களின் விவரம் வருமாறு :

1. ஐந்தாம் நாளிலே ஒன்பது காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும் செலுத்தவேண்டும்.

2. காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத் தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜன பலியையும், அவைகளின் பானபலிகளையும் செலுத்தவேண்டும் (எண் 29:27; எண் 28:20,24,28).

3. பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக் கடாவையும் அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் செலுத்தவேண்டும் (எண் 29:28; எண் 15:3-11; யாத் 29:40).

4. நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும். (எண் 29:28).

ஆறாம் நாளிலே அவர்கள் எட்டுக் காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும், காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத்தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும், நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலிகளையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தவேண்டும் (எண் 29:29-31).

இஸ்ரவேல் சபையார் கூடாரப்பண்டிகையின் ஆறாம் நாளில் செய்யவேண்டிய காரியங்களின் விவரம் வருமாறு :

1. ஆறாம் நாளிலே எட்டுக் காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும் செலுத்த வேண்டும்.

2. காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத் தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜன பலியையும், அவைகளின் பான பலிகளையும் செலுத்தவேண்டும் (எண் 29:30; எண் 28:20,24,28).

3. பாவநிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டுக் கடாவையும் அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் செலுத்த வேண்டும் (எண் 29:31; எண் 15:3-11; யாத் 29:40).

4. நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலிகளையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும் (எண் 29:31).

ஏழாம் நாளிலே அவர்கள் ஏழு காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும், காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத்தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும், நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தவேண்டும் (எண் 29:32-34).

இஸ்ரவேல் சபையார் கூடாரப்பண்டிகையின் ஏழாம் நாளில் செய்யவேண்டிய காரியங்களின் விவரம் வருமாறு :

1. ஏழாம் நாளிலே ஏழு காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும் செலுத்தவேண்டும்.

2. காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத்தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜன பலியையும், அவைகளின் பான பலிகளையும் செலுத்தவேண்டும் (எண் 29:33; எண் 28:20,24,28).

3. பாவநிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டுக் கடாவையும் அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் செலுத்தவேண்டும் (எண் 29:34; எண் 15:3-11; யாத் 29:40).

4. நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும் (எண் 29:34).

எட்டாம் நாள் இஸ்ரவேல் சபையாருக்கு விசேஷித்த ஆசரிப்பு நாளாயிருக்கவேண்டும்; அதில் அவர்கள் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது (எண் 29:35).

எட்டாம் நாளில் அவர்கள் கர்த்தருக்குச் சுகந்த வாசனையுள்ள தகனமான சர்வாங்க தகனபலியாக ஒரு காளையையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும், காளையும் ஆட்டுக்கடாவும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத் தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும், நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தவேண்டும் (எண் 29:36-38).

இஸ்ரவேல் சபையார் கூடாரப்பண்டிகையின் எட்டாம் நாளில் செய்யவேண்டிய காரியங்களின் விவரம் வருமாறு :

இது விசேஷித்த ஆசரிப்பு நாளாகும். சாதாரணமான பலிகள், காணிக்கைகள், ஆகியவை செலுத்தப்படுவதோடு விசேஷித்த சடங்குகளும் இந்த நாளில் செய்யப்படும். ஆசாரியர் ஒருவர் சீலோவாம் குளத்திற்குச் சென்று, அதிலிருந்து பொற்பாத்திரத்தில் தண்ணீர் எடுத்து, தேவாலயத்திற்குக் கொண்டு வருவார். பலிபீடத்தில் அந்திப்பலி செலுத்தப்படும் போது, இந்தச் சடங்கு நடைபெறும். அதன் பின்பு ஆசாரியர் சீலோவாம் குளத்திலிருந்து எடுத்து வரப்பட்ட தண்ணீரில் திராட்சை ரசத்தைக் கலந்து, பலியின்மீது ஊற்றுவார். அப்போது ஜனங்கள் கர்த்தருக்கு மிகுந்த சந்தோஷத்தோடு பாடலைப் பாடுவார்கள். கூடாரங்களின் பண்டிகை முடிவுற்றபின்பு, கூடாரங்களைப் பிரித்து எடுத்துவிட்டு, ஜனங்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிப் போவார்கள். இந்த நாளைக் குறித்த பிரமாணமாவது:

1. எட்டாம் நாள் உங்களுக்கு விசேஷித்த ஆசரிப்பு நாளாயிருக்கவேண்டும்.

2. அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது.

3. கர்த்தருக்குச் சுகந்த வாசனையுள்ள தகனமான சர்வாங்க தகனபலியாக ஒரு காளையையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக் குட்டிகளையும் செலுத்தவேண்டும் (எண் 29:36).

4. காளையும் ஆட்டுக்கடாவும் ஆட்டுக் குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத் தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும் செலுத்தவேண்டும் (எண் 29:37 ; எண் 28:20,24,28).

5. பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக் கடாவையும் அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் செலுத்த வேண்டும். (எண் 29:38; எண் 15:3-11; யாத் 29:40).

6. நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும். (எண் 29:38).

7. நீங்கள் உங்கள் பண்டிகைகளிலே கர்த்தருக்குச் செலுத்த வேண்டியவைகளோடு உங்கள் பொருத்தனைகளையும், உங்கள் உற்சாகபலிகளையும், உங்கள் சர்வாங்க தகனபலிகளையும், உங்கள் போஜனபலி களையும், உங்கள் பானபலிகளையும், உங்கள் சமாதான பலிகளையும் செலுத்த வேண்டும். (எண் 29:39).

கூடாரங்களின் பண்டிகையில் ஒவ்வொரு நாளும் செலுத்தப்பட்ட பலிகளின் விவரம் வருமாறு :

1. முதலாம் நாள் - 13 காளைகள், 2 ஆட்டுக்கடாக்கள், 14வெள்ளாடுகள், 1 வெள்ளாட்டுக்கடா, இவற்றுடன் மாவு, எண்ணெய், இரசம் ஆகியவை.

2. இரண்டாம் நாள் - 12 காளைகள், 2 ஆட்டுக்கடாக்கள், 14வெள்ளாடுகள், 1 வெள்ளாட்டுக்கடா

3. மூன்றாம் நாள் - 11 காளைகள், 2 ஆட்டுக்கடாக்கள், 14வெள்ளாடுகள், 1 வெள்ளாட்டுக்கடா

4. நான்காம் நாள் - 10 காளைகள், 2 ஆட்டுக்கடாக்கள், 14வெள்ளாடுகள், 1 வெள்ளாட்டுக்கடா

5. ஐந்தாம் நாள் - 9 காளைகள், 2 ஆட்டுக்கடாக்கள், 14வெள்ளாடுகள், 1 வெள்ளாட்டுக்கடா

6. ஆறாம் நாள் - 8 காளைகள், 2 ஆட்டுக்கடாக்கள், 14வெள்ளாடுகள், 1 வெள்ளாட்டுக்கடா

7. ஏழாம் நாள் - 7 காளைகள், 2 ஆட்டுக்கடாக்கள், 14வெள்ளாடுகள், 1 வெள்ளாட்டுக்கடா

8. எட்டாம் நாள் - 1 காளை, 1 ஆட்டுக்கடா, 7 வெள்ளாடுகள், 1 ஆடு

கூடாரங்களின் பண்டிகை நடைபெறும் எட்டு நாட்களிலும் செலுத்தப்படும் மொத்த பலிகள். 71 காளைகள், 15 ஆட்டுக்கடா, 105 ஆட்டுக்குட்டி, 8 வெள்ளாட்டுக்கடா அல்லது ஆட்டுக்குட்டிகள் இவற்றுடன் நியமிக்கப்பட்ட போஜனபலிகளும், பானபலிகளும் (எண் 29:12-20; எண் 20:23-32)

இஸ்ரவேல் சபையாருக்காக ஒரு வருஷத்தில் செலுத்தப்பட்ட ஆட்டுக்குட்டிகளின் விவரம் வருமாறு :

அன்றாட பலிகள் - தினமும் இரண்டு. 365 நாட்களுக்கு 730 ஆட்டுக்குட்டிகள்

வாரஓய்வுநாட்கள் - ஒவ்வொரு வார ஒய்வுநாளிலும் கூடுதலாக இரண்டு ஆட்டுக்குட்டிகள். 52 வார ஓய்வுநாட்களுக்கு 104 ஆட்டுக்குட்டிகள்.

மாதப்பிறப்பின் பண்டிகைகள் - ஒவ்வொரு மாதப்பிறப்பிலும் ஏழு ஆட்டுக்குட்டிகள். பன்னிரண்டு மாதப்பிறப்புக்களுக்கு 84 ஆட்டுக்குட்டிகள்.

புளிப்பில்லா அப்பப் பண்டிகை - ஒவ்வொரு நாளும் ஏழு ஆட்டுக்குட்டிகள் வீதம் 7 நாட்களுக்கு 49 ஆட்டுக்குட்டிகள்.

முதற்பலன்களின் பண்டிகை - பெந்தெகொஸ்தே நாளின் கோதுமை அறுப்பில் 16 ஆட்டுக்குட்டிகளும், வாற்கோதுமை அறுப்பில் ஒரு ஆட்டுக்குட்டியும். ஆக மொத்தம் 17 ஆட்டுக்குட்டிகள். (லேவி 23:12)

எக்காளங்களின் பண்டிகை - 7 ஆட்டுக்குட்டிகள்

பாவநிவாரண நாள் - 7 ஆட்டுக்குட்டிகள்

கூடாரங்களின் பண்டிகை - முதல் ஏழு நாளில் தினமும் 14 ஆட்டுக்குட்டிகள் வீதம் 98 ஆட்டுக்குட்டிகள். மேலும் எட்டாம் நாளில் 7 ஆட்டுக்குட்டிகள். ஆக மொத்தம் 105 ஆட்டுக்குட்டிகள்

பலியிடப்பட்ட ஆட்டுக்குட்டிகளின் மொத்த எண்ணிக்கை - 1,103 ஆகும். இவை அனைத்தும் ஜனங்களுடைய பொதுவான பணத்திலிருந்து செலவு பண்ணப்படுகிறது. இது தவிர, தனி நபர்களும் குடும்பத்தினரும் தங்கள் பலிகளைச் செலுத்துவது வழக்கம்.

ஒவ்வொரு வருஷத்திலும் செலுத்தப்பட்ட பலிகளின் விவரம் வருமாறு:

1. ஆட்டுக்குட்டிகள் = 1,103
2. காளைகள் = 115
3. ஆட்டுக்கடாக்கள் = 41
4. வெள்ளாட்டுக்கடாக்கள் அல்லது ஆட்டுக்குட்டிகள் = 33

பண்டிகை நாட்களிலும், அன்றாட பலிகளிலும் செலுத்தப்படும் பலிகள் தவிர, மேலும் பல பலிகளையும் இஸ்ரவேல் புத்திரர்கள் செலுத்துகிறார்கள். தீட்டுக் கழிக்கும் ஜலத்திற்காக சிவப்பு கிடாரி, அறியாமல் செய்த பாவத்திற்குப் பலிகள், ஸ்தோத்திர பலிகள், தனி நபர்களுடைய பாவநிவாரண பலிகள், புறாக்கள், காட்டுப்புறாக்கள், பிள்ளைகளும், மிருக ஜீவன்களும் பிறக்கும்போது செலுத்தும் பலிகள், குஷ்டரோகி சுத்தமானதற்காகச் சுத்திகரிக்கப்படும்போது செலுத்தப்படும் பலிகள், தீட்டுக் கழிப்பதற்காகச் செலுத்தப்படும் பலிகள், பொருத்தனை செய்யப்படும்போது செலுத்தப்படும் பலிகள் போன்று பலவிதமான பலிகளைச் செலுத்துகிறார்கள்.

நித்திய சர்வாங்க தகனபலியாக அனுதினமும் இரண்டு ஆட்டுக்குட்டிகள் பலியிடப்படுகிறது. ஒன்று காலையிலும், மற்றொன்று மாலையிலும் பலியாகச் செலுத்தப்படுகிறது. இந்த அதிகாரம் முழுவதிலும் இந்த பலி "நித்திய சர்வாங்க தகனபலி" (எண் 29:6,11,16,19,22, 25,28,31,34,38) என்று அழைக்கப்படுகிறது.

ஒவ்வொரு பலியுடனும் சேர்ந்து, அதற்குரிய போஜனபலியையும், பானபலியையும் சேர்த்து செலுத்த வேண்டும். (எண் 28:20,24,28).

இஸ்ரவேல் சபையார் கர்த்தருக்கு ஐந்து விதமான பலிகளை செலுத்துகிறார்கள். அவையாவன :

1. உற்சாக பலிகள் (எண் 15:3; எண் 29:39; லேவி 22:18-23; லேவி 23:38; உபா 12:6,17; உபா 16:10; உபா 23:23; 2நாளா 31:14; எஸ்றா 1:4; எஸ்றா 3:5; எஸ்றா 7:13,16; எஸ்றா 8:28; சங் 119:108).

2. சர்வாங்க தனபலிகள் (எண் 7:15-87; எண் 28:3-31; எண் 29:2-39; ஆதி 8:20; ஆதி 22:2-13; யாத் 40:6-29; லேவி 1:1-17; லேவி 4:7-34; லேவி 6:9-30; லேவி 7:2-37; லேவி 8:17-28; லேவி 9:1-24) இவை கர்த்தருக்குச் செலுத்தப்படும் மிருக ஜீவன்களும் போஜனங்களுமாகும்.

3. போஜனபலிகள் (எண் 15:3-10; எண் 28:5-31; எண் 29:3-39; யாத் 29:41; லேவி 2:1-15; லேவி 6:14-23) இவை கர்த்தருக்குச் செலுத்தப்படும் போஜனங்கள். (லேவி 2:1) இவை மிருகஜீவன்களின் பலிகளோடு சேர்த்துச் செலுத்தப்படுகிறது. (எண் 15:3-10)

4. பானபலிகள் (எண் 6:15-20; எண் 15:3-10,24; எண் 28:7-31; எண் 29:7-39; ஆதி 35:14; யாத் 29:40-41) ஒவ்வொரு பலியுடனும் செலுத்தப்படும் திராட்சரசம் (எண் 15:3-10).

5. சமாதானபலிகள் (எண் 6:14-26; எண் 7:17-88; எண் 10:10; எண் 15:8; எண் 30:4-14; யாத் 20:24; யாத் 24:5; யாத் 29:28; யாத் 32:6; லேவி 3:1-9; லேவி 4:10-35; லேவி 7:11-37; உபா 20:11) இவை ஸ்தோத்திரபலிகளும் கர்த்தரோடுள்ள ஐக்கியத்தை வெளிப்படுத்தும் பலிகளும் ஆகும்.

இவைதவிர குற்ற நிவாரண பலிகள், பாவநிவாரண பலிகள், சுகந்தவாசனையான பலிகள், சுகந்தவாசனையல்லாத பலிகள் ஆகிய பலிகளையும் இஸ்ரவேல் புத்திரர்கள் செலுத்துகிறார்கள். (லேவி 1:1-8:31)

மூன்று பண்டிகைகள்
உபா 16:16,17

உபா 16:16. வருஷத்தில் மூன்றுதரம் புளிப்பில்லாத அப்பண்டிகையிலும், வாரங்களின் பண்டிகையிலும், கூடாரப்பண்டிகையிலும், உன் ஆண்மக்கள் எல்லாரும் உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே, அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து காணப்படக்கடவர்கள்.

உபா 16:17. ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் வெறுங்கையோடே வராமல், உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு அருளிய ஆசீர்வாதத்திற்குத்தக்கதாக, அவனவன் தன் தன் தகுதிக்கு ஏற்றபடி காணிக்கையைக் கொண்டுவரக்கடவன்.

இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொரு வருஷமும் மூன்று பண்டிகைகளை ஆசரிக்கவேண்டுமென்று கர்த்தர் நியமனம் செய்திருக்கிறார். அவையாவன : 1. பஸ்கா பண்டிகை 2. வாரங்களின் பண்டிகையாகிய பெந்தெகொஸ்தே பண்டிகை. 3. கூடாரங்களின் பண்டிகை. இம்மூன்று பண்டிகைகளும் இஸ்ரவேல் புத்திரர் ஆசரிக்கவேண்டிய வருஷாந்தர பண்டிகைகளாகும்.

வருஷத்தில் மூன்றுதரம் புளிப்பில்லாத அப்பண்டிகையிலும், வாரங்களின் பண்டிகையிலும், கூடாரப்பண்டிகையிலும், இஸ்ரவேல் புத்திரரின் ஆண்மக்கள் எல்லாரும் தங்கள் தேவனாகிய கர்த்தர் தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே, அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து காணப்பட வேண்டும் என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார் (உபா 16:16).

இஸ்ரவேலர் அனைவரும் ஆசரிக்கும் வருஷப்பண்டிகைகள் :

1. புளிப்பில்லா அப்பப்பண்டிகை - இதில் பஸ்கா பண்டிகையும், முதற்கனிகளின் பண்டிகையும் அடங்கும் (லேவி 23:6-14; உபா 16:16).

2. பெந்தெகொஸ்தே அல்லது வாரங்களின் பண்டிகை - பஸ்கா பண்டிகைக்கு ஐம்பது நாட்களுக்குப் பின்பு (லேவி 23:150-22; உபா 16:16).

3. கூடாரங்களின் பண்டிகை - எக்காளங்களின் பண்டிகை, பாவநிவாரண நாள், ஆகியவை நடைபெறும் காலத்தில் இதுவும் நடைபெறும். 22 நாள் பண்டிகைக்கு இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் வரும் விதமாக இவை ஒரே சமயத்தில் கொண்டாடப்படுகிறது. (உபா 16:16; லேவி 23:23-44).

ஒவ்வொரு பண்டிகையின்போதும் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தகுதிக்கு ஏற்றபடி காணிக்கையைக் கொண்டுவரவேண்டும். மூன்று பண்டிகைகளிலும் ஒவ்வொருவரும் உற்சாகக் காணிக்கைகளைக் கொண்டுவர வேண்டும். இதனால் எல்லாப் பண்டிகைகளிலும் ஜனங்களுக்குப் போஜனம் தாராளமாகக் கிடைக்கும்.

இஸ்ரவேல் புத்திரர் இந்தப் பண்டிகைகளின்போது, கர்த்தருடைய சந்நிதிக்கு முன்பாக எவ்வாறு வரவேண்டும் என்றும் மோசே அவர்களுக்கு சொல்லுகிறார்.

அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் வெறுங்கையோடே வராமல், தங்கள் தேவனாகிய கர்த்தர் தங்களுக்கு அருளிய ஆசீர்வாதத்திற்குத்தக்கதாக, அவனவன் தன் தன் தகுதிக்குஏற்றபடி காணிக்கையைக் கொண்டுவரவேண்டும் (உபா 16:17).

கர்த்தருடைய பண்டிகைகளைப்பற்றிய லேவி 23:1,2 ஆகிய வசனப்பகுதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

கர்த்தர் நியமித்திருக்கிற பரிசுத்தமான நாட்களைப்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: சபைகூடிவந்து பரிசுத்த நாட்களாக ஆசரிக்கும்படி, நீங்கள் கூறவேண்டிய கர்த்தருடைய பண்டிகை நாட்களாவன" (லேவி 23:1,2) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் ஒரு நாளை பரிசுத்தமாய் நியமிக்கும்போது, அந்த நாள் பரிசுத்த நாளாகிறது. அவரே நாட்களுக்கும் காலங்களுக்கும் கர்த்தராயிருக்கிறார். கர்த்தர் காலங்களை உண்டாக்கினபோது, ஒரு நாளை மற்ற நாளிலிருந்து பரிசுத்தப்படுத்தி, அதை ஆசீர்வதித்திருக்கிறார்.

"தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்" (ஆதி 2:3).

மனுஷன் தன்னுடைய விருப்பத்தின் பிரகாரமும், சவுகரியத்தின் பிரகாரமும் ஒரு நாளை நல்ல நாளாக்குகிறான். மனுஷனால் அதை மாத்திரமே செய்ய முடியும். கர்த்தரோ ஒரு நாளை பரிசுத்த நாளாக ஆக்குகிறார்.

"ஆதலால் அலங்கமில்லாத ஊர்களில் குடியிருக்கிற நாட்டுப்புறத்தாரான யூதர்கள் ஆதார் மாதத்தின் பதினாலாந்தேதியைச் சந்தோஷமும், விருந்துண்கிற பூரிப்புமான நாளும், ஒருவருக்கொருவர் வரிசைகளை அனுப்புகிற நாளுமாக்கினார்கள்" (எஸ் 9:19).

கர்த்தர் பரிசுத்தமான நாட்களை "பண்டிகை நாட்கள்" என்று சொல்லுகிறார். பாவநிவாரண நாளானது ஒரு பண்டிகை நாளாகும். பண்டிகை நாட்கள் பொதுவாக மகிழ்ந்து களிகூருவதற்கும், சந்தோஷமாயிருப்பதற்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் அந்தப் பரிசுத்தமான நாட்கள், பண்டிகை நாட்கள் என்று அழைக்கப்படுகிறது.

"சபை கூடிவந்து பரிசுத்த நாட்களாக ஆசரிக்கும்படி, நீங்கள் கூரவேண்டிய கர்த்தருடைய பண்டிகை நாட்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்தப் பண்டிகை நாட்கள், "கர்த்தருடைய பண்டிகை நாட்கள்" என்று அழைக்கப்படுகிறது. கர்த்தர் இந்தப் பரிசுத்த நாட்களை, "என்னுடைய பண்டிகை நாட்கள்" என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய பண்டிகை நாட்களை மோசே இஸ்ரவேல் புத்திரர் எல்லோரோடும் சொல்லவேண்டும். இந்தப் பண்டிகை நாட்களை ஆசாரியர் மாத்திரம் ஆசரிக்கிறார்கள் என்று இல்லாமல், இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் இதை பரிசுத்த நாட்களாக ஆசரிக்கிறார்கள். கர்த்தருடைய பண்டிகை நாட்கள் ஆசாரியருக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் பரிசுத்த நாட்களாயிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பண்டிகை நாட்களிலே சபையாகக் கூடிவரவேண்டும். அந்தப் பண்டிகை நாட்களை பரிசுத்த நாட்களாக ஆசரிக்கவேண்டும். பண்டிகை நாட்கள் பரிசுத்தமானது. பண்டிகை நாட்களிலே ஆசரிக்கப்படும் ஒவ்வொரு காரியமும் பரிசுத்தமானதாயிருக்கவேண்டும்.

நீதியான நியாயத்தீர்ப்பு உபா 16:18-20

உபா 16:18. உன் தேவனாகிய கர்த்தர் உன் கோத்திரங்கள் தோறும் உனக்குக் கொடுக்கும் வாசல்களிலெல்லாம், நியாயாதிபதிகளையும் தலைவரையும் ஏற்படுத்துவாயாக; அவர்கள் நீதியுடன் ஜனங்களுக்கு நியாயத்தீர்ப்புச் செய்யக்கடவர்கள்.

உபா 16:19. நியாயத்தைப் புரட்டாதிருப்பாயாக; முகதாட்சணியம் பண்ணாமலும், பரிதானம் வாங்காமலும் இருப்பாயாக; பரிதானம் ஞானிகளின் கண்களைக் குருடாக்கி, நீதிமான்களின் நியாயங்களைத் தாறுமாறாக்கும்.

உபா 16:20. நீ பிழைத்து, உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு நீதியையே பின்பற்றுவாயாக.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே நீதியான நியாயத்தீர்ப்பு சொல்லப்படவேண்டும். அவர்களுடைய வழக்குகள் நீதியாகவும், நியாயமாகவும் விசாரிக்கப்படவேண்டும். கர்த்தர் உண்மையும் சத்தியமும் நீதியுமுள்ளவர். அவர் இஸ்ரவேல் ஜனத்தாரை தம்முடைய நீதியினால் ஆளுகை செய்யவேண்டுமென்று சித்தங்கொண்டிருக்கிறார். இஸ்ரவேலரின் நியாயாதிபதிகளும், தலைவர்களும், கர்த்தருடைய பிரதிநிதிகளாக, இஸ்ரவேலரை நியாயம் விசாரிக்கிறார்கள்.

குற்றம் செய்யாத நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது. குற்றம் புரிந்த குற்றவாளி தண்டனைக்கு தப்பிக்கவும் கூடாது. இஸ்ரவேல் புத்திரருடைய ஒவ்வொரு வழக்குகளும் நீதியாய் விசாரிக்கப்பட்டு, அவர்களுக்கு நியாயமான தீர்ப்பு சொல்லப்படவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் பாளயமிறங்கியிருந்தபோது, அவர்களுடைய வழக்குகளை விசாரிப்பதற்கு நியாயதிபதிகளும் அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவர்களில் சிலர் நூறு பேருக்கு தலைவர்களாகவும், வேறு சிலர் ஆயிரம் பேருக்கு தலைவர்களாகவும் இருந்தார்கள்.

"மோசே இஸ்ரவேலர் எல்லாரிலும் திறமையுள்ள மனிதரைத் தெரிந்து கொண்டு, அவர்களை ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும், நூறு பேருக்கு அதிபதிகளாகவும், ஐம்பதுபேருக்கு அதிபதிகளாகவும், பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் ஜனங்கள்மேல் தலைவராக்கினார்" *(யாத் 18:25)*.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் குடியேறும்போது, அவர்களுடைய ஒவ்வொரு பட்டணங்களிலும் நியாயாதிபதிகளும் தலைவர்களும் ஏற்படுத்தப்படவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு இதுபற்றிச் சொல்லும்போது, "உன் தேவனாகிய கர்த்தர் உன் கோத்திரங்கள் தோறும் உனக்குக் கொடுக்கும் வாசல்களிலெல்லாம், நியாயாதிபதிகளையும் தலைவரையும் ஏற்படுத்துவாயாக; அவர்கள் நீதியுடன் ஜனங்களுக்கு நியாயத்தீர்ப்புச் செய்யக்கடவர்கள்" (உபா 16:18) என்று சொல்லுகிறார்.

பட்டணத்தின் வாசல்களில் நியாயாதிபதிகள் அமர்ந்து, அந்தப் பட்டணத்து ஜனத்தாரின் வழக்குகளை விசாரித்து, நீதியான தீர்ப்பு சொல்லுவார்கள். நியாயாதிபதிகள் வழக்குகளை எவ்வாறு விசாரிக்கவேண்டும் என்றும் மோசே அவர்களுக்கு தெளிவுபடுத்துகிறார்.

நியாயாதிபதிகள் நியாயத்தைப் புரட்டாதிருக்கவேண்டும்; அவர்கள் முகதாட்சணியம் பண்ணாமலும், பரிதானம் வாங்காமலும் இருக்கவேண்டும்; பரிதானம் ஞானிகளின் கண்களைக் குருடாக்கி, நீதிமான்களின் நியாயங்களைத் தாறுமாறாக்கும் (உபா 16:19).

கர்த்தர் தங்களுக்கு கொடுக்கும் தேசத்தைச் சுதந்தரித்து அதிலே பிழைத்திருக்கவேண்டுமென்றால் இஸ்ரவேல் புத்திரர் நீதியையே பின்பற்றவேண்டும் (உபா 16:20).

தோப்பும் சிலையும் உபா 16:21,22

உபா 16:21. நீ உன் தேவனாகிய கர்த்தருக்கு உண்டாக்கும் பலி பீடத்தண்டையில் யாதொரு தோப்பையும் உண்டாக்க வேண்டாம்;

உபா 16:22. யாதொரு சிலையையும் நிறுத்தவேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தர் அதை வெறுக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் பிரவேசிக்கும்போது, தங்கள் தேவனாகிய கர்த்தரை மறந்துவிட்டு, புறஜாதியாரின் அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போய்விடக்கூடாது. இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்திலே புறஜாதியாரைப்போல தோப்புகளையும் சிலைகளையும் உண்டாக்கக்கூடாது.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீ உன் தேவனாகிய கர்த்தருக்கு உண்டாக்கும் பலிபீடத்தண்டையில் யாதொரு தோப்பையும் உண்டாக்க வேண்டாம்; யாதொரு சிலையையும் நிறுத்தவேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தர் அதை வெறுக்கிறார்" (உபா 16:21,22) என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய பலிபீடத்திற்கு அண்டையிலே ஒரு மரத்தையோ அல்லது தோப்புகளையோ உண்டுபண்ணக்கூடாது தோப்புகள் விக்கிரகாராதனைக்கு அடையாளம். கர்த்தருடைய பலிபீடத்திற்கு மத்தியிலே, தோப்புகளை உண்டுபண்ணும்போது, அந்தப் பலிபீடம் விக்கிரகங்களின் பலிபீடம் போல இருக்கும்.

இஸ்ரவேல் புத்திரர் உலகத்திற்கு ஒத்த வேஷமோ அல்லது விக்கிரகாராதனைக்கு ஒத்த வேஷமோ தரிக்கக்கூடாது. கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கவேண்டும். கர்த்தரை ஆராதிக்கும்போது, அவரை விக்கிரகங்களை ஆராதிப்பதுபோல ஆராதித்து, தங்களுடைய மனதை கறைப்படுத்தக்கூடாது. தப்பிதமான காரியங்களை செய்துவிட்டு, தாங்கள் செய்த காரியங்களை நியாயப்படுத்த முயற்சி பண்ணுவதற்கு பதிலாக, அப்படிப்பட்ட தப்பிதமான காரியங்களை செய்யாமலிருப்பது நல்லது.

17 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் அவலட்சணமுள்ள எந்த மிருகத்தையும் கர்த்தருக்கு பலிசெலுத்தக்கூடாது (உபா 17:1). விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்களுக்கு தண்டனை நியமிக்கப்படுகிறது (உபா 17:2-7).

இரத்தப்பழிகளைக்குறித்தும் வியாச்சியங்களைக் குறித்தும் வழக்கு விசாரிக்கப்படுவதும், நியாயம் தீர்க்கப்படுவதும் (உபா 17:8-13). ராஜாவைப்பற்றிய பிரமாணம் (உபா 17:14-20).

கர்த்தருக்கு அருவருப்பானது உபா 17:1

உபா 17:1. பழுதும் அவலட்சணமுமுள்ள யாதொரு மாட்டையாவது ஆட்டையாவது உன் தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடவேண்டாம்; அது உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பாயிருக்கும்.

கர்த்தர் பரிசுத்தர். அவருடைய ஆராதனை பரிசுத்தமானது. கர்த்தருக்கு பலியிடப்படும் மிருகங்களும் அவலட்சணமாயிராமல், சுத்தமானதாயிருக்கவேண்டும். குருடு, நசல் அங்கவீனம் ஆகிய பழுதில்லாத மிருகங்களை மாத்திரமே கர்த்தருக்கு பலியாக செலுத்தவேண்டும்.

பழுதும் அவலட்சணமுமுள்ள யாதொரு மாட்டையாவது ஆட்டையாவது தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடவேண்டாம்; அது தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பாயிருக்கும் (உபா 17:1) என்று மோசே சொல்லுகிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் செலுத்தப்பட்ட பலிகளெல்லாமே கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே இந்த உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கிற தேவஆட்டுக்குட்டியாயிருக்கிறார். அவரிடத்தில் கறைதிரை எதுவுமில்லை. அவரிடத்தில் பழுது ஒன்றுமில்லை.

"குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே" (1பேது 1:19).

இஸ்ரவேல் ஜனத்தாரின் சரித்திரத்திலே, அவர்கள் அந்நிய தேசத்தின் சிறையிருப்புக்குட்பட்டிருந்தார்கள். இஸ்ரவேல் புத்திரர் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்தபோது, அவர்களைவிட்டு விக்கிரகாராதனை முற்றிலுமாய் நீங்கிப்போயிற்று.

ஆனாலும் கர்த்தருக்கு பலிசெலுத்தும் விஷயத்தில், இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பிரமாணத்தை மீறக்கூடாது என்னும் கட்டளை அவர்களுக்கு மறுபடியுமாய்க் கொடுக்கப்படுகிறது.

"நீங்கள் கண் ஊனமானதைப் பலியிடக்கொண்டுவந்தாலும் அது பொல்லாப்பல்ல, நீங்கள் காலூனமானதையும் நசல் பிடித்ததையும் கொண்டுவந்தாலும் அது பொல்லாப்பல்ல என்கிறீர்களே; அதை நீ உன் அதிபதிக்குச் செலுத்து, அவன் உன்மேல் பிரியமாயிருப்பானோ? உன் முகத்தைப் பார்ப்பானோ என்று சேனைகளின் கர்த்தர் கேட்கிறார்" (மல் 1:8).

தேவனுக்கு முன்பாக அருவருப்பாய் இருக்கும் காரியங்கள் :

1. மூன்றாம் நாளில் சமாதான பலிகளின் மாம்சத்தைப் புசிப்பது. (லேவி 7:18)

2. ஓரினச்சேர்க்கை (லேவி 18:22; லேவி 20:13; உபா 23:18)

3. விக்கிரகங்களின் ஆபரணங்களை எடுத்துக் கொள்வது. (உபா 7:25-26)

4. விக்கிரகாராதனை (உபா 12:31; உபா 13:14; உபா 17:4; உபா 18:9; உபா 20:18; உபா 29:17)

5. தேவனுக்குப் பழுதான மிருகஜீவன்களைப் பலியிடுவது (உபா 17:1)

6. மரித்தோரின் ஆவிகளோடு பேசுவது. (உபா 18:7-12)

7. புருஷர் ஸ்திரீகளின் வஸ்திரங்களை அணிவது. (உபா 22:5)

8. ஸ்திரீகள் புருஷரின் வஸ்திரங்களை அணிவது.

9. வேசிப்பணத்தைத் தேவனுடைய ஆலயத்திற்குக் கொண்டுவருவது. (உபா 23:18)

10. பிறரை வஞ்சிப்பது. (உபா 25:13-16)

11. விக்கிரகங்களைச் செய்வது (உபா 27:15)

12. அம்மோனின் விக்கிரகங்கள். (1இராஜா 11:5)

13. மோவாபின் விக்கிரகங்கள். (1இராஜா 11:7; 2இராஜா 11:13)

14. சீதோனின் விக்கிரகங்கள் (2இராஜா 23:13)

15. மாய்மாலக்காரர் செலுத்தும் தூபம். (ஏசா 1:13)

16. அசுத்தமானவைகளைப் புசிப்பது. (ஏசா 66:17)

17. நரபலியிடுவது. (எரே 32:35)

18. கொள்ளையிடுவது. (எசே 18:6-13)

19. கொலைசெய்தல். (எசே 18:6-13)

20. விபசாரம் (எசே 18:6-13)

21. பிறரை ஒடுக்குதல் (எசே 18:6-13)

22. முரட்டாட்டம். (எசே 18:6-13)

23. பொருத்தனையை மீறுதல் (எசே 18:6-13)

24. சகோதரனுக்கு வட்டிக்குக் கடன் கொடுத்தல். (எசே 18:6-13)

25. சூதகஸ்திரியோடு சயனித்தல் (எசே 18:6-13)

26. இருதயக்கடினம் (எசே 18:6-13)

27. அநீதி (எசே 18:6-13)

28. அந்திக்கிறிஸ்துவை ஆராதிப்பது. (தானி 11:31; தானி 12:11; மத் 24:15; 2தெச 2:4; வெளி 13)

29. நெருங்கிய உறவினரிடையே திருமண உறவு (லேவி 19:6-30)

30. மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது. (லூக்கா 16:15)

31. தேசங்களின் இதரப் பாவங்கள். (லேவி 18:26-29; உபா 18:9-12; உபா 20:18; உபா 29:17; 1இராஜா 14:24).

அக்கிரமம்
உபா 17:2-7

உபா 17:2. உன் தேவனாகிய கர்த்தரின் கண்களுக்கு முன்பாக எந்தப் புருஷனாவது ஸ்திரீயாவது உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற வாசல்கள் ஒன்றில் அக்கிரமஞ்செய்து, அவருடைய உடன்படிக்கையை மீறி,

உபா 17:3. நான் விலக்கியிருக்கிற வேறே தேவர்களையாவது சந்திரசூரியர் முதலான வானசேனைகளையாவது சேவித்து, அவைகளை நமஸ்கரிக்கிறதாகக் காணப்பட்டால்,

உபா 17:4. அது உன் செவிகேட்க உனக்கு அறிவிக்கப்படும்போது, நீ அதை நன்றாய் விசாரிக்கக்கடவாய்; அது மெய் என்றும், அப்படிப்பட்ட அருவருப்பு இஸ்ரவேலில் நடந்தது நிச்சயம் என்றும் கண்டாயானால்,

உபா 17:5. அந்த அக்கிரமத்தைச் செய்த புருஷனையாவது ஸ்திரீயையாவது உன் வாசல்களுக்கு வெளியே கொண்டுபோய், அப்படிப்பட்டவர்கள் சாகும்படி கல்லெறியக்கடவாய்.

உபா 17:6. சாவுக்குப் பாத்திரமானவன் இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் கொலைசெய்யப்படக் கடவன்; ஒரே சாட்சியினுடைய வாக்கினால் அவன் கொலைசெய்யப்படலாகாது.

உபா 17:7. அவனைக் கொலைசெய்கிறதற்குச் சாட்சிகளுடைய கைகள் முந்தியும் எல்லா ஜனங்களுடைய கைகள் பிந்தியும் அவன் மேல் இருப்பதாக; இப்படியே தீமையை உன் நடுவிலிருந்து விலக்கக்கடவாய்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பரிசுத்த ஜனமாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். விக்கிரகாராதனை கர்த்தருக்கு விரோதமான பாவம். அந்நிய தேவர்களை ஆராதிப்பதையும், சந்திர சூரியர் முதலான வானசேனைகளை சேவிப்பதையும் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தடைபண்ணியிருக்கிறார். இது கர்த்தருடைய உடன்படிக்கை.

கர்த்தருடைய உடன்படிக்கையை மீறுவது அக்கிரமம். அது கர்த்தருக்கு விரோதமான அருவருப்பு. இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே விக்கிரகாராதனையாகிய அக்கிரமமும், அருவருப்பும் காணப்படக்கூடாது. விக்கிரங்களை ஆராதிக்கிறவர்களுக்கு தண்டனை கொடுக்கப்படும்.

பூர்வகாலம் முதலாகவே ஜனங்கள் சந்திர சூரியர் முதலான வானசேனைகளை சேவித்து வருகிறார்கள். கர்த்தர் இவற்றை ஆராதிக்கக்கூடாது என்று இஸ்ரவேல் புத்திரருக்கு விலக்கி வைத்திருக்கிறார். ஒரு சிலர் வானசேனைகளை ஆராதியாமல், தங்களுக்கு விக்கிரகங்களை செய்து அவற்றை ஆராதிக்கிறார்கள். விக்கிரகாராதனை கர்த்தருக்கு விரோதமான பாவமாகவும், கர்த்தருடைய பார்வையிலே இது அக்கிரமமாகவும், அருவருப்பாகவும் இருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகங்களை ஆராதிப்பது கர்த்தருடைய உடன்படிக்கையை மீறுகிற செயல். இந்த அக்கிரமத்திற்காக அவர்கள் தண்டிக்கப்படவேண்டும். அவர்களைத் தண்டிக்கும் முன்பாக அவர்களுடைய அக்கிரமம் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உன் தேவனாகிய கர்த்தரின் கண்களுக்கு முன்பாக எந்தப் புருஷனாவது ஸ்திரீயாவது உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற வாசல்கள் ஒன்றில் அக்கிரமஞ்செய்து, அவருடைய உடன்படிக்கையை மீறி, நான் விலக்கியிருக்கிற வேறே தேவர்களையாவது சந்திரசூரியர் முதலான வானசேனைகளையாவது சேவித்து, அவைகளை நமஸ்கரிக்கிறதாகக் காணப்பட்டால், அது உன் செவிகேட்க உனக்கு அறிவிக்கப்படும்போது, நீ அதை நன்றாய் விசாரிக்கக்கடவாய்; அது மெய் என்றும், அப்படிப்பட்ட அருவருப்பு இஸ்ரவேலில் நடந்தது நிச்சயம் என்றும் கண்டாயானால், அந்த அக்கிரமத்தைச் செய்த புருஷனையாவது ஸ்திரீயையாவது உன் வாசல்களுக்கு வெளியே கொண்டுபோய், அப்படிப்பட்டவர்கள் சாகும்படி கல்லெறியக்கடவாய்" (உபா 17:2-5) என்று சொல்லுகிறார்.

சந்திரசூரியரைக் கர்த்தரே சிருஷ்டித்தவர். அவைகளுக்கு உருவங்களை உண்டாக்கி, அவற்றை நமஸ்கரிக்கக்கூடாது. சிருஷ்டிகரையே சேவிக்க வேண்டும். சிருஷ்டியைச் சேவிக்கக்கூடாது(உபா 17:2-5).

விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்களுடைய அக்கிரமம் உறுதிபண்ணப்படும் முன்பாக, அவசரப்பட்டு அவர்களை தண்டித்துவிடக்கூடாது. ஒருவனுடைய விக்கிரகாராதனையைப்பற்றி இஸ்ரவேல் புத்திரர் கேள்விப்படும்போது, அதை அவர்கள் நன்றாய் விசாரித்து அறிந்துகொள்ளவேண்டும். அவன் விக்கிரகத்தை ஆராதித்தது மெய்தான் என்பதையும், இஸ்ரவேலிலே அந்த அக்கிரமமும் அருவருப்பும் நிச்சயமாய் நடந்தது என்பதையும் உறுதிபண்ணிக் கொள்ளவேண்டும். விக்கிரகாராதனைக் காரருடைய அக்கிரமத்தை உறுதிபண்ணுவதற்கு ஒன்றுக்கும் மேற்பட்ட சாட்சிகளும் இருக்கவேண்டும்.

விக்கிரகாராதனைக்காரருக்கு மரணதண்டனை நியமிக்கப்பட்டிருக்கிறது. அவசரப்பட்டு யாருக்கும் மரணதண்டனை கொடுத்துவிடக்கூடாது. அவர்களுடைய மரணமும் சாதாரணமான மரணமாயிராது. விக்கிரகாராதனைக்காரர்கள் மீது சாகும்படி கல்லெறியவேண்டும். விக்கிரகாராதனைக் காரர்கள் ஆணாகயிருந்தாலும் பெண்ணாகயிருந்தாலும், அவர்களுடைய துணிகரமான அக்கிரமத்திற்கு மன்னிப்பு இல்லை.

"அந்த அக்கிரமத்தைச் செய்த புருஷனையாவது ஸ்திரீயையாவது உன் வாசல்களுக்கு வெளியே கொண்டுபோய், அப்படிப்பட்டவர்கள் சாகும்படி கல்லெறியக்கடவாய்" (உபா 17:5) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

சாவுக்கு பாத்திரமானவனை யாரெல்லாம் கல்லெறியவேண்டும் என்றும் மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். சாவுக்குப் பாத்திரமானவன் இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் கொலைசெய்யப்படக்கடவன்; ஒரே சாட்சியினுடைய வாக்கினால் அவன் கொலைசெய்யப்படலாகாது (உபா 17:6) என்றும்,

அவனைக் கொலைசெய்கிறதற்குச் சாட்சிகளுடைய கைகள் முந்தியும் எல்லா ஜனங்களுடைய கைகள் பிந்தியும் அவன் மேல் இருப்பதாக; இப்படியே தீமையை உன் நடுவிலிருந்து விலக்கக்கடவாய் (உபா 17:7) என்றும் மோசே சொல்லுகிறார்.

பாவம் செய்தவர்களுக்கு மரண தண்டனை கொடுக்கப்படுகிறது. தண்டனை கடுமையாக இருப்பதினால் ஜனங்கள் பாவம் செய்வதற்குப் பயப்படுவார்கள். தண்டனையைக் கடுமையாக்கி, ஜனங்கள் மத்தியிலிருந்து தீமையை அகற்ற வேண்டும். (உபா 17:7,12-13).

குற்றம் செய்யாதவன் சாவுக்கு பாத்திரமானவனல்ல. சாவுக்கு பாத்திரமில்லாத ஒருவன்மீது கல்லெறிந்து அவனைக் கொன்றுபோட்டால், அவனை கொன்றுபோட்டவர்கள்மீது இரத்தப்பழி வரும். ஆகையினால் அக்கிரமக்காரனை கொலைசெய்கிறதற்கு சாட்சிகளுடைய கைகள் அவன்மேல் முந்தியிருக்கவேண்டும் என்று மோசே சொல்லுகிறார்.

அக்கிரமக்காரனை கொலை செய்வதற்காக அவன்மேல் கல்லெறியவேண்டும் என்பது கர்த்தருடைய பிரமாணம். விக்கிரகாராதனைக்காரர்களை சாகும்படி கல்லெறியும்போது, அவர்களைக் கொன்றவர்கள்மீது இரத்தப்பழி சுமராது. அவர்கள் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, விக்கிரகாராதனைக்காரர்மீது கல்லெறிந்து, அவர்களைக்கொன்று, இப்படியே தீமையை தங்கள் நடுவிலிருந்து விலக்கியிருக்கிறார்கள்.

விக்கிரகாராதனைக்காரருக்கு விரோதமாக யாரும் பொய்ச்சாட்சியும் சொல்லக்கூடாது. அக்கிரமம் செய்தவனை நிரபராதி என்று சொல்லிவிடக்கூடாது. அதே வேளையில் நிரபராதியை அக்கிரமக்காரன் என்றும் தீர்த்துவிடக்கூடாது. ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர், ஒருவன்மீது கல்லெறிந்து கொல்லுவதற்கு முன்பு, அவன் செய்த அக்கிரமத்தை நன்றாய் விசாரிக்கவேண்டும். அவன் மீது சுமத்தப்பட்ட அக்கிரமம் மெய்யானது என்று இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் உறுதிபண்ணப்படவேண்டும்.

நியாயத்தீர்ப்பு
உபா 17:8-13

உபா 17:8. உன் வாசல்களில் இரத்தப்பழிகளைக் குறித்தும், வியாச்சியங்களைக் குறித்தும், காயம்பட்ட சேதங்களைக் குறித்தும் வழக்கு நேரிட்டு, நியாயந்தீர்ப்பது உனக்கு அரிதாயிருந்தால், நீ எழுந்து, உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்து ஏற்படுத்தின ஸ்தானத்திற்குப் போய்,

உபா 17:9. லேவியரான ஆசாரியரிடத்திலும் அந்நாட்களில் இருக்கிற நியாயாதிபதியினிடத்திலும் விசாரிக்கவேண்டும்; நியாயம் இன்னதென்று அவர்கள் உனக்கு அறிவிப்பார்கள்.

உபா 17:10. கர்த்தர் தெரிந்துகொண்ட இடத்திலிருந்து அவர்கள் உனக்கு அறிவிக்கும் தீர்ப்புக்கு நீ இணங்கி, அவர்கள் உனக்கு விதிக்கிறபடி செய்யக் கவனமாயிருப்பாயாக.

உபா 17:11. அவர்கள் உனக்கு அறிவிக்கும் தீர்ப்பை விட்டு வலதுபுறம் இடதுபுறம் சாயாமல், அவர்கள் உனக்கு உணர்த்தும் பிரமாணத்தின்படியும், உனக்குச் சொல்லும் நியாயத்தீர்ப்பின்படியும் செய்யக்கடவாய்.

உபா 17:12. அங்கே உன் தேவனாகிய கர்த்தருக்கு ஆராதனை செய்யும்படி நிற்கிற ஆசாரியனுடைய சொல்லையாகிலும், நியாயாதிபதியினுடைய சொல்லையாகிலும் கேளாமல், ஒருவன் இடும்புசெய்தால், அவன் சாகக்கடவன்; இப்படியே தீமையை இஸ்ரவேலிலிருந்து விலக்கக்கடவாய்.

உபா 17:13. அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் அதைக் கேட்டு, பயந்து, இனி இடும்புசெய்யாதிருப்பார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் பிரவேசித்து, அந்த தேசத்தைச் சுதந்தரித்து, அங்கே குடியிருக்கும்போது அவர்களுடைய ஒவ்வொரு பட்டணங்களிலும் நியாயம் விசாரிக்கும் இடம் இருக்கவேண்டும். பழைய ஏற்பாட்டுக்காலத்தில், பட்டணத்தின் வாசல்களில் நியாயம் விசாரிக்கப்படுவது வழக்கம்.

"உன் தேவனாகிய கர்த்தர் உன் கோத்திரங்கள் தோறும் உனக்குக் கொடுக்கும் வாசல்களிலெல்லாம், நியாயாதிபதிகளையும் தலைவரையும் ஏற்படுத்துவாயாக; அவர்கள் நீதியுடன் ஜனங்களுக்கு நியாயத்தீர்ப்புச் செய்யக்கடவர்கள்" (உபா 16:18).

நியாயாதிபதிகளின் தலைவர்களும் ஜனங்களுடைய வழக்குகளை நியாயமாய் விசாரித்து நீதியான தீர்ப்பு சொல்லுவார்கள். சாதாரண வழக்குகளை விசாரிப்பது எளிதாக இருக்கும். ஒரு சில வழக்குகளை விசாரிப்பதற்கு கடினமானதாயிருக்கும். சாதாரண நியாயாதிபதிகளால் வழக்குகளை விசாரித்து தீர்ப்பு சொல்ல முடியவில்லையென்றால், அவர்கள் அந்த வழக்குகளை லேவியரான ஆசாரியரிடத்திலும், நியாயாதிபதியினிடத்திலும் கொண்டுபோகவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உன் வாசல்களில் இரத்தப்பழிகளைக் குறித்தும், வியாச்சியங்களைக் குறித்தும், காயம்பட்ட சேதங்களைக் குறித்தும் வழக்கு நேரிட்டு, நியாயந்தீர்ப்பது உனக்கு அரிதாயிருந்தால், நீ எழுந்து, உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்து ஏற்படுத்தின ஸ்தானத்திற்குப் போய், லேவியரான ஆசாரியரிடத்திலும் அந்நாட்களில் இருக்கிற நியாயாதிபதியினிடத்திலும் விசாரிக்கவேண்டும்; நியாயம் இன்னதென்று அவர்கள் உனக்கு அறிவிப்பார்கள்" (உபா 17:8,9) என்று சொல்லுகிறார்.

மனுஷருக்குள்ளே சகோதர சிநேகம் காணப்படவேண்டும். ஒருவருடைய காரியங்களை மற்றவர்கள் விசாரித்துக் கொண்டு, ஒருவருக்கொருவர் அன்பாகவும், ஆதரவாகவும் ஜீவிக்க வேண்டும். ஆனால் பல சமயங்களில் மனுஷர் மத்தியிலே போட்டியும், பொறாமைகளும், கோபங்களும், விரோதங்களும் ஏற்பட்டு, சண்டைகளும், இரத்தச்சேதங்களும் ஏற்பட்டு விடுகிறது. இந்த வியாச்சியங்களை இஸ்ரவேல் புத்திரர் நீதியாய் விசாரித்து நியாயம் செய்ய வேண்டும். தீர்க்க முடியாத வழக்குகளை, கர்த்தர் தெரிந்து ஏற்படுத்தின ஸ்தானத்திற்குப் போய், லேவியரான ஆசாரியரிடத்திலும் அந்நாட்களில் இருக்கிற நியாயாதிபதியினிடத்திலும் விசாரிக்க வேண்டும்; நியாயம் இன்னதென்று அவர்கள் அறிவிப்பார்கள்.

ஒரு இடத்தில் துணிகரமாக பாவம் செய்கிறவன் எந்த இடத்திற்குப் போனாலும் தன் சுபாவத்தை மாற்றிக் கொள்ளமாட்டான். அவனுடைய துன்மார்க்கமான குணம் மாற்றமடையாது. இருதயக்கடினம் ஆத்துமாவை அழித்துப்போடும். (நீதி 1:24-31; நீதி 29:1; வெளி 9:20-21).

துணிகரமாயும், இறுமாப்பாயும் பாவம் செய்தவர்கள் :

1. ஜலப்பிரளயத்திற்கு முற்பட்டவர்கள் (ஆதி 6:3,5,7)
2. சோதோமியர் (ஆதி 19:9,14)
3. பார்வோன் (யாத் 4:21; யாத் 5:2; யாத் 7:3,13-14,22; யாத் 8:15,19,32; யாத் 9:7,12,34-35; யாத் 10:1,20,27; யாத் 11:10; யாத் 14:4,8,17)

4. இஸ்ரவேலர் (எண் 14:22; 2நாளா 36:15-16; சங் 95:8-11; எபி 3:8,15; எபி 4:7)

5. பிலேயாம் (எண் 22:22-35)

6. ஏலீயின் புத்திரர் (1சாமு 2:22-25)

ஆசாரியர் :

ஆசாரியர் அனைவரும் லேவியர்கள். லேவி கோத்திரத்திலிருந்து இவர்கள் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். ஆயினும் எல்லா லேவியரும் ஆசாரியர் அல்ல. இஸ்ரவேலின் ராஜ்யத்தை ஆளுகை செய்வதற்கு ஆசாரியர்கள் உதவி புரிந்தார்கள். (உபா 17:9,12). "லேவியரான ஆசாரியர்" என்னும் வாக்கியம் பஞ்சாகமத்தில் ஐந்து இடங்களிலும் (உபா 17:9,18; உபா 18:1; உபா 24:8; உபா 27:9), மற்ற புஸ்தகங்களில் ஏழு இடங்களிலும் (யோசு 3:3; யோசு 8:33; 2நாளா 23:18; 2நாளா 30:27; நெகே 10:28,34; எரே 33:18; எசே 43:19; எசே 44:15; எசே 48:13) பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

1. மோசேயின் காலத்திற்கு முந்திய ஆசாரியர்கள்

(1) மெல்கிசேதேக்கு (ஆதி 14; எபி 7)

(2) எத்திரோ (யாத் 2:16)

(3) நியாயப்பிரமாணத்திற்கு முந்திய இஸ்ரவேலர் (யாத் 19:22-24)

2. மோசேயின் காலத்து ஆசாரியர்

3. வம்சவழியில் ஆசாரிய ஊழியம். (யாத் 27:21; யாத் 28:43; யாத் 29:9)

4. பிரதிஷ்டை (யாத் 29:1-35; யாத் 40:12-16; லேவி 6:20-23; லேவி 8:6-35; எபி 7:21)

5. பரிசுத்தம் (லேவி 21:6-7; லேவி 22:9,16)

6. பூரண சரீரம் (லேவி 21:17-23)

7. வஸ்திரம் (யாத் 28:1-43; யாத் 39:1-29; லேவி 6:10-11; லேவி 8:13)

8. தேவாலயத்தில் வஸ்திரம் மாற்றப்படுதல் (எசே 42:14; எசே 44:19)

9. ஆசாரியரின் பாவநிவாரணம் (லேவி 16:6,24)

10. ஆசாரியரின் விவாகம் (லேவி 21:7-15)

11. வரியிலிருந்து விலக்கு (எஸ்றா 7:24)

12. சில சமயங்களில் யுத்தம் பண்ணினார்கள் (1நாளா 12:27-28)

13. ஆசாரியரின் 24 வகுப்புகள் (1நாளா 24:1-19; 1நாளா 28:13,21; 2நாளா 8:14; 2நாளா 31:2; 2நாளா 35:4-5)

14. சீட்டுப்போட்டு தெரிந்தெடுக்கப் பட்டார்கள். (லூக்கா 1:8-9,23)

15. ஆசாரியரின் கலகங்கள் (எண் 3:10; எண 16:1-50; எண் 18:7; 2நாளா 26:18)

ஆசாரியரின் பணிவிடைகள் :

16. பலிகளைச் செலுத்துவது (லேவி 1:1-4:35; 1நாளா 16:40; 2நாளா 13:11; எபி 10:11).

17. அபிஷேகத்தைலத்தையும், சுகந்த தூபத்தையும் தயாரிப்பது. (யாத் 30:23-38).

18. முதற்கனிகளைச் செலுத்துவது (லேவி 23:10-11; உபா 26:3-4).

19. ஆசீர்வாதம் கூறுவது (எண் 6:22-27; உபா 21:5; 2நாளா 30:27).

20. பிரமாணத்தை உபதேசம் பண்ணுவது. (லேவி 10:11; உபா 24:8; உபா 27:14; உபா 31:9-13; உபா 33:10; எரே 2:8; மல் 2:7).

21. விளக்குகளை ஏற்றி அவற்றை எரியுமாறு பார்த்துக் கொள்வது (யாத் 27:20-21; லேவி 24:3-4; 2நாளா 13:11).

22. பரிசுத்த அக்கினி எரியுமாறு பார்த்துக் கொள்வது (லேவி 6:12-13).

23. ஆசரிப்புக்கூடார சேவைகளை மேற்பார்வையிடுவது (எண் 4:5-15; எண் 18:1,5,7).

24. பிரயாணம் பண்ணும்போது ஆசரிப்புக் கூடாரத்தைப் பிரித்து ஸ்தாபனம் பண்ணுவது. (எண் 4-5).

25. வேதபாரகர்களாகப் பணிபுரிவது. (எஸ்றா 7:1-6; நெகே 8:9).

26. தசமபாகத்தை மேற்பார்வையிடுவது (நெகே 10:38).

27. தேசத்தில் நடைபெறும் பல சம்பவங்களில் எக்காளங்களை ஊதுவது (எண் 10:2-10; எண் 31:6; யோசு 6; 2நாளா 13:12).

28. வியாதிகளைக் கண்டறிந்து, இஸ்ரவேலரின் ஆரோக்கியத்தை மேற்பார்வையிடுவது. (லேவி 14:15).

29. அசுத்தமானதைச் சுத்திகரிப்பது. (லேவி 15:31).

30. நேர்ந்துகொள்ளப்பட்டதற்கு மதிப்பிடுவது. (லேவி 27:8-12).

31. லேவியருக்குத் தலைவர்களாக இருப்பது. (எண் 3:6,32; எண் 4:19,28, 33; 1நாளா 9:20).

32. நியாயாதிபதிகளாகச் செயல்படுவது. (எண் 5:14-31; உபா 17:8-13; உபா 19:17; உபா 21:5; 2நாளா 19:8).

33. யுத்தத்தில் யுத்த வீரர்களை உற்சாகப் படுத்துவது. (உபா 20:2-4).

34. உடன்படிக்கைப் பெட்டியைச் சுமப்பது. (யோசு 3:1-17; யோசு 4:15-18; 1சாமு 4:3-5).

35. ஜனங்களுக்காகக் கர்த்தரிடத்தில் விசாரித்துக் கேட்பது. (யாத் 28:30; லேவி 8:8; எண் 27:21; உபா 33:8; எஸ்றா 2:63; நெகே 7:65).

ஆசாரியரின் பராமரிப்பு :

36. இஸ்ரவேல் தேசம் முழுவதிலும் ஆசாரியருக்குப் பட்டணங்கள் இருந்தன. (லேவி 25:32-34; எண் 18:20; எண் 35:2-8; யோசு 21)

37. தேவனுக்குப் பரிசுத்தம் பண்ணப்பட்ட நிலங்களை ஆசாரியர் பெற்றிருந்தார்கள். (லேவி 27:21)

38. இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் செலுத்தும் தசமபாகங்களை ஆசாரியர் பெற்றுக் கொண்டார்கள். (லேவி 27; எண் 18:8-32; நெகே 10:38)

39. யுத்தத்தில் கிடைத்த கொள்ளைப் பொருளின் ஒரு பகுதி ஆசாரியருக்குரியது. (எண் 31:25-29)

40. முதற்கனிகள் (லேவி 23:20; லேவி 24:9; எண் 18:12-18; உபா 18:3-5)

41. மீட்பின்கிரயம் (லேவி 27:23)

42. தலையீற்று (எண் 3:46-51; எண் 18:15-16)

43. அர்ப்பணிக்கப்பட்ட பொருட்கள் (லேவி 27:21; எண் 5:9-10; எண் 18:14)

44. அபராதங்கள் (லேவி 5:16; லேவி 22:14; எண் 5:8)

45. குற்றநிவாரண காணிக்கையும், பணமும் (லேவி 5:15,18; எண் 18:9; 2இராஜா 12:16)

46. சமுகத்தப்பம் (யாத் 25:30; லேவி 24:5-9; 2நாளா 2:4; 2நாளா 13:11; மத் 12:4; எபி 9:2)

47. பலிகளிலும், காணிக்கைகளிலும் ஒரு பகுதி (யாத் 29:27-34; லேவி 2:2-10)

லேவியர் :

1. கர்த்தருடைய ஊழியக்காரர்களாக வேறுபிரிக்கப்பட்டிருக்கிறார்கள். (எண் 1:47-54; எண் 3:6-16; எண் 16:9; எண் 26:57-62; உபா 10:8; 1நாளா 15:2).

2. தலைப்பிள்ளைகளுக்கு ஈடாக லேவியர் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். (எண் 3:12,41-45; எண் 8:14-18; எண் 18:6).

3. லேவியரிடம் மார்க்க வைராக்கியம் இருக்கும். (யாத் 32:26-28; எண் 25:7-13; உபா 33:9-10; மல் 2:4-5).

4. லேவியரின் பிரதிஷ்டை (எண் 8:6-21)

5. லேவியருக்குக் கொடுக்கப்பட்ட பட்டணங்கள். (யோசு 21)

6. லேவியர் பணிவிடை செய்ய வேண்டிய வயது. (எண் 4:3,30,47; எண் 8:23-26; 1நாளா 23:3, 24, 27)

7. யுத்தம் பண்ணுவதிலிருந்து லேவியருக்கு விலக்கு (எண் 14:47-54; 1நாளா 12:26).

8. லேவியர் ஆசாரியருக்கு உதவி புரிகிறார்கள். (எண் 3:9; எண் 8:19; எண் 18:6).

லேவியரின் பணிவிடைகள் :

9. ஆசரிப்புக்கூடாரத்தின் காவல்களைக் காத்தார்கள். (எண் 1:50-53; எண் 3:6-9,21-37; எண் 4:1-49; எண் 8:19; எண் 18:3).

10. தேவாலயத்தின் காவல்களைக் காத்தார்கள். (1நாளா 9:27-29; 1நாளா 23:2-32; எஸ்றா 8:24-34).

11. உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்தார்கள் (உபா 10:8; 1நாளா 15:2-27).

12. உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக ஊழியம் செய்தார்கள். (1நாளா 16:4).

13. தசமபாகங்களையும், காணிக்கைகளையும் பெற்றுக்கொண்டு, அவற்றைப் பிரித்துக் கொடுத்தார்கள் (1நாளா 9:26-29; 1நாளா 26:28; 1நாளா 29:8; 2நாளா 24:5,11; 2நாளா 31:11-19).

14. சமுகத்தப்பங்களைச் செய்தார்கள். (1நாளா 23:28-29).

15. பலிகளைச் செலுத்துவதில் ஆசாரியருக்கு உதவி புரிந்தார்கள். (2நாளா 29:12-36; 2நாளா 35:1-18).

16. இஸ்ரவேல் புத்திரருக்காகப் பஸ்கா ஆட்டுக்குட்டிகளை அடித்தார்கள். (எஸ்றா 6:20-21).

17. நியாயப்பிரமாணத்தை உபதேசம் பண்ணினார்கள் (உபா 33:10; 2நாளா 17:8-9; 2நாளா 30:22; 2நாளா 35:3; நெகே 8:7-13; மல் 2:6-7).

18. நியாயாதிபதிகளாகப் பணிபுரிந்தார்கள். (உபா 17:9; 1நாளா 23:4; 1நாளா 26:29; 2நாளா 19:8-11).

19. நியாயப்பிரமாணத்தின் ஆசீர்வாதங்களையும், சாபங்களையும் அறிவித்தார்கள் (உபா 27:12; யோசு 8:33).

20. காவல்காரர்கள் (1நாளா 9:17-32; 2நாளா 23:4-5; 2நாளா 34:13; 2நாளா 35:15; நெகே 12:25).

21. வேதபாரகர்கள் (1நாளா 2:55; 2நாளா 34:13; மத் 2:4; மத் 16:21).

22. தேவாலயத்தைக் கட்டும் பணிகளையும், செப்பனிடும் பணிகளையும் மேற்பார்வையிட்டார்கள். (1நாளா 23:2-4; எஸ்றா 3:8-9).

23. வாத்தியக்கருவிகளை இசைத்தார்கள். (1நாளா 15:16; 1நாளா 16:42).

24. அளவுகளையும், படிகளையும் மேற்பார்வையிட்டார்கள்(1நாளா 23:29).

லேவியரின் பராமரிப்பு :

25. இவர்களுக்கு 48 பட்டணங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. (எண் 35:2-8; யோசு 21; 1நாளா 6:54-81; 1நாளா 13:2).

26. இவர்களுடைய சொத்துக்களை எப்பொழுதும் மீட்டுக் கொள்ளலாம். (லேவி 25:32-34).

27. தசமபாகங்களையும், காணிக்கைகளையும் பெற்றுக் கொண்டார்கள். (லேவி 27; எண் 18:24-32; உபா 18:1-8; உபா 26:11-13; யோசு 13:14; நெகே 10:38-39; நெகே 12:44-47).

28. முதற்கனிகளைப் பெற்றுக் கொண்டார்கள். (நெகே 12:44-47).

29. யுத்தத்தின் கொள்ளைப் பொருட்களிலும், ஒரு பகுதியைப் பெற்றுக் கொண்டார்கள். (எண் 31:30-47).

30. இவர்களுக்கு ஒய்வூதியம் வழங்கப்பட்டது. (2நாளா 31:16-18).

தற்காலத்து நீதிமன்றங்களில் கீழ்நீதிமன்றங்கள் என்றும், மேல்முறையீட்டு நீதிமன்றங்கள் என்றும் இருப்பதுபோல பழைய ஏற்பாட்டுக்காலத்திலும் இருந்தது. ஒவ்வொரு பட்டணத்திலும் கீழ்நீதிமன்றம் இருக்கிறது. கீழ்நீதிமன்றங்களில் வழக்குகளையும் வியாச்சியங்களையும் விசாரித்து தீர்ப்பு சொல்ல முடியவில்லையென்றால், அவர்கள் அந்த வழக்குகளை மோசேயினிடத்தில் கொண்டு வரவேண்டும். மோசே அப்படிப்பட்ட பெரிய வழக்குகளை விசாரித்து, கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் தீர்ப்பு சொல்லுவார்.

மோசேயின் காலத்தில், அவருடைய மாமனாராகிய எத்திரோவின் ஆலோசனைப்பிரகாரம், வழக்குகளை விசாரிக்கும் பொறுப்பு இஸ்ரவேலின் அதிபதிகளுக்கு பிரித்து கொடுக்கப்பட்டது. மோசே மரித்த பின்பு, இஸ்ரவேல் ஜனத்தாருக்கு நியாயாதிபதிகளாக நியமிக்கப்பட்டவர்கள், ஜனங்களுடைய இரத்தப்பழிகளைக் குறித்தும், வியாச்சியங்களைக் குறித்தும், காயம்பட்ட தேசங்களைக் குறித்தும் நியாயம் விசாரித்து நீதியான தீர்ப்பு சொன்னார்கள். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் ஒத்தினியேல், தெபொராள், கிதியோன் போன்றவர்களும், இன்னும் அநேகரும் கர்த்தரால் நியமிக்கப்பட்ட நியாயாதிபதிகளாயிருந்தார்கள்.

பழைய ஏற்பாட்டுக்காலத்து நியாயாதிபதிகள் வழக்குகளை விசாரிப்பதுபோல, பிரதான ஆசாரியரும் வழக்குகளையும், வியாச்சியங்களையும் விசாரித்து தீர்ப்பு சொல்லியிருக்கிறார். இஸ்ரவேலின் பிரதான ஆசாரியராகிய ஏலி, தன்னுடைய காலத்தில் வழக்குகளையும் வியாச்சியங்களையும் விசாரித்து, கர்த்தருடைய கட்டளையின் பிரகாரமாக தீர்ப்பு சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரருடைய வழக்குகளை விசாரிப்பதற்கு, கர்த்தர் தனிப்பட்ட நியாயாதிபதிகளை நியமிக்கவில்லையென்றால், ஆசாரியர்களும், லேவியர்களும் அந்த வழக்குகளை நியாயமாய் விசாரித்து, கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் நீதியான தீர்ப்பு சொல்லவேண்டும்.

நியாயாதிபதிகளிடத்தில் வழக்குகளையும் வியாச்சியங்களையும் கொண்டு போகிறவர்கள், ஆசாரியர்களும், நியாயாதிபதிகளும் சொல்லுகிற தீர்ப்புக்கு கட்டுப்படவேண்டும். "கர்த்தர் தெரிந்துகொண்ட இடத்திலிருந்து அவர்கள் உனக்கு அறிவிக்கும் தீர்ப்புக்கு நீ இணங்கி, அவர்கள் உனக்கு விதிக்கிறபடி செய்யக் கவனமாயிருப்பாயாக. அவர்கள் உனக்கு அறிவிக்கும் தீர்ப்பை விட்டு வலதுபுறம் இடதுபுறம் சாயாமல், அவர்கள் உனக்கு உணர்த்தும் பிரமாணத்தின்படியும், உனக்குச் சொல்லும் நியாயத்தீர்ப்பின்படியும் செய்யக்கடவாய்" (உபா 17:10,11) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

தங்கள் வழக்குகளை விசாரிக்கும்படியாக நியாயாதிபதிகளிடத்திலும் ஆசாரியர்களிடத்திலும் வருகிறவர்கள், அவர்கள் சொல்லுகிற நியாயத்தீர்ப்பின்படி செய்யவில்லையென்றால், கீழ்ப்படியாதவர்களுக்கு தண்டனை கொடுக்கப்படும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "அங்கே உன் தேவனாகிய கர்த்தருக்கு ஆராதனை செய்யும்படி நிற்கிற ஆசாரியனுடைய சொல்லையாகிலும், நியாயாதிபதியினுடைய சொல்லையாகிலும் கேளாமல், ஒருவன் இடும்புசெய்தால், அவன் சாகக்கடவன்; இப்படியே தீமையை இஸ்ரவேலிலிருந்து விலக்கக்கடவாய். அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் அதைக் கேட்டு, பயந்து, இனி இடும்புசெய்யாதிருப்பார்கள்" (உபா 17:12,13) என்று சொல்லுகிறார்.

பாவத்திற்கு மரண தண்டனை போன்ற கடுமையான தண்டனைகள் கொடுத்து, இஸ்ரவேலிலிருந்து தீமையை விலக்க வேண்டும் (உபா 17:7,12-13).

ராஜாவின் பிரமாணம்
உபா 17:14-20

உபா 17:14. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தில் நீ போய்ச் சேர்ந்து, அதைச் சுதந்தரித்துக்கொண்டு, அதில் குடியேறினபின், நீ: என்னைச் சுற்றிலும் இருக்கிற சகல ஜாதிகளையும் போல, நானும் எனக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்தவேண்டும் என்பாயானால்:

உபா 17:15. உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்து கொள்பவனையே உனக்கு ராஜாவாக வைக்கக்கடவாய்; உன் சகோதரருக்குள்ளிருக்கிற ஒருவனையே உன்மேல் ராஜாவாக ஏற்படுத்தக்கடவாய்; உன் சகோதரன் அல்லாத அந்நியனை ராஜாவாக ஏற்படுத்தக்கூடாது.

உபா 17:16. அவன் அநேக குதிரைகளைச் சம்பாதியாமலும், அநேக குதிரைகளைத் தனக்குச் சம்பாதிக்கும்படிக்கு ஜனங்களைத் திரும்ப எகிப்திற்குப் போகப்பண்ணாமலும் இருக்கக் கடவன்; இனி அந்த வழியாய் நீங்கள் திரும்பிப்போகவேண்டாம் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லியிருக்கிறாரே.

உபா 17:17. அவன் இருதயம் பின்வாங்கிப் போகாதபடி அவன் அநேகம் ஸ்திரீகளைப் படைக்கவேண்டாம்; வெள்ளியும் பொன்னும் தனக்கு மிகுதியாய்ப் பெருகப்பண்ணவும் வேண்டாம்.

உபா 17:18. அவன் தன் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது, அவனுடைய இருதயம் அவன் சகோதரர்பேரில் மேட்டிமைகொள்ளாமலும், கற்பனையை விட்டு வலதுபுறம் இடதுபுறம் சாயாமலும்,

உபா 17:19. இந்த நியாயப்பிரமாணத்தின் எல்லா வார்த்தைகளையும், இந்தக் கட்டளைகளையும் கைக்கொண்டு, இவைகளின்படி செய்வதற்காகத் தன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்திருக்கும்படி கற்றுக் கொள்ளும்பொருட்டு,

உபா 17:20. அவன் லேவியராகிய ஆசாரியரிடத்திலிருக்கிற நியாயப்பிரமாண நூலைப் பார்த்து, தனக்காக ஒரு பிரதியை எழுதி, தன்னிடத்தில் வைத்துக்கொண்டு, தன் ஜீவனுள்ள நாளெல்லாம் அதை வாசிக்கக்கடவன்; இப்படிச் செய்வதினால், தானும் தன் குமாரரும் இஸ்ரவேலின் நடுவே தங்கள் ராஜ்யத்திலே நீடித்து வாழுவார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு ராஜாவின் பிரமாணத்தைப்பற்றியும் சொல்லுகிறார். கர்த்தரே அவர்களுக்கு ராஜாதி ராஜாவாகயிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரரை ஆளுகை செய்கிற ராஜாக்கள், அவர்களை கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக ஆளுகை செய்யவேண்டும். இஸ்ரவேல் தேசத்திலே கர்த்தருடைய ஆளுகை நடைபெறவேண்டும்.

ராஜாக்கள் ஜனங்களை ஆளுகை செய்கிறார்கள். அவர்கள் தங்கள் தேசங்களில் சட்டங்களை இயற்றி அதன் பிரகாரம் தங்கள் தேசத்து குடிமக்களை ஆட்சிபுரிகிறார்கள். ராஜாக்கள் ஆளுகை செய்கிறவர்களாகயிருந்தாலும், அவர்களும் கர்த்தருடைய ஆளுகைக்கு கீழ்ப்படியவேண்டும். ராஜாக்கள் சட்டங்களை இயற்றினாலும், அவர்களும் கர்த்தருடைய கட்டளைகளுக்கும், நியமங்களுக்கும் கீழ்ப்படியவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்கு ராஜாக்களை ஏற்படுத்தும்போது, எப்படிப்பட்டவர்களை தங்களுக்கு ராஜாக்களாக ஏற்படுத்த வேண்டும் என்றும், எப்படிப்பட்டவர்களை தங்களுக்கு ராஜாக்களாக ஏற்படுத்தக்கூடாது என்றும் மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

"உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தில் நீ போய்ச் சேர்ந்து, அதைச் சுதந்தரித்துக்கொண்டு, அதில் குடியேறினபின், நீ: என்னைச் சுற்றிலும் இருக்கிற சகல ஜாதிகளையும் போல, நானும் எனக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்தவேண்டும் என்பாயானால்: உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்து கொள்பவனையே உனக்கு ராஜாவாக வைக்கக்கடவாய்; உன் சகோதரருக்குள்ளிருக்கிற ஒருவனையே உன்மேல் ராஜாவாக ஏற்படுத்தக்கடவாய்; உன் சகோதரன் அல்லாத அந்நியனை ராஜாவாக ஏற்படுத்தக்கூடாது" (உபா 17:14,15) என்று மோசே செல்லுகிறார்.

இந்த வாக்கியத்தின் அடிப்படையில், இயேசு கிறிஸ்துவிடம் ஒரு சமயம் ராயனுக்கு வரிகொடுப்பது நியாயமா என்று கேட்கிறார்கள். (மத் 22:17). இயேசு கிறிஸ்து ஆம் என்று பதில் கூறினால், அவர் இந்தப் பிரமாணத்தை மீறுகிறார். அவர் இல்லையென்று பதில் கூறினால் ராயனுக்கு விரோதியாக வேண்டும்.

மோசே ராஜாவின் பிரமாணத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லும்போது அவர்கள் வனாந்தரத்திலிருக்கிறார்கள். அவர்கள் இன்னும் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கவில்லை. இப்போது மோசே அவர்களுக்கு தலைவராயிருக்கிறார். மோசேக்கு பிறகு யோசுவாவும், நியாயாதிபதிகளும் அவர்களை நியாயம் விசாரித்து ஆளுகை செய்வார்கள்.

சுமார் 400 வருஷங்களுக்கு பின்பே, இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்கு ராஜா வேண்டுமென்று கேட்டார்கள். பிற்காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் கேட்கப்போவதை முன்னறிந்து, மோசே இப்போதே அவர்களுக்கு ராஜாவின் பிரமாணத்தைச் சொல்லுகிறார்.

புறஜாதி தேசங்களில் ராஜாக்கள் இருக்கிறார்கள். ராஜாக்கள் பார்ப்பதற்கு கெம்பீரமான தோற்றத்திலிருப்பார்கள். ராஜா சிங்காசனத்தில் வீற்றிருப்பதைப் பார்க்கும்போது அழகாகயிருக்கும். மற்ற தேசத்தாரைப்போல, தங்களுக்கும் கெம்பீரமான ராஜா வேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரர் விரும்புவார்கள்.

தங்களுக்கு ராஜா வேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரர் விரும்புவது கர்த்தருடைய விருப்பத்திற்கு விரோதமான காரியம். ஆனாலும் கர்த்தர் அவர்களுடைய மனவிருப்பத்தின் பிரகாரமாக, அவர்களை ஆளுகை செய்ய ராஜாவை ஏற்படுத்த சொல்லுகிறார். அந்த ராஜா கர்த்தருடைய விருப்பத்தின் பிரகாரம் ஏற்படுத்தப்படவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்கு ராஜாவை ஏற்படுத்தும்போது, அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவேண்டும். கர்த்தருக்கு பிரியமானவர்களையே அவர்கள் தங்களுக்கு ராஜாவாக தெரிந்துகொள்ளவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுக்கு ஒரு ராஜா வேண்டுமென்று தீர்க்கதரிசியாகிய சாமுவேலிடத்தில் கேட்டார்கள். சாமுவேல் அவர்களுக்கு சவுலை ராஜாவாகக் கொடுத்தார்.

இஸ்ரவேல் புத்திரரின் சரித்திரத்திலே, சவுலுக்கு பின்பு, கர்த்தர் தாவீதை அவர்களுக்கு ராஜாவாகக் கொடுத்தார். தாவீதுக்கு பின்பு சாலொமோன், யெரொபெயாம், யெகூ ஆகியோர் இஸ்ரவேல் புத்திரருக்கு ராஜாக்களாக இருந்திருக்கிறார்கள். தீர்க்கதரிசிகள் இவர்களை தெரிந்தெடுத்து, ராஜாக்களாக அபிஷேகம்பண்ணினார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்கு ராஜாவை ஏற்படுத்தும்போது, இஸ்ரவேல் புத்திரர் அல்லாத அந்நிய ஜாதியை சேர்ந்த யாரையும் ராஜாவாக ஏற்படுத்தக்கூடாது. அந்நியர்கள் பலமுள்ளவர்களாகயிருந்தாலும், அவர்களிடத்தில் ஐசுவரியமும் ஆடம்பரமும் திரளாகயிருந்தாலும், அந்நியர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு ராஜாவாயிருக்கக்கூடாது. அந்நிய ராஜாக்கள் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே அந்நிய தெய்வங்களை பிரவேசிக்கப்பண்ணி விடுவார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்கு ஏற்படுத்தும் ராஜா எப்படிப்பட்டவனாகயிருக்கவேண்டும் என்று மோசே சொல்லுகிறார்.

"அவன் அநேக குதிரைகளைச் சம்பாதியாமலும், அநேக குதிரைகளைத் தனக்குச் சம்பாதிக்கும்படிக்கு ஜனங்களைத் திரும்ப எகிப்திற்குப் போகப்பண்ணாமலும் இருக்கக் கடவன்; இனி அந்த வழியாய் நீங்கள் திரும்பிப்போகவேண்டாம் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லியிருக்கிறாரே. அவன் இருதயம் பின்வாங்கிப் போகாதபடி அவன் அநேகம் ஸ்திரீகளைப் படைக்கவேண்டாம்; வெள்ளியும் பொன்னும் தனக்கு மிகுதியாய்ப் பெருகப்பண்ணவும் வேண்டாம்" *(உபா 17:16,17)* என்று மோசே இஸ்ரவேல் புத்திரரின் ராஜாக்களிடத்தில் இருக்கவேண்டிய, இருக்கக்கூடாத குணாதிசயங்களைப்பற்றிச் சொல்லுகிறார்.

குதிரைகள் பலத்திற்கும், யுத்தத்தின் வலிமைக்கும் அடையாளம். *(யோபு 39:19; சங் 20:7; சங் 33:16-17; சங் 147:10; எரே 8:16).* இஸ்ரவேலின் ராஜாக்கள் தங்களுடைய வெற்றிக்காகக் குதிரைகளை நம்பியிருக்கக் கூடாது. *(ஓசி 1:7)* கர்த்தரையே நம்பியிருக்க வேண்டும்.

எகிப்தியரிடத்தில் ஏராளமான குதிரைகள் இருந்தன. *(யாத் 14:5; 1இராஜா 10:28-29; 2இராஜா 7:6).* இஸ்ரவேல் புத்திரர் எகிப்தியரோடு சேர்ந்து கொண்டால், தங்கள் நம்பிக்கையைக் குதிரைகளின்மீது வைத்து விடுவார்கள். குதிரைகள் தங்களுக்கு ஜெயத்தைத் தரும் என்று நினைப்பார்கள். ஆனால் ஜெயம் கர்த்தராலேயே வரும்.

எகிப்தின் அடிமைத்தனத்திற்கு மறுபடியும் போவது தேவன் அவர்களுக்குக் கொடுக்கும் மிகப்பெரிய சாபம். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தால், அவர்களுக்கு இந்தச் சாபம் வரும். *(உபா 28:68).*

குதிரைகளினால் வரும் பிரச்சனைகள்:

1. எகிப்து தேசத்தாரோடு குதிரை வியாபாரம் செய்வதன் மூலமாக இஸ்ரவேல் புத்திரருக்குள் விக்கிரகாராதனை நுழைந்துவிடும்.

2. தங்களுடைய பாதுகாப்பிற்கும், வலிமைக்கும் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரையே நம்பவேண்டும். குதிரைகள் பெருகும்போது, குதிரைகள் தங்களைப் பாதுகாக்கும் என்று தவறாக நம்பிக்கை வைப்பார்கள்.

3. குதிரைகள் அதிகரிக்கும்போது, மற்ற தேசத்தாரோடு யுத்தம்பண்ணி, அவர்களுடைய தேசத்தை அபகரித்துக் கொள்ள வேண்டும் என்னும் ஆசை வந்துவிடும்.

பிற்காலத்தில் பாலஸ்தீன தேசம் குதிரைகளின் தேசமாயிற்று. சாலொமோன் ஏராளமான குதிரைகளைச் சேர்த்தார். தன்னுடைய பட்டணங்களைப் பாதுகாப்பதற்காகச் சாலொமோனிடம் 1,400 இரதங்களும், 12,000 குதிரைவீரர்களும் இருந்தார்கள் *(1இராஜா 10:26-29).*

"இனி அந்த வழியாய் நீங்கள் திரும்பிப் போகவேண்டாம்" என்று மோசே கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார். ஆனால் இந்த வாக்கியத்தைக் கர்த்தர் எப்பொழுது சொன்னார் என்று தெரியவில்லை. மோசே யாத் 14:13 ஆவது வசனத்தை இங்கு குறிப்பிட்டிருக்கலாம். இஸ்ரவேல் புத்திரர் எகிப்தியரை மறுபடியும் காண்பதில்லையென்று கர்த்தர் அவர்களுக்கு வாக்குப்பண்ணினார். *(உபா 28:68; எரே 42:15; ஓசி 11:5).*

ஒருவன் ஏராளமான மனைவிகளை விவாகம் பண்ணக்கூடாது. இதனால் காமவிகாரமும், விக்கிரகாராதனையும் பெருகும். மார்க்கபேதமும் உண்டாகும். *(யாத் 34:16).* சாலொமோன் ஏராளமான ஸ்திரீகளை விவாகம்பண்ணி, கர்த்தரைவிட்டு விலகிப்போய்விட்டார். *(1இராஜா 11:1-13).* புறஜாதியார் மத்தியில் அவர்களுடைய ராஜாக்கள் ஏராளமான ஸ்திரீகளை விவாகம் செய்து தங்களுடைய பெருமையையும், மேன்மையையும் வெளிப்படுத்திக் காண்பித்தார்கள். ஆனால் இஸ்ரவேலின் ராஜாக்களோ உலகப்பிரகாரமான ராஜாக்களைப் போல இருக்கக்கூடாது. தங்களுடைய கர்த்தர் ராஜாதி ராஜாவாக இருக்கிறார் என்னும் எண்ணம் இஸ்ரவேலின் ராஜாக்கள் உள்ளத்தில் எப்போதும் காணப்பட வேண்டும்.

சாலொமோன் ஏராளமான வெள்ளியையும், பொன்னையும் தனக்குச் சேர்த்து பாவம் செய்தார் *(1இராஜா 10).*

ராஜாக்கள் தெய்வபக்தியுள்ளவர்களாயிருக்கவேண்டும். உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. அவர்களிடத்தில் மாம்சத்தின் இச்சைகள், கண்களின் இச்சைகள், ஜீவனத்தின் பெருமை ஆகியவை எதுவும் இருக்கக்கூடாது. ராஜாக்கள் தங்கள் மாம்சத்தின் இச்சைகளுக்கு ஒப்புக்கொடுத்து, அநேகம் ஸ்திரீகளை தங்களுக்கு சேர்த்துக்கொள்ளக்கூடாது.

இஸ்ரவேல் ஜனத்தாருடைய ராஜாக்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவேண்டும். கர்த்தரே ராஜாக்களை ஆளுகை செய்யவேண்டும். அப்போதுதான் ராஜாக்களால், கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக ஜனங்களை ஆளுகை செய்யமுடியும். அநேக குதிரைகள், அநேகம் ஸ்திரீகள், அநேகம் வெள்ளியும் பொன்னும் ஆகியவற்றின்மீது ஆசைப்பட்டு, ராஜாக்கள் அவற்றை பெருகப்பண்ணுவதற்கு முயற்சி பண்ணக்கூடாது.

இஸ்ரவேலின் ராஜா தன் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது, அவனுடைய இருதயம் அவன் சகோதரர்பேரில் மேட்டிமைகொள்ளாமலும், கற்பனையை விட்டு வலதுபுறம் இடதுபுறம் சாயாமலும் இருக்கவேண்டும் *(உபா 17:18).*

இஸ்ரவேலின் ராஜாவுக்கு கர்த்தருடைய கற்பனைகளைப்பற்றித் தெரிந்திருக்கவேண்டும். கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின் பிரதி ஆசரிப்புக்கூடாரத்திலே, ஆசாரியரிடத்தில் இருக்கும். அந்தப் புஸ்தகத்தின் ஒரு பிரதி ராஜாவினிடத்திலும் இருக்கவேண்டும்.

இந்த நியாயப்பிரமாணத்தின் எல்லா வார்த்தைகளையும், இந்தக் கட்டளைகளையும் கைக்கொண்டு, இவைகளின்படி செய்வதற்காகத் தன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்திருக்கும்படி கற்றுக் கொள்ளும்பொருட்டு, அவன் லேவியராகிய ஆசாரியரிடத்திலிருக்கிற நியாயப்பிரமாண நூலைப் பார்த்து, தனக்காக ஒரு பிரதியை எழுதி, தன்னிடத்தில் வைத்துக்கொண்டு, தன் ஜீவனுள்ள நாளெல்லாம் அதை வாசிக்கவேண்டும் *(உபா 17:19,20).*

கர்த்தர் ராஜாக்களுக்குக் கொடுத்திருக்கும் கட்டளைகளில் இந்தக் கட்டளை மிகவும் முக்கியமானது. ஆனால் அநேகமாக இஸ்ரவேலின் எல்லா ராஜாக்களும் இதற்குக் கீழ்ப்படியவில்லை. கர்த்தருடைய கற்பனைகளைத் தொடர்ந்து தியானிக்க வேண்டும். தேசத்தில் செழிப்பும், சம்பூரணமும் உண்டாயிருக்க வேண்டுமானால், கர்த்தருடைய கற்பனைகளைக் கேட்டு, அவற்றிற்குக் கீழ்ப்படிய வேண்டும். தேசத்தில் செழிப்பு உண்டாவதற்கு இது கர்த்தர் விதித்திருக்கும் நிபந்தனை. *(யோசு 1:7-9; சங் 1:3)*

யோசுவாவின் காலத்திலிருந்து தாவீதின் காலம் வரையிலும் உள்ள இடைப்பட்ட 600 வருஷங்களில் நியாயாதிபதிகளோ, ராஜாக்களோ கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொண்டதாகக் குறிப்பு எதுவுமில்லை. 600 வருஷத்திற்குப் பின்பு தாவீது ராஜா முதல் முறையாகக் கர்த்தரின் நியாயப்பிரமாணத்தைப் பற்றி பேசுகிறார். (1இராஜா 2:3).

தாவீதுக்குப் பின்பு சுமார் 60 வருஷக்காலத்திற்கு வேறு எந்த ராஜாவும் நியாயப் பிரமாணத்தைப் பற்றி பேசவில்லை. ஆசாவின் காலத்தில் மறுபடியும் நியாயப்பிரமாணத்தைப் பற்றி பேசப் பட்டிருக்கிறது. (2நாளா 14:4).

பல வருஷங்களுக்குப் பின்பு, நியாயப்பிரமாணத்தின் ஒரு பகுதி தேவாலயத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. யோசியா நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்தார். (2இராஜா 22:8-23; 2இராஜா 25). யோசபாத் நியாயப் பிரமாணத்திற்குச் செவிகொடுத்தார். (2நாளா 17:9) எசேக்கியா ராஜாவும் நியாயப் பிரமாணத்திற்குச் செவி கொடுத்தார். (2நாளா 30:16; 2நாளா 31:3-4, 21).

யூதாவின் 23 ராஜாக்களும் நியாயப் பிரமாணத்திற்குச் செவிகொடுக்காமல் அதைப் புறக்கணித்து விட்டார்கள். வடக்கு ராஜ்யத்தில் யெகூவைத் தவிர மற்ற எல்லா ராஜாக்களுமே நியாயப் பிரமாணத்திற்குச் செவிகொடுக்காமல் அதைப் புறக்கணித்து விட்டார்கள். (2இராஜா 10:31; 2நாளா 12:1; 2நாளா 15:3; 2இராஜா 17:13, 34-37).

"இந்த நியாயப்பிரமாணத்தின் எல்லா வார்த்தைகளையும், இந்தக் கட்டளைகளையும்" என்று இந்த வசனத்தில் எழுதப்பட்டிருப்பது, செப்துவஜிந்த் பதிப்பில் "இந்த உபாகமத்தின்" என்று எழுதப்பட்டிருக்கிறது. **"to deuteronomion, this deuteronomy"** இந்த வார்த்தையிலிருந்துதான் இந்தப்புஸ்தகத்திற்கு ஆங்கிலத்தில் **"deuteronomy"** என்னும் பெயர் வழங்கப்படலாயிற்று.

இஸ்ரவேலின் ராஜா மாத்திரமல்ல, விசுவாசிகளாகிய நாமும் கர்த்தருடைய வார்த்தைகளை கைக்கொள்ளவேண்டும். நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கு பயந்திருக்கும்படி, நாமும் அவருடைய வார்த்தைகளைக் கற்றுக்கொள்ளவேண்டும். நாம் பரிசுத்த வேதாகமத்தைப் படிக்கும்போதும், ஆவிக்குரிய புஸ்தகங்களை படிக்கும்போதும், பிரசங்கச்செய்திகளைக் கேட்கும்போதும், பரிசுத்த ஆவியானவர் நமக்கு உணர்த்தும் சத்தியங்களை தனியாக குறிப்பு எடுத்து எழுதிக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளை நினைவில் வைத்திருப்பதற்கு இவை உதவியாகயிருக்கும்.

இஸ்ரவேல் ஜனத்தாரை ஆளுகை செய்கிற ராஜா கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கவேண்டும். அவன் தேவனுடைய தெய்வீக அதிகாரத்திற்கும், அவருடைய ஆளுகைக்கும் கீழ்ப்படியவேண்டும். அவனுடைய இருதயத்தில் பெருமையும் மேட்டிமையும் இருக்கக்கூடாது.

ராஜாக்கள் நியாயப்பிரமாணத்தை எழுதுவதன் நோக்கம் வருமாறு :

1. கர்த்தருக்குப் பயந்திருக்கும்படி கற்றுக் கொள்ளும் பொருட்டு. (உபா 17:19).
2. எந்த நியாயப்பிரமாணத்தைக் கைக் கொள்ள வேண்டுமென்று தெரிந்து கொள்வதற்காக.
3. ராஜாக்களின் இருதயம் தங்கள் சகோதரர்பேரில் மேட்டிமை கொள்ளாமல் இருப்பதற்காக (உபா 17:20).
4. கற்பனையை விட்டு வலதுபுறம், இடதுபுறம் சாயாமல் இருப்பதற்காக.
5. ராஜாக்கள் நீடித்து வாழ்வதற்காக.
6. ராஜ்யம் நீடித்து நிலைத்திருப்பதற்காக.
7. தங்களுடைய பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதற்காக.

இப்படிச் செய்வதினால், இஸ்ரவேலின் ராஜாவும், அவனுடைய குமாரரும் இஸ்ரவேலின் நடுவே தங்கள் ராஜ்யத்திலே நீடித்து வாழுவார்கள் என்று மோசே சொல்லுகிறார்.

18 அதிகாரம்

சபையின் உரிமையையும் அதன் வருமானத்தையும் கர்த்தர் நியமனம் செய்திருக்கிறார். லேவியர்கள் கர்த்தருடைய ஊழியத்தை செய்கிறார்கள். அவர்களை பராமரிப்பதற்கு தேவையான காரியங்களை கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் சொல்லியிருக்கிறார் (உபா 18:1-8).

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் போய்ச் சேரும்போது, அங்கே இருக்கிற புறஜாதிகள் செய்யும் அருவருப்புக்களின்படி செய்ய கற்றுக்கொள்ளக்கூடாது (உபா 18:9-14).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் நடுவே ஒரு தீர்க்கதரிசியை எழும்பப்பண்ணுவார். இந்த வசனப்பகுதியில் மேசியாவாகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவானரே பிரதான தீர்க்கதரிசியாயிருக்கிறார் (உபா 18:15-18). தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கு செவிகொடாதவர்களை கர்த்தர் விசாரிப்பார் (உபா 18:19). கள்ளத்தீர்க்கதரிசிக்கு தண்டனை (உபா 18:20). கள்ளத்தீர்க்கதரிசிகளின் கபட வார்த்தைகளை அறிந்துகொள்ள வேண்டிய விதம் (உபா 18:21,22).

ஆசாரியர், லேவியர் உபா 18:1-8

உபா 18:1. லேவியராகிய ஆசாரியருக்கும் லேவி கோத்திரத்தார் அனைவருக்கும் இஸ்ரவேல் புத்திரருடன் பங்கும் சுதந்தரமும் இல்லாதிருப்பதாக; கர்த்தருக்கு இடப்படும் தகனபலிகளையும் அவருக்குச் சுதந்தரமானவைகளையும் அவர்கள் புசிப்பார்களாக.

உபா 18:2. அவர்கள் சகோதரருக்குள்ளே அவர்களுக்குச் சுதந்தரமில்லை; கர்த்தர் அவர்களுக்குச் சொல்லியபடியே, அவரே அவர்கள் சுதந்தரம்.

உபா 18:3. ஜனத்தினிடத்தில் பெற்றுக்கொள்ள வேண்டிய ஆசாரியருக்குரிய வரத்தாவது: ஜனங்கள் பலியிடும் ஆடுமாடுகளில் முன்னந்தொடையையும் தாடைகளையும் இரைப்பையையும் ஆசாரியனுக்குக் கொடுக்கவேண்டும்.

உபா 18:4. உன் தானியம், திராட்சரசம், எண்ணெய், ஆட்டுரோமம் என்னும் இவைகளின் முதற்பலனையும் அவனுக்குக் கொடுக்கவேண்டும்.

உபா 18:5. அவனும் அவன் குமாரரும் எந்நாளும் கர்த்தரின் நாமத்தை முன்னிட்டு ஆராதனை செய்யும்படி நிற்கும்பொருட்டு, உன் தேவனாகிய கர்த்தர் உன் கோத்திரத்தார் எல்லாருக்குள்ளும் அவனையே தெரிந்துகொண்டார்.

உபா 18:6. இஸ்ரவேலில் எவ்விடத்திலுமுள்ள உன் வாசல்கள் யாதொன்றிலே தங்கின ஒரு லேவியன் அவ்விடத்தை விட்டு, கர்த்தர் தெரிந்துகொண்ட ஸ்தானத்திற்கு மனப்பூர்வமாய் வந்தால்,

உபா 18:7. அங்கே கர்த்தருடைய சந்நிதியில் நிற்கும் லேவியராகிய தன் எல்லாச் சகோதரரைப்போலும் தன் தேவனாகிய கர்த்தரின் நாமத்தை முன்னிட்டு ஊழியஞ்செய்வான்.

உபா 18:8. அப்படிப்பட்டவர்கள் தங்கள் பிதாக்களுடைய ஆஸ்தியின் விலைக்கிரயத்தை அநுபவிக்கிறதும் அல்லாமல், சாப்பாட்டிற்காகச் சமமான பாகத்தையும் பெற்றுக்கொள்வார்கள்.

நியாயம் விசாரிப்பதும் ஊழியம் செய்வதும் கர்த்தருடைய தெய்வீக நியமங்களாகும். தேவனுடைய ராஜ்யம் மனுஷர் மத்தியிலே ஸ்தாபிக்கப்படும் போது, இவ்விரண்டு நியமங்களும் அவசியமாய்த் தேவைப்படுகிறது. தேவனுடைய ராஜ்யத்தின் ஸ்தாபனத்திற்கும், அதன் விஸ்தாரத்திற்கும் இவ்விரண்டு நியமங்களும் மிகவும் பிரயோஜனமுள்ளவைகளாகும்.

உபாகமம் 17-ஆவது அதிகாரத்தின் இறுதிப்பகுதியில் நியாயாதிபதிகளைப்பற்றிய பிரமாணம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தில் கர்த்தருடைய ஊழியத்தைப்பற்றிய பிரமாணம் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆசாரியருடைய நிலங்களைப்பற்றியும், அவர்களை ஆசரிப்பதற்காக இஸ்ரவேல் ஜனத்தார் செய்ய வேண்டிய காரியங்களைப்பற்றியும் மோசே இந்த வசனப்பகுதியில் தெளிவுபடுத்துகிறார்.

ஆசாரியர்களும் லேவியர்களும் கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்கள். அவர்கள் இப்பிரபஞ்சத்தின் காரியங்களில் சிக்கிக்கொள்ளக்கூடாது. அவர்கள் ஆவிக்குரிய காரியங்களுக்கு அதிகமாய் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். அவர்கள் இந்த உலகத்தில் தங்கள் சொந்த ஜீவனத்திற்காக வேலை செய்து, தாங்கள் செய்யவேண்டிய ஊழிய வேலைகளை செய்யாமல், உலகப்பிரகாரமான வேலைகளை செய்யக்கூடாது.

ஆசாரியருக்கும் லேவியருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே சுதந்தரமில்லை. கர்த்தரே அவர்கள் சுதந்தரம். ஆகையினால் அவர்கள் இந்த உலகப்பிரகாரமான காரியங்களிலே ஈடுபட்டு, தங்களுக்கு ஐசுவரியத்தை சம்பாதிக்கவும், தங்களுடைய சம்பத்துக்களை விருத்திபண்ணவும் முயற்சி பண்ணிக்கொண்டிருக்கக்கூடாது. கர்த்தருடைய ஊழியம் உன்னதமானது. அது உலகப்பிரகாரமான எல்லா வேலைகளைவிட மேன்மையானது.

ஆசாரியர்களும் லேவியர்களும் கர்த்தருக்கு ஊழியம் செய்கிறார்கள். அவர்களும் அவர்களுடைய குடும்பத்தாரும் போஷிக்கப்படவேண்டும். இந்தப் பூமியில் அவர்கள் ஜீவனோடிருப்பதற்கு தேவையான அடிப்படை வசதிகளை, இஸ்ரவேல் ஜனத்தார் அவர்களுக்கு செய்து கொடுக்கவேண்டும்.

கர்த்தர் ஆவியாயிருக்கிறார். கர்த்தரே ஆசாரியருக்கும் லேவியருக்கும் சுதந்தரம். ஆவியாயிருக்கிற கர்த்தர் தங்களுக்கு சுதந்தரமாகயிருப்பதினால், ஆசாரியரும் லேவியரும் காற்றை மாத்திரம் சுவாசித்து உயிர் வாழமுடியாது. அவர்களுக்கு போஜனம் வேண்டும். இஸ்ரவேல் ஜனங்களே ஆசாரியரையும் லேவியரையும் போஷிக்கவேண்டும்.

லேவியராகிய ஆசாரியருக்கும் லேவி கோத்திரத்தார் அனைவருக்கும் இஸ்ரவேல் புத்திரருடன் பங்கும் சுதந்தரமும் இல்லாதிருப்பதாக; கர்த்தருக்கு இடப்படும் தகனபலிகளையும் அவருக்குச் சுதந்தரமானவைகளையும் அவர்கள் புசிப்பார்களாக (உபா 18:1) என்று மோசே சொல்லுகிறார்.

அவர்கள் சகோதரருக்குள்ளே அவர்களுக்குச் சுதந்தரமில்லை; கர்த்தர் அவர்களுக்குச் சொல்லியபடியே, அவரே அவர்கள் சுதந்தரம் (உபா 18:2). இஸ்ரவேல் புத்திரரே ஆசாரியருக்கு போஜனம் கொடுக்கவேண்டும். ஆசாரியருடைய அன்றாட தேவைகள், இஸ்ரவேல் புத்திரருடைய உதாரத்துவமான காணிக்கையை சார்ந்திருக்கிறது. ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் ஆசாரியருக்கு கொடுக்கவேண்டிய காணிக்கைகளைப்பற்றி கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் சொல்லியிருக்கிறார்.

"ஜனத்தினிடத்தில் பெற்றுக்கொள்ள வேண்டிய ஆசாரியருக்குரிய வரத்தாவது: ஜனங்கள் பலியிடும் ஆடுமாடுகளில் முன்னந்தொடையையும் தாடைகளையும் இரைப்பையும் ஆசாரியனுக்குக் கொடுக்கவேண்டும். உன் தானியம், திராட்சரசம், எண்ணெய், ஆட்டுரோமம் என்னும் இவைகளின் முதற்பலனையும் அவனுக்குக் கொடுக்கவேண்டும்" (உபா 18:3,4).

ஆடுமாடுகளில் இரைப்பை ருசியான பதார்த்தமாகக் கருதப்படுகிறது. முன்னந்தொடை, தாடை, இரைப்பை ஆகியவை ஆசாரியருக்குக் கொடுக்கப்படும் பங்காகும். (1சாமு 2:13,28-29; லேவி 7:33-34; எண் 18:8-14).

ஆசாரியரும் அவருடைய குமாரரும் எந்நாளும் கர்த்தரின் நாமத்தை முன்னிட்டு ஆராதனை செய்யும்படி நிற்கும்பொருட்டு, தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேலின் கோத்திரத்தார் எல்லாருக்குள்ளும் ஆசாரியரையும், லேவியரையும் மாத்திரமே தெரிந்துகொண்டார் (உபா 18:5).

ஆசாரிய ஊழியமும், லேவியருடைய ஊழியமும் ராஜாக்களைப் போல பரம்பரை பரம்பரையாக வருகிறது. (உபா 17:20).

"இஸ்ரவேலில் எவ்விடத்திலுமுள்ள உன் வாசல்கள் யாதொன்றிலே தங்கின ஒரு லேவியன் அவ்விடத்தை விட்டு, கர்த்தர் தெரிந்துகொண்ட ஸ்தானத்திற்கு மனப்பூர்வமாய் வந்தால், அங்கே கர்த்தருடைய சந்நிதியில் நிற்கும் லேவியராகிய தன் எல்லாச் சகோதரரைப்போலும் தன் தேவனாகிய கர்த்தரின் நாமத்தை முன்னிட்டு ஊழியஞ்செய்வான்" *(உபா 18:6,7)* என்றும்,

"அப்படிப்பட்டவர்கள் தங்கள் பிதாக்களுடைய ஆஸ்தியின் விலைக்கிரயத்தை அநுபவிக்கிறதும் அல்லாமல், சாப்பாட்டிற்காகச் சமமான பாகத்தையும் பெற்றுக்கொள்வார்கள்" *(உபா 18:8)* என்றும் மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

கர்த்தருடைய வாசஸ்தலத்தில் லேவியரில் ஒரு பகுதியினர் மட்டுமே வசித்து வருகிறார்கள். மற்ற லேவியர்கள் இஸ்ரவேலின் எல்லாப் பட்டணங்களிலும் வசித்து வருகிறார்கள். கர்த்தருடைய ஆராதனை கர்த்தர் தெரிந்துகொண்ட ஸ்தானத்தில்தான் நடைபெறும். ஒரு லேவியன் தன்னுடைய வீட்டில் தங்கியிருப்பதற்குப் பதிலாக, கர்த்தருக்கு ஆராதனை செய்வதற்காக அந்த ஸ்தலத்திற்கு மனப்பூர்வமாக வர விரும்பலாம். அப்படிப்பட்ட லேவியர்கள் கர்த்தருடைய வாசஸ்தலத்திற்கு வரலாம். அவர்கள் மற்ற லேவியரைப் போல கர்த்தருடைய சந்நிதியில் ஊழியம் செய்யலாம்.

இஸ்ரவேலில் லேவியருக்குச் சுதந்தரவீதம் பிரித்துக் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு வசிப்பதற்காக பல பட்டணங்கள் கொடுக்கப் பட்டிருக்கிறது. அவர்கள் கிரயத்திற்கு வாங்கும் சொத்துக்கள் அவர்களையே சேரும். அவை அவர்களுடைய பிள்ளைகளுக்கு பிரித்துக் கொடுக்கப்படும். *(உபா 2:26; எரே 32:7; அப் 4:36).*

பொருத்தனைகள் மூலமாகவும், கர்த்தருக்குப் பிரதிஷ்டை பண்ணுவதன் மூலமாகவும் லேவியனுக்குச் சொத்துக்கள் சேரும். *(லேவி 27).* ஒரு லேவியனுக்கு எவ்வளவு சொத்துக்கள் இருந்தாலும், அவன் ஆசரிப்புக் கூடாரத்திலோ, தேவாலயத்திலோ ஊழியம் செய்யும்போது, அவனுடைய பணிவிடைகளுக்காக மற்ற லேவியருக்குப் பங்குவீதம் பிரித்துக் கொடுக்கப்படுவதுபோல, இவனுக்கும் பிரித்துக் கொடுக்கப்படும். *(உபா 18:6-8; 2கொரி 9:13).*

ஆகையினால் லேவியர் தங்கள் பிதாக்களுடைய ஆஸ்தியின் விலைக்கிரயத்தையும் அனுபவிக்கலாம். அத்துடன் ஆசரிப்புக் கூடாரத்தில் அல்லது தேவாலயத்தில் சாப்பாட்டிற்காகச் சமமான பாகத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.

புறஜாதி மார்க்கம்
உபா 18:9-14

உபா 18:9. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தில் நீ போய்ச் சேரும்போது, அந்த ஜாதிகள் செய்யும் அருவருப்புகளின்படி செய்யக் கற்றுக் கொள்ளவேண்டாம்.

உபா 18:10. தன் மகனையாவது தன் மகளையாவது தீக்கடக்கப்பண்ணுகிறவனும், குறிசொல்லுகிறவனும், நாள்பார்க்கிறவனும், அஞ்சனம் பார்க்கிறவனும், சூனியக்காரனும்,

உபா 18:11. மந்திரவாதியும், சன்னதக்காரனும், மாயவித்தைக்காரனும், செத்தவர்களிடத்தில் குறிகேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம்.

உபா 18:12. இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்; இப்படிப்பட்ட அருவருப்புகளின் நிமித்தம் உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன் முன்னின்று துரத்திவிடுகிறார்.

உபா 18:13. உன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நீ உத்தமனாயிருக்கக்கடவாய்.

உபா 18:14. நீ துரத்திவிடப்போகிற இந்த ஜாதிகள் நாள்பார்க்கிறவர்களுக்கும் குறிசொல்லுகிறவர் களுக்கும் செவிகொடுக்கிறார்கள்; நீ அப்படிச் செய்கிறதற்கு உன் தேவனாகிய கர்த்தர் உத்தரவுகொடார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் போய்ச்சேரும்போது, அங்கே உள்ள புறஜாதியாரின் மார்க்கத்தின்படி செய்ய கற்றுக்கொள்ளக்கூடாது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு, பல சமயங்களில் விக்கிரகாராதனைக்கு விரோதமாக எச்சரிப்பு சொல்லியிருக்கிறார். இப்போது புறஜாதியாரின் மார்க்கத்திற்கு விரோதமாகவும் மோசே இஸ்ரவேல் புத்திரரை எச்சரிக்கிறார்.

"உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தில் நீ போய்ச் சேரும்போது, அந்த ஜாதிகள் செய்யும் அருவருப்புகளின்படி செய்யக் கற்றுக் கொள்ளவேண்டாம்" (உபா 18:9) என்று மோசே சொல்லுகிறார். புறஜாதியாரின் பழக்க வழக்கங்கள் கர்த்தருக்கு அருவருப்பானது.

புறஜாதி மார்க்கத்தாரின் அருவருப்பான காரியங்கள் சில இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகள் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே காணப்படக்கூடாது.

புறஜாதி மார்க்கத்தார் தங்கள் மகனையும், மகளையும் தீக்கடக்கப்பண்ணுகிறார்கள். அவர்கள் குறிசொல்லுகிறவளாயும், நாள்பார்க்கிறவர்களாயும், அஞ்சனம் பார்க்கிறவர்களாயும், சூனியக்காரராயும், மந்திரவாதியாயும், சன்னதக்காரராயும், மாயவித்தைக்காரராயும், செத்தவர்களிடத்தில் குறிகேட்கிறவர்களாயும் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே இருக்கவேண்டாம் என்று மோசே சொல்லுகிறார் (உபா 18:10,11).

புறஜாதியார் தங்கள் பிள்ளைகளை மோளேகுக்கு பலியிடுகிறார்கள். மோளேகு சூரியனுக்கு அடையாளமான புறஜாதி தெய்வம். புறஜாதியார் தங்கள் பிள்ளைகளை தீக்கடக்கப்பண்ணுவது மாத்திரமல்லாமல், அவர்களை அக்கினியிலே தகனிக்கவும் செய்கிறார்கள்.

"நீ உன் சந்ததியில் யாரையாகிலும் மோளேகுக்கென்று தீக்கடக்கும்படி இடங்கொடாதே; உன் தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதே; நான் கர்த்தர்" (லேவி 18:21).

புறஜாதியார் செத்தவர்களிடத்தில் குறிகேட்டு, இனிமேல் வரப்போகிற காரியங்களை அறிந்துகொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். இவையெல்லாம் புறஜாதியாரின் மாய்மாலமான காரியங்கள். இதில் உண்மையில்லை. புறஜாதியாரின் மார்க்கம் பொய்யை நம்புகிறது.

புறஜாதியாரின் மார்க்க காரியங்களாகிய இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்; இப்படிப்பட்ட அருவருப்புகளின் நிமித்தம் தேவனாகிய கர்த்தர் அவர்களை இஸ்ரவேல் புத்திரர் முன்னின்று துரத்திவிடுகிறார் (உபா 18:12).

ஜாதிகள் செய்யும் அருவருப்புகள் :

1. தங்கள் மகனையும், தங்கள் மகளையும் தீக்கடக்கப்பண்ணுகிறார்கள்.
2. குறிசொல்லுகிறார்கள்.
3. நாள்பார்க்கிறார்கள்.
4. அஞ்சனம் பார்க்கிறார்கள்.
5. சூனியக்காரர்கள்
6. மந்திரவாதிகள் (உபா 18:11)
7. சன்னதக்காரர்கள்.
8. மாயவித்தைக்காரர்கள்.
9. செத்தவர்களிடத்தில் குறிகேட்கிறார்கள்.

புறஜாதியார் இங்கு கூறப்பட்டிருக்கும் எல்லா அருவருப்புகளையும் செய்து வருகிறார்கள். ஆகையினால் கர்த்தர் அவர்களைத் துரத்திவிட்டார். பிற்காலத்தில் இஸ்ரவேல் புத்திரரும் இதே அருவருப்புகளைச் செய்தார்கள். இதனால் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது கோபம் கொண்டு, அவர்களையும் துரத்திவிடுகிறார். (2இராஜா 17).

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்கு போய்ச்சேரும்போது, புறஜாதியாரின் மார்க்க காரியங்களைக் கற்றுக்கொள்ளக்கூடாது. அவை கர்த்தருக்கு அருவருப்பானவை. புறஜாதியாருடைய அருவருப்புக்களினிமித்தமாகவே கர்த்தர் அவர்களை கானான் தேசத்திலிருந்து துரத்திவிட்டார். புறஜாதியாரின் அருவருப்புக்களே அவர்களுடைய அழிவுக்கு காரணமாயிற்று. இஸ்ரவேல் புத்திரர் புறஜாதியாரின் அருவருப்புக்களைக் கற்றுக்கொண்டு, அதன் பிரகாரம் செய்தால், அவர்களும் அழிந்துபோவார்கள்.

"உன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நீ உத்தமனாயிருக்கக்கடவாய். நீ துரத்திவிடப்போகிற இந்த ஜாதிகள் நாள்பார்க்கிறவர்களுக்கும் குறிசொல்லுகிறவர் களுக்கும் செவிகொடுக்கிறார்கள்; நீ அப்படிச் செய்கிறதற்கு உன் தேவனாகிய கர்த்தர் உத்தரவுகொடார்" (உபா 18:13,14) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

இந்த வாக்கியத்தில் உத்தமன் என்னும் வார்த்தைக்கு "புறஜாதியாரின் எல்லா அருவருப்புகளிலிருந்தும் விலகியிருப்பவன் " என்று பொருள். (உபா 18:9-14, ஆதி 17:1; யோபு 1:1; மத் 5:48).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயங்களையும், பிரமாணங்களையும் கற்றுக்கொடுத்திருக்கிறார். கர்த்தர் தங்களுக்கு கற்றுக்கொடுத்திருக்கிற உத்தம வழியிலேயே, இஸ்ரவேல் புத்திரர் நடக்கவேண்டும். அவர்கள் புறஜாதியாரின் மாயமான வழியிலே நடந்து அழிந்துபோகக்கூடாது.

"ஆதலால், கர்த்தருக்குள் நான் உங்களுக்குச் சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது என்னவெனில், மற்றப் புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறது போல நீங்கள் இனி நடவாமலிருங்கள்.

அவர்கள் புத்தியில் அந்தகாரப் பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து;

உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களைக் காமவிகாரத்திற்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார்கள்.

நீங்களோ இவ்விதமாய்க்கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை" (எபே 4:17-20).

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் எவ்விதமாய் கிறிஸ்துவைக் கற்றுக்கொண்டோமோ, அவ்விதமாகவே நம்முடைய ஜீவியத்தில் நடக்கவேண்டும்.

தீர்க்கதரிசி
உபா 18:15-22

உபா 18:15. உன் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல் ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவருக்குச் செவிகொடுப்பீர்களாக.

உபா 18:16. ஓரேபிலே சபை கூட்டப்பட்ட நாளில்: நான் சாகாதபடி என் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தை இனி நான் கேளாமலும், இந்தப் பெரிய அக்கினியை இனி நான் காணாமலும் இருப்பேனாக என்று உன் தேவனாகிய கர்த்தரை நீ வேண்டிக்கொண்டதின் படியெல்லாம் அவர் செய்வார்.

உபா 18:17. அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: அவர்கள் சொன்னது சரியே.

உபா 18:18. உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்; நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார்.

உபா 18:19. என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவிகொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன்.

உபா 18:20. சொல்லும்படி நான் கட்டளையிடாத வார்த்தையை என் நாமத்தினாலே சொல்லத் துணியும் தீர்க்கதரிசியும், வேறே தேவர்களின் நாமத்தினாலே பேசும் தீர்க்கதரிசியும் சாகக்கடவன்.

உபா 18:21. கர்த்தர் சொல்லாத வார்த்தை இன்னதென்று நான் எப்படி அறிவேன் என்று நீ உன் இருதயத்தில் சொல்வாயாகில்,

உபா 18:22. ஒரு தீர்க்கதரிசி கர்த்தரின் நாமத்தினாலே சொல்லும் காரியம் நடவாமலும் நிறைவேறாமலும்போனால், அது கர்த்தர்சொல்லாத வார்த்தை; அந்தத் தீர்க்கதரிசி அதைத் துணிகரத்தினால் சொன்னான்; அவனுக்கு நீ பயப்படவேண்டாம்.

இந்த வசனப்பகுதியில் பிரதான தீர்க்கதரிசியாகிய மேசியாவைப்பற்றி வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. நாம் மேசியாவை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும், அவருக்கு செவிகொடுக்கவேண்டுமென்றும், நமக்கு கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது.

"உன் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவருக்குச் செவிகொடுப்பீர்களாக" (உபா 18:15) என்று மோசே சொல்லுகிறார்.

இந்த வசனத்திற்கு வேதபண்டிதர்கள் பல்வேறு விதமாக வியாக்கியானம் சொல்லுகிறார்கள். மோசே ஒரு தீர்க்கதரிசி. தன்னுடைய ஜீவகாலத்திற்கு பின்பு, கர்த்தர் எழுப்பப்போகிற மற்ற தீர்க்கதரிசிகளைப்பற்றி, மோசே இந்த வசனப்பகுதியில் வாக்குப்பண்ணுகிறார் என்று சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே ஆசாரியரும் லேவியரும் கர்த்தருக்கு ஊழியம் செய்வதுபோல, தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய பிள்ளைகள் மத்தியிலே ஊழியம் செய்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய பிரமாணங்களையும், கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயங்களையும் யாக்கோபுக்கு கற்றுக்கொடுக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தவறு செய்யும்போது அவர்கள் செய்யும் தவறுகளை அவர்களுக்கு உணர்த்தவும், அவர்களைக் கண்டிக்கவும், அவர்களைக் கடிந்துகொள்ளவும் அவர்களுக்கு தீர்க்கதரிசிகள் தேவைப்படுகிறார்கள். இவர்கள் கர்த்தருடைய விசேஷமான ஊழியக்காரர்கள்.

தீர்க்கதரிசிகள் இஸ்ரவேல் சபையாருக்கு அவர்களுடைய கடமைகளை ஞாபகப்படுத்துவார்கள். வரப்போகிற காரியங்களை முன்னறிவிப்பார்கள். பாவத்தைக்குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும் இஸ்ரவேல் புத்திரரை எச்சரிப்பார்கள். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஆறுதல் உண்டாகும்படியாக அவர்களுடைய விடுதலைகளையும் அறிவிப்பார்கள்.

மோசே இந்த வசனப்பகுதியில், தனக்கு பின்பு இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே ஊழியம் செய்யப்போகிற தீர்க்கதரிசிகளைக் குறித்து வாக்குப்பண்ணுகிறாரா என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனாலும் இந்த வசனப்பகுதியானது, பிரதான தீர்க்கதரிசியாகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றிய வாக்குத்தத்தமாகும் என்று வேதபண்டிதர்கள் பொதுவான விளக்கம் சொல்லுகிறார்கள்.

மோசேயின் பிரமாணத்தில் மேசியாவைப்பற்றிய வாக்குத்தத்தம் சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே வாக்குப்பண்ணப்பட்டிருக்கிற மேசியா.

"மோசே பிதாக்களை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவர் உங்களுக்குச்சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக" (அப் 3:22) என்று சொன்னார்.

"இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்கள் சகோதரரிலிருந்து என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக எழும்பப்பண்ணுவார், அவருக்குச் செவிகொடுப்பீர்களாக என்று சொன்னவர் இந்த மோசேயே" (அப் 7:37).

இஸ்ரவேல் புத்திரர், மோசே சொன்ன இந்த வார்த்தைகளைக் கேட்கும்போதெல்லாம், அவர்கள் மேசியாவைப்பற்றிய வாக்குத்தத்தத்தையே நினைவுகூர்ந்தார்கள். அவர்கள் மேசியாவையே நோக்கிப் பார்த்தார்கள்.

"இயேசு செய்த அற்புதத்தை அந்த மனுஷர் கண்டு: மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி என்றார்கள்" (யோவா 6:14).

"தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்" (1பேது 1:11).

தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு தீர்க்கதரிசியை எழும்பப்பண்ணுவார். அவருக்கு இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் செவிகொடுக்கவேண்டும் என்று மோசே சொல்லுகிறார். "செவிகொடுக்க வேண்டும்" என்னும் வார்த்தைக்கு, தீர்க்கதரிசியின் வார்த்தைக்கு செவிகொடுத்து, அதற்கு கீழ்ப்படியவேண்டும் என்பது பொருளாகும். "என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவிகொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன்" (உபா 18:19) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் சபையார் ஒரேபிலே கூடிவந்தபோது, கர்த்தர் தங்களிடத்தில் நேரடியாகப் பேசுவதை அவர்கள் விரும்பவில்லை. கர்த்தர் மோசேயைப்போல ஒரு தீர்க்கதரிசியின் மூலமாக தங்களோடு பேசவேண்டுமென்று இஸ்ரவேல் சபையார் சொன்னார்கள். மோசே அந்த சம்பவத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு இந்த வசனப்பகுதியில் மறுபடியுமாய் நினைவுபடுத்துகிறார்.

முன்னறிவிக்கப்பட்டிருக்கும் தீர்க்கதரிசியைப் பற்றிய சத்தியங்கள் :

1. தேவனாகிய கர்த்தர் தீர்க்கதரிசியை எழும்பப்பண்ணுவார். (உபா 18:15,18).

2. தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேலுக்காக தீர்க்கதரிசியை எழும்பப்பண்ணுவார். (உபா 18:15,18).

3. தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேலின் நடுவிலிருந்து தீர்க்கதரிசியை எழும்பப் பண்ணுவார் (உபா 18:15,18).

4. தீர்க்கதரிசி இஸ்ரவேலுக்குரியவர். (உபா 18:15,18).

5. தீர்க்கதரிசி மோசேயைப் போலஇருப்பார். (உபா 18:15,18).

6. எல்லோரும் தீர்க்கதரிசிக்குச் செவிகொடுக்க வேண்டும். (உபா 18:15).

7. சீனாய் வனாந்தரத்தில் தீர்க்கதரிசி வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறார். (உபா 18:16).

8. கர்த்தருடைய வார்த்தைகள் தீர்க்கதரிசியின் வாயில் அருளப்படும். (உபா 18:18).

9. கர்த்தர் தீர்க்கதரிசிக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்வார்.

10. தீர்க்கதரிசியின் வார்த்தைகளுக்குச் சிலர் செவிகொடுக்கமாட்டார்கள் (உபா 18:19).

11. தீர்க்கதரிசி கர்த்தருடைய நாமத்தில் பேசுவார்.

12. தீர்க்கதரிசிக்குச் செவி கொடாதவர்களைக் கர்த்தர் விசாரிப்பார்.

இந்த வசனங்களில் தீர்க்கதரிசி என்று கூறப்பட்டிருப்பது மேசியாவையே குறிக்கும். இங்கு முன்னறிவிக்கப்பட்டிருக்கும் சத்தியங்கள் அனைத்தும் இயேசு கிறிஸ்துவில் நிறைவேறியிருக்கிறது. (யோவான் 4:25; யோவான் 5:45-47; அப் 3:22-28).

"ஓரேபிலே சபை கூட்டப்பட்ட நாளில்: நான் சாகாதபடி என் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தை இனி நான் கேளாமலும், இந்தப் பெரிய அக்கினியை இனி நான் காணாமலும் இருப்பேனாக என்று உன் தேவனாகிய கர்த்தரை நீ வேண்டிக்கொண்டதின் படியெல்லாம் அவர் செய்வார்" (உபா 18:16) என்று மோசே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொல்லுகிறார்.

உபா 18:15,18-19 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்கள் சீனாய் வனாந்தரத்தில் கூறப்பட்டவையாகும். சீனாய் மலையில் காணப்பட்ட அக்கினி மிகவும் பயங்கரமாக இருந்தது. முழு மலையும் பற்றியெரிந்தது.

இஸ்ரவேல் புத்திரர் சொன்னதை கர்த்தரும் அங்கீகரிக்கிறார்.

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி, "அவர்கள் சொன்னது சரியே. உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி, என்வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்; நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார். என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவிகொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன்" (உபா 18:17-19) என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய சப்தத்தைக் கேட்காமல் இருப்பதும், அவருடைய பட்சிக்கும் அக்கினியைக் காணாமல் இருப்பதும் இஸ்ரவேல் புத்திரருக்குச் சரியான காரியம் என்று கர்த்தர் தீர்மானம் பண்ணுகிறார். இனிமேல் மோசேயின் மூலமாகவும், மற்ற தீர்க்கதரிசிகள் மூலமாகவும் மட்டுமே அவர்களோடு பேசுவதாக வாக்குப்பண்ணுகிறார். (உபா 18:17-19; உபா 5:28-31).

கர்த்தருடைய தீர்க்கதரிசிகள், அவர் சொல்லுகிற வார்த்தைகளை மாத்திரமே சொல்லுவார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளோ, சொல்லும்படி கர்த்தர் கட்டளையிடாத வார்த்தைகளை சொல்லுவார்கள். அவர்கள் வேறே தேவர்களின் நாமத்தினால் பேசினாலும், அவர்கள் கர்த்தருடைய நாமத்தினால் சொல்லத்துணிவார்கள். இப்படிப்பட்ட கள்ளத்தீர்க்கதரிசிகள் சாகவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார் (உபா 18:20).

கர்த்தர் எழுப்புகிற தீர்க்கதரிசிக்கு இஸ்ரவேல் புத்திரர் செவிகொடுக்கவேண்டும். ஆனால் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே ஏராளமான தீர்க்கதரிசிகள் இருக்கிறார்கள். இந்த தீர்க்கதரிசிகளில் யாரை கர்த்தர் எழுப்பியிருக்கிறார் என்றும், யாரை கர்த்தர் எழுப்பவில்லை என்றும் இஸ்ரவேல் ஜனங்களுக்கு தெரியவில்லை. அவர்கள் குழப்பத்திலிருக்கிறார்கள். மோசே அவர்களுடைய குழப்பத்தைத் தெளிவுபடுத்தும் வண்ணமாக,

"கர்த்தர் சொல்லாத வார்த்தை இன்னதென்று நான் எப்படி அறிவேன் என்று நீ உன் இருதயத்தில் சொல்வாயாகில், ஒரு தீர்க்கதரிசி கர்த்தரின் நாமத்தினாலே சொல்லும் காரியம் நடவாமலும் நிறைவேறாமலும்போனால், அது கர்த்தர் சொல்லாத வார்த்தை; அந்தத் தீர்க்கதரிசி அதைத் துணிகரத்தினால் சொன்னான்; அவனுக்கு நீ பயப்படவேண்டாம்" (உபா 18:21,22) என்று சொல்லுகிறார்.

தீர்க்கதரிசனத்திற்கு ஆதாரம் :

1. தேவன் - பரிசுத்த ஆவியானவர் மூலமாக (அப் 3:21; 2தீமோ 3:15-17; எபி 1:1-2; 1பேதுரு 1:10-13; 2பேதுரு 1:21)

2. சாத்தான் - பிசாசுகளின் ஆவிகளின் மூலமாக (ஆதி 3:4-5; 1சாமு 28; 1இராஜா 22; 1நாளா 10:13-14; மத் 24:24; 2தெச 2:8-12; வெளி 13:11-18; வெளி 16:13-16; வெளி 19:20)

3. மனுஷன் - தன்னுடைய சுய ஆவியின் மூலமாக (உபா 13:1-18; உபா 18:20-21; எரே 23:15-17,25-40; எரே 27:9-11,14-18; எரே 28:1-17; எசே 13:1-23; எசே 22:23-31; 2கொரி 14:29-33)

மெய்யான தீர்க்கதரிசனம் நிறைவேறும். (உபா 18:22) நிறைவேறாத தீர்க்கதரிசனம் கர்த்தர் சொல்லாத வார்த்தை. கள்ளத் தீர்க்கதரிசி கர்த்தர் சொல்லாத வார்த்தையைக் கூட துணிகரமாகச் சொல்லிவிடுவான். ஆகையினால் தீர்க்கதரிசனம் கேட்கிறவர்கள், கூறப்படும் வார்த்தை கர்த்தர் சொன்ன வார்த்தை தானா என்பதை வேதாகமத்தில் அவர் ஏற்கெனவே வெளிப்படுத்தியிருக்கும் வார்த்தைகளை ஆதாரமாக வைத்து நிதானித்து அறிய வேண்டும். கர்த்தர் தமக்குத்தாமே முரண்படமாட்டார். தாம் ஏற்கெனவே வேதவாக்கியத்தில் வெளிப்படுத்தியிருப்பதற்கு எதிராக ஒன்றும் கூறமாட்டார். (உபா 13:1-3)

ஜனங்கள் கர்த்தருக்குப் பயப்படுவதுபோல, தீர்க்கதரிசிகளுக்குப் பயப்படுகிறார்கள். மனுஷனுக்குப் பயப்படுவது பாவம். கள்ளத்தீர்க்கதரிசிக்குப் பயப்படவும் வேண்டாம். அவனுடைய வார்த்தையைக் கேட்க வேண்டாம். கள்ளத்தீர்க்கதரிசியை அவனுடைய வார்த்தையினாலும், அவனுடைய ஜீவியத்தில் வெளிப்படும் கனியினாலும் அறிந்து கொள்ளலாம். (மத் 7:16).

19 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியவேண்டும் என்றும், அவரை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கவேண்டும் என்றும் மோசே அவர்களுக்கு இதுவரையிலும் போதகம்பண்ணினார்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்புகூருவதுபோல, மனுஷரிடத்திலும் அன்புகூரவேண்டும். அவர்கள் மற்ற மனுஷரோடு அன்போடும் நீதியோடும் ஐக்கியமாயிருக்கவேண்டும். மோசே இந்த அதிகாரத்தில் இஸ்ரவேல் ஜனத்தாருடைய சமுதாய கடமைகளை அவர்களுக்கு விவரமாகச் சொல்லுகிறார்.

“கொலைசெய்யாதிருப்பாயாக” என்பது ஆறாவது கட்டளை. இந்தக் கட்டளையைப்பற்றி மோசே இந்த வசனப்பகுதியில் விரிவாகச் சொல்லுகிறார் (உபா 19:1-13). “களவு செய்யாதிருப்பாயாக” என்பது கர்த்தருடைய எட்டாவது கட்டளை. இந்தக் கட்டளையைப்பற்றிய விவரம் (உபா 19:14).

“பிறனுக்கு விரோதமாய் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக” என்பது கர்த்தருடைய ஒன்பதாவது கட்டளை. இந்தக் கட்டளையைப்பற்றிய விளக்கம் (உபா 19:15-21).

அடைக்கலப்பட்டணம்
உபா 19:1-13

உபா 19:1. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தில் ஜாதிகளை உன் தேவனாகிய கர்த்தர் வேரற்றுப்போகப் பண்ணுவதினால், நீ அவர்கள் தேசத்தைச் சுதந்தரித்துக்கொண்டு, அவர்கள் பட்டணங்களிலும் அவர்கள் வீடுகளிலும் குடியேறும்போது,

உபா 19:2. நீ உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரிக்கக் கொடுக்கும் உன் தேசத்தின் நடுவிலே, உனக்காக மூன்று பட்டணங்களைப் பிரித்துவைக்கக்கடவாய்.

உபா 19:3. கொலைசெய்தவன் எவனும் அங்கே ஓடிப்போகும்படி உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சுதந்தரிக்கப்பண்ணப் போகிற உன் தேசத்தின் எல்லையை நீ மூன்று பங்காகப் பகுத்து அதற்கு வழியை உண்டுபண்ணக்கடவாய்.

உபா 19:4. கொலைசெய்து அங்கே ஓடிப்போய், உயிரோடிருக்கத்தக்கவன் யாரென்றால்: தான் முன்னே பகைத்திராத பிறனொருவனை மனதறியாமல் கொன்றவன் தானே.

உபா 19:5. ஒருவன் விறகுவெட்ட மற்றொருவனோடே காட்டில் போய், மரத்தை வெட்டத் தன் கையிலிருந்த கோடாரியை ஓங்கும்போது, இரும்பானது காம்பைவிட்டுக் கழன்று மற்றவன்மேல் பட்டதினால் அவன் இறந்துபோனால்,

உபா 19:6. இரத்தப்பழிக்காரன் தன் மனம் எரிகையில், கொலைசெய்தவனை வழி தூரமாயிருக்கிறதினாலே பின்தொடர்ந்து பிடித்து, அவனைக் கொன்றுபோடாதபடிக்கு, இவன் அந்தப் பட்டணங்கள் ஒன்றில் ஓடிப்போய் உயிரோடிருப்பானாக; இவன் அவனை முன்னே பகைக்காதபடியினால், இவன்மேல் சாவுக்கான குற்றம் சுமரவில்லை.

உபா 19:7. இதினிமித்தம் மூன்று பட்டணங்களை உனக்காகப் பிரித்துவைக்கக்கடவாய் என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்.

உபா 19:8. நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, எந்நாளும் அவர்வழிகளில் நடப்பதற்காக, இன்று நான் உனக்குக் கற்பிக்கிற இந்த எல்லாக் கற்பனைகளையும் கைக்கொண்டு அதின்படி செய்து,

உபா 19:9. உன் தேவனாகிய கர்த்தர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்டபடியே, அவர் உன் எல்லையை விஸ்தாரமாக்கி, உன் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று சொன்ன தேசம் முழுவதையும் உனக்குக் கொடுத்தால்,

உபா 19:10. அப்பொழுது உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் உன் தேசத்தில் குற்றமில்லாத இரத்தம் சிந்தப்படுகிறதினால் உன்மேல் இரத்தப்பழி சுமராதபடிக்கு, இந்த மூன்று பட்டணங்களும் அல்லாமல் இன்னும் மூன்று பட்டணங்களை ஏற்படுத்தக்கடவாய்.

உபா 19:11. ஒருவன் பிறனொருவனைப் பகைத்து, அவனுக்கு பதிவிருந்து, அவனுக்கு விரோதமாய் எழும்பி, அவன் சாகும்படி அவனை அடித்து, இந்தப் பட்டணங்களில் ஒன்றில் ஓடிப்போயிருப்பானாகில்,

உபா 19:12. அந்தப் பட்டணத்தில் மூப்பர்கள் ஆள் அனுப்பி, அங்கேயிருந்து அவனைக் கொண்டுவரும்படி செய்து, அவன் சாகும்படிக்கு அவனை இரத்தப்பழி வாங்குகிறவன் கையில் ஒப்புக்கொடுக்கக்கடவர்கள்.

உபா 19:13. உன் கண் அவனுக்கு இரங்கவேண்டாம்; குற்றமில்லாத இரத்தப்பழியை இஸ்ரவேலை விட்டு விலக்கக்கடவாய்; அப்பொழுது நீ நன்றாயிருப்பாய்.

கர்த்தர் நோவாவின் காலத்திலேயே இரத்தப்பழியைப்பற்றிய தம்முடைய பிரமாணத்தை மனுபுத்திரருக்கு சொல்லியிருக்கிறார்.

"மனுஷன் தேவசாயலில் உண்டாக்கப்பட்டபடியால், மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத்தம் மனுஷனாலே சிந்தப்படக்கடவது" (ஆதி 9:6).

கொலைசெய்கிறவன், கொலைசெய்யப்பட்டவனுடைய இரத்தத்தை சிந்துகிறான். இதனால் இவ்விரண்டு பேருடைய இரத்தத்திற்கும் பிரச்சனை ஏற்படுகிறது. இந்தப் பிரச்சனையை எவ்வாறு தீர்த்து வைப்பது என்பது பற்றிய பிரமாணத்தை மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தைச் சுதந்தரித்துக்கொண்டு, அந்த தேசத்திலுள்ள பட்டணங்களிலும், அந்த தேசத்தாரின் வீடுகளிலும் குடியேறப் போகிறார்கள். கானான் தேசத்திலே பல பட்டணங்கள் இருக்கும். அந்தப் பட்டணங்களில் மூன்று பட்டணங்களை அடைக்கலப்பட்டணங்களாக பிரித்தெடுக்கவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தில் ஜாதிகளை உன் தேவனாகிய கர்த்தர் வேரற்றுப்போகப் பண்ணுவதினால், நீ அவர்கள் தேசத்தைச் சுதந்தரித்துக்கொண்டு, அவர்கள் பட்டணங்களிலும் அவர்கள் வீடுகளிலும் குடியேறும்போது, நீ உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரிக்கக் கொடுக்கும் உன் தேசத்தின் நடுவிலே, உனக்காக மூன்று பட்டணங்களைப் பிரித்துவைக்கக்கடவாய்" (உபா 19:1,2) என்று சொல்லுகிறார்.

ஒருவன் மற்றவனை கொல்லும்போது, அவனை இதற்கு முன்பு பகைத்திராமல், மனதறியாமல் கொலைசெய்திருப்பான். இது கொலைக்குற்றமாகாது. மற்றவனைக் கொலைசெய்யவேண்டுமென்று ஏற்கெனவே திட்டமிட்டு, பதிவிருந்து இவன் கொலைசெய்யவில்லை. இவன் மற்றவனை எதேச்சையாகவும், மனதறியாமலும் கொலைசெய்திருக்கிறான். இப்படிப்பட்டவனுக்கு மரணதண்டனை கொடுக்கப்படக்கூடாது.

இரத்தப்பழிகாரன் கொலைசெய்தவனை பழிவாங்குவதற்காக தேடுவான். இரத்தத்திற்கு இரத்தம் என்பது பழைய பிரமாணம். அதன் பிரகாரமாக, தன்னுடைய நெருங்கிய இனத்தானை கொலைசெய்தவனை கொன்றுபோடுவதற்காக, இரத்தப்பழிகாரன் முயற்சி செய்வான்.

கொலைசெய்தவனோ திட்டமிட்டு கொலைசெய்யவில்லை. அவனைக் கொலைசெய்யவேண்டுமென்று பதிவிருக்கவுமில்லை. செத்துப் போனவனுக்கும், கொலைசெய்தவனுக்கும் முன்பகை எதுவுமில்லை. இந்தக்கொலை மனதறியாமலும், எதேச்சையாகவும் நடைபெற்றது. ஆனாலும் இரத்தப்பழிகாரன் கொலைசெய்தவனை பழிவாங்கவேண்டுமென்று தேடுவான்.

பிறனை மனதறியாமல் எதேச்சையாய் கொன்றவனுக்கு அடைக்கலம் தேவைப்படுகிறது. இவன் இரத்தப்பழிகாரனுடைய கொலைவெறிக்கு தப்பிக்கவேண்டும். இவனுக்கு அடைக்கலம் கொடுப்பதற்காக, கானான் தேசத்தின் நடுவிலே மூன்று பட்டணங்களை பிரித்து வைக்கவேண்டுமென்று மோசே சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் சுதந்தரிக்கப்போகிற கானான் தேசத்தை மூன்று பங்காக பகுக்கவேண்டும். இவை கானான் தேசத்தின் மூன்று மாகாண பிரிவாகும். ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு அடைக்கலப்பட்டணத்தை பிரித்தெடுக்கவேண்டும். இந்தப் பட்டணம் அந்த மாகாணத்தின் நடுவிலிருக்கவேண்டும்.

மற்றவன்மீது முன் பகையில்லாமல், மனதறியாமல் எதேச்சையாய் அவனைக் கொன்றுபோட்டவன், தன்னுடைய மாகாணத்திலுள்ள அடைக்கலப்பட்டணத்திலே ஓடி வந்து அடைக்கலம் பெற்றுக்கொள்ளும்படியாக, இந்தப் பட்டணம் அந்த மாகாணத்தின் நடுவில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

"கொலைசெய்தவன் எவனும் அங்கே ஓடிப்போகும்படி உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சுதந்தரிக்கப்பண்ணப் போகிற உன் தேசத்தின் எல்லையை நீ மூன்று பங்காகப் பகுத்து அதற்கு வழியை உண்டுபண்ணக்கடவாய்" (உபா 19:3) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

ஒவ்வொரு அடைக்கலப் பட்டணத்திற்கும் நல்ல பாதை இருக்க வேண்டும். இஸ்ரவேலின் மூப்பர்கள் அந்தப் பாதையைச் செப்பனிட்டு வைத்திருக்க வேண்டும். கொலைசெய்தவன் அடைக்கலப் பட்டணத்தை நோக்கி ஓடி வரும்போது, அவனுக்கு பாதையில் எந்தவித தடையும் இருக்கக்கூடாது. ஆகையினால் அடைக்கலப் பட்டணத்திற்குப் போகும் பாதைகள் அகலமாயிருக்கும். மனதறியாமல் கொன்றவன் தப்பித்துப் போவதற்கு வழி உண்டாகும். பாதை சரியாக இல்லையென்றால், பழிவாங்குகிறவன் இவனைத் துரத்தி வந்து கொன்றுபோடுவான்.

இஸ்ரவேல் புத்திரர் முதலாவதாகச் சுதந்தரித்துக் கொண்ட பகுதி யோர்தானுக்கு அக்கரையில் கிழக்கு பகுதியில் உள்ளது. அதை ஏற்கெனவே இஸ்ரவேலின் இரண்டரை கோத்திரத்தாருக்குப் பங்குவீதம் பிரித்துக் கொடுத்து விட்டார்கள். அந்தப் பகுதியில் மூன்று பட்டணங்கள் அடைக்கலப் பட்டணங்களாக ஏற்கெனவே தெரிவு செய்யப்பட்டு விட்டன. கானான் தேசம் முழுவதும் சுதந்தரிக்கப்பட்ட பின்பு இவற்றோடு மேலும் மூன்று அடைக்கலப் பட்டணங்கள் சேர்க்கப்படவேண்டும். (உபா 19:1-4,7-10).

பிறனை திட்டமிட்டு, முன்பகையோடு, பதிவிருந்து கொலைசெய்தவனுக்கு, அடைக்கலப்பட்டணத்திலே அடைக்கலம் கொடுக்கப்படுவதில்லை. இவன் கொலைகாரன். ஆகையினால் இரத்தப்பழிகாரன் இவனைக் கொலைசெய்யலாம்.

அடைக்கலப்பட்டணத்திலே யார் அடைக்கலம் பெற்றுக்கொள்ளலாம் என்றும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. "கொலைசெய்து அங்கே ஓடிப்போய், உயிரோடிருக்கத்தக்கவன் யாரென்றால்: தான் முன்னே பகைத்திராத பிறனொருவனை மனதறியாமல் கொன்றவன்தானே" (உபா 19:4) என்று மோசே சொல்லுகிறார்.

இப்படிப்பட்டவர்களுக்குத்தான் அடைக்கலப் பட்டணம் பாதுகாப்பாக இருக்கும். (உபா 19:4-6). துணிகரமாகப் பிறனைக் கொன்றுபோட்டவனைப் பழிவாங்குகிறவன் கையில் ஒப்புக்கொடுத்துவிட வேண்டும். (உபா 19:11-13). மனதறியாமல் கொன்றவன் அடைக்கலப் பட்டணத்தில் பிரதான ஆசாரியனின் மரணம் வரையிலும் அங்கு தங்கியிருக்க வேண்டும். அதற்குப் பின்பு, அவன் தன் வீட்டிற்குத் திரும்பிச் செல்லலாம். (எண் 35:28). யோர்தானின் இருபுறங்களிலும் அடைக்கலப் பட்டணங்கள் இருக்கிறது (உபா 4:41-49; எண் 35; யோசு 20).

பிறனை முன் பகையில்லாமல், தன் மனதறியாமல் எதேச்சையாக கொன்றுபோட்ட ஒரு சம்பவத்தைப்பற்றி மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். இது ஒரு கற்பனை சம்பவம். இதுபோன்ற சம்பவங்களில், பிறனைக் கொன்றுபோட்டவன், இரத்தப்பழிகாரனுடைய கைக்கு தப்பித்து, அடைக்கலப்பட்டணத்திலே அடைக்கலம் பெற்றுக்கொள்ளலாம்.

மோசே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு இந்தக் கற்பனை சம்பவத்தை ஒரு எடுத்துக்காட்டாக சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

"ஒருவன் விறகுவெட்ட மற்றொருவனோடே காட்டில் போய், மரத்தை வெட்டத் தன் கையிலிருந்த கோடாரியை ஓங்கும்போது, இரும்பானது காம்பைவிட்டுக் கழன்று மற்றவன்மேல் பட்டதினால் அவன் இறந்துபோனால், இரத்தப்பழிக்காரன் தன் மனம் எரிகையில், கொலைசெய்தவனை வழி தூரமாயிருக்கிறதினாலே பின்தொடர்ந்து பிடித்து, அவனைக் கொன்றுபோடாதபடிக்கு, இவன் அந்தப் பட்டணங்கள் ஒன்றில் ஓடிப்போய் உயிரோடிருப்பானாக; இவன் அவனை முன்னே பகைக்காதபடியினால், இவன்மேல் சாவுக்கான குற்றம் சுமரவில்லை" (உபா 19:5,6) என்று மோசே சொல்லுகிறார்.

மனதறியாமல் கொன்றவனுக்கு மரண தண்டனை கொடுக்கக்கூடாது. ஏனெனில் இவன் பிறனை வேண்டுமென்று துணிகரமாகக் கொலைபண்ணவில்லை.

இந்த சம்பவத்தில் விறகு வெட்டுகிறவன், தன்னோடுகூட விறகு வெட்டுகிற மற்றொருவனை எதேச்சையாக கொன்றுபோடுகிறான். இருவருக்கும் முன்பகை எதுவுமில்லை. கொலைசெய்தவனும் செத்துப்போனவனை கொலைசெய்யவேண்டுமென்று திட்டமிடவுமில்லை, அதற்காக பதிவிருக்கவுமில்லை. இது எதேச்சையாக நடைபெற்ற ஒரு சம்பவம். அவன் மரத்தை வெட்ட தன் கையிலிருந்த கோடரியை ஓங்கியபோது, இரும்பானது காம்பை விட்டு கழன்று மற்றவன்மேல் விழுந்துவிடுகிறது. அதினால் அவன் இறந்துபோகிறான். காயம்பட்டவன் செத்துப்போகிறான். இது எதேச்சையாக ஏற்பட்ட மரணம். இது கொலை சம்பவமல்ல.

ஆனாலும் இறந்துபோனவனுடைய நெருங்கிய உறவுக்காரருக்கு, அவனைக் கொன்றவன்மீது கோபம் வரும். அவன் மனம் எரியும். தன் உறவினனை கொன்றுபோட்டவனை பழிவாங்கவேண்டுமென்று துடிப்பான். அவன் இரத்தப்பழிகாரனாக இருப்பான். இவன் கொலைசெய்தவனை பின்தொடர்ந்துபோய், அவனைக் கொன்றுபோடவேண்டுமென்று முயற்சி செய்வான். கொலைசெய்தவன் இரத்தப்பழிகாரனுடைய கைக்கு தப்பிக்கவேண்டும். இவன்மேல் சாவுக்கான குற்றம் சுமரவில்லை.

ஒருவன்மீது கொலைக்குற்றம் சுமத்தப்படும்போது, அந்த வழக்கு நியாயாதிபதிகள் முன்பாக விசாரிக்கப்படவேண்டும். ஆனால் இரத்தப்பழிகாரனோ, வழக்கு விசாரணை நடைபெறும் முன்பாகவே, கொலைகாரன்மீது சாவுக்கான குற்றம் சுமத்தப்படும் முன்பாகவே, கொலைசெய்தவனை பின்தொடர்ந்து கொன்றுபோட துடிக்கிறான். அவனுடைய மனம் எரிகிறது. கொலைகாரனுக்கு நீதியின் பிரகாரம் தண்டனை கொடுக்கப்படவேண்டும். இரத்தப்பழிகாரனுடைய மனம் எரிவதன் பிரகாரம் கொலைகாரனுக்கு தண்டனை கொடுக்கப்படக்கூடாது.

பிறனைக் கொலைசெய்வதன் முன்பகையோடு, திட்டமிட்டு, பதிவிருந்து கொலைசெய்தால், அவன் மேல் சாவுக்கான குற்றம் சுமரும். இரத்தப்பழிகாரன் அவனைக் கொன்றுபோடலாம். ஆனால் மோசே இங்கு சொல்லுகிற சம்பவத்தில், மற்றவனைக் கொலைசெய்தவன், முன்பகையில்லாமல், மனதறியாமல் எதேச்சையாக கொன்றுபோட்டவன். இவன்மீது சாவுக்கான குற்றம் சுமரவில்லை. இவன் இரத்தப்பழிகாரனுடைய கைக்கு தப்பிக்கவேண்டும்.

முன்பகையில்லாமல் பிறனை எதேச்சையாய்க் கொன்றுபோட்டவன், இரத்தப்பழிகாரனுடைய கைக்கு தப்பித்து, அடைக்கலப்பட்டணத்திற்கு ஓடிப்போய் அங்கே அடைக்கலம் பெற்றுக்கொள்ளவேண்டும். இரத்தப்பழிகாரன் இவனை அடைக்கலப்பட்டணத்தில் கொல்லக்கூடாது. "இதினிமித்தம் மூன்று பட்டணங்களை உனக்காகப் பிரித்துவைக்கக்கடவாய் என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்" (உபா 19:7) என்று மோசே சொல்லுகிறார்.

கானான் தேசத்திலே மூன்று பட்டணங்களை அடைக்கலப்பட்டணங்களாக உண்டுபண்ணவேண்டுமென்று மோசே சொன்னார். இப்போது அந்த மூன்று பட்டணங்கள் அல்லாமல் இன்னும் மூன்று பட்டணங்களை அடைக்கலப்பட்டணங்களாக ஏற்படுத்த வேண்டும் என்று மோசே சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் தேசத்திலே கானான் தேசத்தின் எல்லையை விஸ்தாரம்பண்ணுகிறார். கர்த்தருடைய ஆளுகையும், அவருடைய உபதேசமும் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே வளர்ந்து பெருகுகிறது. கர்த்தருடைய பிரமாணத்திற்கும், கட்டளைகளுக்கும், கற்பனைகளுக்கும், நியாயங்களுக்கும் கீழ்ப்படிந்து ஜீவிக்கிற ஜனங்கள், கானான் தேசம் முழுவதிலும் விஸ்தாரமாக குடியிருப்பார்கள். இதனால் அவர்களுக்கு அதிகமான அடைக்கலப்பட்டணங்கள் தேவைப்படுகிறது.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, எந்நாளும் அவர்வழிகளில் நடப்பதற்காக, இன்று நான் உனக்குக் கற்பிக்கிற இந்த எல்லாக் கற்பனைகளையும் கைக்கொண்டு அதின்படி செய்து, உன் தேவனாகிய கர்த்தர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்டபடியே, அவர் உன் எல்லையை விஸ்தாரமாக்கி, உன் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று சொன்ன தேசம் முழுவதையும் உனக்குக் கொடுத்தால், அப்பொழுது உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் உன் தேசத்தில் குற்றமில்லாத இரத்தம் சிந்தப்படுகிறதினால் உன்மேல் இரத்தப்பழி சுமராதபடிக்கு, இந்த மூன்று பட்டணங்களும் அல்லாமல் இன்னும் மூன்று பட்டணங்களை ஏற்படுத்தக்கடவாய்" (உபா 19:8-10) என்று சொல்லுகிறார்.

முன்பகையில்லாமல், எதேச்சையாக பிறனை கொன்றுபோட்டவனுக்கு மாத்திரமே அடைக்கலப்பட்டணத்தில் அடைக்கலம் கொடுக்கப்படவேண்டும். ஒருவன் பிறனைப் பகைத்து, அவனுக்கு பதிவிருந்து, அவனுக்கு விரோதமாய் எழும்பி, அவனைக் கொல்லவேண்டுமென்று தீர்மானித்து, திட்டமிட்டு, துணிகரமாய்க் கொன்றுபோட்டால், அவன் ஒரு கொலைகாரன். அவனுக்கு அடைக்கலப்பட்டணத்தில் அடைக்கலம் கொடுக்கக்கூடாது. பிறனை துணிகரமாய்க் கொலைசெய்தவன். கொலைசெய்யப்படவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "ஒருவன் பிறனொருவனைப் பகைத்து, அவனுக்கு பதிவிருந்து, அவனுக்கு விரோதமாய் எழும்பி, அவன் சாகும்படி அவனை அடித்து, இந்தப் பட்டணங்களில் ஒன்றில் ஓடிப்போயிருப்பானாகில், அந்தப் பட்டணத்தில் மூப்பர்கள் ஆள் அனுப்பி, அங்கேயிருந்து அவனைக் கொண்டுவரும்படி செய்து, அவன் சாகும்படிக்கு அவனை இரத்தப்பழி வாங்குகிறவன் கையில் ஒப்புக்கொடுக்கக்கடவர்கள். உன் கண் அவனுக்கு இரங்கவேண்டாம்; குற்றமில்லாத இரத்தப்பழியை இஸ்ரவேலை விட்டு விலக்கக்கடவாய்; அப்பொழுது நீ நன்றாயிருப்பாய்" (உபா 19:11-13) என்று சொல்லுகிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து சபையின் சரித்திரத்தில் மறுமலர்ச்சி காலம் வருகிறது. சபையின் மறுமலர்ச்சி காலத்திற்கு முந்திய காலத்தில், ஒரு சில சபை கட்டிடங்களும், ஒரு சில விசுவாசிகளின் வீடுகளும், அடைக்கலப்பட்டணங்களைப்போல பயன்படுத்தப்பட்டன. இந்த இடங்களில் குற்றவாளிகள் ஓடிவந்து அடைக்கலம் பெறுவார்கள். சபையின் மறுமலர்ச்சி காலத்திற்கு பின்பு, குற்றவாளிகளை விசாரிக்கும் பொறுப்பை அரசாரங்கமே முழுவதுமாக ஏற்றுக்கொண்டது. இஸ்ரவேல் புத்திரருடைய காணியாட்சியிலிருந்து அடைக்கலப்பட்டணங்கள் முற்றிலுமாய் நீக்கப்பட்டன.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு அடைக்கலப்பட்டணங்களைப்பற்றி சொன்ன விவரம் எண்ணாகமம் 35:9-34 ஆகிய வசனப்பகுதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

கர்த்தர் இந்த வசனப்பகுதியில் அடைக்கலப்பட்டணங்களைப்பற்றிய தம்முடைய பிரமாணத்தைச் சொல்லுகிறார். மனுஷனை கொலை செய்வது பாவம். ஆனாலும் சில சமயங்களில், ஒரு சிலர் கைப்பிசகாய் சிலரைக் கொன்றுபோடுகிறார்கள். வேறு சிலரோ கொலை செய்யவேண்டுமென்று தீர்மானம்பண்ணி, ஆயுதத்தினால் மற்றவர்களைக் கொன்றுபோடுகிறார்கள். இவ்வாறு கொல்லுவது கொலைபாதகம். கொலைபாதகன் கொலைசெய்யப்பட வேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

யாரெல்லாம் கொலைபாதகனாயிருக்கிறான் என்று கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

ஒருவன் இருப்பு ஆயுதத்தினால் ஒருவனை வெட்டினதினால் அவன் செத்துப்போனால், வெட்டினவன் கொலைபாதகனாயிருக்கிறான்; கொலைபாதகன் கொலைசெய்யப்படவேண்டும் (எண் 35:16).

ஒருவன் ஒரு கல்லை எடுத்து, சாகத்தக்கதாக ஒருவன்மேல் எறிகிறதினாலே அவன் செத்துப்போனால், கல்லெறிந்தவன் கொலைபாதகனாயிருக்கிறான், அவன் கொலைசெய்யப்படவேண்டும் (எண் 35:17).

ஒருவன் தன் கையில் ஒரு மர ஆயுதத்தை எடுத்து, சாகத்தக்கதாக ஒருவனை அடித்ததினால் அவன் செத்துப்போனால், அடித்தவன் கொலைபாதகனாயிருக்கிறான்; கொலைபாதகன் கொலைசெய்யப்படவேண்டும் (எண் 35:18).

பழிவாங்கவேண்டியவனே கொலைபாதகனைக் கொல்லவேண்டும்; அவனைக் கண்டமாத்திரத்தில் அவனைக் கொன்று போடலாம் (எண் 35:19).

ஒருவன் பகையினால் ஒருவனை விழத்தள்ளினதினாலாயினும், பதுங்கியிருந்து அவன் சாகத்தக்கதாய் அவன்மேல் ஏதாகிலும் எறிந்ததினாலாயினும், அவனைப் பகைத்து, தன் கையினால் அடித்ததினாலாயினும், அவன் செத்துப்போனால், அடித்தவன் கொலைபாதகன்; அவன் கொலைசெய்யப்பட வேண்டும், பழிவாங்குகிறவன் கொலைபாதகனைக் கண்ட மாத்திரத்தில் கொன்றுபோடலாம் (எண் 35:20,21).

பொதுவாக பாவம் செய்தவனுக்காக மீட்கும் பொருள் வாங்கப்படும். இதன் மூலமாக அவனுடைய பாவம் நிவிர்த்தி பண்ணப்படும். ஆனால் கொலைபாதகனிடத்தில் மீட்கும்பொருளை வாங்கக்கூடாது என்றும், கொலைபாதகன் கொலைசெய்யப்படவேண்டும் என்றும், பழிவாங்கவேண்டியவனே கொலைபாதகனை கொல்லவேண்டும் என்றும், அவனைக் கண்ட மாத்திரத்தில் அவனைக் கொன்றுபோடலாம் என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கொலைபாதகனிடத்தில் அவனுக்காக மீட்கும் பொருளை வாங்கக்கூடாது. "நீங்கள் இருக்கும் தேசத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதிருங்கள்; இரத்தம் தேசத்தைத் தீட்டுப்படுத்தும்; இரத்தம் சிந்தினவனுடைய இரத்தத்தினாலேயொழிய, வேறொன்றினாலும் தேசத்திலே சிந்துண்ட இரத்தத்திற்காகப் பாவநிவிர்த்தியில்லை" (எண் 35:33) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எவனாகிலும், ஒரு மனிதனைக் கொன்றுபோட்டால், அப்பொழுது சாட்சிகளுடைய வாக்குமூலத்தின்படியே அந்தக் கொலைபாதகனைக் கொலைசெய்யவேண்டும்; ஒரே சாட்சியைக்கொண்டுமாத்திரம் ஒரு மனிதன் சாகும்படி தீர்ப்புச் செய்யக்கூடாது (எண் 35:30).

சாகிறதற்கேற்ற குற்றஞ்சுமந்த கொலைபாதகனுடைய ஜீவனுக்காக இஸ்ரவேல் புத்திரர் மீட்கும்பொருளை வாங்கக்கூடாது; அவன் தப்பாமல் கொலைசெய்யப்பட வேண்டும் (எண் 35:31).

ஒருவன் கைப்பிசகாய் ஒருவனைக் கொன்றுபோட்டால் அவன் கொலைபாதகனல்ல. அவனை பழிவாங்கக்கூடாது.

கொலைசெய்தவனையும் பழிவாங்குகிறவனையும் சபையார் இந்த நியாயப்படி விசாரிக்கவேண்டும். கொலைசெய்தவனைப் பழிவாங்குகிறவனுடைய கைக்குத் தப்புவித்து, அவன் ஓடிப்போயிருந்த அடைக்கலப்பட்டணத்துக்கு அவனைத் திரும்பப் போகும்படி செய்ய வேண்டும்; பரிசுத்ததைலத்தினால் அபிஷேகம் பெற்ற பிரதான ஆசாரியன் மரணமடையுமட்டும் கொலைசெய்தவன் அடைக்கலப்பட்டணத்திலே இருக்கலாம் (எண் 35:24,25).

பகை ஒன்றும் இல்லாமல், கைப்பிசகாய் ஒருவனைக் கொன்றுபோடும் சம்பவம் பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

ஒருவன் பகையொன்றும் இல்லாமல் சடுதியில் ஒருவனைத் தள்ளி விழப்பண்ணினதினாலாயினும், பதுங்கியிராமல் யாதொரு ஆயுதத்தை அவன்மேல் படஎறிந்ததினாலாயினும், அவனுக்குப் பகைஞனாயிராமலும் அவனுக்குத் தீங்கு செய்ய நினையாமலும் இருக்கையில், ஒருவனைக் கொன்று போடத்தக்க ஒரு கல்லினால் அவனைக் காணாமல் எறிய, அது அவன்மேல் பட்டதினாலாயினும், அவன் செத்துப்போனால், அப்பொழுது கொலைசெய்தவனையும் பழிவாங்குகிறவனையும் சபையார் இந்த நியாயப்படி விசாரிக்கவேண்டும் (எண் 35:22-24).

கர்த்தர் அடைக்கலப்பட்டணங்களைப் பற்றிய தம்முடைய பிரமாணத்தை மோசேயினிடத்தில் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நீங்கள் யோர்தானைக் கடந்து, கானான் தேசத்தில் பிரவேசிக்கும்போது, கைப்பிசகாய் ஒருவனைக் கொன்று போட்டவன் ஓடிப்போயிருக்கத்தக்க அடைக்கலப்பட்டணங்களாகச் சில பட்டணங்களைக் குறிக்கக்கடவீர்கள்" (எண் 35:10,11) என்று சொல்லுகிறார்.

கொலைசெய்தவன் நியாயசபையிலே நியாயம் விசாரிக்கப்படுமுன் சாகாமல், பழிவாங்குகிறவன் கைக்குத்தப்பிப்போயிருக்கும்படி, அவைகள் இஸ்ரவேல் புத்திரருக்கு உங்களுக்கு அடைக்கலப்பட்டணங்களாய் இருக்கவேண்டும் (எண் 35:12).

கர்த்தர் ஆறு அடைக்கலப்பட்டணங்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். "நீங்கள் கொடுக்கும் பட்டணங்களில் ஆறு பட்டணங்கள் அடைக்கலத்துக்காக இருக்கவேண்டும்" (எண் 35:13) என்றும், "யோர்தானுக்கு இப்புறத்தில் மூன்று பட்டணங்களையும், கானான்தேசத்தில் மூன்று பட்டணங்களையும் கொடுக்க வேண்டும்" (எண் 35:14) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கைப்பிசகாய் ஒருவனைக் கொன்றவன் எவனோ, அவன் அங்கே ஓடிப்போயிருக்கும்படிக்கு, அந்த ஆறு பட்டணங்களும் இஸ்ரவேல் புத்திரருக்கும், அவர்கள் நடுவே இருக்கும் பரதேசிக்கும் அந்நியனுக்கும் அடைக்கலப்பட்டணங்களாய் இருக்கவேண்டும் (எண் 35:15).

அடைக்கலப்பட்டணத்தில் தங்கியிருக்கிறவனை, கர்த்தருடைய பிரமாணத்தின்படி நியாயம் விசாரிக்கவேண்டும். கொலைசெய்தவனைப் பழிவாங்குகிறவனுடைய கைக்குத் தப்புவித்து, அவன் ஓடிப்போயிருந்த அடைக்கலப்பட்டணத்துக்கு அவனைத் திரும்பப் போகும்படி செய்ய வேண்டும்;

பரிசுத்ததைலத்தினால் அபிஷேகம் பெற்ற பிரதான ஆசாரியன் மரணமடையுமட்டும் அவன் கொலைசெய்தவன் அடைக்கலப்பட்டணத்திலே இருக்கவேண்டும் (எண் 35:25).

ஆனாலும் கொலைசெய்தவன் தான் ஓடிப்போயிருக்கிற அடைக்கலப்பட்டணத்தின் எல்லையை விட்டு வெளிப்பட்டிருக்கும்போது, பழிவாங்குகிறவன் கொலை செய்தவனை அடைக்கலப்பட்டணத்துக்கு வெளியே கண்டுபிடித்துக் கொன்றுபோட்டால், அவன்மேல் இரத்தப்பழி இல்லை (எண் 35:26,27).

கொலைசெய்தவன் பிரதான ஆசாரியன் மரணமடையுமட்டும் அடைக்கலப்பட்டணத்திலிருக்கவேண்டும்; பிரதான ஆசாரியன் மரணமடைந்தபின்பு, தன் சுதந்தரமான காணியாட்சிக்குத் திரும்பிப்போகலாம் (எண் 35:28).

பிரதான ஆசாரியன் பரிசுத்த தைலத்தினால் அபிஷேகம் பெற்றவன். அடைக்கலப்பட்டணங்கள் எல்லாம், லேவியருடைய பட்டணங்களாயிருக்கிறது.

லேவியருக்கு பிரதான ஆசாரியனே கோத்திரத்தலைவராகயிருக்கிறார். அடைக்கலப்பட்டணத்தில் தங்கியிருக்கிற கொலைசெய்தவர்கள், பிரதான ஆசாரியனுடைய நியாயவிசாரிப்பிலும், பாதுகாப்பிலும் இருக்கிறார்கள்.

கர்த்தர் அடைக்கலப்பட்டணங்களைப்பற்றி சொல்லியிருக்கிற பிரமாணங்கள் இஸ்ரவேல் சபையாருடைய வாசஸ்தலங்கள் எங்கும், அவர்களுடைய தலைமுறை தோறும், அவர்களுக்கு நியாயவிதி பிரமாணமாயிருக்கவேண்டும் (எண் 35:29).

கானான் தேசம் கர்த்தருக்கு பரிசுத்தமான தேசம். அந்த தேசத்தை இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்தக்குலைச்சலாக்கக்கூடாது. இரத்தம் தேசத்தைத் தீட்டுப்படுத்தும்; இரத்தம் சிந்தினவனுடைய இரத்தத்தினாலேயொழிய, வேறொன்றினாலும் தேசத்திலே சிந்துண்ட இரத்தத்திற்காகப் பாவநிவிர்த்தியில்லை (எண் 35:33).

"நீங்கள் குடியிருக்கும் என் வாசஸ்தலமாகிய தேசத்தைத் தீட்டுப்படுத்த வேண்டாம்; கர்த்தராகிய நான் இஸ்ரவேல் புத்திரர் நடுவே வாசம்பண்ணுகிறேன்" (எண் 35:34) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்து அடைக்கலப்பட்டணங்கள், புதிய ஏற்பாட்டுக்காலத்தில் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு அடையாளமாயிருக்கிறது என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். அதன் விவரம் வருமாறு:

எபிரெயருக்கு நிருபம் எழுதின ஆசிரியர், இயேசுகிறிஸ்துவிலே நமக்கு வாக்குப்பண்ணப்பட்டிருக்கிற அடைக்கலத்தைப்பற்றி இவ்வாறு எழுதுகிறார்.

"நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார்" (எபி 6:18).

"நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும்" (பிலி 3:9) என்று அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய நிருபத்தில் எழுதியிருக்கிறார்.

கானான் தேசத்திலே நாற்பத்தெட்டு பட்டணங்கள் அடைக்கலப்பட்டணங்களாக நியமிக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் அந்த தேசத்தின் வெவ்வேறு பகுதிகளில் அமைந்திருக்கிறது. மனுஷரைக் கொலை செய்தவன் இஸ்ரவேல் தேசத்தில் வாசம்பண்ணும்படியாக, இந்த அடைக்கலப்பட்டணங்கள் நியமிக்கப்பட்டிருக்கிறது.

பொதுவாக ஒரு அடைக்கலப்பட்டணத்திற்கும், மற்றொரு அடைக்கலப்பட்டணத்திற்கும் இடையிலுள்ள தூரம், அரைநாளில் ஓடி முடிக்கிற தூரமாயிருக்கும். இதனால் மனுஷரைக் கொலைசெய்தவன் விரைவாக ஓடி, தனக்கு அருகாமையிலிருக்கும் ஏதாவது ஒருஅடைக்கலப்பட்டணத்தில் அடைக்கலம் பெற்றுக்கொள்ளலாம்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் அநேக அடைக்கலப்பட்டணங்கள் இருந்தது. ஆனால் புதிய ஏற்பாட்டுக்காலத்திலோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மாத்திரமே நமக்கு அடைக்கலமாக நியமிக்கப்பட்டிருக்கிறார். கிறிஸ்துவானவர் ஒருவரே. ஆனாலும் நாம் எங்கே இருக்கிறோமோ அங்கே, நம்முடைய அடைக்கலமாகிய கிறிஸ்துவானவரும் நம்மோடு கூடயிருக்கிறார். நம்முடைய அடைக்கலம் நமக்கு அருகாமையிலேயே இருக்கிறது. நாம் அடைக்கலம் தேடி எங்கும் ஓடவேண்டிய அவசியமில்லை.

நம்முடைய அடைக்கலமாகிய இயேசுகிறிஸ்து நமக்கு உதவிசெய்ய எப்போதுமே ஆயத்தமாயிருக்கிறார். வார்த்தை நமக்கு அருகாமையிலிருக்கிறது. கிறிஸ்துவானவரே அந்த வார்த்தையாயிருக்கிறார்.

மனுஷனைக் கொலைசெய்தவன் ஏதாவது ஒரு அடைக்கலப்பட்டணத்தில் பாதுகாப்பாயிருப்பான். அதுபோலவே விசுவாசிகள் இயேசுகிறிஸ்துவினிடத்தில் ஓடி வரும்போது, அவருக்குள் ஆறுதலாக அடைக்கலம் பெற்றிருப்பார்கள். அவர்கள் தேவனுடைய கோபத்திற்கும், நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கும் தப்பித்து, இயேசுகிறிஸ்துவின் அடைக்கலத்தில் பாதுகாப்பாயிருப்பார்கள்.

"ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை" (ரோம 8:1).

அடைக்கலப்பட்டணங்களெல்லாம் லேவியருடைய பட்டணங்களாகும். இந்தப் பட்டணங்களில் அடைக்கலம் பெற்றிருக்கிறவர்களுக்கு லேவியர்கள் ஆறுதலான வார்த்தைகளைசொல்லவேண்டும். அவர்களுக்கு நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை உபதேசித்து, அவர்களை உற்சாகப்படுத்தவேண்டும். அடைக்கலம் தேடி வருகிறவர்களை, அடைக்கலப்பட்டணங்களிலுள்ள லேவியர்கள் அன்பாய் வரவேற்று, அவர்களுக்கு ஆதரவு கொடுக்கவேண்டும்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் லேவியர்கள் ஊழியம் செய்ததுபோல, புதிய ஏற்பாட்டுக்காலத்திலே கர்த்தருடைய ஊழியக்காரர்கள் பாவிகள் மத்தியிலே ஊழியம் செய்கிறார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடத்தில் வருமாறு, ஊழியக்காரர்கள் பாவிகளை அன்பாய் அழைக்கிறார்கள். கிறிஸ்துவினிடத்தில் வருவதற்கு ஊழியக்காரர்கள் பாவிகளுக்கு உதவிசெய்கிறார்கள். இயேசுகிறிஸ்துவில் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிற கிருபைகளையும் இரக்கங்களையும், ஊழியக்காரர்கள் பாவிகளுக்கு எடுத்து சொல்லி, அவர்களை கிறிஸ்துவிடத்தில் அழைத்து வருகிறார்கள்.

கானான் தேசத்திலே கர்த்தர் நியமித்திருக்கிற அடைக்கலப்பட்டணங்கள், இஸ்ரவேல் புத்திரருக்கும், அவர்கள் நடுவே இருக்கும் பரதேசிக்கும், அந்நியனுக்கும் அடைக்கலப்பட்டணங்களாயிருக்கிறது (எண் 35:15). அந்நியரும் பரதேசிகளும் இஸ்ரவேல் தேசத்தின் காணியாட்சிக்கு புறம்பானவர்களாகயிருந்தாலும், அவர்களும் அடைக்கலப்பட்டணங்களின் ஆசீர்வாதங்களை அனுபவிக்கலாம்.

அதுபோலவே இயேசுகிறிஸ்துவிலும் பட்சபாதம் எதுவுமில்லை. கிறிஸ்துவுக்குள்ளே யூதர் என்றும் கிரேக்கர் என்றும் வித்தியாசமில்லை. தம்மிடத்தில் அடைக்கலம் தேடி வருகிற யாரையும் கிறிஸ்துவானவர் புறம்பே தள்ளுவதில்லை.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு அடைக்கலப்பட்டணங்களைப்பற்றி சொன்ன விவரம் உபாகமம் 4:41-43 ஆகிய வசனப்பகுதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

மோசே யோர்தானுக்கு இப்புறத்திலே மூன்று அடைக்கலப்பட்டணங்களை ஏற்படுத்துகிறார். அவற்றில் ஒன்று ரூபன் புத்திரருடைய சுதந்தரத்திலும், மற்றொன்று காத் புத்திரருடைய சுதந்தரத்திலும், வேறொன்று மனாசேயின் பாதிக்கோத்திரத்தாருடைய சுதந்தரத்திலும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

முற்பகையின்றிக் கைப்பிசகாய் பிறனைக் கொன்றவன் அடைக்கலப்பட்டணங்களில் ஒரு பட்டணத்தில் தப்பியோடிப் போய்ப் பிழைத்திருக்கும்படியாக மோசே யோர்தானுக்கு இப்புறத்திலே மூன்று அடைக்கலப்பட்டணங்களை ஏற்படுத்தியிருக்கிறார் (உபா 4:41).

ரூபனியரைச் சேர்ந்த சமபூமியாகிய வனாந்தரத்திலுள்ள பேசேரும், காத்தியரைச் சேர்ந்த கீலேயாத்திலுள்ள ராமோத்தும், மனாசேயரைச் சேர்ந்த பாசானிலுள்ள கோலானுமாகிய, மூன்று பட்டணங்களை மோசே யோர்தானுக்கு இப்புறத்தில் சூரியோதய திசையிலே அடைக்கலப்பட்டணங்களாக ஏற்படுத்தி இருக்கிறார் (உபா 4:42,43).

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசித்தபோது, யோசுவா இஸ்ரவேல் ஜனத்தாருக்கு அவர்களுடைய சுதந்தரவீதங்களை பங்கிட்டு கொடுக்கிறார். அப்போது மோசே தனக்கு சொன்ன பிரகாரம், யோசுவா கானான் தேசத்தில் அடைக்கலப்பட்டணங்களை ஏற்படுத்துகிறார். இந்த விவரம் யோசுவா 20-ஆவது அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திலே பிரவேசித்த பின்பு, அவர்கள் என்னென்ன காரியங்களை செய்யவேண்டுமென்று, மோசே தன்னுடைய பிரமாணத்தில் சொல்லியிருக்கிறார். அதில் ஒன்று அடைக்கலப்பட்டணங்களைப்பற்றிய பிரமாணமாகும். கர்த்தரே இந்தப் பிரமாணத்தை மோசேக்கு கொடுத்தார்.

கர்த்தர் இப்போது மறுபடியுமாய், அடைக்கலப்பட்டணங்களைப்பற்றிய பிரமாணத்தை யோசுவாவுக்கு நினைவுபடுத்துகிறார். "அறியாமல் கைப்பிசகாய் ஒருவனைக் கொன்றவன் ஓடிப்போயிருக்கும்படி; நான் மோசேயைக் கொண்டு உங்களுக்குக் கற்பித்த அடைக்கலப்பட்டணங்களை உங்களுக்கு ஏற்படுத்திக்கொள்ளுங்கள்" என்று கர்த்தர் யோசுவாவிடம் சொல்லுகிறார். கர்த்தர் தனக்கு சொன்னதை யோசுவா இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரில் சிலர் அறியாமல் கைபிசகாய் ஒருவனை கொன்றுபோடுவதற்கு வாய்ப்புள்ளது. இவனுடைய கை குற்றம் செய்தது. ஆனால் இவனுடைய இருதயமோ குற்றம் செய்யவில்லை. இவன் கைபிசகாய் அறியாமல் தப்பிதம் செய்தவன். இப்படிப்பட்டவனுடைய இரத்தம் தேசத்தில் சிந்தப்படக்கூடாது. யாரும் இவனை பழிவாங்கிவிடக்கூடாது.

அறியாமல் கைபிசகாய் யாராவது ஒருவன், மற்றவனைக் கொன்றுபோட்டால், அவன் அடைக்கலப்பட்டணத்திற்கு ஓடி, அங்கே அடைக்கலம் தேடிக்கொள்ளவேண்டும். இதற்காக இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்கு அடைக்கலப்பட்டணங்களை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். இந்த அடைக்கலப்பட்டணங்கள், அவர்களுக்கு, இரத்தப்பழி வாங்குகிறவனுடைய கைக்குத் தப்பிப் போயிருக்கத்தக்க அடைக்கலமாயிருக்கும் (யோசு 20:3).

"கொலைசெய்தவன் எவனும் அங்கே ஓடிப்போகும்படி உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சுதந்தரிக்கப்பண்ணப் போகிற உன் தேசத்தின் எல்லையை நீ மூன்று பங்காகப் பகுத்து அதற்கு வழியை உண்டுபண்ணக்கடவாய்" (உபா 19:3).

அடைக்கலப்பட்டணங்களில் ஒன்றிற்கு ஓடிவருகிறவன், பட்டணத்தின் ஒலிமுகவாசலில் நின்றுகொண்டு, அந்தப் பட்டணத்தினுடைய மூப்பரின் செவிகள் கேட்க, தன் காரியத்தைச் சொல்லவேண்டும்; அப்பொழுது அவர்கள் அவனைத் தங்களிடத்தில் பட்டணத்துக்குள்ளே சேர்த்துக்கொண்டு, தங்களோடே குடியிருக்க அவனுக்கு இடம் கொடுக்க வேண்டும் (யோசு 20:4). இது கர்த்தர் மோசேயைக்கொண்டு இஸ்ரவேல் புத்திரருக்கு கற்பித்த கட்டளை.

அடைக்கலப்பட்டணங்கள் எல்லாமே லேவியருடைய பட்டணங்களாயிருக்கிறது. ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர், லேவியருக்கு பட்டணங்களை பங்குவீதமாக கொடுத்த பின்பே, அந்தப் பட்டணங்களிலிருந்து அவர்கள் தங்களுக்கு அடைக்கலப்பட்டணங்களை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு இளைப்பாறும் பட்டணங்களைக் கொடுக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பட்டணங்களில் இளைப்பாறும்போது, அவர்களுக்கு அடைக்கலப்பட்டணங்களும் தேவைப்படுகிறது. தப்பி ஓடி வருகிறவர்களுக்கு இந்தப் பட்டணங்கள் அடைக்கலமாயிருக்கும். ஒருவேளை இன்று இளைப்பாறும் பட்டணத்தில் தாபரிக்கிறவன், நாளை அடைக்கலப்பட்டணத்திற்கு ஓடி வந்து, அடைக்கலம் பெறவேண்டியது வரலாம்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம், கர்த்தருடைய ஆவிக்குரிய இஸ்ரவேலராயிருக்கிறோம். நம் எல்லோருக்கும், கிறிஸ்துவானவர் அடைக்கலமாயிருக்கிறார். பரலோகமே நமக்கு இளைப்பாறுகிற ஸ்தலம். நம்முடைய நித்திய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கு முன்பாக, நாம் இந்தப் பூமியில் வாசம் பண்ணும் காலம் வரையிலும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, நமக்கு அடைக்கலமாயிருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் அடைக்கலப்பட்டணங்களை எப்படி பயன்படுத்தவேண்டும் என்றும் கர்த்தர் கட்டளைகொடுக்கிறார்.

"பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நீங்கள் யோர்தானைக் கடந்து, கானான் தேசத்தில் பிரவேசிக்கும்போது, கைப்பிசகாய் ஒருவனைக் கொன்று போட்டவன் ஓடிப்போயிருக்கத்தக்க அடைக்கலப்பட்டணங்களாகச் சில பட்டணங்களைக் குறிக்கக்கடவீர்கள். கொலைசெய்தவன் நியாயசபையிலே நியாயம் விசாரிக்கப்படுமுன் சாகாமல், பழிவாங்குகிறவன் கைக்குத்தப்பிப்போயிருக்கும்படி, அவைகள் உங்களுக்கு அடைக்கலப்பட்டணங்களாய் இருக்கக்கடவது" (எண் 35:9-12).

"நீங்கள் கொடுக்கும் பட்டணங்களில் ஆறு பட்டணங்கள் அடைக்கலத்துக்காக இருக்கவேண்டும். யோர்தானுக்கு இப்புறத்தில் மூன்று பட்டணங்களையும், கானான்தேசத்தில் மூன்று பட்டணங்களையும் கொடுக்க வேண்டும்; அவைகள் அடைக்கலப்பட்டணங்களாம். கைப்பிசகாய் ஒருவனைக் கொன்றவன் எவனோ, அவன் அங்கே ஓடிப்போயிருக்கும்படிக்கு, அந்த ஆறு பட்டணங்களும் இஸ்ரவேல் புத்திரருக்கும் உங்கள் நடுவே இருக்கும் பரதேசிக்கும் அந்நியனுக்கும் அடைக்கலப்பட்டணங்களாய் இருக்கவேண்டும்" (எண் 35:13-15).

அடைக்கலப்பட்டணத்தில் அடைக்கலம் பெற்றிருக்கிறவனை, பழிவாங்குகிறவன் தொடர்ந்துவந்தால், அவன் பிறனை முற்பகையின்றி அறியாமல் கொன்றதினால், அவனை இவன் கையில் ஒப்புக்கொடாதிருக்கவேண்டும் (யோசு 20:5).

அடைக்கலப்பட்டணத்தில் அடைக்கலம் பெற்றிருக்கிறவன், நியாயம் விசாரிக்கும் சபைக்கு முன்பாக நிற்கும்வரைக்கும், அந்நாட்களிலிருக்கிற பிரதான ஆசாரியன் மரணமடையும்வரைக்கும், அவன் அந்தப் பட்டணத்திலே குடியிருக்கக்கடவன்; பின்பு கொலைசெய்தவன் தான் விட்டோடிப்போன தன் பட்டணத்திற்கும் தன் வீட்டிற்கும் திரும்பிப்போகவேண்டும் (யோசு 20:6).

அடைக்கலப்பட்டணத்தில் அடைக்கலம் பெற்றிருக்கிறவனுக்கு, அந்தப் பட்டணம் அவனுடைய வாசஸ்தலம் போலவே இருக்கும். அவன் அடைக்கலப்பட்டணத்திலே தன்னை பழிவாங்குகிறவனுடைய கைக்கு தப்பிக்கலாம். ஆனாலும் தன்னை நியாயம் விசாரிக்கும் சபைக்கு முன்பாக அவனால் தப்பிக்க முடியாது.

கைப்பிசகாய் ஒருவனைக் கொன்றவன் அடைக்கலப் பட்டணத்தில் தங்கியிருக்க வேண்டும். பிரதான ஆசாரியன் மரணமடையும் வரையிலும் அங்கு தங்கியிருக்க வேண்டும். அதன் பின்பு, அவன் தன் ஊருக்குப் போய் தன்னுடைய வேலைகளைக் கவனிக்கலாம். இந்தக் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாக இவன் அடைக்கலப் பட்டணத்தை விட்டு வெளியே போயிருக்கும்போது பழிவாங்குகிறவன் இவனைக் கொன்று போட்டால் அவன்மீது குற்றப்பழி சுமத்தப்படமாட்டாது. (எண் 35).

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திலே, கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம், அடைக்கலப்பட்டணங்களை ஏற்படுத்துகிறார்கள். "ஏற்படுத்துதல்" என்னும் வார்த்தைக்கு, "பரிசுத்தப்படுத்துதல்" என்று பொருள்படும் எபிரெய வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் அடைக்கலப்பட்டணங்களை பரிசுத்தப்படுத்துகிறார்கள்.

அடைக்கலப்பட்டணங்களை ஏற்படுத்தியபோது, அதற்காக விசேஷித்த சடங்காச்சாரங்களோ, பாரம்பரிய சுத்திகரிப்பு முறைமைகளோ பின்பற்றப்படவில்லை. மோசே கர்த்தருடைய வார்த்தையை இஸ்ரவேல் புத்திரருக்கு சொன்னார். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அவர் கட்டளையிட்ட பிரகாரம், ஆறுபட்டணங்களை, அடைக்கலப்பட்டணங்களாக ஏற்படுத்துகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் ஏகமனதோடு, அடைக்கலப் பட்டணங்களை தெரிவுசெய்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ஏற்படுத்தின அடைக்கலப்பட்டணங்களின் விவரம் வருமாறு :

1. நப்தலியின் மலைத்தேசமான கலிலேயாவிலுள்ள கேதேஸ். (யோசு 20:7)
2. எப்பிராயீமின் மலைத்தேசத்திலுள்ள சீகேம்.
3. யூதாவின் மலைத்தேசத்திலுள்ள எபிரோனாகிய கீரியாத் அர்பா
4. யோர்தானுக்கு அக்கரையான கிழக்கிலே ரூபன் கோத்திரத்திற்கு இருக்கும் சமபூமியின் வனாந்தரத்திலுள்ள பேசேர். (யோசு 20:8)
5. யோர்தானுக்கு அக்கரையான கிழக்கிலே காத் கோத்திரத்திற்கு இருக்கும் கீலேயாத்திலுள்ள ராமோத்.
6. யோர்தானுக்கு அக்கரையான கிழக்கிலே மனாசே கோத்திரத்திற்கு இருக்கும் பாசானிலுள்ள கோலான்.

ஆறு அடைக்கலப்பட்டணங்களும், யோர்தானுக்கு அக்கரையிலே மூன்றும், இக்கரையிலே மூன்றுமாக பிரிந்திருக்கிறது. ஒருவனை கைபிசகாய் அறியாமல் தப்பித்து ஓடுகிறவன், அடைக்கலப்பட்டணத்திற்கு, அதிக சிரமமில்லாமல் எளிதாக ஓடிவரும் வண்ணமாக, இந்த அடைக்கலப்பட்டணங்கள் கானான் தேசத்திலேஅங்கங்கேஏற்படுத்தப்பட்டிருக்கிறது. விரைவாக ஓடி வருகிறவன், கானான் தேசத்தின் எந்தப் பகுதியிலிருந்து ஓடி வந்தாலும், இந்த அடைக்கலப்பட்டணத்திற்கு ஆறு மணி நேரத்திற்குள் ஓடி வந்துவிடலாம்.

அடைக்கலப்பட்டணங்கள் எல்லாமே லேவியரின் பட்டணங்களாகும். லேவியர் கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்கள். கர்த்தர் லேவியரைக் கனம்பண்ணுகிறார். கர்த்தருடைய தெய்வீக திட்டத்தின் பிரகாரமாக, லேவியர் வழக்குகளை நியாயம் விசாரிக்கிறார்கள். அடைக்கலப்பட்டணத்தில், அடைக்கலம் பெற்றிருக்கிறவன், அந்நாட்களில் இருக்கிற பிரதான ஆசாரியன் மரணமடையும் வரைக்கும், அவன் அந்தப் பட்டணத்தில் குடியிருக்கலாம். அடைக்கலப்பட்டணத்தை தன்னுடைய சொந்த பட்டணம் போல பாவித்து, அங்கே வாசம்பண்ணலாம். லேவியரிடம் கர்த்தருடைய பிரமாணங்களைப்பற்றிய உபதேசங்களைக் கேட்டு தெரிந்துகொள்ளலாம். அறியாமல் கைபிசகாய்க் கொன்றவன், ஊழியக்காரருடைய உபதேசங்களைக் கேட்டு, தன்னுடைய காலத்தை பிரயோஜனப்படுத்திக்கொள்ளலாம்.

அடைக்கலப்பட்டணங்கள் எல்லாமே மலைகளின்மேல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எங்கேயிருந்து பார்த்தாலும், ஓடி வருகிறவனுடைய கண்களுக்கு இந்தப் பட்டணங்கள் பிரத்தியட்சமாய்த் தெரியும். அவர்களால் தூரத்திலிருந்துகூட அடைக்கலப்பட்டணங்களைப் பார்க்க முடியும். அடைக்கலப்பட்டணங்களுக்கு அருகாமையில் வரும்போது, ஓடி வருகிறவன் மலையின்மீது ஏறவேண்டும். ஆனாலும் அவன் அடைக்கலப்பட்டணத்திற்கு அருகாமையில் வந்துவிட்டதினால், மலையில் ஏறுவதை சிரமமாக நினைக்கமாட்டான். தன்னுடைய பாதுகாப்புக்காக மலையிலே வேகமாக ஏறுவான்.

அடைக்கலப்பட்டணங்களின் பெயர்களுக்கு ஆவிகுரிய அர்த்தங்கள் உள்ளது. இந்த அர்த்தங்கள் நம்முடைய அடைக்கலமாகிய கிறிஸ்துவோடு தொடர்புடையது.

கேதேஸ் என்னும் பெயருக்கு பரிசுத்தம் என்று பொருள். நம்முடைய அடைக்கலமாகிய இயேசுகிறிஸ்து பரிசுத்தமானவர். சீகேம் என்னும் பெயருக்கு புயம் அல்லது தோள் என்று பொருள். இந்த உலகத்தின் ஆளுகை இயேசுகிறிஸ்துவினுடைய தோளின் மேலிருக்கிறது.

எபிரோன் என்னும் பெயருக்கு ஐக்கியம் என்று பொருள். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோடு நாம் ஐக்கியமாயிருக்கவேண்டும். இதற்காகவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

பேசேர் என்னும் பெயருக்கு அரண் அல்லது கோட்டை என்று பொருள். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, நமக்கு அரணாயும் கோட்டையாயும் இருக்கிறார்.

ராமோத் என்னும் பெயருக்கு உயர்ந்தவர் அல்லது உயர்த்தப்பட்டவர் என்று பொருள். பிதாவாகிய தேவன், தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை, தம்முடைய வலதுகரத்தினால் உயர்த்தினார்.

கோலான் என்னும் பெயருக்கு சந்தோஷம் என்று பொருள். கிறிஸ்துவுக்குள்ளே எல்லா பரிசுத்தவான்களும் நீதிமான்களாக்கப்படுகிறார்கள். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் அவருக்குள்ளே மகிமையடைவார்கள்.

அடைக்கலப்பட்டணங்களைத் தவிர, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியிலுள்ள கொம்புகளும் இஸ்ரவேல் புத்திரருக்கு அடைக்கலம் பெறும் ஸ்தலமாயிருக்கிறது. கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி எங்கே இருக்கிறதோ, அங்கே அந்தப் பெட்டியில் கொம்புகளும் இருக்கும். அதுவும் இஸ்ரவேல் புத்திரருக்கு அடைக்கலப்பட்டணங்களைப்போல, அடைக்கலம் பெறும் இடமாகும்.

அறியாமல் கைபிசகாய் ஒருவனை கொன்றவனுக்கு மாத்திரமே அடைக்கலமுண்டு. ஒருவன் துணிகரமாய்ப் பாவம் செய்து, வேண்டுமென்றே ஒருவனைக் கொன்றுபோட்டால், அவனுக்கு அடைக்கலமில்லை. அவன் கொல்லப்படவேண்டும்.

"ஒருவன் பிறனுக்கு விரோதமாகச் சதிமோசஞ்செய்து, அவனைத் துணிகரமாய்க் கொன்றுபோட்டால், அவனை என் பலிபீடத்திலிருந்தும் பிடித்துக்கொண்டு போய்க் கொலைசெய்யவேண்டும்" (யாத் 21:14).

நியாயவிசாரிப்பு
உபா 19:14-21

உபா 19:14. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் தேசத்தில் உன்கைவசமாயிருக்கும் காணியாட்சியிலே முன்னோர்கள் குறித்திருக்கிற பிறனுடைய எல்லையை ஒற்றிப்போடாயாக.

உபா 19:15. ஒருவன் எந்த அக்கிரமத்தையாவது எந்தப் பாவத்தையாவது செய்தான் என்று சொல்லப்பட்டால், ஒரே சாட்சியினால் நியாயந்தீர்க்கக்கூடாது; இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே காரியம் நிலைவரப்படவேண்டும்.

உபா 19:16. ஒருவன்மேல் ஒரு குற்றத்தைச் சுமத்தும்படி, ஒரு பொய்ச்சாட்சிக்காரன் அவன்மேல் சாட்சிசொல்ல எழும்பினால்,

உபா 19:17. வழக்காடுகிற இருவரும் கர்த்தருடைய சந்நிதியில் அக்காலத்தில் இருக்கும் ஆசாரியர்களுக்கும் நியாயாதிபதிகளுக்கும் முன்பாக வந்து நிற்பார்களாக.

உபா 19:18. அப்பொழுது நியாயாதிபதிகள் நன்றாய் விசாரணைசெய்யக்கடவர்கள்; சாட்சி கள்ளச்சாட்சி என்றும், தன் சகோதரன் மேல் அபாண்டமாய்க் குற்றஞ்சாற்றினான் என்றும் கண்டால்,

உபா 19:19. அவன் தன் சகோதரனுக்குச் செய்ய நினைத்தபடியே அவனுக்குச் செய்யக்கடவீர்கள்; இவ்விதமாய்த் தீமையை உன் நடுவிலிருந்து விலக்குவாயாக.

உபா 19:20. மற்றவர்களும் அதைக் கேட்டு பயந்து, இனி உங்களுக்குள்ளே அப்படிப்பட்ட தீமையைச் செய்யாதிருப்பார்கள்.

உபா 19:21. உன் கண் அவனுக்கு இரங்கவேண்டாம்; ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால், கொடுக்கப்படவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் பிறர்பொருளை திருடக்கூடாது. "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் தேசத்தில் உன்கைவசமாயிருக்கும் காணியாட்சியிலே முன்னோர்கள் குறித்திருக்கிற பிறனுடைய எல்லையை ஒற்றிப்போடாயாக" (உபா 19:14) என்று மோசே சொல்லுகிறார்.

கிழக்கு தேசங்களில் நிலங்களின் எல்லைகளுக்கு வேலிகள் அமைக்கப்பட்டிருக்காது. எல்லையைக் குறிப்பதற்கு சிறு கற்களைப் பயன்படுத்தியிருப்பார்கள். அவற்றிற்கு எல்லைக்கல் என்று பெயர். ஒருவனுடைய எல்லைக்கல்லை மற்றவர்கள் வஞ்சனையாக ஒற்றிப்போடக்கூடாது. அதாவது அகற்றிப் போடக்கூடாது.

தன்னுடைய சொந்த ஆதாயத்திற்காக எல்லைக்கல்லை ஒற்றிப் போட்டு, பிறனுடைய நிலத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அபகரித்துக் கொள்ளக்கூடாது. இது துன்மார்க்கரின் செயல். (யோபு 24:2-4) நியாயப்பிரமாணம் இவர்களைச் சபிக்கிறது. (உபா 27:17) மோசேயின் பிரமாணம் எல்லைக்குறியை ஒற்றிப்போடுவதைத் தடைபண்ணுகிறது. (உபா 19:14; நீதி 22:28; நீதி 23:10) இதே பிரமாணம் இன்றும் வழக்கில் உள்ளது.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, இஸ்ரவேலின் ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் சுதந்தரம் பங்கிட்டு கொடுக்கப்படும். இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய சுதந்தரங்களில் எல்லைக்குறியை நட்டியிருப்பார்கள். இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தங்கள் சுதந்தரத்தில், சமாதானமாய் குடியிருப்பதற்காக, அவர்களுக்கு எல்லைக்குறி போடப்பட்டிருக்கிறது. எல்லைக்குறிக்குட்பட்டிருக்கிற இடம் மாத்திரமே அவர்களுக்கு சொந்தமானது.

ஒரு சிலர் பிறருடைய காணியாட்சியை அநியாயமாய் அபகரிக்கும் வண்ணமாக, அவர்களுடைய எல்லைக்குறியை ஒற்றிப்போடுவார்கள். எல்லைக்குறிகளை அழித்துவிடுவார்கள். அல்லது எல்லையைக் குறிப்பதற்காக நட்டப்பட்டிருக்கும் கல்லை சற்று தள்ளி நட்டிவிடுவார்கள். அல்லது எல்லைக்குறியின் கல்லையே அகற்றிப்போடுவார்கள். இந்த எல்லைக்குறி இஸ்ரவேல் புத்திரருடைய முன்னோர்கள் குறித்தது. அவர்கள் முன்னோர்களின் நியாயத்திற்கும், ஆளுகைக்கும் மதிப்பு கொடுத்து, தங்களுடைய தேசத்தின் சட்டங்களுக்கு கீழ்ப்படியவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய காணியாட்சியை உறுதிபண்ணுவதற்காக, தங்களுடைய சுதந்தரங்களை பத்திரங்களில் எழுதி அதை முத்திரையிடுவது வழக்கம். ஒரு சிலர் மற்றவர்களுடைய பத்திரங்களை மாற்றி எழுதிவிடுவார்கள் அல்லது அந்தப் பத்திரங்களையே அழித்துப்போடுவார்கள். பிறருடைய பொருட்கள்மீது ஆசைப்பட்டு, அதை அபகரிக்கும் காரியங்கள் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே காணப்படக்கூடாது.

மற்றவர்கள் தங்களுக்கு அநீதி செய்யும்போது, பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் முறையிடலாம். நியாயவிசாரிப்பு நியாயமாக நடைபெறவேண்டும். அங்கு நீதியான தீர்ப்பு சொல்லப்படவேண்டும். நியாயம் விசாரிக்கப்படும்போது சாட்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். கர்த்தருடைய பிள்ளைகள் பொய்ச்சாட்சி சொல்லக்கூடாது.

"ஒருவன் எந்த அக்கிரமத்தையாவது எந்தப் பாவத்தையாவது செய்தான் என்று சொல்லப்பட்டால், ஒரே சாட்சியினால் நியாயந்தீர்க்கக்கூடாது; இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே காரியம் நிலைவரப்படவேண்டும்" (உபா 19:15) என்று மோசே சொல்லுகிறார்.

ஒருவனுடைய குற்றத்தை நிரூபிப்பதற்கு சாட்சிகள் பலமாயிருக்கவேண்டும். ஒரே ஒரு சாட்சியை மாத்திரம் வைத்து நியாயந்தீர்க்கக்கூடாது. சாட்சி சொல்லுகிறவன் பொய்ச்சாட்சிக்காரனாக இருப்பதற்கும் வாய்ப்புள்ளது. ஆகையினால் இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாய்ப்பினால் காரியம் நிலைவரப்படவேண்டும் என்று மோசே சொல்லுகிறார்.

ஒருவன் சொல்லுகிற சாட்சி பொய்ச்சாட்சி என்பது நிரூபிக்கப்பட்டால், பொய்ச்சாட்சிக்காரனுக்கும் தண்டனை கொடுக்கவேண்டும். குற்றவாளியைத் தண்டிப்பதுபோல பொய்ச்சாட்சிக்காரனையும் தண்டிக்கவேண்டும் என்று மோசே சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

"ஒருவன்மேல் ஒரு குற்றத்தைச் சுமத்தும்படி, ஒரு பொய்ச்சாட்சிக்காரன் அவன்மேல் சாட்சிசொல்ல எழும்பினால், வழக்காடுகிற இருவரும் கர்த்தருடைய சந்நிதியில் அக்காலத்தில் இருக்கும் ஆசாரியர்களுக்கும் நியாயாதிபதிகளுக்கும் முன்பாக வந்து நிற்பார்களாக" (உபா 19:16,17) என்றும்,

"அப்பொழுது நியாயாதிபதிகள் நன்றாய் விசாரணைசெய்யக்கடவர்கள்; சாட்சி கள்ளச்சாட்சி என்றும், தன் சகோதரன் மேல் அபாண்டமாய்க் குற்றஞ்சாற்றினான் என்றும் கண்டால், அவன் தன் சகோதரனுக்குச் செய்ய நினைத்தபடியே அவனுக்குச் செய்யக்கடவீர்கள்; இவ்விதமாய்த் தீமையை உன் நடுவிலிருந்து விலக்குவாயாக" (உபா 19:18,19) என்றும்,

"மற்றவர்களும் அதைக் கேட்டு பயந்து, இனி உங்களுக்குள்ளே அப்படிப்பட்ட தீமையைச் செய்யாதிருப்பார்கள். உன் கண் அவனுக்கு இரங்கவேண்டாம்; ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால், கொடுக்கப்படவேண்டும்" (உபா 19:20,21) என்றும் மோசே சொல்லுகிறார்.

20 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் யுத்தத்திற்கு போவது பற்றியும், அவர்கள் சத்துருக்களோடு யுத்தம்பண்ணுவது பற்றியும் மோசே இந்த அதிகாரத்தில் சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் சத்துருக்களுக்கு எதிராக யுத்தம்பண்ணப்போகும்போது, அவர்கள் தங்களுடைய சுயபலத்தை நம்பாமல், கர்த்தரை நம்பி யுத்தம்பண்ணவேண்டும். அவர்கள் சத்துருக்களைப் பார்த்து பயப்படவும் கலங்கவும் கூடாது *(உபா 20:1-4).*

புது வீட்டைக்கட்டி அதை பிரதிஷ்டைபண்ணாதிருக்கிறவனும், திராட்சத்தோட்டத்தை நாட்டி அதை அனுபவியாதிருப்பவனும், ஒரு பெண்ணை தனக்கு நியமித்து, அவளை விவாகம்பண்ணாதிருப்பவனும் யுத்தத்திற்கு போகக்கூடாது *(உபா 20:5-7).* பயங்காளியும் திடனற்றவனும் யுத்தத்திற்கு போக அனுமதியில்லை *(உபா 20:8,9).*

இஸ்ரவேல் புத்திரர் ஒரு பட்டணத்தின்மேல் யுத்தம்பண்ணப் போகும்போது, அவர்களோடு சமாதான உடன்படிக்கை பண்ணுவதற்கு வாய்ப்பு இருந்தால், சமாதானம்பண்ணவேண்டும். சமாதானமில்லையென்றால், அந்தப் பட்டணத்தை முற்றிக்கைப்போட்டு, அதிலுள்ள புருஷர்களை பட்டயத்தினால் வெட்டிப்போடவேண்டும். ஸ்திரீகளையும் குழந்தைகளையும், மிருகஜீவன்களையும் உயிரோடே வைத்துக்கொள்ளவேண்டும் *(உபா 20:10-15).*

இஸ்ரவேல் புத்திரர் கானானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, அவர்களுடைய பட்டணங்களில் உள்ளவர்கள் எல்லோரையும் உயிரோடே வைக்காமல் சங்காரம்பண்ணவேண்டும் *(உபா 20:16-18).*

இஸ்ரவேல் புத்திரர் ஒரு பட்டணத்தின்மேல் யுத்தம்பண்ணப் போகும்போது, அந்தப் பட்டணத்தில் கனிகொடுக்கிற விருட்சங்களை வெட்டக்கூடாது *(உபா 20:19,20).*

யுத்தத்திற்குபோவது
உபா 20:1-9

உபா 20:1. நீ உன் சத்துருக்களுக்கு எதிராக யுத்தஞ்செய்யப் புறப்பட்டுப் போகையில், குதிரைகளையும் இரதங்களையும், உன்னிலும் பெரிய கூட்டமாகிய ஜனங்களையும் கண்டால், அவர்களுக்குப் பயப்படாயாக; உன்னை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்.

உபா 20:2. நீங்கள் யுத்தஞ்செய்யத் தொடங்கும்போது, ஆசாரியன் சேர்ந்துவந்து, ஜனங்களிடத்தில் பேசி:

உபா 20:3. இஸ்ரவேலரே, கேளுங்கள்; இன்று உங்கள் சத்துருக்களுடன் யுத்தஞ்செய்யப் போகிறீர்கள்; உங்கள் இருதயம் துவளவேண்டாம்; நீங்கள் அவர்களைப் பார்த்துப் பயப்படவும் கலங்கவும் தத்தளிக்கவும் வேண்டாம்.

உபா 20:4. உங்களுக்காக உங்கள் சத்துருக்களோடே யுத்தம்பண்ணவும் உங்களை இரட்சிக்கவும் உங்களோடேகூடப் போகிறவர் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல்லவேண்டும்.

உபா 20:5. அன்றியும் அதிபதிகள் ஜனங்களை நோக்கி: புதுவீட்டைக் கட்டி, அதைப் பிரதிஷ்டை பண்ணாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டுக்குத் திரும்பிப்போகக்கடவன்; அவன் யுத்தத்திலே செத்தால் வேறொருவன் அதைப் பிரதிஷ்டை பண்ணவேண்டியதாகும்.

உபா 20:6. திராட்சத்தோட்டத்தை நாட்டி, அதை அநுபவியாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டுக்குத் திரும்பிப்போகக் கடவன்; அவன் யுத்தத்திலே செத்தால் வேறொருவன் அதை அநுபவிக்கவேண்டியதாகும்.

உபா 20:7. ஒரு பெண்ணைத் தனக்கு நியமித்துக்கொண்டு, அவளை விவாகம்பண்ணாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டுக்குத் திரும்பிப்போகக்கடவன்; அவன் யுத்தத்திலே செத்தால் வேறொருவன் அவளை விவாகம்பண்ண வேண்டியதாகும் என்று சொல்லவேண்டும்.

உபா 20:8. பின்னும் அதிபதிகள் ஜனங்களுடனே பேசி: பயங்காளியும் திடனற்றவனுமாயிருக்கிறவன் எவனோ, அவன் தன் சகோதரரின் இருதயத்தைத் தன் இருதயத்தைப்போலக் கரைந்துபோகப்பண்ணாதபடிக்கு, தன் வீட்டுக்குத் திரும்பிப் போகக்கடவன் என்று சொல்லவேண்டும்.

உபா 20:9. அதிபதிகள் ஜனங்களோடே பேசி முடிந்தபின்பு, ஜனங்களை நடத்தும்படி, சேனைத்தலைவரை நியமிக்கக்கடவர்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு யுத்தம்பண்ணுவது சம்பந்தமான பிரமாணத்தைச் சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் இன்னும் ஒரு ராஜ்யமாக ஸ்தாபிக்கப்படவில்லை. அவர்கள் எல்லோரும் வனாந்தரத்திலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். அவர்கள் பட்டணத்து வாசிகளாகயிராமல், கூடாரவாசிகளாகயிருக்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு கானான் தேசத்தை சுதந்தர தேசமாகக் கொடுப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ இன்னும் கானான் தேசத்தை சுதந்தரிக்கவில்லை. அந்த தேசத்திலே அவர்கள் இன்னும் குடியேறவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் யோர்தானைக் கடந்து, கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க ஆயத்தமாயிருக்கிறார்கள். அவர்கள் கானான் தேசத்தை சுதந்தரிக்கும்போது, அந்த தேசத்தில் குடியிருக்கிற கானானியரோடு யுத்தம்பண்ணவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் குடியேறிய பின்பும், சத்துருக்களிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக, அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணவேண்டும். தங்கள் தேசத்தின் எல்லைகளை விஸ்தாரம்பண்ணுவதற்கும் இஸ்ரவேல் ஜனத்தார் யுத்தம்பண்ணவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திலே இனிமேல் அனுபவிக்கப்போகிற காரியங்களை முன்னறிந்து, மோசே அவர்களுக்கு யுத்தம்பண்ணுவது பற்றிய பிரமாணத்தை இப்போதே சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் மோசேயின் மூலமாக யுத்த எச்சரிப்புக்களை கேள்விப்படுகிறார்கள்.

யுத்தத்திற்கு பயிற்சி பெறாமல் யாராலும் யுத்தம்பண்ண முடியாது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பரிசுத்தமான ஜாதியாராயிருக்கிறார்கள். யுத்தம் கர்த்தருடையது. ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் யுத்தம்பண்ணப்போகும்போது, கர்த்தருடைய யுத்த பிரமாணத்தின்படி யுத்தம்பண்ணவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சத்துருக்களைப் பார்த்து பயப்படக்கூடாது. சத்துருக்களின் எண்ணிக்கை அதிகமாயிருக்கலாம். அவர்களிடத்தில் ஏராளமான குதிரைகளும் இரதங்களும் இருக்கலாம்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீ உன் சத்துருக்களுக்கு எதிராக யுத்தஞ்செய்யப் புறப்பட்டுப் போகையில், குதிரைகளையும் இரதங்களையும், உன்னிலும் பெரிய கூட்டமாகிய ஜனங்களையும் கண்டால், அவர்களுக்குப் பயப்படாயாக; உன்னை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்" (உபா 20:1) என்று சொல்லுகிறார்.

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை மீட்டு வனாந்தரத்தின் வழியாக வழிநடத்திய சம்பவங்களில் கர்த்தர் பல அற்புதங்களைச் செய்திருக்கிறார். அவர் இன்னும் தம்முடைய பிள்ளைகளோடுகூட இருக்கிறார். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய விரோதிகளைப் பார்த்துப் பயப்படக்கூடாது. கர்த்தர் தங்களுக்காக யுத்தம் பண்ணுவார் என்று விசுவாசித்து மிகுந்த தைரியத்தோடே இருக்க வேண்டும்.

கர்த்தரை நம்புகிறவர்களுக்கு அவரே பெலனாகயிருக்கிறார். சத்துருக்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்தாலும், கர்த்தர் தங்களோடு இருக்கிறார் என்பதை நினைவுகூர்ந்து, இஸ்ரவேல் புத்திரர் சத்துருக்களுக்கு பயப்படாதிருக்கவேண்டும். கர்த்தர் நம் பட்சத்திலிருக்கும்போது, நமக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, நம்மை யாராலும் மேற்கொள்ள முடியாது.

"நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்" (ஏசா 41:10).

கர்த்தர் ஏற்கெனவே இஸ்ரவேல் புத்திரருக்காக யுத்தம்பண்ணியிருக்கிறார். கர்த்தர் அவர்கள் மத்தியிலே ஏற்கெனவே பலத்த கிரியைகளை நடப்பித்திருக்கிறார். கர்த்தர் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணியிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரையும், அவருடைய மகத்துவத்தையும், பலத்த கிரியைகளையும் தியானித்துப் பார்க்கவேண்டும். அவர்கள் சத்துருக்களைப் பார்த்து பயப்படக்கூடாது.

விசுவாசிகளாகிய நாம் இந்த பூமியிலே ஜீவிக்கும் காலம் வரையிலும் நமக்கு போராட்டமுண்டு. நாம் சத்துருவையும், இந்த உலகத்தையும், உலகப்பிரகாரமான காரியங்களையும், அவிசுவாசிகளையும் பார்த்து பயப்படக்கூடாது. நாம் கர்த்தரை நோக்கிப் பார்த்து, கர்த்தருக்குள் திடநம்பிக்கையாயிருக்கவேண்டும்.

கர்த்தருடைய வாக்குத்தத்தம் நமக்கு ஆசீர்வாதமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பதற்காக, சத்துருக்களுக்கு விரோதமான யுத்தங்களை நமக்கு அனுமதிக்கிறார். இந்த யுத்தத்தில் நாம் கர்த்தருடைய வல்லமையையும், அவருடைய வாக்குத்தத்தத்தையும் நம்பி, கர்த்தருக்குள் திடன்கொள்ளவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை பார்த்து, "சத்துருக்களுக்கு பயப்படாயாக" என்று சொல்லுகிறார். இந்த வாக்கியத்திற்கு எபிரெய பாஷையில் பயன்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தைக்கு, "பயப்படாயாக" என்றும் "பதராயாக" என்றும் பொருள். கர்த்தரை விசுவாசிக்கிறவர்கள் ஒருபோதும் பதரமாட்டார்கள். விசுவாசிக்கிறவன் பதரான்.

கர்த்தரை விசுவாசிக்கிறவர்கள் அவசரப்பட்டு எந்தக் காரியத்தையும் செய்யக்கூடாது. நம்மிடத்தில் அளவுக்கு அதிகமான வேகம் இருக்கக்கூடாது. நிதானமான வேகமே நமக்கு எப்போதும் நல்லது. எல்லா சூழ்நிலைகளும் நமக்கு சாதகமாக இருக்கும் என்றும் நினைக்கக்கூடாது. அதே வேளையில் நமக்கு சாதகமாய் இல்லாத சூழ்நிலைகளைப் பார்த்து நாம் பயப்படவும் கூடாது.

இஸ்ரவேல் புத்திரர் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம் செய்ய தொடங்கும் முன்பாக, ஆசாரியர்கள் அவர்களை கர்த்தருக்குள் உற்சாகப்படுத்தவேண்டும். ஆசாரியன் யுத்தம்பண்ணப்போகிற இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "இஸ்ரவேலரே, கேளுங்கள்; இன்று உங்கள் சத்துருக்களுடன் யுத்தஞ்செய்யப் போகிறீர்கள்; உங்கள் இருதயம் துவளவேண்டாம்; நீங்கள் அவர்களைப் பார்த்துப் பயப்படவும் கலங்கவும் தத்தளிக்கவும் வேண்டாம். உங்களுக்காக உங்கள் சத்துருக்களோடே யுத்தம்பண்ணவும் உங்களை இரட்சிக்கவும் உங்களோடேகூடப் போகிறவர் உங்கள் தேவனாகிய கர்த்தர்" (உபா 20:3,4) என்று சொல்லவேண்டும்.

இஸ்ரவேல் ஜனங்கள் யுத்தம் பண்ணப் போகும்போது தேவனுடைய ஊழியக்காரர்களாகிய ஆசாரியரும், அந்த யுத்தங்களில் பங்கு பெற்றிருக்கிறார்கள். (உபா 20:2-3; எண் 31:6; 1சாமு 4:4,11; 2நாளா 13:12; 2நாளா 20:14-29).

உபா 20:1-4 ஆகிய நான்கு வசனங்களில் இரண்டுதரம் இஸ்ரவேல் புத்திரர் பயப்படக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவரைச் சார்ந்திருக்கும்போது அவர்களுக்குக் கர்த்தரிடத்திலிருந்து எப்போதும் வெற்றி வருகிறது. ஆனால் அவர்கள் பாவம் செய்தபோதோ அவர்களுக்குத் தோல்வியே ஏற்படும். ஆசாரியர்கள் என்னதான் கூறி அவர்களை உற்சாகப்படுத்தினாலும், கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணி, பாவம் செய்தால் இஸ்ரவேலருக்கு தோல்வி நிச்சயம்.

இஸ்ரவேல் புத்திரர் யுத்தம் செய்ய தொடங்கும் முன்பாக, அவர்களுடைய மனதிலுள்ள பயத்தை நீக்கவேண்டும். ஆசாரியர்கள் அவர்களை கர்த்தருடைய நாமத்தினால் உற்சாகப்படுத்த வேண்டும். இதற்காகவே யுத்தக்களத்திலே, யுத்தவீரர்களுக்கு விசேஷித்த போதகர்களை நியமித்திருக்கிறார்கள்.

இந்தப் போதகர்கள் யுத்தவீரர்களுக்காக ஜெபம்பண்ணுவது மாத்திரமல்லாமல், அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லி, அவர்களை உற்சாகப்படுத்தவும் செய்வார்கள். யுத்தவீரரிடத்தில் வெற்றிக்கு தடையாகயிருக்கும் காரியங்கள் ஏதாவது காணப்படுமானால், இந்தப் போதகர்கள் அதன் நிமித்தமாக அவர்களைக் கடிந்துகொள்வார்கள்.

விசுவாசிகளாகிய நாம் இந்த உலகத்தில் ஆவிக்குரிய யுத்தம்பண்ணுகிறோம். நாம் நல்ல போர்ச்சேவர்களாக யுத்தம்பண்ணவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்கள், விசுவாசிகளை உற்சாகப்படுத்தவேண்டும். நாம் இந்தப் பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடு யுத்தம்பண்ணும்போது, கர்த்தருடைய தயவினால் நமக்கு ஜெயமுண்டாகும் என்று கர்த்தருடைய ஊழியக்காரர்கள் நம்மை உற்சாகம்பண்ணவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் யுத்தம் செய்யத் தொடங்கும்போது ஆசாரியர்கள் வந்து, அவர்களுடைய பயத்தையும், கலக்கத்தையும் நீக்க உதவி செய்கிறார்கள். ஆசாரியர்களைப்போலவே இஸ்ரவேல் புத்திரரின் அதிபதிகளும், யுத்தம்பண்ணப்போகிறவர்களைப் பார்த்து, அவர்களுக்கு சில ஆலோசனைகளைச் சொல்லவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும்போது, இந்த யுத்தத்தில் ஒரு சிலர் பங்குபெறக்கூடாது என்று மோசே சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தாரின் அதிபதிகள், யுத்தம் செய்யப்போகிற இஸ்ரவேல் புத்திரரைப் பார்த்து, அவர்களில் யாரெல்லாம் யுத்தத்திற்கு போகக்கூடாது என்று சொல்லவேண்டும்.

அதிபதிகள் ஜனங்களை நோக்கி, "புதுவீட்டைக் கட்டி, அதைப் பிரதிஷ்டை பண்ணாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டுக்குத் திரும்பிப்போகக்கடவன்; அவன் யுத்தத்திலே செத்தால் வேறொருவன் அதைப் பிரதிஷ்டை பண்ணவேண்டியதாகும்" (உபா 20:5) என்றும்,

"திராட்சத்தோட்டத்தை நாட்டி, அதை அநுபவியாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டுக்குத் திரும்பிப்போகக் கடவன்; அவன் யுத்தத்திலே செத்தால் வேறொருவன் அதை அநுபவிக்கவேண்டியதாகும்" (உபா 20:6) என்றும்,

"ஒரு பெண்ணைத் தனக்கு நியமித்துக்கொண்டு, அவளை விவாகம்பண்ணாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டுக்குத் திரும்பிப்போகக்கடவன்; அவன் யுத்தத்திலே செத்தால் வேறொருவன் அவளை விவாகம்பண்ணவேண்டியதாகும்" (உபா 20:7) என்றும் சொல்லவேண்டும்.

திராட்சத்தோட்டத்தை நாட்டி, அதை அநுபவியாதிருக்கிறவனுக்கு ராணுவ சேவைகளிலிருந்து ஐந்து வருஷங்களுக்கு விலக்கு அளிக்கப்படும். முதல் நான்கு வருஷங்களின் கனிகள் கர்த்தருக்குப் பிரதிஷ்டை பண்ணப்படும். ஐந்து வருஷத்திற்குள் திராட்சத் தோட்டத்தின் கனிகள் முழுவதுமாகப் பறிக்கப்படும் (லேவி 19:23-25).

திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்ற பிறகு, ஆணும் பெண்ணும் விவாகம் நடைபெறும் காலம் வரையிலும் தங்களுடைய பெற்றோரோடு தங்கியிருக்க வேண்டும். திருமண நியமனத்தின் போது வரதட்சணை போன்ற காரியங்களைப் பேசி முடித்துவிட்டு, விவாகம் பண்ண வேண்டிய நாளையும் குறித்துவிடுவார்கள். அந்த நாளில்தான் இவர்கள் இருவரும் கணவனும், மனைவியுமாக இணைக்கப்படுவார்கள்.

ஆகையினால், ஒரு பெண்ணைத் தனக்கு நியமித்துக் கொண்டு, அவளை விவாகம் பண்ணாதிருக்கிறவனுக்கு ராணுவ சேவையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. விவாகம் பண்ணிய பின்பு ஒரு வருஷத்திற்கு அவன் தன் மனைவியோடு தங்கியிருக்கலாம். அந்த ஒரு வருஷத்திலும் ராணுவ சேவையிலிருந்து அவனுக்கு விலக்கு அளிக்கப்படும். (உபா 20:7; உபா 24:5; உபா 28:30; நீதி 5:18-19).

யுத்தம்பண்ண முடியாதவர்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்பிப்போய்விடலாம். பயங்காளிகளும், திடனற்றவர்களும் யுத்தக்களத்திற்குப்போகும்போது அங்கே இருக்கிற மற்றவர்களுடைய இருதயத்தையும் கரைந்துபோகப்பண்ணிவிடுவார்கள். பயமும் நடுக்கமும் ஒரு தொற்று வியாதியைப்போல யுத்தவீரர்கள் மத்தியிலே பரவிவிடும்.

கிதியோனின் சேனையில் 32,000பேர் இருந்தார்கள். இவர்களில் 22,000பேர் பயங்காளியும் திடனற்றவர்களுமாய் இருந்தார்கள். அவர்களைக் கிதியோன் வீட்டிற்கு அனுப்பி விட்டார் (நியா 7:3).

ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர் கானானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும்போது, இஸ்ரவேல் புத்திரரில் யாரும் யுத்தம்பண்ணாமல் வீட்டிற்கு போகக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமே அமலேக்கியருக்கு விரோதமாகவும், கானானியருக்கு விரோதமாகவும் யுத்தம்பண்ணவேண்டும். இது கர்த்தருடைய தெய்வீக கட்டளை.

இஸ்ரவேலின் அதிபதிகள், தங்கள் இராணுவத்தில் பணிபுரிகிற யுத்த வீரர்களுக்கு தங்கள் அன்பையும் கரிசனையையும் காண்பிக்கிறார்கள். அதிபதிகள் யுத்தவீரர்களின் நன்மைகளையும் விசாரிக்கிறார்கள். இதன் நிமித்தமாகவே தங்கள் சேனையில் யுத்தம்பண்ண வந்திருக்கிற, மூன்றுவிதமான யுத்தவீரர்களை, தங்கள் வீட்டிற்கு திரும்பிப்போகச்சொல்லுகிறார்கள். அவர்களின் விவரம் வருமாறு :

1. புது வீட்டைக்கட்டி அதை பிரதிஷ்டைபண்ணாதிருக்கிறவன்.

2. திராட்சத்தைத்தோட்டதை நாட்டி அதை அனுபவியாதிருக்கிறவன்.

3. ஒரு பெண்ணை தனக்கு நியமித்துக்கொண்டு அவளை விவாகம்பண்ணாதிருக்கிறவன்.

இவர்கள் எல்லோரும் யுத்தம்பண்ணப்போகாமல், தங்கள் வீடுகளுக்கு திரும்பிப்போகலாம். இவர்கள் யுத்தத்திலே செத்துப்போனால், இவர்கள் அனுபவிக்கவேண்டியதை வேறொருவன் அனுபவிப்பான். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படக்கூடாது என்பதற்காக, இஸ்ரவேலின் அதிபதிகள் இவர்களை, யுத்தம்பண்ண அனுப்பாமல் தங்கள் வீடுகளுக்கு திருப்பி அனுப்பிவிடுகிறார்கள்.

இஸ்ரவேலின் அதிபதிகள், தங்கள் சேனையிலுள்ள யுத்தவீரர்களை, யுத்தத்திற்குப்போகிறவர்கள் என்றும், தங்கள் வீடுகளுக்கு திரும்பிப்போகிறவர்கள் என்றும் வேறுபிரித்து தீர்மானிக்கிறார்கள். அதிபதிகள் ஜனங்களோடே பேசி முடிந்தபின்பு, ஜனங்களை நடத்தும்படி, சேனைத்தலைவரை நியமிக்கவேண்டும் (உபா 20:9). சேனைத்தலைவர்கள் இஸ்ரவேலின் யுத்தவீரரை யுத்தக்களத்திலே வழிநடத்துகிறவர்கள்.

யுத்தம் பண்ணுவது
உபா 20:10-20

உபா 20:10. நீ ஒரு பட்டணத்தின்மேல் யுத்தம் பண்ண நெருங்கும்போது, அந்தப் பட்டணத்தாருக்குச் சமாதானம் கூறக்கடவாய்.

உபா 20:11. அவர்கள் உனக்குச் சமாதானமான உத்தரவுகொடுத்து, வாசலைத் திறந்தால், அதிலுள்ள ஜனங்கள் எல்லாரும் உனக்குப் பகுதிகட்டுகிறவர்களாகி, உனக்கு ஊழியஞ்செய்யக்கடவர்கள்.

உபா 20:12. அவர்கள் உன்னோடே சமாதானப்படாமல், உன்னோடே யுத்தம்பண்ணுவார்களானால், நீ அதை முற்றிக்கைபோட்டு,

உபா 20:13. உன் தேவனாகிய கர்த்தர் அதை உன் கையில் ஒப்புக்கொடுக்கும்போது, அதிலுள்ள புருஷர்கள் எல்லாரையும் பட்டயக்கருக்கினால் வெட்டி,

உபா 20:14. ஸ்திரீகளையும் குழந்தைகளையும் மிருகஜீவன்களையும் மாத்திரம் உயிரோடே வைத்து, பட்டணத்திலுள்ள எல்லாவற்றையும் கொள்ளையிட்டு, உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு ஒப்புக்கொடுத்த உன் சத்துருக்களின் கொள்ளைப்பொருளை அநுபவிப்பாயாக.

உபா 20:15. இந்த ஜாதிகளைச் சேர்ந்த பட்டணங்களாயிராமல், உனக்கு வெகுதூரத்திலிருக்கிற சகலபட்டணங்களுக்கும் இப்படியே செய்வாயாக.

உபா 20:16. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கிற ஏத்தியர், எமோரியர், கானானியர், பெரிசியர், ஏவியர், எபூசியர் என்னும் ஜனங்களின் பட்டணங்களிலேமாத்திரம் சுவாசமுள்ளதொன்றையும் உயிரோடே வைக்காமல்,

உபா 20:17. அவர்களை உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டபடியே சங்காரம் பண்ணக்கடவாய்.

உபா 20:18. அவர்கள் தங்கள் தேவர்களுக்குச் செய்கிற தங்களுடைய சகல அருவருப்புகளின்படியே நீங்களும் செய்ய உங்களுக்குக் கற்றுக்கொடாமலும், நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாமலும் இருக்கும்படி இப்படிச் செய்யவேண்டும்.

உபா 20:19. நீ ஒரு பட்டணத்தின்மேல் யுத்தம்பண்ணி அதைப் பிடிக்க அநேக நாள் அதை முற்றிக்கைபோட்டிருக்கும்போது, நீ கோடாரியை ஓங்கி, அதின் மரங்களை வெட்டிச் சேதம்பண்ணாயாக; அவைகளின் கனியை நீ புசிக்கலாமே; ஆகையால் உனக்குக் கொத்தளத்திற்கு உதவும் என்று அவைகளை வெட்டாயாக; வெளியின் விருட்சங்கள் மனுஷனுடைய ஜீவனத்துக்கானவைகள்.

உபா 20:20. புசிக்கிறதற்கேற்ற கனிகொடாத மரம் என்று நீ அறிந்திருக்கிற மரங்களை மாத்திரம் வெட்டியழித்து, உன்னோடு யுத்தம்பண்ணுகிற பட்டணம் பிடிபடுமட்டும் அதற்கு எதிராகக் கொத்தளம் போடலாம்.

இஸ்ரவேல் புத்திரர் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும்போது, அவர்களோடு எவ்வாறு யுத்தம்பண்ணவேண்டுமென்று இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. யுத்தம் பட்டணங்கள்மீதும் நடைபெறலாம், காடுவெளிகளிலும், வனாந்தரங்களிலும் நடைபெறலாம். இந்த வசனப்பகுதியில் பட்டணத்தின்மீது நடைபெறும் யுத்தத்தைப்பற்றி மாத்திரமே சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் பட்டணங்கள்மீது நடத்தும் யுத்தத்தில் எப்படி நடந்துகொள்கிறார்களோ அப்படியே காடுவெளிகளிலும், வனாந்தரங்களிலும் நடத்தும் யுத்தங்களிலும் நடந்துகொள்ளவேண்டும்.

"நீ ஒரு பட்டணத்தின்மேல் யுத்தம் பண்ண நெருங்கும்போது, அந்தப் பட்டணத்தாருக்குச் சமாதானம் கூறக்கடவாய்" (உபா 20:10) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

சத்துருக்களோடு சமாதான வார்த்தைகளை சொல்லாமல், அவசரப்பட்டு யுத்தம்பண்ணக்கூடாது. சமாதானம்பண்ணுவதற்கு வாய்ப்பு கொடுக்கவேண்டும். அந்தப் பட்டணத்திற்கு விரோதமாக தாங்கள் யுத்தம்பண்ணுவதற்கு வந்திருப்பதற்கான காரணத்தையும் இஸ்ரவேல் புத்திரர் விளக்கமாகச் சொல்லவேண்டும்.

"அவர்கள் உனக்குச் சமாதானமான உத்தரவுகொடுத்து, வாசலைத் திறந்தால், அதிலுள்ள ஜனங்கள் எல்லாரும் உனக்குப் பகுதிகட்டுகிறவர்களாகி, உனக்கு ஊழியஞ்செய்யக்கடவர்கள்" (உபா 20:11) என்று மோசே சொல்லுகிறார்.

ஒரு பட்டணத்தின்மீது யுத்தம் பிரகடனம்பண்ணப்படும் அதே வேளையில், அந்தப் பட்டணத்திற்கு சமாதானமும் பிரகடனம்பண்ணப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரரோடு யுத்தம்பண்ணவேண்டுமா அல்லது சமாதான உடன்படிக்கை பண்ணவேண்டுமா என்பதை அந்தப் பட்டணத்தாரே தீர்மானம்பண்ணவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் ஒரு பட்டணத்தின்மேல் யுத்தம்பண்ண நெருங்கும்போது, அந்தப் பட்டணத்தாருக்கு சமாதானம் கூறுவது, பாவிகள்மீது கர்த்தர் காண்பிக்கும் கிருபைக்கு அடையாளம். கர்த்தர் தம்முடைய நீதியினால் பாவிகளை உடனே அழித்துப்போடலாம். ஆனாலும் பாவிகள் அழிந்துபோவது கர்த்தருடைய விருப்பமல்ல. அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்பதும், தங்கள் ஜீவனைப்பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதும் கர்த்தருடைய விருப்பம்.

அதுபோலவே இஸ்ரவேல் புத்திரரும் ஒரு பட்டணத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும்போது, அந்தப் பட்டணத்தை அழித்துப்போடவேண்டும் என்பது அவர்களுடைய நோக்கமாயிருக்கக்கூடாது. அந்தப் பட்டணத்தார் தங்களோடு ஒப்புரவாகவேண்டும் என்பதும், சமாதானமாயிருக்கவேண்டும் என்பதும், தங்களுடைய சமாதான உடன்படிக்கைக்கு அவர்கள் கீழ்ப்படியவேண்டும் என்பதும் இஸ்ரவேல் புத்திரருடைய நோக்கமாயிருக்கவேண்டும்.

விசுவாசிகளாகிய நமக்கு மற்ற ஜனத்தாரோடு பிரச்சனைகளும், வழக்குகளும் வரும்போது, அவர்களுக்கு விரோதமாக உடனே சண்டை போடக்கூடாது. அவர்களோடு சமாதானமாயிருப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். முதலாவது சமாதானம். சமாதானம் ஏற்படவில்லையென்றால், அதன் பின்பு யுத்தம். இதுவே கர்த்தருடைய யுத்த பிரமாணம்.

இஸ்ரவேல் புத்திரர் ஒரு பட்டணத்தின்மேல் யுத்தம்பண்ண நெருங்கும்போது, அந்த பட்டணத்தாருக்கு சமாதானம் சொல்லுகிறார்கள். ஆனால் அந்தப் பட்டணத்தார் இஸ்ரவேல் புத்திரரோடு சமாதானப்படாமல் போகலாம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இஸ்ரவேல் புத்திரர் என்ன செய்யவேண்டும் என்றும் மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "அவர்கள் உன்னோடே சமாதானப்படாமல், உன்னோடே யுத்தம்பண்ணுவார்களானால், நீ அதை முற்றிக்கைபோட்டு, உன் தேவனாகிய கர்த்தர் அதை உன் கையில் ஒப்புக்கொடுக்கும்போது, அதிலுள்ள புருஷர்கள் எல்லாரையும் பட்டயக்கருக்கினால் வெட்டி, ஸ்திரீகளையும் குழந்தைகளையும் மிருகஜீவன்களையும் மாத்திரம் உயிரோடே வைத்து, பட்டணத்திலுள்ள எல்லாவற்றையும் கொள்ளையிட்டு, உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு ஒப்புக்கொடுத்த உன் சத்துருக்களின் கொள்ளைப்பொருளை அநுபவிப்பாயாக" (உபா 20:12-14) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் வாக்குத்தத்த தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ள வேண்டும். அதைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இதற்கு மட்டும்தான், அவர்கள் யுத்தம் பண்ண வேண்டும். பேராசையினால் மற்ற தேசங்கள்மீது அவர்கள் யுத்தம் பண்ணுவதைக் கர்த்தர் அனுமதிக்க வில்லை. இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் சம்பவம் இஸ்ரவேல் புத்திரரின் எல்லையைக் கடந்து, அங்கிகரிக்கப்பட்ட பிரகாரமாக யுத்தம் பண்ணுவதைக் குறிப்பிடுகிறது.

இஸ்ரவேலின் சேனைக்கு கர்த்தரே தலைவர். யுத்தகாலத்திலும், சமாதான காலத்திலும் கர்த்தரே அவர்களை வழிநடத்துகிறவர். கர்த்தருடைய கரங்களில் ஆசீர்வாதங்களும், சாபங்களும் இருக்கிறது. வளமும்,வறுமையும்இருக்கிறது.ஆரோக்கியமும், நோயும் இருக்கிறது. ஜெயமும், தோல்வியும் இருக்கிறது. ஜீவனும், மரணமும் இருக்கிறது. ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய ஆசீர்வாதமான ஜீவியத்திற்காக எப்போதும் கர்த்தரையே நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கும்போது அவர்களுடைய ஜீவியங்களில் நன்மை உண்டாகும் (யாத் 15:26; யாத் 23:20-33; லேவி 26; உபா 28).

யுத்தத்தில் வெற்றி பெறும்போது, புருஷர்கள் எல்லோரையும் கொன்றுபோட வேண்டும். ஸ்திரீகளையும், குழந்தைகளையும் கொன்றுபோடக்கூடாது. அவர்களை உயிரோடே வைத்து விடவேண்டும். யுத்தத்தில் கிடைக்கும் கொள்ளைப்பொருட்களில் இவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் கானான் தேசத்தில் புருஷசம்யோகத்தை அறியாத ஸ்திரீகளைத் தவிர மற்ற ஸ்திரீகள் கொல்லப்பட்டார்கள். (எண் 31:16-18). கானானியர் மிகுந்த துன்மார்க்கர். அருவருப்பான பாவங்களைச் செய்தவர்கள். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் கானானியரின் புருஷரையும், ஸ்திரீகளையும் கொன்றுபோட்டார்கள்.

யுத்தம்பண்ணுவது கடைசி ஆயுதம். சமாதானமே முதலாவது ஆயுதம். நமக்கு மற்றவர்கள்மீது வழக்கு இருக்கும்போது, உடனே நீதிமன்றத்திற்குபோய்விடக்கூடாது. அந்த வழக்கை சமாதானமாய் தீர்த்து வைப்பதற்கு ஏதாவது வழியும் வாய்ப்பும் இருக்கிறதா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். மற்றவர்கள் நமக்கு விரோதமாக சண்டைக்கு வந்தாலும், நாம் அவர்களோடு சமாதானமாயிருப்பதையே நாடவேண்டும். சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்.

சமாதானத்திற்கு வழி ஏற்படவில்லையென்றால், அதன் பின்பு சண்டைபோடலாம். இஸ்ரவேல் புத்திரர் சண்டைபோடுவதற்கு முந்திக்கொள்ளக்கூடாது. சமாதானம்பண்ண முடியாமல், சண்டைபோடவேண்டிய சூழ்நிலை வரும்போது, இஸ்ரவேல் புத்திரர் மிகுந்த தைரியத்தோடு சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணவேண்டும். சத்துருக்கள் சமாதானத்தின் மூலமாக தங்களை இஸ்ரவேல் புத்திரருக்கு ஒப்புக்கொடுக்கவில்லையென்றால், கர்த்தர் அந்த சத்துருக்களை இஸ்ரவேல் புத்திரருடைய கைகளில் ஒப்புக்கொடுப்பார்.

இஸ்ரவேல் புத்திரர், தாங்கள் குடியிருக்கும் தேசத்திற்கு அருகாமையிலுள்ள பட்டணங்கள்மீது யுத்தம்பண்ணும்போதும், தங்களுக்கு வெகுதூரத்திலுள்ள பட்டணங்கள்மீது யுத்தம்பண்ணும்போதும், அந்தப் பட்டணங்களிலுள்ள புருஷர்கள் எல்லோரையும் பட்டயக்கருக்கினால் வெட்டிப்போடவேண்டும். அந்தப் பட்டணங்களிலுள்ள ஸ்திரீகளையும், குழந்தைகளையும், மிருகஜீவன்களையும் மாத்திரம் உயிரோடே வைக்கலாம்.

"இந்த ஜாதிகளைச் சேர்ந்த பட்டணங்களாயிராமல், உனக்கு வெகுதூரத்திலிருக்கிற சகலபட்டணங்களுக்கும் இப்படியே செய்வாயாக" (உபா 20:15) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

இந்தப் பட்டணத்தார் இஸ்ரவேல் புத்திரருக்கு வெகுதூரத்திலிருப்பதினால், இவர்கள் மூலமாக கானான் தேசத்திற்குள் விக்கிரகாராதனை பிரவேசிப்பதற்கு வாய்ப்பு இல்லை. இஸ்ரவேல் புத்திரருக்கும் அந்தப் பட்டணத்தார் மூலமாக வேறுவிதமான ஆபத்துக்களும் வருவதற்கு வாய்ப்பில்லை.

இஸ்ரவேல் புத்திரருக்கு வெகுதூரத்திலுள்ள இந்தப் பட்டணத்தார், கர்த்தரைத் தங்களுடைய தெய்வமாக ஏற்றுக்கொள்வதற்கும் வாய்ப்புள்ளது. இந்தப் பட்டணத்தார் பிற்காலத்தில், தங்கள் விக்கிரகாராதனையை விட்டுவிட்டு, கர்த்தரை ஆராதிக்கும் வாய்ப்பு இருப்பதினால், இஸ்ரவேல் புத்திரர் இந்தப் பட்டணங்களிலுள்ள, சிலைகளையும் குழந்தைகளையும் உயிரோடே விட்டுவிடவேண்டும். இந்தப் பட்டணத்திலுள்ள புருஷர்கள் எல்லோரும் பட்டயத்தால் கொல்லப்பட்டதினால், அவர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவதற்கும் வாய்ப்பில்லை.

ஆனாலும் ஏத்தியர், எமோரியர், கானானியர், பெரிசியர், ஏவியர், எபூசியர் ஆகிய ஜனங்களின் பட்டணங்கள்மீது இஸ்ரவேல் புத்திரர் யுத்தம்பண்ணும்போது, அந்தப் பட்டணங்களிலுள்ள யாரையும் உயிரோடு வைக்கக்கூடாது.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கிற ஏத்தியர், எமோரியர், கானானியர், பெரிசியர், ஏவியர், எபூசியர் என்னும் ஜனங்களின் பட்டணங்களிலேமாத்திரம் சுவாசமுள்ளதொன்றையும் உயிரோடே வைக்காமல், அவர்களை உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டபடியே சங்காரம் பண்ணக்கடவாய்" (உபா 20:16,17) என்று சொல்லுகிறார்.

கானான்தேசத்திலுள்ள பட்டணங்கள்மீது யுத்தம் பண்ணும் முறையும், மற்ற தேசங்களின் பட்டணங்கள்மீது யுத்தம் பண்ணும் முறையும் வேறுபட்டிருக்கிறது. (உபா 20:10-15=உபா 20:16-18) கானான் தேசத்திலுள்ள பட்டணங்களில் உயிரோடுள்ள ஜனங்கள் எல்லோரையும் சங்காரம் பண்ண வேண்டும். இதனால் இஸ்ரவேல் புத்திரருக்கு அருவருப்பான பாவங்களைக் கற்றுக் கொடுப்பதற்கு அங்கு யாரும் இருக்கமாட்டார்கள். (உபா 20:18) பட்டணங்களைப் பிடிப்பதற்காக முற்றிக்கை போட்டிருக்கும்போது அங்குள்ள மரங்களை அழிக்கக்கூடாது (உபா 20:19).

கானான் தேசத்திலுள்ள இந்தப் புறஜாதியார் இஸ்ரவேல் புத்திரருக்கு மிகவும் ஆபத்தானவர்கள். இவர்கள் எல்லோருமே விக்கிரகாராதனைக்காரர்கள் "அவர்கள் தங்கள் தேவர்களுக்குச் செய்கிற தங்களுடைய சகல அருவருப்புகளின்படியே நீங்களும் செய்ய உங்களுக்குக் கற்றுக்கொடாமலும், நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாமலும் இருக்கும்படி இப்படிச் செய்யவேண்டும்" (உபா 20:18) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

புறஜாதியாராகிய கானானியர் எல்லோருமே விக்கிரகாராதனைக்காரர்கள். அவர்களுடைய புருஷர்கள் மாத்திரம் கொல்லப்பட்டு, அவர்களுடைய ஸ்திரீகளும் குழந்தைகளும் உயிரோடு வைக்கப்பட்டால், இஸ்ரவேல் புத்திரர் அவர்கள் மூலமாயும் விக்கிரகாராதனையை கற்றுக்கொள்ளும் ஆபத்து இருக்கிறது. ஆகையினால் அவர்களை மொத்தமாய் சங்காரம்பண்ணவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். கானானியர் மனந்திரும்பமாட்டார்கள். அவர்கள் தங்கள் விக்கிரகாராதனையை விட்டு விலகி வரமாட்டார்கள். அவர்களுடைய இருதயம் துணிகரமாகப் பாவம் செய்கிறது. விக்கிரகாராதனையைவிட்டு விலகி வர மறுக்கும் கானானியரை மன்னிப்பதற்கு பதிலாக, அவர்களை சங்காரம்பண்ணலாம் என்பது கர்த்தருடைய நீதியாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் ஒரு பட்டணத்தின்மேல் யுத்தம்பண்ணப்போகும்போது, மிகுந்த கரிசனையோடும், மனிதாபிமானத்தோடும் நடந்துகொள்ளவேண்டும். யுத்தம்பண்ணுகிறவர்கள் அழிவையும், மரணத்தையும் மாத்திரம் யோசிக்காமல், ஜீவனையும் யோசிக்கவேண்டும். தங்கள் ஜீவனுக்கு ஆதாரமாகயிருக்கும் காரியங்களை இஸ்ரவேல் புத்திரர் அழித்துப்போடக்கூடாது.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீ ஒரு பட்டணத்தின்மேல் யுத்தம்பண்ணி அதைப் பிடிக்க அநேக நாள் அதை முற்றிக்கைபோட்டிருக்கும்போது, நீ கோடாரியை ஓங்கி, அதின் மரங்களை வெட்டிச் சேதம்பண்ணாயாக; அவைகளின் கனியை நீ புசிக்கலாமே; ஆகையால் உனக்குக் கொத்தளத்திற்கு உதவும் என்று அவைகளை வெட்டாயாக; வெளியின் விருட்சங்கள் மனுஷனுடைய ஜீவனத்துக்கானவைகள்" (உபா 20:19) என்றும்,

"புசிக்கிறதற்கேற்ற கனிகொடாத மரம் என்று நீ அறிந்திருக்கிற மரங்களை மாத்திரம் வெட்டியழித்து, உன்னோடு யுத்தம்பண்ணுகிற பட்டணம் பிடிபடுமட்டும் அதற்கு எதிராகக் கொத்தளம் போடலாம்" (உபா 20:20) என்றும் சொல்லுகிறார்.

நம்முடைய ஜீவனுக்கும், போஜனத்திற்கும் ஆதாரமாகயிருப்பதை ஒருபோதும் அழிக்கக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர் பட்டணங்கள்மீது யுத்தம்பண்ணப்போகும்போது, இஸ்ரவேலின் அதிபதிகள், ஜனங்களை நடத்தும்படி சேனைத்தலைவர்களை நியமித்திருக்கிறார்கள். மோசே சொல்லும் கட்டளைகளுக்கு சேனைத்தலைவர்கள் செவிகொடுத்து, கனிதரும் மரங்களை வெட்டாதிருக்கவேண்டும். கனிகொடாத பட்டுப்போன மரங்களை வெட்டி பட்டணங்களுக்கு விரோதமாக கொத்தளம்போட பயன்படுத்தலாம்.

21 அதிகாரம்

குற்றமில்லாத இரத்தப்பழியை இஸ்ரவேலை விட்டு நீக்கவேண்டும். ஒருவன் கொலைசெய்யப்பட்டுக்கிடக்கும்போது, அவனைக் கொலைசெய்தவன் இன்னான் என்று தெரியாதிருந்தால், அவனுக்கு என்ன செய்யவேண்டுமென்று மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார் (உபா 21:1-9).

சிறைப்பிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை விவாகம்பண்ணுவது சம்பந்தமான பிரமாணம் (உபா 21:10-14). முதற்பேறானவனுக்கு சேஷ்டபுத்திர சுதந்தரம் கொடுப்பது சம்பந்தமான பிரமாணம் (உபா 21:15-17).

தன்னுடைய பெற்றோரின் சொல்லைக்கேளாமல், அடங்காத துஷ்டப்பிள்ளையாயிருப்பவனை தண்டிப்பது சம்பந்தமான பிரமாணம் (உபா 21:18-21). தூக்கிலே போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன். இரவிலே அவன் பிரேதம் மரத்திலே தொங்கலாகாது (உபா 21:22,23).

கொலைசெய்யப்பட்டுக்கிடக்கிற ஒருவன் உபா 21:1-9

உபா 21:1. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரிக்கக் கொடுக்கும் தேசத்தில், கொலைசெய்யப்பட்டுக் கிடக்கிற ஒருவனை வெளியிலே கண்டு, அவனைக் கொன்றவன் இன்னான் என்று தெரியாதிருந்தால்,

உபா 21:2. உன் மூப்பரும் உன் நியாயாதிபதிகளும் புறப்பட்டுப்போய், கொலைசெய்யப்பட்டவனைச் சுற்றிலும் இருக்கும் பட்டணங்கள் மட்டும் அளப்பார்களாக.

உபா 21:3. கொலைசெய்யப்பட்டவனுக்குச் சமீபமான பட்டணத்து மூப்பர், வேலையில் பண்படாததும் நுகத்தடியில் பிணைக்கப்படாததுமான ஒரு கிடாரியைப் பிடித்து,

உபா 21:4. உழுது விதையாத தரிசான பள்ளத்தாக்கிலே அதைக் கொண்டுபோய், அந்தப் பள்ளத்தாக்கிலே அதின் தலையை வெட்டிப்போடக்கடவர்கள்.

உபா 21:5. உன் தேவனாகிய கர்த்தர் தமக்கு ஆராதனை செய்யவும் கர்த்தருடைய நாமத்திலே ஆசீர்வதிக்கவும் லேவியின் குமாரராகிய ஆசாரியரைத் தெரிந்துகொண்டபடியால், அவர்களும் அத்தருணத்தில் வந்திருக்கவேண்டும்; அவர்கள் வாக்கின்படியே சகல வழக்கும் சகல காயச்சேதமும் தீர்க்கப்படவேண்டும்.

உபா 21:6. கொலைசெய்யப்பட்டவனுக்குச் சமீபமான பட்டணத்தின் மூப்பர் எல்லாரும் பள்ளத்தாக்கிலே தலை வெட்டப்பட்ட கிடாரியின்மேல் தங்கள் கைகளைக் கழுவி;

உபா 21:7. எங்கள் கைகள் அந்த இரத்தத்தைச் சிந்தினதும் இல்லை, எங்கள் கண்கள் அதைக் கண்டதும் இல்லை;

உபா 21:8. கர்த்தாவே, நீர் மீட்டுக்கொண்ட உமது ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் குற்றமில்லாத இரத்தப்பழியைச் சுமத்தாமல், உமது ஜனமாகிய இஸ்ரவேலின் மேல் கிருபையுள்ளவராயிரும் என்று சொல்வார்களாக; அப்பொழுது இரத்தப்பழி அவர்களுக்கு நிவிர்த்தியாகும்.

உபா 21:9. இப்படிக் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதை நீ செய்வாயாகில், குற்றமில்லாத இரத்தப்பழியை உன் நடுவிலிருந்து விலக்கிப்போடுவாய்.

பிறனை திட்டமிட்டு, பதிவிருந்து கொலைசெய்தவனுக்கு கடினமான தண்டனை கொடுக்கப்படவேண்டும் என்று மோசே சொல்லியிருக்கிறார் (உபா 19:11-21). இவ்வாறாக குற்றமில்லாத இரத்தப்பழியை இஸ்ரவேலிலே விட்டு அகற்றவேண்டும்.

பிறனை கொன்றவன் இன்னான் என்பது தெரியாதிருந்தால், குற்றமில்லாத இரத்தப்பழியை இஸ்ரவேலை விட்டு எவ்வாறு அகற்றுவது என்பதுபற்றி மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். கொலைசெய்யப்பட்டுக்கிடக்கிறவனை கொன்றவன் யார் என்பது தெரியவில்லை. கொலைகாரனை தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனாலும் இஸ்ரவேல் தேசத்திலே குற்றமில்லாத இரத்தப்பழி சிந்தப்பட்டிருக்கிறது.

குற்றம் செய்தவன் தண்டிக்கப்பட வேண்டும். அப்போதுதான் இஸ்ரவேலை விட்டு குற்றமில்லாத இரத்தப்பழி நீங்கும். கொலைசெய்தவனை கண்டுபிடித்து, அவனை தண்டிக்காவிட்டால், இஸ்ரவேல் தேசத்தின்மீது இரத்தப்பழி இருக்கும். கொலைசெய்யப்பட்டுக்கிடக்கிறவனுடைய இரத்தம், இஸ்ரவேல் தேசத்து நிலத்தின்மேல் சிந்தியிருக்கிறது.

மோசே இந்த சம்பவம்பற்றிச் சொல்லும்போது, "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரிக்கக் கொடுக்கும் தேசத்தில், கொலைசெய்யப்பட்டுக் கிடக்கிற ஒருவனை வெளியிலே கண்டு, அவனைக் கொன்றவன் இன்னான் என்று தெரியாதிருந்தால், உன் மூப்பரும் உன் நியாயாதிபதிகளும் புறப்பட்டுப்போய், கொலைசெய்யப்பட்டவனைச் சுற்றிலும் இருக்கும் பட்டணங்கள் மட்டும் அளப்பார்களாக" (உபா 21:1,2) என்று சொல்லுகிறார்.

கொலைசெய்தவன் யார் என்பது தெரிந்தால் அவனுக்கு மரணதண்டனை கொடுக்கலாம். கொன்றவன் இன்னான் என்பது தெரியாதிருந்தால், அவனுக்கு பதிலாக ஒரு கிடாரியை பிடித்து அதின் தலையை வெட்டிப்போடவேண்டும். அந்தக் கிடாரி எப்படிப்பட்டதாயிருக்கவேண்டும் என்றும், அதை எங்கே வெட்டிப்போடவேண்டும் என்றும் மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

"கொலைசெய்யப்பட்டவனுக்குச் சமீபமான பட்டணத்து மூப்பர், வேலையில் பண்படாததும் நுகத்தடியில் பிணைக்கப்படாததுமான ஒரு கிடாரியைப் பிடித்து, உழுது விதையாத தரிசான பள்ளத்தாக்கிலே அதைக் கொண்டுபோய், அந்தப் பள்ளத்தாக்கிலே அதின் தலையை வெட்டிப்போடக்கடவர்கள்" (உபா 21:3,4) என்று மோசே சொல்லுகிறார்.

கிடாரியின் தலை வெட்டப்படும்போது, அங்கே லேவியின் குமாரராகிய ஆசாரியரும் இருக்கவேண்டும். தேவனாகிய கர்த்தர் தமக்கு ஆராதனை செய்யவும் கர்த்தருடைய நாமத்திலே ஆசீர்வதிக்கவும் லேவியின் குமாரராகிய ஆசாரியரைத் தெரிந்து கொண்டபடியால், அவர்களும் அத்தருணத்தில் வந்திருக்கவேண்டும்; அவர்கள் வாக்கின்படியே சகல வழக்கும் சகல காயச்சேதமும் தீர்க்கப்படவேண்டும் (உபா 21:5).

கிடாரி பள்ளத்தாக்கிலே கொல்லப்படுகிறது. அங்கே கொலைசெய்யப்பட்டவனுக்கு சமீபமான பட்டணத்து மூப்பர்களும், ஆசாரியர்களும் இருக்கிறார்கள். அப்போது அந்த மூப்பர்கள் எல்லோரும் பள்ளத்தாக்கிலே தலை வெட்டப்பட்ட கிடாரியின்மேல் தங்கள் கைகளைக் கழுவவேண்டும் (உபா 21:6).

அதன்பின்பு மூப்பர்கள் அனைவரும் கர்த்தரை நோக்கி ஜெபிக்கவேண்டும். "எங்கள் கைகள் அந்த இரத்தத்தைச் சிந்தினதும் இல்லை, எங்கள் கண்கள் அதைக் கண்டதும் இல்லை; கர்த்தாவே, நீர் மீட்டுக்கொண்ட உமது ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் குற்றமில்லாத இரத்தப்பழியைச் சுமத்தாமல், உமது ஜனமாகிய இஸ்ரவேலின் மேல் கிருபையுள்ளவராயிரும்" (உபா 21:7,8) என்று மூப்பர்கள் அனைவரும் கர்த்தரிடத்தில் சொல்லவேண்டும்.

"அப்பொழுது இரத்தப்பழி அவர்களுக்கு நிவிர்த்தியாகும். இப்படிக் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதை நீ செய்வாயாகில், குற்றமில்லாத இரத்தப்பழியை உன் நடுவிலிருந்து விலக்கிப்போடுவாய்" (உபா 21:9) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

ஆலோசனைச் சங்கத்தார் கொலைசெய்யப்பட்டுக் கிடக்கிறவனைப் பற்றிய காரியங்களைக் கவனித்துக் கொள்ள வேண்டும். ஒருவன் கொலைசெய்யப்பட்டுக் கிடக்கும்போது அவனைக் கொன்றவன் இன்னான் என்று தெரியாதிருக்கும் சூழ்நிலை ஏற்படலாம். கொலைசெய்யப்பட்டவனைப்பற்றி சுற்றிலுமிருக்கும் பட்டணங்களில் அறிவிக்கவேண்டும். ஒரு கிடாரியைப் பிடித்து அதின் தலையை இஸ்ரவேலின் மூப்பர்களும், நியாயாதிபதிகளும் வெட்டிப்போட வேண்டும். இந்தக் கிடாரியை இஸ்ரவேல் சபையாரின் பொதுவான பணத்திலிருந்து கிரயத்திற்குக் கொள்ள வேண்டும்.

இந்த வசனப்பகுதியில் மரணவிசாரணையைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. கொலைசெய்யப்பட்டவனைப் பற்றி மூப்பர்களிடம் அறிவிக்க வேண்டும்.
2. மூப்பர்கள் புறப்பட்டுப்போய் விசாரணை செய்ய வேண்டும். (உபா 21:1-2)
3. கொலைசெய்யப்பட்டவனுக்குச் சமீபமான பட்டணத்தில் இதைப் பற்றி அறிவிக்க வேண்டும். (உபா 21:3)
4. ஒரு கிடாரியைத் தெரிந்தெடுத்து அதைக் கிரயத்திற்கு வாங்க வேண்டும்.
5. உழுது விதையாத தரிசான பள்ளத்தாக்கிற்குக் கிடாரியைக் கொண்டு போகவேண்டும். (உபா 21:4)
6. கிடாரியின் தலையை வெட்டிப் போடவேண்டும்.
7. ஆசாரியர் அங்கு வரவேண்டும். (உபா 21:5)
8. மூப்பர் எல்லோரும் வெட்டப்பட்ட கிடாரியின்மேல் தங்கள் கைகளைக் கழுவ வேண்டும். (உபா 21:6)
9. இந்தக் கொலையில் தாங்கள் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்று ஜனங்கள் மத்தியில் மூப்பர் அறிக்கையிட வேண்டும். (உபா 21:7)
10. கர்த்தருடைய இரக்கத்திற்காகவும், மன்னிப்பிற்காகவும் மூப்பர்கள் பொதுவான ஜெபம் ஏறெடுக்க வேண்டும். (உபா 21:8)

தரிசன பள்ளத்தாக்கில் ஆற்றின் நீர் ஓடிக்கொண்டிருக்கும். கிடாரியின் தலையை இங்கு வெட்டிப்போடும் போது அதன் இரத்தம் தண்ணீரில் கரைந்து விடும். கிடாரியின் தலையை இங்கு வெட்டிப் போடுவதற்கும், சாதாரணமாக விலங்குகளை அடிப்பதற்கும் வித்தியாசம் உள்ளது.

மூப்பர்கள் "தலை வெட்டப்பட்ட கிடாரியின்மேல் தங்கள் கைகளைக் கழுவுகிறார்கள்". தாங்கள் குற்றமற்றவர்கள் என்பதற்கு அடையாளமாகப் பூர்வகாலங்களில் கைகளைக் கழுவும் வழக்கம் இருந்தது (மத் 27:24).

"எங்கள் கைகள் அந்த இரத்தத்தைச் சிந்தினதும் இல்லை, எங்கள் கண்கள் அதைக் கண்டதும் இல்லை" என்று மூப்பர்கள் அறிக்கை செய்கிறார்கள். பொதுஜனங்கள் மத்தியில் இந்தச் சடங்கு நடைபெறுகிறது. மூப்பர்கள் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, அவர்களைத் தண்டித்து, இஸ்ரேல் மத்தியில் பாவம் இராதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும் (உபா 21:9).

சிறைப்பிடிக்கப்பட்டவளை மனைவியாக்குவது உபா 21:10-14

உபா 21:10. நீ உன் சத்துருக்களுக்கு எதிராக யுத்தத்திற்குப் புறப்பட்டு, உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன் கையில் ஒப்புக்கொடுக்கிறதினால், அவர்களைச் சிறைபிடித்துவந்து,

உபா 21:11. சிறைகளில் ரூபவதியான ஒரு ஸ்திரீயைக்கண்டு, அவளை விவாகம்பண்ணவிரும்பி,

உபா 21:12. அவளை உன் வீட்டிற்குள் அழைத்துக்கொண்டுபோவாயானால், அவள் தன் தலையைச் சிரைத்து, தன் நகங்களைக் களைந்து,

உபா 21:13. தன் சிறையிருப்பின் வஸ்திரத்தையும் நீக்கி, உன் வீட்டிலிருந்து, ஒரு மாத மட்டும் தன் தகப்பனையும் தாயையும் நினைத்துத் துக்கங்கொண்டாடக்கடவள்; அதன்பின்பு நீ அவளோடே சேர்ந்து, அவளுக்குப் புருஷனாயிரு, அவள் உனக்கு மனைவியாயிருப்பாள்.

உபா 21:14. அவள்மேல் உனக்குப் பிரியமில்லாமற்போனால், நீ அவளைப் பணத்திற்கு விற்காமல், அவளைத் தன் இஷ்டப்படி போகவிடலாம்; நீ அவளைத் தாழ்மைப்படுத்தினபடியினால் அவளாலே ஆதாயம் பெறும்படி தேடவேண்டாம்.

யுத்தத்திற்குப்போகிற இஸ்ரவேல் புத்திரர், சத்துருக்களின் தேசத்திலுள்ள ஸ்திரீகளையும், குழந்தைகளையும் சிறைப்பிடித்து வருகிறார்கள். மோசேயின் பிரமாணத்தில் இவ்வாறு செய்வதற்கு அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. சிறைப்பிடிக்கப்பட்ட ஸ்திரீயை விவாகம்பண்ணுவதற்கும், இஸ்ரவேல் புத்திரருக்கு மோசேயின் பிரமாணத்தில் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீ உன் சத்துருக்களுக்கு எதிராக யுத்தத்திற்குப் புறப்பட்டு, உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன் கையில் ஒப்புக்கொடுக்கிறதினால், அவர்களைச் சிறைபிடித்துவந்து, சிறைகளில் ரூபவதியான ஒரு ஸ்திரீயைக்கண்டு, அவளை விவாகம்பண்ண விரும்பினால்" (உபா 21:10,11), அவளை விவாகம்பண்ணலாம் என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தைச் சுதந்தரித்து, தேசத்திலுள்ள கானானியரையெல்லாம் முழுவதுமாகச் சங்காரம் பண்ணிய பின்பு, நடைபெறப்போகும் சம்பவத்தைப் பற்றி இங்கு கூறப்பட்டிருக்கிறது (உபா 7:3; உபா 20:16-18).

சிறைப்பிடிக்கப்பட்ட ஸ்திரீயை மனைவியாக்குவது சம்பந்தமாக, மோசே ஒரு சில பிரமாணங்களையும் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

"அவளை உன் வீட்டிற்குள் அழைத்துக்கொண்டுபோவாயானால், அவள் தன் தலையைச் சிரைத்து, தன் நகங்களைக் களைந்து, தன் சிறையிருப்பின் வஸ்திரத்தையும் நீக்கி, உன் வீட்டிலிருந்து, ஒரு மாத மட்டும் தன் தகப்பனையும் தாயையும் நினைத்துத் துக்கங்கொண்டாடக்கடவள்; அதன்பின்பு நீ அவளோடே சேர்ந்து, அவளுக்குப் புருஷனாயிரு, அவள் உனக்கு மனைவியாயிருப்பாள்" (உபா 21:12,13).

அவள் தன் தலையைச் சிரைத்துக்கொள்ளவேண்டும். கிழக்கு தேசத்தில் ஒருவர் தன் தலையைச் சிரைப்பது அவர் தன் மார்க்கத்தை விட்டு விட்டு, வேறொரு மார்க்கத்தை ஏற்றுக் கொள்வதற்கு அடையாளமாகும். சிறையிருப்பிலுள்ள ஒரு ஸ்திரீ தன் தலையைச் சிரைத்துக் கொள்ளும்போது அவள் தன் புறஜாதி மார்க்கத்தை விட்டு விட்டு, யூதமார்க்கத்தை ஏற்றுக் கொள்கிறாள் என்பதற்கு அது அடையாளம்.

அவள் தன் நகங்களைக் களைந்து போடவேண்டும் இதற்கான எபிரெய வார்த்தை "ஆசா" என்பதாகும். நகத்தைத் தீட்டுதல், நகத்திற்கு வர்ணமிடுதல், நகத்தை அழகுபடுத்துதல் என்று இந்த வார்த்தைக்குப் பொருள் கூறலாம். 2சாமு 19:24 ஆவது வசனத்தில் மேவிபோசேத் தன் கால்களைச் சுத்தம் பண்ணினான் என்று கூறப்பட்டிருப்பது தன்னுடைய நகங்களுக்கு வர்ணம் பூசினான் என்று பொருள்படும்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் மனைவியைத் தள்ளிவிடுவதுபோல, சிறைப்பிடிக்கப்பட்ட ஸ்திரீயை விவாகம்பண்ணிய பின்பு, அவளை தள்ளிவிடவிரும்பினால், மோசேயின் பிரமாணத்தில் அதற்கும் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு இதுபற்றிச் சொல்லும்போது, "அவள்மேல் உனக்குப் பிரியமில்லாமற்போனால், நீ அவளைப் பணத்திற்கு விற்காமல், அவளைத் தன் இஷ்டப்படி போகவிடலாம்; நீ அவளைத் தாழ்மைப்படுத்தினபடியினால் அவளாலே ஆதாயம் பெறும்படி தேடவேண்டாம்" (உபா 21:14) என்று சொல்லுகிறார்.

சிறைபிடித்து வந்த ஒரு ஸ்திரீயை விவாகம் பண்ணுவதற்கு வேதாகமத்தில் தனியாக ஒரு பிரமாணம் கூறப்பட்டிருக்கிறது. அவள் தன் சிறையிருப்பின் வஸ்திரத்தை நீக்க வேண்டும். அதன்பின்பு, தன்னைச் சிறைபிடித்து வந்து விவாகம் செய்துகொள்ளப் போகிறவனுடைய வீட்டில் அவள் ஒருமாதக்காலம் இருந்து தன் தகப்பனையும், தாயையும் நினைத்து துக்கம் கொண்டாடலாம். அதன்பின்பே, அவன் அவளை விவாகம் பண்ண வேண்டும். விவாகம் செய்த பின்பு, அவனுக்கு அவள்மேல் பிரியமில்லாமற்போனால், அவளைப் பணத்திற்கு விற்றுவிடக்கூடாது. அவளைத் தன் இஷ்டபோல போகவிட்டுவிட வேண்டும். (உபா 21:10-14).

இஸ்ரவேல் புத்திரர், சிறைப்பிடிக்கப்பட்ட ஸ்திரீயை விவாகம்பண்ணுவதற்கும், விவாகம்பண்ணிய பின்பு அவளைப் பிடிக்கவில்லையென்றால், அவளைத் தள்ளிவிடுவதற்கும் மோசே அனுமதிகொடுக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தாருடைய இருதயக்கடினத்தினிமித்தமாகவே, மோசே அவர்களுக்கு இந்த அனுமதியைக் கொடுத்திருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய இனத்தாரை மாத்திரமே விவாகம்பண்ண வேண்டும். அவர்கள் புறஜாதியாரோடு விவாகசம்பந்தம் பண்ணக்கூடாது. மேலும், ஒரு புருஷனுக்கு ஒரு மனைவி மாத்திரம் என்பது கர்த்தருடைய சித்தம். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, தங்களுடைய சுயவிருப்பத்தின் பிரகாரமாக, தங்களுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட ஸ்திரீகளை மனைவிகளாக்குகிறார்கள். புறஜாதியாரையும் விவாகம்பண்ணிக்கொள்கிறார்கள். இதன் மூலமாக இஸ்ரவேல் புத்திரர் தங்களைத் தாங்களே கெடுத்துப்போடுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் புறஜாதி ஜனங்களோடு விவாகம்பண்ணும்போது, அவர்களுடைய பாளயம் தீட்டுப்படுகிறது. புறஜாதியார் மூலமாக இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே விக்கிரகாராதனை பிரவேசிக்கிறது. இதைத் தொடர்ந்து இஸ்ரவேலின் பாளயத்தில் விக்கிரகாராதனையும், துன்மார்க்கமும், கர்த்தர் அருவருக்கும் சகல காரியங்களும் அதிகரிக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் இனத்தாரில் ஒரு ஸ்திரீயை விவாகம்பண்ணிக்கொண்டு, அவளோடு மாத்திரம் குடும்பம் நடத்தவேண்டும். ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவிகளை வைத்துக்கொள்ளவேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரர் ஆசைப்படக்கூடாது.

இஸ்ரவேல் ஜனத்தார் ஒன்றுக்கும் மேற்பட்ட ஸ்திரீகளை விவாகம்பண்ணுவது மோசேயின் பிரமாணத்தில் அனுமதிக்கப்பட்டாலும், புதிய ஏற்பாட்டுக்காலத்தில், இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தில் பலதார விவாகம் அனுமதிக்கப்படவில்லை. மோசேயின் பிரமாணம் கர்த்தரை மகிமைப்படுத்துவதைவிட, கிறிஸ்துவின் சுவிசேஷம் கர்த்தரை அதிகமாய் மகிமைப்படுத்துகிறது.

முதற்பேறானவனுக்கு சேஷ்டபுத்திர சுதந்தரம் உபா 21:15-17

உபா 21:15. இரண்டு மனைவிகளையுடைய ஒருவன், ஒருத்தியின்மேல் விருப்பாயும் மற்றவள்மேல் வெறுப்பாயும் இருக்க, இருவரும் அவனுக்குப் பிள்ளைகளைப் பெற்றார்களேயாகில், முதற்பிறந்தவன் வெறுக்கப்பட்டவளின் புத்திரனானாலும்,

உபா 21:16. தகப்பன் தனக்கு உண்டான ஆஸ்தியைத் தன் பிள்ளைகளுக்குப் பங்கிடும் நாளில், வெறுக்கப்பட்டவளிடத்தில் பிறந்த முதற்பேறானவனுக்கு சேஷ்டபுத்திர சுதந்தரத்தைக் கொடுக்கவேண்டுமேயல்லாமல், விரும்பப்பட்டவளிடத்தில் பிறந்தவனுக்குக் கொடுக்கலாகாது.

உபா 21:17. வெறுக்கப்பட்டவளிடத்தில் பிறந்தவனை சேஷ்டபுத்திரனாக அங்கிகரித்து, தனக்கு உண்டான ஆஸ்திகளிலெல்லாம் இரண்டு பங்கை அவனுக்குக் கொடுக்க வேண்டும்; அவன் தன் தகப்பனுடைய முதற்பலன், சேஷ்டபுத்திர சுதந்தரம் அவனுக்கே உரியது.

மோசேயின் பிரமாணத்தில் முதற்பேறானவனுக்கு சேஷ்டபுத்திர சுதந்தரம் கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தகப்பன் தனக்கு உண்டான ஆஸ்தியை தன் பிள்ளைகளுக்கு பங்கிடும் நாளில், தன்னுடைய பிள்ளைகளில் முதற்பேறானவனுக்கு சேஷ்டபுத்திர சுதந்தரத்தைக் கொடுக்கவேண்டும். இதன் பிரகாரம் சேஷ்டபுத்திரனுக்கு, தகப்பன் தனக்கு உண்டான ஆஸ்திகளிலெல்லாம், இரண்டு பங்கை அவனுக்கு கொடுக்கவேண்டும்.

முதற்பேறானவனுக்கு சேஷ்டபுத்திர சுதந்தரம் கொடுப்பது இஸ்ரவேல் புத்திரரில் காணப்படுகிற பொதுவான வழக்கம். சில சமயங்களில் முதற்பேறானவனுக்கு சேஷ்டபுத்திர சுதந்தரம் கொடுப்பதில் ஒரு சில பிரச்சனைகள் வரும். அப்படிப்பட்ட ஒரு பிரச்சனையைப்பற்றி மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். இது ஒரு கற்பனை சம்பவம்.

ஒரு மனுஷனுக்கு இரண்டு மனைவிகள் இருக்கிறார்கள். அவன் தன்னுடைய இரண்டு மனைவிகளின்மீதும் ஒன்றுபோல் அன்புகூராமல், ஒருத்தியை நேசிக்கிறான், வேறொருத்தியை வெறுக்கிறான். அவன் வெறுக்கிற மனைவிக்கு பிறந்த பிள்ளை முதற்பேறானவனாயிருக்கிறான். இப்படிப்பட்ட சூழ்நிலையிலும், தகப்பன், பாரபட்சம் காண்பியாமல், மோசேயின் பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து, முதற்பேறானவனுக்கு சேஷ்டபுத்திர சுதந்தரம் கொடுக்கவேண்டும்.

மோசே இந்தப் பிரமாணத்தை விளக்குவதற்கு ஒரு சம்பவத்தை சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

"இரண்டு மனைவிகளையுடைய ஒருவன், ஒருத்தியின்மேல் விருப்பாயும் மற்றவள்மேல் வெறுப்பாயும் இருக்க, இருவரும் அவனுக்குப் பிள்ளைகளைப் பெற்றார்களேயாகில், முதற்பிறந்தவன் வெறுக்கப்பட்டவளின் புத்திரனானாலும், தகப்பன் தனக்கு உண்டான ஆஸ்தியைத் தன் பிள்ளைகளுக்குப் பங்கிடும் நாளில், வெறுக்கப்பட்டவளிடத்தில் பிறந்த முதற்பேறானவனுக்கு சேஷ்டபுத்திர சுதந்தரத்தைக் கொடுக்கவேண்டுமேயல்லாமல், விரும்பப்பட்டவளிடத்தில் பிறந்தவனுக்குக் கொடுக்கலாகாது" (உபா 21:15,16) என்றும்,

"வெறுக்கப்பட்டவளிடத்தில் பிறந்தவனை சேஷ்டபுத்திரனாக அங்கிகரித்து, தனக்கு உண்டான ஆஸ்திகளிலெல்லாம் இரண்டு பங்கை அவனுக்குக் கொடுக்க வேண்டும்; அவன் தன் தகப்பனுடைய முதற்பலன், சேஷ்டபுத்திர சுதந்தரம் அவனுக்கே உரியது" (உபா 21:17) என்றும் சொல்லுகிறார்.

இவனுக்கு இரண்டு மனைவிகள் இருக்கிறார்கள். இருவரும் அவனுக்குப் பிள்ளைகளைப் பெற்றிருக்கிறார்கள். தன்னுடைய சேஷ்டபுத்திர சுதந்தரத்தை முதற்பிறந்தவனுக்கே கொடுக்க வேண்டும். அதைத் தன் இஷ்டப்பிரகாரம், எந்தப் பிள்ளைக்கு வேண்டுமானாலும் கொடுத்து விட முடியாது. இரண்டு மனைவிகளில் ஒருத்தியை அவன் அதிகமாக நேசித்தாலும், அவளுடைய பிள்ளை முதற்பேறானவனாக இல்லையென்றால், அவனுக்கு சேஷ்டபுத்திர சுதந்தரத்தைக் கொடுக்கக்கூடாது. (உபா 21:15-17)

யாக்கோபு லேயாளை விட ராகேலிடத்தில் அதிகமாகப் பிரியம் வைத்திருந்தார். (ஆதி 29:31) தேவன் ஏசாவை வெறுத்து, யாக்கோபைச் சிநேகித்தார் (மல் 1:2-3; ரோமர் 9:13). புதிய ஏற்பாட்டிலும் வெறுப்பதைப் பற்றியும், அதிகமாக நேசிப்பதைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. (லூக்கா 14:26)

இரண்டு மனைவிகளை விவாகம்பண்ணுவதை மோசேயின் பிரமாணம் தடைபண்ணவில்லை. இங்கு சொல்லப்பட்டிருக்கிற பிரச்சனை, இரண்டு மனைவிகளை விவாகம்பண்ணியதினால் ஏற்பட்ட பிரச்சனையாகும்.

கர்த்தருடைய பிரமாணம் பலவீனமானவர்களுக்கு ஆதரவாயிருக்கிறது. அவர் திக்கற்ற பிள்ளைகளை கைவிடாத தேவன். இந்த சம்பவத்தில் முதற்பிறந்தவன் வெறுக்கப்பட்டவளின் புத்திரனாயிருக்கிறான். இவனுடைய தகப்பன் இவனை வெறுத்தாலும், கர்த்தர் இவனை வெறுக்கவில்லை.

"லேயாள் அற்பமாய் எண்ணப்பட்டாள் என்று கர்த்தர் கண்டு, அவள் கர்ப்பம் தரிக்கும் செய்தார்; ராகேலோ மலடியாயிருந்தாள்" (ஆதி 29:31).

மோசேயின் பிரமாணம் பெற்றோருக்கு சத்தியத்தை உபதேசம்பண்ணுகிறது. பெற்றோர் தங்கள் பிள்ளைகள் எல்லோரையும் ஒன்றுபோல நேசிக்கவேண்டும். அவர்களுடைய அன்பில் பட்சபாதம் இருக்கக்கூடாது. தகப்பன் தன்னுடைய ஆஸ்தியை பங்கிட்டு கொடுக்கும்போது, தன்னுடைய சுயவிருப்பத்தின்படி பங்கிடாமல், கர்த்தருடைய விருப்பத்தின்படி பங்கிடவேண்டும்.

முதற்பேறானவனுக்கு சேஷ்டபுத்திர சுதந்தரம் கிடைக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம். அவன் தன் தகப்பனுக்கு பின்பு குடும்பத்தின் பாரங்களை சுமக்கிறவன். அவனே தன் தகப்பனுக்கு பின்பு குடும்பத்தை ஆதரிக்கவேண்டியவன். தகப்பன் தன்னுடைய குடும்ப காரியங்களை கவனிக்கும்போது, தன்னுடைய சுயஆசையை நிறைவேற்றவேண்டும் என்று நினையாமல், தன்னுடைய குடும்பம் நன்றாயிருக்கவேண்டும் என்று நினைத்து, குடும்பத்திற்கு நன்மையான காரியங்களை செய்யவேண்டும்.

அடங்காத துஷ்டப்பிள்ளை உபா 21:18-21

உபா 21:18. தன் தகப்பன் சொல்லையும் தன் தாயின் சொல்லையும் கேளாமலும், அவர்களால் தண்டிக்கப்பட்டும், அவர்களுக்குக் கீழ்ப்படியாமலும் போகிற அடங்காத துஷ்டப்பிள்ளை ஒருவனுக்கு இருந்தால்,

உபா 21:19. அவன் தகப்பனும் அவன் தாயும் அவனைப் பிடித்து, அவன் இருக்கும் பட்டணத்தின் மூப்பரிடத்துக்கும் அவ்விடத்து வாசலுக்கும் அவனைக் கொண்டுபோய்:

உபா 21:20. எங்கள் மகனாகிய இவன் அடங்காத துஷ்டனாயிருக்கிறான்; எங்கள் சொல்லைக் கேளான்; பெருந்தீனிக்காரனும் குடியனுமாயிருக்கிறான் என்று பட்டணத்தின் மூப்பரோடே சொல்லுவார்களாக.

உபா 21:21. அப்பொழுது அவன் சாகும்படி அந்தப் பட்டணத்து மனிதரெல்லாரும் அவன்மேல் கல்லெறியக்கடவர்கள்; இப்படியே தீமையை உன் நடுவிலிருந்து விலக்கிப்போடவேண்டும்; இஸ்ரவேலர் எல்லாரும் அதைக் கேட்டுப் பயப்படுவார்கள்.

அடங்காத துஷ்டப்பிள்ளையை தண்டிக்கவேண்டிய பிரமாணத்தைப்பற்றி மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். மோசே இந்தப் பிரமாணத்தை சொல்லுவதற்கு முன்பு, முதற்பேறானவனுக்கு கொடுக்கவேண்டிய சேஷ்டபுத்திர சுதந்தரத்தைப்பற்றிச் சொன்னார்.

பிள்ளைகளுக்கு கிடைக்கவேண்டிய பங்கு முறைப்படி கிடைக்கவேண்டும். தங்கள் ஆஸ்திகளை பெற்றோர் பிள்ளைகளுக்கு பங்கிட்டு கொடுக்கும்போது, பட்சபாதமில்லாமல் நடந்துகொள்ளவேண்டும். பிள்ளைகளும் தங்களுடைய தகப்பனின் ஆஸ்தியைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதியுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

மோசே இந்த வசனப்பகுதியில் துஷ்டப்பிள்ளையைப்பற்றிச் சொல்லுகிறார். இவன் தன் தகப்பன் சொல்லையும் தன் தாயின் சொல்லையும் கேளாமலும், அவர்களால் தண்டிக்கப்பட்டும், அவர்களுக்குக் கீழ்ப்படியாமலும் போகிற அடங்காத துஷ்டப்பிள்ளையாயிருக்கிறான் (உபா 21:18).

பிள்ளைகள் தங்கள் பெற்றோரைக் கனம்பண்ணவேண்டும். அவர்களுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியவேண்டும். இஸ்ரவேல் புத்திரரை கெடுத்துப்போடுகிற பலவிதமான பாவங்களைப்பற்றி மோசே அவர்களுக்கு சொல்லியிருக்கிறார். அந்தப் பாவங்களிலெல்லாம் மிகவும் மோசமான பாவம். பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் சொல்லைக்கேளாமல், அவர்களுக்கு கீழ்ப்படியாமல் போகும் பாவமாகும்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளைக் கண்டித்து வளர்க்கவேண்டும். பிரம்பைக் கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான். இந்த துஷ்டப்பிள்ளையோ, தன்னுடைய பெற்றோரால் தண்டிக்கப்பட்டும், அவர்களுக்கு கீழ்ப்படியாமலும், அடங்காமலும் இருக்கிறான். இவன் பெருந்தீனிக்காரனாகவும் குடியனுமாகவும் இருக்கிறான்.

பெருந்தீனிக்காரராகவும், குடிகாரர்களாகவும் இருக்கிற பிள்ளைகள் தங்களுடைய மாம்சத்தின் இச்சைகளுக்கு அடிமையாயிருக்கிறவர்கள். இப்படிப்பட்டவர்கள் தங்கள் பெற்றோர் சொல்லும் ஆலோசனைகளை செவிகொடுத்து கேட்கமாட்டார்கள். இப்படிப்பட்ட துஷ்டப்பிள்ளையை, அவனுடைய பெற்றோர் என்ன செய்யவேண்டுமென்று மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

"அந்த அடங்காத துஷ்டப்பிள்ளையின் தகப்பனும் அவன் தாயும் அவனைப் பிடித்து, அவன் இருக்கும் பட்டணத்தின் மூப்பரிடத்துக்கும் அவ்விடத்து வாசலுக்கும் அவனைக் கொண்டுபோய்: எங்கள் மகனாகிய இவன் அடங்காத துஷ்டனாயிருக்கிறான்; எங்கள் சொல்லைக் கேளான்; பெருந்தீனிக்காரனும் குடியனுமாயிருக்கிறான் என்று பட்டணத்தின் மூப்பரோடே சொல்லுவார்களாக" (உபா 21:19,20) என்று மோசே சொல்லுகிறார்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளைக் கண்டித்து திருத்தவில்லையென்றால், பிற்காலத்தில் அந்தப் பிள்ளைகளை ஊரிலுள்ளவர்கள் தண்டிப்பார்கள். நம்முடைய பிள்ளைகள் மற்றவர்களுடைய கையினால் அடி வாங்கக்கூடாது என்றால், நாமே நம்முடைய பிள்ளைகளைக் கண்டித்து வளர்க்கவேண்டும். ஆனால் இந்தத் துஷ்டனோ, தன்னுடைய பெற்றோரால் தண்டிக்கப்பட்டும், அவர்களுக்கு கீழ்ப்படியாதவனாகவும், அடங்காதவனாகவும் இருக்கிறான்.

இப்படிப்பட்ட அடங்காத துஷ்டப்பிள்ளையை பட்டணத்தின் மூப்பரிடத்தில் ஒப்புக்கொடுக்கவேண்டும். மூப்பர்கள் பட்டணத்து வாசலிலே வழக்குகளை விசாரிப்பதற்காக அமர்ந்திருப்பார்கள்.

அப்பொழுது அவன் சாகும்படி அந்தப் பட்டணத்து மனிதரெல்லாரும் அவன்மேல் கல்லெறியக்கடவர்கள்; இப்படியே தீமையை உன் நடுவிலிருந்து விலக்கிப்போடவேண்டும்; இஸ்ரவேலர் எல்லாரும் அதைக் கேட்டுப் பயப்படுவார்கள் (உபா 21:21) என்று மோசே சொல்லுகிறார்.

மனுஷன் மதுபானத்தை பானம்பண்ணும்போது, அவனுடைய புத்தி மங்கிவிடுகிறது. அவன் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தையும் மறந்துபோகிறான். தன்னுடைய தேசத்தின் சட்டதிட்டங்களையும் மறந்துபோகிறான். தன் பெற்றோரைக் கனம்பண்ணவேண்டும் என்னும் அடிப்படை பிரமாணத்தைக்கூட குடிகாரன் மறந்துவிடுகிறான்.

"மதுபானம்பண்ணினால் அவர்கள் நியாயப்பிரமாணத்தை மறந்து, சிறுமைப்படுகிறவர்களுடைய நியாயத்தையும் புரட்டுவார்கள்" (நீதி 31:5).

மரத்திலே தூக்கிப்போடப்பட்டவன் உபா 21:22,23

உபா 21:22. கொலைசெய்யப்பட ஒருவன்மேல் சாவுக்குப் பாத்திரமான பாவம் உண்டாயிருக்க, அவனைக் கொலைசெய்யும்படி, மரத்திலே தூக்கிப்போடுவாயானால்,

உபா 21:23. இரவிலே அவன் பிரேதம் மரத்திலே தொங்கலாகாது; அந்நாளிலேதானே அதை அடக்கம்பண்ணவேண்டும்; தூக்கிப்போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன்; ஆகையால் உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் உன் தேசத்தைத் தீட்டுப்படுத்தாயாக.

மரத்திலே தூக்கிப் போடப்பட்டவனுடைய சரீரத்தை முறைப்படி மண்ணிலே அடக்கம்பண்ணவேண்டும். இதுபோலவே நியாயாதிபதிகளுடைய உத்தரவுப்படி கல்லெறிந்து கொல்லப்பட்டவர்களுடைய சரீரங்களும், முறைப்படி மண்ணிலே அடக்கம்பண்ணப்படவேண்டும். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் பல குற்றங்களுக்கு மரணதண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது. மரணதண்டனையை நிறைவேற்றும் முறையையும் நியாயாதிபதிகளே தீர்மானம் பண்ணுகிறார்கள்.

மரத்திலே தூக்கிப்போடுவது குற்றவாளியைக் கொன்றுபோடும் ஒரு முறையாகும். கொலைசெய்யப்பட்ட ஒருவன்மேல், சாவுக்குப் பாத்திரமான பாவம் உண்டாயிருக்கும்போது, அவனைக் கொலைசெய்யும்படி மரத்திலே தூக்கிப்போடுவது வழக்கம் (உபா 21:22).

குற்றவாளியின் சரீரம் மரத்திலே தொங்குவதை அந்த வழியாக வருவோரும் போவோம் பார்ப்பார்கள். அதைக் கண்டு அவர்களுடைய மனதிலே பயமுண்டாகும். தாங்களும் மரணத்திற்கு பாத்திரமான குற்றம் செய்தால், தங்களுக்கும் இப்படிப்பட்ட தண்டனை கிடைக்கும் என்பதை ஜனங்கள் அறிந்துகொள்வார்கள்.

குற்றவாளியை மரத்திலே தூக்கிப்போட்டு கொன்றாலும், அவனுடைய சரீரத்தை முறைப்படி பூமியிலே அடக்கம்பண்ணப்படவேண்டும் என்று மோசே சொல்லுகிறார். மேலும் அவனுடைய பிரேதம் இரவிலே மரத்திலே தொங்கலாகாது என்றும், சூரியன் அஸ்தமிக்கும் நேரம் வருவதற்கு முன்பாக, மரத்திலே தொங்குகிற பிரேதத்தை கீழே இறக்கி, அதை அடக்கம்பண்ணிவிடவேண்டும் என்றும் மோசே சொல்லுகிறார்.

தேவனாகிய கர்த்தர் மனுஷருடைய சரீரங்களையும் கனம்பண்ணுகிறார். அவர்கள் மரணத்திற்கு பாத்திரமான குற்றவாளிகளாகயிருந்தாலும், கர்த்தர் அவர்களுக்கும் இரக்கம் காண்பிக்கிறார்.

மரணத்திற்குப் பாத்திரமானவனை, கொலைசெய்யும்படி மோசேயின் பிரமாணத்தின்படி மரத்திலே தூக்கிப்போடுகிறார்கள். ஆனாலும் "இரவிலே அவன் பிரேதம் மரத்திலே தொங்கலாகாது; அந்நாளிலேதானே அதை அடக்கம்பண்ணவேண்டும்; தூக்கிப்போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன்; ஆகையால் உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் உன் தேசத்தைத் தீட்டுப்படுத்தாயாக" (உபா 21:23) என்று மோசே சொல்லுகிறார்.

செத்துப்போனவனுடைய சரீரத்தைத் தொடுவது இஸ்ரவேல் புத்திரருக்கு தீட்டான காரியம். இறந்தவனுடைய சரீரம் மரத்திலே தொங்கும்போது, அது அந்த மரத்தையும், மரம் இருக்கிற பூமியையும் தீட்டுப்படுத்துகிறது. ஆகையினால் இரவு வேளையிலே அந்தப் பிரேதம் மரத்திலே தொங்கக்கூடாது என்று மோசே சொல்லுகிறார்.

மரத்திலே தூக்கிப்போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன் (கலா 3:13-14; யோசு 8:29; யோசு 10:26-27). குற்றவாளிக்கு கொடுக்கப்படும் தண்டனைகளில், மிகவும் கடுமையான தண்டனை, அவனை மரத்திலே தூக்கிப்போடுவது ஆகும். இவன் வானத்திற்கும் பூமிக்கும் நடுவிலே தொங்கிக்கொண்டிருக்கிறான். பூமியும் இவனை கைவிட்டுவிடுகிறது. வானமும் இவனை கைவிட்டுவிடுகிறது. இவன் தேவனால் சபிக்கப்பட்டவன்.

ஆகையினால் அவன் பிரேதம் இரவிலே மரத்திலே தொங்கலாகாது என்று மோசே சொல்லுகிறார். அவனை எத்தனை மணிக்கு மரத்திலே தொங்கவிட்டாலும், இரவிலே அவனுடைய பிரேதத்தை மரத்திலிருந்து கீழே இறக்கி அடக்கம்பண்ணிவிடவேண்டும்.

22 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் தங்களிடத்தில் அன்புகூருவதுபோல பிறரிடத்திலும் அன்புகூரவேண்டும். தங்களுடைய அன்பை வெளிப்படுத்தும் வண்ணமாக, அவர்களுடைய காணாமல்போன மிருகஜீவன்களை, அவர்களிடத்தில் திருப்பிக்கொண்டுபோய் கொடுக்கவேண்டும் (உபா 22:1-4).

புருஷரும் ஸ்திரீகளும் தங்களுக்குரிய உடைகளை தரித்துக்கொள்ளவேண்டும் (உபா 22:5). குருவிக்கூட்டிலுள்ள குஞ்சுகளோடே தாயையும் பிடிக்கக்கூடாது (உபா 22:6,7). புது வீட்டின்மேல் கைப்பிடி சுவரைக் கட்டவேண்டும் (உபா 22:8). கலப்படம் பண்ணக்கூடாது (உபா 22:9,10). மேல்சட்டையின் ஓரங்களில் தொங்கல்களை உண்டுபண்ணவேண்டும் (உபா 22:12).

கன்னிமையின் அடையாளம் (உபா 22:13-19). வேசித்தனம் பண்ணின ஸ்திரீக்கு தண்டனை (உபா 22:20-21). பிறன் மனைவியோடே சயனிக்கிறவனுக்கும், அந்த ஸ்திரீக்கும் தண்டனை (உபா 22:22). ஒருவனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற கன்னிகை (உபா 22:23-27). ஒருவனுக்கு இன்னும் நியமிக்கப்படாத கன்னிகை (உபா 22:28,29). தகப்பனுடைய மனைவியை சேரலாகாது (உபா 22:30).

சகோதர சிநேகம்
உபா 22:1-4

உபா 22:1. உன் சகோதரனுடைய மாடாவது ஆடாவது வழிதப்பிப் போகிறதைக் கண்டாயானால், அதைக் காணாதவன் போல் இராமல், அதை உன் சகோதரனிடத்துக்குத் திருப்பிக்கொண்டு போகக்கடவாய்.

உபா 22:2. உன் சகோதரன் உனக்குச் சமீபமாயிராமலும் உனக்கு அறிமுகமாயிராமலும் இருந்தால், நீ அதை உன் வீட்டிற்குக் கொண்டுபோய், அதை உன் சகோதரன் தேடிவருமட்டும் உன்னிடத்திலே வைத்து, அவனுக்குத் திரும்பக் கொடுக்கக்கடவாய்.

உபா 22:3. அப்படியே அவன் கழுதையைக் குறித்தும் செய்யக்கடவாய்; அவன் வஸ்திரத்தைக்குறித்தும் அப்படியே செய்யக்கடவாய்; உன் சகோதரனிடத்திலிருந்து காணாமற்போனவைகளில் எதையாகிலும் கண்டுபிடித்தாயானால் அப்படியே செய்யக்கடவாய்; அவைகளை நீ காணாதவன்போல் விட்டுப்போகலாகாது.

உபா 22:4. உன் சகோதரனுடைய கழுதையாவது அவனுடைய மாடாவது வழியிலே விழுந்துகிடக்கிறதைக் கண்டாயானால், அதைக் காணாதவன்போல விட்டுப்போகாமல், அவனோடேகூட அதைத் தூக்கியெடுத்துவிடுவாயாக.

இஸ்ரவேல் புத்திரர் தங்களை நேசிப்பதுபோல பிறரையும் நேசிக்கவேண்டும். அவர்கள் தங்கள் இனத்தாராகிய இஸ்ரவேல் புத்திரரை நேசிப்பதுபோல, அந்நியரையும் நேசிக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் அந்நியரையும் நேசிக்கவேண்டும் என்னும் பிரமாணம் யாத்திராகமம் 23:4-9 ஆகிய வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

நம்மிடத்தில் அன்புகூருவதுபோல, நாம் பிறரிடத்திலும் அன்பு கூரவேண்டும். யாருக்கும் யாரும் சத்துருவாகயிருப்பதில்லை. ஆனாலும் நம்முடைய ஜென்ம சுபாவத்தினால், நாம் ஒரு சிலரை சிநேகிதராகவும், வேறு சிலரை சத்துருவாகவும் பாவிக்கிறோம். நம்முடைய சத்துருக்களுக்கும் நாம் நன்மை செய்யவேண்டும் என்பதே கர்த்தருடைய பிரமாணம்.

"உன் சத்துருவின் மாடாவது அவனுடைய கழுதையாவது தப்பிப்போகக்கண்டால், அதைத் திரும்ப அவனிடத்தில் கொண்டுபோய் விடுவாயாக. உன்னைப் பகைக்கிறவனுடைய கழுதை சுமையோடே விழுந்துகிடக்கக் கண்டாயானால், அதற்கு உதவிசெய்யாதிருக்கலாமா? அவசியமாய் அவனோடேகூட அதற்கு உதவிசெய்வாயாக" (யாத் 23:4,5) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நம்முடைய சத்துருக்களையும் நாம் சிநேகிக்கவேண்டும் என்பது புதிய பிரமாணமல்ல. இது ஒரு பழைய பிரமாணம். இந்தப் பிரமாணம் பழைய பிரமாணமாக இருந்தாலும், இது எல்லா காலத்திற்கும் பொதுவான பிரமாணமாயிருக்கிறது.

"உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் புசிக்க ஆகாரங்கொடு; அவன் தாகமாயிருந்தால், குடிக்கத் தண்ணீர் கொடு. அதினால் நீ அவன் தலையின்மேல் எரிகிற தழல்களைக் குவிப்பாய்; கர்த்தர் உனக்குப் பலனளிப்பார்" (நீதி 25:21,22) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நம்முடைய சத்துருக்களுக்கும் நம்மைப் பகைக்கிறவர்களுக்கும், நாம் இதுபோல நன்மை செய்யும்போது, நம்முடைய சிநேகிதர்களுக்கு நாம் இதைவிட அதிகமான நன்மைகளை செய்வோம். தங்களுடைய சத்துருக்களுக்கு உதவி செய்கிறவர்கள், தங்களுடைய சிநேகிதருக்கு மிகவும் அதிகமான உதவிகளை செய்வார்கள்.

நம்முடைய சத்துருக்களின் உடமைகளுக்கு ஆபத்தோ அல்லது சேதமோ வரும்போது நாம் உதவி செய்யவில்லையென்றால், அது நம்மீது வந்த பாவமாகயிருக்கும். இதுவே நமக்கு பாவமாகயிருக்கும்போது, நம்முடைய சிநேகிதர்களுக்கு ஆபத்தோ அல்லது சேதமோ வரும்போது, நாம் அவர்களுக்கு உதவி செய்யாமற்போனால், அது நம்மீது வரும் மிகப்பெரிய பாவமாகயிருக்கும்.

சத்துருவுடைய மாடோ அல்லது கழுதையோ வழிதப்பிப்போகும்போது, அதை திரும்ப அவனிடத்தில் கொண்டு போய் விடும்போது, நம்முடைய சத்துருவுக்கு நாம் உதவிசெய்கிறோம். நம்முடைய சத்துரு கர்த்தருடைய பாதையை விட்டு விலகி, பாவமான பாதையிலே வழிதப்பிப்போகும்போது, அவனை மறுபடியும் கர்த்தருக்கு சித்தமான பாதையில் வழிநடத்தும்போது, நாம் அவனுக்கு மிகப்பெரிய உதவியை செய்கிறோம்.

"சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகி மோசம் போகும்போது, மற்றொருவன் அவனைத் திருப்பினால், தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்" (யாக் 5:19,20).

ஒரு கழுதை சுமையோடு விழுந்து கிடக்க காணும்போது, அது நம்மைப் பகைக்கிறவனுடைய கழுதையாகயிருந்தாலும், நாம் அந்தக் கழுதைக்கு உதவி செய்யவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். விழுந்து கிடக்கிற கழுதைகளை தூக்கிவிட்டு உதவி செய்கிறவர்களைப்போல, பாவத்தில் விழுந்துகிடக்கிற ஆத்துமாக்களை தூக்கிவிட்டு உதவி செய்ய முன்வரவேண்டும். கழுதைகளைவிட மனுஷருடைய ஆத்துமா விலையேறப்பெற்றது.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் வாசம்பண்ணும்போது, அவர்களுடைய வீட்டுக்கு அருகாமையில், மற்றொரு இஸ்ரவேல் புத்திரனோ அல்லது புறஜாதி மார்க்கத்தைச் சேர்ந்தவனோ வாசம்பண்ணலாம். இஸ்ரவேல் புத்திரர் மற்றவர்கள் மீது அன்புகூரவேண்டும். அவர்களையும் தங்களைப்போல நேசித்து, அவர்களுக்கு உதவிசெய்யவேண்டும்.

தங்கள் சகோதரருடைய மாடாவது, ஆடாவது வழிதப்பிப்போகும்போது, அதை இஸ்ரவேல் புத்திரர் கண்டுபிடித்தால், அந்த மாட்டையோ அல்லது ஆட்டையோ அவனுக்கு திருப்பிக்கொடுக்கவேண்டும். மோசே இதுபற்றி இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லும்போது,

"உன் சகோதரனுடைய மாடாவது ஆடாவது வழிதப்பிப்போகிறதைக் கண்டாயானால், அதைக் காணாதவன்போல் இராமல், அதை உன் சகோதரனிடத்துக்குத் திருப்பிக்கொண்டு போகக்கடவாய். உன் சகோதரன் உனக்குச் சமீபமாயிராமலும் உனக்கு அறிமுகமாயிராமலும் இருந்தால், நீ அதை உன் வீட்டிற்குக் கொண்டுபோய், அதை உன் சகோதரன் தேடிவருமட்டும் உன்னிடத்திலே வைத்து, அவனுக்குத் திரும்பக் கொடுக்கக்கடவாய்" (உபா 22:1,2) என்று சொல்லுகிறார்.

காணாமல்போன பொருள் பிறருடையதாக இருந்தாலும் அதிலும் கவனம் செலுத்தி அதை உரியவரிடம் சேர்ப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். (ஏசா 58:7)

அந்த ஆடுமாடுகள் ஒருவேளை மேய்ச்சல் நிலத்தைத்தேடி பல இடங்களுக்கும் அலைந்து திரிந்து, தங்கள் வீடுகளுக்கு திரும்பி வரும் வழி தெரியாமல், வழிதப்பிப்போயிருக்கலாம். வழிதப்பிப்போன ஆடுமாடுகள் யாருடையதாகயிருந்தாலும், அதை இஸ்ரவேல் புத்திரர் காணும்போது, அதைப்பிடித்து, அதற்குரியவர்களிடத்தில் திருப்பி கொடுத்துவிடவேண்டும்.

ஆவிக்குரிய காரியங்களிலும், ஒரு சிலர் சத்தியத்தைவிட்டும், கர்த்தரை விட்டும் தப்பிப்போய்விடுவார்கள். நாம் அவர்களை கண்டுபிடித்து, கர்த்தரிடத்தில் திருப்பி அழைத்து வரவேண்டும். நாமும் கர்த்தரை விட்டும், அவருடைய சத்தியத்தை விட்டும் வழிதப்பிப்போய்விடாதவாறு மிகவும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

"சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகி மோசம் போகும்போது, மற்றொருவன் அவனைத் திருப்பினால், தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்" (யாக் 5:19,20).

"சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள்; நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்" (கலா 6:1,2).

பிறனுக்கு காணாமல்போன மிருகஜீவன் ஆடாகயிருந்தாலும், மாடாகயிருந்தாலும் அல்லது கழுதையாகயிருந்தாலும், அதை இஸ்ரவேல் புத்திரர் காணும்போது, அதற்குரியவர்களிடத்தில் திருப்பி கொண்டு வந்து கொடுக்கவேண்டும்.

"அப்படியே அவன் கழுதையைக் குறித்தும் செய்யக்கடவாய்; அவன் வஸ்திரத்தைக்குறித்தும் அப்படியே செய்யக்கடவாய்; உன் சகோதரனிடத்திலிருந்து காணாமற்போனவைகளில் எதையாகிலும் கண்டுபிடித்தாயானால் அப்படியே செய்யக்கடவாய்; அவைகளை நீ காணாதவன்போல் விட்டுப்போகலாகாது" (உபா 22:3) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

வழிதப்பிப்போன ஆடு, மாடு, கழுதை ஆகியவை வழியிலே விழுந்து கிடக்கலாம். அல்லது அது பள்ளத்திலே விழுந்து கிடக்கலாம். அந்த மிருக ஜீவனுக்கு உதவி தேவைப்படுகிறது. அதை தூக்கியெடுத்து, அதற்கு உதவிசெய்யவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் வழியில் பிறருடைய ஆடு மாடு, கழுதை ஆகிய ஏதாவது விழுந்து கிடக்கும்போது, அதைக் கண்டும் காணாதவர் போல போய்விடக்கூடாது.

மோசே இதுபற்றி இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லும்போது, "உன் சகோதரனுடைய கழுதையாவது அவனுடைய மாடாவது வழியிலே விழுந்துகிடக்கிறதைக் கண்டாயானால், அதைக் காணாதவன்போல விட்டுப்போகாமல், அவனோடேகூட அதைத் தூக்கியெடுத்துவிடுவாயாக" (உபா 22:4) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் பிறருடைய பொருளை கண்டுபிடிக்கும்போது, அந்தப் பொருள் தங்களிடத்தில் இருக்கிறது என்பதை எல்லா ஜனங்களுக்கும் முன்பாக மூன்று அல்லது நான்கு தரம் அறிவிப்பது வழக்கம். இது யூதருடைய பாரம்பரிய பழக்க வழக்கம்.

உடைகள்
உபா 22:5

உபா 22:5. புருஷரின் உடைகளை ஸ்திரீகள் தரிக்கலாகாது, ஸ்திரீகளின் உடைகளைப் புருஷர் தரிக்கலாகாது; அப்படிச் செய்கிறவர்கள் எல்லாரும் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்.

மோசே இதுவரையிலும் இஸ்ரவேல் புத்திரருக்கு மிகவும் முக்கியமான பிரமாணங்களைச் சொன்னார். அவைகளையெல்லாம் அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும், சமுதாய ஜீவியத்திலும் கைக்கொள்ளவேண்டியவை. மோசே இப்போது இஸ்ரவேல் புத்திரருடைய அன்றாட சமுதாய வாழ்க்கையில், கைக்கொள்ள வேண்டிய ஒரு சில பிரமாணங்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். அவற்றில் ஒன்று இஸ்ரவேல் புத்திரர் தரித்துக்கொள்ள வேண்டிய உடைகளைப்பற்றியது.

"புருஷரின் உடைகளை ஸ்திரீகள் தரிக்கலாகாது, ஸ்திரீகளின் உடைகளைப் புருஷர் தரிக்கலாகாது; அப்படிச் செய்கிறவர்கள் எல்லாரும் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்" *(உபா 22:5)* என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

தேவனுடைய பிள்ளைகள் கண்ணியமான வஸ்திரங்களை உடுத்தியிருக்க வேண்டும். விக்கிரகாராதனைக்காரர்கள் தாறுமாறான வஸ்திரங்களை உடுத்திக் கொள்வார்கள். ஆண்கள் பெண்களுடைய வஸ்திரங்களையும், பெண்கள் ஆண்களுடைய வஸ்திரங்களையும் உடுத்தி விக்கிரகாராதனையில் குடித்து வெறித்திருப்பார்கள். இது கர்த்தர் அருவருக்கும் பாவம். மனுக்குலத்திற்கு இது ஓர் அவமானம்.

புருஷரின் உடைகளை ஸ்திரீகள் தரிப்பதும், ஸ்திரீகளின் உடைகளை புருஷர்கள் தரிப்பதும் விக்கிரகாராதனையோடு சம்பந்தப்பட்ட காரியம். வீனஸ் என்னும் புறஜாதிதெய்வத்தை ஆராதிக்கும்போது, அதை ஆராதிக்கிற புருஷர்கள் ஸ்திரீகளின் உடைகளையும், ஸ்திரீகள் புருஷரின் உடைகளையும் தரித்துக்கொள்வது வழக்கம். இஸ்ரவேல் புத்திரர் இதுபோல உடைகளைத் தரித்துக்கொள்ளும்போது, அவர்கள் புறஜாதியாரின் விக்கிரகாராதனைக்கு ஒத்த வேஷம் தரிக்கிறார்கள்.

கர்த்தர் மனுஷரை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்திருக்கிறார். அவர் ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசம்பண்ணியிருக்கிறார். புருஷர்கள் புருஷர்களைப்போல இருக்கவேண்டும். ஸ்திரீகள் ஸ்திரீகளைப்போல இருக்கவேண்டும். இதுவே கர்த்தருடைய சித்தம். கர்த்தருடைய நியமத்தை மனுஷர் மாற்றுவதற்கு முயற்சி பண்ணக்கூடாது.

ஒரு சில புருஷர்கள் ஸ்திரீகளைப்போல உடைகளைத் தரித்து, மற்ற ஸ்திரீகளை வஞ்சிப்பார்கள். இப்படிப்பட்ட அசுத்தமான காரியங்கள் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே காணப்படக்கூடாது.

குருவிக்கூடு
உபா 22:6,7

உபா 22:6. வழியருகே ஒரு மரத்திலாவது தரையிலாவது குஞ்சுகளாயினும் முட்டைகளாயினுமுள்ள ஒரு குருவிக்கூடு உனக்குத் தென்படும்போது, தாயானது குஞ்சுகளின்மேலாவது முட்டைகளின்மேலாவது அடைகாத்துக் கொண்டிருந்தால், நீ குஞ்சுகளோடே தாயையும் பிடிக்கலாகாது.

உபா 22:7. தாயைப் போகவிட்டு, குஞ்சுகளை மாத்திரம் எடுத்துக்கொள்ளலாம்; அப்பொழுது நீ நன்றாயிருப்பாய்; உன் நாட்களும் நீடித்திருக்கும்.

இஸ்ரவேல் புத்திரர் மனுஷர்மீது அன்புகூருவதுபோல, சாதாரண ஜீவராசிகளாகிய குருவிகள்மீதும் அன்புகூரவேண்டும். மோசே ஒரு குருவிக்கூட்டைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "வழியருகே ஒரு மரத்திலாவது தரையிலாவது குஞ்சுகளாயினும் முட்டைகளாயினுமுள்ள ஒரு குருவிக்கூடு உனக்குத் தென்படும்போது, தாயானது குஞ்சுகளின்மேலாவது முட்டைகளின்மேலாவது அடைகாத்துக் கொண்டிருந்தால், நீ குஞ்சுகளோடே தாயையும் பிடிக்கலாகாது" *(உபா 22:6)* என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தாயைப் போகவிட்டு, குஞ்சுகளை மாத்திரம் எடுத்துக்கொள்ளலாம்; அப்பொழுது அவர்கள் நன்றாயிருப்பார்கள். அவர்களுடைய நாட்களும் நீடித்திருக்கும் (உபா 22:7).

தாய்ப் பறவையானது, குஞ்சுகளின்மேலாவது முட்டைகளின் மேலாவது அடைகாத்துக் கொண்டிருக்கும்போது தாய்ப் பறவையையும், அதன் குஞ்சுகளையும் பிடித்துக் கொள்ளக்கூடாது. மோசேயின் பிரமாணத்தில் மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் இரக்கம் காண்பிப்பதைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. பூமியில் ஒருசில விஷஜந்துக்களை அழிப்பதற்கு பறவைகளும் தேவை. கர்த்தர் எல்லா சிருஷ்டிகளையும் ஒரு நோக்கத்தோடேயே சிருஷ்டித்திருக்கிறார். கர்த்தருக்குச் சித்தமில்லாமல் நம்முடைய சுய முயற்சியினால் எந்த சிருஷ்டியையும் அழித்துப்போடக்கூடாது.

"போரடிக்கிற மாட்டை வாய்கட்டாயாக என்று மோசேயின் பிரமாணத்திலே எழுதியிருக்கிறதே. தேவன் மாடுகளுக்காகவே கவலையாயிருக்கிறாரோ?" (1கொரி 9:9) என்று அப்போஸ்தலர் பவுல் கேட்கிறார். மோசேயின் பிரமாணத்தை வாசிக்கும்போது, "தேவன் குருவிகளுக்காகவே கவலையாயிருக்கிறாரோ" என்னும் கேள்வியும் கேட்கப்படுகிறது. இந்தக் கேள்விக்கு, "ஆம், தேவன் குருவிகள்மேலும் கவலையாயிருக்கிறார்" என்று பதில் சொல்லலாம்.

கர்த்தரே சர்வசிருஷ்டிகர். அவர் எல்லா ஜீவராசிகளையும் போஷித்து பராமரிக்கிறார். "இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகளை விற்கிறார்களல்லவா? அவைகளில் ஒன்றாகிலும் தேவனால் மறக்கப்படுகிறதில்லை" (லூக் 12:6).

கர்த்தர் சிருஷ்டித்த சர்வசிருஷ்டிகளின்மீது நாமும் அன்புகூரவேண்டும். சாதாரண பறவைகளாகயிருந்தாலும் அவற்றை நாம் துன்பப்படுத்தக்கூடாது. அவற்றின்மீது நாம் கரிசனை காண்பிக்கவேண்டும். குருவியின் கூட்டைக் கலைப்பது, குஞ்சுகளோடே தாயைப் பிடிப்பது போன்ற காரியங்களை செய்யும்போது, நம்முடைய இருதயம் கடினமாகும். நாம் அன்பிலே சந்தோஷப்படாமல், தீமையான காரியங்களில் சந்தோஷப்பட ஆரம்பித்து விடுவோம்.

இஸ்ரவேல் புத்திரர் பலவீனமான எல்லா ஜீவராசிகள்மீதும் கரிசனையோடிருக்க வேண்டும். அவற்றை துன்பப்படுத்தக்கூடாது. மனுஷர்மீது பிரியமாயிருக்கிறவர்கள் மிருகங்கள்மீதும் பிரியமாயிருப்பார்கள். மனுஷரைத் துன்பப்படுத்துகிறவர்கள், மிருகங்களையும் துன்பப்படுத்துவார்கள்.

கைப்பிடிசுவர்
உபா 22:8

உபா 22:8. நீ புதுவீட்டைக் கட்டினால், ஒருவன் உன் மெத்தையிலிருந்து விழுகிறதினாலே, நீ இரத்தப்பழியை உன் வீட்டின்மேல் சுமத்திக்கொள்ளாதபடிக்கு, அதற்குக் கைப்பிடிசுவரைக் கட்டவேண்டும்.

நாம் புது வீட்டைக்கட்டும்போது, அந்த வீட்டை பாதுகாப்பான வீடாக கட்டவேண்டும். அந்த வீட்டின் மெத்தையின்மேல் ஏறி ஒருவரும் அதிலிருந்து கீழே விழுந்துவிடாதவாறு, அதற்கு கைப்பிடிச்சுவரையும் கட்டவேண்டும்.

" நீ புதுவீட்டைக் கட்டினால், ஒருவன் உன் மெத்தையிலிருந்து விழுகிறதினாலே, நீ இரத்தப்பழியை உன் வீட்டின்மேல் சுமத்திக்கொள்ளாதபடிக்கு, அதற்குக் கைப்பிடிசுவரைக் கட்டவேண்டும்" (உபா 22:8) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

கிழக்கு தேசத்தில் வெயிலின் உஷ்ணம் அதிகமாக இருப்பதினால் இரவுவேளையில் வீட்டின் கூரையின்மீது படுத்து ஓய்வெடுப்பது வழக்கம். பலர் மேற்கூரையின்மீது அமர்ந்து போஜனம்பண்ணுவார்கள். மெத்தையிலிருந்து கீழே விழுந்து விடாதவாறு பாதுகாப்பாக வீட்டின் மெத்தைக்குக் கைப்பிடிச் சுவரைக் கட்ட வேண்டும்.

ஒருவன் வீட்டின் மெத்தையிலிருந்து தவறி கீழே விழுந்துவிட்டால், அந்த வீட்டின்மேல் இரத்தப்பழி சுமரும். வீட்டின் மெத்தையில் ஜனங்கள் ஓய்வாக நடக்கலாம். மாலை வேளையில் அங்கே குளிர்ந்த காற்றை சுவாசிக்கலாம். ஆனாலும் அந்த வீடு பாதுகாப்பான வீடாகயிருக்கவேண்டும். யூதர்கள் தங்கள் வீட்டின் மேல்மாடியில் மூன்றரை அடி உயரத்திற்கு கைப்பிடிச்சுவரைக் கட்டுவது வழக்கம்.

மனுஷருடைய ஜீவன் கர்த்தருக்கு விலையேறப்பெற்றதாகயிருக்கிறது. கர்த்தர் மனுஷருடைய ஜீவன்களை விபத்துக்களிலிருந்து விலக்கி பாதுகாக்க விரும்புகிறார். கர்த்தர் மனுபுத்திரரை தம்முடைய தெய்வீக பராமரிப்பினால் மாத்திரமல்ல, தம்முடைய பிரமாணத்தினாலும் பாதுகாக்க சித்தங்கொண்டிருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் மற்ற மனுஷருடைய ஜீவனுக்கு ஆபத்தாயிருக்கும் எந்தக் காரியத்தையும் செய்யக்கூடாது. அவர்களுடைய துரவுகள் கைப்பிடி சுவர் இல்லாதிருக்குமானால், அதிலே கைப்பிடி சுவரைக் கட்டவேண்டும். மனுஷர்கள் மற்றவர்களுடைய ஜீவனுக்கு உதவி செய்வதுபோல, ஒவ்வொரு ராஜ்யமும் தங்கள் தேசத்தின் ஜனங்களுக்கு உதவி செய்யவேண்டும். ஆற்றின்மீது பாலங்களைக் கட்டி, ஜனங்களை ஆபத்திற்கு விலக்கவேண்டும். அதுபோலவே ஒவ்வொரு அரசாங்கமும் சாலைப்பாதுகாப்புக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

கலப்படம்
உபா 22:9-11

உபா 22:9. உன் திராட்சத் தோட்டத்திலே பற்பலவிதமான விதையை விதைக்காயாக; இப்படிச் செய்தால் நீ விதைத்தவைகளின் பயிரையும், திராட்சத்தோட்டத்தின் பலனையும் தீட்டுப்படுத்துவாய்.

உபா 22:10. மாட்டையும் கழுதையையும் பிணைத்து உழாதிருப்பாயாக.

உபா 22:11. ஆட்டுமயிரும் பஞ்சுநூலும் கலந்த வஸ்திரத்தை உடுத்திக்கொள்ளாயாக.

கர்த்தர் பரிசுத்தர். கலப்படம் கர்த்தருக்கு விரோதமான பாவம். பல்வேறு விதைகளை கலந்து விதைப்பது, மாட்டையும் கழுதையையும் இணைத்து உழுவது, ஆட்டு மயிரும் பஞ்சு நூலும் கலந்த வஸ்திரத்தை உடுத்துவது ஆகியவை கர்த்தருக்கு அருவருப்பான காரியங்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருக்கு அருவருப்பான கலப்படத்தைப்பற்றிச் சொல்லும்போது :

"உன் திராட்சத் தோட்டத்திலே பற்பலவிதமான விதையை விதைக்காயாக; இப்படிச் செய்தால் நீ விதைத்தவைகளின் பயிரையும், திராட்சத்தோட்டத்தின் பலனையும் தீட்டுப்படுத்துவாய். மாட்டையும் கழுதையையும் பிணைத்து உழாதிருப்பாயாக. ஆட்டுமயிரும் பஞ்சுநூலும் கலந்த வஸ்திரத்தை உடுத்திக்கொள்ளாயாக" (உபா 22:9-11) என்று சொல்லுகிறார்.

மோசேயின் பிரமாணத்தில் கலப்படம் தடைபண்ணப்பட்டிருக்கிறது. இதுபற்றி லேவி 19:19-ஆவது வசனத்தில் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

ஆதியிலே தேவன் பூமியிலுள்ள ஜாதிஜாதியான காட்டுமிருகங்களையும், ஜாதிஜாதியான நாட்டுமிருகங்களையும், பூமியில் ஊரும் பிராணிகள் எல்லாவற்றையும் உண்டாக்கினார் (ஆதி 1:25). இது இயற்கையின் பிரமாணம். கர்த்தர் இந்தப் பிரமாணத்தை மாற்ற விரும்பவில்லை. ஆகையினால், "மிருகஜீவன்களை வேறு ஜாதியோடே பொலிய விடாயாக" (லேவி 19:19) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"என் கட்டளைகளைக் கைக் கொள்வீர்களாக" என்னும் வாக்கியம் தேவனுடைய நியாயங்கள், கற்பனைகள், பிரமாணங்கள் ஆகியவற்றை குறிக்கிறது.

ஒவ்வொரு மிருகஜீவனும் அதனதன் ஜாதியில் பலுகிப் பெருகவேண்டும். ஒரு மிருகஜீவனை வேறொரு ஜாதியோடே கலக்கக்கூடாது. கர்த்தர் நியமனம்பண்ணின இயற்கையின் பிரமாணத்தை மனுஷன் மாற்றக்கூடாது. கர்த்தர் தம்முடைய தெய்வீக ஞானத்தினால், இந்தப் பிரமாணத்தை நியமனம் செய்திருக்கிறார். கர்த்தருடைய தெய்வீக ஞானமும், அவருடைய தெய்வீக திட்டமும், சித்தமும் சகல ஜீவராசிகளுக்கும் நன்மையானது என்று நாம் நம்பவேண்டும்.

கர்த்தருடைய தெய்வீக திட்டமும் அவருடைய கிரியையும் நமக்கு போதுமானது என்னும் திருப்தியோடிருக்கவேண்டும். நம்முடைய சுயஞானத்தையும், சுயபுத்தியையும் நாம் பயன்படுத்தி, மிருகஜீவன்களிலே இராட்சத மிருகஜீவன்களை உண்டாக்கவேண்டுமென்று பேராசைப்படக்கூடாது.

"என் கட்டளைகளைக் கைக்கொள்வீர்களாக; உன் மிருகஜீவன்களை வேறு ஜாதியோடே பொலியவிடாயாக; உன் வயலிலே வெவ்வேறு வகையான விதைகளைக் கலந்து விதையாயாக; சணல் நூலும் கம்பளிநூலும் கலந்த வஸ்திரத்தை உடுத்தாதிருப்பாயாக" *(லேவி 19:19)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மோசேயின் ஆகமங்களில் ஒரு சில காரியங்கள் பிரிக்கப்பட்டிருக்கிறது அதன் விவரம் வருமாறு :

1. தங்கள் தங்கள் ஜாதிப்புல் *(ஆதி 1:11-12)*
2. தங்கள் தங்கள் ஜாதி விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகள் *(ஆதி 1:11-12)*
3. தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்கள் *(ஆதி 1:11-12)*
4. மகா மச்சங்கள், ஜலத்தில் தங்கள் தங்கள் ஜாதியின்படியே திரளாய் ஜநிப்பிக்கப்பட்ட சகலவித நீர் வாழும் ஜந்துக்கள் *(ஆதி 1:21)*
5. சிறகுள்ள ஜாதி ஜாதியான சகலவிதப் பட்சிகள் *(ஆதி 1:21; ஆதி 6:20; ஆதி 8:19)*
6. ஜாதி ஜாதியான ஜீவஜந்துக்களாகிய நாட்டு மிருகங்கள் ஊரும் பிராணிகள், காட்டு மிருகங்கள் *(ஆதி 1:24; ஆதி 6:19)*
7. ஜாதிஜாதியான நாட்டுமிருகங்கள் *(ஆதி 1:24-25; ஆதி 6:20)*
8. ஜாதியான ஊரும் பிராணிகள் *(ஆதி 1:24; ஆதி 6:20; ஆதி 8:19)*
9. ஜாதிஜாதியான காட்டுமிருகங்கள் *(ஆதி 1:24; ஆதி 8:19)*
10. தேவனுடைய சாயலாகவும் தேவனுடைய ரூபத்தின் படியேயும் சிருஷ்டிக்கப்பட்ட மனுஷன் *(ஆதி 1:26-28; ஆதி 5:1-3; ஆதி 9:6; யாக் 3:9)*
11. ஜாதிகளுடைய தீவுகள், அவனவன் பாஷையின்படியேயும், அவரவர்கள் கோத்திரத்தின்படியேயும், ஜாதியின் படியேயும், வேறுவேறு தேசங்களாய்ப் பகுக்கப்பட்டன. *(ஆதி 10:5)*
12. இவர்கள் தங்கள் தேசங்களிலும், தங்கள் ஜாதிகளிலுமுள்ள தங்கள் வம்சங்களின் படியேயும், தங்கள் பாஷைகளின் படியேயும் காமுடைய சந்ததியார் *(ஆதி 10:20)*
13. இவர்களே தங்கள் தேசங்களிலும், தங்கள் ஜாதிகளிலுமுள்ள தங்கள் வம்சங்களின் படியேயும், தங்கள் பாஷைகளின் படியேயும் சேமுடைய சந்ததியார் *(ஆதி 10:31)*
14. தங்கள் ஜாதிகளிலுள்ள தங்களுடைய சந்ததிகளின்படியே நோவாவுடைய குமாரரின் வம்சங்கள் இவைகளே; ஜலப்பிரளயத்துக்குப் பின்பு இவர்களால் பூமியிலே ஜாதிகள் பிரிந்தன *(ஆதி 10:32)*
15. பின்னும் அவர்கள்: நாம் பூமியின் மீதெங்கும் சிதறிப்போகாதபடிக்கு, நமக்கு ஒரு நகரத்தையும், வானத்தையும், வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி, நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் வாருங்கள் என்று சொல்லிக்கொண்டார்கள் *(ஆதி 11:4)*.
16. கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின் மீதெங்கும் சிதறிப்போகப் பண்ணினார்; அப்பொழுது நகரம் கட்டுகிறதை விட்டுவிட்டார்கள் *(ஆதி 11:8-9)*

17. கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி: உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன் என்றார் (ஆதி 12:7)

18. அடிமைப்பெண்ணையும் அவள் மகனையும் புறம்பேதள்ளும் (ஆதி 21:9-16)

19. நான் குடியிருக்கிற கானானியருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் பெண்கொள்ளாமல்; நீ என் தேசத்துக்கும் என் இனத்தாரிடத்துக்கும் போய், என் குமாரனாகிய ஈசாக்குக்குப் பெண்கொள்வேன் என்று, வானத்துக்குத் தேவனும் பூமிக்குத் தேவனுமாகிய கர்த்தர்பேரில் எனக்கு ஆணையிட்டுக் கொடுக்கும்படிக்கு, நீ உன் கையை என் தொடையின்கீழ் வை என்றான் (ஆதி 24:3-4).

20. ஆபிரகாமுக்கு இருந்த மறுமனையாட்டிகளின் பிள்ளைகளுக்கோ ஆபிரகாம் நன் கொடைகளைக் கொடுத்து, தான் உயிரோடிருக்கும்போதே அவர்களைத் தன் குமாரனாகிய ஈசாக்கைவிட்டுக் கிழக்கேபோகக் கீழ்தேசத்துக்கு அனுப்பிவிட்டான் (ஆதி 25:6)

21. சாராளுடைய வயிற்றில் பிறந்த பிள்ளைகள் மூலமாக இரண்டு சந்ததியார் தோன்றினார்கள். அவர்கள் பிரிக்கப்பட்டார்கள் (ஆதி 36; ஆதி 46)

22. ஏசா நாற்பது வயதானபோது, ஏத்தியனான பெயேரியினுடைய குமாரத்தியாகிய யூதீத்தையும், ஏத்தியனான ஏலோனுடைய குமாரத்தியாகிய பஸ்மாத்தையும் விவாகம் பண்ணினான். அவர்கள் ஈசாக்குக்கும் ரெபேக்காளுக்கும் மனநோவாயிருந்தார்கள் (ஆதி 26:34,35)

23. ஈசாக்கு யாக்கோபை அழைத்து, அவனை ஆசீர்வதித்து, நீ கானானியருடைய குமாரத்திகளில் பெண்கொள்ளாமல், எழுந்து புறப்பட்டுப், பதான் அராமிலிருக்கிற உன் தாயினுடைய தகப்பனாகிய பெத்துவேலுடைய வீட்டுக்குப் போய், அவ்விடத்தில் உன் தாயின் சகோதரனாகிய லாபானின் குமாரத்திகளுக்குள் பெண்கொள் என்று அவனுக்குக் கட்டளையிட்டான் (ஆதி 28:1-2).

24. கலப்பு மணத்தை நாடியதால், ஒரு புறஜாதி பட்டணம் அழிந்தது (ஆதி 34)

25. ஜனங்கள் ஜாதிகளோடே கலவாமல் தனியே வாசமாயிருப்பார்கள் (யாத் 23:31-33; உபா 7:3-6; எண் 23:9)

26. இஸ்ரவேலர் எகிப்திலிருந்த 215 வருஷ காலத்தில், அவர்கள் எகிப்தியரோடு எந்த சம்பந்தமும் பண்ணவில்லை. (ஆதி 47:6; யாத் 8:22-23; யாத் 9:26; யாத் 11:7)

27. உன் மிருகஜீவன்களை வேறு ஜாதியோடே பொலியவிடாயாக (லேவி 19:19)

28. உன் வயலிலே வெவ்வேறு வகையான விதைகளைக் கலந்து விதையாயாக (லேவி 19:19; உபா 22:9)

29. சணல் நூலும் கம்பளிநூலும் கலந்த வஸ்திரத்தை உடுத்தாதிருப்பாயாக. ஆட்டுமயிரும் பஞ்சுநூலும் கலந்த வஸ்திரத்தை உடுத்திக் கொள்ளாயாக (லேவி 19:19; உபா 22:11).

30. மாட்டையும் கழுதையையும் பிணைத்து உழாதிருப்பாயாக (உபா 22:10)

31. உன்னதமானவர் ஜாதிகளுக்குச் சுதந்தரங்களைப் பங்கிட்டு, ஆதாமின் புத்திரரை வெவ்வேறாய்ப் பிரித்த காலத்தில், இஸ்ரவேல் புத்திரருடைய தொகைக்குத்தக்கதாய், சர்வஜனங்களின் எல்லைகளைத் திட்டம் பண்ணினார். (உபா 32:8-9). (அப் 17:26)

"மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்" என்று அப்போஸ்தலர் 17:26 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருந்தாலும் "சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரிகமும் கொடுக்கப்பட்டது (தானி 7:13-14) என்று தானியேல் தீர்க்கதரிசி கூறியிருக்கிறார்.

தங்களுடைய சொந்த பூமியில் வாசம் பண்ணுவதற்காக இஸ்ரவேல் தேசத்தார் சகல ஜாதிகளிலிருந்தும் கூட்டிச்சேர்க்கப்படுவார்கள் (ஏசா 11:10-12; எசே 37; எசே 47-48; மத் 24:31). மற்ற தேசத்தார் கர்த்தருடைய தீர்மானத்தின் பிரகாரம் அவரவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் எல்லைகளுக்குத் திரும்புவார்கள். கிறிஸ்துவும் உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களும் அவர்களை நித்திய காலமாக ஆளுகை செய்வார்கள்.

புறஜாதியார் தங்களுடைய விக்கிரகாராதனையிலே சணல் நூலும் கம்பளி நூலும் கலந்த வஸ்திரத்தை உடுத்துகிறார்கள். கர்த்தருடைய ஜனம் புறஜாதியாருக்கு ஒத்த வேஷம் தரிக்கக்கூடாது. கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும். பரிசுத்தமே நமக்கு மெய்யான அலங்காரம்.

புறஜாதியாரில் குறிசொல்லுகிறவர்களும், அஞ்சனம் பார்க்கிறவர்களும் விநோதமான வஸ்திரங்களை உடுத்தியிருப்பார்கள். அதுபோன்ற வஸ்திரங்கள் நமக்கு தேவையில்லை. கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற வஸ்திரங்களே போதுமானது. நம்முடைய வஸ்திரம் எளிமையானதாகயிருந்தாலும் அது சுத்தமானதாகயிருக்கவேண்டும். புறஜாதியாரின் வஸ்திரமோ பல்வேறு நிறங்களிலிருக்கும். ஆனால் அவை சுத்தமில்லாமல் அசுத்தமாயிருக்கும். இஸ்ரவேல் புத்திரர் எளிமையாயும் சுத்தமாயும் இருக்கவேண்டும் என்பதே கர்த்தருடைய விருப்பம்.

மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லியிருக்கிற காரியங்களை தடைபண்ணியிருந்தாலும், இந்தக் காரியங்கள் மனுஷருடைய ஆவிக்குரிய ஜீவியத்தைப் பாதிக்காது என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

கலப்படம்பண்ணுவது புறஜாதியாரின் விக்கிரகாராதனைக்கு ஒத்த வேஷம் தரிக்கிற காரியமாகும். கர்த்தருடைய சத்தியம் பரிசுத்தமானது. அது துப்புரவானது. இஸ்ரவேல் புத்திரரிடத்தில் தெளிவும் ஒழுக்கமும் காணப்படவேண்டும். கர்த்தர் பரிசுத்தராயிருப்பதுபோல, அவரை ஆராதிக்கிறவர்களும் பரிசுத்தமாயிருக்கவேண்டும்.

கர்த்தர் தம்முடைய தெய்வீக ஞானத்தினால் மாட்டையும் கழுதையையும் வெவ்வேறாக பிரித்து சிருஷ்டித்திருக்கிறார். அதுபோலவே கர்த்தருடைய தெய்வீக தீர்மானத்தின் பிரகாரமாக, ஆட்டு மயிரும் பஞ்சுநூலும் வெவ்வேறு விதமாக தயாரிக்கப்படுகிறது. இவையெல்லாம் தேவனுடைய அநாதி ஞானத்தினால் சிருஷ்டிக்கப்பட்ட காரியங்கள். தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்கக்கூடாது. அதுபோலவே அவர் பிரித்ததை மனுஷன் இணைக்கவும் கூடாது.

மேல் சட்டையின் தொங்கல்கள் உபா 22:12

உபா 22:12. நீ தரித்துக்கொள்ளுகிற உன் மேல் சட்டையின் நான்கு ஓரங்களிலும் தொங்கல்களை உண்டுபண்ணுவாயாக.

இஸ்ரவேல் புத்திரர் தாங்கள் தரித்துக்கொள்கிற, தங்கள் மேல்சட்டையின் நான்கு ஓரங்களிலும் தொங்கல்களை உண்டுபண்ணவேண்டும். இதன் மூலமாக இஸ்ரவேல் புத்திரரையும், மற்ற ஜனங்களையும் பார்க்கும்போதே வித்தியாசம் தெரியும்.

பாலஸ்தீன தேசத்தில் இரவு வேளைகளில் குளிர் அதிகமாக இருக்கும். கம்பளியினால் இந்த மேல்சட்டையைச் செய்து இஸ்ரவேல் புத்திரர்கள் தங்கள் சரீரங்களைப் போர்த்திக் கொள்வார்கள். *(யாத் 12:34).*

ஒருவர் தன் மேல்சட்டையின் ஓரத்தில் தொங்கல்களை உண்டுபண்ணியிருந்தால், அவரை பார்க்கிறவர்கள், "இதோ ஒரு இஸ்ரவேலர் போகிறார்" என்று சொல்லுவார்கள்.

இந்த பிரமாணம் எண்ணாகமம் 15:38,39 ஆகிய வசனங்களில் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறைதோறும் தங்கள் வஸ்திரங்களின் ஓரங்களிலே தொங்கல்களை உண்டாக்கி, ஓரத்தின் தொங்கலிலே இளநீல நாடாவைக் கட்டவேண்டும் *(எண் 15:38).* அவர்கள் அந்த தொங்கல்களைப்பார்த்து, கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் நினைத்து அவைகளின்படியே செய்யும்படிக்கு, அது அவர்களுக்குத் தொங்கலாய் இருக்கவேண்டும் *(எண் 15:39).*

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கற்பனைகளை நினைவுகூராமல் மறந்துவிட்டால் அவர்கள் தங்கள் இருதயத்திற்கும், தங்கள் கண்களுக்கும் ஏற்ற பிரகாரம் நடந்து, மாயையை பின்பற்றி சோரம்போய்விடுவார்கள். அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளை எப்போதும் நினைவுகூரும் வண்ணமாக, தங்கள் வஸ்திரங்களின் ஓரங்களிலே தொங்கல்களை உண்டாக்கவேண்டும். அந்த தொங்கல்களின் ஓரத்திலே இளநீல நாடாவைக் கட்டவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் இந்த நாடாவைப் பார்க்கும்போதெல்லாம் கர்த்தருடைய கற்பனைகளை நினைவுகூரவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் அந்த தொங்கல்களைப் பார்க்கும்போதெல்லாம், கர்த்தருடைய கற்பனைகளையெல்லாம் நினைத்து, அவைகளின்படியே செய்து, தங்கள் தேவனுக்கு பரிசுத்தராயிருக்கவேண்டும் *(எண் 15:40)* என்பது கர்த்தருடைய திட்டமாகும்.

இஸ்ரவேல் புத்திரருடைய வஸ்திரங்களின் ஓரங்களிலே உண்டாக்கப்பட்டிருக்கும் தொங்கல்கள் அவர்களுக்கு ஞாபகக்குறியாகயிருக்கும். இந்தத் தொங்கல்களில் அவர்கள் இளநீல நாடாவை கட்டியிருப்பார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், இந்தப் பிரமாணத்தைக் கைக்கொண்டு, தம்முடைய வஸ்திரங்களின் ஓரங்களிலே தொங்கல்களை உண்டாக்கியிருந்தார்.

"அப்பொழுது, பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ: நான் அவருடைய வஸ்திரத்தை யாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று தன் உள்ளத்தில் எண்ணிக்கொண்டு, அவர் பின்னாலே வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்" *(மத் 9:20,21).*

பரிசேயர்கள் தங்கள் வஸ்திரங்களின் ஓரங்களிலே இளநீல நாடாவைக் கட்டும்போது, அந்த நாடாவின் அகலத்தை அதிகமாக்குகிறார்கள். நாடா எவ்வளவு அதிகமாகயிருக்கிறதோ அந்த அளவுக்கு அவர்கள் பரிசுத்தமானவர்கள் என்றும், கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர்கள் என்றும் மற்ற ஜனங்களுக்கு முன்பாக தங்களைக் காண்பித்துக்கொள்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் வஸ்திரங்களின் ஓரங்களில் கட்டப்பட்டிருந்த இளநீல நாடாக்கள் பெருமைக்கு அடையாளமாயிற்று. நாடாக்களை கட்டியிருக்கிறவர்கள் கர்த்தருடைய பிரமாணங்களை நினைத்துப் பார்க்காமல், மனுஷர் மத்தியிலே தங்களுக்கு அதிகமான பெருமையும், மதிப்பும் ஏற்படவேண்டும் என்பதையே நினைத்துப் பார்த்தார்கள்.

தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களையும், அதில் கட்டப்பட்டிருக்கும் இளநீல நாடாக்களையும் பார்க்கும்போது, இஸ்ரவேல் புத்திரருடைய மனச்சாட்சி உயிர்ப்பிக்கப்படவேண்டும். அவர்கள் அந்தத் தொங்கல்களையும், நாடாக்களையும் பார்க்கும் போதெல்லாம், கர்த்தரைப்பற்றியும், அவருடைய பிரமாணங்களைப்பற்றியும், அவருடைய கட்டளைகளைப்பற்றியும் நினைவுகூர்ந்து, கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கவேண்டும். அவர்கள் பாவங்களுக்கு விலகி பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் வஸ்திரங்களின் ஓரங்களிலே உண்டாக்கப்பட்டிருக்கிற தொங்கல்களையும், அதில் கட்டப்பட்டிருக்கிற இளநீல நாடாக்களையும் பார்க்கும்போதெல்லாம், அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளையெல்லாம் நினைக்கவேண்டும். அவருடைய கற்பனைகளின்படியே செய்யவேண்டும். தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு பரிசுத்தராயிருக்கும்படிக்கு, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் வஸ்திரங்களின் ஓரத்திலுள்ள தொங்கல்களையும் நாடாக்களையும் பார்க்கவேண்டும். இதுவே தொங்கல்களையும், நாடாக்களையும் குறித்த கர்த்தருடைய திட்டமாகும்.

இளநீலநாடாவைக் கட்டுவது பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் வஸ்திரங்களின் ஓரங்களிலே தொங்கல்களை உண்டாக்க வேண்டும்.

2. ஓரத்தின் தொங்கலிலே இளநீல நாடாவைக் கட்டவேண்டும்.

3. கர்த்தருடைய கற்பனைகளை நினைத்துப் பார்ப்பதற்கும், அதற்குக் கீழ்ப்படிவதற்கும் இது இஸ்ரவேல் புத்திரருக்கு அடையாளமாக இருக்கும். (எண் 15:39-40).

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய வஸ்திரங்களின் நாடாக்களைக் காணும்போது, கர்த்தருடைய நியாயப்பிரமாணத்திற்குத் தாங்கள் கீழ்ப்படிய வேண்டுமென்பதையும், கர்த்தருக்காக தாங்கள் பரிசுத்த ஜாதியாக அழைக்கப் பட்டிருக்கிறவர்கள் என்பதையும் நினைவுகூர வேண்டும். (எண் 15:38-40).

ஜெபாலயங்களில் இன்றும் இதுபோன்ற நாடாக்களை அணியும் பழக்கம் இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் காலத்தில் பரிசேயர்களுடைய நாடாக்களைப் பற்றி வேதாகமத்தில் குறிப்பு உள்ளது. (மத் 23:5).

விவாகம்பண்ணின ஸ்திரீ
உபா 22:13-22

உபா 22:13. ஒரு ஸ்திரீயை விவாகம்பண்ணின ஒருவன் அவளிடத்தில் பிரவேசித்தபின்பு அவளை வெறுத்து:

உபா 22:14. நான் இந்த ஸ்திரீயை விவாகம்பண்ணி, அவளிடத்தில் சேர்ந்தபோது கன்னிமையைக் காணவில்லை என்று அவள்மேல் ஆவலாதியான விசேஷங்களைச் சாற்றி, அவளுக்கு அவதூறு உண்டாக்கினால்;

உபா 22:15. அந்த ஸ்திரீயின் தகப்பனும் அவள் தாயும் அவளுடைய கன்னிமையின் அடையாளத்தைப் பட்டணத்து வாசலிலுள்ள மூப்பரிடத்தில் கொண்டுவரக்கடவர்கள்.

உபா 22:16. அங்கே அந்தப் பெண்ணின் தகப்பன்: என் மகளை இந்த மனிதனுக்கு மனைவியாகக் கொடுத்தேன், இவன் அவளை வெறுத்து,

உபா 22:17. நான் உன் மகளிடத்தில் கன்னிமையைக் காணவில்லையென்று ஆவலாதியான விசேஷங்களை அவள்மேல் சாற்றுகிறான்; என் மகளுடைய கன்னிமையின் அடையாளம் இங்கே இருக்கிறது என்று மூப்பரிடத்தில் சொல்வானாக; பின்பு பட்டணத்து மூப்பருக்கு முன்பாக அந்த வஸ்திரத்தை விரிக்கக்கடவர்கள்.

உபா 22:18. அப்பொழுது அந்தப் பட்டணத்து மூப்பர் அந்த மனிதனைப் பிடித்து, அவனைத் தண்டித்து,

உபா 22:19. அவன் இஸ்ரவேலில் ஒரு கன்னிகையை அவதூறுபண்ணினதினாலே, அவன் கையில் நூறு வெள்ளிக்காசை அபராதமாக வாங்கி, பெண்ணின் தகப்பனுக்குக் கொடுக்கக்கடவர்கள்; அவளோ அவனுக்கு மனைவியாயிருக்கவேண்டும்; அவன் தன் ஜீவனுள்ளளவும் அவளைத் தள்ளிவிடக்கூடாது.

உபா 22:20. அந்தப் பெண்ணினிடத்தில் கன்னிமை காணப்படவில்லையென்னும் சங்கதி மெய்ப்பட்டதேயானால்,

உபா 22:21. அந்தப் பெண்ணை அவள் தகப்பனுடைய வீட்டுவாசலுக்கு முன்பாகக் கொண்டுவந்து, அவள் இஸ்ரவேலில் மதிகெட்ட காரியத்தைச் செய்து, தன் தகப்பன் வீட்டிலே வேசித்தனம்பண்ணினபடியினாலே, அவளுடைய பட்டணத்து மனிதர் அவளைக் கல்லெறிந்து கொல்லக்கடவர்கள்; இப்படியே தீமையை உன் நடுவிலிருந்து விலக்கக்கடவாய்.

உபா 22:22. புருஷனுக்கு விவாகம்பண்ணப்பட்ட ஸ்திரீயோடே ஒருவன் சயனிக்கக் கண்டுபிடிக்கப்பட்டால், அந்த ஸ்திரீயோடே சயனித்த மனிதனும் அந்த ஸ்திரீயும் இருவரும் சாகவேண்டும்; இப்படியே தீமையை இஸ்ரவேலிலிருந்து விலக்கக்கடவாய்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஏழாவது கற்பனையாக, "விபசாரம் செய்யாதிருப்பாயாக"என்று சொல்லியிருக்கிறார். மேலும், "பிறனுடைய மனைவியையும் இச்சியாதிருப்பாயாக" என்பதும் கர்த்தருடைய கற்பனையாகும். பிறருடைய மனைவியோடு சயனிக்கிறவர்களுக்கு இந்த வசனப்பகுதியில் தண்டனை சொல்லப்பட்டிருக்கிறது.

ஒரு மனுஷன் ஒரு ஸ்திரீயை விவாகம்பண்ணி, அவளிடத்தில் பிரவேசித்த பின்பு, அவளை வெறுத்து, அவளைத் தள்ளிவிடவேண்டும் என்பதற்காக, அவதூறான குற்றச்சாட்டுக்களை அவள் மீது பொய்யாய்ச் சொல்லக்கூடாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த ஸ்திரீக்கு நியாயம் செய்யப்படவேண்டும். குற்றம் செய்யாத ஸ்திரீ பாதிக்கப்படக்கூடாது. மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு இது சம்பந்தமாக சொல்லும்போது,

"ஒரு ஸ்திரீயை விவாகம்பண்ணின ஒருவன் அவளிடத்தில் பிரவேசித்தபின்பு அவளை வெறுத்து: நான் இந்த ஸ்திரீயை விவாகம்பண்ணி, அவளிடத்தில் சேர்ந்தபோது கன்னிமையைக் காணவில்லை என்று அவள்மேல் ஆவலாதியான விசேஷங்களைச் சாற்றி, அவளுக்கு அவதூறு உண்டாக்கினால்; அந்த ஸ்திரீயின் தகப்பனும் அவள் தாயும் அவளுடைய கன்னிமையின் அடையாளத்தைப் பட்டணத்து வாசலிலுள்ள மூப்பரிடத்தில் கொண்டுவரக்கடவர்கள்" (உபா 22:13-15) என்றும்,

"அங்கே அந்தப் பெண்ணின் தகப்பன்: என் மகளை இந்த மனிதனுக்கு மனைவியாகக் கொடுத்தேன், இவன் அவளை வெறுத்து, நான் உன் மகளிடத்தில் கன்னிமையைக் காணவில்லையென்று ஆவலாதியான விசேஷங்களை அவள்மேல் சாற்றுகிறான்; என் மகளுடைய கன்னிமையின் அடையாளம் இங்கே இருக்கிறது என்று மூப்பரிடத்தில் சொல்வானாக; பின்பு பட்டணத்து மூப்பருக்கு முன்பாக அந்த வஸ்திரத்தை விரிக்கக்கடவர்கள்" (உபா 22:16-17) என்றும்,

"அப்பொழுது அந்தப் பட்டணத்து மூப்பர் அந்த மனிதனைப் பிடித்து, அவனைத் தண்டித்து, அவன் இஸ்ரவேலில் ஒரு கன்னிகையை அவதூறுபண்ணினதினாலே, அவன் கையில் நூறு வெள்ளிக்காசை அபராதமாக வாங்கி, பெண்ணின் தகப்பனுக்குக் கொடுக்கக்கடவர்கள்; அவளோ அவனுக்கு மனைவியாயிருக்கவேண்டும்; அவன் தன் ஜீவனுள்ளளவும் அவளைத் தள்ளிவிடக்கூடாது" (உபா 22:18,19) என்றும் சொல்லுகிறார்.

ஸ்திரீயின் கன்னிமையின் அடையாளத்தை அவளுடைய பெற்றோர் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். விவாகத்தில் பிரச்சனை ஏற்படும்போது விவாகத்தை உறுதிபடுத்துவதற்கு இது உதவி புரியும். (உபா 22:13-21).

தன்னுடைய மனைவியின்மீது அபாண்டமாய் பொய்க் குற்றம் சுமத்தின புருஷனுக்கு தண்டனை கொடுக்கப்படவேண்டும். அந்த தண்டனையின் விவரம் வருமாறு :

1. எல்லோருக்கும் முன்பாக அவனைப் பிடித்து அடிப்பது.

2. நூறுவெள்ளிக்காசு அபராதமாக வாங்குவது. (உபா 22:19,28-29)

3. விவாகரத்து செய்வதற்கு அனுமதி மறுப்பது.

புருஷன் செலுத்தும் அபராதத் தொகை பெண்ணின் தகப்பனுக்குப் போய்சேரும். அவளுடைய தகப்பன் இறந்து போயிருந்தால் அந்தத் தொகை அவளுடைய சகோதரனுக்குப் போய்சேரும். அவள் அநாதையாக இருப்பாளென்றால், அந்த அபராதத் தொகை அவளையே சேரும்.

இஸ்ரவேல் புத்திரர், தங்களுக்கு நெருக்கமான யாருக்கு விரோதமாகவும், அவதூறான குற்றச்சாட்டுக்களை பொய்யாய்ச் சொல்லக்கூடாது. மற்றவர்களுடைய நற்பெயருக்கு களங்கம் ஏற்படுமாறு அவதூறான வார்த்தைகளையும், பொய்க்குற்றச்சாட்டுக்களையும் சொல்லுவது, கர்த்தருடைய பார்வையில் தண்டிக்கப்படவேண்டிய பாவமாயிருக்கிறது.

ஒருவேளை தன்னுடைய மனைவியின்மீது அவதூறு சொன்ன குற்றச்சாட்டு மெய் என்பது நிரூபிக்கப்படுமானால், அவனுடைய மனைவிக்கு தண்டனை கொடுக்கப்படவேண்டும். மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு இதுபற்றிச் சொல்லும்போது,

"அந்தப் பெண்ணிடத்தில் கன்னிமை காணப்படவில்லையென்னும் சங்கதி மெய்ப்பட்டதேயானால், அந்தப் பெண்ணை அவள் தகப்பனுடைய வீட்டுவாசலுக்கு முன்பாகக் கொண்டுவந்து, அவள் இஸ்ரவேலில் மதிகெட்ட காரியத்தைச் செய்து, தன் தகப்பன் வீட்டிலே வேசித்தனம்பண்ணினபடியினாலே, அவளுடைய பட்டணத்து மனிதர் அவளைக் கல்லெறிந்து கொல்லக்கடவர்கள்; இப்படியே தீமையை உன் நடுவிலிருந்து விலக்கக்கடவாய்" (உபா 22:20,21) என்று சொல்லுகிறார்.

தப்பு செய்த ஸ்திரீ கல்லெறிந்து கொல்லப்படுகிறாள். இவளுக்கு கொடுக்கப்படும் தண்டனை, அந்தப் பட்டணத்திலுள்ள மற்ற வாலிப ஸ்திரீகளுக்கு எச்சரிப்பாகயிருக்கும். அவர்கள் வேசித்தனத்தை விட்டும், விபசாரத்தை விட்டும் விலகி ஜீவிப்பார்கள். திருமணம் பரிசுத்தமானது. அதை புருஷனோ அல்லது அவனுடைய மனைவியோ பரிசுத்தக்குலைச்சலாக்கிவிடக்கூடாது.

திருமணமான புருஷனும் மனைவியும் ஒருவருக்கொருவர் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். அவர்கள் ஒருவரையொருவர் ஏமாற்றி, பாவம் செய்யும்போது, அவர்கள் தங்கள் பாவங்களை எப்படித்தான் மூடி மறைத்தாலும், அந்தப் பாவங்கள் வெளிப்படும்போது, அவர்களுக்கு அவமானமும், நிந்தையும், இலச்சையும், அழிவும் உண்டாகும்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளை கற்புள்ள ஒழுக்கத்தோடு வளர்க்கவேண்டும். பிள்ளைகளை ஒழுக்கமாக வளர்ப்பதில் பெற்றோருக்கு முக்கிய பங்குள்ளது. அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய நல்ல ஆலோசனைகளையும், புத்திமதிகளையும் சொல்லவேண்டும்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு முன்பாக நல்ல முன்மாதிரிகளாக ஜீவிக்கவேண்டும். பெற்றோரிடத்தில் தீயசுபாவங்கள் எதுவும் காணப்படக்கூடாது. பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்காக கர்த்தருடைய சமுகத்திலே ஜெபம்பண்ணி, அவர்களை கர்த்தருடைய பாதுகாப்புக்கும், பராமரிப்புக்கும் ஒப்புக்கொடுக்கவேண்டும்.

புருஷனுக்கு விவாகம்பண்ணப்பட்ட ஸ்திரீயோடே ஒருவன் சயனிக்கக் கண்டுபிடிக்கப்பட்டால், அந்த ஸ்திரீயோடே சயனித்த மனிதனும் அந்த ஸ்திரீயும் இருவரும் சாகவேண்டும்; இப்படியே தீமையை இஸ்ரவேலிலிருந்து விலக்கக்கடவாய் (உபா 22:22) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

புருஷனுக்கு விவாகம்பண்ணப்பட்ட ஸ்திரீயோடு ஒருவன் சயனிக்க கண்டுபிடிக்கப்பட்டால், என்ன செய்யவேண்டும் என்பது பற்றி லேவியராகமம் 20:10 ஆவது வசனத்தில் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

கர்த்தர் விபசார பாவத்திற்கு விரோதமாக தம்முடைய பிரமாணத்தை சொல்லுகிறார். கர்த்தருடைய பார்வையிலே விபசாரம் பண்ணுவது மிகவும் மோசமான பாவமாயிருக்கிறது. "ஒருவன் பிறனுடைய மனைவியோடே விபசாரம் செய்தால், பிறன் மனைவியோடே விபசாரம் செய்த அந்த விபசாரனும் அந்த விபசாரியும் கொலை செய்யப்படக்கடவர்கள்" (லேவி 20:10) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

விபசார பாவத்தை விபசாரனும், விபசாரியும் சேர்ந்து செய்கிறார்கள். கர்த்தர் அவர்கள் இருவருக்கும் சேர்ந்து தண்டனை கொடுக்கிறார். விபசாரனும் விபசாரியும் கொலைசெய்யப்படவேண்டும் என்பதே கர்த்தருடைய பிரமாணம். பாவத்தில் பங்காளிகளாகயிருக்கிற அனைவருக்கும் தண்டனை கொடுக்கப்படுகிறது. ஒரே பாவத்தை இருவர் சேர்ந்து செய்யும்போது, கர்த்தர் ஒருவனை பாவி என்றும், மற்றொருவனை நிரபராதி என்றும் நியாயந்தீர்ப்பதில்லை. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நீதியானது. அவரிடத்தில் பட்சபாதம் எதுவுமில்லை.

விவாகமஞ்சம் கனமுள்ளது. விவாகம்பண்ணுகிறவர்கள் பரிசுத்தமான சந்ததியை பெற்றெடுக்கவேண்டும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு விவாகம்பண்ணுவது சம்பந்தமான பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார். இந்தப் பிரமாணத்தை மீறி பாவம் செய்கிறவர்கள், தங்களுடைய மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றி விபசாரம்பண்ணுகிறார்கள். கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் அவர்களுக்கு தண்டனை கொடுக்கிறார்.

கன்னிகையான ஒரு பெண் உபா 22:23-29

உபா 22:23. கன்னிகையான ஒரு பெண் ஒருவனுக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், மற்றொருவன் அவளை ஊருக்குள்ளே கண்டு, அவளோடே சயனித்தால்,

உபா 22:24. அப்பொழுது அந்தப் பெண் ஊருக்குள்ளிருந்தும் கூக்குரலிடாததினாலும், அந்த மனிதன் பிறனுடைய மனைவியைக் கற்பழித்தபடியினாலும், இருவரையும் அந்தப் பட்டணத்து வாசலுக்குமுன் கொண்டுபோய், அவர்கள்மேல் கல்லெறிந்து கொல்லக்கடவீர்கள்; இப்படியே தீமையை உன் நடுவிலிருந்து விலக்கக்கடவாய்.

உபா 22:25. ஒருவனுக்கு நியமிக்கப்பட்ட பெண்ணை வெளியிலே ஒருவன் கண்டு, அவளைப் பலவந்தமாய்ப் பிடித்து, அவளோடே சயனித்தானேயாகில், அவளோடே சயனித்த மனிதன்மாத்திரம் சாகக்கடவன்.

உபா 22:26. பெண்ணுக்கு ஒன்றும் செய்யலாகாது; பெண்ணின்மேல் சாவுக்கு ஏதுவான குற்றம் இல்லை; இக்காரியம் ஒருவன் மற்றொருவன்மேல் எழும்பி அவனுடைய ஜீவனை வாங்கினதுபோல் இருக்கிறது.

உபா 22:27. வெளியிலே அவன் அவளைக் கண்டுபிடித்தான்; நியமிக்கப்பட்ட பெண் அப்பொழுது கூக்குரலிட்டும் அவளைக் காப்பாற்றுவார் இல்லாமற்போயிற்று.

உபா 22:28. நியமிக்கப்படாத கன்னியாஸ்திரீயாகிய ஒரு பெண்ணை ஒருவன் கண்டு, கையைப் பிடித்து அவளோடே சயனிக்கையில், அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால்,

உபா 22:29. அவளோடே சயனித்த மனிதன் பெண்ணின் தகப்பனுக்கு ஐம்பது வெள்ளிக்காசைக் கொடுக்கக்கடவன்; அவன் அவளைக் கற்பழித்தபடியினால், அவள் அவனுக்கு மனைவியாயிருக்கவேண்டும்; அவன் உயிரோடிருக்குமளவும் அவளைத் தள்ளிவிடக்கூடாது.

கன்னிகையான ஒரு பெண், ஒருவனுக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவள் பாவம் செய்தால், அவளுக்கு என்ன செய்யவேண்டும் என்று மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். மோசே இதுபற்றிச் சொல்லும்போது இரண்டுவிதமான சூழ்நிலைகளை சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

"கன்னிகையான ஒரு பெண் ஒருவனுக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், மற்றொருவன் அவளை ஊருக்குள்ளே கண்டு, அவளோடே சயனித்தால், அப்பொழுது அந்தப் பெண் ஊருக்குள்ளிருந்தும் கூக்குரலிடாததினாலும், அந்த மனிதன் பிறனுடைய மனைவியைக் கற்பழித்தபடியினாலும், இருவரையும் அந்தப் பட்டணத்து வாசலுக்குமுன் கொண்டுபோய், அவர்கள்மேல்கல்லெறிந்துகொல்லக்கடவீர்கள்; இப்படியே தீமையை உன் நடுவிலிருந்து விலக்கக்கடவாய்" (உபா 22:23,24) என்று மோசே சொல்லுகிறார். இது முதலாவது சூழ்நிலையாகும்.

கன்னிகையான ஒரு பெண், ஒருவனுக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவளுக்கு வரும் பிரச்சனையைப்பற்றிய இரண்டாவது சூழ்நிலையைப்பற்றிச் சொல்லும்போது,

"ஒருவனுக்கு நியமிக்கப்பட்ட பெண்ணை வெளியிலே ஒருவன் கண்டு, அவளைப் பலவந்தமாய்ப் பிடித்து, அவளோடே சயனித்தானேயாகில், அவளோடே சயனித்த மனிதன்மாத்திரம் சாகக்கடவன். பெண்ணுக்கு ஒன்றும் செய்யலாகாது; பெண்ணின்மேல் சாவுக்கு ஏதுவான குற்றம் இல்லை; இக்காரியம் ஒருவன் மற்றொருவன்மேல் எழும்பி அவனுடைய ஜீவனை வாங்கினதுபோல இருக்கிறது. வெளியிலே அவன் அவளைக் கண்டுபிடித்தான்; நியமிக்கப்பட்ட பெண் அப்பொழுது கூக்குரலிட்டும் அவளைக் காப்பாற்றுவார் இல்லாமற்போயிற்று" (உபா 22:25-27) என்று மோசே சொல்லுகிறார்.

கன்னிகையான ஒரு பெண் இன்னும் யாருக்கும் நியமிக்கப்படாதிருக்கும்போது, அவளுக்கு வரும் பிரச்சனையான சூழ்நிலையைப்பற்றி மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

"நியமிக்கப்படாத கன்னியாஸ்திரீயாகிய ஒரு பெண்ணை ஒருவன் கண்டு, கையைப் பிடித்து அவளோடே சயனிக்கையில், அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால், அவளோடே சயனித்த மனிதன் பெண்ணின் தகப்பனுக்கு ஐம்பது வெள்ளிக்காசைக் கொடுக்கக்கடவன்; அவன் அவளைக் கற்பழித்தபடியினால், அவள் அவனுக்கு மனைவியாயிருக்கவேண்டும்; அவன் உயிரோடிருக்குமளவும் அவளைத் தள்ளிவிடக்கூடாது" (உபா 22:28,29).

இந்த அதிகாரத்தில் மரணதண்டனைக்குரிய ஒரு சில பாவங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. ஒரு ஸ்திரீயை விவாகம் பண்ணி, அவளிடத்தில் சேர்ந்தபோது கன்னிமையைக் காணவில்லையென்று அவள்மீது பொய்க்குற்றம் சாட்டுவது. (உபா 22:13-21).

2. புருஷனுக்கு விவாகம் பண்ணப்பட்ட ஸ்திரீயோடே ஒருவன் சயனிப்பது. (உபா 22:22).

3. கன்னிகையான ஒரு பெண் ஒருவனுக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், மற்றொருவன் அவளை ஊருக்குள்ளே கண்டு, அவளோடே சயனிப்பது. (உபா 22:23-24).

4. ஒருவனுக்கு நியமிக்கப்பட்ட பெண்ணை வெளியிலே ஒருவன் கண்டு, அவளைப் பலவந்தமாய்ப் பிடித்து, அவளோடே சயனிப்பது. (உபா 22:25-27).

இந்த அதிகாரத்தில் விவாகத்தை தள்ளிவிட முடியாத சில சம்பவங்களைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. நியமிக்கப்படாத கன்னியாஸ்திரீயாகிய ஒரு பெண்ணோடே சயனித்தவன். அவன் அவளைக் கற்பழித்தபடியினால், அவள் அவனுக்கு மனைவியாயிருக்கவேண்டும்; அவன் உயிரோடிருக்குமளவும் அவளைத் தள்ளிவிடக்கூடாது. (உபா 22:28-29).

2. ஒரு ஸ்திரீயை விவாகம் பண்ணி, அவளிடத்தில் சேர்ந்தபோது கன்னிமையைக் காணவில்லையென்று அவள்மீது பொய்க்குற்றம் சாட்டியவன். அவள் அவனுக்கு மனைவியாயிருக்க வேண்டும்; அவன் தன் ஜீவனுள்ளளவும் அவளைத் தள்ளிவிடக்கூடாது (உபா 22:13-19).

தகப்பனுடைய மனைவியைச் சேரலாகாது உபா 22:30

உபா 22:30. ஒருவனும் தன் தகப்பனுடைய மனைவியைச் சேரலாகாது; தன் தகப்பன் மானத்தை அவன் வெளிப்படுத்தலாகாது.

இஸ்ரவேல் புத்திரரில் ஒருவனும் தன் தகப்பனுடைய மனைவியை சேரலாகாது. அவன் தன் தகப்பனுடைய மனைவியை சேரும்போது, அவன் தன் தகப்பன் மானத்தை வெளிப்படுத்துகிறான்.

"ஒருவனும் தன் தகப்பனுடைய மனைவியைச் சேரலாகாது; தன் தகப்பன் மானத்தை அவன் வெளிப்படுத்தலாகாது" (உபா 22:30) என்று மோசே சொல்லுகிறார். இவ்வறாக இஸ்ரவேல் புத்திரர் தீமையை தங்கள் நடுவிலிருந்து விலக்கவேண்டும்.

லேவியராகமம் 18:6-18 ஆகிய வசனங்களில் இந்தப் பிரமாணம் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

பத்துக்கட்டளைகளில் ஏழாவது கட்டளையாக "விபசாரம் செய்யாதிருப்பாயாக" என்னும் கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லும் பிரமாணம், ஏழாவது கட்டளையோடு தொடர்புடையது. "ஒருவனும் தனக்கு நெருங்கின இனமாகிய ஒருத்தியை நிர்வாணமாக்கும்படி அவளைச் சேரலாகாது; நான் கர்த்தர்" (லேவி 18:6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தனக்கு நெருங்கின இனமாகிய ஒருத்தியை நிர்வாணமாக்குவது பற்றிய பிரமாணத்தை கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். யாரெல்லாம் நெருங்கிய இனத்தாளாயிருக்கிறாள் என்னும் விவரம் வருமாறு :

1. தனக்கு நெருங்கின இனமாகிய ஒருத்தி (லேவி 18:6)
2. தகப்பன் (லேவி 18:7; ஆதி 19:31-38)
3. தாய் (லேவி 18:7).
4. தகப்பனுடைய மனைவி (லேவி 18:8; லேவி 20:11; உபா 27:20; ஆதி 35:22; 2சாமு 16:20-23; 1இராஜா 2:17; 2கொரி 5:1-5)
5. சகோதரி (லேவி 18:9)
6. தகப்பனுடைய குமாரத்தி (லேவி 18:9; ஆதி 20:12; 2சாமு 13:12,16,20; எசே 22:11)
7. தாயினுடைய குமாரத்தி (லேவி 18:9)
8. குமாரனுடைய மகள் (லேவி 18:10)
9. குமாரத்தியினுடைய மகள் (லேவி 18:10)
10. தகப்பனுடைய மனைவியினிடத்தில் உன் தகப்பனுக்குப் பிறந்த குமாரத்தி (லேவி 18:11)
11. தகப்பனுடைய சகோதரி (லேவி 18:12; யாத் 6:20)
12. தாயினுடைய சகோதரி (லேவி 18:13)
13. தகப்பனுடைய சகோதரன் (லேவி 18:14)

14. தகப்பனுடைய சகோதரனுடைய மனைவி (லேவி 18:14)

15. மருமகள் (லேவி 18:15)

16. சகோதரனுடைய மனைவி (லேவி 18:16). தன் சகோதரன் சந்தானமில்லாமல் மரித்துப் போனால், அவன் மனைவியை விவாகம்பண்ணி, அவளுக்குப் புத்திர சந்தானம் கொடுக்கலாம். (உபா 25:5; மத் 22:24-30)

17. ஒரு ஸ்திரீயையும், அவள் மகளையும் (லேவி 18:17)

18. ஒரு ஸ்திரீயையும், அவளுடைய குமாரரின் மகளையும் (லேவி 18:17)

19. ஒரு ஸ்திரீயையும், அவள் குமாரத்தியின் மகளையும் (லேவி 18:17)

20. உன் மனைவியையும், அவளுடைய சகோதரியையும் (லேவி 18:18). யாக்கோபிற்கு ராகேல், லேயாள் ஆகியோரைத் திருமணம் செய்ததால் பலபிரச்சனைகள் வந்தன. (ஆதி 29:15-30:24)

நெருங்கிய உறவுக்காரரை திருமணம் செய்வதை கர்த்தர் தம்முடைய பிரமாணத்தின் மூலமாக தடைபண்ணுகிறார். விவாகம் பரிசுத்தமானது. விவாகமஞ்சம் தேவனுடைய தெய்வீக நியமம். குடும்ப வாழ்க்கை பரிசுத்தமானதாகவும் கண்ணியமானதாகவும் இருக்கவேண்டும். திருமண வாழ்க்கையில் இணைக்கப்பட்ட தம்பதியினர் பரிசுத்தமான சந்ததியை பெற்றெடுக்கவேண்டும்.

மனுஷருக்கும் மிருகங்களுக்கும் வித்தியாசமுள்ளது. மனுஷர் மிருகங்களைவிட பல விஷயங்களில் மேன்மையானவர்கள். மனுஷர் கண்ணியமும் ஒழுக்கமுமுள்ளவர்கள். மிருகங்களுக்கு இடையே திருமணம் நடைபெறுவதில்லை. அவை தங்கள் இஷ்டம்போல ஜீவித்து இனவிருத்தி செய்யும். கர்த்தரோ மனுஷருக்கு விவாக மஞ்சத்தை நியமனம் செய்திருக்கிறார்.

கர்த்தர் தம்முடைய தெய்வீக அதிகாரத்தினால் மனுஷர் மத்தியிலே விவாக உறவுகளையும், பாலுறவுகளையும் கட்டுப்படுத்தி ஆளுகை செய்கிறார். மனுபுத்திரர் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியும்போது, அவர்களுக்கு ஆறுதலும், சமாதானமும், சரீர ஆரோக்கியமும் உண்டாகும்.

திருமணத்தின் மூலமாக கணவனும் மனைவியும் ஒரே மாம்சமாக இணைக்கப்படுகிறார்கள். அவர்கள் இருவரும் இயற்கையின் ரீதியாக ஒரே சரீரமுள்ளவர்களல்ல. கணவனுக்கும் மனைவிக்கும் வெவ்வேறு சரீரமுள்ளது. அவ்விரண்டு சரீரங்களும் திருமணத்தின் மூலமாக ஒரே சரீரமாக இணைக்கப்படுகிறது. இயற்கையின் பிரமாணத்தினால் இணைக்க முடியாத இரண்டு சரீரங்களை, கர்த்தர் விவாக பிரமாணத்தின் மூலமாக, ஒரே சரீரமாக இணைக்கிறார்.

திருமணத்தின் மூலமாக கணவனுக்கும் மனைவிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளும், வேற்றுமைகளும், உயர்வு தாழ்வுகளும் அகற்றப்பட்டு, அவர்கள் இருவரும் சமமான நிலமையிலே இணைக்கப்படுகிறார்கள். திருமணமாவதற்கு முன்பாக புருஷனும் ஸ்திரீயும் எஜமானனாகவும், வேலைக்காரியாகவும் இருந்திருக்கலாம். அவர்கள் இருவரும் ஐசுவரியமுள்ளவனாகவும், தரித்திரமுள்ளவளாகவும் இருந்திருக்கலாம். அவர்களுடைய சமுதாய அந்தஸ்து, பொருளாதார நிலை ஆகியவற்றில் எப்படிப்பட்ட வித்தியாசம் இருந்தாலும், திருமணத்திற்கு பின்பு அவர்கள் இருவரும் சமநிலையிலுள்ள தம்பதிகளாக இணைக்கப்பட்டவர்களாயிருக்கிறார்கள்.

இரத்த சம்பந்தமுள்ள நெருங்கிய உறவினருக்கிடையே திருமணம் செய்து கொள்வதை கர்த்தர் தடைபண்ணுகிறார்.

உன் தகப்பனையாவது உன் தாயையாவது நிர்வாணமாக்கலாகாது; அவள் உன் தாயானவள்; அவளை நிர்வாணமாக்கலாகாது என்றும், உன் தகப்பனுடைய மனைவியை நிர்வாணமாக்கலாகாது; அது உன் தகப்பனுடைய நிர்வாணம் என்றும் (லேவி 18:7,8) கர்த்தர் சொல்லுகிறார்.

உன் தகப்பனுக்காவது உன் தாய்க்காவது வீட்டிலாகிலும் புறத்திலாகிலும் பிறந்த குமாரத்தியாகிய உன் சகோதரியை நிர்வாணமாக்கலாகாது. உன் குமாரனுடைய மகளையாவது உன் குமாரத்தியினுடைய மகளையாவது நிர்வாணமாக்கலாகாது; அது உன்னுடைய நிர்வாணம் (லேவி 18:9,10) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

இந்த வசனத்தில் "நிர்வாணமாக்கலாகாது" என்னும் வாக்கியத்திற்கு நெருங்கிய உறவுக்கார ஸ்திரீயைத் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்பது பொருளாகும் (லேவி 18:6-19)

உன் தகப்பனுடைய மனைவியினிடத்தில் உன் தகப்பனுக்குப் பிறந்த குமாரத்தியை நிர்வாணமாக்கலாகாது; அவள் உனக்குச் சகோதரி. உன் தகப்பனுடைய சகோதரியை நிர்வாணமாக்கலாகாது; அவள் உன் தகப்பனுக்கு நெருங்கின இனமானவள் (லேவி 18:11,12) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தன் தகப்பனுக்கு பிறந்த குமாரத்தியை நிர்வாணமாக்கலாகாது ஆபிரகாமின் காலத்தில் இந்தப் பிரமாணம் கொடுக்கப்படவில்லை. இது அக்காலத்திலேயே அமுலில் இருந்ததானால் ஆபிரகாம் சாராளைத் திருமணம் செய்திருக்கமாட்டார். (ஆதி 20:12).

உன் தாயினுடைய சகோதரியை நிர்வாணமாக்கலாகாது; அவள் உன் தாய்க்கு நெருங்கின இனமானவள். உன் தகப்பனுடைய சகோதரனை நிர்வாணமாக்கலாகாது; அவன் மனைவியைச் சேரயாக; அவள் உன் தகப்பனுடைய சகோதரி (லேவி 18:13,14) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

உன் மருமகளை நிர்வாணமாக்கலாகாது; அவள் உன் குமாரனுக்கு மனைவி, அவளை நிர்வாணமாக்கலாகாது. உன் சகோதரனுடைய மனைவியை நிர்வாணமாக்கலாகாது; அது உன் சகோதரனுடைய நிர்வாணம் (லேவி 18:15,16) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

ஒரு ஸ்திரீயையும் அவள் மகளையும் நிர்வாணமாக்கலாகாது; அவளுடைய குமாரரின் மகளையும் அவளுடைய குமாரத்தியின் மகளையும் நிர்வாணமாக்கும்படி விவாகம்பண்ணலாகாது; இவர்கள் அவளுக்கு நெருங்கின இனமானவர்கள்; அது முறைகேடு. உன் மனைவி உயிரோடிருக்கையில், அவளுக்கு உபத்திரவமாக அவள் சகோதரியையும் நிர்வாணமாக்கும்பொருட்டு அவளை விவாகம்பண்ணலாகாது (லேவி 18:17,18) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

யாக்கோபின் காலத்தில் இந்தப் பிரமாணம் இருந்திருந்தால் அவர் தன் சகோதர உறவுமுறையிலான ஸ்திரீகளைத் திருமணம் செய்திருக்கமாட்டார் (ஆதி 29:16-31).

இரத்தம் சம்பந்தமுள்ள நெருங்கிய உறவினரிடையே தாம்பத்திய உறவு இருந்தால், அவர்களுக்கு பிறக்கும் பிள்ளைகள் ஆரோக்கியமாயிருக்காது என்றும், அவை அங்கவீனமாயிருப்பதற்கு அதிக வாய்ப்புள்ளது என்றும் மருத்துவர்கள் சொல்லுகிறார்கள்.

திருமண விஷயத்திலே கர்த்தர் சொல்லியிருக்கிற பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல், அதை மீறி விவாகம்பண்ணுகிறவர்களின் மனதிலே குற்றவுணர்வு உண்டாகும். பாவத்தினால் குற்றவுணர்வு உண்டானவர்கள் கர்த்தரோடு சமாதானமாகவும், ஐக்கியமாகவும் இருக்க முடியாது.

நெருங்கிய உறவினரிடையே விவாக சம்பந்தம் ஏற்படுத்திக்கொள்வது கர்த்தருடைய பிரமாணத்தை மீறுகிற செயல். இது கர்த்தருடைய பார்வையில் அசுத்தமானதாகவும், அருவருப்பானதாகவும் இருக்கிறது. கர்த்தர் தடைபண்ணியிருக்கிறதை மனுஷன் விலக்கவேண்டும்.

"என்னுடைய நியாயங்களின்படி செய்து, என்னுடைய கட்டளைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்" (லேவி 18:4) என்று கர்த்தர் சொல்லுகிறார். பலிசெலுத்துவதைவிட கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதே உத்தமம்.

இரத்த சம்பந்தமான நெருங்கிய உறவினரிடையே விவாக சம்பந்தம் நடைபெறுவதை கர்த்தர் தடைபண்ணுகிறார். கர்த்தர் அதை தடைபண்ணுவதற்கான காரணத்தையும் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

"உன் சகோதரனுடைய மனைவியை நிர்வாணமாக்கலாகாது; அது உன் சகோதரனுடைய நிர்வாணம்" (லேவி 18:16) என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆனாலும் யூதருடைய பாரம்பரிய வழக்கத்தின் பிரகாரம், ஒருவன் புத்திர சந்தானமில்லாமல் இறந்துபோனால், அவனுடைய சகோதரனோ அல்லது நெருங்கிய உறவினனோ, அவனுடைய விதவை மனைவியை விவாகம் செய்து, அவனுக்கு புத்திர சந்தானம் உண்டுபண்ணவேண்டும்.

"சகோதரர் ஒன்றாய்க் குடியிருக்கும் போது, அவர்களில் ஒருவன் புத்திரசந்தானமில்லாமல் மரித்தால், மரித்தவனுடைய மனைவி புறத்திலிருக்கிற அந்நியனுக்கு மனைவியாகக்கூடாது; அவளுடைய புருஷனின் சகோதரன் அவளைத் தனக்கு மனைவியாகக் கொண்டு, அவளிடத்தில் சேர்ந்து, புருஷனுடைய சகோதரன் செய்யவேண்டிய கடமையைச் செய்யக்கடவன்" (உபா 25:5).

கர்த்தர் இந்த வசனப்பகுதியில் இரண்டு விதமான விவாக பிரமாணங்களை சொல்லியிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார், தங்களுடைய சமுதாய சூழ்நிலைகளுக்கேற்ற பிரகாரம், கர்த்தருடைய பிரமாணங்களில் ஒரு பிரமாணத்தை தேர்ந்தெடுத்து, கர்த்தருடைய கட்டளைகளையும், அவருடைய நியாயங்களையும் கைக்கொண்டு ஜீவிக்கிறார்கள்.

23 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும். அவர்கள் தங்கள் மத்தியிலிருந்து தீமையையும், அசுத்தத்தையும் அகற்றவேண்டும். அது தொடர்பான பிரமாணங்கள் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது (உபா 23:1-8).

இஸ்ரவேலரின் பாளயம் சுத்தமாயிருக்கவேண்டும். அசுத்தமான காரியங்களும் தீட்டான காரியங்களும் பாளயத்திற்குள்ளே இராமல், புறம்பே இருக்கவேண்டும் (உபா 23:9-14).

அடிமைகளுக்கு இரக்கம் காண்பிப்பது சம்பந்தமான பிரமாணம் (உபா 23:15,16). வேசித்தனத்திற்கு விரோதமான பிரமாணம் (உபா 23:17,18). வட்டி வாங்குவதற்கு எதிரான பிரமாணம் (உபா 23:19,20). பொருத்தனை பண்ணியதை காலதாமதம்பண்ணாமல் நிறைவேற்றவேண்டும் (உபா 23:21,23). மனுஷருடைய சுயாதீனத்தில் ஒரு சில கட்டுப்பாடுகள் (உபா 23:24,25).

சபைக்கு உட்படலாகாதவன் உபா 23:1-8

உபா 23:1. விதையடிக்கப்பட்டவனும், கோச மறுபட்டவனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது.

உபா 23:2. வேசிப்பிள்ளையும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது; அவனுக்குப் பத்தாம் தலைமுறையானவனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது.

உபா 23:3. அம்மோனியனும் மோவாபியனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது; பத்தாம் தலைமுறையிலும் என்றைக்கும் அவர்கள் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது.

உபா 23:4. நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு வருகிற வழியிலே, அவர்கள் அப்பத்தோடும் தண்ணீரோடும் உங்களுக்கு எதிர்கொண்டு வராததினிமித்தமும், உன்னைச் சபிக்கும்படியாய் மெசொப்பொத்தாமியாவின் ஊராகிய பேத்தோரிலிருந்த பேயோரின் குமாரன் பிலேயாமுக்குக் கூலிபேசி அவனை அழைப்பித்ததினிமித்தமும் இப்படிச் செய்யவேண்டும்.

உபா 23:5. உன் தேவனாகிய கர்த்தர் பிலேயாமுக்குச் செவிகொடுக்கச் சித்தமில்லாமல், உன் தேவனாகிய கர்த்தர் உன்மேல் அன்பு கூர்ந்தபடியினால், உன் தேவனாகிய கர்த்தர் அந்தச் சாபத்தை உனக்கு ஆசீர்வாதமாக மாறப்பண்ணினார்.

உபா 23:6. நீ உன் ஆயுள் நாட்களுள்ளளவும் ஒருக்காலும் அவர்கள் சமாதானத்தையும் நன்மையையும் தேடாதே.

உபா 23:7. ஏதோமியனை அருவருக்காயாக, அவன் உன் சகோதரன்; எகிப்தியனை அருவருக்காயாக, அவன் தேசத்திலே பரதேசியாயிருந்தாய்.

உபா 23:8. மூன்றாம் தலைமுறையில் அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் கர்த்தருடைய சபைக்கு உட்படலாம்.

கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாத ஒரு சிலரைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. விதையடிக்கப்பட்டவன், கோசமறுபட்டவன், வேசிப்பிள்ளை, மோவாபியன், அம்மோனியன் ஆகியோர் சபைக்குட்படலாகாது என்று மோசே சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "விதையடிக்கப்பட்டவனும், கோச மறுபட்டவனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது. வேசிப்பிள்ளையும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது; அவனுக்குப் பத்தாம் தலைமுறையானவனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது. அம்மோனியனும் மோவாபியனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது; பத்தாம் தலைமுறையிலும் என்றைக்கும் அவர்கள் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது" (உபா 23:1-3) என்று சொல்லுகிறார்.

புறஜாதியார் மத்தியில் விதையடிக்கப்பட்டவர்களையும், கோசமறுபட்டவர்களையும் தங்களுடைய தெய்வங்களுக்குச் சேவை செய்வதற்கு நியமிப்பார்கள். இதற்காக சில பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளை விதையடித்து, கோசமறுத்து அவர்களுடைய விக்கிரகாராதனைக் காரியங்களில் பழக்கி வைத்திருப்பார்கள். இதுபோன்ற காரியங்கள் இஸ்ரவேல் புத்திரரின் நடுவே நடைபெறக்கூடாது என்பது தேவனுடைய பிரமாணம். கர்த்தருக்குப் பலிசெலுத்தும் போது கூட பழுதில்லாத மிருகஜீவன்களையே பலியிட வேண்டும்.

வேசிப்பிள்ளை என்பவன் யூதமார்க்கத்து தகப்பனுக்கும், புறஜாதி மார்க்கத்து தாய்க்கும் பிறந்தவன், இவன் முறைதவறி பிறந்தவன், நெருங்கிய உறவினருக்குப் பிறந்தவன். (உபா 23:2, சக 9:6) செப்துவஜிந்த் பதிப்பில் "வேசிப்பிள்ளை" **"one born of a harlot"** என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது.

கர்த்தருடைய சபை என்னும் வார்த்தைக்கு "இஸ்ரவேல் ஜனத்தார்" என்று பொருள் (உபா 23:1). விதையடிக்கப்பட்டவனும், கோச மறுபட்டவனும், வேசிப்பிள்ளையும், இஸ்ரவேல் புத்திரர் நடுவில் ஜீவிக்கலாம். இதற்கு தடை ஒன்றும் இல்லை. ஆனாலும் மூப்பர், நியாயாதிபதிகள், ஆசாரியர் போன்ற இஸ்ரவேல் தேசத்தாரின் பதவிகளுக்கு இவர்கள் அங்கிகரிக்கப்படவில்லை.

பத்தாம் தலைமுறை என்னும் வாக்கியத்திற்கு நித்திய காலமாக என்று பொருள். (உபா 23:2 = உபா 23:3; நெகே 13:1).

அம்மோனியனும் மோவாபியனும் நெருங்கிய உறவினருக்குப் பிறந்தவர்கள். (ஆதி 19:30-38, உபா 23:4). இந்தப் பிரமாணம் ஒருவேளை புருஷர்களுக்கு மட்டும் நியமிக்கப்பட்டிருக்கும் அல்லது இதில் சில விதிவிலக்குகள் கொடுக்கப்பட்டிருக்கும். ரூத் ஒரு மோவாபிய ஸ்திரீ. (ரூத் 1:4; ரூத் 4:13; மத் 1:5). இந்தப் பிரமாணம் இவ்விரண்டு ஜாதிகளுக்கு மட்டுமே கொடுக்கப் பட்டிருக்கிறது. உபா 23:7 ஆவது வசனத்தில் மற்ற ஜாதிகளைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஏதோமியரும் எகிப்தியரும் மூன்றாம் தலைமுறை வரையிலும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது. அதன் பின்பு அவர்கள் கர்த்தருடைய சபைக்கு உட்படலாம் என்று மோசே சொல்லுகிறார். வேதபண்டிதர்கள் இந்தப் பிரமாணத்திற்கு வெவ்வேறு விதமாக வியாக்கியானம் சொல்லுகிறார்கள்.

"கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது" என்னும் வாக்கியத்திற்கு இஸ்ரவேல் புத்திரர், ஆவிக்குரிய காரியங்களிலும், மார்க்க ஆராதனைகளிலும் இவர்களோடு எந்த தொடர்பும் வைத்துக்கொள்ளக்கூடாது என்பது பொருள் என்று வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள்.

சபைக்கு உட்படலாகாது என்னும் வாக்கியத்திற்கு, இவர்கள் இஸ்ரவேல் சபையாருக்கு அதிகாரிகளாக நியமிக்கப்படக்கூடாது என்பதே பொருள் என்றும் வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள்.

சபைக்கு உட்படலாகாது என்னும் வாக்கியத்திற்கு, இஸ்ரவேல் புத்திரர் இவர்களோடு விவாக சம்பந்தம்பண்ணிக்கொள்ளக்கூடாது என்றும் வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கானானிய ஸ்திரீகளை விவாகம்பண்ணக்கூடாது. ஆனாலும் அந்த ஸ்திரீகள் யூதமார்க்கத்தை முழுவதுமாக ஏற்றுக்கொண்டால், இஸ்ரவேல் புத்திரர் அவர்களை விவாகம்பண்ணிக்கொள்ளலாம். ஆனாலும் யூதமார்க்கத்து ஸ்திரீகள், கானானிய புருஷரை விவாகம்பண்ணுவதற்கு அனுமதியில்லை.

அம்மோனியரும், மோவாபியரும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது என்று மோசே சொல்லும்போது, அதற்கான காரணத்தையும் இங்கு சொல்லுகிறார்.

"நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு வருகிற வழியிலே, அவர்கள் அப்பத்தோடும் தண்ணீரோடும் உங்களுக்கு எதிர்கொண்டு வராததினிமித்தமும், உன்னைச் சபிக்கும்படியாய் மெசொப்பொத்தாமியாவின் ஊராகிய பேத்தோரிலிருந்த பேயோரின் குமாரன் பிலேயாமுக்குக் கூலிபேசி அவனை அழைப்பித்ததினிமித்தமும் இப்படிச் செய்யவேண்டும். உன் தேவனாகிய கர்த்தர் பிலேயாமுக்குச் செவிகொடுக்கச் சித்தமில்லாமல், உன் தேவனாகிய கர்த்தர் உன்மேல் அன்பு கூர்ந்தபடியினால், உன் தேவனாகிய கர்த்தர் அந்தச் சாபத்தை உனக்கு ஆசீர்வாதமாக மாறப்பண்ணினார்" (உபா 23:4,5) என்று மோசே சொல்லுகிறார்.

அம்மோனியனும், மோவாபியனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது - காரணம் :

1. இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு வந்தபோது அம்மோனியரும், மோவாபியரும் இஸ்ரவேலருக்கு இரக்கம் காண்பிக்கவில்லை.

2. இஸ்ரவேல் புத்திரரைச் சபிப்பதற்காக அவர்கள் பிலேயாமிற்குக் கூலி பொருந்தினார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சாபத்தை ஆசீர்வாதமாக மாறப் பண்ணினார் கர்த்தரை நம்பி ஜீவிப்பவர்களுக்கு சாபமும் ஆசீர்வாதமுமாக மாறும். கர்த்தர் தம்முடைய சித்தத்தை அவர்களுடைய ஜீவியங்களில் நிறைவேற்றுவார். ஆகையினால் கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்து, அவருடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவது மிகவும் அவசியம்.

இஸ்ரவேல் புத்திரர் அம்மோனியரையும் மோவாபியரையும் தங்கள் சபையில் சேர்த்துக்கொள்ளக்கூடாதது மாத்திரமல்ல, அவர்களை வெறுக்கவும் வேண்டும். "நீ உன் ஆயுள் நாட்களுள்ளளவும் ஒருக்காலும் அவர்கள் சமாதானத்தையும் நன்மையையும் தேடாதே" (உபா 23:6) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

"நீ உன் ஆயுள் நாட்களுள்ளளவும் ஒருக்காலும் அவர்கள் சமாதானத்தையும் நன்மையையும் தேடாதே" என்று கர்த்தர் அம்மோனியனையும் மோவாபியனையும் பற்றிச் சொல்லுகிறார். உபா 10:19; லேவி 19:18,34 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் அன்பின் பிரமாணத்திற்கு இது முரண்பட்டிருப்பது போன்று தோன்றுகிறது. ஆனால் இஸ்ரவேல் தேசத்தாரை அழிக்க நினைப்போருக்கு இரக்கம் காண்பிக்கக்கூடாது. மேசியா இஸ்ரவேல் சந்ததியின் மூலமாக வர வேண்டும். உலகத்தை ஆசீர்வதிக்கவும், ஆளுகை செய்யவும் இஸ்ரவேல் சந்ததியின் மூலமாக மேசியாவை அனுப்ப வேண்டுமென்று கர்த்தர் சித்தம் கொண்டிருக்கிறார்.

ஆகையினால் இஸ்ரவேல் தேசத்தை அழிக்க நினைப்பது கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமான பாவம். இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தாரை முழுவதுமாக அழித்து, அவர்களைச் சங்காரம் பண்ண வேண்டும். அவர்களுடைய அக்கிரமத்தின் நிமித்தமும், துன்மார்க்கத்தின் நிமித்தமும் கர்த்தர் கானான் தேசத்தாரை அழிவுக்கு நியமித்திருக்கிறார்.

ஏதோமியரையும், எகிப்தியரையும் குறித்து மோசே சொல்லும்போது, அவர்களைப்பற்றி கரிசனையோடு பேசுகிறார். "ஏதோமியனை அருவருக்காயாக, அவன் உன் சகோதரன்; எகிப்தியனை அருவருக்காயாக, அவன் தேசத்திலே பரதேசியாயிருந்தாய். மூன்றாம் தலைமுறையில் அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் கர்த்தருடைய சபைக்கு உட்படலாம்" (உபா 23:7,8) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

பாளயத்தின் சுத்தம்
உபா 23:9-14

உபா 23:9. நீ படையெடுத்து உன் சத்துருக்களுக்கு விரோதமாய்ப் புறப்படும்போது, தீதான காரியங்கள் எல்லாவற்றிற்கும் விலகியிருப்பாயாக.

உபா 23:10. இராக்காலத்தில் சம்பவித்த தீட்டினாலே அசுத்தமாயிருக்கிற ஒருவன் உங்களிலிருந்தால், அவன் பாளயத்திற்கு வெளியே போய், பாளயத்திற்குள் வராமல்,

உபா 23:11. சாயங்காலத்திலே ஜலத்தில் ஸ்நானம்பண்ணி, சூரியன் அஸ்தமிக்கும்போது பாளயத்திற்குள் வரக்கடவன்.

உபா 23:12. நீ வெளிக்குப் போயிருக்கத்தக்க இடம்பாளயத்திற்குப் புறம்பே இருக்கவேண்டும்.

உபா 23:13. உன் ஆயுதங்களோடே ஒரு சிறுகோலும் உன்னிடத்தில் இருக்கக்கடவது; நீ மலஜலாதிக்குப் போகும்போது, அதனால் மண்ணைத் தோண்டி, மலஜலாதிக்கிருந்து, உன்னிலிருந்து கழிந்து போனதை மூடிப்போடக்கடவாய்.

உபா 23:14. உன் தேவனாகிய கர்த்தர் உன்னை இரட்சிக்கவும், உன் சத்துருக்களை உனக்கு ஒப்புக்கொடுக்கவும், உன் பாளயத்திற்குள்ளே உலாவிக்கொண்டிருக்கிறார்; ஆகையால், அவர் உன்னிடத்தில் அசுசியான காரியத்தைக் கண்டு, உன்னை விட்டுப் போகாதபடிக்கு, உன் பாளயம் சுத்தமாயிருக்கக்கடவது.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு இந்தப் பிரமாணங்களை சொல்லும்போது, அவர்கள் பாளயத்திலே தங்கியிருக்கிறார்கள். அவர்கள் கூடாரங்களில் வாசம்பண்ணுகிறார்கள். மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு ஏற்கெனவே சொன்ன பிரகாரம், அவர்கள் தங்கள் கோத்திரத்து வரிசைப் பிரகாரம், ஆசரிப்புக்கூடாரத்தைச் சுற்றிலும் பாளயமிறங்கியிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் யோர்தானைக் கடந்து, கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க ஆயத்தமாயிருக்கிறார்கள். இஸ்ரவேலின் சேனை கானானிருக்கு விரோதமாக யுத்தம்பண்ண தங்களை ஆயத்தம்பண்ணிக் கொள்கிறார்கள். இஸ்ரவேலின் சேனைக்கு யுத்தம்பண்ணுவது சம்பந்தமான பிரமாணத்தைச் சொல்லுவது மிகவும் அவசியமானதாயிருக்கிறது.

மோசே இஸ்ரவேல் புத்திரரின் சேனையை நோக்கி, "நீ படையெடுத்து உன் சத்துருக்களுக்கு விரோதமாய்ப் புறப்படும்போது, தீதான காரியங்கள் எல்லாவற்றிற்கும் விலகியிருப்பாயாக" (உபா 23:9) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேலரின் பாளயம் சுத்தமாயிருக்கவேண்டும். பாளயத்தில் சகலமும் ஒழுங்கும் கிரமமுமாக நடைபெறவேண்டும். இஸ்ரவேல் புத்திரரும், அவர்களுடைய பாளயங்களும் சுத்தமாயிருக்கவேண்டும் என்பதை மோசே இந்த வசனப்பகுதியில் மறுபடியும் மறுபடியுமாய்ச் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் எல்லா காரியங்களிலும் சுத்தமாயிருக்கவேண்டும். தங்களுடைய ஆவிக்குரிய காரியங்கள், நீதிநெறி சம்பந்தமான காரியங்கள், மார்க்க காரியங்கள், சடங்காச்சாரமான காரியங்கள், சமுதாய காரியங்கள், இயற்கையான காரியங்கள், சரீர ஆரோக்கியம் ஆகிய எல்லாவற்றிலும் அவர்கள் சுத்தமாயிருக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சத்துருக்களுக்கு விரோதமாக படையெடுத்து புறப்படும்போது, அவர்கள் சத்துருக்களை நோக்கிப் பார்ப்பதோடு, தங்களைத் தாங்களே நோக்கிப் பார்த்துக்கொள்ளவேண்டும். அவர்கள் தீதான காரியங்கள் எல்லாவற்றிற்கும் விலகியிருக்கவேண்டும்.

இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்கள் எல்லா பாவங்களுக்கும் விலகியிருக்கவேண்டும். அவர்களிடத்தில் பாவம் காணப்படும்போது, அந்தப் பாவம் அவர்களுடைய வீரத்தைக் குறைத்துப்போடும். பாவம் அதிகரிக்கும்போது, அது வீரத்தை அழித்துப்போடும். பாவத்தினால் ஏற்படும் குற்றவுணர்வு மனுஷனைக் கோழையாக்கிவிடும். கோழைகளால் சத்துருவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண முடியாது. ஆகையினால் மோசே அவர்களுக்கு யுத்தம்பண்ணுவது பற்றிச் சொல்லும்போது, முதலாவதாக, "தீதான காரியங்கள் எல்லாவற்றிற்கும் விலகியிருப்பாயாக" என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரின் சேனையிலுள்ளவர்கள் தங்கள் கூடாரங்களில் சாபமான காரியங்கள், விக்கிரகங்கள் ஆகிய எதுவும் இல்லாதவாறு மிகவும் கவனமாயிருக்கவேண்டும். அவர்கள் சத்துருக்களை கொள்ளையிடும்போது, அவர்களுடைய விக்கிரகங்களை தங்களுடைய கூடாரங்களில் கொண்டு வந்து வைத்திருக்கக்கூடாது. கர்த்தருக்கு விரோதமான எல்லா காரியங்களும் தீதான காரியங்களாகும்

இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்கள் சத்துருவுக்கு விரோதமாக படையெடுத்து புறப்பட்டுப்போகும்போது, ஸ்திரீகளும், குழந்தைகளும், யுத்தத்திற்குப்போக தகுதியில்லாதவர்களும், தங்கள் கூடாரங்களில் தங்கியிருப்பார்கள். அவர்களும் தங்கள் கூடாரங்களை பரிசுத்தம்பண்ணவேண்டும். தங்கள் கூடாரங்களில் தீதான காரியங்கள் எதுவும் இல்லாதவாறு, அவர்களும் அவற்றிற்கு விலகியிருக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரருக்கு, தங்கள் சத்துருக்களோடு யுத்தம்பண்ணுகிற காலம், மறுமலர்ச்சியின் காலமாகயிருக்கும். அவர்கள் கர்த்தரை நம்பி யுத்தம்பண்ணுகிறார்கள். யுத்தம் கர்த்தருடையது. கர்த்தர் தங்களுக்காக யுத்தம்பண்ணுவார் என்று அவர்கள் நம்புகிறார்கள். கர்த்தர் தங்கள் ஜெபத்தைக் கேட்டு, சத்துருக்களுக்கு விரோதமான யுத்தத்திலே, தங்களுக்கு ஜெயத்தைக் கட்டளையிடுவார் என்று நம்பிக்கையோடு யுத்தம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் சத்துருக்களுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணும்போது, கர்த்தர்மீது அவர்கள் வைத்துள்ள பக்தியும் விசுவாசமும் அதிகரிக்கும். அவர்களுடைய ஜெபநேரம் அதிகரிக்கும். கர்த்தர் அவர்களுடைய ஜெபத்திற்கு பதில் கொடுக்கவேண்டுமென்றால், அவர்களிடத்தில் பரிசுத்தம் காணப்படவேண்டும். அவர்கள் தீதான காரியங்கள் எல்லாவற்றிற்கும் விலகியிருக்கவேண்டும்.

"என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார்" *(சங் 66:18)*.

"அப்பொழுது சாமுவேல் இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரையும் நோக்கி: நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் கர்த்தரிடத்தில் திரும்புகிறவர்களானால், அந்நிய தேவர்களையும் அஸ்தரோத்தையும் உங்கள் நடுவிலிருந்து விலக்கி, உங்கள் இருதயத்தைக் கர்த்தருக்கு நேராக்கி, அவர் ஒருவருக்கே ஆராதனைசெய்யுங்கள்; அப்பொழுது அவர் உங்களைப் பெலிஸ்தருடைய கைக்கு நீங்கலாக்கிவிடுவார் என்றான்" *(1சாமு 7:3)*.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சத்துருக்களுக்கு விரோதமாய் படையெடுத்து புறப்பட்டுப்போகும்போதும், அவர்கள் தங்கள் பாளயங்களில் தங்கியிருக்கும்போதும், அவர்கள் மத்தியில் எந்தவிதமான தீட்டும், அசுத்தமும் காணப்படக்கூடாது. அவர்களில் யார் அசுத்தமாயிருந்தாலும், அவர்கள் பாளயத்திற்குள்ளே வராமல், பாளயத்திற்கு வெளியே இருந்து, தங்களை சுத்திகரித்துக்கொண்டு, அதன் பின்பு பாளயத்திற்குள்ளே வரவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "இராக்காலத்தில் சம்பவித்த தீட்டினாலே அசுத்தமாயிருக்கிற ஒருவன் உங்களிலிருந்தால், அவன் பாளயத்திற்கு வெளியே போய், பாளயத்திற்குள் வராமல், சாயங்காலத்திலே ஜலத்தில் ஸ்நானம்பண்ணி, சூரியன் அஸ்தமிக்கும்போது பாளயத்திற்குள் வரக்கடவன்" *(உபா 23:10,11)* என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரருடைய பாளயம் சுத்தமாயிருக்கவேண்டும். எங்கு அசுத்தம் காணப்படுகிறதோ அங்கே நோய்கள் சீக்கிரத்தில் பரவிவிடும். ஆவிக்குரிய அசுத்தம் இருக்குமிடத்தில், ஆவிக்குரிய ஆரோக்கியம் இருக்காது. சரீரப்பிரகாரமான அசுத்தங்களும் இயற்கையான அசுத்தங்களும் இருக்குமிடத்தில் சரீர ஆரோக்கியம் இருக்காது.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய ஆத்துமாவை சுத்திகரிப்பதுபோல, தங்களுடைய சரீரங்களையும் சுத்தம்பண்ண வேண்டும். இஸ்ரவேல் புத்திரருடைய பாளயங்களை அசுத்தம்பண்ணுகிற காரியங்களைக் குறித்தும், அந்த அசுத்தங்களுக்கு அவர்கள் எவ்வாறு விலகியிருக்கலாம் என்பது குறித்தும் மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

"நீ வெளிக்குப் போயிருக்கத்தக்க இடம் பாளயத்திற்குப் புறம்பே இருக்கவேண்டும். உன் ஆயுதங்களோடே ஒரு சிறுகோலும் உன்னிடத்தில் இருக்கக்கடவது; நீ மலஜலாதிக்குப் போகும்போது, அதனால் மண்ணைத் தோண்டி, மலஜலாதிக்கிருந்து, உன்னிலிருந்து கழிந்து போனதை மூடிப்போடக்கடவாய்" (உபா 23:12,13) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

சேனைகளின் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே வாசம்பண்ணுகிறார். கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டி அவருடைய பரிசுத்த பிரசன்னத்திற்கு அடையாளமாயிருக்கிறது. கர்த்தரை ஆராதிக்கிற இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய சரீரத்திற்குள்ளேயும், வெளியேயும் சுத்தமாயிருக்கவேண்டும். அவர்களுடைய மனதும் சுத்தமாயிருக்கவேண்டும். அவர்களுடைய சரீரமும் சுத்தமாயிருக்கவேண்டும்.

கர்த்தருடைய கண்கள் தம்முடைய பிள்ளைகளை எப்போதும் நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறது. மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தர் மனுஷனுடைய இருதயத்தையும் பார்க்கிறார். அவனுடைய சரீரத்தையும் பார்க்கிறார். அவனுடைய சுற்றுப்புற சூழலையும் பார்க்கிறார். கர்த்தர் பரிசுத்தராயிருப்பதுபோல, அவரை ஆராதிக்கிற அவருடைய பிள்ளைகளும் எல்லா காரியங்களிலும் பரிசுத்தமாயிருக்கவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு பரிசுத்தத்தைப்பற்றிச் சொல்லும்போது, "உன் தேவனாகிய கர்த்தர் உன்னை இரட்சிக்கவும், உன் சத்துருக்களை உனக்கு ஒப்புக்கொடுக்கவும், உன் பாளயத்திற்குள்ளே உலாவிக்கொண்டிருக்கிறார்; ஆகையால், அவர் உன்னிடத்தில் அசுசியான காரியத்தைக் கண்டு, உன்னை விட்டுப் போகாதபடிக்கு, உன் பாளயம் சுத்தமாயிருக்கக்கடவது" (உபா 23:14) என்று சொல்லுகிறார்.

சமுதாய பிரமாணங்கள்
உபா 23:15-25

உபா 23:15. தன் எஜமானுக்குத் தப்பி உன்னிடத்தில் வந்த வேலைக்காரனை அவனுடைய எஜமான் கையில் ஒப்புக்கொடாயாக.

உபா 23:16. அவன் உனக்கு இருக்கிற உன் வாசல்கள் ஒன்றிலே தனக்குச் சம்மதியான இடத்தைத் தெரிந்துகொண்டு, அதிலே உன்னுடனே இருப்பானாக; அவனை ஒடுக்கவேண்டாம்.

உபா 23:17. இஸ்ரவேலின் குமாரத்திகளில் ஒருத்தியும் வேசியாயிருக்கக்கூடாது; இஸ்ரவேலின் குமாரரில் ஒருவனும் ஆண் புணர்ச்சிக்காரனாயிருக்கக்கூடாது.

உபா 23:18. வேசிப்பணயத்தையும், நாயின் கிரயத்தையும் எந்தப் பொருத்தனையினாலாகிலும் உன் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்திலே கொண்டுவராயாக; அவைகள் இரண்டும் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவைகள்.

உபா 23:19. கடனாக கொடுக்கிற பணத்துக்கும் ஆகாரத்துக்கும், கடனாகக் கொடுக்கிற வேறே எந்தப் பொருளுக்கும், உன் சகோதரன் கையில் வட்டி வாங்காயாக.

உபா 23:20. அந்நியன் கையில் நீ வட்டிவாங்கலாம்; நீ சுதந்தரிக்கப்போகிற தேசத்தில் உன் தேவனாகிய கர்த்தர் நீ கையிடும் வேலையிலெல்லாம் உன்னை ஆசீர்வதிக்கும்படி உன் சகோதரன் கையிலே வட்டி வாங்காயாக.

உபா 23:21. நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பொருத்தனை பண்ணியிருந்தால், அதைச் செலுத்தத் தாமதஞ்செய்யாதே; உன் தேவனாகிய கர்த்தர் அதை நிச்சயமாய் உன் கையில் கேட்பார்; அது உனக்குப் பாவமாகும்.

உபா 23:22. நீ பொருத்தனைபண்ணாதிருந்தால், உன்மேல் பாவம் இல்லை.

உபா 23:23. உன் வாயினால் சொன்னதை நிறைவேற்றவேண்டும்; உன் தேவனாகிய கர்த்தருக்கு உன் வாயினால் நீ பொருத்தனை பண்ணச் சொன்ன உற்சாகபலியைச் செலுத்தித் தீர்ப்பாயாக.

உபா 23:24. நீ பிறனுடைய திராட்சத்தோட்டத்தில் பிரவேசித்தால், உன் ஆசைதீர திராட்சப்பழங்களைத் திருப்தியாகப் புசிக்கலாம்; உன் கூடையிலே ஒன்றும் எடுத்துக் கொண்டு போகக் கூடாது.

உபா 23:25. பிறனுடைய விளைச்சலில் பிரவேசித்தால், உன் கையினால் கதிர்களைக் கொய்யலாம்; நீ அந்த விளைச்சலில் அரிவாளை இடலாகாது.

இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொருவரும் தன்னை நேசிப்பதுபோல, பிறரையும் நேசிக்கவேண்டும். மோசே அவர்களுக்கு ஆவிக்குரிய கடமைகளை சொல்லியிருப்பதுபோல, அவர்களுக்கு சமுதாய கடமைகளையும் சொல்லியிருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் வாசம்பண்ணுகிறபோது பாளயத்திலே தங்கியிருக்கிறார்கள். அவர்கள் கானான் தேசத்தில் குடியேறும்போது, அங்கே பட்டணங்களில் வாசம்பண்ணுவார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் எங்கே இருந்தாலும், அவர்கள் ஒரு சமுதாயமாக குடியிருக்கிறார்கள். அவர்களுக்கென்று ஒரு சில சமுதாய கடமைகளும் சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொருவரும் தங்களுடைய காரியங்களில் கவனம் செலுத்துவதுபோல, பிறருடைய காரியங்களிலும் கவனம் செலுத்தவேண்டும். அவர்கள் ஒருவருக்கொருவர் கரிசனையோடிருக்கவேண்டும்.

இஸ்ரவேல் தேசம் முழுவதுமே கர்த்தருடைய பரிசுத்த பூமியாயிருக்கிறது. அந்த தேசத்தில் அடைக்கலப்பட்டணங்கள் நியமிக்கப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு பட்டணமும் அடைக்கலப்பட்டணம்போல ஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டும். தேவைப்படுகிறவர்களுக்கு எல்லா பட்டணங்களிலும் அடைக்கலம் கிடைக்கவேண்டும்.

சமுதாய உறவுகளிலே எஜமான்களும் வேலைக்காரரும் இருக்கிறார்கள். சில சமயங்களில் வேலைக்காரர்கள் தங்கள் எஜமான்களை ஏமாற்றிவிடுவார்கள். அவர்களுக்கு நஷ்டம் ஏற்படும் வண்ணமாக ஏதாவது தீயகாரியங்களை செய்து விட்டு ஓடிவிடுவார்கள்.

சில சமயங்களில் எஜமான்கள் தங்கள் வேலைக்காரரை கொடுமைப்படுத்துவார்கள். வேலைக்காரர்கள் தண்டனைக்கு பயந்து தங்கள் எஜமானை விட்டு ஓடிப்போய்விடுவார்கள். அவர்கள் வேறுபட்டணங்களுக்கோ, அல்லது வேறு தேசங்களுக்கோ ஓடிப்போவார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ஆதரவு தேவைப்படுகிற வேலைக்காரருக்கு உதவி செய்யவேண்டும். அவர்களுக்கு ஆதரவு கொடுக்கவேண்டும். மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "தன் எஜமானுக்குத் தப்பி உன்னிடத்தில் வந்த வேலைக்காரனை அவனுடைய எஜமான் கையில் ஒப்புக்கொடாயாக. அவன் உனக்கு இருக்கிற உன் வாசல்கள் ஒன்றிலே தனக்குச் சம்மதியான இடத்தைத் தெரிந்துகொண்டு, அதிலே உன்னுடனே இருப்பானாக; அவனை ஒடுக்கவேண்டாம்" *(உபா 23:15,16)* என்று சொல்லுகிறார்.

சில எஜமான்கள் தங்கள் வேலைக்காரர்களை அளவுக்கு அதிகமாக வேலைவாங்கி ஒடுக்குவார்கள். இதனால் அவர்களிடமிருந்து வேலைக்காரர்கள் தப்பித்துச் சென்றுவிடுவார்கள். அநியாயமாய் நடத்துகிற எஜமான்களிடமிருந்து வேலைக்காரர் தப்பித்து வந்தால் அவர்களுக்கு ஆதரவு கொடுக்கலாம். நியாயமான தண்டனைக்கு தப்பித்து வருகிறவர்களுக்கு ஆதரவு கொடுக்கக்கூடாது. கர்த்தர் வேலைக்காரர்களைப் பற்றிக் கூறும்போதெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தில் அடிமைகளாக இருந்ததை நினைவுகூருகிறார்.

பலவீனமானவர்களுக்கு அடைக்கலம் கொடுப்பதும், அவர்களுக்கு ஆதரவு கொடுத்து அவர்களை பாதுகாப்பதும் கர்த்தருக்கு பிரியமான காரியம். இது ஒவ்வொரு பட்டணத்தாரும் செய்ய வேண்டிய கண்ணியமான உதவியாகும். பெலவீனமாயிருக்கிறவன் துன்மார்க்கனாயிருக்கக்கூடாது. பாவிகளும், துன்மார்க்கரும் கர்த்தருடைய பிரமாணத்தின்படி தண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

திக்கற்ற பிள்ளைகளும், தரித்திரரும், விதவைகளும் ஆதரவு அற்றிருப்பார்கள். அவர்களுக்கு ஆதரவும், அடைக்கலமும், உதவியும் தேவைப்படுகிறது. இவர்களிடத்தில் பாவம் இல்லாதபோது, இவர்கள் அக்கிரமக்காரராயில்லாதபோது, இவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து இவர்களை ஆதரிக்கவேண்டும்.

ஆகாரின் நாச்சியார் அவளைத் துன்பப்படுத்தினாள். ஆகார் வனாந்தரத்திலிருந்தபோது, ஒரு தேவதூதன் அவளை சந்தித்து, அவளை மறுபடியுமாய் அவளுடைய நாச்சியாராரிடத்திற்கு அனுப்பி வைத்தார்.

ஒநேசிமு என்பவன் ஒரு அடிமை. பிலேமோன் அவனுடைய எஜமான். அப்போஸ்தலர் பவுலுக்கு இவ்விருவருமே சிநேகிதர்கள். பவுல் ஒநேசிமுவுக்காக பிலேமோனிடத்தில் பரிந்துபேசி, அவனை மறுபடியுமாய் அவனுடைய எஜமானிடத்திற்கு திருப்பி அனுப்புகிறார்.

தேவதூதன் ஆகாரிடத்தில் ஒரு பாவமும் காணவில்லை. அப்போஸ்தலர் பவுலும் ஒநேசிமுவினிடத்தில் ஒரு தப்பிதமும் காணவில்லை. இவர்கள் இருவருமே உதவி தேவைப்படுகிறவர்களுக்கு, உதவி செய்திருக்கிறார்கள். விசுவாசிகளாகிய நாமும், நம்மால் செய்ய முடிகிற உதவிகளை மற்றவர்களுக்கு செய்யவேண்டும்.

ஒரு எஜமான் தன் வேலைக்காரனை மிகவும் துன்பப்படுத்தினால், இஸ்ரவேல் புத்திரர் துன்பப்படுகிறவனுக்கு அடைக்கலம் கொடுத்து உதவி செய்யவேண்டும். வேலைக்காரர்களுக்கு கர்த்தரைப்பற்றிய சத்தியத்தைப் போதிக்கவேண்டும். அவர்கள் புறஜாதி மார்க்கத்தாராயிருந்தால், இஸ்ரவேல் புத்திரர் அவர்களை தங்கள் மார்க்கத்திலே சேர்த்துக்கொள்ளவேண்டும்.

அடைக்கலம் தேடி வந்திருக்கிறவனுக்கு, இஸ்ரவேல் புத்திரர் அடைக்கலம் கொடுத்து, தங்கள் மத்தியிலே வாசம்பண்ணுவதற்கு உதவிசெய்யவேண்டும். அந்நியரை ஒடுக்கக்கூடாது.

இஸ்ரவேல் தேசத்தில் வேசிக்கள்ளரும், ஆண்புணர்ச்சிக்காரரும் வாசம்பண்ணக்கூடாது. இஸ்ரவேல் தேசம் திக்கற்ற பிள்ளைகளுக்கு அடைக்கலம் கொடுக்கவேண்டும். அதே வேளையில் அந்த தேசம் பாவிகளுக்கும், துன்மார்க்கருக்கும், வேசிகளுக்கும், ஆண்புணர்ச்சிக்காரருக்கும் அடைக்கலம் கொடுத்துவிடக்கூடாது.

மோசே இதுபற்றி இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லும்போது, "இஸ்ரவேலின் குமாரத்திகளில் ஒருத்தியும் வேசியாயிருக்கக்கூடாது; இஸ்ரவேலின் குமாரரில் ஒருவனும் ஆண் புணர்ச்சிக்காரனாயிருக்கக்கூடாது. வேசிப்பணயத்தையும், நாயின் கிரயத்தையும் எந்தப் பொருத்தனையினாலாகிலும் உன் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்திலே கொண்டுவராயாக; அவைகள் இரண்டும் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவைகள்" (உபா 23:17,18) என்று சொல்லுகிறார்.

நாயின் கிரயம் என்பது வேசித்தனத்தினாலும், ஆண்புணர்ச்சியினாலும் சம்பாதித்த பாவமான பணம் ஆகும். இந்தப் பாவப்பணத்தைக் கர்த்தருடைய ஆலயத்தில் கொண்டு வந்து பயன்படுத்தக் கூடாது. விக்கிரகாராதனைக்காரர்கள் மத்தியில் ஆண்வேசிகளும், பெண்வேசிகளும் ஏராளமானோர் இருக்கிறார்கள். அஸ்தரோத்திற்கு பல வேசிகள் உண்டு. தங்களுடைய தெய்வங்களின் வருமானங்களை அதிகரிப்பதற்காக அவர்கள் வேசிகளைப் பயன்படுத்துகிறார்கள் (உபா 23:17-18; மீகா 1:7).

நாயின் என்பதற்கான எபிரெய வார்த்தை "கெலெப்" என்பதாகும். இந்த வார்த்தைக்கு நாய் என்னும் மிருகம், ஆண்புணர்ச்சிக்காரன், வேசி என்று பொருள் சொல்லலாம். பரிசுத்த வேதாகமத்தில் நாய் என்னும் வார்த்தை பல்வேறு பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. நாய்கள் - மிருகஜீவன். (யாத் 11:7; யாத் 22:31; நியா 7:5; 1இராஜா 14:11)
2. மனுஷரை அவமதிப்பாகக் கூறும் அடையாள வார்த்தை (1சாமு 17:43; 1சாமு 24:14; 2சாமு 3:8; 2சாமு 9:8) 2சாமு 16:9; 2இராஜா 8:13; சங் 59:6,14)
3. ஆண்புணர்ச்சிக்காரர்கள். (உபா 23:18)
4. கிறிஸ்துவின் விரோதிகள் (சங் 22:16,20)
5. வாக்குவாதத்தில் ஈடுபடுகிறவர்கள். (நீதி 26:17)
6. கள்ளத்தீர்க்கதரிசிகள்(ஏசா 56:10-11)
7. புறஜாதியார்கள் (மத் 15:26-27)
8. கள்ளப்போதகர்கள் (பிலி 3:2)
9. பின்வாங்கிப்போனவர்கள். (2பேதுரு 2:20-21)
10. மதியீனர்கள் (நீதி 26:11)
11. ஆத்துமாவை இழந்துபோனவர்கள். (வெளி 22:15)
12. மார்க்கபேதத்தார். (மத் 7:6)

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு வட்டிக்கு கடன்கொடுப்பதைப்பற்றிச் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் ஏழைகளுக்கு இரங்கவேண்டும். உதவி தேவைப்படுகிறவர்களுக்கு உதவி செய்யவேண்டும். கடன் கேட்கிறவர்களுக்கு முகம் கோணாமல், கடன் கொடுக்கவேண்டும். கடன் வாங்குகிறவர்கள் இஸ்ரவேல் புத்திரராயிருக்கும்போது, அவர்களிடத்தில் வட்டி வாங்கக்கூடாது. புறஜாதியாரிடத்தில் வட்டி வாங்கலாம். வட்டி விகிதமும் நியாயமானதாயிருக்கவேண்டும். யாரிடத்திலும் அநியாய வட்டி வாங்கக்கூடாது.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கடன் கொடுப்பதுபற்றியும், வட்டி வாங்குவது பற்றியும் சொல்லும்போது, "கடனாக கொடுக்கிற பணத்துக்கும் ஆகாரத்துக்கும், கடனாகக் கொடுக்கிற வேறே எந்தப் பொருளுக்கும், உன் சகோதரன் கையில் வட்டி வாங்காயாக. அந்நியன் கையில் நீ வட்டிவாங்கலாம்; நீ சுதந்தரிக்கப்போகிற தேசத்தில் உன் தேவனாகிய கர்த்தர் நீ கையிடும் வேலையிலெல்லாம் உன்னை ஆசீர்வதிக்கும்படி உன் சகோதரன் கையிலே வட்டி வாங்காயாக" (உபா 23:19,20) என்று சொல்லுகிறார்.

முழு இருதயத்தோடும், தாராளமாகவும் கொடுத்து உதவி புரிகிறவரைக் கர்த்தர் அதிகமாக ஆசீர்வதிக்கிறார்.

ஒரு சிலர் தங்களுடைய குடும்பத்தின் அன்றாட செலவுக்காகவும், தங்களுடைய அவசர செலவுகளுக்காகவும், நிலத்திலே உழுது பயிரிடுவது, தாங்கள் செய்கிற தொழிலை அபிவிருத்தி பண்ணுவது போன்ற காரியங்களுக்காகவும் மற்றவரிடத்தில் கடன் வாங்குகிறார்கள். கடன் கொடுக்கிறவர்களும், கடன் வாங்குகிறவர்கள் கடனை வட்டியோடு திரும்பக் கொடுப்பார்கள் என்னும் நம்பிக்கையில், கடன் கொடுக்கிறார்கள்.

கடன்வாங்குகிறவர்கள் தங்களுக்கு கடன்கொடுத்தவர்களை ஏமாற்றக்கூடாது. வாங்கிய கடனை முறைப்படி திரும்ப செலுத்தவேண்டும். இதுவே நீதியும் நியாயமுமானது.

"உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மைசெய்யுங்கள், கைம்மாறு கருதாமல் கடன்கொடுங்கள்; அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்; அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே" (லூக் 6:35).

இஸ்ரவேல் புத்திரர், மற்றொரு இஸ்ரவேல் புத்திரருக்கு கைமாறு கருதாமல் கடன்கொடுக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரரிடத்திலிருந்து வட்டி வாங்கக்கூடாது. அப்போது கர்த்தர் கடன்கொடுத்தவனை ஆசீர்வதிப்பார். அவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது.

புறஜாதி மார்க்கத்தாரோ தங்களுடைய வியாபாரத்தையும், தொழிலையும் விருத்திபண்ணுவதற்காக கடன்வாங்குகிறார்கள். அவர்கள் பணத்தை மூலதனமாக போட்டு, அதிகமான பணத்தை லாபமாக சம்பாதிக்கிறவர்கள். இப்படிப்பட்ட புறஜாதிமார்க்கத்தாரிடமிருந்து, இஸ்ரவேல் புத்திரர் வட்டி வாங்கலாம். வியாபாரம்பண்ணுகிறவர்களும், தொழில்பண்ணுகிறவர்களும், தாங்கள் சம்பாதிக்கிற லாபத்தில் ஒரு பகுதியை, வட்டியாக திரும்ப செலுத்துகிறார்கள். இவர்களிடத்தில் வட்டி வாங்குவது, அவர்களை ஒடுக்குவது ஆகாது.

கர்த்தர் உண்மையுள்ளவர். அவர் தம்முடைய வார்த்தையிலும், வாக்குத்தத்தத்திலும் உண்மையுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளும் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பொருத்தனை பண்ணும்போது, அந்தப் பொருத்தனைகளை தாமதம்பண்ணாமல், உடனே நிறைவேற்றிவிட வேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு பொருத்தனை பண்ணுவதுபற்றிச் சொல்லும்போது, "நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பொருத்தனை பண்ணியிருந்தால், அதைச் செலுத்தத் தாமதஞ்செய்யாதே; உன் தேவனாகிய கர்த்தர் அதை நிச்சயமாய் உன் கையில் கேட்பார்; அது உனக்குப் பாவமாகும். நீ பொருத்தனைபண்ணாதிருந்தால், உன்மேல் பாவம் இல்லை. உன் வாயினால் சொன்னதை நிறைவேற்றவேண்டும்; உன் தேவனாகிய கர்த்தருக்கு உன் வாயினால் நீ பொருத்தனை பண்ணச் சொன்ன உற்சாகபலியைச் செலுத்தித் தீர்ப்பாயாக" (உபா 23:21-23) என்று சொல்லுகிறார்.

வாயினால் சொன்ன வாக்குத்தத்தம் இருதயத்திலிருந்து வருகிறது. ஒவ்வொரு மனுஷனும் தன்னுடைய வார்த்தையைக் காத்துக் கொள்ள வேண்டும். (சங் 15:4; மத் 12:36-37).

தமக்கு பொருத்தனைபண்ண வேண்டுமென்று கர்த்தர் யாரையும் கட்டாயம்பண்ணவில்லை. கர்த்தருக்கு பொருத்தனை பண்ணுகிறவர்கள் தங்களுடைய சுயாதீன சித்தத்தின் பிரகாரமாக தீர்மானம்பண்ணி, பொருத்தனை பண்ணுகிறார்கள். பொருத்தனைபண்ணிவிட்டு, அதை செலுத்தாமலிருப்பதைவிட, பொருத்தனைபண்ணாமலிருப்பது நல்லது.

நாம் கர்த்தரிடத்தில் பொருத்தனைபண்ணி ஜெபிக்கும்போது, கர்த்தர் நம்முடைய பொருத்தனையையும் ஜெபத்தையும் அங்கீகரிக்கிறார். கர்த்தருக்கு ஏறெடுக்கப்படும் பொருத்தனையில் ஆசாரியருக்கும் பங்குள்ளது. கர்த்தருக்கு பொருத்தனை பண்ணுகிறவர்கள் ஜெபத்தோடு பொருத்தனை செய்யவேண்டும். பொருத்தனை செய்த பின்பு, அந்தப் பொருத்தனையிலிருந்து பின்வாங்குவது நல்லதல்ல.

இஸ்ரவேல் புத்திரர் பிறருடைய திராட்சத்தோட்டத்தின் வழியாகவோ அல்லது பிறருடைய விளைச்சலின் வழியாகவோ பிரவேசிக்கும்போது, சில திராட்சப்பழங்களை பறித்து புசிக்கலாம். விளைச்சலின் கதிர்களை கொய்து புசிக்கலாம். இவையெல்லாம் திருடாகாது. இஸ்ரவேல் புத்திரர் பிறர் பொருளை இச்சிக்கக்கூடாது. அதே வேளையில் அவர்கள் மற்றவர்களுடைய தேவைகளையும் சந்திக்க முன்வரவேண்டும்.

மோசே இந்த வசனப்பகுதியில் பிறனுடைய தோட்டத்தின் விளைச்சலிலே புசித்தவனைப்பற்றியும், அந்தத் தோட்டத்தின் சொந்தக்காரனைப்பற்றியும் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

"நீ பிறனுடைய திராட்சத்தோட்டத்தில் பிரவேசித்தால், உன் ஆசைதீர திராட்சப்பழங்களைத் திருப்தியாகப் புசிக்கலாம்; உன் கூடையிலே ஒன்றும் எடுத்துக் கொண்டு போகக் கூடாது. பிறனுடைய விளைச்சலில் பிரவேசித்தால், உன் கையினால் கதிர்களைக் கொய்யலாம்; நீ அந்த விளைச்சலில் அரிவாளை இடலாகாது" (உபா 23:24,25) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

உபாகமம் - விரிவுரை

DEUTERONOMY - COMMENTARY

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் பிரவேசிக்கப்போகிறார்கள். அந்த தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். அங்கே திராட்சப்பழங்களும், விளைச்சலும் திரளாயிருக்கும் என்பதை மோசே தீர்க்கதரிசனமாகக் கண்டு, அதுபற்றிய பிரமாணத்தை இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பிரயாணம்பண்ணும்போது, அவர்களுக்கு பிரயாணக்களைப்பு ஏற்படும். அவர்களுக்கு பசியும் தாகமும் உண்டாகும். இஸ்ரவேல் புத்திரர் தன்னுடைய விளைச்சலில் ஒரு பகுதியை தரித்திரருக்கு கொடுத்து உதவிசெய்யவேண்டும். அவர்கள் அந்நியரை உபசரிக்க நாடவேண்டும். இஸ்ரவேல் புத்திரரும் பிறர்பொருள்மீது பேராசைப்படக்கூடாது. தங்களுக்கு இலவசமாக கிடைக்கிறது என்பதற்காக, கொடுக்கிறவருக்கு நஷ்டத்தை ஏற்படுத்திவிடக்கூடாது.

24 அதிகாரம்

ஒருவன் ஒரு ஸ்திரீயை விவாகம்பண்ணிக்கொண்ட பின்பு, தள்ளுதற்சீட்டு கொடுத்து, அவளைத் தள்ளிவிடும் சம்பவம் (உபா 24:1-4). ஒருவன் ஒரு பெண்ணை புதிதாய் விவாகம்பண்ணியிருக்கும்போது, அவன் யுத்தத்திற்கு போகாமல், ஒருவருஷ பரியந்தம் தன் வீட்டிலே தன் மனைவியோடே தங்கியிருக்கலாம் (உபா 24:5).

கடன்கொடுப்பது, அடகு வாங்குவது சம்பந்தமான பிரமாணம் (உபா 24:6,10-13,17). இஸ்ரவேல் புத்திரரில் ஒருவனை திருடுவதற்கு விரோதமான பிரமாணம் (உபா 24:7). குஷ்டரோகத்தைப்பற்றிய பிரமாணம் (உபா 24:8,9).

கூலிக்காரனை ஒடுக்கக்கூடாது (உபா 24:14,15). கொலைசெய்யப்படவேண்டிய பாவமும், பாவத்தினிமித்தம் கொலைசெய்யப்பட வேண்டியவனும் (உபா 24:16). நியாயத்தைப் புரட்டக்கூடாது (உபா 24:17,18). பரதேசிக்கும் திக்கற்ற பிள்ளைக்கும், விதவைக்கும் உதவிசெய்யவேண்டும் (உபா 24:19-22).

தள்ளுதலின் சீட்டு
உபா 24:1-4

உபா 24:1. ஒருவன் ஒரு ஸ்திரீயை விவாகம் பண்ணிக்கொண்டபின்பு, அவளிடத்தில் இலச்சையான காரியத்தைக் கண்டு, அவள்மேல் பிரியமற்றவனானால், அவன் தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள் கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பிவிடலாம்.

உபா 24:2. அவள் அவனுடைய வீட்டைவிட்டுப் போனபின்பு, வேறொருவனுக்கு மனைவியாகலாம்.

உபா 24:3. அந்த இரண்டாம் புருஷனும் அவளை வெறுத்து, தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள் கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பிவிட்டாலும், அவளை விவாகம்பண்ணின அந்த இரண்டாம் புருஷன் இறந்துபோனாலும்,

உபா 24:4. அவள் தீட்டுப்பட்டபடியினால், அவளைத் தள்ளிவிட்ட அவளுடைய முந்தின புருஷன் திரும்பவும் அவளை மனைவியாகச் சேர்த்துக்கொள்ளக்கூடாது; அது கர்த்தருக்கு முன்பாக அருவருப்பானது; உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் தேசத்தின்மேல் பாவம் வரப்பண்ணாயாக.

ஒருவன் ஒரு ஸ்திரீயை விவாகம்பண்ணிக்கொண்டபின்பு, அவளுக்கு தள்ளுதலின் சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாம் என்று மோசே சொல்லுகிறார். புதிய ஏற்பாட்டுக்காலத்தில், பரிசேயர்கள், மோசே சொன்ன இந்தப் பிரமாணத்தை தப்பிதமாக வியாக்கியானம்பண்ணி, தங்களுக்கு சாதகமாக சொன்னார்கள்.

"அதற்கு அவர்கள்: அப்படியானால், தள்ளுதற்சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார் என்றார்கள்" (மத் 19:7).

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மோசேயின் பிரமாணத்திற்கு பரிசேயர் சொன்ன வியாக்கியானத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

"அதற்கு இயேசு : உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதயகடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்; ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை. ஆதலால், எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ்செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம்பண்ணினால், அவன் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்; தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். (மத் 19:8,9).

ஒருவனுக்கு ஒருத்தி என்பது கர்த்தருடைய பிரமாணம். விவாகம் பரிசுத்தமானது. விவாக சம்பந்தத்தில் இணைக்கப்படுகிறவர்கள், தங்கள் விவாக உறவை பரிசுத்தமாய்க் காத்துக்கொள்ளவேண்டும். அவர்கள் மத்தியிலே எந்தவிதமான அசுத்தமும், இலச்சையான காரியமும் காணப்படக்கூடாது.

மோசே இதைப்பற்றிச் சொல்லும்போது, "ஒருவன் ஒரு ஸ்திரீயை விவாகம் பண்ணிக்கொண்டபின்பு, அவளிடத்தில் இலச்சையான காரியத்தைக் கண்டு, அவள்மேல் பிரியமற்றவனானால், அவன் தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள் கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பிவிடலாம்" (உபா 24:1) என்று சொல்லுகிறார்.

இலச்சையான காரியம் என்பதற்கான எபிரெய வார்த்தை "ஏரா" என்பதாகும். இந்த வார்த்தை "ஆரா" என்னும் வார்த்தையிலிருந்து வந்திருக்கிறது.

உபா 22:13-21 ஆகிய வசனங்களில் நீதிநெறியின் அடிப்படையில் காணப்படும் பாவங்களும், அதனால் ஏற்படும் அசுத்தங்களும் கூறப்பட்டிருக்கிறது. இந்தப் பாவங்களுக்கு முந்திய பிரமாணத்தில் மரண தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது.

பிரமாணம் மிகவும் கடினமாக இருந்தால், அநேகருக்கு மரண தண்டனை கொடுக்க வேண்டியது வரும். ஆகையினால் மோசே தன்னுடைய பிரமாணத்தில் ஒருசில நியதிகளைத் தளர்த்துக் கூறியிருக்கிறார். சில சமயங்களில் ஸ்திரீகள் ஆணையிடுவித்து தங்களைச் சுத்திகரித்துக் கொள்ளலாம் (எண் 5:11-31) கணவன்மார்கள், தங்களுடைய மனைவியை விசாரணை செய்யாமல் தனிப்பட்ட முறையில் விவாகரத்து செய்து கொள்ளலாம் (உபா 24:1-4; மத் 1:19).

விவாகரத்து பண்ண வேண்டுமென்று நியாயப்பிரமாணம் கூறவில்லை. ஆனால் இருதயக்கடினத்தின் நிமித்தம் விவாகரத்து அங்கிகரிக்கப்பட்டிருக்கிறது. (உபா 24:1; மத் 19:8) விவாகரத்து செய்தபின்பு, அவர்கள் யாரை வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ளலாம் (உபா 24:2) ஏற்கெனவே விவாகரத்து செய்த மனைவியைப் புருஷன் மறுபடியும் விவாகம் பண்ணக்கூடாது. இது கர்த்தருக்கு அருவருப்பானது (உபா 24:3-4).

ஸ்திரீயானவள் தன் புருஷனுடைய சொந்த உடைமையாக இருக்கிறாள். புருஷன் அவளுடைய எஜமானனாக இருக்கிறான். (யாத் 21:7-11; 2கொரி 11:3; எபே 5:22-33; கொலோ 3:18; 1பேதுரு 3:5-7) அக்காலத்தில் புறஜாதியார் மத்தியில் விவாகரத்து செய்வது மிகவும் எளிதான காரியமாக இருந்தது. அப்படிப்பட்ட பழக்கம் இஸ்ரவேல் புத்திரருக்குள் வந்துவிடக்கூடாது என்பதற்காக விவாகரத்து பற்றிய பிரமாணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

வேசித்தன முகாந்தரத்தினால் மட்டுமே ஒரு ஸ்திரீயை விவாகரத்து செய்யலாம். (மத் 5:31-32; மத் 19:1-9; மாற்கு 10:1-8; லூக்கா 16:18) இந்த முகாந்தரமில்லாமல் தன் மனைவியை விவாகரத்து செய்கிறவன் அவளை விபச்சாரம் பண்ண வைக்கிறான். (மத் 5:31; மத் 19:9).

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் புருஷருக்கு மட்டுமே விவாகரத்து செய்வதற்கு உரிமை இருப்பது போன்று தெரிகிறது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் புருஷரைப் போலவே ஸ்திரீகளுக்கும் சில விசேஷித்த சூழ்நிலைகளில் விவாகரத்து செய்யும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தள்ளப்பட்டவளை மறுபடியும் விவாகம்பண்ணுவதுபற்றி லேவியராகமத்தில் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது.

"விதவையையானாலும் தள்ளப்பட்டவளையானாலும் கற்புகுலைந்தவளையானாலும் வேசியையானாலும் விவாகம் பண்ணாமல், தன் ஜனங்களுக்குள்ளே ஒரு கன்னிகையை விவாகம் பண்ணக்கடவன்" (லேவி 21:14).

ஆனாலும் மோசே மறுபடியுமாக தள்ளப்பட்டவளை விவாகம்பண்ணுவதுபற்றி, இங்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார். ஒருவன் ஒரு ஸ்திரீயை விவாகம்பண்ணிக்கொண்ட பின்பு, அவளைப் பிடிக்கவில்லை என்பதற்காகவோ, அல்லது அவள்மீது வெறுப்பு உண்டாயிற்று என்பதற்காகவோ, அவளைத் தள்ளிவிடக்கூடாது. அவளிடத்தில் இலச்சையான காரியத்தை கண்டால் மாத்திரமே அவளைத் தள்ளிவிடலாம்.

அவள்மேல் பிரியமில்லாமல் போவதற்கும், அவள்மேல் வெறுப்பு வருவதற்கும், அவளிடத்தில் காணப்படுகிற இலச்சையான காரியமே காரணமாயிருக்கவேண்டும். வேறு எந்தக் காரணத்திற்காகவும் அவளை வெறுக்கக்கூடாது. ஒரு ஸ்திரீயை விவாகம்பண்ணியவன், அவளைத் தனக்கு பிடிக்கவில்லையென்று, தன் வாயின் வார்த்தையினால் சொல்லி, அவளைத் தள்ளிவிடக்கூடாது. புருஷன் நிதானமாக சிந்தித்து, யோசித்து, அவளைத் தள்ளிவிடுவதற்கான தள்ளுதலின் சீட்டை எழுதி அவளிடத்தில் கொடுக்கவேண்டும். அவனுடைய எழுத்திற்கு சாட்சிகளும் இருக்கவேண்டும். அவன் தன்னுடைய இனத்தார் மத்தியிலே, தன்னுடைய சமுகத்தார் முன்னிலையிலே, தன்னுடைய மனைவியை தள்ளிவிடுவதாக பிரமாணம் எழுதிக்கொடுக்கவேண்டும்.

ஒருவன் தன் மனைவியை தள்ளிவிட்ட பின்பு, அவளை அவன் மறுபடியும் விவாகம்பண்ணுவதற்கு வாய்ப்பில்லை. ஆகையினால் அவளுக்கு தள்ளுதலின் சீட்டை எழுதிக்கொடுக்கும் முன்பு, அவன் அதுபற்றி நிதானமாக யோசிக்கவேண்டும்.

தள்ளிவிடப்பட்ட ஸ்திரீ வேறொருவனுக்கு மனைவியாகலாம். "அவள் அவனுடைய வீட்டைவிட்டுப் போனபின்பு, வேறொருவனுக்கு மனைவியாகலாம்" (உபா 24:2) என்று மோசே சொல்லுகிறார். ஆனாலும் அந்த ஸ்திரீ, எந்த சூழ்நிலையிலும், தன்னுடைய முதலாவது புருஷனை மறுபடியுமாய் விவாகம்பண்ணக்கூடாது. அது கர்த்தருக்கு முன்பாக அருவருப்பானது. மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு இதுபற்றிச் சொல்லும்போது,

"அவள் அவனுடைய வீட்டைவிட்டுப் போனபின்பு, வேறொருவனுக்கு மனைவியாகலாம். அந்த இரண்டாம் புருஷனும் அவளை வெறுத்து, தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள் கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பிவிட்டாலும், அவளை விவாகம்பண்ணின அந்த இரண்டாம் புருஷன் இறந்து போனாலும், அவள் தீட்டுப்பட்டபடியினால், அவளைத் தள்ளிவிட்ட அவளுடைய முந்தின புருஷன் திரும்பவும் அவளை மனைவியாகச் சேர்த்துக்கொள்ளக்கூடாது" (உபா 24:2-4) என்று சொல்லுகிறார்.

இவ்வாறு செய்வது கர்த்தருக்கு முன்பாக அருவருப்பானது; இஸ்ரவேல் புத்திரர் இவ்வாறு செய்து, தங்கள் தேவனாகிய கர்த்தர் தங்களுக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் தேசத்தின்மேல் பாவம் வரப்பண்ணக்கூடாது.

"அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பி விட்டாலும்" என்னும் வாக்கியம் புதிய ஏற்பாட்டில் "தள்ளிவிடுதல்" என்று பொருள்படும் வாக்கியமாகும் (மத் 5:31).

தள்ளிவிடப்பட்ட ஸ்திரீயை முந்தின புருஷன் திரும்பவும் மனைவியாகச் சேர்த்துக் கொள்வது தீட்டாக கருதப்படுகிறது. வேறொருவனைத் திருமணம் செய்து கொள்வது தீட்டாகக் கருதப்படவில்லை. தீட்டு என்பதற்கு இந்த வசனத்தில் "சட்டத்திற்குப் புறம்பான காரியம்" என்று பொருள். சீகேமின் பிரபு தீனாளைத் தீட்டுப்படுத்தினான் (ஆதி 34:4,13,27) விபச்சாரம் பண்ணுகிற ஸ்திரீ தீட்டுப்பட்டவள். (எண் 5:13-14,20,27-29) செத்த பிரேதத்தைத் தொடுகிறவன் தீட்டுப்பட்டவன். (எண் 6:9,12; எண் 9:6-7) திராட்சைத் தோட்டத்தில் விதைகளைக் கலந்து விதைப்பது கனியைத் தீட்டுப்படுத்தும். (உபா 22:9).

"முந்தின புருஷன் திரும்பவும் அவளை மனைவியாகச் சேர்த்துக் கொள்ளக்கூடாது" என்று மோசே சொல்லுகிறார். தற்காலத்தில் விவாகரத்து செய்தவர்கள் மறுபடியும் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று உபதேசம் பண்ணுகிறார்கள். இந்த உபதேசத்திற்கு இந்த வாக்கியம் முரண்பட்டிருப்பது போன்று தெரிகிறது. தள்ளுதற்சீட்டைப் பெற்றுக் கொள்ளாமல் தன் புருஷனை விட்டுப் பிரிந்திருக்கும் ஸ்திரீ வேறு புருஷனை விவாகம் செய்து கொள்ளாமல், தனியாக இருக்கவேண்டும். (2கொரி 7:10-16).

தள்ளுதற்சீட்டைப் பெற்றுக்கொண்டு, தள்ளிவிடப்பட்ட ஸ்திரீ, வேறொருவனுக்கு மனைவியாக வாய்ப்புள்ளது. தள்ளுதற்சீட்டு அவர்களுடைய விவாக பந்தத்தை முறித்துப்போடுகிறது. ஒரு புருஷனையும் மனைவியையும், அவர்களுடைய மரணம் பிரிப்பதுபோல, தள்ளுதற்சீட்டு, அவர்களுடைய விவாகபந்தத்தை பிரித்துவிடுகிறது.

தள்ளிவிடப்பட்ட ஸ்திரீ, இரண்டாவது புருஷனுக்கு மனைவியாகலாம். இரண்டாவது புருஷன் இவளைத் தள்ளிவிட்டாலும், அல்லது அவன் இறந்துபோனாலும், இவள் மூன்றாவது புருஷனுக்கும் மனைவியாகலாம். ஆனாலும் முதலாவது புருஷன் இவளை மறுபடியும் விவாகம்பண்ணுவதற்கு அனுமதியில்லை.

எகிப்தியர்கள் மத்தியிலே விவாகமஞ்சம் பரிசுத்தமானதாக கருதப்படவில்லை. எகிப்து தேசத்து புருஷர்கள் தங்கள் மனைவிகளையும், மனைவிகள் தங்கள் புருஷர்களையும் பண்டம் மாற்றிக்கொள்வதுபோல மாற்றிக்கொள்வார்கள். அதுபோன்ற அருவருப்பு இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே காணப்படக்கூடாது. அதன் நிமித்தமாகவே இஸ்ரவேல் புத்திரருடைய விவாகத்தைப்பற்றியும், புருஷன் தன் மனைவியை தள்ளிவிடுவதுபற்றியும், மோசே இந்த வசனப்பகுதியில் தெளிவுபடுத்துகிறார்.

சமுதாய பிரமாணங்கள் உபா 24:5-13

உபா 24:5. ஒருவன் ஒரு பெண்ணைப் புதிதாய் விவாகம்பண்ணியிருந்தால், அவன் யுத்தத்திற்குப் புறப்படவேண்டாம்; அவன்மேல் யாதொரு வேலையும் சுமத்தவேண்டாம்; அவன் ஒரு வருஷபரியந்தம் தன் வீட்டில் தன் இஷ்டப்படியிருந்து, தான் விவாகம் பண்ணின ஸ்திரீயைச் சந்தோஷப்படுத்துவானாக.

உபா 24:6. திரிகையின் அடிக்கல்லையாவது அதின் மேற்கல்லையாவது ஒருவரும் அடகாக வாங்கக்கூடாது; அது ஜீவனை அடகு வாங்குவது போலாகும்.

உபா 24:7. தன் சகோதரராகிய இஸ்ரவேல் புத்திரரில் ஒருவனைத் திருடி, அதினால் ஆதாயந்தேடி, அவனை விற்றுப்போட்ட ஒருவன் அகப்பட்டால், அந்தத் திருடன் கொலைசெய்யப்படவேண்டும்; இப்படியே தீமையை உன் நடுவிலிருந்து விலக்கக்கடவாய்.

உபா 24:8. குஷ்டரோகத்தைக் குறித்து லேவியராகிய ஆசாரியர் உங்களுக்குப் போதிக்கும் யாவையும் கவனித்துச் செய்யும்படி மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்; நான் அவர்களுக்குக் கட்டளையிட்டபடியே செய்யக் கவனமாயிருப்பீர்களாக.

உபா 24:9. நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு வருகிற வழியிலே உங்கள் தேவனாகிய கர்த்தர் மிரியாமுக்குச் செய்ததை நினைத்துக் கொள்ளுங்கள்.

உபா 24:10. பிறனுக்கு நீ ஏதாகிலும் கடனாகக் கொடுத்தால், அவன் கொடுக்கும் அடகை வாங்க நீ அவன் வீட்டிற்குள் பிரவேசிக்க வேண்டாம்.

உபா 24:11. வெளியே நிற்பாயாக; கடன் வாங்கினவன் அந்த அடகை வெளியே உன்னிடத்தில் கொண்டுவருவானாக.

உபா 24:12. அவன் தரித்திரனானால், நீ அவன் அடகை வைத்துக்கொண்டு நித்திரை செய்யாமல்,

உபா 24:13. அவன் தன் வஸ்திரத்தைப் போட்டுப் படுத்துக்கொண்டு உன்னை ஆசீர்வதிக்கும்படி, பொழுதுபோகும்போது, திரும்ப அந்த அடகை அவனுக்குக் கொடுத்து விடவேண்டும்; அது உன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக உனக்கு நீதியாயிருக்கும்.

புதிதாய் விவாகம்பண்ணியவர்களுக்கு ஆதரவாக மோசே இந்தப் பிரமாணத்தை சொல்லுகிறார். "ஒருவன் ஒரு பெண்ணைப் புதிதாய் விவாகம்பண்ணியிருந்தால், அவன் யுத்தத்திற்குப் புறப்படவேண்டாம்; அவன்மேல் யாதொரு வேலையும் சுமத்தவேண்டாம்; அவன் ஒரு வருஷபரியந்தம் தன் வீட்டில் தன் இஷ்டப்படியிருந்து, தான் விவாகம் பண்ணின ஸ்திரீயைச் சந்தோஷப்படுத்துவானாக" (உபா 24:5) என்று மோசே சொல்லுகிறார்.

புருஷன் தன் மனைவியைத் தள்ளிவிடுவது சம்பந்தமான பிரமாணத்தை சொன்ன பின்பு, மோசே புதிதாய் விவாகம்பண்ணியிருக்கிற புருஷனையும் அவனுடைய மனைவியையும் பற்றி இங்கு சொல்லுகிறார். புருஷனும் மனைவியும் தங்கள் குடும்ப வாழ்க்கையில் உறுதியாய் நிலைத்திருக்கவேண்டும். அவர்களுக்கு இடையே உள்ள அன்பும், பாசமும், ஐக்கியமும், பந்தமும் உறுதிபண்ணப்படவேண்டும்.

புருஷனும் மனைவியும் புதிதாய் விவாகம்பண்ணியிருக்கிற முதல் வருஷத்தில், அவர்களுடைய விவாக சம்பந்தத்திற்கும், குடும்ப வாழ்க்கைக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். அவர்கள் இருவரும் ஒரு வருஷம் வரையிலும் பிரிந்திராமல் இணைந்திருக்கவேண்டுமென்று மோசே சொல்லுகிறார். புதிதாய் திருமணமான புருஷன் ஒரு வருஷத்திற்கு யுத்தக்களத்திற்கோ அல்லது வியாபாரத்தினிமித்தமாக வெளிநாட்டு பிரயாணமோ போகக்கூடாது. அவன் தன்னுடைய புது மனைவியோடே, ஒரு வருஷகாலம், தன் வீட்டிலேயே தங்கியிருக்கவேண்டும்.

கணவனும் மனைவியும் அன்பினால் பிணைக்கப்படவேண்டும். குடும்ப வாழ்க்கைக்கு அவர்களுடைய அன்பே அஸ்திபாரமாகயிருக்கிறது. அவர்களுடைய உற்றார் உறவினர்களும், புதிதாய் திருமணமான தம்பதிகள் சந்தோஷமாயிருப்பதற்கு உதவி செய்யவேண்டும். கணவனும் மனைவியும் குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமாயிருக்கும்போது, அவர்களுடைய தாம்பத்தியம் ஆரோக்கியமாயிருக்கும்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமே செல்வந்தர்களல்ல. அவர்களில் தரித்திரரும் இருக்கிறார்கள். அவர்களில் தங்களுக்கு சொந்தமான பொருட்களை அடகு வைத்து கடன் வாங்குகிறவர்கள் இருக்கிறார்கள். மோசே தன்னுடைய பிரமாணத்தில் ஒரு சில பொருட்களை அடகாக வாங்குவதை தடைபண்ணுகிறார்.

மோசே அடகு வாங்குவதுபற்றிச் சொல்லும்போது, "திரிகையின் அடிக்கல்லையாவது அதின் மேற்கல்லையாவது ஒருவரும் அடகாக வாங்கக்கூடாது; அது ஜீவனை அடகு வாங்குவது போலாகும்" (உபா 24:6) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் பிறர் பொருளை இச்சிக்கக்கூடாது. திருடுவது கர்த்தருக்கு விரோதமான பாவம். சிலர் பொருட்களை திருடுவதுபோல, மனுஷரையும் திருடுகிறார்கள். மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு இதுபற்றிச் சொல்லும்போது,

"தன் சகோதரராகிய இஸ்ரவேல் புத்திரரில் ஒருவனைத் திருடி, அதினால் ஆதாயந்தேடி, அவனை விற்றுப்போட்ட ஒருவன் அகப்பட்டால், அந்தத் திருடன் கொலைசெய்யப்படவேண்டும்; இப்படியே தீமையை உன் நடுவிலிருந்து விலக்கக்கடவாய்" (உபா 24:7) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் நடுவிலிருந்து தீமை விலக்கப்படவேண்டும். ஆகையினால் திருடன் கொல்லப்படவேண்டுமென்று மோசே கடினமான தண்டனையை சொல்லுகிறார். இவன் ஆட்டையோ அல்லது மாட்டையோ அல்லது வேறு பொருட்களையோ திருடவில்லை. இவன் தன் இனத்தார் மத்தியிலே ஒரு பிள்ளையையோ அல்லது பலவீனமானவனையோ அல்லது ஏழையையோ திருடுகிறான். தன்னுடைய பலத்தையும், செல்வத்தையும், செல்வாக்கையும் பயன்படுத்தி இவன் மனுஷரைத் திருடுகிறான்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பண்ணியிருக்கிறார். ஆனால் இந்த திருடனோ ஒரு இஸ்ரவேல் புத்திரனை திருடி, அவனை வேறொருவனுக்கு அடிமையாக விற்றுப்போடுகிறான். சுயாதீனமான விடுதலையோடிருக்கிற இஸ்ரவேல் புத்திரனை இவன் அடிமைப்படுத்துகிறான். இது கர்த்தருக்கு விரோதமான பாவம். ஆகையினால் அந்தத் திருடன் கொலைசெய்யப்படவேண்டுமென்று மோசே சொல்லுகிறார்.

மோசே குஷ்டரோகத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் மறுபடியுமாய்ச் சொல்லுகிறார்.

"குஷ்டரோகத்தைக் குறித்து லேவியராகிய ஆசாரியர் உங்களுக்குப் போதிக்கும் யாவையும் கவனித்துச் செய்யும்படி மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்; நான் அவர்களுக்குக் கட்டளையிட்டபடியே செய்யக் கவனமாயிருப்பீர்களாக. நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு வருகிற வழியிலே உங்கள் தேவனாகிய கர்த்தர் மிரியாமுக்குச் செய்ததை நினைத்துக் கொள்ளுங்கள்" (உபா 24:8,9) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் மிரியாமுக்குக் குஷ்டரோகத்தைக் கொடுத்தார். பாவம் செய்கிறவர்களுக்கு நிச்சயம் தண்டனை வரும். மிரியாம் ஒரு தீர்க்கதரிசினி. இஸ்ரவேலிலுள்ள ஸ்திரீகளில் பிரதானமானவள். ஆயினும் அவள் கர்த்தருக்கு எதிராகப் பாவம் செய்தபோது தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவள்மீது உடனடியாக வந்துவிட்டது (எண்12).

குஷ்டரோகத்தைப்பற்றி லேவியராகமத்தில் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது.

"ஆனாலும், இரணமாம்சம் அவனில் காணப்பட்டால், அவன் தீட்டுள்ளவன். ஆகையால், இரணமாம்சத்தை ஆசாரியன் காணும்போது, அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; இரணமாம்சம் தீட்டுள்ளது; அது குஷ்டம்" (லேவி 13:14,15).

இஸ்ரவேல் புத்திரர் திரிகையின் அடிக்கல்லையோ அல்லது மேற்கல்லையோ அடகாக வாங்கக்கூடாது. அவன் அந்த திரிகையில் கோதுமையை திரிக்கவேண்டும். அப்போதுதான் அவனுடைய குடும்பத்திற்கு அப்பம் சுடுவதற்கு தேவையான மாவை அவனால் அரைக்க முடியும். திரிகை அடகாக வைக்கப்பட்டால் அவனுடைய வீட்டில் அப்பம் இருக்காது. வீட்டிலுள்ளவர்கள் எல்லோரும் பட்டினியாயிருக்கவேண்டும்.

திரிகையின் அடிக்கல்லையாவது அல்லது மேற்கல்லையாவது அடகாக வாங்கக்கூடாது என்பது ஒரு உவமையாக சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு தொழில் செய்கிறவர்களுடைய கருவிகளையோ அல்லது வீட்டில் பயன்படுத்துகிற சமையல் பாத்திரங்களையோ அல்லது வியாபாரம் பண்ணுகிறவர்களுடைய தராசு, படிக்கல் போன்றவைகளையோ அல்லது ஒரு பேரறிஞர் பயன்படுத்துகிற புஸ்தகங்களையோ அடகாக வாங்கக்கூடாது. இவையெல்லாம் அவர்களுடைய ஜீவனுக்கு ஆதாரமாக இருப்பவை. இந்தப் பொருட்களை அடகாக வாங்குவது, அவர்களுடைய ஜீவனை அடகு வாங்குவதுபோல ஆகும்.

மோசே அடகு வாங்குவது பற்றிச் சொல்லும்போது, "பிறனுக்கு நீ ஏதாகிலும் கடனாகக் கொடுத்தால், அவன் கொடுக்கும் அடகை வாங்க நீ அவன் வீட்டிற்குள் பிரவேசிக்க வேண்டாம். வெளியே நிற்பாயாக; கடன் வாங்கினவன் அந்த அடகை வெளியே உன்னிடத்தில் கொண்டுவருவானாக" (உபா 24:10,11) என்று சொல்லுகிறார்.

ஏழைகளைப் பேராசைக்காரர்களிடமிருந்து பாதுகாப்பதற்காக இந்தப் பிரமாணம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அடகு வாங்கியவன், கடன்பட்டவனுடைய வீட்டிற்குள் போனால், தன்னுடைய கண்ணில் பட்டதையெல்லாம் எடுத்துக்கொண்டு வந்துவிடுவான். வீட்டிலுள்ளவனுக்கு எது உபயோகமாகயிருக்கும் என்பது கடன் கொடுத்தவனுக்கு தெரியாது. ஆகையினால் கடன் வாங்கியவனே, அந்த அடகை வீட்டிற்கு வெளியே கொண்டு வந்து, கடன்கொடுத்தவனுக்கு கொடுக்கவேண்டும்.

தரித்திரனுடைய படுக்கை வஸ்திரத்தை அடகாக வாங்கக்கூடாது. மோசே இதுபற்றிச் சொல்லும்போது, "அவன் தரித்திரனானால், நீ அவன் அடகை வைத்துக்கொண்டு நித்திரை செய்யாமல், அவன் தன் வஸ்திரத்தைப் போட்டுப் படுத்துக்கொண்டு உன்னை ஆசீர்வதிக்கும்படி, பொழுதுபோகும்போது, திரும்ப அந்த அடகை அவனுக்குக் கொடுத்து விடவேண்டும்; அது உன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக உனக்கு நீதியாயிருக்கும்" (உபா 24:12,13) என்று சொல்லுகிறார்.

இந்த சம்பவம் யாத்திராகமம் 22:26,27 ஆகிய வசனங்களில் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது.

"பிறனுடைய வஸ்திரத்தை ஈடாக வாங்கினால், பொழுதுபோகுமுன்னமே அதை அவனுக்குத் திரும்பக் கொடுத்துவிடுவாயாக. அவன் போர்வை அதுதானே, அதுவே அவன் தன் உடம்பை மூடிக்கொள்ளுகிற வஸ்திரம்; வேறு எதினாலே போர்த்துப் படுத்துக்கொள்ளுவான்? அவன் என்னை நோக்கி முறையிடும்போது, நான் அவனுக்குச் செவிகொடுப்பேன், நான் இரக்கமுள்ளவராயிருக்கிறேன்" (யாத் 22:26,27).

ஏழைகளுக்குத் தங்களுடைய வஸ்திரமே பிரதான சொத்து. வஸ்திரங்கள் இல்லாமல் இரவுவேளைகளில் கடுங்குளிரைத் தாங்க முடியாது. ஏழைகளைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக இந்தப் பிரமாணம் சொல்லப்பட்டிருக்கிறது. (யாத் 12:34) அடகாக வைக்கப்பட்ட வஸ்திரங்களைக் கடன் கொடுத்தவன் தன்னிடத்தில் வைத்துக் கொள்ளக்கூடாது. (உபா 24:1, யாத் 22:26, யோபு 24:7-8).

பொழுதுபோகும் முன்பு செய்ய வேண்டிய மூன்று காரியங்களைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன :

1. அடகாக வாங்கிய வஸ்திரத்தைத் திரும்பக் கொடுத்துவிடவேண்டும். (யாத் 22:26).

2. வேலைக்காரர்களின் சம்பளத்தைக் கொடுத்துவிடவேண்டும். (உபா 24:15).

3. கோபத்தைத் தணித்து விடவேண்டும். (எபே 4:26).

ஏழைக்கு இரக்கம் காண்பிக்கவேண்டும் உபா 24:14-22

உபா 24:14. உன் சகோதரரிலும், உன் தேசத்தின் வாசல்களிலுள்ள அந்நியரிலும் ஏழையும் எளிமையுமான கூலிக்காரனை ஒடுக்காயாக.

உபா 24:15. அவன் வேலைசெய்த நாளில்தானே, பொழுதுபோகுமுன்னே, அவன் கூலியை அவனுக்குக் கொடுத்துவிடவேண்டும்; அவன் ஏழையும் அதின்மேல் ஆவலுமாயிருக்கிறான்; அதைக் கொடாவிட்டால் அவன் உன்னைக் குறித்துக் கர்த்தரை நோக்கி முறையிடுவான்; அது உனக்குப் பாவமாயிருக்கும்.

உபா 24:16. பிள்ளைகளுக்காகப் பிதாக்களும், பிதாக்களுக்காகப் பிள்ளைகளும் கொலை செய்யப்படவேண்டாம்; அவனவன் செய்த பாவத்தினிமித்தம் அவனவன் கொலைசெய்யப்படவேண்டும்.

உபா 24:17. நீ அந்நியனுடைய நியாயத்தையும் திக்கற்ற பிள்ளையின் நியாயத்தையும் புரட்டாமலும், விதவையின் வஸ்திரத்தை அடகாக வாங்காமலும் இருந்து,

உபா 24:18. நீ எகிப்திலே அடிமையாயிருந்ததையும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னை அங்கேயிருந்து மீட்டுக்கொண்டுவந்ததையும் நினைப்பாயாக; ஆகையால், இப்படிச் செய்யும்படி நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்.

உபா 24:19. நீ உன் பயிரை அறுக்கையில் உன் வயலிலே ஒரு அரிக்கட்டை மறதியாய் வைத்துவந்தாயானால், அதை எடுத்து வரும்படி திரும்பிப் போகவேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தர் உன் கைப்பிரயாசத்திலெல்லாம் உன்னை ஆசீர்வதிக்கும்படி, அதைப் பரதேசிக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் விட்டுவிடுவாயாக.

உபா 24:20. நீ உன் ஒலிவமரத்தை உதிர்த்து விட்டபின்பு, கொம்பிலே தப்பியிருக்கிறதைப் பறிக்கும்படி திரும்பிப் போகவேண்டாம்; அதைப் பரதேசிக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் விட்டு விடுவாயாக;

உபா 24:21. நீ உன் திராட்சப்பழங்களை அறுத்தபின்பு, மறுபடியும் அதை அறுக்கத் திரும்பிப்போகவேண்டாம்; அதைப் பரதேசிக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் விட்டுவிடுவாயாக.

உபா 24:22. நீ எகிப்திலே அடிமையாயிருந்ததை நினைப்பாயாக; ஆகையால், இப்படிச் செய்யும்படி நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்.

எஜமான்கள் தங்கள் வேலைக்காரர்களுக்கு இரக்கம் காண்பிக்கவேண்டும். ஏழையும் எளிமையுமான கூலிக்காரனை ஒடுக்கக்கூடாது. அவர்களுக்கு கொடுக்க வேண்டிய நியாயமான கூலியை, தாமதமில்லாமல், குறித்த காலத்திற்குள் கொடுத்துவிடவேண்டும்.

மோசே இதுபற்றிச் சொல்லும்போது, "உன் சகோதரரிலும், உன் தேசத்தின் வாசல்களிலுள்ள அந்நியரிலும் ஏழையும் எளிமையுமான கூலிக்காரனை ஒடுக்காயாக. அவன் வேலைசெய்த நாளில்தானே, பொழுதுபோகுமுன்னே, அவன் கூலியை அவனுக்குக் கொடுத்துவிடவேண்டும்; அவன் ஏழையும் அதின்மேல் ஆவலுமாயிருக்கிறான்; அதைக் கொடாவிட்டால் அவன் உன்னைக் குறித்துக் கர்த்தரை நோக்கி முறையிடுவான்; அது உனக்குப் பாவமாயிருக்கும்" (உபா 24:14,15) என்று சொல்லுகிறார்.

திக்கற்றவர்களையும், ஏழைகளையும் ஒடுக்குவது மிகப்பெரிய பாவம். அவர்களை ஆசீர்வதிப்பது தேவனுடைய சமுகத்தில் செய்யும் நீதியான காரியம் (உபா 24:15; உபா 15:11; சங் 35:10; சங் 72:13; சங் 82:3-4; நீதி 19:17).

நியாயாதிபதிகள் பாரபட்சமில்லாமல் வழக்குகளை விசாரிக்கவேண்டும். "பிள்ளைகளுக்காகப் பிதாக்களும், பிதாக்களுக்காகப் பிள்ளைகளும் கொலை செய்யப்படவேண்டாம்; அவனவன் செய்த பாவத்தினிமித்தம் அவனவன் கொலைசெய்யப்படவேண்டும். நீ அந்நியனுடைய நியாயத்தையும் திக்கற்ற பிள்ளையின் நியாயத்தையும் புரட்டாமலும், விதவையின் வஸ்திரத்தை அடகாக வாங்காமலும் இருந்து, நீ எகிப்திலே அடிமையாயிருந்ததையும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னை அங்கேயிருந்து மீட்டுக்கொண்டுவந்ததையும் நினைப்பாயாக; ஆகையால், இப்படிச் செய்யும்படி நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்" (உபா 24:16-18) என்று மோசே சொல்லுகிறார்.

ஐசுவரியவான்கள் தரித்திரருக்கு இரக்கம் காண்பிக்கவேண்டும். மோசேயின் பிரமாணத்தில், ஏழைகளுக்கு இரங்கவேண்டும் என்னும் வார்த்தை பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஐசுவரியவான்கள் பல வழிகளில் ஏழைகளுக்கு இரக்கம் காண்பிக்கலாம். பரதேசி, திக்கற்ற பிள்ளைகள், விதவைகள் ஆகியோருக்கு உதவி தேவைப்படுகிறது. ஐசுவரியவான்கள் இவர்களுக்கு உதவி செய்யும்போது, தேவனாகிய கர்த்தர் அவர்களுடைய கையின் பிரயாசங்களையெல்லாம் ஆசீர்வதிப்பார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீ உன் பயிரை அறுக்கையில் உன் வயலிலே ஒரு அரிக்கட்டை மறதியாய் வைத்துவந்தாயானால், அதை எடுத்து வரும்படி திரும்பிப் போகவேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தர் உன் கைப்பிரயாசத்திலெல்லாம் உன்னை ஆசீர்வதிக்கும்படி, அதைப் பரதேசிக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் விட்டுவிடுவாயாக" (உபா 24:19) என்றும்,

"நீ உன் ஒலிவமரத்தை உதிர்த்து விட்டபின்பு, கொம்பிலே தப்பியிருக்கிறதைப் பறிக்கும்படி திரும்பிப் போகவேண்டாம்; அதைப் பரதேசிக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் விட்டு விடுவாயாக" (உபா 24:20) என்றும்,

"நீ உன் திராட்சப்பழங்களை அறுத்தபின்பு, மறுபடியும் அதை அறுக்கத் திரும்பிப்போகவேண்டாம்; அதைப் பரதேசிக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் விட்டுவிடுவாயாக" (உபா 24:21) என்றும் கட்டளையிடுகிறார்.

கொம்பிலே தப்பியிருப்பதைப் பரதேசிக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் விட்டு விட வேண்டும் (ஏசா 17:6; ஏசா 24:13).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலே அடிமையாயிருந்ததை நினைக்கவேண்டும்; ஆகையால், இஸ்ரவேல் புத்திரர் இப்படிச் செய்யவேண்டுமென்று மோசே அவர்களுக்கு கட்டளையிடுகிறார் (உபா 24:22).

25 அதிகாரம்

குற்றவாளியை அதிகமாய் அடிக்காமல், அவனுடைய குற்றத்திற்கு தக்கதாய் அடிக்கவேண்டும் (உபா 25:1-3). போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டக்கூடாது (உபா 25:4). புருஷனுடைய சகோதரன் செய்ய வேண்டிய கடமை (உபா 25:5-10).

இலச்சையான காரியத்தை செய்த ஸ்திரீக்கு தண்டனை (உபா 25:11,12). இஸ்ரவேல் புத்திரரிடத்தில் குறையற்ற சுமுத்திரையான நிறைகல்லும் படியும் இருக்கவேண்டும் (உபா 25:13-16). அமலேக்கியரை அழியப்பண்ணவேண்டும் (உபா 25:17-19).

நியாயவிசாரணை உபா 25:1-3

உபா 25:1. மனிதருக்குள்ளே வழக்குண்டாய், அவர்கள் நியாயம் விசாரிக்கப்பட நியாயஸ்தலத்திலே வந்தால், நியாயாதிபதிகள் நீதிமானை நீதிமான் என்றும் குற்றவாளியைக் குற்றவாளி என்றும் தீர்க்கக் கடவர்கள்.

உபா 25:2. குற்றவாளி அடிகளுக்குப் பாத்திரவானானால், நியாயாதிபதி அவனைக் கீழே கிடக்கப்பண்ணி, அவன் குற்றத்திற்குத் தக்கதாய்த் தனக்கு முன்பாகக் கணக்கின்படி அவனை அடிப்பிக்கக்கடவன்.

உபா 25:3. அவனை நாற்பது அடிவரைக்கும் அடிக்கலாம்; அவனை அதிலும் அதிகமாய் அடிக்கிறதினால் உன் சகோதரன் உன் கண்களுக்கு முன்பாக நீசனாய்த் தோன்றுவான்; ஆதலால் அவனை அதிகமாய் அடிக்கவேண்டாம்.

மனிதருக்குள்ளே ஏற்படுகிற வழக்குகள் நியாயமாய் விசாரிக்கப்படவேண்டும். "மனிதருக்குள்ளே வழக்குண்டாய், அவர்கள் நியாயம் விசாரிக்கப்பட நியாயஸ்தலத்திலே வந்தால், நியாயாதிபதிகள் நீதிமானை நீதிமான் என்றும் குற்றவாளியைக் குற்றவாளி என்றும் தீர்க்கக் கடவர்கள்" (உபா 25:1) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

குற்றவாளியென்று தீர்க்கப்படுகிறவனுக்கு தண்டனை கொடுக்கப்படவேண்டும். மோசேயின் பிரமாணத்தில் குற்றவாளிக்கு கொடுக்கப்படும் பல்வேறு விதமான தண்டனைகளைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் தண்டனைகளில் ஒன்று, குற்றவாளியை வாரினால் அடிப்பது. யூதர்கள் மத்தியிலே இந்தத் தண்டனையே மிகவும் பிரபல்யமானது.

குற்றவாளி என்று தீர்க்கப்பட்டவனை வாரினால் அடிக்கும்போது, அவனை எவ்வாறு அடிக்கவேண்டும் என்றும், அவனை எத்தனை அடி அடிக்கவேண்டுமென்றும் மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

"குற்றவாளி அடிகளுக்குப் பாத்திரவானானால், நியாயாதிபதி அவனைக் கீழே கிடக்கப்பண்ணி, அவன் குற்றத்திற்குத் தக்கதாய்த் தனக்கு முன்பாகக் கணக்கின்படி அவனை அடிப்பிக்கக்கடவன். அவனை நாற்பது அடிவரைக்கும் அடிக்கலாம்; அவனை அதிலும் அதிகமாய் அடிக்கிறதினால் உன் சகோதரன் உன் கண்களுக்கு முன்பாக நீசனாய்த் தோன்றுவான்; ஆதலால் அவனை அதிகமாய் அடிக்கவேண்டாம்" (உபா 25:2,3) என்று மோசே சொல்லுகிறார்.

குற்றவாளியை எல்லோருடைய கண்களுக்கும் முன்பாக தெருவிலும், பொதுஇடங்களிலும் அடிக்க வேண்டும் என்னும் அவசியமில்லை. குற்றவாளி மற்றவர்களுடைய கண்களுக்கு முன்பாக நீசனாக தோன்றக்கூடாது. அவன் தன் குற்றத்தை உணரவேண்டும். மனந்திருந்த வேண்டும். அவன் மறுபடியும் குற்றம் செய்யாமல் நல்லவனாக வாழவேண்டும். இதற்காகவே அவனுக்கு தண்டனை கொடுக்கப்படுகிறது. குற்றவாளிக்கு கொடுக்கப்படும் தண்டனை நியாயாபதியின் கண்களுக்கு முன்பாக கொடுக்கப்படவேண்டும்.

குற்றவாளியை கீழே கிடக்கப்பண்ணி, அவன் செய்த குற்றத்திற்கு தக்கதாக, அவனை கணக்கின்படி அடிக்கவேண்டும். குற்றவாளியை கணக்கு வழக்கு இல்லாமல் யாரும் இஷ்டப்படி அடித்து விடக்கூடாது. அவனை அடிக்கும்போது, அடிக்கும் அடிகள் எண்ணப்படவேண்டும்.

யூதருடைய பாரம்பரிய வழக்கத்தின் பிரகாரம், குற்றவாளியை அடிப்பதற்கு முன்பாக, நீதிமன்றத்திலே கூடியிருக்கிற எல்லோருடைய காதுகளும் கேட்கும் வண்ணமாக, பிரதான நீதிபதி உபா 28:58-60; உபா 29:9 ஆகிய வசனங்களை சத்தமாய் வாசிக்கவேண்டும்.

" உன் தேவனாகிய கர்த்தர் என்னும் மகிமையும் பயங்கரமுமான நாமத்திற்குப் பயப்படும்படிக்கு, நீ இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படியெல்லாம் நடக்கக் கவனமாயிராவிட்டால், கர்த்தர் நீங்காத பெரிய வாதைகளாலும் நீங்காத கொடிய ரோகங்களாலும் உன்னையும் உன் சந்ததியையும் அதிசயமாய் வாதித்து, நீ கண்டு பயந்த எகிப்து வியாதிகளெல்லாம் உன்மேல் வருவிப்பார்; அவைகள் உன்னைப் பற்றிக்கொள்ளும்" (உபா 28:58-60).

"இப்பொழுதும் நீங்கள் செய்வதெல்லாம் உங்களுக்கு வாய்க்கும்படிக்கு, இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்வீர்களாக" (உபா 29:9).

குற்றவாளியை அடிக்கும்போது, அவன்மீதுள்ள கோபத்தை காண்பிக்கும் வண்ணமாக அவனை அடிக்கக்கூடாது. குற்றவாளியை அடிப்பதுகூட, யூதருக்கு மார்க்க பிரமாணமாயிருக்கிறது. ஆகையினால் அவர்கள் கர்த்தருக்கு பயந்து குற்றவாளியை அடிக்கவேண்டும். குற்றவாளியை அடிக்கும்போது அவனும் திருந்தவேண்டும். அவனுக்கு கொடுக்கப்படும் அடிகள் மற்றவர்களுக்கும் எச்சரிப்பாயிருக்கவேண்டும்.

குற்றவாளிக்கு அவனுடைய குற்றத்திற்கு தக்கதாக அடிகள் கொடுக்கப்படுகிறது. பெரிய குற்றம் செய்தவனுக்கு அதிகமான அடிகளும், சிறிய குற்றம் செய்தவனுக்கு குறைவான அடிகளும் கொடுக்கப்படும்.

ஒரு குற்றவாளி எவ்வளவு பெரிய குற்றம் செய்திருந்தாலும், அவனை நாற்பது அடிகளுக்குமேல் அடிக்கக்கூடாது. பொதுவாக யூதர்கள் குற்றவாளியை முப்பத்தொன்பது அடிகள் அடிப்பது வழக்கம்.

"யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்" (2கொரி 11:24) என்று அப்போஸ்தலர் பவுல் சொல்லுகிறார்.

யூதர்கள் குற்றவாளியை அடிக்கும்போது, முப்பத்தொன்பதாவது அடியிலேயே நிறுத்திவிடுவார்கள். தங்களுடைய எண்ணிக்கையில் தவறு ஏற்பட்டு, குற்றவாளியை நாற்பது அடிகளுக்குமேல் அடித்துவிட்டால், அவர்கள் மோசேயின் பிரமாணத்தை மீறிவிடுவார்கள். பிரமாணத்தை மீறினால் தேவனுடைய கோபம் அவர்கள்மேல் வரும். அதற்கு பயந்து அவர்கள் குற்றவாளியை, ஒன்றுகுறைய நாற்பது அடிகள் மாத்திரம் அதாவது முப்பத்தொன்பது அடிகள் மாத்திரம் அடிப்பது வழக்கம்.

யூதர்கள் குற்றவாளியை வாரினால் அடிக்கும்போது, ஒவ்வொரு முறையும் மூன்று அடிகள் அடிப்பது வழக்கம். இவ்வாறாக அவர்கள் பதிமூன்று அடிகள் அடிப்பார்கள். ஒவ்வொரு அடியிலும் மூன்று அடிகள் என்று கணக்கிடும்போது, மொத்தம் முப்பத்தொன்பது அடிகளாகிறது. இதற்குமேலும் ஒரு அடி அடித்தால், அது நாற்பது அடிகளாயிராமல், நாற்பத்திரண்டு அடிகளாகிவிடும். ஆகையினால் யூதர்கள் குற்றவாளியை அடிக்கும்போது, ஒன்றுகுறைய நாற்பது அடியாக அதாவது முப்பத்தொன்பது அடிகளாக அல்லது மூன்று அடிகள் வீதம் பதிமூன்று அடிகளாக அடிப்பது வழக்கம்.

போரடிக்கிற மாடு
உபா 25:4

உபா 25:4. போரடிக்கிற மாட்டை வாய் கட்டாயாக.

இஸ்ரவேல் புத்திரர் கதிர்களைப் போரடிப்பதற்கு மாடுகளை பயன்படுத்துவது வழக்கம். மாடுகள் போரடிக்கும்போது, அவை தானியத்தை தின்னக்கூடாது என்பதற்காக, அந்த மாடுகளின் வாயை கட்டுவது வழக்கம். கர்த்தர் மாடுகளின்மீதும் கரிசனை காண்பிக்கிறார். வேலைக்காரருக்கு காலதாமதமில்லாமல் சம்பளம் கொடுக்கவேண்டும். போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டவும் கூடாது. இஸ்ரவேல் புத்திரர், தங்களிடத்தில் வேலை பார்க்கிற மனுஷரிடத்திலும், மிருகங்களிடத்திலும் கரிசனையோடு நடந்துகொள்ளவேண்டும்.

பவுல் இந்தப் பிரமாணத்தைச் சுவிசேஷ ஊழியருக்குப் பயன்படுத்துகிறார். அவர்களுக்கு ஜீவ ஆதரவு உண்டாயிருக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறார் (2கொரி 9:9). கிழக்கு தேசங்களில் போரடிப்பதற்கு மாடுகளுக்குப் பதிலாக வேறுசில கருவிகளையும் பயன்படுத்துகிறார்கள் (ஏசா 28:27-28).

சகோதரன் செய்யவேண்டிய கடமை
உபா 25:5-10

உபா 25:5. சகோதரர் ஒன்றாய்க் குடியிருக்கும் போது, அவர்களில் ஒருவன் புத்திரசந்தானமில்லாமல் மரித்தால், மரித்தவனுடைய மனைவி புறத்திலிருக்கிற அந்நியனுக்கு மனைவியாகக்கூடாது; அவளுடைய புருஷனின் சகோதரன் அவளைத் தனக்கு மனைவியாகக் கொண்டு, அவளிடத்தில் சேர்ந்து, புருஷனுடைய சகோதரன் செய்யவேண்டிய கடமையைச் செய்யக்கடவன்.

உபா 25:6. மரித்த சகோதரனுடைய பேர் இஸ்ரவேலில் அற்றுப்போகாதபடிக்கு, அவன் பேரை அவள் பெறும் தலைப்பிள்ளைக்குத் தரிக்கவேண்டும்.

உபா 25:7. அவன் தன் சகோதரனுடைய மனைவியை விவாகம்பண்ண மனதில்லாதிருந்தால், அவன் சகோதரனுடைய மனைவி வாசலில் கூடிய மூப்பரிடத்துக்குப் போய் என் புருஷனுடைய சகோதரன் தன் சகோதரனுடைய பேரை இஸ்ரவேலில் நிலைக்கப்பண்ணமாட்டேன் என்கிறான்; புருஷனுடைய சகோதரன் செய்ய வேண்டிய கடமையைச் செய்ய அவன் மனதில்லாதிருக்கிறான் என்று சொல்வாளாக.

உபா 25:8. அப்பொழுது அந்தப் பட்டணத்து மூப்பர் அவனை அழைப்பித்து அவனோடே பேசியும், அவன் அவளை விவாகம்பண்ணிக்கொள்ள எனக்குச் சம்மதமில்லை என்று பிடிவாதமாய்ச் சொன்னால்,

உபா 25:9. அவன் சகோதரனுடைய மனைவி மூப்பரின் கண்களுக்கு முன்பாக அவனிடத்தில் வந்து, அவன் காலிலிருக்கிற பாதரட்சையைக் கழற்றி, அவன் முகத்திலே துப்பி, தன் சகோதரன் வீட்டைக் கட்டாதவனுக்கு இப்படியே செய்யப்படவேண்டும் என்று சொல்லக்கடவள்.

உபா 25:10. இஸ்ரவேலில் அப்படிப்பட்டவன் வீடு, பாதரட்சை கழற்றிப்போடப்பட்டவன் வீடு என்னப்படும்.

தன்னுடைய சகோதரனின் மனைவி விதவையாயிப்போகும்போது, அந்தப் புருஷனின் சகோதரன், அவளை விவாகம் செய்துகொள்ளவேண்டும். இது புருஷனுடைய சகோதரன் செய்ய வேண்டிய கடமை. மோசே இதுபற்றிச் சொல்லும்போது,

"சகோதரர் ஒன்றாய்க் குடியிருக்கும் போது, அவர்களில் ஒருவன் புத்திரசந்தானமில்லாமல் மரித்தால், மரித்தவனுடைய மனைவி புறத்திலிருக்கிற அந்நியனுக்கு மனைவியாகக்கூடாது; அவளுடைய புருஷனின் சகோதரன் அவளைத் தனக்கு மனைவியாகக் கொண்டு, அவளிடத்தில் சேர்ந்து, புருஷனுடைய சகோதரன் செய்யவேண்டிய கடமையைச் செய்யக்கடவன். மரித்த சகோதரனுடைய பேர் இஸ்ரவேலில் அற்றுப்போகாதபடிக்கு, அவன் பேரை அவள் பெறும் தலைப்பிள்ளைக்குத் தரிக்கவேண்டும்" (உபா 25:5,6) என்று சொல்லுகிறார்.

விதவையாயிருக்கிற சகோதரனின் மனைவியை விவாகம்பண்ணுவது பழங்காலத்து பழக்கம். யூதாவின் குடும்பத்தில் இதுபோன்ற சம்பவம் நடந்திருக்கிறது.

"அப்பொழுது யூதா ஓனானை நோக்கி: நீ உன் தமையன் மனைவியைச் சேர்ந்து, அவளை மைத்துனச் சுதந்தரமாய்ப் படைத்து, உன் தமையனுக்குச் சந்ததியை உண்டாக்கு என்றான்" (ஆதி 38:8).

ஒரு குடும்பத்தில் புருஷன் மரித்துப்போகும்போது, அவனுடைய மனைவி விதவையாகிறாள். அந்தப் புருஷனுக்கு, இன்னும் திருமணமாகாத சகோதரன் இருப்பானென்றால், அவன் அந்த விதவையை விவாகம் செய்துகொள்ளவேண்டும். மரித்தவனுடைய மனைவி புறத்திலிருக்கிற அந்நியனுக்கு மனைவியாகாமல், தன்னுடைய புருஷனின் சகோதரனுக்கு மனைவியாகவேண்டும்.

அவளுடைய புருஷனின் சகோதரன் அவளை விவாகம் செய்துகொள்ளவில்லையென்றால், அந்தக் குடும்பத்திலுள்ள வேறு யாராவது நெருங்கிய உறவினர் ஒருவர் அவளை விவாகம் செய்துகொள்ளவேண்டும். இவ்வாறாக அந்தக் குடும்பத்தின் சுதந்தரம், மற்ற குடும்பத்திற்கு கடந்துபோகாமல், அந்தக் குடும்பத்திலேயே தங்கியிருக்கும்.

மரித்துப்போனவனுடைய மனைவியை ஒருவரும் விவாகம்பண்ணவில்லையென்றால், அவள் புறத்திலிருக்கிற அந்நியனுக்கு மனைவியாகலாம்.

ஒரு குடும்பத்திலுள்ள விதவையை விவாகம்பண்ணுகிறவர்கள், அவள்மீதுள்ள மதிப்பினாலும், மரியாதையினாலும், அவளுக்கு புத்திர சந்தானம் உண்டுபண்ணவேண்டும் என்பதற்காகவும் அவளை விவாகம்பண்ணுகிறார்கள்.

ஒருவனுக்கு மனைவியாயிருக்கிறவள், தன் சொந்தக்குடும்பத்தை விட்டு விட்டு, தன்னுடைய புருஷன் வீட்டிற்கு வந்திருக்கிறாள். புருஷனுடைய வீட்டிலுள்ளவர்கள் அவளுக்கு முழுஆதரவு கொடுக்கவேண்டும். அவளுடைய புருஷன் மரித்துப்போனதினால், அவள் விதவையாகிறாள். இனிமேல் புருஷனின் ஆதரவு அவளுக்கு கிடைக்காது. ஆனாலும் அவளுடைய புருஷனின் குடும்பத்தார் அவளை ஆதரிக்கவேண்டும்.

செத்துப்போன அவளுடைய புருஷனும், புத்திர சந்தானமில்லாமல் மரித்துப்போனான். அவனுடைய விதவை மனைவிக்கு பிற்காலத்தில் ஆதரவு வேண்டும். அவளுக்கும் புத்திர சந்தானம் வேண்டும். இதற்காக அவளுடைய புருஷனின் சகோதரன் அவளை தனக்கு மனைவியாகக் கொண்டு, அவளிடத்தில் சேர்ந்து, புருஷனுடைய சகோதரன் செய்யவேண்டிய கடமையை செய்யவேண்டும். அவளுடைய குடும்பத்தில் புத்திர சந்தானத்தை உண்டுபண்ணவேண்டும். இது மோசேயின் பிரமாணம்.

அவளுடைய புருஷனின் சகோதரன் அவளை விவாகம்பண்ண மனதில்லாதிருந்தால், என்ன செய்யவேண்டும் என்றும் மோசே இந்தப் பிரமாணத்தில் சொல்லுகிறார். "அவன் தன் சகோதரனுடைய மனைவியை விவாகம்பண்ண மனதில்லாதிருந்தால், அவன் சகோதரனுடைய மனைவி வாசலில் கூடிய மூப்பரிடத்துக்குப் போய் என் புருஷனுடைய சகோதரன் தன் சகோதரனுடைய பேரை இஸ்ரவேலில் நிலைக்கப்பண்ணமாட்டேன் என்கிறான்; புருஷனுடைய சகோதரன் செய்ய வேண்டிய கடமையைச் செய்ய அவன் மனதில்லாதிருக்கிறான் என்று சொல்வாளாக" (உபா 25:7) என்று மோசே சொல்லுகிறார்.

விதவையானவள் தன்னுடைய பிரச்சனையை அந்தப் பட்டணத்து மூப்பரிடத்தில் சொல்லவேண்டும். மூப்பர்கள் அவளுடைய புருஷனின் சகோதரனை அழைத்து விசாரிப்பார்கள். அவன் செய்ய வேண்டிய கடமையை அவனுக்கு நினைவுபடுத்துவார்கள். அவன் தன்னுடைய சகோதரனின் மனைவியை விவாகம்பண்ணி, அவனுடைய கடமையை செய்யவேண்டுமென்று அவனுக்கு புத்திமதி சொல்லுவார்கள்.

அந்தப் பட்டணத்து மூப்பர் அவனை அழைப்பித்து அவனோடே பேசியும், அவன் அவளை விவாகம்பண்ணிக்கொள்ள எனக்குச் சம்மதமில்லை என்று பிடிவாதமாய்ச் சொன்னால் என்ன செய்யவேண்டும் என்றும் மோசே இந்தப் பிரமாணத்தில் சொல்லுகிறார் (உபா 25:8).

"அவன் சகோதரனுடைய மனைவி மூப்பரின் கண்களுக்கு முன்பாக அவனிடத்தில் வந்து, அவன் காலிலிருக்கிற பாதரட்சையைக் கழற்றி, அவன் முகத்திலே துப்பி, தன் சகோதரன் வீட்டைக் கட்டாதவனுக்கு இப்படியே செய்யப்படவேண்டும் என்று சொல்லக்கடவள்" (உபா 25:9) என்று மோசே சொல்லுகிறார்.

செத்துப்போன தன்னுடைய சகோதரனின் மனைவியை விவாகம்பண்ணவேண்டுமென்று, யாரும் அவனை கட்டாயம்பண்ண முடியாது. பட்டணத்து மூப்பர் அவனுக்கு ஆலோசனை சொல்லலாம். தன்னுடைய சகோதரனின் மனைவிக்கு அவன் உதவி செய்யவேண்டுமென்று, அவனிடத்தில் பரிந்து பேசலாம். ஆனாலும் அந்த சகோதரன்தான், தன்னுடைய விவாக காரியத்தைக் குறித்து தீர்மானம்பண்ணவேண்டும்.

அவன் தன்னுடைய சகோதரனின் மனைவியை விவாகம்பண்ண மறுக்கும்போது, பட்டணத்து ஜனங்களுக்கு முன்பாக அவன் அவமானப்படுத்தப்படுவான். தன்னுடைய சகோதரனுக்கு செய்ய வேண்டிய கடமையை செய்ய அவன் மனதில்லாதிருக்கிறான். ஆகையினால் அவன் அவமானப்படுத்தப்படுகிறான். செத்துப்போன அவனுடைய சகோதரனின் மனைவி, அவன் முகத்திலே துப்புகிறாள். அவன் காலிலிருக்கிற பாதரட்சையை கழற்றிப்போடுகிறாள். இவை யூதருடைய கலாச்சாரத்தில் ஒருவரை அவமானப்படுத்துகிற காரியமாகும்.

இஸ்ரவேலில் அப்படிப்பட்டவன் வீடு, பாதரட்சை கழற்றிப்போடப்பட்டவன் வீடு என்னப்படும் (உபா 25:10). இவன் பாதரட்சையில்லாமல் இலச்சையோடு நடக்கவேண்டும். பாதரட்சையில்லாமல் நடக்கிறவர்கள் எல்லோருமே, அவமானப்படுத்தப்பட்டவர்கள் என்றும், அவர்கள் இலச்சையோடு நடக்கிறார்கள் என்றும் சொல்ல முடியாது.

பரிசுத்த வேதாகமத்தில் தாவீது, ஏசாயா ஆகியோர் பாதரட்சையில்லாமல் நடந்திருக்கிறார்கள். இவர்கள் அவமானப்படுத்தப்பட்டோ, அல்லது இலச்சையினாலோ, பாதரட்சையில்லாமல் நடக்கவில்லை. அது பற்றிய விவரம் வருமாறு :

1. எருசலேமிலிருந்து தாவீது அப்சலோமிற்குத் தப்பியோடியபோது. (2சாமு 15:30).

2. எகிப்தின்மீதும் எத்தியோப்பியாவின்மீதும் வரும் நியாயத்தீர்ப்பிற்குத் தீர்க்கதரிசன அடையாளமாக ஏசாயா மூன்று வருஷங்களுக்கு கால்களில் பாதரட்சையில்லாமல் நடந்தார். (ஏசா 20:1-4).

இலச்சையான காரியத்தை செய்த ஸ்திரீ உபா 25:11,12

உபா 25:11. புருஷர் ஒருவரோடொருவர் சண்டைபண்ணிக்கொண்டிருக்கையில், ஒருவனுடைய மனைவி தன் புருஷனை அடிக்கிறவன் கைக்கு அவனைத் தப்புவிக்கும்படி வந்து, தன் கையை நீட்டி, அடிக்கிறவன் மானத்தைப் பிடித்ததுண்டானால்,

உபா 25:12. அவளுடைய கையைத் தறிக்கக்கடவாய்; உன் கண் அவளுக்கு இரங்கவேண்டாம்.

இஸ்ரவேலரின் ஸ்திரீகள் தங்கள் சமுதாயத்திலே மிகுந்த ஒழுக்கத்தோடும், கட்டுப்பாடோடும், கண்ணியத்தோடும் ஜீவிக்கவேண்டும். அவர்களிடத்தில் இலச்சையான காரியம் எதுவும் காணப்படக்கூடாது. யூதர்கள் பெண்களின் கற்புக்கும், கண்ணியத்திற்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

இலச்சையான காரியத்தை செய்கிற ஸ்திரீகள் தண்டிக்கப்படவேண்டுமென்று மோசே சொல்லுகிறார். ஸ்திரீகள் செய்யும் இலச்சையான காரியத்திற்கு எடுத்துக்காட்டாக, மோசே இந்த வசனப்பகுதியில் ஒரு கற்பனை சம்பவத்தைச் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

"புருஷர் ஒருவரோடொருவர் சண்டைபண்ணிக்கொண்டிருக்கையில், ஒருவனுடைய மனைவி தன் புருஷனை அடிக்கிறவன் கைக்கு அவனைத் தப்புவிக்கும்படி வந்து, தன் கையை நீட்டி, அடிக்கிறவன் மானத்தைப் பிடித்ததுண்டானால், அவளுடைய கையைத் தறிக்கக்கடவாய்; உன் கண் அவளுக்கு இரங்கவேண்டாம்" (உபா 25:11,12) என்று மோசே சொல்லுகிறார்.

இதுபோன்ற இலச்சையான காரியங்களை செய்கிற ஸ்திரீகள் எல்லோருமே தண்டிக்கப்படவேண்டும். இதன் மூலமாக மற்ற ஸ்திரீகள் இலச்சையான காரியங்களை செய்வதற்கு பயப்படுவார்கள். இந்த சம்பவத்தில், இந்த ஸ்திரீ தன்னுடைய புருஷனை மற்றவனுடைய கைக்கு தப்புவிப்பதற்காகவே இந்தக் காரியத்தை செய்தாள். ஆனாலும் அவள் செய்த காரியம் இலச்சையான காரியமாக இருக்கிறபடியினால், அவள் தண்டிக்கப்படுகிறாள்.

தண்டிக்கப்பட்ட ஸ்திரீ, தன்னுடைய புருஷனை அடிக்கிறவனுடைய மானத்தைப் பிடித்துக்கொள்கிறாள். இதனால் அவன் காயடிக்கப்பட்டவன்போல வேதனையை அனுபவிக்கிறான். இவனுக்கு இனிமேல் புத்திர பாக்கியம் உண்டாகாது.

இஸ்ரவேலர் மத்தியில் சந்ததியைப் பெற்றெடுப்பது மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. கிழக்கு தேசங்களில் ராஜாவின் அரமனையில் வேலைபார்ப்பதற்காக ஆண்களை அலிகளாக்குவார்கள். அப்பேர்ப்பட்ட பழக்கம் தேவனுக்கு விரோதமானது.

சுமுத்திரையான நிறைகல் உபா 25:13-16

உபா 25:13. உன் பையிலே பெரிதும் சிறிதுமான பலவித நிறைகற்களை வைத்திருக்கவேண்டாம்.

உபா 25:14. உன் வீட்டில் பெரிதும் சிறிதுமான பலவித படிகளையும் வைத்திருக்கவேண்டாம்.

உபா 25:15. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தில் உன் நாட்கள் நீடித்திருக்கும்படி, குறையற்ற சுமுத்திரையான நிறைகல்லும்,குறையற்ற சுமுத்திரையான படியும் உன்னிடத்தில் இருக்கவேண்டும்.

உபா 25:16. இவைமுதலான அநியாயத்தைச் செய்கிறவன் எவனும் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவன்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உன் பையிலே பெரிதும் சிறிதுமான பலவித நிறைகற்களை வைத்திருக்கவேண்டாம். உன் வீட்டில் பெரிதும் சிறிதுமான பலவித படிகளையும் வைத்திருக்கவேண்டாம்" (உபா 25:13,14) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் பெரிதும் சிறிதுமான பலவித நிறைகற்களையும், படிகளையும் பயன்படுத்துவது மாத்திரமல்ல, அவர்கள் அப்படிப்பட்ட நிறைகற்களையும், படிகளையும் தங்கள் வீடுகளில் வைத்திருக்கவும் கூடாது. இவை அநீதியான, அசுத்தமான பொருட்கள்.

இஸ்ரவேல் புத்திரர் பெரிதும் சிறிதுமான நிறைகற்களையும் படிகளையும், பயன்படுத்தாமல், அவற்றை தங்கள் வீடுகளில் வைத்திருந்தாலும், அவற்றை பயன்படுத்த வேண்டும் என்னும் சோதனை அவர்களுக்கு வரும். அவர்கள் சோதனைக்கு இடம் கொடாமல் இருக்கவேண்டுமென்றால், இப்படிப்பட்ட தவறான நிறைகற்களும், படிகளும் தங்கள் வீடுகளில் இருக்குமென்றால் அவற்றை தங்கள் வீட்டைவிட்டு வெளியேற்றிவிடவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் பிறரை வஞ்சிக்கக்கூடாது. பொருட்களை வாங்குகிறவர்களும், விற்கிறவர்களும் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். அவர்களுடைய கைகளின் கிரியைகள் உண்மையுள்ளவைகளாயிருந்தால் மாத்திரமே, கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பார்.

பெரிதும் சிறிதுமான நிறைகற்களையும் படிகளையும் பயன்படுத்துகிறவர்கள், தங்களுடைய சுயலாபத்திற்காக, அவற்றை தீயவழிகளில் பயன்படுத்துவார்கள். பிறரிடமிருந்து பொருட்களை வாங்கும்போது, பெரிய நிறைகற்களையும் பெரிய படிகளையும் பயன்படுத்துவார்கள். இதனால் அவர்களுக்கு அதிகமான பொருள் கிடைக்கும். இவர்கள் மற்றவர்களுக்கு பொருட்களை விற்கும்போது, சிறிய எடை கற்களையும், சிறிய படிகளையும் பயன்படுத்துவார்கள். இதன் மூலமாக இவர்கள் மற்றவர்களுக்கு குறைவான பொருட்களை கொடுப்பார்கள்.

மோசே இதுபற்றி இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லும்போது, "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தில் உன் நாட்கள் நீடித்திருக்கும்படி, குறையற்ற சுமுத்திரையான நிறைகல்லும்,குறையற்ற சுமுத்திரையான படியும் உன்னிடத்தில் இருக்கவேண்டும்" (உபா 25:15) என்று சொல்லுகிறார்.

நம்முடைய வாழ்நாள் நீடித்திருப்பதற்கு, பரிசுத்த வேதாகமத்தில் ஒரு சில நிபந்தனைகள் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. உங்கள் பெற்றோரைக் கனம் பண்ண வேண்டும். (உபா 5:16; யாத் 20:12).

2. கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும். (உபா 4:40; உபா 11:9).

3. கர்த்தருடைய வழிகளில் நடக்க வேண்டும். (உபா 5:33).

4. கர்த்தருக்குப் பயப்படவேண்டும். (உபா 6:2).

5. பிள்ளைகளுக்குக் கர்த்தருடைய வார்த்தையை உபதேசிக்க வேண்டும். (உபா 11:19-21).

6. பிரமணத்தை வாசித்து, கர்த்தருக்குப் பயப்படவும், அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியவும் கற்றுக் கொள்ள வேண்டும். (உபா 17:19-20).

7. மிருகஜீவன்களிடம் கருணையுடன் நடந்து கொள்ள வேண்டும் (உபா 22:7).

8. குறையற்ற சுமுத்திரையான நிறைகல்லும், படியும் உன்னிடத்தில் இருக்க வேண்டும். (உபா 25:15).

9. கர்த்தரை நேசித்து அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். (உபா 20:15-20).

10. தேவனுக்கும், அவருடைய வார்த்தைக்கும் கீழ்ப்படியுமாறு இருதயத்தைத் திருப்ப வேண்டும். (உபா 32:44-47).

இஸ்ரவேல் ஜனத்தார் மோசேயின் பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து, குறையற்ற சுமுத்திரையான நிறைகல்லையும், படியையும் பயன்படுத்தும்போது, கானான் தேசத்தில் அவர்களுடைய நாட்கள் நீடித்திருக்கும். "இவைமுதலான அநியாயத்தைச் செய்கிறவன் எவனும் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவன்" (உபா 25:16) என்று மோசே சொல்லுகிறார்.

ஏமாற்றுத்தனம், கண்ணியமில்லாமை, அநீதி ஆகியவை கர்த்தருக்கு அருவருப்பான காரியங்கள். இவற்றைச் செய்கிறவன் கர்த்தருக்கு அருவருப்பானவன் (1பேதுரு 5:17; யாக் 4:17).

அமலேக்குக்கு விரோதமான கட்டளை உபா 25:17-19

உபா 25:17. எகிப்திலிருந்து புறப்பட்டு வருகிற வழியிலே, அமலேக்கு தேவனுக்குப் பயப்படாமல் உனக்கு எதிராக வந்து,

உபா 25:18. நீ இளைத்து விடாய்த்திருக்கையில், பின்வருகிற உன் பாளயத்திலுள்ள பலவீனரையெல்லாம் வெட்டினான் என்பதை நினைத்திரு.

உபா 25:19. உன் தேவனாகிய கர்த்தர் நீ சுதந்தரித்துக்கொள்ள உனக்குக் கொடுக்கும் தேசத்தின் சுற்றுப்புறத்தாராகிய உன்னுடைய சத்துருக்களையெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் விலக்கி, உன்னை இளைப்பாறப்பண்ணும்போது, நீ அமலேக்கின் பேரை வானத்தின்கீழ் இராதபடிக்கு அழியப்பண்ணக்கடவாய்; இதை மறக்கவேண்டாம்.

அமலேக்கியரின் பேர் வானத்தின் கீழ் இராதபடிக்கு, இஸ்ரவேல் புத்திரர் அவர்களை அழியப்பண்ணவேண்டும். இது கர்த்தர் இஸ்ரவேலருக்கு சொல்லியிருக்கிற நித்திய கட்டளை. இந்தக் கட்டளையை இஸ்ரவேல் புத்திரர் மறந்துவிடக்கூடாது. கர்த்தர் இஸ்ரவேலருக்கு சொல்லியிருக்கிற இந்தக் கட்டளையை, மோசே இந்த வசனப்பகுதியில் அவர்களுக்கு மறுபடியுமாய் ஞாபகப்படுத்துகிறார்.

அமலேக்கியர் இஸ்ரவேலருக்கு தீங்கு செய்தார்கள். அவர்கள் செய்த தீங்கை இஸ்ரவேலர் மறவாமல் நினைத்திருக்கவேண்டும் என்று மோசே சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

"எகிப்திலிருந்து புறப்பட்டு வருகிற வழியிலே, அமலேக்கு தேவனுக்குப் பயப்படாமல் உனக்கு எதிராக வந்து, நீ இளைத்து விடாய்த்திருக்கையில், பின்வருகிற உன் பாளயத்திலுள்ள பலவீனரையெல்லாம் வெட்டினான் என்பதை நினைத்திரு" (உபா 25:17,18) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

இந்த வாக்கியத்தில் அமலேக்கின் பெயர் அவனுடைய சந்ததியாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. யாக்கோபின் பெயர் இஸ்ரவேல் தேசத்தாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது (எண் 23:7,10,21,23; எண் 24:5,17,19).

அமலேக்கின் பாவங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து புறப்பட்டு வரும்போது அவர்கள் இளைத்து விடாய்த்திருக்கையில், பின்வருகிற அவர்களுடைய பாளயத்திலுள்ள பலவீனரையெல்லாம் வெட்டினான் (உபா 25:17-18; யாத் 17:8-16).
2. வனாந்தரத்தில் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்குச் செய்த அற்புதங்களையெல்லாம் கண்டும், அமலேக்கு தேவனுக்குப் பயப்படாமல் இஸ்ரவேலருக்கு எதிராக வந்தான். (உபா 25:16).

அமலேக்கியர் இஸ்ரவேலருக்கு விரோதமாக செய்த பாவங்களைப்பற்றிய விவரம் யாத்திராகமம் 17:8-16 ஆகிய வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறவர்களில், அமலேக்கியர் முதலாவதாக யுத்தம்பண்ண வருகிறார்கள். "மேலும், அவன் அமலேக்கைப் பார்த்து, தன் வாக்கியத்தை எடுத்துரைத்து: அமலேக்கு முந்தியெழும்பினவன்; ஆனாலும் அவன் முடிவிலே முற்றிலும் நாசமாவான் என்றான்" (எண் 24:20).

அமலேக்கியர் வந்து ரெவிதீமிலே இஸ்ரவேலரோடே யுத்தம் பண்ணுகிறார்கள் (யாத் 17:8).

இஸ்ரவேலர்கள் பலவீனமாக களைத்துப்போய் இருக்கிறார்கள். வனாந்தரத்தில் அலைந்து திரிந்து தண்ணீர் இல்லாமல் தாகத்தோடு இருக்கிறார்கள். இவ்வாறு பலவீனமாக இருக்கும் இஸ்ரவேலரை அமலேக்கியர் பாளயத்தின் பின்புறமாக வந்து தாக்கி, அவர்களுடைய பொருட்களைக் கொள்ளையடித்துச் செல்லுகிறார்கள். அமலேக்கியரின் கோழைத்தனமான காரியத்திற்காக தேவன் அவர்களைச் சங்காரம் பண்ணுகிறார் (ஆதி 36:12, யாத் 17:8,14; உபா 25:17-19).

அமலேக்கியர் ஏசாவின் சந்ததியை சேர்ந்தவர்கள். ஏசா யாக்கோபை பகைத்தார். ஏசா தன்னுடைய சேஷ்டபுத்திரபாக ஆசீர்வாதத்தை அசட்டை செய்து, அதை யாக்கோபுக்கு விற்றுப்போட்டார். அவர்களுடைய தகப்பனாராகிய ஈசாக்கை யாக்கோபு வஞ்சித்து, ஏசாவுக்கு வரவேண்டிய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டார். இதனால் ஏசாவுக்கு பூர்வகாலம் முதலாகவே யாக்கோபின்மீது பகை இருக்கிறது.

அமலேக்கியர் ஏசாவின் சந்ததியை சேர்ந்தவர்கள். இப்போது ஏசாவின் சந்ததியாருக்கும், யாக்கோபின் சந்ததியாராகிய இஸ்ரவேல் புத்திரருக்கும் பூர்வ பகை தொடருகிறது.

இஸ்ரவேல் புத்திரர் இளைத்து விடாய்த்திருக்கிறார்கள். அவர்களுடைய பாளயத்தில் பலவீனரெல்லாம், பின்னால் வருகிறார்கள். அமலேக்கியரோ, இஸ்ரவேல் புத்திரரின் பின்பாளயத்திலுள்ள பலவீனரை வெட்டிப்போடுகிறார்கள். அவர்கள் இளைத்து விடாய்த்திருக்கிற இஸ்ரவேல் புத்திரரை கொன்றுபோடுகிறார்கள்.

"எகிப்திலிருந்து புறப்பட்டு வருகிற வழியிலே, அமலேக்கு தேவனுக்குப் பயப்படாமல் உனக்கு எதிராக வந்து, நீ இளைத்து விடாய்த்திருக்கையில், பின்வருகிற உன் பாளயத்திலுள்ள பலவீனரையெல்லாம் வெட்டினான் என்பதை நினைத்திரு" (உபா 25:17,18).

இளைத்து விடாய்த்திருக்கிற இஸ்ரவேல் புத்திரரால், அமலேக்கியரின் பட்டயத்திற்கு தப்பிக்க முடியவில்லை. அவர்களால் அமலேக்கியருக்கு விரோதமாக எதிர்த்து நின்று யுத்தம்பண்ணவும் முடியவில்லை. இஸ்ரவேல் புத்திரரால் தங்கள் ஜீவனை பாதுகாத்துக்கொள்ள தப்பித்தும் ஓடமுடியவில்லை. இது அமலேக்கியர்மீது வந்த பெரும் பாவமாகவும், பழியாகவும் இருக்கிறது.

அமலேக்கியர் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். கர்த்தர் தம்முடைய வல்லமையினால் இஸ்ரவேல் புத்திரரின் பாளயங்களை பாதுகாக்கிறார். ஆனால் அமலேக்கியரோ, தாங்கள் யாருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறோம் என்பது தெரியாமலேயே, இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ணுகிறார்கள்.

அப்பொழுது மோசே யோசுவாவை நோக்கி, "நீ நமக்காக மனிதரைத் தெரிந்துகொண்டு, புறப்பட்டு, அமலேக்கோடே யுத்தம்பண்ணு; நாளைக்கு நான் மலையுச்சியில் தேவனுடைய கோலை என் கையில் பிடித்துக்கொண்டு நிற்பேன்" (யாத் 17:9) என்று சொல்லுகிறார்.

பல அற்புதங்களைச் செய்வதற்குத் தேவனுடைய கோல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இங்கு தேவனுடைய கோல் யுத்தத்தில் வெற்றியைத் தருகிறது.

இந்த வசனத்தில்தான் யோசுவாவைப்பற்றி முதன் முறையாக சொல்லப்பட்டிருக்கிறது. அவர் அமலேக்கியருக்கு விரோதமான யுத்தத்திலே, இஸ்ரவேல் புத்திரருக்கு படைத்தளபதியாகயிருக்கிறார். மோசே மரித்துப்போன பின்பு, யோசுவா இஸ்ரவேல் புத்திரரை கானான் தேசத்திற்கு வழிநடத்த வேண்டும். அதற்கான பயிற்சிகளை மோசே இப்போதே யோசுவாவுக்கு கொடுக்க ஆரம்பிக்கிறார்.

அமலேக்கியருக்கு விரோதமான யுத்தத்தில், மோசேயும் யோசுவாவும் பங்குபெறுகிறார்கள். அவர்கள் இருவரும் வெவ்வேறு ஸ்தலங்களில், வெவ்வேறு விதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். மோசே மலைஉச்சியில் தேவனுடைய கோலை தன் கையில் பிடித்துக்கொண்டு நிற்கிறார். யோசுவா அமலேக்கையும் அவனுடைய ஜனங்களையும் பட்டயக்கருக்கினாலே வெட்டி முறியடிக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, மோசே கர்த்தருடைய சமுகத்தில் ஜெபம்பண்ணுகிறார். யோசுவா பட்டயத்தைப் பிடித்து அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார். மோசேயின் கையிலுள்ள கோல் இஸ்ரவேல் புத்திரருக்கு நம்பிக்கையையும், உற்சாகத்தையும் கொடுக்கிறது.

மோசேயின் கையில் தேவனுடைய கோல் இருக்கிறது. அவர் அந்தக் கோலை தேவனுக்கு நேராக ஏறெடுக்கிறார். அவர் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார். அமலேக்கியருக்கு விரோதமாக நடைபெறுகிற இந்த யுத்தத்திலே, இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயம் கிடைக்கவேண்டும் என்றும், அமலேக்கியர் முறியடிக்கப்படவேண்டும் என்றும் மோசே கர்த்தருடைய சமுகத்திலே மன்றாடி ஜெபம்பண்ணுகிறார்.

யோசுவா தனக்கு மோசே சொன்னபடியே செய்து, அமலேக்கோடே யுத்தம் பண்ணுகிறார். மோசேயும் ஆரோனும் ஊர் என்பவனும் மலையுச்சியில் ஏறுகிறார்கள். மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில், இஸ்ரவேலர் மேற்கொள்கிறார்கள்; மோசே தன் கையைத் தாழவிடுகையில், அமலேக்கு மேற்கொள்கிறான் (யாத் 17:10,11).

ஊர் என்பவன் யூதா கோத்திரத்தானான காலேபின் குமாரன். (1நாளா 2:19-20). அவன் மோசேயோடும், ஆரோனோடும் நெருங்கிய தொடர்புடையவன். (யாத் 17:10-12; யாத் 24:14; யாத் 31:2; யாத் 35:30; யாத் 38:22). யோசபஸ் இவனைப் பற்றி எழுதும்போது, இவன் மிரியாமின் கணவன் என்றும், மோசே ஆரோன் ஆகியோரின் மைத்துனன் என்றும் எழுதியிருக்கிறார்.

மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில், இஸ்ரவேலர் மேற்கொள்கிறார்கள். தன்னுடைய கரங்களினால் மோசே தேவனுடைய கோலை உயரப்பிடித்திருக்கும்போது, இஸ்ரவேலர்கள் ஜெயம்பெறுகிறார்கள். (யாத் 17: 11-13). மோசே தன் கையைத் தாழ்த்துகையில் இஸ்ரவேலர்கள் தோல்வியுறுகிறார்கள்.

மோசேயின் கைகள் அசந்து போயிற்று. யோசுவா அமலேக்கையும் அவன் ஜனங்களையும் பட்டயக்கருக்கினாலே முறியடிக்கிறார். ஆனாலும் யோசுவாவின் கைகள் அசந்துபோயிற்று என்று எங்கும் சொல்லப்படவில்லை. ஆனால் மோசேயோ கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக தன்னுடைய கைகளை ஏறெடுத்திருக்கிறார். ஆனாலும் அவருடைய கைகள் அசந்துபோயிற்று.

நாம் இந்த உலகத்தில் பலவிதமான வேலைகளை செய்தாலும், ஆவிக்குரிய ஊழியத்தில் அதிகமான சோர்வுகளும், மிகுதியான அசதிகளும் வரும். ஆவிக்குரிய யுத்தத்தில் நாம் சீக்கிரத்தில் சோர்ந்துபோவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் விசுவாசிகளாகிய நாம் சோர்ந்துபோகாமல், விழித்திருந்து ஊழியம் செய்யவேண்டும். அசந்துபோகாமல் விழித்திருந்து ஜெபிக்கவேண்டும்.

மோசேயின் கையில் தேவனுடைய கோல் இருக்கிறது. மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில் இஸ்ரவேலர் மேற்கொள்கிறார்கள். தன்னுடைய கைகள் அசந்துபோனபோது, மோசே தன் கையை தாழவிடுகிறார். அப்போது அமலேக்கு மேற்கொள்கிறான். மோசே தன் கையை தாழவிடும்போது, இஸ்ரவேல் புத்திரரும் தாழ்ந்துபோகிறார்கள். மோசே தன் கையை ஏறெடுக்கும்போது, அவர் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். அவர் தன் கையை தாழவிடும்போது, அவர் தன் ஜெபத்தில் அசந்துபோகிறார்.

மோசே மலை உச்சியில் நிற்கிறார். அவருடைய கைகள் அசந்துபோயிற்று. மோசேயோடுகூட ஆரோனும், ஊர் என்பவனும் மலை உச்சியில் ஏறி வந்திருக்கிறார்கள். அவர்கள் இருவரும் அசந்து போயிருக்கிற மோசேயின் கைகளை தாங்குகிறார்கள். மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில் இஸ்ரவேலர் மேற்கொள்வதை ஆரோனும் ஊரும் பார்க்கிறார்கள். அவர்கள் இருவரும் மோசேயின் கைகளை தாங்கி, அவர் தன் கையை ஏறெடுப்பதற்கு ஆதரவாயிருக்கிறார்கள்.

மோசேயின் கைகள் அசந்துபோனபோது ஆரோனும் ஊரும் ஒரு கல்லைக் கொண்டுவந்து மோசேயின் கீழே வைக்கிறார்கள்; மோசே அதின்மேல் உட்காருகிறார்; ஆரோனும் ஊரும் ஒருவன் ஒரு பக்கத்திலும் ஒருவன் மறுபக்கத்திலும் இருந்து, மோசேயின் கைகளைத் தாங்குகிறார்கள்; இவ்விதமாய் மோசேயின் கைகள் சூரியன் அஸ்தமிக்கும்வரைக்கும் ஒரே நிலையாயிருக்கிறது (யாத் 17:12).

மோசேயால் மலை உச்சியில் நிற்கக்கூட முடியவில்லை. ஆரோனும் ஊரும் மோசேயை ஒரு கல்லின்மேல் உட்கார வைக்கிறார்கள். மோசே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவதற்கு அவர்கள் இருவரும் உதவி செய்கிறார்கள். அவர்கள் அசந்துபோயிருக்கிற மோசேயின் கைகளை தாங்கிப் பிடித்துக்கொள்கிறார்கள்.

மோசே தேவனுடைய மனுஷன். ஆரோன் மோசேயின் சகோதரர். ஊர் என்பவன் மிரியாமின் கணவனாக இருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். மிரியாம் மோசேயின் சகோதரி. மோசேயும் ஆரோனும், ஊரும் ஒருவருக்கொருவர் உறவினர்களாகயிருக்கிறார்கள். மோசே அவர்களுடைய உதவிகளை சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறார். அவர்கள் இருவரும் அசந்துபோயிருக்கிற மோசேயின் கைகளை தாங்கிப் பிடிக்கிறார்கள். இவ்விதமாக சூரியன் அஸ்தமிக்கும் வரைக்கும் மோசே தன் கைகளை ஏறெடுக்கிறார்.

அமலேக்கியரோடு யுத்தம்பண்ணுகிற இஸ்ரவேல் புத்திரர், ஏறெடுக்கப்பட்டிருக்கிற மோசேயின் கைகளை பார்க்கிறார்கள். அவர்களுடைய மனதிலே தெம்பும், உற்சாகமும் உண்டாயிற்று. யோசுவா இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அமலேக்கையும் அவனுடைய ஜனங்களையும் பட்டயக்கருக்கினாலே முறியடிக்கிறார். மோசே மலையின்மீது உட்கார்ந்து, தன்னுடைய கைகளை ஏறெடுக்கிறார். இந்த யுத்தத்தில் இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயமுண்டாயிற்று.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலே, கிறிஸ்துவானவரே நமக்கு யோசுவாவைப் போலவும், மோசேயைப்போலவும் இருக்கிறார். யோசுவா இஸ்ரவேல் புத்திரருக்கு படைத்தளபதியாகயிருக்கிறார். கிறிஸ்துவானவர் நம்முடைய இரட்சிப்பின் அதிபதியாயிருக்கிறார். நாம் மேற்கொள்ளவேண்டிய ஆவிக்குரிய போராட்டங்களில், கிறிஸ்துவானவர் நமக்காக போராடுகிறார்.

மோசே மலையின்மீது தம்முடைய கைகளை ஏறெடுத்து கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, பரலோகத்திலே, தம்முடைய பிதாவின் வலது பாரிசத்திலே அமர்ந்து, நமக்காக பரிந்துபேசிக்கொண்டிருக்கிறார். இதனால் நம்முடைய விசுவாசத்தில் நாம் தோற்றுப்போகாமல் நிலைத்திருக்கிறோம்.

அமலேக்கியர் இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ண வந்தார்கள். இந்த யுத்தத்திலே அமலேக்கியர் தோற்றுப்போகிறார்கள். யோசுவா அவர்களை முறியடிக்கிறார். யோசுவாவோடுகூட இஸ்ரவேல் புத்திரர் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் பயிற்சி பெற்ற யுத்தவீரர்கள் என்று சொல்லமுடியாது. அவர்களிடத்தில் சரியான யுத்த ஆயுதங்களும் இல்லை. இஸ்ரவேல் ஜனத்தார் பல வருஷங்களாக எகிப்து தேசத்திலே அடிமை வேலை செய்தவர்கள். அவர்கள் முறுமுறுக்கும் சுபாவமுள்ளவர்கள். ஆனாலும் கர்த்தர் தம்முடைய கிருபையினால், இஸ்ரவேல் புத்திரரை இந்த யுத்தத்திலே பயன்படுத்துகிறார். கர்த்தர் இஸ்ரவேலருக்கு ஜெயத்தைக் கொடுக்கிறார்.

அமலேக்கியருக்கு விரோதமான யுத்தம் முடிவு பெறுகிறது. அப்போது மோசே ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதற்கு யேகோவா நிசி என்று பேரிடுகிறார் (யாத் 17:15). யோசுவா அமலேக்கையும், அவனுடைய ஜனங்களையும் பட்டயக்கருக்கினாலே முறியடிக்கிறார். மோசே தனக்கு சொன்ன பிரகாரம், யோசுவா அமலேக்கியரோடே யுத்தம்பண்ணுகிறார். இந்த யுத்தத்தில் யோசுவாவின் பங்கு மிகவும் பெரியது.

யோசுவா அமலேக்கியரை முறியடித்ததற்காக, மோசே அவருக்கு ஒரு வெற்றி தூணை நிறுத்தவில்லை. மோசே யோசுவாவுக்கு பதக்கங்களையோ, பரிசுகளையோ கொடுத்து, அவரை கனம்பண்ணவில்லை. மோசே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக்கட்டி, கர்த்தரைக் கனம்பண்ணுகிறார். அந்த பலிபீடத்திற்கு யேகோவா நிசி என்று பேரிடுகிறார். யேகோவா நிசி என்னும் பெயருக்கு "கர்த்தர் நமது ஜெயக்கொடி" என்று பொருள்.

மோசே மலையின் உச்சியில் கர்த்தருடைய கோலை உயர்த்துகிறார். கர்த்தருடைய கோல் அவருடைய ஜெயக்கொடியாகயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, கர்த்தர் தம்முடைய ஜெயக்கொடியை உயர்த்துகிறார். இதனால் இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயமுண்டாயிற்று.

யோசுவாவும் இஸ்ரவேல் புத்திரரும் அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். யுத்தம் பண்ணுகிற களத்திலே கர்த்தருடைய பிரசன்னமும், அவருடைய வல்லமையும் வெளிப்படுகிறது. கர்த்தர் ஜெயக்கொடியாக அவர்கள் மத்தியிலே உயர்த்தப்பட்டிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் அமலேக்கியரின் பலத்தையும், அவர்களுடைய யுத்த ஆயுதங்களையும் நோக்கிப் பார்க்காமல், தங்கள் ஜெயக்கொடியாகிய கர்த்தரை நோக்கிப் பார்க்கிறார்கள். கர்த்தரை நோக்கிப் பார்க்கிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள்.

அமலேக்கியருக்கு விரோதமான யுத்தத்திலே இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயமுண்டாயிற்று. இந்த ஜெயம் இஸ்ரவேல் ஜனத்தாருடைய சுயபலத்தினாலோ, சுயபராக்கிரமத்தினாலோ உண்டாகவில்லை. கர்த்தருடைய வல்லமையினாலேயே, இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயமும், அமலேக்கியருக்கு தோல்வியும் உண்டாயிற்று. மோசே கர்த்தரை கனம்பண்ணுகிறார். அவர் ஒரு பலிபீடத்தைக் கட்டி அதற்கு யேகோவா நிசி என்று பேரிடுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, அவர்கள் கர்த்தருடைய ஜெயக்கொடியை நோக்கிப் பார்த்து, கர்த்தர் தங்களுக்கு ஜெயம் கொடுப்பார் என்று நம்பி, யுத்தக்களத்திலே சிதறிப்போகாமல், சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். கர்த்தருடைய வல்லமை இஸ்ரவேல் புத்திரரை ஒரே சேனையாக கூட்டிச் சேர்த்திருக்கிறது.

கர்த்தர் அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணிய இந்த சம்பவத்தை, இஸ்ரவேல் புத்திரருடைய பின்சந்ததியாருக்கும் அறிவிக்க வேண்டும். இதற்காக கர்த்தர் மோசேயை நோக்கி, "இதை நினைவுகூரும்பொருட்டு, நீ ஒரு புஸ்தகத்தில் எழுதி, யோசுவாவின் செவி கேட்கும்படி வாசி. அமலேக்கை வானத்தின் கீழெங்கும் இராதபடிக்கு நாசம் பண்ணுவேன்" (யாத் 17:14) என்று சொல்லுகிறார்.

மோசே எழுதும் புஸ்தகம் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆறுதலாகவும், ஆசீர்வாதமாகவும் இருக்கும். மோசே இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிற செய்தியை யோசுவாவின் செவி கேட்கும்படி வாசிக்கவேண்டும். தான் கேட்டதை யோசுவா இஸ்ரவேலின் பின்சந்ததியாருக்கு அறிவிக்கவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரின் சரித்திரத்தை எழுத ஆரம்பிக்கிறார். அவர்களுடைய அன்றாட நாளாகமத்தை, மோசே ஒரு புஸ்தகத்தில் எழுதுகிறார். இஸ்ரவேல் புத்திரரின் புஸ்தகத்தின் சரித்திரத்தை பரிசுத்தவேதாமகத்தில் வாசிக்கிறோம். கர்த்தர் தம்முடைய கட்டளையை கற்பலகைகளில் எழுதி, அந்தப் பலகைகளை மோசேக்கு கொடுத்தார். அதன்பின்புதான், கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் சரித்திரத்தை ஒரு புஸ்தகத்தில் எழுதுமாறு சொன்னார் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்காக யுத்தம்பண்ணுவார் என்பதை இஸ்ரவேல் புத்திரரின் பின்சந்ததியாரும் அறிந்திருக்கவேண்டும். கர்த்தர் தங்கள் முற்பிதாக்களுக்கு செய்த நன்மையான காரியங்கள் எல்லாவற்றையும் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் நினைவுகூரவேண்டும்.

கர்த்தர் அமலேக்கை வானத்தின்கீழ் எங்கும் இராதபடிக்கு நாசம்பண்ணுவார். கர்த்தர் அமலேக்கியருக்கு கொடுக்கும் தண்டனை சவுலின் காலத்தில் ஓரளவு நிறைவேறிற்று (1சாமு 15-ஆவது அதிகாரம்). தாவீதின் ஆட்சிக்காலத்தில், கர்த்தர் அமலேக்கியரை மொத்தமாய் நாசம்பண்ணினார். அமலேக்கியருக்கு சர்வநாசமும், சர்வசங்காரமும் உண்டாயிற்று. (1சாமு 30-ஆவது அதிகாரம்). இந்த சம்பவத்திற்கு பின்பு அமலேக்கியரைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் எங்கும் சொல்லப்படவில்லை.

கர்த்தர் அமலேக்கியரை வானத்தின் கீழெங்கும் இராதபடிக்கு முற்றிலுமாய் நாசம்பண்ணுவதாக வாக்குப்பண்ணுகிறார். அதுவரையிலும் தலைமுறை தலைமுறைதோறும் அவனுக்கு விரோதமாய் கர்த்தரின் யுத்தம் நடக்கும். அமலேக்கின் கை கர்த்தருடைய சிங்காசனத்திற்கு விரோதமாயிருந்தபடியினால், அவனுக்கு விரோதமாய் கர்த்தரின் யுத்தம் நடைபெறுகிறது.

அமலேக்கியரோடு இஸ்ரவேல் புத்திரர்கள் தொடர்ந்து யுத்தம் பண்ணி வந்திருக்கிறார்கள். எகூத் (நியா 3:13-15); பாராக் (நியா 5:15); கிதியோன் (நியா 6:3); சவுல் (1சாமு 15); சாமுவேல் (1சாமு 15:32-33); தாவீது (1சாமு 27:8; 1சாமு 30: 1-17; 2சாமு 8:12); எசேக்கியாவின் நாளில் சிமியோனியர் (1நாளா 4:42-43) ஆகியோர் அமலேக்கியரோடு யுத்தம்பண்ணினார்கள்.

அமலேக்கியருக்கு விரோதமாக சொல்லப்படும் இந்தக் காரியங்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு எச்சரிப்பாக எழுதப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் அமலேக்கியரோடு எக்காலத்திலும் உடன்படிக்கை பண்ணக்கூடாது என்பது கர்த்தருடைய சித்தம்.

இஸ்ரவேலரின் தேவனைப் பற்றி அமலேக்கியருக்கு நன்றாகத் தெரியும். கர்த்தர் அவர்களுக்குச் செய்த அற்புதங்களை அமலேக்கியர் தங்கள் கண்களால் கண்டிருக்கிறார்கள். ஆயினும் தங்களுடைய இருதயக்கடினத்தின் நிமித்தம் தேவனையும், இஸ்ரவேல் புத்திரரையும் பகைத்தார்கள். இதனால் அவர்கள் தங்களுக்குத்தாங்களே தேவனுடைய நியாயத்தீர்ப்பை வருவித்துக் கொண்டார்கள். (உபா 25:19).

இஸ்ரவேல் புத்திரர் அமலேக்கியருக்கு விரோதமாக ஒரு தீங்கும் செய்யவில்லை. ஆனால் அமலேக்கியர் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்தார்கள். அமலேக்கியர் இஸ்ரவேலரோடு யுத்தம்பண்ணுவதற்கு முன்பாக, யுத்தத்திற்கான காரணத்தையும் சொல்லவில்லை. அவர்கள் இஸ்ரவேல் புத்திரரை எச்சரிக்கவுமில்லை. இஸ்ரவேல் புத்திரர் இளைத்து விடாய்த்திருக்கும்போது அமலேக்கியர், இஸ்ரவேலருடைய பின்பாளயத்திலுள்ள பலவீனரையெல்லாம் வெட்டிப்போட்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரரோ பல வருஷங்களாக எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்தினால் கஷ்டப்பட்டவர்கள். அவர்கள் அந்த தேசத்தில் பாடுகளையும், வேதனைகளையும் அனுபவித்தவர்கள். நானூற்று முப்பதுவருஷ அடிமைத்தனத்திற்கு பின்பு, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கிருபையினால் விடுவிக்கப்பட்டு, எகிப்து தேசத்தைவிட்டு வெளியேறி வருகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் கர்த்தருக்கு பலிசெலுத்தப்போகும்போது, அமலேக்கியர் அவர்களில் அநேகரை வெட்டிப்போட்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் அமலேக்கியரை பழிவாங்கவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். மோசே அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தையை ஞாபகப்படுத்தி, "உன் தேவனாகிய கர்த்தர் நீ சுதந்தரித்துக்கொள்ள உனக்குக் கொடுக்கும் தேசத்தின் சுற்றுப்புறத்தாராகிய உன்னுடைய சத்துருக்களையெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் விலக்கி, உன்னை இளைப்பாறப்பண்ணும்போது, நீ அமலேக்கின் பேரை வானத்தின் கீழ் இராதபடிக்கு அழியப்பண்ணக்கடவாய்; இதை மறக்கவேண்டாம்" (உபா 25:19) என்று சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு அமலேக்கியருக்கு விரோதமான கட்டளையை சொல்லி, நானூறு வருஷங்களாயிற்று. அதற்கு பின்பு, அமலேக்கியரை முற்றிலுமாய் அழித்துப்போடும் கட்டளை, இஸ்ரவேலின் முதலாவது ராஜாவாகிய சவுலுக்கு கொடுக்கப்பட்டது (1சாமு 15-ஆவது அதிகாரம்). ஆனால் சவுல் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, அமலேக்கியரை முற்றிலுமாய் அழித்துப்போடவில்லை. இதனால் கர்த்தர் இஸ்ரவேலின்மீது ராஜாவாயிராதபடிக்கு சவுலைத் தள்ளிப்போடுகிறார்.

"நீ அமலேக்கியன் பேரை வானத்தின் கீழ் இராதபடிக்கு அழியப்பண்ணக்கடவாய்" என்று கர்த்தர் சொல்லுகிறார். இதைத் தீர்க்கதரிசன கட்டளை என்றும் அழைக்கலாம். நியாயாதிபதிகளின் காலத்தில் அமலேக்கியர் இஸ்ரவேலருக்குப் பல தொல்லைகளைக் கொடுத்தார்கள் (நியா 3:13; நியா 5:14; நியா 6:3,33; நியா 7:12; நியா 10:12; நியா 12:15).

இந்தத் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றி, எல்லா அமலேக்கியரையும் கொன்றுபோடுமாறு கர்த்தர் சவுலுக்குக் கட்டளையிட்டார். (1சாமு 14:48; 1சாமு 15:1-5). சவுல் அமலேக்கியரின் வல்லமையை முறியடித்தார். ஆனால் அவர்களை முழுவதுமாகச் சங்காரம் பண்ணவில்லை. கர்த்தருடைய கட்டளைக்குச் சவுல் பூரணமாகக் கீழ்ப்படியாததினால் அவருடைய ராஜ்யபாரம் அவரை விட்டு அகன்றுபோயிற்று. (1சாமு 15:10-35; 1சாமு 28:18)

பிற்காலத்தில் எசேக்கியாவின் நாட்களில் மீதமிருந்த அமலேக்கியரைச் சிமியோனியர்கள் அழித்தார்கள் (1நாளா 4:39-43). ஆமானும், அவனுடைய குமாரர்களும் அமலேக்கியரில் கடைசியாக இருந்தவர்கள். எஸ்தரின் காலத்தில் அவர்கள் முழுவதுமாக அழிக்கப்பட்டார்கள். கர்த்தருடைய தீர்க்கதரிசனம் பூரணமாய் நிறைவேறிற்று.

26 அதிகாரம்

மோசே இதுவரையிலும் இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய பிரமாணத்தை சொன்னார். அவர்கள் யோர்தானைக் கடந்து கானான் தேசத்திலே பிரவேசிக்கப்போகிறார்கள். அவர்கள் கானான் தேசத்திலே பயிரிட்டு, அந்த நிலத்தின் கனிகளை அறுவடைபண்ணப்போகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் போய்ச்சேர்ந்த பின்பு, அந்த நிலத்தின் முந்தின பலனை கர்த்தருக்கு ஸ்தோத்திர காணிக்கையாக செலுத்தவேண்டும் (உபா 26:1-11). இஸ்ரவேல் புத்திரர் மூன்றாம் வருஷத்திலே தசமபாகம் செலுத்தவேண்டும் (உபா 26:12-15).

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிற கட்டளைகளையும் நியாயங்களையும், தேவனாகிய கர்த்தரே அவர்களுக்கு கட்டளையிடுகிறார் (உபா 26:16).

கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் நடுவே உடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறது. கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவராயிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும் (உபா 26:17-19).

முந்தின பலன்
உபா 26:1-11

உபா 26:1. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் தேசத்தில் நீ போய்ச் சேர்ந்து, அதைக் கட்டிக்கொண்டு, அதில் வாசம்பண்ணும்போது,

உபா 26:2. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் உன் தேசத்தில் நீ பயிரிடும் நிலத்தின் கனிகளிலெல்லாம் முந்தின பலனை எடுத்து, ஒரு கூடையிலே வைத்து, உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொண்டிருக்கும் ஸ்தானத்திற்குப் போய்,

உபா 26:3. அந்நாட்களில் இருக்கும் ஆசாரியனிடத்தில் சென்று, அவனை நோக்கி: கர்த்தர் எங்களுக்குக் கொடுக்க நம்முடைய பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தில் வந்து சேர்ந்தேன் என்று இன்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் அறிக்கையிடுகிறேன் என்பாயாக.

உபா 26:4. அப்பொழுது ஆசாரியன் அந்தக் கூடையை உன் கையிலிருந்து வாங்கி, அதை உன் தேவனாகிய கர்த்தரின் பலிபீடத்திற்கு முன்பாக வைக்கக்கடவன்.

உபா 26:5. அப்பொழுது நீ உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் நின்று வசனித்துச் சொல்லவேண்டியது என்னவென்றால்: என் தகப்பன் அழிவுக்கு நேரான சீரியா தேசத்தானாயிருந்தான்; அவன் கொஞ்சம் ஜனங்களோடே எகிப்துக்குப் போய், அவ்விடத்தில் பரதேசியாய்ச் சஞ்சரித்து, அங்கே பெரிய பலத்த திரட்சியான ஜாதியானான்.

உபா 26:6. எகிப்தியர் எங்களை ஒடுக்கி, எங்களைச் சிறுமைப்படுத்தி, எங்கள்மேல் கடினமான வேலையைச் சுமத்தினபோது,

உபா 26:7. எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டோம்; கர்த்தர் எங்கள் சத்தத்தைக் கேட்டு, எங்கள் சிறுமையையும் எங்கள் வருத்தத்தையும் எங்கள் ஒடுக்கத்தையும் பார்த்து,

உபா 26:8. எங்களைப் பலத்த கையினாலும், ஓங்கிய புயத்தினாலும், மகா பயங்கரங்களினாலும், அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், எகிப்திலிருந்து புறப்படப்பண்ணி,

உபா 26:9. எங்களை இவ்விடத்துக்கு அழைத்து வந்து, பாலும் தேனும் ஓடுகிற தேசமாகிய இந்தத் தேசத்தை எங்களுக்குக் கொடுத்தார்.

உபா 26:10. இப்பொழுதும், இதோ, கர்த்தாவே தேவரீர் எனக்குக் கொடுத்த நிலத்தினுடைய கனிகளின் முதற்பலனைக் கொண்டுவந்தேன் என்று சொல்லி, அதை உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் வைத்து, உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் பணிந்து,

உபா 26:11. நீயும் லேவியனும், உன்னிடத்தில் இருக்கிற பரதேசியும் உன் தேவனாகிய கர்த்தர் உனக்கும் உன் வீட்டாருக்கும் அநுக்கிரகம்பண்ணின சகலநன்மைகளினிமித்தமும் சந்தோஷப்படுவீர்களாக.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் போய்ச் சேர்ந்தபின்பு, அந்த தேசத்திலே பயிரிடுவார்கள். அவர்கள் ஒவ்வொரு வருஷமும் நிலத்தின் கனிகளிலெல்லாம் முந்தின பலனை எடுத்து, ஒரு கூடையில் வைத்து கர்த்தருக்கு படைக்கவேண்டும். மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு இதுபற்றிச் சொல்லும்போது,

"உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் தேசத்தில் நீ போய்ச் சேர்ந்து, அதைக் கட்டிக்கொண்டு, அதில் வாசம்பண்ணும்போது, உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் உன் தேசத்தில் நீ பயிரிடும் நிலத்தின் கனிகளிலெல்லாம் முந்தின பலனை எடுத்து, ஒரு கூடையிலே வைத்து, உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொண்டிருக்கும் ஸ்தானத்திற்குப் போய்," அங்கே அதைப் படைக்கவேண்டும் (உபா 26:1,2) என்று சொல்லுகிறார்.

திராட்சத்தோட்டங்களில் பழங்கள் பழுக்கும் காலம் வரும்போது, முதலாவதாக பழுக்கும் பழங்களை இஸ்ரவேல் புத்திரர் தனியாக குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். இவை கனிகளிலெல்லாம் முந்தின பலனாகும். கானான் தேசத்தில் பழுக்கும் எல்லா பழங்களையும் இதுபோலவே, தனியாக வேறுபிரிக்கவேண்டும். முதற்பலன்கள் எல்லாம் கர்த்தருக்குரியது.

நிலத்தினுடைய கனிகளின் முதற்பலனையும், மிருகஜீவன்களின் தலையீற்றுகளையும் கர்த்தருடைய சந்நிதிக்குக் கொண்டுவருவது கர்த்தரைக் கனப்படுத்தும் செயலாகும். (உபா 26:10-11). பண்டிகைகளை ஆசரிக்கும் போது இஸ்ரவேல் புத்திரர்கள் தங்களுடைய கனிகளின் முதற்பலன்களையும், மிருக ஜீவன்களின் தலையீற்றுகளையும் கொண்டு வருவார்கள். கர்த்தருடைய நன்மையில் இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் இதனால் பங்குபெற முடியும் (உபா 26:11; உபா. 14:22-29).

திராட்சப்பழங்கள், ஒலிவப்பழங்கள், மாதுளம்பழங்கள் ஆகிய எல்லா பழங்களிலும், முந்தின பலனை எடுத்து ஒரு கூடையில் வைத்து, அதை கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திற்கு கொண்டு போய், அங்கே அதை கர்த்தருக்கு காணிக்கையாக படைக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் முதற்பலனை படைக்கும் இடம் மிகவும் விசேஷமான இடம். இந்த இடம், தமது நாமம் விளங்கும்படி தேவனாகிய கர்த்தர் தெரிந்துகொண்டிருக்கும் ஸ்தானம். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு நிலத்தின் முதற்பலனை காணிக்கையாக படைக்கிறார்கள். இதிலிருந்து நாம் ஆவிக்குரிய சத்தியங்கள் சிலவற்றை கற்றுக்கொள்ளலாம்.

கர்த்தரே நமக்கு எல்லா நன்மைகளையும் கொடுக்கிறவர். நம்முடைய ஜீவியத்திற்கு ஆதரவாக இருக்கிற எல்லா காரியங்களையும் கர்த்தரே நமக்கு கொடுக்கிறார். கர்த்தருடைய கிருபையினால் மழை பெய்கிறது. பயிர்கள் விளைகிறது அதிலே தானிய அறுவடை நடைபெறுகிறது. இவையெல்லாமே கர்த்தர் தமது கிருபையினால் நமக்கு கொடுக்கும் ஈவு. கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற நன்மைகளை நினைவுகூர்ந்து, அவருக்கு நன்றி சொல்லும் வண்ணமாக, நாம் பயிரிடும் நிலத்தின் கனிகளிலெல்லாம் முதற்பலனை, கர்த்தருக்கு ஸ்தோத்திர காணிக்கையாக படைக்கவேண்டும்.

கர்த்தருக்கு நிலத்தின் முதற்பலனை காணிக்கையாக படைப்பதன் மூலமாக, இந்த நன்மைகள் எல்லாவற்றையும் கர்த்தரே நமக்கு கொடுத்திருக்கிறார் என்னும் சத்தியத்தை நாம் அங்கீகரிக்கிறோம். முதற்பலனை கர்த்தருக்கு காணிக்கையாக படைப்பதன் மூலமாக, நம்முடைய சுயத்தை நாம் வெறுக்கிறோம்.

பொதுவாக நிலத்திலே முதலாவது பழுக்கும் பழத்தைப் பார்த்து, அது நமக்கு வேண்டும் என்று ஆசைப்படுவோம். நிலத்திலே முதலாவது பழுக்கும் பழம் நம்முடைய கண்களுக்கு அழகானதாயிருக்கும். அந்தப் பழத்தை நாம் ஆர்வத்தோடு பார்ப்போம். அதன்மீது நமக்கு பிரியமும் அதிகரிக்கும்.

ஆனாலும் நம்முடைய ஆசையை பூர்த்தி பண்ணுவதற்காக அந்தப் பழத்தைப் புசிக்காமல், அதை கர்த்தருக்கு படைக்கிறோம். நம்முடைய மாம்சத்தின் ஆசையை நிறைவேற்றுவதற்கு பதிலாக, முதற்பலனை கர்த்தருக்கு படைத்து, கர்த்தர் செய்த நன்மைகளை நினைத்து, அவரை நன்றியோடு துதிக்கிறோம்.

நாம் பயிரிடும் நிலத்தின் கனிகளிலெல்லாம் முந்தின பலனை எடுத்து, ஒரு கூடையில் வைத்து, அதை கர்த்தருக்கு ஸ்தோத்திர காணிக்கையாக படைக்கும்போது, நம்மிடத்திலுள்ள முதல் தரமானதை கர்த்தருக்கு காணிக்கையாக படைக்கிறோம். நம்முடைய நிலத்தில் பழுக்கும் பழங்களில், முதலாவது பழுக்கிற பழமே, முதல் தரமான பழம். அதுவே முந்தின பலன். முந்தின பலன் கர்த்தருக்குரியது.

நம்முடைய ஜீவியகாலத்தில், நம்முடைய வாலிப காலமே, நமக்கு முதல்தரமான காலம். இதுவே நம்முடைய ஜீவியத்தின் முந்திய பலன். நம்முடைய வாலிபகாலம் கர்த்தருக்குரியது. வயதான காலத்தில் நம்மால் கர்த்தருக்கு அதிகமாய் ஊழியம் செய்ய முடியாது. வயதான காலத்தில் சரீரத்திலே சோர்வும், களைப்பும், வியாதியும் வந்துவிடும்.

ஆகையினால் கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்கள், தங்களுடைய வாலிப காலத்தை, கர்த்தருடைய ஊழியத்திற்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். வாலிபகாலத்தில் நம்மால் அங்கும் இங்கும் ஓடி சுறுசுறுப்பாகவும், உற்சாகமாகவும் ஊழியம் செய்ய முடியும். வாலிபவயதிலே சரீர பெலமும், சரீர ஆரோக்கியமும் நன்றாயிருக்கும். நம்முடைய வாலிப காலத்தில் உலகப்பிரகாரமான காரியங்களை நினைப்பதற்கு பதிலாக, நம்முடைய சிருஷ்டிகராகிய கர்த்தரை நினைப்பது, நமக்கு மிகுந்த ஆசீர்வாதமாயிருக்கும்.

இஸ்ரவேல் புத்திரர், கானான் தேசத்தில், தாங்கள் பயிரிடும் நிலத்தின் கனிகளிலெல்லாம் முந்தின பலனை எடுத்து, அதை ஒரு கூடையில் வைத்து, கர்த்தர் நியமித்திருக்கிற ஸ்தானத்திற்கு போய், அந்நாட்களில் இருக்கும் ஆசாரியனிடத்தில் சென்று, அவனை நோக்கி, "கர்த்தர் எங்களுக்குக் கொடுக்க நம்முடைய பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தில் வந்து சேர்ந்தேன் என்று இன்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் அறிக்கையிடுகிறேன்" (உபா 26:3) என்று சொல்லவேண்டும்.

அப்பொழுது ஆசாரியன் அந்தக் கூடையை இஸ்ரவேல் புத்திரருடைய கையிலிருந்து வாங்கி, அதை தேவனாகிய கர்த்தரின் பலிபீடத்திற்கு முன்பாக வைக்கவேண்டும் (உபா 26:4) என்று மோசே சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு முந்தின பலனை ஸ்தோத்திர காணிக்கையாக செலுத்தும்போது அவர்கள், தங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் நின்று, வசனித்து சொல்ல வேண்டிய வார்த்தைகளையும் மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

"என் தகப்பன் அழிவுக்கு நேரான சீரியா தேசத்தானாயிருந்தான்; அவன் கொஞ்சம் ஜனங்களோடே எகிப்துக்குப் போய், அவ்விடத்தில் பரதேசியாய்ச் சஞ்சரித்து, அங்கே பெரிய பலத்த திரட்சியான ஜாதியானான்" (உபா 26:5) என்றும்,

"எகிப்தியர் எங்களை ஒடுக்கி, எங்களைச் சிறுமைப்படுத்தி, எங்கள்மேல் கடினமான வேலையைச் சுமத்தினபோது, எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டோம்; கர்த்தர் எங்கள் சத்தத்தைக் கேட்டு, எங்கள் சிறுமையையும் எங்கள் வருத்தத்தையும் எங்கள் ஒடுக்கத்தையும் பார்த்து, எங்களைப் பலத்த கையினாலும், ஓங்கிய புயத்தினாலும், மகா பயங்கரங்களினாலும், அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், எகிப்திலிருந்து புறப்படப்பண்ணி, எங்களை இவ்விடத்துக்கு அழைத்து வந்து, பாலும் தேனும் ஓடுகிற தேசமாகிய இந்தத் தேசத்தை எங்களுக்குக் கொடுத்தார்" (உபா 26:6-9) என்றும்,

"இப்பொழுதும், இதோ, கர்த்தாவே தேவரீர் எனக்குக் கொடுத்த நிலத்தினுடைய கனிகளின் முதற்பலனைக் கொண்டுவந்தேன்" (உபா 26:10) என்றும் சொல்லவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் இந்த வார்த்தைகளையெல்லாம் வசனித்து சொன்ன பின்பு, தான் கொண்டு வந்திருக்கிற முந்தின பலனின் கூடையை, தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் வைத்து, அவரைப் பணிந்துகொள்ளவேண்டும்.

அதன் பின்பு முந்தின பலனை கொண்டு வந்திருக்கிற இஸ்ரவேல் புத்திரனும் லேவியனும், அவனிடத்தில் இருக்கிற பரதேசியும், தன் தேவனாகிய கர்த்தர் தனக்கும் தன் வீட்டாருக்கும் அநுக்கிரகம்பண்ணின சகலநன்மைகளினிமித்தமும் சந்தோஷப்படவேண்டும் (உபா 26:11) என்று மோசே சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஸ்தோத்திர காணிக்கைகளை படைக்கும்போது, தங்களையும், தங்களுடைய முன்னோர்களையும் கர்த்தருடைய சமுகத்திலே வெகுவாக தாழ்த்துகிறார்கள். "என் தகப்பன் அழிவுக்கு நேரான சீரியா தேசத்தானாயிருந்தான்" (உபா 26:5) என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருடைய முற்பிதாவாகிய யாக்கோபு, இந்த வசனத்தில் சீரிய தேசத்தான் என்று அழைக்கப்படுகிறார். இவர் பாதான் அராமில் இருபது வருஷங்களாக வாசம்பண்ணினார்.

இந்த வசனத்தில் மட்டுமே யாக்கோபு சீரியா தேசத்தான் என்று அழைக்கப்பட்டிருக்கிறார். ஆபிரகாமின் உறவினர்கள் சீரிய தேசத்தார் என்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள். (ஆதி 25:20; ஆதி 28:5; ஆதி 31:20,24). இவர்கள் சேமின் குமாரனாகிய ஆராமின் சந்ததியார் அல்ல. இவர்கள் சேமின் குமாரராகிய அர்பசாத்தின் சந்ததியார். (ஆதி 11:10-32) இவர்கள் சீரியா அல்லது பாதான்-அராமில் குடியிருந்த படியினால் இவர்களுக்கு சீரியர் என்னும் பெயர் வழங்கப்படலாயிற்று. (ஆதி 28:2-7; ஆதி 31:18; ஆதி 33:18; ஆதி 35:9,26;ஆதி 46:15).

யாக்கோபைப்பற்றிய ஒரு சில செய்திகளின் விவரம் வருமாறு :

1. யாக்கோபு கானான் தேசத்தில் அழிந்துபோகும் நிலைமையில் இருந்தார்.

2. யாக்கோபு கொஞ்சம் ஜனங்களோடே எகிப்துக்குப் போனார் (ஆதி 46:7-27).

3. யாக்கோபு அவ்விடத்தில் பரதேசியாய்ச் சஞ்சரித்து, அங்கே பெரிய பலத்த திரட்சியான ஜாதியானார் (யாத் 12:37).

இந்த வசனப்பகுதியில் இஸ்ரவேல் புத்திரரின் சிறுமையைப்பற்றியும், எகிப்தியர்கள் அவர்களை ஒடுக்கியதுபற்றியும், கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை விடுவித்தது பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

எகிப்தியர்கள் இஸ்ரவேல் புத்திரரை சிறுமைப்படுத்தி ஒடுக்கிய விதமாவது :

1. எகிப்தியர் இஸ்ரவேலரை ஒடுக்கினார்கள் (உபா 26:6-7).

2. எகிப்தியர் இஸ்ரவேலரைச் சிறுமைப் படுத்தினார்கள்.

3. எகிப்தியர் இஸ்ரவேலர்மீது கடினமான வேலையைச் சுமத்தினார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணின விதமாவது:

1. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டபோது, கர்த்தர் அவர்கள் சத்தத்தைக் கேட்டார். (யாத் 2:23-25; யாத் 3:7; சங் 107:6,8,28)

2. கர்த்தர் அவர்களைப் பார்த்தார்.

3. கர்த்தர் அவர்களைப் பலத்த கையினாலும், ஓங்கிய புயத்தினாலும், மகா பயங்கரங்களினாலும், அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார். (உபா 26:8-9).

4. கர்த்தர் அவர்களை இவ்விடத்துக்கு அழைத்து வந்து, பாலும் தேனும் ஓடுகிற தேசமாகிய இந்தத் தேசத்தை அவர்களுக்குக் கொடுத்தார் (உபா 26:9).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே மிகுந்த பாடுகளையும் வேதனைகளையும் அனுபவித்தார்கள். எகிப்தியர்கள் இஸ்ரவேலரை ஒடுக்கி, சிறுமைப்படுத்தினார்கள். அவர்கள்மேல் கடினமான வேலைகளை சுமத்தினார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய சந்நிதியிலே, முந்தின பலனை ஸ்தோத்திர காணிக்கையாக படைக்கும்போது, தங்கள் முற்பிதாக்கள் அனுபவித்த சிறுமையையும், ஒடுக்கத்தையும், வருத்தத்தையும் கர்த்தருடைய சமுகத்திலே அங்கீகரிக்கிறார்கள். கர்த்தர் இதுவரையிலும் தங்களுக்கு செய்த உதவிகளை அவர்கள் நன்றியுள்ள இருதயத்தோடு நினைவுகூர்ந்து, கர்த்தரைத் துதிக்கிறார்கள்.

மூன்றாம் வருஷத்து தசமபாகம் உபா 26:12-15

உபா 26:12. தசமபாகம் செலுத்தும் வருஷமாகிய மூன்றாம் வருஷத்திலே, நீ உன் வரத்திலெல்லாம் பத்தில் ஒன்றை எடுத்து, லேவியனும் பரதேசியும் திக்கற்ற பிள்ளையும் விதவையும் உன் வாசல்களில் புசித்துத் திருப்தியாகும்படி அவர்களுக்குக் கொடுத்துத் தீர்ந்தபின்பு,

உபா 26:13. நீ உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் போய் அவரை நோக்கி: தேவரீர் எனக்குக் கொடுத்த எல்லாக் கட்டளைகளின்படியும், நான் பரிசுத்தமான பொருள்களை என் வீட்டிலிருந்து எடுத்து வந்து, லேவியனுக்கும் பரதேசிக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் கொடுத்தேன்; உம்முடைய கட்டளைகளில் ஒன்றையும் நான் மீறவும் இல்லை மறக்கவும் இல்லை.

உபா 26:14. நான் துக்கங்கொண்டாடும்போது அதில் புசிக்கவும் இல்லை, தீட்டான காரியத்துக்கு அதில் ஒன்றும் எடுக்கவும் இல்லை; இழவுகாரியத்துக்காக அதில் ஒன்றும் படைக்கவும் இல்லை; நான் என் தேவனாகிய கர்த்தரின் சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து, தேவரீர் எனக்குக் கட்டளையிட்டபடி சகலமும் செய்தேன்.

உபா 26:15. நீர் உமது பரிசுத்த வாசஸ்தலமாகிய பரலோகத்திலிருந்து நோக்கிப் பார்த்து, உமது ஜனங்களாகிய இஸ்ரவேலரையும், நீர் எங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்டபடியே, எங்களுக்குக்கொடுத்த பாலும் தேனும் ஓடுகிற தேசத்தையும் ஆசீர்வதியும் என்று சொல்வாயாக.

இஸ்ரவேல் புத்திரர் மூன்றாம் வருஷத்தில் செலுத்த வேண்டிய தசமபாகத்தைப்பற்றி உபா 14:28,29 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

"மூன்றாம் வருஷத்தின் முடிவிலே அவ்வருஷத்தில் உனக்கு வந்த பலன் எல்லாவற்றிலும் தசமபாகத்தைப் பிரித்து, உன் வாசல்களில் வைக்கக்கடவாய். லேவியனுக்கு உன்னோடே பங்கும் சுதந்தரமும் இல்லாதபடியினாலே, அவனும், உன் வாசல்களில் இருக்கிற பரதேசியும், திக்கற்றவனும், விதவையும் வந்து புசித்துத் திர்ப்தியடைவார்களாக; அப்பொழுது உன் கை செய்யும் வேலையிலெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார்" (உபா 14:28,29).

மூன்றாம் வருஷத்து தசமபாகத்தை, எவ்வாறு செலவு பண்ணவேண்டுமென்று மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

"தசமபாகம் செலுத்தும் வருஷமாகிய மூன்றாம் வருஷத்திலே, நீ உன் வரத்திலெல்லாம் பத்தில் ஒன்றை எடுத்து, லேவியனும் பரதேசியும் திக்கற்ற பிள்ளையும் விதவையும் உன் வாசல்களில் புசித்துத் திருப்தியாகும்படி அவர்களுக்குக் கொடுக்கவேண்டும்" (உபா 26:12) என்று மோசே சொல்லுகிறார்.

இது மூன்றாம் தசமபாகத்தைக் குறிக்கிறது. மூன்று வருஷத்திற்கு ஒருமுறை ஏழைகளுக்காகவும், லேவியருக்காகவும் இந்த தசமபாகம் செலுத்தப்படுகிறது (உபா 14:22-29).

மூன்றாம் வருஷத்து தசமபாகத்தை கர்த்தருடைய நியமத்தின்படி கொடுத்து தீர்ந்த பின்பு, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சந்நிதிக்குப்போய், அவரை நோக்கி சொல்ல வேண்டிய வார்த்தைகளையும் மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

"தேவரீர் எனக்குக் கொடுத்த எல்லாக் கட்டளைகளின்படியும், நான் பரிசுத்தமான பொருள்களை என் வீட்டிலிருந்து எடுத்து வந்து, லேவியனுக்கும் பரதேசிக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் கொடுத்தேன்; உம்முடைய கட்டளைகளில் ஒன்றையும் நான் மீறவும் இல்லை மறக்கவும் இல்லை" (உபா 26:13) என்றும்,

"நான் துக்கங்கொண்டாடும்போது அதில் புசிக்கவும் இல்லை, தீட்டான காரியத்துக்கு அதில் ஒன்றும் எடுக்கவும் இல்லை; இழவுகாரியத்துக்காக அதில் ஒன்றும் படைக்கவும் இல்லை; நான் என் தேவனாகிய கர்த்தரின் சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து, தேவரீர் எனக்குக் கட்டளையிட்டபடி சகலமும் செய்தேன்" (உபா 26:14) என்றும்,

"நீர் உமது பரிசுத்த வாசஸ்தலமாகிய பரலோகத்திலிருந்து நோக்கிப் பார்த்து, உமது ஜனங்களாகிய இஸ்ரவேலரையும், நீர் எங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்டபடியே, எங்களுக்குக்கொடுத்த பாலும் தேனும் ஓடுகிற தேசத்தையும் ஆசீர்வதியும்" (உபா 26:15) என்றும், சொல்லவேண்டும்.

மூன்றாம் வருஷம் செலுத்த வேண்டிய தசமபாகம் கர்த்தருக்கு பரிசுத்தமானது. அதை இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்கு சொந்தமானதாக வைத்துக்கொள்ளக்கூடாது. கர்த்தருக்குரியதை கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்த வேண்டும். அந்தக் காணிக்கையை கர்த்தருடைய நியமத்தின் பிரகாரம் செலுத்தவேண்டும்.

தசமபாகமாக நியமிக்கப்பட்டிருக்கிற பொருட்களெல்லாம் பரிசுத்தமான பொருட்களாகும்.

ஏழைகளுக்கும், லேவியருக்கும் கொடுக்கப்படவேண்டிய மூன்றாம் தசமபாகத்தைத் தேவைப்படும்போது பயன்படுத்துவதற்காக அதை ஒரு சேமிப்புக் கிடங்கில் சேகரிக்க வேண்டும். ஏழைகளுக்கும், உபா. 26:12-13 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறவர்களுக்கும் பிரித்துக் கொடுப்பதற்காக இது பயன்படுத்தப்பட வேண்டும். ஆகையினால் இது பரிசுத்தமான பொருள் என்று அழைக்கப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு செலுத்த வேண்டிய தசமபாகத்தை தங்களுக்கு சொந்தமானதாக வைத்துக்கொள்ளாமல், கர்த்தர் தங்களுக்கு கொடுத்த கட்டளைகளின்படி அவற்றை கொடுத்து தீர்க்கவேண்டும். இதை உறுதிபண்ணும் விதமாக அவர்கள் கர்த்தரை நோக்கி, "தேவரீர் எனக்குக் கொடுத்த எல்லாக் கட்டளைகளின்படியும், நான் பரிசுத்தமான பொருள்களை என் வீட்டிலிருந்து எடுத்து வந்தேன்" என்று அறிக்கை செய்யவேண்டும்.

மூன்றாம் வருஷத்தில் செலுத்த வேண்டிய தசமபாகத்தை யாருக்கெல்லாம் கொடுக்கவேண்டும் என்று கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறாரோ அவர்களுக்கெல்லாம் கொடுக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளின்படி அவற்றை கொடுத்து தீர்ந்ததை உறுதிபண்ணும் வண்ணமாக "நான் பரிசுத்தமான பொருள்களை என் வீட்டிலிருந்து எடுத்து வந்து, லேவியனுக்கும் பரதேசிக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் கொடுத்தேன்" என்று அறிக்கை செய்யவேண்டும்.

தசமபாகம் கர்த்தருக்குரியது. அதை நம்முடைய சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்தக்கூடாது. தசமபாகத்தை எப்படி கொடுக்கவேண்டும் என்று கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறாரோ, அந்தக் கட்டளைகளில் ஒன்றையும் இஸ்ரவேல் புத்திரர் மீறவும் கூடாது, அதை மறக்கவும் கூடாது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய தசமபாகத்தை எடுத்து, தங்களுடைய சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்தவில்லை என்பதையும், கர்த்தரின் சத்தத்திற்கு கீழ்ப்படிந்து, தேவரீர் தங்களுக்கு கட்டளையிட்டபடி சகலத்தையும் செய்ததையும் அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் அறிக்கை செய்யவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி, "நான் துக்கங்கொண்டாடும்போது அதில் புசிக்கவும் இல்லை, தீட்டான காரியத்துக்கு அதில் ஒன்றும் எடுக்கவும் இல்லை; இழவுகாரியத்துக்காக அதில் ஒன்றும் படைக்கவும் இல்லை" என்று அறிக்கை செய்து, தாங்கள் கர்த்தருடைய கட்டளைகளில் ஒன்றையும் மீறாமல், அதற்கு கீழ்ப்படிந்து, கர்த்தர் தங்களுக்கு கட்டளையிட்டபடியே சகலத்தையும் செய்ததாக உறுதிபண்ணவேண்டும்.

துக்கங்கொண்டாடும் நாட்களில் இழவு வீட்டாருக்குப் பல செலவுகள் வரும். (2சாமு 3:35; எரே 16:7; எசே 24:17; ஓசி 9:4). இந்தத் தசமபாகத்தை அதற்குப் பயன்படுத்தக்கூடாது. விக்கிரகங்களுக்கும் அதைப் படைக்கக்கூடாது (1நாளா 10:27-28).

கர்த்தருக்கு தாங்கள் கீழ்ப்படிந்ததை இஸ்ரவேல் புத்திரர் அறிக்கை செய்யும்போது, மிகவும் மென்மையான குரலில் பேசுவார்கள் என்றும், அவர்கள் கர்த்தரைத் துதிக்கும்போது, உரத்த சத்தத்தோடு துதிப்பார்கள் என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளை நினைத்து, நாம் கர்த்தரைத் துதிக்கும்போது, ஆரவார சத்தத்தோடு அவரைத் துதிக்கவேண்டும். நம்முடைய பாவங்களை கர்த்தருடைய சமுகத்தில் அறிக்கை பண்ணும்போதோ, உடைந்த இருதயத்தோடு, மென்மையான குரலில் ஜெபம்பண்ணவேண்டும்.

தசமபாகம் கர்த்தருக்கு பரிசுத்தமானது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பரிசுத்தமானதில் குற்றம் செய்யும்போது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் குற்றநிவாரண பலியை காணிக்கையாக செலுத்தவேண்டும். கர்த்தர் இதுபற்றி மோசேக்கு சொன்னபோது,

"ஒருவன் கர்த்தருக்குரிய பரிசுத்தமானவைகளில் குற்றஞ்செய்து, அறியாமையினால் பாவத்துக்குட்பட்டால், அவன் தன் குற்றத்தினிமித்தம் பரிசுத்த ஸ்தலத்துச் சேக்கல் கணக்கின்படியே, நீ அவன் மேல் சுமத்தும் அபராதம் எவ்வளவோ, அவ்வளவு வெள்ளிச் சேக்கல் பெறும் பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவைக் குற்றநிவாரணபலியாகக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்து, பரிசுத்தமானதைக்குறித்துத் தான் செய்த தப்பிதத்தினால் உண்டான நஷ்டத்தைச் செலுத்தி, அதினோடு ஐந்தில் ஒரு பங்கை அதிகமாகக் கூட்டி, ஆசாரியனுக்குக் கொடுப்பானாக; குற்றநிவாரணபலியாகிய ஆட்டுக்கடாவினாலே அவனுக்காக ஆசாரியன் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும்" (லேவி 5:15,16) என்று சொல்லியிருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் அறிக்கை பண்ண வேண்டிய காரியங்களாவன :

1. நான் பரிசுத்தமான பொருள்களை என் வீட்டிலிருந்து எடுத்து வந்திருக்கிறேன்.

2. இதை லேவியனுக்கும் பரதேசிக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் கொடுத்தேன்.

3. உம்முடைய கட்டளைகளில் ஒன்றையும் நான் மீறவும் இல்லை மறக்கவும் இல்லை.

4. நான் துக்கங்கொண்டாடும்போது அதில் புசிக்கவும் இல்லை (உபா. 26:14).

5. தீட்டான காரியத்துக்கு அதில் ஒன்றும் எடுக்கவும் இல்லை.

6. இழவுகாரியத்துக்காக அதில் ஒன்றும் படைக்கவும் இல்லை.

7. நான் என் தேவனாகிய கர்த்தரின் சத்தத்திற்குக் கீழ்ப்படிந்தேன்.

8. தேவரீர் எனக்குக் கட்டளையிட்டபடி சகலமும் செய்தேன்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் வந்து, தங்களுடைய கீழ்ப்படிதலையும், தங்களுடைய கைகளின் கிரியைகளையும் அறிக்கை செய்யும்போது, கர்த்தரிடத்தில் பணிவான விண்ணப்பத்தையும் ஏறெடுக்கவேண்டும். அவர்கள் தங்களுக்காக தனிப்பட்ட முறையில் விண்ணப்பம்பண்ணுவதுபோல, இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்காகவும் விண்ணப்பம்பண்ணவேண்டும். இஸ்ரவேல் தேசம் முழுவதிலும் சமாதானமும் செழிப்பும் இருக்கும்போது, அந்தத் தேசத்திலுள்ள எல்லோரும் சந்தோஷமாயும், சமாதானமாயும், செழிப்பாயும், ஆசீர்வாதமாயும் இருப்பார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் எவ்வாறு ஜெபம்பண்ணவேண்டுமென்று மோசே அவர்களுக்கு சொல்லுகிறார்.

"நீர் உமது பரிசுத்த வாசஸ்தலமாகிய பரலோகத்திலிருந்து நோக்கிப் பார்த்து, உமது ஜனங்களாகிய இஸ்ரவேலரையும், நீர் எங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்டபடியே, எங்களுக்குக்கொடுத்த பாலும் தேனும் ஓடுகிற தேசத்தையும் ஆசீர்வதியும்" (உபா 26:15) என்று இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் ஏறெடுக்கவேண்டிய ஜெபத்தின் விவரம் வருமாறு :

1. நீர் உமது பரிசுத்த வாசஸ்தலமாகிய பரலோகத்திலிருந்து நோக்கிப் பாரும்.

2. உமது ஜனங்களாகிய இஸ்ரவேலரை ஆசீர்வதியும்.

3. எங்களுக்குக்கொடுத்த பாலும் தேனும் ஓடுகிற தேசத்தை ஆசீர்வதியும்.

கர்த்தருடைய கட்டளைகளும் நியாயங்களும் உபா 26:16-19

உபா 26:16. இந்த கட்டளைகளின்படியும் நியாயங்களின்படியும் நீ செய்யும்பொருட்டு, இன்று உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிடுகிறார்; ஆகையால் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அவைகளைக் காத்து நடக்கக் கடவாய்.

உபா 26:17. கர்த்தர் எனக்கு தேவனாயிருப்பார் என்றும், நான் அவர் வழிகளில் நடந்து, அவர் கட்டளைகளையும் அவர் கற்பனைகளையும் அவர் நியாயங்களையும் கைக்கொண்டு, அவர் சத்தத்திற்குக் கீழ்ப்படிவேன் என்றும் நீ இன்று அவருக்கு வாக்குக்கொடுத்தாய்.

உபா 26:18. கர்த்தரும் உனக்கு வாக்குக் கொடுத்து உனக்குச் சொல்லியிருக்கிறபடி, நீ என்னுடைய கட்டளைகளையெல்லாம் கைக்கொண்டால், எனக்குச் சொந்த ஜனமாயிருப்பாய் என்றும்,

உபா 26:19. நான் உண்டுபண்ணின எல்லா ஜாதிகளைப்பார்க்கிலும், புகழ்ச்சியிலும் கீர்த்தியிலும் மகிமையிலும் உன்னைச் சிறந்திருக்கும்படி செய்வேன் என்றும், நான் சொன்னபடியே, நீ உன் தேவனாகிய கர்த்தரான எனக்குப் பரிசுத்த ஜனமாயிருப்பாய் என்றும், அவர் இன்று உனக்குச் சொல்லுகிறார் என்றான்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கட்டளைகளையும் நியாயங்களையும் சொல்லுகிறார். மோசே இவைகளை இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொன்னாலும், இவையெல்லாம் கர்த்தருடைய கட்டளைகளாகவே இருக்கிறது. "இந்த கட்டளைகளின்படியும் நியாயங்களின்படியும் நீ செய்யும்பொருட்டு, இன்று உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிடுகிறார்" (உபா 26:16) என்று மோசே இஸ்ரவேல் சபையாருக்கு சொல்லுகிறார்.

ஆகையால் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் தங்கள் முழு இருதயத்தோடும் தங்கள் முழு ஆத்துமாவோடும் இவைகளைக் காத்து நடக்கவேண்டும் என்று மோசே கட்டளையிடுகிறார்.

மோசே தன்னுடைய சுயஞானத்தினால் இந்தக் கட்டளைகளையும் நியாயங்களையும் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லவில்லை. மோசே தன்னுடைய சுயஅதிகாரத்தினாலும் இஸ்ரவேல் சபையாரிடத்தில் இந்தக் கட்டளைகளை சொல்லவில்லை. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் இந்தக் கட்டளைகளையும், நியாயங்களையும் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கட்டளையிட்டிருக்கிறார். மோசே கர்த்தருடைய கட்டளைகளைப் பெற்றுக்கொண்டு கர்த்தருடைய நாமத்தினாலும், கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கிற ஞானத்தினாலும், வல்லமையினாலும், அதிகாரத்தினாலும், அவர் இஸ்ரவேல் புத்திரருக்கு இந்தக் கட்டளைகளையும் நியாயங்களையும் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சமுகத்திலே வாக்கு கொடுத்திருக்கிறார்கள். கர்த்தர் தங்களுக்கு தேவனாயிருப்பார் என்றும், தாங்கள் அவர் வழிகளில் நடந்து, அவர் கட்டளைகளையும் அவர் கற்பனைகளையும் அவர் நியாயங்களையும் கைக்கொண்டு, அவர் சத்தத்திற்குக் கீழ்ப்படிவோம் என்றும் இஸ்ரவேல் புத்திரர் இன்று கர்த்தருக்கு வாக்குக்கொடுத்திருக்கிறார்கள் (உபா 26:17).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு வாக்குக்கொடுத்ததுபோல, கர்த்தரும் அவர்களுக்கு வாக்குக்கொடுக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீ என்னுடைய கட்டளைகளையெல்லாம் கைக்கொண்டால், எனக்குச் சொந்த ஜனமாயிருப்பாய் என்றும், நான் உண்டுபண்ணின எல்லா ஜாதிகளைப்பார்க்கிலும், புகழ்ச்சியிலும் கீர்த்தியிலும் மகிமையிலும் உன்னைச் சிறந்திருக்கும்படி செய்வேன் என்றும், நான் சொன்னபடியே, நீ உன் தேவனாகிய கர்த்தரான எனக்குப் பரிசுத்த ஜனமாயிருப்பாய்" (உபா 26:18,19) என்று அவர்களுக்கு வாக்குக்கொடுக்கிறார்.

இஸ்ரவேலரும், தேவனாகிய கர்த்தரும் செய்து கொண்ட உடன்படிக்கையின் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் புத்திரர் வாக்கு கொடுக்க வேண்டியவை

(1) கர்த்தர் எனக்கு தேவனாயிருப்பார்

(2) நான் அவர் வழிகளில் நடப்பேன்.

(3) அவர் கட்டளைகளைக் கைக் கொள்வேன்

(4) அவர் கற்பனைகளைக் கைக் கொள்வேன்

(5) அவர் நியாயங்களைக் கைக் கொள்வேன்.

(6) அவர் சத்தத்திற்குக் கீழ்ப்படிவேன்

2. இஸ்ரவேல் புத்திரருக்குத் தேவனுடைய வாக்குத்தத்தம்

(1) எனக்குச் சொந்த ஜனமாயிருப்பாய் (உபா. 26:18).

(2) எல்லா ஜாதிகளைப்பார்க்கிலும் புகழ்ச்சியில் சிறந்திருக்கும்படி செய்வேன். (உபா 26:19)

(3) எல்லா ஜாதிகளைப்பார்க்கிலும் கீர்த்தியில் சிறந்திருக்கும்படி செய்வேன்.

(4) எல்லா ஜாதிகளைப்பார்க்கிலும் மகிமையில் சிறந்திருக்கும்படி செய்வேன்.

(5) எல்லா ஜனங்களைப் பார்க்கிலும் சிறந்திருப்பாய்.

(6) எனக்குப் பரிசுத்த ஜனமாயிருப்பாய்.

27 அதிகாரம்

மோசே இதுவரையிலும் இஸ்ரவேல் புத்திரர் கைக்கொள்ளவேண்டிய கட்டளைகளையும், நியாயங்களையும் அவர்களுக்கு விரிவாக எடுத்து சொன்னார். இந்த அதிகாரத்திலிருந்து மோசே அவர்களுக்கு புதிய காரியங்களை சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் யோர்தானைக் கடக்கும் நாளிலே, கானான் தேசத்திலே பெரிய கல்லுகளை நாட்டவேண்டும். அந்தக் கல்லுகளில் நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகள் யாவையும் எழுதவேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளை ஞாபகத்தில் வைத்திருப்பதற்கு இவை அவர்களுக்கு உதவியாயிருக்கும் (உபா 27:1-10).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய நியாயப்பிரமாண வார்த்தைகளை அசட்டைபண்ணிவிடக்கூடாது. அவைகள் யாவையும் கைக்கொள்வதற்கு இஸ்ரவேல் புத்திரர் கவனமாயிருக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசித்த பின்பு அவர்களுக்கு ஆசீர்வாதமான வார்த்தைகளும், சாபமான வார்த்தைகளும் சொல்லப்படுகிறது. இவை இரண்டு மலைகளிலிருந்து அவர்களுக்கு சொல்லப்படுகிறது. இஸ்ரவேல் சபையார் அந்த வார்த்தைகளைக் கேட்டு "ஆமென்" என்று சொல்லவேண்டும் (உபா 27:11-26).

பெரிய கல்லுகள்
உபா 27:1-10

உபா 27:1. பின்பு மோசே, இஸ்ரவேலின் மூப்பர் கூடஇருக்கையில், ஜனங்களை நோக்கி: நான் இன்று உங்களுக்கு விதிக்கிற கட்டளைகளையெல்லாம் கைக்கொள்ளுங்கள்.

உபா 27:2. உன் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்திற்கு நீ போக யோர்தானைக் கடக்கும் நாளில், நீ பெரிய கல்லுகளை நாட்டி, அவைகளுக்குச் சாந்து பூசி,

உபா 27:3. உன் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி, உனக்குக் கொடுக்கும் பாலும் தேனும் ஓடுகிற தேசத்திற்குள் பிரவேசிக்கும்படி நீ கடந்துபோனபின்பு, இந்த நியாயப்பிரமாண வார்த்தைகள் யாவையும் அவைகளில் எழுதக்கடவாய்.

உபா 27:4. மேலும் நீங்கள் யோர்தானை கடந்தபோது, இன்று நான் உங்களுக்குக் கட்டளையிட்டபடி அந்தக் கல்லுகளை ஏபால் மலையிலே நாட்டி, அவைகளுக்குச் சாந்து பூசி,

உபா 27:5. அங்கே இருப்பாயுதம்படாத கற்களாலே உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டக்கடவாய்.

உபா 27:6. நீ உன் தேவனாகிய கர்த்தரின் பலிபீடத்தை முழுக்கற்களாலே கட்டி, அதின்மேல் உன் தேவனாகிய கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகளையும்,

உபா 27:7. சமாதானபலிகளையும் இட்டு, உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் புசித்துச் சந்தோஷமாயிருந்து,

உபா 27:8. அந்தக் கல்லுகளில் இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளையெல்லாம் துலக்கமாய் எழுதக்கடவாய் என்று கட்டளையிட்டான்.

உபா 27:9. பின்னும் மோசே, லேவியராகிய ஆசாரியர்களும் கூட இருக்கையில், இஸ்ரவேலர் எல்லாரையும் நோக்கி: இஸ்ரவேலே, கவனித்துக்கேள், இந்நாளிலே உன் தேவனாகிய கர்த்தருக்கு ஜனமானாய்.

உபா 27:10. ஆகையால் நீ உன் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து, இன்று நான் உனக்கு விதிக்கிற அவருடைய கற்பனைகளின்படியும் அவருடைய கட்டளைகளின்படியும் செய்வாயாக என்று சொன்னான்.

மோசே தங்களுக்கு விதிக்கிற கட்டளைகளையெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் கைக்கொள்ளவேண்டும். மோசே இந்த அதிகாரத்தில், இஸ்ரவேலின் மூப்பர் கூடயிருக்கையில், ஜனங்களை நோக்கிச் சொல்லுகிறார். இஸ்ரவேலின் மூப்பர்கள் அவர்களுடைய பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் தலைவர்களாயிருக்கிறார்கள்.

"பின்பு மோசே, இஸ்ரவேலின் மூப்பர் கூடஇருக்கையில், ஜனங்களை நோக்கி: நான் இன்று உங்களுக்கு விதிக்கிற கட்டளைகளையெல்லாம் கைக்கொள்ளுங்கள்" (உபா 27:1) என்று சொல்லுகிறார்.

தன்னோடுகூட இஸ்ரவேலின் மூப்பர்கள் இருக்கும்போது, மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்கு தன்னுடைய வார்த்தைகளை சொன்னதுபோல, தன்னோடுகூட லேவியராகிய ஆசாரியர்கள் இருக்கும்போதும், மோசே இஸ்ரவேலர் எல்லோருக்கும் தன்னுடைய வார்த்தைகளை சொல்லுகிறார் (உபா 27:9).

மோசே இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோருக்கும் இன்று விதிக்கிற கட்டளைகளையெல்லாம் அவர்கள் கைக்கொள்ளவேண்டும். இதுவே மோசேயின் பிரதான செய்தி.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசித்த உடனே, மோசே அவர்களுக்கு விதிக்கிற கட்டளைகளையெல்லாம் எழுத்துக்களால் எழுதவேண்டும். ஜனங்களுக்கு சீக்கிரத்தில் ஞாபகமறதி வந்துவிடும். மோசே தங்களுக்கு விதித்த கட்டளைகளையெல்லாம் அவர்கள் மறந்துவிடுவார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் மோசேயின் வார்த்தைகளை மறவாதிருக்கவேண்டுமானால் அவற்றை எழுத்துக்களால் எழுதி வைக்கவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உன் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்திற்கு நீ போக யோர்தானைக் கடக்கும் நாளில், நீ பெரிய கல்லுகளை நாட்டி, அவைகளுக்குச் சாந்து பூசி, உன் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி உனக்குக் கொடுக்கும் பாலும் தேனும் ஓடுகிற தேசத்திற்குள் பிரவேசிக்கும்படி நீ கடந்துபோனபின்பு, இந்த நியாயப்பிரமாண வார்த்தைகள் யாவையும் அவைகளில் எழுதக்கடவாய்" (உபா 27:2,3) என்று சொல்லுகிறார்.

சீனாய் மலையிலே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடே உடன்படிக்கை பண்ணினார். மோசேக்கு தம்முடைய பிரமாணத்தைச் சொன்னார். கர்த்தருடைய உடன்படிக்கையை உறுதிபண்ணுவதற்காக, மோசே பன்னிரண்டு தூண்களை நிறுத்தினார்.

"மோசே கர்த்தருடைய வார்த்தைகளையெல்லாம் எழுதிவைத்து, அதிகாலமே எழுந்து, மலையின் அடியில் ஒரு பலிபீடத்தைக் கட்டி, இஸ்ரவேலுடைய பன்னிரண்டு கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே பன்னிரண்டு தூண்களை நிறுத்தினான்" (யாத் 24:4).

மோசே கர்த்தருடைய வார்த்தைகளையெல்லாம் எழுதிவைத்தார் என்று யாத் 24:4 ஆவது வசனம் கூறுகிறது. ஆகையினால் மோசே பத்துக் கற்பனைகளையும், கர்த்தருடைய மற்ற வார்த்தைகளையும் எழுதியிருக்க வேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிவார்களா அல்லது கீழ்ப்படியமாட்டார்களா என்பதை மோசே அறிந்துகொள்ள விரும்புகிறார். ஜனங்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிவதாக வாக்குப்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தர் அருளின எல்லா வார்த்தைகளின் படியும் செய்வதாக வாக்குப்பண்ணுகிறார்கள். அவர்களுடைய மனதிலே கீழ்ப்படியாமை காணப்படவில்லை. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படிந்தால், கர்த்தர் அவர்களுக்கு வாக்குப்பண்ணின ஆசீர்வாதங்கள் கிடைக்கும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தால் அவர்களுக்கு ஆசீர்வாதமும், கீழ்ப்படியாவிட்டால் அவர்களுக்கு சாபமும் வரும். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள விரும்புகிறார்கள். ஆகையினால் அவர்கள் கர்த்தர் அருளின எல்லா வார்த்தைகளின்படியும் செய்வோம் என்று வாக்குப்பண்ணுகிறார்கள்.

மோசே கர்த்தருடைய வார்த்தைகளையெல்லாம் எழுதிவைக்கிறார். அவர் அதிகாலமே எழுந்து மலையின் அடியில் ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார். மோசே இஸ்ரவேலுடைய பன்னிரண்டு கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே பன்னிரண்டு தூண்களை நிறுத்துகிறார் (யாத் 24:4).

மோசே சீனாய் மலையின் அடியில் கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டுகிறார். இந்தப் பலிபீடம் தவிர மோசே மேலும் சில பலிபீடங்களையும் கட்டியிருக்கிறார். அதன் விவரம் வருமாறு:

1. ரெவிதீமில் இஸ்ரவேலர்கள் அமலேக்கியரை முறியடித்தபோது ஒரு பலிபீடத்தை கட்டினார். மோசே இந்தப் பலிபீடத்தை யெகோவா-நிசி என்று அழைத்தார். (யாத் 17:13-16)

2. நியாயப்பிரமாணப் புஸ்தகம் பிரதிஷ்டை பண்ணப்பட்டு, இரத்தத்தினால் முத்திரையிடப்பட்டபோது கட்டப்பட்ட பலிபீடம். (யாத் 24:4-8)

3. ஆசரிப்புக் கூடாரமும் அதன் பணிமுட்டுகளும் கட்டப்பட்டபோது ஒருபலிபீடம். அப்போது சித்தீம் மரத்தினால் மோசே ஒரு பலிபீடத்தைச் செய்து அதை வெண்கலத் தகட்டினால் மூடினார். இதில் எப்போதும் தொடர்ந்து பலிசெலுத்தப்படும். (யாத் 27:1-8; யாத் 38:1-7)

4. மோசே சித்தீம் மரத்தினால் தூபபலிபீடத்தைச் செய்தார். இதைப் பொன் தகட்டால் மூடி, பரிசுத்த ஸ்தலத்தில் வைத்தார் (யாத் 30:1-10; யாத் 37:25-28; யாத் 40:5,26)

மோசே இஸ்ரவேலுடைய பன்னிரண்டு கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே பன்னிரண்டு தூண்களை நிறுத்துகிறார். பன்னிரண்டு தூண்கள் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரைக் குறிக்கும். பலிபீடம் தேவனிடத்தில் கிட்டிச்சேரும் சிலாக்கியத்தைக் குறிக்கும். இங்கு தேவனும், இஸ்ரவேல் ஜனத்தாரும் உடன்படிக்கை பண்ணுகிறார்கள்.

தேவன் உடன்படிக்கையைக் கூறுகிறார். தம்முடையபிரமாணத்தை ஏற்றுக் கொண்டால் இஸ்ரவேலருக்கு ஆசீர்வாதம் எனவும், அவற்றை ஏற்றுக்கொள்ளாவிட்டால் இஸ்ரவேலருக்கு சாபம் எனவும் தேவன் அறிவிக்கிறார். இஸ்ரவேலர்கள் தேவனுடைய உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டு, அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவதாக வாக்குப் பண்ணுகிறார்கள். (யாத் 19:5-8; யாத் 24:3,7).

இதன்பின்பு, இந்த உடன்படிக்கை மிருகஜீவன்களின் இரத்தத்தினால் உறுதிப்பண்ணப்படுகிறது. உடன்படிக்கையை மீறுகிறவர்களுக்குத் தண்டனை கொடுக்கப்படும். இது வரப்போகிற மேசியாவின்மீது இஸ்ரவேல் ஜனத்தார் வைத்திருக்கும் நம்பிக்கையையும், வெளிப்படுத்துகிறது (யாத் 24:5-8; எபி 9:18-23).

பன்னிரண்டு தூண்களும் உளியினால் செதுக்கப்படாத கற்களாகும். பலிபீடத்திற்கு ஆதரவாக இவைகள் நிறுத்தப்பட்டிருக்கலாம். (யாத் 20:25) இவை பலிபீடத்தைச் சுற்றிலும் நிறுத்தப்பட்டிருப்பதினால் இஸ்ரவேல் தேசத்தார் அனைவரும் உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டதற்கு இது அடையாளமாக இருக்கலாம்.

மோசே நியாயப்பிரமாண புஸ்தகத்தை எழுதுகிறார். அதை இரத்த உடன்படிக்கையினால் முத்திரையிடுகிறார். கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆசீர்வாதமாக சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் தம்முடைய ஆசீர்வாதங்களோடு, ஒரு சில நிபந்தனைகளையும் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு உடன்படிக்கை பண்ணுகிறார். கர்த்தருடைய உடன்படிக்கை இரத்தத்தினால் உறுதிபண்ணப்படுகிறது. "பலியினாலே என்னோகூட உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்" (சங் 50:5).

மனுஷன் பாவம் செய்து தேவமகிமையை இழந்துபோனான். அவன் கர்த்தருடைய சிலாக்கியங்களுக்கும் ஆசீர்வாதங்களுக்கும் தூரமாய் விலகிப்போய்விட்டான். கர்த்தருக்கும் மனுஷனுக்கும் இடையே உள்ள ஐக்கியமும் முறிந்துபோயிற்று. கர்த்தர் மனுஷனோடு உடன்படிக்கை பண்ணுவதற்கு முன்பாக, மனுஷனுடைய பாவங்கள் மன்னிக்கப்படவேண்டும். இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை. பலிசெலுத்துவதன் மூலமாக மனுஷனுக்கு பாவநிவாரணம் நியமிக்கப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய உடன்படிக்கையை பெற்றுக்கொள்வதற்கு, அவர்கள் தங்களை ஆயத்தம்பண்ண வேண்டும். அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படவேண்டும். அவர்களுடைய பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்கு பலிகள் செலுத்தப்படவேண்டும். இதற்காக மோசே மலையின் அடியில் ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார். தேவனுடைய நாமமகிமைக்காக இந்தப் பலிபீடம் கட்டப்படுகிறது.

கர்த்தருடைய உடன்படிக்கையில் முதலாவது பகுதியாக, கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டப்படுகிறது. இந்தப் பலிபீடம் எல்லா பலிபீடங்களுக்கும் அடையாளமாயிருக்கிறது. உடன்படிக்கையை இரத்தத்தினால் உறுதிபண்ணவேண்டும்.

மோசே இஸ்ரவேலுடைய பன்னிரண்டு கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே பன்னிரண்டு தூண்களை நிறுத்துகிறார். இந்தத் தூண்கள் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு அடையாளமாயிருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரோடு உடன்படிக்கை பண்ணுகிறார். உடன்படிக்கை பண்ணுகிறவர் கர்த்தர். உடன்படிக்கை பண்ணப்படுகிறவர்கள் இஸ்ரவேல் புத்திரர்.

மோசே கட்டின பலிபீடத்தின் ஒரு பக்கத்தில் கர்த்தரும், அதன் மற்றொரு பக்கத்தில் இஸ்ரவேல் புத்திரரும் இருக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரருக்கு அடையாளமாக மோசே பன்னிரண்டு தூண்களை நிறுத்தியிருக்கிறார். மோசேயோ கர்த்தருக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் நடுவே மத்தியஸ்தராய் நிற்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் பன்னிரண்டு கோத்திரங்களாக இருக்கிறார்கள். ஒவ்வொரு கோத்திரத்தையும் குறிப்பதற்கு ஒவ்வொரு தூண் வீதமாக, மோசே பன்னிரண்டு தூண்களை நிறுத்துகிறார். ஒவ்வொரு கோத்திரத்தாரும், தங்களுடைய கோத்திரத்திற்குரிய தூணை அறிந்திருக்கிறார்கள். அந்தந்த கோத்திரத்தின் மூப்பர்கள், தங்களுடைய கோத்திரத்தின் தூணுக்கு அருகாமையில் நிற்கிறார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு இப்போது சொல்லுகிற கட்டளை. யாத் 24:4-ஆவது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற சம்பவத்தைப்போல இருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்காக, யோர்தானைக் கடந்த பின்பு, நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளையெல்லாம், பெரிய கல்லுகளிலே எழுதவேண்டும். பெரிய கல்லுகள் நாட்டப்பட்டிருக்கிற இடத்தில், இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தையும் கட்டவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "மேலும் நீங்கள் யோர்தானை கடந்தபோது, இன்று நான் உங்களுக்குக் கட்டளையிட்டபடி அந்தக் கல்லுகளை ஏபால் மலையிலே நாட்டி, அவைகளுக்குச் சாந்து பூசி, அங்கே இருப்பாயுதம்படாத கற்களாலே உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டக்கடவாய்" (உபா 27:4,5) என்று சொல்லுகிறார்.

எகிப்து தேசத்தார் கற்களில் சாந்துபூசி, அதில் எழுதவேண்டிய செய்தியை எழுதிப் பாதுகாப்பது வழக்கம். இதுபோன்ற கற்களில் 2,000 வருஷங்களாகப் பாதுகாக்கப்பட்ட செய்திகள் உள்ளன.

மோசேயின் காலத்தில் எழுதும் வழக்கம் இருந்தது. அதைப் பல இடங்களில் எழுதிப் பாதுகாத்தார்கள். இதனால் ஜனங்கள் நியாயப் பிரமாணத்தை வாசித்துப் புரிந்து கொண்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பலிபீடம் கட்டும்போது, அந்த பலிபீடத்தை, இருப்பாயும் படாத கற்களாலே கட்டவேண்டும். அந்தப் பலிபீடத்தை அவர்கள் முழுக்கற்களாலே கட்டவேண்டும் என்று மோசே சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் அந்தப் பலிபீடத்தின்மேல் கர்த்தருக்கு பலிகளை செலுத்தவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு இதுபற்றிச் சொல்லும்போது, "நீ உன் தேவனாகிய கர்த்தரின் பலிபீடத்தை முழுக்கற்களாலே கட்டி, அதின்மேல் உன் தேவனாகிய கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகளையும், சமாதானபலிகளையும் இட்டு, உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் புசித்துச் சந்தோஷமாயிருந்து, அந்தக் கல்லுகளில் இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளையெல்லாம் துலக்கமாய் எழுதக்கடவாய்" (உபா 27:6-8) என்று கட்டளையிடுகிறார்.

பலிபீடம் இருப்பாயுதம்படாத முழுக்கற்களாக இருக்க வேண்டும். (யாத் 20:24-26) ஏபால் மலையின்மேல் இந்தக் கற்களில் பலிபீடம் கட்டப்பட்டிருக்கிறது. அதில் நியாயப்பிரமாணம் எழுதப்பட்டிருப்பதாக யோசு 8:30-35 ஆகிய வசனங்கள் மூலமாகத் தெரிய வருகிறது.

இஸ்ரவேல் புத்திரர் பெரிய கல்லுகளை ஏபால் மலையிலே நாட்டுகிறார்கள். அவைகளுக்கு சாந்து பூசுகிறார்கள். சாந்து பூசப்பட்ட கல்லுகளிலே கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளையெல்லாம் துலக்கமாய் எழுதுகிறார்கள். கர்த்தர் அந்த வார்த்தைகள் மூலமாக இஸ்ரவேல் புத்திரரோடே பேசுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கல்லுகள் நாட்டப்பட்டிருக்கிற இடத்திலே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதின்மேல் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகளையும், சமாதான பலிகளையும் செலுத்துகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர், தாங்கள் செலுத்தும் பலிகள் மூலமாக கர்த்தரோடு பேசுகிறார்கள். இவ்வாறாக கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் நடுவே சம்பாஷணை நடைபெறுகிறது.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கூடியிருக்கிற இடத்தில், லேவியராகிய ஆசாரியர்களும் கூடயிருக்கிறார்கள். அப்பொழுது மோசே இஸ்ரவேலர் எல்லோரையும் நோக்கி, "இஸ்ரவேலே, கவனித்துக்கேள், இந்நாளிலே உன் தேவனாகிய கர்த்தருக்கு ஜனமானாய். ஆகையால் நீ உன் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து, இன்று நான் உனக்கு விதிக்கிற அவருடைய கற்பனைகளின்படியும் அவருடைய கட்டளைகளின்படியும் செய்வாயாக" (உபா 27:9,10) என்று சொல்லுகிறார்.

சபிக்கப்பட்டவன்
உபா 27:11-26

உபா 27:11. மேலும் அந்நாளிலே மோசே ஜனங்களை நோக்கி:

உபா 27:12. நீங்கள் யோர்தானைக் கடந்தபின்பு, ஜனங்கள் ஆசீர்வதிக்கப்படும்படி கெரிசீம் மலையில் சிமியோன், லேவி, யூதா, இசக்கார், யோசேப்பு, பென்யமீன் என்னும் கோத்திரங்கள் நிற்கவேண்டும்.

உபா 27:13. சாபங்கூறப்படும்பொருட்டு ஏபால் மலையில் ரூபன், காத், ஆசேர், செபுலோன், தாண், நப்தலி என்னும் கோத்திரங்கள் நிற்கவேண்டும்.

உபா 27:14. அப்பொழுது லேவியர் உரத்த சத்தமிட்டு இஸ்ரவேல் மனிதர் எல்லாரையும் பார்த்து:

உபா 27:15. கர்த்தருக்கு அருவருப்பான காரியமாகிய தொழிலாளிகளுடைய கைவேலையால் செய்யப்பட்டதும் வார்ப்பிக்கப்பட்டதுமான யாதொரு விக்கிரகத்தை உண்டுபண்ணி ஒளிப்பிடத்திலே வைக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; அதற்கு ஜனங்களெல்லாரும் பிரதியுத்தரமாக ஆமென் என்று சொல்லக்கடவர்கள்.

உபா 27:16. தன் தகப்பனையும் தன் தாயையும் தூஷிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்.

உபா 27:17. பிறனுடைய எல்லைக்குறியை ஒற்றிப்போடுகிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்.

உபா 27:18. குருடனை வழிதப்பச்செய்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்.

உபா 27:19. பரதேசி திக்கற்றவன் விதவை ஆகிய இவர்களுடைய நியாயத்தைப் புரட்டுகிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்.

உபா 27:20. தன் தகப்பன் மனைவியோடே சயனிக்கிறவன், தன் தகப்பனுடைய மானத்தைத் திறந்தபடியினாலே, சபிக்கப்பட்டவன் என்பார்களாக;ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்.

உபா 27:21. யாதொரு மிருகத்தோடே புணர்ச்சி செய்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்.

உபா 27:22. தன் தகப்பனுக்காவது தாய்க்காவது குமாரத்தியாகிய தன் சகோதரியோடே சயனிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்.

உபா 27:23. தன் மாமியோடே சயனிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்.

உபா 27:24. ஒளிப்பிடத்திலே பிறனைக் கொலைசெய்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்.

உபா 27:25. குற்றமில்லாதவனைக் கொலைசெய்யும் படி பரிதானம் வாங்குகிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்.

உபா 27:26. இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளையெல்லாம் கைக்கொண்டு நடவாதவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று செல்லக்கடவர்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கட்டளையிட்ட பிரகாரமாக, அவர்கள் யோர்தானைக் கடந்து கானான் தேசத்தில் பிரவேசித்த போது, அந்தக் கல்லுகளை ஏபால் மலையிலே நாட்டுகிறார்கள். இஸ்ரவேலின் கோத்திரத்தாருக்கு கானான் தேசம் சுதந்தரமாக பங்கு பிரித்துக்கொடுக்கும்போது, ஏபால் மலை எப்பிராயீம் கோத்திரத்தாருக்கு கொடுக்கப்படுகிறது. யோசுவா எப்பிராயீம் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

ஏபால் மலைக்கு அருகாமையில் கெரிசீம் மலை இருக்கிறது. இவ்விரண்டு மலைகளும் ஒன்றுக்கொன்று அருகாமையில் இருக்கிறது. இவ்விரண்டு மலைகளுக்கும் நடுவே ஒரு பள்ளத்தாக்கு இருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் யோர்தானைக் கடந்து, கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, அவர்கள் இந்த மலைகளுக்கு அருகாமையில் வந்து நிற்கவேண்டும் என்று மோசே கட்டளையிடுகிறார். இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரில் ஆறு கோத்திரத்தார் கெரிசீம் மலையிலும், மீதமுள்ள ஆறு கோத்திரத்தார் ஏபால் மலையிலும் நிற்கவேண்டும் என்பது மோசேயின் கட்டளை.

மேலும் அந்நாளிலே மோசே ஜனங்களை நோக்கி, "நீங்கள் யோர்தானைக் கடந்தபின்பு, ஜனங்கள் ஆசீர்வதிக்கப்படும்படி கெரிசீம் மலையில் சிமியோன், லேவி, யூதா, இசக்கார், யோசேப்பு, பென்யமீன் என்னும் கோத்திரங்கள் நிற்கவேண்டும். சாபங்கூறப்படும்பொருட்டு ஏபால் மலையில் ரூபன், காத், ஆசேர், செபுலோன், தாண், நப்தலி என்னும் கோத்திரங்கள் நிற்கவேண்டும்" (உபா 27:11-13) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரில் ஆறு கோத்திரத்தார் கெரிசீம் மலையில் நின்று ஜனங்களுக்கு ஆசீர்வாதத்தைக் கூறுகிறார்கள். மேலும் ஆறு கோத்திரத்தார் ஏபால் மலையில் நின்று ஜனங்களுக்குச் சாபத்தைக் கூறுகிறார்கள். ஜனங்கள் ஏபால் மலையைப் பார்த்து நிற்கும் போது, லேவியரும், ஆசாரியரும் சாபங்களைக் கூறுவார்கள். அதற்கு ஜனங்களெல்லாரும் பிரதியுத்தரமாக ஆமென் என்று சொல்ல வேண்டும்.

ஜனங்கள் கெரிசீம் மலையைப் பார்த்து நிற்கும் போது, லேவியரும், ஆசாரியரும் ஆசீர்வாதங்களைக் கூறுவார்கள். அதற்கு ஜனங்களெல்லாரும் பிரதியுத்தரமாக ஆமென் என்று சொல்ல வேண்டும். அதன்பின்பு, கற்கள் அங்கு கொண்டுவரப்பட்டு, அதனால் பலிபீடம் கட்டப்படும். அந்தக் கற்களில் ஆசீர்வாதங்களையும், சாபங்களையும் எழுதுவார்கள். அதன்பின்பு, அந்தப் பலிபீடத்தில் பலிகள் செலுத்தப்படும்.

லேயாளின் குமாரரையும், ராகேலின் குமாரரையும் மோசே ஆசீர்வாத மலைக்கு அனுப்புகிறார். லேயாளின் மூத்த குமாரனாகிய ரூபனும், இளைய குமாரனாகிய செபுலோனும் ஆசீர்வாத மலைக்கு அனுப்பப்படாமல் சாபத்தைக் கூறும் ஏபால் மலைக்கு அனுப்பப்படுகிறார்கள். லேயாள், ராகேல் ஆகியோரின் வேலைக்காரிகளின் குமாரர்கள் சாபத்தைக் கூறுவதற்காக ஏபால் மலைக்கு அனுப்பப்படுகிறார்கள். லேயாளின் குமாரரில் செபுலோன் கடைசியானவன். ரூபன் தன் தகப்பனுடைய மனைவியோடு பாவம் செய்தவன். ஆகையினால் இவர்கள் சாபத்தைக் கூறும் மலைக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும் (ஆதி *35:22;* ஆதி *49:3-4;* 1நாளா. *5:1-2).*

கெரிசீம் மலையும் ஏபால் மலையும் ஒன்றுக்கொன்று எதிர் எதிரே இருக்கிறது. அந்த மலைகளிலிருக்கிற இஸ்ரவேல் கோத்திரத்தாரும் ஒருவருக்கொருவர் எதிர் எதிரே இருக்கிறார்கள். இஸ்ரவேலின் ஆறு கோத்திரத்தார் ஒரு மலையிலும், அவர்களுக்கு எதிரே இஸ்ரவேலின் மீதியான ஆறு கோத்திரத்தாரும் அடுத்த மலையிலும் நிற்கிறார்கள்.

இஸ்ரவேல் சபையார் எல்லோரும் அமைதியாக நிற்கிறார்கள். அப்பொழுது லேவியர் உரத்த சத்தமிட்டு, இஸ்ரவேல் மனிதர் எல்லோரையும் பார்த்து, சாபமான வார்த்தைகளை சொல்லுகிறார்கள். இந்த வசனப்பகுதியில், இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே யாரெல்லாம் சபிக்கப்பட்டவர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வாக்கியங்களை லேவியர் உரத்த சத்தமிட்டு, இஸ்ரவேல் மனிதர் எல்லோரையும் பார்த்து சொல்லுகிறார்கள்.

அப்பொழுது ஏபால் மலையிலும், அதன் அடிவாரத்திலும் நிற்கிற, ரூபன், காத், ஆசேர், செபுலோன், தாண், நப்தலி என்னும் ஆறு கோத்திரங்களை சேர்ந்தவர்கள், "ஆமென்" என்று சொல்லவேண்டும்.

லேவியர்கள் உரத்த சத்தமிட்டு இஸ்ரவேல் மனிதர் எல்லாரையும் பார்த்து ஆசீர்வாதமான வார்த்தைகளை சொல்லும்போது, கெரிசீம் மலையிலும், அதன் அடிவாரத்திலும் நிற்கிற, சிமியோன், லேவி, யூதா, இசக்கார், யோசேப்பு, பென்யமீன் என்னும் ஆறு கோத்திரங்களை சேர்ந்தவர்கள், "ஆமென்" என்று சொல்லவேண்டும்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், தம்முடைய தெய்வீக ஞானத்தினாலே, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரில், எந்தக் கோத்திரத்தார் கெரிசீம் மலையிலே நிற்கவேண்டும் என்றும், வேறு எந்தக் கோத்திரத்தார் ஏபால் மலையிலே நிற்கவேண்டும் என்றும் தீர்மானம் செய்திருக்கிறார்.

கெரிசீம் மலையில் சிமியோன், லேவி, யூதா, இசக்கார், யோசேப்பு, பென்யமீன் என்னும் கோத்திரங்கள் நிற்கவேண்டும். ஏபால் மலையில் ரூபன், காத், ஆசேர், செபுலோன், தாண், நப்தலி என்னும் கோத்திரங்கள் நிற்கவேண்டும்.

ஆசீர்வாதம் கூறும்பொருட்டு, கெரிசீம் மலையில் நிற்கிற கோத்திரத்தார் எல்லோரும், சுயாதீனமான ஸ்திரீகளின் பிள்ளைகள். வாக்குத்தத்தம் அவர்களுக்குரியது.

"இப்படியிருக்க, சகோதரரே, நாம் அடிமையானவளுக்குப் பிள்ளைகளாயிராமல், சுயாதீனமுள்ளவர்களுக்கே பிள்ளைகளாயிருக்கிறோம்" (கலா 4:31).

லேவி கோத்திரத்தாரும் கெரிசீம் மலையில் ஆசீர்வதிக்கும்படி நிற்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் ஜனங்களுக்கு கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை உபதேசிக்க வேண்டியவர்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதமும், அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லையென்றால் சாபமும் வரும் என்பதை லேவியர் இஸ்ரவேல் சபையாருக்கு உபதேசம்பண்ணவேண்டும்.

கெரிசீம் மலையில் நிற்கிற ஆறு கோத்திரத்தாரும் ஜனங்களை ஆசீர்வதிக்கும்படி அங்கே நிற்கிறார்கள். ஏபால் மலையில் நிற்கிற மீதமுள்ள ஆறு கோத்திரத்தாரும், ஜனங்களுக்கு சாபம் கூறும்படிக்கு அங்கே நிற்கிறார்கள்.

ஏபால் மலையில் நிற்கிற ஆறு கோத்திரத்தாரும் சபிக்கப்பட்டவர்கள் என்று சொல்ல முடியாது. கர்த்தர் அவர்களை சாபத்திற்கு நியமிக்கவில்லை. யாரெல்லாம் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவில்லையோ அவர்கள் மாத்திரமே சபிக்கப்பட்டவர்கள். ஏபால் மலையில் நிற்கிற ஜனங்கள், சாபமான வார்த்தைகளைச் சொன்னாலும், அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்தைக் கைக்கொள்ளும்போது, அவர்கள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

அதுபோலவே கெரிசீம் மலையில் நிற்கிற ஆறுகோத்திரத்தாரும், அந்த மலையில் நிற்பதினாலோ அல்லது அவர்கள் ஜனங்களுக்கு ஆசீர்வாதமான வார்த்தைகளை சொல்லுவதினாலோ, அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவதில்லை. அவர்கள் கெரிசீம் மலையில் நின்றாலும், கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்தால் மாத்திரமே, அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவில்லையென்றால், அவர்கள் கெரிசீம் மலையில் நின்றாலும், அவர்கள் ஜனங்களுக்கு ஆசீர்வாதமான வார்த்தைகளைச் சொன்னாலும், அவர்கள் சபிக்கப்பட்டவர்களாகவே இருப்பார்கள்.

இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரும், கெரிசீம் மலைக்கு முன்பாகவும், ஏபால் மலைக்கு முன்பாகவும் நிற்கும்போது லேவியர் உரத்த சத்தமாய் இஸ்ரவேல் மனிதர் எல்லோரையும் பார்த்து ஆசீர்வாதமான வார்த்தைகளையும், சாபமான வார்த்தைகளையும் சொல்லுகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய ஆசீர்வாதங்களையும் சாபங்களையும் இஸ்ரவேல் ஜனங்களுக்கு அறிவிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

லேவியர்கள் ஆசீர்வாதமான வார்த்தைகளையும், சாபமான வார்த்தைகளையும் சொன்னாலும், அவர்களும் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவேண்டும். அப்போதுதான் லேவியர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். லேவியர்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவில்லையென்றால், அவர்களும் சபிக்கப்பட்டவர்களாகவே இருப்பார்கள்.

இந்த அதிகாரத்தில் சாபமான வார்த்தைகள் மாத்திரமே சொல்லப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே யாரெல்லாம் சபிக்கப்பட்டவர்கள் என்பதை லேவியர்கள் உரத்த சத்தமிட்டு சொல்லுகிறார்கள். அப்போது ஏபால் மலையில் நிற்கிற ஆறு கோத்திரத்தார் மாத்திரமே "ஆமென்" என்று சொல்லி, லேவியரின் வார்த்தைகளை அங்கீகரிக்கிறார்கள்.

இந்த அதிகாரத்தில் ஆசீர்வாதமான வார்த்தைகள் ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆகையினால் கெரிசீம் மலையில் நிற்கிற ஆறு கோத்திரத்தாரும், ஒன்றும் சொல்லாமல் அமைதியாய் நிற்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் மலைப்பிரசங்கத்தில் ஆசீர்வாதமான வார்த்தைகள் மாத்திரமே சொல்லப்பட்டிருக்கிறது (மத் 5:3-11). கிறிஸ்துவானவர் பிரசங்கம்பண்ணின மலை கெரிசீம் மலைக்கு ஒப்பாயிருக்கிறது.

லேவியர் இஸ்ரவேல் மனிதர் எல்லோரையும் பார்த்து, உரத்த சத்தமிட்டு, சாபமான வார்த்தைகள் ஒவ்வொன்றாய்ச் சொல்லுகிறார்கள். அவர்கள் ஒவ்வொரு முறையும் சாபமான வார்த்தைகளைச் சொல்லும்போது, இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் "ஆமென்" என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே சாபமான வார்த்தைகள் சொல்லப்படும்போது, அந்த வார்த்தைகளுக்கு பிரதியுத்தரமாக "ஆமென்" என்று சொல்லுவது மிகவும் கடினமான காரியம். பொதுவாக சாபமான வார்த்தைக்கு யாரும் "ஆமென்" என்று சொல்லமாட்டார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோருக்கும் முன்பாக சாபமான வார்த்தைகள் சொல்லப்படும்போது, ஜனங்கள் "ஆமென்" என்று சொல்லுகிறார்கள்.

இந்த வசனப்பகுதியில் லேவியர் சொல்லுகிற சாபமான காரியங்களை செய்கிறவர்கள் நிச்சயமாகவே சபிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். அவர்கள் சபிக்கப்பட்டவர்களாயிருக்க வேண்டும் என்பது தேவனுடைய நீதி. இஸ்ரவேல் ஜனத்தார், சாபமான வார்த்தைகளுக்கு "ஆமென்" என்று சொல்லும்போது, தாங்கள் அதுபோல சபிக்கப்பட்டவர்களாக இருக்கக்கூடாது என்பதை இருதயத்தில் உணர்ந்து, "ஆமென்" என்று சொல்லுகிறார்கள்.

யாரெல்லாம் சபிக்கப்பட்டவர்கள் என்பதை லேவியர் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே சத்தமிட்டு சொல்லுகிறார்கள். பாவம் செய்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்கள்.

லேவியர் இஸ்ரவேல் மனிதர் எல்லாரையும் பார்த்து, "கர்த்தருக்கு அருவருப்பான காரியமாகிய தொழிலாளிகளுடைய கைவேலையால் செய்யப்பட்டதும் வார்ப்பிக்கப்பட்டதுமான யாதொரு விக்கிரகத்தை உண்டுபண்ணி ஒளிப்பிடத்திலே வைக்கிறவன் சபிக்கப்பட்டவன்" (உபா 27:15) என்று சொல்லுகிறார்கள். இது இரண்டாவது கட்டளைக்கு விரோதமான பாவம்.

கர்த்தருடைய பட்டயம், அவருடைய இரண்டாவது கட்டளையை மீறுகிறவர்களுக்கு விரோதமாக நீட்டப்படுகிறது. விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள் மாத்திரமல்ல, அவைகளை உண்டுபண்ணுகிறவர்களும், அவைகளை ஒளிப்பிடங்களிலே வைக்கிறவர்களும் சபிக்கப்பட்டவர்கள்.

"தன் தகப்பனையும் தன் தாயையும் தூஷிக்கிறவன் சபிக்கப்பட்டவன்" (உபா 27:16) என்பது ஐந்தாவது கட்டளைக்கு விரோதமான பாவம். தன்னுடைய தகப்பனையும் தாயையும் தூஷிக்கிறவன், வெகுசீக்கிரத்திலே, தன்னுடைய தேவனாகிய கர்த்தரையும் தூஷித்துவிடுவான்.

எட்டாவது கட்டளைக்கு விரோதமான பாவம் அடுத்ததாக சொல்லப்படுகிறது. "பிறனுடைய எல்லைக்குறியை ஒற்றிப்போடுகிறவன் சபிக்கப்பட்டவன்" (உபா 27:17).

மோசே இந்தப் பிரமாணத்தை ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் தேசத்தில் உன்கைவசமாயிருக்கும் காணியாட்சியிலே முன்னோர்கள் குறித்திருக்கிற பிறனுடைய எல்லையை ஒற்றிப்போடாயாக" (உபா 19:14).

அநீதியான ஆலோசனை சொல்லுகிறவர்கள், நியாயத்தைப் புரட்டுகிற நியாயாதிபதிகள் ஆகியோர் சபிக்கப்பட்டவர்களாகயிருப்பார்கள். "குருடனை வழிதப்பச்செய்கிறவன் சபிக்கப்பட்டவன்" (உபா 27:18). "பரதேசி திக்கற்றவன் விதவை ஆகிய இவர்களுடைய நியாயத்தைப் புரட்டுகிறவன் சபிக்கப்பட்டவன்" (உபா 27:19).

ஏழாவது கட்டளைக்கு விரோதமான பாவம் அடுத்ததாக சொல்லப்படுகிறது. வேசித்தனம், விபசாரம், இயற்கைக்கு மீறின புணர்ச்சி ஆகியவை பாவமான காரியங்களாகும். இந்தப் பாவங்களை செய்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்களாயிருப்பார்கள்.

"தன் தகப்பன் மனைவியோடே சயனிக்கிறவன், தன் தகப்பனுடைய மானத்தைத் திறந்தபடியினாலே, சபிக்கப்பட்டவன்" (உபா 27:20). "யாதொரு மிருகத்தோடே புணர்ச்சி செய்கிறவன் சபிக்கப்பட்டவன்" (உபா 27:21). "தன் தகப்பனுக்காவது தாய்க்காவது குமாரத்தியாகிய தன் சகோதரியோடே சயனிக்கிறவன் சபிக்கப்பட்டவன்" (உபா 27:22). "தன் மாமியோடே சயனிக்கிறவன் சபிக்கப்பட்டவன்" (உபா 27:23).

ஆறாவது கட்டளைக்கு விரோதமான பாவம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. மோசே இரண்டுவிதமான கொலைப்பாதகத்தைப்பற்றி சொல்லுகிறார். அவையாவன :
1. ஒளிப்பிடத்திலே பிறனை கொலைசெய்வது.
2. குற்றமில்லாதவனை கொலைசெய்யும்படி பரிதானம் வாங்குவது.

பிறனை ஒளிப்பிடத்திலே கொலைசெய்கிறவன் அக்கிரமக்காரனாயிருக்கிறான். கொலை செய்யப்படுகிறவனுக்கு, தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வாய்ப்பு கிடைக்கவில்லை. ஒருவேளை செத்துப் போனவனுக்கு தெரியாமல், அவனுக்கு விஷம் கொடுத்திருக்கலாம். தன்னை கொன்றவன் யார் என்பதுகூட செத்துப்போனவனுக்கு தெரியாமலிருக்கலாம்.

"கிராமங்களின் ஒளிப்பிடங்களிலே பதிவிருந்து, மறைவிடங்களிலே குற்றமற்றவனைக் கொல்லுகிறான்; திக்கற்றவர்களைப் பிடிக்க அவன் கண்கள் நோக்கிக்கொண்டிருக்கிறது. தன்கெபியிலிருக்கிற சிங்கத்தைப்போல மறைவில் பதிவிருக்கிறான்; ஏழையைப் பிடிக்க பதிவிருந்து, ஏழையைத் தன் வலைக்குள் இழுத்துப் பிடித்துக்கொள்ளுகிறான்" (சங் 10:8,9).

குற்றமில்லாதவனை கொலைசெய்யும்படி பரிதானம் வாங்குகிறவன், சட்டத்தின் பெயரால் அவனைக் கொன்றுபோடுகிறான். பரிதானம் வாங்குவது கர்த்தருக்கு விரோதமான பாவம். தாங்கள் வாங்குகிற பரிதானத்திற்காக, இவர்கள் நீதியைப் புரட்டுகிறார்கள். குற்றமில்லாத இரத்தத்தை சிந்துகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் சபிக்கப்பட்டவர்கள் என்று மோசே சொல்லுகிறார்.

"தன் பணத்தை வட்டிக்குக்கொடாமலும், குற்றமில்லாதவனுக்கு விரோதமாய்ப் பரிதானம் வாங்காமலும் இருக்கிறான். இப்படிச் செய்கிறவன் என்றென்றைக்கும் அசைக்கப்படுவதில்லை" (சங் 15:5).

லேவியர் உரத்த சத்தமாய் சாபமான வார்த்தைகள் ஒவ்வொன்றாக சொல்லுகிறார்கள். முடிவிலே "இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளையெல்லாம் கைக்கொண்டு நடவாதவன் சபிக்கப்பட்டவன்" (உபா 27:26) என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படியவேண்டும். அவர்கள் நியாயப்பிரமாண வார்த்தைகளையெல்லாம் கைக்கொண்டு நடக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தைக்கு நாம் கீழ்ப்படிந்தால் நமக்கு ஆசீர்வாதமும், நாம் கீழ்ப்படியவில்லையென்றால் நமக்கு சாபமும் வரும்.

"நீதியைச் செய்யக் கர்த்தருக்கு வேளை வந்தது; அவர்கள் உம்முடைய நியாயப்பிரமாணத்தை மீறினார்கள்" (சங் 119:126).

சாபங்களை வருவிக்கும் பாவங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. கர்த்தருக்கு அருவருப்பான காரியமாகிய தொழிலாளிகளுடைய கைவேலையால் செய்யப்பட்டதும் வார்ப்பிக்கப்பட்டதுமான யாதொரு விக்கிரகத்தை உண்டுபண்ணி ஒளிப்பிடத்திலே வைப்பது(யாத் 20:4-7)

2. தன் தகப்பனையும் தன் தாயையும் தூஷிப்பது (உபா. 27:16; உபா. 21:18-21; யாத் 20:12; யாத் 21:17; லேவி 19:3).

3. பிறனுடைய எல்லைக்குறியை ஒற்றிப் போடுவது. (உபா. 27:17; உபா. 19:14).

4. குருடனை வழிதப்பச்செய்வது. (உபா. 27:18; உபா 27:18; லேவி 19:14)

5. பரதேசி திக்கற்றவன் விதவை ஆகிய இவர்களுடைய நியாயத்தைப் புரட்டுவது, (உபா. 27:19; உபா. 10:18; உபா. 14:29; உபா. 16:11,14; உபா 24:17-21; உபா 26:12-13; யாத் 22:22-24)

6. தன் தகப்பன் மனைவியோடே சயனிப்பது. (உபா. 27:20; உபா. 22:30; லேவி 18:8; லேவி 20:11; 2கொரி. 5).

7. யாதொரு மிருகத்தோடே புணர்ச்சி செய்வது. (உபா . 27:21; யாத் 22:19; லேவி 18:23; லேவி 20:15).

8. தன் சகோதரியோடே சயனிப்பது. (உபா. 27:22; லேவி 18:9; லேவி 20:17).

9. தன் மாமியோடே சயனிப்பது. (உபா. 27:23; லேவி 18:17; லேவி 20:14).

10. பிறனைக் கொலைசெய்வது. (உபா. 27:24; யாத் 20:13; யாத் 21:12).

11. பரிதானம் வாங்குவது. (உபா. 27:25; உபா. 10:17; உபா. 16:19; யாத் 23:7-8; சங் 15:5).

12. கர்த்தருக்கும், அவருடைய வார்த்தைக்கும் எதிராகக் கலகம் பண்ணுவது. (உபா. 27:26; உபா. 5:1; உபா. 6:3-25; உபா. 11:22).

28 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் பிரவேசித்த பின்பு அவர்களுக்கு ஆசீர்வாதமான வார்த்தைகளையும், சாபமான வார்த்தைகளையும் சொல்லவேண்டும் என்று மோசே சொன்னார். இந்த அதிகாரத்தில் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொல்லவேண்டிய ஆசீர்வாதமான வார்த்தைகளும், சாபமான வார்த்தைகளும் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்தால் அவர்களுக்கு ஆசீர்வாதம் வரும். கர்த்தருடைய வார்த்தைக்கு தனிநபராக கீழ்ப்படியும்போது, அந்த தனிநபருக்கு ஆசீர்வாதம் கிடைக்கும். இஸ்ரவேல் புத்திரருடைய ஒரு குடும்பத்தார் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியும்போது, அந்தக் குடும்பத்திற்கு ஆசீர்வாதம் வரும். இஸ்ரவேல் தேசம் முழுவதும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியும்போது, அந்த தேசம் முழுவதும் ஆசீர்வதிக்கப்படும் (உபா 28:1-14).

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவில்லையென்றால் அவர்களுக்கு சாபம் வரும். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு வரும் பலவிதமான சாபங்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது (உபா 28:15-44).

இஸ்ரவேல் புத்திரருக்கு சாபம் அதிகரிக்கும்போது, முடிவிலே அவர்களுக்கு அழிவு வரும் (உபா 28:45-68).

லேவியராகமம் 26-ஆவது அதிகாரத்தில் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஜீவனையும் மரணத்தையும், நன்மையையும் தீமையையும் வாக்குப்பண்ணுகிறார். உபாகமம் புஸ்தகத்தின் இந்த அதிகாரத்தில், லேவியராகமத்தில் சொல்லப்பட்டதுபோல, ஆசீர்வாதமும் சாபமும் சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரோடு ஒப்புரவானால், அவர்களுடைய சாபம் ஆசீர்வாதமாக மாறும். இதுபற்றி உபாகமம் 30-ஆவது அதிகாரத்தில் மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆசீர்வாதங்கள்
உபா 28:1-14

உபா 28:1. இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும்படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்.

உபா 28:2. நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்துக்குச் செவிகொடுக்கும்போது, இப்பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் உன்மேல் வந்து உனக்குப் பலிக்கும்.

உபா 28:3. நீ பட்டணத்திலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்; வெளியிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்.

உபா 28:4. உன் கர்ப்பத்தின் கனியும், உன் நிலத்தின் கனியும், உன் மாடுகளின் பெருக்கமும், உன் ஆடுகளின் மந்தைகளுமாகிய உன் மிருகஜீவன்களின் பலனும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.

உபா 28:5. உன் கூடையும், மாப்பிசைகிற உன் தொட்டியும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.

உபா 28:6. நீ வருகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய், நீ போகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்.

உபா 28:7. உனக்கு விரோதமாய் எழும்பும் உன் சத்துருக்களைக் கர்த்தர் உனக்கு முன்பாக முறிய அடிக்கப்படும்படி ஒப்புக்கொடுப்பார்; ஒரு வழியாய் உனக்கு எதிராகப் புறப்பட்டு வருவார்கள்; ஏழு வழியாய் உனக்கு முன்பாக ஓடிப்போவார்கள்.

உபா 28:8. கர்த்தர் உன் களஞ்சியங்களிலும், நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார்; உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்திலே உன்னை ஆசீர்வதிப்பார்.

உபா 28:9. நீ உன் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொண்டு, அவர் வழிகளில் நடக்கும்போது, கர்த்தர் உனக்கு ஆணையிட்டபடியே, உன்னைத் தமக்குப் பரிசுத்த ஜனமாக நிலைப்படுத்துவார்.

உபா 28:10. அப்பொழுது கர்த்தருடைய நாமம் உனக்குத் தரிக்கப்பட்டது என்று பூமியின் ஜனங்களெல்லாம் கண்டு, உனக்குப் பயப்படுவார்கள்.

உபா 28:11. உனக்குக் கொடுப்பேன் என்று கர்த்தர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தில், கர்த்தர் உன் கர்ப்பத்தின் கனியிலும், உன் மிருகஜீவன்களின் பலனிலும், உன் நிலத்தின் கனியிலும் உனக்குப் பரிபூரண நன்மை உண்டாகக் கட்டளையிடுவார்.

உபா 28:12. ஏற்றகாலத்தில் உன் தேசத்திலே மழை பெய்யவும், நீ கையிட்டுச்செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும், கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தைத் திறப்பார்; நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன்கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய்.

உபா 28:13. இன்று நான் உங்களுக்கு விதிக்கிற வார்த்தைகள் யாவையும் விட்டு விலகிவேறே தேவர்களைச் சேவிக்கும்படி, நீ வலதுபுறம் இடதுபுறம் சாயாமல்,

உபா 28:14. இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி நடக்கவும் அவைகளுக்குச் செவிகொடுத்துவந்தால், கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார், நீ கீழாகாமல் மேலாவாய்.

இஸ்ரவேல் புத்திரருக்கு சாபமான வார்த்தைகள் சொல்லப்படுவதற்கு முன்பாக, ஆசீர்வாதமான வார்த்தைகள் சொல்லப்படுகிறது. கர்த்தர் நீடிய பொறுமையுள்ளவர். அவர் கிருபையும் இரக்கமுமுள்ளவர். நாம் பாவம் செய்து மரித்துப்போகவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமல்ல. நாம் அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து ஜீவனோடிருக்கவேண்டும் என்பதே கர்த்தருடைய சித்தம்.

நாம் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியும்போது அவர் நம்மீது அதிகமாய்ப் பிரியப்படுகிறார். கர்த்தருடைய நன்மைகளையும், ஈவுகளையும் பெற்றுக்கொள்கிற நாம், அவருக்கு பிரியமானவர்களாகவும், பிரயோஜனமானவர்களாகவும் இருக்கவேண்டும். இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்கு பிரியமானது. ஆகையினால் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சாபமான வார்த்தைகள் சொல்லப்படுவதற்கு முன்பாகவே ஆசீர்வாதமான வார்த்தைகள் சொல்லப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய மிகவும் கவனமாயிருக்கவேண்டும். அப்போது கர்த்தருடைய ஆசீர்வாதம் அவர்களுக்கு கிடைக்கும்.

மோசே இதுபற்றி இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொல்லும்போது, "இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும்படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்" (உபா 28:1) என்று சொல்லுகிறார்.

பரிசுத்த வேதாகமத்தில் 1,595 இடங்களில் "-ஆல்" **if's** என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது நிபந்தனையைக் குறிக்கும் வார்த்தை. கர்த்தர் ஒரு மனுஷனை நிபந்தனையுடன் ஆசீர்வதிக்கிறார். நிபந்தனையுடன் சபிக்கிறார். வேதாகமத்தில் நிபந்தனையற்ற உடன்படிக்கை, நிபந்தனையற்ற வாக்குத்தத்தம், நிபந்தனையற்ற ஆசீர்வாதம் என்று எதுவுமில்லை. கீழ்ப்படியாமைக்குச் சாபமும், கீழ்ப்படிவதற்கு ஆசீர்வாதமும் வேதாகமத்தில் பல வசனங்களில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. (உபா. 27:14-26; உபா. 28:1-58; லேவி 26; ஏசா 58) தம்முடைய கற்பனைகளை மீறுகிறவர்களைக் கர்த்தர் ஆசீர்வதிக்கமாட்டார்.

கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு சில நிபந்தனைகள் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடுக்க வேண்டும். (உபா. 28:1-2,9,13,15).

2. கர்த்தருடைய கற்பனைகளின்படியெல்லாம் செய்ய கவனமாயிருக்க வேண்டும். (உபா. 28:1,13,15).

3. கர்த்தருடைய வழிகளில் நடக்க வேண்டும். (உபா. 28:9).

4. கர்த்தருடைய வார்த்தையைவிட்டு வலதுபுறம், இடதுபுறம் சாயக்கூடாது. (உபா. 28:13,14).

5. வேறே தேவர்களைச் சேவிக்கும்படி அவற்றைப் பின்பற்றக்கூடாது. (உபா. 28:13).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்யும்போது, அவர்களுடைய ஜீவியத்தின் எல்லா பகுதிகளும் ஆசீர்வாதமாயிருக்கும். "நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்துக்குச் செவிகொடுக்கும்போது, இப்பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் உன்மேல் வந்து உனக்குப் பலிக்கும்" (உபா 28:2) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

கர்த்தருக்கு கீழ்ப்படிகிறவர்களை அவருடைய ஆசீர்வாதங்கள் ஆளுகை செய்யும். தீங்கு அவர்களை அணுகாது. கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் எல்லாம் அவர்கள்மீது தங்கியிருப்பதினால், அவர்கள் தீமைகளை காணமாட்டார்கள். அவர்கள் தீங்குக்கு விலக்கியிருப்பார்கள்.

"அப்பொழுது, நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்குப் போஜனங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவராகக்கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்?" (மத் 25:37).

மகாநாளின் நியாயத்தீர்ப்பின்போது, நீதிமான்கள்மேல் கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் தங்கியிருக்கும். அவர்கள் நன்மையை மாத்திரமே காண்பார்கள். தீமையைக் காணமாட்டார்கள்.

தம்முடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்கிற இஸ்ரவேல் புத்திரர்மீது, கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் வந்து தங்கியிருக்கும். கர்த்தர் அவர்களுடைய ஜீவியத்தின் எல்லா பகுதிகளையும் ஆசீர்வதிப்பார். அவர்கள் எங்கு போனாலும், எங்கே இருந்தாலும் பாதுகாப்பாயிருப்பார்கள். அவர்கள் இருக்கும் இடங்களில், கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் அவர்களுக்கு தங்கியிருக்கும். அவர்கள் பட்டணங்களில் இருந்தாலும், வயல் வெளிகளிலிருந்தாலும், கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் அவர்களோடு கூடயிருக்கும்.

"நீ பட்டணத்திலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்; வெளியிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்" (உபா 28:3) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பராமரிப்பினால் பாதுகாப்பாயிருப்பார்கள். அவர்கள் பாதுகாப்பாயிருந்தால்தான், அவர்களுடைய காரியங்கள் அவர்களுக்கு சித்திக்கும். அவர்கள் செல்லும் இடங்களிலெல்லாம், அவர்களுக்கு ஜெயம் கிடைக்கும். கர்த்தர் அவர்களுடைய கைகளின் பிரயாசங்களை ஆசீர்வதிப்பார்.

தம்முடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிகிற பிள்ளைகளையும், அவர்களுடைய குடும்பங்களையும் கர்த்தர் ஆசீர்வதிப்பார். அவர்கள் தங்கள் குடும்பங்களை கட்டியெழுப்புவார்கள். அவர்களுடைய குடும்பத்தார் திரளான எண்ணிக்கையில் பெருகியிருப்பார்கள்.

"உன் கர்ப்பத்தின் கனியும், உன் நிலத்தின் கனியும், உன் மாடுகளின் பெருக்கமும், உன் ஆடுகளின் மந்தைகளுமாகிய உன் மிருகஜீவன்களின் பலனும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்" (உபா 28:4) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

கர்த்தருக்கு கீழ்ப்படிகிறவர்கள் ஐசுவரியவான்களாயிருப்பார்கள். அவர்கள் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிக்கும் காலமெல்லாம், அவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது. அவர்கள் ஜீவியத்தில் நன்மையான எல்லா ஈவுகளும் திரளாயிருக்கும். அவர்களுடைய கூடையும், மா பிசைகிற அவர்களுடைய தொட்டியும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் (உபா 28:5) என்று மோசே சொல்லுகிறார்.

கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறவர்கள், தங்கள் வீடுகளுக்கு வெளியிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள். அவர்கள் தங்கள் வீடுகளுக்குள்ளேயும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள். தானியம், ஆடுமாடுகள் ஆகியவை வீட்டிற்கு வெளியே வயல்வெளிகளில் இருக்கும். இவையெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்.

"உனக்குக் கொடுப்பேன் என்று கர்த்தர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தில், கர்த்தர் உன் கர்ப்பத்தின் கனியிலும், உன் மிருகஜீவன்களின் பலனிலும், உன் நிலத்தின் கனியிலும் உனக்குப் பரிபூரண நன்மை உண்டாகக் கட்டளையிடுவார்" (உபா 28:11) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

கர்த்தருக்கு கீழ்ப்படிகிற இஸ்ரவேல் புத்திரரின், மாடுகளும் ஆடுகளும் திரளான எண்ணிக்கையில் பெருகும். இவையெல்லாம் அவர்களுடைய வீட்டிற்கு வெளியே இருக்கும் ஆசீர்வாதங்கள். அவர்கள் தங்கள் வீட்டிற்கு வெளியே ஆசீர்வதிக்கப்படுவதுபோல, தங்கள் வீட்டிற்குள்ளேயும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள். அவர்களுடைய கூடைகள், மா பிசைகிற தொட்டிகள் ஆகியவை அவர்களுடைய வீட்டிற்குள்ளே இருப்பவை. கர்த்தர் அவர்களுடைய வீட்டிற்குள்ளே இருக்கும் கூடையையும், மா பிசைகிற தொட்டியையும் ஆசீர்வதிப்பார்.

"கர்த்தர் உன் களஞ்சியங்களிலும், நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார்; உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்திலே உன்னை ஆசீர்வதிப்பார்" (உபா 28:8) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

நாம் ஒவ்வொரு நாளும், நம்முடைய போஜனத்திற்கும் ஜீவனத்திற்கும், கர்த்தரையும் அவருடைய ஆசீர்வாதங்களையும் நம்பியிருக்கிறோம். ஒவ்வொரு வருஷமும் நமக்கு நிலத்திலிருந்து தானியம் வரவேண்டும். நமக்கு அன்றாட அப்பங்களும் கிடைக்கவேண்டும். நம்முடைய மா பிசைகிற தொட்டியும், கூடையும், களஞ்சியங்களும் அன்றாடம் ஆசீர்வதிக்கப்படும்போது, நமக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியும்போது, கர்த்தர் அவர்களுடைய கைகளின் பிரயாசங்களையெல்லாம் ஆசீர்வதிப்பார். "ஏற்றகாலத்தில் உன் தேசத்திலே மழை பெய்யவும், நீ கையிட்டுச்செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும், கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தைத் திறப்பார்; நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன்கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய்" (உபா 28:12) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர், தங்களுடைய அண்டை தேசத்தாரைவிட கனத்திலும் மேன்மையிலும் உயர்ந்திருப்பார்கள். "உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்" (உபா 28:1) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் எவ்வாறு மேன்மையாக வைப்பார் என்பதை மோசே இந்த வசனப்பகுதியில் விரிவாகச் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரருடைய ஐசுவரியம் செழிக்கும். அவர்கள் அநேகம் ஜாதிகளுக்கு கடன் கொடுப்பார்கள். அவர்களோ மற்ற ஜாதியாரிடத்திலிருந்து கடன் வாங்கமாட்டார்கள் (உபா 28:12). அவர்களுடைய அண்டை தேசத்தாரின் ஐசுவரியம், இஸ்ரவேல் புத்திரருடைய கைகளில் வந்து சேரும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை வாலாக்காமல் தலையாக்குவார். அவர்கள் கீழாகாமல் மேலாவார்கள்.

"இன்று நான் உங்களுக்கு விதிக்கிற வார்த்தைகள் யாவையும் விட்டு விலகிவேறே தேவர்களைச் சேவிக்கும்படி, நீ வலதுபுறம் இடதுபுறம் சாயாமல், இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி நடக்கவும் அவைகளுக்குச் செவிகொடுத்துவந்தால், கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார், நீ கீழாகாமல் மேலாவாய்" (உபா 28:13,14) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே கர்த்தருக்கு பயப்படும் பயம் இருக்கவேண்டும். அவர்கள் கர்த்தருடைய கட்டளைகளையும், பிரமாணங்களையும், நியாயங்களையும் கைக்கொள்ளவேண்டும். அப்போது கர்த்தருடைய ஆசீர்வாதம் அவர்கள்மீது தங்கியிருக்கும். இவையெல்லாம் கர்த்தருக்கு பிரியமான காரியங்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரோடு ஒப்புரவாகி, அவருக்கு பிரியமானவர்களாகவும், பிரயோஜனமானவர்களாகவும் ஜீவிக்கும்போது, கர்த்தர் அவர்களை அதிகமாய் ஆசீர்வதிப்பார். அவர்கள் பூமியிலுள்ள சகல ஜாதிகளையும்விட உயர்ந்திருப்பார்கள். இஸ்ரவேல் புத்திரருடைய சேனையின் கொடியைப் பார்த்து சத்துருக்கள் பயப்படுவார்கள்.

இஸ்ரவேலின் சேனை சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு வெற்றியைத் தருவார். எல்லா யுத்தங்களிலும் இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயம் கிடைக்கும்.

மோசே இதுபற்றி இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லும்போது, "உனக்கு விரோதமாய் எழும்பும் உன் சத்துருக்களைக் கர்த்தர் உனக்கு முன்பாக முறிய அடிக்கப்படும்படி ஒப்புக்கொடுப்பார்; ஒரு வழியாய் உனக்கு எதிராகப் புறப்பட்டு வருவார்கள்; ஏழு வழியாய் உனக்கு முன்பாக ஓடிப்போவார்கள்" (உபா 28:7) என்று சொல்லுகிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களை வாக்குப்பண்ணுகிறார். "கர்த்தர் உன் களஞ்சியங்களிலும், நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார்; உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்திலே உன்னை ஆசீர்வதிப்பார்" (உபா 28:8) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

பழைய ஏற்பாட்டு காலத்தில் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லப்பட்ட வாக்குத்தத்தங்களைப்போல, புதிய ஏற்பாட்டுக்காலத்தில் விசுவாசிகளாகிய நமக்கு உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்கள் அதிகமாக வாக்குப்பண்ணப்படவில்லை.

"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்" (மத் 6:33) என்பதே கிறிஸ்துவானவர் விசுவாசிகளாகிய நமக்கு கொடுக்கும் வாக்குத்தத்தம். இந்த வாக்குத்தத்தமே, நம்மை ஆசீர்வதிப்பதற்கு போதுமானதாயிருக்கிறது. கர்த்தர்மீது பக்தியும், அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதும் நம்மிடத்தில் காணப்படும்போது, நம்முடைய ஜீவியத்தில் வெளிப்படையான செழிப்பும், பெருக்கமும் ஆசீர்வாதமும் காணப்படும்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர். இஸ்ரவேல் புத்திரரும் தங்களை பரிசுத்தம்பண்ணவேண்டும். கர்த்தர் இஸ்ரவேலரை தம்முடைய ஜனமாகத் தெரிந்துகொண்டு, அவர்களை தமக்கு பரிசுத்த ஜனமாக நிலைப்படுத்துவார். மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு இதுபற்றிச் சொல்லும்போது,

"நீ உன் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொண்டு, அவர் வழிகளில் நடக்கும்போது, கர்த்தர் உனக்கு ஆணையிட்டபடியே, உன்னைத் தமக்குப் பரிசுத்த ஜனமாக நிலைப்படுத்துவார். அப்பொழுது கர்த்தருடைய நாமம் உனக்குத் தரிக்கப்பட்டது என்று பூமியின் ஜனங்களெல்லாம் கண்டு, உனக்குப் பயப்படுவார்கள்" (உபா 28:9,10) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு, அவற்றின்படி நடக்கும்போது, கர்த்தர் அவர்களை அதிகமாய் ஆசீர்வதிப்பார். மோசே இந்த வசனப்பகுதியில் இஸ்ரவேல் புத்திரருக்கு வரும் ஆசீர்வாதங்களைப்பற்றிச் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

"உனக்குக் கொடுப்பேன் என்று கர்த்தர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தில், கர்த்தர் உன் கர்ப்பத்தின் கனியிலும், உன் மிருகஜீவன்களின் பலனிலும், உன் நிலத்தின் கனியிலும் உனக்குப் பரிபூரண நன்மை உண்டாகக் கட்டளையிடுவார்" (உபா 28:11) என்றும்,

"ஏற்றகாலத்தில் உன் தேசத்திலே மழை பெய்யவும், நீ கையிட்டுச்செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும், கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தைத் திறப்பார்; நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன்கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய்" (உபா 28:12) என்றும்,

"இன்று நான் உங்களுக்கு விதிக்கிற வார்த்தைகள் யாவையும் விட்டு விலகிவேறே தேவர்களைச் சேவிக்கும்படி, நீ வலதுபுறம் இடதுபுறம் சாயாமல், இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி நடக்கவும் அவைகளுக்குச் செவிகொடுத்துவந்தால், கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார், நீ கீழாகாமல் மேலாவாய்" (உபா 28:13,14) என்றும் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியும்போது அவர்களுக்கு கிடைக்கும் ஆசீர்வாதங்களைப்பற்றிய விவரம் வருமாறு:

1. பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார் (உபா. 28:1-2).

2. நீ பட்டணத்தில் ஆசீர்வதிக்கப் பட்டிருப்பாய் (உபா. 28:3).

3. நீ வெளியில் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்.

4. உன் கர்ப்பத்தின் கனி ஆசீர்வதிக்கப் பட்டிருக்கும் (உபா. 28:4).

5. உன் நிலத்தின் கனி ஆசீர்வதிக்கப் பட்டிருக்கும்.

6. உன் மாடுகளின் பெருக்கம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.

7. உன் ஆடுகளின் மந்தைகளுமாகிய உன் மிருகஜீவன்களின் பலன் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கும்.

8. உன் கூடையும், மாப்பிசைகிற உன்தொட்டியும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்(உபா. 28:5,8).

9. நீ வருகையிலும் ஆசீர்வதிக்கப் பட்டிருப்பாய், நீ போகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய் (உபா. 28:6,8).

10. உனக்கு விரோதமாய் எழும்பும் உன் சத்துருக்களைக் கர்த்தர் உனக்கு முன்பாக முறிய அடிக்கப்படும்படி ஒப்புக்கொடுப்பார் (உபா. 28:7).

11. கர்த்தர் உன் களஞ்சியங்களிலும், நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார்.

12. கர்த்தர் உன்னைத் தமக்குப் பரிசுத்த ஜனமாக நிலைப்படுத்துவார் (உபா. 28:9).

13. கர்த்தருடைய நாமம் உனக்குத் தரிக்கப்பட்டது என்று பூமியின் ஜனங்களெல்லாம் காண்பர்கள் (உபா. 28:10).

14. பூமியின் ஜனங்களெல்லாம் கண்டு, உனக்குப் பயப்படுவார்கள்.

15. கர்த்தர் உன் கர்ப்பத்தின் கனியிலும், உன் மிருகஜீவன்களின் பலனிலும், உன் நிலத்தின் கனியிலும் உனக்குப் பரிபூரண நன்மை உண்டாகக் கட்டளையிடுவார் (உபா. 28:11).

16. கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தைத் திறப்பார் (உபா. 28:12).

17. ஏற்றகாலத்தில் உன் தேசத்திலே மழை பெய்யும்.

18. நீ கையிட்டுச்செய்யும் வேலைகளை யெல்லாம் ஆசீர்வதிப்பார்.

19. நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய்.

20. கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார் (உபா. 28:14).

21. நீ கீழாகாமல் மேலாவாய்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியும்போது, அவர்களுக்கு ஒரு சில வாக்குத்தத்தங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. சத்துருக்கள் ஒரு வழியாய் உனக்கு எதிராகப் புறப்பட்டு வருவார்கள்; ஏழு வழியாய் உனக்கு முன்பாக ஓடிப் போவார்கள் (உபா 28:7).

2. ஜனங்களெல்லாம் உனக்குப் பயப்படுவார்கள் (உபா 28:10).

3. கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார், நீ கீழாகாமல் மேலாவாய் (உபா 28:14)

4. உங்களில் ஐந்துபேர் நூறுபேரைத் துரத்துவார்கள். உங்கள் நூறுபேர் பதினாயிரம்பேரைத் துரத்துவார்கள். (லேவி 26:8).

5. உங்களில் ஒருவன் ஆயிரம்பேரைத் துரத்தி, இரண்டுபேர் பதினாயிரம்பேரை ஓட்டுவான். (உபா 32:30; யோசு 23:10; ஏசா 30:17).

சாபங்கள்
உபா 28:15-44

உபா 28:15. இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய எல்லாக் கற்பனைகளின்படியும் கட்டளைகளின்படியும் நடக்கக் கவனமாயிருக்கிறதற்கு, அவர் சத்தத்திற்குச் செவிகொடாதேபோவாயாகில், இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து, உனக்குப் பலிக்கும்.

உபா 28:16. நீ பட்டணத்திலும் சபிக்கப்பட்டிருப்பாய், வெளியிலும் சபிக்கப்பட்டிருப்பாய்.

உபா 28:17. உன் கூடையும், மாப்பிசைகிற உன் தொட்டியும் சபிக்கப்பட்டிருக்கும்.

உபா 28:18. உன் கர்ப்பத்தின் கனியும், உன் நிலத்தின் கனியும், உன் மாடுகளின் பெருக்கமும், உன் ஆடுகளின் மந்தைகளும் சபிக்கப்பட்டிருக்கும்.

உபா 28:19. நீ வருகையிலும் சபிக்கப்பட்டிருப்பாய், நீ போகையிலும் சபிக்கப்பட்டிருப்பாய்.

உபா 28:20. என்னைவிட்டு விலகி நீ செய்துவருகிற உன் துர்க்கிரியைகளினிமித்தம் சீக்கிரத்தில் கெட்டுப்போய் அழியுமட்டும், நீ கையிட்டுச் செய்கிறதெல்லாவற்றிலும் கர்த்தர் உனக்குச் சாபத்தையும் சஞ்சலத்தையும் கேட்டையும் வரப்பண்ணுவார்.

உபா 28:21. நீ சுதந்தரிக்கும் தேசத்தில் கர்த்தர் உன்னை நிர்மூலமாக்குமட்டும் கொள்ளைநோய் உன்னைப் பிடித்துக்கொள்ளப்பண்ணுவார்.

உபா 28:22. கர்த்தர் உன்னை ஈளையினாலும், காய்ச்சலினாலும், உஷ்ணத்தினாலும், எரிபந்தத்தினாலும், வறட்சியினாலும், கருக்காயினாலும், விஷப்பனியினாலும் வாதிப்பார்; நீ அழியுமட்டும் இவைகள் உன்னைப் பின் தொடரும்.

உபா 28:23. உன் தலைக்குமேலுள்ள வானம் வெண்கலமும், உனக்குக் கீழுள்ள பூமி இரும்புமாய் இருக்கும்.

உபா 28:24. உன் தேசத்து மழையைக் கர்த்தர் புழுதியும் மண்ணுமாக பெய்யப்பண்ணுவார்; நீ அழியுமட்டும் அப்படியே வானத்திலிருந்து உன்மேல் இறங்கிவரும்.

உபா 28:25. உன் சத்துருக்களுக்கு முன்பாக நீ முறிய அடிக்கப்படும்படி கர்த்தர் செய்வார்; ஒரு வழியாய் அவர்களுக்கு எதிராகப் புறப்படுவாய், ஏழு வழியாய் அவர்களுக்கு முன்பாக ஓடிப்போவாய்; நீ பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் சிதறுண்டுபோவாய்.

உபா 28:26. உன் பிணம் ஆகாயத்துப் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும்; அவைகளை விரட்டுவாரில்லாதிருப்பார்கள்.

உபா 28:27. நீ குணமாகாதபடி கர்த்தர் உன்னை எகிப்தின் எரிபந்தமான பருக்களினாலும், மூலவியாதியினாலும், சொறியினாலும், சிரங்கினாலும் வாதிப்பார்.

உபா 28:28. கர்த்தர் உன்னைப் புத்திமயக்கத்தினாலும், குருட்டாட்டத்தினாலும், மனத்திகைப்பினாலும் வாதிப்பார்.

உபா 28:29. குருடன் அந்தகாரத்திலே தடவித்திரிகிறதுபோல, நீ பட்டப்பகலிலே தடவிக்கொண்டுதிரிவாய்; உன் வழிகளில் ஒன்றும் உனக்கு வாய்க்காதேபோம்; உதவிசெய்வாரில்லாமல் நீ எந்நாளும் ஒடுக்கப்படுகிறவனும் பறிகொடுக்கிறவனுமாய் இருப்பாய்.

உபா 28:30. பெண்ணை உனக்கு நியமிப்பாய், வேறொருவன் அவளுடன் சயனிப்பான்; வீட்டைக் கட்டுவாய், அதிலே குடியிருக்கமாட்டாய்; திராட்சத்தோட்டத்தை நாட்டுவாய், அதின் பலனை அனுபவிக்கமாட்டாய்.

உபா 28:31. உன் மாடுகள் உன் கண்களுக்கு முன்பாக அடிக்கப்படும், நீ அதில் ஒன்றும் புசிப்பதில்லை; உன் கழுதை உனக்கு முன்பாகக் கொள்ளையிட்டுக் கொண்டுபோகப்பட்டு, உனக்குத் திரும்ப அகப்படாமற்போம்; உன் ஆடுகள் உன் சத்துருக்களுக்குக் கொடுக்கப்படும், விடுவிப்பார் ஒருவரும் உனக்கு இல்லாதிருப்பார்கள்.

உபா 28:32. உன் குமாரரும் உன் குமாரத்திகளும் அந்நிய ஜனங்களுக்கு ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்; அவர்களைக் காண உன் கண்கள் நாடோறும் பார்த்துப் பார்த்துப் பூத்துப்போம்; உன் கையில் பெலனில்லாதிருக்கும்.

உபா 28:33. உன் நிலத்தின் கனியையும், உன் பிரயாசத்தின் எல்லாப் பலனையும் நீ அறியாத ஜனங்கள் புசிப்பார்கள்; நீ சகல நாளும் ஒடுக்கப்பட்டும் நொறுக்கப் பட்டும் இருப்பாய்.

உபா 28:34. உன் கண்கள் காணும் காரியங்களினாலே மதிமயங்கிப்போவாய்.

உபா 28:35. உன் உள்ளங்கால் தொடங்கி உன் உச்சந்தலைமட்டும் குணமாகாதபடிக்கு, கர்த்தர் உன்னை முழங்கால்களிலும் தொடைகளிலும் கொடிய எரிபந்தப் பருக்களினாலே வாதிப்பார்.

உபா 28:36. கர்த்தர் உன்னையும், உனக்காக நீ ஏற்படுத்திக்கொண்ட ராஜாவையும், நீயும் உன் பிதாக்களும் அறியாத ஜாதிகளிடத்துக்குப் போகப்பண்ணுவார்; அங்கே நீ மரமும் கல்லுமான அந்நிய தேவர்களைச் சேவிப்பாய்.

உபா 28:37. கர்த்தர் உன்னைக் கொண்டுபோய் விடும் எல்லா ஜனங்களுக்குள்ளும் பிரமிப்பும் பழமொழியும் பரியாசச் சொல்லுமாவாய்.

உபா 28:38. மிகுந்த விதையை வயலுக்குக் கொண்டுபோவாய், கொஞ்சம் அறுப்பாய்; வெட்டுக்கிளி அதைப் பட்சித்துப்போடும்.

உபா 28:39. திராட்சத்தோட்டங்களை நாட்டிப் பயிரிடுவாய், ஆனாலும் நீ திராட்சரசம் குடிப்பதும் இல்லை, திராட்சப்பழங்களைச் சேர்ப்பதும் இல்லை; பூச்சி அதைத் தின்று போடும்.

உபா 28:40. ஒலிவமரங்கள் உன் எல்லைகளிலெங்கும் இருக்கும். ஆனாலும் அதின் எண்ணெயை நீ பூசிக்கொள்வதில்லை; உன் ஒலிவமரத்தின் பிஞ்சுகள் உதிர்ந்துபோம்.

உபா 28:41. நீ குமாரரையும் குமாரத்திகளையும் பெறுவாய், ஆனாலும் அவர்கள் உன்னோடேகூட இரார்கள்; அவர்கள் சிறைப்பட்டுப்போவார்கள்.

உபா 28:42. உன் மரங்களெல்லாவற்றையும் உன் நிலத்தின் கனிகளையும் விட்டில் பட்சித்துப்போடும்.

உபா 28:43. உன் நடுவிலிருக்கிற அந்நியன் உனக்கு மேற்பட்டு மேன்மேலும் உயர்ந்திருப்பான்; நீ மிகவும் தாழ்த்தப்பட்டுப்போவாய்.

உபா 28:44. அவன் உன்னிடத்தில் கடன்படான், நீ அவனிடத்தில் கடன்படுவாய்; அவன் தலையாயிருப்பான், நீ வாலாயிருப்பாய்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய கவனமாயிருக்கும்போது, கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கிறார். அவர்கள் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் போகும்போது கர்த்தர் அவர்களை சபிக்கிறார்.

"இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய எல்லாக் கற்பனைகளின்படியும் கட்டளைகளின்படியும் நடக்கக் கவனமாயிருக்கிறதற்கு, அவர் சத்தத்திற்குச் செவிகொடாதேபோவாயாகில், இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து, உனக்குப் பலிக்கும்" (உபா 28:15) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

உபா. 27:14-26 ஆகிய வசனங்களில் பன்னிரண்டு சாபங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் ஒருவரை ஆசீர்வதிக்க வேண்டுமானால் அதற்குரிய நிபந்தனைகளும் உபா. 28:1-14 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆசீர்வாதங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்கு இஸ்ரவேல் புத்திரர் கீழ்ப்படிய வேண்டும். கீழ்ப்படியவில்லையென்றால் அவர்களுக்கு ஆசீர்வாதங்களுக்குப் பதிலாக சாபமே வரும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல் போகும்போது, அவர்கள் ஆசீர்வதிக்கப்படமாட்டார்கள் என்பது மாத்திரமல்ல, அவர்கள் சபிக்கப்படுவார்கள். ஆசீர்வாதம் குறைவுபடும்போது பாடுகளும் வேதனைகளும் அதிகரிக்கும். சாபம் வரும்போதோ அழிவும் நிர்மூலமும் சேர்ந்து வரும்.

நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லையென்றால், நம்மை நாமே சாபத்திற்குட்படுத்திக்கொள்வோம். கர்த்தருடைய ஆசீர்வாதம் நமக்கு வரும்போது நாம் சந்தோஷமாயிருப்போம். கர்த்தர் சொன்ன சாபங்கள் நமக்கு வரும்போதோ, நம்முடைய ஜீவியமே நமக்கு கசப்பாயிருக்கும்.

மோசே இந்த வசனப்பகுதியில், கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியாத இஸ்ரவேல் புத்திரருக்கு வரும் சாபங்களைப்பற்றிச் சொல்லுகிறார். இந்த சாபங்கள் எதேச்சையாக வந்த சாபங்களல்ல. இவை காரணமில்லாமலோ அல்லது காரணம் இருந்தாலும் ஏதோ ஒரு சாதாரண காரணத்தினாலோ வந்த சாபங்களல்ல.

இஸ்ரவேல் புத்திரரை சபிக்கவேண்டும் என்பது கர்த்தருடைய விருப்பமுமல்ல. அவர்களை சபிக்கவேண்டும் என்று கர்த்தர் ஏற்ற வேளைகளையும், காலங்களையும், சூழ்நிலைகளையும் பார்த்து காத்துக்கொண்டிருக்கிறவருமல்ல. நாம் பாவம் செய்யும்போது, நமக்கு நாமே சாபங்களை வரவழைத்துக்கொள்கிறோம்.

கர்த்தருடைய கட்டளைகளின்படி நடக்காமலிருக்கும்போதும், அவருடைய சத்தத்திற்கு செவிகொடாமல் போகும்போதும் நமக்கு சாபம் வருகிறது. இஸ்ரவேல் புத்திரருக்கு சாபம் வருவதற்கான மூன்று காரணங்களை மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். அவையாவன :

1. கர்த்தரை அசட்டைபண்ணுவது. கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடுக்காமல் போவது.

2. கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியாமலிருப்பது.

3. கர்த்தரை விட்டு விலகிப்போவது. கர்த்தர் ஒருபோதும் நம்மை தம்மைவிட்டு துரத்துகிறவரல்ல. நாம் கர்த்தரை விட்டு விலகிப்போகும்போது, கர்த்தரும் நம்மை விட்டு விலகிப்போய்விடுகிறார். அவர் நம்மை விட்டு விலகும்போது, அவர் வாக்குப்பண்ணின ஆசீர்வாதங்களும் நம்மை விட்டு விலகிப்போய்விடுகிறது.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு வரும் சாபங்களைப்பற்றிச் சொல்லும்போது, "இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து, உனக்கு பலிக்கும்" (உபா 28:15) என்று சொல்லுகிறார். இந்த வாக்கியத்திற்கு, "சாபங்கள் உன்மேல் வந்து உன்னை ஆளுகை செய்யும்" என்றும், "சாங்கள் உன்னை மூடும், இந்த சாபங்களிலிருந்து உன்னால் தப்பிக்க முடியாது" என்றும் பொருள்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் ஒருபோதும் கர்த்தரை விட்டு விலகி ஓடக்கூடாது. நாம் எப்போதுமே கர்த்தரை நோக்கியே ஓடி வரவேண்டும். நாம் பாவம் செய்து, குற்றவுணர்வுகள் நம்மை வாதைக்கும்போது, தேவனுடைய நீதிக்கு விலகி ஓடக்கூடாது. அவ்வாறு ஓடுவதற்கு பதிலாக, கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் நாடி அவரிடத்தில் ஓடி வரவேண்டும்.

"ராஜா கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருக்கிறார்; உன்னதமானவருடைய தயவினால் அசைக்கப்படாதிருப்பார். உமது கை உமது சத்துருக்களெல்லாரையும் எட்டிப்பிடிக்கும்; உமது வலதுகரம் உம்மைப் பகைக்கிறவர்களைக் கண்டுபிடிக்கும்" (சங் 21:7,8).

"சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும்; அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது; அவர்களுடைய புத்தியும் மனச்சாட்சியும் அசுத்தமாயிருக்கும்" (தீத்து 1:15).

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொன்ன ஆசீர்வாதங்களுக்கு நேர்மாறாக இப்போது அவர்களுக்கு சாபங்களை சொல்லுகிறார். கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதமும், கீழ்ப்படியவில்லையென்றால் சாபமும் வரும் என்பது இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லப்படும் பொதுவான பிரமாணம்.

மோசே இந்த வசனப்பகுதியில், கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகளை ஒவ்வொன்றாக சொல்லுகிறார். இவை அனைத்தும் சாபத்தின் கனிகளாகும். தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் மனுஷனுடைய மனதிலே பதியும்போது, அவர்களுடைய இருதயத்தில் இருளும், திகிலும் நிரம்பியிருக்கும். அவர்களுடைய சரீரத்திலும் நடுக்கமுண்டாகும். அவர்களுடைய சரீர ஆரோக்கியம் குறைந்துபோகும். ஒரு மனுஷனுக்கு சாபம் வரும்போது, அவனுடைய ஆஸ்தியும், அந்தஸ்தும் குறைவுபடும்.

மனுஷன் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது, அவன் தன்னைத்தானே அழித்துப்போடுகிறான். பாவத்தின் சம்பளம் மரணம். பாவம் செய்கிறவன் தனக்கு கேடுண்டாகவே பாவம் செய்கிறான். மனுஷனுடைய பாவங்கள் அவனை அழித்துப்போடும் கருவிகளாகவும், உபாயங்களாகவும் இருக்கிறது.

மோசே இந்த வசனப்பகுதியில், கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியாதவர்களுக்கு வரும் சாபங்களைப்பற்றிச் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

"நீ பட்டணத்திலும் சபிக்கப்பட்டிருப்பாய், வெளியிலும் சபிக்கப்பட்டிருப்பாய். உன் கூடையும், மாப்பிசைகிற உன் தொட்டியும் சபிக்கப்பட்டிருக்கும். உன் கர்ப்பத்தின் கனியும், உன் நிலத்தின் கனியும், உன் மாடுகளின் பெருக்கமும், உன் ஆடுகளின் மந்தைகளும் சபிக்கப்பட்டிருக்கும். நீ வருகையிலும் சபிக்கப்பட்டிருப்பாய், நீ போகையிலும் சபிக்கப்பட்டிருப்பாய் (உபா 28:16-19).

"என்னைவிட்டு விலகி நீ செய்துவருகிற உன் துர்க்கிரியைகளினிமித்தம் சீக்கிரத்தில் கெட்டுப்போய் அழியுமட்டும், நீ கையிட்டுச் செய்கிறதெல்லாவற்றிலும் கர்த்தர் உனக்குச் சாபத்தையும் சஞ்சலத்தையும் கேட்டையும் வரப்பண்ணுவார். நீ சுதந்தரிக்கும் தேசத்தில் கர்த்தர் உன்னை நிர்மூலமாக்குமட்டும் கொள்ளைநோய் உன்னைப் பிடித்துக்கொள்ளப்பண்ணுவார் (உபா 28:20,21).

கர்த்தர் உன்னை ஈளையினாலும், காய்ச்சலினாலும், உஷ்ணத்தினாலும், எரிபந்தத்தினாலும், வறட்சியினாலும், கருக்காயினாலும், விஷப்பனியினாலும் வாதிப்பார்; நீ அழியுமட்டும் இவைகள் உன்னைப் பின் தொடரும்(உபா 28:23).

உன் தலைக்குமேலுள்ள வானம் வெண்கலமும், உனக்குக் கீழுள்ள பூமி இரும்புமாய் இருக்கும். உன் தேசத்து மழையைக் கர்த்தர் புழுதியும் மண்ணுமாக பெய்யப்பண்ணுவார்; நீ அழியுமட்டும் அப்படியே வானத்திலிருந்து உன்மேல் இறங்கிவரும் (உபா 28:23,24).

வெண்கலமாக இருக்கும் வானம் என்பது ஜெபத்திற்குப் பதில் கிடைக்காத தன்மையையும், மழை பெய்யாத வறட்சியையும் குறிக்கும். இரும்பான பூமி என்பது விளைச்சலற்றநிலத்தைக் குறிக்கும்.

வானத்திலிருந்து மழைபெய்யாது. பூமி புழுதியும் மண்ணுமாக இருக்கும். ஜனங்கள் பிரயாணம் பண்ணும்போது தூசியும், பலத்த காற்றும் அவர்களைப் பாதிக்கும். இதனால் கண்நோய் உண்டாகும்.

"உன் சத்துருக்களுக்கு முன்பாக நீ முறிய அடிக்கப்படும்படி கர்த்தர் செய்வார்; ஒரு வழியாய் அவர்களுக்கு எதிராகப் புறப்படுவாய், ஏழு வழியாய் அவர்களுக்கு முன்பாக ஓடிப்போவாய்; நீ பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் சிதறுண்டுபோவாய். உன் பிணம் ஆகாயத்துப் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும்; அவைகளை விரட்டுவாரில்லாதிருப்பார்கள்" (உபா 28:25,26).

கி.மு. 722 ஆம் வருஷத்தில் இஸ்ரவேலின் பத்துக் கோத்திரத்தார் அசீரிய சிறையிருப்பிற்குப் போனார்கள். (2இராஜா 17) கி.மு. 602 ஆம் வருஷத்தில் மீதமுள்ள இரண்டு கோத்திரத்தார் பாபிலோனிய சிறையிருப்பிற்குப் போனார்கள். (2இராஜா 25). கி.பி. 70 ஆம் வருஷத்திலிருந்து கி.பி. 135 ஆம் வருஷம் வரையிலும் மீதமுள்ள யூதர்கள் ரோமாபுரியாரின் ஆட்சிக்காலத்தில் உலகமெங்கும் சிதறிப்போனார்கள். (லூக்கா 24:20-24; லேவி 26:33).

"உன் பிணம் ஆகாயத்துப் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும்" என்பது மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லும் தீர்க்கதரிசன வாக்கியமாகும். இந்தத் தீர்க்கதரிசனம் இஸ்ரவேல் புத்திரருக்குப் பலதடவைகள் நிறைவேறியிருக்கிறது. அவர்களுடைய கீழ்ப்படியாமையின் நிமித்தமாக இஸ்ரவேல் புத்திரருக்கு யுத்தம் உண்டாயிற்று. யுத்தத்தில் ஏராளமான இஸ்ரவேலர்கள் மரித்துப் போனார்கள்.

"நீ குணமாகாதபடி கர்த்தர் உன்னை எகிப்தின் எரிபந்தமான பருக்களினாலும், மூலவியாதியினாலும், சொறியினாலும், சிரங்கினாலும் வாதிப்பார்" (உபா 28:27).

"கர்த்தர் உன்னைப் புத்திமயக்கத்தினாலும், குருட்டாட்டத்தினாலும், மனத்திகைப்பினாலும் வாதிப்பார். குருடன் அந்தகாரத்திலே தடவித்திரிகிறதுபோல, நீ பட்டப்பகலிலே தடவிக்கொண்டுதிரிவாய்; உன் வழிகளில் ஒன்றும் உனக்கு வாய்க்காதேபோம்; உதவிசெய்வாரில்லாமல் நீ எந்நாளும் ஒடுக்கப்படுகிறவனும் பறிகொடுக்கிறவனுமாய் இருப்பாய்" (உபா 28:28,29).

"பெண்ணை உனக்கு நியமிப்பாய், வேறொருவன் அவளுடன் சயனிப்பான்; வீட்டைக் கட்டுவாய், அதிலே குடியிருக்கமாட்டாய்; திராட்சத்தோட்டத்தை நாட்டுவாய், அதின் பலனை அனுபவிக்கமாட்டாய்" (உபா 28:30).

"உன் மாடுகள் உன் கண்களுக்கு முன்பாக அடிக்கப்படும், நீ அதில் ஒன்றும் புசிப்பதில்லை; உன் கழுதை உனக்கு முன்பாகக் கொள்ளையிட்டுக் கொண்டு போகப்பட்டு, உனக்குத் திரும்ப அகப்படாமற்போம்; உன் ஆடுகள் உன் சத்துருக்களுக்குக் கொடுக்கப்படும், விடுவிப்பார் ஒருவரும் உனக்கு இல்லாதிருப்பார்கள். உன் குமாரரும் உன் குமாரத்திகளும் அந்நிய ஜனங்களுக்கு ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்; அவர்களைக் காண உன் கண்கள் நாடோறும் பார்த்துப் பார்த்துப் பூத்துப்போம்; உன் கையில் பெனில்லாதிருக்கும். உன் நிலத்தின் கனியையும், உன் பிரயாசத்தின் எல்லாப் பலனையும் நீ அறியாத ஜனங்கள் புசிப்பார்கள்; நீ சகல நாளும் ஒடுக்கப்பட்டும் நொறுக்கப் பட்டும் இருப்பாய்" (உபா 28:31-33).

"உன் கண்கள் காணும் காரியங்களினாலே மதிமயங்கிப்போவாய். உன் உள்ளங்கால் தொடங்கி உன் உச்சந்தலைமட்டும் குணமாகாதபடிக்கு, கர்த்தர் உன்னை முழங்கால்களிலும் தொடைகளிலும் கொடிய எரிந்தப் பருக்களினாலே வாதிப்பார் (உபா 28:34,35).

"கர்த்தர் உன்னையும், உனக்காக நீ ஏற்படுத்திக்கொண்ட ராஜாவையும், நீயும் உன் பிதாக்களும் அறியாத ஜாதிகளிடத்துக்குப் போகப்பண்ணுவார்; அங்கே நீ மரமும் கல்லுமான அந்நிய தேவர்களைச் சேவிப்பாய். கர்த்தர் உன்னைக் கொண்டுபோய் விடும் எல்லா ஜனங்களுக்குள்ளும் பிரமிப்பும் பழமொழியும் பரியாசச் சொல்லுமாவாய் (உபா 28:36,37).

"மிகுந்த விதையை வயலுக்குக் கொண்டுபோவாய், கொஞ்சம் அறுப்பாய்; வெட்டுக்கிளி அதைப் பட்சித்துப்போடும். திராட்சத்தோட்டங்களை நாட்டிப் பயிரிடுவாய், ஆனாலும் நீ திராட்சரசம் குடிப்பதும் இல்லை, திராட்சப்பழங்களைச் சேர்ப்பதும் இல்லை; பூச்சி அதைத் தின்று போடும். ஒலிவமரங்கள் உன் எல்லைகளிலெங்கும் இருக்கும். ஆனாலும் அதின் எண்ணெயை நீ பூசிக்கொள்வதில்லை; உன் ஒலிவமரத்தின் பிஞ்சுகள் உதிர்ந்துபோம். நீ குமாரரையும் குமாரத்திகளையும் பெறுவாய், ஆனாலும் அவர்கள் உன்னோடேகூட இரார்கள்; அவர்கள் சிறைப்பட்டுப்போவார்கள். உன் மரங்களெல்லாவற்றையும் உன் நிலத்தின் கனிகளையும் விட்டில் பட்சித்துப்போடும்" (உபா 28:38-42).

"உன் நடுவிலிருக்கிற அந்நியன் உனக்கு மேற்பட்டு மேன்மேலும் உயர்ந்திருப்பான்; நீ மிகவும் தாழ்த்தப்பட்டுப்போவாய். அவன் உன்னிடத்தில் கடன்படான், நீ அவனிடத்தில் கடன்படுவாய்; அவன் தலையாயிருப்பான், நீ வாலாயிருப்பாய்" (உபா 28:43,44).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியவில்லையென்றால் அவர்களுக்கு வரும் சாபங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. நீ பட்டணத்தில் சபிக்கப்பட்டிருப்பாய்.
2. நீ வெளியில் சபிக்கப்பட்டிருப்பாய்.
3. உன் கூடையும், மாப்பிசைகிற உன் தொட்டியும் சபிக்கப்பட்டிருக்கும் (உபா. 28:17).
4. உன் கர்ப்பத்தின் கனி சபிக்கப்பட்டிருக்கும் (உபா. 28:18).
5. உன் நிலத்தின் கனி சபிக்கப்பட்டிருக்கும்.
6. உன் மாடுகளின் பெருக்கம் சபிக்கப் பட்டிருக்கும்.
7. உன் ஆடுகளின் மந்தைகள் சபிக்கப் பட்டிருக்கும்.
8. நீ வருகையிலும் சபிக்கப்பட்டிருப்பாய் (உபா. 28:19).

9. நீ போகையிலும் சபிக்கப்பட்டிருப்பாய்.

10. கர்த்தர் உனக்குச் சாபத்தை வரப் பண்ணுவார் (உபா. 28:20).

11. கர்த்தர் உனக்குச் சஞ்சலத்தை வரப்பண்ணுவார்.

12. கர்த்தர் உனக்குக் கேட்டை வரப்பண்ணுவார்.

13. நீ செய்துவருகிற காரியங்கள் அனைத்திலும் தோற்றுப்போவாய்.

14. நீ கெட்டுப்போவாய்.

15. சீக்கிரத்தில் அழிந்துப்போவாய்.

16. கொள்ளைநோய் (உபா. 28:21-22)

18. மரணம்

19. ஈளை (உபா. 28:22; லேவி 26:16)

20. காய்ச்சல் (உபா. 28:22; லேவி 26:16)

21. உஷ்ணம் உபா. 28:22)

22. எரிபந்தம் உபா. 28:22)

23. பட்டயம் (உபா. 28:22; லேவி 26:17,25,42)

24. கருக்காய் (உபா. 28:22; லேவி 26:18-20)

25. விஷப்பனி உபா. 28:22)

26. வானம் வெண்கலமாகும். (உபா. 28:23; லேவி 26:19)

11. பூமி இரும்பாகும். (உபா. 28:23; லேவி 26:20)

12. மழையிராது. புழுதியும், மண்ணுமாக இருக்கும். (உபா. 28:24)

13. வறட்சியினால் அழிவு

14. சத்துருக்களுக்கு முன்பாக முறியடிக்கப் படுதல். (உபா. 28:25; லேவி 26:17-39)

15. ஒரு வழியாகப் புறப்பட்டு, ஏழு வழியாய் ஓடிப்போதல். (உபா. 28:25)

16. எல்லா ராஜ்யங்களிலும் சிதறுண்டுபோதல். (உபா. 28:25)

17. ஆகாயத்துப் பறவைகளுக்கும், பூமியின் மிருகங்களுக்கும் சரீரங்கள் இரையாவது. (உபா. 28:26)

18. அவைகளை விரட்டுவார் இல்லாதிருப்பது.

19. எகிப்தின் எரிபந்தமான பருக்கள். (உபா. 28:27)

20. மூலவியாதி (உபா. 28:27)

21. சொறி (உபா. 28:27)

22. சிரங்கு

23. குணமாகாத நிலைமை

24. புத்திமயக்கம். (உபா. 28:28)

25. குருட்டாட்டம். (உபா. 28:28)

26. மனத்திகைப்பு (உபா. 28:28)

27. குருடனைப்போல அந்தகாரத்தில் தடவுதல் (உபா. 28:29)

28. ஒன்றும் வாய்க்காது.

29. ஒடுக்கப்படுகிறவனும், பறிகொடுக்கிறவனுமாயிருப்பது.

30. விடுவிப்பார் ஒருவரும் இல்லாதிருப்பது.

1. பெண்ணை உனக்கு நியமிப்பாய், வேறொருவன் அவளுடன் சயனிப்பான்.

2. வீட்டைக் கட்டுவாய், அதிலே குடியிருக்க மாட்டாய்.

3. திராட்சத்தோட்டத்தை நாட்டுவாய், அதின் பலனை அனுபவிக்கமாட்டாய்.

4. உன் மாடுகள் உன் கண்களுக்கு முன்பாக அடிக்கப்படும், நீ அதில் ஒன்றும் புசிப்பதில்லை. (உபா 28:31).

5. உன் கழுதை உனக்கு முன்பாகக் கொள்ளையிட்டுக் கொண்டுபோகப்படும்.

6. அது உனக்குத் திரும்ப அகப்படாமற் போகும்.

7. உன் ஆடுகள் உன் சத்துருக்களுக்குக் கொடுக்கப்படும்.

8. அதை விடுவிப்பார் ஒருவரும் உனக்கு இல்லாதிருப்பார்கள்.

9. உன் குமாரரும் உன் குமாரத்திகளும் அந்நிய ஜனங்களுக்கு ஒப்புக்கொடுக்கப் படுவார்கள் (உபா 28:32).

10. அவர்களைக் காண உன் கண்கள் நாடோறும் பார்த்துப் பார்த்துப் பூத்துப்போகும்.

11. உன் கையில் பெலனில்லாதிருக்கும்.

12. உன் நிலத்தின் கனியை அறியாத ஜனங்கள் புசிப்பார்கள் (உபா 28:33).

13. உன் பிரயாசத்தின் எல்லாப் நீ பலனையும் அந்நியர்கள் அநுபவிப்பார்கள்.

14. நீ சகல நாளும் ஒடுக்கப்பட்டும் நொறுக்கப்பட்டும் இருப்பாய்.

15. உன் கண்கள் காணும் காரியங்களினாலே மதிமயங்கிப்போவாய் (உபா 28:34).

16. உன் உள்ளங்கால் தொடங்கி உன் உச்சந்தலைமட்டும் குணமாகாதபடிக்கு, கர்த்தர் உன்னை முழங்கால்களிலும் தொடைகளிலும் கொடிய எரிபந்தப் பருக்களினாலே வாதிப்பார் (உபா 28:35).

17. கர்த்தர் உன்னையும், உனக்காக நீ ஏற்படுத்திக்கொண்ட ராஜாவையும், நீயும் உன் பிதாக்களும் அறியாத ஜாதிகளிடத்துக்குப் போகப்பண்ணுவார் (உபா 28:36).

18. அங்கே நீ மரமும் கல்லுமான அந்நிய தேவர்களைச் சேவிப்பாய்.

19. கர்த்தர் உன்னைக் கொண்டுபோய் விடும் எல்லா ஜனங்களுக்குள்ளும் பிரமிப்பும் பழமொழியும் பரியாசச் சொல்லுமாவாய் (உபா 28:37).

20. மிகுந்த விதையை வயலுக்குக் கொண்டுபோவாய், கொஞ்சம் அறுப்பாய்; வெட்டுக்கிளி அதைப் பட்சித்துப்போடும் (உபா 28:38,43).

21. பூச்சி திராட்சப்பழங்களைத் தின்று போடும் (உபா 28:39).

22. உன் ஒலிவமரத்தின் பிஞ்சுகள் உதிர்ந்துபோம் (உபா 28:40).

23. நீ குமாரரையும் குமாரத்திகளையும் பெறுவாய், ஆனாலும் அவர்கள் உன்னோடேகூட இரார்கள்; அவர்கள் சிறைப்பட்டுப்போவார்கள் (உபா 28:41).

24. உன் நடுவிலிருக்கிற அந்நியன் உனக்கு மேற்பட்டு மேன்மேலும் உயர்ந்திருப்பான்; நீ மிகவும் தாழ்த்தப்பட்டுப்போவாய் (உபா 28:43).

25. அவன் உன்னிடத்தில் கடன்படான், நீ அவனிடத்தில் கடன்படுவாய் (உபா 28:44).

26. அவன் தலையாயிருப்பான், நீ வாலாயிருப்பாய்.

1. சத்துருக்களைச் சேவிப்பீர்கள்.

2. பட்டினியோடு இருப்பீர்கள்.

3. தாகத்தோடு இருப்பீர்கள்.

4. நிர்வாணத்தோடு இருப்பீர்கள்.

5. சகலமும் குறைவுபட்டிருக்கும்.

6. இரும்பு நுகத்தடியை உன் கழுத்தின்மேல் போடப்படும்.

7. பலஜீவன்கள் மரிக்கும். (உபா 28:48,51).

8. அந்நிய தேசங்களோடு யுத்தம் உண்டாகும். (உபா 28:49).

9. சத்துருக்கள் உங்களை இரக்கமில்லாமல் நடத்துவார்கள். (உபா 28:50)

10. உங்கள் மிருகஜீவன்கள் அழியும். (உபா 28:51)

11. நிலத்தின் கனி அழியும்.

12. அந்நிய ஜாதியான் உங்கள் சம்பத்துக்களை எடுத்துக்கொண்டு போவான்.

13. உங்கள் பட்டணங்கள் முற்றுகை போடப்படும். (உபா 28:52).

14. நீ நம்பியிருக்கும் உயரமும், அரணிப்பான உன் மதில்கள் விழும்.

15. முழு தேசமும் கொள்ளையாகும்.

16. மனுஷ மாம்சத்தைச் சாப்பிடுவார்கள். (உபா 28:53-57).

17. பஞ்சம் உண்டாகும். (உபா 28:53-57).

18. மனுஷர் தங்கள் நெருங்கிய உறவினரைக் கொன்று புசிப்பார்கள்.

19. பஞ்சத்தின் நிமித்தம் ஜனங்கள் மற்றவர்கள் மேல் வன்கண்ணாயிருப்பார்கள். (உபா 28:55).

20. எல்லாப் பட்டணங்களிலும் பஞ்சம் உண்டாகும்.

21. ஸ்திரீகள் தங்கள் நெருங்கிய உறவினர்களைக் கொன்று புசிப்பார்கள். (உபா 28:56-57)

1. நீங்காத பெரிய வாதைகள் (உபா 28:58-59)

2. நீங்காத கொடிய ரோகங்கள் (உபா 28:59)

3. எகிப்திலுள்ள வியாதிகள் (உபா 28:60)

4. நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிராத எல்லாப் பிணியும் வாதைகளும் (உபா 28:61)

5. நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கும் எல்லாப் பிணியும் வாதைகளும்

6. முழுமையான அழிவு

7. கொஞ்சம் ஜனமாய்ப் போவீர்கள். (உபா 28:62)

8. நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசத்திலிருந்து பிடுங்கிப் போடப்படுவீர்கள். (உபா 28:63)

9. எல்லா ஜனங்களுக்குள்ளும் சிதற அடிக்கப்படுவீர்கள். (உபா 28:64)

10. அந்நிய தேவர்களைச் சேவிப்பாய்.

11. ஜாதிகளுக்குள்ளே உனக்கு சமாதானம் இராது. (உபா 28:65)

12. ஜாதிகளுக்குள்ளே உனக்கு இளைப்பாறுதல் இராது.

13. தத்தளிக்கிற இருதயம்.

14. சோர்ந்துபோகிற கண்கள்.

15. மனச்சஞ்சலம்.

16. உன் ஜீவன் உனக்குச் சந்தேகத்தில் ஊசலாடும் (உபா 28:66)

17. இரவும் பகலும் திகில்கொண்டிருப்பாய்.

18. உன் ஜீவனைப்பற்றி நம்பிக்கையிராது.

19. ஜீவனுக்கு எப்போதும் ஆபத்து வருவதினால், பயமும், திகிலும். (உபா 28:67)

20. எகிப்தில் மறுபடியும் அடிமைத்தனம் (உபா 28:68)

அழிவு
உபா 28:45-68

உபா 28:45. உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு விதித்த அவருடைய கற்பனைகளையும் கட்டளைகளையும் கைக்கொள்ளும்படி, நீ அவர் சத்தத்திற்குச் செவிகொடாதபடியினால், இந்தச் சாபங்கள் எல்லாம் உன்மேல் வந்து, நீ அழியுமட்டும் உன்னைத் தொடர்ந்து பிடித்து,

உபா 28:46. உன்னிலும் உன் சந்ததியிலும் என்றைக்கும் அடையாளமாகவும் அற்புதமாகவும் இருக்கும்.

உபா 28:47. சகலமும் பரிபூரணமாயிருக்கையில், நீ மனமகிழ்ச்சியோடும் களிப்போடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவியாமற்போனதினிமித்தம்,

உபா 28:48. சகலமும் குறைவுபட்டு, பட்டினியோடும் தாகத்தோடும் நிர்வாணத்தோடும், கர்த்தர் உனக்கு விரோதமாய் அனுப்பும் சத்துருக்களைச் சேவிப்பாய்; அவர்கள் உன்னை அழித்துத் தீருமட்டும், இரும்பு நுகத்தடியை உன் கழுத்தின்மேல் போடுவார்கள்.

உபா 28:49. கிழவன் என்று முகம்பாராமலும், வாலிபன் என்று இரங்காமலும் இருக்கும் கொடிய முகமுள்ளதும்,

உபா 28:50. உனக்குத் தெரியாத பாஷையைப் பேசுகிறதுமான ஜாதியை வெகுதூரத்திலுள்ள பூமியின் கடையாந்தரத்திலிருந்து கர்த்தர் உன்மேல் கழுகு பறக்கும் வேகமாய் வரப்பண்ணுவார்.

உபா 28:51. நீ அழியுமட்டும் அந்த ஜாதியான் உன் மிருகஜீவன்களின் பலனையும், உன் நிலத்தின் கனியையும் புசிப்பான்; அவன் உன்னை அழித்துத் தீருமட்டும் உன் தானியத்திலும், திராட்சரசத்திலும், எண்ணெயிலும், உன் மந்தைகளிலுள்ள ஆடுமாடுகளிலும் உனக்கு ஒன்றும் மீதியாக வைக்கமாட்டான்.

உபா 28:52. உன் தேசமெங்கும் நீ நம்பியிருக்கும் உயரமும் அரணிப்புமான உன் மதில்கள் விழுமளவும், அவன் உன் வாசல்களிலெங்கும் உன்னை முற்றிகைப்போடுவான்; உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த உன்னுடைய தேசமெங்குமுள்ள உன்னுடைய வாசல்கள் தோறும் உன்னை முற்றிகைப்போடுவான்.

உபா 28:53. உன் சத்துருக்கள் உன்னை முற்றிகைப்போட்டு நெருக்குங்காலத்தில், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த உன் கர்ப்பக்கனியான உன் புத்திரபுத்திரிகளின் மாம்சத்தைத் தின்பாய்.

உபா 28:54. உன் சத்துருக்கள் உன் வாசல்களிலெங்கும் உன்னை முற்றிகைப்போட்டு நெருக்குங்காலத்தில், உன்னிடத்தில் செருக்கும் சுகசெல்வமுமுள்ள மனிதன் சகலத்தையும் இழந்து, தன் இல்லாமையினாலே தான் தின்னும் தன் பிள்ளைகளின் மாம்சத்திலே,

உபா 28:55. தன் சகோதரனுக்காகிலும், தன் மார்பில் இருக்கிற மனைவிக்காகிலும், தனக்கு மீந்திருக்கிற தன் மக்களில் ஒருவனுக்காகிலும் கொஞ்சமேனும் கொடாதபடி, அவர்கள்மேல் வன்கண்ணாயிருப்பான்.

உபா 28:56. உன்னிடத்தில் சுகசெல்வத்தினாலும் செருக்கினாலும் தன் உள்ளங்காலைத் தரையின்மேல் வைக்க அஞ்சின செருக்கும் சுகசெல்வமுமுள்ள ஸ்திரீ தன் கால்களின் நடுவே புறப்பட்ட தன் நஞ்சுக்கொடியினிமித்தமும், தான் பெற்ற பிள்ளைகளினிமித்தமும், தன் மார்பில் இருக்கிற புருஷன்மேலும் தன் குமாரன்மேலும் தன் குமாரத்தியின்மேலும் வன்கண்ணாயிருப்பாள்;

உபா 28:57. உன் சத்துருக்கள் உன் வாசல்களில் உன்னை முற்றிகைப்போட்டு நெருக்குங்காலத்தில், சகலமும் குறைவுபடுவதினால், அவைகளை இரகசியமாய்த் தின்னுவாள்.

உபா 28:58. உன் தேவனாகிய கர்த்தர் என்னும் மகிமையும் பயங்கரமுமான நாமத்திற்குப் பயப்படும்படிக்கு, நீ இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படியெல்லாம் நடக்கக் கவனமாயிராவிட்டால்,

உபா 28:59. கர்த்தர் நீங்காத பெரிய வாதைகளாலும் நீங்காத கொடிய ரோகங்களாலும் உன்னையும் உன் சந்ததியையும் அதிசயமாய் வாதித்து,

உபா 28:60. நீ கண்டு பயந்த எகிப்து வியாதிகளெல்லாம் உன்மேல் வருவிப்பார்; அவைகள் உன்னைப் பற்றிக்கொள்ளும்.

உபா 28:61. இந்த நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிராத எல்லாப் பிணியையும் வாதையையும் நீ அழியுமளவும் கர்த்தர் உன்மேல் வரப்பண்ணுவார்.

உபா 28:62. திரட்சியிலே வானத்து நட்சத்திரங்களைப்போல் இருந்த நீங்கள், உங்கள் தேவனாகிய கர்த்தரின் சத்தத்திற்குச் செவிகொடாமற்போனதினால், கொஞ்சம் ஜனமாய்ப் போவீர்கள்.

உபா 28:63. கர்த்தர் உங்களுக்கு நன்மை செய்யவும் உங்களைப் பெருகப்பண்ணவும் எப்படி உங்கள்மேல் இரம்மியமாயிருந்தாரோ, அப்படியே கர்த்தர் உங்களை அழிக்கவும் உங்களை அதம்பண்ணவும் இரம்மியமாயிருப்பார்; நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசத்திலிருந்து பிடுங்கிப் போடப்படுவீர்கள்.

உபா 28:64. கர்த்தர் உன்னைப் பூமியின் ஒரு முனை துவக்கி பூமியின் மறுமுனைமட்டும் இருக்கிற எல்லா ஜனங்களுக்குள்ளும் சிதற அடிப்பார்; அங்கே நீயும் உன் பிதாக்களும் அறியாத மரமும் கல்லுமான அந்நிய தேவர்களைச் சேவிப்பாய்.

உபா 28:65. அந்த ஜாதிகளுக்குள்ளே உனக்கு இளைப்பாறுதல் இராது, உன் உள்ளங்கால்கள் தங்கித் தரிக்க இடமும் இராது; அங்கே கர்த்தர் உனக்குத் தத்தளிக்கிற இருதயத்தையும், சோர்ந்துபோகிற கண்களையும், மனச்சஞ்சலத்தையும் கொடுப்பார்.

உபா 28:66. உன் ஜீவன் உனக்குச் சந்தேகத்தில் ஊசலாடும்; உன் ஜீவனைப்பற்றி நம்பிக்கையில்லாமல் இரவும் பகலும் திகில்கொண்டிருப்பாய்.

உபா 28:67. நீ பயப்படும் உன் இருதயத்தின் திகிலினாலும், உன் கண்கள் காணும் காட்சியினாலும், விடியற்காலத்தில் எப்பொழுது சாயங்காலம் வருமோ என்றும், சாயங்காலத்தில், எப்பொழுது விடியற்காலம் வருமோ என்றும் சொல்லுவாய்.

உபா 28:68. இனிக் காணாதிருப்பாய் என்று நான் உனக்குச் சொன்னவழியாய், கர்த்தர் உன்னைக் கப்பல்களிலே எகிப்திற்குத் திரும்பிக் கொண்டுபோகப்பண்ணுவார்; அங்கே உங்கள் சத்துருக்களுக்கு வேலைக்காரராகவும் வேலைக்காரிகளாகவும் விற்கப்படுவீர்கள்; உங்களைக் கொள்வாரும் இல்லாதிருப்பார்கள் என்றார்.

தெய்வபக்தியில்லாதவர்களுக்கும், அக்கிரமக்காரருக்கும் விரோதமாக தேவகோபம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவர்கள்மீது சாபம் வரும். அந்த சாபங்கள் அவர்களை அழித்துப்போடும். கீழ்ப்படியாமையினால் சாபம் வருகிறது. சாபத்தினால் அழிவு வருகிறது.

கீழ்ப்படியாத ஜனங்கள்மீது தேவகோபம் வெளிப்படும்போது, அது மேலோட்டமாக வந்து, சீக்கிரத்தில் மறைந்துபோகாது. கர்த்தருடைய கோபம் அக்கிரமக்காரர்மீது வரும்போது, அது அவர்களை அழித்துப்போடு மட்டும், அவர்களைத் தொடர்ந்து பிடிக்கும். ஒரு மனுஷன்மீது சாபம் வரும்போது, அதன் பின் விளைவுகள் மிகவும் பயங்கரமானதாகயிருக்கும்.

மோசே சாபத்தின் விளைவுகளைப்பற்றிச் சொல்லும்போது, "உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு விதித்த அவருடைய கற்பனைகளையும் கட்டளைகளையும் கைக்கொள்ளும்படி, நீ அவர் சத்தத்திற்குச் செவிகொடாதபடியினால், இந்தச் சாபங்கள் எல்லாம் உன்மேல் வந்து, நீ அழியுமட்டும் உன்னைத் தொடர்ந்து பிடிக்கும்" (உபா 28:45) என்று சொல்லுகிறார்.

"இந்தச் சாபங்கள் எல்லாம்" என்னும் வாக்கியம் இதுவரையிலும் சொல்லப்பட்ட 83 சாபங்களைக் குறிக்கிறது. உபா 27:14-28:68 ஆகிய வசனங்களில் மொத்தம் 124 சாபங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. (உபா 28:59)

சாபத்தினால் வரும் அழிவு, கீழ்ப்படியாத பிள்ளைகளிடத்திலும், அவர்களுடைய சந்ததியிலும் என்றைக்கும் அடையாளமாகவும் அற்புதமாகவும் இருக்கும் (உபா 28:46).

இஸ்ரவேல் புத்திரர்மீது வரும் சாபங்களுக்கான காரணங்களும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. கர்த்தரை விட்டுவிலகுவதும், துர்க்கிரியைகளும் (உபா 28:20)

2. கர்த்தருடைய சத்தத்தைக் கேட்காமல் போனது.

3. கர்த்தருடைய கட்டளைகளையும், கற்பனைகளையும் கைக்கொள்ளாமல் போனது.

4. உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நித்திய பாடங்களைக் கற்பிக்குமாறு சாபங்கள் அவர்களுக்கு அடையாளமாகவும், அற்புதமாகவும் இருக்கும் (உபா 28:46).

5. சகலமும் பரிபூரணமாயிருக்கையில், நீ மனமகிழ்ச்சியோடும் களிப்போடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவியாமற் போனது. (உபா 28:47).

6. கர்த்தரின் சத்தத்திற்குச் செவிகொடாமற் போனது (உபா 28:62)

தீர்க்கதரிசியாகிய எரேமியாவும், கீழ்ப்படியாமையினாலும், பாவத்தினாலும் வரும் சாபங்களைப்பற்றியும், தீங்குகளைப்பற்றியும், அழிவைப்பற்றியும் இவ்வாறு சொல்லியிருக்கிறார்.

"நான் அவனிடத்திலும், அவன் சந்ததியினிடத்திலும், அவன் பிரபுக்களினிடத்திலும் அவர்கள் அக்கிரமத்தை விசாரித்து, அவன்மேலும் எருசலேமின் குடிகள்மேலும், யூதா மனுஷர்மேலும், நான் அவர்களுக்குச் சொன்னதும், அவர்கள் கேளாமற்போனதுமான தீங்கனைத்தையும் வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்" (எரே 36:31).

எரேமியாவைப்போலவே, மோசேயும் கீழ்ப்படியாத பிள்ளைகளுக்கு வரும் சாபங்களைப்பற்றி, இந்த வசனப்பகுதியில் ஒவ்வொன்றாகச் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியாதபோது, மோசே இங்கு சொல்லுகிற சாபங்களெல்லாம் அவர்கள்மேல் வந்து, அவர்கள் அழியுமட்டும் அவர்களைத் தொடர்ந்து பிடிக்கும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை எச்சரித்தும், அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியவில்லை. இதனால் அவர்கள் மீது சாபங்கள் ஒவ்வொன்றாய் வந்தது. முடிவிலே இஸ்ரவேல் தேசத்தார் ரோமப்பேரரசினால் முற்றிலுமாய் அழிக்கப்பட்டார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய வார்த்தைகளை சொல்லும்போது, அவர் தேவஆவியானவரால் ஏவப்பட்டு, இந்த வார்த்தைகளைச் சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளின்மீது அதிகாரமுள்ளவர். கர்த்தருக்கு சித்தமான காலம் வரும்போது, தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய சரித்திரத்தில் அவர்கள்மீது ஒவ்வொரு சாபங்களாக வருகிறது. சாபத்தினால் வரும் தீங்குகளும் அவர்களுக்கு அதிகரிக்கிறது. கர்த்தர் அவர்களுடைய பாவங்கள் எல்லாவற்றையும் விசாரிக்கிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் யூதர்கள் தங்கள் மேசியாவாகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்துவிடுகிறார்கள். இது அவர்கள் செய்கிற மிகப்பெரிய பாவமாகயிருக்கிறது. தங்கள் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவை யூதர்கள் அங்கீகரிக்காமல், அவரை சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்புக்கொடுக்கிறார்கள். இந்தப் பாவத்தினிமித்தமாக ரோமப்பேரரசார் யூதாதேசத்தையே அழித்துப்போடுகிறார்கள். உயிரோடு தப்பின யூதர்கள், உலகமெங்கும் சிதறி ஓடிப்போகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பிரியமான ஜனங்கள். அவர்கள் கர்த்தருக்கு பரிசுத்தமான ஜனங்கள். அவர்கள்மீது தேவனுடைய ஆசீர்வாதம் பரலோகத்திலிருந்து விசேஷமாக இரங்கி வந்தது. இஸ்ரவேல் புத்திரரைப்போல, இந்தப் பூமியிலுள்ள வேறு எந்த ஜாதியாரோடும், கர்த்தர் இந்த அளவுக்கு அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பிக்கவில்லை.

கர்த்தருடைய அன்பையும், கிருபையையும், இரக்கத்தையும், ஆசீர்வாதங்களையும், நன்மைகளையும் அனுபவிப்பதற்கு இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஏராளமான வாய்ப்புகள் கொடுக்கப்பட்டது. ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியாதே போனார்கள். இதனால் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய நீதியையும் அனுபவிக்கவேண்டியதாயிற்று.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடாதபடியினால், அவர்கள்மீது சாபங்கள் வந்தது. அந்த சாபங்கள் அவர்கள் அழிந்துபோகும் மட்டும் அவர்களைத் தொடர்ந்து பிடித்தது. இஸ்ரவேல் ஜனத்தார் அந்நிய தேசங்களுக்கு சிறைப்பட்டுப்போனார்கள். அவர்கள் பூமியெங்கும் சிதறி ஓடிப்போனார்கள். அவர்கள் எந்த தேசங்களில், தேசாந்திரிகளாக சுற்றித்திரிந்தாலும், அவர்கள் கர்த்தருடைய ஜனம் என்னும் அடையாளம், அவர்கள்மீது முத்திரையாக போடப்பட்டிருக்கிறது.

கர்த்தர் காயீன்மீது முத்திரை போட்டதுபோல, இஸ்ரவேல் புத்திரர்மீதும் முத்திரை போட்டிருக்கிறார். இந்த உலகத்திலுள்ள ஜாதியார் இஸ்ரவேல் புத்திரரைப் பார்க்கும்போது, அவர்களை கர்த்தருடைய விசேஷித்த ஜனமாகவே பார்க்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் ஆசீர்வதிக்கப்படுவதைப் பார்க்கும்போது, அந்த ஆசீர்வாதங்கள் கர்த்தரால் வந்தது என்பதையும், அவர்கள் அழிந்துபோவதைப் பார்க்கும்போது, அந்த அழிவும் கர்த்தரால் அவர்களுக்கு வந்தது என்பதையும், இந்த உலகத்திலுள்ள சகல ஜாதியாரும் அறிந்துகொள்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர்மேல் வரும் சாபங்களும், அந்த சாபங்கள் அவர்களை தொடர்ந்து பிடிப்பதினால் அவர்கள் அழிந்துபோவதும், அவர்களிலும், அவர்களுடைய சந்ததிகளிலும் என்றைக்கும் அடையாளமாகவும், அற்புதமாகவும் இருக்கும்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு எருசலேமைப்பற்றியும், எருசலேமிலுள்ள தேவாலயத்தின் கட்டிடங்களைப்பற்றியும் சொல்லும்போது, "இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும்" (மத் 24:2) என்று சொன்னார்.

மத்தேயு 24-ஆவது அதிகாரம் முழுவதிலும், இயேசுகிறிஸ்துவின் பிரசங்கச்செய்தி, மோசே சொன்ன வார்த்தைகளை உறுதிபண்ணுவதுபோல இருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர்மேல் வரும் சாபங்கள், அவர்கள் அழியுமட்டு அவர்களைத் தொடர்ந்து பிடிக்கும் என்று மோசே சொன்னார். மோசே சொன்ன பிரகாரம் எருசலேமும், தேவாலயத்தின் கட்டிடங்களும் அழிந்துபோகும் என்பதை இயேசுகிறிஸ்துவும் உறுதிபண்ணுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு வரும் அழிவைப்பற்றிச் சொல்லும்போது, "சகலமும் பரிபூரணமாயிருக்கையில், நீ மனமகிழ்ச்சியோடும் களிப்போடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவியாமற்போனதினிமித்தம், சகலமும் குறைவுபட்டு, பட்டினியோடும் தாகத்தோடும் நிர்வாணத்தோடும், கர்த்தர் உனக்கு விரோதமாய் அனுப்பும் சத்துருக்களைச் சேவிப்பாய்; அவர்கள் உன்னை அழித்துத் தீருமட்டும், இரும்பு நுகத்தடியை உன் கழுத்தின்மேல் போடுவார்கள்" (உபா 28:47,48) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரருக்கு ரோமப்பேரரசின் மூலமாக அழிவு வரும் என்பதை மோசே தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறார் என்று வேதபண்டிதர்கள் இந்த வசனப்பகுதிக்கு விளக்கம் சொல்லுகிறார்கள்.

"கிழவன் என்று முகம்பாராமலும், வாலிபன் என்று இரங்காமலும் இருக்கும் கொடிய முகமுள்ளதும், உனக்குத் தெரியாத பாஷையைப் பேசுகிறதுமான ஜாதியை வெகுதூரத்திலுள்ள பூமியின் கடையாந்தரத்திலிருந்து கர்த்தர் உன்மேல் கழுகு பறக்கும் வேகமாய் வரப்பண்ணுவார்" (உபா 28:49,50) என்று மோசே இஸ்ரவேல் புத்திரர்மேல் வரப்போகும் அழிவைப்பற்றிச் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் தேசத்தார்மீது யுத்தம்பண்ண வருகிற விரோதிகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. அந்நிய ஜாதி

2. கழுகுபோல வேகமாய் பறக்கும் ஜாதி.

3. தெரியாத பாஷை பேசும் ஜாதி

4. வேகமாய் வந்து தாக்கும் ஜாதி. (உபா 28:50).

5. இரக்கம் காண்பிக்காத ஜாதி.

6. அழிக்கும் ஜாதி. (உபா 28:51).

7. இஸ்ரவேல் தேசத்தை முழுவதுமாக அழிக்கும்மட்டும் தீர்மானமாய் இருக்கும் ஜாதி. (உபா 28:52-57).

இஸ்ரவேல் புத்திரர்மீது யுத்தம்பண்ண வருகிற அந்நிய ஜாதியைப்பற்றி வேதபண்டிதர்கள் பலவிதமாக விளக்கம் சொல்லுகிறார்கள். அதன் விவரம் வருமாறு:

1. அசீரியர் - உபா 28:48-57 ஆகிய வசனங்களை இவர்கள் முதலாவதாக நிறைவேற்றினார்கள். வடக்கு ராஜ்யத்தின் பத்துக் கோத்திரங்களை இவர்கள் முழுவதுமாக அழித்தார்கள். (2இராஜா 17).

2. பாபிலோனியர் - இவர்களும் உபா 28:48-57 ஆகிய வசனங்களை நிறைவேற்றினார்கள். தெற்கு ராஜ்யத்தின் இரண்டு கோத்திரங்களை இவர்கள் முழுவதுமாக அழித்தார்கள். அசீரியர் பத்துக் கோத்திரங்களை அழித்து 133 வருஷங்களுக்குப் பின்பு, பாபிலோனியர் இரண்டு கோத்திரங்களை அழித்தார்கள். (2இராஜா 24; 2நாளா 36). பாபிலோனும், அதன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரும் கழுகுக்கு ஒப்பிட்டுக் கூறப் பட்டிருக்கிறார்கள். (எரே 4:1-13; எரே 48:40; எரே 49:22; எசே 17:3,7; ஓசி 8:1).

3. ரோமப்பேரரசு - உபா 28:48-57 ஆகிய வசனங்களை இவர்கள் இறுதியாக நிறைவேற்றுகிறார்கள். யூதாவின் ராஜ்யத்தைப் பாபிலோனியர் அழித்து 686 வருஷங்களுக்குப் பின்பு, ரோமப்பேரரசார் மீதமுள்ள இஸ்ரவேல் புத்திரரை அழித்துப் போட்டார்கள். (லூக்கா 21:20-24). கி.பி 70 ஆம் வருஷத்திற்குப் பின்பு இஸ்ரவேல் புத்திரர் உலகமெங்கும் சிதறிப் போனார்கள்.

இஸ்ரவேல் தேசத்தார்மீது அந்நிய தேசத்தார் யுத்தம்பண்ண வருவார்கள். அவர்கள் வெகுதூரத்திலுள்ள பூமியின் கடையாந்தரத்திலிருந்து வருவார்கள். இந்த வாக்கியம் ரோமப்பேரரசைக் குறிக்கிறது என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். அவர்கள் கழுகு பறக்கும் வேகமாய் இஸ்ரவேல் புத்திரர்மேல் வருவார்கள். ரோமப்பேரரசின் சேனைக்கு கழுகானது அடையாளமாயிருக்கிறது.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து யூதாதேசத்தின் அழிவை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லும்போது, மோசே சொன்ன தீர்க்கதரிசனத்தையும், அவர் சொன்ன அடையாளத்தையும் உறுதிபண்ணுகிறார். "பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும்" (மத் 24:28) என்று கிறிஸ்துவானவர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிற ஜாதியார், அவர்களை முற்றிலுமாய் அழித்துப்போடுவார்கள். மோசே இதைப்பற்றிச் சொல்லும்போது, "நீ அழியுமட்டும் அந்த ஜாதியான் உன் மிருகஜீவன்களின் பலனையும், உன் நிலத்தின் கனியையும் புசிப்பான்; அவன் உன்னை அழித்துத் தீருமட்டும் உன் தானியத்திலும், திராட்சரசத்திலும், எண்ணெயிலும், உன் மந்தைகளிலுள்ள ஆடுமாடுகளிலும் உனக்கு ஒன்றும் மீதியாக வைக்கமாட்டான்" (உபா 28:51) என்று சொல்லுகிறார்.

அந்நிய தேசத்தின் சேனையிலுள்ளவர்கள் இஸ்ரவேல் தேசத்தின் கனிகளையெல்லாம் புசிப்பார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு மீதியாக ஒன்றும் இல்லாதவாறு, அந்நிய தேசத்தாரே எல்லாவற்றையும் தங்களுக்கு எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள்.

ரோமப்பேரரசார் ஒரு தேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும்போது, அந்த தேசத்தை முற்றிலுமாக அழித்துப்போடுவது வழக்கம். ரோமப்பேரரசின் போர்ச்சேவகர்கள், அந்த தேசத்தில் ஒன்றையும் மீதியாக வைக்காமல், எல்லாவற்றையும் தங்கள் தேசத்திற்கு எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். இதுபோன்ற சம்பவமே இஸ்ரவேல் தேசத்திற்கும் ஏற்படும்.

இஸ்ரவேல் தேசத்தின் பட்டணங்களையெல்லாம் சத்துருக்கள் முற்றிக்கைப்போடுவார்கள். இஸ்ரவேல் புத்திரரோ தங்கள் தேவனாகிய கர்த்தரை நம்பாமல், தங்கள் உயரமான மதில்களையும், அரண்களையும் நம்புவார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல் போனதினால், சாபங்கள் அவர்கள்மேல் வந்திருக்கிறது. அவர்கள் கர்த்தரை விட்டு விலகிப்போனதினால், கர்த்தரும் அவர்களை விட்டு விலகிப்போய்விடுகிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை விட்டு விலகிப்போகும்போது, கர்த்தருடைய பாதுகாப்பும் அவர்களை விட்டு விலகிப்போய்விடுகிறது. கர்த்தர் தம்முடைய ஜனத்தைப் பாதுகாக்கவில்லையென்றால், அவர்களுக்கு மெய்யான பாதுகாப்பு எதுவுமில்லை.

கர்த்தர் தங்களை விட்டு விலகிப்போனாலும், கர்த்தருடைய பாதுகாப்பு தங்களுக்கு கிடைக்காதே போனாலும் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பட்டணங்களிலுள்ள உயரமும் அரணிப்புமான மதில்கள் தங்களுக்கு பாதுகாப்பாயிருக்கும் என்று நம்புகிறார்கள். அவர்கள் நம்புகிற மதில்களெல்லாம் இடிந்து விழும். மோசே இதுபற்றி இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லும்போது,

"உன் தேசமெங்கும் நீ நம்பியிருக்கும் உயரமும் அரணிப்புமான உன் மதில்கள் விழுமளவும், அவன் உன் வாசல்களிலெங்கும் உன்னை முற்றிகைப்போடுவான்; உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த உன்னுடைய தேசமெங்குமுள்ள உன்னுடைய வாசல்கள் தோறும் உன்னை முற்றிகைப்போடுவான்" (உபா 28:52) என்று சொல்லுகிறார்.

சத்துருக்கள் இஸ்ரவேல் புத்திரரை முற்றிக்கைப்போட்டு, அவர்களை நெருக்கும் காலத்தில், அவர்களுக்கு வரும் வேதனைகளையும், நெருக்கங்களையும், பசியையும், பட்டினியையும் மோசே இந்த வசனப்பகுதியில் விரிவாகச் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

"உன் சத்துருக்கள் உன்னை முற்றிகைப்போட்டு நெருக்குங்காலத்தில், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த உன் கர்ப்பக்கனியான உன் புத்திரபுத்திரிகளின் மாம்சத்தைத் தின்பாய்" (உபா 28:53).

"உன் கர்ப்பக்கனியான உன் புத்திர புத்திரிகளின் மாம்சத்தைத் தின்பாய்" என்பது இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக சொல்லப்படும் சாபமான வார்த்தையாகும். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டு விலகிப் போனதினால் அவர்களுக்கு பெரிய சாபம் வருகிறது. (உபா 28:52-57). ஆகாபின் குமாரனாகிய யோராமின் காலத்தில் முதன் முறையாக இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது. (2இராஜா 6:24-31) கி.பி. 70 ஆம் வருஷத்தில் ரோமாபுரியார் எருசலேமை முற்றுகையிட்டு அதை அழித்தபோது இஸ்ரவேல் புத்திரர் பெருந்துயரத்தை அனுபவித்தார்கள்.

"உன் சத்துருக்கள் உன் வாசல்களிலெங்கும் உன்னை முற்றிகைப்போட்டு நெருக்குங்காலத்தில், உன்னிடத்தில் செருக்கும் சுகசெல்வமுமுள்ள மனிதன் சகலத்தையும் இழந்து, தன் இல்லாமையினாலே தான் தின்னும் தன் பிள்ளைகளின் மாம்சத்திலே, தன் சகோதரனுக்காகிலும், தன் மார்பில் இருக்கிற மனைவிக்காகிலும், தனக்கு மீந்திருக்கிற தன் மக்களில் ஒருவனுக்காகிலும் கொஞ்சமேனும் கொடாதபடி அவர்கள்மேல் வன்கண்ணாயிருப்பான் (உபா 28:54,55).

"உன்னிடத்தில் சுகசெல்வத்தினாலும் செருக்கினாலும் தன் உள்ளங்காலைத் தரையின்மேல் வைக்க அஞ்சின செருக்கும் சுகசெல்வமுமுள்ள ஸ்திரீ தன் கால்களின் நடுவே புறப்பட்ட தன் நஞ்சுக்கொடியினிமித்தமும், தான் பெற்ற பிள்ளைகளினிமித்தமும், தன் மார்பில் இருக்கிற புருஷன்மேலும் தன் குமாரன்மேலும் தன் குமாரத்தியின்மேலும் வன்கண்ணாயிருப்பாள்" (உபா 28:56).

" உன் சத்துருக்கள் உன் வாசல்களில் உன்னை முற்றிகைப்போட்டு நெருக்குங்காலத்தில், சகலமும் குறைவுபடுவதினால், அவைகளை இரகசியமாய்த் தின்னுவான்" (உபா 28:57).

"உன் தேவனாகிய கர்த்தர் என்னும் மகிமையும் பயங்கரமுமான நாமத்திற்குப் பயப்படும்படிக்கு, நீ இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படியெல்லாம் நடக்கக் கவனமாயிராவிட்டால், கர்த்தர் நீங்காத பெரிய வாதைகளாலும் நீங்காத கொடிய ரோகங்களாலும் உன்னையும் உன் சந்ததியையும் அதிசயமாய் வாதித்து, நீ கண்டு பயந்த எகிப்து வியாதிகளெல்லாம் உன்மேல் வருவிப்பார்; அவைகள் உன்னைப் பற்றிக்கொள்ளும்" (உபா 28:58-60).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தில் பல வியாதிகளைக் கண்டிருக்கிறார்கள். ஆனால் எந்த வியாதியும் அவர்களை அணுகாதவாறு கர்த்தர் தம்முடைய பிள்ளைகளைப் பாதுகாத்துக் கொண்டார். (உபா 7:15; யாத் 15:26).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல் போனதினிமித்தமாக, அவர்கள்மீது வரும் சாபங்களையும், அந்த சாபங்களினால் அவர்களுக்கு வரும் அழிவுகளையும் மோசே இந்த வசனப்பகுதியில் ஒவ்வொன்றாகச் சொல்லுகிறார். இதன் பின்பு இஸ்ரவேல் புத்திரருக்கு வரும் மொத்த அழிவைப்பற்றியும் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

"இந்த நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிராத எல்லாப் பிணியையும் வாதையையும் நீ அழியுமளவும் கர்த்தர் உன்மேல் வரப்பண்ணுவார்" (உபா 28:61) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்தால், அவர்கள் திரளான எண்ணிக்கையிலிருப்பார்கள். அவர்கள் வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப்போலவும் திரளான எண்ணிக்கையிலிருக்க வேண்டியவர்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியாமல் போகும்போது, ஆசீர்வாதம் அவர்களைவிட்டு நீங்கிப்போகிறது. அவர்களுக்கு சாபம் வருகிறது. சாபத்தினால் அவர்களுக்கு அழிவு வருகிறது. இஸ்ரவேல் புத்திரர் அழியும்போது, அவர்களுடைய எண்ணிக்கையும் குறைந்துபோகிறது.

"திரட்சியிலே வானத்து நட்சத்திரங்களைப்போல் இருந்த நீங்கள், உங்கள் தேவனாகிய கர்த்தரின் சத்தத்திற்குச் செவிகொடாமற்போனதினால், கொஞ்சம் ஜனமாய்ப் போவீர்கள். கர்த்தர் உங்களுக்கு நன்மை செய்யவும் உங்களைப் பெருகப்பண்ணவும் எப்படி உங்கள்மேல் இரம்மியமாயிருந்தாரோ, அப்படியே கர்த்தர் உங்களை அழிக்கவும் உங்களை அதம்பண்ணவும் இரம்மியமாயிருப்பார்; நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசத்திலிருந்து பிடுங்கிப் போடப்படுவீர்கள்" (உபா 28:62,63) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் திரட்சியிலே வானத்து நட்சத்திரங்களைப் போல் இருந்தார்கள். இஸ்ரவேல் புத்திரரின் எண்ணிக்கை வானத்து நட்சத்திரங்களுக்கும், தூசிக்கும், கடற்கரை மணலுக்கும் ஒப்பிட்டுச்சொல்லப்பட்டிருக்கிறது. (ஆதி 13:16; ஆதி 15:5; ஆதி 22:17; ஆதி 26:4; ஆதி 28:14; ஆதி 32:12).

கர்த்தர் தமக்கு சித்தமான காரியத்தை மாத்திரமே செய்வார். அவர் செய்கிற காரியங்களெல்லாமே அவருக்கு இரம்மியமான காரியமாயிருக்கும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு இரண்டுவிதமான காரியங்களை தம்முடைய மனரம்மியமாய்ச் செய்கிறார். அதன் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்திருந்தபோது கர்த்தர் அவர்களுக்கு நன்மை செய்யவும், அவர்களைப் பெருகப் பண்ணவும் அவர்கள்மேல் இரம்மியமாயிருந்தார்.

2. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்குக் கீழ்ப்படியாதிருந்தபோது அவர்களை அழிக்கவும் அவர்களை அதம்பண்ணவும் இரம்மியமாயிருந்தார்.

கர்த்தர் அன்புள்ளவர். கிருபையுள்ளவர். இரக்கமுள்ளவர். ஆகையினால் அவர் யாரையும் அழிக்கமாட்டார், அதம்பண்ணமாட்டார் என்று வியாக்கியானம் பண்ணக்கூடாது. அவர் கிருபையுள்ளவர். அதே சமயத்தில் அவர் நீதியுள்ளவர். இஸ்ரவேல் புத்திரரின் கடின இருதயம், வணங்காக் கழுத்து, கலகக்குணம் ஆகியவற்றின்நிமித்தமாக கர்த்தர் அவர்களைத் திருத்துவதற்காகச் சிட்சிக்கிறார். இஸ்ரவேல் புத்திரரைப் போலவே கர்த்தர் புறஜாதியாரையும், அவர்கள் தவறுசெய்யும்போது அவர்களைத் தண்டித்து விடுகிறார். (ரோமர் 1:18-32, நீதி 1:22-31).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியவில்லையென்றால், அவர்கள் சுதந்தரிக்கப்போகிற தேசத்திலிருந்து, கர்த்தர் அவர்களைப் பிடுங்கிப்போடுவார்.

இஸ்ரவேல் புத்திரர் சுதந்தரிக்கப்போகிற தேசத்திலிருந்து பிடுங்கிப்போடப்படுவது அவர்களுடைய பின்மாற்றத்திற்குக் கொடுக்கப்படும் கடைசி நியாயத்தீர்ப்பாகும். அவர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தால் வாக்குத்தத்த தேசத்தில் குடியிருப்பார்கள். அவர்களுடைய இரட்சிப்பும் இதில் அடங்கியிருக்கிறது. இந்தத் தேசத்தில் குடியிருக்க முடியாதவாறு அவர்கள் துன்மார்க்கமாக ஜீவித்தால் அவர்களால் பரலோகத்திற்குள்ளும் பிரவேசிக்க முடியாது.

கானான் தேசத்திலிருந்து அவர்கள் பிடுங்கிப்போடப்பட்டால் தங்களுடைய பாவங்களுக்குத் தண்டனையாக நித்திய மரணத்தை அனுபவிப்பார்கள். இதனால் நித்திய அழிவைப் பெறுவார்கள். பாவம் செய்தால் அவர்களுக்குத் தண்டனை உண்டு என்று கர்த்தர் அவர்களைப் பலமுறை எச்சரித்திருக்கிறார். (உபா 28:58-68; உபா 18:9-12; உபா 20:18; லேவி 18:27-30).

இஸ்ரவேல் புத்திரரில் சத்துருக்களின் பட்டயத்திற்கு தப்பிக்கிறவர்களாலும் தங்கள் தேசத்திலே பாதுகாப்பாக குடியிருக்க முடியாது. அவர்கள்மீது சாபம் வரும்போது அவர்கள் அழியுமட்டும் அந்த சாபம் அவர்களைத் தொடர்ந்து பிடிக்கும். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியாதபோது அவர்களுக்கு தங்கள் தேசத்தில் பாதுகாப்புமில்லை. அவர்கள் பூமியின் மீதெங்கும் சிதறடிக்கப்படுவார்கள். இஸ்ரவேல் புத்திரர் ஜாதிகளுக்குள்ளே சிதறடிக்கப்படுவதுபற்றி மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

"கர்த்தர் உன்னைப் பூமியின் ஒரு முனை துவக்கி பூமியின் மறுமுனைமட்டும் இருக்கிற எல்லா ஜனங்களுக்குள்ளும் சிதற அடிப்பார்; அங்கே நீயும் உன் பிதாக்களும் அறியாத மரமும் கல்லுமான அந்நிய தேவர்களைச் சேவிப்பாய்" (உபா 28:64) என்றும்,

"அந்த ஜாதிகளுக்குள்ளே உனக்கு இளைப்பாறுதல் இராது, உன் உள்ளங்கால்கள் தங்கித் தரிக்க இடமும் இராது; அங்கே கர்த்தர் உனக்குத் தத்தளிக்கிற இருதயத்தையும், சோர்ந்துபோகிற கண்களையும், மனச்சஞ்சலத்தையும் கொடுப்பார்" (உபா 28:65) என்றும்,

"உன் ஜீவன் உனக்குச் சந்தேகத்தில் ஊசலாடும்; உன் ஜீவனைப்பற்றி நம்பிக்கையில்லாமல் இரவும் பகலும் திகில்கொண்டிருப்பாய். நீ பயப்படும் உன் இருதயத்தின் திகிலினாலும், உன் கண்கள் காணும் காட்சியினாலும், விடியற்காலத்தில் எப்பொழுது சாயங்காலம் வருமோ என்றும், சாயங்காலத்தில், எப்பொழுது விடியற்காலம் வருமோ என்றும் சொல்லுவாய்" (உபா 28:66,67) என்றும்,

"இனிக் காணாதிருப்பாய் என்று நான் உனக்குச் சொன்னவழியாய், கர்த்தர் உன்னைக் கப்பல்களிலே எகிப்திற்குத் திரும்பிக் கொண்டுபோகப்பண்ணுவார்; அங்கே உங்கள் சத்துருக்களுக்கு வேலைக்காரராகவும் வேலைக்காரிகளாகவும் விற்கப்படுவீர்கள்; உங்களைக் கொள்வாரும் இல்லாதிருப்பார்கள்" (உபா 28:68) என்றும் மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

"கர்த்தர் உன்னைக் கப்பல்களிலே எகிப்திற்குத் திரும்பிக் கொண்டுபோகப் பண்ணுவார்" என்று மோசே கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியாத இஸ்ரவேல் புத்திரருக்கு தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரரின் ஒரு பகுதியினருக்கு இந்தத் தீர்க்கதரிசனம் பலமுறை நிறைவேறியிருக்கிறது (1இராஜா 14:25; 2இராஜா 23:29-34; 2இராஜா 25:26; 2நாளா 36:3-4).

தேசங்கள் மத்தியில் இஸ்ரவேல் புத்திரர் சிதறடிக்கப்பட்டு அவர்களால் ஒடுக்கப்பட்டார்கள். பல சமயங்களில் இஸ்ரவேல் தேசத்தார் அவர்களுடைய சத்துருக்களின் கைகளில் அடிமைகளாக இருந்தார்கள். இவ்வாறு உபா 28:68 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் செய்தி இஸ்ரவேல் புத்திரருக்கு நிறைவேறிற்று.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியவில்லையென்றால், கர்த்தர் அவர்களை பூமியின் ஒருமுனை துவக்கி, பூமியின் மறுமுனை மட்டும் இருக்கிற எல்லா ஜனங்களுக்குள்ளும் சிதறடிப்பார்.

இஸ்ரவேல் தேசத்தாரை தேசங்களுக்குள் சிதறடிக்கப்போவதைப் பற்றி கர்த்தர் 45 இடங்களில் கூறியிருக்கிறார். (உபா 28:64; உபா 4:27; உபா 29:24-28; உபா 30:1-10,15-20; உபா 31:29; உபா 32:2-44; உபா 33:27-29; லேவி 26:33; 1இராஜா 14:15; நெகே 1:8; சங் 44:11; சங் 59:11; சங் 60:1; சங் 106:27; எரே 9:16; எரே 13:24; எரே 18:17; எரே 23:1; எரே 30:11; எரே 31:10; எரே 49:32,36; எசே 5:10-12; எசே 6:8; எசே 11:16-17; எசே 12:14-15; எசே 17:21; எசே 20:23,34,41; எசே 22:15; எசே 28:25; எசே 29:13; எசே 34:5-21; எசே 36:19; யோவே 3:2; சக 1:19,21; சக 7:14; யாக் 1:1; 1பேதுரு 1:1).

பல தேசங்களிலிருந்து இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் கூட்டிச்சேர்க்கப்படுவதைப் பற்றியும் பல வேதவசனங்கள் விளக்கிக் கூறுகிறது (உபா 30:3-4; சங் 106:47; ஏசா 11:10-12; ஏசா 43:5; ஏசா 54:7; ஏசா 60:8-9; ஏசா 66:19-21; எரே 29:14; எரே 31:8-9; எசே 20:34,41; எசே 34:13; எசே 36:24; எசே 37:1-21; மத் 24:31).

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு எச்சரிப்பாக சொல்லுகிற இந்த வாக்கியங்கள் மூலமாக, விசுவாசிகளாகிய நாமும் ஆவிக்குரிய உபதேசங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும். மோசே தன்னுடைய சுயஆவியினாலே இந்த வார்த்தைகளைச் சொல்லாமல், தேவனுடைய ஆவியானவராலேயே இந்த வார்த்தைகளை சொல்லுகிறார்.

விசுவாசிகளாகிய நாமும், மோசேயின் வார்த்தைகளை வாசித்து, ஆவிக்குரிய எச்சரிப்புக்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும். பாவம் செய்யாதிருக்கவும், பாவத்தைவிட்டு விலகியிருக்கவும் நாம் மிகுந்த கவனமாயும் எச்சரிப்பாயும் இருக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தைக்கு நாம் கீழ்ப்படியும்போது நமக்கு ஆசீர்வாதமும், கீழ்ப்படியவில்லையென்றால் சாபமும் வரும். இது கர்த்தருடைய பொதுவான பிரமாணம்.

ஒரு சிலர் கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்காமல், அவருடைய கோபத்திற்கும், சாபத்திற்கும் தப்பிப்பதற்கு, தங்கள் சுயபுத்தியை சார்ந்து குறுக்கு வழியிலே முயற்சி பண்ணுகிறார்கள். பரிசுத்த வேதாகமத்திலிருந்து இந்த வசனப்பகுதியை கிழித்துப்போட்டால், தங்களுக்கு சாபமே வராது என்று இவர்கள் நினைக்கிறார்கள்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் யோயாக்கீம் என்னும் ராஜா எரேமியாவின் சுருளை வாசிக்கப் பிடிக்காமல், அதைக் கிழித்து அக்கினியிலே போட்டு சுட்டெரித்தான். இந்த சம்பவம் எரே 36:20-26 ஆகிய வசனப்பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

பிரபுக்கள் பாருக்கின் கையிலிருக்கிற சுருளை சம்பிரதியாகிய எலிசாமாவின் அறையிலே பத்திரமாக வைக்கிறார்கள். அதன் பின்பு அவர்கள் அரமனைக்குப்போய் யோயாக்கீம் ராஜாவின் செவிகளுக்கு இந்த வார்த்தைகளையெல்லாம் அறிவிக்கிறார்கள். ராஜா அந்த சுருளை எடுத்துக்கொண்டு வர யெகுதி என்பவனை அனுப்புகிறான். யெகுதி அதைச் சம்பிரதியாகிய எலிசாமாவின் அறையிலிருந்து எடுத்துக்கொண்டுவந்து, ராஜா கேட்கவும், ராஜாவினிடத்தில் நின்ற எல்லாப் பிரபுக்களும் கேட்கவும் வாசிக்கிறான் (எரே 36:20,21).

புஸ்தக சுருளை பாருக்கு வாசிப்பதை யோயாக்கீம் ராஜா விரும்பவில்லை. எரேமியா சொல்ல தான் எழுதின வார்த்தைகளை பாருக்கால் தெளிவாக வாசிக்க முடியும். பாருக்கு அதை அதிகாரத்தோடும், அன்போடும் வாசிப்பார். ஆனால் பாருக்கு அதை வாசிப்பதை ராஜா விரும்பவில்லை. பாருக்குக்குப் பதிலாக, அந்த புஸ்தக சுருளை யெகுதி வாசிக்கவேண்டும் என்று ராஜா விரும்புகிறான்.

கர்த்தரைக் கனம்பண்ணாதவர்கள் அவருடைய வார்த்தையையும் கனம்பண்ணமாட்டார்கள். கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிற அவருடைய ஊழியக்காரரையும் கனம்பண்ணமாட்டார்கள். யோயாக்கீம் ராஜா கர்த்தரையும் கனம்பண்ணவில்லை. அவருடைய ஊழியக்காரரையும் கனம்பண்ணவில்லை. ராஜாவுக்கு ஆவிக்குரிய காரியங்களில் ஆர்வமில்லை. ஆகையினால் கர்த்தருடைய வார்த்தையை யார் வேண்டுமானாலும் வாசிக்கலாம் என்று தீர்மானித்து, யெகுதியை வாசிக்க சொல்லுகிறான்.

பாருக்கு வாசித்த புஸ்தக சுருளிலிருந்து யெகுதி மூன்று அல்லது நான்கு பத்திகளை வாசித்து முடிக்கிறார். இது ஒன்பதாம் மாதம். குளிர்காலம். ராஜா குளிர்காலத்திற்கு தங்கும் வீட்டில் உட்கார்ந்திருக்கிறார். ராஜாவுக்கு முன்பாக கணப்பு மூட்டியிருக்கிறது.

கர்த்தருடைய வார்த்தையைக் கேட்க யோயாக்கீம் ராஜாவுக்கு பொறுமையில்லை. யூதாதேசத்தின் பிரபுக்கள் பாருக்கு வாசித்த செய்தியை பொறுமையோடு கேட்டார்கள். ராஜாவோ வேறு சிந்தனையிலிருக்கிறான். யெகுதி புஸ்தகத்திலுள்ள செய்தியை வாசிக்கும்போது, யோயாக்கீம் ராஜா அதை வேண்டா வெறுப்புடன் கேட்கிறான்.

யெகுதி மூன்று நாலு பத்திகளை வாசித்த பின்பு, ராஜா ஒரு சூரிக்கத்தியினால் அதை அறுத்து, சுருளனைத்தும் கணப்பிலுள்ள அக்கினியிலே வெந்துபோகும்படி, கணப்பிலிருந்த அக்கினியில் எறிந்துபோடுகிறான் (எரே 36:23).

கர்த்தர் தம்முடைய வார்த்தையின் மூலமாய் யோயாக்கீம் ராஜாவை கடிந்துகொள்கிறார். கர்த்தர் கடிந்துகொள்வதை யோயாக்கீமால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. யெகுதி பாருக்கு எழுதின புஸ்தகத்தை வாசித்தாலும், அந்த வார்த்தைகள் பாருக்கின் வார்த்தைகளல்ல. அது கர்த்தருடைய வார்த்தை. கர்த்தர் பரலோகத்திலிருந்து அனுப்பியிருக்கிற வார்த்தை. ஆனால் யோயாக்கீம் ராஜாவோ சர்வவல்லமையுள்ள தேவனுக்கு மதிப்பு கொடுக்கவில்லை. கர்த்தர் தன்னைக் கண்டித்து உணர்த்தும்போது அவன் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தவில்லை.

ராஜாவாயினும், அந்த வார்த்தைகளையெல்லாம் கேட்ட அவனுடைய சகல ஊழியக்காரராயினும் பயப்படவுமில்லை, தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்ளவுமில்லை (எரே 36:24).

யோயாக்கீம் ராஜா புஸ்தக சுருளை அக்கினியிலே சுட்டெரிக்கிறான். எல்நாத்தானும், தெலாயாவும், கெமரியாவுமோ: அந்தச் சுருளைச் சுட்டெரிக்கவேண்டாம் என்று ராஜாவினிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்கள்; ஆனாலும், ராஜா அவர்களுடைய விண்ணப்பத்திற்கு செவிகொடுக்கவில்லை.

ராஜாவுக்கு பாருக்கின்மீதும் எரேமியாவின்மீதும் கோபம் வருகிறது. பாருக்கும் எரேமியாவும் யோயாக்கீம் ராஜாவுக்கு அருகில் இருந்திருந்தால், புஸ்தக சுருளை அக்கினியில் எறிந்துபோட்டதுபோல, அவர்களையும் அக்கினியிலே தூக்கிப்போட்டிருப்பான். கர்த்தர் எரேமியாவையும் பாருக்கையும் மறைக்கிறார். யோயாக்கீமால் அவர்களை ஒன்று செய்யமுடியவில்லை.

யோயாக்கீம் ராஜா தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. தனக்கு சொல்லப்பட்ட எச்சரிப்பின் வார்த்தைகளுக்கும் அவன் செவிகொடுக்கவில்லை. புஸ்தக சுருளை அக்கினியிலே எறிந்துபோட்டால், அந்த சுருளில் எழுதப்பட்ட வார்த்தைகள் தனக்கு விரோதமாக நிறைவேறாது என்று யோயாக்கீம் நினைக்கிறான். கர்த்தருடைய வார்த்தையை அழிக்க முடியாது. கர்த்தருக்கு விரோதமாக யாராலும் யுத்தம்பண்ணி ஜெயிக்க முடியாது.

புஸ்தக சுருளை அக்கினியில் எறிந்துபோட்டதினால் அதில் எழுதப்பட்டிருக்கிற செய்திகள் யூதாதேசத்திலே பரம்பாது என்று யோயாக்கீம் நம்புகிறான். அந்தச் செய்தி அக்கினியிலே எறிந்துபோகும் என்றும், அதன்பின்பு அந்தச் செய்தியைக் கேட்பதற்கு வாய்ப்பு உண்டாகாது என்றும் யோயாக்கீம் நினைக்கிறான்.

புஸ்தக சுருளில் எழுதப்பட்டிருக்கிற வார்த்தைகள் ராஜாவுக்கு ஒரு பாதிப்பும் உண்டுபண்ணவில்லை. ராஜாவாயினும், அந்த வார்த்தைகளையெல்லாம் கேட்ட அவனுடைய சகல ஊழியக்காரராயினும் பயப்படவுமில்லை, தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்ளவுமில்லை (எரே 36:24).

பிரபுக்கள் புஸ்தக சுருளிலுள்ள வார்த்தைகளைக் கேட்டபோது, அவர்கள் பயமுற்றவர்களாய் ஒருவரையொருவர் பார்த்து நடுங்கினார்கள் (எரே 34:16). ஆனால் இப்போது அவர்கள்கூட பயப்படவில்லை. அவர்களும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்ளவில்லை.

புஸ்தக சுருளிலுள்ள வார்த்தைகளை ராஜா கேட்டு, அவர் வேதனைப்படுவாரோ என்று நினைத்து பிரபுக்கள் பயந்தார்கள். ராஜாவோ துணிகரமாய்ப் பாவம் செய்கிறான். புஸ்தக சுருளையே அக்கினியில் எறிந்துபோடுகிறான். அதைப் பார்த்து பிரபுக்களும் துணிகரம் கொள்கிறார்கள். அவர்களிடத்தில் காணப்பட்ட பயம் அவர்களை விட்டு நீங்கிப்போயிற்று. பிரபுக்களும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்ளாமல், கர்த்தருக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறார்கள். துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள்.

யூதா ராஜாவின் பிரபுக்களில் மூன்றுபேர் கர்த்தருக்கு பயந்தவர்களாயிருக்கிறார்கள். எல்நாத்தான், தெலாயா, கெமரியா ஆகிய மூன்று பிரபுக்களும், யோயாக்கீம் ராஜா புஸ்தக சுருளை அக்கினியிலே எறிந்துபோடும்போது, "அந்தச் சுருளை சுட்டெரிக்கவேண்டாம்" என்று ராஜாவினிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்கள் (எரே 36:25). ஆனால் அவர்களுடைய முயற்சி வீணாய்ப்போயிற்று. யோயாக்கீம் ராஜா தன்னுடைய மூன்று பிரபுக்களின் விண்ணப்பங்களுக்கு செவிகொடுக்கவில்லை. புஸ்தக சுருளை அக்கினியிலே சுட்டெரிக்கிறான்.

யோயாக்கீம் புஸ்தக சுருளை சுட்டெரித்ததோடு, எரேமியாவையும் பாருக்கையும் பழிவாங்கவேண்டும் என்றும் நினைக்கிறான். பாருக்கு என்னும் சம்பிரதியையும் எரேமியா தீர்க்கதரிசியையும் பிடித்து வருமாறு, தன்னுடைய மனுஷரில் இரண்டு பேருக்கு கட்டளைகொடுக்கிறான். கர்த்தரோ எரேமியாவையும் பாருக்கையும் அவர்களுடைய கண்களுக்கு மறைக்கிறார் (எரே 36:26).

மனுஷனால் தேவனுடைய வார்த்தையை அழிக்க முடியாது. பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிற வேதவாக்கியங்களெல்லாம், தேவனுடைய தெய்வீக ஆலோசனைகளில் பதிவு பண்ணப்பட்டிருக்கிறது. அதை அழித்துப்போடும் உபாயமும், பெலனும் எந்த மனுஷனுக்கும் இல்லை.

பாவத்தின் சம்பளம் மரணம் என்று தேவன் தீர்மானித்திருக்கிறார். மனுஷன் இந்த வார்த்தைகளைக் கேட்டாலும் கேட்காவிட்டாலும், அவன் கர்த்தருடைய வார்த்தைகளையும் நம்பினாலும் நம்பாவிட்டாலும், பாவத்தின் சம்பளம் மரணமாகவே இருக்கும்.

கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடாமல் பாவத்தில் ஜீவித்தாலும் கர்த்தர் அவர்களைத் தண்டிக்காமல் தொடர்ந்து ஆசீர்வதிப்பார் என்பதற்கு வேதவசனங்களில் ஆதாரம் எதுவுமில்லை. கர்த்தர் எல்லாக் காரியங்களையும் நன்மையாகவும், நீதியாகவும் செய்கிறவர். தமக்குக் கீழ்ப்படிகிறவர்களைக் கர்த்தர் ஆசீர்வதிக்கிறார். தமக்குக் கீழ்ப்படியாமல் தமக்கு விரோதமாகக் கலகம் செய்கிறவர்களைக் கர்த்தர் சபிக்கிறார். கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. கர்த்தரை விட்டு விலகிப்போனால் சாபம் வரும் என்னும் எச்சரிப்பு பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப் போனவர்களுக்குக் கர்த்தருடைய எச்சரிப்புக்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. கீழ்ப்படியாதவர்களைப் பிடுங்கிப்போடுவார். (உபா 28:63).
2. கனி கொடுக்காத கிளைகள் தரித்துப் போடப்படும். (ரோமர் 11:17-22; யோவான் 15:1-6).
3. ஜீவபுஸ்தகத்திலிருந்து பெயர்கள் கிறுக்கிப்போடப்படும். (யாத் 32:32-33; சங் 69:28; வெளி 3:5).
4. மனந்திரும்பாவிட்டால் பாவம் செய்தவர்கள் குற்றமுள்ளவர்களாகத் தீர்மானிக்கப்படுவார்கள் (யாத் 34:6-7).
5. தம்முடைய பார்வையிலிருந்து துரத்திப் போடுவார். (1இராஜா 9:7; 2இராஜா 24:20; 2நாளா 7:19-22; எரே 7:15; எரே 15:1; எரே 23:39).
6. துரத்திவிடுவார். (ஓசி 9:17; ரோமர் 11:15; 2கொரி 9:27).
7. ஒன்றுக்கும் பிரயோஜனமற்றவர்களாகத் துரத்திவிடுவார். (மத் 5:13; லூக்கா 14:34-35).
8. நித்திய காலமாகத் துரத்திவிடுவார். (1நாளா 28:9).
9. கீழே தள்ளிவிடுவார். (2நாளா 25:8; எரே 6:15; எரே 8:12).
10. இனிமேல் கிருபையைக் காண்பிக்காதபடி துரத்திவிடுவார். (எரே 16:13).
11. பிரயோஜனமற்ற ஊழியக்காரர்களாகத் துரத்திவிடுவார். (மத் 25:30).
12. நரகத்திற்குத் தள்ளிவிடுவார். (2பேதுரு 2:4-6; யூதா 1:5-7; அப் 1:25).
13. அழிவுக்கு நியமித்து விடுவார். (உபா 8:11-20; உபா 30:17-20; யோசு 23:6-14; யோபு 36:12).
14. ஆசீர்வாதங்களைச் சபிப்பார் (மல் 2:2).
15. பல சாபங்களால் சபிப்பார். (உபா 28:20=2இராஜா 17; 2இராஜா 25; 2நாளா 36; லூக்கா 21:20-24).
16. தம்முடைய பிரசன்னத்திலிருந்து அகற்றிப் போடுவார். (லேவி 22:3; 2இராஜா 17; லூக்கா 21:20-24).
17. பாவம் செய்கிற அனைவரையும் அகற்றிப்போடுவார். (மல் 2:12; ரோமர் 11:22-24; 1இராஜா 9:7; சங் 44:9; சங் 60:1,10).

18. அழித்துப்போடுவார். (எரே 12:17; 2கொரி 3:16-17; 2கொரி 10:1-13; யூதா 1:5-7).

19. பட்சித்துப்போடுவார். (ஏசா 1:19; எரே 1:16; எரே 2:13,17,19; எரே 5:19; எரே 9:13; எரே 15:6; எரே 16:11; எரே 17:13; எரே 19:4; எரே 22:9).

20. மறுதலிப்பார். (2தீமோ 2:12).

21. கைவிட்டுவிடுவார். (2நாளா 15:2; 2நாளா 24:20; எஸ்றா 8:22).

22. மனுஷர் மனந்திரும்பினால் மட்டுமே அவர்களை மன்னிப்பார். (லேவி 26:40-42; 1யோவான் 1:9).

23. திராட்சைக் கொடிகள் செடிகளில் ஒட்ட வைப்பதுபோல மனந்திரும்பியவர்களைக் கிறிஸ்து மறுபடியும் ஒட்ட வைப்பார் (ரோமர் 11:17-24).

24.அக்கினிக்குள் தள்ளிவிடுவார். (மத் 3:8-10; யோவான் 15:1-6).

25. வருத்தி, பட்சித்துப்போடுவார். (யோசு 24:20; 1சாமு 12:24-25).

26. தேவனை ஏற்கெனவே அறிந்திருந்து அவரை மறுதலிக்கிறவர்களைக் கைவிட்டு விடுவார் (ரோமர் 1:21-32).

27. ஏற்கெனவே இரட்சிக்கப்பட்டவர்கள் பாவம் செய்யும்போது தங்கள் ஆத்துமாக்களை அவர்கள் இழந்துபோக அனுமதிப்பார். (யோவான் 17:12).

28. அழிவினால் தண்டிப்பார். (சங் 73:27; உபா 29:19-28; லேவி 10, லேவி 16).

29. ஜனங்களுக்கு முன்பாகத் தடைக்கற்களை வைப்பார் (எசே 3:20).

30. கோபத்தை ஊற்றுவார் (உபா 11:16-21).

31. நீதிமான் பாவம் செய்யும்போது அவனுக்கு நித்திய மரண தண்டனை தருவார். (எசே 3:20; எசே 18:4,24; எசே 33:12-18; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13).

32. தமது பார்வையிலிருந்து அகற்றிப் போடுவார். (2இராஜா 23:27).

33. ஒவ்வொருவனுக்கும் அவனுடைய கிரியையின்படி நீதிசெய்வார். (நீதி 24:12,29; சங் 62:12; ரோமர் 2:6).

34. தம்முடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாதோரை நியாயந்தீர்ப்பார். (1இராஜா 2:3-4).

35. கர்த்தரை விட்டு தூரவிலகி அவருடைய சத்தத்தைக் கேட்க மறுப்போரை நியாயந்தீர்ப்பார் (ஏசா 1:4-15; நீதி 1:24-31).

36. அவர்களை ஆக்கினைத் தீர்ப்பிற்கு நியமித்து வைப்பார் (2பேதுரு 2:9).

37. ஜீவபுஸ்தகத்திலிருந்து அவர்களுடைய பங்கை எடுத்துப்போடுவார் (வெளி 22:18-19).

38. அவர்களிடமிருந்து திரும்பி விடுவார். (எசே 7:22).

39. அவர்களில் பிரியமாய் இருக்கமாட்டார். (எபி 10:38-39).

40. அவர்களுக்கு விரோதமாக தம்முடைய முகத்தைத் திருப்புவார். (லேவி 26:14-17; 1பேதுரு 3:12).

41. தணியாத கோபத்தை அனுப்புவார். (2நாளா 34:25; கொலோ 3:5-8).

42. நித்திய நரகத்தில் அவர்களை எடுத்துக்காட்டுக்களாக வைப்பார். (2பேதுரு 2:4; யூதா 1:5-7; ஏசா 66:22-24).

43. தேவதூஷணம் சொல்லும் ஜனங்களுக்கு இரக்கம் காண்பிக்கமாட்டார் (எபி 6:4-6; எபி 10:26-29; 2பேதுரு 2:4; யூதா 1:5-7).

44. அவர்களை வாந்திப்பண்ணிப் போடுவார். (வெளி 3:16).

45. அவர்களை முழுவதுமாக மறந்து விடுவார். (எரே 23:39).

46. அவர்களை முழுவதுமாகக் கைவிட்டு விடுவார். (எரே 23:39).

47. அவர்களை முழுவதுமாக அகற்றிப் போடுவார். (எண் 15:30-31; 1இராஜா 9:7; யோவான் 15:1-6).

48. வாதைகளால் தண்டிப்பார். (உபா 28:27-35).

49. நாணலைப்போல முறித்துப்போடுவார். (1இராஜா 14:15).

50. தப்பவிடமாட்டார். (உபா 29:20; எரே 13:14; எரே 21:7; எசே 7:4-9; எசே 18:9-10; ரோமர் 11:21; 2பேதுரு 2:4-5).

51. துன்மார்க்கருக்கு எதிராகக் கர்த்தருடைய கோபம் புகையும் (உபா 29:20-28).

52. அவர்களைச் சபிப்பார். (உபா 28:19-26).

53. தமது முகத்தை அவர்களுக்கு மறைப்பார். (உபா 28:20).

54. அவர்கள்மீது துன்மார்க்கத்தைக் குவிப்பார். (உபா 32:23).

55. அவர்களை அழிவினால் சபிப்பார். (உபா 32:24).

56. தம்மை விரோதிக்கிறவர்களுக்குப் பதில் அளிப்பார். (உபா 28:36-41).

மனுஷனுடைய இரட்சிப்பில் அவனுக்கும் ஒரு பங்கு இருக்கிறது. எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்பது கர்த்தருடைய சித்தம். ஆயினும் தான் இரட்சிக்கப்படவேண்டுமா அல்லது அழிந்துபோக வேண்டுமா என்பதை ஒவ்வொரு மனுஷனும் தீர்மானம் பண்ண வேண்டும். (யோவான் 3:16; 1தீமோ 2:4; 2பேதுரு 3:9; வெளி 22:17).

இரட்சிக்கப் படுவதற்கு கர்த்தர் விதித்திருக்கும் நிபந்தனைகளை மனுஷன் நிறைவேற்ற வேண்டும். இல்லையென்றால் அவனுடைய ஆத்துமா அழிந்துபோகும். (மாற்கு 16:16; யோவான் 3:3,5; நீதி 1:24-31)

இரட்சிக்கப்பட்ட மனுஷன் மறுபடியும் தேவனுக்கு எதிராகப் பாவம் செய்தால், அவனுக்கு அழிவு நிச்சயம். அவனுடைய அழிவிற்கு அவனே காரணம். ஒருவன் இரட்சிக்கப்படாமல் போவதற்கு தேவன் காரணமல்ல. மனுஷன் தான் இரட்சிக்கப்பட வேண்டுமென்று தீர்மானம் பண்ணவேண்டும். மனுஷனுடைய இரட்சிப்பில் மனுஷனுடைய பங்கும் உள்ளது.

கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டு அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அவரை நம்பி ஜீவிக்கும் விசுவாசியை யாராலும் பறித்துக்கொள்ள முடியாது. அவர் கர்த்தருடைய பலத்த கரங்களில் அடைக்கலமாக இருக்கிறார் (யோவான் 10:28-29) அதே சமயத்தில் ஒருவன் அவிசுவாசியாகவும், துன்மார்க்கனாகவும் ஜீவிப்பானானால் கர்த்தரே அவனைப் பறித்துப் போடுவார்.

மனுஷருடைய இரட்சிப்பில் அவனுக்கும் ஒரு பங்கு இருக்கிறது. எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாகயிருந்தாலும், தான் இரட்சிக்கப்படவேண்டுமா அல்லது தான் இரட்சிக்கப்படாமல் அழிந்துபோகவேண்டுமா என்பதை மனுஷனே தீர்மானம்பண்ணவேண்டும். மனுஷனால் செய்யக்கூடிய ஒரு சில காரியங்களைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசிப்பது (மாற்கு 1:15; மாற்கு 16:16; லூக்கா 13:1-5; யோவான் 3:16; ரோமர் 1:16; ரோமர் 10:9-10)

2. தன்னுடைய சொந்த சுயாதீன சித்தத்தின் பிரகாரம் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்வதா அல்லது அதை புறக்கணிப்பதா என்று தீர்மானிப்பது (யோவான் 1:11-12; யோவான் 3:16-18; ரோமர் 1:16; 1தீமோ 2:4; 2பேதுரு 3:9; வெளி 22:17).

3. கிறிஸ்துவைப் பின்பற்றுவதா அல்லது பின்பற்ற வேண்டாமா என்று தீர்மானம் பண்ணுவது (மத் 16:24; மாற்கு 8:34; மாற்கு 10:21; லூக்கா 9:23; யோவான் 12:26; 1பேதுரு 2:21).

4. கர்த்தருடைய வார்த்தையில் இடறிவிழுதல். (1பேதுரு 2:8).

5. ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டுவிடுதல். (1தீமோ 5:12).

6. நம்பிக்கையை இழந்துபோதல் (எபி 10:35).

7. கிருபையிலிருந்து விழுந்து விடுதல் (கலா 1:6-8; கலா 5:4; எபி 12:15; எரே 16:13).

8. தேவனுடைய கிருபையைப் பெற்றுக் கொள்ளத் தவறுதல். (எபி 12:15).

9. உறுதியில்லாமல் இருத்தல். (2பேதுரு 3:14-18).

10. நித்திய ஜீவனைப் பெற்றுக்கொண்ட பின்பு, தன் ஆத்துமாவை அழித்துப் போடுதல். (யோவான் 17:2= யோவான் 17:12).

11. மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படுதல்.

(1) நியாயப்பிரமாணம் (கலா 5:1,4)

(2) இப்பிரபஞ்சத்தின் காரியங்கள் (2தீமோ 2:4)

(3) இப்பிரபஞ்சத்தின் பாவங்கள் (2பேதுரு 2:20-22)

12. கர்த்தரைத் தெரிந்த பின்பு, அவரை விட்டுப் பின்வாங்கிப்போவது. (எரே 7:26; எரே 16:12; மத் 12:43-45; லூக்கா 11:26; யோவான் 5:14; 2பேதுரு 2:20-21).

13. கர்த்தரைவிட்டுத் திரும்பிப்போய், தன் ஆத்துமாவைக் கெடுத்துக் கொள்வது. (உபா 29:18-28; கலா 1:6-8; கலா 5:4; 2பேதுரு 2:20-22).

14. பாவத்தில் மறுபடியும் விழுந்து தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டிருப்பது. (ஏசா 59:2).

15. வழிவிலகிச்செல்வது. (நீதி 28:10; எசே 14:11; மத் 18:12-13; 1பேதுரு 2:25; 2பேதுரு 2:15).

16. ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டுவிட்டு, கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து போவது. (வெளி 2:5-6).

17. தேவனிடத்திலும், மனுஷனிடத்தில் காண்பிக்க வேண்டிய அன்பில் குளிர்ந்து போவது. (மத் 24:12).

18. கிறிஸ்துவின் இரத்தத்தினால் தன் பாவம் கழுவப்பட்டதை மறந்துவிடுவது. (2பேதுரு 1:9).

19. விசுவாசத்திலிருந்து வழிவிலகிச் செல்வது. (1தீமோ 6:10,21).

20. கர்த்தருடைய சத்தத்தைக் கேட்காமல், அவரைப் பின்பற்றாமல் அழிந்துபோவது. (உபா 8:19-20; உபா 28:20-22; உபா 30:19; மத் 18:14; யோவான் 10:28-29; 2கொரி 8:11; 2பேதுரு 2:12-22).

21. விசுவாசமாகிய கப்பலைச் சேதப் படுத்துவது. (1தீமோ 1:19).

22. இரட்சிப்பைப் புறக்கணித்து தேவகோபத்திலிருந்து தப்பிக்க முடியாமல் இருப்பது. (எபி 2:1-3).

23. பின்வாங்கிப்போய் மார்க்க பேதத்தாராயிருப்பது. (சங் 51:10, எபி 6:4-9, எபி 10:26-29)

24. விசுவாசத்தை விட்டு விலகிப்போவது. (1தீமோ 4:1).

25. அநியாயத்தை விட்டு விலகுவது. (2தீமோ 2:19).

26. தேவனுடைய வார்த்தையை விட்டு விலகுவது. (2சாமு 22:23).

27. தேவனைவிட்டு விலகுவது. (2சாமு 22:22; ஏசா 59:13; ஓசி 1:2).

28. தேவனைப் பின்பற்றுவதிலிருந்து விலகிப்போவது. (2நாளா 34:33; சங் 18:21; சங் 119:102).

29. வழியை விட்டு விலகிப்போவது. (மல் 2:8).

30. இருதயத்தில் கர்த்தரை விட்டு விலகிச் செல்வது. (எரே 17:5; எபி 3:12).

31. இருதயத்திலிருந்து தேவனுடைய வார்த்தை விலகிச் செல்ல அனுமதிப்பது. (உபா 4:9).

32. பரிசுத்த ஆவியானவரைத் தன்னிடத்திலிருந்து விலகிப்போக அனுமதிப்பது. (1சாமு 16:14).

33. தன்னிடத்திலிருந்து கர்த்தரை விலகிப்போக வைப்பது. (1சாமு 18:12; 1சாமு 28:15-16).

34. கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள மறுப்பது. (யாத் 16:28; நெகே 9:16-17).

35. கர்த்தருடைய பிரமாணத்தில் நடக்க மறுப்பது. (சங் 78:10).

36. கர்த்தரை விட்டுவிலகிச் சென்ற பின்பு, மறுபடியும் அவரிடத்தில் வர மறுப்பது. (எரே 5:3; எரே 8:5; ஓசி 11:5).

37. கர்த்தருடைய சத்தத்தைக் கேட்காமல் கலகம்பண்ணுவது. (ஏசா 1:20).

38. கர்த்தருடைய வார்த்தையைக் கேட்க மறுப்பது. (எரே 13:10).

39. நித்திய ஜீவனைப் பொறுமையோடு பற்றிக் கொள்வது. (ரோமர் 2:7).

40. கர்த்தரைத் தொடர்ந்து பின்பற்றுவது. (1சாமு 12:14-15).

41. கர்த்தருடைய வார்த்தையில் தொடர்ந்து நிலைத்திருந்து அவருடைய சீஷராக இருப்பது. (யோவான் 8:31).

42. கர்த்தருடைய அன்பில் நிலைத்திருப்பது அல்லது நிலைத்திராமல் போவது. (யோவான் 15:9).

43. கிருபையில் தொடர்ந்திருப்பது (அப் 13:43), அல்லது கிருபையிலிருந்து விலகிச் செல்வது. (கலா 1:6-8; கலா 5:4; எபி 12:15).

44. விசுவாசத்தில் நிலைத்திருப்பது (அப் 14:22), அல்லது விசுவாசத்தை விட்டு விலகிச் செல்வது. (1தீமோ 1:19; 1தீமோ 4:1; 1தீமோ 5:12; 1தீமோ 6:10,21).

45. கர்த்தருடைய நன்மையைப் பற்றிக் கொண்டு ஆசீர்வதிக்கப்படுவது. (ரோமர் 11:22).

46. விசுவாசத்தில் நிலைத்திருந்து ஆசீர்வதிக்கப்படுவது. (கொலோ 1:23; 1தீமோ 2:15).

47. சத்தியத்தில் நிலைத்திருந்து முடிவில் இரட்சிக்கப்படுவது. (1தீமோ 4:16).

48. நித்திய ஜீவனைத் தனக்குள் தொடர அனுமதிப்பது. (1யோவான் 2:24-25), அல்லது தனது பாவத்தினால் நித்திய ஜீவனை இழந்துபோவது. (ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; கலா 6:7-8).

49. இரட்சிக்கப்பட்ட பின்பு தேவனை உயர்த்தாமல் இருப்பது. (உபா 32:15-20).

50. பாவம் செய்த பின்பு மீட்கப்படுவது. (கலா 6:1).

51. பாவம் செய்தபின்பு மறுபடியும் பாவம் செய்வது. (யாத் 32:7; உபா 4:16,25; உபா 9:12; உபா 31:29; உபா 32:5; எபே 4:29; 2பேதுரு 1:4; 2பேதுரு 2:12,19-22).

52. ஏவாளைப்போல கிறிஸ்துவின் எளிமையைத் தவறாக நினைப்பது. (2கொரி 11:3).

53. தங்கள் சொந்த இச்சைகளில் இழுப்புண்டு, ஆவிக்குரிய ரீதியாக மரித்துப் போவது. (யாக் 1:13-15).

54. ஆத்தும இரட்சிப்பில் வளர்ச்சி பெறுவதற்குப் பதிலாக பின்வாங்கிப் போவது. (எபி 10:38-39).

55. கர்த்தருக்குத் தங்களுடைய முதுகைக் காண்பிப்பது. (எரே 2:27).

56. நித்தியமாகப் பின்வாங்கிப் போவது. (எரே 8:5).

57. பின்வாங்கிப்போவது. (எரே 38:22; எரே 46:5).

58. பின்வாங்கும் கிடாரியைப்போல பின்வாங்குவது. (ஓசி 4:16).

59. பின்னிட்டுப் பார்த்து தேவனுடைய ராஜ்யத்திற்கு அபாத்திரனாய்ப் போவது. (லூக்கா 9:62).

60. பின்வாங்கிப்போய் தேவனோடும், கிறிஸ்துவோடும் நடக்க மறுப்பது. (யோவான் 6:66).

61. தங்கள் சொந்த வழிகளில் நிரப்பப்படுவது. (நீதி 14:14).

62. மறுபடியும் வேசித்தனம் பண்ணுவது. (எரே 3:6).

63. மறுபடியும் விபசாரம் பண்ணி (எரே 3:8),, தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரியாமல் போவது. (2கொரி 6:9-11; கலா 5:19-21; வெளி 22:15).

64. கர்த்தர் கட்டாயம் பண்ணாவிட்டாலும், (வெளி 22:17) கர்த்தரிடத்தில் திரும்பி வருவது. (எரே 3:12,22).

65. பின்மாற்றத்திற்கு வளைந்து கொடுப்பது. (ஓசி 11:7).

66. பின்மாற்றத்திலிருந்து திரும்பி வந்து குணம் பெறுவது. (எரே 3:22; ஓசி 14:4).

67. பின்மாற்றத்தில் அதிகரிப்பது. (எரே 5:6).

68. பல பின்மாற்றங்களைப் பெற்றிருப்பது. (எரே 14:7).

69. முன்நோக்கிச் செல்லாமல், பின்நோக்கிச் செல்வது. (எரே 7:24).

70. கர்த்தருடைய உடன்படிக்கையை மீறும் வரையிலும் (உபா 31:16-17; 1நாளா 28:9; 2நாளா 15:2; ஏசா 1:28; எரே 23:33,39). கர்த்தர் கைவிடமாட்டார் என்று உறுதியாக இருப்பது. (உபா 4:31; உபா 31:6-8; எபி 13:5).

71. உடன்படிக்கையைக் கைவிட்டு விடுவது (உபா 29:25).

72. தேவனைக் கைவிட்டுவிடுவது. (உபா 32:15; நியா 10:10,13; நியா 12:10; 1இராஜா 11:33; 2இராஜா 22:17; 2நாளா 12:5; ஏசா 1:4; எரே 2:13).

73. கற்பனைகளைக் கைவிட்டுவிடுவது. (1இராஜா 18:18).

74. சரியான வழியைக் கைவிட்டுவிடுவது. (2பேதுரு 2:15).

75. தேவன் இரக்கம் காண்பிக்காத அளவிற்குப் பாவம் செய்வது. (உபா 29:20; எரே 13:14; எசே 5:11; எசே 7:4-9; எசே 8:18; எசே 9:10; எசே 24:14; ரோமர் 11:20-21; 2பேதுரு 2:4-5; யூதா 1:5-7).

76. விரும்பினால் முடிவு வரையிலும் நிலைத்திருப்பது. (மத் 10:22; யாக் 1:12; யாக் 5:11).

77. சுவிசேஷத்தின் நம்பிக்கையிலிருந்து விலகிச் செல்வது. (கொலோ 1:23).

78. மாம்சத்திற்காக விதைத்து நித்திய ஜீவனை அறுப்பதற்குப் பதிலாக அழிவை அறுப்பது. (ரோமர் 8:12-13; கலா 6:7-8).

79. ஆவியில் ஜீவித்து ஆவியில் நடப்பது. (கலா 5:16-26).

80. பாவம் செய்கிறபோது மறுபடியும் மரிப்பது. (ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; யாக் 1:13-15; யாக் 5:19-20).

81. தங்களில் கிறிஸ்து இல்லாமல் மார்க்கபேதத்தாராவது. (1கொரி 9:27; 2கொரி 13:5).

82. பாவத்தினால் நிறைந்து தேவனை விரோதிக்கிறவர்களாவது. (ரோமர் 1:21-32).

83. கீழ்த்தரமான பாவங்களைச் செய்து மரண வேதனையையும், நரக வேதனையையும் அனுபவிப்பது. (ரோமர் 1:21-32).

84. தேவனை மறுதலிக்கும் நிலைமைக்குப் பின்வாங்கிப்போவது. (லேவி 26:15).

85. தேவனுக்கு விரோதமாக நடப்பது. (லேவி 26:21,23).

86. தேவனோடு செல்ல மறுப்பது. (உபா 28:58-63; ரோமர் 6:16-23).

87. தேவனைக் கோபப்படுத்துவது. (உபா 32:15-20).

88. தேவனைவிட்டு விலகிச்சென்று தேவனால் அழிக்கப்படுவது. (எண் 32:15).

89. தங்களுடைய இருதயங்களில் தேவனை விட்டு விலகிச்சென்று பாவத்தில் மூழ்குவது. (உபா 30:17-20)

90. மனந்திரும்பி, பாவங்களை அறிக்கையிட்டு தேவனால் ஆசீர்வதிக்கப் படுவது. (1இராஜா 8:33-35; 2நாளா 6:26,37; 2நாளா 7:14) மறுபடியும் பாவத்தில் ஜீவித்து சபிக்கப்படுவது. (2நாளா 7:19; 2நாளா 30:6-9).

91. உலகத்தின் காரியங்களுக்கு மறுபடியும் திரும்புவது (கலா 4:9)

92. சாத்தானுடைய வழிகளைப் பின்பற்றிச் செல்வது. (1தீமோ. 5:15).

93. சத்தியத்திலிருந்து தங்கள் செவிகளை விலக்குவது. (2தீமோ. 4:1-4).

94. நீதியிலிருந்து விலகி பாவத்தில் மரிப்பது. (எசே 3:20; எசே 18:24-26; எசே 33:12-18; ரோமர் 8:12-13; கலா 5:19-21; கலா 6:7-8)

95. சிறிதுகாலம் நிலைத்திருந்து அதன்பின்பு பாவத்தில் விழுந்து, தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்துவது. (மாற்கு 4:17-19; லூக்கா 8:13).

96. லோத்தின் மனைவி, லூசிபர், தேவதூதர்கள் ஆகியோரை நினைத்துப் பார்த்து தேவனுடைய கிருபையிலிருந்து விழுந்துவிடாதவாறு எச்சரிப்பைப் பெறுவது. (லூக்கா 17:32).

97. கிறிஸ்துவில் நிலைத்திருப்பது அல்லது கிறிஸ்துவை விட்டு விலகிப்போவது. (யோவான் 15:1-6; 1 யோவான் 2:24-25; 2 யோவான்1:9).

98. தேவனைத் தொடர்ந்து பிரியப்படுத்தாமல் ஜீவித்து அழிக்கப்படுவது. (2கொரி. 10:1-13; யூதா 1:5-7).

99. சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாமல் வழிவிலகிச் செல்வது. (கலா 3:1; கலா 5:1-7).

100. தேவனை மறுதலிப்பதும், தேவனால் மறுதலிக்கப்படுவதும். (2தீமோ. 2:12).

101. இப்பிரபஞ்சத்தின்மீது ஆசை வைப்பதும் (2தீமோ. 4:10), அழிந்துபோவதும் (1யோவான் 2:15-17).

102. தேவனைவிட்டுப் பிரிந்துபோவதில் தீமையான அவிசுவாசத்தின் இருதயத்தைப் பெற்றிருப்பது. (எபி 3:12).

103. பாவத்தினால் இருதயத்தைக் கடினப்படுத்துவது (எபி 3:12).

104. பரலோகத்திற்குள் பிரவேசித்து நித்திய ஓய்வைப் பெற்றுக் கொள்ளும் சிலாக்கியத்தை இழந்துபோவது. (எபி 4:11).

105. தேவனால் புறக்கணிக்கப்பட்டு அழிக்கப்படுவது. (எபி 6:4-9)

106. தேவனுடைய நியாயத்தீர்ப்பையும், கோபாக்கினையையும் அனுபவிப்பது. (எபி 10:26-29).

107. மறுபடியும் தீட்டுப்படுவது. (எபி 12:15; 2கொரி. 3:16-17).

108. தங்கள் பழைய பாவங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்டதை மறந்து குருடராவது. (2பேதுரு 1:9).

109. தாங்கள் விரும்பினால் கர்த்தரிடத்தில் பாதுகாப்பாக இருந்து விழுந்துவிடாமல் பாதுகாக்கப்படுவது. (2பேதுரு 1:4-10).

110. பின்வாங்கிப்போயிருந்தால் மனந்திரும்பி, மறுபடியும் நற்கிரியைகளைச் செய்வது. (லேவி 26:40-42; உபா. 4:29-30; உபா. 30:1-10; 1இராஜா 8:33-34; 2நாளா. 30:9; ஏசா 1:18-20; எரே 3:4-22; எரே 4:1-2,14; எரே 6:16; ஓசி 14:4; மல் 3:7; மத் 23:37; வெளி. 2:5-6; வெளி. 3:8-21) அல்லது மனந்திரும்ப மறுத்து, ஆத்துமாவை இழந்துபோவது. (ஏசா 1:20; எபி 12:25-29)

111. ஒதுக்கிவைக்கப்படுவது. (1கொரி 9:27).

112. சத்தியத்திலிருந்து விலகி, மறுபடியும் மரித்து, நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வதற்காக மறுபடியும் மனந்திரும்ப வேண்டிய நிலையில் இருப்பது. (கலா 4:19; யாக் 5:19-20).

113. ஒருதடவைக்கு மேல் பல தடவை மனந்திரும்புவது அல்லது மறுபடியும் பிறப்பது.

114. ஆதி விசுவாசம் ஒழிந்துபோவதினால் அழிந்துபோவது. (1தீமோ 5:11-15; 1தீமோ 6:19-21; 2தீமோ 2:17-18; 2தீமோ 4:10).

115. சத்தியத்தை வெறுத்து நித்திய ஜீவனை இழந்துபோவது. (1யோவான் 3:15).

116. மறுபடியும் பாவம் செய்து, தேவனுடைய புத்திர சுவிகாரத்தை இழந்துபோவது. (யோவான் 8:32-34).

117. ஒரு சமயத்தில் ஒரு எஜமானுக்கு மட்டும் ஊழியம் செய்வது. (மத் 6:24).

118. கீழ்ப்படிதலின் கிரியைகளினால் அறியப்பட்டிருப்பது. (ரோமர் 6:16-23)

119. மாம்சத்தின் பிரகாரமாக ஜீவித்து, ஆவிக்குரிய ரீதியாக மரித்துப்போவது. (ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; கலா 5:19-21; கலா 6:7-8; யாக் 5:19-20).

120. பாவம் செய்து, தேவனுக்குரியவராக இராமல் பிசாசுக்குரியவராக இருப்பது. (1யோவான் 3:8).

121. பாவம் செய்தாலும், தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளலாம் என்று நினைத்து வஞ்சிக்கப்படுவது. (ரோமர் 1:21-32; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; 2கொரி 6:9-11; கலா 5:19-21; கலா 6:7-8).

122. முடிவுபரியந்தம் நிலைத்திருப்பது. (எபி 3:6,11-14; எபி 4:11; எபி 6:11-12).

123. சாத்தானின் வஞ்சகத்தினால் வழிவிலகிப்போவது. (2பேதுரு 3:14-18).

124. மார்க்கபேதத்தாராயிருப்பது. (எபி 6:4-9; எபி 10:26-29)

125. கிறிஸ்துவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்டு, அதன்பின்பு பின்வாங்கிப் போவது. (எபி 10:26-29).

126. மறுபடியும் அவிசுவாசியாவது. (லூக்கா 8:13; எபி 3:12; எபி 4:11).

127. மரணத்திற்குப் பாத்திரவானாவது. (ரோமர் 1:21-32).

128. வீணாக விசுவாசிப்பது. (2கொரி 15:2; 2கொரி 6:1).

129. ஒருமுறை அழிக்கப்பட்டவைகளை மறுபடியும் திரும்பக் கட்டுவது. (கலா 2:18).

130. ஒன்றுக்கும் மேற்பட்ட தடவை கிறிஸ்து அவர்களுக்குள் உற்பத்தியாவது. (கலா 4:19).

131. ஒன்றுக்கும் மேற்பட்ட தடவை மன்னிக்கப்படுவது. (1யோவான் 1:9).

132. நித்திய ஜீவனுக்காகக் கிரியை செய்வது. (யோவான் 6:27).

133. தேவனை அறிந்தபின்பு அவரை மறப்பது. (உபா 8:11-14; உபா 32:18; நீதி 2:17; எசே 23:35).

134. தேவனுடைய கிருபையை அசட்டை பண்ணுவது. (கலா 2:21).

135. சுவிசேஷத்தின் நம்பிக்கையிலிருந்து வழிவிலகிச் செல்வது. (கலா 1:23)

136. கிறிஸ்துவைவிட்டு, வழி விலகிச் செல்லுமாறு வஞ்சிக்கப்படுவது. (கலா 2:18-19).

137. விசுவாசத்தை மறுதலிப்பது. (1தீமோ 5:8).

138. கிறிஸ்துவுக்கு எதிராகக் கிரியை செய்வது. (1தீமோ 5:11-12).

139. தேவனுக்கு எதிராகத் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தி அழிந்துபோவது. (உபா 15:7; 1சாமு 6:6; சங் 95:8; எபி 3:8,13,15; எபி 4:7).

140. பாவத்தினால் வஞ்சிக்கப்படுவது. (எபி 3:13).

141. சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்தாமல், ஆகாதவனாய்ப் போவது. (1கொரி 9:27).

142. கர்த்தருக்குள் நிலைத்திருந்து பிழைப்பது. (1தெச 3:8).

143. ஒன்றுக்கும் மேற்பட்ட தடவைகள் தங்கள் ஆத்துமாவை மரணத்திலிருந்து இரட்சிப்பது. (யாக் 5:19-20).

144. இரட்சிக்கப்பட்ட பின்பு, ஆக்கினையின் ஆபத்தில் இருப்பது. (1தீமோ 5:11-15; 1தீமோ 6:19-20; 2தீமோ 2:17-18; 2தீமோ 4:10).

145. மறுபடியும் பாவத்தைச் சேவிப்பது. (யோவான் 8:31-34; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; யாக் 5:19-20).

146. கிளையைப்போல வெட்டப்பட்டு சுட்டெரிக்கப்படுவது.(யோவான் 15:1-6).

147. நித்திய ஜீவனுக்குப் பதிலாக அழிவை அறுப்பது. (கலா 5:19-21; கலா 6:7-8).

148. முடிவுபரியந்தம் நிலைத்திருந்து, தேவனுடைய வீட்டில் தங்கியிருப்பது. (எபி 3:6).

149. முடிவுபரியந்தம் நிலைத்திருந்து கிறிஸ்துவில் பங்குபெறுவது. (எபி 3:12-14).

150. சத்தியத்தை அறிந்தபின்பு, சத்தியத்திலிருந்து வழிவிலகிச் செல்வது. (எபி 2:1).

151. இரட்சிப்பைப் பெற்றுக் கொண்ட பின்பு, அதைப் புறக்கணிக்காமல் இருப்பது. (எபி 2:3).

152. நித்திய இளைப்பாறுதலில் பிரவேசிக்கக் கூடாதபடிக்கு பின்வாங்கிப்போவது. (எபி 4:1).

153. இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருப்பது. (எபி 4:11).

154. நாம் பண்ணிய அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொள்வது. (எபி 4:14).

155. தேவனைவிட்டு கீழே விழுந்து தங்கள் ஆத்துமாவை நஷ்டப்படுத்துவது. (எபி 6:4-9).

156. முடிவுபரியந்தம் ஜாக்கிரதையாயிருப்பது. (எபி 2:3; எபி 6:11).

157. அசதியாயிருந்து, நித்திய ஜீவனைச் சுதந்தரியாமல் போவது. (எபி 6:12).

158. நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்வது அல்லது பற்றிக்கொள்ள மறுப்பது. (எபி 6:18-19; 1தீமோ 6:12,19).

159. வஞ்சனையைப் பற்றிக் கொண்டு, தேவனிடத்தில் திரும்பி வரமறுப்பது. (எரே 8:5).

160. கர்த்தரையோ அல்லது சாத்தானையோ பற்றிக்கொள்வது. (மத் 6:24; லூக்கா 16:13).

161. அநீதியில் சத்தியத்தைப் பற்றிக் கொள்வது. அல்லது அழிந்துபோவது. (ரோமர் 1:18-32).

162. நன்மையானதைப் பற்றிக் கொள்வது. (1தெச 5:21).

163. உறுதியாய்த் தரித்திருப்பது. (2தெச 2:15; 1தீமோ 1:13).

164. நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்வது. (1தீமோ 6:12,19; 1யோவான் 2:24-25).

165. விசுவாச அறிக்கையைப் பற்றிக் கொள்வது. (எபி 4:14; எபி 10:23).

166. முடிவுபரியந்தம் நிலைத்திருப்பது. (வெளி 2:25).

167. கேட்டுப் பெற்றுக்கொண்டதைக் கைக் கொண்டு மனந்திரும்புவது. (வெளி 3:3).

168. உன் கிரீடத்தை ஒருவனும் எடுத்துக் கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிருப்பது. (வெளி 3:11).

169. கிறிஸ்துவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்டு சத்தியத்தை அறிகிற அறிவைப் பெற்றிருந்தும் பாவம் செய்வது. (எபி 10:26-29).

170. பாவம் செய்து, தேவனுடைய கோபாக்கினையைப் பெற்றுக் கொள்வது. (எபி 10:26-31).

171. பாவமான யாவற்றையும் விலக்கி வைப்பது. (எபி 12:1).

172. பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப் படுத்துவது அல்லது வழிவிலகிச் செல்வது. (எபி 12:13).

173. தேவனுடைய கிருபையை இழந்து போகாதபடிக்கு யாதொரு கசப்பானவேர் முளைத்தெழும்பி கலக்கமுண்டாக்காத வாறு எச்சரிக்கையாயிருப்பது. (எபி 12:15-16).

174. ஏசாவைப்போல சீர்கெட்டவனாக இராதபடிக்கு எச்சரிக்கையாயிருப்பது. (எபி 12:15-16).

175. கர்த்தருக்குச் செவிகொடுக்காமல் அழிவுக்கு ஏதுவான அவருடைய கோபத்தை வரவழைப்பது. (எபி 12:25).

176. தேவனை ஆராதனை செய்யும்படிக்கு அவருடைய கிருபையைப் பற்றிக்கொள்வது அல்லது அக்கினியினால் தண்டிக்கப் படுவது. (எபி 12:28-29).

177. பின்வாங்கிப்போய் தன் ஆத்துமாவின் மீது கர்த்தருடைய பிரியத்தை இழந்து போவது. (எபி 10:38-39).

178. மற்றவர்களைப்போல அவிசுவாசத்தில் விழுந்துபோவது. (எபி 4:11; 2கொரி 10:1-13; யூதா 1:5).

179. அசதியாயிருந்து, வாக்குத்தத்தத்தைச் சுதந்தரியாமல் போவது. (எபி 6:12).

180. நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவருவது. (எபி 6:18).

181. சமாதானத்தையும், பரிசுத்தத்தையும் பின்பற்றுவது அல்லது பாவம் செய்து அழிந்து போவது. (எபி 12:14).

182. கர்த்தருக்குத் தங்களுடைய ஜீவனை ஒப்புக்கொடுத்து, தேவனுடைய வல்லமையினால் பாதுகாக்கப்படுவது. (1பேதுரு 1:5).

183. மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருந்து, இரட்சிப்பிற்காகக் காத்திருப்பது. (1பேதுரு 1:13).

184. முன்னே அறியாமையினால் கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல் இருப்பது. (1பேதுரு 1:14).

185. சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும் ஒழித்துவிடுவது அல்லது அதில் ஜீவித்து ஆத்துமாவை இழந்து போவது. (1பேதுரு 2:1; 2பேதுரு 3:17).

186. பாவம் செய்து மறுபடியும் மரிப்பது. அல்லது நீதிமானாய் ஜீவித்து, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்வது. (யாத் 32:32-33; எசே 3:20; எசே 18:4,20-24; எசே 33:13-16; ரோமர் 1:18-32; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; 2கொரி 6:9-11; கலா 5:19-21; கலா 6:7-8; கொலோ 3:5-10; யாக் 5:19-20.

187. கிறிஸ்துவின் உபதேசத்தை மீறி ஆத்துமாவை நஷ்டப்படுத்துவது. (2யோவான் 1:9-10).

188. தேவனுடைய ஆலயத்தைத் தீட்டுப் படுத்தி அழிக்கப்படுவது. (2கொரி 3:16-17; எபி 12:15; வெளி 3:4-5; வெளி 21:27).

189. தேவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு, அதில் சிறிதுகாலம் நிலைத்திருந்து அதன்பின்பு, கர்த்தரைவிட்டு விலகுவது. (லூக்கா 8:13).

190. ஒவ்வொரு முறையும் பாவம் செய்யும்போதும் மரணதண்டனை பெறுவது. (யாத் 32:32-33; எசே 18:4,20-24; மாற்கு 7:19-21; ரோமர் 1:18-32; 2கொரி 6:9-11; கலா 5:19-21; கொலோ 3:5-10; யாக் 5:19-20).

191. தேவனை மகிமைப்படுத்துவது அல்லது அழிந்துபோவது. (ரோமர் 1:18-32).

192. மாம்சத்தின் பிரகாரம் நடந்து அழிந்து போவது. (ரோமர் 6:16-23; ரோமர் 8:1-13; கலா 5:16-26; கொலோ 3:5-10).

193. ஆவியில் ஜீவித்து, ஆவியில் நடப்பது. மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றாமல் இரட்சிக்கப்படுவது. (ரோமர் 6:16-23; ரோமர் 8:1-13; கலா 5:16-26; கொலோ 3:5-10).

194. மாம்சத்திற்கு ஏற்ற பிரகாரமாக விதைத்து அழிவை அறுப்பது. அல்லது ஆவிக்கு ஏற்றபிரகாரமாக விதைத்து நித்திய ஜீவனை அறுப்பது. (கலா 6:7-8).

195. பழைய மனுஷனைக் களைந்துபோட்டு, நித்தியமாக இரட்சிக்கப்படுவது. (எபே 4:22-32; கொலோ 3:5-10).

196. சுவிசேஷத்தின் பரிசுத்தத்திற்கு ஏற்ற பிரகாரமாக ஜீவிப்பது. பரிசுத்தமில்லாமல் தேவனைத் தரிசிப்பது இயலாத காரியம். அல்லது பரிசுத்தமாய் ஜீவிக்காமல் பாவத்தில் ஜீவித்து, ஜீவனை நஷ்டப் படுத்துவது. (ரோமர் 6:16-23; ரோமர் 8:1-13; கலா 5:19-21; கலா 6:7-8; எபே 4:24-32; எபே 5:1-18; கொலோ 3:5-10).

197. தேவனுடைய எச்சரிப்புகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிந்து, நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வது. அல்லது அரைகுறை மனதோடும், மாறுபாடோடும் கர்த்தரைப் பின்பற்றி முடிவில் ஆத்துமாவை நஷ்டப்படுத்துவது. (யூதா 1:20-24).

198. முன்பு தேவனுடைய கிருபையில் ஜீவித்து, பின்பு பாவத்தில் விழுந்துபோய், தங்கள் ஆத்துமாவை நஷ்டப்படுத்திக் கொண்டவர்களின் ஜீவியத்தை ஆராய்ந்து பார்த்து, அதுபோன்ற நஷ்டம் தங்களுக்கும் வந்துவிடாதவாறு எச்சரிப்போடு ஜீவிப்பது.

29 அதிகாரம்

இந்த அதிகாரம் முழுவதிலும் சொல்லப்பட்டிருக்கிற மொத்த செய்தியின் சாரம், முதலாவது வசனத்தில் "உடன்படிக்கையின் வார்த்தைகள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு உடன்படிக்கை செய்துகொள்கிறார் (உபா 29:1-8).

இஸ்ரவேல் புத்திரர் உடன்படிக்கையின் வார்த்தைகளைக் கைக்கொண்டு அவைகளின்படி செய்யவேண்டும் (உபா 29:9). உடன்படிக்கையின் வார்த்தைகள் (உபா 29:12,13). உடன்படிக்கையில் உட்படுத்தப்பட்டிருக்கிறவர்கள் (உபா 29:10,11,14,15).

இந்த உடன்படிக்கையில் விக்கிரகாராதனைக்கு விரோதமாக சொல்லப்பட்டிருக்கிற வார்த்தைகள் (உபா 29:16,17). மாய்மாலமாக பேசுகிறவர்களுக்கும், சமாதானம் இல்லாதபோது தங்களுக்குத் தாங்களே சமாதானம் உண்டு என்று சொல்லுகிறவர்களுக்கும் விரோதமாக தேவகோபம் வரும் (உபா 29:18-28). மறைவான காரியங்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ள காரியங்களும் (உபா 29:29).

உடன்படிக்கையின் வார்த்தைகள் உபா 29:1-9

உபா 29:1. ஓரேபிலே இஸ்ரவேல் புத்திரரோடே பண்ணிக்கொண்ட உடன்படிக்கையை அல்லாமல், மோவாபின் தேசத்திலே அவர்களோடே உடன்படிக்கைபண்ணக் கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்ட வார்த்தைகள் இவைகளே.

உபா 29:2. மோசே இஸ்ரவேலர் எல்லாரையும் வரவழைத்து, அவர்களை நோக்கி: எகிப்து தேசத்தில் உங்கள் கண்களுக்கு முன்பாகப் பார்வோனுக்கும் அவனுடைய எல்லா ஊழியக்காரருக்கும் அவனுடைய தேச முழுவதற்கும்,

உபா 29:3. கர்த்தர் செய்த பெரிய சோதனைகளையும், பெரிய அடையாளங்களையும், அற்புதங்களையும் கண்ணாரக் கண்டீர்களே.

உபா 29:4. ஆகிலும் கர்த்தர் உங்களுக்கு உணரத் தக்க இருதயத்தையும், காணத்தக்க கண்களையும், கேட்கத்தக்க காதுகளையும் இந்நாள்வரைக்கும் கொடுக்கவில்லை.

உபா 29:5. கர்த்தராகிய நான் உங்கள் தேவன் என்று நீங்கள் அறிந்துகொள்ளும்படிக்கு, நான் நாற்பது வருஷம் உங்களை வனாந்தரத்தில் நடத்தினேன்; உங்கள்மேலிருந்த வஸ்திரம் பழையதாய்ப் போகவும் இல்லை, உங்கள் காலிலிருந்த பாதரட்சைகள் பழையதாய்ப் போகவும் இல்லை.

உபா 29:6. நீங்கள் அப்பம் சாப்பிடவும் இல்லை, திராட்சரசமும் மதுவும் குடிக்கவும் இல்லை என்றார்.

உபா 29:7. நீங்கள் இவ்விடத்துக்கு வந்தபோது, எஸ்போனின் ராஜாவாகிய சீகோனும், பாசானின் ராஜாவாகிய ஓகும் நம்மோடே யுத்தஞ்செய்யப் புறப்பட்டார்கள்; நாம் அவர்களை முறிய அடித்து,

உபா 29:8. அவர்களுடைய தேசத்தைப் பிடித்து, அதை ரூபனியருக்கும் காத்தியருக்கும் மனாசேயின் பாதிக் கோத்திரத்திற்கும் சுதந்தரமாகக் கொடுத்தோம்.

உபா 29:9. இப்பொழுதும் நீங்கள் செய்வதெல்லாம் உங்களுக்கு வாய்க்கும்படிக்கு, இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்வீர்களாக.

கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் இடையே உடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறது. கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவர். இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரோடு செய்துகொண்ட உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் இந்த உடன்படிக்கையை கைக்கொண்டு நடக்கும்போது, கர்த்தருடைய ஆசீர்வாதம் அவர்களுக்கு கிடைக்கும். அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொண்டால் அவர்களுக்கு ஆசீர்வாதம் வரும். அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாமல் போனால் அவர்களுக்கு சாபம் வரும்.

கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையில் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிப்பதாக வாக்குப்பண்ணுகிறார். கர்த்தர் உடன்படிக்கையில் தம்முடைய பாகத்தை நிறைவேற்றவேண்டுமென்றால், இஸ்ரவேல் புத்திரரும் இந்த உடன்படிக்கையில் தங்கள் பாகத்தை நிறைவேற்றவேண்டும். இந்த அதிகாரம் முழுவதிலும் கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டிருக்கிற உடன்படிக்கையைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த உடன்படிக்கையானது இரண்டு அரசாங்கங்களுக்கு இடையே ஏற்படுத்தப்பட்டிருக்கிற சமாதான ஒப்பந்தம் போல இருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு ஓரேபிலே ஏற்கெனவே உடன்படிக்கை பண்ணினார். இப்போது அந்த உடன்படிக்கை மறுபடியுமாய் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. ஓரேபிலே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை இப்போது மோவாபின் தேசத்திலே மறுபடியுமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

மோசே இதுபற்றிச் சொல்லும்போது, "ஓரேபிலே இஸ்ரவேல் புத்திரரோடே பண்ணிக்கொண்ட உடன்படிக்கையை அல்லாமல், மோவாபின் தேசத்திலே அவர்களோடே உடன்படிக்கைபண்ணக் கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்ட வார்த்தைகள் இவைகளே" (உபா 29:1) என்று சொல்லுகிறார்.

உபா 29:1-ஆவது வசனம் உபா 28 ஆவது அதிகாரத்தின் கடைசி வசனமாக அதாவது 69 ஆவது வசனமாக சில பதிப்புக்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. பாலஸ்தீன உடன்படிக்கைக்கு இந்த வாக்கியம் நல்ல முடிவுரையாக அமைந்திருக்கிறது. இந்த உடன்படிக்கையைத் தொடர்ந்து வரும் பகுதிக்கு இந்த வசனம் நல்லதொரு முன்னுரையாகவும் இருக்கிறது.

பாலஸ்தீன உடன்படிக்கை மோவாபின் சமவெளிகளில் கொடுக்கப்பட்டது. சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட உடன்படிக்கைக்கு 39 வருஷங்களுக்குப் பின்பு பாலஸ்தீன உடன்படிக்கை கொடுக்கப்பட்டது. (யாத் 20-24).

பாலஸ்தீன உடன்படிக்கை என்பது வேறு. சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட மோசேயின் உடன்படிக்கை என்பது வேறு "ஓரேபிலே இஸ்ரவேல் புத்திரரோடே பண்ணிக்கொண்ட உடன்படிக்கையை அல்லாமல் மோவாபின் தேசத்திலே பண்ணின உடன்படிக்கை" என்னும் இந்த வாக்கியம் இவ்விரண்டு உடன்படிக்கைகளையும் வேறுபிரித்துக் கூறுகிறது.

கர்த்தரே இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளை மோசேக்கு கட்டளையிட்டிருக்கிறார். உடன்படிக்கையின் வார்த்தைகள் ஓரேபிலே சொல்லப்பட்டபோது உயிரோடிருந்தவர்களில் சிலர், இப்போது அந்த உடன்படிக்கை மோவாப் தேசத்தில் சொல்லப்படும்போதும் உயிரோடிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் வயது முதிர்ந்தவர்களாயிருப்பார்கள். கர்த்தர் அவர்களோடு தம்முடைய உடன்படிக்கையை புதுப்பித்துக்கொள்கிறார்.

கர்த்தர் மோவாபின் தேசத்திலே தம்முடைய உடன்படிக்கையின் வார்த்தைகளை சொல்லும்போது, அங்கே கூடியிருக்கிற இஸ்ரவேல் புத்திரரில் அநேகர் புதிய சந்ததியாராயிருக்கிறார்கள். உடன்படிக்கையின் வார்த்தைகள் ஓரேபிலே சொல்லப்பட்டபோது இவர்கள் பிறக்கவில்லை. கர்த்தர் அவர்களோடு அதே உடன்படிக்கையை மறுபடியுமாய் ஏற்படுத்துகிறார்.

உடன்படிக்கையின் பிள்ளைகளோடு தம்முடைய உடன்படிக்கையை புதுப்பித்துக்கொள்வது கர்த்தருக்கு சித்தமான காரியமாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு உடன்படிக்கையின் பிள்ளைகளாகயிருக்கிறார்கள். கர்த்தர் தங்களுடைய முற்பிதாக்களோடு பண்ணின உடன்படிக்கையின் வார்த்தைகள் இந்தப் புதிய சந்ததியாருக்கும் அறிவிக்கப்படவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு பண்ணிக்கொண்ட உடன்படிக்கையை மோசே அவர்களுக்கு சொல்லும்போது, கர்த்தர் அவர்களுக்கு இதுவரையிலும் செய்த பெரிய காரியங்களை ஞாபகப்படுத்துகிறார். உடன்படிக்கையின் ஆரம்பத்தில் கர்த்தருடைய வல்லமையையும், மகிமையையும், மகத்துவத்தையும் பற்றிச் சொல்லுவது வழக்கம்.

கர்த்தர் தங்களுக்கு செய்த பெரிய காரியங்களைப்பற்றி இஸ்ரவேல் புத்திரர் கேள்விப்படும்போது, அவர்களுடைய விசுவாசம் ஸ்திரப்படும். கர்த்தரை விசுவாசிக்கவேண்டும் என்னும் ஆர்வமும், உற்சாகமும் அவர்களுடைய மனதில் எழும்பும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது அன்பாயும், கரிசனையாயும், கிருபையாயும் இல்லையென்றால், அவர்களுக்கு இதுவரையிலும் இவ்வளவு பெரிய காரியங்களை செய்திருக்கமாட்டார்.

கர்த்தருக்கு இஸ்ரவேல் புத்திரரைக் குறித்து மிகப்பெரிய திட்டம் இருக்கிறது. ஆகையினால்தான் ஆரம்பகால முதலே, கர்த்தருடைய திட்டத்தில், இஸ்ரவேல் புத்திரருக்கு விசேஷித்த இடம் கிடைத்திருக்கிறது. கர்த்தர் அவர்களுக்கு இன்னும் பெரிய காரியங்களை செய்ய வேண்டுமென்று சித்தங்கொண்டிருக்கிறார். ஆகையினால்தான் அவர் அவர்களுக்கு ஏற்கெனவே இத்தனை பெரிதான காரியங்களை செய்திருக்கிறார். அந்தக் காரியங்களெல்லாம், கர்த்தர் இனிமேல் அவர்களுக்கு செய்யப்போகிற மகத்தான காரியங்களுக்கு அச்சாரமாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கற்பனைகளையும், அவருடைய நியாயங்களையும், பிரமாணங்களையும் கைக்கொள்ளவேண்டும். அவர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து நடக்கும் ஜனங்களாக இருக்கவேண்டும். கர்த்தர் தங்களுக்கும், தங்களுடைய முற்பிதாக்களுக்கும் இதுவரையிலும் செய்த பெரிய காரியங்களை நினைவுகூர்ந்து, இஸ்ரவேல் புத்திரர் அவருக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கவேண்டும். கீழ்ப்படிதலின் மூலமாக அவர்கள் தங்களுடைய நன்றியை வெளிப்படுத்தவேண்டும்.

கர்த்தர் இதுவரையிலும் இஸ்ரவேல் புத்திரருக்கு செய்த மிகப்பெரிய காரியங்களில் ஒரு சில காரியங்களை மோசே இந்த வசனப்பகுதியில் அவர்களுக்கு எடுத்துக்காட்டாகச் சொல்லுகிறார். கர்த்தர் அவர்களுக்காக செய்த இந்த அற்புதங்களையும் அடையாளங்களையும் அவர்கள் தங்கள் கண்ணாரக்கண்டிருக்கிறார்கள். அவர்கள் கண்டதையே மோசே இங்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேலர் எல்லாரையும் வரவழைத்து, அவர்களை நோக்கி, "எகிப்து தேசத்தில் உங்கள் கண்களுக்கு முன்பாகப் பார்வோனுக்கும் அவனுடைய எல்லா ஊழியக்காரருக்கும் அவனுடைய தேச முழுவதற்கும், கர்த்தர் செய்த பெரிய சோதனைகளையும், பெரிய அடையாளங்களையும், அற்புதங்களையும் கண்ணாரக் கண்டீர்களே" (உபா 29:2,3) என்று சொல்லுகிறார்.

பழைய சந்ததியாரில் மோசே, யோசுவா, காலேப் ஆகியோரைத் தவிர மற்ற அனைவரும் மரித்துப்போனார்கள் (எண் 14:23-35) எகிப்து தேசத்தில் வாதைகள் உண்டானபோது இந்த புதிய சந்ததியார் எல்லோரும் சிறுபிள்ளைகளாக இருந்தார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் செய்த அற்புதங்கள் மகத்துவமானவை. அவற்றை இவர்கள் எல்லோரும் தங்கள் கண்களால் பார்த்திருக்கிறார்கள்.

கர்த்தர் செய்த பெரிய அடையாளங்களையும், அற்புதங்களையும் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கண்ணாரக்கண்டிருப்பதினால், அவைகளை அவர்களுக்கு மறுபடியுமாக நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. தங்கள் கண்களால் கண்டதை அவர்கள் எளிதாக விசுவாசிப்பார்கள். அவர்களுடைய கண்களே சத்தியத்திற்கு சாட்சியாயிருக்கிறது.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு, கர்த்தர் செய்த பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் சொல்லிவிட்டு, அவர்களை நோக்கி, "இப்பொழுதும் நீங்கள் செய்வதெல்லாம் உங்களுக்கு வாய்க்கும்படிக்கு, இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்வீர்களாக" (உபா 29:9) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்காக செய்த பெரிய அடையாளங்களிலும், அற்புதங்களிலும் அவருடைய வல்லமையும் நன்மையான ஈவுகளும் வெளிப்படுகிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து விடுதலை செய்திருக்கிறார்.

அதன் பின்பு கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நாற்பது வருஷம் இந்த வனாந்தரத்திலே நடத்தி வந்தார். அவர்களுடைய தேவைகளையெல்லாம் சந்தித்தார். மோசே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு இதுபற்றிச் சொல்லும்போது கர்த்தருடைய வார்த்தையை சாட்சியாக அறிவிக்கிறார்.

"கர்த்தராகிய நான் உங்கள் தேவன் என்று நீங்கள் அறிந்துகொள்ளும்படிக்கு, நான் நாற்பது வருஷம் உங்களை வனாந்தரத்தில் நடத்தினேன்; உங்கள் மேலிருந்த வஸ்திரம் பழையதாய்ப் போகவும் இல்லை, உங்கள் காலிலிருந்த பாதரட்சைகள் பழையதாய்ப் போகவும் இல்லை. நீங்கள் அப்பம் சாப்பிடவும் இல்லை, திராட்சரசமும் மதுவும் குடிக்கவும் இல்லை" (உபா 29:5,6).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு வனாந்தரத்தில் இயற்கைப் பிரகாரமாக போஜனம் கொடுப்பதற்குப் பதிலாக அற்புதமாகப் போஜனம் கொடுத்தார். அவர்கள் வானத்தின் மன்னாவைப் புசித்தார்கள். பூமியின் அப்பத்தைப் புசிக்கவில்லை.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்து அவர்களை வழிநடத்தினார். அவர்களைப் போஷித்தார். அவர்களைப் பாதுகாத்தார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தர் செய்த அற்புதங்களை தங்கள் கண்களால் கண்டார்கள். இந்த அற்புதங்கள் மூலமாக கர்த்தரே தேவன் என்பதை அவர்கள் அறிந்துகொண்டார்கள்.

கர்த்தர் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் தங்களுக்கு வெளிப்படுத்தியதினால், கர்த்தர் தங்களுடைய தேவன் என்பதையும் அறிந்துகொண்டார்கள். இஸ்ரவேல் புத்திரர் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணினார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு அந்த யுத்தங்களில் ஜெயத்தைக் கட்டளையிட்டார்.

மோசே இஸ்ரவேல் ஜனத்தாரிடம் இதுபற்றிச் சொல்லும்போது, "நீங்கள் இவ்விடத்துக்கு வந்தபோது, எஸ்போனின் ராஜாவாகிய சீகோனும், பாசானின் ராஜாவாகிய ஓகும் நம்மோடே யுத்தஞ்செய்யப் புறப்பட்டார்கள்; நாம் அவர்களை முறிய அடித்து, அவர்களுடைய தேசத்தைப் பிடித்து, அதை ரூபனியருக்கும் காத்தியருக்கும் மனாசேயின் பாதிக் கோத்திரத்திற்கும் சுதந்தரமாகக் கொடுத்தோம்" (உபா 29:7,8) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து விடுவிக்கப்பட்டபோதும், அவர்கள் வனாந்தரப்பாதையின் வழியாக கடந்து வந்தபோதும், மோசே அவர்களோடு கூடவே இருந்திருக்கிறார். ஆகையினால் அவர்களுடைய பேச்சுக்களையும், செய்கைகளையும் மோசே நன்றாய் அறிந்திருக்கிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரைப்பற்றிச் சொல்லும்போது, "ஆகிலும் கர்த்தர் உங்களுக்கு உணரத் தக்க இருதயத்தையும், காணத்தக்க கண்களையும், கேட்கத்தக்க காதுகளையும் இந்நாள்வரைக்கும் கொடுக்கவில்லை" (உபா 29:4) என்று சொல்லுகிறார்.

ஜனங்கள் ஒரு காரியத்தை தங்கள் இருதயத்தால் உணராமல் போனாலும், தங்கள் கண்களால் காணாமல் போனாலும், தங்கள் காதுகளால் கேட்காமல் போனாலும் அது மனுஷனுடைய குற்றமல்ல. இதற்குத் தேவனே பொறுப்பு என்பது போன்று இந்த வசனத்தை மேலோட்டமாக வாசிக்கும் போது பொருள்படுகிறது. ஆனால் இந்தத் தவறுக்கு மனுஷனே பொறுப்பு வகிக்க வேண்டும். கர்த்தர் மனுஷனுக்கு இருதயத்தையும், கண்களையும், காதுகளையும் சிருஷ்டித்திருக்கிறார். இவற்றை முறைப்படி பயன்படுத்த வேண்டியவன் மனுஷனே.

கர்த்தர் மனுஷனுக்குள் சிருஷ்டித்திருக்கும் காரியங்களைத் தேவனுடைய மகிமைக்காகவும், தன்னுடைய ஆத்தும இரட்சிப்பிற்கேதுவாகவும் பயன்படுத்த வேண்டும். இதில் நாம் தவறுசெய்தால், பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறவர்களாக இருப்போம். (உபா 5:29, உபா 29:4).

உணரத்தக்க இருதயம், காணத்தக்க கண்கள், கேட்கத்தக்க காதுகள் ஆகியவையெல்லாம் கர்த்தருடைய ஈவு. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு போஜனங்களையும், வஸ்திரங்களையும் கொடுத்தது மாத்திரமல்ல, அவர்களுக்கு ஐசுவரியங்களையும், திரளான சம்பத்துக்களையும் கொடுத்திருக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களை அதிகமாய்க் கொடுத்தாலும், அவர் அவர்களுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் கொடுக்கவில்லை. கர்த்தருடைய கிருபை அவர்களுக்கு கிடைக்கவில்லை. கர்த்தர் அவர்களுக்கு உணரத்தக்க இருதயத்தையும், காணத்தக்க கண்களையும், கேட்கத்தக்க காதுகளையும் இந்நாள் வரைக்கும் கொடுக்கவில்லை.

இக்காலத்தில் அநேகர் உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் திரளான ஐசுவரியங்களையும், சம்பத்துக்களையும் அனுபவிக்கிறார்கள். ஆனாலும் இந்த ஐசுவரியங்களையும், சம்பத்துக்களையும் கர்த்தரே தங்களுக்கு கொடுத்திருக்கிறார் என்று உணரத்தக்க இருதயம் அவர்களிடத்தில் இல்லை. கர்த்தர் தங்களுக்கு கிருபையாக கொடுத்திருக்கிற ஐசுவரியத்தையும் சம்பத்தையும், கர்த்தருக்கு சித்தமான வழியிலே செலவு பண்ணவேண்டும் என்னும் விருப்பமும் அவர்களுடைய மனதில் இல்லை.

கர்த்தர் நமக்கு தமது கிருபையினால் நன்மையான ஈவுகளைக் கொடுக்கிறார். நமக்கு ஐசுவரியங்களையும் சம்பத்துக்களையும் கொடுக்கிறார். இவையெல்லாம் நமக்கு கொடுக்கப்பட்டும், நம்மிடத்தில் தேவனுடைய கிருபையில்லையென்றால், அது தேவன் செய்கிற தப்பிதமல்ல. இது நம்முடைய தப்பிதமே ஆகும்.

நாம் கர்த்தரிடத்தில் ஆசீர்வாதங்களைக் கேட்கும்போது, அந்த ஆசீர்வாதங்களை கர்த்தருக்கு பிரியமான வழிகளிலும், கர்த்தருடைய பிள்ளைகளுக்கு பிரயோஜனமான வழிகளிலும் செலவு பண்ண அறிந்திருக்கவேண்டும். அதற்காக கர்த்தரிடத்தில், உணரத்தக்க இருதயத்தையும், காணத்தக்க கண்களையும், கேட்கத்தக்க காதுகளையும் கர்த்தர் தாமே நமக்கு தந்தருள வேண்டுமென்று கருத்தாய் ஜெபம்பண்ணவேண்டும்.

நம்மிடத்தில் ஐசுவரியம் சம்பத்தும் இருந்தாலும், அது கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட ஐசுவரியமாகவும், அது அவரால் ஆசீர்வதிக்கப்பட்ட சம்பத்தாகவும் இருக்கவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய உடன்படிக்கையின் வார்த்தைகளைச் சொல்லிவிட்டு, "இப்பொழுதும் நீங்கள் செய்வதெல்லாம் உங்களுக்கு வாய்க்கும்படிக்கு, இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்வீர்களாக" (உபா 29:9) என்று சொல்லுகிறார்.

பாலஸ்தீன உடன்படிக்கையைக் கைக்கொள்ளும்போதும், மோசேயின் உடன்படிக்கையைக் கைக்கொள்ளும்போதும் இஸ்ரவேல் புத்திரருக்குப் பூமிக்குரிய ஆசீர்வாதம் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. உடன்படிக்கையைக் கைக்கொண்டால் அவர்களுக்கு வளமையும், செழுமையும் உண்டாகும்.

உடன்படிக்கையின் உறுதி உபா 29:10-29

உபா 29:10. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடியேயும், உன் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்டுக் கொடுத்தபடியேயும், இன்று உன்னைத் தமக்கு ஜனமாக ஏற்படுத்திக்கொள்ளவும், தாம் உனக்கு தேவனாயிருக்கவும்,

உபா 29:11. நீ உன் தேவனாகிய கர்த்தருடைய உடன்படிக்கைக்கும் இன்று அவர் உன்னோடே பண்ணுகிற அவருடைய ஆணையுறுதிக்கும் உட்படும்படிக்கு,

உபா 29:12. உங்கள் கோத்திரங்களின் தலைவரும் உங்கள் மூப்பரும் உங்கள் அதிபதிகளும் இஸ்ரவேலின் சகல புருஷரும்,

உபா 29:13. உங்கள் பிள்ளைகளும், உங்கள் மனைவிகளும் உங்கள் பாளயத்துக்குள்ளிருக்கிற உங்கள் விறகுக்காரனும், உங்கள் தண்ணீர்க்காரனுமான அந்நியர் எல்லாரும் இன்று உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சமுகத்தில் நிற்கிறீர்களே.

உபா 29:14. நான் உங்களோடேமாத்திரம் இந்த உடன்படிக்கையையும் இந்த ஆணையையும்உறுதியையும் பண்ணாமல்,

உபா 29:15. இன்று இங்கே நம்மோடேகூட நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய சமுகத்தில் நிற்கிறவர்களோடேயும், இன்று இங்கே நம்மோடே இராதவர்களோடேயும்கூட அதைப் பண்ணுகிறேன்.

உபா 29:16. நாம் எகிப்து தேசத்தில் குடியிருந்ததையும், நாம் கடந்துவந்த இடங்களிலிருந்த ஜாதிகளின் நடுவில் நடந்துவந்ததையும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

உபா 29:17. அவர்களுடைய அருவருப்புகளையும், அவர்களிடத்திலிருக்கிற மரமும் கல்லும் வெள்ளியும் பொன்னுமான அவர்களுடைய நரகலான தேவர்களையும் கண்டிருக்கிறீர்கள்.

உபா 29:18. ஆகையால், அந்த ஜாதிகளின் தேவர்களைச் சேவிக்கப் போகும்படி, இன்று நம்முடைய தேவனாகிய கர்த்தரை விட்டு அகலுகிற இருதயமுள்ள ஒரு புருஷனாகிலும் ஸ்திரீயாகிலும் குடும்பமாகிலும் கோத்திரமாகிலும் உங்களில் இராதபடிக்கும், நஞ்சையும் எட்டியையும் முளைப்பிக்கிற யாதொரு வேர் உங்களில் இராதபடிக்கும் பாருங்கள்.

உபா 29:19. அப்படிப்பட்டவன் இந்த ஆணையுறுதியின் வார்த்தைகளைக் கேட்டும், தாகத்தினிமித்தம் வெறிக்கக் குடித்து, மன இஷ்டப்படி நடந்தாலும் எனக்குச் சுகமுண்டாயிருக்கும் என்று தன் உள்ளத்தைத் தேற்றிக்கொண்டால், கர்த்தர் அவனை மன்னிக்கச் சித்தமாயிரார்.

உபா 29:20. அப்பொழுது கர்த்தரின் கோபமும் எரிச்சலும் அந்த மனிதன்மேல் புகையும்; இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற சாபங்களெல்லாம் அவன்மேல் தங்கும்; கர்த்தர் அவன் பேரை வானத்தின்கீழ் இராதபடிக்குக் குலைத்துப்போடுவார்.

உபா 29:21. இந்த நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிற உடன்படிக்கையினுடைய சகல சாபங்களின்படியும் அவனுக்குத் தீங்காக கர்த்தர் இஸ்ரவேல் கோத்திரங்கள் எல்லாவற்றிற்கும் அவனைப் புறம்பாக்கிப்போடுவார்.

உபா 29:22. அப்பொழுது உங்களுக்குப்பின் எழும்பும் தலைமுறையான உங்கள் பிள்ளைகளும், தூரதேசத்திலிருந்து வரும் அந்நியரும், கர்த்தர் இந்த தேசத்துக்கு வருவித்த வாதைகளையும் நோய்களையும் காணும்போதும்,

உபா 29:23. கர்த்தர் தமது கோபத்திலும் தமது உக்கிரத்திலும் சோதோமையும் கொமோராவையும் அத்மாவையும் செபோயீமையும் கவிழ்த்துப்போட்டதுபோல, இந்த தேசத்தின் நிலங்களெல்லாம் விதைப்பும் விளைவும் யாதொரு பூண்டின் முளைப்பும் இல்லாதபடிக்கு, கந்தகத்தாலும் உப்பாலும் எரிக்கப்பட்டதைக் காணும்போதும்,

உபா 29:24. அந்த ஜாதிகளெல்லாம் கர்த்தர் இந்த தேசத்திற்கு ஏன் இப்படிச் செய்தார்; இந்த மகா கோபம் பற்றியெரிந்ததற்குக் காரணம் என்ன என்று சொல்லுவார்கள்.

உபா 29:25. அதற்கு: அவர்களுடைய பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபோது, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையை அவர்கள் விட்டுப் போய்,

உபா 29:26. தாங்கள் அறியாமலும் தங்களுக்கு ஒரு பலனும் அளிக்காமலும் இருக்கிற தேவர்களாகிய வேறே தேவர்களைச் சேவித்து, அவைகளைப் பணிந்துகொண்டபடியினாலே,

உபா 29:27. கர்த்தர் இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற சாபங்கள் எல்லாவற்றையும் இந்த தேசத்தின்மேல் வரப்பண்ண, அதின்மேல் கோபம் மூண்டவராகி,

உபா 29:28. அவர்களைக் கோபத்தினாலும் உக்கிரத்தினாலும் மகா எரிச்சலினாலும் அவர்களுடைய தேசத்திலிருந்து வேரோடே பிடுங்கி, இந்நாளில் இருக்கிறதுபோல, அவர்களை வேறே தேசத்தில் எறிந்து விட்டார் என்று சொல்லப்படும்.

உபா 29:29. மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய கற்பனைகளையும், நியாயங்களையும், பிரமாணங்களையும் உபதேசம்பண்ணிக்கொண்டிருக்கிறார். அவருடைய உபதேசம் நிறைவுபெறப்போகிறது. மோசே கர்த்தர்மீது பக்தி வைராக்கியமாயிருக்கிறார்.

பரிசுத்த ஆவியானவர் தனக்கு சொன்ன எல்லா வார்த்தைகளையும், மோசே இஸ்ரவேல் புத்திரருடைய மனதிலே பதியும் வண்ணமாக போதிக்கவேண்டும் என்று தீர்மானத்தோடு பேசுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரோடு ஐக்கியமாயிருக்கவேண்டும். கர்த்தர் அவர்களோடு பண்ணிக்கொண்ட உடன்படிக்கைக்கு, அவர்கள் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கர்த்தருடைய கற்பனைகளையும், நியாயங்களையும் கைக்கொள்ளவேண்டும். கர்த்தர் அவர்களோடு பண்ணிக்கொண்ட உடன்படிக்கை நித்திய உடன்படிக்கையாயிருக்கிறது. மோசே இஸ்ரவேல் புத்திரரிடத்தில் எந்தக் காரியத்தையும் கட்டாயப்படுத்தவில்லை. அவர் அவர்களுக்கு சத்தியத்தை எடுத்துச் சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதமும், கீழ்ப்படியாவிட்டால் சாபமும் வரும் என்று மோசே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொல்லுகிறார். தங்களுக்கு ஆசீர்வாதம் வரவேண்டுமா அல்லது சாபம் வரவேண்டுமா என்பதை இஸ்ரவேல் ஜனத்தாரே தீர்மானம் செய்துகொள்ளவேண்டும்.

"உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடியேயும், உன் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்டுக் கொடுத்தபடியேயும், இன்று உன்னைத் தமக்கு ஜனமாக ஏற்படுத்திக்கொள்ளவும், தாம் உனக்கு தேவனாயிருக்கவும்" (உபா 29:10) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் இந்த வாக்குத்தத்தங்களை இந்தச் சந்ததிக்கும், (யாத் 6:1-8; யாத் 15:17; யாத் 23:20-33; யாத் 33:1-3; யாத் 34:10-11; லேவி 26:3-13) ஆபிரகாமிற்கும், (ஆதி 12:1-3,7; ஆதி 13:14-17; ஆதி 15:4-5,13-21; ஆதி 17:2-8,15-22; ஆதி 18:18-19; ஆதி 21:12-13; ஆதி 22:17), ஈசாக்கிற்கும், (ஆதி 26:3-4,24), யாக்கோபிற்கும் (ஆதி 28:3-4,13-15; ஆதி 32:9; ஆதி 35:11-12) கொடுத்திருக்கிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே கர்த்தரைப்பற்றிய காரியங்களை தெளிவாகச் சொல்லுகிறார். கர்த்தர் அவர்களோடு செய்து கொண்ட உடன்படிக்கையையும், அந்த உடன்படிக்கையின் வார்த்தைகளையும் மோசே அவர்களுக்கு தெளிவுபடுத்துகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியாதபோது, அவர்களுடைய மனச்சாட்சி அவர்களைக் குற்றப்படுத்தும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு முன்பாக சுத்தமனச்சாட்சியோடிருந்து, அவருடைய பிரமாணங்களுக்கெல்லாம் கீழ்ப்படிந்து, கர்த்தருக்கு பிரியமானவர்களாக ஜீவிக்கவேண்டும். மோசே இஸ்ரவேல் புத்திரரோடு கர்த்தருடைய உடன்படிக்கையை தெளிவுபடுத்துகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தருடைய உடன்படிக்கைக்கும், அவர் தங்களோடு பண்ணியிருக்கிற அவருடைய ஆணை உறுதிக்கும் உட்பட்டவர்களாயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார்கள். அவர்களுடைய கோத்திரங்களின் தலைவரும், அவர்களுடைய மூப்பரும், அவர்களுடைய அதிபதிகளும், இஸ்ரவேலின் சகல புருஷரும், அவர்களுடைய பிள்ளைகளும், அவர்கள் மனைவிகளும் கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார்கள்.

கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணியவர்கள் இஸ்ரவேல் புத்திரர் மாத்திரமல்ல, அவர்களுடைய பாளயத்திற்குள் இருக்கிற அவர்கள் விறகுக்காரனும், அவர்கள் தண்ணீர்க்காரனுமாகிய அந்நியரும் கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் இப்போது தங்கள் தேவனாகிய கர்த்தருடைய சமுகத்திலே நிற்கிறார்கள் (உபா 29:11-13).

கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிற எல்லோரையும் மோசே கர்த்தருடைய சந்நிதியில் வரவழைக்கிறார். இஸ்ரவேலிலே பெரியோர், சிறியோர், ஸ்திரீகள், அதிபதிகள், தலைவர் ஆகிய எல்லோரும் கர்த்தருடைய சந்நிதிக்கு முன்பாக நிற்கிறார்கள்.

கர்த்தருடைய உடன்படிக்கை பாரமான நுகமல்ல. உடன்படிக்கையின் நுகத்திற்கு தங்களுடைய கழுத்துக்களை ஒப்புக்கொடுக்க யாரும் கஷ்டப்படவில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருமே கர்த்தருடைய உடன்படிக்கைக்கு தங்களை உட்படுத்தியிருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரோடும் உடன்படிக்கை பண்ணியிருக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு மாத்திரமல்ல, அவர்களுடைய பாளயங்களில் தங்கியிருக்கிற அந்நியரோடும் உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். கர்த்தர் அந்நியரோடு உடன்படிக்கை பண்ணவேண்டுமென்றால், அவர்கள் தங்கள் விக்கிரகங்களையும், விக்கிரகாராதனைகளையும் விட்டு விலகி, கர்த்தரை மாத்திரம் தங்கள் தேவனாக ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர்கள் கர்த்தரை மாத்திரம் ஆவியோடும் உண்மையோடும் ஆராதனை செய்யவேண்டும்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் ஆரம்ப காலத்திலேயே தம்முடைய கிருபைகளையும், சிலாக்கியங்களையும் புறஜாதி ஜனங்களுக்கும் வெளிப்படுத்துகிறார். கர்த்தரிடத்தில் புறஜாதியாருக்கும் கிருபையும் சிலாக்கியமும் ஏராளமாயிருக்கிறது என்பதற்கு இது ஒரு அடையாளமாயிருக்கிறது.

கர்த்தர் சுயாதீனமான இஸ்ரவேல் ஜனத்தாரோடும் உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். அவர்கள் மத்தியிலே விறகு வெட்டுகிறவர்கள், தண்ணீர் சுமக்கிறவர்கள் ஆகிய அந்நியரோடும் உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். இவர்கள் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு அடிமைகளாக வேலை பார்த்தாலும், கர்த்தர் அவர்களோடும் உடன்படிக்கை பண்ணியிருக்கிறார்.

கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணினவர்கள் எல்லோரும் இப்போது தங்கள் தேவனாகிய கர்த்தருடைய சமுகத்திலே நிற்கிறார்கள். கர்த்தர் இப்போது தம்முடைய சமுகத்திலே நிற்கிறவர்கள் மாத்திரமல்ல, அங்கே தமக்கு முன்பாக நிற்காதவர்களோடும் உடன்படிக்கை பண்ணுகிறார்.

மோசே இதுபற்றி இஸ்ரவேல் புத்திரரோடு சொல்லும்போது, "நான் உங்களோடேமாத்திரம் இந்த உடன்படிக்கையையும் இந்த ஆணையையும் உறுதியையும் பண்ணாமல், இன்று இங்கே நம்மோடேகூட நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய சமுகத்தில் நிற்கிறவர்களோடேயும், இன்று இங்கே நம்மோடே இராதவர்களோடேயும்கூட அதைப் பண்ணுகிறேன்" (உபா 29:14,15) என்று சொல்லுகிறார்.

"இன்று" என்று மோசே உபா 29:15-ஆவது வசனத்தில் சொல்லுகிறார். இன்று என்பது பாலஸ்தீன உடன்படிக்கை கொடுக்கப்பட்ட நாள் ஆகும். இது மோசேயின் 120 பிறந்தநாளும், அவருடைய மரணநாளுமாகும். (உபா 29:10,12-15; உபா 1:3).

மோசே இஸ்ரவேலர் எல்லோரையும் தன்னிடத்தில் வரவழைக்கிறார். அவர்கள் எல்லோருமே தங்கள் தேவனாகிய கர்த்தருடைய சமுகத்திலே நிற்கிறார்கள். இஸ்ரவேலரில் சிலர் வியாதிப்பட்டு, தங்கள் பாளயங்களில் தங்கியிருக்கலாம். வேறு சிலரோ வியாபாரம் நிமித்தமாக அந்நிய தேசங்களுக்கு போயிருக்கலாம். இவர்களால் கர்த்தருடைய சமுகத்தில் வந்து நிற்கமுடியாவிட்டாலும், மோசே இவர்களோடும் உடன்படிக்கை பண்ணுகிறார்.

கர்த்தருடைய உடன்படிக்கை, அவருடைய சமுகத்திலே நிற்கிறவர்களோடு மாத்திரமல்ல, இனிமேல் அவர்களுக்கு பிறக்கப்போகிற பின்சந்ததியாரோடும் ஏற்படுத்தப்படுகிறது. கர்த்தருடைய உடன்படிக்கையில் இஸ்ரவேல் ஜனத்தாருடைய பின்சந்ததியாரும் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.

கர்த்தரே இஸ்ரவேல் ஜனத்தாரோடு உடன்படிக்கை பண்ணுகிறார். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். அவருடைய கிருபை எக்காலத்திலும் மாறாமலிருக்கிறது. கர்த்தருடைய உடன்படிக்கையும் மாறாத உடன்படிக்கையாகவும், அது நித்திய உடன்படிக்கையாகவும் இருக்கிறது. கர்த்தர் தமது பெரிதான கிருபையினால், இஸ்ரவேல் புத்திரருடைய முற்பிதாக்களோடும், இப்போது கர்த்தருடைய சமுகத்திலே நிற்கிற இஸ்ரவேல் புத்திரரோடும், மேலும் இப்போது கர்த்தருடைய சமுகத்திலே இவர்களோடே இராத இவர்களுடைய பின்சந்ததியாரோடும் உடன்படிக்கை பண்ணுகிறார். கர்த்தருடைய உடன்படிக்கை கிருபையின் உடன்படிக்கையாயிருக்கிறது.

கர்த்தருடைய உடன்படிக்கையின் வாக்குத்தத்தம் இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் பொதுவானது. தேவனுக்கும் அவர்களுக்கும் நடுவே உடன்படிக்கையின் ஐக்கியம் ஏற்பட்டிருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு தம்முடைய உடன்படிக்கையை மறுபடியுமாய் புதுப்பித்துக்கொள்கிறார். அவர்கள் விக்கிரகாராதனைக்கு விலகி ஜீவிக்கவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்தில் பிரவேசிக்கும்போது, அவர்கள் கானானியருடைய விக்கிரகாராதனையினால் சோதிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது. இஸ்ரவேல் புத்திரர் தங்களை விக்கிரகாராதனைக்கு விரோதமாக காத்துக்கொள்ளவேண்டும். அவர்கள் ஏற்கெனவே எகிப்து தேசத்தில் விக்கிரகாராதனைக்காரர்கள் மத்தியிலே இருந்தவர்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு பாலஸ்தீன உடன்படிக்கையைப்பற்றிச் சொல்லுகிறார். தற்போதுள்ள சந்ததியாரோடும், இனிமேல் வரப்போகும் வருங்கால சந்ததியாரோடும் கர்த்தர் பாலஸ்தீன உடன்படிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார். இது ஒரு நித்திய கால உடன்படிக்கை. (உபா 29:14-15).

பாலஸ்தீன உடன்படிக்கையில் பங்கு பெற்றிருக்கிறவர்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. தேவன் (உபா 29:10,12-15)
2. கோத்திரங்களின் தலைவர் (உபா 29:12)
3. கோத்திரங்களின் மூப்பர்
4. கோத்திரங்களின் அதிபதிகள்
5. இஸ்ரவேலின் சகல புருஷர்.
6. இஸ்ரவேலருடைய பிள்ளைகள் (உபா 29:13)
7. இஸ்ரவேலரின் மனைவிகள்
8. இஸ்ரவேலரில் அந்நியர்கள்.
9. இஸ்ரவேலரின் வேலைக்காரர்.
10. வரப்போகிற சந்ததியார் (உபா 29:14-15)

பாலஸ்தீன உடன்படிக்கையில் கர்த்தருடைய நோக்கம் வருமாறு :

1. இஸ்ரவேலரைத் தமக்கு ஜனமாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். (உபா 29:10).
2. அவர்களுடைய தேவனாக இருக்க வேண்டும்.
3. தம்முடைய வாக்குத்தத்தத்தை அவர்களுக்கு நிறைவேற்ற வேண்டும்.
4. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருக்குத் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற வேண்டும்.
5. நித்திய காலமாக தமக்கு ஜனம் இருக்க வேண்டும். (உபா 29:14-15).

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு இதுபற்றிச் சொல்லும்போது, "நாம் எகிப்து தேசத்தில் குடியிருந்ததையும், நாம் கடந்துவந்த இடங்களிலிருந்த ஜாதிகளின் நடுவில் நடந்துவந்ததையும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். அவர்களுடைய அருவருப்புகளையும், அவர்களிடத்திலிருக்கிற மரமும் கல்லும் வெள்ளியும் பொன்னுமான அவர்களுடைய நரகலான தேவர்களையும் கண்டிருக்கிறீர்கள்" (உபா 29:16,17) என்று சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருடைய நான்கு அனுபவங்களைப்பற்றிச் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தில் குடியிருந்தார்கள்.
2. இஸ்ரவேல் புத்திரர் பல ஜாதிகளின் இடங்களைக் கடந்து வந்தார்கள்.
3. பல ஜாதிகளுடைய அருவருப்புக்களைக் கண்டார்கள். (உபா 29:17).

4. அவர்களிடத்திலிருக்கிற மரமும் கல்லும் வெள்ளியும் பொன்னுமான அவர்களுடைய நரகலான தேவர்களையும் கண்டிருக்கிறார்கள்.

குடிகாரர்கள் மனந்திரும்பவில்லையென்றால், திரும்ப திரும்ப குடித்து வெறித்திருப்பார்கள். விக்கிரகாராதனைக்காரரும், விக்கிரகங்களை விட்டு விலகிவரவில்லையென்றால் மறுபடியும் விக்கிரகாராதனையில் விழுந்துவிடுவார்கள்.

"ஆகையால், அந்த ஜாதிகளின் தேவர்களைச் சேவிக்கப் போகும்படி, இன்று நம்முடைய தேவனாகிய கர்த்தரை விட்டு அகலுகிற இருதயமுள்ள ஒரு புருஷனாகிலும் ஸ்திரீயாகிலும் குடும்பமாகிலும் கோத்திரமாகிலும் உங்களில் இராதபடிக்கும், நஞ்சையும் எட்டியையும் முளைப்பிக்கிற யாதொரு வேர் உங்களில் இராதபடிக்கும் பாருங்கள்" (உபா 29:18) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

புருஷனாகிலும் ஸ்திரீயாகிலும் குடும்பமாகிலும் கோத்திரமாகிலும் ஆகிய இவர்களில் கர்த்தரை விட்டு யார் பின்வாங்கிப்போய் விக்கிரகங்களைச் சேவித்தாலும் அவர்களுக்கு இந்தப் பிரமாணத்தில் கூறப்பட்டிருக்கும் வாதைகள் நிச்சயமாகவே வரும் *(உபா 29:18-28)*.

இஸ்ரவேல் புத்திரரிடத்தில் நஞ்சையும், எட்டியையும் முளைப்பிக்கிற யாதொரு வேரும் அவர்களில் இருக்கக்கூடாது. இந்த வேர் மனுஷனைத் தீட்டுப்படுத்தும் கசப்பான வேராகும். *(எபி 12:15)* இப்படிப்பட்ட வேர் ஒரு மனுஷனுக்குள் முளைக்கும்போது, அவனுக்குள் தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உருவாகும் *(எபி 3:12)*.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய உடன்படிக்கையைப்பற்றிச் சொல்லும்போது, கர்த்தர் சபிக்கிற மூன்று காரியங்களைப்பற்றிச் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. புறஜாதிகளின் தேவர்களைச் சேவிக்கப் போகும்படி கர்த்தரை விட்டு அகலுகிற இருதயம்.

2. நஞ்சையும் எட்டியையும் முளைப்பிக்கிற யாதொரு வேர்.

3. மன இஷ்டப்படி நடந்து பாவம் செய்வது. *(உபா 29:19)*.

விக்கிரகாராதனையோடு காமவிகாரமும் சேர்ந்துகொள்ளும். "சென்ற வாழ்நாட் காலத்திலே நாம் புறஜாதிகளுடைய இஷ்டத்தின்படி நடந்துகொண்டது போதும்; அப்பொழுது நாம் காமவிகாரத்தையும் துர்இச்சைகளையும் நடப்பித்து, மதுபானம்பண்ணி, களியாட்டுச்செய்து, வெறிகொண்டு, அருவருப்பான விக்கிரகாராதனையைச் செய்துவந்தோம்" *(1பேது 4:3)*.

குடிகாரர்கள் குடித்து வெறித்து தங்கள் இஷ்டப்படி நடந்துகொள்வார்கள். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்துவார்கள். தாங்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தாலும் தங்களுக்கு சமாதானம் உண்டு என்றும், கர்த்தர் தங்கள்மீது பிரியமாகவே இருக்கிறார் என்றும் சொல்லுவார்கள். அவர்களுடைய மனதின் எண்ணத்திலும், வாயின் வார்த்தையிலும் உண்மையிருக்காது. கர்த்தர் தம்முடைய நீதியினால் அவர்களை நியாயந்தீர்ப்பார்.

மோசே இப்படிப்பட்டவர்களைப்பற்றிச் சொல்லும்போது, "அப்படிப்பட்டவன் இந்த ஆணையுறுதியின் வார்த்தைகளைக் கேட்டும், தாகத்தினிமித்தம் வெறிக்கக் குடித்து, மன இஷ்டப்படி நடந்தாலும் எனக்குச் சுகமுண்டாயிருக்கும் என்று தன் உள்ளத்தைத் தேற்றிக்கொண்டால், கர்த்தர் அவனை மன்னிக்கச் சித்தமாயிரார்" *(உபா 29:19)* என்று சொல்லுகிறார்.

"தாகத்தினிமித்தம் வெறிக்கக் குடிப்பது" என்பது மாம்சத்தின் இச்சைகளை வெளிப் படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் எபிரெயரின் வழக்குச்சொல். *(யோபு 15:16)*.

"மன இஷ்டப்படி நடந்தாலும் எனக்குச் சுகமுண்டாயிருக்கும்" என்று சொல்லுவது துணிகரமான பாவம். இது தேவனுக்கும், அவருடைய வார்த்தைக்கும் எதிர்த்து நின்று பாவம் செய்வதைக் குறிப்பிடுகிறது *(எபி 10:26-29)*.

தம்மைவிட்டுப் பின்வாங்கிப் போய், மார்க்கபேதத்தார் ஆனவருக்குக் கர்த்தர் இரக்கம் காண்பிக்கமாட்டார். (உபா 29:18-20; எரே 13:14; எரே 21:7; எசே 7:4,9; எசே 8:18; எசே 9:10; ரோமர் 11:21). கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரையும் விட்டு வைக்கமாட்டார். (ரோமர் 11:21; யூதா 1:5) ஜலப்பிரளயத்திற்கு முந்தின சந்ததியாரையும், விழுந்துபோன தூதர்களையும் (2பேதுரு 2:4-5), கர்த்தர் விட்டு வைக்கமாட்டார்.

மார்க்கபேதத்தாரின் சுபாவங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. இருதயத்தில் தேவனைவிட்டு அகன்று போயிருப்பார்கள். (உபா 29:18)
2. விக்கிரகாராதனை.
3. தேவனைவிட்டு மற்றவர்களையும், வழி விலகிப்போகும்படி வைராக்கியமாய் கிரியை செய்வார்கள். அவர்களுக்கு நஞ்சையும், எட்டியையும் முளைப்பிக்கிற வேரைப்போல இருப்பார்கள்.
4. பெருமையும், துணிகரமான பாவமும் செய்வார்கள். (உபா 29:19)
5. இருதயத்தின் கற்பனைகளின்படி நடப்பார்கள்.
6. தங்கள் இருதயத்தைத் தேற்றிக்கொண்டு, சரீரத்தின் இச்சைகளுக்கு உடன்படுவார்கள்.

மார்க்கபேதத்தார்மீது வரும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பைப்பற்றிய விவரம் வருமாறு :

1. கர்த்தர் அவர்களை மன்னிக்கச் சித்தமாயிரார். (உபா 29:20; எபி 10:26-29).
2. கர்த்தரின் கோபமும், எரிச்சலும் அவர்கள்மீது புகையும்.
3. இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற சாபங்களெல்லாம் அவர்கள்மேல் தங்கும்.
4. கர்த்தர் அவர்கள் பேரை வானத்தின்கீழ் இராதபடிக்குக் குலைத்துப்போடுவார்.
5. தண்டிக்கப்படுவதற்காகக் கர்த்தர் அவர்களை இஸ்ரவேல் கோத்திரங்கள் எல்லாவற்றிற்கும் புறம்பாக்கிப்போடுவார். (உபா 29:21; 2பேதுரு 2:9-10)
6. வரப்போகிற சந்ததியாருக்குக் கர்த்தர் அவர்களைத் தமது கோபாக்கினைக்கு அடையாளமாக வைப்பார். (உபா 29:22-28)

குடித்து வெறித்திருப்பது கர்த்தருக்கு விரோதமான பாவம். குடிப்பழக்கம் மனுஷருடைய இருதயத்தை கடினப்படுத்துகிறது. குடிகாரருடைய மனச்சாட்சி மழுங்கிப்போகிறது. குடிப்பழக்கத்திலே விழுந்து விடுகிறவர்கள் அதிலிருந்து எழும்ப முடியாமல் தவிப்பதுபோல, விக்கிரகாராதனையில் விழுகிறவர்களும் அதிலிருந்து எழும்ப முடியாமல் தவிப்பார்கள்.

குடிகாரர்கள் தங்களுடைய குடிப்பழக்கத்திற்கு ஏதாவது ஒரு காரணத்தை சொல்லுவார்கள். இவர்கள் தங்களுக்குத் தாங்களே சமாதானம் சொல்லிக்கொண்டாலும், இவர்களுடைய வார்த்தையில் உண்மையிருக்காது. இவர்களுக்கு சமாதானமும் இருக்காது. விக்கிரகாராதனைக்காரரும் தங்களுக்குத் தாங்களே சமாதானம் சொல்லிக்கொண்டாலும், அவர்களுக்கும் சமாதானம் இல்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்.

குடிகாரர்கள் தாங்கள் மாத்திரம் கெட்டுப்போவது அல்லாமல், தங்களோடு கூடயிருக்கிறவர்களையும் கெடுத்துப்போடுவார்கள். விக்கிரகாராதனைக்காரரும் இவர்களைப்போலவே, தாங்களும் கெட்டு, தங்களோடு கூடயிருக்கிறவர்களையும் கெடுத்துவிடுவார்கள். விக்கிரகாராதனைக்காரரோடு சிநேகம் வைத்திருப்பதும், அவர்களோடு ஐக்கியமாயிருப்பதும் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு மிகவும் ஆபத்தானது.

விக்கிரகாராதனை இஸ்ரவேல் புத்திரருடைய தேசத்தையே அழித்துப்போடும். எந்த தேசத்தில் விக்கிரகாராதனை அதிகமாயிருக்கிறதோ அந்த தேசத்தில் வாதையும் கொள்ளை நோயும் அதிகமாயிருக்கும். விக்கிரகாராதனை எந்தெந்த தேசங்களுக்கெல்லாம் பரவியிருக்கிறதோ, அந்தந்த தேசங்களுக்கெல்லாம் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வரும்.

ஒருவன் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்டும், அதற்கு கீழ்ப்படியவில்லையென்றால், தேவனுடைய கோபம் அவன்மேல் பற்றியெரியும். கர்த்தரின் கோபமும் எரிச்சலும் அந்த மனிதன்மேல் புகையும்; இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற சாபங்களெல்லாம் அவன்மேல் தங்கும்; கர்த்தர் அவன் பேரை வானத்தின்கீழ் இராதபடிக்குக் குலைத்துப்போடுவார் (உபா 29:20).

கர்த்தரின் கோபமும் எரிச்சலும் துன்மார்க்கன் மேல் புகையும். இருதயத்தில் மனந்திருந்தாத பின்மாற்றக்காரர்கள் பூரணமாக அழியும் வரையிலும் கர்த்தருடைய கோபமும், எரிச்சலும் அவர்களுக்கு எதிராகப் புகைந்து கொண்டிருக்கும்.

கர்த்தர் குலைத்துப்போடும் எட்டு காரியங்களைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. வானத்தின்கீழ் பெயர் (உபா 29:20; உபா 9:14; சங் 109:13-14)
2. வானத்தில் பெயர் - ஜீவபுஸ்தகத்திலிருந்து பெயர். (யாத் 32:32-33; சங் 69:28; வெளி 3:5; வெளி 22:18-19)
3. பாவங்கள் (அப் 3:19)
4. மீறுதல்கள் (நீதி 51:1; ஏசா 43:25; ஏசா 44:22)
5. அக்கிரமங்கள் (சங் 51:9)
6. சாபங்கள் (எண் 5:23)
7. நினைவு (உபா 25:9)
8. மோசேயின் பிரமாணம் (கொலோ 2:14)

தேவன் இஸ்ரவேல் மத்தியில் பாவம் செய்கிறவர்களைத் தேடிப்பார்த்து, அவர்களைப் புறம்பாக்கிப்போட்டு, அவர்களை சபிப்பார். தங்களுடைய இருதயங்களில் தம்மைவிட்டு விலகிப்போனவர்களையும், தம்மைவிட்டு விலகிப்போவதற்கு மற்றவர்களை வழிநடத்துகிறவர்களையும் கர்த்தர் அழிப்பார். (உபா 29:18-21).

இந்த நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிற உடன்படிக்கையினுடைய சகல சாபங்களின்படியும் அவனுக்குத் தீங்காக கர்த்தர் இஸ்ரவேல் கோத்திரங்கள் எல்லாவற்றிற்கும் அவனைப் புறம்பாக்கிப்போடுவார் (உபா 29:21).

இஸ்ரவேல் தேசத்தார் அந்நிய தெய்வங்களை ஆராதிக்கும்போது அவர்களுடைய தேசத்தில் வாதைகளும் நோய்களும் தங்கியிருக்கும். இது மறைவான அல்லது இரகசியமான நோய்களோ அல்லது வாதைகளோ அல்ல. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் போனதினால், அவருடைய கோபமும் எரிச்சலும் அவர்கள்மேல் வந்திருக்கிறது. கர்த்தருடைய கோபமும் எரிச்சலும் புகையைப்போல புகைகிறது. இது மறைவான புகையல்ல. அவர்களுடைய பின்சந்ததியாரும், அவர்களைச் சுற்றிலும் இருக்கிற அண்டை தேசத்தாரும், அவர்களுடைய தேசத்திற்கு தூரதேசங்களிலிருந்து வருகிற தேசத்தாரும், இஸ்ரவேல் தேசத்தின்மீது வாதைகளும் நோய்களும் வந்திருப்பதை, தங்கள் கண்களால் பிரத்தியட்சமாய்ப் பார்ப்பார்கள்.

இப்போதிருக்கிற இஸ்ரவேல் ஜனத்தாருக்கு பின் எழும்பும் தலைமுறையான அவர்களுடைய பிள்ளைகளும், தூரதேசத்திலிருந்து வரும் அந்நியரும், கர்த்தர் இந்த தேசத்துக்கு வருவித்த வாதைகளையும் நோய்களையும் காண்பார்கள் (உபா 29:22).

தேவனுடைய சாபத்தினால் பாலும், தேனும் ஓடும் வளமான நிலம் பாழும் வறட்சியுமாகும். (உபா 29:22-28). பின்மாற்றக்காரர்களைத் தேவன் நியாயந்தீர்ப்பார். (எபி 10:26-29). தேவனுடைய நியாயத்தீர்ப்பிற்குப் பாலஸ்தீன தேசமும், இஸ்ரவேல் தேசமும் உட்படுத்தப்பட்டன. (உபா 29:22-28; 1இராஜா 17; 2நாளா 36; மத் 23:37-39; லூக்கா 21:20-24)

இஸ்ரவேல் தேசத்தாரின் அழிவைப் பார்க்கும்போது புறஜாதி ஜனங்களுக்கு ஆச்சரியமாயிருக்கும். தங்கள் தேசத்திற்கு வந்திருக்கிற வாதைகளையும் நோய்களையும் பார்த்து இஸ்ரவேல் புத்திரருடைய பின்சந்ததியாரும் ஆச்சரியப்படுவார்கள். கர்த்தருடைய மகாகோபம் பற்றியெரிந்ததினால், இஸ்ரவேல் தேசத்திற்கு வாதைகளும் நோய்களும் வந்திருக்கிறது. இது கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பினால் உண்டான அழிவு ஆகும்.

கர்த்தர் தமது கோபத்திலும் தமது உக்கிரத்திலும் சோதோமையும் கொமோராவையும் அத்மாவையும் செபோயீமையும் கவிழ்த்துப்போட்டதுபோல, இந்த தேசத்தின் நிலங்களெல்லாம் விதைப்பும் விளைவும் யாதொரு பூண்டின் முளைப்பும் இல்லாதபடிக்கு, கந்தகத்தாலும் உப்பாலும் எரித்துப்போட்டார் (உபா 29:23).

இந்த பட்டணங்கள் இங்கு ஒப்புமையாகக் கூறப்பட்டிருக்கிறது. பாலஸ்தீன தேசமும், கந்தகத்தாலும், உப்பாலும் அழிக்கப்படும் என்பது இதன் பொருளல்ல. பாவத்தின் விளைவினால் தேவனுடைய நியாயத் தீர்ப்பு இந்தப் பட்டணங்களுக்கு வரும் என்பதும், இந்தப் பட்டணங்களெல்லாம் அழிந்துபோகும் என்பதும் இதன் பொருளாகும்.

சோதோமிற்கும், கொமோராவிற்கும் ஏற்பட்ட அழிவைப் பற்றி வேதாகமத்தில் 18 இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அத்மாவையும், செபோயீமையும் பற்றி இரண்டு இடங்களில் மட்டுமே சொல்லப்பட்டிருக்கிறது. (உபா 29:23; ஓசி 11:8). இந்த நான்கு பட்டணங்களுமே வேசித்தனத்தினாலும், ஆண்புணர்ச்சியினாலும் அழிந்துபோயிற்று. தேவனுடைய சாபம் அவர்கள்மேல் வந்தது. அவர்கள் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டானார்கள். (2பேதுரு 2:6).

கர்த்தர் பாவத்திற்கு நியாயத்தீர்ப்பாக அந்த தேசத்தை அழித்தார். அதே சமயத்தில் கடைசி நாட்களில் அந்தத் தேசத்தைப் புதுப்பிக்கப் போவதாகவும் வாக்குப் பண்ணியிருக்கிறார்.

இஸ்ரவேல் தேசம் கர்த்தருடைய கோபத்தினால் எரிக்கப்பட்டதைக் காணும்போது, "கர்த்தர் இந்த தேசத்திற்கு ஏன் இப்படிச் செய்தார்; இந்த மகா கோபம் பற்றியெரிந்ததற்குக் காரணம் என்ன" (உபா 29:24) என்று அந்த ஜாதிகளெல்லாம் சொல்லுவார்கள்.

ஜனங்கள் இஸ்ரவேல் புத்திரரைப்பார்த்து ஆச்சரியத்தோடும், அதிசயத்தோடும், பிரமிப்போடும் இப்படிப்பட்ட கேள்விகளை கேட்பார்கள். அவர்களுடைய கேள்விகளில் நியாயமுள்ளது. ஏனெனில் இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். அவர்கள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே பலத்த கிரியைகளையும், பெரிய அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்திருக்கிறார்.

ஆனால் இப்போதோ இஸ்ரவேல் தேசம் கந்தகத்தாலும் உப்பாலும் எரிக்கப்பட்டு கிடக்கிறது. கர்த்தர் தமது கோபத்தினால் சோதோமையும் கொமோராவையும் கவிழ்த்துப்போட்டதுபோல, இஸ்ரவேல் தேசத்தையும் கவிழ்த்துப்போட்டார். கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட தேசம், இப்போது அவரால் சபிக்கப்பட்டிருக்கிறது. இதைக் காணும்போது இஸ்ரவேல் புத்திரருடைய பின்சந்ததியாருக்கும், அந்நிய ஜாதியாருக்கும் ஆச்சரியமாயும், பிரமிப்பாயும் இருக்கிறது. ஆகையினால் அவர்கள் இஸ்ரவேல் தேசத்தின் அழிவைப் பார்த்து, "கர்த்தர் இந்த தேசத்திற்கு ஏன் இப்படிச் செய்தார்; இந்த மகா கோபம் பற்றியெரிந்ததற்குக் காரணம் என்ன" என்று கேட்கிறார்கள்.

ஜாதிகள் கேட்கும் கேள்விகளுக்கு என்ன பதில் சொல்ல வேண்டும் என்பது இஸ்ரவேல் புத்திரருக்கு நன்றாய்த் தெரியும். தங்கள் மத்தியிலே நோய்களும் வியாதிகளும் அதிகமாயிருப்பதற்கு காரணம் என்ன என்பதும் இஸ்ரவேல் புத்திரருக்கு தெளிவாகத் தெரியும். கர்த்தர் தங்கள் தேசத்தின் நிலத்தை கந்தகத்தாலும் உப்பாலும் எரித்துப்போட்டதற்கான காரணமும் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தெரியும்.

இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருந்தார்கள். கர்த்தர் அவர்களை தமது பலத்த புயத்தினால் விடுதலைபண்ணி, எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வந்தார். கர்த்தர் தமது கிருபையினால் இஸ்ரவேல் புத்திரரோடு உடன்படிக்கை பண்ணினார். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரோ கர்த்தரோடு பண்ணின உடன்படிக்கையை மீறி அந்நிய தெய்வங்களை பணிந்துகொண்டார்கள்.

இதனால் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீதும், அந்த தேசத்தின்மீதும் கோபங்கொண்டு, தம்முடைய உடன்படிக்கையில் சொல்லியிருக்கிற எல்லா சாபங்களையும் அவர்கள்மீது வரப்பண்ணினார். இஸ்ரவேல் ஜனத்தாரின் அழிவுக்கு இதுவே அடிப்படை காரணம்.

கர்த்தருடைய கோபம் பற்றியெரிந்ததற்கு காரணம் என்ன என்று ஜாதிகள் கேட்கும்போது, அவர்களுக்கு சரியான பதில் சொல்லப்படும். அந்தப் பதிலின் விவரம் வருமாறு :

அவர்களுடைய பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபோது, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையை அவர்கள் விட்டுப் போய், தாங்கள் அறியாமலும் தங்களுக்கு ஒரு பலனும் அளிக்காமலும் இருக்கிற தேவர்களாகிய வேறே தேவர்களைச் சேவித்து, அவைகளைப் பணிந்துகொண்டார்கள் *(உபா 29:25,26).*

இஸ்ரவேல் புத்திரர் தேவனையும், அவருடைய உடன்படிக்கையையும் விட்டுப் போய்விட்டார்கள். ஒரு காலத்தில் அவர்கள் கர்த்தரை அறிந்திருந்தார்கள். அவருடைய உடன்படிக்கைக்குக் கீழ்ப்படிந்து ஜீவித்தார்கள். தேவனுடைய கிருபை அவர்கள்மேல் இருந்தது. தேவனுடைய கிருபை நிரந்தரமாகத் தங்கியிருக்க வேண்டுமானால் அவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைக்குத் தொடர்ந்து கீழ்ப்படிந்து ஜீவிக்க வேண்டும்.

ஆனபடியினாலே கர்த்தர் இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற சாபங்கள் எல்லாவற்றையும் இந்த தேசத்தின்மேல் வரப்பண்ண, அதின்மேல் கோபம் மூண்டவராகி, அவர்களைக் கோபத்தினாலும் உக்கிரத்தினாலும் மகா எரிச்சலினாலும் அவர்களுடைய தேசத்திலிருந்து வேரோடே பிடுங்கி, இந்நாளில் இருக்கிறதுபோல, அவர்களை வேறே தேசத்தில் எறிந்து விட்டார் *(உபா 29:27,28).* இஸ்ரவேல் தேசத்தின் அழிவைக்குறித்தும், கர்த்தருடைய கோபம் பற்றியெரிந்ததற்கும் காரணம் கேட்பவர்களுக்கு இவ்வாறு பதில் சொல்லப்படும்.

கானான் தேசத்திலிருந்து இஸ்ரவேல் தேசத்தார் வேரோடு பிடுங்கப்பட்டு, தேசங்கள் மத்தியில் சிதறடிக்கப்பட்டார்கள். *(1இராஜா 14:15; 2இராஜா 17, 2இராஜா 25; 2நாளா 36; சங் 52:5; எரே 1:10).*

"இந்நாளில் இருக்கிறதுபோல" என்று உபா 29:28-ஆவது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் காரியங்கள் நிறைவேறும் நாளை இந்த வாக்கியம் குறிக்கிறது. மத் 24:34 ஆவது வசனத்தில் "இந்தச் சந்ததியார்" என்று கூறப்பட்டிருப்பதைப் போன்று இந்த வாக்கியம் அமைந்திருக்கிறது.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய உடன்படிக்கையைப்பற்றிச் சொல்லும்போது, ஒரு சில காரியங்களை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. கர்த்தர் அவனை மன்னிக்கச் சித்தமாயிரார். *(எசே 29:20; 2பேதுரு 2:4-9; யூதா 1:5-7).*

2. கர்த்தரின் கோபமும் எரிச்சலும் அந்த மனிதன்மேல் புகையும்.

3. இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற சாபங்களெல்லாம் அவன்மேல் தங்கும்.

4. கர்த்தர் அவன் பேரை வானத்தின்கீழ் இராதபடிக்குக் குலைத்துப்போடுவார்.

5. கர்த்தர் இஸ்ரவேல் கோத்திரங்கள் எல்லாவற்றிற்கும் அவனைப் புறம்பாக்கிப்போடுவார். *(உபா 29:21).*

6. கர்த்தர் இந்த தேசத்துக்கு வருவித்த வாதைகளையும் நோய்களையும் சந்ததியார் கண்டு ஆச்சரியப்படுவார்கள். (உபா 29:22).

7. இந்த தேசத்தின் நிலங்களெல்லாம் விதைப்பும் விளைவும் யாதொரு பூண்டின் முளைப்பும் இல்லாதபடிக்கு, கந்தகத்தாலும் உப்பாலும் எரிக்கப்படும். (உபா 29:23).

8. இஸ்ரவேல் தேசத்தின்மீது வரும் நியாயத்தீர்ப்புக்களையும், சாபங்களையும் மற்ற ஜாதியார் காணும்போது அதில் கர்த்தருடைய கரம் இருப்பதைப் புரிந்து கொள்வார்கள். (உபா 29:24-28).

இஸ்ரவேல் புத்திரரின் அழிவைக் குறித்து கேள்வி கேட்கிறவர்களுக்கு, கர்த்தர் தம்முடைய நீதியினால் பதில் சொல்லுகிறார். இதற்கு மேலும் இதுபற்றி யாரும் கேள்வி கேட்கக்கூடாது.

இஸ்ரவேல் தேசத்திற்கு வந்திருக்கிற அழிவைப் பார்த்து, ஒரு சிலர் தேவையில்லாமல் விவாதம் பண்ணுகிறார்கள். அவர்கள் மனுஷபுத்தியினாலே யோசித்து, மனுஷப்பிரகாரமான கேள்விகளைக் கேட்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை தண்டித்ததும், இஸ்ரவேல் தேசத்தை அழித்துப்போட்டதும் தேவையில்லாத நியாயத்தீர்ப்பு என்றும், அது தவறான செய்கை என்றும் கர்த்தருடைய செய்கைக்கு விரோதமாக வீண் விவாதம்பண்ணுகிறார்கள்.

கர்த்தர்மீது குற்றம் சொல்லுகிறவர்கள், மனுஷர் சிந்திக்கிற பிரகாரமாக யோசித்து, ஒரு சில காரணங்களை சொல்லுகிறார்கள். அதன் விவரம் வருமாறு :

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு இதுவரையிலும் ஏராளமான அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்து வந்திருக்கிறார். கர்த்தரே இஸ்ரவேல் ஜனத்தாரை ஒரு தேசமாக கூட்டிச்சேர்த்திருக்கிறார். கர்த்தர் அவர்களோடு தமது கிருபையினால் உடன்படிக்கை செய்திருக்கிறார். கர்த்தர் சர்வஞானமுள்ளவர். அவருக்கு மறைவான இரகசியம் எதுவுமேயில்லை. அவர் இதுவரையிலும் நடந்த காரியங்களையும் அறிந்திருக்கிறார், இனிமேல் நடக்கப்போகிற காரியங்களையும் அறிந்திருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் பிற்காலத்திலே தம்மோடு செய்துகொண்ட உடன்படிக்கையை மீறி, அந்நிய தெய்வங்களை பின்பற்றிப்போவார்கள் என்பது கர்த்தருக்கு தெரியும். கர்த்தர் கிருபையுள்ளவராக இருக்கும்போது, அவர் ஏன், இஸ்ரவேல் புத்திரரை பாவம் செய்யாமல் தடுக்கவில்லை என்றும், அவர்கள் விக்கிரகங்களைப் பின்பற்றிப்போகாதவாறு கர்த்தர் ஏன் அவர்களைத் தடுத்து நிறுத்தவில்லை என்றும் இவர்கள் கேள்விகளைக் கேட்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் பிற்காலங்களில் எப்படி இருப்பார்கள் என்பதையும், அவர்கள் என்ன செய்வார்கள் என்பதையும் கர்த்தர் அறிந்திருக்கிறார். அவர் சர்வஞானமுள்ளவர். ஆனாலும் வருங்காலத்தில் நடைபெறப்போகிற காரியங்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு வெளிப்படுத்தப்படவில்லை. அது மறைவானவைகளாகவே இருக்கிறது. "மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்" (உபா 29:29) என்று மோசே சொல்லுகிறார்.

மறைவான காரியங்கள் நமக்கு வெளிப்படுத்தப்படாத இரகசியங்களாகும். வெளிப்படுத்தப்படாத காரியங்களைப்பற்றி நாம் எப்படித்தான் கேள்வி கேட்டாலும், எத்தனை கேள்விகளைக் கேட்டாலும், அந்தக் கேள்விகளுக்கு யாராலும் சரியான பதிலை சொல்ல முடியாது. ஏனெனில் மறைவானவைகள் தேவனாகிய கர்த்தருக்கு மாத்திரமே உரியவைகள். அவை நமக்கு உரியவைகளல்ல.

"அதற்கு இயேசு: பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல" (அப் 1:7) என்று சொன்னார்.

"அதற்கு இயேசு: நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன, நீ என்னைப் பின்பற்றிவா என்றார்" (யோவா 21:22).

"அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப்பற்றினது. கணுக்களாலும் கட்டுகளாலும் உதவிபெற்று இணைக்கப்பட்டு, தேவவளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீரமுழுவதையும் ஆதரிக்கிற தலையைப் பற்றிக் கொள்ளாமல், மாயமான தாழ்மையிலும், தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று, காணாதவைகளிலே துணிவாய் நுழைந்து, தன் மாம்சசிந்தையினாலே வீணாய் இறுமாப்புக்கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப்பொருளை நீங்கள் இழந்துபோகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப்பாருங்கள்" (கொலோ 2:17-19).

கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாகவும், ஞானத்தின் பிரகாரமாகவும், ஆலோசனையின் பிரகாரமாகவும், தம்முடைய இரகசியங்களில் ஒரு பகுதியை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். மறைவானவைகள் தேவனாகிய கர்த்தருக்குரியவைகளாயிருப்பதுபோல, வெளிப்படுத்தப்பட்டவைகள், நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகளாயிருக்கிறது.

மோசே இதுபற்றிச் சொல்லும்போது, "மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்" (உபா 29:29) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிற சத்தியங்களை, நாம் கருத்தாய் ஆராய்ந்து பார்க்கவேண்டும். கர்த்தர் தம்முடைய ஆலோசனைகளில் ஒரு பகுதியை, நமக்கு வெளிப்படுத்தாமல், இரகசியமாக வைத்திருந்தாலும், நமக்கு எவ்வளவு வெளிப்படுத்த வேண்டுமோ அவ்வளவு வெளிப்படுத்தியிருக்கிறார். கர்த்தர் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிற சத்தியங்கள், நம்முடைய ஆத்தும இரட்சிப்புக்கும், நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் வளர்ச்சிக்கும் போதுமானதாயிருக்கிறது.

நமக்கு பிரயோஜனமாக இருக்கும் எந்தக் காரியத்தையும் கர்த்தர் நமக்கு வெளிப்படுத்தாமல் மறைத்து வைக்கவில்லை. ஆகையினால் கர்த்தர் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிற அவருடைய தெய்வீக ஆலோசனைகளில் நாம் திருப்தியோடிருக்கவேண்டும். கர்த்தர் நமக்கு வெளிப்படுத்தாத காரியங்களை அறிந்துகொள்ளவேண்டுமென்று பிரயாசப்படக்கூடாது.

வெளிப்படுத்தப்பட்டவைகளெல்லாம் நமக்கும், நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள். ஆகையினால் கர்த்தர் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிற இரகசியங்களை நாம் கருத்தாய் ஆராய்ந்து பார்க்கவேண்டும். அவற்றை ஆராய்ந்து பார்ப்பது மாத்திரமல்ல. அவற்றின் பிரகாரம் செய்வதற்கும் நாம் கவனமாயிருக்கவேண்டும். வெளிப்படுத்தப்பட்டவைகள் இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின் படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

கர்த்தர் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிற சத்தியங்களையெல்லாம் நம்முடைய இருதயங்களின் ஆழத்தில் பதிய வைத்திருக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தைகள் எப்போதுமே நமக்கு அருகாமையிலிருக்கவேண்டும். கர்த்தர் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிற சத்தியத்தின்படி ஜீவிப்பதற்கு நாம் மிகுந்த கவனத்தோடிருக்கவேண்டும். கர்த்தருடைய வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்கள் நம்மை ஆளுகை செய்யவேண்டும்.

கர்த்தருடைய வெளிப்படுத்தப்பட்ட வார்த்தைகள் நம்மை ஆளுகை செய்யவேண்டுமென்றால், நாம் அந்த வார்த்தைகளை கருத்தாய் ஆராய்ந்து கற்றுக்கொள்ளவேண்டும். வெளிப்படுத்தப்பட்ட வார்த்தைகள் நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் உரியது. கர்த்தர் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிற சத்திய வார்த்தைகளை, நம்முடைய பிள்ளைகளுக்கும் கருத்தாய் கற்றுக்கொடுக்கவேண்டும்.

கர்த்தர் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிற சத்திய வார்த்தைகளைக் கற்றுக்கொண்டு, அவைகளின்படி செய்ய நாம் கவனம் செலுத்தவேண்டும். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் நாம் ஜீவிக்கவேண்டும் என்பதற்காகவே, கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தை, நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.

கர்த்தரைப்பற்றியும், அவருடைய வார்த்தைகளைப்பற்றியும் நமக்கு ஞானமும் அறிவும் பெருகும்போது, நாம் அவைகளின்படி ஜீவிக்க கவனமாயிருக்கவேண்டும். நமக்கு கர்த்தருடைய வார்த்தைகளில் அதிக ஞானம் இருந்தும், நாம் அதற்கேற்ற பிரகாரம் ஜீவிக்கவில்லையென்றால், நம்முடைய ஞானத்தினால் ஒரு பிரயோஜனமுமில்லை.

ஒரு சிலர் தங்களுடைய சுயபெருமைக்காகவும், தத்துவ விவாதங்களுக்காகவும், தங்களுடைய வேதஅறிவை பெருமையோடு வெளிப்படுத்திக் காண்பிப்பதற்காகவும், வேதவாக்கியங்களை படிக்கிறார்கள். ஆனால் அவர்கள், தாங்கள் கற்றுக்கொண்ட சத்தியத்தின் பிரகாரம் ஜீவிக்கமாட்டார்கள். தேவையில்லாத விவாதங்கள், ஆகாத சம்பாஷணைகள் நமக்கு ஒருபோதும் பிரயோஜனமாயிருக்காது.

கர்த்தர் தம்முடைய தெய்வீக ஆலோசனைகளை, தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். கர்த்தருடைய ஆலோசனைகளையும், அவருடைய வார்த்தைகளையும் நாம் நமக்கு சொந்தமாக்கிக்கொள்ளவேண்டும். இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, கர்த்தர் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிற சத்திய வார்த்தைகள், நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகளாயிருக்கிறது.

30 அதிகாரம்

உபாகமம் 29-ஆவது அதிகாரத்தில் இஸ்ரவேல் புத்திரருக்கு எச்சரிப்பான வார்த்தைகள் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்திலோ தேவனுடைய கிருபையைப்பற்றியும், இரக்கத்தைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரர் மீது அன்புகூருகிறார். அவர்களுக்கு தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் காண்பிக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது, கர்த்தர் அவர்களை மறுபடியும் ஏற்றுக்கொள்வதாகவும், அவர்களை ஆசீர்வதிப்பதாகவும் வாக்குப்பண்ணுகிறார் (உபா 30:1-10).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லியிருக்கிற கற்பனைகளும், கட்டளைகளும், நியாயப்பிரமாணங்களும் புரிந்துகொள்வதற்கு கடினமான வார்த்தைகளல்ல. அவை அவர்களுக்கு வெகுதூரத்திலும் இல்லை. கர்த்தருடைய வார்த்தைகள் இஸ்ரவேல் புத்திரருக்கு மிகவும் சமீபமாய், அவர்களுடைய வாயிலும், இருதயத்திலும் இருக்கிறது (உபா 30:11-14).

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக ஜீவனையும் மரணத்தையும், நன்மையையும் தீமையையும் வைக்கிறார். இவற்றில் தங்களுக்கு எது வேண்டும் என்பதை இஸ்ரவேல் புத்திரரே தீர்மானித்து, அதைத் தெரிந்துகொள்ளவேண்டும் (உபா 30:15-20).

மனந்திரும்புதல்
உபா 30:1-10

உபா 30:1. நான் உனக்கு முன்பாக வைத்த ஆசீர்வாதமும் சாபமுமாகிய இந்தக் காரியங்களெல்லாம் உன்மேல் வரும்போது: நீ உன் தேவனாகிய கர்த்தரால் துரத்திவிடப்பட்டு, எல்லா ஜாதிகளிடத்திலும் போயிருக்கும்போது, நீ உன் இருதயத்திலே சிந்தனை செய்து,

உபா 30:2. உன் தேவனாகிய கர்த்தரிடத்துக்கே திரும்பி, இன்று நான் உனக்குக் கற்பிக்கிறபடியெல்லாம், நீயும் உன் பிள்ளைகளும் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்தால்,

உபா 30:3. உன் தேவனாகிய கர்த்தர் உன் சிறையிருப்பைத் திருப்பி, உனக்கு இரங்கி, உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிதற அடித்த எல்லா ஜனங்களிடத்திலும் இருக்கிற உன்னைத் திரும்பச் சேர்த்துக்கொள்ளுவார்.

உபா 30:4. உன்னுடையவர்கள் வானத்தின் கடையான திசைமட்டும் துரத்துண்டிருந்தாலும், உன் தேவனாகிய கர்த்தர் அங்கே இருக்கிற உன்னைக் கூட்டி, அங்கேயிருந்து உன்னைக் கொண்டுவந்து,

உபா 30:5. உன் பிதாக்கள் சுதந்தரித்திருந்த தேசத்தை நீ சுதந்தரிக்கும்படிக்கு, உன் தேவனாகிய கர்த்தர் அதில் உன்னைச் சேர்த்து, உனக்கு நன்மைசெய்து, உன் பிதாக்களைப்பார்க்கிலும் உன்னைப் பெருகப்பண்ணுவார்;

உபா 30:6. உன் தேவனாகிய கர்த்தரில் நீ உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அன்புகூர்ந்து பிழைக்கும்படி, உன் தேவனாகிய கர்த்தர் உன் இருதயத்தையும் உன் சந்ததியாரின் இருதயத்தையும் விருத்தசேதனம்பண்ணி,

உபா 30:7. இந்தச் சாபங்களையெல்லாம் உன் சத்துருக்கள்மேலும் உன்னைத் துன்பப்படுத்தின உன் பகைஞர்மேலும் சுமரப்பண்ணுவார்.

உபா 30:8. நீயோ மனந்திரும்பி, கர்த்தரின் சத்தத்திற்குச் செவிகொடுத்து, நான் இன்று உனக்குக் கற்பிக்கிற அவருடைய எல்லாக் கற்பனைகளின்படியும் செய்வாய்.

உபா 30:9. அப்பொழுது உனக்கு நன்மை உண்டாகும்படி உன் தேவனாகிய கர்த்தர் உன் கைகள் செய்யும் எல்லா வேலைகளிலும், உன் கர்ப்பத்தின் கனியிலும், உன் மிருக ஜீவனின் பலனிலும், உன் நிலத்தின் கனியிலும் உனக்குப் பரிபூரணமுண்டாகச் செய்வார்.

உபா 30:10. உன் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்து, இந்த நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிற அவருடைய கற்பனைகளையும் அவருடைய கட்டளைகளையும் கைக்கொள்ளும்போதும், உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் திரும்பும்போதும், கர்த்தர் உன் பிதாக்கள்மேல் சந்தோஷமாயிருந்ததுபோல, உன்மேலும் உனக்கு நன்மை உண்டாகத் திரும்பவும் சந்தோஷமாயிருப்பார்.

மோசே இந்த வசனப்பகுதியில் இஸ்ரவேல் புத்திரருக்கு நிபந்தனையுள்ள வாக்குத்தத்தத்தை சொல்லுகிறார். இதில் சொல்லப்பட்டிருக்கிற வார்த்தைகள் தீர்க்கதரிசன வார்த்தைகளாகும்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், இஸ்ரவேல் புத்திரருக்கு மாத்திரம் என்று இல்லாமல், இந்தப் பூமியிலுள்ள எல்லா ஜாதியாருக்கும், எல்லா பாஷைக்காரருக்கும், எல்லா ஜனங்களுக்கும் தேவனாயிருக்கிறார். கர்த்தருடைய வாக்குத்தத்தம் நிபந்தனையுள்ளது. தம்முடைய வார்த்தைக்கு யாரெல்லாம் கீழ்ப்படிந்து ஜீவிக்கிறார்களோ, அவர்கள் எல்லோரையும் ஆசீர்வதிப்பதாக கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் பாவிகளிலும் பிரதான பாவிகளாகயிருந்தாலும், அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது, கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னித்து, அவர்களை தம்முடைய ஜனமாக ஏற்றுக்கொள்கிறார். அவர்களுக்கு தம்முடைய கிருபையும், இரக்கமும், சிலாக்கியமும் கொடுக்கப்படும் என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார்.

கர்த்தருடைய வார்த்தைகள் அவருடைய கிருபையுள்ள உடன்படிக்கையின் வார்த்தைகளாயிருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவர். இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். அவர்கள் கர்த்தரோடு செய்து கொண்ட உடன்படிக்கையை மீறி, பாவம் செய்தாலும், அவர்கள் தங்களுடைய பாவங்களை உணர்ந்து, மனந்திரும்பி, மறுபடியும் கர்த்தரிடத்தில் திரும்பி வருவதற்கு இந்த உடன்படிக்கையில் வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பும்போது, அவர்களுடைய பாவங்களை மன்னிப்பதாகவும், கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையில் வாக்குப்பண்ணியிருக்கிறார். கர்த்தருடைய கற்பனைகளுக்கு இஸ்ரவேல் புத்திரர் கீழ்ப்படியவில்லையென்றால், அவர்களுக்கு ஆசீர்வாதம் இல்லை. அவர்கள்மீது சாபமே வரும். ஆனாலும் அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது, கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னித்து, அவர்களை ஆசீர்வதிப்பார்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டுமென்று, மோசே அவர்களுக்கு போதிக்கிறார். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டுமென்றால், முதலாவதாக தங்கள் இருதயத்திலே சிந்தனை செய்யவேண்டும். கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளையும் சிந்தனை செய்யவேண்டும். தாங்கள் கர்த்தருக்கு விரோதமாக செய்த பாவங்களையும் சிந்தனை செய்யவேண்டும். தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி தாங்கள் கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டும் என்பதையும் அவர்கள் தங்கள் இருதயத்தில் சிந்தனை செய்யவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் ஒருவேளை தாங்கள் கர்த்தரோடு செய்துகொண்ட உடன்படிக்கையை மறந்திருக்கலாம். கர்த்தர் தங்களுக்கு சொன்ன கற்பனைகளையும், கட்டளைகளையும் அவர்கள் மறந்திருக்கலாம். ஒருவேளை இவற்றை அவர்கள் நினைவில் வைத்திருந்தாலும், இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், அசட்டை செய்திருக்கலாம்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை விட்டு தூரமாய் விலகிப்போயிருந்தாலும், முதலாவதாக அவர்கள் தங்கள் இருதயத்தில் சிந்தனை செய்யவேண்டும். மனந்திரும்புதலுக்கு இதுவே ஆரம்பமாகயிருக்கிறது.

"இதை நினைத்துப் புருஷராயிருங்கள்; பாதகரே, இதை மனதில் வையுங்கள். முந்திப் பூர்வகாலத்தில் நடந்தவைகளை நினையுங்கள்" (ஏசா 46:8,9) என்று ஏசாயா தீர்க்கதரிசி சொல்லுகிறார்.

கெட்ட குமாரன் தன்னுடைய தகப்பனிடத்தில் திரும்பி வரும் முன்பாக, அவனுடைய புத்தி தெளிந்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவன் தன்னுடைய நிலமையை தன் இருதயத்தில் சிந்தித்துப்பார்க்கிறான். அதன் பின்பு தான் செய்த தப்பிதங்களுக்காக மனம் வருந்தி, தன்னுடைய தகப்பனாரிடத்தில் திரும்பி வருகிறான்.

நாம் கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டுமென்றால், அதற்கு முன்பு, முதலாவதாக, நாம் நம்மிடத்தில் திரும்பி வரவேண்டும். நம்முடைய நிலமையைப்பற்றி நம்முடைய இருதயத்திலே சிந்தனை செய்யவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆசீர்வாதமான வார்த்தைகளையும் சாபமான வார்த்தைகளையும் சொல்லியிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் தங்கள் இருதயத்தில் அந்த வார்த்தைகளையெல்லாம் சிந்தனை செய்யவேண்டும். பாவிகள், தங்களுடைய பாவத்தினால், தாங்கள் இழந்துபோன சந்தோஷங்களையும், ஆசீர்வாதங்களையும், தங்கள் இருதயத்திலே சிந்தனை செய்யவேண்டும்.

பாவிகள் தங்களுடைய பாவங்களினால், இப்போது தாங்கள் அனுபவிக்கிற துன்பங்களையும், வேதனைகளையும் தங்கள் இருதயத்திலே சிந்தனை செய்யவேண்டும். தங்களுடைய பாவத்திற்கு மனந்திரும்பும்போது, இந்த வேதனைகளிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்றும், மறுபடியும் சந்தோஷத்தையும், கர்த்தருடைய ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளலாம் என்றும் பாவிகள் தங்கள் இருதயத்திலே சிந்தனை செய்யவேண்டும்.

கர்த்தருடைய வார்த்தைகளையும், அவருடைய வாக்குத்தத்தங்களையும், தாங்கள் அனுபவிக்கிற வேதனைகளையும், சாபங்களையும், தங்கள் இருதயத்திலே சிந்தனை செய்கிறவர்கள், தங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் காலதாமதம்பண்ணாமல் சீக்கிரத்தில் திரும்பி வருவார்கள்.

கெட்ட குமாரன் தன்னுடைய இருதயத்திலே தான் அனுபவிக்கிற வேதனைகளையும், தன்னுடைய தகப்பனார் வீட்டிலே இருக்கிற ஆசீர்வாதங்களையும், தன்னுடைய இருதயத்திலே சிந்தனை செய்கிறான். அவன் சாபத்தையும் ஆசீர்வாதத்தையும் நினைத்துப் பார்க்கிறான். தனக்கு இப்போது புசிப்பதற்கு போஜனம் இல்லாதிருப்பதையும், தன்னுடைய தகப்பனாரின் வீட்டிலே நேர்த்தியான போஜனம் இருப்பதையும் கெட்ட குமாரன் தன் இருதயத்திலே சிந்தனை செய்கிறான்.

"அவனுக்குப் புத்தி தெளிந்தபோது, அவன்: என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன். நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன் என்று தனக்குள்ளே சொல்லிக்கொள்கிறான்" (லூக் 15:17-19).

கர்த்தர் வாக்குப்பண்ணியிருக்கிற ஆசீர்வாதங்களையும், தாங்கள் அனுபவிக்கிற சாபங்களையும், தங்கள் இருதயத்திலே சிந்தனை செய்கிறவர்கள், தங்கள் பாவங்களுக்கும், மீறுதல்களுக்கும், அக்கிரமங்களுக்கும் உண்மையாய் மனந்திரும்புவார்கள். அவர்களுடைய மனதிலே தேவனுக்கேற்ற துக்கமும், தங்கள் பாவத்தைக் குறித்த வெட்கமும் உண்டாகும்.

"என்னை விட்டுச் சோரம்போகிற இருதயத்தைக்குறித்தும், தங்கள் நரகலான விக்கிரகங்களின் பின்னே சோரம்போகிற தங்கள் கண்களைக்குறித்தும் மனமடிவானேன் என்று உங்களில் தப்பிப்போன அவர்கள் தாங்கள் சிறைப்பட்டிருக்கும் புறஜாதிகளுக்குள்ளே என்னை நினைத்து, தங்களுடைய சகல அருவருப்புகளினாலும் தாங்கள் செய்த பொல்லாப்புகளினிமித்தம் தங்களையே வெறுத்து, இந்தத் தீங்குகளையெல்லாம் தங்களுக்கு நேரிடப்பண்ணுவேன் என்று கர்த்தராகிய நான் விருதாவாய்ச் சொன்னதில்லையென்று அறிந்துகொள்வார்கள் என்றார்" (எசே 6:9,10).

"அவர்களில் தப்புகிறவர்கள் தப்புவார்கள்; ஆனாலும் அவர்கள் அனைவரும் அவனவன் தன் தன் அக்கிரமத்தினிமித்தம் துக்கித்துக் கூப்பிடுகிற பள்ளத்தாக்குகளின் புறாக்களைப்போல மலைகளில் இருப்பார்கள்" (எசே 7:16).

கர்த்தருடைய ஆசீர்வாதங்களையும், தாங்கள் அனுபவிக்கிற சாபங்களையும், தங்கள் இருதயத்திலே சிந்தனை செய்து பார்க்கிறவர்கள், காலதாமதம்பண்ணாமல் தங்கள் தேவனாகிய கர்த்தரிடத்திற்கு திரும்பி வருவார்கள். நம்முடைய பாவத்திற்கு மனந்திரும்பி, நம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்திற்கு திரும்பி வரும்போது, நம்முடைய முழுஇருதயத்தோடும், நம்முடைய முழுஆத்துமாவோடும் திரும்பி வரவேண்டும்.

தங்கள் பாவத்திற்கு மனந்திரும்பி, கர்த்தரிடத்திற்கு திரும்பி வருகிறவர்கள் அவருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிவார்கள். அவர்கள் கர்த்தரின் சத்தத்திற்கு செவிகொடுப்பார்கள். அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயங்களையும் கைக்கொள்வார்கள்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், தம்மிடத்தில் வருகிறவர்களை ஒருபோதும் புறம்பே தள்ளிவிடமாட்டார். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, தங்கள் முழுஇருதயத்தோடும், முழுஆத்துமாவோடும் கர்த்தரிடத்திற்கு திரும்பி வரும்போது, கர்த்தர் அவர்களை மறுபடியுமாக தம்முடைய ஜனமாகச் சேர்த்துக்கொள்வார். மோசே இந்த சத்தியத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லும்போது,

"நான் உனக்கு முன்பாக வைத்த ஆசீர்வாதமும் சாபமுமாகிய இந்தக் காரியங்களெல்லாம் உன்மேல் வரும்போது; நீ உன் தேவனாகிய கர்த்தரால் துரத்திவிடப்பட்டு, எல்லா ஜாதிகளிடத்திலும் போயிருக்கும்போது, நீ உன் இருதயத்திலே சிந்தனை செய்து, உன் தேவனாகிய கர்த்தரிடத்துக்கே திரும்பி, இன்று நான் உனக்குக் கற்பிக்கிறபடியெல்லாம், நீயும் உன் பிள்ளைகளும் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்தால், உன் தேவனாகிய கர்த்தர் உன் சிறையிருப்பைத் திருப்பி, உனக்கு இரங்கி, உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிதற அடித்த எல்லா ஜனங்களிடத்திலும் இருக்கிற உன்னைத் திரும்பச் சேர்த்துக்கொள்ளுவார்" (உபா 30:1-3) என்று சொல்லுகிறார்.

"நான் உனக்கு முன்பாக வைத்த ஆசீர்வாதமும் சாபமுமாகிய இந்தக் காரியங்களெல்லாம் உன்மேல் வரும்போது..........." (உபா 30:1-10) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு தீர்க்கதரிசன வார்த்தைகளைச் சொல்லுகிறார். இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. இந்தத் தீர்க்கதரிசனத்தின் ஒருபகுதி இப்போது நிறைவேற ஆரம்பித்திருக்கிறது.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொன்ன தீர்க்கதரிசன வார்த்தைகளின் விவரம் வருமாறு :

1. நியாயப்பிரமாணத்தில் கூறப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்களும், சாபங்களும் பூரணமாக நிறைவேறும். (உபா 30:1)

2. எல்லா ஜாதிகளிடத்திலும் துரத்தி விடப்படுவார்கள்.

3. தங்கள்மீது அனுப்பப்பட்ட சாபங்கள் வரும்போது இஸ்ரவேல் புத்திரர் இதைக் குறித்து தங்கள் இருதயத்திலே சிந்தனை செய்வார்கள்.

4. இஸ்ரவேல் புத்திரர் தேவனிடத்திற்குத் திரும்பி வருவார்கள். முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து புதிய ஜீவனைப் பெற்றுக் கொள்வார்கள். (உபா 30:2,6,8). ஆயிரம் வருஷ அரசாட்சியில் இது நிறைவேறும். (ஏசா 66:7-8; சக 12:10-13:1; ரோமர் 11:25-29)

5. சிறையிருப்பிலிருந்து இஸ்ரவேலருக்கு விடுதலை உண்டாகும் (உபா 30:3)

6. கர்த்தர் மறுபடியும் இஸ்ரவேலருக்கு இரங்குவார்.

7. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும், தேசங்களிலிருந்து இஸ்ரவேலர்கள் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுவதும் இருக்கும் (உபா 30:3-5; ஏசா 11:11-12; மத் 24:29-31)

8. இஸ்ரவேல் புத்திரர் பாலஸ்தீன தேசத்தில் பாதுகாப்பாகக் குடியேறுவார்கள். தேவன் அவர்களை நன்மையினால் ஆசீர்வதிப்பார். அவர்களுடைய பிதாக்களைப் பார்க்கிலும் அவர்களைப் பெருகப்பண்ணுவார். (உபா 30:5)

9. இஸ்ரவேலரைத் துன்பப்படுத்தின பகைஞர்மீதும், அவர்களுடைய சத்துருக்கள் மீதும் நியாயத்தீர்ப்பு வரும் (உபா 30:7; யோவே 3; சக 14; மத் 25:21-46)

10. தேசத்தில் செழிப்பு உண்டாகும் (உபா 30:9-10; ஆமோ 9:11-14; மீகா 4; யோவே 2; அப் 15:13-18)

இஸ்ரவேல் ஜனத்தார் தேசங்கள் மத்தியில் துரத்தப்பட்டிருக்கும்போது, கடந்த காலத்தில் கர்த்தர் தங்களுக்குச் செய்த காரியங்களை நினைவுகூருவார்கள். தேசங்கள் மத்தியில் தாங்கள் சிதறடிக்கப்பட்டதற்கான காரணங்களைப் புரிந்து கொள்வார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரரின் சந்ததியாரை "உன் பிள்ளைகள்" என்று சொல்லுகிறார். ஏசாயா இதை "உன் சந்ததியினுடைய சந்ததி" என்று சொல்லுகிறார் (ஏசா 59:21).

"உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும்" என்னும் வாக்கியம் உண்மையான மனமாற்றத்தையும், மெய்யாகவே கர்த்தருக்குக் கீழ்ப்படிவதையும் குறிக்கிறது (உபா 30:2, 6,8,10; மத் 22:36-40).

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தரை விட்டு விலகிப்போனாலும், அவர்கள் மறுபடியும் கர்த்தரிடத்திற்கு திரும்பி வரவேண்டுமென்று மோசே சொல்லுகிறார். பரிசுத்த வேதாகமத்தில், மூன்றுவிதமான திரும்பி வருதல்களைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அதன்விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் புத்திரர் தேவனிடத்திற்குத் திரும்பி வருதல் - மனந்திரும்புதல். (உபா 30:2,6,8; ஏசா 66:7-8; எசே 36:16-37:28; சக 12:10-13:1; ரோமர் 11:25-29)

2. இஸ்ரவேல் புத்திரர் பாலஸ்தீனத் தேசத்திற்குத் திரும்பி வருதல். (உபா 30:2-5,8; ஆதி 49:10; ஏசா 11:1-12; எரே 24:5-7; எரே 30:3-31:40; எரே 32:37-44; எரே 33:7-22; எசே 34:11-31; எசே 36:1-28; எசே 37:1-28; மத் 24:29-31)

3. இயேசு கிறிஸ்து பூமிக்குத் திரும்பி வருதல். (உபா 30:3; ஆதி 49:10; ஏசா 59:20-21; ஏசா 63:1-6; தானி 2:44-45; தானி 7:13-14,22; யோவே 2:1-3:21; ஒப 15-21; சக 14; மத் 24:29-31; மத் 25:31-46; அப் 15:13-18; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 1:7; வெளி 11:15; வெளி 19:11-21)

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களுக்கும் அக்கிரமங்களுக்கும் மனந்திரும்ப வேண்டும். அவர்கள் கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டும். அவர்களுடைய இருதயத்தில் மனமாற்றம் ஏற்படவேண்டும். இஸ்ரவேல் புத்திரருடைய மனமாற்றத்தினால், அவர்களுடைய ஜீவியங்களில் நன்மைகளும் ஆசீர்வாதங்களும் உண்டாகும். அவையாவன:

1. முழு இருதயத்தோடு கர்த்தருக்குக் கீழ்ப்படிதல். (உபா 30:2,6,8,10)
2. சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்படுதல். (உபா 30:3-5; ரோமர் 11:25-29; ஏசா 59:20-21)
3. தேவனுடைய இரக்கத்தை மறுபடியும் பெற்றுக் கொள்ளுதல். (உபா 30:3)
4. இதற்கு முன்பிருந்த ஆசீர்வாதங்களைவிட அதிக ஆசீர்வாதங்களோடு பாலஸ்தீன தேசத்தில் குடியிருப்பது. (உபா 30:5,9-10)
5. கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடு அன்புகூருதல். (உபா 30:6)
6. புதிய ஜீவனும், நித்திய ஜீவனும்.
7. சத்துருக்களின்மீது நியாயத்தீர்ப்பு (உபா 30:7)

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை சிதற அடித்த எல்லா ஜனங்களிடத்திலும் இருக்கிற அவர்களைத் திரும்பச் சேர்த்துக்கொள்ளுவார். இஸ்ரவேல் புத்திரர் முழு இருதயத்தோடு கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது இந்த வாக்கியம் நிறைவேறும். (உபா 30:2-3,6,8,10).

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக இஸ்ரவேல் புத்திரரில் ஒரு பகுதியினர் மட்டுமே மறுபடியும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது உலகமெங்கும் சிதறியிருக்கும் எல்லா இஸ்ரவேல் புத்திரரும் திரும்ப சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். (ஏசா 11:10-12; மத் 24:29-31).

உபா 30:3 ஆவது வசனம் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் திரும்பி வருவதைப் பற்றியும் கூறுகிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது பிதாவாகிய தேவன் பூமிக்கு வருவதைப்பற்றியும், இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது (தானி 7:22). இந்த வாக்கியம் திரித்துவத்தின் இரண்டாம் நபராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றியும் குறிப்பிடுகிறது. இயேசுகிறிஸ்து இஸ்ரவேல் புத்திரரை மறுபடியும் கூட்டிச்சேர்ப்பார். (மத் 24:29-31). இஸ்ரவேல் புத்திரரோடே சென்ற ஞானக்கன்மலை இயேசு கிறிஸ்துவே. (1கொரி 10:4). இந்த வாக்கியத்தில் பிதாவாகிய தேவனும், குமாரனாகிய தேவனும் பங்குபெற்றிருக்கிறார்கள்.

"வானத்தின் கடையான திசைமட்டும்" என்னும் வாக்கியத்திற்கு வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய திசைகளிலிருந்து என்று பொருள். இந்த வாக்கியம் வேதாகமத்தில் பலவிதமாகக் கூறப்பட்டிருக்கிறது. "பூமியின் நான்கு திசைகளிலும் (ஏசா 11:12; வெளி 7:1); "வானத்தின் ஒருமுனை முதற்கொண்டு மறுமுனை மட்டும் நாலுதிசைகளிலுமிருந்து" (மத் 24:31); "பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள" (வெளி 20:8).

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பிதாக்கள் சுதந்தரித்திருந்த தேசத்தை சுதந்தரிப்பார்கள். அவர்கள் தங்களுடைய பிதாக்களின் தேசத்தை இன்னும் சுதந்தரிக்கவில்லை. இரண்டாம் முறையாகத் தேசத்தைச் சுதந்தரிப்பதைப் பற்றி இங்கு எதிர்பார்க்கப்படுகிறது (ஏசா 11:10-12).

தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி கர்த்தரிடத்திற்கு திரும்பி வருகிறவர்கள், கர்த்தருடைய பரிசுத்தமான சித்தத்திற்கு கீழ்ப்படிய தங்களை ஒப்புக்கொடுப்பார்கள். அவர்கள் கர்த்தரின் சத்தத்திற்கு செவிகொடுப்பார்கள். தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி கர்த்தரிடத்திற்கு திரும்பி வருகிறவர்கள், சந்தோஷமாய்த் திரும்பி வருவார்கள். அவர்கள் தங்கள் முழுஇருதயத்தோடும் முழுஆத்துமாவோடும் கர்த்தரிடத்திற்கு திரும்பி வருவார்கள்.

தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி தம்மிடத்தில் திரும்பி வருகிற ஜனங்களை ஆசீர்வதிப்பதாக கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார். அவர்கள் தாங்கள் அனுபவித்த வேதனைகளினாலும், நெருக்கங்களினாலும், துன்பங்களினாலும் கர்த்தரிடத்திற்கு திரும்பி வருகிறார்கள். தங்கள் பாவங்களினிமித்தமாக அவர்கள் அந்நிய தேசத்திலே சிதறிப்போயிருக்கிறார்கள். தங்களுடைய பாவத்தினிமித்தமாக அவர்கள் தேவனாகிய கர்த்தரால் அந்நிய ஜாதிகளிடத்திலே துரத்திவிடப்பட்டவர்கள். ஆனாலும் அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது, கர்த்தர் தம்முடைய கிருபையினால் அவர்களை தம்மிடத்தில் திரும்ப சேர்த்துக்கொள்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் பாவங்களுக்கும், மீறுதல்களுக்கும், அக்கிரமங்களுக்கும் மனந்திரும்பவேண்டும் என்பதற்காகவே, கர்த்தர் அவர்களை அந்நிய ஜாதிகளிடத்திலே துரத்திவிட்டார். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டும் என்பதற்காக, தேவனாகிய கர்த்தர் அவர்கள்மீது சாபங்களையும், வேதனைகளையும், பாடுகளையும் வரப்பண்ணினார்.

ஆனாலும் இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பும்போது, அவர்கள் இந்தப் பூமியிலே எந்த ஜாதிகளிடத்தில் துரத்தப்பட்டிருந்தாலும், கர்த்தர் அவர்களுடைய சிறையிருப்பைத் திருப்புவார். அவர்களுக்கு தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் காண்பிப்பார். கர்த்தர் அவர்களை எந்த ஜாதிகளிடத்தில் சிதறடித்திருந்தாலும், அந்த ஜாதிகளிடத்திலிருந்து, அவர்களை மறுபடியுமாக தம்மிடத்தில் திரும்ப சேர்த்துக்கொள்வார்.

இஸ்ரவேல் ஜனத்தார் இந்தப் பூமியிலே, எந்த ஜாதியார் மத்தியிலே துரத்தப்பட்டிருந்தாலும், அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் திரும்பி வருவதற்கு ஒரு பெரும்பாதை நியமிக்கப்பட்டிருக்கிறது. இது கர்த்தருடைய கிருபையின் பாதை. இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய பாவங்களையும், அக்கிரமங்களையும், தாங்கள் இழந்துபோன ஆசீர்வாதங்களையும், தாங்கள் அனுபவிக்கிற சாபங்களையும், தங்கள் இருதயத்திலே சிந்தனை செய்து, தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கும்போது, கர்த்தர் அவர்களுக்கு மறுபடியும் தம்முடைய இரக்கத்தைக் காண்பிப்பார்.

இஸ்ரவேல் ஜனத்தாருடைய பாவங்கள் அதிகமாயிருந்தபோது, கர்த்தர் அவர்கள்மீது காண்பித்த கோபமும் அதிகமாயிருந்தது. கர்த்தர் தம்முடைய உக்கிரகோபத்தினால் அவர்களை சமீபத்திலுள்ள தேசங்களுக்கு துரத்திவிடாமல், தூரத்திலுள்ள ஜாதிகளிடத்தில் துரத்திவிட்டார். அவர்கள் வானத்தின் கடையாந்தர மட்டும் துரத்தப்பட்டிருந்தாலும், கர்த்தர் தம்முடைய கிருபையினால் அவர்களை மறுபடியும் தம்மிடத்தில் அழைத்து வருவார்.

இஸ்ரவேல் ஜனத்தாருடைய பாவங்கள் அதிகமாயிருந்தபோது, கர்த்தர் அவர்கள்மீது காண்பித்த கோபமும் அதிகமாயிருந்தது. கர்த்தர் தம்முடைய உக்கிரகோபத்தினால் அவர்களை சமீபத்திலுள்ள தேசங்களுக்கு துரத்திவிடாமல், தூரத்திலுள்ள ஜாதிகளிடத்தில் துரத்திவிட்டார். அவர்கள் வானத்தின் கடையாந்தர மட்டும் துரத்தப்பட்டிருந்தாலும், கர்த்தர் தம்முடைய கிருபையினால் அவர்களை மறுபடியும் தம்மிடத்தில் அழைத்து வருவார்.

மோசே கர்த்தருடைய கிருபையைப்பற்றியும், அவர் இஸ்ரவேல் ஜனங்களை மறுபடியும் தம்மிடத்தில் அழைத்து வருவது பற்றியும் சொல்லும்போது, "உன்னுடையவர்கள் வானத்தின் கடையான திசைமட்டும் துரத்துண்டிருந்தாலும், உன் தேவனாகிய கர்த்தர் அங்கே இருக்கிற உன்னைக் கூட்டி, அங்கேயிருந்து உன்னைக் கொண்டுவந்து, உன் பிதாக்கள் சுதந்தரித்திருந்த தேசத்தை நீ சுதந்தரிக்கும்படிக்கு, உன் தேவனாகிய கர்த்தர் அதில் உன்னைச் சேர்த்து, உனக்கு நன்மைசெய்து, உன் பிதாக்களைப்பார்க்கிலும் உன்னைப் பெருகப்பண்ணுவார்" *(உபா 30:4,5)* என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு நன்மை செய்வதாக இரண்டு இடங்களில் வாக்குப் பண்ணியிருக்கிறார் *(உபா 30:5,9)*.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை அவர்களுடைய சுதந்தர தேசத்திலிருந்து துரத்திவிட்டார். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் வந்தபோதோ, கர்த்தர் அவர்களை மறுபடியுமாக, அவர்களுடைய சுதந்தர தேசத்திற்கே அழைத்து வருகிறார்.

பாவிகள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பும்போது, அவர்கள் தாங்கள் அனுபவிக்கிற சாபங்களிலிருந்து விடுவிக்கப்படுவது மாத்திரமல்ல, அவர்கள் கர்த்தருடைய ஆசீர்வாதத்திற்கும் பங்குள்ளவர்களாயிருக்கிறார்கள். கர்த்தருடைய கிருபையினாலே மனந்திரும்புகிற பாவிகள், மெய்யான சந்தோஷத்தையும், சமாதானத்தையும் பெற்றுக்கொள்வார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது அவர்கள் எவ்வாறு திரும்பி வரவேண்டும் என்றும் மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். அவர்கள் கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது, கர்த்தர் அவர்களுக்கு வாக்குப்பண்ணியிருக்கிற ஆசீர்வாதங்களையும் மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

"உன் தேவனாகிய கர்த்தரில் நீ உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அன்புகூர்ந்து பிழைக்கும்படி, உன் தேவனாகிய கர்த்தர் உன் இருதயத்தையும் உன் சந்ததியாரின் இருதயத்தையும் விருத்தசேதனம்பண்ணி, இந்தச் சாபங்களையெல்லாம் உன் சத்துருக்கள்மேலும் உன்னைத் துன்பப்படுத்தின உன் பகைஞர்மேலும் சுமரப்பண்ணுவார்" *(உபா 30:6,7)* என்றும்,

"நீயோ மனந்திரும்பி, கர்த்தரின் சத்தத்திற்குச் செவிகொடுத்து, நான் இன்று உனக்குக் கற்பிக்கிற அவருடைய எல்லாக் கற்பனைகளின்படியும் செய்வாய். அப்பொழுது உனக்கு நன்மை உண்டாகும்படி உன் தேவனாகிய கர்த்தர் உன் கைகள் செய்யும் எல்லா வேலைகளிலும், உன் கர்ப்பத்தின் கனியிலும், உன் மிருக ஜீவனின் பலனிலும், உன் நிலத்தின் கனியிலும் உனக்குப் பரிபூரணமுண்டாகச் செய்வார்" *(உபா 30:8,9)* என்றும்,

"உன் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்து, இந்த நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிற அவருடைய கற்பனைகளையும் அவருடைய கட்டளைகளையும் கைக்கொள்ளும்போதும், உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் திரும்பும்போதும், கர்த்தர் உன் பிதாக்கள்மேல் சந்தோஷமாயிருந்ததுபோல, உன்மேலும் உனக்கு நன்மை உண்டாகத் திரும்பவும் சந்தோஷமாயிருப்பார்" *(உபா 30:10)* என்றும் மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் இருதயத்தையும் அவர்களுடைய சந்ததியாரின் இருதயத்தையும் விருத்தசேதனம் பண்ணுவார். இதுவே உண்மையான விருத்தசேதனம். மாம்சத்தின் விருத்தசேதனம் இதற்கு ஓர் அடையாளம். *(ரோமர் 2:25-29; பிலி 3:3-5; கொலோ 2:11)*. இருதயத்தின் விருத்தசேதனம் என்பது சத்தியத்திற்குக் கீழ்ப்படிவதற்கு தடையாக இருக்கும் எல்லாக் காரியங்களையும் அகற்றிப்போடுதல் என்று பொருள் *(உபா 10:16; எரே 32:39; எசே 11:19; எசே 36:26)*.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது, அவர்கள் தங்கள் முழுஇருதயத்தோடும், முழுஆத்துமாவோடும் கர்த்தரில் அன்புகூர்ந்து பிழைப்பார்கள். கர்த்தரை நேசிப்பதற்கும், அவருக்கு முதலிடம் தருவதற்கும் மனுஷனுக்குப் புதிய இருதயம் தேவை. *(மத் 22:34-40)*.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியவில்லையென்றால், அவர்கள்மீது சாபம் வரும். அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்து, தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது, அவர்களுக்கு சாபங்கள் வராது. சாபங்களுக்கு பதிலாக ஆசீர்வாதம் வரும்.

கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மீது வரும் சாபங்களெல்லாம், இஸ்ரவேல் புத்திரருடைய சத்துருக்கள்மேலும், அவர்களைத் துன்பப்படுத்தின அவர்களுடைய பகைஞர்மேலும் வரும். இஸ்ரவேலைத் துன்பப்படுத்திய புறஜாதியார்மீது தேவனுடைய சாபங்கள் வரும். அவர்கள் தேவனுக்கும், தேவனுடைய பிள்ளைகளுக்கும் எதிராக எதிர்த்து நின்றார்கள் (ஆதி 12:1-3).

மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிற வார்த்தைகள் தீர்க்கதரிசன வார்த்தைகளாகயிருக்கிறது. பிற்காலத்தில் யூதர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புவார்கள் என்றும், சிதறிப்போன யூதர்களை கர்த்தர் தமது கிருபையினால் மறுபடியும் அவர்களுடைய தேசத்திற்கு அழைத்து வருவார் என்றும் மோசே தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு தன்னுடைய வார்த்தைகளை சொல்லும்போது, "இந்தக் காரியங்களெல்லாம் உன்மேல் வரும்போது" (உபா 30:1) என்று சொல்லுகிறார். இந்தக் காரியங்கள் என்று மோசே சொல்லும்போது, அவர் முதலாவதாக ஆசீர்வாதத்தையும், அதன்பின்பு சாபத்தையும் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக வைக்கிறார். முதலாவது ஆசீர்வாதமும், அதன்பின்பு சாபமும் சொல்லப்பட்டிருக்கிறது. சபிக்கப்பட்டவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பும்போது, தேவனுடைய கிருபையும் இரக்கமும் அவர்களுக்கு காண்பிக்கப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தபோது, அவர்களுடைய இருதயங்கள் கடினப்பட்டிருந்தது. ஆனாலும் கர்த்தர் தமது கிருபையினாலே கடினமான அவர்கள் இருதயத்தை மென்மையான இருதயமாக மாற்றினார். கர்த்தர் தாமே அவர்களுடைய இருதயங்களை விருத்தசேதனம்பண்ணி சுத்திகரித்தார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து சாபங்களை அனுபவித்தார்கள். அவர்களுடைய தேவனாகிய கர்த்தரே அவர்களை அந்நிய தேசங்களிலே துரத்திவிட்டார். அவர்களுடைய நிலமை பரிதாபமாகயிருந்தது. ஆனாலும் அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி கர்த்தரிடத்தில் வந்தபோது, அவர்கள் இழந்துபோன ஆசீர்வாதங்களை, கர்த்தர் அவர்களுக்கு மறுபடியுமாய்க் கொடுக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை கானான் தேசத்திலிருந்து துரத்திவிட்டாலும், அவர்களைப்பற்றிய நினைவு கர்த்தருடைய இருதயத்தைவிட்டு நீங்கவில்லை. அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது, கர்த்தர் அவர்களை தம்முடைய பிள்ளைகளாக அங்கீகரித்து தம்மிடத்தில் மறுபடியுமாகச் சேர்த்துக்கொள்கிறார். அவர்கள் கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது, அவர் அவர்களுடைய பிதாக்கள்மேல் சந்தோஷமாயிருந்ததுபோல, அவர்கள்மேலும், சந்தோஷமாயிருக்கிறார். அவர்களுக்கு நன்மை உண்டாகவேண்டும் என்பதற்காகவும், அவர்களுக்கு நன்மை உண்டாகும் என்பதற்காகவும் கர்த்தர் அவர்கள்மேல் திரும்பவும் சந்தோஷமாயிருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் பிற்காலத்தில் பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப்போனார்கள். மோசே கர்த்தருடைய கிருபையைப்பற்றியும், இரக்கத்தைப்பற்றியும் தீர்க்கதரிசனமாக சொல்லுகிற இந்த வார்த்தைகள், இஸ்ரவேல் ஜனத்தார் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தபோது நிறைவேறிற்று.

இஸ்ரவேல் புத்திரர் பாபிலோன் தேசத்து சிறையிருப்பின் வேதனைகளையும் பாடுகளையும் அனுபவித்தபோது, தாங்கள் இழந்துபோன நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் தங்கள் இருதயங்களிலே சிந்தனை செய்தார்கள். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பினார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை ஆராதியாமல் அந்நிய தேவர்களையும், விக்கிரகங்களையும் ஆராதனை செய்ததினால், கர்த்தர் அவர்களை அந்நிய ஜாதிகளிடத்தில் துரத்திவிட்டார். பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்த யூதர்கள், தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, விக்கிரகங்களையும், விக்கிரகாராதனையையும் விட்டு விலகி கர்த்தரிடத்தில் திரும்பி வந்தார்கள். பாபிலோன் தேசத்து சிறையிருப்பு, இஸ்ரவேல் புத்திரரை, அவர்களுடைய விக்கிரகாராதனையிலிருந்து முற்றிலுமாய் குணப்படுத்திற்று.

"இனி எனக்கும் விக்கிரகங்களுக்கும் என்ன என்று எப்பிராயீம் சொல்லுவான்; நான் அவனுக்குச் செவிகொடுத்து, அவன் மேல் நோக்கமாயிருந்தேன்; நான் பச்சையான தேவதாரு விருட்சம்போலிருக்கிறேன்; என்னாலே உன் கனியுண்டாயிற்று என்று எப்பிராயீம் சொல்லுவான்" *(ஓசி 14:8)*.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு வாக்குப்பண்ணின பிரகாரமாக, அவர்களுடைய பிதாக்கள் சுதந்தரித்த தேசத்திற்கு, அவர்களை மறுபடியுமாய் அழைத்து வந்து, அந்த தேசத்தை சுதந்தரிக்கும்படிக்கு பண்ணினார்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், இஸ்ரவேல் புத்திரருடைய சிறையிருப்பைத் திருப்பி, அவர்களை மறுபடியுமாக கானான் தேசத்திற்கு அழைத்து வந்து, அந்த தேசத்திலே அவர்களை மறுபடியுமாய் குடியேறப்பண்ணினார். தம்முடைய வாக்குத்தத்தின் பிரகாரமாக கர்த்தர் அவர்களுக்கு ஆசீர்வாதமான ஈவுகளைக் கொடுத்தார். அவர்களுக்கு நன்மை உண்டாகும்படி, அவர்கள் செய்யும் எல்லா வேலைகளிலும், அவர்களுடைய கர்ப்பத்தின் கனியிலும், அவர்களுடைய மிருகஜீவனின் பலனிலும், அவர்களுடைய கனியிலும் அவர்களுக்கு பரிபூரணம் உண்டாகச் செய்தார்.

மோசே இந்த அதிகாரத்தில் சொல்லுகிற தீர்க்கதரிசன வாக்கியங்கள் இன்னும் நிறைவேறவில்லை என்றும், சிதறிப்போயிருக்கிற யூதர்கள், தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, இயேசுகிறிஸ்துவினிடத்தில் திரும்பி வரும்போது, இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறும் என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

யூதர்களுடைய முன்னோர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறைந்து பாவம் செய்தார்கள். யூதர்கள் தாங்கள் செய்த பாவங்களையும், அதனால் தாங்கள் அனுபவிக்கும் சாபங்களையும், தங்கள் இருதயத்திலே சிந்தனை செய்யவேண்டும். தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, அவர்கள் இயேசுகிறிஸ்துவின் மூலமாக தேவனிடத்தில் வரவேண்டும். யூதர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்போது கர்த்தருடைய கிருபையுள்ள ஆசீர்வாதங்கள் அவர்களுக்கு பரிபூரணமாக கிடைக்கும்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, தங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது, கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பதாக வாக்குப்பண்ணுகிறார். அந்த ஆசீர்வாதங்களின் விவரம் வருமாறு:

1. தங்கள் இருதயங்களிலே சிந்தனை செய்வார்கள். *(உபா 30:1)*

2. கர்த்தரிடத்திற்கு மனந்திரும்பி வருவார்கள். *(உபா 30:2,6,8)*

3. கர்த்தருடைய சத்தத்திற்கு முழு இருதயத்தோடு கீழ்ப்படிவார்கள் *(உபா 30:2,8)*

4. சிறையிருப்பிலிருந்து திருப்பப்படுவார்கள். *(உபா 30:3)*

5. தேவனுடைய இரக்கம் மறுபடியும் உண்டாயிருக்கும்.

6. கர்த்தரும், மேசியாவும் திரும்ப வருவார்கள்.

7. இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் முழுவதுமாகக் கூட்டிச்சேர்க்கப் படுவார்கள். *(உபா 30:3-5)*

8. வாக்குத்தத்த தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் *(உபா 30:5)*

9. தேவனுடைய நன்மை அவர்களுக்கு வெளிப்படும்.

10. கடந்த காலத்தைவிட தேசத்தில் அதிக ஆசீர்வாதம் உண்டாயிருக்கும். *(உபா 30:5,9)*

11. தேவனிடத்தில் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் அன்புகூருவதற்கு இருதயத்தில் விருத்தசேதனம் பண்ணப்படும். (உபா 30:6)

12. தேவனிடமிருந்து புதிய ஜீவன் வரும்.

13. எல்லா சத்துருக்களின்மீதும் ஜெயம் உண்டாகும். (உபா 30:7)

14. முந்திய சாபங்களிலிருந்து விடுதலை.

15. துன்பப்படுத்தப்பட்டதிலிருந்து விடுதலை.

16. தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிதல். (உபா 30:8)

17. கைகள் செய்யும் எல்லா வேலைகளும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். (உபா 30:9)

18. மிருகஜீவன்கள்மீது ஆசீர்வாதம்.

19. நிலத்தின் கனிகள்மீது ஆசீர்வாதம்.

20. தேவனோடு முழுமையான ஐக்கியம்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பும்போது, அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரிடத்திற்கும் திரும்புவார்கள். அவர்கள் தங்கள் சொந்த தேசத்திற்கும் திரும்புவார்கள். இதுபற்றி சொல்லப்பட்டிருக்கிற வசனங்களின் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்திற்கு திரும்பி வருவது (உபா 30:2,6,8,10)

2. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வருவது (உபா 30:2-5,8-10)

யாக்கோபு தன் தேசத்திற்குத் திரும்பி போனார். (ஆதி 31:3,13; ஆதி 32:9), மோசே எகிப்திற்குத் திரும்பி வந்தார் (யாத் 4:19,21), மற்றவர்கள் தங்கள் பழைய ஸ்தலங்களுக்குத் திரும்பி போனார்கள் (லேவி 25:1,13,27-28,41; ரூத் 1:8; எசே 16:55; ஓசி 3:5; ஓசி 5:15).

தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு மனந்திரும்புதலின் செய்தியை பல இடங்களில் சொல்லியிருக்கிறார். அதன் விவரம் வருமாறு :

1. கர்த்தரிடத்திற்குத் திரும்புவீர்கள். (உபா 30:2).

2. மீதியாக இருக்கிறவர்கள் திரும்பி வருவார்கள். (ஏசா 10:21).

3. என்னிடத்திற்குத் திரும்புங்கள். (ஏசா 44:22).

4. துன்மார்க்கன் கர்த்தரிடத்திற்குத் திரும்புவானாக. (ஏசா 55:7).

5. என்னிடத்தில் மறுபடியும் திரும்பி வாருங்கள். (எரே 3:1).

6. சீர்கெட்ட இஸ்ரவேலே திரும்பு. (எரே 3:12)

7. சீர்கெட்ட பிள்ளைகளே திரும்புங்கள். (எரே 3:22)

8. நீ திரும்புகிறதற்கு மனதாயிருந்தால் என்னிடத்தில் திரும்பு. (எரே 4:1; எரே 15:19)

9. உங்களில் ஒவ்வொருவரும் தன்தன் பொல்லாத வழியை விட்டு திரும்புங்கள். (எரே 18:11; எரே 35:15).

10. அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடு என்னிடத்திற்குத் திரும்புவார்கள். (எரே 24:7).

11. கர்த்தரிடத்திற்குத் திரும்புங்கள். (ஓசி 14:1).

12. என்னிடத்திற்குத் திரும்புங்கள். அப்பொழுது உங்களிடத்திற்குத் திரும்புவேன். (மல் 3:7).

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தரின் சத்தத்திற்கு செவிகொடுப்பார்கள். அவருடைய எல்லா கற்பனைகளின்படியும் செய்வார்கள். இஸ்ரவேல் புத்திரரிடமிருந்து கர்த்தர் இதைத்தான் எதிர்பார்க்கிறார். மனுஷர் தமக்குக் கீழ்ப்படிய வேண்டும். பழைய பிரமாணத்திற்குப் பதிலாக நமக்கு புதிய பிரமாணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் இஸ்ரவேல் புத்திரரைப் போலவே நாமும் கர்த்தர் கூறியிருக்கும் சத்தியங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் (உபா 30:8-10).

"உன் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்து" என்னும் வாக்கியத்திற்கு "உன் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடுத்தால்" என்று பொருள். இது நிபந்தனையைக் கூறும் வாக்கியம். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதம் உண்டு. கீழ்ப்படியாவிட்டால் சாபம் உண்டு. இந்தக் கற்பனை எல்லோருக்கும் பொதுவானது (உபா 30:10,17).

மோசே கர்த்தருடைய கற்பனைகளைப்பற்றிச் சொல்லும்போது, அவை "இந்த நியாயப்பிரமாண புஸ்தகத்தில்" எழுதியிருக்கிறது என்று சொல்லுகிறார். பஞ்சாகமம் புஸ்தகம் முன்பு ஒரே புஸ்தகமாகவே இருந்தது. இதற்கு "தோரா" என்று பெயர். நியாயப்பிரமாணத்தில் கட்டளைகள், கற்பனைகள், ஒழுங்குகள், நியாயங்கள், நியாயத் தீர்ப்புக்கள் ஆகியவை அடங்கியிருக்கின்றன (உபா 30:10; யோசு 1:8; யோசு 8:30-35; 2இராஜா 22:8; 2இராஜா 23:25).

சமீபமாயிருக்கிற வார்த்தை உபா 30:11-14

உபா 30:11. நான் இன்று உனக்கு விதிக்கிற கட்டளை உனக்கு மறைபொருளும் அல்ல, அது உனக்குத் தூரமானதும் அல்ல.

உபா 30:12. நாங்கள் அதைக் கேட்டு, அதின்படி செய்யும்பொருட்டு, எங்கள்நிமித்தம் வானத்துக்கு ஏறி, அதை எங்களுக்குக் கொண்டுவருகிறவன் யாரென்று நீ சொல்லத்தக்கதாக, அது வானத்திலுள்ளதும் அல்ல;

உபா 30:13. நாங்கள் அதைக் கேட்டு, அதின்படி செய்யும்பொருட்டு, எங்கள்நிமித்தம் சமுத்திரத்தைக் கடந்து, அதைக் கொண்டுவருகிறவன் யார் என்று நீ சொல்லத்தக்கதாக, அது சமுத்திரத்திற்கு அப்புறத்திலுள்ளதும் அல்ல;

உபா 30:14. நீ அந்த வார்த்தையின்படியே செய்யும்பொருட்டு, அது உனக்கு மிகவும் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது.

கர்த்தருடைய கட்டளைகளும், நியாயங்களும் இஸ்ரவேல் புத்திரருக்கு மறைபொருளோ அல்லது அவர்களுக்கு தூரமானவையோ அல்ல. கர்த்தருடைய வார்த்தைகள் புரிந்துகொள்வதற்கு கடினமானவையுமல்ல. அவை எளிமையாயும் தெளிவாயும் இருக்கிறது.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு, தன்னுடைய பிரமாணத்தைப்பற்றிச் சொல்லும்போது, "நான் இன்று உனக்கு விதிக்கிற கட்டளை உனக்கு மறைபொருளும் அல்ல, அது உனக்குத் தூரமானதும் அல்ல" (உபா 30:11) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியாமல் போனதற்கு, சாக்குபோக்கான காரணங்கள் எதையும் சொல்லக்கூடாது. கர்த்தருடைய வார்த்தைகள் எங்களுக்கு புரியவில்லை, ஆகையினால் எங்களால் அதற்கு கீழ்ப்படிய முடியவில்லை என்று இஸ்ரவேல் ஜனத்தார் காரணம் சொல்ல முடியாது. ஏனெனில் கர்த்தருடைய கற்பனைகளும், அவருடைய நியாயங்களும் இஸ்ரவேல் புத்திரருக்கு மறைபொருளாயில்லை.

கர்த்தருடைய வார்த்தைகள் தங்களுக்கு அருகாமையில் இல்லை என்றும், அவை தங்களுக்கு மிகவும் தூரமாக வானத்திலே உள்ளது என்றும் சொல்லி, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாமல் போனதற்கு காரணம் சொல்ல முடியாது.

"நாங்கள் அதைக் கேட்டு, அதின்படி செய்யும்பொருட்டு, எங்கள்நிமித்தம் வானத்துக்கு ஏறி, அதை எங்களுக்குக் கொண்டுவருகிறவன் யாரென்று நீ சொல்லத்தக்கதாக, அது வானத்திலுள்ளதும் அல்ல" (உபா 30:12) என்றும்,

"நாங்கள் அதைக் கேட்டு, அதின்படி செய்யும்பொருட்டு, எங்கள்நிமித்தம் சமுத்திரத்தைக் கடந்து, அதைக் கொண்டுவருகிறவன் யார் என்று நீ சொல்லத்தக்கதாக, அது சமுத்திரத்திற்கு அப்புறத்திலுள்ளதும் அல்ல" (உபா 30:13) என்றும் மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

கர்த்தருடைய வார்த்தைகள் இஸ்ரவேல் புத்திரரை விட்டு வானத்திலே இருக்கிறது என்றோ அல்லது அவை சமுத்திரத்தைக் கடந்து அப்புறத்தில் இருக்கிறது என்றோ சொல்ல முடியாது. உலகப்பிரகாரமான தத்துவ ஞானிகள் உயர்கல்வி படிப்பதற்காக கடல் கடந்து பிரயாணம்பண்ணுகிறார்கள். அவர்கள் பல தேசங்களுக்கும் சென்று கல்வி கற்று பண்டிதர்களாகிறார்கள்.

"நான் இன்று உனக்கு விதிக்கிற கட்டளைகள் உனக்கு மறைபொருளுமல்ல" என்னும் வாக்கியம், செப்துவஜிந்த் பதிப்பில், "இவை உனக்கு மிகவும் கடினமானதல்ல" என்று பொருள்படுமாறு எழுதப்பட்டிருக்கிறது.

"இப்படி நான் விரும்பாததைச் செய்கிறவனாயிருக்க, நியாயப்பிரமாணம் நல்லதென்று ஒத்துக்கொள்ளுகிறேனே" (ரோம 7:16) என்று அப்போஸ்தலர் பவுல் சொல்லுகிறார்.

சத்தியத்தைப் புரிந்துகொள்வதற்கு நமக்கு கடினமாகயிருக்கிறது என்றும், ஆகையினால் நம்மால் சத்தியத்திற்கு கீழ்ப்படிய முடியவில்லை என்றும் யாரும் சாக்குப்போக்கான காரணத்தை சொல்ல முடியாது. கர்த்தருடைய வார்த்தை மிகவும் எளிமையானது. அவருடைய சத்தியம் புரிந்துகொள்வதற்கு கடினமான மறைபொருளல்ல.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் புரிந்துகொள்வதற்கு மிகவும் எளிமையானது என்று அப்போஸ்தலர் பவுல் சொல்லுகிறார்.

"விசுவாசத்தினாலாகும் நீதியானது: கிறிஸ்துவை இறங்கிவரப்பண்ணும்படி பரலோகத்துக்கு ஏறுகிறவன் யார்? அல்லது கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணும்படி பாதாளத்துக்கு இறங்குகிறவன் யார்? என்று உன் உள்ளத்திலே சொல்லாதிருப்பாயாக என்று சொல்லுகிறதுமன்றி; இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது; இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே" (ரோம 10:6-8).

"நாம் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமாயிருந்து, அவர் நமக்குக் கட்டளையிட்டபடி ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே அவருடைய கற்பனையாயிருக்கிறது" (1யோவா 3:23).

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷ வார்த்தை நமக்கு சமீபமாயிருக்கிறது. கிறிஸ்துவானவர் இந்த வார்த்தையிலே தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார். அவரே வார்த்தையாகயிருக்கிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நம்முடைய முழுஇருதயத்தோடும், முழுஆத்துமாவோடும் விசுவாசிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளையும், அவருடைய வாக்குத்தத்தங்களையும் நாம் விசுவாசிக்கவேண்டும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்காக கல்வாரி சிலுவையிலே மரித்து மூன்றாம் நாளிலே உயிரோடு எழும்பினார் என்பதை நம்முடைய இருதயத்தில் விசுவாசித்து, நாம் விசுவாசிப்பதை நம்முடைய வாயினால் அறிக்கை செய்யவேண்டும்.

மோசே தன்னுடைய பிரமாணத்தின் வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லும்போது, "நீ அந்த வார்த்தையின்படியே செய்யும்பொருட்டு, அது உனக்கு மிகவும் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது" (உபா 30:14) என்று சொல்லுகிறார்.

நியாயப்பிரமாணம் மறைபொருளாயிராமல் புரிந்துகொள்வதற்கு எளிதாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷமோ நியாயப்பிரமாணத்தைவிட, புரிந்துகொள்வதற்கு மிகவும் எளிதாயிருக்கிறது.

பரிசுத்த வேதாகமத்தில் தேவனுடைய வார்த்தையைப்பற்றி விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. எல்லோரும் கேட்க ஜனங்களுக்கு முன்பாக வாசிக்க வேண்டும் (உபா 31:11-13; யோசு 8:33-35; 2இராஜா 23:2; 2நாளா 17:7-9; நெகே 8; லூக்கா 4:16; அப் 13:15,27)
2. தனியாக வாசிக்க வேண்டும் (ஆப 2:2; வெளி 1:2-3)
3. தியானிக்க வேண்டும். (2தீமோ 2:15; 2தீமோ 3:16-17)
4. விவரித்துக் கூறவேண்டும் (நெகே 8:8; லூக்கா 4:16-17; லூக்கா 24:27,45)
5. ஆராய்ந்து பார்க்க வேண்டும். (யோவான் 5:39; யோவான் 7:52; அப் 17:11)
6. இரவும், பகலும் தியானிக்க வேண்டும். (யோசு 1:8; சங் 1:2-3)
7. அதைக் கேட்டு அதன்படி நடக்க வேண்டும். (உபா 30:11-14; ரோமர் 2:13; யாக் 1:22-25; யோசு 1:8)
8. வாஞ்சையாயிருக்க வேண்டும். (1பேதுரு 2:1-3)
9. மாற்றாமல் ஏற்றுக் கொள்ள வேண்டும். (உபா 4:2; உபா 12:32; நீதி 30:6; வெளி 22:18-19)
10. பிரசங்கம் பண்ண வேண்டும். (மாற்கு 16:15; 2தீமோ 4:2)
11. கற்றுக்கொடுக்க வேண்டும். (உபா 6:7; உபா 11:19; மத் 28:19-20)
12. உபதேசிக்க வேண்டும். (மாற்கு 1:15; அப் 4:4; அப் 13:39; ரோமர் 1:16; ரோமர் 10:17)

ஜீவனும் மரணமும்
உபா 30:15-20

உபா 30:15. இதோ, ஜீவனையும் நன்மையையும், மரணத்தையும் தீமையையும் இன்று உனக்கு முன்னே வைத்தேன்.

உபா 30:16. நீ பிழைத்துப் பெருகும்படிக்கும், நீ சுதந்தரிக்கப்போகிற தேசத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கும்படிக்கும், நீ உன் தேவனாகிய கர்த்தரில் அன்புகூரவும், அவர் வழிகளில் நடக்கவும், அவர் கற்பனைகளையும் கட்டளைகளையும் நியாயங்களையும் கைக்கொள்ளவும், நான் இன்று உனக்குக் கற்பிக்கிறேன்.

உபா 30:17. நீ கேளாதபடிக்கு, மனம் பேதித்து, இழுப்புண்டுபோய், வேறே தேவர்களைப் பணிந்து, அவர்களைச் சேவிப்பாயானால்,

உபா 30:18. நீங்கள் சுதந்தரிக்கிறதற்கு யோர்தானைக் கடந்துபோகிற தேசத்தில் நெடுநாள் வாழாமல், நிச்சயமாய் அழிந்து போவீர்கள் என்பதை இன்று உங்களுக்கு அறிவிக்கிறேன்.

உபா 30:19. நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்குமுன் வைத்தேன் என்று உங்கள் மேல் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சிவைக்கிறேன்; ஆகையால், நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்துகொண்டு,

உபா 30:20. கர்த்தர் உன் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் கொடுப்பேன் என்று அவர்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தேசத்திலே குடியிருக்கும்படிக்கு, உன் தேவனாகிய கர்த்தரில் அன்புகூர்ந்து, அவர் சத்தத்திற்குச் செவிகொடுத்து, அவரைப் பற்றிக்கொள்வாயாக; அவரே உனக்கு ஜீவனும் தீர்க்காயுசுமானவர் என்றான்.

இஸ்ரவேல் புத்திரர் சத்தியத்தை உணராத ஜனங்களாக இருக்கிறார்கள். ஆனாலும் மோசே தன்னுடைய பிரசங்கச் செய்தியை, அவர்கள் எல்லோரும் புரிந்துகொள்ளும் வண்ணமாக மிகவும் எளிமையாகப் பேசுகிறார். தன்னுடைய பிரமாணத்தின் வார்த்தைகள் அவர்களுக்கு மிகவும் சமீபமாய், அவர்களுடைய வாயிலும் இருதயத்திலும் இருக்கிறது என்று சொல்லி, மோசே அவர்களை உற்சாகப்படுத்துகிறார்.

மோசேயின் பிரசங்கச் செய்தி முடிவுபெறப்போகிறது. மோசே தன்னுடைய பிரசங்கத்தின் மையச்செய்தியை அவர்களுக்கு சொல்லும் வண்ணமாக, "இதோ, ஜீவனையும் நன்மையையும், மரணத்தையும் தீமையையும் இன்று உனக்கு முன்னே வைத்தேன்" (உபா 30:15) என்று சொல்லுகிறார்.

மோசே இதுவரையிலும் அவர்களுக்கு சொன்ன செய்திக்கு, அவர்கள் கீழ்ப்படிந்தால் அவர்களுக்கு ஜீவனும் நன்மையும் உண்டாகும். அவர்கள் கீழ்ப்படியாமல் போனாலோ அவர்களுக்கு மரணமும் தீமையும் உண்டாகும்.

மோசே தன்னுடைய பிரசங்கச்செய்தியின் முடிவுரையாக, இஸ்ரவேல் புத்திரருடைய மனதையும், இருதயத்தையும், சிந்தனையையும் தொடும் வண்ணமாக பேசுகிறார். மோசேயின் பிரசங்கச்செய்தி ஜனங்களுடைய மனதிலே பதிந்திருக்கவேண்டும். அவர்கள் சத்தியத்தை உணராத ஜனங்களாக இருந்தாலும், மோசே அவர்களுக்கு தன்னுடைய வார்த்தைகளை மிகவும் நயமாகவும், எளிமையாகவும் சொல்லி, அவர்களும் சத்தியத்தை உணர வைக்கவேண்டும்.

மனுபுத்திரர் எல்லோருமே தங்களுக்கு ஜீவனும் நன்மையும் உண்டாகவேண்டும் என்று விரும்புவார்கள். ஒருவரும் மரணமும் தீமையும் தங்களுக்கு உண்டாக வேண்டுமென்று விரும்பமாட்டார்கள். இது மனுஷருடைய பொதுவான சுபாவம். இஸ்ரவேல் புத்திரரும், எல்லா மனுபுத்திரரையும்போல, தங்களுக்கும் ஜீவனும் நன்மையும் உண்டாக வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் விரும்புகிற நன்மையும் ஜீவனும் அவர்களுக்கு உண்டாவதற்கும், அவர்கள் விரும்பாத மரணமும் தீமையும் அவர்களுக்கு உண்டாகாமலிருப்பதற்கும், அவர்கள் என்ன செய்யவேண்டுமென்று மோசே இந்த வசனப்பகுதியில் மிகவும் தெளிவாகச் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரருக்கு ஜீவனும் நன்மையும் உண்டாகவேண்டுமென்றால், அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரில் அன்புகூரவேண்டும். அவர்கள் கர்த்தருடைய வழிகளில் நடக்கவும், அவருடைய கற்பனைகளையும் கட்டளைகளையும் நியாயங்களையும் கைக்கொள்ளவும் வேண்டும். மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய பிரமாணங்களை போதிக்கிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீ பிழைத்துப் பெருகும்படிக்கும், நீ சுதந்தரிக்கப்போகிற தேசத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கும்படிக்கும், நீ உன் தேவனாகிய கர்த்தரில் அன்புகூரவும், அவர் வழிகளில் நடக்கவும், அவர் கற்பனைகளையும் கட்டளைகளையும் நியாயங்களையும் கைக்கொள்ளவும், நான் இன்று உனக்குக் கற்பிக்கிறேன்" (உபா 30:16) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்தால், அவர்களுக்கு ஜீவனும் நன்மையும் உண்டாகும். அவர்களுக்கு மரணமும் தீமையும் உண்டாகக்கூடாது என்றால், அவர்கள் என்ன செய்யவேண்டும் என்றும் மோசே அவர்களுக்கு சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீ கேளாதபடிக்கு, மனம் பேதித்து, இழுப்புண்டுபோய், வேறே தேவர்களைப் பணிந்து, அவர்களைச் சேவிப்பாயானால், நீங்கள் சுதந்தரிக்கிறதற்கு யோர்தானைக் கடந்துபோகிற தேசத்தில் நெடுநாள் வாழாமல், நிச்சயமாய் அழிந்து போவீர்கள் என்பதை இன்று உங்களுக்கு அறிவிக்கிறேன்" (உபா 30:17,18) என்று சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சத்தியத்தை மறைக்கவில்லை. அவர்களுக்கு சொல்ல வேண்டிய வார்த்தைகள் எல்லாவற்றையும் மோசே தெளிவாகச் சொல்லுகிறார். ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் மோசே அவர்களுக்கு முன்பாக வைக்கிறார். தங்களுக்கு எது வேண்டும் என்று இஸ்ரவேல் புத்திரர் தெரிந்துகொள்ளவேண்டும். அவர்கள் விரும்புகிற காரியம், அவர்களுக்கு சித்திக்கவேண்டுமென்றால், அவர்கள் மோசே சொல்லுகிற நிபந்தனைகளுக்கு கீழ்ப்படியவேண்டும். நிபந்தனைக்கு கீழ்ப்படியாமல் ஆசீர்வாதத்தையும், நன்மையையும் பெற்றுக்கொள்ள முடியாது.

"நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்குமுன் வைத்தேன் என்று உங்கள் மேல் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சிவைக்கிறேன்" (உபா 30:19) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக ஜீவனையும் மரணத்தையும், நன்மையையும் தீமையையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் வைத்தாலும், அவர்கள் ஜீவனையும், நன்மையையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று மோசே விரும்புகிறார்.

தாங்கள் விரும்புகிற நன்மையான ஈவுகளை கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு, அவர்கள் என்ன செய்யவேண்டும் என்பதை, மோசே அவர்களுக்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

"ஆகையால், நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்துகொண்டு, கர்த்தர் உன் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் கொடுப்பேன் என்று அவர்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தேசத்திலே குடியிருக்கும்படிக்கு, உன் தேவனாகிய கர்த்தரில் அன்புகூர்ந்து, அவர் சத்தத்திற்குச் செவிகொடுத்து, அவரைப் பற்றிக்கொள்வாயாக" (உபா 30:19,20) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை தங்கள் தேவனாகத் தெரிந்துகொள்ளவேண்டும். அவர்கள் கர்த்தரில் அன்புகூரவேண்டும். தங்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்திற்கு அவர்கள் செவிகொடுக்கவேண்டும். அவரைப் பற்றிக்கொள்ளவேண்டும். கர்த்தர் அவர்களோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவர். கர்த்தரே அவர்களுக்கு ஜீவனும் தீர்க்காயுசுமானவர்.

கர்த்தர் மனுபுத்திரருக்கு முன்பாக நன்மையையும், தீமையையும், ஜீவனையும் மரணத்தையும், மேலும் இதுபோன்ற சில காரியங்களையும் வைத்திருக்கிறார். தங்களுக்கு முன்பாக கர்த்தர் வைத்திருக்கிற காரியங்களிலிருந்து, தங்களுக்கு எது வேண்டும் என்பதை மனுஷர் தெரிந்துகொள்ளவேண்டும். அதன் விவரம் வருமாறு :

1. நன்மை அல்லது தீமை (உபா 30:15)

2. ஜீவன் அல்லது மரணம் (உபா 30:15,19)

3. தேவனை நேசிப்பது அல்லது வெறுப்பது (உபா 30:16)

4. தேவனுடைய வழிகளில் நடப்பது அல்லது வழிவிலகிச்செல்வது.

5. கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்வது அல்லது அவற்றை மீறுவது.

6. கர்த்தரைப் பற்றிக்கொள்வது அல்லது அவரை விட்டுத் திரும்பிப்போவது. (உபா 30:17,20)

7. கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடுப்பது அல்லது செவிகொடுக்க மறுப்பது.

8. கர்த்தரை ஆராதிப்பது அல்லது மற்ற தெய்வங்களை ஆராதிப்பது.

9. நீடித்து வாழ்வது அல்லது சீக்கிரத்தில் அழிந்துபோவது. (உபா 30:18)

10. ஆசீர்வாதம் அல்லது சாபம் (உபா 30:19)

தேவனாகிய கர்த்தரை தெரிந்து கொள்வதினால் வரும் ஆசீர்வாதங்கள் :

1. ஜீவனும், நன்மையான காரியங்களும். (உபா 30:15)

2. ஜீவிப்பதற்கும், பெருகுவதற்கும் சிலாக்கியம். (உபா 30:16,20)

3. வாக்குத்தத்த தேசத்தின் ஆசீர்வாதம்.

4. பூமியில் நீடித்த வாழ்வு. (உபா 30:18,20)

5. பிள்ளைகளின் நீடித்த வாழ்வு. (உபா 30:19-20)

தேவனாகிய கர்த்தரைத் தெரிந்துகொள்ளாவிட்டால் வரும் சாபங்கள்:

1. மரணமும், தீமையும் (உபா 30:15,19)

2. நிச்சயமான அழிவு (உபா 30:18)

3. பூமியின்மீது வாழ்நாள் குறைந்து போவது.

4. பிள்ளைகளுடைய மரணம் (உபா 30:19)

5. பல்வேறு சாபங்கள்

கர்த்தரை தங்கள் தேவனாகத் தெரிந்துகொள்கிறவர்கள் அவரோடு ஐக்கியமாயிருக்கவேண்டும். அதற்காக அவர்கள் செய்ய வேண்டிய காரியங்கள் :

1. தங்கள் தேவனாகிய கர்த்தரில் அன்புகூரவேண்டும்.

2. கர்த்தருடைய வழிகளில் நடக்கவேண்டும்.

3. கர்த்தருடைய கற்பனைகளையும் கட்டளைகளையும் நியாயங்களையும் கைக்கொள்ளவேண்டும்.

4. ஜீவனைத் தெரிந்துகொள்ளவேண்டும் (உபா 30:19).

கர்த்தரைத் தெரிந்துகொள்ளாதவர்கள், பின்மாறிப்போகிறார்கள். அவர்களுடைய பாவங்களைப்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. மனம் பேதித்து தேவனை விட்டு விலகிப்போனார்கள்.

2. தேவனுடைய சத்தத்தைக் கேளாமல் போனார்கள்.

3. தேவனைவிட்டு இழுப்புண்டுபோனார்கள்.

4. வேறே தேவர்களைப் பணிந்து கொண்டார்கள்.

5. வேறே தேவர்களைச் சேவித்தார்கள்.

"ஜீவனைத் தெரிந்துகொள்வது" என்னும் வாக்கியத்திற்கு தேவனுடைய கிருபையையும், அவர் கொடுக்கும் நித்திய ஜீவனையும் தெரிந்து கொள்வது என்று பொருள். நாம் ஜீவனைத் தெரிந்துகொள்ளும்போது நமக்கு சாபமும், மரணமும் அகலும். நமக்கு ஜீவன் உண்டாகும். தேவன் யாரையும் கட்டாயப்படுத்தமாட்டார். நாமே மனப்பூர்வமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் (உபா 30:15-20).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைத் தங்கள் தேவனாகத் தெரிந்துகொள்ளும்போது, அவர்களுக்கு ஏற்படும் நல்ல விளைவுகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. அவர்களும், அவர்கள் சந்ததியும் பிழைப்பார்கள்.

2. கர்த்தரில் அன்புகூருவார்கள் (உபா 30:20).

3. கர்த்தருடைய சத்தத்திற்குச் செவி கொடுப்பார்கள்.

4. கர்த்தரைப் பற்றிக்கொள்வார்கள்.

5. தங்கள் பிதாக்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் குடியிருப்பார்கள்.

நாம் கர்த்தரை நம்முடைய தேவனாகத் தெரிந்துகொள்ளவேண்டும். அப்போது அவர் நம்மோடு விசேஷித்த ஐக்கியத்திலிருப்பார். அதன் விவரம் வருமாறு:

1. கர்த்தர் அவர்களுடைய ஜீவனானவர். (அப் 17:28)
2. கர்த்தர் அவர்களுடைய தீர்க்காயுசானவர் (சங் 21:4; சங் 91:1-12; நீதி 3:2,16).

31 அதிகாரம்

மோசேயின் பிரசங்கச் செய்தி முடிவு பெற்றிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் யோர்தானைக் கடந்து, கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க ஆயத்தமாயிருக்கிறார்கள். மோசே அவர்களை உற்சாகப்படுத்தும் வார்த்தைகளை அவர்களுக்குச் சொல்லுகிறார் (உபா 31:1-6). யோசுவா இஸ்ரவேல் ஜனத்தாரை கானான் தேசத்திற்குள் வழிநடத்துவார் (உபா 31:7,8,23).

மோசே மரித்துப்போன பின்பு, அவர் தங்களுக்கு சொன்ன பிரமாணங்களை இஸ்ரவேல் புத்திரர் மறந்துபோகாமல் நினைவுகூரவேண்டும். மோசே தன்னுடைய நியாயப்பிரமாண வார்த்தைகளை எழுதி, அதை லேவி புத்திரரான ஆசாரியருக்கும் இஸ்ரவேலுடைய மூப்பர் எல்லோருக்கும் ஒப்புவிக்கிறார் (உபா 31:9,24-27). அவர்கள் மோசேயின் பிரமாணத்தை விடுதலையின் வருஷமாகிய ஒவ்வொரு ஏழாம் வருஷத்தின் முடிவிலும், ஜனங்கள் எல்லோருக்கும் முன்பாக வாசிக்கவேண்டும் (உபா 31:10-13).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கற்பனைகளுக்கும், கட்டளைகளுக்கும், நியாயங்களுக்கும் கீழ்ப்படியவேண்டும். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளை மறந்துபோகாமல் நினைவில் வைத்திருக்கவேண்டும். அவற்றை நினைவில் வைத்திருப்பதற்கு உதவியாக தம்முடைய வார்த்தைகளை ஒரு பாடலாக எழுதுமாறு, கர்த்தர் மோசேக்கு கட்டளையிடுகிறார்.

கர்த்தர் மோசேயையும் யோசுவாவையும் ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலுக்கு வரச்சொல்லுகிறார் (உபா 31:14,15). இனிமேல் வரப்போகிற காலங்களில் இஸ்ரவேல் புத்திரர் தம்மை விட்டு விலகி, அந்நிய தேவர்களை பின்பற்றி, விக்கிரகங்களை ஆராதிப்பார்கள் என்றும், இதனால் தம்முடைய கோபமும் நியாயத்தீர்ப்பும் அவர்கள்மீது வரும் என்றும் கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை முன்னறிவிக்கிறார் (உபா 31:16-18).

கர்த்தருடைய வார்த்தையைக் குறித்து மோசே எழுதுகிற பாடல், இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக சாட்சி பகரும் (உபா 31:19-21). கர்த்தருடைய கட்டளையின்படி மோசே அந்தப் பாட்டை எழுதி, அதை இஸ்ரவேல் புத்திரருக்கு படிப்பிக்கிறார் (உபா 31:22). மோசே தான் எழுதின பாட்டின் வார்த்தைகளை, இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் சொல்லுகிறார் (உபா 31:28,29).

மோசேயின் வார்த்தைகள் உபா 31:1-8

உபா 31:1. பின்னும் மோசே போய் இஸ்ரவேலர் யாவரையும் நோக்கி:

உபா 31:2. இன்று நான் நூற்றிருபது வயதுள்ளவன்; இனி நான் போக்கும் வரத்துமாயிருக்கக்கூடாது; இந்த யோர்தானை நீ கடந்துபோவதில்லை என்று கர்த்தர் என்னோடே சொல்லியிருக்கிறார்.

உபா 31:3. உன் தேவனாகிய கர்த்தர்தாமே உனக்கு முன்பாகக் கடந்துபோவார், அவரே உனக்கு முன்னின்று, அந்த தேசத்தாரை அழிப்பார்; நீ அவர்கள் தேசத்தைச் சுதந்தரிப்பாய்; கர்த்தர் சொன்னபடியே யோசுவா உனக்கு முன்பாகக் கடந்துபோவான்.

உபா 31:4. கர்த்தர் அழித்த எமோரியரின் ராஜாக்களாகிய சீகோனுக்கும், ஓகுக்கும், அவர்கள் தேசத்திற்கும் செய்தது போலவே அவர்களுக்கும் செய்வார்.

உபா 31:5. நான் உங்களுக்கு விதித்த கட்டளைகளின்படி அவர்களுக்குச் செய்வதற்கு கர்த்தர் அவர்களை உங்களுக்கு ஒப்புக்கொடுப்பார்.

உபா 31:6. நீங்கள் பலங்கொண்டு திடமனதாயிருங்கள், அவர்களுக்குப் பயப்படவும் திகைக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தர்தாமே உன்னோடேகூட வருகிறார்; அவர் உன்னை விட்டு விலகுவதும் இல்லை, உன்னைக் கைவிடுவதும் இல்லை என்று சொன்னான்.

உபா 31:7. பின்பு மோசே யோசுவாவை அழைத்து, இஸ்ரவேலர் எல்லாரும் பார்த்திருக்க, அவனை நோக்கி: பலங்கொண்டு திடமனதாயிரு; கர்த்தர் இவர்களுக்குக் கொடுப்பேன் என்று இவர்களுடைய பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்துக்கு நீ இந்த ஜனத்தை அழைத்துக்கொண்டுபோய், அதை இவர்கள் சுதந்தரிக்கும்படி செய்வாய்.

உபா 31:8. கர்த்ததாமே உனக்கு முன்பாகப்போகிறவர், அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம் என்றான்.

மோசே மரித்துப்போகப்போகிறார். கர்த்தர் அவரை தம்மிடத்தில் எடுத்துக்கொள்ளப்போகிறார். மோசே தன்னுடைய மரணத்தைக் குறித்து பயப்படவில்லை. ஆனாலும் இஸ்ரவேல் ஜனத்தாரை விட்டு பிரிந்துபோகப்போவதை நினைத்து மோசே மனவேதனைப்படுகிறார். அவர்கள் இப்போது யோர்தானைக் கடந்து கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கப்போகிறார்கள். அவர்களுக்கு மோசேயின் ஆலோசனைகளும், உற்சாகப்படுத்தும் வார்த்தைகளும் தேவைப்படுகிறது.

தான் இஸ்ரவேல் புத்திரரை விட்டு கடந்துபோனபின்பு, அவர்கள் கர்த்தரைவிட்டு பின்வாங்கிப்போய்விடுவார்களோ என்னும் பயம் மோசேயின் மனதில் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசித்த பின்பு, கர்த்தரை விட்டு விலகி, அந்நிய தெய்வங்களை பின்பற்றி, விக்கிரகங்களை ஆராதிப்பார்களோ என்னும் பயமும் மோசேயின் மனதில் வந்திருக்கிறது.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய வார்த்தைகளை தெளிவாக உபதேசம்பண்ண விரும்புகிறார். அவர் இஸ்ரவேலர் யாவரையும் கூட்டிச்சேர்த்து, அவர்களுக்கு உற்சாகமான வார்த்தைகளைச் சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் யோர்தானைக் கடந்துபோகிற இந்த வேளையிலே, மோசே தங்களோடு இருக்கமாட்டார் என்பதை நினைத்து, அவர்கள் தங்கள் மனதிலே சோர்ந்துபோயிருக்கிறார்கள். அவர்களுக்கு உற்சாகமான வார்த்தைகள் தேவைப்படுகிறது.

மோசே மரித்துப்போன பின்பு, யோசுவா அவர்களை கானான் தேசத்திற்குள் வழிநடத்துவார். இஸ்ரவேல் புத்திரர் கானானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, யோசுவா அவர்களை யுத்தத்திலே தலைமை தாங்கி வழிநடத்துவார். ஆனாலும் மோசே தங்களோடு கூடயிருந்தால், அவர் தங்களுக்காக கர்த்தருடைய சமுகத்திலே பரிந்து பேசி ஜெபம்பண்ணுவார் என்று இஸ்ரவேல் ஜனத்தார் நினைக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணியபோது, மோசே ஒரு மலையின்மேல் ஏறி, ஒரு கல்லின்மீது அமர்ந்து, தன்னுடைய இரண்டு கைகளையும் வானத்திற்கு நேராக உயர்த்தி, கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணினார். அந்த யுத்தத்திலே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயத்தைக் கொடுத்தார். தன்னுடைய கைகளை உயர்த்த முடியாதபடி, மோசேயின் கைகள் சோர்ந்துபோனபோது, ஆரோனும் ஊரும் அவருடைய கைகளை உயர்த்திப் பிடித்துக்கொண்டார்கள். இந்த சம்பவம் யாத்திராகமம் 17:8-16 -ஆவது வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறவர்களில், அமலேக்கியர் முதலாவதாக யுத்தம்பண்ண வருகிறார்கள். "மேலும், அவன் அமலேக்கைப் பார்த்து, தன் வாக்கியத்தை எடுத்துரைத்து: அமலேக்கு முந்தியெழும்பினவன்; ஆனாலும் அவன் முடிவிலே முற்றிலும் நாசமாவான் என்றான்" (எண் 24:20).

அமலேக்கியர் வந்து ரெவிதீமிலே இஸ்ரவேலரோடே யுத்தம் பண்ணுகிறார்கள் (யாத் 17:8).

இஸ்ரவேலர்கள் பலவீனமாக களைத்துப்போய் இருக்கிறார்கள். வனாந்தரத்தில் அலைந்து திரிந்து தண்ணீர் இல்லாமல் தாகத்தோடு இருக்கிறார்கள். இவ்வாறு பலவீனமாக இருக்கும் இஸ்ரவேலரை அமலேக்கியர் பாளயத்தின் பின்புறமாக வந்து தாக்கி, அவர்களுடைய பொருட்களைக் கொள்ளையடித்துச் செல்லுகிறார்கள். அமலேக்கியரின் கோழைத்தனமான காரியத்திற்காக தேவன் அவர்களைச் சங்காரம் பண்ணுகிறார் (ஆதி 36:12, யாத் 17:8,14; உபா 25:17-19).

அமலேக்கியர் ஏசாவின் சந்ததியை சேர்ந்தவர்கள். ஏசா யாக்கோபை பகைத்தார். ஏசா தன்னுடைய சேஷ்டபுத்திரபாக ஆசீர்வாதத்தை அசட்டை செய்து, அதை யாக்கோபுக்கு விற்றுப்போட்டார். அவர்களுடைய தகப்பனாராகிய ஈசாக்கை யாக்கோபு வஞ்சித்து, ஏசாவுக்கு வரவேண்டிய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டார். இதனால் ஏசாவுக்கு பூர்வகாலம் முதலாகவே யாக்கோபின்மீது பகை இருக்கிறது.

அமலேக்கியர் ஏசாவின் சந்ததியை சேர்ந்தவர்கள். இப்போது ஏசாவின் சந்ததியாருக்கும், யாக்கோபின் சந்ததியாராகிய இஸ்ரவேல் புத்திரருக்கும் பூர்வ பகை தொடருகிறது.

இஸ்ரவேல் புத்திரர் இளைத்து விடாய்த்திருக்கிறார்கள். அவர்களுடைய பாளயத்தில் பலவீனரெல்லாம், பின்னால் வருகிறார்கள். அமலேக்கியரோ, இஸ்ரவேல் புத்திரரின் பின்பாளயத்திலுள்ள பலவீனரை வெட்டிப்போடுகிறார்கள். அவர்கள் இளைத்து விடாய்த்திருக்கிற இஸ்ரவேல் புத்திரரை கொன்றுபோடுகிறார்கள்.

"எகிப்திலிருந்து புறப்பட்டு வருகிற வழியிலே, அமலேக்கு தேவனுக்குப் பயப்படாமல் உனக்கு எதிராக வந்து, நீ இளைத்து விடாய்த்திருக்கையில், பின்வருகிற உன் பாளயத்திலுள்ள பலவீனரையெல்லாம் வெட்டினான் என்பதை நினைத்திரு" (உபா 25:17,18).

இளைத்து விடாய்த்திருக்கிற இஸ்ரவேல் புத்திரரால், அமலேக்கியரின் பட்டயத்திற்கு தப்பிக்க முடியவில்லை. அவர்களால் அமலேக்கியருக்கு விரோதமாக எதிர்த்து நின்று யுத்தம்பண்ணவும் முடியவில்லை. இஸ்ரவேல் புத்திரரால் தங்கள் ஜீவனை பாதுகாத்துக்கொள்ள தப்பித்தும் ஓடமுடியவில்லை. இது அமலேக்கியர்மீது வந்த பெரும் பாவமாகவும், பழியாகவும் இருக்கிறது.

அமலேக்கியர் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். கர்த்தர் தம்முடைய வல்லமையினால் இஸ்ரவேல் புத்திரரின் பாளயங்களை பாதுகாக்கிறார். ஆனால் அமலேக்கியரோ, தாங்கள் யாருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறோம் என்பது தெரியாமலேயே, இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ணுகிறார்கள்.

அப்பொழுது மோசே யோசுவாவை நோக்கி, "நீ நமக்காக மனிதரைத் தெரிந்துகொண்டு, புறப்பட்டு, அமலேக்கோடே யுத்தம்பண்ணு; நாளைக்கு நான் மலையுச்சியில் தேவனுடைய கோலை என் கையில் பிடித்துக்கொண்டு நிற்பேன்" (யாத் 17:9) என்று சொல்லுகிறார்.

பல அற்புதங்களைச் செய்வதற்குத் தேவனுடைய கோல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இங்கு தேவனுடைய கோல் யுத்தத்தில் வெற்றியைத் தருகிறது.

இந்த வசனத்தில்தான் யோசுவாவைப்பற்றி முதன் முறையாக சொல்லப்பட்டிருக்கிறது. அவர் அமலேக்கியருக்கு விரோதமான யுத்தத்திலே, இஸ்ரவேல் புத்திரருக்கு படைத்தளபதியாகயிருக்கிறார். மோசே மரித்துப்போன பின்பு, யோசுவா இஸ்ரவேல் புத்திரரை கானான் தேசத்திற்கு வழிநடத்த வேண்டும். அதற்கான பயிற்சிகளை மோசே இப்போதே யோசுவாவுக்கு கொடுக்க ஆரம்பிக்கிறார்.

அமலேக்கியருக்கு விரோதமான யுத்தத்தில், மோசேயும் யோசுவாவும் பங்குபெறுகிறார்கள். அவர்கள் இருவரும் வெவ்வேறு ஸ்தலங்களில், வெவ்வேறு விதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். மோசே மலைஉச்சியில் தேவனுடைய கோலை தன் கையில் பிடித்துக்கொண்டு நிற்கிறார். யோசுவா அமலேக்கையும் அவனுடைய ஜனங்களையும் பட்டயக்கருக்கினாலே வெட்டி முறியடிக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, மோசே கர்த்தருடைய சமுகத்தில் ஜெபம்பண்ணுகிறார். யோசுவா பட்டயத்தைப் பிடித்து அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார். மோசேயின் கையிலுள்ள கோல் இஸ்ரவேல் புத்திரருக்கு நம்பிக்கையையும், உற்சாகத்தையும் கொடுக்கிறது.

மோசேயின் கையில் தேவனுடைய கோல் இருக்கிறது. அவர் அந்தக் கோலை தேவனுக்கு நேராக ஏறெடுக்கிறார். அவர் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார். அமலேக்கியருக்கு விரோதமாக நடைபெறுகிற இந்த யுத்தத்திலே, இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயம் கிடைக்கவேண்டும் என்றும், அமலேக்கியர் முறியடிக்கப்படவேண்டும் என்றும் மோசே கர்த்தருடைய சமுகத்திலே மன்றாடி ஜெபம்பண்ணுகிறார்.

யோசுவா தனக்கு மோசே சொன்னபடியே செய்து, அமலேக்கோடே யுத்தம் பண்ணுகிறார். மோசேயும் ஆரோனும் ஊர் என்பவனும் மலையுச்சியில் ஏறுகிறார்கள். மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில், இஸ்ரவேலர் மேற்கொள்கிறார்கள்; மோசே தன் கையைத் தாழவிடுகையில், அமலேக்கு மேற்கொள்கிறான் *(யாத் 17:10,11)*.

ஊர் என்பவன் யூதா கோத்திரத்தானான காலேபின் குமாரன். *(1நாளா 2:19-20)*. அவன் மோசேயோடும், ஆரோனோடும் நெருங்கிய தொடர்புடையவன். *(யாத் 17:10-12; யாத் 24:14; யாத் 31:2; யாத் 35:30; யாத் 38:22)*. யோசபஸ் இவனைப் பற்றி எழுதும்போது, இவன் மிரியாமின் கணவன் என்றும், மோசே ஆரோன் ஆகியோரின் மைத்துனன் என்றும் எழுதியிருக்கிறார்.

மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில், இஸ்ரவேலர் மேற்கொள்கிறார்கள். தன்னுடைய கரங்களினால் மோசே தேவனுடைய கோலை உயரப்பிடித்திருக்கும்போது, இஸ்ரவேலர்கள் ஜெயம்பெறுகிறார்கள். *(யாத் 17:11-13)*. மோசே தன் கையைத் தாழ்த்துகையில் இஸ்ரவேலர்கள் தோல்வியுறுகிறார்கள்.

மோசேயின் கைகள் அசைந்து போயிற்று. யோசுவா அமலேக்கையும் அவன் ஜனங்களையும் பட்டயக்கருக்கினாலே முறியடிக்கிறார். ஆனாலும் யோசுவாவின் கைகள் அசந்துபோயிற்று என்றும் எங்கும் சொல்லப்படவில்லை. ஆனால் மோசேயோ கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக தன்னுடைய கைகளை ஏறெடுத்திருக்கிறார். ஆனாலும் அவருடைய கைகள் அசந்துபோயிற்று.

நாம் இந்த உலகத்தில் பலவிதமான வேலைகளை செய்தாலும், ஆவிக்குரிய ஊழியத்தில் அதிகமான சோர்வுகளும், மிகுதியான அசதிகளும் வரும். ஆவிக்குரிய யுத்தத்தில் நாம் சீக்கிரத்தில் சோர்ந்துபோவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் விசுவாசிகளாகிய நாம் சோர்ந்துபோகாமல், விழித்திருந்து ஊழியம் செய்யவேண்டும். அசந்துபோகாமல் விழித்திருந்து ஜெபிக்கவேண்டும்.

மோசேயின் கையில் தேவனுடைய கோல் இருக்கிறது. மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில் இஸ்ரவேலர் மேற்கொள்கிறார்கள். தன்னுடைய கைகள் அசந்துபோனபோது, மோசே தன் கையை தாழவிடுகிறார். அப்போது அமலேக்கு மேற்கொள்கிறான். மோசே தன் கையை தாழவிடும்போது, இஸ்ரவேல் புத்திரரும் தாழ்ந்துபோகிறார்கள். மோசே தன் கையை ஏறெடுக்கும்போது, அவர் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். அவர் தன் கையை தாழவிடும்போது, அவர் தன் ஜெபத்தில் அசந்துபோகிறார்.

மோசே மலை உச்சியில் நிற்கிறார். அவருடைய கைகள் அசந்துபோயிற்று. மோசேயோடுகூட ஆரோனும், ஊர் என்பவனும் மலை உச்சியில் ஏறி வந்திருக்கிறார்கள். அவர்கள் இருவரும் அசந்து போயிருக்கிற மோசேயின் கைகளை தாங்குகிறார்கள். மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில் இஸ்ரவேலர் மேற்கொள்வதை ஆரோனும் ஊரும் பார்க்கிறார்கள். அவர்கள் இருவரும் மோசேயின் கைகளை தாங்கி, அவர் தன் கையை ஏறெடுப்பதற்கு ஆதரவாயிருக்கிறார்கள்.

மோசேயின் கைகள் அசந்துபோனபோது ஆரோனும் ஊரும் ஒரு கல்லைக் கொண்டுவந்து மோசேயின் கீழே வைக்கிறார்கள்; மோசே அதின்மேல் உட்காருகிறார்; ஆரோனும் ஊரும் ஒருவன் ஒரு பக்கத்திலும் ஒருவன் மறுபக்கத்திலும் இருந்து, மோசேயின் கைகளைத் தாங்குகிறார்கள்; இவ்விதமாய் மோசேயின் கைகள் சூரியன் அஸ்தமிக்கும்வரைக்கும் ஒரே நிலையாயிருக்கிறது (யாத் 17:12).

மோசேயால் மலை உச்சியில் நிற்கக்கூட முடியவில்லை. ஆரோனும் ஊரும் மோசேயை ஒரு கல்லின்மேல் உட்கார வைக்கிறார்கள். மோசே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவதற்கு அவர்கள் இருவரும் உதவி செய்கிறார்கள். அவர்கள் அசந்துபோயிருக்கிற மோசேயின் கைகளை தாங்கிப் பிடித்துக்கொள்கிறார்கள்.

மோசே தேவனுடைய மனுஷன். ஆரோன் மோசேயின் சகோதரர். ஊர் என்பவன் மிரியாமின் கணவனாக இருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். மிரியாம் மோசேயின் சகோதரி. மோசேயும் ஆரோனும், ஊரும் ஒருவருக்கொருவர் உறவினர்களாகயிருக்கிறார்கள். மோசே அவர்களுடைய உதவிகளை சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறார். அவர்கள் இருவரும் அசந்துபோயிருக்கிற மோசேயின் கைகளை தாங்கிப் பிடிக்கிறார்கள். இவ்விதமாக சூரியன் அஸ்தமிக்கும் வரைக்கும் மோசே தன் கைகளை ஏறெடுக்கிறார்.

அமலேக்கியரோடு யுத்தம்பண்ணுகிற இஸ்ரவேல் புத்திரர், ஏறெடுக்கப்பட்டிருக்கிற மோசேயின் கைகளை பார்க்கிறார்கள். அவர்களுடைய மனதிலே தெம்பும், உற்சாகமும் உண்டாயிற்று. யோசுவா இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அமலேக்கையும் அவனுடைய ஜனங்களையும் பட்டயக்கருக்கினாலே முறியடிக்கிறார். மோசே மலையின்மீது உட்கார்ந்து, தன்னுடைய கைகளை ஏறெடுக்கிறார். இந்த யுத்தத்தில் இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயமுண்டாயிற்று.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலே, கிறிஸ்துவானவரே நமக்கு யோசுவாவைப் போலவும், மோசேயைப்போலவும் இருக்கிறார். யோசுவா இஸ்ரவேல் புத்திரருக்கு படைத்தளபதியாகயிருக்கிறார். கிறிஸ்துவானவர் நம்முடைய இரட்சிப்பின் அதிபதியாயிருக்கிறார். நாம் மேற்கொள்ளவேண்டிய ஆவிக்குரிய போராட்டங்களில், கிறிஸ்துவானவர் நமக்காக போராடுகிறார்.

மோசே மலையின்மீது தம்முடைய கைகளை ஏறெடுத்து கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, பரலோகத்திலே, தம்முடைய பிதாவின் வலது பாரிசத்திலே அமர்ந்து, நமக்காக பரிந்துபேசிக்கொண்டிருக்கிறார். இதனால் நம்முடைய விசுவாசத்தில் நாம் தோற்றுப்போகாமல் நிலைத்திருக்கிறோம்.

அமலேக்கியர் இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ண வந்தார்கள். இந்த யுத்தத்திலே அமலேக்கியர் தோற்றுப்போகிறார்கள். யோசுவா அவர்களை முறியடிக்கிறார். யோசுவாவோடுகூட இஸ்ரவேல் புத்திரர் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் பயிற்சி பெற்ற யுத்தவீரர்கள் என்று சொல்லமுடியாது. அவர்களிடத்தில் சரியான யுத்த ஆயுதங்களும் இல்லை. இஸ்ரவேல் ஜனத்தார் பல வருஷங்களாக எகிப்து தேசத்திலே அடிமை வேலை செய்தவர்கள். அவர்கள் முறுமுறுக்கும் சுபாவமுள்ளவர்கள். ஆனாலும் கர்த்தர் தம்முடைய கிருபையினால், இஸ்ரவேல் புத்திரரை இந்த யுத்தத்திலே பயன்படுத்துகிறார். கர்த்தர் இஸ்ரவேலருக்கு ஜெயத்தைக் கொடுக்கிறார்.

அமலேக்கியருக்கு விரோதமான யுத்தம் முடிவு பெறுகிறது. அப்போது மோசே ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதற்கு யேகோவாநிசி என்று பேரிடுகிறார் (யாத் 17:15). யோசுவா அமலேக்கையும், அவனுடைய ஜனங்களையும் பட்டயக்கருக்கினாலே முறியடிக்கிறார். மோசே தனக்கு சொன்ன பிரகாரம், யோசுவா அமலேக்கியரோடே யுத்தம்பண்ணுகிறார். இந்த யுத்தத்தில் யோசுவாவின் பங்கு மிகவும் பெரியது.

யோசுவா அமலேக்கியரை முறியடித்ததற்காக, மோசே அவருக்கு ஒரு வெற்றி தூணை நிறுத்தவில்லை. மோசே யோசுவாவுக்கு பதக்கங்களையோ, பரிசுகளையோ கொடுத்து, அவரை கனம்பண்ணவில்லை. மோசே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக்கட்டி, கர்த்தரைக் கனம்பண்ணுகிறார். அந்த பலிபீடத்திற்கு யேகோவா நிசி என்று பேரிடுகிறார். யேகோவா நிசி என்னும் பெயருக்கு "கர்த்தர் நமது ஜெயக்கொடி" என்று பொருள்.

மோசே மலையின் உச்சியில் கர்த்தருடைய கோலை உயர்த்துகிறார். கர்த்தருடைய கோல் அவருடைய ஜெயக்கொடியாகயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, கர்த்தர் தம்முடைய ஜெயக்கொடியை உயர்த்துகிறார். இதனால் இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயமுண்டாயிற்று.

யோசுவாவும் இஸ்ரவேல் புத்திரரும் அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். யுத்தம் பண்ணுகிற களத்திலே கர்த்தருடைய பிரசன்னமும், அவருடைய வல்லமையும் வெளிப்படுகிறது. கர்த்தர் ஜெயக்கொடியாக அவர்கள் மத்தியிலே உயர்த்தப்பட்டிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் அமலேக்கியரின் பலத்தையும், அவர்களுடைய யுத்த ஆயுதங்களையும் நோக்கிப் பார்க்காமல், தங்கள் ஜெயக்கொடியாகிய கர்த்தரை நோக்கிப் பார்க்கிறார்கள். கர்த்தரை நோக்கிப் பார்க்கிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள்.

அமலேக்கியருக்கு விரோதமான யுத்தத்திலே இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயமுண்டாயிற்று. இந்த ஜெயம் இஸ்ரவேல் ஜனத்தாருடைய சுயபலத்தினாலோ, சுயபராக்கிரமத்தினாலோ உண்டாகவில்லை. கர்த்தருடைய வல்லமையினாலேயே, இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயமும், அமலேக்கியருக்கு தோல்வியும் உண்டாயிற்று. மோசே கர்த்தரை கனம்பண்ணுகிறார். அவர் ஒரு பலிபீடத்தைக் கட்டி அதற்கு யேகோவா நிசி என்று பேரிடுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, அவர்கள் கர்த்தருடைய ஜெயக்கொடியை நோக்கிப் பார்த்து, கர்த்தர் தங்களுக்கு ஜெயம் கொடுப்பார் என்று நம்பி, யுத்தக்களத்திலே சிதறிப்போகாமல், சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். கர்த்தருடைய வல்லமை இஸ்ரவேல் புத்திரரை ஒரே சேனையாக கூட்டிச் சேர்த்திருக்கிறது.

கர்த்தர் அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணிய இந்த சம்பவத்தை, இஸ்ரவேல் புத்திரருடைய பின்சந்ததியாருக்கும் அறிவிக்க வேண்டும். இதற்காக கர்த்தர் மோசேயை நோக்கி, "இதை நினைவுகூரும்பொருட்டு, நீ ஒரு புஸ்தகத்தில் எழுதி, யோசுவாவின் செவி கேட்கும்படி வாசி. அமலேக்கை வானத்தின் கீழெங்கும் இராதபடிக்கு நாசம் பண்ணுவேன்" (யாத் 17:14) என்று சொல்லுகிறார்.

மோசே எழுதும் புஸ்தகம் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆறுதலாகவும், ஆசீர்வாதமாகவும் இருக்கும். மோசே இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிற செய்தியை யோசுவாவின் செவி கேட்கும்படி வாசிக்கவேண்டும். தான் கேட்டதை யோசுவா இஸ்ரவேலின் பின்சந்ததியாருக்கு அறிவிக்கவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரின் சரித்திரத்தை எழுத ஆரம்பிக்கிறார். அவர்களுடைய அன்றாட நாளாகமத்தை, மோசே ஒரு புஸ்தகத்தில் எழுதுகிறார். இஸ்ரவேல் புத்திரரின் புஸ்தகத்தின் சரித்திரத்தை பரிசுத்த வேதாமகத்தில் வாசிக்கிறோம். கர்த்தர் தம்முடைய கட்டளையை கற்பலகைகளில் எழுதி, அந்தப் பலகைகளை மோசேக்கு கொடுத்தார். அதன்பின்புதான், கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் சரித்திரத்தை ஒரு புஸ்தகத்தில் எழுதுமாறு சொன்னார் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்காக யுத்தம்பண்ணுவார் என்பதை இஸ்ரவேல் புத்திரரின் பின்சந்ததியாரும் அறிந்திருக்கவேண்டும். கர்த்தர் தங்கள் முற்பிதாக்களுக்கு செய்த நன்மையான காரியங்கள் எல்லாவற்றையும் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் நினைவுகூரவேண்டும்.

கர்த்தர் அமலேக்கை வானத்தின்கீழ் எங்கும் இராதபடிக்கு நாசம்பண்ணுவார். கர்த்தர் அமலேக்கியருக்கு கொடுக்கும் தண்டனை சவுலின் காலத்தில் ஓரளவு நிறைவேறிற்று (1சாமு 15-ஆவது அதிகாரம்). தாவீதின் ஆட்சிக்காலத்தில், கர்த்தர் அமலேக்கியரை மொத்தமாய் நாசம்பண்ணினார். அமலேக்கியருக்கு சர்வநாசமும், சர்வசங்காரமும் உண்டாயிற்று. (1சாமு 30-ஆவது அதிகாரம்). இந்த சம்பவத்திற்கு பின்பு அமலேக்கியரைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் எங்கும் சொல்லப்படவில்லை.

கர்த்தர் அமலேக்கியரை வானத்தின் கீழெங்கும் இராதபடிக்கு முற்றிலுமாய் நாசம்பண்ணுவதாக வாக்குப்பண்ணுகிறார். அதுவரையிலும் தலைமுறை தலைமுறைதோறும் அவனுக்கு விரோதமாய் கர்த்தரின் யுத்தம் நடக்கும். அமலேக்கின் கை கர்த்தருடைய சிங்காசனத்திற்கு விரோதமாயிருந்தபடியினால், அவனுக்கு விரோதமாய் கர்த்தரின் யுத்தம் நடைபெறுகிறது.

அமலேக்கியரோடு இஸ்ரவேல் புத்திரர்கள் தொடர்ந்து யுத்தம் பண்ணி வந்திருக்கிறார்கள். எகூத் *(நியா 3:13-15)*; பாராக் *(நியா 5:15)*; கிதியோன் *(நியா 6:3)*; சவுல் (1சாமு 15); சாமுவேல் (1சாமு 15:32-33); தாவீது (1சாமு 27:8; 1சாமு 30: 1-17; 2சாமு 8:12); எசேக்கியாவின் நாளில் சிமியோனியர் (1நாளா 4:42-43) ஆகியோர் அமலேக்கியரோடு யுத்தம்பண்ணினார்கள்.

அமலேக்கியருக்கு விரோதமாக சொல்லப்படும் இந்தக் காரியங்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு எச்சரிப்பாக எழுதப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் அமலேக்கியரோடு எக்காலத்திலும் உடன்படிக்கை பண்ணக்கூடாது என்பது கர்த்தருடைய சித்தம்.

அமலேக்கியரோடு நடைபெற்ற யுத்தத்தில், மோசே தங்களுக்காக கர்த்தருடைய சமுகத்திலே ஜெபம்பண்ணியதுபோல, இனிமேல் அவரால் ஜெபம்பண்ண முடியாது என்பதை நினைத்து இஸ்ரவேல் புத்திரர் தங்கள் மனதிலே வருத்தப்படுகிறார்கள். அவர்கள் சோர்ந்துபோயிருக்கிறார்கள். மோசே இஸ்ரவேல் புத்திரருடைய மனவருத்தத்தையும், சோர்வையும் பார்த்து, அவர்களுக்கு உற்சாகப்படுத்தும் வார்த்தைகளைச் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

பின்னும் மோசே போய் இஸ்ரவேலர் யாவரையும் நோக்கி, "இன்று நான் நூற்றிருபது வயதுள்ளவன்; இனி நான் போக்கும் வரத்துமாயிருக்கக்கூடாது; இந்த யோர்தானை நீ கடந்துபோவதில்லை என்று கர்த்தர் என்னோடே சொல்லியிருக்கிறார். உன் தேவனாகிய கர்த்தர்தாமே உனக்கு முன்பாகக் கடந்துபோவார், அவரே உனக்கு முன்னின்று, அந்த தேசத்தாரை அழிப்பார்; நீ அவர்கள் தேசத்தைச் சுதந்தரிப்பாய்; கர்த்தர் சொன்னபடியே யோசுவா உனக்கு முன்பாகக் கடந்துபோவான்" *(உபா 31:1-3)* என்று சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரிடம் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார். செப்துவஜிந்த் பதிப்பில் "மோசே தனது வார்த்தைகளைப் பேசி முடித்துவிட்டார்" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது *(உபா 31:1-2)*.

மோசேக்கு இப்போது நூற்றிருபது வயதாயிற்று. இது மனுஷருடைய முதிர்ந்த வயது. அவர் மரிப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார். தேவனுடைய தீர்ப்பும் மோசேயின்மீது ஏற்கெனவே வந்திருக்கிறது. "இந்த யோர்தானை நீ கடந்து போவதில்லை" என்று கர்த்தர் மோசேக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். கர்த்தர் சொன்ன வார்த்தை நிச்சயமாக நிறைவேறும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "இன்று" *(உபா 31:2)* என்று சொல்லுகிறார். இந்த நாளைப்பற்றிய விசேஷமாவது :

1. இந்த நாள் மோசேயின் பிறந்தநாள். *(உபா 1:2)*

2. இந்த நாளில் மோசே உபாகமத்தை வாசித்தார். *(உபா 1:10)*

3. இந்த நாளில் மோசே மரித்துப்போனர். (உபா 31:2; உபா 34:7)

மோசே இன்று நூற்றிருபது வயதுள்ளவராயிருக்கிறார். இனி அவர் போக்கும் வரத்துமாயிருக்கக் கூடாது. (உபா 34:1-8). "இனி இந்த யோர்தானை கடந்துபோவதில்லை" என்று கர்த்தர் மோசேக்கு சொல்லியிருக்கிறார்.

மோசே இந்த சூழ்நிலையில் இஸ்ரவேலர் யாவரையும் உற்சாகப்படுத்துகிறார். போர்ச்சேவகர்கள் சோர்ந்துபோய்விடக்கூடாது. அவர்கள் தைரியமாயும்,உற்சாகமாயும் இருக்கவேண்டும். மோசே இஸ்ரவேலின் சேனைக்கு நல்ல படைத்தளபதியாகயிருக்கிறார். மோசே அவர்களோடு கூடயில்லாவிட்டாலும், கர்த்தர் அவர்களோடு கூடயிருக்கிறார். இந்த சத்தியம் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆறுதலையும், உற்சாகத்தையும் கொடுக்கும்.

"உன் தேவனாகிய கர்த்தர் தாமே, உனக்கு முன்பாக கடந்துபோவார்" என்று மோசே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொல்லுகிறார். கர்த்தர் தாமே இதுவரையிலும் அவர்களைக் காத்து வழிநடத்தியவர். அவர் இனிமேலும் அவர்களைக் காத்து வழிநடத்துவார். இஸ்ரவேல் புத்திரர் யோர்தானைக் கடந்துபோவதற்கு முன்பாகவே, கர்த்தர் அவர்களுக்கு முன்பாக யோர்தானைக் கடந்துபோவார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் ஆவிக்குரிய இஸ்ரவேலராயிருக்கிறோம். நம்முடைய விசுவாசத்தையும், நம்பிக்கையும் உற்சாகப்படுத்துவதற்கு இதுபோன்ற வார்த்தைகள் மிகவும் உதவியாயிருக்கும். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கர்த்தருடைய வார்த்தை பிரசங்கிக்கப்பட்டதுபோல, புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு, இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது.

"நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே" (எபி 13:5). இந்த வார்த்தை ஒவ்வொரு விசுவாசியையும் உற்சாகப்படுத்துகிற வார்த்தையாகும்.

மோசே மரித்துப்போன பின்பு, யோசுவா இஸ்ரவேல் புத்திரரை கானான் தேசத்திற்குள் வழிநடத்துவார். "கர்த்தர் சொன்னபடியே யோசுவா உனக்கு முன்பாக கடந்துபோவான்" என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். யோசுவா அவர்களுக்கு தலைவராகயிருப்பார். யோசுவா இஸ்ரவேல் புத்திரரின் நன்மையை விசாரிக்கிறவர். அவர்கள்மீது அன்பாயும், பாசமாயும், கரிசனையாயும் இருக்கிறவர். யோசுவா இஸ்ரவேல் ஜனத்தாரை கானான் தேசத்திற்குள் தைரியமாய் வழிநடத்திச் செல்வார்.

இஸ்ரவேல் ஜனத்தாருக்கு யோசுவாவைப்பற்றி நன்றாய்த் தெரியும். கர்த்தர் யோசுவாவை தங்களுடைய தலைவராக நியமித்திருக்கிறார் என்பதை இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமே அறிந்திருக்கிறார்கள். கர்த்தர் யோசுவாவை பிரதிஷ்டைபண்ணி, அவரை அபிஷேகம்பண்ணி இஸ்ரவேல் புத்திரருக்கு தலைவராக நியமித்திருக்கிறார். யோசுவா இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிப்பார். அவர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆசீர்வாதமாயிருப்பார்.

"கர்த்தர் மோசேயை நோக்கி: ஆவியைப்பெற்றிருக்கிற புருஷனாகிய யோசுவா என்னும் நூனின் குமாரனை நீ தெரிந்துகொண்டு, அவன்மேல் உன் கையை வைத்து, அவனை ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் சபையனைத்திற்கும் முன்பாக நிறுத்தி, அவர்கள் கண்களுக்கு முன்பாக அவனுக்குக் கட்டளைகொடுத்து, இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் அவனுக்குக் கீழ்ப்படியும்படிக்கு, உன் கனத்தில் கொஞ்சம் அவனுக்குக் கொடு" (எண் 27:18-20) என்று சொன்னார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் பிரவேசித்து, அந்த தேசத்திலுள்ள கானானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அந்த தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளவேண்டும். யுத்தம் கர்த்தருடையது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்னின்று, அந்த தேசத்தாரை அழிப்பார் என்றும், "நீ அவர்கள் தேசத்தை சுதந்தரிப்பாய்" என்றும் மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு உற்சாகமான வார்த்தைகளை சொல்லுகிறார்.

கர்த்தர் ஏற்கெனவே இஸ்ரவேல் புத்திரருக்காக, அவர்களுடைய சத்துருக்களோடு யுத்தம்பண்ணியிருக்கிறார். "கர்த்தர் அழித்த எமோரியரின் ராஜாக்களாகிய சீகோனுக்கும், ஓகுக்கும், அவர்கள் தேசத்திற்கும் செய்தது போலவே அவர்களுக்கும் செய்வார்" (உபா 31:4) என்றும்,

"நான் உங்களுக்கு விதித்த கட்டளைகளின்படி அவர்களுக்குச் செய்வதற்கு கர்த்தர் அவர்களை உங்களுக்கு ஒப்புக்கொடுப்பார்" (உபா 31:5) என்றும் மோசே இஸ்ரவேலருக்கு சொல்லுகிறார்.

கடந்த காலத்தில் கர்த்தர் தங்களுக்கு கொடுத்த இந்த வெற்றிகளை இஸ்ரவேல் புத்திரர் நினைவுகூரவேண்டும். அவர்கள் கர்த்தருடைய வல்லமையைப் புரிந்துகொள்ளவேண்டும். கர்த்தர் ஏற்கெனவே தங்களுக்கு செய்த நன்மையை, மறுபடியுமாய் செய்வார் என்று இஸ்ரவேல் புத்திரர் நம்பிக்கையோடிருக்கவேண்டும். கர்த்தர் எதை ஆரம்பித்து வைக்கிறாரோ, அதை முடித்து வைப்பார். கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது.

கர்த்தர் கானான் தேசத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். அவர்கள் கானானியரைத் துரத்திவிட்டு அந்த தேசத்தை சுதந்தரித்துக்கொள்ளவேண்டும். கானானியரை முற்றிலுமாக சங்காரம்பண்ணவேண்டும் என்பது, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுத்திருக்கிற கட்டளை.

"நீ சுதந்தரிக்கப்போகிற தேசத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைப் பிரவேசிக்கப்பண்ணி, உன்னைப்பார்க்கிலும் ஜனம் பெருத்த ஜாதிகளாகிய ஏத்தியர், கிர்காசியர், எமோரியர், கானானியர், பெரிசியர், ஏவியர், எபூசியர் என்னும் ஏழு பலத்த ஜாதிகளை உனக்கு முன்பாகத்துரத்தி, உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன்னிடத்தில் ஒப்புக்கொடுக்கும்போது, அவர்களை முறிய அடித்து, அவர்களைச் சங்காரம் பண்ணக்கடவாய்; அவர்களோடே உடன்படிக்கைபண்ணவும் அவர்களுக்கு இரங்கவும் வேண்டாம்" (உபா 7:1,2).

"உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சுதந்தரிக்கக் கொடுக்கிற தேசத்திலே, நீங்கள் பூமியில் உயிரோடிருக்கும் நாளெல்லாம் கைக்கொண்டு நடக்கவேண்டிய கட்டளைகளும் நியாயங்களுமாவன: நீங்கள் துரத்திவிடும் ஜாதிகள் தங்கள் தேவர்களைச் சேவித்த உயர்ந்த மலைகளின்மேலும், மேடுகளின்மேலும், பச்சையான சகல மரங்களின் கீழுமுள்ள இடங்களையெல்லாம் முற்றிலும் அழித்து, அவர்கள் பலிபீடங்களை இடித்து, அவர்கள் சிலைகளைத் தகர்த்து, அவர்கள் தோப்புகளை அக்கினியால் சுட்டெரித்து, அவர்கள் தேவர்களின் விக்கிரகங்களை நொறுக்கி, அவைகளின் பேரும் அவ்விடத்தில் இராமல் அழியும்படி செய்யக்கடவீர்கள்" (உபா 12:1-3).

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில், கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, கானானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறார்கள். கர்த்தருடைய பலத்த கரம் தங்களோடு கூடயிருக்கும் என்பதையும், கர்த்தர் கானான் தேசத்தாரை அழிப்பார் என்பதையும் இஸ்ரவேல் ஜனத்தார் நம்பவேண்டும். கர்த்தர் தங்களுக்காக சத்துருக்களோடு யுத்தம்பண்ணுவார் என்பதை நினைத்து இஸ்ரவேல் புத்திரர் உற்சாகம் பெறவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சத்துருக்களைப் பார்த்து பயப்படக்கூடாது. கர்த்தர் தங்களோடு கூடயிருப்பதை நினைத்து அவர்கள் திடன்கொள்ளவேண்டும். மோசே இஸ்ரவேல் ஜனத்தாரை உற்சாகப்படுத்தும் வண்ணமாக, "நீங்கள் பலங்கொண்டு திடமனதாயிருங்கள், அவர்களுக்குப் பயப்படவும் திகைக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தர்தாமே உன்னோடேகூட வருகிறார்; அவர் உன்னை விட்டு விலகுவதும் இல்லை, உன்னைக் கைவிடுவதும் இல்லை" (உபா 31:6) என்று சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு தீர்க்கதரிசனமாகச் சொன்ன காரியங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. உன் தேவனாகிய கர்த்தர்தாமே உனக்கு முன்பாகக் கடந்துபோவார் (உபா 31:3,8).

2. அவரே உனக்கு முன்னின்று, அந்த தேசத்தாரை அழிப்பார்.

3. நீ அவர்கள் தேசத்தைச் சுதந்தரிப்பாய்.

4. யோசுவா உனக்கு முன்பாகக் கடந்து போவான்.

5. கர்த்தர் அழித்த எமோரியரின் ராஜாக்களாகிய சீகோனுக்கும், ஓகுக்கும், அவர்கள் தேசத்திற்கும் செய்தது போலவே அவர்களுக்கும் செய்வார். (உபா 31:4).

6. நான் உங்களுக்கு விதித்த கட்டளைகளின் படி அவர்களுக்குச் செய்வதற்கு கர்த்தர் அவர்களை உங்களுக்கு ஒப்புக் கொடுப்பார். (உபா 31:5).

7. உன் தேவனாகிய கர்த்தர்தாமே உன்னோடேகூட வருகிறார். (உபா 31:6,8).

8. அவர் உன்னை விட்டு விலகுவதும் இல்லை, உன்னைக் கைவிடுவதும் இல்லை.

9. யோசுவா ஜனத்தை அழைத்துக் கொண்டுபோய், அதை இவர்கள் சுதந்தரிக்கும்படி செய்வான் (உபா 31:7).

மோசே இஸ்ரவேலர் யாவரையும் உற்சாகப்படுத்துவதுபோல, யோசுவாவையும் விசேஷமாக உற்சாகப்படுத்துகிறார். யோசுவாவுக்கு ஏற்கெனவே யுத்தம்பண்ணி பழக்கம் இருக்கிறது. யோசுவாவின் வீரத்தையும், தைரியத்தையும் இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருமே அறிந்திருக்கிறார்கள். யோசுவாவின் நல்ல குணாதிசயங்களை நினைத்து மோசேயும் அவர்மீது பிரியமாயிருக்கிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை உற்சாகப்படுத்தின பின்பு, அவர், யோசுவாவை அழைத்து, இஸ்ரவேலர் எல்லாரும் பார்த்திருக்க, அவரை நோக்கி, "பலங்கொண்டு திடமனதாயிரு; கர்த்தர் இவர்களுக்குக் கொடுப்பேன் என்று இவர்களுடைய பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்துக்கு நீ இந்த ஜனத்தை அழைத்துக்கொண்டுபோய், அதை இவர்கள் சுதந்தரிக்கும்படி செய்வாய்" (உபா 31:7) என்றும்,

"கர்த்தர் தாமே உனக்கு முன்பாகப்போகிறவர், அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம்" (உபா 31:8) என்றும் சொல்லுகிறார்.

கன்மலையைப் பார்த்து பேசுவதற்குப் பதிலாக அதை இரண்டுதரம் அடித்து, மோசே பாவம் செய்துவிட்டார். ஆகையினால் மோசேயால் யோர்தானைக் கடந்துபோக முடியாது. ஜனத்தை அழைத்துக் கொண்டு கானான் தேசத்திற்குப் போகுமாறு மோசே யோசுவாவிடம் கூறுகிறார் (உபா 29:13, 31:2,7; எண் 7-13).

"அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" என்று மோசே யோசுவாவுக்கு சொல்லுகிறார். மோசே இஸ்ரவேலுக்கும், யோசுவாவுக்கும் அதே கட்டளையையும் (உபா 31:6,7), கர்த்தருடைய வாக்குத்தத்தத்தையும் (உபா 31:6,8,23; யோசு 1:5) கூறி அனுப்புகிறார்.

மோசே யோசுவாவை தனியாக அழைத்து, யாருமில்லாத இடத்திலே, அவரை இரகசியமாக உற்சாகப்படுத்தவில்லை. இஸ்ரவேலர் எல்லோரும் யோசுவாவைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். யோசுவாவும் இஸ்ரவேலர் எல்லோருக்கும் முன்பாக நிற்கிறார்.

கர்த்தர் யோசுவாவோடு கூடயிருக்கிறார் என்பதையும், அவர் கானான் தேசத்திற்கு தங்களை அழைத்துக்கொண்டுபோய், அந்த தேசத்தை சுதந்தரிக்கும்படி செய்வார் என்பதையும் இஸ்ரவேல் புத்திரர் நம்பவேண்டும். கர்த்தர் ஆரம்பித்து வைத்த காரியத்தை, அவர் முடித்து வைப்பார் என்னும் நம்பிக்கை இஸ்ரவேல் புத்திரருடைய மனதிலே ஏற்படவேண்டும். இதற்காக மோசே யோசுவாவை அழைத்து, இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் முன்பாக நிறுத்தி, அவர்களை எல்லோரும் பார்த்திருக்க, அவரை உற்சாகப்படுத்தும் வார்த்தைகளையும், அவருக்கு ஆசீர்வாதமான வார்த்தைகளையும் சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொன்னதுபோலவே, யோசுவாவையும் பார்த்து, "கர்த்ததாமே உனக்கு முன்பாகப்போகிறவர், அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம்" என்று சொல்லுகிறார்.

தேவனுடைய தெய்வீக பிரசன்னம் நம்மோடு கூடயிருக்கும்போது, நாம் பயப்படவும் கலங்கவும் வேண்டியதில்லை. அவர் நம்மோடு கூடயிருக்கும்போது, அவர் நம்மைவிட்டு விலகுவதுமில்லை. அவர் நம்மைக் கைவிடுவதுமில்லை. கர்த்தர் நம் பட்சத்திலிருக்கும்போது, நமக்கு விரோதமாக எந்த சத்துருவும் எழும்பி வந்து, நம்மோடு யுத்தம்பண்ணி, நம்மை ஜெயிக்க முடியாது. கர்த்தர் நமக்காக, நம்முடைய சத்துருக்களோடு யுத்தம்பண்ணுவார். கர்த்தரே நம்முடைய பாதுகாப்பாகவும், அவரே நமக்கு அடைக்கலமாகவும் இருக்கிறார்.

மோசே எழுதின நியாயப்பிரமாணம் உபா 31:9-13

உபா 31:9. மோசே இந்த நியாயப்பிரமாணத்தை எழுதி, அதைக் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற லேவிபுத்திரரான ஆசாரியருக்கும் இஸ்ரவேலுடைய மூப்பர் எல்லாருக்கும் ஒப்புவித்து,

உபா 31:10. அவர்களுக்குக் கட்டளையிட்டது என்னவென்றால்: விடுதலையின் வருஷமாகிய ஒவ்வொரு ஏழாம் வருஷத்தின் முடிவிலே கூடாரப்பண்டிகையில்,

உபா 31:11. உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்துகொள்ளும் ஸ்தானத்தில், இஸ்ரவேலர் எல்லாரும் அவருடைய சந்நிதியில் சேர்ந்து வந்திருக்கும்போது, இந்த நியாயப்பிரமாணத்தை இஸ்ரவேலர் எல்லாரும் கேட்க அவர்களுக்கு முன்பாக வாசிக்கக்கடவாய்.

உபா 31:12. புருஷர்களும் ஸ்திரீகளும் பிள்ளைகளும் உன் வாசல்களிலிருக்கும் அந்நியர்களும் கேட்டு, கற்றுக்கொண்டு, உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்கும்படிக்கும்,

உபா 31:13. அதை அறியாத அவர்கள் பிள்ளைகளும் கேட்டு, நீங்கள் யோர்தானைக் கடந்து சுதந்தரிக்கப்போகிற தேசத்தில் உயிரோடிருக்கும் நாளெல்லாம், உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயப்படக் கற்றுக்கொள்ளும்படிக்கும் ஜனத்தைக்கூட்டி, அதை வாசிக்கவேண்டும் என்றான்.

நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய் கொடுக்கப்பட்டது என்று பரிசுத்த வேதாமகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

"எப்படியெனில் நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின" (யோவா 1:17).

தன்னுடைய காலத்தில் வாழ்ந்த இஸ்ரவேல் சந்ததியாருக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுக்கும் பொறுப்பு மோசேயினிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு மாத்திரமல்ல, அவர்களுடைய பிள்ளைகளாகிய பின்சந்ததியாருக்கும் நியாயப்பிரமாணத்தைக் கொடுக்கும் பொறுப்பு மோசேயினிடத்திலேயே ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் தன்னிடத்தில் ஒப்புவித்த ஊழியத்தை மோசே உண்மையாய் நிறைவேற்றுகிறார்.

மோசே இந்த நியாயப்பிரமாணத்தை எழுதுகிறார். நியாயப்பிரமாணத்தை தங்கள் செவிகளால் கேட்கிறவர்கள், அதன் வார்த்தைகளை மறுபடியும் மறுபடியுமாக தியானித்துப் பார்க்கவேண்டும். நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை ஜனங்கள் தங்களுடைய மனதிலே ஞாபகப்படுத்த வேண்டும். அதை நினைத்துப் பார்க்கவேண்டும்.

மோசே நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை, தன்னுடைய காலத்திலுள்ள இஸ்ரவேல் புத்திரருக்கும் ஒப்புக்கொடுக்கிறார். அவர்களுடைய பின்சந்ததியாருக்கும் ஒப்புக்கொடுக்கிறார். மோசே எழுதின நியாயப்பிரமாணத்தின் மூலமாக, புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் ஏராளமான ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கிறோம்.

தேவனுடைய தெய்வீக காரியங்களும், அவருடைய மகத்துவங்களும் மோசேயின் பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மோசேயின் பிரமாணம் நமக்கு பிரசங்கிக்கப்படுவதன் மூலமாக நாம் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை ஏராளமாய்ப் பெற்றிருக்கிறோம்.

விசுவாசம் கேள்வியினால் மாத்திரமல்ல, கர்த்தருடைய வார்த்தையை வாசிப்பதன் மூலமாகவும் வருகிறது. கர்த்தர் மோசேயின் பிரமாணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்ததுபோல, இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார். கிறிஸ்துவின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்ட பின்பு, காலதாமதமில்லாமல், சுவிசேஷ வார்த்தைகள் எல்லாமே கர்த்தருடைய கிருபையினால் எழுதப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் எழுதப்பட்டதினால், சுவிசேஷ வார்த்தைகள் உலகத்தின் கடைசி பரியந்தமும் கடந்து வந்திருக்கிறது. கர்த்தருடைய வார்த்தைகள் எழுத்து வடிவிலே எழுதப்பட்டு, நமக்கு கொடுக்கப்பட்டிருப்பது, நமக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய பாக்கியம்.

மோசே இந்த நியாயப்பிரமாணத்தை எழுதி, அதை ஆசாரியரிடத்திலும் மூப்பரிடத்திலும் ஒப்புக்கொடுக்கிறார். "மோசே இந்த நியாயப்பிரமாணத்தை எழுதி, அதைக் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற லேவிபுத்திரரான ஆசாரியருக்கும் இஸ்ரவேலுடைய மூப்பர் எல்லாருக்கும் ஒப்புவிக்கிறார்" *(உபா 31:9)*.

இஸ்ரவேலின் ஊழியக்காரர்கள் தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தைகளைப் பாதுகாப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அதைப் பாதுகாத்து அடுத்த சந்ததியாருக்கு கடந்து வரச்செய்ய வேண்டும்.

மோசே நியாயப்பிரமாணத்தை எழுதியது மாத்திரமல்ல, தான் எழுதின அதிகாரப்பூர்வமான பதிப்பை, ஆசரியரிடத்தில் ஒப்புக்கொடுத்து, அந்தப் புஸ்தகத்தை கர்த்தருடைய பெட்டியின் பக்கத்திலே வைக்குமாறு சொல்லுகிறார்.

"நீங்கள் இந்த நியாயப்பிரமாண புஸ்தகத்தை எடுத்து, அதை உங்கள் தேவனாகிய கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியின் பக்கத்திலே வையுங்கள்; அங்கே அது உனக்கு விரோதமான சாட்சியாயிருக்கும்" *(உபா 31:26)*.

மோசேயினால் எழுதப்பட்ட நியாயப்பிரமாண புஸ்தகத்தை அநேகர் எழுதி பிரதியெடுத்திருப்பார்கள். அந்தப் பிரதிகளை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியின் பக்கத்திலே வைக்கப்பட்டிருக்கிற, மோசே தன் கைப்பட எழுதின மூலபுஸ்தகம் பிரயோஜனமாயிருக்கிறது. மோசே எழுதின நியாயப்பிரமாணம் அதிகாரப்பூர்வமானது. மற்றவர்கள் அந்தப் புஸ்தகத்தைப் பார்த்து எழுதினவை அனைத்துமே பிரதிகளாகும்.

மோசே இந்த நியாயப்பிரமாணத்தை எழுதி, அதை ஆசாரியருக்கும், மூப்பருக்கும் ஒப்புவித்து, அவர்களுக்குக் கட்டளையிட்டது என்னவென்றால்:

"விடுதலையின் வருஷமாகிய ஒவ்வொரு ஏழாம் வருஷத்தின் முடிவிலே கூடாரப்பண்டிகையில், உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்துகொள்ளும் ஸ்தானத்தில், இஸ்ரவேலர் எல்லாரும் அவருடைய சந்நிதியில் சேர்ந்து வந்திருக்கும்போது, இந்த நியாயப்பிரமாணத்தை இஸ்ரவேலர் எல்லாரும் கேட்க அவர்களுக்கு முன்பாக வாசிக்கக்கடவாய்" *(உபா 31:10,11)* என்று மோசே கட்டளையிடுகிறார்.

ஒவ்வொரு ஏழாம் வருஷமும் விடுதலையின் வருஷமாகும். அந்த வருஷத்தில் வேலைக்காரர்கள் விடுவிக்கப் படுவார்கள். நிலம் உழாமல் விட்டு வைக்கப்படும். *(உபா 15:1-15; லேவி 25:1-7)*. இந்த ஓய்வு வருஷத்தை ஜனங்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதற்கும், தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, தங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மோசேயின் நியாயப்பிரமாணத்தை, ஏழுவருஷத்திற்கு ஒருதரம், இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் முன்பாக வாசிக்கவேண்டும்.

நியாயப் பிரமாண புஸ்தகம் இஸ்ரவேல் சபையாருக்கு முன்பக வாசிக்கப்பட்ட ஒரு சில சம்பவங்களைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. கானான் தேசத்தைச் சுதந்தரித்தபோது நியாயப்பிரமாணம் முதன் முறையாக வாசிக்கப்பட்டது. (யோசு 8:35).

2. இதற்கு 661 வருஷங்களுக்குப் பின்பு யோசபாத் ஆசாரியர்களையும், லேவியரையும் இஸ்ரவேல் தேசம் அனைத்திலும் நியாயப்பிரமாணத்தைக் கற்பித்துக் கொடுக்கச் சொன்னான். (2நாளா 17:6-9).

3. இதற்கு 280 வருஷங்களுக்குப் பின்பு யோசியா நியாயப்பிரமாணத்தைக் கண்டுபிடித்து, இஸ்ரவேலர் எல்லாருக்கும் வாசிக்குமாறு கூறினான். (2நாளா 34:22-33).

4. இதற்கு 300 வருஷங்களுக்குப்பின்பு நியாயப்பிரமாணம் மறுபடியும் வாசிக்கப்பட்டது. (நெகே 8).

இஸ்ரவேல் சபையாருக்கு முன்பாக நியாயப்பிரமாண புஸ்தகத்தை வாசிப்பதற்கான காரணங்கள் :

1. ஜனங்கள் அதைக் கேட்க வேண்டும்.
2. அதைக் கற்றுக் கொள்ள வேண்டும்.
3. தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து ஜீவிக்க வேண்டும்.
4. நியாயப்பிரமாண வார்த்தைகளின் படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்க வேண்டும்.
5. அவர்கள் பிள்ளைகளும் நியாயப் பிரமாணத்தைக் கேட்க வேண்டும். (உபா 31:13).
6. உயிரோடிருக்கும் நாளெல்லாம் தேவனாகிய கர்த்தருக்குப் பயப்பட கற்றுக்கொள்ளும் படிக்கு நியாயப்பிரமாணத்தை வாசிக்க வேண்டும்.

மோசே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை சுமக்கிற லேவி புத்திரரான ஆசாரியரையும், இஸ்ரவேலுடைய மூப்பர் எல்லோரையும் நோக்கி,

"புருஷர்களும் ஸ்திரீகளும் பிள்ளைகளும் உன் வாசல்களிலிருக்கும் அந்நியர்களும் கேட்டு, கற்றுக்கொண்டு, உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்கும்படிக்கும், அதை அறியாத அவர்கள் பிள்ளைகளும் கேட்டு, நீங்கள் யோர்தானைக் கடந்து சுதந்தரிக்கப்போகிற தேசத்தில் உயிரோடிருக்கும் நாளெல்லாம், உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயப்படக் கற்றுக்கொள்ளும்படிக்கும் ஜனத்தைக்கூட்டி, அதை வாசிக்கவேண்டும்" (உபா 31:12,13) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் சபையார் மத்தியிலே, மோசேயின் நியாயப்பிரமாணம், ஏழு வருஷத்திற்கு ஒரு தரம் விடுதலையின் வருஷத்திலே வாசிக்கப்படுகிறது. ஆனாலும் பக்தியுள்ள யூதர்கள், தங்கள் குடும்பங்களிலே, மோசேயின் நியாயப்பிரமாணத்தை அன்றாடம் வாசிக்கிறார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்து ஆதித்திருச்சபைகளில் மோசேயின் நியாயப்பிரமாணம் ஓய்வுநாள் தோறும் வாசிக்கப்பட்டது.

"மோசேயின் ஆகமங்கள் ஓய்வுநாள்தோறும் ஜெபஆலயங்களில் வாசிக்கப்பட்டு வருகிறபடியால், பூர்வகாலந்தொடங்கிச் சகல பட்டணங்களிலும் அந்த ஆகமங்களைப் பிரசங்கிக்கிறவர்களும் உண்டே என்றான்" (அப் 15:21).

இஸ்ரவேல் புத்திரர் தனிப்பட்ட முறையில் தங்கள் குடும்பங்களிலும், ஜெபாலயங்களிலும் மோசேயின் நியாயப்பிரமாணத்தை வாசித்தாலும், ஏழுவருஷத்திற்கு ஒரு தரம், விடுதலையின் வருஷத்தின்போது அதை வாசிப்பது இஸ்ரவேல் சபையாருக்கு மிகவும் விசேஷமானதாயிருக்கிறது. அந்தப் பண்டிகை நாளிலே இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும், கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திலே கூடிவருவார்கள். அப்போது மோசேயின் நியாயப்பிரமாணம் வாசிக்கப்பட்டு, அது மேன்மைப்படுத்தப்படுகிறது.

யூதருக்கு விடுதலையின் வருஷமாகிய ஒவ்வொரு ஏழாம் வருஷமும் மிகவும் முக்கியமான வருஷமாகும். இந்த வருஷத்திலே இஸ்ரவேல் தேசத்தின் நிலங்களுக்கெல்லாம் ஒய்வு கொடுக்கப்படும். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஒய்வு வருஷத்திலே விவசாய வேலை எதுவும் இருக்காது. அவர்கள் ஏழாம் வருஷத்திலே ஒய்ந்திருக்கும்போது, அவர்களுக்கு மோசேயின் பிரமாணத்தைக் கேட்பதற்கு அதிகமான நேரம் கிடைக்கும்.

ஒய்வு வருஷத்தின்போது வேலையாட்களும், அடிமைகளும் விடுவிக்கப்படுவார்கள். கடன்பட்ட தரித்திருக்கெல்லாம் அவர்களுடைய கடன்கள் மன்னிக்கப்பட்டு தள்ளுபடி பண்ணப்படும். இந்த சிலாக்கியங்கள் எல்லாம் அவர்களுக்கு மோசேயினுடைய பிரமாணத்தின் மூலமாகவே கிடைத்திருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் விடுதலையின் வருஷமாகிய ஒய்வு வருஷத்திலே, தங்கள் ஒய்வை சந்தோஷமாய் அனுபவிக்கும்போது, மோசேயின் நியாயப்பிரமாணத்திலே சொல்லப்பட்டிருக்கிற மற்ற எல்லா பிரமாணங்களுக்கும் சந்தோஷமாய்க் கீழ்ப்படிவார்கள். மோசேயின் நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிற எல்லா கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயங்களையும், இஸ்ரவேல் ஜனத்தார் முழுஇருதயத்தோடும், முழுமனதோடும் கைக்கொள்வார்கள்.

தான் எழுதின நியாயப்பிரமாணம் வாசிக்கப்படுவதன் மூலமாக இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதம் கிடைக்கவேண்டுமென்று மோசே எதிர்பார்க்கிறார். ஆகையினால் அவர் இந்த நியாயப்பிரமாணத்தை எழுதி, அதை கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை சுமக்கிற லேவியரான ஆசாரியரிடத்தில் ஒப்புக்கொடுக்கிறார். மோசே நியாயப்பிரமாணத்தின் மூலமாக இஸ்ரவேல் ஜனத்தாருடைய கட்டுக்களை மாத்திரமல்ல, லேவியருடைய கட்டுக்களையும் அவிழ்த்திருக்கிறார். கர்த்தருடைய வார்த்தை அவருடைய ஊழியக்காரரின் கையில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருப்பது, கர்த்தருடைய தெய்வீக சித்தமாயிருக்கிறது.

விடுதலையின் வருஷம் சுவிசேஷத்தின் கிருபைக்கு அடையாளமாயிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து விடுதலையின் வருஷத்தை கர்த்தருடைய அநுக்கிரக வருஷம் என்று அழைக்கிறார். நாம் இயேசுகிறிஸ்துவின் கற்பனைகளுக்கு கீழ்ப்படியும்போது, நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக, நமக்கு பாவமன்னிப்பும், ஆத்தும இரட்சிப்பும் கிடைத்திருக்கிறது.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் ஜனங்கள் அடிமைத்தனத்திலிருந்தும் கடன் சுமையிலிருந்தும், மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தின் மூலமாக, விடுதலையின் வருஷத்திலே விடுவிக்கப்பட்டார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாமோ, கர்த்தருடைய அநுக்கிரக காலத்திலே, இயேசுகிறிஸ்துவினாலே, நம்முடைய பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறோம்.

"தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு, நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும், நம்மை இரட்சிக்கும் படிக்கு, தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக்கொம்பை ஏற்படுத்தினார்" (லூக் 1:74,75).

மோசேயின் நியாயப்பிரமாணம், இஸ்ரவேல் சபையாருக்கு முன்பாக, விடுதலையின் வருஷமாகிய ஒவ்வொரு ஏழாம் வருஷத்தின் முடிவிலே, கூடாரப்பண்டிகையிலே வாசிக்கப்படுகிறது. இஸ்ரவேல் ஜனத்தார், கூடாரப்பண்டிகையின்போது, கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக சந்தோஷப்பட்டு களிகூருவார்கள். மோசேயின் நியாயப்பிரமாணம் வாசிக்கக் கேட்கும்போது, இஸ்ரவேல் சபையாரின் சந்தோஷம் கர்த்தருக்குள் அதிகரிக்கும்.

"முதல் நாளிலே அலங்காரமான விருட்சங்களின் கனிகளையும் பேரீச்சின் ஓலைகளையும் தழைத்திருக்கிற விருட்சங்களின் கிளைகளையும் ஆற்றலரிகளையும் கொண்டுவந்து, உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் ஏழுநாளும் மகிழ்ச்சியாயிருங்கள்" (லேவி 23:40).

தன்னுடைய நியாயப்பிரமாணம் வாசிக்கப்படும்போது, அதை யாரெல்லாம் கேட்கவேண்டும் என்றும் மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரருடைய புருஷர்களும் ஸ்திரீகளும், பிள்ளைகளும், அவர்கள் வாசல்களிலிருக்கும் அந்நியர்களும், மோசேயின் நியாயப்பிரமாணம் வாசிக்கப்படுவதைக் கேட்கவேண்டும்.

பொதுவாக யூதமார்க்கத்தின் பண்டிகைகள் ஆசரிக்கப்படும்போது, இஸ்ரவேல் ஜனத்தாருடைய புருஷர்கள் மாத்திரமே எருசலேமிலுள்ள தேவாலயத்திற்குப்போய், அங்கே கர்த்தருக்கு பண்டிகைகளை ஆசரிப்பார்கள். அவர்களுடைய ஸ்திரீகளும் பிள்ளைகளும் பண்டிகைகளை ஆசரிக்க எருசலேமுக்குப் போகமாட்டார்கள்.

ஆனால் கூடாரப்பண்டிகையை மாத்திரம், இஸ்ரவேல் ஜனத்தாருடைய புருஷர்களும், அவர்களோடு அவர்களுடைய ஸ்திரீகளும், பிள்ளைகளும் சேர்ந்து ஆசரிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் சபையார் எல்லோரும் கூடிவந்திருக்கிற கூடாரப்பண்டிகையின்போது, மோசேயின் நியாயப்பிரமாணம், அவர்கள் எல்லோருக்கும் முன்பாக வாசிக்கப்படுகிறது.

மோசேயின் நியாயப்பிரமாணத்தை யார் வாசிக்கவேண்டும் என்றும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. மோசேயின் நியாயப்பிரமாணத்தை வாசிப்பதற்காக, இஸ்ரவேல் புத்திரரில் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பார். அவரே மோசேயின் நியாயப்பிரமாணத்தை வாசிக்கவேண்டும். "இந்தநியாயப்பிரமாணத்தை இஸ்ரவேலர் எல்லாரும் கேட்க அவர்களுக்கு முன்பாக வாசிக்கக்கடவாய்" (உபா 31:11) என்று மோசே, இஸ்ரவேலிலே, நியாயப்பிரமாணத்தை வாசிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கிற மனுஷனுக்கு கட்டளை கொடுக்கிறார்.

மோசே இந்தக் கட்டளையை இஸ்ரவேலின் அதிபதியாகிய ஒருவருக்கு சொல்லியிருக்கலாம். பிற்காலத்தில் இஸ்ரவேலின் தலைவரான யோசுவா மோசேயின் நியாயப்பிரமாண வார்த்தைகள் அனைத்தையும் வாசித்தார்.

"அதற்குப்பின்பு அவன் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடி நியாயப்பிரமாணத்தில் சொல்லிய ஆசீர்வாதமும் சாபமுமாகிய சகல வார்த்தைகளையும் வாசித்தான். மோசே கட்டளையிட்ட எல்லாவற்றிலும் யோசுவா, இஸ்ரவேலின் முழுச்சபைக்கும், ஸ்திரீகளுக்கும் பிள்ளைகளுக்கும், அவர்களுக்குள் நடமாடி சஞ்சரித்த அந்நியர்களுக்கும் முன்பாக, ஒரு வார்த்தையும் விடாமல் வாசித்தான்" *(யோசு 8:34,35).*

ராஜாக்களின் காலத்திலே யோசியா ராஜா மோசேயின் நியாயப்பிரமாணத்தை இஸ்ரவேல் சபையாருக்கு முன்பாக வாசித்தார்.

"அப்பொழுது ராஜா யூதாவிலும் எருசலேமிலுமுள்ள மூப்பரையெல்லாம் அழைப்பித்துக் கூடிவரச்செய்து, ராஜாவும், சகல யூதா மனுஷரும், எருசலேமின் குடிகளும், ஆசாரியரும், லேவியரும், பெரியோர்முதல் சிறியோர் மட்டுமுள்ள சகலருமாய்க் கர்த்தருடைய ஆலயத்துக்குப் போனார்கள்; கர்த்தருடைய ஆலயத்திலே கண்டெடுக்கப்பட்ட உடன்படிக்கைப் புஸ்தகத்தின் வார்த்தைகளையெல்லாம் அவர்கள் காதுகள் கேட்க வாசித்தான்" *(2நாளா 34:29,30).*

இஸ்ரவேல் ஜனத்தார் அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தபோது, ஆசாரியனாகிய எஸ்றா மோசேயின் நியாயப்பிரமாணத்தை இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் முன்பாக வாசித்தார்.

"அப்படியே ஏழாம் மாதம் முதல் தேதியில் ஆசாரியனாகிய எஸ்றா நியாயப்பிரமாணத்தைப் புருஷரும் ஸ்திரீகளும், கேட்டு அறியத்தக்க அனைவருமாகிய சபைக்கு முன்பாகக் கொண்டு வந்து, தண்ணீர் வாசலுக்கு முன்னான வீதிக்கு எதிரேயிருந்து காலமே தொடங்கி மத்தியானமட்டும் புருஷருக்கும் ஸ்திரீகளுக்கும், கேட்டு அறியத்தக்க மற்றவர்களுக்கும் முன்பாக அதை வாசித்தான்; சகல ஜனங்களும் நியாயப்பிரமாண புஸ்தகத்திற்குக் கவனமாய்ச் செவிகொடுத்தார்கள்" *(நெகே 8:2,3).*

இஸ்ரவேல் சபையாருக்கு முன்பாக, மோசேயின் நியாயப்பிரமாணம் வாசிக்கப்படுவதற்கு ஒரு முக்கியமான நோக்கமுண்டு. மோசேயின் பிரமாணம் வாசிக்கப்படுவதை கேட்கிறவர்கள் எல்லோரும், அந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளைக் கற்றுக்கொண்டு தங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்கவேண்டும்.

மோசேயின் நியாயப்பிரமாணம் வாசிக்கப்படும்போது, அதைக் கேட்கிறவர்கள் மாத்திரமல்ல, அதை அறியாத அவர்கள் பிள்ளைகளும் கேட்டு, அவர்கள் யோர்தானைக் கடந்து சுதந்தரிக்கப்போகிற தேசத்தில் உயிரோடிருக்கும் நாளெல்லாம், தங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயப்படக் கற்றுக்கொள்ளவேண்டும். இந்தக் காரணத்திற்காகவே மோசேயின் பிரமாணம் இஸ்ரவேல் சபையார் எல்லோரும் கேட்கும்படியாக அவர்களைக் கூட்டி, அவர்கள் எல்லோருக்கும் முன்பாக வாசிக்கப்படுகிறது.

நாம் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கும்போது, அதைக் கற்றுக்கொண்டு, கர்த்தரைப்பற்றிய அறிவிலே வளர்ச்சி பெறவேண்டும். நாம் கர்த்தருடைய வார்த்தையை ஒவ்வொரு முறை வாசிக்கும்போதும், அதிலே நாம் இன்னும் கற்றுக்கொள்ளவேண்டிய புதிய சத்தியம் இருக்கிறது என்பதை புரிந்துகொள்வோம். நாம் வேதவாக்கியங்களை அதிகமாய்க் கற்றுக்கொள்ளும்போது, நாம் அதைப்பற்றி இன்னும் கற்றுக்கொள்ள வேண்டியது அதிகமாயிருக்கிறது என்பதை புரிந்துகொள்வோம்.

கர்த்தருடைய வார்த்தைகள் உபா 31:14-21

உபா 31:14. பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: இதோ, நீ மரிக்குங்காலம் சமீபத்திருக்கிறது; நான் யோசுவாவுக்குக் கட்டளை கொடுக்கும்படி, அவனை அழைத்துக்கொண்டு, ஆசரிப்புக் கூடாரத்தில் வந்து நில்லுங்கள் என்றார்; அப்படியே மோசேயும் யோசுவாவும் போய், ஆசரிப்புக் கூடாரத்தில் நின்றார்கள்.

உபா 31:15. கர்த்தர் கூடாரத்திலே மேகஸ்தம்பத்தில் தரிசனமானார்; மேகஸ்தம்பம் கூடாரவாசல்மேல் நின்றது.

உபா 31:16. கர்த்தர் மோசேயை நோக்கி: நீ உன் பிதாக்களோடே படுத்துக்கொள்ளப்போகிறாய்; இந்த ஜனங்கள் எழும்பி, தாங்கள் போயிருக்கும் தேசத்திலுள்ள அந்நிய தேவர்களைச் சோரமார்க்கமாய்ப் பின்பற்றி, என்னைவிட்டு, தங்களுடனே நான் பண்ணின உடன்படிக்கையை மீறுவார்கள்.

உபா 31:17. அந்நாளிலே நான் அவர்கள்மேல் கோபங்கொண்டு, அவர்களைக் கைவிட்டு, என் முகத்தை அவர்களுக்கு மறைப்பேன்; அதினால் அவர்கள் பட்சிக்கப்படும்படிக்கு அநேக தீங்குகளும் இக்கட்டுகளும் அவர்களைத் தொடரும்; அந்நாளிலே அவர்கள்: எங்கள் தேவன் எங்கள் நடுவே இராததினாலே அல்லவா இந்தத் தீங்குகள் எங்களைத் தொடர்ந்தது என்பார்கள்.

உபா 31:18. அவர்கள் வேறே தேவர்களிடத்தில் திரும்பிப்போய்ச் செய்த சகல தீமைகளினிமித்தமும் நான் அந்நாளிலே என்முகத்தை மறைக்கவே மறைப்பேன்.

உபா 31:19. இப்பொழுது நீங்கள் இந்தப்பாட்டை எழுதிக்கொண்டு, இதை இஸ்ரவேல் புத்திரருக்குப் படிப்பித்து, இந்தப்பாட்டு எனக்குச் சாட்சியாக இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே இருக்கும்படி இதை அவர்கள் வாயில் வழங்கப்பண்ணுங்கள்.

உபா 31:20. நான் அவர்கள் பிதாக்களுக்கு ஆணையிட்டுக்கொடுத்த பாலும் தேனும் ஓடுகிற தேசத்தில் அவர்களைப் பிரவேசிக்கப்பண்ணின பின்பு, அவர்கள் புசித்துத் திருப்தியாகிக் கொழுத்துப்போயிருக்கும் போது, அவர்கள் வேறே தேவர்களிடத்தில் திரும்பி, அவர்களைச் சேவித்து எனக்குக் கோபமூட்டி, என் உடன்படிக்கையை மீறுவார்கள்.

உபா 31:21. அநேக தீங்குகளும் இக்கட்டுகளும் அவர்களைத் தொடரும்போது, அவர்கள் சந்ததியாரின் வாயில் மறந்துபோகாதிருக்கும் இந்தப் பாட்டே அவர்களுக்கு விரோதமான சாட்சிபகரும்;நான் ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தில் அவர்களைப் பிரவேசிக்கப்பண்ணாதிருக்கிற இப்பொழுதே அவர்கள் கொண்டிருக்கும் எண்ணம் இன்னது என்று அறிவேன் என்றார்.

மோசேயும் யோசுவாவும், ஆசரிப்புக்கூடாரத்தில் வந்து நிற்கவேண்டுமென்று கர்த்தர் கட்டளை கொடுக்கிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "இதோ, நீ மரிக்குங்காலம் சமீபத்திருக்கிறது; நான் யோசுவாவுக்குக் கட்டளை கொடுக்கும்படி, அவனை அழைத்துக்கொண்டு, ஆசரிப்புக் கூடாரத்தில் வந்து நில்லுங்கள்" (உபா 31:14) என்று சொல்லுகிறார்; அப்படியே மோசேயும் யோசுவாவும் போய், ஆசரிப்புக் கூடாரத்தில் நிற்கிறார்கள்.

மோசே 120 வருஷங்கள் இந்தப் பூமியில் ஜீவித்தார். அவர் மரிக்கும் நாள் வந்துவிட்டது. கர்த்தர் மோசேயோடு பேசிய இந்த நாளில் (உபா 31:2; உபா 34:7) மோசே மரித்துப் போகிறார். மோசேயின் ஜீவியத்தில் 43,830 ஆம் நாளில் இந்தச் சம்பவம் நடைபெறுகிறது.

மோசே மரிக்கும்காலம் சமீபித்திருக்கிறது என்று, கர்த்தர் அவருக்கு மறுபடியுமாய் அறிவிக்கிறார். மோசேக்கு பின்பு யோசுவா இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்தவேண்டும். தம்முடைய கட்டளைகளையும், வார்த்தைகளையும், மோசேக்கு பின்பு, இஸ்ரவேல் புத்திரருக்கு தலைவராகயிருக்கப்போகிற யோசுவாவுக்கு கர்த்தர் சொல்லப்போகிறார். அதற்காக மோசே யோசுவாவை ஆசரிப்புக்கூடாரத்திற்கு அழைத்து வரவேண்டும்.

மோசேயும் யோசுவாவும் ஆசரிப்புக்கூடாரத்திலே வந்து நின்றபோது, கர்த்தர் கூடாரத்திலே மேகஸ்தம்பத்தில் தரிசனமாகிறார்; மேகஸ்தம்பம் கூடாரவாசல்மேல் நிற்கிறது (உபா 31:15). கர்த்தர் தமது கிருபையினால் தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார்.

உபாகமம் புஸ்தகத்தில் கர்த்தர் மேகஸ்தம்பத்தில் தரிசனமானதாகக் கூறப்பட்டிருக்கும் கடைசிச் சம்பவம் இதுவாகும். மோசேக்கு அடுத்தபடியாக யோசுவா இஸ்ரவேலின் தலைவரானார். யோசுவாவிற்குக் கட்டளைகளைக் கொடுக்க வேண்டும். அதற்காகவே கர்த்தர் மேகஸ்தம்பத்தில் தரிசனமானார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். மோசே மரித்துப்போனபின்பு, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரோடு பண்ணின உடன்படிக்கைக்கு கீழ்ப்படியாமல் அதை மீறுவார்கள். கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டிருக்கிற உடன்படிக்கை முறிந்துபோகும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ உன் பிதாக்களோடே படுத்துக்கொள்ளப்போகிறாய்; இந்த ஜனங்கள் எழும்பி, தாங்கள் போயிருக்கும் தேசத்திலுள்ள அந்நிய தேவர்களைச் சோரமார்க்கமாய்ப் பின்பற்றி, என்னைவிட்டு, தங்களுடனே நான் பண்ணின உடன்படிக்கையை மீறுவார்கள்" (உபா 31:16) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர்கள் நியாயாதிபதிகளின் காலத்திலும், ராஜாக்களின் காலத்திலும் அந்நிய தேவர்களைச் சோரமார்க்கமாய் பின்பற்றினார்கள். இதற்காகக் கர்த்தர் அவர்களை அழித்துப் போட்டார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டு, அந்நிய தேவர்களை சோரமார்க்கமாய்ப் பின்பற்றுவார்கள். அவர்கள் கானானியரின் தெய்வங்களை ஆராதிக்கக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை ஆராதிக்கவேண்டும் என்றும், விக்கிரகங்களை ஆராதிக்கக்கூடாது என்று உடன்படிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் கர்த்தரை விட்டு, அந்நிய தேவர்களை சோரமார்க்கமாய் பின்பற்றுவது உடன்படிக்கையை மீறுகிற செயல்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் விசுவாசிகளில் சிலர், தங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றாமல், உலகப்பிரகாரமான ஐசுவரியத்தையும், சம்பத்துக்களையும் தங்களுக்கு விக்கிரகங்களாக பாவித்து, அவற்றை பின்பற்றுகிறார்கள். விசுவாசிகளில் சிலர் இயேசுகிறிஸ்துவின்மீது அன்புகூராமல், உலகப்பிரகாரமான பதவிகள்மீதும், அதிகாரங்கள்மீதும் அன்புகூர்ந்து, தங்களுடைய மாம்சத்தின் இச்சைகளை தங்களுக்கு தெய்வங்களாக்குகிறார்கள். இவையெல்லாமே விக்கிரகாராதனையின் ஒரு பகுதியாகும். இப்படிப்பட்டவர்களுக்கு அவர்களுடைய வயிறே அவர்களுக்கு தேவனாயிருக்கிறது. அவர்களுடைய மாம்சத்தின் இச்சைகளே அவர்களை ஆளுகை செய்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை விட்டு விட்டு அந்நிய தேவர்களை சோரமார்க்கமாய்ப் பின்பற்றிப்போகும்போது, கர்த்தரும் அவர்களைவிட்டு விலகிப்போய்விடுகிறார். கர்த்தர் இதுபற்றி மோசேயினிடத்தில் சொல்லும்போது,

"அந்நாளிலே நான் அவர்கள்மேல் கோபங்கொண்டு, அவர்களைக் கைவிட்டு, என் முகத்தை அவர்களுக்கு மறைப்பேன்; அதினால் அவர்கள் பட்சிக்கப்படும்படிக்கு அநேக தீங்குகளும் இக்கட்டுகளும் அவர்களைத் தொடரும்; அந்நாளிலே அவர்கள்: எங்கள் தேவன் எங்கள் நடுவே இராததினாலே அல்லவா இந்தத் தீங்குகள் எங்களைத் தொடர்ந்தது என்பார்கள்" (உபா 31:17) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டு தங்கள் அநியாயத்தினாலும், அக்கிரமத்தினாலும் விலகிப்போகும்போது, கர்த்தரோ தம்முடைய நீதியினால் அவர்களை விட்டு விலகிப்போய்விடுகிறார். "அவர்கள் வேறே தேவர்களிடத்தில் திரும்பிப்போய்ச் செய்த சகல தீமைகளினிமித்தமும் நான் அந்நாளிலே என்முகத்தை மறைக்கவே மறைப்பேன்" (உபா 31:18) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை விட்டு விலகும்போது, கர்த்தர் அவர்களை பின்தொடர்ந்து வரமாட்டார். ஆனால் அநேக தீங்குகளும் இக்கட்டுகளும் அவர்களை பின்தொடரும் அவை அவர்களை பட்சித்துப்போடும். கர்த்தரை விட்டு விலகி பாவத்திலே விழுகிறவர்கள் தங்கள் தலைகள்மீது தாங்களே தீங்குகளையும் இக்கட்டுக்களையும் வரவழைத்துக்கொள்கிறார்கள். முடிவிலே அவர்கள் அழிந்துபோகிறார்கள். அவர்களுடைய அழிவுக்கு அவர்களே காரணம்.

கர்த்தரை விட்டு விலகுகிறவர்கள் தீங்குகளினாலும் இக்கட்டுக்களினாலும் பட்சிக்கப்படும்போதுகூட, அவர்கள் தங்களுடைய பாவங்களை உணருவதில்லை. தங்களுடைய பாவத்திற்கு தண்டனையாகவே இந்தத் தீங்குகள் தங்கள்மீது வந்திருக்கிறது என்பதை அவர்கள் அறிந்துகொள்வதில்லை. அதற்கு பதிலாக, "எங்கள் தேவன் எங்கள் நடுவே இராததினாலே அல்லவா இந்தத் தீங்குகள் எங்களைத் தொடர்ந்தது" என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரே முதலாவதாக கர்த்தரை விட்டு விலகிப்போனார்கள். அவர்கள் தம்மை விட்டு விலகிப்போனதினால், கர்த்தர் அவர்களை விட்டு விலகிப்போகிறார். அவர்கள் கர்த்தரை ஆராதியாமல் விக்கிரகங்களை ஆராதித்து, தங்களுடைய முகங்களை கர்த்தருக்கு மறைக்கிறார்கள். அவர்கள் தங்கள் முகங்களை முதலாவதாக தமக்கு மறைத்ததினால், கர்த்தரும் தம்முடைய முகத்தை அவர்களுக்கு மறைக்கிறார்.

கர்த்தர் மோசேயையும், யோசுவாவையும் நோக்கி, "நீங்கள் இந்தப்பாட்டை எழுதிக்கொண்டு, இதை இஸ்ரவேல் புத்திரருக்குப் படிப்பித்து, இந்தப்பாட்டு எனக்குச் சாட்சியாக இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே இருக்கும்படி இதை அவர்கள் வாயில் வழங்கப்பண்ணுங்கள்" (உபா 31:19) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தேவனை மறுதலித்து, அவரை விட்டுப் பின்வாங்கிப் போகும்போது அவர்களுக்கு எதிராகச் சாட்சி பகருவதற்காக இந்தப் பாட்டு எழுதப்பட்டிருக்கிறது. (உபா 31:19-21).

மோசே ஒரு பாட்டை எழுதவேண்டும். இந்தப் பாட்டிலுள்ள வார்த்தைகளையெல்லாம் எழுதுமாறு பரிசுத்த ஆவியானவர் மோசேயை ஏவுகிறார். இந்தப் பாட்டு கர்த்தருக்கு சாட்சியாக இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே இருக்கும். கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவராயிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை விட்டு விலகிப்போகும்போது, கர்த்தர் அவர்களை எச்சரிக்கிறார். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரோ கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைக்கு செவிகொடுக்காமல், தங்களுடைய சுயஇஷ்டத்திற்கும், சுயஆசைக்கும், மாம்சத்தின் இச்சைக்கும் இடம் கொடுக்கிறார்கள்.

மனுஷனுக்கு நன்மைக்கும் தீமைக்கும் வித்தியாசம் தெரிந்திருக்கிறது. கர்த்தர் மனுபுத்திரருக்கு முன்பாக, நன்மையையும் தீமையையும், ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் வைத்திருக்கிறார். மனுஷனுக்கு எது நன்மை என்பதும், எது தீமை என்பதும் நன்றாய்த் தெரியும். அதுபோலவே அவனுக்கு எது ஆசீர்வாதம் என்பதும், எது ஜீவன் என்பதும் தெரியும். இவையெல்லாம் மனுஷனுக்கு தெரிந்தாலும், இவற்றில் எதை தெரிந்துகொள்ளவேண்டும் என்பதை, மனுஷனே தீர்மானம்பண்ணவேண்டும்.

கர்த்தர் தம்முடைய பிரமாணத்தின் மூலமாகவும், தீர்க்கதரிசனங்கள் மூலமாகவும், நீதிமொழிகள் மூலமாகவும், மேலும் அநேக உபாயங்கள் மூலமாகவும், மனுபுத்திரருக்கு நன்மையையும் தீமையையும் தெரிந்துகொள்ளும் ஞானத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். இவையெல்லாவற்றையும் மோசே பாடலாக எழுதவேண்டும். மனுஷருடைய பிரயோஜனத்திற்காக இந்தப் பாடல் எழுதப்படுகிறது.

வேதவாக்கியத்தில் தேவனுடைய ஞானம் வெளிப்படுகிறது. தேவஆவியானவரே வேதவாக்கியங்களை ஏவி எழுத வைத்திருக்கிறார். நாம் வேதவாக்கியத்தை படிக்காமல் இருப்போமென்றால், நாம் தெய்வீக ஆசீர்வாதங்களை இழந்துபோவோம். நாம் வேதவசனங்களை வாசியாமலிருப்பது நம்முடைய தப்பிதம். வேதவசனங்களை வாசித்தால்தான் கர்த்தரைப்பற்றிய சத்தியங்களை நம்மால் அறிந்துகொள்ள முடியும். அறியாமையும், கவனக்குறைவும், அசட்டையும் மனுஷருடைய பாவங்கள்.

கர்த்தர் தம்முடைய பிரமாணங்களையெல்லாம் பாடலாக எழுதுமாறு மோசேக்கு கட்டளையிடுகிறார். மோசே இந்தப் பாடலை இஸ்ரவேல் புத்திரருக்கு படிப்பித்துக்கொடுக்கவேண்டும். அவர்கள் இந்தப் பாடலைப் பாடும்போது, கர்த்தருடைய நியாயப்பிரமாண வார்த்தைகளை, இந்தப் பாடல்கள் மூலமாக கற்றுக்கொள்கிறார்கள். இந்தப் பாடலில் கர்த்தருடைய நியாயப்பிரமாண வார்த்தைகள் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பாடலிலுள்ள வார்த்தைகளை இஸ்ரவேல் ஜனத்தார், தங்கள் வாயினால் பாடும்போது, இந்தப் பாட்டு அவர்களுடைய மனதிலே கர்த்தரைக்குறித்து சாட்சி பகரும்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை பாடலாக பாடும்போது, முதலாவதாக அவர்களுடைய செவிகளே, அந்தப் பாடல்களின் வார்த்தைகளைக் கேட்கும். இதன் மூலமாக அவர்கள் கர்த்தருடைய நியாயப்பிரமாண வார்த்தைகளைக் கேட்பார்கள். இந்த வார்த்தைகள் எல்லாமே அவர்களுக்கு கர்த்தரைப்பற்றி சாட்சியாக அறிவிக்கும்.

தாம் சொன்ன பாடலை மோசே எழுதி, இஸ்ரவேல் புத்திரருடைய வாயிலே வழங்கப்பண்ணவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் மோசேயின் பாடலை பாடும்போது, கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை அறிந்துகொள்கிறார்கள். அவர்கள் உள்ளத்திலே கர்த்தரைப்பற்றிய அறிவு வளரும். அவர்கள் கர்த்தரை விட்டு விலகிப்போகாமலிருப்பதற்கு, இந்தப் பாடலின் வார்த்தைகள் அவர்களுக்கு உதவி செய்யும்.

ஒருவேளை மோசே எழுதுகிற பாடலின் வரிகள், கர்த்தரை விட்டு இஸ்ரவேல் ஜனத்தார் விலகிப்போவதை தடுத்து நிறுத்தாவிட்டாலும், தங்கள் பாவங்களுக்காக மனந்திரும்புவதற்கு, இந்தப் பாடலின் வரிகள் அவர்களுக்கு உதவிசெய்யும். அவர்கள் கர்த்தரை விட்டு விலகி, அந்நிய தெய்வங்களை சோரமார்க்கமாய்ப் பின்பற்றிப்போகும்போது, இந்தப் பாடலின் வார்த்தைகள் அவர்களுடைய மனச்சாட்சியில் பேசும். அவை இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே கர்த்தரைக் குறித்து சாட்சியாயிருக்கும்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசித்த பின்பு, அவர்கள் தம்மை மறந்துவிடுவார்கள் என்றும், அவர்கள் அந்நிய தேவர்களை பின்பற்றிப்போவார்கள் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் இதுபற்றி மோசேக்கும் யோசுவாவுக்கும் சொல்லும்போது,

"நான் அவர்கள் பிதாக்களுக்கு ஆணையிட்டுக்கொடுத்த பாலும் தேனும் ஓடுகிற தேசத்தில் அவர்களைப் பிரவேசிக்கப்பண்ணின பின்பு, அவர்கள் புசித்துத் திருப்தியாகிக் கொழுத்துப்போயிருக்கும் போது, அவர்கள் வேறே தேவர்களிடத்தில் திரும்பி, அவர்களைச் சேவித்து எனக்குக் கோபம்மூட்டி, என் உடன்படிக்கையை மீறுவார்கள்" (உபா 31:20) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திலே, கர்த்தரை விட்டு விலகி, அந்நிய தெய்வங்களை சோரமார்க்கமாய்ப் பின்பற்றிப்போகும்போது, அவர்கள் கர்த்தருடைய பிரமாணங்களை மறந்துபோவார்கள். ஆனாலும் மோசேயின் பாடல் அவர்களுக்கு கற்றுக்கொடுக்கப்பட்டிருப்பதினால், இந்தப் பாடல் அவர்கள் வாயில் மறவாதிருக்கும். அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளையும், நியாயங்களையும் மறந்துபோனாலும், மோசேயின் பாடலை மறக்கமாட்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திலே புசித்து திருப்தியாகி கொழுத்திருப்பார்கள். அப்போது அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரை மறந்து வேறே தேவர்களை சேவிப்பார்கள். கர்த்தரோடு தாங்கள் செய்துகொண்ட உடன்படிக்கையை மீறுவார்கள். அவர்கள் தங்களுடைய விக்கிரகாராதனையினால் கர்த்தருக்கு கோபமூட்டுவார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை விட்டு விலகி, விக்கிரகங்களை ஆராதிப்பதினால், அநேக தீங்குகளும் இக்கட்டுக்களும், அவர்களைத் தொடரும். அப்போது, "அவர்கள் சந்ததியாரின் வாயில் மறந்துபோகாதிருக்கும் இந்தப் பாட்டே அவர்களுக்கு விரோதமான சாட்சிபகரும்" (உபா 31:21) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருக்கு இஸ்ரவேல் புத்திரருடைய சிந்தையும், எண்ணமும் நன்றாகத் தெரியும். 2,553 வருஷமாக ஆதாமின் காலத்திலிருந்து கர்த்தர் மனுஷனோடு கிரியை செய்து வருகிறார். இஸ்ரவேல் புத்திரரோடு 470 வருஷங்களாக கிரியை செய்து வருகிறார்.

இந்தப் பாட்டு கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப்போன இஸ்ரவேல் புத்திரருடைய மனச்சாட்சியிலே பேசும். அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு உணர்த்தும். அவர்கள் கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்துவார்கள். கர்த்தரை விட்டு விலகிப்போன இஸ்ரவேல் ஜனத்தார், தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் திரும்பி வருவார்கள். கர்த்தர் தமது கிருபையினால் அவர்களை மறுபடியும் தம்முடைய ஜனமாக ஏற்றுக்கொள்வார்.

இஸ்ரவேல் ஜனத்தார் இன்னும் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கவில்லை. ஆனாலும் அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசித்த பின்பு, தம்மை விட்டு விலகி, அந்நிய தெய்வங்களை சேவிப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் சர்வஞானமுள்ளவர். கர்த்தருக்கு தெரியாத இரகசியம் எதுவுமே இல்லை.

இஸ்ரவேல் ஜனத்தார் பிற்காலத்தில் தம்மை விட்டு விலகிப்போவார்கள் என்பதை, கர்த்தர் மோசேக்கும் யோசுவாவுக்கும் சொல்லும்போது, "நான் ஆணையிட்டுக் கொடுத்த தேசத்தில் அவர்களைப் பிரவேசிக்கப்பண்ணாதிருக்கிற இப்பொழுதே அவர்கள் கொண்டிருக்கும் எண்ணம் இன்னது என்று அறிவேன்" (உபா 31:21) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரை தீங்குகளும் இக்கட்டுகளும் தொடரும் முன்பாகவே, கர்த்தர் தமது கிருபையினால், அவர்களை தீங்குகளுக்கும் இக்கட்டுக்களுக்கும் விலக்கி இரட்சிப்பதற்கு சித்தமுள்ளவராயிருக்கிறார். அதற்கான உபாயங்களை கர்த்தர் இப்பொழுதே ஆயத்தம்பண்ணுகிறார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கோபத்தினாலும் நியாயத்தீர்ப்பினாலும் அழிந்துபோவதற்கு முன்பாகவே, அவர்களை அந்த அழிவிலிருந்து தப்பிக்க வைப்பதற்கு, கர்த்தர் இப்பொழுதே சித்தங்கொண்டு, அதற்கான உபாயங்களை செய்கிறார்.

மனுஷருக்கு நோய்கள் வருவதற்கு முன்பாகவே, அந்த நோயைக் குணப்படுத்துவதற்கு மருந்துகள் ஆயத்தம்பண்ணப்படுவதைப்போல, இஸ்ரவேல் புத்திரர் அழிந்துபோவதற்கு முன்பாகவே, அவர்களை அழிவிலிருந்து இரட்சிப்பதற்கு, கர்த்தர் தமது கிருபையினாலும், தெய்வீக ஞானத்தினாலும், இப்பொழுதே திட்டமிடுகிறார்.

கர்த்தர் மோசேக்கு முன்னறிவித்த காரியங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. நீ மரித்து உன் பிதாக்களோடே படுத்துக் கொள்ளப்போகிறாய். (உபா 31:16).

2. இந்த ஜனங்கள் எழும்பி, தாங்கள் போயிருக்கும் தேசத்திலுள்ள அந்நிய தேவர்களைச் சோரமார்க்கமாய்ப் பின்பற்றி, என்னைவிட்டு, தங்களுடனே நான் பண்ணின உடன்படிக்கையை மீறுவார்கள்.

3. அந்நாளிலே நான் அவர்கள்மேல் கோபங்கொள்வேன். (உபா 31:17).

4. அவர்களைக் கைவிட்டு விடுவேன்.

5. என் முகத்தை அவர்களுக்கு மறைப்பேன். நான் அவர்கள் ஜெபங்களுக்குப் பதில் கொடுக்கமாட்டேன். (உபா 31:17-18).

6. அவர்கள் பட்சிக்கப்படுவார்கள்.

7. அநேக தீங்குகளும் இக்கட்டுகளும் அவர்களைத் தொடரும்.

8. அவர்கள் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தேசத்தில் அவர்களைப் பிரவேசிக்கப்பண்ணுவேன். (உபா 31:20; உபா 29:13).

9. அவர்கள் புசித்துத் திருப்தியாகிக் கொழுத்துப்போயிருப்பார்கள்.

10. அவர்கள் வேறே தேவர்களிடத்தில் திரும்பி, அவர்களைச் சேவிப்பார்கள்.

11. எனக்குக் கோபம்மூட்டி, என் உடன்படிக்கையை மீறுவார்கள்.

12. அநேக தீங்குகளும் இக்கட்டுகளும் அவர்களைத் தொடரும். அப்போது இந்தப் பாட்டே அவர்களுக்கு விரோதமாகச் சாட்சிபகரும் (உபா 31:19,21).

மோசேயின் பாட்டு
உபா 31:22-30

உபா 31:22. அன்றைக்கே மோசே அந்தப் பாட்டை எழுதி, அதை இஸ்ரவேல்புத்திரருக்குப் படிப்பித்தான்.

உபா 31:23. அவர் நூனின் குமாரனாகிய யோசுவாவை நோக்கி: நீ பலங்கொண்டு திடமனதாயிரு, இஸ்ரவேல் புத்திரருக்கு நான் ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தில் நீ அவர்களை நடத்திக்கொண்டுபோவாய்; நான் உன்னோடிருப்பேன் என்று கட்டளையிட்டார்.

உபா 31:24. மோசே இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகள் முழுவதையும் ஒரு புஸ்தகத்தில் எழுதி முடித்தபின்பு,

உபா 31:25. மோசே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற லேவியரை நோக்கி:

உபா 31:26. நீங்கள் இந்த நியாயப்பிரமாண புஸ்தகத்தை எடுத்து, அதை உங்கள் தேவனாகிய கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியின் பக்கத்திலே வையுங்கள்; அங்கே அது உனக்கு விரோதமான சாட்சியாயிருக்கும்.

உபா 31:27. நான் உன் கலகக்குணத்தையும் உன் கடினக் கழுத்தையும் அறிந்திருக்கிறேன்; இன்று நான் இன்னும் உங்களுடன் உயிரோடிருக்கையில், கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினீர்களே; என் மரணத்திற்குப் பின்பு எவ்வளவு அதிகமாய்க் கலகம்பண்ணுவீர்கள்!

உபா 31:28. உங்கள் கோத்திரங்களிலுள்ள மூப்பர் உங்கள் அதிபதிகள் எல்லாருடைய காதுகளும் கேட்கத்தக்கதாக நான் இந்த வார்த்தைகளைச் சொல்லவும், அவர்களுக்கு விரோதமாக வானத்தையும் பூமியையும் சாட்சிவைக்கவும் அவர்களை என்னிடத்தில் கூடிவரச்செய்யுங்கள்.

உபா 31:29. என் மரணத்திற்குப்பின்பு நீங்கள் நிச்சயமாய் உங்களைக் கெடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட வழியை விட்டு விலகுவீர்கள்; ஆகையால், கடைசி நாட்களில் தீங்கு உங்களுக்கு நேரிடும்; உங்கள் கைக்கிரியைகளினாலே கர்த்தரைக் கோபப்படுத்தும்படிக்கு, அவர் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்வீர்கள் என்பதை அறிவேன் என்று சொல்லி,

உபா 31:30. இஸ்ரவேல் சபையார் எல்லாரும் கேட்க மோசே இந்தப் பாட்டின் வார்த்தைகளை முடியும் வரையும் சொன்னான்.

மோசேயும் யோசுவாவும் கர்த்தருடைய கட்டளையின் பிரகாரமாக ஆசரிப்புக்கூடாரத்திலே நிற்கிறார்கள். கர்த்தர் அவர்களுக்கு கூடாரத்திலே மேகஸ்தம்பத்தில் தரிசனமாகிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைக் குறித்து மோசேயினிடத்தில் சொன்ன எல்லா வார்த்தைகளையும், யோசுவா கவனமாய்ச் செவிகொடுத்து கேட்கிறார். இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் பிரவேசித்த பின்பு, அவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கையை மீறி, கர்த்தருக்கு கோபமூட்டுவார்கள் என்னும் செய்தியையும் யோசுவா மிகுந்த மனவேதனையோடு செவிகொடுத்து கேட்கிறார்.

கர்த்தர் மோசேயையும் யோசுவாவையும் நோக்கி, "இப்பொழுது நீங்கள் இந்தப்பாட்டை எழுதிக்கொண்டு, இதை இஸ்ரவேல் புத்திரருக்குப் படிப்பித்து, இந்தப்பாட்டு எனக்குச் சாட்சியாக இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே இருக்கும்படி இதை அவர்கள் வாயில் வழங்கப்பண்ணுங்கள்" (உபா 31:19) என்று கட்டளையிடுகிறார்.

அன்றைக்கே மோசே அந்தப் பாட்டை எழுதி, அதை இஸ்ரவேல் புத்திரருக்குப் படிப்பிக்கிறார் (உபா 31:22).

பாட்டு எழுதிய ஒரு சிலரைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களின் விவரம் வருமாறு :

1. லாமேக்கு (ஆதி 4:23)
2. மோசே (யாத் 15:1; எண் 21:17; உபா 31:19-22,30; உபா 32:1-44; சங் 90)
3. மிரியாம் (யாத் 15:20-21)
4. தெபொராள் (நியா 5)
5. அன்னாள் (1சாமு 2:1-10)
6. தாவீது (2சாமு 22:1; சங் 18)
7. சாலொமோன் (1இராஜா 4:32; உன் 1:1)
8. ஆசாப் (சங் 50,73-83)
9. ஏமான் (சங் 88)
10. ஏத்தான் (சங் 89)
11. ஏசாயா (ஏசா 5:1-7; ஏசா 12:1-6; ஏசா 25:1-12; ஏசா 26:1-21)
12. எசேக்கியா (ஏசா 38:9-20)
13. சகரியா (லூக்கா 1:68-79)
14. எலிசபெத் (லூக்கா 1:42-45)
15. மரியாள் (லூக்கா 1:45-55)

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைக் குறித்து சொன்ன வார்த்தைகளினால் மோசே மனம் தளர்ந்துபோகவில்லை. இஸ்ரவேல் ஜனத்தாருடைய துன்மார்க்கத்தையும் பின்மாற்றத்தையும் கேள்விப்பட்டு யோசுவா மனம் சோர்ந்துபோகவுமில்லை.

கர்த்தர் நூனின் குமாரனாகிய யோசுவாவை நோக்கி, "நீ பலங்கொண்டு திடமனதாயிரு, இஸ்ரவேல் புத்திரருக்கு நான் ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தில் நீ அவர்களை நடத்திக்கொண்டுபோவாய்; நான் உன்னோடிருப்பேன்" (உபா 31:23) என்று கட்டளையிடுகிறார்.

மோசே இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகள் முழுவதையும் ஒரு புஸ்தகத்தில் எழுதி முடிக்கிறார்.

மோசே அதை எழுதி முடித்தபின்பு, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற லேவியரை நோக்கி, "நீங்கள் இந்த நியாயப்பிரமாண புஸ்தகத்தை எடுத்து, அதை உங்கள் தேவனாகிய கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியின் பக்கத்திலே வையுங்கள்; அங்கே அது உனக்கு விரோதமான சாட்சியாயிருக்கும்" (உபா 31:24-26) என்று சொல்லுகிறார்.

இதுவரையிலும் எழுதப்பட்டிருக்கும் பஞ்சாகமப் புஸ்தகத்தில் உபா 32 ஆவது அதிகாரத்தில் உள்ள பாட்டும், உபா 33 ஆவது அதிகாரத்திலுள்ள தீர்க்கதரிசனமும் அடங்கியிருக்கலாம். உபா 34 ஆவது அதிகாரத்தை யோசுவா எழுதினார். யோசுவாவும் "தேவனுடைய நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதினார்" (யோசுவா 24:26).

மோசே எழுதின நியாயப்பிரமாண புஸ்தம் உடன்படிக்கைப் பெட்டிக்குள்ளே வைக்கப்படவில்லை. இந்தப் புஸ்தகம் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியின் பக்கத்திலே வைக்கப்பட்டிருக்கிறது. உடன்படிக்கைப் பெட்டிக்குள்ளே கர்த்தருடைய கற்பனைகள் எழுதப்பட்டிருக்கிற இரண்டு கற்பலகைகள் வைக்கப்பட்டிருக்கிறது.

யோசியா ராஜாவின் காலத்தில், கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திலிருந்து, ஒரு புஸ்தகம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தப் புஸ்தகம் ஒரு வேளை மோசே எழுதின நியாயப்பிரமாண புஸ்தகமாகயிருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

"கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டுவரப்பட்ட பணத்தை அவர்கள் எடுக்கிறபோது மோசேயைக்கொண்டு கட்டளையிடப்பட்ட கர்த்தருடைய நியாயப்பிரமாணப் புஸ்தகத்தை ஆசாரியனாகிய இல்க்கியா கண்டெடுத்தான்" (2நாளா 34:14).

இதற்கு அடுத்த அதிகாரத்திலிருந்து மோசே எழுதின பாடலின் வரிகள் விவரமாக சொல்லப்பட்டிருக்கிறது. மோசே கர்த்தர் தனக்கு கட்டளையிட்ட பிரகாரமாக அந்தப் பாடலை எழுதி, அதை இஸ்ரவேல் புத்திரருக்கு படிப்பிக்கிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நான் உன் கலகக்குணத்தையும் உன் கடினக் கழுத்தையும் அறிந்திருக்கிறேன்; இன்று நான் இன்னும் உங்களுடன் உயிரோடிருக்கையில், கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினீர்களே; என் மரணத்திற்குப் பின்பு எவ்வளவு அதிகமாய்க் கலகம்பண்ணுவீர்கள்!" (உபா 31:27) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கலகக்குணமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். மோசே இப்போது அவர்களோடு கூடயிருக்கிறார். அவர் சீக்கிரத்தில் மரித்துப்போகப்போகிறார். மோசே தங்களோடு கூடயிருக்கும்போதே, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக அதிகமாய்க் கலகம்பண்ணுகிறார்கள். மோசே மரித்துப்போன பின்பு, அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக இன்னும் அதிகமாய்க் கலகம்பண்ணுவார்கள். அவர்கள் மோசேயையும் மறந்துவிடுவார்கள், மோசேயின் நியாயப்பிரமாணத்தையும் மறந்துவிடுவார்கள். அவர்கள் கர்த்தரை விட்டு விலகி, அந்நிய தெய்வங்களை சோரமார்க்கமாய்ப் பின்பற்றி, கர்த்தரையும் மறந்துவிடுவார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மோசேயின் பாடலை பாடும் போதெல்லாம், அந்தப் பாடலின் வரிகள் அவர்களுக்கு, நியாயப்பிரமாண வார்த்தைகளை ஞாபகப்படுத்தும். அப்போது அவர்கள், தாங்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணியதை நினைவுகூருவார்கள். தாங்கள் கர்த்தரைவிட்டு விலகிப்போனதை நினைத்து அவர்கள் மனம் வருந்துவார்கள். தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்ப அவர்களுக்கு நல்ல வாய்ப்பு கிடைக்கும்.

இஸ்ரவேல் புத்திரருடைய கலகக்குணத்தைப் பார்த்து மோசே மனம் வேதனைப்படுகிறார். அவர்கள் மறுபடியுமாக கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டுமென்று மோசே விரும்புகிறார். ஆனாலும் அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புவார்களா என்னும் சந்தேகம், மோசேயின் மனதிலே உண்டாயிருக்கிறது.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உங்கள் கோத்திரங்களிலுள்ள மூப்பர் உங்கள் அதிபதிகள் எல்லாருடைய காதுகளும் கேட்கத்தக்கதாக நான் இந்த வார்த்தைகளைச் சொல்லவும், அவர்களுக்கு விரோதமாக வானத்தையும் பூமியையும் சாட்சிவைக்கவும் அவர்களை என்னிடத்தில் கூடிவரச்செய்யுங்கள்" *(உபா 31:28)* என்று சொல்லுகிறார்.

மோசேயினுடைய கட்டளையின் பிரகாரம், இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் அவரிடத்தில் கூடிவருகிறார்கள். மோசே தன்னுடைய மரணத்தைக் குறித்தும், அதன் பின்பு அவர்கள் கர்த்தரை விட்டு தூரமாய் விலகிப்போவதைக் குறித்தும், அவர்களுக்கு மிகுந்த பாரத்தோடு சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "என் மரணத்திற்குப்பின்பு நீங்கள் நிச்சயமாய் உங்களைக் கெடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட வழியை விட்டு விலகுவீர்கள்; ஆகையால், கடைசி நாட்களில் தீங்கு உங்களுக்கு நேரிடும்; உங்கள் கைக்கிரியைகளினாலே கர்த்தரைக் கோபப்படுத்தும்படிக்கு, அவர் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்வீர்கள் என்பதை அறிவேன்" *(உபா 31:29)* என்று சொல்லுகிறார்.

பொல்லாப்பு செய்கிறவர்கள் கர்த்தரைவிட்டு பின்வாங்கிப்போய் தங்கள் ஆத்துமாக்களைக் கெடுத்துக் கொள்வார்கள். *(உபா 31:16-18,29; உபா 31:16; சங் 47:9; 1பேதுரு 2:14,20-22; எபி 10:26-29).*

தன்னுடைய மரணத்திற்கு பின்பு இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்வார்கள் என்று மோசே சொல்லுகிறார். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புவார்கள் என்னும் நம்பிக்கை மோசேயின் மனதிலே குறைந்துபோயிற்று.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், தாம் கல்வாரி சிலுவையிலே மரிக்கப்போவதற்கு முன்பாக, இந்தப் பூமியிலே கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ளக்கிறிஸ்துக்களும் எழும்புவார்கள் என்று சொன்னார்.

"ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்" *(மத் 24:24).*

கர்த்தருடைய ஜனங்கள் அவரை விட்டு விலகிப்போனாலும், அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக பொல்லாப்பானதை செய்தாலும், கர்த்தருடைய ஜனங்களை வஞ்சிப்பதற்காக கள்ளக்கிறிஸ்துக்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பினாலும், கர்த்தருடைய சபையை பாதாளத்தின் வாசல்களால் மேற்கொள்ள முடியாது. கர்த்தருடைய சபையின் அஸ்திபாரம் உறுதியாக நிலைத்து நிற்கும்.

இஸ்ரவேல் சபையார் எல்லாரும் கேட்க மோசே இந்தப் பாட்டின் வார்த்தைகளை முடியும்வரையும் சொல்லுகிறார் *(உபா 31:30).*

இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கும் "இந்தப் பாட்டு" என்பது, உபா 32:1-44 ஆகிய வசனங்களில் எழுதப்பட்டிருக்கும் பாட்டாகும்.

32 அதிகாரம்

கர்த்தருடைய கட்டளையின் பிரகாரமாக மோசே அந்தப் பாட்டை எழுதி, அந்தப் பாட்டின் வார்த்தைகளை இஸ்ரவேல் சபையார் எல்லாரும் கேட்க, அவர்களுக்கு முன்பாக சொல்லுகிறார். பாட்டின் முன்னுரை (உபா 32:1,2). கர்த்தருடைய நல்ல குணாதிசயங்களும், இஸ்ரவேல் சபையாருடைய தீயகுணதிசயங்களும் (உபா 32:3-6).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்காக செய்த நன்மையான காரியங்களும், இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு நன்றி சொல்லாமல், அவருக்கு விரோதமாக கலகம்பண்ணின சம்பவங்களும் (உபா 32:7-18).

இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களினிமித்தமாக அவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கள் வரும் என்று மோசே எச்சரித்து முன்னறிவிக்கிறார் (உபா 32:19-33).

இஸ்ரவேல் ஜனத்தாருடைய சத்துருக்கள் அழிக்கப்படுவார்கள் என்னும் வாக்குத்தத்தம். இஸ்ரவேலிலே மீதியானவர்கள் மகிமையாக விடுவிக்கப்படுவார்கள் (உபா 32:36-43).

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு இந்தப் பாட்டின் வார்த்தைகளையெல்லாம் சொல்லுகிறார் (உபா 32:44-47). மோசே நேபோ பர்வதத்தின்மேல் ஏறி, அங்கே இருந்து கானான் தேசத்தைப் பார்த்து, அந்த மலையிலே மரித்துப்போவார் (உபா 32:48-52).

மோசேயின் பாட்டு
உபா 32:1-6

உபா 32:1. வானங்களே, செவிகொடுங்கள், நான் பேசுவேன்; பூமியே, என் வாய்மொழிகளைக் கேட்பாயாக.

உபா 32:2. மழையானது இளம்பயிரின்மேல் பொழிவதுபோல, என் உபதேசம் பொழியும்; பனித்துளிகள் புல்லின்மேல் இறங்குவதுபோல, என் வசனம் இறங்கும்.

உபா 32:3. கர்த்தருடைய நாமத்தை பிரசித்தம்பண்ணுவேன்; நம்முடைய தேவனுக்கு மகத்துவத்தைச் செலுத்துங்கள்.

உபா 32:4. அவர் கன்மலை; அவர் கிரியை உத்தமமானது; அவர் வழிகளெல்லாம் நியாயம், அவர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன்; அவர் நீதியும் செம்மையுமானவர்.

உபா 32:5. அவர்களோ தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள், அவர்கள் அவருடைய பிள்ளைகள் அல்ல; இதுவே அவர்கள் காரியம்; அவர்கள் மாறுபாடும் தாறுமாறுமுள்ள சந்ததியார்.

உபா 32:6. விவேகமில்லாத மதிகெட்ட ஜனங்களே, இப்படியா கர்த்தருக்குப் பதிலளிக்கிறீர்கள். உன்னை ஆட்கொண்ட பிதா அவரல்லவா? உன்னை உண்டாக்கி உன்னை நிலைப்படுத்தினவர் அவரல்லவா?

மோசே இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் முன்பாக தன்னுடைய பாட்டின் வார்த்தைகளை சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் அவருடைய பாட்டின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவேண்டும். ஜனங்கள் மாத்திரமல்ல, வானங்களும் பூமியும் தன்னுடைய வாய்மொழியை கேட்கவேண்டுமென்று மோசே சொல்லுகிறார்.

"வானங்களே, செவிகொடுங்கள், நான் பேசுவேன்; பூமியே, என் வாய்மொழிகளைக் கேட்பாயாக" (உபா 32:1) என்று சொல்லி மோசே தன்னுடைய பாட்டின் வார்த்தைகளை சொல்ல ஆரம்பிக்கிறார். மோசேயின் வார்த்தைகள் சத்தியமான வார்த்தைகள். அவை எல்லாமே மிகவும் முக்கியமான வார்த்தைகள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணி, அவரை விட்டு பின்வாங்கிப்போன ஜனமாகயிருக்கிறார்கள். அவர்களுக்கு விரோதமாக தேவனுடைய கோபம் எழும்பியிருக்கிறது. தேவனுடைய தெய்வீக நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வரப்போகிறது. பாவிகளுக்கு விரோதமாக வானங்களும் பூமியும் சாட்சியாகயிருக்கிறது.

கர்த்தருடைய வார்த்தைகளை ஜனங்களுக்கு பிரசங்கம்பண்ணும்போது, ஜனங்கள் அந்த வார்த்தைகளை செவிகொடுத்து கேட்டு, கர்த்தருடைய பிரமாணத்தைக் கைக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய வார்த்தை தங்களுக்கு பிரசங்கிக்கப்பட்டும், அவர்கள் அந்த வார்த்தைகளுக்கு செவிகொடாமலும், கீழ்ப்படியாமலும் போகும்போது, வானங்களும் பூமியும் பாவிகளுக்கு விரோதமாக சாட்சியாயிருக்கும்.

"வானங்கள் அவன் அக்கிரமத்தை வெளிப்படுத்தி, பூமி அவனுக்கு விரோதமாக எழும்பும்" *(யோபு 20:27)*.

தன்னுடைய பாட்டில் தான் சொல்லப்போகிற வார்த்தைகள் எப்படிப்பட்டதாகயிருக்கும் என்று, மோசே இந்தப் பாட்டின் முன்னுரையில் சொல்லுகிறார்.

"மழையானது இளம்பயிரின்மேல் பொழிவதுபோல, என் உபதேசம் பொழியும்; பனித்துளிகள் புல்லின்மேல் இறங்குவதுபோல, என் வசனம் இறங்கும்" *(உபா 32:2)* என்று மோசே சொல்லுகிறார்.

மெய்யான உபதேசத்திற்கு உவமையாக இந்த வசனத்தில் நான்கு காரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன :

1. மழை - ஒவ்வொரு துளியாக மழை பொழிவதுபோல வேதாகம உபதேசமும் மெதுவாக ஆரம்பித்து அதன் முழு வெளிப்பாட்டையும் பூரணமாக வெளிப்படுத்தும். *(ஏசா 29:9-11; 2தீமோ 3:16-17)*.

2. பனித்துளி - பனித்துளியைப்போல மெய்யான உபதேசம் இருதயத்திலும், செவிகளிலும் வந்திறங்கி, ஆத்துமாவிற்கு இளைப்பாறுதலைத்தரும்.

3. சிறுமழை - சிறுமழையோடு கூடிய பலத்த காற்றுபோன்று மெய்யான உபதேசத்தோடு பரிசுத்த ஆவியானவரின் வல்லமையும் சேர்ந்து விளங்கும்.

4. தொடர் மழை - விதை விதைப்பதற்கும், அறுவடை செய்வதற்கும் தொடர்மழை தேவைப்படுவது போன்று ஆத்தும அறுவடைக்கு மெய்யான உபதேசம் தேவைப்படுகிறது.

மோசேயின் வார்த்தைகள் துன்மார்க்கர்மீது, பெருமழை பொழிவதுபோல பெய்து, அவர்களை முற்றிலுமாக அழித்துப்போடும். மழையானது சில சமயங்களில் மனுஷருக்கு நியாயத்தீர்ப்பாக அனுப்பப்படுகிறது. பெரிய அளவில் மழை பெய்து, பெருவெள்ளம் ஏற்பட்டு, ஜனங்களையெல்லாம் அழித்துப்போடுகிறது.

தேவனுடைய வார்த்தையும் மழையைப்போலவே இருக்கிறது. ஏற்ற காலத்தில் பெய்யும் நிதானமான மழை இளம்பயிருக்கு மிகவும் நல்லது. இப்படிப்பட்ட மழை மனுஷருக்கு மிகவும் ஆசீர்வாதமாக இருக்கும். பெருமழையும் பெருவெள்ளமும் மனுஷருக்கு சாபமாகயிருக்கும்.

அதுபோலவே கர்த்தருடைய வார்த்தையானது நீதிமான்களுக்கு ஆசீர்வாதமாகவும், ஜீவனாகவும், நன்மையாகவும் இருக்கும். அதே வேளையில், கர்த்தருடைய வார்த்தையானது துன்மார்க்கருக்கு, சாபமாகவும், மரணமாகவும், தீமையாகவும் இருக்கும்.

கர்த்தருடைய வார்த்தை இரட்சிக்கப்படுகிறவர்களுக்கு ஜீவனுக்கேற்ற வாசனையாகவும், கெட்டுப்போகிறவர்களுக்கோ அது மரணத்திற்கு ஏதுவான வாசனையாகவும் இருக்கும்.

நீதிமான்கள் கர்த்தருடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருப்பார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தை இளம் பயிரின்மேல் பொழியும் மழையைப்போல ஆசீர்வாதமாயிருக்கும்.

மோசே தன்னுடைய பாடலில் கர்த்தரைப்பற்றியும், அவருடைய பிரமாணங்களைப்பற்றியும் உபதேசம்பண்ணுகிறார். மோசேயின் பாட்டு ஒரு உபதேச பாட்டு. மோசே ஏற்கெனவே கர்த்தரைத் துதித்துப்பாடும் துதியின் பாட்டையும், ஸ்தோத்திரப்பாட்டையும் பாடியிருக்கிறார் (யாத் 15-ஆவது அதிகாரம்).

மோசே இந்த அதிகாரத்தில் பாடுகிற பாட்டோ உபதேச பாட்டாகயிருக்கிறது. சங்கீதங்கள் மூலமாகவும், ஞானப்பாட்டுக்கள் மூலமாகவும் நாம் கர்த்தரை மகிமைப்படுத்துகிறோம். அவரை நன்றியுள்ள இருதயத்தோடு துதிக்கிறோம். அதே வேளையில் சங்கீதங்கள் நமக்கு ஆவிக்குரிய உபதேசங்களையும் போதிக்கிறது.

"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடுங்கள்" (கொலோ 3:16).

மோசே எழுதின பாடல்களில் பல பாடல்கள் "மஸ்கீல்" என்னும் பாடல்களாகும். மஸ்கீல் என்னும் வார்த்தைக்கு போதிப்பது என்று பொருள். மோசே எழுதின பல பாடல்களின் தலைப்புகளில் "மஸ்கீல் என்னும் போதக சங்கீதம்" என்று எழுதப்பட்டிருக்கிறது.

மோசே தன்னுடைய பாடலின் வார்த்தைகளைப் பற்றிச் சொல்லும்போது "மழையானது இளம் பயிரின்மேல் பொழிவதுபோல என் உபதேசம் பொழியும்" என்று சொல்லுகிறார். பனித்துளிகள் புல்லின்மேல் இறங்குவதுபோல தன்னுடைய வசனம் மனுஷருடைய ஆத்துமாவில் இறங்கும் என்றும் மோசே சொல்லுகிறார்.

மழை வானத்திலிருந்து வருகிறது. அது பூமியை நனைத்து செழிப்பாக்குகிறது. பூமியின்மீது மழை பெய்வதினால் தாவரங்களும் விருட்சங்களும் பசுமையாய் வளர்ந்து, கனிகளைக் கொடுக்கிறது. மோசேயின் உபதேச மொழியும், மனுஷருடைய இருதயத்திலே கிரியை செய்யும். அவர்களுடைய ஜீவியங்களிலிருந்து ஆவிக்குரிய கனிகள் வெளிப்படும்.

மோசேயின் உபதேச மொழிகள், இளம் பயிரின்மேல் மென்மையாகப் பெய்யும் மழையைப்போலவும், புல்லின்மேல் இறங்கும் பனித்துளிகளைப்போலவும் இருக்கிறது. பனித்துளியும், மென்மையான மழையும் ஆரவாரமில்லாமல் அமைதியாகப் பெய்யும். மோசேயின் உபதேச வசனங்களும் ஆரவாரமில்லாமல் அமைதியாகவே இருக்கும்.

கர்த்தருடைய வார்த்தைகளை பிரசங்கம்பண்ணுகிற ஊழியக்காரர்கள், சத்தியத்தைக் கேட்கிறவர்களுடைய மனதிலே பதியும் வண்ணமாகப் பேசவேண்டும். வசனங்கள் ஜனங்களுடைய இருதயத்தில் தங்கியிருக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கம்பண்ணுகிறவர்கள், ஜனங்கள்மீது கரிசனையோடும், அக்கரையோடும், அன்போடும், பாசத்தோடும், பிரியத்தோடும் பிரசங்கம்பண்ணவேண்டும்.

மோசேயின் உபதேச வார்த்தைகளை ஜனங்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். மழை பெய்வதினால் இளம் பயிரிக்கு பிரயோஜனம் உண்டாவதுபோலவும், பனி இறங்குவதினால் புல்லுக்கு பிரயோஜனமுண்டாவதுபோலவும், மோசேயின் உபதேச வார்த்தைகளினால் இஸ்ரவேல் சபையாருக்கு ஆவிக்குரிய பிரயோஜனமுண்டாகிறது.

மோசே தன்னுடைய பாடலில் கர்த்தரைப்பற்றிய நீதியையும், அவருடைய மகிமையையும், மகத்துவத்தையும் தெளிவுபடுத்துகிறார்.

"கர்த்தருடைய நாமத்தை பிரசித்தம்பண்ணுவேன்; நம்முடைய தேவனுக்கு மகத்துவத்தைச் செலுத்துங்கள். அவர் கன்மலை; அவர் கிரியை உத்தமமானது; அவர் வழிகளெல்லாம் நியாயம், அவர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன்; அவர் நீதியும் செம்மையுமானவர்" (உபா 32:3,4) என்று மோசே கர்த்தரைப்பற்றிச் சொல்லுகிறார்.

கர்த்தருடைய கிரியை உத்தமமானது. கர்த்தர் அரைகுறையாக எதையும் சிருஷ்டிக்கவில்லை. கர்த்தருடைய கிரியை எப்போதும் பூரணமாகவும், உத்தமமாகவும் இருக்கும். சிருஷ்டிகளிடத்தில் காணப்படும் குறைவுகள் அவர்களுடைய பாவங்களினால் வந்த விளைவு. கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணியதினால் மனுஷனிடத்தில் காணப்படும் தேவசாயல் மங்கியிருக்கிறது. (ரோமர் 5:12-21).

உபாகமம் புஸ்தகத்தில் கர்த்தரைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கும் சத்தியங்களின் விவரம் வருமாறு :

1. கர்த்தருக்கு ஒரு வாய் இருக்கிறது. (உபா 32:1).

2. அவரால் பேசமுடியும். (உபா 32:1-2).

3. அவருக்கு ஒரு உபதேசம் இருக்கிறது. (உபா 32:2).

4. அவருக்கு ஒரு நாமம் இருக்கிறது. (உபா 32:3).

5. அவர் மகத்துவமானவர்.

6. அவர் கன்மலை. (உபா 32:4).

7. அவர் கிரியை உத்தமமானது.

8. அவர் வழிகளெல்லாம் நியாயம்.

9. அவர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன்.

10. அவர் நீதியும் செம்மையுமானவர்.

கர்த்தர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன். அவர் நீதியும் செம்மையுமானவர். கர்த்தருடைய செய்கைகள் எல்லாமே நீதியானது. கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு நன்மையான காரியங்களை ஈவாகக் கொடுத்து அவர்களை ஆசீர்வதித்தாலும் அல்லது அவர்களுக்கு தீமையான காரியங்களைக் கொடுத்து அவர்களை தண்டித்தாலும், இவையெல்லாவற்றையும் கர்த்தர் தம்முடைய நீதியின்படியே செய்கிறார். கர்த்தருடைய கிரியைகள் எல்லாமே உத்தமமானது. அவருடைய வழிகள் எல்லாமே நியாயமானது.

"கர்த்தவே, உம்மோடே நான் வழக்காடப்போனால், தேவரீர் நீதியுள்ளவராமே; ஆகிலும் உம்முடைய நியாயங்களைக் குறித்து உம்மோடே நான் பேசும்படி வேண்டுகிறேன்; ஆகாதவர்களின் வழி வாய்க்கிறதென்ன? துரோகஞ்செய்துவருகிற அனைவரும் சுகித்திருக்கிறதென்ன?" (எரே 12:1).

"உமது நீதி மகத்தான பர்வதங்கள் போலவும், உமது நியாயங்கள் மகா ஆழமாகவும் இருக்கிறது; கர்த்தாவே, மனுஷரையும் மிருகங்களையும் காப்பாற்றுகிறீர்" (சங் 36:6).

மோசே தன்னுடைய பாட்டிலே கர்த்தருடைய நாமத்தை பிரசித்தம் பண்ணுவதாக சொல்லுகிறார். கர்த்தர் மகிமையுள்ளவர். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரோ கர்த்தரைப் பின்பற்றாமல், அவரை விட்டு விலகி, அந்நிய தேவர்களைப் பின்பற்றுகிறார்கள். கர்த்தருடைய மகத்துவத்தை, அவர்கள் விக்கிரகங்களோடு ஒப்பிடுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரிடத்தில் தெளிந்த சிந்தனையும், ஞானமும் புத்தியுமில்லை. ஆகையினால்தான் அவர்களுக்கு மகிமையுள்ள கர்த்தரும், மாயையான விக்கிரகங்களும் ஒன்றுபோல தெரிகிறது. அவர்களால் கர்த்தருக்கும், விக்கிரகங்களுக்கும் இடையிலுள்ள வித்தியாசங்களைப் பார்க்க முடியவில்லை.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், நாம் பாவங்களுக்கு விலகி ஜீவிக்கவேண்டுமென்றால், நம்முடைய ஜீவியத்தின் ஒவ்வொரு பகுதியிலும், கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்த வேண்டும். நம்முடைய இருதயத்திலே கர்த்தரைப்பற்றி உயர்வான எண்ணங்கள் நிரம்பியிருக்கவேண்டும்.

நம்முடைய வாயின் வார்த்தைகளெல்லாம் கர்த்தருடைய நாமத்தையே எப்போதும் பிரசித்தம் பண்ணவேண்டும். நாம் கர்த்தருடைய மகிமையையும், மகத்துவத்தையும் எப்போதும் அறிவிக்கவேண்டும். நம்முடைய இருதயத்தில் கர்த்தரைப்பற்றிய உயர்வான எண்ணங்களும், மகிமையான சிந்தனைகளும் நிரம்பியிருக்கவேண்டும்.

நம்முடைய ஜீவியத்தில், நமக்கு கிடைக்கிற ஒவ்வொரு வாய்ப்புக்களையும் பயன்படுத்தி, நாம் கர்த்தருடைய நாமத்தை பிரசித்தம்பண்ணும்போது, நாம் அவருடைய மகிமையையும், மகத்துவத்தையும் சொல்லி துதிக்கும்போது, நாம் பாவத்தை விட்டு விலகி ஜீவிப்போம். நம்முடைய ஜீவியத்தில் கர்த்தரைத் துதிக்கும் துதிகள் பெருகும்போது, கர்த்தருடைய கிருபையும் நமக்கு பெருகும்.

மோசே கர்த்தருடைய நாமத்தை பிரசித்தம்பண்ணும்போதும், அவருடைய மகிமையையும் மகத்துவத்தையும் பற்றிச் சொல்லும்போதும், மோசே கர்த்தருடைய சர்வவியாபகத்தைப்பற்றியோ, சர்வவல்லமையைப்பற்றியோ, சர்வஞானத்தைப்பற்றியோ அல்லது அவருடைய நித்தியத்துவத்தைப்பற்றியோ ஒன்றும் சொல்லவில்லை.

மோசே கர்த்தருடைய நாமத்தை பிரசித்தம்பண்ணும்போது, பரலோகத்தில் வெளிப்படுகிற தேவனுடைய மகிமையைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவராயிருக்கிறார் என்றும், அவருடைய கிரியைகளெல்லாம் உத்தமமானது என்றும், அவருடைய வழிகளெல்லாம் நியாயமானது என்றும் அவர் நீதியும் செம்மையுமுள்ளவர் என்றும் சொல்லி, மோசே கர்த்தருடைய நாமத்தை பிரசித்தம்பண்ணுகிறார்.

கர்த்தர் சர்வஞானமுள்ள தேவன். கர்த்தருடைய ஆளுகையில் அவருடைய நீதியும், ஞானமும் வெளிப்படுகிறது. நாம் கர்த்தரைப்பற்றி அறிந்துகொள்ளவேண்டுமென்றால், அவருடைய உத்தமமான கிரியைகளைப்பற்றியும், அவருடைய நியாயமான வழிகளைப்பற்றியும் அறிந்துகொள்ளவேண்டும். கர்த்தருடைய கிரியைகளிலும், அவருடைய நியாயங்களிலும், அவருடைய நீதியிலும், கர்த்தருடைய மகிமை நமக்கு பிரத்தியட்சமாக வெளிப்படுத்தப்படுகிறது.

கர்த்தருடைய கிரியைகளிலும், வழிகளிலும் அவருடைய மகிமை நமக்கு பிரகாசமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. நாம் கர்த்தருடைய மகிமை பிரகாசத்தை காணவேண்டுமென்றால், அவருடைய கிரியைகளிலும், வழிகளிலுமே அந்த மகிமைப்பிரகாசத்தை நம்மால் பார்க்க முடியும்.

கர்த்தருடைய நியாயமும், அவருடைய உத்தமும், அவருடைய சத்தியமும், நீதியும், செம்மையும் நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்குமுரியது. மோசே கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது "அவர் கன்மலை" என்று சொல்லுகிறார். கன்மலை ஒருபோதும் அசையாது. கர்த்தரும் கன்மலையைப்போல மாறாதவராகவும், தம்முடைய சித்தத்தில் உறுதியுள்ளவராகவும் இருக்கிறார்.

கன்மலையிலே நமக்கு அடைக்கலமுண்டு. யாரெல்லாம் கர்த்தரிடத்தில் வருகிறார்களோ, அவர்கள் எல்லோருக்கும் கன்மலையாகிய கர்த்தர் அடைக்கலமாயிருக்கிறார். யாரெல்லாம் கர்த்தரை நம்புகிறார்களோ, யாரெல்லாம் கன்மலையாகிய கர்த்தரை தங்கள் நித்திய அஸ்திபாரமாக கொண்டிருக்கிறார்களோ அவர்கள் எல்லோருமே தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் அசைக்கப்படாமல் உறுதியாய் நிலைத்திருப்பார்கள்.

பரிசுத்த வேதாகமத்தில் "கன்மலை" என்னும் வார்த்தை அடையாளமாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. கன்மலை கர்த்தருக்கு அடையாளம்

(1) நிலைத்திருப்பவர், வலிமையானவர் (உபா 32:4; ஏசா 17:10)

(2) இரட்சிப்பின் கன்மலை (உபா 32:15; சங் 89:26; சங் 95:1)

(3) உன்னை ஜெநிப்பித்த கன்மலை (உபா 32:18)

(4) அவர்களை விற்றுப்போட்ட கன்மலை (உபா 32:30)

(5) இஸ்ரவேலின் கன்மலை (உபா 32:37; 2சாமு 23:3)

(6) தேவனைப்போல ஒரு கன்மலையும் இல்லை (1சாமு 2:2)

(7) கர்த்தர் என் கன்மலையாயிருக்கிறார் (2சாமு 22:2,47; சங் 18:2,46; சங் 28:1; சங் 32:1; சங் 42:9; சங் 62:2,6-7; சங் 71:3)

(8) அவரைப்போல ஒருவருமில்லை. (2சாமு 22:32)

(9) என் அடைக்கலமாகிய கன்மலை (சங் 94:22)

(10) பெருங்கன்மலை (ஏசா 32:2)

(1) தவறுதற்கான கன்மலை (ஏசா 8:14; ரோமர் 9:33; 1பேதுரு 2:8)

(2) ஆவிக்குரிய கன்மலை (2கொரி 10:4)

3. பாறை - கிறிஸ்துவிற்கு அடையாளம் (யாத் 17:6; எண் 20:8-11; 2கொரி 10:4)

4. எதற்கும் அடையாளமில்லாத பாறை (எண் 23:9; ஏசா 2:19-21; வெளி 6:15-16)

கர்த்தருடைய கிரியை உத்தமமானது என்று மோசே சொல்லுகிறார். கர்த்தர் உத்தமமானவர். உத்தமமானவரின் கிரியை உத்தமானதாகயிருக்கிறது. கர்த்தர் இந்தப் பிரபஞ்சத்தின் காரியங்களை சிருஷ்டித்து, "அவையெல்லாம் நல்லது" என்று கண்டார். கர்த்தருடைய கிரியைகளும், அவருடைய பராமரிப்புக்களும் உத்தமமானவை.

ஏற்ற காலம் வரும்போது, கர்த்தரைப்பற்றிய இரகசியங்கள் நமக்கு வெளிப்படுத்தப்படும். அப்போது தேவனுடைய கிரியைகளின் பரிபூரணங்களெல்லாம் நமக்கு வெளிப்படுத்தப்படும். அக்காலத்தில், கர்த்தர் இந்தப் பூமியில் நடப்பித்த அவருடைய எல்லா கிரியைகளையும் நாம் கண்டு, அவரை மகிமைப்படுத்துவோம்.

கர்த்தர் எந்தக் காரியத்தை செய்தாலும் அதை பரிபூரணமாகச் செய்து நிறைவேற்றுகிறார். அவர் எந்த ஒரு காரியத்தையும் அறைகுறையாக செய்கிறவரல்ல. கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது. கர்த்தர் ஒரு காரியத்தை செய்ய ஆரம்பித்த பின்பு, மனம்மாறி, அந்தக் காரியத்தை வேறுவிதமாக மாற்றி செய்கிறவருமல்ல. கர்த்தருடைய கிரியை உத்தமமானது.

"தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைக்கும் என்று அறிவேன்; அதினோடே ஒன்றும் கூட்டவுங்கூடாது, அதிலிருந்து ஒன்றும் குறைக்கவுங்கூடாது; மனுஷர் தமது சமுகத்தில் பயந்திருக்கும்படி தேவன் இப்படிச் செய்துவருகிறார்" (பிர 3:14).

கர்த்தர் ஏற்கெனவே வாக்குத்தத்தம்பண்ணியிருக்கிற காரியங்களை, இப்போது பரிபூரணமாக செய்து முடித்திருக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்காக செய்ய ஆரம்பித்த காரியங்களெல்லாம், இப்போது பூரணமாக நிறைவுபெற்றிருக்கிறது. கர்த்தருடைய வழிகள் எல்லாம் நியாயமானது என்று மோசே சொல்லுகிறார். கர்த்தருடைய வழிகளின் முடிவுகள் எல்லாமே நீதியாகயிருக்கும். கர்த்தர் சர்வஞானமுள்ளவர்.

கர்த்தர் ஒரு காரியத்தை செய்து முடிப்பதற்காக, அவர் எந்தெந்த உபாயங்களைத் தெரிந்தெடுக்கிறாரோ, அவையெல்லாமே நியாயமானதாகவும், நீதியானதாகவும் இருக்கும். கர்த்தருடைய வழிகள் எல்லாமே நியாயமானது. அவர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன் என்றும், அவர் நீதியும் செம்மையுமானவர் என்றும் மோசே கர்த்தரைப்பற்றிச் சொல்லுகிறார்.

கர்த்தர் சத்தியமுள்ள தேவனாகயிருப்பதினால், அவருடைய வார்த்தைகள் எல்லாமே சத்தியமாகயிருக்கிறது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் கர்த்தருடைய சத்தியமான வார்த்தைகளை நம்பி, நம்மை அவருடைய பாதத்தில் ஒப்புக்கொடுக்கலாம்.

கர்த்தர் தம்முடைய வார்த்தைகளிலும், தாம் சொன்ன எல்லா வாக்குத்தத்தங்களிலும் உண்மையுள்ளவர். பொய்சொல்லுவதற்கு கர்த்தர் ஒரு மனுஷனல்ல. அவர் பொய்யுரையாத தேவன். கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றாமல், நம்மை ஏமாற்றுகிற தேவனுமல்ல. அவர் நியாயக்கேடில்லாத தேவனாகயிருக்கிறார்.

தம்மை நம்புகிற யாரையும் கர்த்தரை ஏமாற்றமாட்டார். தம்முடைய நீதியை செய்யுமாறு தம்மிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிற யாருக்கும் கர்த்தர் அநீதியான காரியங்களை செய்யமாட்டார். கர்த்தர் நியாயக்கேடில்லாதவர். அவர் சத்தியமுள்ள தேவன். அவர் நீதியும் செம்மையுமானவர்.

விசுவாசிகளாகிய நாம் கர்த்தருடைய இரக்கத்திற்கும் கிருபைக்கும் நம்மை ஒப்புக்கொடுத்து ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் ஒருபோதும் நம்மீது தம்முடைய கோபத்தை வெளிப்படுத்தமாட்டார். நாம் கர்த்தருடைய இரக்கத்தை சார்ந்துகொள்ளும்போது, அவர் தம்முடைய இரக்கத்தை மாத்திரமே நமக்கு வெளிப்படுத்துவார்.

கர்த்தர் எப்போதுமே நீதியும் செம்மையுமானவராயிருக்கிறார். கர்த்தர் ஒருபோதும் தவறு செய்கிறவரல்ல. அவர் பாவிகளை தண்டிக்கும்போது, அவர்களை எந்த அளவுக்கு தண்டிக்கவேண்டுமோ, அந்த அளவுக்கு மாத்திரமே அவர்களை தண்டிப்பார். கர்த்தர் ஒருபோதும் அளவுக்கு அதிகமாக யாரையும் தண்டிக்கமாட்டார். கர்த்தருடைய வழிகள் எல்லாமே நியாயமானது. அவருடைய கிரியைகள் அனைத்தும் நீதியும் செம்மையுமானவை.

கர்த்தருக்காக உண்மையாய் ஊழியம் செய்கிறவர்கள் பாடுகளை அனுபவித்தாலும், அவர்கள் வேதனைகளையும் கஷ்டங்களையும் அனுபவித்தாலும், ஊழியக்காரர்கள் தங்கள் ஊழியங்களினிமித்தமாக உபத்திரவப்படுத்தப்பட்டாலும், கர்த்தர் அவர்களை கைவிடாமல், அவர்களுக்கு நன்மையான ஈவுகளைக் கொடுத்து, அவர்களை ஆசீர்வதிப்பார்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் நீதியும் செம்மையுமானவராகயிருக்கும்போது, கர்த்தருடைய இஸ்ரவேலரோ மாறுபாடும், தாறுமாறுமுள்ள சந்ததியாராயிருக்கிறார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரருடைய தீயசுபாவங்களைப்பற்றிச் சொல்லும்போது, "அவர்களோ தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள், அவர்கள் அவருடைய பிள்ளைகள் அல்ல; இதுவே அவர்கள் காரியம்; அவர்கள் மாறுபாடும் தாறுமாறுமுள்ள சந்ததியார்" (உபா 32:5) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள் என்று கர்த்தர் அறிவிக்கிறார். (உபா 4:25; உபா 31:29) அவர்கள் ஏற்கெனவே தங்களைக் கெடுத்துக் கொண்டவர்கள் (உபா 32:5; உபா 9:12; யாத் 32:7). நியாயாதிபதிகளின் காலங்களிலும், (நியா 2:19), ராஜாக்களின் காலங்களிலும், (2நாளா 27:2; ஏசா 1:4; எரே 6:28; எசே 16:47; எசே 28:17; ஓசி 9:9; சக 3:7). அவர்கள் தங்களைக் கெடுத்துக் கொண்டவர்கள்.

சிறையிருப்பின் காலத்திலும் (நெகே 1:7; மல் 2:8) இஸ்ரவேலரின் கேடுபாடு அதிகமாயிற்று. விசுவாசிகளும் தங்களுடைய ஆத்துமாக்களைக் கெடுத்துக் கொள்ள முடியும். ஆகையினால் எச்சரிப்போடு ஜீவிக்குமாறு புதிய ஏற்பாட்டுக் காலத்து விசுவாசிகளை அப்போஸ்தலர்கள் எச்சரிக்கிறார்கள் (2கொரி 7:2; 2கொரி 11:3; கலா 6:8; எபே 4:22; 2பேதுரு 1:4; 2பேதுரு 2:12,19-22; யூதா 1:10).

"அவர்கள் அவருடைய பிள்ளைகள் அல்ல; இதுவே அவர்கள் காரியம்" என்னும் வாக்கியம் மூலபாஷையில் "அவர்களிடத்தில் காணப்படும் குறி கர்த்தருடைய பிள்ளைகளின் குறியல்ல" என்று பொருள்படும் விதத்தில் உள்ளது. அவர்கள் விக்கிரகங்களின் அடையாளங்களைத் தங்களிடத்தில் பெற்றிருக்கிறார்கள் என்பது இதன் பொருள்.

இஸ்ரவேல் புத்திரர் மாறுபாடும் தாறுமாறுமுள்ள சந்ததியாராயிருக்கிறார்கள் (மத் 17:17; பிலி 2:15; 1தீமோ 6:5)

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய ஜனமாகயிருந்தாலும், அவர்கள் மாறுபாடும் தாறுமாறுமுள்ள சந்ததியாராயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய பிள்ளைகளல்ல என்று மோசே சொல்லுகிறார். கர்த்தரிடத்தில் காணப்படுகிற நல்ல சுபாவங்களில் ஒன்றுகூட இஸ்ரவேல் புத்திரரிடத்தில் காணப்படவில்லை.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு முன்பாக உண்மையுள்ளவர்களாகயில்லை. அவர்களுடைய ஜீவியம் பரிபூரண ஜீவனாயுமில்லை. அவர்களிடத்தில் மாறுபாடும் தாறுமாறும் காணப்படுகிறது. நம்மிடத்தில் பாவம் இல்லையென்று நாம் சொல்லுவோமென்றால், நம்மை நாமே நாம் வஞ்சிக்கிறவர்களாகயிருப்போம்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது, அவர்கள் தங்களுடைய அறியாமையினால் இந்தப் பாவங்களை செய்யவில்லை. அவர்களுடைய இருதயம் கர்த்தருக்கு விரோதமாக கடினப்பட்டிருக்கிறது. அவர்கள் துணிகரமாக பாவமான காரியங்களை செய்கிறார்கள். அவர்களுக்கு கர்த்தருடைய சத்திய வார்த்தைகளைப்பற்றி நன்றாய்த் தெரியும். அவர்களுக்கு நியாயப்பிரமாண வார்த்தைகளும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனாலும் இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு பிரியமானவர்களாக ஜீவிக்கவேண்டும் என்று நினைக்கவில்லை. தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டும் என்றும், கர்த்தரிடத்தில் மறுபடியுமாய்த் திரும்பி வரவேண்டும் என்றும் அவர்கள் ஒருபோதும் விரும்புவதில்லை.

கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யவேண்டும் என்னும் விருப்பமும், கர்த்தரை விட்டு விலகி அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போகவேண்டும் என்னும் ஆசையும் அவர்களுடைய மனதில் ஆழமாய்ப் பதிந்திருக்கிறது. அவர்களுடைய இருதயங்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யவேண்டும் என்று துணிகரமாயிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பிள்ளைகளாகயிருந்தாலும், அவர்கள் கர்த்தரிடத்தில் பக்தியுள்ள பிள்ளைகளாகவும், கர்த்தருக்கு முன்பாக நீதியும் செம்மையுமான பிள்ளைகளாகவும் இருக்காமல், அவர்கள் அநீதியும், மாறுபாடும் தாறுமாறுமுள்ள சந்ததியாராயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் விவேகமில்லாத மதிகெட்ட ஜனங்களாயிருக்கிறார்கள். சத்திய ஆவியானவர் அவர்களை ஆளுகை செய்யவில்லை. மாறுபாடுகளின் ஆவிகளும், தாறுமாறின் ஆவிகளும் அவர்களை ஆளுகை செய்கிறது.

கர்த்தர் ஒரு சில காரியங்களை தடைபண்ணும்போது, இஸ்ரவேல் புத்திரர் அந்தக் காரியங்களுக்கு விலகி ஜீவிக்கவேண்டும். அவர்கள் கர்த்தருடைய சத்திய ஆவியினால் ஆளுகை செய்யப்படுவார்களென்றால், அவர்கள் கர்த்தர் விலக்கியிருக்கிற காரியங்களுக்கு, தாங்களும் விலகியிருப்பார்கள்.

ஆனால் இஸ்ரவேல் புத்திரரையோ சத்திய ஆவியானவர் ஆளுகை செய்யவில்லை. அவர்களை மாறுபாட்டின் ஆவி ஆளுகை செய்கிறது. ஆகையினால் கர்த்தர் விலக்கியிருக்கிற காரியங்களுக்கு, அவர்கள் விலகியிருக்காமல், அதை பற்றிக்கொள்கிறார்கள். இது ஒரு ஆவிக்குரிய மாறுபாடு. இதனால் அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியம் தாறுமாறாகிறது.

மோசே இந்தப் பாட்டின் மூலமாக இஸ்ரவேல் புத்திரரை கடிந்துகொள்கிறார். கர்த்தர் அவர்களுக்கு ஏராளமான நன்மைகளை செய்திருந்தாலும், அவர்களோ கர்த்தருக்கு கீழ்ப்படியாதிருக்கிறார்கள். கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளை நினைத்து, அவர்கள் கர்த்தரை நன்றியுள்ள இருதயத்தோடு துதிக்கவேண்டும். ஆனால் அவர்களோ கர்த்தரைத் துதிக்காமல், அவருக்கு விரோதமாகக் கலகம்பண்ணி, தங்களுக்கு விரோதமாக கர்த்தருடைய கோபத்தை வருவித்துக்கொள்கிறார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரருடைய தீயசுபாவத்தைப்பற்றிச் சொல்லும்போது, "விவேகமில்லாத மதிகெட்ட ஜனங்களே, இப்படியா கர்த்தருக்கு பதிலளிக்கிறீர்கள்" *(உபா 32:6)* என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, அவரை மாத்திரமே சேவிக்கவேண்டும். அவர்கள் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கவேண்டும். அவர்கள் கர்த்தரை மாத்திரமே தங்களுடைய தேவனாக பற்றிக்கொள்ளவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்காக செய்த நன்மைகளைப்பற்றி மோசே அவர்களுக்கு சொல்லும்போது, "*உன்னை ஆட்கொண்ட பிதா அவரல்லவா? உன்னை உண்டாக்கி உன்னை நிலைப்படுத்தினவர் அவரல்லவா?*" *(உபா 32:6)* என்று சொல்லுகிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஏராளமான நன்மைகளை செய்திருப்பதினால், அவர்கள் கர்த்தரை மாத்திரமே சேவிக்கவேண்டும். இது அவர்கள்மேல் விழுந்த கடமை. கர்த்தரே இஸ்ரவேல் புத்திரரை ஒரு தேசமாக உண்டாக்கியிருக்கிறார். அவர்களை நிலைப்படுத்தியிருக்கிறார். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரோ தங்களை நிலைப்படுத்தின கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயில்லை.

கர்த்தர் பழைய ஏற்பாட்டுக்காலத்தில், இஸ்ரவேல் ஜனத்தாரை நிலைப்படுத்தியதுபோல, புதிய ஏற்பாட்டுக்காலத்தில், விசுவாசிகளாகிய நம்மை நிலைப்படுத்தியிருக்கிறார். தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்று, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றிருக்கிற, ஒவ்வொரு விசுவாசியும் கர்த்தருக்கு தங்களை ஒப்புவிக்கவேண்டும். நம்மை ஆட்கொள்கிற கர்த்தருக்கு நாம் கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், ஒவ்வொரு விசுவாசியும் வளர்ந்து பலப்படவேண்டும். நாம் ஆவியின் கனிகளை வெளிப்படுத்தவேண்டும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நம்மை மீட்டுக்கொண்டவர். அவரே நம்மை பரிசுத்தப்படுத்துகிறவர். கிறிஸ்துவானவரே நம்மை ஸ்திரப்படுத்தி, ஆளுகை செய்கிறவர்.

கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளை இஸ்ரவேல் ஜனத்தார் எக்காலத்திலும் மறந்துவிடக்கூடாது. ஆனால் அவர்களோ கர்த்தரை விட்டு விலகி, அந்நிய தெய்வங்களை சோரமார்க்கமாய்ப் பின்பற்றி, கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணுகிறார்கள். அவர்கள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் விவேகமில்லாதவர்களாயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தேவனாகிய கர்த்தரை மாத்திரமே சேவிக்கவேண்டும். அவர்கள் கர்த்தருடைய ஜனமாயிருப்பது, அவர்களுக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். ஆனால் அவர்களோ கர்த்தரை சேவியாமல், அந்நிய தெய்வங்களாகிய விக்கிரகங்களை சேவித்து, மதிகெட்ட ஜனங்களாயிருக்கிறார்கள்.

தேவஅன்பு
உபா 32:7-14

உபா 32:7. பூர்வநாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைக் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான்; உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள்.

உபா 32:8. உன்னதமானவர் ஜாதிகளுக்குச் சுதந்தரங்களைப் பங்கிட்டு, ஆதாமின் புத்திரரை வெவ்வேறாய்ப் பிரித்தகாலத்தில், இஸ்ரவேல் புத்திரருடைய தொகைக்குத்தக்கதாய், சர்வஜனங்களின் எல்லைகளைத் திட்டம்பண்ணினார்.

உபா 32:9. கர்த்தருடைய ஜனமே அவருடைய பங்கு; யாக்கோபு அவருடைய சுதந்தரவீதம்.

உபா 32:10. பாழான நிலத்திலும் ஊளையிடுதலுள்ள வெறுமையான அவாந்தரவெளியிலும் அவர் அவனைக் கண்டுபிடித்தார்; அவனை நடத்தினார், அவனை உணர்த்தினார், அவனைத் தமது கண்மணியைப் போலக் காத்தருளினார்.

உபா 32:11. கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின்மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின்மேல் சுமந்து கொண்டுபோகிறது போல,

உபா 32:12. கர்த்தர் ஒருவரே அவனை வழிநடத்தினார்; அந்நிய தேவன் அவரோடே இருந்ததில்லை;

உபா 32:13. பூமியிலுள்ள உயர்ந்தஸ்தானங்களின்மேல் அவனை ஏறிவரப்பண்ணினார்; வயலில் விளையும் பலனை அவனுக்குப் புசிக்கக் கொடுத்தார்; கன்மலையிலுள்ள தேனையும், கற்பாறையிலிருந்து வடியும் எண்ணெயையும் அவன் உண்ணும்படி செய்தார்.

உபா 32:14. பசுவின் வெண்ணெயையும், ஆட்டின் பாலையும், பாசானில் மேயும் ஆட்டுக்குட்டிகள் ஆட்டுக்கடாக்கள் வெள்ளாட்டுக்கடாக்கள் இவைகளுடைய கொழுப்பையும், கொழுமையான கோதுமையையும், இரத்தம்போன்ற சுயமான திராட்சரசத்தையும் சாப்பிட்டாய்.

மோசே இதுவரையிலும் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கர்த்தருடைய நாமமகிமையைப்பற்றியும், அவருடைய நல்ல குணாதிசயங்களைப்பற்றியும், அதே வேளையில் இஸ்ரவேல் புத்திரருடைய கலகக்குணத்தைப்பற்றியும், அவர்களுடைய மீறுதலையும், அவர்கள் கர்த்தரைவிட்டு விலகி அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போனதையும் சொன்னார்.

இந்த வசனப்பகுதியில் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு காண்பித்திருக்கிற கிருபைகளையும், இரக்கங்களையும் தெளிவுபடுத்துகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடத்திலிருந்து ஏராளமான நன்மைகளைப் பெற்றிருக்கிறார்கள். கர்த்தர் அவர்கள்மீது அன்பாயும், கரிசனையாயும் இருந்திருக்கிறார். மோசே இந்த வசனப்பகுதியில், கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு காண்பித்த நன்மைகளுக்கும், கரிசனைகளுக்கும் எடுத்துக்காட்டுக்களைச் சொல்லுகிறார்.

மோசே சொல்லுகிற எடுத்துக்காட்டுக்களில் சில பூர்வகாலங்களில் நடைபெற்றவை. ஆகையினால் மோசே இஸ்ரவேல் ஜனத்தாரை நோக்கி, "பூர்வநாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைக் கவனித்துப்பார்" (உபா 32:7) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. பூர்வநாட்கள் முதலாகவே கர்த்தர் அவர்கள்மீது அன்பாயும் கரிசனையாயும் இருந்திருக்கிறார். அவர்கள் தலைமுறை தலைமுறையாக சென்ற வருஷங்களை கவனித்துப் பார்த்தால், கர்த்தர் தங்களுடைய முற்பிதாக்களுக்கு செய்த நன்மைகளை புரிந்துகொள்ள முடியும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்காக செய்த நன்மைகளை ஆராய்ந்து பார்க்கவேண்டுமென்றால், அவர்களுடைய பூர்வகாலத்து சரித்திரங்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும். பழைய ஏற்பாட்டுக்காலத்து சபைக்கும், புதிய ஏற்பாட்டுக்காலத்து சபைக்கும் கர்த்தர் செய்திருக்கிற நன்மைகளை ஆராய்ந்து பார்க்கவேண்டுமென்றால், சபையின் பூர்வகாலத்து சரித்திரங்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மீது பூர்வகாலம் முதலே அன்பாயும் கரிசனையாயும் இருந்ததுபோல, அவர் இக்காலத்திலும் இஸ்ரவேல் ஜனத்தார்மீது கரிசனையோடிருக்கிறார். கர்த்தருடைய அன்பை உறுதிபண்ணுவதற்கு, மோசே தற்காலத்து சம்பவங்களையும் எடுத்துக்காட்டுக்களாகச் சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் சபையாருக்கு, கர்த்தருடைய மகிமையையும், மகத்துவத்தையும், அவர் அவர்களுக்கு செய்த நன்மையான காரியங்களையும் சாட்சியாக அறிவிக்கும்போது, கர்த்தருடைய நன்மைகளை தங்கள் கண்களால் கண்டவர்களும் இக்காலத்தில் உயிரோடிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரருடைய பிதாக்களிலும், மூப்பர்களிலும் சிலர் கர்த்தருடைய நன்மைகளைப் பெற்றுக்கொண்டவர்கள். மோசே இந்தப் பாடலின் வரிகளை இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லும்போது, அந்த மூப்பர்களில் சிலரும் இஸ்ரவேல் சபையார் மத்தியிலே கூடயிருக்கிறார்கள்.

ஆகையினால் மோசே இஸ்ரவேல் சபையாரை நோக்கி, "உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான்; உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள்" (உபா 32:7) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தார்மீது தம்முடைய கிருபைகளையும், இரக்கங்களையும், கரிசனைகளையும் காண்பித்திருக்கிறார் என்பதை மோசே மூன்று சம்பவங்கள் மூலமாக தெளிவுபடுத்துகிறார். அவையாவன :

1. கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கானான் தேசத்தை சுதந்தர தேசமாக ஏற்கெனவே முன்குறித்து வைத்திருக்கிறார்.

2. கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை ஒரு ஜாதியாகவும், ஒரு தேசமாகவும் கூட்டிச்சேர்த்திருக்கிறார். அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசித்து, அந்த தேசத்தை சுதந்தரிப்பதற்கு கர்த்தரே அவர்களைப் பெலப்படுத்தியிருக்கிறார்.

3. கர்த்தர் நல்ல தேசமாகிய கானான் தேசத்திலே இஸ்ரவேல் ஜனத்தாரை குடியேறப்பண்ணியிருக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தை சுதந்தர தேசமாக கொடுக்கவேண்டுமென்று திட்டம் பண்ணியிருக்கிறார். இந்த திட்டம் தேவனுடைய தெய்வீக ஆலோசனைகளில் உருவான திட்டமாகும்.

மோசே கர்த்தருடைய திட்டத்தைப்பற்றிச் சொல்லும்போது, "உன்னதமானவர் ஜாதிகளுக்குச் சுதந்தரங்களைப் பங்கிட்டு, ஆதாமின் புத்திரரை வெவ்வேறாய்ப் பிரித்தகாலத்தில், இஸ்ரவேல் புத்திரருடைய தொகைக்குத்தக்கதாய், சர்வஜனங்களின் எல்லைகளைத் திட்டம்பண்ணினார்" (உபா 32:8) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரருக்காகத் தேவன் வாக்குத்தத்த தேசத்தைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டார். அவர்கள் நடுவில் கர்த்தர் வந்து வாசம்பண்ணுவதற்காக அவர் அந்தத் தேசத்தைத் தெரிந்து கொண்டார். (ஏசா 2:1-4; எரே 3:17; எசே 43:7; எசே 48:1-35; யோவே 3:16-20; சக 14).

வாக்குத்தத்த தேசம் இஸ்ரவேல் புத்திரரின் கோத்திரங்களின் எண்ணிக்கையின்படி 13 பிரிவுகளாகப் பிரிக்கப்படும். (உபா 32:8-9; எசே 48). நோவாவின் மூன்று குமாரர்களுக்கிடையே பூமி முதன் முறையாகப் பகுக்கப்பட்டது. இது ஆபிரகாமிற்கு 200 அல்லது 300 வருஷங்களுக்கு முன்பு நடைபெற்ற சம்பவம். (ஆதி 10:32).

கானான் தேசமானது, விசுவாசிகள் எல்லோரும் சுதந்தரிக்கப்போகிற பரமகானானுக்கு அடையாளமாகயிருக்கிறது. கர்த்தர் பூர்வகாலத்திலேயே, தம்முடைய தெய்வீக ஆலோசனைகளின் பிரகாரமாக, இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கானான் தேசத்தை சுதந்தர தேசமாக கொடுக்கவேண்டுமென்று திட்டம்பண்ணி, அந்த தேசத்தையும் அவர்களையும் தம்முடைய திட்டத்தின் பிரகாரம் ஆயத்தம்பண்ணினார்.

கர்த்தருடைய திட்டம் திடீரென்று தோன்றின திட்டமல்ல. அது பூர்வகாலத்தில், அவருடைய தெய்வீக ஆலோசனைகளில் உண்டான திட்டமாகும். அக்காலத்தில் உன்னதமான தேவன் ஜாதிகளுக்கு சுதந்தர தேசங்களை பங்கிட்டார். அக்காலத்திலேயே இஸ்ரவேல் புத்திரருக்கு சுதந்தரமாகக் கொடுக்க வேண்டிய தேசத்தைப்பற்றிய திட்டம், கர்த்தருடைய தெய்வீக ஆலோசனைகளில் இருந்தது.

கர்த்தர் ஆதாமின் புத்திரரை வெவ்வேறாய்ப் பிரித்த காலத்திலேயே, இஸ்ரவேல் புத்திரருடைய தொகைக்குத்தக்கதாய், சர்வஜனங்களின் எல்லைகளை திட்டம்பண்ணினார். இஸ்ரவேல் ஜனத்தார் இந்தப் பூமியில் பிறப்பதற்கு முன்பாகவே, அவர்களைப்பற்றிய திட்டம் கர்த்தருடைய தெய்வீக ஆலோசனைகளில் இருந்தது.

கர்த்தர் ஆதாமின் புத்திரரை வெவ்வேறாய்ப் பிரித்த காலத்திலேயே அவர் யாக்கோபின் புத்திரரையும் வெவ்வேறாகப் பிரித்து, அவர்களுடைய தொகைக்குத்தக்கதாய், கானான் தேசத்தின் எல்லைகளை திட்டம்பண்ணினார்.

கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மீது மிகுந்த அன்பாயும், கரிசனையாயும் இருப்பதினால், அவர்களுக்கு சுதந்தர தேசத்தைக் கொடுக்கவேண்டுமென்று, கர்த்தர் தம்முடைய தெய்வீக ஆலோசனைகளில் திட்டம் பண்ணினார்.

"கர்த்தருடைய ஜனமே அவருடைய பங்கு; யாக்கோபு அவருடைய சுதந்தரவீதம்" (உபா 32:9) என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். கர்த்தர் கானான் தேசத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு சுதந்தர தேசமாகக் கொடுப்பதற்கு இதுவே காரணம். கர்த்தருடைய ஜனமே அவருடைய பங்காக இருக்கிறார்கள். யாக்கோபு அவருடைய சுதந்தர வீதமாயிருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரரின் சுபாவங்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. அவர்கள் தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள்.
2. அவர்கள் விக்கிரகாராதனையின் அடையாளங்களைப் பெற்றிருக்கிறார்கள்.
3. அவர்கள் மாறுபாடும் தாறுமாறுமுள்ள சந்ததியார்.
4. அவர்கள் விவேகமில்லாத மதிகெட்ட ஜனங்கள் (உபா 32:6).
5. அவர்கள் தேவனால் மறக்கப்பட்டவர்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை ஒரு ஜாதியாக உருவாக்குகிறார். அவர்கள் கானான் தேசத்தைச் சுதந்தரிப்பதற்கு கர்த்தர் அவர்களைத் தகுதிப்படுத்துகிறார். காலம் நிறைவேறும்போது சுதந்தரவாளி தன்னுடைய சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்வார். அதுபோலவே பிதாவாகிய தேவன், தம்முடைய தெய்வீக ஆதீனத்தில் தீர்மானம்பண்ணின பிரகாரம், காலம் நிறைவேறும்போது, இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கானான் தேசத்தைக் கொடுப்பதற்கு, கர்த்தர் அவர்களை ஒரு தேசமாக உருவாக்குகிறார்.

மோசேயின் பாடலில் கானான் தேசமானது, பரமகானானுக்கு அடையாளமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய ஆதீனத்திலே, அவருடைய அநாதி தீர்மானத்தின் பிரகாரமாக, தேவனுடைய ஆவிக்குரிய இஸ்ரவேலுக்கு, பரமகானானை சுதந்தரமாகக் கொடுக்க வேண்டுமென்பது, தேவனுடைய தெய்வீக திட்டமாயிருக்கிறது.

இதன் மூலமாக, ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய விசுவாசிகள், கர்த்தருக்கு சித்தமான காலம் நிறைவேறும்போது, கானானுக்குள் பிரவேசிப்பதற்கும், பரமகானானிலே கர்த்தரை தரிசிப்பதற்கும் அவர்கள் ஆயத்தம்பண்ணப்படுகிறார்கள்.

"ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்திரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும், இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்" (கொலோ 1:12,13).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை சந்தித்தபோது அவர்கள் ஒரு தேசமாகயில்லை. அவர்கள் அவாந்தர வெளியிலே சுற்றி அலைந்தார்கள். அவர்களுக்கென்று சொந்தமான தேசம் எதுவுமில்லை. ஆனாலும் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை தம்முடைய தெய்வீக திட்டத்தின் பிரகாரமாக தெரிந்தெடுத்து, அவர்களை சந்தித்து, தமக்கு சித்தமான பிரகாரமாக அவர்களை உருவாக்கினார்.

இஸ்ரவேல் ஜனத்தார் சுதந்தரதேசமாகிய கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு தகுதியுள்ளவர்களாகயிருக்கவேண்டும். ஆனால் அவர்களிடத்தில் கர்த்தர் எதிர்பார்க்கிற எந்த தகுதியும் காணப்படவில்லை. ஆனால் கர்த்தரோ வாக்குத்தத்த தேசமாகிய கானான் தேசத்தை இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சுதந்தரமாக தேசமாகக் கொடுக்கவேண்டுமென்று திட்டம்பண்ணியிருக்கிறார். கர்த்தர் தம்முடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக, இஸ்ரவேல் ஜனத்தாரை உருவாக்கி, அவர்களை கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கப்பண்ணுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை சந்தித்தபோது அவர்கள் பெரிய பட்டணத்திலோ, அல்லது செழிப்பான தேசத்திலோ இல்லை. கர்த்தர் அவர்களை அவாந்தர வெளியிலே கண்டுபிடித்தார். மோசே இதுபற்றிச் சொல்லும்போது, "பாழான நிலத்திலும் ஊளையிடுதலுள்ள வெறுமையான அவாந்தரவெளியிலும் அவர் அவனைக் கண்டுபிடித்தார்; அவனை நடத்தினார், அவனை உணர்த்தினார், அவனைத் தமது கண்மணியைப் போலக் காத்தருளினார்" (உபா 32:10) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை வனாந்தரப்பாதையின் வழியாக நடத்தி, கானான் தேசத்திற்கு அழைத்து வருகிறார். அந்த வனாந்தரத்திலே கர்த்தர் அவர்களை தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக உருவாக்குகிறார். அவர்களுக்கு தம்முடைய கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயங்களையும், பிரமாணங்களையும், அந்த அவாந்தரவெளியிலேயே போதிக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை வனாந்தர வெளியிலே உருவாக்குகிறார். ஆகையினால் இது "வனாந்தரத்திலே சபை" என்று அழைக்கப்படுகிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு வனாந்தர வெளியை, சுதந்தரதேசமாகக் கொடுக்க திட்டமிடவில்லை.

"சீனாய்மலையில் தன்னுடனே பேசின தூதனோடும் நம்முடைய பிதாக்களோடுங்கூட வனாந்தரத்திலே சபைக்குள்ளிருந்தவனும், நமக்குக் கொடுக்கும்படி ஜீவவாக்கியங்களைப் பெற்றவனும் இவனே" *(அப் 7:38).*

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை வனாந்தரத்திற்கு அழைத்து வருவதற்கு முன்பாக, அவர்கள் எகிப்து தேசத்திலே இருந்தார்கள். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு எகிப்து தேசம் ஒரு அவாந்தர வெளியைப்போல இருந்தது. அந்த தேசம் ஊளையிடுதலுள்ள வெறுமையான தேசமாகயிருந்தது. எகிப்து தேசத்தின் நிலம் பாழான நிலமாகயிருந்தது. அந்த தேசத்திலே இஸ்ரவேல் ஜனத்தார் அடிமைகளாகயிருந்தார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தின் அடிமைகளாகயிருந்த நாட்களிலே அவர்களுக்கு நம்பிக்கை எதுவுமில்லை. அவர்கள் எகிப்து தேசத்திலே தேவனுடைய தெய்வீக காரியங்களையும், தங்களைக் குறித்த தேவனுடைய தெய்வீக திட்டங்களையும் அறியாதவர்களாயிருந்தார்கள். தங்களைக் குறித்து கர்த்தர் வைத்திருக்கிற திட்டமும் அவர்களுக்கு தெரியவில்லை.

ஆனாலும் கர்த்தருடைய அநாதி தீர்மானமும், தெய்வீக கிருபைகளும் இஸ்ரவேல் புத்திரருக்கு கிடைத்தது. கர்த்தர் அவர்களை எகிப்து தேசமாகிய பாழான நிலத்திலும், ஊளையிடுதலுள்ள வெறுமையான அவாந்தர வெளியிலும் கண்டுபிடித்தார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அவாந்தர வெளியிலே கண்டுபிடித்து, அவர்களை நடத்தினார், அவர்களை உணர்த்தினார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை வனாந்தரத்திற்கு அழைத்து வந்து, அவர்களை அங்கே இருந்து உடனடியாக, கானான் தேசத்திற்குள்ளே பிரவேசிக்கச் செய்து விடவில்லை. அவர்கள் வனாந்தரப் பாதையிலே ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் சுற்றி அலையவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாகயிருந்தது. அவர்கள் வனாந்தரத்திலே சுற்றி அலைந்த காலத்தில், கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய கற்பனைகளையும், நியாயங்களையும், பிரமாணங்களையும் போதித்தார். கர்த்தர் அவர்களை வனாந்தரத்திலே நடத்தி, அங்கே அவர்களை உணர்த்தினார்.

கர்த்தர் வனாந்தரத்திலே, இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய சத்தியங்களைப் போதித்து, அவர்களுடைய விசுவாசத்தையும், பொறுமையையும், அவர்கள் கர்த்தரை சார்ந்திருக்கிறார்களா என்பதையும் சோதித்துப் பார்த்தார். இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்திலே பல கஷ்டமான அனுபவங்கள் மூலமாக கடந்து வந்தார்கள். கர்த்தரோ அவர்களுக்கு ஏற்பட்ட ஒவ்வொரு அனுபவத்திலும், தம்முடைய உபதேசங்களை அவர்களுக்குப் போதித்தார்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே சுற்றி அலைந்த காலம், அவர்களுக்கு கல்வி கற்கும் பாடசாலையைப்போல இருந்தது. அவர்கள் வனாந்தரத்தில் ஒவ்வொரு பகுதியாக கடந்து வரும்போது, கர்த்தர் தம்முடைய போதனைகளை அவர்களுக்கு தொடர்ந்து போதித்து வந்தார்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தை விட்டு வெளியேறிபோது, அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு தகுதியற்றவர்களாயிருந்தார்கள். அவர்களிடத்தில் ஒழுக்கமும் கட்டுப்பாடும் இல்லை. அவர்களிடத்தில் விசுவாசமுமில்லை. ஆகையினால் கர்த்தர் அவர்களை வனாந்தரத்திலே நடத்தி, தம்மைப்பற்றியும், தம்முடைய சத்தியத்தைப்பற்றியும் அவர்களுக்கு உணர்த்துவது அவசியமாயிற்று.

கர்த்தர் தம்முடைய தெய்வீக கிருபையினால், கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு எந்தவிதமான தகுதியுமில்லாத இஸ்ரவேல் புத்திரரை, வனாந்தரத்திலே தகுதிப்படுத்தி, கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு போனார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை, "தமது கண்மணியைப்போல காத்தருளினார்" (உபா 32:10).

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரப்பாதையின் வழியாகப் பிரயாணம்பண்ணியபோது, அவர்களுக்கு குடியிருக்க வீடுகள் இல்லை. அவர்கள் வாசம்பண்ணுவதற்கு பட்டணங்கள் இல்லை. வனாந்தரம் அவர்களுடைய சுதந்தர தேசமல்ல. அவர்கள் வானத்தின் கீழே தங்கியிருந்தார்கள். வானத்திலிருந்து பெய்த மன்னாவை போஜனமாகப் புசித்தார்கள். வனாந்தரத்தின் காற்றை சுவாசித்தார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலிருந்து வெளியேறி வனாந்தரத்திற்கு வந்தபோது, அவர்கள் வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணுவதற்கோ அல்லது வனாந்தரத்தில் தங்கியிருப்பதற்கோ அவர்கள் தகுதியானவர்களுமல்ல, அதற்கு பழக்கமானவர்களுமல்ல. இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரப்பாதையைக் கடந்தபோது, தங்களுக்கு பழக்கமே இல்லாத வனாந்தரத்தின் வேதனைகளை அனுபவித்தார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது கர்த்தர் அவர்களோடு கூடயிருந்தார். அக்கினி ஸ்தம்பமும், மேகஸ்தம்பமும் இஸ்ரவேல் ஜனத்தாரை வழிநடத்திற்று. கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமான அக்கினிஸ்தம்பமும் மேகஸ்தம்பமும் அவர்களை வனாந்தரத்திலே பாதுகாத்துக்கொண்டது. இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே பிரயாணம்பண்ணின ஒவ்வொரு நாளிலும், கர்த்தர் அவர்களை தமது கண்மணியைப்போல காத்தருளினார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எவ்வாறு காத்து வழிநடத்தினார் என்பதற்கு மோசே கழுகை உவமையாகச் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

"கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின்மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின்மேல் சுமந்துகொண்டுபோகிறது போல, கர்த்தர் ஒருவரே அவனை வழிநடத்தினார்; அந்நிய தேவன் அவரோடே இருந்ததில்லை" (உபா 32:11,12) என்று மோசே சொல்லுகிறார்.

இந்த உவமை யாத் 19:4-ஆவது வசனத்தில் இவ்வாறு சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது."நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக் கொண்டதையும், நீங்கள் கண்டிருக்கிறீர்கள்" (யாத் 19:4) அந்த உவமை இந்த வசனத்தில் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

கழுகு தன் குஞ்சுகள்மேல் மிகுந்த பாசத்தோடும், கரிசனையோடும் இருக்கும். தாய் கழுகு தன்னுடைய குஞ்சுகளை பத்திரமாகப் பாதுகாத்துக்கொள்ளும். அவற்றிற்கு போஜனம் கொடுக்கும். வானத்திலே தன் செட்டைகளை விரித்து எவ்வாறு பறக்கவேண்டும் என்பதையும், தாய் கழுகு தன் குஞ்சுகளுக்கு கற்றுக்கொடுக்கும்.

தன் குஞ்சுகளுக்கு பறக்க கற்றுக்கொடுக்கவேண்டும் என்பதற்காகவே, தாய் கழுகு தன் கூட்டைக்கலைக்கும். கழுகு தன் கூட்டைக் கலைக்கவில்லையென்றால், அதன் குஞ்சுகள் அந்தக் கூட்டிலே, நீண்ட நாட்களுக்கு சோம்பேறியாக படுத்துக் கிடக்கும். தன்னுடைய குஞ்சுகள் பறக்கவேண்டும் என்பது தாய் கழுகின் விருப்பம். இதற்காக கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின்மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளை தன் செட்டைகளின்மேல்சுமந்துகொண்டு போகிறது.

கழுகின் குஞ்சுகளும் தங்களுடைய செட்டைகளை விரித்து பறக்க கற்றுக் கொள்ளவேண்டும். எவ்வாறு பறக்கவேண்டும் என்பதை தாய் கழுகு தன் குஞ்சுகளுக்கு முன்பாக பறந்து காண்பிக்கிறது. தாய் கழுகு எப்படித்தான் கற்றுக்கொடுத்தாலும், அதன் குஞ்சுகள் தான் பறக்க கற்றுக்கொள்ளவேண்டும். தன்னுடைய குஞ்சுகளுக்காக தாய் கழுகு நிரந்தரமாக பறக்க முடியாது. குஞ்சுகள் இரை தேடவேண்டுமென்றால், அவை பறக்க கற்றுக்கொள்ளவேண்டும்.

மோசே கழுகையும் அதன் குஞ்சுகளையும் பற்றி சொல்லுகிற உவமை, பெற்றோருக்கும், அவர்களுடைய பிள்ளைகளுக்கும் சொல்லப்படும் உவமையாக இருக்கிறது. பெற்றோர் தங்கள் பிள்ளைகள்மீது அன்பாயும் பாசமாயும் இருக்கவேண்டும். ஆனாலும் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு அளவுக்கு அதிகமாக செல்லம் கொடுத்து, அவர்களை பாழாக்கிவிடக்கூடாது. பிள்ளைகள் ஒரு தொழிலைக் கற்றுக்கொள்வதற்கு, பெற்றோர் அவர்களுக்கு அந்தத் தொழிலை கற்றுக்கொடுக்கவேண்டும்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு அதிகமாய் செல்லம் கொடுத்து வளர்த்தால், அவர்கள் தங்கள் பெற்றோரின் அன்புக்கு அடிமைகளாகிவிடுவார்கள். தங்கள் பெற்றோரைவிட்டு பிரிய அவர்களுக்கு மனதிருக்காது. இப்படிப்பட்ட பிள்ளைகள் சொந்தமாக எந்த தொழிலையும் செய்யமாட்டார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் ஒரு காலத்தில் எகிப்து தேசத்திலே அடிமைகளாகயிருந்தவர்கள். அவர்கள் இப்போது வனாந்தரத்திலிருக்கிறார்கள். இப்போது அவர்கள் அடிமைகளல்ல. அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள். இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சுதந்தரத்தை அனுபவிக்கவேண்டும். கழுகின் குஞ்சுகள் பறக்க கற்றுக்கொள்வதுபோல, இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்க கற்றுக்கொள்ளவேண்டும். இதற்காகவே கர்த்தர் மோசேயின் மூலமாக இஸ்ரவேல் ஜனத்தாருடைய விடுதலையைப்பற்றியும், சுயாதீனத்தைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வெளியேற்றி, வனாந்தரத்திற்கு அழைத்து வந்திருக்கிறார். கர்த்தர் அவர்களை இந்த வனாந்தரப்பாதையிலே பல வருஷங்களாக வழிநடத்தி வந்திருக்கிறார். கர்த்தர் தம்முடைய பிரமாணங்களையும், நியமங்களையும், கற்பனைகளையும் இஸ்ரவேல் புத்திரருக்கு போதித்திருக்கிறார்.

கர்த்தர் ஒருவரே இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்தினார். அவர்களை வழிநடத்துவதற்கு கர்த்தருக்கு யாருடைய துணையும் தேவைப்படவில்லை. கர்த்தருக்கு உதவி செய்வதற்காக அந்நிய தேவன் எதுவும் அவரோடு கூடயிருக்கவுமில்லை. கர்த்தருடைய பலத்த புயமே இஸ்ரவேல் புத்திரரை எகிப்து அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்தது. கர்த்தருடைய விரலே இஸ்ரவேல் ஜனத்தாரை வனாந்தரப்பாதையின் வழியாக வழிநடத்துகிறது.

இஸ்ரவேல் ஜனத்தாரை நல்ல தேசத்திலே குடியேறப்பண்ணவேண்டும் என்பது கர்த்தருடைய திட்டம். கர்த்தருடைய தெய்வீக திட்டத்தின் ஒரு பகுதி ஏற்கெனவே நிறைவேறியிருக்கிறது. இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரில், இரண்டரைக் கோத்திரத்தார், யோர்தான் நதிக்கு இப்புறத்திலே, ஏற்கெனவே தங்களுடைய சுதந்தரப் பெற்றுக்கொண்டார்கள். அவர்கள் அந்த நல்ல தேசத்திலே குடியேறியிருக்கிறார்கள். மீதமுள்ள இஸ்ரவேல் கோத்திரத்தாருக்கு கானான் தேசம் சீக்கிரத்திலே சுதந்தரமாகக் கொடுக்கப்படும் என்பதற்கு, இரண்டரைக் கோத்திரத்தாருக்கு கொடுக்கப்பட்ட சுதந்தரம் அடையாளமாகவும், அச்சாரமாகவும் இருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை காத்தருளின விதம் பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. கர்த்தர் அவனை பாழான நிலத்திலும், ஊளையிடுதலுள்ள வெறுமையான அவாந்தரவெளியிலும் கண்டுபிடித்தார். (உபா 32:10).

2. அவனை நடத்தினார் (உபா 32:10-12).

3. அவனை உணர்த்தினார் (உபா 32:10).

4. அவனைத் தமது கண்மணியைப் போலக் காத்தருளினார்.

5. விக்கிரகாராதனையிலிருந்து அவனைப் பாதுகாத்தார். (உபா 32:12).

6. தேசங்கள் மத்தியில் அவனை உயர்த்தினார். (உபா 32:13).

7. அவனுக்குச் செழிப்பான ஆசீர்வாதங்களைக் கொடுத்தார். (உபா 32:13-14).

கர்த்தர் இஸ்ரவேலை வழிநடத்துவது, கழுகு தன் குஞ்சுகளை காப்பதோடு ஒப்பிட்டு சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின்மேல் அசைவாடும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு எகிப்து தேசத்தில் பாடுகளை அனுமதித்தார். அந்த தேசத்திலிருந்து அவர்கள் புறப்பட்டுப் போய், தனியாக ஒரு தேசமாக வேண்டுமென்னும் ஆவல் அவர்கள் அனுபவித்த பாடுகளின் நிமித்தம் இஸ்ரவேல் புத்திரருக்கு உண்டாயிற்று. (உபா 32:11-12).

2. கழுகு தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்துச் செல்லும். கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தாரை வளப்படுத்தி, அவர்களை வலிமை பெறச்செய்தார். (உபா 32:11-12).

3. கழுகு அவைகளைத் தன் செட்டைகளின்மேல் சுமந்துகொண்டு போகும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து கானான் தேசத்திற்கு வழிநடத்திச் சென்றார். (உபா 32:11-12; யாத் 19:4).

இஸ்ரவேல் புத்திரரைக் கர்த்தர் மட்டுமே தனியாக இருந்து எகிப்து தேசத்திலிருந்து அவர்களை விடுவித்து வழிநடத்திச் சென்றார்.

கானான் தேசத்தில் ஏராளமான நன்மைகள் இருக்கிறது. அது பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். கானான் தேசத்தின் கன்மலையிலிருந்து தேனும், கற்பாறையிலிருந்து எண்ணெயும் வடியும்.

மோசே கானான் தேசத்தின் செழிப்பைப்பற்றிச் சொல்லும்போது, "பூமியிலுள்ள உயர்ந்தஸ்தானங்களின்மேல் அவனை ஏறிவரப்பண்ணினார்; வயலில் விளையும் பலனை அவனுக்குப் புசிக்கக் கொடுத்தார்; கன்மலையிலுள்ள தேனையும், கற்பாறையிலிருந்து வடியும் எண்ணெயையும் அவன் உண்ணும்படி செய்தார்" (உபா 32:13) என்றும்,

"பசுவின் வெண்ணெயையும், ஆட்டின் பாலையும், பாசானில் மேயும் ஆட்டுக்குட்டிகள் ஆட்டுக்கடாக்கள் வெள்ளாட்டுக்கடாக்கள் இவைகளுடைய கொழுப்பையும், கொழுமையான கோதுமையையும், இரத்தம்போன்ற சுயமான திராட்சரசத்தையும் சாப்பிட்டாய்" (உபா 32:14) என்றும் சொல்லுகிறார்.

கானான் தேசத்தின் நன்மையான காரியங்களும், அதன் செழிப்பும், கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களுக்கு அடையாளமாயிருக்கிறது. கர்த்தருடைய வார்த்தையும் ஆசீர்வாதங்களும், பரிசுத்த ஆவியானவருடைய ஆறுதல்களும் இயேசுகிறிஸ்துவினுடைய ராஜ்யத்திலே நமக்கு ஏராளமாக வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது.

கானான் தேசத்தில் பசுவின் வெண்ணெயையும் ஆட்டின் பாலும் திரளாயிருப்பதுபோல, இயேசுகிறிஸ்துவினுடைய ராஜ்யத்திலே, அவருடைய பிள்ளைகளுக்கு பாலும் வெண்ணெயும் திரளாயிருக்கிறது. கர்த்தருடைய வார்த்தையே பாலாகவும், அதே வார்த்தையே வளர்ந்த விசுவாசிகளுக்கு பலமான ஆகாரமாகவும் இருக்கிறது. கானான் தேசத்தில் திராட்சரமும் உண்டு. கிறிஸ்துவின் ராஜ்யத்தில் கர்த்தருடைய வார்த்தையே, விசுவாசிகளின் இருதயத்தை மகிழப்பண்ணுகிற திராட்சரசமாக இருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு அருளிச் செய்திருக்கும் ஆசீர்வாதங்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. கன்மலையிலுள்ள தேன்.
2. கற்பாறையிலிருந்து வடியும் எண்ணெய்.
3. பசுவின் வெண்ணெய் (உபா 32:14)
4. ஆடுகளின் பால்
5. ஆட்டுக்குட்டிகளின் கொழுப்பு
6. பாசானில் மேயும் ஆட்டுக்கடாக்கள்
7. வெள்ளாட்டுக்கடாக்கள்
8. கொழுமையான கோதுமை
9. இரத்தம்போன்ற சுயமான திராட்சரசம்.

இஸ்ரவேலின் துரோகம் உபா 32:15-18

உபா 32:15. யெஷூரன் கொழுத்துப்போய் உதைத்தான்; கொழுத்து, ஸ்தூலித்து, நிணம் துன்னினபோது, தன்னை உண்டாக்கின தேவனை விட்டு, தன் ரட்சிப்பின் கன்மலையை அசட்டைபண்ணினான்.

உபா 32:16. அந்நிய தேவர்களால் அவருக்கு எரிச்சலை மூட்டினார்கள்; அருவருப்பானவைகளினால் அவரைக் கோபப்படுத்தினார்கள்.

உபா 32:17. அவர்கள் தேவனுக்குப் பலியிடவில்லை; தாங்கள் அறியாதவைகளும், தங்கள் பிதாக்கள் பயப்படாதவைகளும், நூதனமாய்த் தோன்றிய புது தெய்வங்களுமாகிய பேய்களுக்கே பலியிட்டார்கள்.

உபா 32:18. உன்னை ஜெநிப்பித்த கன்மலையை நீ நினையாமற்போனாய்; உன்னைப் பெற்ற தேவனை மறந்தாய்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் தேவனாகிய கர்த்தரை விட்டு விலகி, அந்நிய தெய்வங்களை சோரமார்க்கமாய்ப் பின்பற்றிப்போகிறார்கள். அவர்கள் ஏற்கெனவே கர்த்தரைவிட்டு விலகிப்போனவர்கள். இனிமேல் அவர்கள் மறுபடியுமாய் கர்த்தரை விட்டு விலகிப்போகப்போகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைவிட்டு விலகி, அந்நிய தெய்வங்களை பின்பற்றிப்போவதற்கு, மோசே இந்த வசனப்பகுதியில் இரண்டு காரணங்களை சொல்லுகிறார். அவையாவன : 1. பாதுகாப்பு, மாம்சத்தின் இச்சை, பெருமை, செழிப்பு. 2. விக்கிரகாராதனை.

மோசே இஸ்ரவேல் ஜனத்தாருடைய பின்மாற்றத்தைப்பற்றிச் சொல்லும்போது, "யெஷூரன் கொழுத்துப்போய் உதைத்தான்; கொழுத்து, ஸ்தூலித்து, நிணம் துன்னினபோது, தன்னை உண்டாக்கின தேவனை விட்டு, தன் ரட்சிப்பின் கன்மலையை அசட்டைபண்ணினான்" (உபா 32:15) என்று சொல்லுகிறார்.

"யெஷூரன்" என்பது இஸ்ரவேலின் அடையாளப் பெயராகும். நேர்மையானவன் என்பது இதன் பொருள். (உபா 32:15; உபா 33:5,26). கர்த்தர் இஸ்ரவேலை ஆரம்பத்தில் நேர்மையானவன், நீதியானவன் என்று நினைத்தார். ஆனால் பின்பு அவர்கள் தங்களை உண்டாக்கின கர்த்தரை விட்டுவிட்டார்கள். தங்கள் ரட்சிப்பின் கன்மலையை அசட்டை பண்ணினார்கள். கர்த்தர் அவர்களைப் புறக்கணிக்கும் வரையிலும் கர்த்தருக்கு எரிச்சலையும், கோபத்தையும் மூட்டினார்கள் (உபா 32:15-26).

இஸ்ரவேல் ஜனத்தார் இரட்சிக்கப்பட்ட பின்பு, அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய பாவங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. கர்த்தர் இஸ்ரவேலை யெஷூரனாக (தேசமாக) உண்டாக்கின பின்பு கர்த்தர் அவர்களுடைய இரட்சிப்பின் கன்மலையானார். அந்தக் கன்மலையை அவர்கள் அசட்டை பண்ணினார்கள். (உபா 32:15,18)

2. இரட்சிப்பின் கன்மலைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அதை அசட்டை பண்ணி விட்டார்கள் (உபா 32:15,18).

3. அந்நிய தேவர்களால் அவருக்கு எரிச்சலை மூட்டினார்கள் (உபா 32:16,21).

4. புறஜாதிகளின் அருவருப்பானவைகளினால் அவரைக் கோபப்படுத்தினார்கள்.

5. அவர்கள் தேவனுக்குப் பலியிடாமல், நூதனமாய்த் தோன்றிய புது தெய்வங்களுமாகிய பேய்களுக்கே பலியிட்டார்கள் (உபா 32:17).

6. தாங்கள் அறியாத தேவர்களுக்கு பலியிட்டார்கள். கர்த்தரை மட்டுமே அவர்கள் அறிந்திருந்தார்கள்.

7. தங்கள் பிதாக்கள் பயப்படாதவைகளும், நூதனமாய்த் தோன்றிய புது தெய்வங்களுமாகிய அந்நிய தெய்வங்களுக்குப் பலியிட்டார்கள்.

8. அவர்களை ஜெநிப்பித்த கன்மலையை அவர்கள் நினையாமற்போனார்கள். (உபா 32:18; கலா 3:8; கலா 4:29; எபி 4:2).

9. அவர்களைப் பெற்ற தேவனை மறந்தார்கள். (உபா 32:18,22).

இஸ்ரவேலுக்கு இரட்சிப்பும், புதிய பிறப்பும் மற்ற ஆவிக்குரிய அனுபவங்களும் இருந்தது. அதன் பின்பு, அவர்கள் தேவனைக் கைவிட்டுவிட்டார்கள். அவரை மறந்தார்கள். அழிவினால் தண்டிக்கப்பட்டார்கள். உபா 32:18,22,24 ஆகிய வசனங்களின்படி அவர்களுக்கு நரக தண்டனையும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தாரிடத்தில் மனத்தாழ்மையில்லை. அவர்களிடத்தில் பெருமை காணப்படுகிறது. ஆகையினால் அவர்கள் கொழுத்துப்போய் உதைக்கிறார்கள். அவர்கள் தேவனுக்கு விரோதமாக தங்கள் குதிங்காலை உயர்த்துகிறார்கள். அவர்கள் பழக்கமில்லாத கிடாரியைப்போலவும், நுகம் சுமத்தப்படாத காளையைப்போலவும் இருக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய இருதயத்தின் பெருமையினால், தங்களை உண்டாக்கின தேவனை விட்டு விலகிப்போகிறார்கள். அவர்கள் தங்கள் இரட்சிப்பின் கன்மலையை அசட்டைபண்ணுகிறார்கள். கர்த்தருடைய வார்த்தைகளை தங்களுக்கு உண்மையாய்ச் சொன்ன தீர்க்கதரிசிகளை அவர்கள் துன்பப்படுத்துகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை நாடாமல், கர்த்தருடைய ஆசீர்வாதங்களை மாத்திரம் அனுபவிக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை விட்டு விலகிப்போவதற்கு, அவர்களுடைய விக்கிரகாராதனை ஒரு பிரதான காரணமாயிருக்கிறது. அவர்கள் ஏற்கெனவே கர்த்தரை விட்டு விலகி விக்கிரகங்களைப் பின்பற்றிப்போனவர்கள். அவர்கள் கர்த்தரையும், அவருடைய உபதேசங்களையும், கர்த்தருடைய வழிகளையும், அவருடைய மார்க்கத்தையும் அசட்டைபண்ணியவர்கள்.

கர்த்தரை மாத்திரம் ஆராதிப்பது இஸ்ரவேல் ஜனத்தாருக்கு பழைய காரியமாக தெரிகிறது. அவர்கள் புதிய காரியங்களையும், நூதன மார்க்கங்களையும் செய்யவேண்டுமென்று விரும்புகிறார்கள். அவர்களிடத்தில் சுயபெருமை அதிகமாயிருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை சார்ந்துகொள்ளாமல், தங்களுடைய சுயபலத்தையும், சுயபராக்கிரமத்தையும் சார்ந்துகொண்டு, கர்த்தரை விட்டு விலகிப்போகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பலிகளை செலுத்தவேண்டும். இது கர்த்தருடைய நியமம். ஆனால் அவர்களோ கர்த்தருக்கு பலிகளை செலுத்தாமல், அந்நிய தெய்வங்களுக்கும், பேய்களுக்கும் பலிகளை செலுத்துகிறார்கள்.

“அந்நிய தேவர்களால் அவருக்கு எரிச்சலை மூட்டினார்கள்; அருவருப்பானவைகளினால் அவரைக் கோபப்படுத்தினார்கள். அவர்கள் தேவனுக்குப் பலியிடவில்லை; தாங்கள் அறியாதவைகளும், தங்கள் பிதாக்கள் பயப்படாதவைகளும், நூதனமாய்த் தோன்றிய புது தெய்வங்களுமாகிய பேய்களுக்கே பலியிட்டார்கள்” (உபா 32:16,17) என்று மோசே இஸ்ரவேல் ஜனத்தாருடைய விக்கிரகாராதனையைப்பற்றிச் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை ஆராதியாமல், அந்நிய தேவர்களை ஆராதிக்கிறார்கள். இந்த தெய்வங்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு இதுவரையிலும் ஒரு நன்மையும் செய்யவில்லை. ஆனாலும் அந்த அந்நிய தெய்வங்களே தங்களுக்கு ஏராளமான உதவிகளை செய்திருக்கிறது என்று இஸ்ரவேல் ஜனத்தார் மாயையான காரியங்களை நம்புகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு புதிய தெய்வங்கள் நூதனமாய்த் தோன்றுகிறது. அவர்கள் பழைய காரியங்களில் பிரியப்படாமல் புதிய காரியங்களில் பிரியப்படுகிறார்கள். புதிய புதிய தெய்வங்களை தங்களுக்கு உண்டுபண்ணி, முடிவிலே தங்கள் தேவனாகிய கர்த்தரையே மறந்துவிடுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாருடைய விக்கிரகாராதனை மிகவும் மோசமான பாதையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. அவர்கள் ஆரம்பத்தில் அந்நிய தெய்வங்களுக்கு பலியிட்டார்கள். முடிவிலே பேய்களுக்கு பலியிடுகிறார்கள்.

தங்களுக்கு புதிய தெய்வங்கள் வேண்டும் என்று ஆசைப்பட்டு, இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் கைகளால் புதிய விக்கிரகங்களை உண்டுபண்ணுகிறார்கள். இவையெல்லாம் கர்த்தருக்கு அருவருப்பான காரியங்கள். இஸ்ரவேல் புத்திரர் அந்நிய தேவர்களால் கர்த்தருக்கு எரிச்சலை மூட்டுகிறார்கள். அவர்கள் அருவருப்பான விக்கிரகங்களினால் கர்த்தரைக் கோபப்படுத்துகிறார்கள்.

அந்நிய தெய்வங்கள் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு இதுவரையிலும் ஒரு நன்மையும் செய்யவில்லை. அவைகள் அவர்களுக்கு நன்மை செய்யாதது மாத்திரமல்ல, அவர்களுக்கு ஏராளமான தீங்குகளையும் செய்திருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் அந்நிய தெய்வங்களைப் பின்பற்றி, தங்கள் தேவனாகிய கர்த்தரை மறந்துவிடுகிறார்கள். "உன்னை ஜெநிப்பித்த கன்மலையை நீ நினையாமற்போனாய்; உன்னைப் பெற்ற தேவனை மறந்தாய்" *(உபா 32:18)* என்று மோசே இஸ்ரவேல் ஜனத்தாருடைய பின்மாற்றத்தைப்பற்றிச் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை மறந்து, கர்த்தருக்கு விரோதமாக துணிகரமான பாவங்களை செய்கிறார்கள்.

"உன்னை ஜெநிப்பித்த கன்மலை" என்னும் வாக்கியத்திற்கு வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லும்போது, கர்த்தர் அவர்களை ஜெநிப்பித்தபடியினால் இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் பிறந்திருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள் *(கலா 3:8; கலா 4:29; எபி 4:2)*.

கர்த்தருடைய கோபம் உபா 32:19-25

உபா 32:19. கர்த்தர் அதைக் கண்டு, தமது குமாரரும் தமது குமாரத்திகளும் தம்மைக் கோபப்படுத்தினதினிமித்தம் மனமடிவாகி, அவர்களைப் புறக்கணித்து:

உபா 32:20. என் முகத்தை அவர்களுக்கு மறைப்பேன்; அவர்களுடைய முடிவு எப்படியிருக்கும் என்று பார்ப்பேன்; அவர்கள் மகா மாறுபாடுள்ள சந்ததி; உண்மையில்லாத பிள்ளைகள்.

உபா 32:21. தெய்வம் அல்லாதவைகளினால் எனக்கு எரிச்சலை மூட்டி, தங்கள் மாயைகளினால் என்னைக் கோபப்படுத்தினார்கள்; ஆகையால் மதிக்கப்படாத ஜனங்களினால் அவர்களுக்கு எரிச்சலை உண்டாக்கி, மதிகெட்ட ஜாதியினால் அவர்களைக் கோபப்படுத்துவேன்.

உபா 32:22. என் கோபத்தினால் அக்கினி பற்றிக் கொண்டது, அது தாழ்ந்த நரகமட்டும் எரியும்; அது பூமியையும் அதின் பலனையும் அழித்து, பர்வதங்களின் அஸ்திபாரங்களை வேகப்பண்ணும்.

உபா 32:23. தீங்குகளை அவர்கள்மேல் குவிப்பேன்; என்னுடைய அம்புகளையெல்லாம் அவர்கள்மேல் பிரயோகிப்பேன்.

உபா 32:24. அவர்கள் பசியினால் வாடி, எரிபந்தமான உஷ்ணத்தினாலும், கொடிய வாதையினாலும் மாண்டுபோவார்கள்; துஷ்ட மிருகங்களின் பற்களையும், தரையில் ஊரும் பாம்புகளின் விஷத்தையும் அவர்களுக்குள் அனுப்புவேன்.

உபா 32:25. வெளியிலே பட்டயமும், உள்ளே பயங்கரமும், வாலிபனையும் கன்னிகையையும் குழந்தையையும் நரைத்த கிழவனையும் அழிக்கும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது மிகவும் பிரியமாயிருந்தார். அவர்களுக்கு ஏராளமான நன்மைகளை செய்து அவர்களை பராமரித்தார். கர்த்தர் அவர்களை தம்முடைய கண்மணிபோல காத்தருளினார். ஆனால் அவர்களோ தங்கள் தேவனாகிய கர்த்தரை மறந்து, அந்நிய தெய்வங்களை பின்பற்றிப் போகிறார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் மூளுகிறது.

கர்த்தர் இதுவரையிலும் இஸ்ரவேல் புத்திரரை நினைத்து மனம் மகிழ்ந்தார். ஆனால் இப்போதோ அவர்களுடைய விக்கிரகாராதனைகளைப் பார்த்து, கர்த்தர் அவர்களைக் குறித்து மனமடிவாயிருக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை தமக்கு சொந்த ஜனமாகத் தெரிந்துகொண்டார். அவர்களுக்கு தம்முடைய பிரமாணத்தையும், நியமங்களையும் கற்றுக்கொடுத்தார். இஸ்ரவேல் ஜனத்தாரும் கர்த்தரோடு ஐக்கியமாகயிருந்தார்கள்.

கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியமாகயிருக்கிறவர்கள் பரிசுத்தமாக ஜீவிக்கவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகள் பாவம் செய்து கர்த்தரை விட்டு விலகி, பாவமான வழிகளை பின்பற்றிப்போகும்போது, கர்த்தர் அவர்களைக் குறித்து மனமடிவாகயிருக்கிறார். கர்த்தருடைய கோபம் அவர்கள்மீது எழும்புகிறது.

அந்நிய ஜாதியார் தமக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது கர்த்தருடைய கோபம் எழும்புவதைவிட, தம்முடைய ஜனத்தார் தமக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது, கர்த்தருடைய கோபம் அதிகரிக்கிறது. தம்முடைய ஜனம் பரிசுத்தமாயிருக்க வேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

"அவர்கள் தங்கள் கிரியைகளினால் அசுத்தமாகி, தங்கள் செய்கைகளினால் சோரம்போனார்கள். அதினால் கர்த்தருடைய கோபம் தமது ஜனத்தின்மேல் மூண்டது; அவர் தமது சுதந்தரத்தை அருவருத்தார்" (சங் 106:39,40).

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களை உண்டாக்கின தேவனை விட்டு விலகி, அவரை அசட்டைபண்ணுகிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு பலிகளை செலுத்தாமல், அந்நிய தெய்வங்களுக்கு பலிகளை செலுத்துகிறார்கள்.

கர்த்தர் அதைக் கண்டு, தமது குமாரரும் தமது குமாரத்திகளும் தம்மைக் கோபப்படுத்தினதினிமித்தம் மனமடிவாகி, அவர்களைப் புறக்கணிக்கிறார் (உபா 32:19).

கர்த்தர் சர்வ ஞானமுள்ள தேவன். அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை. ஆயினும் கர்த்தர் மனுஷருடைய எண்ணங்களையும், நோக்கங்களையும் அவ்வப்போது கவனித்துப் பார்த்து வருகிறார். (ஆதி 6:5).

கர்த்தர் தமக்கு விரோதமாகப் பாவம் செய்கிற இஸ்ரவேல் ஜனங்களை புறக்கணிப்பார். தம்மைவிட்டுப் பின்வாங்கிப் போகிறவர்களைக் கர்த்தரால் புறக்கணிக்க முடியும். (உபா 32:15-18) அவர்கள் மனந்திரும்பவில்லையென்றால் கர்த்தர் அவர்களை நரகத்திற்கே அனுப்பிவிடுவார். (உபா 32:19-26).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைத் தமது குமாரரும், தமது குமாரத்திகளும் என்று அழைக்கிறார். அவர்கள் இரட்சிக்கப்பட்டவர்கள். (உபா 32:15) அவர்கள் மறுபடியும் பிறந்தவர்கள். (உபா 32:18). அவர்கள் பாவம் செய்தபோது, அவர்கள் கர்த்தரை மறந்து, அவரைப் புறக்கணித்து விடுகிறார்கள் (உபா 32:15-18) கர்த்தரும் அவர்களைப் புறக்கணித்துவிட்டு, நரகத்தில் அவர்களை அழித்துப்போடுவதாக எச்சரிக்கிறார். (உபா 32:20-22). பழைய ஏற்பாட்டில் இரட்சிக்கப்பட்ட ஜனங்கள் "குமாரர்" என்று அழைக்கப் பட்டிருக்கிறார்கள் (ஏசா 43:6; ஏசா 45:11; ஓசி 1:10).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது பிரியமாகவும், கரிசனையாகவும் இருந்தபோது தம்முடைய பிரசன்னத்தை அவர்கள் மத்தியிலே வெளிப்படுத்தினார். கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமான காரியங்கள் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே அப்போது காணப்பட்டது. ஆனால் இப்போதோ கர்த்தர் அவர்கள்மீது கோபப்படுகிறார். கர்த்தர் அவர்கள் நிமித்தம் மனமடிவாகயிருக்கிறார். ஆகையினால் கர்த்தர் தம்முடைய முகத்தை அவர்களுக்கு மறைக்கிறார்.

கர்த்தர் தம்முடைய முகத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு மறைப்பது, கர்த்தர் அவர்கள்மீது மிகுந்த கோபமாயிருக்கிறார் என்பதற்கு அடையாளம். கர்த்தர் இதுபற்றிச் சொல்லும்போது, "என் முகத்தை அவர்களுக்கு மறைப்பேன்; அவர்களுடைய முடிவு எப்படியிருக்கும் என்று பார்ப்பேன்; அவர்கள் மகா மாறுபாடுள்ள சந்ததி; உண்மையில்லாத பிள்ளைகள்" (உபா 32:20) என்று சொல்லுவதாக மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

தம்மைவிட்டு பின்வாங்கிப்போன இஸ்ரவேல் புத்திரரை, "உண்மையில்லாத பிள்ளைகள்" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

வேதாகமத்தில் இரண்டு வசனங்களில் "உண்மை" என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (உபா 32:20; ஆப 2:4). பழைய ஏற்பாட்டில் உண்மை என்னும் வார்த்தை பொதுவாக "நம்பிக்கை" என்று பொருள்படும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது கோபமாகயிருந்தாலும், அவர் அவர்களை தம்முடைய கோபத்தினால் உடனே அழித்துப்போடவில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் மகா மாறுபாடுள்ள சந்ததியாகவும், உண்மையில்லாத பிள்ளைகளாகவும் இருக்கிறார்கள். இதன் நிமித்தமாக கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வருகிறது. அவர்கள் கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதியில்லாதவர்களாயிருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நம்பி, அவர்களிடத்தில் தம்முடைய நன்மையான ஈவுகளை ஒப்புக்கொடுக்க மறுக்கிறார். அவர்கள் கர்த்தருக்கு உண்மையில்லாத ஜனமாகயிருக்கிறார்கள்.

கர்த்தர் இதுவரையிலும் இஸ்ரவேல் புத்திரருக்கு ஏராளமான நன்மைகளை செய்து வந்தார். அவர்களை வனாந்தரத்திலே நடத்தினார். அவர்களுக்கு தம்முடைய நியாயங்களையும், பிரமாணங்களையும் போதித்தார். கர்த்தர் அவர்களை தமது கண்மணி போல காத்தருளினார். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரோ கர்த்தரைவிட்டு விலகி, அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போகிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக அருவருப்பான காரியங்களை செய்து அவரைக் கோபப்படுத்துகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருடைய விக்கிரகாராதனைகளையும், அவர்கள் தமக்கு எரிச்சலை மூட்டியதையும் பற்றிச் சொல்லும்போது, "தெய்வம் அல்லாதவைகளினால் எனக்கு எரிச்சலை மூட்டி, தங்கள் மாயைகளினால் என்னைக் கோபப்படுத்தினார்கள்; ஆகையால் மதிக்கப்படாத ஜனங்களினால் அவர்களுக்கு எரிச்சலை உண்டாக்கி, மதி கெட்ட ஜாதியினால் அவர்களைக் கோபப்படுத்துவேன்" (உபா 32:21) என்றும்,

"என் கோபத்தினால் அக்கினி பற்றிக் கொண்டது, அது தாழ்ந்த நரகமட்டும் எரியும்; அது பூமியையும் அதின் பலனையும் அழித்து, பர்வதங்களின் அஸ்திபாரங்களை வேகப்பண்ணும்" (உபா 32:22) என்றும்,

"தீங்குகளை அவர்கள்மேல் குவிப்பேன்; என்னுடைய அம்புகளையெல்லாம் அவர்கள்மேல் பிரயோகிப்பேன்" (உபா 32:23) என்றும்,

"அவர்கள் பசியினால் வாடி, எரிபந்தமான உஷ்ணத்தினாலும், கொடிய வாதையினாலும் மாண்டுபோவார்கள்; துஷ்ட மிருகங்களின் பற்களையும், தரையில் ஊரும் பாம்புகளின் விஷத்தையும் அவர்களுக்குள் அனுப்புவேன்" (உபா 32:24) என்றும்,

"வெளியிலே பட்டயமும், உள்ளே பயங்கரமும், வாலிபனையும் கன்னியையும் குழந்தையையும் நரைத்த கிழவனையும் அழிக்கும்" (உபா 32:24) என்றும் சொல்லுகிறார்.

தங்களுடைய பாவத்தினால் தம்மைக் கோபப்படுத்துகிற இஸ்ரவேல் புத்திரரை, தாமும் கோபப்படுத்துவதாக கர்த்தர் சொல்லுகிறார்.

இந்த வாக்கியம் ரோமர் 10:19 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது (ரோமர் 11:11).

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை மாத்திரம் ஆராதித்து, அவருக்கு கீழ்ப்படிந்து நடந்தபோது, கர்த்தர் அவர்கள்மீது அன்பாயும், கரிசனையாயும் இருந்தார். கர்த்தர் பூமியிலுள்ள உயர்ந்த ஸ்தானங்களின்மேல் அவர்களை ஏறிவரப்பண்ணினார். வயலில் விளையும் பலனை அவர்களுக்கு புசிக்கக்கொடுத்தார்.

இப்போதோ இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைவிட்டு விலகி அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போகிறார்கள். கர்த்தர் அவர்கள்மீது கோபமாயிருக்கிறார். தாம் அவர்களுக்கு இதுவரையிலும் கொடுத்து வந்த நன்மையான ஈவுகளை கர்த்தர் நிறுத்திவிடுகிறார். கர்த்தர் அவர்களுக்கு இப்போது, நன்மையான காரியங்களுக்கு பதிலாக தீமையான காரியங்களைக் கொடுத்தார். இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே கொடிய பஞ்சமும், கொள்ளை நோயும் வருகிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை அசட்டைபண்ணி அவரை விட்டு விலகிப்போனார்கள். இதனால் துஷ்டமிருகங்களும் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சத்துருக்களாக மாறும். துஷ்டமிருகங்களின் பற்களும், பாம்புகளின் விஷமும் இஸ்ரவேல் புத்திரருக்கு தீங்கு செய்யும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டு விலகி, அந்நிய தெய்வங்களை பின்பற்றிப்போகும்போது, கர்த்தர் அவர்கள்மேல் தீங்குகளை குவிப்பார். அவர் தம்முடைய அம்புகளையெல்லாம் அவர்கள்மேல் பிரயோகிப்பார் (உபா 32:24).

தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் அம்புகள் என்று அழைக்கப்படுகிறது. சில அம்புகளுக்குப் பெயர்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது. (உபா 32:24-25).

தேவனுடைய அம்புகளைப்பற்றிய விவரம் வருமாறு :

1. பசியினால் வாடுதல்
2. எரிபந்தமான உஷ்ணம்.
3. கொடிய வாதை (லேவி 26; உபா 28)
4. துஷ்ட மிருகம். (உபா 7:22; உபா 28:26; லேவி 26:6,22)
5. பாம்புகள் (எண் 21:1-9)
6. பட்டயம்
7. உள்ளே பயங்கரம்
8. சிதறடிக்கப்படுதல்

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை மாத்திரம் ஆராதித்தபோது, அவர் அவர்களை தமது கண்மணியைப்போல காத்தருளினார். இப்போது இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை விட்டு விலகி அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போகிறார்கள். இதனால் கர்த்தர் அவர்கள்மீது கோபப்பட்டு, தம்முடைய பாதுகாப்பை அவர்களை விட்டு நீக்கிப்போடுகிறார். அந்நிய தெய்வங்களுக்கு ஜீவனில்லை. அவைகளால் இஸ்ரவேல் ஜனத்தாரை பாதுகாக்க முடியாது. ஆகையினால் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு விரோதமாக யுத்தமும், பட்டயமும், பயங்கரமும் வருகிறது. யுத்தத்தின் விளைவினால் இஸ்ரவேல் புத்திரருக்கு சர்வநாசமும், சர்வமோசமும், சர்வசங்காரமும் உண்டாகிறது.

கர்த்தர் மோசேயின் மூலமாக இஸ்ரவேல் புத்திரருக்கு முன்னறிவித்த காரியங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. என் முகத்தை அவர்களுக்கு மறைப்பேன்; அவர்களுடைய முடிவு எப்படியிருக்கும் என்று பார்ப்பேன். (உபா 32:20).
2. மதிக்கப்படாத ஜனங்களினால் அவர்களுக்கு எரிச்சலை உண்டாக்குவேன். (உபா 32:21).
3. மதி கெட்ட ஜாதியினால் அவர்களைக் கோபப்படுத்துவேன்.
4. என் கோபத்தினால் அக்கினி பற்றிக் கொண்டது, அது தாழ்ந்த நரகமட்டும் எரியும்; அது பூமியையும் அதின் பலனையும் அழித்து, பர்வதங்களின் அஸ்திபாரங்களை வேகப் பண்ணும். (உபா 32:22).
5. தீங்குகளை அவர்கள்மேல் குவிப்பேன். (உபா 32:23).

6. என்னுடைய அம்புகளையெல்லாம் அவர்கள்மேல் பிரயோகிப்பேன்.

7. அவர்கள் பசியினால் வாடி, எரிபந்தமான உஷ்ணத்தினாலும், கொடிய வாதையினாலும் மாண்டுபோவார்கள். (உபா 32:24).

8. துஷ்ட மிருகங்கள் அவர்களை அழித்துப்போடும்.

9. பாம்புகள் அவர்களைக் கடிக்கும்.

10. அந்நியரின் பட்டயம் அவர்களை அழிக்கும். (உபா 32:25).

11. அவர்களுக்குள்ளே உண்டாகும் பயங்கரம் அவர்களை அழிக்கும்.

12. நான் அவர்களை மூலைக்குமூலை சிதற அடிப்பேன். (உபா 32:27).

13. மனிதருக்குள் அவர்களுடைய பெயர் அற்றுப் போகப்பண்ணுவேன்.

14. ஏற்றகாலத்தில் அவர்களுடைய கால் தள்ளாடும். (உபா 32:35).

15. கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்த்து, அவர்கள் பெலன் போயிற்றென்றும், அடைக்கப் பட்டவர்களாவது விடுதலை பெற்றவர்களாவது ஒருவரும் இல்லையென்றும் காணும்போது, தம்முடைய ஊழியக்காரர்மேல் பரிதாபப்படுவார். (உபா 32:36).

16. அப்பொழுது அவர்களுடைய தெய்வங்களை விசாரிப்பேன். (உபா 32:37-38).

17. நானே மெய்யான தேவன் என்பதை அவர்களுக்கு ஞாபகப்படுத்துவேன். (உபா 32:39-40).

18. என் சத்துருக்களிடத்தில் பழிவாங்கி, என்னைப் பகைக்கிறவர்களுக்குப் பதிலளிப்பேன். (உபா 32:41-42).

19. அவர் தமது ஊழியக்காரரின் இரத்தத்திற்குப் பழிவாங்கி, தம்முடைய சத்துருக்களுக்குப் பதிலளிப்பார். (உபா 32:43).

20. கர்த்தர் தமது தேசத்தின்மேலும் தமது ஜனங்களின்மேலும் கிருபையுள்ளவராவார்.

பரிசுத்த வேதாகமத்தில் நரகத்தைப்பற்றி ஒரு சில செய்திகள் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. அக்கினி எரியும் இடம். (உன் 8:6; லூக்கா 16:19-31).

2. பாவத்தின்மீது தேவனுடைய கோபாக்கினையின் நிமித்தம் நரகத்திலுள்ள அக்கினி பற்றிக்கொள்ளும். (சங் 9:17; மத் 25:41).

3. நரகத்தில் பல பகுதிகள் உள்ளன. அதில் ஒன்று தாழ்ந்த நரகம். (லூக்கா 16:19-31; லூக்கா 23:43).

4. நரக அக்கினி பூமியையும் அதின் பலனையும் அழிக்கும். (ஏசா 5:14; ஏசா 14:9; வெளி 20:11-15).

5. நரக அக்கினி பர்வதங்களின் அஸ்திபாரங்களை வேகப்பண்ணும்.

கர்த்தருடைய இரக்கம் உபா 32:26-38

உபா 32:26. எங்கள் கை உயர்ந்ததென்றும், கர்த்தர் இதையெல்லாம் செய்யவில்லை என்றும் அவர்களுடைய பகைஞர் தப்பெண்ணங்கொண்டு சொல்லுவார்கள் என்று,

உபா 32:27. நான் சத்துருவின் குரோதத்திற்கு அஞ்சாதிருந்தேனானால், நான் அவர்களை மூலைக்குமூலை சிதற அடித்து, மனிதருக்குள் அவர்களுடைய பெயர் அற்றுப் போகப்பண்ணுவேன் என்று சொல்லியிருப்பேன்.

உபா 32:28. அவர்கள் யோசனைகெட்ட ஜாதி, அவர்களுக்கு உணர்வு இல்லை.

உபா 32:9. அவர்கள் ஞானமடைந்து, இதை உணர்ந்து, தங்கள் முடிவைச் சிந்தித்துக் கொண்டால் நலமாயிருக்கும் என்றார்.

உபா 32:30. அவர்களுடைய கன்மலை அவர்களை விற்காமலும், கர்த்தர் அவர்களை ஒப்புக்கொடாமலும் இருந்தாரானால், ஒருவன் ஆயிரம்பேரைத் துரத்தி, இரண்டுபேர் பதினாயிரம்பேரை ஓட்டுவதெப்படி?

உபா 32:31. தங்கள் கன்மலை நம்முடைய கன்மலையைப்போல் அல்ல என்று நம்முடைய சத்துருக்களே தீர்மானிக்கிறார்கள்.

உபா 32:32. அவர்களுடைய திராட்சச்செடி, சோதோமிலும் கொமோரா நிலங்களிலும் பயிரான திராட்சச்செடியிலும் தாழ்ந்த ஜாதியாயிருக்கிறது, அவைகளின் பழங்கள் பித்தும் அவைகளின் குலைகள் கசப்புமாய் இருக்கிறது.

உபா 32:33. அவர்களுடைய திராட்சரசம் வலுசர்ப்பங்களின் விஷமும் விரியன்பாம்புகளின் கொடிய விஷமுமானது.

உபா 32:34. இது என்னிடத்தில் வைத்துவைக்கப்பட்டு, என் பொக்கிஷங்களில் இது முத்திரை போடப்பட்டிருக்கிறதில்லையோ?

உபா 32:35. பழிவாங்குவதும் பதிலளிப்பதும் எனக்கு உரியது; ஏற்றகாலத்தில் அவர்களுடைய கால் தள்ளாடும்; அவர்களுடைய ஆபத்துநாள் சமீபமாயிருக்கிறது; அவர்களுக்கு நேரிடும் காரியங்கள் தீவிரித்துவரும்.

உபா 32:36. கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்த்து, அவர்கள் பெலன் போயிற்றென்றும், அடைக்கப்பட்டவர்களாவது விடுதலை பெற்றவர்களாவது ஒருவரும் இல்லையென்றும் காணும்போது, தம்முடைய ஊழியக்காரர்மேல் பரிதாபப்படுவார்.

உபா 32:37. அப்பொழுது அவர்: அவர்கள் பலியிட்ட பலிகளின் கொழுப்பைத் தின்று, பானபலிகளின் திராட்சரசத்தைக் குடித்த அவர்களுடைய தெய்வங்களும் அவர்கள் நம்பின கன்மலையும் எங்கே?

உபா 32:38. அவைகள் எழுந்து உங்களுக்குச் சகாயம்பண்ணி உங்களுக்கு மறைவிடமாயிருக்கட்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படியாமல், அவருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுவதினால், கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வருகிறது. கர்த்தர் தம்முடைய கோபத்தை வெளிப்படுத்தும் வண்ணமாக, அவர்களுக்கு வரப்போகும் அழிவுகளைச் சொல்லி அவர்களை எச்சரிக்கிறார்.

இந்த வசனப்பகுதியில் கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் இஸ்ரவேல் புத்திரருக்கு வெளிப்படுத்தப்படுகிறது. கர்த்தருடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இஸ்ரவேல் ஜனத்தார் அபாத்திரராயிருக்கிறார்கள். ஆனாலும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வருவதற்கு பதிலாக, அவருடைய கிருபையும் இரக்கமும் அவர்கள்மேல் வருகிறது.

பாவிகள் மரித்துப்போகவேண்டும் என்பது தேவனுடைய விருப்பமல்ல. அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி ஜீவனோடிருக்கவேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம்.

கர்த்தர் கனமும் மகிமையுமுள்ளவர். அவர் எரிச்சலுள்ள தேவனாகவும், வைராக்கியமுள்ள தேவனாகவும் இருக்கிறார். கர்த்தர் தமது கிருபையினால் இஸ்ரவேல் புத்திரரை மொத்தமாக அழித்துப்போடாமல் பாதுகாக்கிறார்.

தேவனுடைய கோபத்தினாலும், அவருடைய நீதியான நியாயத்தீர்ப்பினாலும் இஸ்ரவேல் ஜனத்தாரில் அநேகர் அழிந்துபோகிறார்கள். ஆனாலும் தேவனுடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும், இஸ்ரவேல் புத்திரரில் சிலர் அழிந்துபோகாமல், அழிவுக்குத் தப்பி ஜீவனோடிருக்கிறார்கள். இவர்கள் கர்த்தருடைய கிருபையினாலேயே, இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே மீதமாயிருக்கிறவர்கள்.

இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களினிமித்தமாகவும், மீறுதல்களினிமித்தமாகவும், அவர்கள்மீது தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு வரவேண்டும். ஆனாலும் இவர்கள் கர்த்தருடைய கிருபையினால் அழிவுக்குத் தப்பித்துக்கொள்கிறார்கள். கர்த்தருடைய கிருபையைப் பெற்றுக்கொள்வதற்கு இவர்களுக்கு ஒரு தகுதியுமில்லை. ஆனாலும் கர்த்தர் தமது கிருபையையும் இரக்கத்தையும் அவர்களுக்கு காண்பிக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை அழிவுக்கு தப்புவித்ததற்கான காரணத்தையும் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். "எங்கள் கை உயர்ந்ததென்றும், கர்த்தர் இதையெல்லாம் செய்யவில்லை என்றும் அவர்களுடைய பகைஞர் தப்பெண்ணங்கொண்டு சொல்லுவார்கள்" *(உபா 32:26)* என்று இஸ்ரவேல் ஜனத்தாருடைய சத்துருக்கள் சொல்லும் வார்த்தைகளைப்பற்றி கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய சுபாவத்தைப்பற்றிச் சொல்லும்போது, "நான் சத்துருக்களின் குரோதத்திற்கு அஞ்சாதிருந்தேனானால்" என்று சொல்லுகிறார். இந்த வாக்கியத்திற்கு, "கர்த்தர் சத்துருக்களின் குரோதத்திற்கு அஞ்சுகிறார்" என்பது பொருளாகும். இந்த வாக்கியம் மனுஷர் பேசுகிற பிரகாரமாக இங்கு சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தர் யாருக்கும் பயப்படுகிறவரல்ல. அவர் மனுஷருடைய குரோதத்தைப் பார்த்து ஒருபோதும் அஞ்சமாட்டார். கர்த்தருடைய கோபத்தைப் பார்த்து மனுஷர்தான் பயப்படவேண்டும். ஆனாலும் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தம்முடைய கிருபையை காண்பிக்கும் வண்ணமாக, கர்த்தர் அவர்களுடைய சத்துருக்களின் குரோதத்திற்கு அஞ்சுவதுபோல பேசுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது கோபமாயிருந்து, அவர்களை அழித்துப்போடவேண்டுமென்று தீர்மானம் பண்ணியபோது, மோசே கர்த்தருடைய சமுகத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக ஜெபம்பண்ணினார். சத்துருக்கள் கர்த்தரைக் குறித்து என்ன சொல்லுவார்கள் என்பதை மோசே கர்த்தருடைய சமுகத்திலே ஞாபகப்படுத்துகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "எகிப்தியர்கள் என்ன சொல்லுவார்கள்" என்று கேட்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அழித்துப்போடுவார் என்றால், எகிப்தியர்கள் கர்த்தருடைய மகிமைக்கும், மாட்சிமைக்கும், வல்லமைக்கும் விரோதமாகப் பேசுவார்கள். அவர்கள் தேவனுடைய நாமத்தை கனவீனம்பண்ணுவார்கள்.

தம்முடைய பரிசுத்த நாமத்தை மனுஷர் கனவீனம்பண்ணுவதற்கு கர்த்தர் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார். தம்முடைய மகிமையின் சிங்காசனத்தை யாரும் அவமானப்படுத்த கர்த்தர் அனுமதிக்கமாட்டார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். கர்த்தர் தம்முடைய நீதியினால் அவர்களைத் தண்டிக்கவேண்டுமென்று தீர்மானிக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தாருடைய பாவங்களையும், தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பையும் நினைத்துப் பார்க்கும்போது, கர்த்தர், "நான் அவர்களை மூலைக்குமூலை சிதற அடித்து, மனிதருக்குள் அவர்களுடைய பெயர் அற்றுப் போகப்பண்ணுவேன் என்று சொல்லியிருப்பேன்" *(உபா 32:27)* என்று சொல்லுகிறார்.

"நான் சத்துருவின் குரோதத்திற்கு அஞ்சாதிருந்தேனானால்" என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் சத்துருவின் கோபத்திற்கு அஞ்சுவாரா? நிச்சயமாக அஞ்சமாட்டார். கர்த்தர் சத்துருவிற்கோ அவனுடைய கோபத்திற்கோ பயப்படுகிறவர் அல்ல. கர்த்தர் தம்முடைய பிள்ளைகளைச் சிட்சிக்கிறார். கர்த்தர் அவர்களைத் தண்டிக்கவில்லையென்றால் இஸ்ரவேலருக்கு வந்த தண்டனை தங்களால் வந்தது என்று அவருடைய சத்துருக்கள் இறுமாப்பாய் இருப்பார்கள். தங்களுடைய பாவத்தின் நிமித்தம் கர்த்தரே தங்களைத் தண்டிக்கிறவர் என்பதை இஸ்ரவேல் புத்திரர் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும் தாங்கள் மனந்திருந்தி வந்தால் கர்த்தர் தங்களை ஏற்றுக்கொள்வார் என்னும் எண்ணமும் அவர்களுக்கு இருக்க வேண்டும். புறஜாதி தேசத்தாருக்குக் கர்த்தரைப் பற்றியும், அவருடைய கிருபையைப் பற்றியும், அவருடைய நீதியைப் பற்றியும் ஒன்றும் தெரியாது. தங்களுடைய பலத்தினாலோ அல்லது தங்களுடைய பராக்கிரமத்தினாலோ இஸ்ரவேலுக்குத் தீங்கு வந்தது என்று புறஜாதியார் நினைத்து விடக்கூடாது. கர்த்தருடைய பிள்ளைகளுக்குச் சகலமும் கர்த்தரால் மாத்திரமே நடைபெறுகிறது.

ஆனால் கர்த்தரோ தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும், இஸ்ரவேல் புத்திரர்மீது தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளை சொல்லவில்லை. பாவிகள் தங்களுக்கு கேடுண்டாகவே பாவம் செய்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது தங்கள்மீது அழிவை வரவழைத்துக்கொள்கிறார்கள். பாவிகள் அழிந்துபோகவேண்டும் என்பது கர்த்தருடைய விருப்பமல்ல. அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டும் என்பதும், அவர்கள் தங்களுக்கு வரும் அழிவுக்கு தப்பித்துக்கொள்ளவேண்டும் என்பதும் கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய இருதயத்தை அறிந்திருக்கிறார். மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தர் மனுஷருடைய இருதயங்களை ஆராய்ந்து அறிந்திருக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றிச் சொல்லும்போது, "அவர்கள் யோசனை கெட்ட ஜாதி" என்றும், "அவர்களுக்கு உணர்வு இல்லை" (உபா 32:28) என்றும் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரருக்கு ஞானமும், அறிவும் இருக்கிறது. அவர்கள் இந்த ஞானத்தைப் பயன்படுத்தி பிற்கால விளைவுகளை யோசித்துப் பார்க்க வேண்டும். தற்காலத்து பாவம் பிற்காலத்து அழிவு என்பதை அவர்கள் உணர வேண்டும் (உபா 32:28-29). அவர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தால் அவர்களுக்குத் தோல்வியில்லை. ஒருவன் ஆயிரம்பேரைத் துரத்தி, இரண்டுபேர் பதினாயிரம்பேரை ஓட்டுவான். (லேவி 26:8). ஆனால் இஸ்ரவேலருடைய நிலைமை இப்போது தலைகீழாக இருக்கிறது. ஒரு விரோதி ஆயிரம் இஸ்ரவேலரைத் துரத்துகிறான். இரண்டு விரோதிகள் பதினாயிரம் இஸ்ரவேலரை ஓட்டுகிறான். இஸ்ரவேலரின் பாவத்தின் நிமித்தமாக இந்தப் பலவீனமும், தோல்வியும் வந்திருக்கிறது. (உபா 32:30).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து அழிவின் பாதையிலே போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தொடர்ந்து பாவம் செய்தால், அவர்கள் நிச்சயமாகவே அழிந்துபோவார்கள். பாவத்தின் சம்பளம் மரணம். இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுக்கு வரப்போகும் அழிவுக்கு தப்பித்துக்கொள்ளவேண்டுமென்றால், அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி கர்த்தரிடத்தில் திரும்புவதற்கு விருப்பமுள்ளவர்களாகயிருப்பார்களென்றால், கர்த்தரும் இந்த விஷயத்தில் அவர்களுக்கு உதவிசெய்ய ஆயத்தமாயிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது, தங்களுக்கு அழிவு வரப்போகிறது என்பதையும், மனிதர் மத்தியிலே தாங்கள் முற்றிலுமாக அற்றுப்போவோம் என்பதையும் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். தங்களுடைய பாவத்தினிமித்தமாக, தங்களுக்கு வருங்காலத்தில் வரப்போகும் அழிவை நினைத்து, இஸ்ரவேல் ஜனத்தார் மனந்திரும்பவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் தமக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது, அவர்கள் அழிந்துபோவார்கள் என்று, கர்த்தர் மோசேயின் மூலமாக அவர்களை பல சமயங்களில் எச்சரித்திருக்கிறார். கர்த்தர் ஏற்கெனவே சொன்ன எச்சரிப்பின் வார்த்தைகள் இப்போது இஸ்ரவேல் ஜனத்தாருக்கு மறுபடியுமாய்ச் சொல்லப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரர் யோசனை கெட்ட ஜாதியாகயிருந்தாலும், அவர்களுக்கு உணர்வு இல்லாமல்போனாலும், அவர்கள் ஞானமடையவேண்டும் என்றும், தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பைக் குறித்து அவர்கள் உணர்வடையவேண்டும் என்றும் கர்த்தர் விரும்புகிறார்.

கர்த்தர் இதுபற்றி இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொல்லும்போது, "அவர்கள் ஞானமடைந்து, இதை உணர்ந்து, தங்கள் முடிவைச் சிந்தித்துக் கொண்டால் நலமாயிருக்கும்" (உபா 32:29) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இதுவரையிலும் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு அநேக நன்மைகளை செய்திருக்கிறார். அவர்கள் மத்தியிலே மிகப்பெரிய அற்புதங்களையும், அடையாளங்களையும், அதிசயங்களையும் நடப்பித்து கர்த்தர் தமது நாமத்தை மகிமைப்படுத்தியிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தர் தங்கள் மத்தியிலே செய்த பெரிய காரியங்களையெல்லாம் நினைத்துப் பார்க்கவேண்டும்.

ஆனால் அவர்களோ கர்த்தர் தங்களுக்கு செய்த அற்புதங்களையும், அடையாளங்களையும் நினைத்துப் பார்க்காமல், அவர்கள் கர்த்தரை விட்டு விலகி, அந்நிய தெய்வங்களை சோரமார்க்கமாய்ப் பின்பற்றிப்போகிறார்கள். ஆகையினால் கர்த்தர் தம்முடைய நீதியினால் இஸ்ரவேல் ஜனத்தாரை முற்றிலுமாய் அழித்துப்போடவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு இதுபற்றிச் சொல்லும்போது, "அவர்களுடைய கன்மலை அவர்களை விற்காமலும், கர்த்தர் அவர்களை ஒப்புக்கொடாமலும் இருந்தாரானால், ஒருவன் ஆயிரம்பேரைத் துரத்தி, இரண்டுபேர் பதினாயிரம்பேரை ஓட்டுவதெப்படி? தங்கள் கன்மலை நம்முடைய கன்மலையைப்போல் அல்ல என்று நம்முடையசத்துருக்களே தீர்மானிக்கிறார்கள்" (உபா 32:30,31) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய சத்துருக்களின் கைகளில் தோற்றுப்போவதற்குக்கர்த்தர் அனுமதிக்கிறார். சிறையிருப்பிற்குச் செல்லவும், அவர்களை அனுப்பிவிடுகிறார். (உபா 28:68; நியா 2:14; நியா 3:8; நியா 4:2; நியா 10:7; 1சாமு 12:9).

இஸ்ரவேல் புத்திரர் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, இஸ்ரவேலர்கள் அவர்களை ஜெயிக்க வேண்டும். ஆனால் சில யுத்தங்களில் சத்துருக்கள் இஸ்ரவேலரை ஜெயிக்கிறார்கள். அதற்கான காரணங்களின் விவரம் வருமாறு:

1. அவர்கள் யோசனைகெட்ட ஜாதி (உபா 32:28).

2. அவர்களுக்கு உணர்வு இல்லை.

3. அவர்களுக்கு ஞானம்இல்லை. (உபா 32:29).

4. தங்கள் முடிவைச் சிந்தியாமல் இருக்கிறார்கள்.

5. அவர்களுடைய கன்மலை அவர்களைச் சிறையிருப்பிற்கு விற்றுப்போட்டார். (உபா 32:30).

6. கர்த்தர் அவர்களைச் சத்துருக்களின் கைகளில் ஒப்புக்கொடுத்தார்.

7. சோதோம் அவர்களுடைய திராட்சச்செடி.

"தங்கள் கன்மலை நம்முடைய கன்மலையைப் போல் அல்ல" என்று சத்துருக்கள் சொல்லுகிறார்கள். இஸ்ரவேலின் கன்மலை புறஜாதியாரின் கன்மலையைப் போல அல்ல. இஸ்ரவேலின் கன்மலை இஸ்ரவேல் புத்திரரைச் சத்துருக்களின் கைகளில் ஒப்புக் கொடுத்து விட்டார். ஏனெனில் அவர்களுடைய திராட்சச் செடி சோதோமில் இருக்கிறது. அவைகளின் பலன் பித்தும், கசப்புமாயிருக்கிறது. சோதோம், கொமோரா ஆகிய பட்டணங்களின் ஜனங்களைப்போல இஸ்ரவேல் புத்திரர்கள் பாவம் செய்து, கர்த்தருக்கு எதிராகக் கலகம் பண்ணுகிறார்கள்.

தங்களுடைய கன்மலை புறஜாதியாரின் கன்மலையைப்போல அல்ல என்பதை நினைவுகூர்ந்து இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சத்துருக்களை ஜெயித்திருக்க முடியும். நல்ல கனிகளைக் கொடுக்க முடியும். ஆனால் இப்பொழுதோ இஸ்ரவேல் புத்திரர்களே சோதோம் பட்டணத்தாரைப் போல பாவம் செய்கிறார்கள். இங்கு புறஜாதியார் சோதோமோடு ஒப்பிடப்படவில்லை. இஸ்ரவேல் புத்திரரே அவர்களுடைய பாவத்தின் நிமித்தமாக சோதோமோடும், கொமோராவோடும் ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறார்கள் (உபா 32:32-33; ஏசா 1:10; ஏசா 3:9; எரே 23:14; எசே 16:46).

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்காக அவர்களுடைய சத்துருக்கள்மீது யுத்தம்பண்ணுகிறார். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, இஸ்ரவேலரில் ஒருவன் ஆயிரம் சத்துருக்களைத் துரத்துகிறான். இரண்டு இஸ்ரவேலர்கள் சேர்ந்து பதினாயிரம் சத்துருக்களை ஓட்டுகிறார்கள். இது இஸ்ரவேல் ஜனத்தாருடைய சுயபலத்தினாலோ, சுயபராக்கிரமத்தினாலோ நடைபெறுகிற காரியமல்ல. கர்த்தருடைய சர்வவல்லமையினாலேயே, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சத்துருக்களை துரத்துகிறார்கள்.

கர்த்தர் பெரியவர். அவர் புறஜாதி தேவர்களைவிடவும் பெரியவர். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்காக அவர்களுடைய சத்துருக்கள்மீது யுத்தம்பண்ணுகிறார். யுத்தம் கர்த்தருடையது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு கூடயிருக்கிறார்.

"அவர்களோ கலகம்பண்ணி, அவருடைய பரிசுத்த ஆவியை விசனப்படுத்தினார்கள்; அதினால் அவர் அவர்களுக்குச் சத்துருவாய் மாறி, அவரே அவர்களுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணினார். ஆகிலும் அவர் பூர்வநாட்களையும், மோசேயையும், தம்முடைய ஜனத்தையும் நினைவுகூர்ந்தார்; ஆனாலும் அவர்களையும், தமது மந்தையின் மேய்ப்பனையும் சமுத்திரத்திலிருந்து ஏறப்பண்ணினவர் இப்பொழுது எங்கே?" (ஏசா 63:10,11).

கர்த்தர் தம்முடைய ஜனங்களை மீட்டு, அவர்களை அவர்களுடைய தேசத்தில் பாதுகாப்பாக அழைத்துக்கொண்டு வந்து, குடியேற்றினார். அங்கே அவர்களை ஆசீர்வதித்தார். ஆனால் அவர்களோ கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளை மறந்துவிட்டார்கள். கர்த்தர் தங்களுக்குக் காண்பித்த இரக்கங்களையும், திரளான தயவுகளையும் நினைக்கவில்லை. அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணி, அவருடைய பரிசுத்த ஆவியை விசனப்படுத்தினார்கள் (ஏசா 63:10).

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினார்கள். கர்த்தரோடு பண்ணிய உடன்படிக்கையை முறித்துப்போட்டார்கள். கர்த்தருக்கு விரோதமாய் தங்கள் புயத்தை உயர்த்தினார்கள். அவர்கள் கர்த்தரை விசுவாசிக்கவில்லை. கர்த்தருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள். கர்த்தருடைய பிள்ளைகள், கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ணியது, கர்த்தருடைய பரிசுத்த ஆவியானவருக்கு விசனமாயிற்று.

கர்த்தர் தம்முடைய நீதியினால், இஸ்ரவேல் ஜனத்திற்கு இதுவரையிலும் கொடுத்து வந்த, தம்முடைய தெய்வீக பாதுகாப்பை விலக்கிக்கொண்டார். கர்த்தர் இதுவரையிலும் அவர்களுக்கு சிநேகிதராகவும், சகாயராகவும், இரட்சகராகவும் இருந்தார். ஆனால் இப்போதோ அவர்கள் தமக்கு விரோதமாய்க் கலகம்பண்ணியதினிமித்தமாய், கர்த்தர் அவர்களுக்கு சத்துருவாய் மாறினார். கர்த்தரே இஸ்ரவேல் ஜனங்களுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணினார். இஸ்ரவேலின் சத்துருக்களுக்கு விரோதமாய் இது வரையிலும் யுத்தம்பண்ணின கர்த்தர், இப்போது இஸ்ரவேலருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார்மீது தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு ஒவ்வொன்றாய் வருகிறது. அவர்கள் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோதும், அதன்பின்பு அவர்கள் கானான் தேசத்தில் குடியேறியபோதும், தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது தொடர்ந்து வந்தது. இஸ்ரவேல் ஜனத்தாரின் பாவங்களினிமித்தமாய், கர்த்தர் அவர்களுக்கு சத்துருவானார். நம்முடைய பாவம், கர்த்தரை நமக்கு சத்துருவாக்கும்.

கர்த்தர் தம்முடைய சுபாவத்தின் பிரகாரம் நம்மீது அன்பாகவும், இரக்கமாகவும், தயவாகவும் இருக்கிறார். நம்முடைய பாவங்களோ கர்த்தரை நம்மீது கோபப்பட வைத்துவிடுகிறது. பாவிகள் தங்கள் சொந்த பாவங்களினால், கர்த்தருடைய சிநேகத்தை இழந்துவிடுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்தபோது, அவர்களுடைய விக்கிரகாராதனையினிமித்தமாயும், மற்ற பாவங்களினிமித்தமாயும், கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வந்தது. கர்த்தர் அவர்களுக்கு சத்துருவாய் மாறினார். அவர்களுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணினார்.

கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மீது எப்போதும் கோபப்படுகிறவரல்ல. இஸ்ரவேல் ஜனத்தார் பாவம் செய்தபோது, கர்த்தர் தம்முடைய நீதியினிமித்தமாய் அவர்கள்மீது கோபப்பட்டாலும், தம்முடைய இரக்கங்களின்படியும், தம்முடைய திரளான தயவுகளின்படியும் இஸ்ரவேல் வம்சத்திற்கு நன்மை செய்ய விரும்புகிறார்.

கர்த்தர் பூர்வநாட்களையும், மோசேயையும், தம்முடைய ஜனத்தையும் நினைவுகூர்ந்தார் (ஏசா 63:11). இந்த வாக்கியத்திற்கு வேதபண்டிதர்கள் இரண்டுவிதமாக வியாக்கியானம் சொல்லுகிறார்கள். அவையாவன : 1. இந்த வாக்கியம் கர்த்தருடைய ஜனத்தைக் குறிப்பிடுகிறது. 2. இந்த வாக்கியம் கர்த்தரைக் குறிப்பிடுகிறது.

கர்த்தர் பூர்வநாட்களை நினைவுகூருகிறார். கர்த்தர் தங்களுடைய முற்பிதாக்களுக்கு செய்த அதிசயங்களும், அற்புதங்களும் இப்பொழுது ஏன் நடைபெறவில்லை என்று இஸ்ரவேல் ஜனத்தார் ஆச்சரியப்படுகிறார்கள். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தங்களை விடுதலை பண்ணின கர்த்தர் எங்கே என்று ஏக்கத்தோடு கேட்கிறார்கள். எகிப்திலிருந்து தங்கள் முற்பிதாக்களை விடுதலைபண்ணின கர்த்தரால், இப்போது பாபிலோன் தேசத்திலிருந்து தங்களை ஏன் விடுதலை பண்ண முடியாமல் போயிற்று என்றும் கேட்கிறார்கள். எலியாவின் தேவன் எங்கே என்றும், தங்கள் முற்பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் எங்கே என்றும் கேட்கிறார்கள். "ஆனாலும் அவர்களையும், தமது மந்தையின் மேய்ப்பனையும் சமுத்திரத்திலிருந்து ஏறப்பண்ணினவர் இப்பொழுது எங்கே?" (ஏசா 63:11).

இஸ்ரவேல் ஜனத்தாரின் முற்பிதாக்களும் கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினார்கள். அவர்களும் கர்த்தருடைய பரிசுத்த ஆவியை விசனப்படுத்தினார்கள். கர்த்தருக்கு கோபத்தை உண்டுபண்ணினார்கள். ஆனாலும் கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னித்தார். அவர்களுக்கு இரக்கம் காண்பித்தார். அவர்களை கானான் தேசத்திற்கு வழிநடத்திச் சென்று, அந்த தேசத்திலே அவர்களை குடியேற்றினார்.

இஸ்ரவேல் ஜனத்தாரின் முற்பிதாக்கள், கர்த்தருக்கு விரோதமான கலகக்காரர்களாயிருந்தாலும், அவர்கள் கர்த்தரிடத்திலிருந்து மன்னிப்பையும், தயவையும், கிருபையையும், இரக்கத்தையும் பெற்றுக்கொண்டார்கள். அவர்களுக்கு இரக்கம் காண்பித்த கர்த்தர், இப்போது தங்களுக்கு ஏன் இரக்கம் காண்பிக்கவில்லை என்று பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் சந்தேகத்தோடு கேள்வி கேட்கிறார்கள். தங்களுடைய கேள்வியை கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிற வார்த்தைகளாகவும் பயன்படுத்துகிறார்கள்.

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தம்முடைய ஜனத்தை விடுதலைபண்ணின கர்த்தர், இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து தங்களையும் விடுதலைபண்ணவேண்டுமென்று இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்கள்.

"எழும்பு, எழும்பு, பெலன்கொள்; கர்த்தரின் புயமே, முந்தினநாட்களிலும் பூர்வ தலைமுறைகளிலும் எழும்பினபடி எழும்பு; இராகாபைத் துண்டித்ததும் வலுசர்ப்பத்தை வதைத்ததும் நீதானல்லவோ? மகா ஆழத்தின் தண்ணீர்களாகிய சமுத்திரத்தை வற்றிப்போகப்பண்ணினதும், மீட்கப்பட்டவர்கள் கடந்துபோகக் கடலின் பள்ளங்களை வழியாக்கினதும் நீதானல்லவோ?" (ஏசா 51:9,10).

"ஆகிலும் அவர் பூர்வநாட்களையும், மோசேயையும், தம்முடைய ஜனத்தையும் நினைவுகூர்ந்தார்; ஆனாலும் அவர்களையும், தமது மந்தையின் மேய்ப்பனையும் சமுத்திரத்திலிருந்து ஏறப்பண்ணினவர் இப்பொழுது எங்கே?" (ஏசா 63:11). கர்த்தர் இந்த வாக்கியத்தை தமக்கு தாமே நினைத்துப் பார்த்து, தம்மிடத்தில் இந்தக் கேள்வியைக் கேட்டுக்கொள்வதாகவும், வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் பூர்வநாட்களை நினைத்துப் பார்க்கிறார். தாம் ஆபிரகாமோடு செய்து கொண்ட உடன்படிக்கையையும் நினைத்துப் பார்க்கிறார். "நான் யாக்கோபோடே பண்ணின என் உடன்படிக்கையையும், ஈசாக்கோடே பண்ணின என் உடன்படிக்கையையும், ஆபிரகாமோடே பண்ணின என் உடன்படிக்கையையும் நினைப்பேன்; தேசத்தையும் நினைப்பேன்" (லேவி 26:42).

இஸ்ரவேல் ஜனத்தாரின் முற்பிதாக்களும் கர்த்தருக்கு விரோதமாய் கலகம்பண்ணினார்கள். அவர்களும் கர்த்தருடைய பரிசுத்த ஆவியை விசனப்படுத்தினார்கள். கர்த்தருடைய கிருபைகளையும், இரக்கங்களையும், தயவுகளையும் பெற்றுக்கொள்வதற்கு அவர்களும் அபாத்திரராயிருந்தார்கள். ஆனாலும் கர்த்தர் அவர்களுக்கு இரக்கங்களையும், தயவுகளையும் காண்பித்தார். எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து அவர்களை விடுதலைபண்ணினார்.

கர்த்தருடைய கிருபையினால் விடுவிக்கப்பட்ட இஸ்ரவேல் ஜனங்கள், மறுபடியுமாய் கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினார்கள். தங்கள்மீது தாங்களே பிரச்சனைகளை வரவழைத்துக்கொண்டார்கள். "கடுங்கோபி ஆக்கினைக்குள்ளாவான்; நீ அவனைத் தப்புவித்தால் திரும்பவும் தப்புவிக்கவேண்டியதாய் வரும்" (நீதி 19:19).

கர்த்தர் அவர்கள்மீது கோபங்கொண்டு, அவர்களை இனிமேல் தப்புவிக்கப் போவதில்லை என்று சொல்லிவிட்டார். "அப்படியிருந்தும் நீங்கள் என்னை விட்டு, அந்நிய தேவர்களைச் சேவித்தீர்கள்; ஆகையால் இனி உங்களை இரட்சியேன்" (நியா 10:13).

கர்த்தர் தம்முடைய ஜனத்தை இனிமேல் இரட்சிக்கக்கூடாது என்று தீர்மானம்பண்ணியிருந்தாலும், தம்முடைய இரக்கங்களினாலும், திரளான தயவுகளினாலும் அவர்களுக்கு மறுபடியுமாய் நன்மை செய்கிறார். கர்த்தர் அந்தப் பூர்வநாட்களை இப்போது நினைத்துப் பார்க்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் இந்த வசனத்தை கர்த்தரிடத்தில் சொல்லி ஜெபிக்கிறார்கள் என்றும், கர்த்தர் தாமே இந்த வசனத்தை தமக்குத்தாமே சொல்லிக்கொள்கிறார் என்றும் இரண்டுவிதமாக வியாக்கியானம் சொல்லப்படுகிறது. கர்த்தர் மோசேயின் மூலமாய், தம்முடைய ஜனங்களை செங்கடல் வழியாக வழிநடத்தி, அவர்களை இரட்சித்த சம்பவமும் இங்கு சொல்லப்பட்டிருக்கிறது.

இப்போது யுத்தம் இஸ்ரவேல் புத்திரருக்கும் அவர்களுடைய சத்துருக்களுக்கும் விரோதமாக நடைபெறவில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை விட்டு விலகி, அந்நிய தெய்வங்களை சோரமார்க்கமாய்ப் பின்பற்றி, கர்த்தருக்கு சத்துருக்களாய் மாறிப்போனார்கள். இப்போது யுத்தம் கர்த்தருக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் இடையே நடைபெறுகிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களினிமித்தமாக அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார். இந்த யுத்தத்தின்போது கர்த்தர் தம்முடைய கிருபையினால் பூர்வநாட்களை நினைத்துப் பார்க்கிறார். அவர் ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையை நினைத்துப் பார்க்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு எதிராக விரோதம்பண்ணாமல், அவர்களுக்கு மறுபடியும் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் காண்பிக்கிறார்.

கர்த்தருடைய கிருபை இஸ்ரவேல் புத்திரருக்கு கிடைத்திருக்கிறது. கன்மலையாகிய கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை அவர்களுடைய சத்துருக்களின் கைகளில் விற்றுப்போடவில்லை. கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை அவர்களுடைய சத்துருக்களின் கைகளில் ஒப்புக்கொடுக்கவுமில்லை.

கர்த்தர் மறுபடியுமாய் இஸ்ரவேல் புத்திரரோடு கூடயிருந்து, அவர்களுடைய சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார். கர்த்தர் தங்களோடு கூடயிருப்பதினால், இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் ஆயிரம் சத்துருக்களை துரத்துகிறான். அவர்களில் இரண்டுபேர் சத்துருக்களில் பதினாயிரம்பேரைத் துரத்துகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு கூடயில்லையென்றால், சத்துருக்கள் இஸ்ரவேல் புத்திரரை துரத்துவார்கள்.

தாங்கள் துரத்தப்படும்போது சத்துருக்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப்பற்றியும், அவருடைய குணாதிசயங்களைப்பற்றியும் நினைத்துப் பார்க்கிறார்கள். அந்நிய தேசத்தார் இஸ்ரவேலின் தேவனையும், தங்களுடைய தேவர்களையும் ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அவர்களுக்கு கன்மலையாகயிருப்பதை சத்துருக்கள் அறிந்துகொள்கிறார்கள்.

புறஜாதியார் தங்களுடைய தெய்வங்களையும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரையும் ஒப்பிட்டுப் பார்த்து, "தங்கள் கன்மலை நம்முடைய கன்மலையைப்போல் அல்ல என்று நம்முடைய சத்துருக்களே தீர்மானிக்கிறார்கள்" *(உபா 32:31)* என்று சொல்லுகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்காக, அவர்களுடைய சத்துருக்கள்மீது யுத்தம்பண்ணுகிறார். கர்த்தர் சத்துருக்களை இஸ்ரவேல் புத்திரருக்கு கீழ்ப்படுத்துகிறார். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரோ கர்த்தர் தங்களுக்கு செய்த உதவிகளையும், அவர் தங்களுக்காக பண்ணின யுத்தங்களையும் மறந்து, கர்த்தரை விட்டு விலகி, அந்நிய தெய்வங்களை சோரமார்க்கமாய்ப் பின்பற்றிப்போகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தாருடைய கீழ்ப்படியாமையினிமித்தமாகவும், கலகக்குணத்தினிமித்தமாகவும், கர்த்தர் அவர்களை அவர்களுடைய சத்துருக்களின் கைகளில் ஒப்புக்கொடுத்துவிடுகிறார்.

"நான் சீக்கிரத்தில் அவர்கள் எதிராளிகளைத் தாழ்த்தி, என் கையை அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாகத் திருப்புவேன்" *(சங் 81:14).*

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை விட்டு விலகி, விக்கிரகங்களை ஆராதிக்கும்போது அவர்கள் கர்த்தருக்கு கசப்பானவர்களாகவும், அருவருப்பானவர்களாகவும் இருக்கிறார்கள். தம்மைவிட்டுப் பின்வாங்கிப்போன இஸ்ரவேல் ஜனத்தாரின் குணாதிசயங்களைப்பற்றிச் சொல்லும்போது, கர்த்தர் அவர்களை தாழ்ந்த ஜாதியான திராட்சச்செடிகள் என்றும் கசப்பான திராட்சப்பழங்கள் என்றும் ஒப்பிட்டு சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

"அவர்களுடைய திராட்சச்செடி, சோதோமிலும் கொமோரா நிலங்களிலும் பயிரான திராட்சச்செடியிலும் தாழ்ந்த ஜாதியாயிருக்கிறது, அவைகளின் பழங்கள் பித்தும் அவைகளின் குலைகள் கசப்புமாய் இருக்கிறது. அவர்களுடைய திராட்சரசம் வலுசர்ப்பங்களின் விஷமும் விரியன்பாம்புகளின் கொடிய விஷமுமானது" *(உபா 32:32,33).*

இஸ்ரவேல் புத்திரர் காட்டுத் திராட்சச்செடிக்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறார்கள். *(ஏசா 5:1-7; எரே 2:21; சங் 80:9; ஓசி 10:1).* இதன் கனி காட்டு திராட்சச்செடியின் கனியைவிட கசப்பானது. பாம்பின் விஷம் போன்றது. கடித்தால் உடனடி மரணம். *(உபா 32:32-33).* இஸ்ரவேல் புத்திரர் நியாயத்தீர்ப்பிற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள். *(உபா 32:19-26)* நியாயத்தீர்ப்பு ஏற்கெனவே ஆயத்தமாயிருக்கிறது. தீர்ப்பு நிறைவேறுவதில் காலதாமதம் ஒன்றும் நேரிடாது. *(உபா 32:34-35).*

இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களினிமித்தமாக அவர்களுக்கு அழிவு நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் கர்த்தர் தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும், இஸ்ரவேல் புத்திரரை அழிவுக்கு நீங்கலாக்கி இரட்சிக்கிறார். அவர்களை ஒடுக்கிறவர்களின் கைகளிலிருந்தும், துன்பப்படுத்துகிறவர்களின் கைகளிலிருந்தும் விலக்கி மீட்டுக்கொள்கிறார். இது கர்த்தருடைய பெரிதான கிருபை.

இஸ்ரவேல் ஜனத்தார் இப்போது தாழ்ந்த ஜாதியான திராட்சச்செடியாக இருந்தாலும் அவைகளின் பழங்கள் பித்தும், கொலைகள் கசப்புமாகயிருந்தாலும், கர்த்தர் தமது கிருபையினால் அவர்களை மறுபடியுமாய் நினைவுகூர்ந்து, அவர்களுக்கு தயவு காண்பிக்கிறார். கர்த்தர் இதுபற்றிச் சொல்லும்போது :

"இது என்னிடத்தில் வைத்துவைக்கப்பட்டு, என் பொக்கிஷங்களில் இது முத்திரை போடப்பட்டிருக்கிறதில்லையோ? பழிவாங்குவதும் பதிலளிப்பதும் எனக்கு உரியது; ஏற்றகாலத்தில் அவர்களுடைய கால் தள்ளாடும்; அவர்களுடைய ஆபத்துநாள் சமீபமாயிருக்கிறது; அவர்களுக்கு நேரிடும் காரியங்கள் தீவிரித்துவரும்" *(உபா 32:34,35)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"பழிவாங்குவதும் பதிலளிப்பதும் எனக்கு உரியது" என்னும் இந்த வாக்கியம் ரோமர் *12:19; எபி 10:30* ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது *(உபா 32:35-42).*

இஸ்ரவேல் ஜனத்தாருடைய துன்மார்க்கத்தினிமித்தமாக கர்த்தர் அவர்கள்மீது கோபமாகயிருக்கிறார். அவர்களுடைய துன்மார்க்கத்தை கர்த்தர் மறந்துவிடாமல் அதை தமது நினைவில் வைத்திருக்கிறார். இஸ்ரவேல் புத்திரருடைய மீறுதல்களும் துன்மார்க்கங்களும், கர்த்தரிடத்தில் வைத்து வைக்கப்பட்டிருக்கிறது. அவை கர்த்தருடைய பொக்கிஷங்களில் முத்திரை போடப்பபட்டிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை துன்பப்படுத்தினார்கள். அவர்கள் நீதிமான்களின் இரத்தத்தை சிந்தினார்கள்.

"நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் முதல் தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே நீங்கள் கொலைசெய்த பரகியாவின் குமாரனாகிய சகரியாவின் இரத்தம் வரைக்கும், பூமியின்மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழியெல்லாம் உங்கள்மேல் வரும்படியாக இப்படிச் செய்வீர்கள்" *(மத் 23:35).*

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளையும், அவருடைய ஊழியக்காரர்களையும் உபத்திரவப்படுத்தி கொன்றுபோட்டார்கள். இஸ்ரவேல் ஜனத்தாருடைய பாவங்களினிமித்தமாக கர்த்தர் அவர்களை பழிவாங்குவார். "பழிவாங்குவதும், பதிலளிப்பதும் எனக்குரியது" என்றும், "ஏற்ற காலத்தில் அவர்களுடைய கால் தள்ளாடும்" என்றும், "அவர்களுடைய ஆபத்து நாள் சமீபமாயிருக்கிறது" என்றும், "அவர்களுக்கு நேரிடும் காரியங்கள் தீவிரித்து வரும்" என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

துன்மார்க்கருடைய அக்கிரமங்கள் எல்லாவற்றையும் கர்த்தர் தம்முடைய பொக்கிஷங்களில் சேமித்து வைத்து அதற்கு முத்திரை போட்டிருக்கிறார். நம்முடைய பாவங்களை கர்த்தர் நினைத்துப் பார்க்கமாட்டார் என்றும், அதை உடனே மறந்துவிடுவார் என்றும் நினைத்து, நாம் துணிகரமாய்ப் பாவம் செய்யக்கூடாது. நம்முடைய பாவங்களினிமித்தமாக, ஏற்ற காலத்தில், நம்முடைய கால்கள் தள்ளாடும்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய பாவங்களினிமித்தமாக கர்த்தரைக் கோபப்படுத்தினார்கள். ஆனாலும் அவர்கள் கர்த்தரோடு ஐக்கியமாகயிருந்து, கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தி, தங்களுடைய துன்பங்களிலும், வேதனைகளிலும் அவர்கள் கர்த்தரை நோக்கி அபயமிட்டதினால், கர்த்தர் தமது கிருபையினால் அவர்களை நோக்கிப் பார்ப்பார். அவர்களுக்கு உதவி செய்ய முன்வருவார்.

மோசே கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும், அவர் தம்முடைய ஊழியக்காரர்மேல் பரிதாபப்படுவதையும் பற்றிச் சொல்லும்போது, "கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்த்து, அவர்கள் பெலன் போயிற்றென்றும், அடைக்கப்பட்டவர்களாவது விடுதலை பெற்றவர்களாவது ஒருவரும் இல்லையென்றும் காணும்போது, தம்முடைய ஊழியக்காரர்மேல் பரிதாபப்படுவார்" *(உபா 32:36)* என்று சொல்லுகிறார்.

கர்த்தர் கிருபையுள்ளவர். இரக்கம் உள்ளவர். தம்முடைய பிள்ளைகள் தாங்கள் செய்த பாவங்களுக்காக மனம் வருந்தி, தம்மிடத்தில் திரும்பி வரும்போது கர்த்தர் அவர்களைத் தண்டிக்காமல், அவர்கள்மேல் பரிதாபப்படுவார். பாவம் செய்தால் மனந்திருந்த வேண்டும். மனந்திருந்தாமல் பாவம் செய்து கொண்டே போனால் கர்த்தர் பரிதாபப்படுவார் என்று எதிர்பார்க்கக்கூடாது. கர்த்தர் வாக்கு மாறாதவர். பாவிகளைத் தண்டிக்கிறவர். பாவம் செய்கிறவர்களைக் கர்த்தரால் ஆசீர்வதிக்க முடியாது. ஆகையினால் பாவம் செய்கிறவர்கள் காலதாமதம் பண்ணாமல் தங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திருந்தி, கர்த்தருடைய சமுகத்தில் வந்து, அவருடைய பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுது கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்மேல் பரிதாபப்படுவார்.

“அடைக்கப்பட்டவர்களாவது விடுதலை பெற்றவர்களாவது ஒருவரும் இல்லை” என்னும் வாக்கியத்திற்கு கர்த்தருடைய பிள்ளைகளை நியாயத்தீர்ப்பிலிருந்து பாதுகாப்பதற்கு ஒருவருமில்லை என்பது பொருளாகும்.

இஸ்ரவேல் ஜனத்தார் நியாயாபதிகளின் காலத்தில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். கர்த்தருடைய கோபம் அவர்களுக்கு விரோதமாக எழும்பிற்று. கர்த்தர் அவர்களை ஒடுக்குகிறவர்களின் கைகளுக்கும், உபத்திரவப்படுத்துகிறவர்களின் கைகளுக்கும் ஒப்புக்கொடுத்தார். இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் திரும்பி வந்தபோது, கர்த்தர் தம்முடைய கிருபைகளையும் இரக்கங்களையும் அவர்களுக்கு வெளிப்படுத்தினார். சத்துருக்களின் கைகளிலிருந்து இஸ்ரவேல் ஜனத்தாரை மீட்டு இரட்சிப்பதற்காக, கர்த்தர் அவர்களை இரட்சிக்கும் நியாயாதிபதிகளை எழுப்பினார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களை ஒடுக்குகிறவர்களின் நிமித்தம் தவித்தபோது, கர்த்தர் அவர்கள்மீது மனஸ்தாபப்பட்ட சம்பவம் நியாயாதிபதிகள் 2:11-18 ஆகிய வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

நியாயாதிபதிகளின் காலத்தில், இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரைவிட்டு, பாகாலையும் அஸ்தரோத்தையும் சேவிக்கிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை மறந்துவிடுகிறார்கள். கர்த்தரைப் பின்பற்றாமல் அந்நிய தேவர்களைப் பின்பற்றுகிறார்கள். அவர்கள் தீங்கு செய்கிறார்கள்.

கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து, அவரைக் கோபப்படுத்துவதே மிகப்பெரிய தீங்கு. கர்த்தரைக் கோபப்படுத்துகிறவர்கள் தங்களுடைய சுயவிருப்பத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இவர்கள் கர்த்தருடைய விருப்பத்திற்கும், சித்தத்திற்கும் முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

இஸ்ரவேல் புத்திரர், தங்கள் தேவனாகிய கர்த்தரை விட்டுவிடுகிறார்கள் (நியா 2:12). அவர்கள் கர்த்தரைவிட்டு பாகாலையும் அஸ்தரோத்தையும் சேவிக்கிறார்கள் (நியா 2:13). கர்த்தரை சேவியாமல், விக்கிரகங்களை சேவிப்பது மிகப்பெரிய பாவம். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரோடு உடன்படிக்கையில் இணைந்திருக்கிறார்கள். ஆனால் கர்த்தரை விட்டுவிடுகிறார்கள். மணவாட்டி தன்னுடைய மணவாளனை விட்டு விட்டு, வேறு புருஷரோடு ஓடிப்போவதுபோல, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை விட்டு பாகாலையும் அஸ்தரோத்தையும் சேவிக்கிறார்கள்.

“என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள்; தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக் கொண்டார்கள்” (எரே 2:13).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை சேவியாமல், அவரை விட்டு விலகிப்போகும்போது, நாஸ்திகர்களாக மாறவில்லை. அவர்கள் தேவன் இல்லை என்று சொல்லவில்லை. அவர்கள் கர்த்தரை சேவியாமல் பாகால்களை சேவிக்கிறார்கள். அந்நிய தெய்வங்களை சேவிக்கிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் ஒருவரே. ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ தங்களுக்கு ஏராளமான அந்நிய தெய்வங்களை உண்டுபண்ணுகிறார்கள். விக்கிரகங்களின் எண்ணிக்கையைப் பெருக்குகிறார்கள்.

"பாகால்" என்னும் பெயருக்கு "தெய்வங்கள்" என்று பொருள். "அஸ்தரோத்" என்னும் பெயருக்கு, "ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்" என்று பொருள். இரண்டுமே பன்மைப்பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறார்கள். ஒன்றாகிய மெய்த்தேவனாகிய கர்த்தரை விட்டுவிடுகிறார்கள். கர்த்தருக்குப் பதிலாக தங்களுக்கு ஏராளமான தெய்வங்களை உண்டுபண்ணுகிறார்கள்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே, அவர்களுடைய முற்பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவர். கர்த்தரே அவர்களை கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வந்தவர். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ தங்களுடைய தேவனாகிய கர்த்தரை விட்டு, தங்களைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களுடைய தேவர்களாகிய அந்நிய தேவர்களைப் பின்பற்றிப்போய், அவர்களைப் பணிந்துகொண்டு, கர்த்தருக்குக் கோபமூட்டுகிறார்கள் *(நியா 2:12)*.

கர்த்தர் இஸ்ரவேலின்மேல் கோபமுண்டவராயிருக்கிறார். அவர்களைத் தண்டிக்கிறார். அவர்கள் அப்புறம் தங்கள் சத்துருக்களுக்கு முன்பாக நிற்க முடியவில்லை. கர்த்தர் அவர்களை, கொள்ளையிடுகிற கொள்ளைக்காரர் கையில் ஒப்புக்கொடுக்கிறார். அவர்களைச் சுற்றிலும் இருக்கிற அவர்கள் பகைஞரின் கையிலே விற்றுப்போடுகிறார் *(நியா 2:14)*.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதித்தார். அவர்களுக்கு கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுத்தார். அவர்கள் கால்மிதிக்கிற தேசமெல்லாம் அவர்களுக்கு சொந்தமாகும் என்று வாக்குப்பண்ணினார். கர்த்தர் அவர்களுடைய சத்துருக்களோடு அவர்களுக்காக யுத்தம்பண்ணினார். இஸ்ரவேல் புத்திரரும், கர்த்தருடைய கிருபையினால், கானானியரைத் துரத்தினார்கள்.

ஆனால் இப்போதோ கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது கோபமாயிருக்கிறார். அவர்கள் புறப்பட்டுப்போகிற இடமெல்லாம், கர்த்தருடைய கை, அவர்களுக்கு விரோதமாக தீமைக்கென்றே இருக்கிறது.

அவர்கள் மிகவும் நெருக்கப்படுகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை காரணமில்லாமல் தண்டிக்கவில்லை. கர்த்தர் நீதியும் நியாயமுமுள்ளவர். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நீதியானது. கர்த்தர் ஏற்கெனவே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லியபடியும், அவர்களுக்கு ஆணையிட்டிருந்தபடியும் அவர்களைத் தண்டிக்கிறார் *(நியா 2:15)*.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைவிட்டு விலகிப்போகிறார்கள். பாகால்களையும் அஸ்தரோத்தையும் சேவிக்கிறார்கள். சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். ஆனால் இந்த யுத்தத்திலே இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயம் கிடைக்கவில்லை. ஜெயம் கர்த்தரால் மாத்திரமே வரும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது கோபமாயிருக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயத்தைக் கட்டளையிடாமல், அவர்களுடைய சத்துருக்களுக்கு ஜெயத்தைக் கட்டளையிடுகிறார்.

புறஜாதி ஜனங்கள் கர்த்தரை அறியாதவர்கள். அவர்கள் கர்த்தரை சேவியாதவர்கள். ஆனாலும் கர்த்தர் அவர்களுக்கு யுத்தத்திலே ஜெயத்தைக் கொடுக்கிறார். இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தரை அறிந்திருக்கிறவர்கள். ஆனால் அவர்கள் இப்போது கர்த்தரைவிட்டு விலகிப்போனவர்கள். தம்மைவிட்டு விலகிப்போன இஸ்ரவேல் ஜனங்களுக்கு யுத்தத்திலே ஜெயத்தைக் கொடுப்பதற்கு பதிலாக, தம்மை அறியாத அந்நிய ஜாதியாருக்கு ஜெயத்தைக் கொடுப்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

இப்போது இஸ்ரவேல் புத்திரர் புறப்பட்டுப்போகிற இடமெல்லாம், கர்த்தருடைய கை தீமைக்கென்றே அவர்களுக்கு விரோதமாயிருக்கிறது. துரத்தப்பட்ட கானானியர் இப்போது இஸ்ரவேல் புத்திரரைத் துரத்துகிறார்கள். யுத்தத்திலே தோற்றுப்போன கானானியர், இப்போது ஜெயிக்கிறார்கள். கர்த்தருடைய கிருபையும், இரக்கமும், பாதுகாப்பும், பராமரிப்பும் இஸ்ரவேல் புத்திரருக்கு கிடைக்கவில்லை. இதுவே இஸ்ரவேல் புத்திரருடைய தோல்விக்கும், கானானியருடைய ஜெயத்திற்கும் அடிப்படை காரணம்.

கர்த்தர் கிருபையும் இரக்கமுமுள்ளவர். அவருடைய கிருபைக்கு அளவே இல்லை. இஸ்ரவேல் புத்திரர் மிகவும் நெருக்கப்பட்டபோது, கர்த்தர் அவர்களுக்காக மனஸ்தாபப்படுகிறார். அவர்களுடைய நெருக்கத்திற்கும், பாடுகளுக்கும், அவர்களுடைய பாவங்களும், அக்கிரமங்களுமே காரணம். அவர்கள் தங்களுடைய மதியீனத்தினால், தங்களுக்குத் தாங்களே கேடு வரவழைத்துக்கொள்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் அதிகமாய் நெருக்கப்படும்போது, கர்த்தர் தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும், அவர்களை இரட்சிக்கிறார். கர்த்தர் அவர்களுடைய நெருக்கங்களையும், கஷ்டங்களையும் பார்த்து மனஸ்தாபப்படுவதினாலும், அவருடைய மனவுருக்கத்தினாலும், அவர்களை கஷ்டங்களுக்கு விலக்கி இரட்சிக்கிறார். மனுஷருடைய சுயபுத்தியினாலோ, சுயபக்தியினாலோ, சுயமுயற்சியினாலோ, அவர்களுக்கு இரட்சிப்பு வராது. இரட்சிப்பு கர்த்தருடையது. கர்த்தர் தம்முடைய கிருபையினாலேயே மனுஷரை இரட்சிக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை விட்டுவிலகி, விக்கிரகங்களை சேவித்தபோது, கர்த்தர் அவர்கள்மேல் கோபப்படுகிறார். கர்த்தருடைய கை அவர்களுக்கு விரோதமாய்த் தீமைகென்று எழும்புகிறது. அவர்களால் தங்களுடைய சத்துருக்களுக்கு முன்பாக நிற்கமுடியவில்லை. விக்கிரகங்களை ஆராதிக்கிற இஸ்ரவேல் ஜனத்தாரை, கர்த்தர் கொள்ளையிடுகிற கொள்ளைக்காரர் கையிலே ஒப்புக்கொடுத்துவிடுகிறார். அவர்களுடைய பகைஞரின் கையிலே அவர்களை விற்றுப்போடுகிறார்.

இஸ்ரவேல் புத்திரருக்கு நீதியான தண்டனை கிடைத்திருக்கிறது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பினால் அவர்கள் மிகவும் நெருக்கப்படுகிறார்கள். சத்துருக்கள் இஸ்ரவேல் புத்திரரை இறுக்கப்பிடித்து ஒடுக்குவார்கள். இஸ்ரவேல் புத்திரரும் அவர்கள் நிமித்தமாக தவியாய்த் தவிப்பார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தின் தவிப்பைப் பார்த்து மனஸ்தாபப்படுவார்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய பாவங்களைக் குறித்தோ, அக்கிரமங்களைக் குறித்தோ தங்கள் இருதயங்களில் வேதனைப்படவில்லை. சத்துருக்கள் தங்களை இறுகப்பிடித்து நொறுக்குவதினிமித்தமாகவே, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் இருதயங்களில் வேதனைப்படுகிறார்கள். அவர்களிடத்தில் தங்கள் பாவங்களைக் குறித்த குற்றவுணர்வு காணப்படவில்லை. தங்கள் நெருக்கத்தினிமித்தமாகவும், ஒடுக்கத்தினிமித்தமாகவும் வேதனைப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களினிமித்தமாக அவர்களுக்கு தண்டனை கொடுக்கப்படுகிறது. இந்தத் தண்டனையை அனுபவிப்பதற்கு அவர்கள் பாத்திரவான்களாயிருக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை விட்டு விலகி, அந்நிய தெய்வங்களைப் பின்பற்றுவதினால் அவர்கள்மீது சாபம் வந்திருக்கிறது. இந்த சாபத்திற்கும் அவர்கள் பாத்திரவான்களாயிருக்கிறார்கள்.

நாம் கர்த்தருடைய கிருபையின் காலத்தில் ஜீவிக்கிறோம். நம்முடைய பாவங்களுக்கு தக்கபடி கர்த்தர் நம்மை உடனே தண்டித்துவிடாமல், நாம் மனந்திரும்புவதற்காக, கர்த்தரை பொறுமையோடு காத்திருக்கிறார். கர்த்தருடைய முழுகோபமும் நம்மீது காண்பிக்கப்படவில்லை. கர்த்தருடைய உக்கிரகோபம் வெளிப்படும்போது, அந்தக் கோபத்தை எந்த மனுஷராலும் தாங்கிக்கொள்ள முடியாது.

இஸ்ரவேல் ஜனங்கள் மிகவும் நெருக்கப்படுகிறார்கள். சத்துருக்கள் அவர்களைக் கொள்ளையிடுகிறார்கள். அவர்களை கொள்ளையிடுகிறவர்களின் கைகளுக்கு நீங்கலாக்கி இரட்சிப்பதற்காக, கர்த்தர் நியாயாதிபதிகளை எழுப்புகிறார். இந்த நியாயாதிபதிகள் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலிருந்தே எழுப்பப்படுகிறார்கள். கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக, தம்முடைய பிள்ளைகளில் ஒரு சிலரைத் தெரிந்தெடுத்து, அவர்களுக்கு விசேஷித்த கிருபைகளைக் கொடுக்கிறார். இஸ்ரவேல் புத்திரரை இரட்சிப்பதற்காகவும், அவர்களுடைய பாவங்களைக்குறித்து அவர்களுக்கு உணர்த்துவதற்காகவும், கர்த்தர் தம்முடைய ஊழியக்காரருக்கு விசேஷித்த தகுதிகளைக் கொடுக்கிறார்.

கர்த்தருடைய விசேஷித்த கிருபைகளை பெற்றிருக்கிற ஊழியக்காரர்கள், கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக ஊழியம் செய்யவேண்டும். அவர்கள் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். அவர்களிடத்தில் மனப்பெருமையோ, மனமேட்டிமையோ இருக்கக்கூடாது. அவர்கள் மனத்தாழ்மையோடு ஊழியம் செய்யவேண்டும். கர்த்தருடைய நாமமகிமைக்காகவும், அவருடைய ஜனத்தின் பிரயோஜனத்திற்காகவும் ஊழியம் செய்யவேண்டும்.

நியாயாதிபதிகள் கர்த்தருக்கு உண்மையாய் ஊழியம் செய்கிறார்கள். கர்த்தர் நியாயாதிபதிகளோடு கூடயிருக்கிறார். கர்த்தரே நியாயாதிபதிகளை எழுப்பியிருக்கிறார். இவர்கள் இஸ்ரவேல் ஜனத்தாரை இரட்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்.

சபையிலே குழப்பமும், அவிசுவாசமும், பாவமும் அதிகரிக்கும்போது, விசுவாசிகளை சீர்படுத்துவதற்காக, கர்த்தர் விசேஷித்த ஊழியக்காரர்களை எழுப்புகிறார். விசுவாசிகளுக்கு ஏராளமான பிரச்சனைகள் இருக்கும்போது, கர்த்தருடைய ஊழியக்காரர்கள், விசுவாசிகளின் பிரச்சனைகள் நீங்குவதற்கு ஆவிக்குரிய ஆலோசனைகளைச் சொல்லுகிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள், அவர்களிடத்தில் காணப்படுகிற குழப்பங்களையும், தாறுமாறுகளையும் நீக்கிப்போட்டு, அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தை சீர்படுத்துவதற்கு உதவிசெய்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களுக்கு விசேஷித்த ஞானத்தையும், தைரியத்தையும் கொடுக்கிறார். அவர்களுடைய இருதயம் கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்ற இருதயமாயிருக்கும். அவர்கள் முழுஇருதயத்தோடு கர்த்தருக்கு ஊழியம் செய்வார்கள். கர்த்தருடைய சித்தத்தையும் திட்டத்தையும் நிறைவேற்றுவார்கள். கர்த்தர் தம்முடைய கிருபையினாலேயே ஊழியக்காரர்களை எழுப்புகிறார். அவர்களுக்கு ஆவிக்குரிய வரங்களையும் கொடுக்கிறார்.

தங்கள் தேசத்திற்கு ஆசீர்வாதமாயிருக்கிறவர்கள், கர்த்தருடைய விசேஷித்த கிருபைகளைப் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் கர்த்தரால் கொடுக்கப்பட்ட ஈவாகயிருக்கிறார்கள்.

கர்த்தர் நியாயாதிபதிகளை எழும்பப்பண்ணுகிறார். அவர்கள் இஸ்ரவேல் ஜனத்தாரை, கொள்ளையிடுகிறவர்களின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தாரை நியாயம் விசாரிக்கிறார்கள். அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தைகளைப் போதிக்கிறார்கள். ஆவிக்குரிய சத்தியங்களை உபதேசம்பண்ணுகிறார்கள்.

ஆனாலும் இஸ்ரவேல் ஜனத்தார், தங்கள் நியாயாதிபதிகளின் சொல்லைக் கேளாமல், அந்நிய தேவர்களைப் பின்பற்றிச் சோரம்போய், அவைகளைப் பணிந்துகொள்கிறார்கள்; தங்கள் பிதாக்கள் கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகி, அவர்கள் செய்தபடி செய்யாமற்போகிறார்கள். கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். தங்களை இரட்சித்த கர்த்தரை மறந்துவிடுகிறார்கள்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், இஸ்ரவேல் ஜனத்தாரோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். இது புருஷனுக்கும் மணவாட்டிக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டிருக்கிற விவாக உடன்படிக்கையைப்போல பரிசுத்தமானது. ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரோ, கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயில்லை. அவர்கள் உடன்படிக்கையை மீறுகிறார்கள். கர்த்தரை மறந்துவிட்டு, அந்நிய தேவர்களைப் பின்பற்றி சோரம்போகிறார்கள். அவர்கள் விக்கிரகங்களை ஆராதித்து, ஆவிக்குரிய வேசித்தனம் பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் முற்பிதாக்கள், கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்து, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி, கர்த்தருக்குப் பிரியமான வழியில் நடந்தார்கள். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, தங்கள் முற்பிதாக்கள் நடந்த பரிசுத்தமான வழியைவிட்டு சீக்கிரமாய் விலகிப்போய் விடுகிறார்கள். தங்களுடைய முற்பிதாக்கள் செய்தபடி, அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கவில்லை.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை ஆராதியாமல், அந்நிய தெய்வங்களை ஆராதிக்கிறார்கள். தங்களுக்கு ஏராளமான விக்கிரகங்களை உண்டுபண்ணுகிறார்கள். விநோதமான விக்கிரகாராதனைகளை கண்டுபிடிக்கிறார்கள். கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல், கர்த்தருடைய கற்பனையை மீறுகிறார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வருகிறது. கர்த்தர் அவர்களை சத்துருக்கள் கையிலும், அவர்களைக் கொள்ளையிடுகிறவர்கள் கையிலும் ஒப்புக்கொடுத்துவிடுகிறார். அவர்களுடைய பகைஞரின் கையிலே விற்றுப்போடுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் மிகவும் நெருக்கப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய வேதனைகளையும், நெருக்கத்தையும் தாங்கிக்கொள்ள முடியாமல் கர்த்தரிடத்தில் முறையிடுகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய தவிப்பைப் பார்த்து, அவர்கள்மேல் மனஸ்தாபப்படுகிறார். அவர்களைக் கொள்ளையிடுகிறவர்களின் கைக்கு, நீங்கலாக்கி இரட்சிப்பதற்காக கர்த்தர் நியாயாதிபதிகளை எழுப்பப்பண்ணுகிறார்.

கர்த்தர் நியாயாதிபதியோடேகூட இருந்து, அந்த நியாயாதிபதியின் நாட்களிலெல்லாம் அவர்கள் சத்துருக்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சித்துவருகிறார்; இஸ்ரவேல் ஜனத்தார் தங்களை இறுகப்பிடித்து ஒடுக்குகிறவர்களினிமித்தம் தவிக்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய தவிப்பைப் பார்த்து மனஸ்தாபப்படுவார் (நியா 2:18).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு நன்மை செய்கிறார். அவர்களுடைய தவிப்புகளிலிருந்தும், வேதனைகளிலிருந்தும் அவர்களை இரட்சிக்கிறார்.

"அந்நிய தேவர்களைத் தங்கள் நடுவிலிருந்து விலக்கிவிட்டு, கர்த்தருக்கு ஆராதனை செய்தார்கள்; அப்பொழுது அவர் இஸ்ரவேலின் வருத்தத்தைப் பார்த்து மனதுருகினார்" (நியா 10:16).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்வதோடு நின்றுவிடவில்லை. அவர்கள் அந்நிய தேவர்களை தங்கள் நடுவிலிருந்து விலக்கிவிடுகிறார்கள். அவர்கள் இதுவரையிலும் இந்த தேவர்களை சேவித்தார்கள். இப்போதோ அவர்கள் அந்நிய தேவர்களை விலக்கிவிட்டு, கர்த்தருக்கு ஆராதனை செய்கிறார்கள். அவர்கள் மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுக்கிறார்கள். இதுவே மெய்யான மனந்திரும்புதல். அவர்கள் தங்களுடைய பாவங்களுக்காகவும் மனந்திரும்புகிறார்கள். தங்களுடைய பாவங்களிலிருந்தும் மனந்திரும்புகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் இருதயத்தைப் பார்க்கிறார். அவர்களுடைய மனமாற்றத்தை கண்ணோக்கிப் பார்க்கிறார். கர்த்தர் இஸ்ரவேலின் வருத்தத்தைப் பார்த்து மனதுருகுகிறார் (நியா 10:16). அவர்கள்மீது தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் மறுபடியும் காண்பிக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, தங்களுடைய பாவங்களைவிட்டு விலகி, தம்மிடத்தில் மறுபடியும் வந்து சேருவதைப் பார்க்கும்போது, கர்த்தர் அவர்களை சந்தோஷமாய் ஏற்றுக்கொள்கிறார். ஒரு தகப்பன் தன்னுடைய பிள்ளைகளுக்கு இரங்குவதுபோல, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு இரங்குகிறார். அவர்களுடைய வருத்தத்தைப் பார்த்து மனதுருகிறார். அவர்களுக்கு இரக்கம் காண்பிக்கிறார். நம்முடைய பிதாவாகிய தேவன், ஜோதிகளின் பிதாவாகவும், இரக்கங்களின் பிதாவாகவும் இருக்கிறார்.

அம்மோன் புத்திரர் இஸ்ரவேல் புத்திரரையெல்லாம் நெருக்கி ஒடுக்கிக்கொண்டிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தை அம்மோன் புத்திரரின் கையிலிருந்து இரட்சிப்பதற்கு கிரியை செய்கிறார். கர்த்தர் இதற்கு முன்பு, "நான் உங்களை இரட்சியேன்" (நியா 10:13) என்று சொன்னார். ஆனால் இப்போதோ அவர், இஸ்ரவேல் புத்திரரை இரட்சிப்பதற்கு ஆவன செய்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை இரட்சிக்க மறுத்தபோது, அவர்கள் கர்த்தரைவிட்டு அந்நிய தேவர்களை சேவித்தார்கள். இப்போதோ அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பியிருக்கிறார்கள். அந்நிய தேவர்களை தங்கள் நடுவிலிருந்து விலக்கிவிட்டு கர்த்தருக்கு ஆராதனை செய்கிறார்கள். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பியிருக்கிறார்கள். அவர்களுடைய இருதயங்கள் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் இப்போது புதிய மனுஷராயிருக்கிறார்கள். கர்த்தர் இப்போது அவர்களை அம்மோன் புத்திரரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கவேண்டுமென்று சித்தங்கொண்டிருக்கிறார்.

அம்மோன் புத்திரரோ, இஸ்ரவேல் புத்திரரை நெருக்கி ஒடுக்குகிறார்கள். அவர்கள் தங்களுக்கு கேடுண்டாகவே, கர்த்தருடைய ஜனத்திற்கு தீங்கு செய்கிறார்கள். அம்மோன் புத்திரர், கூட்டங்கூடி, இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக, கீலேயாத்திலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். அம்மோன் புத்திரர் ஒரே பாளயமாக கூட்டங்கூடியிருப்பது, அவர்கள் மொத்தமாய் அழிந்துபோவதற்கு ஏதுவாயிருக்கிறது.

கர்த்தர் விக்கிரகதெய்வங்களை அவமானப்படுத்தும் வண்ணமாக, இஸ்ரவேல் ஜனத்தார் மீது பரிதாபப்பட்டு அவர்களுக்கு நன்மைகளை செய்கிறார். "அவர்களுடைய தெய்வங்களும், அவர்கள் நம்பின கன்மலையும் எங்கே" என்னும் வாக்கியத்திற்கு, "அவர்களுடைய விக்கிரகதெய்வங்கள் எங்கே" என்பது பொருளாகும் (உபா 32:37).

"அவர்கள் பலியிட்ட பலிகளின் கொழுப்பைத் தின்று" என்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் அந்நிய தெய்வங்களுக்குப் பலியிட்டு அவர்களை நம்பினார்கள். அந்தத் தெய்வங்களே அவர்களை இரட்சிக்கட்டும் என்று கர்த்தர் இந்த வாக்கியத்தை ஏளனமாகப் பயன்படுத்துகிறார். (உபா 32:37-38).

கர்த்தர் தம்மை ஆராதிக்கிற இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தம்முடைய கிருபைகளை வெளிப்படுத்தி, அவர்களுக்கு நன்மை செய்கிறார். ஆனால் விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்களுக்கோ, அந்த விக்கிரகங்கள் ஒரு நன்மையும் செய்யாது.

இஸ்ரவேல் புத்திரர் தம்மை சேவிக்கும்போது, அவர்களுக்கு விரோதமாக எழும்புகிற சத்துருக்கள்மீது கர்த்தர் யுத்தம்பண்ணுகிறார். அவர்களை ஒடுக்குகிறவர்களின் கைகளிலிருந்தும், அவர்களை நெருக்குகிற சத்துருக்களின் கைகளிலிருந்தும் கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை மீட்டு இரட்சிக்கிறார்.

ஆனால் விக்கிரகதெய்வங்கள், தங்களை சேவிக்கிற ஜனங்களுக்காக யுத்தம்பண்ணாது. அவர்களுக்கு விரோதமாக எழும்புகிற அவர்களுடைய சத்துருக்கள்மீது, விக்கிரகங்கள் யுத்தம்பண்ணாது. விக்கிரகங்களுக்கு ஜீவனுமில்லை, பெலனுமில்லை.

சென்கரிப்பும், நேபுகாத்நேச்சாரும், இஸ்ரவேலின் தேவனுக்கு விரோதமாக தைரியமாய்ப் பேசினார்கள். கர்த்தரோ தம்மை சேவிக்கிற பிள்ளைகளை இக்கட்டுக்களிலிருந்து விலக்கி மீட்டு இரட்சித்து, தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தினார்.

"நீங்கள் யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவுக்குச் சொல்லவேண்டியது என்னவென்றால், எருசலேம் அசீரியா ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவதில்லை என்று நீ நம்பியிருக்கிற உன் தேவன் உன்னை எத்தவொட்டாதே" (ஏசா 37:10).

"இப்போதும் எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம், தம்புரு முதலான சகலவித கீதவாத்தியங்களின் சத்தத்தையும் நீங்கள் கேட்கும்போது, தாழ விழுந்து, நான் பண்ணிவைத்த சிலையைப் பணிந்துகொள்ள ஆயத்தமாயிருந்தால் நல்லது; பணிந்துகொள்ளாதிருந்தீர்களேயாகில், அந்நேரமே எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே போடப்படுவீர்கள்; உங்களை என் கைக்குத் தப்புவிக்கப்போகிற தேவன் யார் என்றான்" (தானி 3:15).

புறஜாதி ஜனங்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக, தங்கள் சத்தத்தை உயர்த்தி ஆணவமாகப் பேசும்போது, கர்த்தர் தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறார். பேல், நேபோ ஆகியவை புறஜாதியாரின் விக்கிரக தெய்வங்கள். இந்த தெய்வங்களுக்கு ஜீவனில்லை. தங்களை சேவிக்கிற ஜனங்களை இந்த விக்கிரகங்களால் பாதுகாக்கவும் முடியாது, அவர்களுக்கு உதவி செய்யவும் முடியாது.

கர்த்தர் பேலுக்கு விரோதமாகவும், நேபோவுக்கு விரோதமாகவும் பேசுகிறார். "நீ உன் சிறுவயதுமுதல் பிரயாசப்பட்டுப் பழகிவருகிற உன் ஸ்தம்பன வித்தைகளையும், உன் திரளான சூனியங்களையும் நீ அநுசரித்து நில்; அவைகளால் உனக்குப் பிரயோஜனம் உண்டோ, பலன் உண்டோ, பார்ப்போம். உன் திரளான யோசனைகளினால் நீ இளைத்துப்போனாய்; இப்பொழுதும் ஜோசியரும், நட்சத்திரம் பார்க்கிறவர்களும், அமாவாசி கணிக்கிறவர்களும் எழும்பி, உனக்கு நேரிடுகிறவைகளுக்கு உன்னை விலக்கி இரட்சிக்கட்டும்" *(ஏசா 47:12,13).*

தங்களை ஆராதிக்கிற ஜனங்களுக்கு விக்கிரகங்களால் உதவி செய்ய முடியாது. விக்கிரகங்களால் தங்களுக்கு தாங்களே உதவி செய்து கொள்ளவும் முடியாது. விக்கிராராதனைக்காரர்கள் சிறைப்பட்டுப்போனபோது, அவர்கள் ஆராதிக்கிற விக்கிரகங்களும் அவர்களோடுகூட சிறைப்பட்டுப்போகிறது. அவைகளால் தங்களுக்குத் தாங்களே உதவி செய்து, தங்களுடைய சிறையிருப்பிலிருந்து, தங்களை மீட்டுக்கொள்ள முடியவில்லை.

"பேல் பணியும், நேபோ குனியும், அவைகளின் விக்கிரகங்கள் காட்டுமிருகங்களுக்கும் நாட்டுமிருகங்களுக்கும் சுமையாகும்; நீங்கள் சுமந்த சுமைகள் இளைத்துப்போன மிருகங்களுக்குப் பாரமாயிருக்கும். அவைகள் ஏகமாய்க் குனிந்து பணியும்; சுமைகளை அவைகள் தப்புவிக்கமாட்டாது; அவைகள் தாமே சிறைப்பட்டுப்போகும்" *(ஏசா 46:1,2).*

மகிமையுள்ள கர்த்தர்
உபா 32:39-43

உபா 32:39. நான் நானே அவர், என்னோடே வேறே தேவன் இல்லை என்பதை இப்பொழுது பாருங்கள்; நான் கொல்லுகிறேன், நான் உயிர்ப்பிக்கிறேன்; நான் காயப்படுத்துகிறேன், நான் சொஸ்தப்படுத்துகிறேன்; என் கைக்குத் தப்புவிப்பார் இல்லை.

உபா 32:40. நான் என் கரத்தை வானத்திற்கு நேராக உயர்த்தி, நான் என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவர் என்கிறேன்.

உபா 32:41. மின்னும் என் பட்டயத்தை நான் கருக்காக்கி, என் கையானது நியாயத்தைப் பிடித்துக்கொள்ளுமானால், என் சத்துருக்களிடத்தில் பழிவாங்கி, என்னைப் பகைக்கிறவர்களுக்குப் பதிலளிப்பேன்.

உபா 32:42. கொலையுண்டும் சிறைப்பட்டும் போனவர்களுடைய இரத்தத்தாலே என் அம்புகளை வெறிகொள்ளப்பண்ணுவேன்; என் பட்டயம் தலைவர் முதற்கொண்டு சகல சத்துருக்களின் மாம்சத்தையும் பட்சிக்கும்.

உபா 32:43. ஜாதிகளே, அவருடைய ஜனங்களோடேகூடக் களிகூருங்கள்; அவர் தமது ஊழியக்காரரின் இரத்தத்திற்குப் பழிவாங்கி, தம்முடைய சத்துருக்களுக்குப் பதிலளித்து, தமது தேசத்தின்மேலும் தமது ஜனங்களின்மேலும் கிருபையுள்ளவராவார்.

இந்தப் பாடலின் முடிவுரையாக மூன்று காரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன : 1. கர்த்தர் மகிமையுள்ளவர். 2. கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்கு பயங்கரமானவர். 3. கர்த்தர் தம்முடைய ஜனங்களின்மேல் கிருபையுள்ளவர்.

கர்த்தர் மகிமையும், மகத்துவமும், மாட்சிமையுமுள்ளவர். சர்வசிருஷ்டிகளும் கர்த்தரைத் துதிக்கவேண்டும். கர்த்தர் தம்மைப்பற்றிச் சொல்லும்போது, "நான், இருக்கிறவராக இருக்கிறேன்" என்று சொன்னார். அவர் தாமாகவே இருக்கிறவர். கர்த்தர் தம்முடைய நாமத்தை மோசேக்கு வெளிப்படுத்தும்போது, இவ்விதமாகவே வெளிப்படுத்தினார்.

"அதற்குத் தேவன்: இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடனே சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக என்றார்" (யாத் 3:14).

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், இருந்தவராகவும், இருக்கிறவராகவும், இருக்கப்போகிறவராகவும் இருக்கிறார். கர்த்தரைத் தேடுகிறவர்கள், அவர் இருக்கிற வண்ணமாகவே அவரைக் கண்டுபிடிப்பார்கள்.

கர்த்தர் இந்தப் பாடலில் தம்மைப்பற்றிச் சொல்லும்போது, "நான் நானே அவர், என்னோடே வேறே தேவன் இல்லை என்பதை இப்பொழுது பாருங்கள்; நான் கொல்லுகிறேன், நான் உயிர்ப்பிக்கிறேன்; நான் காயப்படுத்துகிறேன், நான் சொஸ்தப்படுத்துகிறேன்; என் கைக்குத் தப்புவிப்பார் இல்லை" (உபா 32:39) என்று சொல்லுகிறார்.

"கர்த்தர் ஒருவரே தேவன்" என்னும் சத்தியத்தின் விவரம் வருமாறு :

1. அவரே கொல்லுகிறார், அவரே உயிர்ப்பிக்கிறார். (உபா 32:39).

3. அவரே காயப்படுத்துகிறார், அவரே சொஸ்தப்படுத்துகிறார்.

3. அவரே சர்வ வல்லமையுள்ளவர். அவருடைய கைக்குத் தப்புவிப்பார் இல்லை.

4. கர்த்தரே என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவர். (உபா 32:40).

5. கர்த்தரே தம்முடைய சத்துருக்களிடத்தில் பழிவாங்கி, தம்மைப் பகைக்கிறவர்களுக்குப் பதிலளிப்பார். (உபா 32:41).

6. கர்த்தர் தமது ஊழியக்காரரின் இரத்தத்திற்குப் பழிவாங்கி, தம்முடைய சத்துருக்களுக்குப் பதிலளிப்பார். (உபா 32:42-43).

7. கர்த்தர் தமது தேசத்தின்மேலும் தமது ஜனங்களின்மேலும் கிருபையுள்ளவர். (உபா 32:43).

"இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர்: நான் அல்பாவும், ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம்பற்றுகிறார்" (வெளி 1:8).

இஸ்ரவேல் ஜனத்தார் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்தபோது, கர்த்தருடைய நாமத்தின் மூலமாக, அவர்களுக்கு விடுதலையைக் குறித்த நம்பிக்கை உண்டாயிற்று.

"அதைச் செய்து நிறைவேற்றி, ஆதிமுதற்கொண்டு தலைமுறைகளை வரவழைக்கிறவர் யார்? முந்தினவராயிருக்கிற கர்த்தராகிய நான்தானே; பிந்தினவர்களோடும் இருப்பவராகிய நான்தானே" (ஏசா 41:4).

"நான், நானே கர்த்தர்; என்னையல்லாமல் ரட்சகர் இல்லை" (ஏசா 43:11). "நாள் உண்டாகாததற்கு முன்னும் நானே இருக்கிறேன்; என் கைக்குத் தப்புவிக்கத்தக்கவன் இல்லை; நான் செய்கிறதைத் தடுப்பவன் யார்?" (ஏசா 43:13). "நான், நானே உன் மீறுதல்களை என் நிமித்தமாகவே குலைத்துப்போடுகிறேன்; உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன்" (ஏசா 43:25).

"உங்கள் முதிர்வயதுவரைக்கும் நான் அப்படிச் செய்வேன்; நரைவயது மட்டும் நான் உங்களைத் தாங்குவேன்; நான் அப்படிச் செய்துவந்தேன்; இனிமேலும் நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன்" (ஏசா 46:4).

கர்த்தர் மாத்திரமே சர்வவல்லமையுள்ள தேவன். "என்னோடே வேறே தேவன் இல்லை" (உபா 32:39) என்று கர்த்தர் சொல்லுகிறார். தாம் செய்கிற எல்லா கிரியைகளையும், தாம் ஒருவராகவே கர்த்தர் செய்கிறார். கர்த்தருக்கு யாருடைய உதவியும், ஒத்தாசையும் தேவையில்லை. ஒருவராகவே பெரிய காரியங்களை செய்கிற கர்த்தர், மகிமையும் மகத்துவமுமுள்ளவராக இருக்கிறார்.

"நானே அவரென்று நீங்கள் உணர்ந்து, என்னை அறிந்து விசுவாசிக்கும்படிக்கு, நீங்களும் நான் தெரிந்துகொண்ட என் தாசனும் எனக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; எனக்குமுன் ஏற்பட்ட தேவன் இல்லை; எனக்குப்பின் இருப்பதும் இல்லை. நான், நானே கர்த்தர்; என்னையல்லாமல் ரட்சகர் இல்லை" (ஏசா 43:10,11).

கர்த்தர் சர்வவல்லமையும், சர்வஆளுகையுமுள்ளவர். "நான் கொல்லுகிறேன், நான் உயிர்ப்பிக்கிறேன்; நான் காயப்படுத்துகிறேன், நான் சொஸ்தப்படுத்துகிறேன்; என் கைக்குத் தப்புவிப்பார் இல்லை" (உபா 32:39) என்று கர்த்தர் தம்முடைய சர்வஆளுகையைப்பற்றிச் சொல்லுகிறார். கர்த்தருடைய சித்தத்திற்கும், அவருடைய திட்டத்திற்கும், அவருடைய கிரியைகளுக்கும் யாரும் எதிர்த்து நிற்கக்கூடாது. கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது.

கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்கு பயங்கரமானவராக இருப்பார். கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறவர்களுக்கும், கர்த்தரைப் பகைக்கிறவர்களுக்கும், கர்த்தரை ஆராதியாமல் அந்நிய தெய்வங்களை ஆராதிக்கிறவர்களுக்கும் கர்த்தர் பயங்கரமானவராகயிருக்கிறார்.

கர்த்தருடைய சத்துருக்களுக்கு விரோதமாக அவருடைய கோபம் எழும்பும். கர்த்தர் இதுபற்றிச் சொல்லும்போது, "நான் என் கரத்தை வானத்திற்கு நேராக உயர்த்தி, நான் என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவர் என்கிறேன். மின்னும் என் பட்டயத்தை நான் கருக்காக்கி, என் கையானது நியாயத்தைப் பிடித்துக்கொள்ளுமானால், என் சத்துருக்களிடத்தில் பழிவாங்கி, என்னைப் பகைக்கிறவர்களுக்குப் பதிலளிப்பேன். கொலையுண்டும் சிறைப்பட்டும் போனவர்களுடைய இரத்தத்தாலே என் அம்புகளை வெறிகொள்ளப்பண்ணுவேன்; என் பட்டயம் தலைவர் முதற்கொண்டு சகல சத்துருக்களின் மாம்சத்தையும் பட்சிக்கும்" (உபா 32:40-42) என்று சொல்லுகிறார்.

தமக்கு விரோதமாகப் பாவம் செய்கிறவர்களுக்கு கர்த்தர் பட்டயத்தினால் தண்டனை கொடுக்கிறார். அதன் விவரம் வருமாறு :

1. ஜீவவிருட்சத்தைக் காக்கும் கேரூபீன்கள். (ஆதி 3:24)

2. இஸ்ரவேலரைச் சங்காரம் பண்ணிய லேவியர்கள். (யாத் 32:27)

3. இஸ்ரவேலரை அழித்த புறஜாதி தேசத்தார். (உபா 32:25,41-43; உபா 28:22; லேவி 26:6-8,25,36-37; எண் 14:43; லூக்கா 21:24)

4. பிலேயாமை எதிர்த்து நின்ற தேவன். (எண் 22:23,31)

5. இஸ்ரவேலுக்காக யுத்தம் பண்ணிய தேவன். (யோசு 5:13; ஏசா 34:5-6; ஏசா 37:36; ஏசா 66:16)

6. இஸ்ரவேலை அழித்த தேவன். (1நாளா 21:16)

7. அர்மகெதோனில் கிறிஸ்து (வெளி 19:15,21)

கர்த்தர் தம்முடைய கரத்தை வானத்திற்கு நேராக உயர்த்துகிறார். வானம் அவருடைய பரிசுத்தமான வாசஸ்தலம். கர்த்தருடைய நாமத்தினால் ஆணையிடுகிறவர்கள், வானத்திற்கு நேராக தங்களுடைய கைகளை உயர்த்தி ஆணையிடுவது வழக்கம்.

"அதற்கு, ஆபிராம் சோதோமின் ராஜாவைப் பார்த்து: ஆபிராமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும், உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன் என்று, வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன்" (ஆதி 14:22,23).

பாவிகள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டும். அவர்கள் துணிகரமாகப் பாவம் செய்தால், அவர்களுடைய பாவங்களே அவர்களை அழித்துப்போடும். பாவத்தின் சம்பளம் மரணம். தொடர்ந்து பாவம் செய்கிறவர்களுக்கு சரீரப்பிரகாரமான மரணமும், ஆவிக்குரிய மரணமும் உண்டாகும்.

கர்த்தர் பாவிகளை நியாயந்தீர்ப்பார். தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்புகளினால் கர்த்தர் அவர்களைத் தண்டிப்பார். கர்த்தருடைய பட்டயம் சத்துருக்களுக்கு விரோதமாக நீட்டப்பட்டிருக்கிறது. அந்தப் பட்டயம் மின்னுகிற பட்டயமாகவும், கருக்கான பட்டயமாகவும் இருக்கிறது.

"அவன் மனந்திரும்பாவிட்டால் அவர் தம்முடைய பட்டயத்தைக் கருக்காக்குவார்; அவர் தம்முடைய வில்லை நாணேற்றி, அதை ஆயத்தப்படுத்தியிருக்கிறார்" *(சங் 7:12).*

கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்கு பயங்கரமானவர். அவர் தம்முடைய சத்துருக்களை தண்டிப்பதும் மிகவும் பயங்கரமானதாகயிருக்கும். கர்த்தர் தம்முடைய சத்துருக்களின் இரத்தத்தாலே, தம்முடைய அம்புகளை வெறிகொள்ளப்பண்ணுவார். கர்த்தருடைய நீதியான பட்டயம், அவருடைய சத்துருக்கள் எல்லோரையும் சர்வசங்காரம்பண்ணிவிடும்.

கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்கு பயங்கரமானவராகயிருந்தாலும், அவர் தம்முடைய ஜனத்திற்கு கிருபையும் இரக்கமுமுள்ளவராகவும், அவர்களுக்கு ஆறுதலைக் கொடுக்கிறவராகவும் இருப்பார். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு காண்பிக்கும் ஆறுதலைப்பற்றி இவ்வாறு சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

"ஜாதிகளே, அவருடைய ஜனங்களோடேகூடக் களிகூருங்கள்; அவர் தமது ஊழியக்காரரின் இரத்தத்திற்குப் பழிவாங்கி, தம்முடைய சத்துருக்களுக்குப் பதிலளித்து, தமது தேசத்தின்மேலும் தமது ஜனங்களின்மேலும் கிருபையுள்ளவராவார்" *(உபா 32:43).*

மோசே இந்தப் பாடலின் வரிகளை, சந்தோஷ வார்த்தைகளினால் நிறைவு செய்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் கர்த்தருடைய கோபத்தினால் அழிந்துபோகவில்லை. அவர்களில் அழிவுக்கு தப்பி மீதியானவர்களும் இருக்கிறார்கள். அவர்களுடைய முடிவு சமாதானமாயிருக்கும். கர்த்தருடைய ஜனம் இப்போது பிரச்சனைகளையும், வேதனைகளையும் அனுபவித்தாலும், முடிவிலே அவர்கள் சந்தோஷப்பட்டு களிகூருவார்கள். அவர்களுடைய சந்தோஷம் நித்திய சந்தோஷமாயிருக்கும்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு பல சமயங்களில் களிகூருமாறு கட்டளை கொடுத்திருக்கிறார். அதன் விவரம் வருமாறு:

1. கர்த்தருடைய பழிவாங்குதல் நடைபெறுகிறது. *(உபா 32:43)*
2. செபுலோன் வெளியே புறப்பட்டுப்போகிறது. *(உபா 33:18)*
3. தேவனுடைய நன்மை *(2நாளா 6:41)*
4. தேவனிடத்தில் நம்பிக்கை வைப்பது. *(சங் 5:11)*
5. நீதிமான்களின் துதி *(சங் 33:1; சங் 68:3-4; பிலி 3:1; பிலி 4:4)*
6. கர்த்தரைத் தேடுவது. *(சங் 40:16; சங் 70:4)*
7. தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கள் *(உபா 48:11)*
8. பூமியில் தேவனுடைய ஆளுகை *(சங் 96:11; சங் 97:1; செப் 3:14-20; சக 2:10)*
9. தேவனுடைய பரிசுத்தம். *(சங் 97:12)*
10. தேவனுடைய இரட்சிப்பு *(சங் 98:3-4)*
11. இஸ்ரவேலின் மனமாற்றம். *(ஏசா 66:7-10)*
12. பூமிக்குரிய ஆசீர்வாதங்கள். *(யோவே 2:21-23)*
13. மேசியா வந்திருக்கிறார். *(சக 9:9)*

14. உபத்திரவம் (மத் 3:11-12; லூக்கா 6:23)

15. பரலோகத்தில் பெயர்கள் எழுதப்பட்டிருக்கிறது. (லூக்கா 10:20)

16. மற்றவர்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள். (ரோமர் 12:15)

17. புறஜாதியாரின் இரட்சிப்பு (ரோமர் 15:10; கலா 4:27)

18. வரப்போகிற பாதுகாப்பு (1தெச 5:16-23)

19. உயர்த்தப்படுவது. (யாக் 1:9)

20. சாத்தான் வெளியே தள்ளப்படுவது. (வெளி 12:12)

21. பாபிலோன் அகற்றப்படுகிறது. (வெளி 18:20)

22. ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம் வரப்போகிறது. (வெளி 19:7)

கர்த்தருடைய ஜனத்தார் மகிழ்ந்து களிகூரவேண்டும். "ஜாதிகளே, அவருடைய ஜனங்களோடேகூட களிகூருங்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் சந்தோஷப்படுவதற்கு, இந்தப் பாட்டில் மூன்று காரணங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன :

1. சபையின் எல்லைகள் விஸ்தரிக்கப்படும். 2. சபையின் சத்துருக்கள் பழிவாங்கப்படுவார்கள். 3. கர்த்தர் தம்முடைய சபையார்மீது கிருபையுள்ளவராகயிருப்பார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் அப்போஸ்தலர்கள் உலகம் முழுவதும் சென்று இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணினார்கள். புறஜாதியாருக்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. அவர்களும் இயேசுகிறிஸ்துவின்மீது விசுவாசம் வைத்து இரட்சிக்கப்பட்டார்கள். இரட்சிக்கப்பட்ட புறஜாதிகளும் கர்த்தருடைய ஜனங்களோடே, கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருகிறார்கள்.

"மேலும், புறஜாதிகளே, அவருடைய ஜனங்களோடேகூடக் களிகூருங்கள் என்கிறார்" (ரோம 15:10).

கர்த்தர் தமது ஊழியக்காரரின் இரத்தத்திற்கு பழிவாங்குவார். அவர் தம்முடைய சத்துருக்களுக்கு பதிலளிப்பார். பழிவாங்குவதும், பதிலளிப்பதும் கர்த்தருக்குரியது. ஏற்றகாலத்தில், கர்த்தர் தம்முடைய சத்துருக்களிடத்தில் பழிவாங்கி அவர்களுடைய கால்களை தள்ளாடப்பண்ணுவார்.

கர்த்தர் தமது தேசத்தின் மேலும், தமது ஜனங்கள் மேலும் கிருபையுள்ளவராக இருப்பார். கர்த்தருக்குரியவர்கள், அவருடைய கிருபைகளையும் இரக்கங்களையும் பெற்று, கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பார்கள். இந்த பூமியிலுள்ள எல்லா இடங்களிலும், கர்த்தருக்கு பயந்து அவரை ஆராதிக்கிறவர்கள் கர்த்தருக்குள் சந்தோஷமாகயிருப்பார்கள். கர்த்தர் அவர்கள்மேல் கிருபையுள்ளவராகயிருப்பார்.

மோசேயின் உபதேசம் உபா 32:44-47

உபா 32:44. மோசேயும் நூனின் குமாரனாகிய யோசுவாவும் வந்து, இந்த பாட்டின் வார்த்தைகளையெல்லாம் ஜனங்கள் கேட்கத்தக்கதாகச் சொன்னார்கள்.

உபா 32:45. மோசே இந்த வார்த்தைகளையெல்லாம் இஸ்ரவேலர் யாவருக்கும் சொல்லி முடித்தபின்பு,

உபா 32:46. அவர்களை நோக்கி: இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படியெல்லாம் உங்கள் பிள்ளைகள் செய்யும்படி கவனமாயிருக்க, நீங்கள் அவர்களுக்குக் கற்பிக்கும்படி, நான் இன்று உங்களுக்குச் சாட்சியாய் ஒப்புவிக்கிற வார்த்தைகளையெல்லாம் உங்கள் மனதிலே வையுங்கள்.

உபா 32:47. இது உங்களுக்கு வியர்த்தமான காரியம் அல்லவே; இது உங்கள் ஜீவனாயிருக்கிறது, நீங்கள் சுதந்தரித்துக்கொள்ளும்படி யோர்தானைக் கடந்துபோய்ச் சேரும் தேசத்தில் இதினால் உங்கள் நாட்களை நீடிக்கப்பண்ணுவீர்கள் என்றான்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு இந்தப் பாடலின் வார்த்தைகளை கருத்தாய் ஒப்புவிக்கிறார். இந்த ஊழியத்தில் நூனின் குமாரனாகிய யோசுவா மோசேக்கு உதவி செய்கிறார்.

மோசேயும் நூனின் குமாரனாகிய யோசுவாவும் வந்து, இந்த பாட்டின் வார்த்தைகளையெல்லாம் ஜனங்கள் கேட்கத்தக்கதாகச் சொல்லுகிறார்கள். மோசே இந்த வார்த்தைகளையெல்லாம் இஸ்ரவேலர் யாவருக்கும் சொல்லி முடிக்கிறார் (உபா 32:44,45).

மோசே இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே, இந்தப் பாட்டின் வார்த்தைகளையெல்லாம், எத்தனை ஜனங்களுக்கு கேட்கத்தக்கதாக சொல்ல முடியுமோ அத்தனை ஜனங்களுக்கும் சொல்லுகிறார். அதே வேளையில் யோசுவாவும், இஸ்ரவேல் ஜனத்தார் கூடியிருக்கிற மற்றொரு இடத்தில், இந்தப் பாட்டின் வார்த்தைகளை, ஜனங்கள் கேட்கத்தக்கதாக சொல்லுகிறார்.

மோசேயும் யோசுவாவும் இந்தப் பாட்டின் வார்த்தைகளை சொன்னாலும், அவர்கள் இருவருக்கும் நடுவே கருத்து வேறுபாடு எதுவுமில்லை. அவர்கள் இருவருமே தேவனுடைய அன்பினால் இணைக்கப்பட்டவர்கள். அவர்கள் இருவரும் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் கேட்கத்தக்கதாக, இந்தப் பாட்டின் வார்த்தைகளை சொல்லுகிறார்கள்.

மோசே இந்தப் பாட்டின் வார்த்தைகளை இஸ்ரவேலர் யாவருக்கும் சொல்லி முடித்த பின்பு, அவர்களை நோக்கி, "இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படியெல்லாம் உங்கள் பிள்ளைகள் செய்யும்படி கவனமாயிருக்க, நீங்கள் அவர்களுக்குக் கற்பிக்கும்படி, நான் இன்று உங்களுக்குச் சாட்சியாய் ஒப்புவிக்கிற வார்த்தைகளையெல்லாம் உங்கள் மனதிலே வையுங்கள்" (உபா 32:46) என்றும்,

"இது உங்களுக்கு வியர்த்தமான காரியம் அல்லவே; இது உங்கள் ஜீவனாயிருக்கிறது, நீங்கள் சுதந்தரித்துக்கொள்ளும்படி யோர்தானைக் கடந்துபோய்ச் சேரும் தேசத்தில் இதினால் உங்கள் நாட்களை நீடிக்கப்பண்ணுவீர்கள்" (உபா 32:47) என்றும் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்பதற்கும், அதன்படி செய்வதற்கும் கவனமாயிருக்கவேண்டும். மோசே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சாட்சியாய் ஒப்புவிக்கிற வார்த்தைகளையெல்லாம் அவர்கள் தங்கள் மனதிலே வைத்திருக்கவேண்டும். கர்த்தருடைய ஆசீர்வாதமான வாக்குத்தத்த வார்த்தைகளும், எச்சரிப்பின் வார்த்தைகளும் அவர்களுடைய மனதிலே பதிந்திருக்கவேண்டும்.

இந்தப் பாடலிலே சொல்லப்பட்டிருக்கிற ஆசீர்வாதமான வார்த்தைகளையும், சாபமான வார்த்தைகளையும் இஸ்ரவேல் ஜனத்தார் செவிகொடுத்து கேட்டு, அந்த வார்த்தைகள் எல்லாவற்றையும் தங்கள் மனதிலே பதிய வைத்திருக்கவேண்டும்.

மோசே சொல்லுகிற நியாயப்பிரமாண வார்த்தைகளின்படியெல்லாம் இஸ்ரவேல் புத்திரரும் செய்யவேண்டும். அவர்களுடைய பிள்ளைகளும் செய்யவேண்டும். அவர்களுடைய பிள்ளைகள், மோசே சொன்ன நியாயப்பிரமாண வார்த்தைகளின்படியெல்லாம் செய்ய கவனமாயிருக்கும்படிக்கு, இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் பிள்ளைகளுக்கு, கர்த்தருடைய நியாயங்களையும், கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயப்பிரமாணங்களையும் கற்றுக்கொடுக்கவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய வார்த்தைகளைப்பற்றிச் சொல்லும்போது, "இது உங்களுக்கு வியர்த்தமான காரியமல்லவே" என்று சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தைகள் அவர்களுக்கு வீணான காரியமல்ல. இது அவர்களுக்கு ஜீவனாயிருக்கிறது. கர்த்தருடைய வார்த்தைகள் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தேவையில்லாத காரியங்களுமல்ல. அவை அவர்களுக்கு அவசியமாய்த் தேவைப்படுகிற காரியமாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய வார்த்தைகள் ஜீவனாயிருக்கிறது. அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கும்போது, அவர்களுடைய ஆயுசுநாட்கள் நீடித்திருக்கும். இஸ்ரவேல் ஜனத்தார் யோர்தானைக் கடந்து, கானான் தேசத்தை சுதந்தரிப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். அவர்கள் கானான் தேசத்தில் பிரவேசிக்கும்போது கர்த்தருடைய வார்த்தைகளும், அவர்களுடைய மனதிலே இருக்கவேண்டும்.

கர்த்தருடைய வார்த்தை இஸ்ரவேல் புத்திரருக்கு ஜீவனாயிருப்பதினால், அவர்கள் கானான் தேசத்தில் போய்ச்சேரும்போது, அந்த தேசத்தில், கர்த்தருடைய வார்த்தையினால், அவர்கள் தங்களுடைய நாட்களை நீடிக்கப்பண்ணுவார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷ வார்த்தைகள் பிரசங்கிக்கப்படுகிறது. நாம் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது, நாம் நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்வோம்.

"அதற்கு அவர்: நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே; நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார்" (மத் 19:17).

மோசேயின் மரணச்செய்தி
உபா 32:48-52

உபா 32:48. அந்த நாளிலேதானே கர்த்தர் மோசேயை நோக்கி:

உபா 32:49. நீ எரிகோவுக்கு எதிரான மோவாப் தேசத்திலுள்ள இந்த அபாரீம் என்னும் மலைகளிலிருக்கிற நேபோ பர்வதத்தில் ஏறி, நான் இஸ்ரவேல் சந்ததியாருக்குக் காணியாட்சியாகக் கொடுக்கும் கானான் தேசத்தைப் பார்.

உபா 32:50. நீங்கள் சீன் வனாந்தரத்திலுள்ள காதேசிலே மேரிபாவின் தண்ணீர் சமீபத்தில் இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே என்னைப் பரிசுத்தம்பண்ணாமல், அவர்கள் நடுவே என் கட்டளைகளை மீறினதினாலே,

உபா 32:51. உன் சகோதரனாகிய ஆரோன் ஓர் என்னும் மலையிலே மரித்து, தன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்பட்டதுபோல நீயும் ஏறப்போகிற மலையிலே மரித்து, உன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்படுவாய்.

உபா 32:52. நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கப்போகிற எதிரேயிருக்கிற தேசத்தை நீ பார்ப்பாய்; ஆனாலும் அதற்குள் நீ பிரவேசிப்பதில்லை என்றார்.

கர்த்தர் மோசேயின் மரணச்செய்தியை அவருக்கு அறிவிக்கிறார். கர்த்தர் தனக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தை மோசே ஓடி முடித்துவிட்டார். மோசே கர்த்தருக்கு பிரியமானவராகவும், இஸ்ரவேலருக்கு பிரயோஜனமானவராகவும் ஜீவித்தார். மோசேயின் ஆவிக்குரிய ஜீவியத்திற்கும், கர்த்தர்மீது அவர் வைத்துள்ள விசுவாசத்திற்கும் பக்திக்கும், அவர் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து ஜீவித்ததற்கும், கர்த்தரே அவருக்கு சாட்சியாயிருக்கிறார்.

அந்த நாளிலேதானே கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ எரிகோவுக்கு எதிரான மோவாப் தேசத்திலுள்ள இந்த அபாரீம் என்னும் மலைகளிலிருக்கிற நேபோ பர்வதத்தில் ஏறி, நான் இஸ்ரவேல் சந்ததியாருக்குக் காணியாட்சியாகக் கொடுக்கும் கானான் தேசத்தைப் பார்" (உபா 32:48,49) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் தனக்கு கொடுத்த எல்லா ஊழியத்தையும் மோசே செய்து முடித்துவிட்டார். மோசேயின் மனதிலே யோர்தானைக் கடந்து கானான் தேசத்திற்குப்போகவேண்டும் என்னும் விருப்பம் இருந்தது. மோசேயும் தன்னுடைய விருப்பத்தை கர்த்தரிடத்தில் சொன்னார். ஆனால் கர்த்தரோ, "போதும், இதுபற்றி இனிமேல் என்னிடத்தில் பேசவேண்டாம்" என்று சொல்லிவிட்டார்.

மோசே யோர்தான் நதியைக் கடந்து கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கமாட்டார். மோசேயின் பாவத்தினிமித்தமாக கர்த்தர் அவருக்கு இந்தத் தண்டனையைக் கொடுத்திருக்கிறார். மோசே செய்த பாவத்தை, கர்த்தர் இப்போது மறுபடியுமாக அவருக்கு ஞாபகப்படுத்துகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீங்கள் சீன் வனாந்தரத்திலுள்ள காதேசிலே மேரிபாவின் தண்ணீர் சமீபத்தில் இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே என்னைப் பரிசுத்தம்பண்ணாமல், அவர்கள் நடுவே என் கட்டளைகளை மீறினதினாலே, உன் சகோதரனாகிய ஆரோன் ஓர் என்னும் மலையிலே மரித்து, தன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்பட்டதுபோல நீயும் ஏறப்போகிற மலையிலே மரித்து, உன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்படுவாய்" (உபா 32:50,51) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் நடுவே மோசே கர்த்தருடைய கட்டளையை மீறி விட்டார். கர்த்தரிடத்தில் பாவம் ஒன்றும் இல்லை. ஆகையினால் அவரைப் பரிசுத்தம் பண்ண வேண்டிய தேவையும் இல்லை. இந்த வாக்கியத்தில் பரிசுத்தம் பண்ணுதல் என்னும் வார்த்தைக்குக் கர்த்தரை நம்முடைய ஆராதனைக்குப் பாத்திரராகவும், நம்முடைய துதிக்கும், கனத்திற்கும் பாத்திரராகவும் வேறுபிரிப்பது என்று பொருள்.

பரிசுத்தப்படுத்துதல் என்பதற்குப் பரிசுத்தமான காரியங்களுக்காக ஒரு நபரை அல்லது ஒரு பொருளை வேறுபிரிப்பது என்று பொருள். மோசே இங்கு கர்த்தரையும், அவருடைய வார்த்தையையும், கனப்படுத்தவில்லை. இதனால் மோசே கர்த்தரைப் பரிசுத்தப்படுத்தத் தவறிவிடுகிறார். இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் மோசே கர்த்தரைப் பரிசுத்தம் பண்ணாமல் போனதினால், அவரால் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க முடியவில்லை.

மோசே கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் கன்மலையைப் பார்த்துப் பேசுவதற்குப் பதிலாகக் கன்மலையை இரண்டுதரம் அடித்துவிட்டார். கர்த்தரைப் பரிசுத்தம் பண்ணவில்லை. ஆகையினால் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை மோசே இழந்துபோனார். (எண் 20:10-13).

கர்த்தர் மோசேயினிடத்தில் பேசும்போது, மோசேயின் சகோதரனாகிய ஆரோனின் மரணத்தைப்பற்றியும், அவருக்கு ஞாபகப்படுத்துகிறார். ஆரோன் ஓர் என்னும் மலையிலே மரித்து, தன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்பட்டார். ஆரோனைப்போலவே மோசேயும் நேபோ பர்வதத்தில் ஏறப்போகிறார். அங்கே மோசே மரித்து தன்னுடைய ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்படுவார். மோசே மரிக்கும் முன்பாக, நேபோ பர்வதத்திலிருந்து, கானான் தேசத்தைப் பார்ப்பார்.

கர்த்தர் இதுபற்றி மோசேக்கு சொல்லும்போது, "நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கப்போகிற எதிரேயிருக்கிற தேசத்தை நீ பார்ப்பாய்; ஆனாலும் அதற்குள் நீ பிரவேசிப்பதில்லை" (உபா 32:52) என்று சொல்லுகிறார்.

மோசே கானான் தேசத்தைப் பார்த்தார். ஆனால் அதற்குள் பிரவேசிக்கும் சிலாக்கியம் மோசேக்குக் கிடைக்கவில்லை. இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்து ஜாதியாரை ஜெயித்து, அங்கு குடியேறியதை மோசேயினால் காணமுடியவில்லை. கர்த்தருக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் மோசே பல வருஷங்களாக ஊழியம் செய்தார். ஆனாலும் தன்னுடைய பாவத்தின் நிமித்தமாக மோசேயினால் தன்னுடைய ஊழியத்தின் பலனை முழுமையாக அனுபவிக்க முடியவில்லை (எண் 20:10-15).

மோசே கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தாலும், அவர் தன்னுடைய பாவத்திற்காக மனந்திரும்பி, கர்த்தரோடு ஒப்புரவாகியிருக்கிறார். கர்த்தரும் மோசேயோடு ஒப்புரவாகியிருக்கிறார். கர்த்தருடைய கிருபை மோசேயின்மீது இருக்கிறது. மோசே இந்தப் பூமிக்குரிய கானான் தேசத்திலே பிரவேசியாமல் போனாலும், அவர் நிச்சயமாக பரமகானானிலே பிரவேசிப்பார்.

மோசே பூமிக்குரிய கானான் தேசத்தை தன்னுடைய சரீரப்பிரகாரமான கண்களால் பிரதியட்சமாகப் பார்த்தார். தான் பிரவேசிக்கப்போகிற பரமகானானையோ மோசே தன்னுடைய விசுவாசக்கண்களால் நோக்கிப் பார்க்கிறார். மோசேயால் பூமிக்குரிய கானானை பார்க்க மாத்திரமே முடிகிறது. அதே வேளையில் அவரால் பரமகானானை விசுவாசத்தினால் நோக்கிப் பார்த்து, அங்கே பிரவேசிக்க முடிகிறது.

33 அதிகாரம்

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு இன்னும் போதித்து முடிக்கவில்லை. மோசே மரித்துப்போகப்போகிறார். தான் அவர்களை விட்டு கடந்துபோவதற்கு முன்பாக, மோசே அவர்களுக்கு தன்னுடைய கடைசி செய்தியை பிரசங்கம்பண்ணுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு பிரசங்கம்பண்ணின பின்பு, அவர்களுக்கு ஒரு பாட்டை கற்றுக்கொடுக்கிறார். இனிமேல் மோசே அவர்களுக்கு பிரசங்கம்பண்ண ஒரு செய்தியுமில்லை. மோசே அவர்களை ஆசீர்வதித்து அனுப்பவேண்டும்.

இந்த அதிகாரத்தில் மோசே இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதித்து சொன்ன வார்த்தைகள் சொல்லப்பட்டிருக்கிறது. மோசே அவர்களை கர்த்தருடைய நாமத்தினால் ஆசீர்வதிக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஏற்கெனவே மகிமையான காரியங்களை செய்திருக்கிறார். கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய கற்பனைகளையும் பிரமாணங்களையும் கொடுத்திருக்கிறார் (உபா 33:2-5).

மோசே இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரத்தாரையும் தனித்தனியாக ஆசீர்வதிக்கிறார். அவர்களுக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். மோசே ஒவ்வொரு கோத்திரத்தாருக்கும் கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்.

ரூபன் (உபா 33:6). யூதா (உபா 33:7). லேவி (உபா 33:8-11). பென்யமீன் (உபா 33:12). யோசேப்பு (உபா 33:13-17). செபுலோனும் இசக்காரும் (உபா 33:18,19). காத் (உபா 33:20,21). தாண் (உபா 33:22). நப்தலி (உபா 33:23). ஆசேர் (உபா 33:24,25).

இஸ்ரவேல் கோத்திரத்தார் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்தால் அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று மோசே அவர்கள் எல்லோருக்கும் பொதுவான ஆசீர்வாதங்களை சொல்லுகிறார் (உபா 33:26-29).

மோசே சொன்ன ஆசீர்வாதம் உபா 33:1-5

உபா 33:1. தேவனுடைய மனுஷனாகிய மோசே தான் மரணமடையுமுன்னே இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதித்த ஆசீர்வாதமாவது:

உபா 33:2. கர்த்தர் சீனாயிலிருந்து எழுந்தருளி, சேயீரிலிருந்து அவர்களுக்கு உதயமானார்; பாரான் மலையிலிருந்து பிரகாசித்து, பதினாயிரங்களான பரிசுத்தவான்களோடே பிரசன்னமானார்; அவர்களுக்காக அக்கினிமயமான பிரமாணம் அவருடைய வலதுகரத்திலிருந்து புறப்பட்டது.

உபா 33:3. மெய்யாகவே அவர் ஜனங்களைச் சிநேகிக்கிறார்; அவருடைய பரிசுத்தவான்கள் எல்லாரும் உம்முடைய கையில் இருக்கிறார்கள்; அவர்கள் உம்முடைய பாதத்தில் விழுந்து, உம்முடைய வார்த்தைகளினால் போதனையடைவார்கள்.

உபா 33:4. மோசே நமக்கு ஒரு நியாயப்பிரமாணத்தைக் கற்பித்தான்; அது யாக்கோபின் சபைக்குச் சுதந்தரமாயிற்று.

உபா 33:5. ஜனங்களின் தலைவரும் இஸ்ரவேலின் கோத்திரங்களும் கூட்டங்கூடினபோது அவர் யெஷுரனுக்கு ராஜாவாயிருந்தார்.

இந்த அதிகாரத்தின் முதல் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற வார்த்தைகளில், இந்த அதிகாரத்திற்கான தலைப்பும் சொல்லப்பட்டிருக்கிறது. "மோசே இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதித்த ஆசீர்வாதமாவது" என்று இந்த அதிகாரத்திற்கு தலைப்பு சொல்லப்பட்டிருக்கிறது.

இதற்கு முந்தின அதிகாரத்தில் மோசே இஸ்ரவேல் புத்திரர்மீது நியாயத்தீர்ப்புகளை சொல்லி அவர்களை எச்சரித்தார். அவர்களுக்கு கர்த்தருடைய நாமத்தினாலே சாபமான வார்த்தைகளைச் சொன்னார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள்.

அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பினால், கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக்கொள்வார்கள். இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், தொடர்ந்து துணிகரமாகப் பாவம் செய்தால், அவர்கள்மீது தேவனுடைய கோபமும், சாபமும் வரும்.

மோசே இந்த அதிகாரத்தில் இஸ்ரவேல் புத்திரருக்கு சாபமான வார்த்தைகள் எதையும் சொல்லவில்லை. மோசேயின் கோபம் குறைந்துபோயிற்று. அவர் மரணமடையப்போகிறார். மோசே மரணமடையுமுன்னே இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்க மனதுள்ளவராயிருக்கிறார். மோசேயின் சாபமான வார்த்தைகள், ஆசீர்வாதமான வார்த்தைகளாக மாறிற்று.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், இந்தப் பூமியிலிருந்து பரமேறிப்போகும் முன்பாக, தம்முடைய சீஷர்களை ஆசீர்வதித்தார்.

"பின்பு அவர் பெத்தானியாவரைக்கும் அவர்களை அழைத்துக்கொண்டு போய், தம்முடைய கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்தார்" *(லூக் 24:50).*

மோசே இஸ்ரவேல் புத்திரரை விட்டு கடந்துபோகும் முன்பாக, அவர்களை ஆசீர்வதித்ததுபோல, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், தம்முடைய சீஷர்களைவிட்டு கடந்துபோகும் முன்பாக அவர்களை ஆசீர்வதித்தார்.

இந்த அதிகாரத்தின் முதலாவது வசனத்தில், மோசேயைப்பற்றிச் சொல்லும்போது, "தேவனுடைய மனுஷனாகிய மோசே" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர் கர்த்தருடைய தீர்க்கதரிசியாகவும் இருக்கிறார். மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு தகப்பனைப்போலவும் இருக்கிறார். ஒரு தேசத்தின் பிரபுக்களும், ராஜாக்களும் அந்த தேசத்திலுள்ள ஜனங்களுக்கு தகப்பனாரைப்போல இருப்பார்கள்.

யாக்கோபு மரிக்கும் முன்பாக தன்னுடைய குமாரரை ஆசீர்வதித்தார். "யாக்கோபு தன் குமாரரை அழைத்து: நீங்கள் கூடிவாருங்கள், கடைசி நாட்களில் உங்களுக்கு நேரிடும் காரியங்களை அறிவிப்பேன்" *(ஆதி 49:1)* என்று சொன்னார்.

மோசே மரணமடையுமுன்னே, அவருக்கு முன்பாக இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கூடியிருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் யாக்கோபின் சந்ததியைச் சேர்ந்தவர்கள். மோசே இஸ்ரவேல் புத்திரரின் எல்லா கோத்திரத்தாரையும் ஆசீர்வதித்ததுபோல, யாக்கோபு அவர்களுடைய முற்பிதாக்களை ஆசீர்வதித்தார்.

மோசே மரணமடையப்போகிறார். அவருடைய மனதில் ஒரே ஒரு வாஞ்சை மாத்திரமே இருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். அவர்கள் எல்லோரும் கர்த்தருக்குள் சந்தோஷமாகயிருக்கவேண்டும். இதுவே மோசேயினுடைய மனதின் விருப்பம்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்குள் சந்தோஷமாகயிருக்கும்போது, அந்த சந்தோஷத்தில் மோசேக்கு பங்கு இருக்காது. மோசே அதற்குள்ளாக மரித்துப்போவார். ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் சந்தோஷமாய்க் களிகூரவேண்டுமென்று மோசே விரும்புகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிப்பதற்கு முன்பாக, கர்த்தர் தம்முடைய மகிமையிலே இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக எழுந்தருளியதைப்பற்றிச் சொல்லுகிறார்.

"கர்த்தர் சீனாயிலிருந்து எழுந்தருளி, சேயீரிலிருந்து அவர்களுக்கு உதயமானார்; பாரான் மலையிலிருந்து பிரகாசித்து, பதினாயிரங்களான பரிசுத்தவான்களோடே பிரசன்னமானார்; அவர்களுக்காக அக்கினிமயமான பிரமாணம் அவருடைய வலதுகரத்திலிருந்து புறப்பட்டது" *(உபா 33:2)* என்று மோசே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு, கர்த்தருடைய மகிமையான தோற்றத்தைப்பற்றி விவரிக்கிறார்.

கர்த்தருடைய பிரசன்னத்தைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற விவரங்கள் வருமாறு:

1. கர்த்தர் சீனாயிலிருந்து எழுந்தருளினார்.

2. சேயீரிலிருந்து அவர்களுக்கு உதயமானார்.

3. பாரான் மலையிலிருந்து பிரகாசித்தார்.

4. பதினாயிரங்களான பரிசுத்தவான்களோடே பிரசன்னமானார்.

5. அவர்களுக்காக அக்கினிமயமான பிரமாணம் அவருடைய வலதுகரத்திலிருந்து புறப்பட்டது. *(சங் 68:17; அப் 7:53; கலா 3:19; எபி 2:2).*

6. அவர் ஜனங்களைச் சிநேகிக்கிறார் *(உபா 33:3).*

7. அவருடைய பரிசுத்தவான்கள் எல்லாரும் உம்முடைய கையில் இருக்கிறார்கள்.

8. அவர்கள் கர்த்தருடைய பாதத்தில் அமர்ந்திருந்து, அவருடைய வார்த்தைகளினால் போதனையடைவார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தம்முடைய கற்பனைகளையும், நியாயங்களையும், நியாயப்பிரமாணங்களையும் கொடுத்தார். இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் அவைகளின்படி செய்ய கவனமாயிருக்கவேண்டும். அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்தால், அவர்களுக்கு மெய்யாக ஆசீர்வாதம் உண்டு.

மனுபுத்திரர் மத்தியிலே கர்த்தருடைய மகிமையும், மாட்சிமையும், மகத்துவமும் பிரத்தியட்சமாக வெளிப்பட்டிருக்கிறது. கர்த்தர்மீது நம்பிக்கையில்லாதவர்கள்கூட, கர்த்தரை நம்பும் வண்ணமாக, கர்த்தருடைய மகிமை அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஒரு சிலர் கர்த்தரைக் குறித்தும், அவருடைய கர்த்தத்துவத்தைக் குறித்தும் கரிசனையில்லாமல் அசட்டையாயிருக்கிறார்கள். தேவன் இல்லையென்று மதிகேடன் சொல்லுகிறான். புறஜாதி ஜனங்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை நம்பாமல், அந்நிய தெய்வங்களை நம்புகிறார்கள். அந்த தெய்வங்களின் விக்கிரகங்களை ஆராதனை செய்கிறார்கள்.

கர்த்தர் பாரான் மலையிலிருந்து பிரகாசித்தார். அவர் பதினாயிரங்களான பரிசுத்தவான்களோடே பிரசன்னமானார். கர்த்தர் கடைசி நாளிலே இந்த உலகத்தை நியாயந்தீர்க்க வருவார் என்று ஏனோக்கு தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார்.

"ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கும் இவர்களைக்குறித்து: இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்" *(யூதா 14,15).*

கர்த்தருடைய நியாயப்பிரமாணம் தேவதூதர் மூலமாக மனுக்குலத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. "தேவதூதரைக்கொண்டு நீங்கள் நியாயப்பிரமாணத்தைப் பெற்றிருந்தும், அதைக் கைக்கொள்ளாமற்போனீர்கள் என்றான்" *(அப் 7:53).*

"ஏனெனில், தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருகிறது" *(எபி 2:2).*

கர்த்தருடைய பிரமாணம் "அக்கினி மயமான பிரமாணம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. "அவர்களுக்காக அக்கினி மயமான பிரமாணம் அவருடைய வலதுகரத்திலிருந்து புறப்பட்டது.

தேவன் அக்கினியின் நடுவிலிருந்து பேசினார். ஆகையினால் அவருடைய பிரமாணம் அக்கினி மயமான பிரமாணம் என்று சொல்லப்படுகிறது.

“அக்கினியின் நடுவிலிருந்து பேசுகிற தேவனுடைய சத்தத்தை நீ கேட்டது போல, யாதொரு ஜனமாவது கேட்டதும் உயிரோடிருந்ததும் உண்டோ” (உபா 4:33).

கர்த்தருடைய பிரமாணம் அக்கினியைப்போல கிரியை செய்கிறது. அக்கினி உலோகத்தை உருக்கும். அது உலோகத்தை சுத்திகரிக்கும். அக்கினி உலோகத்தில் கலந்துள்ள கலப்படமான களிம்புகளையெல்லாம் உருக்கிப்போடும்.

பொருட்கள் அக்கினியால் உஷ்ணப்படுத்தவில்லையென்றால், அவை கடினமாகிப்போகும். சில பொருட்களை அக்கினியால் சுடவில்லையென்றால் அவை அழிந்துபோகும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து, பரிசுத்த ஆவியானவர் அக்கினி மயமான நாவுகளைப்போல வானத்திலிருந்து கீழே இறங்கி வந்தார். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷமும் அக்கினி மயமான பிரமாணமாயிருக்கிறது.

அக்கினி மயமான பிரமாணம் கர்த்தருடைய வலது கரத்திலிருந்து புறப்படுகிறது. வலது கரம் கர்த்தருடைய வல்லமைக்கும் பெலத்திற்கும் அடையாளம். கர்த்தருடைய பிரமாணத்தில் அவருடைய பெலமும் வல்லமையும் அடங்கியுள்ளது.

கர்த்தருடைய வார்த்தையானது தேவனுடைய வல்லமையினால் நிரப்பப்பட்டிருக்கிறது. நாம் கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கம்பண்ணும்போது, அது தன்னுடைய ஊழியத்தை செய்து முடிக்காமல், வெறுமையாய்த் திரும்பி வராது.

கர்த்தருடைய பிரமாணம் இஸ்ரவேல் ஜனங்களுக்கு தெய்வீக ஈவாக கொடுக்கப்பட்டிருக்கிறது. இது மகிமையுள்ள ஈவு. இந்த ஈவு கர்த்தருடைய வலது கரத்திலிருந்து புறப்பட்ட ஆசீர்வாதம்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை அதிகமாய் சிநேகிக்கிறார். “மெய்யாகவே அவர் ஜனங்களைச் சிநேகிக்கிறார்; அவருடைய பரிசுத்தவான்கள் எல்லாரும் உம்முடைய கையில் இருக்கிறார்கள்; அவர்கள் உம்முடைய பாதத்தில் விழுந்து, உம்முடைய வார்த்தைகளினால் போதனையடைவார்கள்” (உபா 33:3) என்று மோசே சொல்லுகிறார்.

கர்த்தருடைய பிரமாணம் அக்கினி மயமான பிரமாணமாகயிருந்தாலும் இந்தப் பிரமாணம் அவர்களுக்காகவே கர்த்தருடைய வலதுகரத்திலிருந்து புறப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய பிரமாணத்தினால் இஸ்ரவேல் புத்திரருக்கு அதிகமான ஆசீர்வாதங்களும், மேன்மையான சிலாக்கியங்களும் கிடைக்கும்.

கர்த்தருடைய பிரமாணம் மனுஷருடைய இருதயத்தில் எழுதப்பட்டிருக்கிறது. தேவனுடைய அன்பும் சிநேகமும் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அவர்களுடைய இருதயங்களில் கர்த்தருடைய பிரமாணம் எழுதப்பட்டிருப்பது, கர்த்தர் அவர்கள்மீது அன்பாயிருக்கிறார் என்பதற்கு அடையாளம்.

நாம் கர்த்தருடைய பிரமாணத்தை தியானிக்கும்போதெல்லாம், கர்த்தர் தம்முடைய கிருபையினால் தம்முடைய நியாயப்பிரமாணத்தை நமக்கு நல்ல ஈவாகக் கொடுத்திருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

கர்த்தருடைய பரிசுத்தவான்கள் எல்லாரும் அவருடைய கையிலிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய கையினால், தம்முடைய பரிசுத்தவான்கள் எல்லோரையும் மூடி மறைத்து பாதுகாக்கிறார். கர்த்தர் அவர்களை தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக பயன்படுத்துகிறார்.

கிறிஸ்துவின் கரத்தில் ஏழு நட்சத்திரங்கள் இருந்ததுபோல, கர்த்தருடைய கையில் அவருடைய பரிசுத்தவான்கள் எல்லோரும் இருக்கிறார்கள். “தமது வலதுகரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக்கொண்டிருந்தார்” (வெளி 1:16).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்காக தம்முடைய நியாயப்பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார். கர்த்தர் தங்களுக்கு கொடுப்பதை இஸ்ரவேல் புத்திரர் பயபக்தியோடு பெற்றுக்கொள்ளவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பாதத்தில் விழுந்து கிடக்கும்போது, அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளினால் போதனை அடைவார்கள்.

அப்போஸ்தலர் பவுல் கமாலியேலின் பாதபடியில் அமர்ந்து நியாயப்பிரமாண வார்த்தைகளைக் கற்றுக்கொண்டார். பழங்காலத்தில் கலாசாலைகளில் படிக்கும் மாணக்கர்கள், தங்களுக்கு பாடம் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்களுடைய பாதபடிகளில் அமர்ந்து, பாடங்களைக் கற்றுக்கொள்வது வழக்கம்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பாதத்தில் விழுந்து கிடக்கிறார்கள். கர்த்தருடைய கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயங்களையும், நியாயப்பிரமாணங்களையும் கற்றுக்கொள்ளவேண்டும் என்பதே இஸ்ரவேல் ஜனத்தாருடைய நோக்கம்.

பாடம் படிக்கும் மாணவர்கள் தங்கள் ஆசிரியரின் பாதபடியில் அமர்ந்திருக்கும்போது, தங்கள் ஆசிரியருக்கு அவர்கள் தங்களுடைய அன்பையும், கீழ்ப்படிதலையும், மரியாதையையும் வெளிப்படுத்துகிறார்கள். ஆசிரியர் தங்களுக்கு எதைக் கற்றுக்கொடுக்க விரும்புகிறாரோ, அதைக் கற்றுக்கொள்வதற்கு மாணாக்கர்கள் ஆர்வமாய்க் காத்திருக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் சீனாய் மலையின் அடிவாரத்திலே அமர்ந்திருந்தார்கள். கர்த்தர் தங்களுக்கு எதை சொன்னாலும் அதைக் கேட்பதற்கும், அதைக் கைக்கொள்வதற்கும் இஸ்ரவேல் ஜனத்தார் ஆர்வமாய்க் காத்திருந்தார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகள் எல்லோருமே அவருடைய வார்த்தைகளைக் கேட்பதற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும். இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் முன்பாக கர்த்தருடைய பிரமாணம் வாசிக்கப்படவேண்டும்.

"இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" *(யோவா 8:34)*.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தைக் குறித்து உயர்வாகப் பேசவேண்டும். அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளுக்கு அதிகமான மதிப்பையும், மரியாதையையும் காண்பிக்கவேண்டும்.

"மோசே நமக்கு ஒரு நியாயப்பிரமாணத்தைக் கற்பித்தான்; அது யாக்கோபின் சபைக்குச் சுதந்தரமாயிற்று" *(உபா 33:4)*. மோசேயின் நியாயப்பிரமாணம் இஸ்ரவேல் சபையாருக்கு சுதந்தரமாயிற்று.

மோசேயின் ஸ்தானத்தைப்பற்றி இந்த அதிகாரத்தில் இரண்டு காரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன :

1. இஸ்ரவேலுக்கு நியாயப்பிரமாணத்தைக் கற்பித்தவர் *(உபா 33:4,21; எண் 21:18)*

2. யெஷுரனின் ராஜா. (இஸ்ரவேல் நேர்மையான தேசம்) *(உபா 33:5)*

நியாயப்பிரமாணத்தை ஜனங்களுக்கு கற்றுக்கொடுத்த ஒரு சிலரைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. மேசியா *(ஆதி 49:10)*

2. மோசே *(உபா 33:4,21; எண் 21:18; யோவான் 1:17)*

3. யூதா *(சங் 60:7; சங் 108:8)*

4. தேவன் *(ஏசா 33:22; யாக் 4:12)*

இஸ்ரவேல் ஜனத்தார் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் குறித்து உயர்வாகப் பேசுவதுபோல, மோசேயைக் குறித்தும் உயர்வாகப் பேசவேண்டும். மோசே இஸ்ரவேல் புத்திரருக்காகவே ஜீவித்தார். மேசேயின் புத்திரர் என்று யாரைப்பற்றியும் சொல்லப்படவில்லை. ஆசாரியர்கள் எல்லோரும் ஆரோனின் குமாரர் என்று சொல்லப்படுவதுபோல, இஸ்ரவேல் ஜனத்தாரில் யாரும் மோசேயின் குமாரர் என்று சொல்லப்படவில்லை.

மோசே தன்னுடைய பின்சந்ததியாருக்கு இஸ்ரவேல் சபையார் மத்தியிலே உயர்ந்த ஸ்தானம் எதையும் கொடுக்கவில்லை. மோசேயின் குமாரரில் ஒருவரும், அவருக்கு பின்பு இஸ்ரவேல் புத்திரருக்கு தலைவர்களாகயில்லை.

ஜனங்களின் தலைவரும் இஸ்ரவேலின் கோத்திரங்களும் கூட்டங்கூடினபோது மோசே யெஷுரனுக்கு ராஜாவாயிருந்தார் (உபா 33:5). இஸ்ரவேல் ஜனத்தார் மோசேயைப்பற்றிச் சொல்லும்போது, அவரை தங்களுடைய தலைவராக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

ரூபன்
உபா 33:6

உபா 33:6. ரூபன் சாவாமல் பிழைப்பானாக; அவன் ஜனம் கொஞ்சமாயிராது என்றான்.

மோசே ரூபன் கோத்திரத்தாருக்கு கர்த்தருடைய நாமத்தினாலே ஆசீர்வாதம் சொல்லுகிறார். ரூபன் ஏற்கெனவே தன்னுடைய ஆசீர்வாதத்தை இழந்தவன். அவன் மேன்மை இழந்தவனாகயிருந்தாலும், மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு ஆசீர்வாதம் சொல்லும்போது, முதலாவது ஆசீர்வாதத்தை ரூபன் கோத்திரத்தாருக்கே சொல்லுகிறார்.

ரூபன் கோத்திரத்தாரைப்போல இக்காலத்திலும் ஏராளமான ஜனங்கள் தங்களுடைய பழைய மேன்மைகளை இழந்துபோயிருப்பார்கள். நாம் அவர்களை குற்றப்படுத்தி, அவர்களுடைய வேதனைகளை அதிகரிக்கச் செய்யக்கூடாது. நாம் மற்றவர்களை ஆசீர்வதிக்கிறவர்களாகயிருக்கவேண்டும். நாம் ஒருபோதும் மற்றவர்களை சபித்து விடக்கூடாது.

மோசே ரூபனைப்பற்றிச் சொல்லும்போது, "ரூபன் சாவாமல் பிழைப்பானாக" என்று சொல்லுகிறார். ரூபன் கோத்திரத்தார் அழிந்துபோகாமல், நிலைத்திருக்கவேண்டுமென்று மோசே விரும்புகிறார்.

ரூபன் புத்திரர் யோர்தானுக்கு இப்புறத்திலே தங்களுக்கு சுதந்தரம் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு பக்கத்து தேசத்திலிருக்கிறவர்கள் ரூபன் கோத்திரத்தாரை அழித்துப்போடக்கூடாது. அவர்கள் புறஜாதியார் மத்தியிலே அழிந்துபோகக்கூடாது. ரூபன் சாவாமல் பிழைப்பானாக என்று மோசே சொல்லுகிறார்.

ரூபன் கோத்திரத்தாருக்கு ஏற்கெனவே சுதந்தர வீதம் பிரித்துக்கொடுக்கப்பட்டிருக்கிறது. யோர்தானுக்கு இப்புறத்திலுள்ள தேசம் ரூபன் கோத்திரத்தாருக்கு சுதந்தர தேசம். ரூபன் கோத்திரத்திலுள்ள ஸ்திரீகளும் பிள்ளைகளும் அவர்களுடைய சுதந்தரவீதத்திலிருக்கிறார்கள். ரூபன் கோத்திரத்தாரில் யுத்தத்திற்கு புறப்படத்தக்கவர்கள் மாத்திரமே, இப்போது இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரோடு இருக்கிறார்கள்.

ரூபன் கோத்திரத்தாரின் யுத்த மனுஷர்கள், இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரோடு யோர்தானைக் கடந்து, கானானை சுதந்தரிப்பதற்கு உதவிசெய்யப்போகிறார்கள்.

"உமது ஊழியக்காரராகிய நாங்களோ எங்கள் ஆண்டவன் சொன்னபடியே, ஒவ்வொருவரும் யுத்தசன்னத்தாராய், கர்த்தருடைய சமுகத்தில் யுத்தத்திற்குப் போவோம் என்றார்கள்" (எண் 32:27).

மோசே ரூபன் கோத்திரத்தாரை ஆசீர்வதிக்கும்போது, "அவன் ஜனம் கொஞ்சமாயிராது" என்று சொல்லுகிறார். ரூபன் புத்திரருடைய மனுஷர்களின் எண்ணிக்கை கொஞ்சமாயிருந்தாலும், அவர்கள் சாவாமல் பிழைப்பார்கள்.

ரூபன் சாவாமல் பிழைப்பான் என்னும் வாக்கியத்திற்கு, ரூபன் கோத்திரத்தார் நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்வார்கள் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

ரூபன் கோத்திரத்தார் இந்த உலகத்திலும் பிழைத்திருப்பார்கள். அவர்கள் நித்திய ஜீவனையும் பெற்றுக்கொள்வார்கள். இந்த உலகத்திலே துன்மார்க்கருக்கு கொடிய மரணம் வருவதுபோல, ரூபன் கோத்திரத்தார் மரிக்கமாட்டார்கள்.

"ரூபன் சாவாமல் பிழைப்பானாக" என்று மோசே சொல்லுகிறார். ரூபன் பாவம் செய்து தன்னுடைய ஆசீர்வாதங்களையெல்லாம் இழந்துபோனவன். ஆனாலும் அவன் ஜீவித்து பலுகிப் பெருகுவதற்கு அனுமதிக்கப் படுகிறான். *(ஆதி 49:3-4; உபா 35:22).*

"சாவாமல் பிழைப்பானாக" என்பது ஒரு முரணான வாக்கியம். யாரும் சாகாமல் இருக்க முடியாது. ஒரேதரம் மரிப்பது மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. ரூபனின் சந்ததி அழிந்துபோகாமல் நிலைத்திருக்க வேண்டுமென்பது இதன் பொருள். இதுபோன்ற எடுத்துக்காட்டு விளக்கங்கள் வேதாகமத்தில் சில இடங்களில் காணப்படுகிறது. *(உபா 33:6; உபா 9:7; உபா 32:6; ஆதி 43:8; எண் 4:19; 1சாமு 1:11; சங் 118:17; ஏசா 38:1; எரே 20:14; யோவான் 1:20; 1யோவான் 2:4).*

"அவன் ஜனம் கொஞ்சமாயிராது" என்னும் ஆசீர்வாதமான வார்த்தை, சிமியோனுக்குக் கூறப்பட்டிருக்கும் ஆசீர்வாதம். இந்த வசனத்தில் அவன் ஜனம் என்று மட்டுமே கூறப்பட்டிருக்கிறது. சிமியோனின் ஜனம் என்று கூறப்படவில்லை. ஆயினும் செப்துவஜிந்த் பதிப்பில் "சிமியோனின் ஜனம் கொஞ்சமாயிராது" என்று தெளிவாக இருக்கிறது. மோசே எல்லா கோத்திரத்தாரையும் ஆசீர்வதித்து வருகிறார்.

யூதா
உபா 33:7

உபா 33:7. அவன் யூதாவைக்குறித்து: கர்த்தாவே, யூதாவின் சத்தத்தைக் கேட்டு, அவன் தன் ஜனத்தோடே திரும்பச் சேரப்பண்ணும்; அவன் கை பலக்கக்கடவது; அவனுடைய சத்துருக்களுக்கு அவனை நீங்கலாக்கி விடுவிக்கிற சகாயராயிருப்பீராக என்றான்.

மோசே ரூபன் கோத்திரத்தாரை ஆசீர்வதித்த பின்பு யூதாகோத்திரத்தாரை ஆசீர்வதிக்கிறார். மோசே லேவி கோத்திரத்தாரை ஆசீர்வதிப்பதற்கு முன்பாக, யூதாகோத்திரத்தாரை ஆசீர்வதிக்கிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து யூதாகோத்திரத்திலிருந்து வந்தவர். ஆகையினால் யூதாகோத்திரத்தாருக்கு மேன்மையும் கனமும் கொடுக்கப்படுகிறது.

மோசே யூதாகோத்திரத்தாரை ஆசீர்வதிக்கும்போது, "கர்த்தாவே, யூதாவின் சத்தத்தைக் கேட்டு, அவன் தன் ஜனத்தோடே திரும்பச் சேரப்பண்ணும்; அவன் கை பலக்கக்கடவது; அவனுடைய சத்துருக்களுக்கு அவனை நீங்கலாக்கி விடுவிக்கிற சகாயராயிருப்பீராக" *(உபா 33:7)* என்று சொல்லி ஆசீர்வதிக்கிறார்.

ஒருசில பதிப்புக்களில் உபா 33:7 ஆவது வசனம் உபா 33:10 ஆவது வசனத்திற்கும், உபா 33:11 ஆவது வசனத்திற்கும் இடையில் எழுதப்பட்டிருக்கிறது. யூதாவிற்கு நான்கு ஆசீர்வாதங்கள் கூறப்பட்டிருக்கிறது. *(உபா 33:7; யோசு 19:1-9).* அவையாவன:

1. கர்த்தாவே, யூதாவின் சத்தத்தைக் கேளும்.

2. அவனைத் தன் ஜனத்தோடே திரும்பச் சேரப்பண்ணும்.

3. அவன் கை பலக்கக்கடவது.

4. அவனுடைய சத்துருக்களுக்கு அவனை நீங்கலாக்கி விடுக்கிற சகாயராயிருப்பீராக.

மோசே யூதாகோத்திரத்திலுள்ள அனைவரையும் மொத்தமாய் ஆசீர்வதிக்கிறார். மோசே அவர்களுக்காக கர்த்தருடைய சமுகத்திலே ஜெபம்பண்ணி, அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். யூதாகோத்திரத்தார் செழித்திருப்பார்கள். அவர்களுடைய கைகள் பலத்திருக்கும்.

யூதாகோத்திரத்தார் கர்த்தருடைய சமுகத்திலே ஜெபம்பண்ணுகிற கோத்திரத்திரமாக இருப்பார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, யூதாகோத்திரத்தார் யுத்தத்திலே முன்பாளயமாக சென்று, சத்துருக்களுக்கு விரோதமாய் தீவிரமாக யுத்தம்பண்ணுகிற கோத்திரமாக இருப்பார்கள்.

மோசே யூதாகோத்திரத்திற்கு சொல்லுகிற ஆசீர்வாதம், அந்தக் கோத்திரத்தார் எல்லோருக்கும் சொல்லப்படுகிற பொதுவான ஆசீர்வாதமாகவும் இருக்கிறது. இது தாவீது ராஜாவுக்கு சொல்லப்படும் விசேஷித்த ஆசீர்வாதமாகவும் இருக்கிறது. தாவீது ராஜா கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாகயிருக்கிறார்.

கர்த்தர் தாவீதின் ஜெபங்களுக்கு செவிகொடுப்பார். கர்த்தர் தாவீதுக்கு சத்துருக்கள்மீது வெற்றியைக் கட்டளையிடுவார். தாவீதின் கை பலத்திருக்கும். கர்த்தர் தாவீதை அவருடைய சத்துருக்களுக்கு நீங்கலாக்கி விடுவிப்பார். கர்த்தரே தாவீதுக்கு சகாயராயிருப்பார். கர்த்தர் தாவீதினுடைய கைகளின் பிரயாசங்களையெல்லாம் ஆசீர்வதிப்பார்.

மோசே யூதாகோத்திரத்தாரை ஆசீர்வதிக்கும்போது, "கர்த்தாவே, யூதாவின் சத்தத்தைக் கேட்டு, அவன் தன் ஜனத்தோடே திரும்பி சேரப்பண்ணும்" என்று அவர்களுக்காக ஜெபம்பண்ணி, அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

"அவன் தன் ஜனத்தோடே திரும்ப சேரப்பண்ணும்" என்னும் வாக்கியம் சீலோவைக் குறிக்கும் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். யாக்கோபு சீலோவைக் குறித்து தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் சீலோவிலே யூதாவினிடத்தில் சேருவார்கள் என்பது யாக்கோபு சொன்ன தீர்க்கதரிசன வாக்கியம்.

"சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதும் இல்லை, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை; ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்" (ஆதி 49:10).

மோசே யூதாகோத்திரத்தாரை ஆசீர்வதிக்கும்போது, அவர் சிமியோன் கோத்திரத்தாரைக் குறித்து ஆசீர்வாதமான வார்த்தைகள் எதையும் சொல்லவில்லை. லேவி கோத்திரத்தார் கர்த்தருக்கு விசேஷமான ஊழியத்தை செய்வதுபோல, சிமியோன் கோத்திரத்தார் விசேஷமான எந்த ஊழியத்தையும் செய்யவில்லை.

சிமியோன் கோத்திரத்தாருடைய பாவங்களினிமித்தமாக, வனாந்தரத்திலே அவர்கள் ஒடுக்கப்பட்டார்கள். மற்ற கோத்திரத்தாரைவிட சிமியோன் கோத்திரத்தார் குறைந்த எண்ணிக்கையிலிருந்தார்கள். பேயோரின் விஷயத்தில் பாவம் செய்த சிம்ரி, சிமியோன் கோத்திரத்தைச் சேர்ந்தவன்.

சிமியோன் கோத்திரத்தாரின் சுதந்தர வீதம், யூதாகோத்திரத்தாரின் சுதந்தரத்தோடு சேர்த்து சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினால் மோசே யூதாகோத்திரத்தாருக்கு ஆசீர்வாதங்களை சொல்லும்போது, அந்த ஆசீர்வாதங்களில் சிமியோன் கோத்திரத்தாருக்கும் பங்கு இருக்கிறது.

லேவி
உபா 33:8-11

உபா 33:8. லேவியைக் குறித்து: நீ மாசாவிலே பரீட்சைபார்த்து, மேரிபாவின் தண்ணீரிடத்தில் வாக்குவாதம்பண்ணின உன் பரிசுத்த புருஷன் வசமாய் உன்னுடைய தும்மீம் ஊரீம் என்பவைகள் இருப்பதாக.

உபா 33:9. தன் தகப்பனுக்கும் தன் தாய்க்கும்: நான் உங்களைப் பாரேன் என்று சொல்லி, தன் சகோதரரை அங்கிகரியாமல், தன் பிள்ளைகளையும் அறியாமலிருக்கிறவன் வசமாய் அவைகள் இருப்பதாக; அவர்கள் உம்முடைய வார்த்தைகளைக் கைக்கொண்டு, உம்முடைய உடன்படிக்கையைக் காக்கிறவர்கள்.

உபா 33:10. அவர்கள் யாக்கோபுக்கு உம்முடைய நியாயங்களையும், இஸ்ரவேலுக்கு உம்முடைய பிரமாணத்தையும் போதித்து, உமது சந்நிதானத்திலே தூபவர்க்கத்தையும், உமது பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனபலிகளையும் இடுவார்கள்.

உபா 33:11. கர்த்தாவே, அவன் சம்பத்தை ஆசீர்வதித்து, அவன் கைக்கிரியைகளின்மேல் பிரியமாயிரும்; அவனைப் பகைத்து அவனுக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் திரும்ப எழுந்திராதபடி அவர்களுடைய இடுப்புகளை நொறுக்கிவிடும் என்றான்.

மோசே லேவி கோத்திரத்தாரை ஆசீர்வதிக்கிறார். மோசேயும் லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவர். ஆனாலும் மோசே லேவி கோத்திரத்தைப்பற்றிச் சொல்லும்போது, தன்னைப்பற்றி விசேஷமாக எதுவும் சொல்லவில்லை. லேவி கோத்தித்தார் தேவனுடைய கோத்திரத்தார் என்னும் மேன்மையைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் மோசேயின் கோத்திரத்தார் என்று அழைக்கப்படுவதைவிட, தேவனுடைய கோத்திரத்தார் என்று அழைக்கப்படுவதே அவர்களுக்கு மேன்மையும் கனமுமாயிருக்கிறது.

மோசே லேவி கோத்திரத்தாரைக் குறித்து இந்த வசனப்பகுதியில் விரிவாகச் சொல்லுகிறார். லேவியர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்கிற ஆசாரியராயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய ஆசாரிய கோத்திரத்தார். ஆசாரியருக்கு தலைவராகயிருக்கிறவர். "பிரதான ஆசாரியர்" என்று அழைக்கப்படுவார். இந்த வசனப்பகுதியில் பிரதான ஆசாரியன் "கர்த்தருடைய பரிசுத்த புருஷன்" என்று அழைக்கப்படுகிறார். கர்த்தருக்கு பரிசுத்தம் என்னும் வார்த்தைகள், பிரதான ஆசாரியனுடைய நெற்றிப்பட்டயத்தில் எழுதப்பட்டிருக்கும்.

மோசே லேவியரை ஆசீர்வதிக்கும்போது, "லேவியைக் குறித்து: நீ மாசாவிலே பரீட்சைபார்த்து, மேரிபாவின் தண்ணீரிடத்தில் வாக்குவாதம்பண்ணின உன் பரிசுத்த புருஷன் வசமாய் உன்னுடைய தும்மீம் ஊரீம் என்பவைகள் இருப்பதாக" (உபா 33:8) என்று சொல்லுகிறார்.

பிரதான ஆசாரியரே இங்கு பரிசுத்தபுருஷன் என்று அழைக்கப்பட்டிருக்கிறார். இதை மாசாவிலும், (யாத் 17:7; உபா 6:16; உபா 9:22; உபா 33:8) மேரிபாவிலும் (எண் 20:13,24; எண் 27:14; சங் 81:7) கர்த்தர் உறுதிபண்ணியிருக்கிறார்.

ஆரோன் மேரிபாவின் தண்ணீர்களைப்பற்றிய விஷயத்தில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார். இதன் நிமித்தமாக மோசே ஆரோனைப்பற்றிச் சொல்லும்போது, "அவர் மாசாவிலே பரீட்சை பார்த்து, மேரிபாவின் தண்ணீரிடத்தில் வாக்குவாதம்பண்ணின பரிசுத்த புருஷன்" என்று சொல்லுகிறார். தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஆரோன்மீதும், அவருடைய சந்ததியார் மீதும் வந்தது.

"பின்பு கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம்பண்ணும்படி, நீங்கள் என்னை விசுவாசியாமற் போனபடியினால், இந்தச் சபையாருக்கு நான் கொடுத்த தேசத்துக்குள் நீங்கள் அவர்களைக் கொண்டுபோவதில்லை என்றார்" (எண் 20:12).

ஆரோன் மேரிபாவின் தண்ணீரிடத்தில் வாக்குவாதம்பண்ணினாலும், அவர் மற்றொரு மேரிபாவிலே, கர்த்தர்மீது விசுவாசமாகவும், பக்தி வைராக்கியமாகவும் இருக்கிறார்.

"இஸ்ரவேல் புத்திரர் வாதாடினதினிமித்தமும், கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரா இல்லையா என்று அவர்கள் கர்த்தரைப் பரிட்சை பார்த்ததினிமித்தமும், அவன் அந்த ஸ்தலத்திற்கு மாசா என்றும் மேரிபா என்றும் பேரிட்டான்" (யாத் 17:7).

ஆரோன் முந்தின மேரிபாவின் தண்ணீரிடத்திலே வாக்குவாதம் பண்ணினாலும், இரண்டாவது மேரிபாவினிடத்திலே, கர்த்தருக்கு பக்தி வைராக்கியமாயிருக்கிறார். மோசே ஆரோனைப்பற்றிச் சொல்லும்போது, ஆரோன் வாக்குவாதம்பண்ணியதை பற்றிச்சொல்லாமல், மற்றொரு மேரிபாவினிடத்தில், இஸ்ரவேல் ஜனங்கள் வாக்குவாதம்பண்ணியபோது, ஆரோன் கர்த்தருக்கு பக்திவைராக்கியமாயிருந்ததை சொல்லுகிறார் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

ஆரோன் கர்த்தர்மீது விசுவாசம் வைத்து, அவர்மீது பக்தி வைராக்கியம் காண்பித்த படியினால், அவர் பரிசுத்த புருஷனாகயிருக்கிறார்.

பிரதான ஆசாரிய ஊழியம் ஆரோனிடத்திலும், அவருடைய சந்ததியாரிடத்திலும் தங்கியிருக்கவேண்டும் என்பது மோசேயின் ஜெபம். "உன் பரிசுத்த புருஷன் வசமாய் உன்னுடைய தும்மீம் ஊரீம் என்பவைகள் இருப்பதாக" என்று மோசே ஆரோனைக் குறித்து சொல்லுகிறார்.

தும்மீம் ஊரீம் என்பவைகள் ஆரோனுடைய விசேஷித்த ஊழியங்களுக்காக, அவரிடத்தில் கொடுக்கப்பட்டது.

"அவனோடே பண்ணின என் உடன்படிக்கை ஜீவனும் சமாதானமுமாக இருந்தது; அவன் எனக்குப் பயப்படும் பயத்தோடே இருக்கவேண்டுமென்று, இவைகளை அவனுக்குக் கட்டளையிட்டேன்; அப்படியே அவன் என் நாமத்துக்குப் பயந்தும் இருந்தான்" *(மல் 2:5).*

தும்மீம் ஊரீம் என்பவைகள் ஆரோன் வசமாகவே இருக்கவேண்டும் என்றும், அவை ஆரோனைவிட்டு எடுக்கப்பட்டு விடக்கூடாது என்றும் மோசே விண்ணப்பம்பண்ணுகிறார்.

மோசே இந்த வசனப்பகுதியில், தும்மீம் ஊரீம் என்பவைகளைக் குறித்து ஆசீர்வாதமான வார்த்தைகளை சொல்லியிருந்தாலும், இஸ்ரவேல் ஜனத்தார் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போன காலத்தில் தும்மீம் ஊரீம் என்பவைகள் காணாமல் போயிற்று. அதன் பின்பு அவை கண்டுபிடிக்கவுமில்லை. எஸ்றா நெகேமியா, செருபாபேல் ஆகியோரின் காலத்தில், இரண்டாவது தேவாலயம் கட்டப்பட்டபோது, தும்மீம் ஊரீம் என்பவைகளைப்பற்றிய குறிப்பு எதுவும் காணப்படவில்லை.

தும்மீம் ஐக்கியத்திற்கும், ஊரீம் வெளிச்சத்திற்கும் அடையாளம். யூதாகோத்திரத்தார் தங்களுக்குள் ஒற்றுமையாகவும் ஐக்கியமாகவும் இருக்கவேண்டும். அவர்கள் மத்தியிலே கர்த்தருடைய வார்த்தையைக் குறித்து வெளிச்சம் காணப்படவேண்டும். கர்த்தருடைய பிரதான ஆசாரியர்கள் நீதிமான்களாகவும், வேதவாக்கியங்களை கற்று தேர்ச்சி பெற்றவர்களாகவும் இருக்கவேண்டும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஜனங்கள் மத்தியிலே பிரசங்கம் செய்கிற ஊழியக்காரர்களுக்காகவும், நாம் இப்படிப்பட்ட ஜெபத்தை ஏறெடுக்கவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தெளிந்த சிந்தையுள்ளவர்களாகவும், பரிசுத்தமான இருதயமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். ஊழியக்காரர்களிடத்தில் வேதஅறிவும், பரிசுத்தமும் காணப்படவேண்டும். இவை இரண்டும் இருந்தால்தான் அவர்கள் பூரணமான ஊழியக்காரர்களாக இருப்பார்கள்.

பிரதான ஆசாரியருக்கு கீழே, ஆசாரியரும் லேவியரும் ஊழியம் செய்கிறார்கள். மோசே இந்த வசனப்பகுதியில் அவர்களையும் கர்த்தருடைய நாமத்தினால் ஆசீர்வதிக்கிறார். இவர்கள் கர்த்தருக்கு பக்தி வைராக்கியமாயிருக்கிறவர்கள்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே பொன்கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதை தங்களுக்கு தெய்வமாக்கி ஆராதித்தபோது, லேவியர்கள் அந்த விக்கிரகத்தை ஆராதியாமல், அவர்களை விட்டு விலகியிருந்தார்கள். அவர்கள் தங்களுடைய பரிசுத்தத்தைக் காத்துக்கொண்டார்கள்.

"பாளயத்தின் வாசலில் நின்று: கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? அவர்கள் என்னிடத்தில் சேரக்கடவர்கள் என்றான். அப்பொழுது லேவியின் புத்திரர் எல்லாரும் அவனிடத்தில் கூடிவந்தார்கள்" *(யாத் 32:26).*

லேவிகோத்திரத்தார் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே காணப்பட்ட பொதுவான மீறுதல்களுக்கும், அக்கிரமங்களுக்கு விலகி, பரிசுத்தமாய் ஜீவித்தார்கள். இஸ்ரவேல் கோத்திரத்தார் தங்கியிருந்த பாளயங்களிலும், கானான் தேசத்திலும் லேவியர்கள் கர்த்தருக்கு பரிசுத்தமானவர்களாயிருந்தார்கள். தாங்கள் பரிசுத்தமாய் ஜீவிப்பது மாத்திரமல்ல, லேவியர்கள் பாவம் செய்கிறவர்களுக்கு விரோதமாக, சாட்சியாகவும் ஜீவித்தார்கள்.

கோராகின் கூட்டத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தபோது, கோராகின் புத்திரர் அந்தப் பாவத்திற்கு பங்காளிகளாகயிருக்கவில்லை. பாவம் செய்தவர்கள்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வந்தது. கோராகின் புத்திரரோ, கர்த்தருடைய கோபத்திற்கு தப்பித்துக்கொண்டார்கள்.

"பூமி தன் வாயைத் திறந்து, அவர்களையும் கோராகையும் விழுங்கினதினாலும், அக்கினி இருநூற்று ஐம்பது பேரைப் பட்சித்ததினாலும், அந்தக் கூட்டத்தார் செத்து, ஒரு அடையாளமானார்கள். கோராகின் குமாரரோ சாகவில்லை" (எண் 26:10,11).

தங்கள் பெற்றோர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தாலும், ஆசாரியரும் லேவியரும், அந்தப் பாவங்களுக்கு உடன்படாமல், தங்கள் பரிசுத்தத்தைக் காத்துக்கொண்டார்கள். ஆகையினால் ஆசாரிய ஊழியம் அவர்களிடத்தில் தங்கியிருக்கவேண்டுமென்று மோசே அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

மோசே இதுபற்றிச் சொல்லும்போது, "தன் தகப்பனுக்கும் தன் தாய்க்கும்: நான் உங்களைப் பாரேன் என்று சொல்லி, தன் சகோதரரை அங்கிகரியாமல், தன் பிள்ளைகளையும் அறியாமலிருக்கிறவன் வசமாய் அவைகள் இருப்பதாக; அவர்கள் உம்முடைய வார்த்தைகளைக் கைக்கொண்டு, உம்முடைய உடன்படிக்கையைக் காக்கிறவர்கள்" (உபா 33:9) என்று சொல்லுகிறார்.

உபா 33:9 ஆவது வசனத்தின் முதல் பகுதி பிரதான ஆசாரியனைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. அவனுடைய குடும்பத்தில் யாராவது மரித்துப் போனாலும், பிரதான ஆசாரியன் தன்னைத் தீட்டுப்படுத்திக் கொள்ளக்கூடாது. (லேவி 21:11-12). இந்த வசனத்தின் பின்பகுதி பிரதான ஆசாரியனையும், லேவியரையும் குறிப்பிடுகிறது. அவர்கள் தேவனுக்கு முதலிடம் கொடுக்கிறார்கள். கர்த்தர்மீது தாங்கள் வைராக்கியம் காண்பிப்பதினால், பாவம் செய்தவர்கள் தங்கள் சகோதரராக இருந்தாலும் அவர்களைக் கொன்றுபோடுவார்கள் (யாத் 32:26-28; எண் 25:7-9).

லேவிகோத்திரத்தார் கர்த்தருடைய வார்த்தைகளை இஸ்ரவேல் ஜனத்தாருக்கு போதிக்கிறவர்கள். அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்திலே பணிவிடை ஊழியங்களை செய்கிறவர்கள். அவர்கள் கர்த்தரிடத்தில் பக்திவைராக்கியமாயிருக்கிறவர்கள்.

லேவி கோத்திரத்தார், கர்த்தருடைய பரிசுத்தமான காரியங்களில் ஊழியம் செய்வதினால், கர்த்தருடைய விசேஷித்த ஆசீர்வாதங்கள் அவர்கள் மத்தியிலே தங்கியிருக்கவேண்டுமென்று, மோசே அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

ஆசாரியரும் லேவியரும், இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே, கர்த்தருக்காக ஊழியம் செய்கிறவர்கள். "அவர்கள் யாக்கோபுக்கு உம்முடைய நியாயங்களையும், இஸ்ரவேலுக்கு உம்முடைய பிரமாணத்தையும் போதிப்பார்கள்" (உபா 33:10) என்று மோசே லேவிகோத்திரத்தாரின் ஊழியத்தைப்பற்றிச் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் சபையாகக் கூடிவரும்போது, லேவியர்கள் அவர்கள் மத்தியிலே மோசேயின் நியாயப்பிரமாண வார்த்தைகளை வாசித்து, ஜனங்களுக்கு போதிப்பார்கள்.

"யெசுவா, பானி, செரெபியா, யாமின், அக்கூப், சபெதாயி, ஒதியா, மாசெயா, கேலிதா, அசரியா, யோசபாத், ஆனான், பெலாயா என்பவர்களும், லேவியரும், நியாயப்பிரமாணத்தை ஜனங்களுக்கு விளங்கப்பண்ணினார்கள்; ஜனங்கள் தங்கள் நிலையிலே நின்றார்கள். அவர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணப் புஸ்தகத்தை தீர்க்கமாக வாசித்து, அர்த்தஞ்சொல்லி, வாசித்ததை அவர்களுக்கு விளங்கப்பண்ணினார்கள்" (நெகே 8:7,8).

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய வழக்குகளையும், வியாச்சியங்களையும் நியாயாதிபதிகளிடத்தில் வந்து சொல்லுவார்கள். நியாயாபதிகளால் தீர்த்து வைக்க முடியாத வழக்குகள், மிகவும் குழப்பமான, கடினமான வியாச்சியங்கள் ஆகியவற்றை, ஆசாரியரும் லேவியரும் தீர்த்து வைப்பார்கள். ஊரீம், தும்மீம் ஆகியவை பிரதான ஆசாரியரின் கையிலிருக்கிறது. அந்த ஆசாரியன் அவைகளைப் பயன்படுத்தி, கர்த்தருடைய சித்தத்தை அறிந்துகொண்டு, கடினமான வழக்குகளுக்கு தீர்ப்பு சொல்லுவார்.

"இவர்களோடேகூடச் செமாயா, நெதனியா, செபதியா, ஆசகேல், செமிரமோத், யோனத்தான், அதோனியா, தொபியா, தோபத்தோனியா என்னும் லேவியரையும், இவர்களோடேகூட ஆசாரியரான எலிஷாமாவையும், யோராமையும் அனுப்பினான். இவர்கள் யூதாவிலே உபதேசித்து, கர்த்தருடைய வேத புஸ்தகத்தை வைத்துக்கொண்டு, யூதாவின் பட்டணங்களிலெல்லாம் திரிந்து ஜனங்களுக்குப் போதித்தார்கள்" (2நாளா 17:8,9).

லேவியர்கள் கர்த்தருக்காக இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே ஊழியம் செய்ததுபோல, அவர்கள் இஸ்ரவேல் ஜனங்களுக்காக கர்த்தருடைய சந்நிதியிலும் ஊழியம் செய்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் இஸ்ரவேல் புத்திரருக்காக, தூபவர்க்கத்தையும், பலிகளையும் செலுத்துகிறார்கள்.

மோசே லேவியருடைய ஊழியத்தைப்பற்றிச் சொல்லும்போது, "அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலே தூபவர்க்கத்தையும், உமது பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனபலிகளையும் இடுவார்கள்" (உபா 33:10) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தாருடைய பாவங்கள் நிவிர்த்தி பண்ணப்படவேண்டும். அவர்களுக்கு கர்த்தருடைய விசேஷித்த கிருபைகளும், சிலாக்கியங்களும் கிடைக்கவேண்டும். இதற்காகவே அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலே பலிகளையும், தூபங்களையும் செலுத்துகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கர்த்தருடைய பிரமாணம் தெரிந்திருக்கவேண்டும். இதற்காக ஆசாரியர்கள் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கர்த்தருடைய நியாயங்களையும், பிரமாணத்தையும் போதிக்கிறார்கள். இவையெல்லாம் ஆசாரியருடைய ஊழியங்கள். ஆசாரியர்கள் இந்த ஊழியங்களை செய்யும்போது லேவியர்கள் அவர்களுக்கு உதவி செய்கிறார்கள்.

மோசே லேவி கோத்திரத்தாரை ஆசீர்வதிக்கும்போது, அவர்களுக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். "கர்த்தாவே, அவன் சம்பத்தை ஆசீர்வதித்து, அவன் கைக்கிரியைகளின்மேல் பிரியமாயிரும்; அவனைப் பகைத்து அவனுக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் திரும்ப எழுந்திராதபடி அவர்களுடைய இடுப்புகளை நொறுக்கிவிடும்" (உபா 33:11) என்று மோசே ஜெபம்பண்ணுகிறார்.

கர்த்தரே லேவி கோத்திரத்தாருடைய சம்பத்துக்களை ஆசீர்வதிக்கவேண்டும். கர்த்தர் அவர்களுடைய கைக்கிரியையின்மேல் பிரியமாயிருக்கவேண்டும். கர்த்தர் அவர்களுக்கு அதிகமான கிருபைகளைக் கொடுக்கவேண்டும். அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்தில் ஆசாரிய ஊழியம் செய்வதற்கு மேலும் மேலும் தகுதியுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

கர்த்தர் லேவியருடைய கைகளின் கிரியைகளை ஆசீர்வதிக்கவேண்டும். கர்த்தருடைய சந்நிதானத்தில் தூபம் காட்டுவது, பலிசெலுத்துவது ஆகியவை ஆசாரியருடைய கைக்கிரியைகள். கர்த்தர் அவர்களுடைய கைக்கிரியைகளின்மேல் பிரியமாயிருக்கும்போது, அவர்கள் செலுத்துகிற பலிகளையும், தூபங்களையும் அங்கீகரிப்பார்.

லேவியர்கள் கர்த்தருடைய ஊழியத்தை செய்தாலும், அவர்களைப் பகைத்து, அவர்களுக்கு விரோதமாக எழும்புகிற சத்துருக்களும் இருக்கிறார்கள். "அவனுக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் திரும்ப எழுந்திராதபடி அவர்களுடைய இடுப்புகளை நொறுக்கிவிடும்" (உபா 33:11) என்று மோசே லேவியருக்காக கர்த்தருடைய சமுகத்திலே ஜெபம்பண்ணுகிறார். கர்த்தரே லேவியருக்கு சுதந்தரமாகயிருக்கிறார். அவரே அவர்களுக்கு பாதுகாப்பாகவும் இருக்கிறார்.

மோசே லேவி கோத்திரத்தாருக்கு ஐந்து ஆசீர்வாதங்களை சொல்லுகிறார். அவையாவன :

1. உன் பரிசுத்த புருஷன் வசமாய் உன்னுடைய தும்மீம் ஊரீம் என்பவைகள் இருப்பதாக.

2. அவர்கள் யாக்கோபுக்கு உம்முடைய நியாயங்களையும், இஸ்ரவேலுக்கு உம்முடைய பிரமாணத்தையும் போதிப்பார்கள். (உபா 33:10).

3. உமது சந்நிதானத்திலே தூப வர்க்கத்தையும், உமது பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனபலிகளையும் இடுவார்கள்.

4. அவன் சம்பத்தை ஆசீர்வதித்து, அவன் கைக்கிரியைகளின்மேல் பிரியமாயிரும். (உபா 33:11).

5. அவர்களுடைய சத்துருக்களை நொறுக்கிவிடும்.

பென்யமீன்
உபா 33:12

உபா 33:12. பென்யமீனைக்குறித்து: கர்த்தருக்குப் பிரியமானவன், அவரோடே சுகமாய்த் தங்கியிருப்பான்; அவனை எந்நாளும் அவர் காப்பாற்றி, அவன் எல்லைக்குள்ளே வாசமாயிருப்பார் என்றான்.

மோசே லேவி கோத்திரத்தாரை ஆசீர்வதித்த பின்பு, பென்யமீன் கோத்திரத்தாருக்கு ஆசீர்வாதம் சொல்லுகிறார். லேவியர்கள் ஆசரிப்புக்கூடாரத்திலே பணிவிடை செய்கிறார்கள். லேவியருக்கு சுதந்தரவீதம் கொடுக்கப்பட்ட இடத்திற்கு அருகாமையில், பென்யமீன் கோத்திரத்தாருக்கு சுதந்தரவீதம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மோசே யோசேப்பை ஆசீர்வதிப்பதற்கு முன்பாக, பென்யமீனை ஆசீர்வதிக்கிறார். எருசலேம் பென்யமீன் கோத்திரத்தாருடைய சுதந்தர வீதத்திலிருக்கிறது. இதனால் எருசலேமின் மகிமையில், பென்யமீன் புத்திரரும் பங்கு பெறுகிறார்கள்.

எப்பிராயீம் கோத்திரத்தார் தாவீதை விட்டு விலகி சமாரியாவுக்குப் போகிறார்கள். பென்யமீன் கோத்திரத்தாரோ தாவீதின் வீட்டாரோடு நிலைத்து நிற்கிறார்கள். பென்யமீன் கோத்திரத்தார், எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திலும் நிலைத்து நிற்கிறார்கள். இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தார் எல்லோரும் யெரொபெயாமோடு சேர்ந்து, தாவீதின் வீட்டாரை விட்டு பிரிந்து தனிராஜ்யமாக பிரிந்து போகிறார்கள்.

மோசே பென்யமீன் கோத்திரத்தரைப்பற்றிச் சொல்லும்போது, "பென்யமீன் கர்த்தருக்கு பிரியமானவன்" என்று சொல்லுகிறார். பென்யமீன் கோத்திரத்தாருடைய முற்பிதாவாகிய பென்யமீன், யாக்கோபுக்கு பிரியமான குமாரனாகயிருந்தார். பென்யமீன் யாக்கோபுடைய வலது கையின் குமாரன்.

இஸ்ரவேல் புத்திரருடைய முதல் ராஜாவாகிய சவுலும், புதிய ஏற்பாட்டுக்காலத்தில் பிரதான அப்போஸ்தலராகிய பவுலும் பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள்.

பென்யமீன் கோத்திரத்தார் கர்த்தரோடே சுகமாய்த் தங்கியிருப்பார்கள். தேவனுடைய தெய்வீக பாதுகாப்பு அவர்களுக்கு கிடைக்கும். கர்த்தர் பென்யமீன் கோத்திரத்தாரை எந்நாளும் காப்பாற்றுவார்.

கர்த்தருடைய ஆலயம், பென்யமீன் கோத்திரத்தாரின் சுதந்தரத்தில் எருசலேமிலே கட்டப்படுகிறது. கர்த்தருடைய ஆலயம் அவருடைய பரிசுத்த பிரசன்னம் தங்கியிருக்கிற வாசஸ்தலம். கர்த்தர் தம்முடைய ஆலயத்தில் வாசமாயிருப்பதினால், அவர் பென்யமீன் கோத்திரத்தாருடைய எல்லைகளுக்குள்ளே வாசமாயிருப்பார்.

"சேலா, ஏலேப், எருசலேமாகிய எபூசி, கிபெயாத், கீரேயாத் என்னும் பதினான்கு பட்டணங்களும் அவைகளின் கிராமங்களுமே; பென்யமீன் புத்திரருக்கு அவர்கள் வம்சங்களின்படி இருக்கிற சுதந்தரம் இதுவே" (யோசு 18:28).

சீயோன் நகரம் தாவீதின் நகரம் என்று அழைக்கப்படுகிறது. இந்த நகரம் யூதாகோத்திரத்தாருக்குரியது. கர்த்தருடைய ஆலயமோ மோரியா மலையிலே கட்டப்படுகிறது. இந்த மலை பென்யமீன் கோத்திரத்தாருடைய சுதந்தரத்திலுள்ளது. ஆகையினால் கர்த்தர் பென்யமீன் கோத்திரத்தாரின் எல்லைக்குள்ளே வாசமாயிருக்கிறார். கர்த்தர் தம்முடைய தோள்களின் மத்தியிலே வாசம்பண்ணுகிறார். கர்த்தருடைய ஆலயம் மோரியா மலையின்மீது கட்டப்பட்டிருப்பதினால், மோரியா மலை தலையாகயிருக்கிறது. இந்த தலை மனுஷருடைய தோள்களின்மேல் இருப்பதுபோல, இருக்கிறது.

மோசே பென்யமீன் கோத்திரத்தாருக்கு மூன்று ஆசீர்வாதங்களை சொல்லுகிறார். அவையாவன :

1. பென்யமீன் கர்த்தருக்குப் பிரியமானவன், அவரோடே சுகமாய்த் தங்கியிருப்பான். சீயோன் மலை யூதாவுக்கு உரியது. மோரியா மலையில் தேவாலயம் உள்ளது. அது பென்யமீனுக்கு உரியது.

2. அவனை எந்நாளும் அவர் காப்பாற்றுவார்.

3. கர்த்தருடைய தோள்களுக்கிடையே அவன் வாசம் பண்ணுவான். தகப்பன் தன் மகனைச் சுமந்து செல்வதுபோல கர்த்தர் பென்யமீனை ஆதரிப்பார்.

யோசேப்பு உபா 33:13-17

உபா 33:13. யோசேப்பைக்குறித்து: கர்த்தரால் அவனுடைய தேசம் ஆசீர்வதிக்கப்படுவதாக; அது வானத்தின் செல்வத்தினாலும், பனியினாலும், ஆழத்திலுள்ள நீரூற்றுக்களினாலும்,

உபா 33:14. சூரியன் பக்குவப்படுத்தும் அருமையான கனிகளினாலும், சந்திரன் பக்குவப்படுத்தும் அருமையான பலன்களினாலும்,

உபா 33:15. ஆதிபர்வதங்களில் உண்டாகும் திரவியங்களினாலும், நித்திய மலைகளில் பிறக்கும் அரும்பொருள்களினாலும்,

உபா 33:16. நாடும் அதின் நிறைவும் கொடுக்கும் அருமையான தானியங்களினாலும் ஆசீர்வதிக்கப்படுவதாக. முட்செடியில் எழுந்தருளினவரின் தயை யோசேப்புடைய சிரசின்மேலும், தன் சகோதரரில் விசேஷித்தவனுடைய உச்சந்தலையின்மேலும் வருவதாக.

உபா 33:17. அவன் அலங்காரம் அவன் தலையீற்றுக் காளையினுடைய அலங்காரத்தைப்போலவும், அவன் கொம்புகள் காண்டாமிருகத்தின் கொம்புகளைப்போலவும் இருக்கும்; அவைகளாலே ஜனங்களை ஏகமாய் தேசத்தின் கடையாந்தரங்கள் மட்டும் முட்டித் துரத்துவான்; அவைகள் எப்பிராயீமின் பதினாயிரங்களும் மனாசேயின் ஆயிரங்களுமானவைகள் என்றான்.

மோசே யோசேப்பை ஆசீர்வதிக்கும்போது, அவர் மனாசே கோத்திரத்தாரையும், எப்பிராயீம் கோத்திரத்தாரையும் ஆசீர்வதிக்கிறார். யாக்கோபு தன்னுடைய குமாரரை ஆசீர்வதித்தபோது, யோசேப்புக்கு அதிகமான ஆசீர்வாதங்களைச் சொன்னார் (ஆதி 49-ஆவது அதிகாரம்).

யாக்கோபு யோசேப்பை ஆசீர்வதித்ததுபோலவே, மோசேயும் யோசேப்பை அதிகமாய் ஆசீர்வதிக்கிறார். மோசே யோசேப்பைப்பற்றிச் சொல்லும்போது, "அவர் தன் சகோதரரில் விசேஷித்தவர்" (உபா 33:16) என்று சொல்லுகிறார்.

யோசேப்பின் சகோதரர் அவரை அடிமையாக விற்றுப்போட்டார்கள். இதனால் யோசேப்பு தன் சகோதரரை விட்டு பிரிக்கப்பட்டார். கர்த்தரோ யோசேப்பை ஒரு பிரபுவாக்கி, அவரை அவருடைய சகோதரரிடத்திலிருந்து வேறுபிரிக்கிறார். "யோசேப்பு தன் சகோதரரில் விசேஷித்தவர்" என்னும் வாக்கியத்திற்கு, அவர் தன் சகோதரரிடத்திலிருந்து வேறு பிரிக்கப்பட்டவர் என்பது பொருளாகும்.

மோசே யோசேப்புக்கு ஆசீர்வாதம் சொல்லும்போது, "கர்த்தரால் அவனுடைய தேசம் ஆசீர்வதிக்கப்படுவதாக; அது வானத்தின் செல்வத்தினாலும், பனியினாலும், ஆழத்திலுள்ள நீரூற்றுக்களினாலும், சூரியன் பக்குவப்படுத்தும் அருமையான கனிகளினாலும், சந்திரன் பக்குவப்படுத்தும் அருமையான பலன்களினாலும், ஆதிபர்வதங்களில் உண்டாகும் திரவியங்களினாலும், நித்திய மலைகளில் பிறக்கும் அரும்பொருள்களினாலும், நாடும் அதின் நிறைவும் கொடுக்கும் அருமையான தானியங்களினாலும் ஆசீர்வதிக்கப்படுவதாக. முட்செடியில் எழுந்தருளினவரின் தயை யோசேப்புடைய சிரசின்மேலும், தன் சகோதரரில் விசேஷித்தவனுடைய உச்சந்தலையின்மேலும் வருவதாக" (உபா 33:13-16) என்று சொல்லுகிறார்.

"கர்த்தரால் அவனுடைய தேசம் ஆசீர்வதிக்கப்படுவதாக" என்பதே யோசேப்பின் கோத்திரத்தாருக்கு சொல்லப்படும் பொதுவான ஆசீர்வாதம். யோசேப்புக்கு சுதந்தரவீதமாக கொடுக்கப்பட்ட தேசம் செழிப்பான தேசம். அந்த தேசத்தில் கனிவிருட்சங்கள் ஏராளமாயிருக்கிறது. எப்பிராயீமுக்கும், மனாசேக்கும் கிடைத்த சுதந்தர தேசம், செழிப்பான தேசமாகயிருக்கிறது.

ஒரு தேசம் தொடர்ந்து செழிப்பாகயிருக்கவேண்டுமென்றால், அந்த தேசத்தின்மீது மழை தொடர்ந்து பெய்யவேண்டும். கர்த்தருடைய ஆசீர்வாதத்தினால், யோசேப்புக்கு சுதந்தரவீதமாக கிடைத்த தேசத்தின்மீது மழை பெய்யவேண்டுமென்று, மோசே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

மனாசே கோத்திரத்தாரும், எப்பிராயீம் கோத்திரத்தாரும் ஏராளமான ஐசுவரியங்களோடும், சம்பத்துக்களோடும், செல்வச்செழிப்போடும் இருக்கவேண்டும் என்பது மோசே அவர்களுக்கு சொல்லுகிற பொதுவான ஆசீர்வாதம். கர்த்தர் அவர்களை அதிகமாய் ஆசீர்வதிக்கவேண்டும் என்று சொல்லி, மோசே ஒரு சில ஆசீர்வாதங்களை இந்த வசனப்பகுதியில் விசேஷமாகவும் சொல்லுகிறார்.

மனாசே எப்பிராயீம் ஆகியோரின் சுதந்தர தேசம், வானத்தின் செல்வத்தினாலும், பனியினாலும், ஆழத்தின் நீரூற்றுகளினாலும் ஆசீர்வதிக்கப்படவேண்டுமென்று மோசே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். வானத்திலிருந்து பெய்யும் மழையும் பனியும் மிகவும் விசேஷமானது. மழை தண்ணீர் சுத்தமானது. பூமியின்மீது மழை பெய்யவில்லையென்றால் தாவர வர்க்கங்கள் வளராது. விருட்சங்கள் கனிகளைக் கொடுக்காது. பூமியின்மீது ஏற்ற காலங்களில் மழை பெய்யவில்லையென்றால், நிலம் வறண்டு வறட்சியாய்ப்போகும். நிலத்தில் தானிய விளைச்சல் இருக்காது. தேசத்தில் பஞ்சம் ஏற்படும்.

சில சமயங்களில் வானத்திலிருந்து மழை பெய்யாமல் போகலாம். தேசத்தின்மீது வானத்தின் செல்வமாகிய மழையும், பனியும் பெய்யாதே போனாலும், அந்த தேசத்தின் ஆழத்திலுள்ள நீரூற்றுக்கள் திறக்கப்பட்டு, ஊற்றுக்களிலிருந்து புறப்படும் தண்ணீர் நிலத்தை செழிப்பாக்கவேண்டும் என்று மோசே ஜெபம்பண்ணுகிறார்.

மனாசே, எப்பிராயீம் ஆகிய கோத்திரத்தாரின் சுதந்தர வீத தேசங்களிலே, சூரியனுடைய ஆசீர்வாதமும், சந்திரனுடைய ஆசீர்வாதமும் கிடைக்கவேண்டும் என்றும் மோசே ஆசீர்வதிக்கிறார். மோசே இதுபற்றிச் சொல்லும்போது, "சூரியன் பக்குவப்படுத்தும் அருமையான கனிகளினாலும், சந்திரன் பக்குவப்படுத்தும் அருமையான பலன்களினாலும்" (உபா 33:14). அந்த தேசம் ஆசீர்வதிக்கப்படவேண்டுமென்று சொல்லுகிறார்.

சூரியனுடைய உஷ்ணம் பட்டால்தான் கனிகள் பழுக்கும். கனிகள் சூரிய வெளிச்சத்தினால் பக்குவப்படுத்தப்படுகிறது. சந்திரன் உஷ்ணமாகயிருக்கிற நிலத்தை குளிர்ச்சியடையச் செய்கிறது. சூரியன் கனிகளை தன் உஷ்ணத்தினால் பக்குவப்படுத்துவதுபோல, சந்திரனும் அந்தக் கனிகளை தன் குளிர்ச்சியினால் பக்குவப்படுத்துகிறது. எப்பிராயீம் மனாசே ஆகியோரின் சுதந்தர தேசத்தில் சூரியன் மூலமாக வரும் ஆசீர்வாதமும், சந்திரன் மூலமாக வரும் ஆசீர்வாதமும் தங்கியிருக்கவேண்டுமென்று மோசே அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

பர்வதங்களில் திரவியங்களும், மலைகளில் அரும்பொருள்களும் இருக்கும். பூமி தன் விளைச்சலைக் கொடுப்பதுபோல, பர்வதங்களும் மலைகளும் தங்கள் திரவியங்களைக் கொடுக்கவேண்டும். ஒரு சில தேசங்களின் நிலங்கள் வறட்சியாகயிருந்தாலும், அந்த தேசத்திலுள்ள பர்வதங்களும் மலைகளும் ஏராளமான திரவியங்களைக் கொடுத்து, அந்த தேசத்தை செழிப்படையச் செய்கிறது.

எப்பிராயீம் மனாசே ஆகியோருடைய சுதந்தர தேசமானது, "ஆதிபர்வதங்களில் உண்டாகும் திரவியங்களினாலும், நித்திய மலைகளில் பிறக்கும் அரும்பொருள்களினாலும்" (உபா 33:15) ஆசீர்வதிக்கப்பட்டிருக்கவேண்டும் என்று மோசே ஆசீர்வதிக்கிறார்.

பர்வதங்களும் மலைகளும் உயரமானவை. அவைகளிலிருந்து பிறக்கும் திரவியங்களும் அரும்பொருள்களும், உயரமான இடங்களிலிருந்து வரும் ஆசீர்வாதங்கள். எப்பிராயீம் மனாசே ஆகியோரின் சுதந்தர வீத தேசத்திலே, உயர்வான இடங்களிலிருந்து தேசம் ஆசீர்வதிக்கப்படுவதுபோல, தாழ்வான இடங்களிலிருந்தும், சமபூமியிலிருந்தும், பள்ளத்தாக்குகளிலிருந்தும் அந்த தேசம் ஆசீர்வதிக்கப்படவேண்டுமென்று மோசே சொல்லுகிறார்.

மோசே யோசேப்பை ஆசீர்வதிக்கும்போது, "நாடும் அதின் நிறைவும் கொடுக்கும் அருமையான தானியங்களினாலும் ஆசீர்வதிக்கப்படுவதாக" (உபா 33:16) என்று சொல்லி ஆசீர்வதிக்கிறார்.

பூமியின்மீது நிறைவான விளைச்சல் உண்டாகவேண்டும். அப்போதுதான் அந்தப் பூமி செழிப்பாயிருக்கும். பூமியில் ஒன்றும் விளையவில்லையென்றால், அந்தப் பூமி வறட்சியான பூமியாகவும், அது பிரயோஜனமில்லாத பூமியாகவும் இருக்கும். மனுஷருடைய ஜீவியத்திற்கு போஜனம் தேவை. ஆகாரமில்லாமல் மனுஷரால் ஜீவிக்க முடியாது. மனுஷருடைய ஜீவனுக்குத் தேவையான எல்லா ஆசீர்வாதங்களையும், ஆதாரங்களையும் பூமியானது குறைவில்லாமல் கொடுக்கவேண்டும். நாடும் அதின் நிறைவும் அருமையான தானியங்களை நிறைவாகக் கொடுக்கவேண்டும்.

"நாடும் அதின் நிறைவும் கொடுக்கும் அருமையான தானியங்களினாலும் ஆசீர்வதிக்கப்படுவதாக" என்று மோசே சொல்லும் ஆசீர்வாத வார்த்தைக்கு, வேதபண்டிதர்களில் சிலர் ஆவிக்குரிய விளக்கம் சொல்லுகிறார்கள். இந்த ஆசீர்வாதங்களெல்லாம் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் என்றும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, கிருபைகள் ஆவியானவரின் ஆறுதல்கள், வரங்கள் ஆகிய பரலோகத்தின் காரியங்களை ஆசீர்வாதமாகக் கொடுக்கிறவர் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

மோசே யோசேப்பை ஆசீர்வதிக்கும்போது, "நாடும் அதின் நிறைவும் கொடுக்கும் அருமையான தானியங்களினாலும் ஆசீர்வதிக்கப்படுவதாக. முட்செடியில் எழுந்தருளினவரின் தயை யோசேப்புடைய சிரசின்மேலும், தன் சகோதரரில் விசேஷித்தவனுடைய உச்சந்தலையின்மேலும் வருவதாக" (உபா 33:16) என்று சொல்லி ஆசீர்வதிக்கிறார்.

கர்த்தர் மோசேக்கு தம்மை வெளிப்படுத்தியபோது அவர் எரிகிற முட்செடியிலிருந்து எழுந்தருளினார்.

"அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினிஜுவாலையிலே நின்று அவனுக்குத் தரிசனமானார். அப்பொழுது அவன் உற்றுப்பார்த்தான்; முட்செடி அக்கினியால் ஜுவாலித்து எரிந்தும், அது வெந்துபோகாமல் இருந்தது" (யாத் 3:2).

மோசே இஸ்ரவேல் ஜனத்தாரை எகிப்து தேசத்திலிருந்து வழிநடத்திச் செல்லவேண்டும் என்னும் கட்டளையை, கர்த்தர் எரிகிற முட்செடியிலிருந்து கொடுத்தார். தேவனுடைய மகிமை மோசேக்கு ஒரு குறிப்பிட்ட வேளை வரையிலும் பிரத்தியட்சமாக வெளிப்படுத்தப்பட்டது. ஆனாலும் கர்த்தருடைய மகிமை முட்செடியிலே தங்கியிருந்தது.

எபிரெய பாஷையில் "ஷேக்கைனா" என்னும் வார்த்தை, கர்த்தருடைய மகிமை என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. ஷேக்கைனா என்னும் வார்த்தைக்கு "தங்கியிருப்பது" என்றும் பொருள் சொல்லலாம். மோசே யோசேப்பை ஆசீர்வதிக்கும்போது, "முட்செடியில் எழுந்தருளினவரின் தயை யோசேப்புடைய சிரசின்மேல் வருவதாக" என்று சொல்லும் வாக்கியத்திற்கு, "முட்செடியில் எழுந்தருளினவரின் தயை யோசேப்புடைய சிரசின்மேல் தங்கியிருப்பதாக" என்று பொருள்படும்.

கர்த்தர் இதற்கு முன்பு பல சமயங்களில் மோசேக்கு தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார். இப்போது கர்த்தர் தம்மை மறுபடியுமாக மோசேக்கு வெளிப்படுத்துகிறார். இந்த தரிசனம் மோசேக்கு மிகவும் விசேஷமானது. மோசே சிறிது காலத்தில் மரித்துப்போகப்போகிறார்.

மோசே பல சமயங்களில் கர்த்தருடைய மகிமையை தரிசித்திருந்தாலும், அவர் எரிகிற முட்செடியிலே கர்த்தரை தரிசித்த சம்பவம், அவருக்கு விசேஷித்த அனுபவமாகும். தான் முதல் முதலாக எரிகிற முட்செடியிலே கர்த்தரை தரிசித்த அந்த சம்பவத்தை மோசே ஒருபோதும் மறந்துவிடவில்லை.

மோசே கர்த்தரோடு அந்த எரிகிற முட்செடியின் அருகாமையில், நெருங்கிய ஐக்கியத்திலிருந்தார். அப்போதிருந்து, சர்வவல்லவரோடு மோசே கொண்டிருந்த ஐக்கியம் தொடருகிறது. அந்த ஐக்கியம் இப்போது அதிகரித்திருக்கிறது. கர்த்தர் தன்மீது ஆரம்பத்தில் அன்பாயிருந்ததையும், தம்முடைய மகிமையை தனக்கு வெளிப்படுத்தியதையும், மோசே ஒருபோதும் மறக்கவில்லை.

மோசே யோசேப்பை ஆசீர்வதிக்கும்போது, "முட்செடியில் எழுந்தருளினவரின் தயை யோசேப்புடைய சிரசின்மேல் வருவதாக" என்று சொல்லும்போது, கர்த்தர் தன்னோடு செய்து கொண்ட உடன்படிக்கையை மோசே நினைவுகூர்ந்து, இந்த ஆசீர்வாதமான வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயோடு உடன்படிக்கை செய்தது மாத்திரமல்ல, அவர் மோசேயோடு தம்முடைய உடன்படிக்கையை பல சமயங்களில் புதுப்பித்துக்கொள்ளவும் செய்கிறார். நம்முடைய எல்லா ஆசீர்வாதங்களுக்கும், கர்த்தருடைய கிருபைகளுக்கும், அவருடைய இரக்கங்களுக்கும், கர்த்தர் நம்மோடு செய்துகொண்ட உடன்படிக்கையே ஆதாரமாயிருக்கிறது.

மோசே யோசேப்பை ஆசீர்வதிக்கும்போது, "அவன் அலங்காரம் அவன் தலையீற்றுக் காளையினுடைய அலங்காரத்தைப்போலவும், அவன் கொம்புகள் காண்டாமிருகத்தின் கொம்புகளைப்போலவும் இருக்கும்; அவைகளாலே ஜனங்களை ஏகமாய் தேசத்தின் கடையாந்தரங்கள் மட்டும் முட்டித் துரத்துவான்; அவைகள் எப்பிராயீமின் பதினாயிரங்களும் மனாசேயின் ஆயிரங்களுமானவைகள்" (உபா 33:17) என்று சொல்லி ஆசீர்வதிக்கிறார்.

யோசேப்புக்கு பெலமும், வல்லமையும் உண்டாயிருக்கும் என்று மோசே ஆசீர்வதிக்கிறார். யோசேப்பின் வல்லமையைப்பற்றிச் சொல்லும்போது, மோசே மூன்றுவிதமான காரியங்களை தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறார். அவையாவன : 1. யோசேப்பு தன் சகோதரர் மத்தியிலே அதிகாரம் மிகுந்தவராகயிருப்பார். 2. யோசேப்பு தன் சத்துருக்களுக்கு விரோதமாக பெலத்தோடு யுத்தம்பண்ணி, அவர்களை ஜெயிப்பார். 3. யோசேப்புடைய பின்சந்ததியாரின் எண்ணிக்கை திரளாயிருக்கும்.

யோசேப்புடைய அலங்காரம், அவன் தலையீற்று காளையினுடைய அலங்காரத்தைப்போல இருக்கும். தலையீற்றுக்காளை வாலிப வயதிலுள்ளது. அது அதிக பலமுள்ளது. தலையீற்றுக்காளை எங்குபோனாலும் கெம்பீரமாகப் போகும். யோசேப்பின் ராஜகெம்பீரத்தையும், ராஜமேன்மையையும், ராஜமகத்துவத்தையும் விளக்குவதற்கு, தலையீற்று காளை அடையாளமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

யோசேப்பின் கொம்புகள் காண்டாமிருகத்தின் கொம்புகளைப்போல இருக்கும். காண்டாமிருகம் தோல்வியைக் காணாத மிருகம். தனக்கு விரோதமாக எத்தனை சத்துருக்கள் வந்தாலும், காண்டாமிருகம் தன்னுடைய கொம்புகளினால், சத்துருக்களை எதிர்த்து நின்று போராடும்.

யோசேப்பின் சேனையிலுள்ளவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது அவர்கள் காண்டாமிருகத்தைப்போல பெலமுள்ளவர்களாயிருப்பார்கள். காண்டாமிருகத்தின் கொம்புகளைப்போல அவர்கள் வலிமையுள்ளவர்களாகவும், வீரமுள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

காண்டாமிருகம் தன்னுடைய சத்துருக்களை முட்டித் துரத்துவதுபோல, யோசேப்பும், தன்னுடைய சேனையின் பலத்தினாலே, தனக்கு விரோதமாக வருகிற சத்துருக்களை, ஏகமாய், தேசத்தின் கடையாந்தரங்கள் மட்டும் முட்டித் துரத்துவான்.

யோசேப்பின் கோத்திரத்திலுள்ளவர்களுடைய எண்ணிக்கை திரளாயிருக்கும். எப்பிராயீமும், மனாசேயும் யோசேப்பின் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். எப்பிராயீம் யோசேப்பின் இளையகுமாரனாகயிருந்தாலும், அவன் தன் மூத்த குமாரனாகிய மனாசேயைவிட அதிகமாய் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பான்.

ஆகையினால் யாக்கோபு, யோசேப்பின் குமாரராகிய எப்பிராயீமையும் மனாசேயையும் ஆசீர்வதிக்கும்போது, தன்னுடைய கைகளை அவர்களுடைய தலைகள்மீது, மாற்றி வைத்து ஆசீர்வதிக்கிறார்.

"தகப்பன் தன் வலதுகையை எப்பிராயீமுடைய தலையின்மேல் வைத்ததை யோசேப்பு கண்டு, அது தனக்குப் பிரியமில்லாதபடியால், எப்பிராயீமுடைய தலையின் மேல் இருந்த தன் தகப்பனுடைய கையை மனாசேயினுடைய தலையின்மேல் வைக்கும்படிக்கு எடுத்து: என் தகப்பனே, அப்படியல்ல, இவன் மூத்தவன், இவனுடைய தலையின்மேல் உம்முடைய வலதுகையை வைக்கவேண்டும் என்றான்" (ஆதி 48:17,18).

யோசேப்பின் கொம்புகள் என்பது, எப்பிராயீமின் பதினாயிரங்களும் மனாசேயின் ஆயிரங்களுமானவைகள் ஆகும். மனாசேயின் கொம்புகள் ஆயிரமாகயிருக்கும்போது, எப்பிராயீமின் கொம்புகள் பதினாயிரமாயிருக்கும். எப்பிராயீம் கோத்திரத்தார், மனாசேயின் கோத்திரத்தாரைவிட, எண்ணிக்கையில் அதிகமாயிருப்பார்கள்.

யோசேப்பின் இரண்டு குமாரர்களான எப்பிராயீம், மனாசே ஆகியோரின் கோத்திரங்களுக்கு மோசே பதினொரு ஆசீர்வாதங்களை சொல்லுகிறார். அவையாவன:

1. கர்த்தரால் அவனுடைய தேசம் ஆசீர்வதிக்கப்படுவதாக.
2. அது வானத்தின் செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்படுவதாக. (உபா 33:13-14)
3. அது ஆழத்திலுள்ள நீரூற்றுக்களினால் ஆசீர்வதிக்கப்படுவதாக.
4. அது ஆதிபர்வதங்களில் உண்டாகும் திரவியங்களினால் ஆசீர்வதிக்கப் படுவதாக.
5. நித்திய மலைகளில் பிறக்கும் அரும்பொருள்களினால் ஆசீர்வதிக்கப்படுவதாக.
6. நாடும் அதின் நிறைவும் கொடுக்கும் அருமையான தானியங்களினால் ஆசீர்வதிக்கப்படுவதாக. (உபா 33:16)
7. முட்செடியில் எழுந்தருளினவரின் தயை யோசேப்புடைய சிரசின்மேல் இருப்பதாக. (யாத் 3)
8. கர்த்தருடைய தயை யோசேப்புடைய உச்சந்தலையின்மேல் வருவதாக. (ஆதி 49:26)
9. அவன் அலங்காரம் அவன் தலையீற்றுக் காளையினுடைய அலங்காரத்தைப்போல இருப்பதாக. உபா 33:17; ஆதி 48:17-20)
10. அவன் கொம்புகள் காண்டாமிருகத்தின் கொம்புகளைப்போல இருப்பதாக. (எண் 24:8)
11. எப்பிராயீம் பதினாயிரங்களாகவும், மனாசே ஆயிரங்களாகவும் ஆசீர்வதிக்கப் படுவதாக. (ஆதி 48:19; எண் 1:33-35)

செபுலோன், இசக்கார்
உபா 33:18,19

உபா 33:18. செபுலோனைக்குறித்து: செபுலோனே, நீ வெளியே புறப்பட்டுப்போகையிலும், இசக்காரே, நீ உன் கூடாரங்களில் தங்குகையிலும் சந்தோஷமாயிரு.

உபா 33:19. ஜனங்களை அவர்கள் மலையின்மேல் வரவழைத்து, அங்கே நீதியின் பலிகளை இடுவார்கள்; கடல்களிலுள்ள சம்பூரணத்தையும் மணலுக்குள்ளே மறைந்திருக்கும் பொருள்களையும் அநுபவிப்பார்கள் என்றான்.

மோசே செபுலோனுக்கும் இசக்காருக்கும் சொல்லுகிற ஆசீர்வாதம், இந்த வசனப்பகுதியில், ஒன்றாய்ச் சேர்த்து சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் இருவரும் யாக்கோபுக்கும் லேயாளுக்கும் பிறந்த குமாரர்கள். கானான் தேசத்தில் இவ்விரு கோத்திரத்தாருடைய சுதந்தர வீதங்களும் அருகாமையிலிருக்கிறது.

செபுலோன் கோத்திரத்தாரும் இசக்கார் கோத்திரத்தாரும் கானான் தேசத்திலே வசதியாக குடியிருப்பார்கள். அவர்களுடைய தொழில்களும் செழித்திருக்கும்.

செபுலோன் கோத்திரத்தார் மற்ற கோத்திரத்தாரின் சந்தோஷத்திற்கு காரணமாயிருப்பார்கள். ஆகையினால் செபுலோனும் சந்தோஷமாயிருப்பார் என்று மோசே சொல்லுகிறார்.

மோசே செபுலோனைக் குறித்து சொல்லும்போது, "செபுலோனே, நீ வெளியே புறப்பட்டுப்போகையில் சந்தோஷமாயிரு" (உபா 33:18) என்று சொல்லுகிறார். அவர்கள் யுத்தத்திற்கோ அல்லது வியாபாரம்பண்ணுவதற்காக கடல் பிரயாணமோ செய்கிறவர்கள். செபுலோன் கப்பல் துறைமுகமாயிருப்பான்.

"செபுலோன் கடல்துறை அருகே குடியிருப்பான்; அவன் கப்பல் துறைமுகமாய் இருப்பான்; அவன் எல்லை சீதோன் வரைக்கும் இருக்கும்" (ஆதி 49:13).

மோசே இசக்காரைப்பற்றிச் சொல்லும்போது, "இசக்காரே, நீ உன் கூடாரங்களில் தங்குகையில் சந்தோஷமாயிரு" (உபா 33:18) என்று சொல்லுகிறார். இசக்கார் நிலத்திலே விவசாயம்பண்ணுகிறவன். அவனுடைய வியாபாரங்கள், அவனுக்கு சொந்தமான தேசத்திலே நடைபெறும். இசக்கார், செபுலோனைப்போல, வெளிதேசங்களுக்கு கப்பலேறிப்போய், வியாபாரம் செய்யமாட்டான்.

இசக்கார் கோத்திரத்தார் தங்கள் சொந்த சுதந்தர தேசத்தில் தங்கியிருந்து, அங்கேயே தொழில்செய்து, அங்கேயே வியாபாரம்பண்ணுவார்கள்.

கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரத்தாருக்கும் சுதந்தரத்தைக் கொடுத்திருக்கிறார். கர்த்தர் ஏற்கெனவே திட்டமிட்டிருக்கிற பிரகாரமாக, ஒவ்வொரு கோத்திரத்தாரும், தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஸ்தலங்களிலே குடியிருக்கிறார்கள். ஒரு சிலர் பட்டணங்களிலும் வேறு சிலர் கிராமங்களிலும் குடியிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரில் ஒரு சிலர் கடற்கரை பட்டணங்களிலும், கப்பல் துறைமுகங்களிலும், வேறு சிலரோ தேசத்திற்குள்ளே இருக்கிற பட்டணங்களிலும் குடியிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய தெய்வீக ஞானத்தினால், ஒவ்வொரு கோத்திரத்தாருக்கும் வெவ்வேறுவிதமான தொழில்களையும், வெவ்வேறு விதமான நிலங்களையும் கொடுத்திருக்கிறார். ஒவ்வொருவரும் தங்களுக்குரிய இடங்களில் தங்கியிருந்து, தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற வேலைகளை செய்யவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரரில் ஞானமுள்ளவர்கள் புஸ்தகங்களை எழுதுகிறார்கள். அவர்கள் மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தை பிரதிகள் எழுதி, அதன் வார்த்தைகளை ஜனங்களுக்குப் போதிக்கிறார்கள். வேறு சிலரோ கடற்கரை பட்டணங்களில் தங்கியிருந்து, கடல் சார்ந்த தொழில்களை செய்கிறார்கள். ஒரு சிலர் தங்கள் தொழிலுக்கு பட்டயங்களை பயன்படுத்துகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரில் சிலர் கிராமங்களில் தங்கியிருந்து விவசாய வேலைகளையும், விளைச்சல் நிலங்களில் தங்கியிருந்து ஆடுமாடுகளை மேய்க்கும் வேலைகளையும் செய்கிறார்கள். வேறு சிலரோ பொருட்களை வாங்கி விற்று வியாபாரம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தாரில் சிலர் இயந்திரங்களை செய்யும் நிபுணர்களாகவும் இருக்கிறார்கள்.

ஒரு சரீரத்தில் பல்வேறுவிதமான அவயவங்கள் இருப்பதுபோல, இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமே, ஒரே காணியாட்சியில் குடியிருந்தாலும், அவர்கள் அந்தக் காணியாட்சியிலுள்ள வெவ்வேறு ஸ்தலங்களிலே தங்கியிருந்து, தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற வெவ்வேறு வேலைகளை செய்கிறார்கள்.

ஒரு சரீரத்தில் எல்லா அவயவங்களும் கண்ணாகயிருந்தால், அந்த சரீரத்திற்கு கேட்கும் திறமையிருக்காது. "சரீரம் முழுவதும் கண்ணானால், செவி எங்கே? அது முழுவதும் செவியானால், மோப்பம் எங்கே?" (1கொரி 12:17).

இஸ்ரவேல் ஜனத்தாரின் பொதுவான நன்மைக்காக, கர்த்தர் செபுலோன் கோத்திரத்தாருக்கு வியாபார வேலைகளையும், இசக்கார் கோத்திரத்தாருக்கு விவசாய வேலைகளையும் நியமனம் செய்திருக்கிறார்.

கர்த்தர் நம்மை எந்த ஸ்தானத்தில் வைத்திருக்கிறாரோ, அந்த ஸ்தானத்திலே நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். கர்த்தர் நமக்கு எந்த வேலையைக் கொடுத்திருக்கிறாரோ, அந்த வேலையை ஞானமாயும், நேர்த்தியாயும் செய்யவேண்டும்.

நாம் செய்யும் ஒவ்வொரு வேலையிலும் நம்முடைய ஞானமும், நம்முடைய திறமையும் வெளிப்படவேண்டும். நாம் எந்த வேலையை செய்தாலும், அது கர்த்தருக்கு சித்தமான வேலையாகயிருக்கவேண்டும். அந்த வேலையின் மூலமாக நாம் கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தவேண்டும். நம்முடைய ஜீவியம் கர்த்தருக்கு பிரியமானதாகவும், ஜனங்களுக்கு பிரயோஜனமானதாகவும் இருக்கவேண்டும்.

செபுலோன் கோத்திரத்தாரும் இசக்கார் கோத்திரத்தாரும், தங்களுக்கு நியமிக்கப்பட்ட ஸ்தானங்களில் தங்கியிருந்து, கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே பக்திவிருத்தி உண்டாவதற்கு இவ்விரண்டு கோத்திரத்தாரும் உதவியாயிருக்கிறார்கள்.

மோசே செபுலோனையும், இசக்காரையும் குறித்து சொல்லும்போது, "ஜனங்களை அவர்கள் மலையின்மேல் வரவழைத்து, அங்கே நீதியின் பலிகளை இடுவார்கள்; கடல்களிலுள்ள சம்பூரணத்தையும் மணலுக்குள்ளே மறைந்திருக்கும் பொருள்களையும் அநுபவிப்பார்கள்" (உபா 33:19) என்று சொல்லுகிறார்.

செபுலோன் கோத்திரத்தார் கப்பல்களின் துறைமுகப்பட்டணங்களில் தங்கியிருக்கிறார்கள். இந்த துறைமுகங்களுக்கு பல்வேறு தேசங்களிலிருந்து கப்பல்கள் வந்துபோகும். இவர்கள் இஸ்ரவேலின் மார்க்க காரியங்களில் தேர்ச்சி பெற்றவர்களாயிருப்பார்கள். செபுலோன் புத்திரர் கடல்களிலுள்ள சம்பூரணத்தை அனுபவிப்பார்கள் என்று மோசே சொல்லுகிறார்.

இசக்கார் கோத்திரத்தாரோ, தங்கள் காணியாட்சி தேசத்திலே கூடாரங்களில் தங்கியிருப்பார்கள். இவர்கள் தங்கள் தேசத்தின் மணலுக்குள்ளே மறைந்திருக்கிற பொருட்களை அனுபவிப்பார்கள். இசக்கார் கோத்திரத்தார் அதிகமாய்ப் பிரயாணம்பண்ணமாட்டார்கள். இவர்கள் தங்கள் கூடாரங்களில் தங்கியிருந்து, தங்களுடைய ஜீவனை அனுபவிப்பார்கள். கூடாரங்களின் உஷ்ணங்களுக்கு மத்தியிலே இவர்கள் தங்கியிருப்பார்கள்.

கர்த்தர் செபுலோன் கோத்திரத்தாரையும், இசக்கார் கோத்திரத்தாரையும் அதிகமாய் ஆசீர்வதிக்கிறார். அவர்களுடைய ஐசுவரியமும், சம்பத்தும் அதிகரிக்கும்.

செபுலோன் கோத்திரத்தார் கடல் பிரயாணம் செய்து, பல தேசத்தாரோடு வியாபாரம்பண்ணுவார்கள். இவர்கள் கடல்களிலுள்ள சம்பூரணத்தை அனுபவிப்பார்கள். வியாபாரம்பண்ணுகிறவர்களுக்கு, கடல்களின் மூலமாக சம்பூரண ஆசீர்வாதம் உண்டாயிருக்கும்.

இசக்கார் கோத்திரத்தார் கடல் பிரயாணம்பண்ணாமல், தங்கள் கூடாரங்களில் தங்கியிருந்தாலும், அவர்கள் மணலுக்குள்ளே மறைந்திருக்கும் பொருள்களை அனுபவிப்பார்கள். மணலுக்குள்ளே மறைந்திருக்கும் பொருள் என்பது, பூமியின்மேல் விளையும் விருட்சங்களின் கனிகளையும், பூமிக்குள்ளே புதைந்திருக்கும் உலோகப்பொருட்களையும், தாதுப்பொருட்களையும் குறிக்கிற வார்த்தையாகும்.

இந்த வாக்கியத்தில் "மணல்" என்னும் வார்த்தையானது கடற்கரை மணலைக் குறிக்கும் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். கடற்கரை ஓரத்திலுள்ள கடல் மணலிலே, ஏராளமான தாதுப்பொருட்கள் மறைந்திருக்கிறது. இசக்கார் கோத்திரத்தார் மறைவான இந்த தாதுப்பொருட்களை சம்பூரணமாய் அனுபவிப்பார்கள். இசக்கார் கோத்திரத்தாருடைய சுதந்தரவீதம் கடல்துறை வரைக்கும் பரவியிருக்கிறது.

செபுலோன் கோத்திரத்தாரும் இசக்கார் கோத்திரத்தாரும், இஸ்ரவேல் ஜனத்தாரை மலையின்மேல் வரவழைத்து அங்கே கர்த்தருக்கு நீதியின் பலிகளையிடுவார்கள் என்று மோசே இவ்விரண்டு கோத்திரத்தாரைக் குறித்தும் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்.

செபுலோன் கோத்திரத்தாரிடத்திலும், இசக்கார் கோத்திரத்தாரிடத்திலும் உலகப்பிரகாரமான ஐசுவரியமும் சம்பத்தும் திரளாயிருக்கும். இவர்கள் தங்கள் ஐசுவரியத்தையும் சம்பத்தையும், கர்த்தருடைய பரிசுத்தமான ஊழியத்திற்காக பயன்படுத்துவார்கள்.

"சீயோன் குமாரத்தியே, நீ எழுந்து போரடி; நான் உன் கொம்புகளை இரும்பும், உன் குளம்புகளை வெண்கலமுமாக்குவேன்; நீ அநேக ஜனங்களை நொறுக்கிப்போடுவாய்; அவர்கள் தேடிச் சேர்த்ததை நீ கர்த்தருக்கென்றும், அவர்களுடைய ஆஸ்தியை பூமிக்கெல்லாம் ஆண்டவராயிருக்கிறவருக்கென்றும் நியமிப்பாய்" (மீகா 4:13).

செபுலோன் இசக்கார் ஆகிய இரண்டு கோத்திரங்களுக்கும் மோசே நான்கு ஆசீர்வாதங்களை சொல்லுகிறார். அவையாவன :

1. அவர்கள் சந்தோஷமாயிருப்பார்களாக.

2. அவர்கள் ஜனங்களை அவர்கள் மலையின்மேல் வரவழைத்து, அங்கே நீதியின் பலிகளை இடுவார்கள். (உபா 33:19) புறஜாதியார் இவர்கள் மூலமாகக் கர்த்தரிடத்திற்குத் திரும்புவார்கள். கர்த்தருடைய ஆசீர்வாதம் இவர்கள் மூலமாக புறஜாதியாருக்கும் கடந்து போகிறது.

3. அவர்கள் கடல்களிலுள்ள சம்பூரணத்தை அனுபவிப்பார்கள்.

4. அவர்கள் மணலுக்குள்ளே மறைந்திருக்கும் பொருள்களை அநுபவிப்பார்கள். (யோபு 28:17)

காத்
உபா 33:20,21

உபா 33:20. காத்தைக்குறித்து: காத்துக்கு விஸ்தாரமான இடத்தைக் கொடுக்கிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்; அவன் சிங்கத்தைப் போல் தங்கியிருந்து, புயத்தையும் உச்சந்தலையையும் பீறிப்போடுவான்.

உபா 33:21. அவன் தனக்காக முதல் இடத்தைப் பார்த்துக்கொண்டான்; அங்கே தனக்கு நியாயப்பிரமாணிகன் கொடுத்த பங்கு பத்திரமாயிருக்கிறது; ஆனாலும் அவன் ஜனத்தின் முன்னணியாய் வந்து, மற்ற இஸ்ரவேலுடனே கர்த்தரின் நீதியையும் அவருடைய நியாயங்களையும் நடப்பிப்பான் என்றான்.

மோசே காத் கோத்திரத்தாரை கர்த்தருடைய நாமத்தினால் ஆசீர்வதிக்கிறார். மோசே இஸ்ரவேல் புத்திரரின் எல்லா கோத்திரத்தாரையும் ஆசீர்வதிக்கும்போது, அவர்களெல்லோரும் யோர்தானுக்கு இக்கரையிலே இருக்கிறார்கள். யோர்தானுக்கு இப்புறத்திலுள்ள தேசத்திலே காத் கோத்திரத்தார் தங்களுடைய சுதந்தரத்தை ஏற்கெனவே பெற்றுக்கொண்டு, இங்கே குடியிருக்கிறார்கள்.

காத் கோத்திரத்தார் எப்படியிருப்பார்கள் என்று மோசே அவர்களைக் குறித்து தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். "காத்துக்கு விஸ்தாரமான இடத்தைக் கொடுக்கிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்; அவன் சிங்கத்தைப் போல் தங்கியிருந்து, புயத்தையும் உச்சந்தலையையும் பீறிப்போடுவான்" *(உபா 33:20)* என்று மோசே காத்தைக் குறித்த தீர்க்கதரிசன வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

காத் கோத்திரத்தார் இப்போது விஸ்தாரமான இடத்திலே தங்கியிருக்கிறார்கள். இவர்களுடைய காணியாட்சி பிற்காலத்தில் இன்னும் விஸ்தாரமாகும். இவர்கள் அநேக தேசங்கள்மீது யுத்தம் செய்து, அவர்களுடைய தேசங்களைப் பிடித்து, தங்களுடைய தேசத்தின் எல்லைகளை விஸ்தாரம்பண்ணிக்கொள்வார்கள்.

காத் கோத்திரத்தார் ஆகாரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அவர்களுடைய தேசத்தை தங்களுடைய தேசத்தோடு சேர்த்துக்கொண்ட சம்பவம் பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

"அவர்கள் ஆகாரியரோடும், யெத்தூர் நாப்பீஸ் நோதாப் என்பவர்களோடும் யுத்தம்பண்ணுகிறபோது, அவர்களோடே எதிர்க்கத் துணை பெற்றபடியினால், ஆகாரியரும் இவர்களோடிருக்கிற யாவரும் அவர்கள் கையில் ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள்; அவர்கள் யுத்தத்திலே தேவனை நோக்கிக் கூப்பிட்டு, அவர்மேல் நம்பிக்கைவைத்தபடியினால் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளினார்" *(2நாளா 5:19:20)*.

அவர்கள் இவர்களுக்கு இருந்த மிருகஜீவன்களாகிய ஐம்பதினாயிரம் ஒட்டகங்களையும், இரண்டுலட்சத்து ஐம்பதினாயிரம் ஆடுகளையும், இரண்டாயிரம் கழுதைகளையும், மனுஷரில் லட்சம்பேர்களையும் பிடித்தார்கள். யுத்தம் தேவனால் நடந்தபடியினால் அநேகர் வெட்டுண்டு விழுந்தார்கள்; தாங்கள் சிறைப்பட்டுப்போகுமட்டும் இவர்களுடைய ஸ்தலத்திலே குடியிருந்தார்கள். *(1நாளா 5:21,22)*.

காத் கோத்திரத்தார் வீரமும் வலிமையும் மிகுந்தவர்களாகவும், யுத்தத்திலே வெற்றி பெறுகிறவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் சிங்கம் கெபியிலே தங்கியிருப்பதுபோல, பாதுகாப்பான இடங்களில் தங்கியிருப்பார்கள். சத்துருக்களுக்கு பயப்படமாட்டார்கள். "காத் சிங்கத்தைப்போல தங்கியிருந்து, புயத்தையும் உச்சந்தலையையும் பீறிப்போடுவான்" என்று மோசே சொல்லுகிறார்.

தன்னுடைய வழியில் வருகிற சத்துருக்களை காத் கோத்திரத்தார் பீறிப்போடுவார்கள். அவர்கள் சத்துருக்களை நிர்மூலம்பண்ணி சர்வநாசமாக்கிப்போடுவார்கள். சத்துருவின் புயம் என்பது அவர்களுடைய பெலத்தையும் அவர்களுடைய உச்சந்தலை என்பது அவர்களுடைய கிரீடத்தையும் குறிக்கிறது. காத் கோத்திரத்தார் தங்கள் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அவர்களுடைய பெலத்தையும் பீறிப்போடுவார்கள், அவர்களுடைய கிரீடத்தையும் முறித்துப்போட்டு, அவர்களுடைய தேசத்தையும் சுதந்தரித்துப்போடுவார்கள்.

காத் புத்திரர் இதுவரையிலும் செய்த காரியங்களையும், அவர்கள் இனிமேல் செய்யப்போகிற காரியங்களையும் மோசே இந்த வசனப்பகுதியில் சொல்லி, அவர்களை ஆசீர்வதிக்கிறார். அதன் விவரம் வருமாறு:

"காத் தனக்காக முதல் இடத்தைப் பார்த்துக்கொண்டான்; அங்கே தனக்கு நியாயப்பிரமாணிகன் கொடுத்த பங்கு பத்திரமாயிருக்கிறது; ஆனாலும் அவன் ஜனத்தின் முன்னணியாய் வந்து, மற்ற இஸ்ரவேலுடனே கர்த்தரின் நீதியையும் அவருடைய நியாயங்களையும் நடப்பிப்பான்" *(உபா 33:21)* என்று மோசே காத் கோத்திரத்தாரைக் குறித்து சொல்லுகிறார்.

காத் கோத்திரத்தாருக்கு மோசே ஐந்து ஆசீர்வாதங்களை சொல்லுகிறார். அவையாவன :

1. காத்துக்குக் கர்த்தர் விஸ்தாரமான இடத்தைக் கொடுத்திருக்கிறார். *(உபா 33:20; சங் 4:1; சங் 31:8)*
2. அவன் சிங்கத்தைப் போல் பயமில்லாமல் பாதுகாப்பாகத் தங்கியிருப்பான். *(1நாளா 12:8)*

3. அவன் புயத்தையும் உச்சந்தலையையும் பீறிப்போடுவான்.

4. அவன் தனக்காக முதல் இடத்தைப் பார்த்துக்கொண்டான். (உபா 33:21; எண் 32:1-5)

5. ஆனாலும் அவன் ஜனத்தின் முன்னணியாய் வந்து, மற்ற இஸ்ரவேலுடனே கர்த்தரின் நீதியையும் அவருடைய நியாயங்களையும் நடப்பிப்பான்.

தாண்
உபா 33:22

உபா 33:22. தாணைக்குறித்து: தாண் ஒரு பாலசிங்கம், அவன் பாசானிலிருந்து பாய்வான் என்றான்.

மோசே தாண் கோத்திரத்தாரை ஆசீர்வதிக்கிறார். யாக்கோபு தாணை ஆசீர்வதித்தபோது, அவனை சர்ப்பத்திற்கு ஒப்பிட்டுச் சொன்னார். சர்ப்பம் வஞ்சனையுள்ளது. அது தந்திரமானது. தாணும் தன்னுடைய சத்துருக்களுக்கு விரோதமாக வஞ்சனையாயிருப்பான் என்று யாக்கோபு சொன்னார்.

ஆனால் மோசே தாண் கோத்திரத்தாரைப்பற்றிச் சொல்லும்போது, "தாண் ஒரு பாலசிங்கம், அவன் பாசானிலிருந்து பாய்வான்" (உபா 33:22) என்று சொல்லுகிறார். தாண் சிங்கத்தைப்போல தைரியமுள்ளவனாகவும், சத்துருக்களுக்கு விரோதமாக தீர்மானமாக யுத்தம்பண்ணுகிறவனாகவும் இருப்பான்.

தாணுடைய தலை சர்ப்பத்தின் தலையைப்போல இருக்கிறது. அவனுடைய இருதயமோ சிங்கத்திற்கு ஒப்பான இருதயம் போல இருக்கிறது. இப்படிப்பட்ட குணமுள்ளவர்களுக்கு விரோதமாக யாராலும் எதிர்த்து நிற்கமுடியாது.

மோசே தாணைக் குறித்து சொல்லும்போது, தாண் பாசானிலிருந்து பாய்கிற பாலசிங்கத்தைப் போன்றவன் என்று சொல்லுகிறார். பாசான் பர்வதத்திலே ஏராளமான பாலசிங்கங்கள் உள்ளன. அந்த சிங்கங்கள் பர்வதங்களிலிருந்து கீழே இறங்கி, பள்ளத்தாக்குகளில் மேயும் ஆடுமாடுகள் மேல் பாய்ந்து, தங்களுக்கு இரையைத் தேடிக்கொள்ளும்.

லாயீஸ் என்னும் ஊர் கானான் தேசத்திற்கு தூரத்திலுள்ளது. தாண் புத்திரரில் சிலர் லாயீஸ் ஊர் ஜனங்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அந்த ஊரை தங்களுடைய தேசத்தோடு இணைத்துக்கொண்டார்கள். இந்த சம்பவம் தாண் கோத்திரத்தாருடைய வீரத்திற்கு அடையாளமாகும்.

"அவர்களோ மீகா உண்டுபண்ணினவைகளையும், அவனுடைய ஆசாரியனையும் கொண்டுபோய், பயமில்லாமல் சுகமாயிருக்கிற லாயீஸ் ஊர் ஜனங்களிடத்தில் சேர்த்து, அவர்களைப் பட்டயக் கருக்கினால் வெட்டி, பட்டணத்தை அக்கினியால் சுட்டெரித்துப்போட்டார்கள்" (நியா 18:27).

பாசான் பர்வதம் லாயீஸ் ஊருக்கு அருகாமையிலுள்ளது. தாண் கோத்திரத்தார் பாசான் பர்வத்தில் சிங்கங்களைப்போல பதிவிருந்து, பாசானிலிருந்து லாயீஸ் ஊர் ஜனங்கள்மீது பாய்ந்து, அவர்களை ஜெயித்தார்கள். ஆகையினால் மோசே தாண் கோத்திரத்தாரைப்பற்றிச் சொல்லும்போது, அவன் பாசானிலிருந்து பாய்வான் என்று சொல்லுகிறார்.

தாண் கோத்திரத்தாருக்கு மோசே இரண்டு ஆசீர்வாதங்களை சொல்லுகிறார். அவையாவன :

1. தாண் ஒரு பாலசிங்கம்.

2. அவன் பாசானிலிருந்து பாய்வான். (யோசு 19:47-48).

நப்தலி
உபா 33:23

உபா 33:23. நப்தலியைக்குறித்து: நப்தலி கர்த்தருடைய தயவினாலே திர்ப்தியடைந்து, அவருடைய ஆசீர்வாதத்தினாலே நிறைந்திருப்பான். நீ மேற்றிசையையும் தென்திசையையும் சுதந்தரித்துக்கொள் என்றான்.

மோசே நப்தலி கோத்திரத்தாருக்கு ஆசீர்வாதமான வார்த்தைகளைச் சொல்லுகிறார். அவர் நப்தலி புத்திரரைப்பார்த்து ஆச்சரியப்பட்டு, அவர்களைப் பாராட்டி, அவர்களுக்கு ஆசீர்வாதமான வார்த்தைகளைச் சொல்லுகிறார். நப்தலி கோத்திரத்தார் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பார்கள். அவர்கள் கர்த்தருடைய தயவினால் திருப்தியடைந்திருப்பார்கள். அவர்கள் கர்த்தருடைய ஆசீர்வாதத்தினாலே நிறைந்திருப்பார்கள்.

யாக்கோபு நப்தலியைப்பற்றிச் சொல்லும்போது அவன் கீழ்ப்படியும் சுபாவமுள்ளவன் என்று சொல்லுகிறார். இவன் மற்றவர்களை நேசிக்கிறவன். "நப்தலி விடுதலைபெற்ற பெண்மான்; இன்பமான வசனங்களை வசனிப்பான்" (ஆதி 49:21).

நப்தலி இன்பமான வார்த்தைகளைப் பேசுவதினால், நப்தலி கோத்திரத்தாருக்கு பிற்காலத்தில் மிகப்பெரிய ஆசீர்வாதம் கிடைத்திருக்கிறது. அவர்களுக்கு கர்த்தருடைய தயவும், உதவியும், ஒத்தாசையும், ஆசீர்வாதமும் உண்டாயிருக்கிறது.

நப்தலி கோத்திரத்தார் எல்லா ஜனங்களோடும் சமாதானமாயிருப்பார்கள். தங்களுக்கு கிடைத்திருக்கும் ஆசீர்வாதங்களில் அவர்கள் திருப்தியாயிருப்பார்கள். யூதர்கள் நப்தலி கோத்திரத்தாரின் நிலத்தைப்பற்றிச் சொல்லும்போது, அந்த நிலம் கனிவிருட்சங்கள் நிரம்பிய நிலம் என்று சொல்லுவார்கள்.

நப்தலி கோத்திரத்தாரின் சுதந்தரவீதம் கானான் தேசத்தின் வடக்குப்பக்கத்திலுள்ளது. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் நிலத்தின் விளைச்சலின் முதற்பலனை கர்த்தருடைய ஆலயத்திற்கு கொண்டு வரும்போது, நப்தலி கோத்திரத்தாரே தங்களுடைய முதற்பலன்களை, கர்த்தருடைய ஆலயத்திற்கு முதலாவதாக கொண்டு வருவார்கள். அவர்களே ஆசாரியர்களின் முதலாவது ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வார்கள். இது நப்தலி கோத்திரத்தாருக்கு கொடுக்கப்படும், விசேஷித்த ஆசீர்வாதமாகும்.

மோசே நப்தலி கோத்திரத்தாரைப்பற்றிச் சொல்லும்போது "நப்தலி கர்த்தருடைய தயவினாலே திர்ப்தியடைந்து, அவருடைய ஆசீர்வாதத்தினாலே நிறைந்திருப்பான். நீ மேற்றிசையையும் தென்திசையையும் சுதந்தரித்துக்கொள்" (உபா 33:23) என்று சொல்லுகிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பல இடங்களுக்கும் சுற்றி அலைந்து, தம்முடைய ஊழியங்களை செய்து வந்தார். அவர் கப்பர்நகூம் என்னும் ஊருக்குப்போய் அங்கே தங்கியிருப்பது வழக்கம். கப்பர்நகூம் ஊர் நப்தலி கோத்தித்தாருடைய சுதந்தரத்திலுள்ளது.

மோசே நப்தலி கோத்திரத்தாரைப் பார்த்து, "நீ மேற்றிசையையும், தென்திசையையும் சுதந்தரித்துக்கொள்" என்று சொல்லுகிறார். மேற்றிசை என்பது கடலைக் குறிக்கும். மோசே சொல்லுகிற இந்த வார்த்தைக்கு, "நீ கடல்திசையை சுதந்தரித்துக்கொள்" என்பது பொருளாகும்.

நப்தலி கோத்திரத்தாருக்கு கொடுக்கப்பட்ட சுதந்தரத்தின் தென்பகுதியில் கலிலேயா கடல் உள்ளது. கலிலேயா கடற்கரைப்பகுதியில் இயேசுகிறிஸ்துவின் ஊழியம் அதிகமாய் நடைபெற்றிருக்கிறது. நப்தலி கோத்திரத்தார் கப்பர்நகூம், பெத்சாயிதா ஆகிய பட்டணங்களின் ஐசுவரியங்களுக்கு சாட்சியாயிருக்கிறார்கள்.

நப்தலி கோத்திரத்தாருக்கு மோசே இரண்டு ஆசீர்வாதங்களை சொல்லுகிறார். அவையாவன :

1. நப்தலி கர்த்தருடைய தயவினாலே திர்ப்தியடைவான். அவருடைய ஆசீர்வாதத்தினாலே நிறைந்திருப்பான்.

2. அவன் மேற்றிசையையும் தென்திசையையும் சுதந்தரித்துக் கொள்வான்.

ஆசேர்
உபா 33:24,25

உபா 33:24. ஆசேரைக்குறித்து: ஆசேர் புத்திர பாக்கியமுடையவனாய், தன் சகோதரருக்குப் பிரியமாயிருந்து, தன் காலை எண்ணெயிலே தோய்ப்பான்.

உபா 33:25. இரும்பும் வெண்கலமும் உன் பாதரட்சையின் கீழிருக்கும்; உன் நாட்களுக்குத்தக்கதாய் உன் பெலனும் இருக்கும் என்றான்.

மோசே ஆசேர் கோத்திரத்தாருக்கு ஆசீர்வாதமான வார்த்தைகளைச் சொல்லுகிறார். அவர்களைக் குறித்து மோசே கர்த்தருடைய சமுகத்தில் நான்கு காரியங்களுக்காக ஜெபம்பண்ணி, அவர்களுக்கு தீர்க்கதரிசன வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

ஆசேர் என்னும் பெயரே ஆசீர்வாதமான பெயராகும். ஆசேர் கோத்திரத்தார், தங்களுடைய பெயருக்கேற்ற பிரகாரமாக ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள். ஆசேர் லேயாளின் குமாரன். லேயாள் தன் குமாரனுக்கு ஆசேர் என்று பேரிட்டபோது, "நான் பாக்கியவதி, ஸ்திரீகள் என்னை பாக்கியவதி என்பார்கள்" என்று சொல்லி அவள் தன் குமாரனுக்கு ஆசேர் என்று பேரிட்டாள் (ஆதி 30:13).

ஆசேர் கோத்திரத்தார் புத்திர பாக்கியமுடையவர்களாயிருப்பார்கள். அவர்கள் திரளான எண்ணிக்கையில் பலுகிப்பெருகுவார்கள். அவர்கள் தங்கள் சகோதரருக்கு பிரியமாயிருப்பார்கள் என்று மோசே சொல்லுகிறார். தாங்கள் குடியிருக்கும் தேசத்திலே, தங்களுக்கு அருகாமையில் குடியிருக்கிற ஜனங்களோடு, ஆசேர் கோத்திரத்தார் சமாதானமாயும், சிநேகமாயும் இருப்பார்கள்.

ஆசேர் கோத்திரத்தாருடைய சுதந்தர தேசம் ஐசுவரியம் மிகுந்ததாக இருக்கும். பூமிக்கு மேலேயும் ஆசீர்வாதம் இருக்கும். பூமிக்கு கீழேயும் ஆசீர்வாதம் இருக்கும். ஆசேர் தன் காலை எண்ணெயிலே தோய்ப்பான் என்று மோசே சொல்லுகிறார்.

ஆசேர் கோத்திரத்தாரின் சுதந்தரத்தில் சகலமும் சம்பூரணமாயிருக்கும். ஆசேரின் தலை எண்ணெயினால் அபிஷேகம்பண்ணப்படுவது மாத்திரமல்ல, அவன் விரும்பினால், அவனுடைய கால்களும் எண்ணெயினால் தோய்க்கப்படும். அவனுடைய தேசத்தில் அந்த அளவுக்கு எண்ணெயும், மற்ற பொருட்களும் மிகுதியாயிருக்கும்.

ஆசேர் கோத்திரத்தாரின் சுதந்தரத்தில், பூமியின் கீழும் மிகுதியான ஆசீர்வாதம் இருக்கும். "இரும்பும் வெண்கலமும் உன் பாதரட்சையின் கீழிருக்கும்" என்று மோசே ஆசேர் கோத்திரத்தாரைக் குறித்து சொல்லுகிறார். அவர்களுடைய தேசத்திலே உலோகங்களும், தாதுப்பொருட்களும் ஏராளமாயிருக்கும். அவர்களுடைய தேசத்தின் பூமியை சுரங்கமாய்த் தோண்டும்போது, பூமிக்கடியிலே கனிவளங்கள் ஏராளமாயிருக்கும்.

"இரும்பும் வெண்கலமும் உன் பாதரட்சையின் கீழிருக்கும்" என்னும் வாக்கியத்திற்கு, "நீ இரும்பைப்போல பெலமுள்ளவனாகவும் வெண்கலத்தைப்போல பிரகாசமானவனாகவும் இருப்பாய்" என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

ஆசேர் கோத்திரத்தாரின் பெலமும், பராமக்கிரமமும் நிலைத்திருக்கும். "உன் நாட்களுக்கு தக்கதாய் உன் பெலனும் இருக்கும்" என்று மோசே ஆசேர் கோத்திரத்தாரைப்பற்றிச் சொல்லுகிறார். அவர்களுடைய முதிர்வயது காலத்திலும், வாலிப நாட்களின் பெலம் இருக்கும். அவர்கள் முதிர்வயதானாலும், தங்கள் சரீரத்தில் சோர்ந்துபோகமாட்டார்கள். அவர்களுடைய சரீர அவயவங்கள் இளைத்துப்போகாது. அவர்கள் புதுபெலன் பெற்று, முதிர்வயதிலும் கெம்பீரமாயிருப்பார்கள்.

ஆசேர் கோத்திரத்தாரின் பாதரட்சைகள் மாத்திரமல்ல, அவர்களுடைய எலும்புகளும் இரும்பைப்போலவும் வெண்கலத்தைப்போலவும் பெலனுள்ளதாகவும் பிரகாசமானதாகவும் இருக்கும்.

தங்களுக்கு நியமித்திருக்கிற எல்லா வேலைகளையும் செய்வதற்கு தேவையான பெலன் ஆசேர் கோத்திரத்தாரிடத்தில் இருக்கும். கர்த்தர் அவர்களுக்கு என்னென்ன வேலைகளை செய்யச் சொல்லுகிறாரோ, அந்த வேலைகளை செய்து முடிப்பதற்கான பெலனையும் அவர்களுக்கு கொடுப்பார். கர்த்தர் நம்முடைய திராணிக்கு அதிகமாய், நம்மை ஒருபோதும் சோதிக்கமாட்டார்.

ஆசேர் கோத்திரத்தாருக்கு மூன்று மோசே ஆசீர்வாதங்களை சொல்லுகிறார். அவையாவன :

1. ஆசேர் புத்திர பாக்கியமுடையவனாய் இருப்பான்.
2. தன் சகோதரருக்குப் பிரியமாயிருப்பான்.
3. தன் காலை எண்ணெயிலே தோய்ப்பான். *(யோபு 29:6; மீகா 6:15).*

இஸ்ரவேலின் தேவன் உபா 33:26,27

உபா 33:26. யெஷூரனுடைய தேவனைப்போல் ஒருவரும் இல்லை; அவர் உனக்குச் சகாயமாய் வானங்களின்மேலும் தமது மாட்சிமையோடு ஆகாய மண்டலங்களின் மேலும் ஏறிவருகிறார்.

உபா 33:27. அநாதி தேவனே உனக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்; அவர் உனக்கு முன்னின்று சத்துருக்களைத் துரத்தி, அவர்களை அழித்துப்போடு என்று கட்டளையிடுவார்.

மோசே தேவனுடைய மனுஷன். அவர் சீக்கிரத்தில் மரித்துப்போகப்போகிறார். தான் மரிக்கும் முன்பாக, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரையும், தேவனுடைய இஸ்ரவேலரையும் உயர்வாகப் பேசி, மேன்மைப்படுத்துகிறார்.

இஸ்ரவேலின் தேவனைப்போல ஒருவருமில்லை. அந்நிய தேசங்களில் ஏராளமான விக்கிரக தெய்வங்கள் இருக்கிறது. ஆனாலும் அவைகளில் எந்த தெய்வமும் இஸ்ரவேலின் தேவனுக்கு ஒப்பாகாது.

கர்த்தர் தம்மை ஆராதிக்கிறவர்களுக்கு கிருபைகளையும், சிலாக்கியங்களையும், பாதுகாப்புக்களையும், ஆசீர்வாதங்களையும் கொடுக்கிறார். விக்கிரகங்களையும் புறஜாதி ஜனங்கள் ஆராதிக்கிறார்கள். ஆனால் அந்த விக்கிரகங்கள் அவர்களுக்கு ஒரு நன்மையும் செய்யாது. அவைகளால் ஒன்றும் செய்ய முடியாது. விக்கிரகங்களுக்கு ஜீவனுமில்லை, பெலனுமில்லை, வல்லமையுமில்லை.

மோசே இஸ்ரவேலின் தேவனைப்பற்றிச் சொல்லும்போது, "யெஷூரனுடைய தேவனைப்போல் ஒருவருமில்லை" என்று சொல்லுகிறார். கர்த்தர் சர்வவல்லமையும், சர்வஅதிகாரமுமுள்ளவர்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், வானங்களின் மேலும், தமது மாட்சிமையோடு ஆகாய மண்டலங்களின்மேலும் ஏறி வருகிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு நன்மை செய்யும்போது, தாமதமில்லாமல் நன்மை செய்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை நோக்கிக் கூப்பிடும்போது, கர்த்தர் அவர்களுக்கு சகாயமாய், வானங்களின் மேலும், ஆகாய மண்டலங்களின்மேலும், வேகமாய் ஏறிவருகிறார்.

கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு உதவி செய்ய வரும்போது, அவருடைய வருகையை சத்துருக்களால் தடுத்து நிறுத்த முடியாது. சத்துருக்கள் நினையாத நேரத்திலே, கர்த்தர் ஆகாயமண்டலங்களின்மேல் ஏறி வருவார். அவருடைய வருகை வேகமாகவும், பெலமுள்ளதாகவும் இருக்கும்.

மோசே கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது, "யெஷூரனுடைய தேவனைப்போல் ஒருவரும் இல்லை; அவர் உனக்குச் சகாயமாய் வானங்களின்மேலும் தமது மாட்சிமையோடு ஆகாய மண்டலங்களின் மேலும் ஏறிவருகிறார்" *(உபா 33:26)* என்று சொல்லுகிறார்.

கர்த்தர் நித்தியமானவர். அவருடைய புயங்கள் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஆதாரமாயிருக்கிறது. கர்த்தர் நித்தியமான தேவனாகயிருப்பதினால், அவருடைய புயங்களும் நித்தியமானதாகயிருக்கிறது. புறஜாதியாரின் தெய்வங்களெல்லாம் சமீபகாலத்தில் கண்டுபிடிக்கப்பட்டவை. இவை மனுஷருடைய கண்டுபிடிப்புக்கள். இந்த தெய்வங்கள் சீக்கிரத்தில் அழிந்துபோகும்.

யெஷூரனுடைய தேவனோ நித்தியமானவர். இந்த உலகமும், இந்த உலகத்திலுள்ள காரியங்களும் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பாகவே, இஸ்ரவேலின் தேவன் இருந்தார். அவர் இப்போதும் இருக்கிறார். இந்த உலகம் அழிந்துபோன பின்பும், காலங்கள் முடிந்து போனபின்பும், தேவனாகிய கர்த்தர் இருப்பார்.

மோசே கர்த்தருடைய நித்தியத்துவத்தைப்பற்றிச் சொல்லும்போது, "அநாதி தேவனே உனக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்; அவர் உனக்கு முன்னின்று சத்துருக்களைத் துரத்தி, அவர்களை அழித்துப்போடு என்று கட்டளையிடுவார்" *(உபா 33:27)* என்று சொல்லுகிறார்.

வானத்தின் மேலே நித்திய தேவனும், வானத்தின் கீழே அவருடைய நித்திய புயங்களும் உள்ளன. இதனால் இஸ்ரவேல் புத்திரருக்கு மேலிருந்தும், கீழிருந்தும் சுற்றிலுமிருந்தும் பாதுகாப்பு உள்ளது *(சங் 34:7; சங் 91:1-12)*.

"கர்த்தாவே, நீர் பூர்வகாலமுதல் என் தேவனும், என் பரிசுத்தருமானவர் அல்லவா? நாங்கள் சாவதில்லை; கர்த்தாவே, நியாயத்தீர்ப்புச் செய்ய அவனை வைத்தீர்; கன்மலையே, தண்டனை செய்ய அவனை நியமித்தீர்" *(ஆப 1:12)*.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு முன்பாக நிற்பார். அவர்களுக்கு விரோதமாக சத்துருக்கள் எழும்பி வரும்போது, கர்த்தர் அந்த சத்துருக்களைத் துரத்துவார். "சத்துருக்களை அழித்துப்போடு" என்று கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு கட்டளையிடுவார். தங்கள் சத்துருக்களை அழிப்பதற்கு, கர்த்தர் தம்முடைய ஜனத்தை பலப்படுத்துவார்.

தேவனுடைய இஸ்ரவேல் உபா 33:28,29

உபா 33:28. இஸ்ரவேல் சுகமாய்த் தனித்து வாசம்பண்ணுவான்; யாக்கோபின் ஊற்றானது தானியமும் திராட்சரசமுமுள்ள தேசத்திலே இருக்கும்; அவருடைய வானமும் பனியைப் பெய்யும்.

உபா 33:29. இஸ்ரவேலே, நீ பாக்கியவான்;கர்த்தரால் ரட்சிக்கப்பட்ட ஜனமே, உனக்கு ஒப்பானவன் யார்? உனக்குச் சகாயஞ்செய்யும் கேடகமும் உனக்கு மகிமை பொருந்திய பட்டயமும் அவரே; உன் சத்துருக்கள் உனக்கு இச்சகம் பேசி அடங்குவார்கள்; அவர்கள் மேடுகளை மிதிப்பாய், என்று சொன்னான்.

தேவனுடைய இஸ்ரவேலைப்போல இந்தப் பூமியிலே வேறு எந்த ஜனமுமில்லை. மோசே இஸ்ரவேல் ஜனத்தாருடைய ஒவ்வொரு கோத்திரத்தாருக்கும் ஆசீர்வாதமான வார்த்தைகளைச் சொன்னார். தன்னுடைய ஆசீர்வாத வார்த்தைகளின் முடிவிலே, இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் பொதுவான ஆசீர்வாதங்களை சொல்லுகிறார். அவர்கள் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "இஸ்ரவேலே, நீ பாக்கியவான்" என்றும், "கர்த்தரால் இரட்சிக்கப்பட்ட ஜனமே, உனக்கு ஒப்பானவன் யார்" *(உபா 33:29)* என்றும் சொல்லுகிறார். இந்தப் பூமியிலுள்ள ஜனங்களில், இஸ்ரவேல் ஜனத்திற்கு ஒப்பான ஜனம் ஒருவருமில்லை.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் தேவனாகிய கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டும். இந்தப் பூமியிலுள்ள தேவர்களில், தங்கள் தேவனாகிய கர்த்தரைப்போல ஒருவருமில்லையென்று இஸ்ரவேல் ஜனத்தார் சொல்லவேண்டும். அவர்கள் கர்த்தரை மகிமைப்படுத்தும்போது, கர்த்தர் அவர்களுக்கு ஆசீர்வாதங்களையும் பாக்கியங்களையும் கொடுப்பார். இஸ்ரவேல் ஜனத்தார் பாக்கியவான்களாயிருப்பார்கள்.

இஸ்ரவேலின் தேவனைப்போல ஒருவரும் இல்லாததுபோல, தேவனுடைய இஸ்ரவேலைப்போல ஒருவருமில்லை. கர்த்தருக்கு ஒப்பானவரும் ஒருவருமில்லை. இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஒப்பானவரும் ஒருவருமில்லை.

கர்த்தர் இஸ்ரவேல் சபையாரை அதிகமாய் ஆசீர்வதிக்கிறார். அவர்களுக்கு தம்முடைய ஆசீர்வாதமான வார்த்தைகளை வாக்குத்தத்தமாகச் சொல்லுகிறார். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாமே தேவனுடைய இஸ்ரவேலாயிருக்கிறோம்.

"இந்தப் பிரமாணத்தின்படி நடந்து வருகிறவர்கள் எவர்களோ, அவர்களுக்கும், தேவனுடைய இஸ்ரவேலருக்கும், சமாதானமும் இரக்கமும் உண்டாயிருப்பதாக" *(கலா 6:16)*.

இஸ்ரவேல் ஜனத்தார் சுகமாய் வாசம்பண்ணுவார்கள். அநாதி தேவனே அவர்களுக்கு அடைக்கலமாயிருக்கிறார் (உபா 33:27) இந்த வசனத்தில் "அடைக்கலம்" என்னும் வார்த்தைக்கு வாசஸ்தலம் அல்லது மாளிகை என்று பொருள். இந்த மாளிகையில் இஸ்ரவேல் ஜனத்தார் பாதுகாப்பாயிருப்பார்கள். அங்கே சுகமாய் வாசம்பண்ணுவார்கள். ஒருவன் தன் சொந்த வீட்டில் தங்கியிருப்பதுபோல இஸ்ரவேல் ஜனத்தார், கர்த்தர் தங்களுக்கு அடைக்கலமாகக் கொடுத்திருக்கிற வாசஸ்தலத்திலே தங்கியிருப்பார்கள்.

தேவனுடைய இஸ்ரவேலர் ஒவ்வொருவரும், தேவனோடுகூட, அவருடைய வாசஸ்தலத்தில் தங்கியிருக்கிறார்கள். மனுஷர் மரித்துப்போன பின்பு, அவர்களுடைய ஆத்துமா கர்த்தரிடத்திற்கு திரும்பிப்போகும். அவை இளைப்பாறும் ஸ்தலங்களில் கர்த்தரோடுகூட தங்கியிருக்கும். கர்த்தரே தம்முடைய ஜனங்களுக்கு மறைவிடமாயிருக்கிறார்.

"என் ஆத்துமாவே, கர்த்தர் உனக்கு நன்மை செய்தபடியால், நீ உன் இளைப்பாறுதலுக்குத் திரும்பு" (சங் 116:7).

"நீர் எனக்கு மறைவிடமாயிருக்கிறீர்: என்னை நீர் இக்கட்டுக்கு விலக்கிக்காத்து, இரட்சணியப் பாடல்கள் என்னைச் சூழ்ந்துகொள்ளும்படி செய்வீர்" (சங் 32:7).

கர்த்தருடைய ஆறுதல்களையும், ஆதரவுகளையும்பெற்ற இஸ்ரவேல் ஜனத்தைப்போல, இந்தப் பூமியில் வேறு எந்த ஜனமும் இவ்வளவு ஆறுதல்களையும் ஆதரவுகளையும் பெறவில்லை. கர்த்தருடைய நித்திய புயங்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆதரமாயிருக்கிறது. கர்த்தருடைய நித்திய புயங்கள் என்பது, அவருடைய சர்வவல்லமையைக் குறிக்கிறது.

கர்த்தர் தம்முடைய பலத்த கரத்தினால் தம்முடைய ஜனத்தை ஆதரிக்கிறார், பாதுகாக்கிறார், பராமரிக்கிறார். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் பலவிதமான அனுபவங்களை கடந்துவருகிறோம். நமக்கு துன்பநேரங்களும், வேதனையான நேரங்களும் வரும்போது கர்த்தருடைய நித்திய புயங்களே நமக்கு ஆதரமாயிருக்கிறது.

தேவனுடைய தெய்வீக கிருபை நமக்கு எல்லா வேளைகளிலும் போதுமானதாயிருக்கிறது.

"அதற்கு அவர்: என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்" (2கொரி 12:9).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்தி அவர்களுக்கு கட்டளை கொடுப்பதுபோல, இந்தப் பூமியிலே வேறு எந்த ஜாதியாருக்கும் அவர்களுடைய தெய்வங்கள் கட்டளை கொடுப்பதில்லை. கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு முன்னின்று, சத்துருக்களைத் துரத்தி, "அவர்களை அழித்துப்போடு" என்று கட்டளையிடுவார்.

கர்த்தர் தம்முடைய சர்வவல்லமையினால் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கட்டளைகொடுக்கிறார். கர்த்தர் ஒருவராகவே பெரிய காரியங்களை செய்ய முடியும். அவரால் செய்ய முடியாத காரியம் எதுவுமில்லை. ஆனாலும் சத்துருக்களை அழிப்பதில், கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கும் ஒரு பங்கைக்கொடுக்கிறார்.

விசுவாசிகளாகிய நமக்கு ஆவிக்குரிய சத்துருக்கள் அநேகர் இருக்கிறார்கள். நாம் அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணவேண்டும். நம்மை நேசித்து, நம்மைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே நம்மால் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அவர்களை மேற்கொள்ள முடியும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நம்முடைய இரட்சிப்பின் அதிபதியாகயிருக்கிறார். அவரே நமக்கு முன்னின்று, நம்முடைய சத்துருக்களை துரத்துவார். கர்த்தர் கல்வாரி சிலுவையில் இந்த உலகத்தின் அதிபதியையும், அந்தகார லோகாதிபதிகளையும், பிசாசின் வல்லமைகளையும் மேற்கொண்டார். நம்முடைய கிறிஸ்துவானவர் நமக்காக யுத்தம்பண்ணி சத்துருவை ஜெயித்தார். ஆகையினால் நாம் கிறிஸ்துவுக்குள் ஜெயம் பெற்றவர்களாகயிருக்கிறோம்.

இஸ்ரவேல் ஜனத்தாரைப்போல, கர்த்தரால் பாதுகாக்கப்பட்ட ஜனம், இந்த உலகத்தில் வேறு எந்த ஜனமும் இல்லை. "இஸ்ரவேல் சுகமாய்த் தனித்து வாசம்பண்ணுவான்" (உபா 33:28) என்று மோசே சொல்லுகிறார். கர்த்தருக்குள் வாசம்பண்ணுகிறவர்கள், கர்த்தருடைய நாமத்தை தங்களுடைய பலத்த துருகமாக அறிக்கை செய்யவேண்டும். கர்த்தருக்குள் வாசம்பண்ணுகிறவர்கள், சுகமாயும், பாதுகாப்பாயும் வாசம்பண்ணுவார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு எதிராகப் பாவம் செய்து அவருக்குக் கோபமூட்டாமல் இருந்திருப்பார்களென்றால், அவர்கள் பல காலமாக சுகமாய் வாசம்பண்ணி இருக்கலாம். ஆனால் அவர்களோ பாவம் செய்து தங்களுக்கு அழிவை வருவித்துக் கொண்டார்கள். (ஏசா 63:10) தனித்து வாசம் பண்ணுதல் என்பதற்கு வானத்தின் கீழுள்ள தேசத்தின் அந்நிய தெய்வங்களோடு எந்த ஐக்கியமும் இல்லாமல் தனியாக ஜீவிப்பார்கள் என்பது இதன் பொருள். (உபா 32:8-10; எண் 9; அப் 17:26).

"அவன் உயர்ந்த இடங்களில் வாசம்பண்ணுவான்; கன்மலைகளின் அரண்கள் அவனுடைய உயர்ந்த அடைக்கலமாகும்; அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும்; அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும்" (ஏசா 33:16).

இஸ்ரவேல் தனித்து வாசம்பண்ணுவான் என்று மோசே சொல்லுகிறார். அவன் தனியாகயிருந்தாலும் சுகமாக வாசம்பண்ணுவான். அவன் புறஜாதி ஜனங்களோடு எந்த உடன்படிக்கையும் பண்ணிக்கொள்ளமாட்டான். அவர்களுடைய விக்கிரகாராதனைகளில் இஸ்ரவேலருக்கு எந்த தொடர்பும் பங்கும் இருக்காது. இஸ்ரவேல் ஜனத்தார் புறஜாதி ஜனங்களிடமிருந்து பிரிந்து, தனியாக வாசம்பண்ணுவார்கள். அவர்கள் தனித்து வாசம்பண்ணினாலும், சுகமாய் வாசம்பண்ணுவார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகாராதனைக்காரரோடு எந்தவித சம்பந்தமும் பண்ணாமல், அவர்களோடு ஐக்கியமாயிராமல், கர்த்தருக்குள் தங்கள் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்வார்கள். அப்போது அவர்கள் கர்த்தருக்குள் சுகமாயும் பாதுகாப்பாயும் வாசம்பண்ணுவார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு புறஜாதியாருடைய உதவிகளும், பாதுகாப்புக்களுக்கும் கிடைக்கவில்லையென்றாலும், அவர்களுக்கு கர்த்தருடைய உதவிகளும், பாதுகாப்புக்களும் கிடைக்கும்.

இந்தப் பூமியிலே இஸ்ரவேல் புத்திரரைப்போல கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட ஜனம், வேறு எந்த ஜனமுமில்லை. அவர்கள் இந்தப் பூமியிலே செழித்திருப்பார்கள். மோசே இஸ்ரவேல் ஜனத்தாரின் ஆசீர்வாதங்களைப்பற்றிச் சொல்லும்போது, "யாக்கோபின் ஊற்றானது தானியமும் திராட்சரசமுமுள்ள தேசத்திலே இருக்கும்; அவருடைய வானமும் பனியைப் பெய்யும்" (உபா 33:28) என்று சொல்லுகிறார்.

யாக்கோபின் ஊற்றானது, மோசேயோடு கூடயிருக்கிற இஸ்ரவேல் சபையாருக்கு ஆசீர்வாதமான ஊற்று திறக்கப்பட்டிருக்கிறது. யாக்கோபின் ஆசீர்வாதம், இப்போதிருக்கிற இஸ்ரவேல் சபையாருக்கும், இனிமேல் வரப்போகிற அவர்களுடைய பின்சந்ததியாருக்கும் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் நல்ல தேசத்திலே குடியேறப்போகிறார்கள். அந்த தேசத்தில் தானியமும் திராட்சரசமும் ஏராளமாயிருக்கும். இஸ்ரவேல் சபையார் எல்லோரும் இப்போது யோர்தானுக்கு இப்புறத்திலே இருக்கிறார்கள். யோர்தானுக்கு அப்புறத்திலே இருக்கிற கானான் தேசம், அவர்களுக்கு வாக்குப்பண்ணப்பட்ட தேசம். அது பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். அந்த தேசத்தில் தானியமும் திராட்சரசமும் ஏராளமாயிருக்கிறது. அந்த தேசத்தின்மீது கர்த்தருடைய வானமும் பனியைப் பெய்யும்.

யாக்கோபின் ஊற்று என்னும் வார்த்தைக்கு யாக்கோபின் கண் என்றும் பொருள் சொல்லலாம். யாக்கோபின் கண்கள், தானியமும் திராட்சரமுமுள்ள கானான் தேசத்தின் மேல் இருக்கிறது. யாக்கோபின் கண்கள் என்னும் வார்த்தை இஸ்ரவேல் சபையாரின் கண்களைக் குறிக்கிறது. கானான் தேசம் அவர்களுடைய கண்களுக்கு முன்பாக, யோர்தானுக்கு அப்புறத்திலே இருக்கிறது.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், தம்முடைய ஜனத்திற்கு உதவி தேவைப்படும்போதெல்லாம், வேகமாக வந்து உதவி செய்கிறார். கர்த்தருடைய உதவியைப் பெற்ற இஸ்ரவேல் ஜனத்தாரைப்போல, இந்தப் பூமியிலே வேறு எந்த ஜாதியாரும், தங்கள் தெய்வங்களின் உதவியைப் பெறவில்லை.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சகாயமாய் வானங்களின்மேலும் தமது மாட்சிமையோடு ஆகாய மண்டலங்களின் மேலும் ஏறிவருகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரால் இரட்சிக்கப்பட்ட ஜனமாகயிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒப்பானவர் ஒருவருமில்லை.

இஸ்ரவேல் ஜனத்தாரைப்போல பலமுள்ள ஆயுதம் தரித்தவர்களும் இந்தப் பூமியிலே வேறு எந்த ஜாதியாரும் இல்லை. "உனக்குச் சகாயஞ்செய்யும் கேடகமும் உனக்கு மகிமை பொருந்திய பட்டயமும் அவரே" *(உபா 33:29)* என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

கேடகம் யுத்தவீரரை சத்துருக்களிடத்திலிருந்து பாதுகாக்கும் ஆயுதம். பட்டயம் சத்துருக்களை சங்காரம்பண்ணும் ஆயுதம். கர்த்தருடைய ஜனத்திற்கு பாதுகாப்பும் தேவைப்படுகிறது. அதே வேளையில் அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி அவர்களை மேற்கொள்ளவும் வேண்டும். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே, அவர்களுக்கு பாதுகாப்பாகவும், சத்துருக்களை சங்காரம்பண்ணும் பட்டயமாகவும் இருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி அவர்களை மேற்கொள்வார்கள். யுத்தங்களிலே இஸ்ரவேல் ஜனத்தாரைப்போல ஜெயம் பெற்ற ஜாதியார் வேறு ஒருவருமில்லை. கர்த்தரே அவர்களுக்கு பெலனாகயிருக்கிறார். அவரே அவர்களுக்கு பாதுகாப்பாயிருக்கிறார். கர்த்தரே அவர்களுக்கு ஆயுதமாகவும் இருக்கிறார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், அவர்களுடைய சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார். யுத்தம் கர்த்தருடையது. ஜெயம் இஸ்ரவேல் புத்திரருடையது.

மோசே இதுபற்றிச் சொல்லும்போது, "உன் சத்துருக்கள் உனக்கு இச்சகம் பேசி அடங்குவார்கள்; அவர்கள் மேடுகளை மிதிப்பாய்" *(உபா 33:29)* என்று சொல்லுகிறார். இஸ்ரவேலரின் சத்துருக்கள் அடங்குவார்கள். இஸ்ரவேலர்கள் அவர்களை அடக்குவார்கள். சத்துருக்களுக்கு சொந்த விருப்பமும், சொந்த திட்டமும் இருந்தாலும், அவர்கள் அவற்றை விட்டு விட்டு, இஸ்ரவேலருடைய விருப்பத்திற்கும் திட்டத்திற்கும் அடங்கிப்போவார்கள்.

சத்துருக்கள் இஸ்ரவேலருக்கு இச்சகம் பேசுவார்கள். அவர்கள் பொய்ப்பேசுவார்கள். ஆனாலும் சத்துருக்களால் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அடங்காமலிருக்க முடியாது. இஸ்ரவேல் புத்திரரோ சத்துருக்களுடைய மேடுகளை மிதிப்பார்கள். சத்துருக்கள் இஸ்ரவேலருக்கு விரோதமாகப் பொய்சொன்னாலும், முடிவிலே அவர்களுக்கு அடங்கிப்போவார்கள்.

மோசே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொல்லுகிற பொதுவான ஆசீர்வாதங்களின் விவரம் வருமாறு :

1. இரும்பும் வெண்கலமும் உன் பாதரட்சையின் கீழிருக்கும் *(உபா 33:25, 1சாமு 17:6)*

2. உன் நாட்களுக்குத்தக்கதாய் உன் பெலனும் இருக்கும்.

3. யெஷூரனுடைய (இஸ்ரவேலுடைய) தேவனைப்போல் ஒருவரும் இல்லை. *(உபா 33:26-27 ; சங் 68:4; எசே 1).*

4. அநாதி தேவனே அவர்களுக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் அவர்களுக்கு ஆதாரம்.

5. கர்த்தர் அவர்களுக்கு முன்னின்று சத்துருக்களைத் துரத்தி, அவர்களை அழித்துப்போடு என்று கட்டளையிடுவார்.

6. இஸ்ரவேல் சுகமாய்த் தனித்து வாசம்பண்ணுவான். *(உபா 33:28).*

7. யாக்கோபின் ஊற்றானது தானியமும் திராட்சரசமுமுள்ள தேசத்திலே இருக்கும்.

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

8. வானம் பனியைப் பெய்யும்.

9. இஸ்ரவேல் பாக்கியவான். (உபா 33:29).

10. அவன் கர்த்தரால் ரட்சிக்கப்பட்ட ஜனம். அவனுக்கு ஒப்பானவன் ஒருவரும் இல்லை. கர்த்தர் அவர்களுக்கு சகாயஞ்செய்யும் கேடகமும், அவர்களுக்கு மகிமை பொருந்திய பட்டயமுமாக இருக்கிறார்.

11. இஸ்ரவேலருடைய சத்துருக்கள் அவர்களுக்கு இச்சகம் பேசி அடங்குவார்கள்.

12. இஸ்ரவேலர்கள் தங்கள் சத்துருக்களின் மேடுகளை மிதிப்பார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரோடு ஏற்படுத்திக்கொண்ட உறவுகளைப்பற்றிய விவரம் வருமாறு :

1. நித்திய அடைக்கலம். (உபா 33:27)

2. பாதுகாக்கிறவர்.

3. சத்துருக்களைத் துரத்துகிறவர்.

4. ஜீவஊற்று (உபா 33:28)

5. இரட்சகர் (உபா 33:29)

6. கேடகமும், பாதுகாப்பும்

7. பட்டயம்

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளோடு சதா காலங்களிலும் இப்படிப்பட்ட உறவையே வைத்துக் கொள்ள விரும்புகிறார். (யாத் 6-12; நியா 2:16-19; 1சாமு 14; ஏசா 37:36; எபி 11:32-40). தம்முடைய பிள்ளைகளின் ஆபத்துக் காலங்களில் கர்த்தர் தேடி வந்து விசாரித்து, அவர்களுக்கு உதவி புரிகிறார்.

34 அதிகாரம்

மோசே மரிக்கும் முன்பாக இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொன்ன வார்த்தைகள் இதுவரையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தில் அவர் மரிக்கும்போது நடைபெற்ற சம்பவங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. மோசே தன்னுடைய ஓட்டத்தை ஓடி முடித்திருக்கிறார்.

மோசே மரிக்கும் முன்பாக பிஸ்காவின் கொடுமுடியில் நின்று கானான் தேசத்தை நோக்கிப் பார்க்கிறார் (உபா 34:1-4). மோசேயின் மரணமும் அவர் அடக்கம்பண்ணப்படுவதும் (உபா 34:5,6). மரிக்கும்போது மோசேயின் வயது (உபா 34:7).

இஸ்ரவேல் ஜனத்தார் மோசேக்காக துக்கங்கொண்டாடுகிறார்கள் (உபா 34:8). மோசேக்கு பின்பு யோசுவா இஸ்ரவேல் புத்திரரை கானான் தேசத்திற்கு வழிநடத்துகிறார் (உபா 34:9). மோசேயின் குணாதிசயங்கள் (உபா 34:10-12).

பிஸ்காவின் கொடுமுடி. உபா 34:1-4

உபா 34:1. பின்பு மோசே மோவாபின் சமனான வெளிகளிலிருந்து எரிகோவுக்கு எதிரான நேபோ மலையிலிருக்கும் பிஸ்காவின் கொடுமுடியில் ஏறினான்; அப்பொழுது கர்த்தர் அவனுக்கு, தாண்மட்டுமுள்ள கீலேயாத் தேசம் அனைத்தையும்,

உபா 34:2. நப்தலி தேசம் அனைத்தையும், எப்பிராயீம் மனாசே என்பவர்களின் தேசத்தையும், கடைசிச் சமுத்திரம் வரைக்குமுள்ள யூதா தேசம் அனைத்தையும்,

உபா 34:3. தென்புறத்தையும், சோவார் வரைக்குமுள்ள பேரீச்சமரங்களின் பட்டணம் என்னும் ஊர்முதற்கொண்டு எரிகோவின் பள்ளத்தாக்காகிய சமனான பூமியையும் காண்பித்தார்.

உபா 34:4. அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: நான் உங்கள் சந்ததிக்குக் கொடுப்பேன் என்று ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்ட தேசம் இதுதான், இதை உன் கண் காணும்படி செய்தேன்; ஆனாலும் நீ அவ்விடத்திற்குக் கடந்துபோவதில்லை என்றார்.

உபாகமம் 34 ஆம் அதிகாரம் எபிரெய மூலபாஷை சுவடிகளில் பஞ்சாகமப் புஸ்தகத்தின் ஒரு பகுதியாகவே இருக்கிறது. இது ஒரு பின்இணைப்புப் பகுதியாகக் கருதப்படுகிறது. இதை மோசே தனது மரணத்திற்கு முன்பாகவோ, அல்லது வேறொருவர் மோசேயின் மரணத்திற்குப் பின்பாகவோ எழுதியிருக்க வேண்டும். மோசேக்குக் கிடைத்த தெய்வீக வெளிப்பாட்டின் பிரகாரம் அவரே இதை எழுதி இந்தப் புஸ்தகத்தில் சேர்த்திருக்கலாம்.

ஆதியாகமம் முதல் அதிகாரத்தில் வானமும், பூமியும் சிருஷ்டிக்கப்பட்ட சம்பவங்களை மோசே எழுதியது போலவே, இதையும் அவரே எழுதியிருக்கலாம். (ஆதி 1:1-2:25). இந்த அதிகாரத்தை மோசே எழுதவில்லையென்றால், அவருக்குப் பின் வந்த யோசுவா இதை எழுதியிருக்க வேண்டும். மோசேயைப்போலவே யோசுவாவும் நியாயப் பிரமாணப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறார். (யோசு 24:26).

மோசே நேபோ மலையிலிருக்கும் பிஸ்காவின் கொடுமுடியில் ஏறுகிறார். அவர் பரலோகத்தை நோக்கிப் பிரயாணம்பண்ணுகிறார். மோசே நேபோ மலையிலே மரிக்கப்போகிறார்.

"நீ எரிகோவுக்கு எதிரான மோவாப் தேசத்திலுள்ள இந்த அபாரீம் என்னும் மலைகளிலிருக்கிற நேபோ பர்வதத்தில் ஏறி, நான் இஸ்ரவேல் சந்ததியாருக்குக் காணியாட்சியாகக் கொடுக்கும் கானான் தேசத்தைப் பார். நீங்கள் சீன் வனாந்தரத்திலுள்ள காதேசிலே மேரிபாவின் தண்ணீர் சமீபத்தில் இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே என்னைப் பரிசுத்தம் பண்ணாமல், அவர்கள் நடுவே என் கட்டளைகளை மீறினதினாலே, உன் சகோதரனாகிய ஆரோன் ஓர் என்னும் மலையிலே மரித்து, தன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்பட்டதுபோல நீயும் ஏறப்போகிற மலையிலே மரித்து, உன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்படுவாய்" (உபா 32:49-51).

மோசேயின் மரணத்தைப்பற்றி கர்த்தர் அவருக்கு ஏற்கெனவே வெளிப்படுத்தியிருக்கிறார். இஸ்ரவேல் சபையார் எல்லோரும் மோவாபின் சமனான வெளிகளிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். மோசே அந்த சமவெளிகளிலிருந்து, எரிகோவுக்கு எதிரான நேபோ மலையிலிருக்கும் பிஸ்காவின் கொடுமுடியில் ஏறுகிறார். மோசே மரிக்கும் தருணம் வந்திருக்கிறது. அப்போதும் அவர் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, நேபோ மலையின்மேல் ஏறிப்போகிறார்.

நேபோ மலையின் சிகரத்திற்கு பிஸ்காவின் கொடுமுடி என்று பெயர். பிஸ்கா என்பது உயர்ந்த ஸ்தானத்தையும், உன்னதமான அனுபவங்களையும் குறிக்கிற வார்த்தை. மோசே பிஸ்காவின் கொடுமுடியிலே ஏறும்போது, அவருக்கு துணையாக, அவரோடுகூட யாரும் ஏறிப்போகவில்லை. மோசே பிஸ்காவின் கொடுமுடிக்கு, மற்றவர்களுடைய துணையில்லாமல், தனியாக ஏறிப்போகிறார்.

மோசே மோவாபின் சமவெளிகளில், இஸ்ரவேல் சபையார் எல்லோரையும் ஆசீர்வதித்து முடித்திருக்கிறார். யோசுவாவிடமும், ஆசாரியராகிய எலெயாசாரிடமும், தன்னுடைய சிநேகிதர்களிடமும், மோசே தன்னுடைய மரணத்தைப்பற்றியும், கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரம் தான் நேபோ மலையிலிருக்கும் பிஸ்காவின் கொடுமுடியிலே ஏறிப்போவதைப்பற்றியும் சொல்லியிருப்பார். மோசே இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் தன்னுடைய மரணத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்.

மோசே எரிகோவுக்கு எதிரான நேபோ மலையிலிருக்கும் பிஸ்காவின் கொடுமுடியிலே ஏறிப்போகும்போது, இஸ்ரவேல் சபையார் எல்லோரும் நேபோவின் மலை அடிவாரத்திற்கு வந்து, அவரை வழியனுப்பி வைத்திருப்பார்கள். இஸ்ரவேல் ஜனத்தாரை விட்டுப் பிரிவது மோசேயின் மனதிலே மிகுந்த வருத்தமாகவும், வேதனையாகவும் இருந்திருக்கும். அதுபோலவே மோசேயை விட்டுப் பிரிவது, இஸ்ரவேல் சபையார் எல்லோருக்குமே வருத்தமாக இருந்திருக்கும்.

ஆபிரகாம் தன்னுடைய குமாரனாகிய ஈசாக்கை மோரியா மலையிலே பலிசெலுத்துவதற்காக அழைத்துக்கொண்டு போனபோது, மலை அடிவாரத்திலே தன்னுடைய ஊழியக்காரர்களை தங்கியிருக்கச் சொன்னார். ஆபிரகாம் அப்போது தன்னுடைய ஊழியக்காரருக்குச் சொன்னதுபோல, மோசே இப்போது இஸ்ரவேல் சபையாருக்கு, "இங்கே தங்கியிருங்கள், நான் மலையின்மேல் ஏறி, அங்கே மரிக்கப்போகிறேன்" என்று சொல்லியிருப்பார்.

மோசே மரிப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார். தான் எந்த இடத்தில் மரிக்கப்போகிறோம் என்பது மோசேக்கு தெரிந்திருக்கிறது. தன்னுடைய மரணத்திற்கு தப்பிக்க மோசே எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. தான் இப்போது மரித்துப்போகக்கூடாது என்று மோசே கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணவுமில்லை. கர்த்தர் தன்னுடைய மரணத்தைப்பற்றிச் சொன்னபோது, மோசே அந்த வார்த்தைகளை சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறார்.

மோசே தன்னுடைய மரணத்தை நினைத்து சோர்ந்துபோகவில்லை. மரணச்செய்தி அவருடைய மனதின் உற்சாகத்தை நீக்கிப்போடவுமில்லை. மோசே எரிகோவுக்கு எதிரான நேபோ மலையிலிருக்கும் பிஸ்காவின் கொடுமுடியிலே உற்சாகமாக ஏறுகிறார்.

மோசேயைப் பொறுத்தவரையில், பிஸ்காவின் கொடுமுடியில் ஏறுவது, பரலோகத்திற்கு ஏறிப்போவது போல இருக்கிறது. மோசே மரித்தால்தான் அவரால் பரலோகத்திற்குப் போகமுடியும். ஆகையினால் மோசே தன்னுடைய மரணத்தைப்பற்றி நினைத்துப் பார்க்கும்போது, அதை பரலோகத்திற்குப்போகும் ஓர் உபாயம் என்றே நினைக்கிறார்.

நீதிமான்கள் மரிக்கும்போது அவர்களுடைய ஆத்துமா பரலோகத்திற்கு நேராக ஏறிப்போகிறது. "உயர ஏறும் மனுஷனுடைய ஆவியையும், தாழ பூமியிலிறங்கும் மிருகங்களுடைய ஆவியையும் அறிகிறவன் யார்?" (பிர 3:21).

மோசே நேபோ மலையிலிருக்கும் பிஸ்காவின் கொடுமுடியில் ஏறுகிறார்.

அப்பொழுது கர்த்தர் மோசேக்கு, தாண்மட்டுமுள்ள கீலேயாத் தேசம் அனைத்தையும், நப்தலி தேசம் அனைத்தையும், எப்பிராயீம் மனாசே என்பவர்களின் தேசத்தையும், கடைசிச் சமுத்திரம்வரைக்குமுள்ள யூதா தேசம் அனைத்தையும், தென்புறத்தையும், சோவார் வரைக்குமுள்ள பேரீச்சமரங்களின் பட்டணம் என்னும் ஊர்முதற்கொண்டு எரிகோவின் பள்ளத்தாக்காகிய சமனான பூமியையும் காண்பிக்கிறார் (உபா 34:1-3).

மோசே பிஸ்காவின் கொடுமுடிக்கு ஏறிப்போன பின்பு, அங்கே இருந்து பூமியை நோக்கிப் பார்க்கிறார். அவர் அந்தப் பூமியிலே, பூமிக்குரிய கானானைக் காண்கிறார். அந்தக் கானானுக்குள் பிரவேசிக்க மோசேக்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. ஆனாலும் மோசே பிஸ்காவின் கொடுமுடியிலிருந்து, பரமகானானை விசுவாசத்தினால் நோக்கிப் பார்க்கிறார். அவர் இப்போது பரமகானானுக்குள்ளே பிரவேசிக்கப்போகிறார்.

மோசே பிஸ்காவின் கொடுமுடியில் தனியாக ஏறிப்போனாலும், பிதாவாகிய தேவன் அவரோடு கூடயிருக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகள் ஒருபோதும் தனித்து விடப்படுவதில்லை. நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மோடுகூட எப்போதும் கூடயிருக்கிறார்.

"இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும்; அது இப்பொழுது வந்திருக்கிறது; ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார்" (யோவா 16:32).

விசுவாசிகளாகிய நாமும், கர்த்தருக்கு ஏற்ற வேளை வரும்போது, பரமகானானை நோக்கி பிரயாணம்பண்ணுவோம். அது வரையிலும் தேவனுடைய கிருபையினாலும், விசுவாசத்தினாலும், பரம கானானுடைய ஆசீர்வாதங்களை நோக்கிப் பார்க்கவேண்டும்.

பரமகானானை நோக்கிப் பார்ப்பதற்கு, நமக்கு விசுவாசமும், ஞானமும், தெய்வீக வெளிப்பாடும் தேவைப்படுகிறது. நம்முடைய தேவனாகிய கர்த்தரே நமக்கு ஞானத்தின் ஆவியையும், வெளிப்படுத்துதலின் ஆவியையும் கொடுக்கிறார். கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற ஈவுகள் மூலமாக, நாம் பரமகானானை விசுவாசத்தினால் நோக்கிப் பார்க்கவேண்டும்.

மோசே பரமகானானுக்கு வெகுதூரத்திலிருக்கிறார். பிஸ்கா என்னும் கொடுமுடியானது நேபோ மலையிலிருந்தாலும், அந்த மலையானது இந்தப் பூமியில்தான் இருக்கிறது. பரமகானானோ வானத்திலுள்ளது. வானத்திற்கும் பூமிக்கும் இடையேயுள்ள தூரம் அதிகம். மோசே பூமியிலுள்ள பிஸ்காவின் கொடுமுடியிலிருந்து, வானத்திலுள்ள பரமகானானை விசுவாசத்தினால் நோக்கிப் பார்க்கிறார்.

கர்த்தருடைய கிருபையினால், விசுவாசிகளாகிய நாம் எல்லோருமே, தேவனுடைய கிருபையினால், பரமகானானை தரிசிக்க முடியும். பரமகானானின் மகிமையையும், அதின் ஆசீர்வாதங்களையும் நாம் விசுவாசத்தினால் நோக்கிப் பார்க்கலாம்.

மோசே பிஸ்காவின் கொடுமுடியிலிருந்து, யோர்தானுக்கு அப்புறத்திலிருக்கிற கானானை நோக்கிப் பார்க்கிறார். அவரால் கானான் தேசத்தை பார்க்க மாத்திரமே முடிகிறது. மோசேயால் கானானின் நன்மைகளை அனுபவிக்க முடியாது.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நம் மத்தியிலே, கிறிஸ்துவின் ராஜ்யத்தைப்பற்றியும், அதின் மகிமையான காரியங்களைப்பற்றியும் நமக்கு பிரசங்கிக்கப்படுகிறது. இவையெல்லாம் இனிமேல் வரப்போகிற ஆசீர்வாதங்கள். கடைசி நாட்களில், கிறிஸ்துவின் ராஜ்யம் இந்தப் பூமியிலே ஸ்தாபிக்கப்படுவதையும், அது விஸ்தரிக்கப்படுவதையும் நாம் கேள்விப்படுகிறோம். ஆனாலும் நம்முடைய காலத்தில் அந்த மகிமைகளை நம்மால் பிரதியட்சமாய்க் காணமுடியவில்லை.

மோசே பிஸ்காவின் கொடுமுடியிலிருந்து, யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள கானான் தேசத்தை நோக்கிப் பார்க்கிறார். அவரால் அந்த தேசத்திற்குள் பிரவேசிக்க முடியாது. இஸ்ரவேல் ஜனத்தார் சீக்கிரத்திலே யோர்தானைக் கடந்து, கானான் தேசத்திலே பிரவேசிக்கப்போகிறார்கள். அவர்கள் கானான் தேசத்தில் பிரவேசிக்கும்போது, அதைப் பார்ப்பதற்கு மோசே உயிரோடிருக்கமாட்டார்.

வாக்குத்தத்த தேசத்திற்குள்ளே, இஸ்ரவேல் ஜனத்தார் பிரவேசிப்பார்கள் என்னும் செய்தி மோசேயின் மனதில் ஆறுதலாயிருக்கிறது.

"யூதாவுக்குள் புகுந்து பிரவாகித்துக் கடந்து, கழுத்துமட்டும் வரும் என்றார். இம்மானுவேலே, அவன் செட்டைகளின் விரிவு உமது தேசத்தின் விசாலத்தை மூடும்" (ஏசா 8:8).

கானான் தேசம் இம்மானுவேலின் தேசமாகும். கர்த்தர் பிஸ்காவின் கொடுமுடியிலே மோசேக்கு கானான் தேசத்தைக் காண்பிக்கிறார். மோசே இம்மானுவேலின் தேசத்தைப் பார்க்கிறார். மோசே அந்ததேசத்தைப் பார்க்கும்போது, புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம், இயேசுகிறிஸ்துவின் மூலமாக பெற்று அனுபவிக்கிற ஆசீர்வாதங்களையும் பார்க்கிறார்.

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி, "நான் உங்கள் சந்ததிக்குக் கொடுப்பேன் என்று ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்ட தேசம் இதுதான், இதை உன் கண் காணும்படி செய்தேன்; ஆனாலும் நீ அவ்விடத்திற்குக் கடந்துபோவதில்லை" (உபா 34:4) என்று சொல்லுகிறார்.

மோசேயின் மரணம்
உபா 34:5-8

உபா 34:5. அப்படியே கர்த்தரின் தாசனாகிய மோசே மோவாப் தேசமான அவ்விடத்திலே கர்த்தருடைய வார்த்தையின்படியே மரித்தான்.

உபா 34:6. அவர் அவனை மோவாப் தேசத்திலுள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே அடக்கம்பண்ணினார். இந்நாள்வரைக்கும் ஒருவனும் அவன் பிரேதக்குழியை அறியான்.

உபா 34:7. மோசே மரிக்கிறபோது நூற்றிருபது வயதாயிருந்தான்; அவன் கண் இருளடையவுமில்லை, அவன் பெலன் குறையவுமில்லை.

உபா 34:8. இஸ்ரவேல் புத்திரர் மோவாபின் சமனான வெளிகளில் மோசேக்காக முப்பது நாள் அழுதுகொண்டிருந்தார்கள்; மோசேக்காக அழுது துக்கங் கொண்டாடின நாட்கள் முடிந்தது.

மோசேயின் மரணத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் "கர்த்தருடைய தாசனாகிய மோசே" என்று அழைக்கப்படுகிறார். மோசே வனாந்தரப் பாதையின் வழியாக கடந்து வந்தார். அவர் எகிப்து தேசத்திலிருந்து, இஸ்ரவேல் ஜனத்தாரை இதுவரையிலும் வழிநடத்தி வந்திருக்கிறார். ஆனாலும் மோசே கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதை கர்த்தர் அனுமதிக்கவில்லை.

"அப்படியே கர்த்தரின் தாசனாகிய மோசே மோவாப் தேசமான அவ்விடத்திலே கர்த்தருடைய வார்த்தையின்படியே மரித்தான்" (உபா 34:5) என்று இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு கர்த்தர் தனக்கு அனுமதி கொடுக்கவில்லையென்றாலும், மோசே கர்த்தருடைய சித்தத்திற்கு சந்தோஷமாகவும், மனப்பூர்வமாகவும் கீழ்ப்படிகிறார். மோசே மிகுந்த மனத்தாழ்மையுள்ளவர். தன்னுடைய சுயசித்தத்தைவிட, கர்த்தருடைய சித்தமே மோசேக்கு முக்கியமானதாய்த் தெரிகிறது.

இந்த வசனத்தில் மோசேயைப்பற்றிச் சொல்லும்போது, "கர்த்தரின் தாசனாகிய மோசே" (உபா 34:5) என்று சொல்லப்பட்டிருக்கிறது. மோசே நற்குணமுள்ளவர் மாத்திரமல்ல கர்த்தருடைய ஊழியக்காரர்கள் எல்லோருமே நற்குணமுள்ளவர்களாயிருக்கவேண்டும். மோசேயினிடத்தில் நற்குணத்தைவிட, மேலும் ஒரு விசேஷமான குணம் காணப்படுகிறது. அவர் பிரயோஜனமுள்ள மனுஷனாகயிருக்கிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அவருக்கு பிரியமுள்ளவர்களாகவும், பிரயோஜனமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். மோசே கர்த்தருக்கு பிரயோஜனமான ஊழியங்களை செய்தார். கர்த்தருடைய ஆலோசனைகளின் பிரகாரம், மோசே இஸ்ரவேல் ஜனத்தாரை, எகிப்து தேசத்திலிருந்து விடுவித்து, வனாந்தரப்பாதையின் வழியாக நடத்தி வந்திருக்கிறார்.

மோசே கர்த்தருக்கு பிரயோஜனமான ஊழியத்தை செய்தாலும், அவர் இப்போது மரிக்கப்போகிறார். மோசேயின் பக்தியோ அல்லது அவருடைய பிரயோஜனமான ஊழியமோ, அவருக்கு மரணத்திலிருந்து விடுதலை கொடுக்கவில்லை. ஒரு தரம் பிறப்பதும் பின்பு மரிப்பதும் எல்லா மனுஷருக்கும் நியமிக்கப்பட்டிருப்பதுபோல, மோசேக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது.

உலகப்பிரகாரமான ஜனங்கள் மரித்துப்போவதுபோல கர்த்தருடைய ஊழியக்காரர்களும் ஏற்ற வேளை வரும்போது மரித்துப்போவார்கள். பரிசுத்தவான்களின் மரணம் கர்த்தருடைய பார்வைக்கு அருமையானதாகயிருக்கிறது. ஊழியக்காரர்கள் மரிக்கும்போது, அவர்கள் ஊழியங்களின் பாரங்களிலிருந்தும் உலகப்பிரகாரமான வேதனைகளிலிருந்தும் விடுவிக்கப்படுகிறார்கள். அவர்கள் நித்திய இளைப்பாறுதலைப் பெறப்போகிறார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் இந்தப் பூமியிலே கர்த்தருக்காக ஊழியம் செய்தபோது, அநேக பாடுகளையும், வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவித்திருக்கலாம். அவர்கள் மரித்த பின்பு, அவர்கள் அனுபவித்த உபத்திரவங்களுக்குத்தக்கதாக கர்த்தர் அவர்களுக்கு வெகுமதிகளைக் கொடுப்பார்.

ஊழியக்காரர்கள் மரிக்கும்போது, அவர்கள் இதுவரையிலும் செய்து வந்த ஊழியங்களை, கர்த்தருடைய பிள்ளைகள் தொடர்ந்து செய்யவேண்டும். மூத்த ஊழியக்காரர்கள் மரிக்கும்போது , இளைய ஊழியக்காரர்கள் அவர்களுடைய ஸ்தானத்திலே வந்து, கர்த்தருடைய ஊழியத்தை தொடர்ந்து செய்யவேண்டும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தங்கள் சரீரப்பிரகாரமாக மரித்துப்போனாலும், அவர்களுடைய ஊழியம் முடிந்துபோவதில்லை. அவர்கள் மரித்த பின்பு இந்தப் பூமியிலே இருக்கமாட்டார்கள். அவர்கள் கர்த்தரோடுகூட பரலோகத்திலிருப்பார்கள். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் பரலோகத்திலே கர்த்தரை அதிகமாய்ச் சேவிப்பார்கள். அங்கே அவரை அதிகமாய் ஆராதிப்பார்கள். பரலோகத்திலே அவர்கள் இரவும் பகலும் கர்த்தரைத் துதிப்பார்கள்.

மோசே கர்த்தருடைய வார்த்தையின்படியே மரிக்கிறார். மோசேயைப்போலவே கர்த்தருடைய ஊழியக்காரர்களும், தங்களுடைய ஊழியங்களை செய்து முடித்த பின்பு, மரிப்பதற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும். கர்த்தர் நம்மை எப்பொழுது அழைக்கிறாரோ, அப்பொழுது அவருடைய சமுகத்தில் பிரவேசிப்பதற்கு நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும்.

"அதற்குப் பவுல்: நீங்கள் அழுது என் இருதயத்தை ஏன் உடைந்துபோகப் பண்ணுகிறீர்கள்? எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்குமாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன் என்றான்" (அப் 21:13).

மோசே கர்த்தருடைய வார்த்தையின்படியே நேபோ மலையிலிருக்கும் பிஸ்காவின் கொடுமுடியிலே மரித்துப்போகிறார். கர்த்தர் மோசேயை மோவாப் தேசத்திலுள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே அடக்கம்பண்ணுகிறார். இந்நாள்வரைக்கும் ஒருவனும் அவன் பிரேதக்குழியை அறியான் (உபா 34:6).

கர்த்தர் தமது அநாதி தீர்மானத்தின் பிரகாரமாக மோசேயின் பிரேதக்குழியை ஒருவரும் அறிய அனுமதிக்க வில்லை. ஒருவேளை இஸ்ரவேல் புத்திரர் மோசேயைக்கூட, தங்களுடைய தெய்வமாக ஆராதிக்க ஆரம்பித்து விடுவார்கள். அக்காலத்தில் புறஜாதி மார்க்கங்களில் மார்க்கத் தலைவர்களையும், தேசத்தலைவர்களையும் தெய்வங்களாகப் பாவித்து அவர்களை ஆராதிக்கும் பழக்கம் இருந்தது.

தம்முடைய ஊழியக்காரர்கள் மரித்துப்போகும்போது, அவர்களுடைய மரித்துப்போன சரீரங்களை கர்த்தர் பொறுப்பேற்றுக்கொள்கிறார். அவர்களுடைய மரணம் கர்த்தருடைய பார்வைக்கு அருமையானதாயிருக்கிறது. அவர்களுடைய பிரேதங்களும் கர்த்தருடைய பார்வைக்கு அருமையானதாகவே இருக்கிறது. கர்த்தர் மோசேயின் சரீரத்தை பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே அடக்கம்பண்ணுகிறார்.

மனுஷனுடைய ஆத்துமா கர்த்தருடைய இளைப்பாறுதலில் தங்கியிருக்கும்போது, அந்த மனுஷனுடைய சரீரம் எங்கே, எவ்வாறு அடக்கம்பண்ணப்பட்டது என்பது முக்கியமானதல்ல. நம்முடைய சரீரம் அழகான கல்லறையில் அடக்கம்பண்ணப்பட்டிருக்கிறதா என்பதைவிட, நம்முடைய ஆத்துமா கர்த்தருடைய சமுகத்திலே இளைப்பாறுகிறதா என்பதே மிகவும் முக்கியம்.

கர்த்தர் மோசேயின் சரீரத்தை பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே அடக்கம்பண்ணுகிறார். ஆனால் மோசேயை அடக்கம்பண்ணப்பட்ட இடம் எது என்பது தெளிவாக தெரியவில்லை. கர்த்தரே இஸ்ரவேல் புத்திரருக்கு அந்த இடத்தை வெளிப்படுத்தாதபடிக்கு மறைத்திருக்கலாம்.

இஸ்ரவேல் ஜனத்தார் இன்னும் விக்கிரகாராதனையைவிட்டு முழுவதுமாக விடுதலை பெறவில்லை. அவர்களுடைய இருதயத்தில் இன்னும் விக்கிரகாராதனையின் சுவடுகள் காணப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரர் மோசேயின்மீது மிகுந்த மதிப்பும், மரியாதையும் வைத்திருக்கிறார்கள். அவர்கள் மோசேயின் சரீரத்தை ஒரு விக்கிரகமாக பாவித்து, அதை ஆராதிப்பதற்கு வாய்ப்புள்ளது.

இஸ்ரவேல் ஜனத்தாருக்கு மோசே அடக்கம்பண்ணப்பட்ட இடம் தெரிந்திருந்தால், அவர்கள் அந்த இடத்திலே மோசேக்கு ஒரு ஆலயத்தைக் கட்டி, மோசேயின் மரித்துப்போன சரீரத்தை ஒரு விக்கிரகமாக ஆராதித்திருப்பார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் இதுபோன்ற விக்கிரகாராதனைகளில் ஈடுபடக்கூடாது என்பதற்காக, கர்த்தர் மோசேயை அடக்கம்பண்ணின இடத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தாமல் மறைத்துவிடுகிறார்.

மோசே மரிக்கிறபோது நூற்றிருபது வயதாயிருக்கிறார்; அவர் கண் இருளடையவுமில்லை, அவர் பெலன் குறையவுமில்லை (உபா 34:7).

மோசேயின் இனத்தாரில் மோசே சீக்கிரமாகவே மரித்துவிட்டார். லேவி 137 வயதிலும், கோகாத் 133 வயதிலும், மோசேயின் தகப்பனாகிய அம்ராம் 137 வயதிலும், ஆரோன் 123 வயதிலும் (யாத் 6:16-20; எண் 33:39), மிரியாம் 126 வயதிலும் (எண் 20:1) மரித்துப்போனார்கள். மோசே எந்த நாளில் பிறந்தாரோ அதே நாளிலேயே மரித்துப் போகிறார். (உபா 1:3,10; உபா 31:2; உபா 34:7).

“அவன் கண் இருளடையவுமில்லை, அவன் பெலன் குறையவுமில்லை” என்னும் இந்தச் சாட்சி இஸ்ரவேல் புத்திரரிடையே இன்றும் பகிர்ந்து கூறப்படுகிறது. மோசே தேவனோடு நெருங்கிய ஐக்கியமாக இருந்தார். அவருடைய உபவாசங்கள், அவருடைய ஆவிக்குரிய ஜீவியம், ஆகியவையெல்லாம் சேர்ந்து அவருடைய கண்களை இருளடையாமலும், அவருடைய பெலனை குறையாமலும் காத்துக் கொண்டன.

இஸ்ரவேலின் முற்பிதாக்களுடைய ஆயுசுகாலத்தைக் கணக்கிடும்போது, மோசேயின் நூற்றிருபது வயது என்பது குறைவான வயதுதான். ஆனாலும் தன்னுடைய காலத்தில் உயிரோடிருந்த ஜனங்களின் ஆயுசுகாலத்தைவிட, மோசேயின் ஆயுசுகாலம் அதிகமாயிருக்கிறது.

மோசேயின் நூற்றிருபது வருஷ ஆயுசுகாலத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு பகுதியிலும் நாற்பது வருஷங்கள் இருக்கிறது. மோசே தன்னுடைய முதலாவது நாற்பது வயது வரையிலும், பார்வோனின் அரண்மனையில், ராஜமேன்மையோடிருந்தார்.

மோசே தன்னுடைய இரண்டாவது நாற்பது வருஷகாலத்தில் மீதியான் தேசத்திலே ஆடுகளை மேய்க்கிறவராயிருந்தார். இக்காலத்தில் அவர் சாதாரண குடியானவனாகவும், தரித்திரனாகவும் இருந்தார்.

மோசே தன்னுடைய மூன்றாவது நாற்பது வருஷ காலத்தில் யெஷூரனுக்கு ராஜாவாயிருந்தார். மோசேக்கு இக்காலத்தில் வல்லமையும், கனமும், மதிப்பும் மரியாதையும் உண்டாயிற்று. ஆனாலும் மோசே தன்னுடைய மூன்றாவது நாற்பது வருஷகாலத்தில் பல துன்பங்களையும் வேதனைகளையும் அனுபவித்தார்.

மோசே நூற்றிருபது வயதில் மரித்ததினால் அவருடைய ஆயுசுகாலம் பூரண ஆயுசுகாலமாயிருக்கிறது. அவருக்கு சரீரத்தில் ஒரு குறைவும் ஏற்படவில்லை. அவருடைய முதிர்வயதிலும், சரீரத்தின் அவயவங்கள் எதுவும் செயல்படாமல் பாழாய்ப்போகவில்லை. அவருடைய கண்கள் இருளடையவில்லை. அவருடைய பெலன் குறையவுமில்லை.

ஈசாக்கு மரிக்கும்போது அவருடைய கண்கள் இருளடைந்தது. "ஈசாக்கு முதிர்வயதானதினால் அவன் கண்கள் இருளடைந்து பார்வையற்றுப் போனபோது, அவன் தன் மூத்த குமாரனாகிய ஏசாவை அழைத்து, என் மகனே என்றான்; அவன், இதோ, இருக்கிறேன் என்றான்" (ஆதி 27:1).

யாக்கோபு மரிக்கும்போது அவருடைய கண்களும் இருளடைந்திருந்தது. "முதிர்வயதினால் இஸ்ரவேலின் கண்கள் மங்கலாயிருந்தபடியால், அவன் நன்றாய்ப் பார்க்கக்கூடாதிருந்தது. அவர்களை அவனண்டையிலே சேரப்பண்ணினான்; அப்பொழுது அவன் அவர்களை முத்தஞ்செய்து அணைத்துக்கொண்டான்" (ஆதி 48:10).

இஸ்ரவேல் புத்திரர் மோவாபின் சமனான வெளிகளில் மோசேக்காக முப்பது நாள் அழுதுகொண்டிருக்கிறார்கள்; மோசேக்காக அழுது துக்கங்கொண்டாடின நாட்கள் முடிவடைகிறது (உபா 34:8).

இஸ்ரவேல் புத்திரரே மோசேக்காக அழுதுகொண்டிருக்கிறார்கள். அவர்கள் முப்பது நாட்களாக மோசேக்காக அழுது துக்கங்கொண்டாடுகிறார்கள். மோசே கர்த்தருடைய சமுகத்திலே இளைப்பாறிக்கொண்டிருந்தாலும், அவரைப் பிரிந்த வேதனையும் துக்கமும் இஸ்ரவேல் புத்திரருடைய மனதிலே அதிகமாயிருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் பரலோகத்திற்குப்போவார்கள் என்னும் நம்பிக்கை நமக்கு இருக்குமென்றால், அவர்களுடைய சரீரங்களை அடக்கம்பண்ணுவதற்காக, கல்லறைக்குப்போகும்போது, நாம் அழவேண்டிய அவசியமில்லை.

யோசுவா
உபா 34:9

உபா 34:9. மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின்மேல் தன் கைகளை வைத்தபடியினால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான்; இஸ்ரவேல் புத்திரர் அவனுக்குக் கீழ்ப்படிந்து, கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்கள்.

கர்த்தர் மோசேயின் மூலமாக மகிமைப்பட்டதுபோல, யோசுவாவின் மூலமாகவும் மகிமைப்படுகிறார். கர்த்தர் தன்னை அழைத்த அழைப்புக்கு யோசுவா பாத்திரவானாயிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கு கீழ்ப்படிந்ததுபோல, யோசுவாவுக்கும் கீழ்ப்படிகிறார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து விடுதலைபண்ணி, கானான் தேசத்தின் எல்லைகள் வரைக்கும் அழைத்து வந்திருக்கிறார். அதன் பின்பு மோசே மரித்துப்போனார். மோசேயால் இஸ்ரவேல் ஜனங்களை கானான் தேசத்திற்குள் அழைத்துச் செல்ல முடியவில்லை.

மோசேயின் ஊழியம் பரிபூரணமாக முடிவுபெறவில்லை. அவரால் இஸ்ரவேல் ஜனத்தாரை எங்கு கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டுமோ, அங்குகொண்டுபோய்ச் சேர்க்க முடியவில்லை. மோசேயின் ஊழியம் பூரணமில்லாமல் இருப்பதுபோல, நியாயப்பிரமாணமும் ஒன்றையும் பூரணப்படுத்தாது.

"நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை, அதிக நன்மையான நம்பிக்கையை வருவிப்பதோ பூரணப்படுத்துகிறது; அந்த நம்பிக்கையினாலே தேவனிடத்தில் சேருகிறோம்" (எபி 7:19).

நியாயப்பிரமாணம் இஸ்ரவேல் ஜனத்தாரை வனாந்தரத்திற்கு அழைத்து வந்தது. அங்கே அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு உணர்த்தியது. ஆனால் நியாயப்பிரமாணத்தினால் இஸ்ரவேல் புத்திரரை இளைப்பாறுகிற ஸ்தலமும், சமாதானத்தின் ஸ்தலமுமாகிய கானான் தேசத்திற்கு அழைத்து வர முடியவில்லை.

நியாயப்பிரமாணம் மனுஷருடைய பாவங்களை உணர்த்தும். ஆனால் நியாயப்பிரமாணத்தினால் மனுஷருடைய பாவங்களை மன்னித்து, அவர்களுக்கு இரட்சிப்பையும் சமாதானத்தையும் கொடுக்க முடியாது.

இஸ்ரவேல் ஜனத்தாரை கானான் தேசத்திற்குள் வழிநடத்திச் செல்லும் சிலாக்கியம் யோசுவாவுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. யோசுவா நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாகயிருக்கிறார். நியாயப்பிரமாணத்தினால் செய்ய முடியாததை கிறிஸ்துவானவர் செய்து முடிக்கிறார்.

"அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்" (ரோம 8:3).

இயேசுகிறிஸ்துவின் மூலமாக விசுவாசிகளாகிய நாம் நித்திய இளைப்பாறுதலிலே பிரவேசிக்கிறோம். கிறிஸ்துவின் மூலமாக நம்முடைய மனச்சாட்சியில் ஆவிக்குரிய இளைப்பாறுதலும், பரலோகத்தில் நித்திய இளைப்பாறுதலும் உண்டாகிறது.

யோசுவாவுக்கு மிகப்பெரிய ஊழியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஊழியத்தை செய்வதற்கு யோசுவா தகுதியுள்ளவராக இருக்கிறார். கர்த்தர் யோசுவாவை தகுதிப்படுத்துகிறார். யோசுவா ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டார்.

தேவனுடைய தெய்வீக நியமத்தின் பிரகாரம், மோசே யோசுவாவை ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணுகிறார். மோசே யோசுவாவின்மேல் தன் கைகளை வைத்து, அவரை கர்த்தருடைய ஊழியத்திற்கு அழைத்து அபிஷேகம்பண்ணி பிரதிஷ்டைபண்ணுகிறார்.

யோசுவாவின்மீது பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமும் மோசேயின் பிரதிஷ்டையும் இருக்கிறது. யோசுவா திடமனதாயிருந்து கர்த்தருடைய ஊழியத்தை செய்யவேண்டும். மோசே யோசுவாவை ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணும்போது, அவர் கர்த்தருடைய சமுகத்திலே யோசுவாவுக்காக ஜெபம்பண்ணுகிறார். மூத்த ஊழியக்காரர்கள் இளைய ஊழியக்காரர்களிடத்தில், ஊழியப்பொறுப்புக்களை ஒப்புக்கொடுத்து, அவர்களுக்காக ஜெபம்பண்ணவேண்டும்.

யோசுவாவின்மீதும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் தங்கியிருக்கிறது. ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் யோசுவாவுக்கு கீழ்ப்படிகிறார்கள். கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்டபடியே இஸ்ரவேல் சபையார் செய்கிறார்கள்.

மோசே
உபா 34:10-12

உபா 34:10. மோசே எகிப்துதேசத்திலே பார்வோனுக்கும், அவனுடைய எல்லா ஊழியக்காரருக்கும், அவனுடைய தேசம் அனைத்திற்கும் செய்யும்படி கர்த்தர் அவனை அனுப்பிச் செய்வித்த சகல அடையாளங்களையும் அற்புதங்களையும்,

உபா 34:11. அவன் இஸ்ரவேலர் எல்லாருக்கும் பிரத்தியட்சமாய்ச் செய்த சகல வல்லமையான கிரியைகளையும், மகா பயங்கரமான செய்கைகளையும் பார்த்தால்,

உபா 34:12. கர்த்தரை முகமுகமாய் அறிந்த மோசேயைப்போல், ஒரு தீர்க்கதரிசியும் இஸ்ரவேலில் அப்புறம் எழும்பினதில்லை என்று விளங்கும்.

மோசேயின் குணாதிசயங்கள் இந்த வசனப்பகுதியில் புகழ்ந்து சொல்லப்பட்டிருக்கிறது. மோசே கர்த்தரை முகமுகமாய் அறிந்திருக்கிறார்.

"நான் அவனுடன் மறைபொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்; அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான்; இப்படியிருக்க, நீங்கள் என் தாசனாகிய மோசேக்கு விரோதமாய்ப் பேச, உங்களுக்குப் பயமில்லாமற்போனதென்ன என்றார்" (எண் 12:8).

மோசே கர்த்தருடைய வல்லமையையும், மகிமையையும், மகத்துவத்தையும் அறிந்திருக்கிறார். ஆகையினால் அவர் எகிப்து தேசத்தில் பார்வோனுக்கும், அவருடைய எல்லா ஊழியக்காரருக்கும், எகிப்து தேசத்தாருக்கும் முன்பாக, கர்த்தருடைய நாமத்தினால் அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்கிறார்.

எகிப்து தேசத்திலுள்ள பார்வோனுக்கு முன்பாக மாத்திரமல்ல, அவர் இஸ்ரவேலர் எல்லோருக்கும் முன்பாக, மகாபயங்கரமான செய்கைகளையும் வல்லமையான கிரியைகளையும் செய்கிறார். மோசே கர்த்தருடைய வல்லமையை அறிந்திருப்பதினால், அவரால் கர்த்தருடைய நாமத்தினால், அடையாளங்களையும், அற்புதங்களையும், வல்லமையான கிரியைகளையும், பயங்கரமான செய்கைகளையும் செய்ய முடிகிறது.

மோசே பார்வோனுக்கு முன்பாகவும், எகிப்தியருக்கு முன்பாகவும் செய்த அடையாளங்களும் அற்புதங்களும், நியாயத்தீர்ப்பின் அற்புதங்களாகும். அவர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு முன்பாக செய்த செய்கைகளோ, கர்த்தருடைய கிருபையின் செய்கைகளாகும்.

கர்த்தரே தம்முடைய ஊழியத்தை செய்வதற்கு மோசேயை தெரிந்தெடுத்து, அந்த ஊழியத்திற்காக அவரை அபிஷேகம்பண்ணி பிரதிஷ்டை செய்திருக்கிறார். மோசே செய்த அடையாளங்களும் அற்புதங்களும், பயங்கரமான செய்கைகளும், கர்த்தர் மோசேயை தம்முடைய ஊழியத்திற்கு அழைத்திருக்கிறார் என்பதற்கும், கர்த்தர் அவரோடுகூடயிருக்கிறார் என்பதற்கும் அடையாளமாயிருக்கிறது.

மோசே செய்த அற்புதங்களையும் அடையாளங்களையும் பார்த்து இஸ்ரவேல் ஜனத்தார் அவர்மீது அதிகமாய் அன்புகூருகிறார்கள். இஸ்ரவேலின் சத்துருக்களோ, மோசே நடப்பித்த பலத்த கிரியைகளைப் பார்த்து, அவருக்கு பயப்படுகிறார்கள்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் பல தீர்க்கதரிசிகளைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. மோசே அந்த தீர்க்கதரிசிகள் எல்லோரையும்விட உயர்ந்தவர். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் பரலோகத்தின் காரியங்களிலும், பூமியின் காரியங்களிலும் அதிகமாய்க் கவனம் செலுத்தினாலும், அவர்களில் ஒருவரும் மோசேயைப்போல கர்த்தருக்கு ஊழியம் செய்யவில்லை.

மோசே கர்த்தரிடத்திலிருந்து நேரடியாக கட்டளைகளைப் பெற்றுக்கொண்டதுபோல, வேறு எந்த தீர்க்கதரிசியும் கர்த்தரிடத்திலிருந்து நேரடியாக கட்டளைகளைப் பெற்றுக்கொள்ளவில்லை. அந்த தீர்க்கதரிசிகள் மோசே செய்ததுபோல அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்யவில்லை.

மோசே எகிப்துதேசத்திலே பார்வோனுக்கும், அவனுடைய எல்லா ஊழியக்காரருக்கும், அவனுடைய தேசம் அனைத்திற்கும் செய்யும்படி கர்த்தர் அவனை அனுப்பிச் செய்வித்த சகல அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்தார் (உபா 34:10).

மோசே இஸ்ரவேலர் எல்லாருக்கும் பிரத்தியட்சமாய் சகல வல்லமையான கிரியைகளையும், மகா பயங்கரமான செய்கைகளையும் செய்தார் (உபா 34:11).

மோசே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு முன்பாக, கர்த்தருடைய நாமத்தினால் வல்லமையான கிரியைகளையும், பயங்கரமான செய்கைகளையும் செய்தார். அப்படிப்பட்ட கிரியைகளையும் செய்கைகளையும் எந்த ஒரு தீர்க்கதரிசியும் செய்யவில்லை.

மோசேயின் குணாதிசயத்தைப்பற்றி சொல்லுகிற இந்த வசனங்கள், மோசே மரித்து பல வருஷங்களுக்கு பின்பு எழுதப்பட்டிருக்கவேண்டும். ஆகையினால் "கர்த்தரை முகமுகமாய் அறிந்த மோசேயைப்போல, ஒரு தீர்க்கதரிசியும் இஸ்ரவேலில் அப்புறம் எழும்பினதில்லை என்று விளங்கும்" (உபா 34:12) என்று இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

மோசே பல சமயங்களில் கர்த்தரோடு முகமுகமாய் பேசியிருக்கிறார். கர்த்தர் மோசேக்குப் பிரத்தியட்சமாய் தரிசனம் அருளியிருக்கிறார். (யாத் 24:9-11; யாத் 33:11; எண் 12:8; எண் 14:14).

மோசேயைப்போல, ஒரு தீர்க்கதரிசியும் இஸ்ரவேலில் அப்புறம் எழும்பினதில்லை. இயேசு கிறிஸ்துவைத் தவிர, மோசே மற்ற எல்லா தீர்க்கதரிசிகளையும்விட பல வழிகளில் மேன்மையானவர் (உபா 18:17-19; லூக்கா 16:28).

கர்த்தர் மோசேயின் மூலமாக இஸ்ரவேல் புத்திரருக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார். அவர்களை தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக உருவாக்க கர்த்தர் மோசேயை ஒரு கருவியாகப் பயன்படுத்தினார்.

கர்த்தர் மனுபுத்திரர் மத்தியிலே அநேக தீர்க்கதரிசிகளை அனுப்பியிருக்கிறார். அவர்கள் மனுஷருடைய பாவங்களை அவர்களுக்கு கடிந்து சொல்லியிருக்கிறார்கள். இனிமேல் நடைபெறப்போகிற சம்பவங்களை அவர்களுக்கு முன்னறிவித்திருக்கிறார்கள். அந்த தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்கு ஆலோசனைகளை சொல்லி வழிநடத்தியிருக்கிறார்கள்.

பழைய ஏற்பாட்டுக்காலத்து தீர்க்கதரிசிகளில், கடைசி தீர்க்கதரிசியாகிய மல்கியா மோசேயைப்பற்றிச் சொல்லும்போது, "ஓரேபிலே இஸ்ரவேலரெல்லாருக்காகவும் என் தாசனாகிய மோசேக்கு நான் கற்பித்த நியாயப்பிரமாணமாகிய கட்டளைகளையும், நியாயங்களையும் நினையுங்கள்" (மல் 4:4) என்று கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், தம்முடைய பிரசங்கச் செய்திகளில் மோசேயின் நியாயப்பிரமாண வார்த்தைகளை மேற்கோளாகச் சொல்லியிருக்கிறார்.

மோசே கர்த்தருக்கு உண்மையுள்ள ஊழியக்காரர். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ தேவனுடைய குமாரன். மோசேயின் சரித்திரத்தைப்பற்றிச் சொல்லும்போது, கர்த்தர் மோசேயினுடைய சரீரத்தை மோவாப் தேசத்திலுள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே அடக்கம்பண்ணினார் என்று சொல்லி, மோசேயின் சரித்திரம் முடிவுபெறுகிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சரித்திரமோ, முடிவுபெறாமல், இன்றும் தொடருகிறது. கிறிஸ்துவானவர், தம்முடைய பிதாவின் வலதுபாரிசத்தில் இன்றும் அமர்ந்திருக்கிறார். கிறிஸ்துவானவர் அங்கே தமது பிதாவினிடத்தில் நமக்காக பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். மோசேயின் ஊழியம் முடிந்துபோயிற்று. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பரிந்து பேசுகிற ஊழியமோ, இன்றும் தொடர்ந்து நடைபெறுகிறது.